JL

Y15 m211, M99 Mo

M99.10.11

161410

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
16 APR 1903
MADRAS.



# மாதர் மனோரஞ்சனி

## ஒன்பதாமாண்டின் நிறைவு.





அறுசீராசிரியவிருத்தம்.

மாதமொரு தரந்தனது முகங்காட்டி
மாதர்க்கே நெறியுங் காட்டிச்
சிதமுறுந் தமிழ்காட்டி நடைகாட்டிக்
குணங்காட்டிச் சீருங் காட்டி
ஆதரவுங் கற்புநலச் சிறப்பதுவு
மன்புடனே யமைதல் காட்டிப்
போதந்தாள் மாதர்மனோ ரஞ்சனியா
ளொன்பதுவும் பூர்த்தி கொண்டே.

கொண்டுவந்தாள் தமிழ்நங்கை புதுநயங்கள்
குவலயத்துட் கண்டதெல்லாம்
பண்டுளதைக் குலைக்காதே பார்த்தெவரும்
பற்றுதற்கே பத்தா மாண்டில்
நன்றமிழின் மணமோங்கித் தனையரொடு
தங்கைகளுந் தாயோ டோங்கக்
கண்டிடுமின் கலிதொலையுங் கவலைவிடும்
காரிகையாள் காட்சி நன்றே.





இங்ஙனம்:
இ. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர்,
சென்னை.

Ripon Press, Madras.

300 009
161410
JL
Y15m2U,M99M0
M9910-11

MADRAS
6 APR 1908

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

No-x. புத்தகம்-க0

Madras: January 1908.
சென்னப்பட்டணம்: ஜனவரி௴ கஅ0அ.

No. 1.
இல-க.

## மனைவியின் கடமை.

"பார்யைபர்த்தாவின் சரீரத்தில்பாதி;
பார்யையே அவனுக்குச் சிறந்தமித்திரன்."

என்ற மகாபாரத வாக்யெப்படி மனைவி மித்திரனைப்போல
ே. தனது கணவரிடத்திலிருந்து இல்லறத்தை யாதொரு பிச
கன்றி நடத்திவரவேண்டும். தன் கடமையைச் சரிவர செய்து
வருபவள் தான் தருமபத்னி என்று சொல்லப்படுவாள்.
அதனால்தான் அவளுக்கு "கிரஹணி" என்றும் "அர்த்தாங்கி" என்றும் வழங்கி
வருகிறது, கிரகிருத்தியங்களைச் சரிவர நடத்திவரவும் மனைவிக்குரியகடமை
களைபர்த்தாவுக்குச் செய்யவும் அவர்களுக்குத் தகுந்த கல்வி யறிவு யிருந்தால்
தான் அவைகளைச் செவ்வனே செய்யமுடியும். குழந்தைகளை துஷ்டசகவாச
மின்றி நல்ல வழியில் நடத்தி அவர்களுக்கு உயர்தரக்கல்வியில் அறிவு உண்
டாகும்படி போதிக்க சமயம் வாய்க்கும். பந்துமித்திரர்களிடத்தில் மரியாதை
யாகவும் வணக்கமாகவும் நடந்துகொள்ளத் தெரியும். முன் காலத்தில் அநேக
மாதர்கள் கல்வியறிவுடையவர்களாயிருந்து விருந்தினர்களுக்கு சோடசோப
சாரம் செய்து விருந்து அளித்தும் வந்ததாக இராமாயணத்தில் காண்கிறோம்.
அநேக ரிஷிபத்னிகளும், இராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களும் மேற்கூறிய
வண்ணமிருந்தார்கள். இக்காலத்திலும் அநேகர் இவ்விதமிருக்கிறார்களென்
பதும் உண்மையே. அவர்கள் அவ்விதமிருந்தால் இல்லறம் செவ்வனே நடக்
கும்; மனைவிக்கும், கணவனுக்கும் மனசஞ்சலமின்றி ஒற்றுவாழ இடம் தரும்.
உலகத்தவரும் அவ்வித முள்ளவரைப் பூசிப்பார்கள். அவர்களுடைய சந்
ததியும் விருத்தியடைந்து கீர்த்தி பெறும். திருவள்ளுவரும் அவ்விதமே
அபிப்பிராயப்படுகிறார். அதாவது:—இல்லறத்திற்குரிய விருந்தாக வந்தவரை
ஆதரித்தல், ஏழைகளிடத்தில் இரக்கம்முதலிய நற்குணங்களும், வாழ்க்கைக்கு
முக்கியமாய்வேண்டியபொருள்களை அறிந்துகொண்டு அவைகளைச்சேகரித்து

யைத்தல், சமையல் தொழிலில் தேர்ச்சி முதலிய நற்செய்கைகளும் மனைவியி னிடத்தில் இருக்கவேண்டும். அவ்விதமில்லாவிடின் அந்தக் குடும்பத்திற்கு அதிக திரவியமிருந்தபோதிலும் அக்குடும்பம் பிரயோசனப்படாது. அது பற்றியே "மனைமாட்சி இல்லாள்க ணில்லாயின்வாழ்க்கை யெனைமாட்சித் தாயி னுமில் இல்லதெனில்லவள் மாண்பானுலுள்ளதே னில்லவள் மாணுக்கடை" என்றும் சொல்லப்படுகிறது உண்மையே.

புத்திசாதுரியமுள்ள மனைவி தன்வீட்டைச்சுத்தியாக வைத்துக்கொண் டும், தன்கணவனையும், குழந்தைகளையும் சரிவர கவனித்துக்கொண்டும் வரு வாள். மாமியார், நாத்தனார்கள், நாத்தனார்களுடைய கணவர்கள் வேலைக்காரர் கள் முதலியவர்களிடத்தில் மரியாதையாயும், தன்னடக்கையுடனும் நடந்து கொள்ளுவாள். "எந்த வீடானது மங்களமாக மெழுகிப்பெருக்கி எப்பொழு தும் அழகாகத்தோன்றுகின்றதோ, அந்த வீட்டிலே இலட்சுமி பூர்ணகலைக ளோடு வாசம் செய்கிறாள்" என்றபடியே மேற்கூறிய மனைவியுள்ள வீடா னது நன்றாக விருக்கும். முன்காலத்தில் வீட்டில் அழகுக்காகவும் நல்லகாற்று இருப்பதற்காகவும் பற்பலவிதமான புஷ்பங்களைக்கொண்டுவந்து வீட்டில் பல விடங்களில் வைப்பது வழக்கம். இப்பொழுது தூரதேசங்களிலுள்ளவர்கள் இவ்வழக்கத்தை மறந்துவிட்டார்கள். ஆகையால் ஸ்திரீகள் புஷ்பங்களைச் சேகரித்து நன்றாக மாலைசெய்து வீட்டில் வைத்துக்கொள்வதும் நலமே. இக் காலத்தில் பெண்ணுக்கு விவாகம் செய்துவைக்கவேண்டுமானால் பெண்வீட் டார் பிள்ளை வீட்டாருக்கு திரளாய் திரவியம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இவ்விதம் செய்வதால் பின்னிட்டு மனஸ்தாபங்களும் இருகுடும்பங்களுக் குண்டாகின்றன. மனைவிக்குள்ள மதிப்பும் போய்விடுகின்றது. கற்றறிந்த கனவான்கள் பிள்ளைக்குப் பணம் கொடுக்கும் வழக்கத்தை அடியோடே நிறு த்தமுயலவேண்டும். ஆனால் பிரியத்தின்மீது எவ்வளவாகிலும் கொடுக்கலாம். கட்டாயத்தின்மீது கொடுப்பது உசிதமன்று. மாதர்கள் இப்பொழுது இவ் விஷயத்தை உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் இது அநியாயமென்றும் அறி ந்து அதை நீக்கமுயலுவார்களென்று நம்பப்படுகிறது. ஸ்திரீகள் படித்தவர் களாயிருந்தால் கணவர்களுக்கு மிக உதவியாக விருக்கும்; ஸ்திரீகளும் தங் கள் கடமைகளை நன்றாக அறிந்து செவ்வனே செய்வார்கள். ஆகையால் மனைவிகள் தங்கள் கிரககிருத்தியங்களைச் சரிவர பார்த்துக்கொண்டு தங்கள் கணவர்களுடன் மித்திரர்கள் எவ்விதமிருப்பார்களோ அவ்விதம் அன்புடனி ருந்து இல்வாழ்க்கையை நடத்திவரவேண்டும்.

# Maitreyi.

## A VEDIC STORY.

**Copy-Right Reserved.**

[We thank our sincere friend MR. G. A. NATESA IYER B. A.; F. M. U., Editor, *Indian Review*, Madras, for having kindly

Y15 m211, M99M0

Page no. 3 to 10 missing



ஆசைக்கினிய அரும்பெறன் மக்களை உயிர்போல நேசித்துவந்த தாயாகிய தமயந் திக்கு இவ்விதமாய் அவர்களைப் பிரிந்துசெல்ல நேர்ந்தபோது உள்ள நிலை எவ்வாறிருந் திருக்கு மென்பதை நாம் ஒருவாறு ஊகித்துணர்ந்தால் உணரலாமேயன்றி வாயால் உரைக்க ஒருபோது முடியாது. அப்படி நாட்டைவிட்டும் நகரை விட்டும் அரண் மனையையும் அகன்றும் ராஜபோகங்களையும் துறந்தும் மக்களைப் பிரிந்தும் நினைத்தற் கரிய நெடுங்கானமேறும் பர்த்தாவோடுறைதலே பாரியையின் கடனென்று துணிவு பூண்டு தன் நாயகனின் பின்செல்லத் துணிந்த மன உறுதியை நாம் என்னென்று சொல்வது? மாநகர் விடுவேன் மக்களை விடுவேன் தந்தை நகரிற்சென்று அநுபவிக்கக் கூடியனவற்றையும் விடுவேன் நீயேகதி சுகத்திலும் துக்கத்திலும் உற்றதுணை எனக்கு நீயேயாவாய் என்று இவ்வாறாக மணப்பந்தலிலே செய்த உறுதிமொழியை கடை போக நிறைவேற்றும் உறுதி இவளுக்கு எவ்வாறு உண்டாகியது? கல்வியிற்றேறி தன் கடமைகளை நன்குணர்ந்தமையாலே என்று நாம் உறுதியாகச் சொல்லலாம்.

இதுவேயன்றி பொழில் விளையாட்டிலும் புனல் விளையாட்டிலும் புலவி முதலிய காமச்செயல்களினாலே தன் நாயகனது காதலைப் பெருக்குவித்து இன்பமளிக்கவும் கற்று வல்லவளா யிருந்தாள்

"காவிபொரு நெடுங்கட் காதலியும் காதலனும்
வாவியும் ஆறும் குடைந்தாடி—தேவன்
கழியாத சிந்தையுடன் கங்கை நதியாடி
ஒழியா துறைந்தார் உவந்து."

"பொய்கையும் வாசப் பொழிலும் எழிலருவிச்
செய்குன்று மாறுந் தெரிந்தாடித்—தையலுடன்
ஆறிரண் டாண்டெல்லை கழித்தான் அடையலரைக்
கூறிரண்டாக் கொல் யானைக்கோ"

மேலும் அவன் ராஜ்ய காரியங்களைப்பார்த்து விட்டு அயர்ந்து வீடுவருவானாகில் அவ்வயர்ச்சியை நீக்க இன்மொழி புகன்று அவனுக்கேற்ற உபசாரம் செய்து களைப்பை யாற்றிக் களிப்பை யூட்டுவாள். இக்காலத்திய சில பெண்கள் செய்வதுபோல நாய கன் வெளியில்போய் இளைத்துக் களைத்து வீடுவரும்போது வீட்டிலுள்ள குறைகளைக் கூறி அவன் ஆயாசத்தை அதிகரிப்பித்து "இதென்ன அவதி எங்கு போனாலும் துன் பமா" என்று எண்ணும்படி செய்யமாட்டாள். தனது இல்வாழ்க்கையைச் சரிவர நடத்திவருவாள். இவளிடம் வேலை செய்பவர்களும் தாம் ஏவலாளர்களாய் வேலை செய்ய நேர்ந்ததே என்று வருத்தம் கொள்ளாது இவளிடம் வேலைசெய்யும் பாக்கியம் பெற்றோமே என்று சந்தோஷங்கொள்ளுமாறு நடந்துகொள்ளுவாள். சில விஷயங் களில் செய்வதின்னதென்று தோன்றாது அரசனே சந்தேகப்படும் சமயங்களில் அவ் விஷயங்களை நன்றாராய்ந்து அவ்வவற்றிற்கேற்ற யோசனைகளை அமைச்சனைப்போல் அவனுக்கு எடுத்துரைப்பாள். அதனால் அரசனும் தனக்கு ஐயம் நிகழ்ந்தபோதெல் லாம் மிக விருப்பத்தோடு இவளது யோசனையைக் கேட்பான். இதனாலன்றோ மனைவியானவள் இன்பங்கொடுத்தலில் வேசியைப்போலவும் யோசனை சொல்வதில் அமைச்சனைப்போலவும் பிரியாது உடனிருந்து காரியங்களை நடத்துவதில் சகோதர னைப்போலவும் இருக்க வேண்டுமென்று பலவிதமாகப் பெரியோர்கள் கூறியிருக்கின் றார்கள். உலகத்தில் நமக்கும் பிறருக்கும் ஏற்பட்ட சம்பந்தம் ஒவ்வொரு விஷயத் தைப் பொருத்தனவாக விருக்கும் அமைச்சன், தந்தை, அண்ணன், தம்பி, பந்துமித்தி

ரன், ஏவலாள் என்பன வாதிச் சம்பந்தங்களெல்லாம் ஒவ்வோர் காரணம்பற்றி யெழுந்தனவாகவே யிருக்கின்றன; ஆனால் புருஷ பாரிய நேசமானது பலவிதமான சம்பந்தங்களை யுடையதா யிருக்கின்றது. அன்பும், இன்பும், பணிவும், சமத்துவமும், துணைமையும், தூய்மையும் அதைப்போல ஒருங்கேகொண்டு விளங்கும் சம்பந்தம் வேறொன்றும் கிடையாது. அதலால்தான் மனைவியானவள் இன்ன விஷயத்தில் அமைச்சனைப்போலவும் இன்ன விஷயத்தில் வேசியைப்போலவும் இன்ன விஷயத்தில் சகோதரனைப்போலவும் இருக்க வேண்டுமென்றும் பலபொருள்களை உவமிக்க வேண்டி வந்தது. இத்தனை சம்பந்தங்களை யொருங்கே யுடைய பொருள் வேறொன்றின்மையால் இவ்வாறேற்பட்ட இலக்கணத்திற்குத் தகுந்த இலக்கியமாய் விளங்கியவள் நமது தமயந்தி. இவ்விதமான மனைவிமார்களை வாய்க்கப் பெருமையாலன்றோ இக்காலத்திற் பலர் வேசியென்றும் தாசியென்றும் தங்கள் மனத்தையும் மானத்தையும் பணத்தையும் பறிகொடுத்து ஒன்று மற்ற ஆட்டாண்டிகளாய் உடலு மனமும் ஒருங்கே புண்ணாகி நடைப்பிணமாய் புவிப்பாரமாகித் திரிகின்றார்கள். இவ்விதம் இவர்கள் நன்மனையாட்டி இன்மையால் அடைந்த அவகோலத்தையும் பூர்வத்தில் நமது தமயந்திபோன்ற நன் மனையாட்டிகளுடன் வாழப்பெற்றமையால் பூர்வீகர்கள் அடைந்த சுகத்தையும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் நாம் கண்டும் கேட்டும் இருப்பதால் இனியேனும் பெண் கல்விப்பயிற்சியை அபிவிர்த்தி செய்ய முயலுவோமாக.

தமயந்தியானவள் தன் குழந்தைகளினிடத்தே அதிக அன்பு பாராட்டி அவர்களை மிகவும் மேன்மையாக வளர்த்துவந்தாள். இது அவள் அவர்களைக் காட்டினிடத்தே பிரிய நேர்ந்தபோது அவளுக்குண்டான மனவருத்தத்தாலேயே நன்கு விளங்கும். ஆனால் தனயர்களிடத்து அன்பிருத்தல் தாயார்கட்கியல்புதானே.

தமயந்தி தான் குழந்தையா யிருக்கும்போது தன் தந்தை தாயர்கள் களிப்புறும்படி நடந்துகொண்டாள். எவ்வண்ணம் நடந்துகொண்டால் அவர்கள் மனங்கோணாதோ எப்படி நடந்தால் அவர்கள் மகிழ்வார்களோ அவ்விதம் நடந்துவந்தாள். இதனாலன்றோ இவள் மணஞ் செய்து கொண்டு நளனோடு நிடதநாடு செல்லும்போது அவர்கள் இவளைப் பிரியும் வருத்தம் மேலிட்டவர்களாய் இவள் சகலவித சௌக்கியங்களையும் மேன்மைகளையும் பெற்றுசௌபாக்கியவதியாகச் செல்கின்றார்களென்பதையும் கவனியாது அழுது வருத்தத்தோடிருந்தார்கள். இனி அவளுடைய விவாகத்தைப்பற்றி சிறிது பார்ப்போம். விவாகம் என்பது புருஷ பாரியர்களாகிய இருவர்களும் ஒன்றுபட்ட எண்ண முடையவர்களாய் தம் வாழ்நாள் முழுதும் ஒருவரையொருவர் நேசித்துப் பூசித்து, ஆதரித்து இல்வாழ்க்கையை நடத்தி வருவதோர் சம்மந்தமாம். அதைப்பற்றி,

"இருவரும் பூண்டீர்ப் பினல்லால்—ஒருவரால்
இவ்வாழ்க்கை யென்னும் இயல்புடைய வான்சகடம்
செல்லாது தெற்றின்று நின்று"

என்றும், "காதலிருவர் கருத்தொருமித் தாதரவு பட்டதே யின்பம்" என்றும் பலவகையாய்ப் பெரியோர் புகழ்ந்து கூறியிருக்கின்றார்கள் அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் நமது இவ்வுலக வாழ்க்கையில் மட்டுமல்ல. மறுவுலக வாழ்க்கையையும் கூட பாதிக்கக்கூடியன. இவ்விதமாக அரியதும் பெரியதும் ஆயுள்பரியந்தம் நீடிக்கக்-



கூடியதும், பரிசுத்தமானதும் ஒப்புயர்வற்றதும் ஆகிய சம்பந்தத்தைச் செய்வதற்கு முன் இக்காலத்தே அதன்மூலமாய் இணைந்து செல்வோராகிய அவ்விருவோரின் சம்மதமானது கேட்கப்படுவதில்லை. இதனால் பலவிதமான கேடுகள் சம்பவிக்கின்றன. பரஸ்பரம் அசமாதானமான விவாகங்கள் பல அடிக்கடி நிகழ்வதை நாம் காண்கின்றோம். இக்காலத்தே பெண்பெற்ற பலர் தம்பெண்ணை நற்குடியிற் புகுத்தி நல் வாழ்வெய்துவிக்க வேண்டுமென்றும் தம் கடைமையும் கருதாது பணத்திற் காசைப்பட்டு 50, 60-வயதுசென்ற கிழங்கட்கும் ஒன்றுக்குபயோகமற்ற ஈனர்கட்கும் கொடுத்து குழியில் தள்ளுவதுபோல் அவர்களை விற்றுவருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இது எவ்வளவு கொடியது பாருங்கள்! பெண்கள் ஒருகாலத்தும் சுவாதிந்திரர்கள் அல்லரென்றும், ஆனதால் அவர்கள் சம்மதிகொடுக்க அருகர்கள் அல்லரென்றும் பெற்றோர்களே அவர்களைக் கொடுக்கச் சம்மதி தரவேண்டியதென்றும் சிலர் கருதலாம்.

பெற்றோர்கள் சம்மதம் அனாவசியம் என்று நான் சொல்லவில்லை. அதிலே சம்பந்தப்பட்டு நன்மை தீமைகட் குரித்தானவர்களாய் ஆயுள் முழுதும் கழிக்கவேண்டியவர்களாகிய இவர்களுடைய சம்மதம் அவசியம் வேண்டுமென்பதே நாம் கூறவந்தது. முற்காலத்திலே பெண்களின் சம்மதம் அறிந்தபின் விவாகம் செய்தல் வழக்கமாயிருந்ததென்பதை நாம் தமயந்தியின் சரித்திரவாயிலாக அறிகின்றோம். சுயம்வரம் என்பது அவள் சம்மதத்தை அறிவதற்காக ஏற்பட்ட ஓர் ஒழுங்குபாடு. அதில் பற்பல தேசத்தரசர்களும் வந்திருக்க அவர்களுள் இவள் தன் மனதிற்கிசைந்த மன்னவனை மாலையிடல் வேண்டும். அப்படி மாலையிட்ட பின்பு அவனைத்தான் வரிப்பதாக இசைந்தவள் ஆகிறாள். அதன்பின்பு இவ்விருவருக்கும் விவாகச்சடங்கு விதிப்படி நடந்தேறும். இவ்வழக்கத்தை நாம் இச்சரித்திரத்தில் மட்டுமல்ல இன்னும் பூர்வீக சரித்திரங்கள் பலவற்றிலும் கேட்டிருக்கிறோம். இதேவழக்கத்தை நாமும் அநுசரிக்க முடியாமற் போனபோதிலும் உபயதம்பதிகளின் சம்மதத்தையும் அவர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்களா என்பதையும் கட்டுப்பட்டு ஆயுள்பரியந்தம் ஆதரித்துழைக்க உடன்படுகிறார்களா என்பதையும் வேறெவ்வாற்றானும் உணர்ந்தபின் விவாகம் செய்யும் வழக்கத்தை நாம் அநுசரிப்போமாயின் தற்காலத்திய விவாக வழக்கத்தால் ஏற்படும் பலவித துன்பங்களும் நீங்கி இருவரும் வாழ்நாள் முழுதும் சுகித்து வாழ்வதற்கு ஏதுவாகும்.

தமயந்தி பெண்மக்கட்குரிய மேன்மைத்தன்மைகள் முற்றும் அமையப்பெற்றவளாய் இருந்தபோதிலும் சமயத்தில் தன் தைரியத்தைமட்டும் விடாமல் அமைந்த உள்ளத்தினளாய் வேண்டுவனவற்றை ஆராய்ந்து செய்துவந்தாள். பாருங்கள்! இவளது வாழ்க்கையில் அம்மம்ம! எத்தனை யிடையூறுகள் ஏற்பட்டன. முதலில் சுயம்வரத்தில் நளனையே மாலை சூட்டுவதாக உள்ளத்திற்கொண்டு சபையிற் சென்றபோது நளன் போலவே உருக்கொண்டு பலபேர் வீற்றிருந்தனர். அவர்களுள் நளனை யின்னானென்றறிந்து மாலையிடும் பாரம் இவள்மேலதாயிற்று. மேலும் சூதாடி நகர்தோற்றகாலத்து நளன் காடுசெல்ல நேர்ந்தது. அப்போது மக்களைப் பிரிவதா மன்னனைப் பிரிவதா என இரண்டு துன்பமாய் ஏற்பட, அவற்றுள் மக்களைப்பிரிந்து மன்னனையே பின்செல்வது தகுதியும் கடமையுமாமென்று துணிந்து பின் சென்றாள். சென்று கல்லிலும் முள்ளிலும் அலைந்துபோய் இரவில் இருவரும் ஒற்றைத்துகிலினராய்பாழ் மண்டபத்தே கண்துயில அக்காலத்தே வேந்தன் இவளைத் தனிவிட்டு அகன்று போயினன்.

விழித்தெழுந்ததும் வேந்தனைக் காணாது துயருறுங்காலத்து மலைப்பாம்பின் வாயில் அகப்பட்டனள்.

அதன்பின்பு வேடனால் விடுவிக்கப்பெற்றாள். பாம்பினின்றும் இவளைத் தப்புவித்த அவன் உடனே இவளை அதைவிடப் பெரியதொரு துன்பத்திற் குள்ளாக்க முயன்றான். அஃதாவது இவளைத்தான் பெண்டாமாறு வேண்டினான்; இவளோ தன் அற்புதமான தைரியத்தால் திடபுத்தியோடிருந்து கற்பின் வன்மையால் அவனையெரித்தொழிந்தாள். அவ்வழியே சென்ற ஒரு வணிகன் இவள்மீதிறங்கி இவளைச் சேதிநகர்ச் சேர்ந்துச் சென்றனன். அங்குச் சேதியரசியின் உபசரணையிற் சின்னாட்டங்கி பின் தன் தந்தையிடம் சார்ந்தனள். சார்ந்ததும் தன் காதலன் எவ்விடம் உள்ளான் எனக் கண்டுபிடித்தலே முயற்சியாக இருந்து கடைசியாக ருதுபன்னனென்னும் அயோத்தி யரசனிடம் அவன் தேர்ப்பாகனாய் இருப்பதை மறையவனால் அறிந்தாள். அவளைக்கண்ட அம்மறையவனுக்கும் அவன்தான் நளனோ என்ற சந்தேகம் இருந்தது

“வாக்கினால் மன்னவனை யொப்பாள் மறித்தொருகால்
ஆக்கையை நோக்கிலவ னல்லன்—பூக்கமழும்
கூந்தலாய் மற்றக்குலப் பாகன்என் றுரைத்தான்
ஏந்து நூன் மார்பன் எடுத்து”

இது கேட்டதும் அவனை அங்கு வரவழைக்கும் சூழ்ச்சியை எண்ணி தனக்கிரண்டாம் சுயம்வரம் என்று அயோத்தி யரசனுக்குச் சொல்லி யனுப்பினாள்.

அவன் அவசியம் வருவான் அவனுடன் தேர்ப்பாகனும் தப்பாமல் வருவான். அப்போது நாம் தேர்ந்துகொள்ளலாம் என்று தீர்மானித்து அவ்வாறே செய்திசொல்லியனுப்பினாள். அவனும் அப்படியே வந்துசேர்ந்தான். பாகனும் உடன் வரவே அவனிடம் தன் மக்களையனுப்பி, அவர்களுடன் அவன் பேசுவதையும் அவர்களைக் கண்டதும் அவனுக்கிருக்கும்உள்ளக்கிளர்ச்சியையும் அறிந்துவருமாறு தோழியையும் யனுப்பினாள்.

“மக்களைமுன்காணா மனநடுங்கா வெய்துயராப்
புக்கெடுத்து வீரப்புயத்தணையா-மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் என்றுரைத்தான்
வன்மக்களியானைமன்.”

“அடைந்த மக்களைக் காண்டலும் அழலிமெழுகின்
உடைந்ததுள்ளம் நீர் ஊற்றிடுந் தொழுகின் நெடுங்கண்
தொடர்ந்த மும்மலமுறுக்கி வெம்பவக்கடல் தொலைய
கடந்துவோர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்.”

இவற்றால் இவனே நிடதகோமானாகிய தன் நாயகனென்று தேறி தன் தந்தை தாயார்க்கு அறிவித்து அவனுடன்சேர்ந்து இன்புற்றிருந்தாள். “எத்துயர்வந் துற்றாலும், எதவத்தைப் பட்டாலும் முத்தர்மனமிருக்கும் மோனத்தே” என்றதுபோலஇவ்வண்ணம் எத்தனை துயர்களை அநுபவிக்க நேர்ந்தகாலத்தும் தன்மன நிலை பிறழாது திட உள்ளத்தாளாய் தன்கடமை தலை நின்று மன்னனையும் ஈடேற்ற வின்ற இம்மாதர் நாயகம்போல அஞ்சாநெஞ்சு படைத்த ஆண்மக்களுள்ளும் யாவர்செய்யற் பாலார். இவளுக்கு நேர்ந்த பரீக்ஷைபோல யாவருக்கு நேர்ந்தது? சுயம்வரக் காலத்தில் விண்ணுலகமே இவள்காற் கீழ்வதுங்கக் கூடியதாயிருந்தது. சதமகம் புரிந்து விண்ணோர்க்



கிறைமகனாக விளங்கிய இந்திரன் முதலிய தேவர்களே இவளைவிரும்பி வந்தனர். இவள் அத்தேவேந்திர போகத்தையும் விரும்பாது அத்தேவர்களையும் மாண்புடைய மண்ணரசர் பிறரையும் அலக்ஷியம்செய்து தன்காதல் பொய்படாது நளனையே மாலையிட்டாள். அவனுடைய செல்வத்தையும் தேசத்தையும் பராக்கிரமத்தையும் விரும்பி அவ்வண்ணம் செய்தவளல்லள். அவனினும் மிக்காராகிய தேவர்களையும் விரும்பாது அவனை விரும்பியதனாலேயே அது நன்கு விளங்குகின்றது. ஈஸ்வரனிடத்தில் அடியார்க்குளதாகும் பக்தியைப்போல இதனாலது உண்டாகியது என்று காரணம் காட்டக் கூடாததாய் உள்ளத்திடத்தே எழுந்த ஒரு அன்புகாரணமாகவே இவள் அவனை மணந்தாள். இதனாலன்றோ அவன் பதிமுதலிய இழந்து பஞ்சையாய் காடு செல்லும்போதும் தானும் உடன் செல்லத் துணிந்தனள். பணமில்லாதானைப் பிணம் என்று மனைவியும் இகழ்வது இப்போது சகஜமாயிருக்கின்றது. கணவனைவிடத் தன் தாய் வீட்டார் பணக்காரர்களாக இருந்தாலே பெண்களுக்கு இது இளப்பமாகி விடுகின்றது. இப்போது நமது தமயந்திக்கோ கணவன் ஒட்டாண்டியாய்க் காடு செல்லப் போகின்றான். அவன் வேற்று நகரம்சென்று சேர்ந்தாலும் பிச்சையெடுத்தாவது ஊழியம்செய்தாவது பிழைப்பதைவிட வேறுவழி கிடையாது, தன் தகப்பனோ அரசனாய் விளங்குகின்றான்; அங்குச்சென்றால் தன் தாய்வீட்டில் எல்லாவித ராஜபோகங்களையும் அனுபவித்திருக்கலாம். இருந்தும் நாயகன் நாயகிகளைக் கட்டுப்படுத்துவதாகிய ஒருவிதமான தெய்வீக அன்பை இவள் கொண்டிருந்ததனா லன்றோ அவனையே பின்பற்றிக் கானகஞ் செல்லத்துணிந்தாள். அங்கேயும் அவன் இவளை இரவிற் றனிவிட்டுப்பிரிந்து போனபோதும் தன்விதியை நொந்து அழுதாளேயன்றி அவனை நொந்தவள் அல்லள். தாங்கள் இருவரும் அநுபவிக்கும் எல்லாத் துன்பத்திற்கும் தன் தீவினையே காரணமென்று துக்கித்துத்தேறினாள். முன்னே பெரும் போகங்களெல்லாம் இவள் முன்னின்றன. இப்போது நினைத்தற்கரிய துயரங்கள் நேர்ந்தன. இவ்விரண்டு காலத்தும் ஒன்று போலவே தன் காதலனை விட்டுச் சிறிதும் விலகாத சிரத்தையுடையவளாய் விளங்கினாள் இப்பெண்ணரசி.

இதுவன்றோ புருஷபக்தி யென்பது. இவ்வளவு தைரியமும் திடபுத்தியும் அறிவின் சூக்ஷமமும் உடையவளா யிருந்தமையால் இவள் மனம் வலுப்பட்டுப் புருஷலக்ஷணத்தோடு கடின சித்தத்தராய் விளங்கினாளோ என்று சிலர் சந்தேகிக்கலாம். அப்படி யோர்போதிலுமில்லை. தன்பாலார்க்குரிய மென்மைத் தன்மையில் சிறிதும் குறைவு பட்டவளல்லள். அஃதெவ்வாறென்னின் சுயம்வரத்திலே காவலரைத் தன் சேடி காட்டக்கண்டு ஈரிருவர் தேவர் நளனுருவாய்ச் சென்றிருந்தார். “பூவரைந்த மாசிலாப்பூங்குழலாள் மற்றவரைக் காணாறா சலாகுற்றாள் ஊம்” என்றும் ஒன்றிய ஐயத்தோடும் உள்ளநெக்குருகி நின்றாள்” என்றும், தன் கடமையை உணர்ந்து கணவன்பின்னே கானகம் புகத்துணிந்து மக்களைத் தந்தையில் விற்கனுப்புக என்று உரைத்து நின்றவள், அன்னோர் பிரியும்போது.

“அஞ்சனந் தோய்கண்ணில் அருவி நீராங்கவற்கு
மஞ்சநீர்கவிழ்ந்தோட-நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து”

என்றும்-காட்டிற் பாழ்மண்டபத்தே இருபேரும் துயின்றபோது அவன் பிரிந்துசென்றதை உணர்ந்ததும்,

"வடவுமிளமான்காள் மயில்காள் மடப்பிடிகாள்
கூவும் கரியகுயில்காள் மென் புள்ளினங்காள்
ஆவியெனமேவி யகலேம் எனவகன்ற
காவலந்தான் போனவழி யெனக் காட்டீரே
என்று உருகி இருகண்ணீ ராவியுக
தன்னுத் தழும்பப் புலம்பித் தமியளாய்
மின்னுரிடை துடங்கச் செல்வாள் விரல்வேந்தன்
பொன்னூரடி நோக்கி பூங்கொடிபோல் வீழ்ந்தழுதாள்"

என்றும் கூறப்பட் டிருக்கின்ற வற்றாலே நாம் நன்குணரலாம்.

ஆகவே, தைரியமும் திடபுத்தியும் சூழ்ச்சி வண்மையும் ஆண்மக்களையும் மிக்க நமது தமயந்தி பெற்றிருந்தாலும் பெண்களுக்குரிய நாண்மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் நன்குடையவளாய் அக்காலத்தே ஏற்றிவைத்த ஒருதெய்வ விளக்கம்போல் பொன்று மிளிர்ந்து தன்னைச்சூழ எங்கும் நன்மையையே பரப்பி விளங்கியிருந்தாள். தான்வாழ்ந்த அக்காலத்தே அவ்வாறு விளங்கியதே யன்றிப் பன்னூராண்டுகட் கப்பாலிக்காலத்தும் பெண்பாலார்களெல்லாம் படியெடுத் தொழுகுதற் கேற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறாள் என்பதைவிட நாம்வேறொன்றும் சொல்லமுடியவில்லை.

M. V. மீனாக்ஷிசுந்தரமுதலியார், B. A.,

---

*Shakespeare Series No. 2.*

# THE MERCHANT OF VENICE.

# வெனிஸ் வணிகன் கதை.

வெனிஸ் நகரத்தில் ஷைலாக் என்னும் யூதன் ஒருவன் இருந்தான். அவன் அவ்விடத்துள்ள கிறிஸ்தவ வர்த்தகர்களுக்குப் பணம் கடன் கொடுத்து மிகக் கடுமையான வட்டி வாங்கி ஏராளமான திரவியம் சேர்த்துவந்தான். ஷைலாக் மனதில் கொஞ்சங்கூடத் திரவமில்லாமல் தான் கடன் கொடுத்தவர்களிட மிருந்து தன் பணத்தை வசூல்செய்து வந்ததினால் அவ்வூரிலுள்ள நல்லவர்களெல்லாரும் இவனை அருவருத்து நிந்தித்து வந்தார்கள். இவர்களில் முக்கியமானவன் அண்டோனியோ என்னும் ஒரு இளைய வியாபாரி; இவன் ஜனங்கள் கஷ்டதிசையில் இருக்கும்போது அவர்களுக்குப் பணம் கடன் கொடுத்து, பிறகு வட்டியில்லாமல் தன் பணத்தை வாங்கிக்கொள்வது வழக்கம். இதனால் இவ்வண்டோனியோவின்மேல் ஷைலாக்குக்குள்ள அகங்காரத்தைச் சொல்லி முடியாது.



இவ்வண்டோனியோவுக்கு அந்நகரத்தில் பஸ்ஸானியோ வென்னும் அத்தியந்த நேசன் ஒருவன் உளன். அவன் ஒரு உயர்ந்த குலத்திற் பிறந்தவனாயிருந்தும், தனக்கு உள்ள சொல்ப பிதுரார்ஜித ஆஸ்தியைச் சிறிது நாளில் ஏராளமாகச் செலவழித்து மிக்க ஏழையாயினான். ஆயினும் தன் உயிர் நண்பனான அண்டோனியோவுக்கும் தனக்கும் ஒரே மனதும், ஒரே பணப்பெட்டியும் இருந்ததுபோல் எண்ணி வாழ்ந்து வந்தார்கள்.

ஒரு நாள் பஸ்ஸானியோ அண்டோனியோவிடம் வந்து தனக்கு, போர்ஷியா வென்னும் அழகிய மங்கையின்மேல் ஆசையுண்டா யிருக்கிறதென்றும், அவளுக்கும் இவனை விவாகஞ்செய்துகொள்ள இஷ்டமிருக்கிறதாக அவள் முகக்குறிப்பால் தெரிகிறதென்றும், அவளை விவாகஞ் செய்துகொள்வதாயிருந்தால் தானும் தக்க ஆடம்பரத்துடன் காணப்படவேண்டுமென்றுஞ் சொல்லி அதற்காக மூவாயிரம் பவுன் கடன் கேட்டான்.

அண்டோனியோ தன்னிடம் அப்பொழுது பணமில்லையென்றும் சரக்குகளை யேற்றிக்கொண்டு வரும் தன் கப்பல்களை யெதிர் பார்த்துக்கொண்டிருக்கிறதாகவும், ஆனால் ஷைலாக் என்னும் யூதனிடம்போய் அத்தொகையைக் கடன்வாங்கிக் கொடுப்பதாயும் சொன்னான். அப்படியே இருவரும் ஷைலாக்கிடம் போக அண்டோனியோ தனக்கு மூவாயிரம் பவுன் கடன் வேண்டுமென்றும், தன்கப்பல்கள் வந்தவுடன் பணத்தைக் கொடுத்துவிடுவதாயும், அவன் இஷ்டப்படி பணத்துக்கு வட்டி கொடுப்பதாயும் சொல்லி ஷைலாக்கைப் பணம்கேட்டான். ஷைலாக், அண்டோனியோ தன்னிடம் பணத்துக்கு வந்தானென்பதைப்பற்றி இறுமாப்புக்கொண்டு எப்படியாவது யிவனை நம் வசப்படுத்தி யிவனை நாசஞ்செய்துவிட வேண்டுமென்று தீர்மானித்து அண்டோனியோவைப் பார்த்து "நீ என்னைக் கண்டபொழுதெல்லாம் என்னைக் கொலைகாரன் என்றும் நாயென்றும் வைது காரியுமிழ்ந்து பரிகாசம் செய்து வந்தாயே, இப்பொழுது அந்த நாயே உனக்குப் பணங் கடன்கொடுக்க வேண்டியிருக்கிறதே" என்றான். அண்டோனியோ அதற்கு, "ஆம் அப்படிதான் வைதேன், இப்பொழுதும் அப்படியே வைய எனக்கு இஷ்டமிருக்கிறது. நீ சிநேகிதனுக்கென்று கடன் கொடுக்கவேண்டாம், விரோதிக்கென்று நினைத்துக் கொடு, உனக்கு வேண்டிய வட்டி வாங்கிக்கொள் என்றான்" அதற்கு ஷைலாக் கபடமாக, உனக்குவேண்டிய பணம் வாங்கிக்கொள். எனக்கு உன்மேல் கோபமில்லை. ஆனால் வேடிக்கையாக நீ ஒரு பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும் அதில் ஏற்பட்ட கெடுவிற்குள் நீ பணம் கொடுக்காவிட்டால், உன்தேகத்தில் நான் விரும்பிய பாகத்திலிருந்து ஒருசேர் சதையை நீ இழந்துவிட வேண்டுமென்று எழுதிக் கையொப்பஞ் செய்துகொடுத்துப் பணத்தை வாங்கிக்கொண்டுபோ" என்றான். அண்டோனியோ அதற்குச் சம்மதித்து அப்ப

டியே ஒரு பத்திரம் எழுதிக் கையொப்பஞ் செய்துகொடுத்துப் பணத்தை வாங்கி தன் உயிர் நண்பனான பஸ்ஸானியோவுக்குக் கொடுத்தான்.

அண்டோனியோ அக்கொடிய ஷைலாக்கின் வலையில் சிக்கிக்கொண்டதையறியாத பஸ்ஸானியோ, அப்பணத்தை வாங்கிக்கொண்டு சந்தோஷத்துடன் தான் வெகுநாளாய்மணஞ்செய்துகொள்ளவிரும்பின போர்ஷியா என்னும் செல்வியிருக்கும் பெல்மாண்டுக்கு கிராஷியானோ வென்னும் ஒருவனையும் மற்ற தக்க பரிவாரங்களையும் அழைத்துக்கொண்டு சென்றான்.

போர்ஷியா, பஸ்ஸானியோவைப் பார்த்தவுடன் அவனை விவாகஞ் செய்துகொள்ள சம்மதித்து ஒருவருக்கொருவர் தங்கள் சுக துக்கங்களைப் பற்றி யுல்லாசமாய்ப் பேசிக்கொண் டிருந்தார்கள். இவையெல்லாம் பார்த்திருந்த, கிராஷியானோ தானும் போர்ஷியாவின் தோழியாகிய நெரிஸ்ஸா வென்னும் பெண்ணை மணம்புரிய உத்திரவு கொடுக்கும்படித் தன் எஜமானனாகிய பஸ்ஸானியோவைக் கேட்டான். பஸ்ஸானியோ உத்திரவு கொடுக்க கிராஷியானோவும் நெரிஸ்ஸாவும் மணம்புரியத் தீர்மானித்தார்கள்.

இவர்கள் இவற்றைப்பற்றி வேடிக்கையாய்ப் பேசிக்கொண் டிருக்கும் பொழுது, அண்டோனியோ விடமிருந்து ஒரு தூதன் ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து பஸ்ஸானியோ கையிற்கொடுத்தான். பஸ்ஸானியோ அக்கடிதத்தைப் பிரித்து வாசிக்கும்பொழுது அவன் முகத்தைப் பார்த்த போர்ஷியா யாரோவொரு முக்கிய சிநேகிதன் இறந்துபோ யிருக்க வேண்டுமென்று நினைத்து பஸ்ஸானியோவை சமாசாரம் என்னவென்று கேட்டாள். அதற்குப் பஸ்ஸானியோ தன் உயிர் நண்பனான அண்டோனியோ, தன் விவாகத்துக்காக ஷைலாக்கினிடம் அவன் பிராணனை யடகுவைத்து 3000 பவுன் வாங்கித் தந்திருக்கிற சங்கதியைச் சொல்லி அக்கடிதத்தை வாசித்தான். அதில் "பிரியமுள்ள பஸ்ஸானியோ, என்னுடைய கப்பல்களெல்லாம் முழுகிப்போய்விட்டன, நான் யூதனுக்குப்பணம் கொடுக்கவேண்டிய கெடுத் தவறிப்போய்விட்டது. அவ்விஷயத்தின் பொருட்டு நான் உயிர் இழப்பது நிச்சயமானதால், நான் சாவதற்குமுன் உன்னைப் பார்க்க மிக்க விரும்புகிறேன். ஆனபோதிலும் நீ விசனப்படவேண்டாம்; உனக்காகவே வருவதற்கு இஷ்டமில்லாவிட்டால் என் கடிதத்தின் பொருட்டு நீவரவேண்டாம்" என்று எழுதப்பட்டிருந்தது. இதைக்கேட்ட போர்ஷியா "உமது பொருட்டாக உம்முடைய சிநேகிதன் ஓர் மயிரிழைகூட இழக்கக் கூடாதாகையால் அந்த யூதனுக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்கு இருபது மடங்கு பணம் கொடுக்கத் தயாரா யிருக்கிறேனென்று சொல்லி வுடனே வெனிஸ்ஸுக்குப் புறப்பட்டுப் போகச்சொன்னாள். ஆனால் போவதற்குமுன் போர்ஷியா தன் பணத்தை இவன் உபயோகிக்கப் பாத்தியம் உண்டாவதற்காகத் தன்னை மணம் புரிந்து பிறகு வெனிஸ்ஸுக்குப் பணம்



எடுத்துகொண்டு போகச் சொன்னாள். அப்படியே சம்மதித்து பஸ்ஸானியோ தன் விவாகத்தை நடத்திக்கொள்ள கிராஷியானோவும் நெரிஸ்ஸாவுடன் மணம்புரிய, பிறகு பஸ்ஸானியோவும் கிருஷியானோவும் வேண்டிய பணத்தை யெடுத்துக் கொண்டு, அன்றைத்தினமே வெனிஸ்ஸுக்குச் சென்று அண்டோனியோ சிறையிற் கிடப்பதைப் பார்த்தார்கள்.

பணம் கொடுக்கவேண்டிய கெடுத்தவறினவுடன், அக்கொடிய யூதன், தன் பத்திரப்படி தனக்கு அண்டோனியோவின் உடம்பிலிருந்து ஒரு சேர் சதை வேண்டுமேயல்லாது, எவ்வளவு பணம் கொடுத்தாலும் வேண்டாமென்று பிடிவாதஞ்செய்ய, இவ்விஷயத்தை அவ்வெனிஸ் நியாயாதிபதியிடம் விசாரிக்க ஓர் தினம் குறிக்கப்பட்டது.

பஸ்ஸானியோ புறப்பட்டுப்போனபிறகு, போர்ஷியா தனக்குள் ஆலோசித்து, அண்டோனியோவை பஸ்ஸானியோ விடுவிப்பது மிக்க துர்லபமென்று நினைத்து, அதற்குத் தக்க ஓர் நல்ல உபாயத்தை ஏற்பாடு செய்துகொண்டு, தான்போய் அண்டோனியோவின் பக்கம் பேசி அவனை மீட்டுவதாக நிச்சயித்தாள்.

உடனே போர்ஷியா ஓர் வக்கீல் மாதிரியாகவும் தன் தோழியாகிய நெரிஸ்ஸா அவ்வக்கீலின் குமாஸ்தாபோலவும் வேஷம் பூண்டு அண்டோனியோவை விசாரிப்பதற்கு ஏற்பட்ட தினத்தில் வெனிஸ் போய்ச் சேர்ந்தார்கள். நியாயாதிபதி அண்டோனியோவைக் கூப்பிடுந் தருணத்தில் பால்தஸார் என்று மாறுபெயரிட்டுக்கொண்ட வக்கீலாகிய போர்ஷியா தன் குமாஸ்தாவுடனும் வெனிஸ் ஹைக்கோர்டுக்குள் சென்று நியாயாதிபதியை வந்தனஞ் செய்துவிட்டு அண்டோனியோவின் பக்கம்பேச ஒப்புக்கொண்ட பெல்லாரியோ என்னும் வக்கீல் தான் வர அசௌகரியமா யிருப்பதினால் இவ்விளைய பால்தஸார் என்னும் வக்கீலை அனுப்பினதாக பெல்லாரியோ எழுதியிருந்த கடிதத்தை அந்நியாயாதிபதி யிடங்கொடுத்துத் தான் அண்டோனியோ பக்கம்பேச உத்திரவு பெற்றுக்கொண்டாள்.

அண்டோனியோவும் ஷைலாக்கும் நியாயாதிபதிக் கெதிரில் வந்து நிற்க இவ்விளைய வக்கீலாகிய போர்ஷியா பேசத்தொடங்கினாள். முதலில் இவள் ஷைலாக்கின் பக்கம் திரும்பி, பூததயை பஸ்சாதாபம் என்னும் நற்குணங்களைப்பற்றி, அங்குள்ளவர்களின் மனம் உருகும்படி ஒரு சிறு உபந்நியாசம் செய்து, நாம் நம்மேல் கருணை வைக்கும்படி கடவுளை வேண்டுகிறோமாகையால் நாமும் அன்னியர்கள்மேல் கருணை வைப்பது அவசியமென்று சொல்லிமுடித்தாள். இவற்றிற் கெல்லாம் இணங்காத கல்நெஞ்சனாகிய ஷைலாக் தன் பத்திரப்படி தனக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்றான். அப்பொழுது பஸ்ஸானியோ கடன்வாங்கிய தொகை மூவாயிரம் பவுனை யிருந்தபோதிலும் எத்தனையாயிரம் பவுன் வேண்டினாலும்தான் கொடுக்கத்

தயாராயிருக்கிறதாகச் சொல்லியும் ஷைலாக் தன் பத்திரப்படி நியாயம் நடக்க வேண்டுமென்றே பிடிவாதிக்க அவ்விளைய வக்கீல் பத்திரத்தை வாங்கி வாசித்துப் பார்த்து "ஆம், பத்திரத்தின் கெடுத்தவறித்தான் போய் விட்டது. அண்டோனியோ ஒரு சேர்ச்சதையை நியாயப்படி இழக்கத் தான் வேணும். வேண்டுமானால் ஷைலாக் அண்டோனியோவின் இருதயத்தில் இருந்து கூட ஒரு சேர்ச்சதையை அறுத்து எடுத்துக்கொள்ள நியாயம் இருக்கிறது என்றாள். இப்படிச் சொன்னவுடன் அக்கொடிய ஷைலாக் மிக்க சந்தோஷப்பட்டு போர்ஷியாவைப் பார்த்து "ஓ பிரகஸ்பதியே, ஓ பிரபுவே, உமக்குத்தக்க உபகாரம் நான் என்ன செய்யப்போகிறேன்" என்று உரக்கச் சொல்லிக்கொண்டு ஒருபெரிய கத்தியைத் தீட்ட ஆரம்பித்தான். போர்ஷியா ஷைலாக்குக்கு என்ன சொல்லியும் அவன் கேட்காதபடியால் அண்டோனியோவைப் பார்த்து "நீ என்ன சொல்லுகிறாயென்ன அதற்கு அண்டோனியோ "நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நான் சாவதற்குத் தயாரா யிருக்கிறேன்" என்று சொல்லிப் பஸ்ஸானியோவைப் பார்த்து "நான் போய்விட்டு வருகிறேன் பஸ்ஸானியோ" என்று சொல்லி அவனைத் தழுவிக்கொண்டான்.

போர்ஷியா, பிறகு ஷைலாக்கைப்பார்த்து சதையை நிறுக்கத் திராசு தயாரா யிருக்கிறதாவென்று கேட்க, அக்கொடியன் ஒருகையில் திராசும், மற்றொருகையில் ஒரு கத்தியோடும் வந்து நிற்க போர்ஷியா "ஆம் எல்லாம் சரிதான், நீ சதையை அறுக்கும்போது முழு இரத்தமும் வெளியில்வந்தால் அண்டோனியோ இறந்துபோய் விடுவானாகையால் இரத்தம் வராதபடி பார்த்துக்கொள்ள ஓர் இரண வைத்தியனை வரவழைக்க வேண்டும்" என்றாள். ஷைலாக்கின் முழு எண்ணமும் அண்டோனியோவின் சதையை யறுப்பதினால் அவன் இரத்தம் முழுமையும் வெளியில் வந்து அவன் உடனே இறக்கவேண்டு மென்பதாகையால், போர்ஷியா சொன்ன வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டு "அப்படி இரத்தம் வரக்கூடாதென்று பத்திரத்தில் எழுதவில்லையே" என்றான். அதற்குப் போர்ஷியா "அப்படி யெழுதாவிட்டாலென்ன, விட்டுவிட்டால் உனக்குத் தர்மந்தானே" யென்ன அதற்கு அவன் ஒப்புக்கொள்ள மாட்டேனென்றான். போர்ஷியா சற்றுப்பொறு யூதனே, பத்திரத்தில் என்ன எழுதியிருக்கிறது பார். ஒரு சேர்ச்சதை என்று எழுதி யிருக்கிறதே தவிர ரத்தத்தைப்பற்றிப் பிரஸ்தாபமே யில்லை ஆகையால் ஒரு சொட்டு இரத்தங்கூட வெளியில் வராமல் நீ ஒருசேர் சதையை அறுத்துக்கொள்ள வேணும்" என்று வாதிக்க இப்படி இரத்தம் வராமல் சதையை யறுப்பது அசாத்தியமாகையால் ஷைலாக் ஒன்றுந் தோன்றாமல் திகைத்து நிற்க, பஸ்ஸானியோ இவ்வக்கீலின் ஞானத்தினால் அண்டோனியோ விடுவிக்கப்பட்டானென்று மிக்க சந்தோஷித்து ஷைலாக்கைப்பார்த்து இப்பொழுதாவது உன் பணத்தைப் பெற்றுக்கொள்" என்று



பணத்தை நீட்டினான். போர்ஷியா பஸ்ஸானியோவைச் சற்று இருத்தி ஷைலாக்கைப் பார்த்து "சரி உன் சேர்ச்சதையை இரத்தம் வராமல் அறுத்துக்கொள்ளாவிட்டால் விடேன், நீ அறுக்கும்பொழுது ஒரு மயிரெழைகூட ஏற்றல் குறைச்சல் இல்லாமல் ஒருசேர் சதையை அறுத்தெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் நீயும் கொல்லப்பட்டு உன் ஆஸ்தியும் ராஜ்ஜியத்துக்குச் சேர்க்கப்படும்" என்று பயமுறுத்தினாள். இதைக்கேட்டு ஷைலாக் "ஆனால் என் பணத்தைக் கொடுத்துவிடுங்கள் நான் போகிறேன்" என்றான். பஸ்ஸானியோ ஆவலோடு பணத்தை நீட்ட போர்ஷியா தடுத்துவிட்டு ஷைலாக்கைப் பார்த்து வெனிஸ் நகரத்துச் சட்டப்படி நீ மற்றொருவன் உயிரைக்கவர எத்தனித்ததால் உன் ஆஸ்தியெல்லாம் ராஜ்ஜியத்துக்குச் சேர்க்கப்பட்டது; நியாயாதிபதி இஷ்டப்பட்டால் உன்னை உயிரோடு விடலாம், இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுவிடலா மாகையால் அவர்காலில் விழுந்து உனக்கு உயிர்ப்பிச்சை வேணுமென்று கேட்டுக்கொள்" என்ன, நியாயாதிபதி உடனே ஷைலாக்கைப் பார்த்து "உன் ஆஸ்தியில் பாதி அண்டோனியோவுக்கும் பாதி இந்த ராஜ்ஜியத்துக்கும் சேரவேணும் என்று தீர்ப்பு செய்தார். ஆனால் தயாளகுணமுள்ள அண்டோனியோ தனக்கு வந்த அவன் பாதி ஆஸ்தியைப் பெற்றுக் கொள்வதற்கு இஷ்டமில்லாமல் மறுபடி அவனுக்கே கொடுத்துவிடுவதாயும் ஆனால் அந்த ஷைலாக் அவன் காலத்துக்குப் பிறகு அனாதியா யிருக்கிற அவன் குமாரத்திக்குச் சேர வேணுமென்று எழுதிக் கொடுக்க வேணுமென்றுஞ் சொல்ல, ஷைலாக்கு அப்படியே செய்து தன் பாதி ஆஸ்தியைப் பெற்றுக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான். நியாயாதிபதி முதலியவர்கள் வீட்டுக்குப் போனவுடன் பஸ்ஸானியோ போர்ஷியாவாகிய வக்கீலிடம்போய் தங்களின் உதவியால் அண்டோனியோவும் நானும் இன்றைக்குப் பெரிய குற்றங்களினின்றும் விடுவிக்கப்பட்டோம். அதற்காக நாங்கள் ஷைலாக்குக் கொடுக்கவேண்டிய 3000 பவுனைத் தாங்கள் தயவுசெய்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்க அதற்குப் போர்ஷியா பணம் வேண்டாமென்றுசொல்லி தான் மணம் புரியும்போது பஸ்ஸானியோவுக்குக் கொடுத்த தன் மோதிரத்தை வாங்கிக்கொண்டுபோக வேண்டுமென்று எண்ணி பஸானியோ நீர் போட்டிருக்கிற மோதிரத்தைக் கொடுத்தால் போதும்" என்ன பெஸானியோ முதலில் கொஞ்சம் இஷ்டமில்லாமல் இருந்து பிறகு கொடுத்துவிட்டான். அப்படியே போர்ஷியாவின் குமாஸ்தாவின் நெரிஸ்ஸாவும் கிராஷியானோவின் மோதிரத்தைக் கேட்க அவனும் அப்படியே கொடுத்துவிட்டான்.

போர்ஷியாவும், நெரிஸ்ஸாவும் தங்கள் கணவரது மோதிரங்களைக் கவடாக வாங்கிக்கொண்டு வீடுவந்து சேர்ந்து தங்கள் வேஷத்தை மாற்றிவிட்டு, தங்கள் கணவரது வரவை எதிர்பார்த்திருந்தார்கள், அவர்கள் அண்டோனியோவோடு வீடுவந்து சேர்ந்தவுடன் எல்லாரும் கொஞ்சநேரம்

வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது, நெரிஸ்ஸா தன் கணவன் கையில் தான் கலியாண காலத்தில் கொடுத்த மோதிரம் இல்லாததைக்கண்டு அது எங்கேயென்று கேட்க, கிராஷியானோ தான் வெனிஸ்ஸில் ஒரு வக்கீல் குமாஸ்தாவுக்குக் கொடுத்துவிட்டதாகச் சொல்ல நெரிஸ்ஸா மிக்க கோபம் வந்தவள்போல் கிராஷியானோவோடு வாதாடினாள். போர்ஷியாவும் தன் கணவனும் தான் கொடுத்த மோதிரத்தை வெனிஸ்ஸில் வக்கீலுக்குக் கொடுத்ததாகக் கேள்விப்பட்டு மிக்க கோபித்து "நெரிஸ்ஸா அவள் கணவனுக்குச் சொல்லியபடி, நீரும் யாரோ ஒருவனுக்கு கொடுத்து விட்டதுபோல் தோன்றுகிறது" என்று வீணாய் இருவரும் தங்கள் கணவர்களைக்குற்றஞ் சாட்டினார்கள். அன்டோனியோ இந்த மனஸ்தாபத்துக்கெல்லாம் தான் காரணமாயிருந்ததைப்பற்றி விசனிக்க, போர்ஷியா அந்த மோதிரத்தை அண்டோனியோ கையில் கொடுத்து "இனி இந்த மோதிரத்தையாவது பத்திரமாய் வைத்துக்கொள்ளும்படி பஸ்ஸானியோவுக்குச் சொல்லும்" என்ன, பஸ்ஸானியோ அதைக் கையில் வாங்கினான். பார்க்கவே அது தான் வக்கீலுக்குக் கொடுத்த மோதிரமாயிருந்ததைக் கண்டு வியப்புடன் சங்கதிகளை விசாரித்து முழுதுந் தெரிந்துகொண்டு குதூகலமாயிருக்கும்பொழுது முழுகிப்போய்விட்டனவென்று எண்ணப்பட்ட அன்டோனியோவின் கப்பல்களும் பத்திரமாய் வந்து கடற்கரை சேர்ந்ததெனத் தெரியவந்தது. அண்டோனியோ, தனக்கு முதலில் வந்த கஷ்டங்களையெல்லாம மறந்து பிறகு வெகு செல்வவானாய் எல்லாரோடும் வேடிக்கையாகக் காலங்கழித்து வந்தான்.

E. சுப்பிரமணியம் B. A




Printed at the Ripon Press Madras & Published by P. Vaithynatha Iyer for the Proprietor, C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

REGISTERED 17 JUN 1904 MADRAS


# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. VI. } Madras: February 1904. { No. 2.

புத்தகம் ௬. } சென்னபட்டணம்: 1904 பிப்ரவரி௴. { இல. 2.


## சீதாபிராட்டியாருக்கு ஸ்ரீராமர் நதி, பர்வதம் முதலியவைகளின் அழகை வர்ணித்துக் கூறியது.

இராமர் வனத்திற்கு சீதா பிராட்டியாருடனும், தமது இளைய சகோ
தரராகிய லக்ஷ்மணருடனும் சென்றது யாவருக்கும் தெரி
யும். இவர் வனத்திற் செல்லும்போது ஒரு அழகான நதி
தென்படவே அங்கேயே ஒரு மாதம் வசித்திருந்ததாகத்
தெரிகிறது. அங்கு ஒரு நாள் தமது மனைவியாராகிய சீதா
பிராட்டியாருக்கு அந்நதியின் (மந்தாகினி—கெங்காநதி)
அழகைப்பற்றி பின்வருமாறு சிறப்பித்துச் சொன்னார்:—

ஸ்ரீராமர் (கெங்காநதி) மந்தாகினி யென்னும் நதிக்கு சீதையுடன்
சென்றார். அப்பொழுது அதில் அதிக ஜலம் பெருகி வந்துகொண் டிருந்
தது. ஸ்ரீ இராமர் இந்த நதியை சீதாபிராட்டியாருக்குக் காண்பித்து பின்
வருமாறு சொல்லுகிறார்:—ஓ ஜனக மகாராஜன் மகளே! இந்த நதிக்கு
மந்தாகினி என்று பெயர். இங்கு அநேக அழகிய மணற் குன்றுகளிருக்
கின்றன பார்! அதோபார்! அழகான ஹம்ஸம் ஸாரஸம் முதலிய நீர்ப்பற
வைகள் நீந்திக்கொண்டு போகின்றன. அவைகள் பார்ப்பதற்கு எவ்வளவு
அழகாக விருக்கின்றன! மேலும் தாமரை, செங்குவளை, கருங்குவளை முத
லிய மலர்கள் இங்கிருப்பதால் இதற்கு ஒருவித அழகைக் கொடுக்கின்றது;
மேலும் இருகரையிலும் பற்பல மரங்கள் வளர்ந்திருக் கின்றதையும் பார்!
இவைகளை யெல்லாம் பார்க்க எவ்வளவு ரமணீகரமா யிருக்கிறது!

ரிஷிகள் இந்நதியில் ஸ்நானம் செய்கிறார்கள். சில ரிஷிகள் கைகளை
யுயர்த்தி சூரியனை நோக்கித் தவஞ் செய்கின்றதைப் பார்! இந்நதியினிரு

புறங்களிலும் காற்றினால் அசைக்கப்பட்டு இலை மலர் கனிகளை யுதிர்க்கின்ற மரங்களினால், இம்மலை யாட்ட மாடுவதுபோலும், இந்நதி சில விடத்தில் முத்துப்போலத் தெளிவுள்ள நீருடையதும், சில விடங்களில் மணல் குன்றுகளை யுடையதும், சில விடங்களில் சித்த ஜனங்களால் நிறைந்ததுமாகி விளங்குகின்றதையும் பார்! பூமியிலும் நீரிலும் மலர்கள் காற்றினா லுதிர்ந்து வீழ்ந்து விளங்குகின்றன. ஏ! அர்த்தாங்கி! அதோபார்! அம்மலர்களின் மீது சக்கரவாகப் பறவைகள் செவிக்கினிமையாக சப்தம் செய்துகொண்டு படுத்திருக்கின்றன! அதோ செந்தாமரை வெண்டாமரைகளும் அழகாக மலர்ந்திருக்கின்றன! எனது பிரியமுள்ள பிராணநாயகி! உன்மனது எப்படியிருக்கின்றதென வினவ, "அவள் என் மனது மிகச் சந்துஷ்டி யடைந்திருக்கிறது" என்றாள்.

## சித்திரகூட பர்வதம்.

"எனது பிரியமுள்ள பிராணநாயகி! நீ இங்குள்ள விநோதங்களைப் பார்த்தாயா? நான் உனக்கு இவ்விநோதங்களைக் காண்பிக்கிறேன் என்று சொல்லி தமது மனைவியை யிட்டுக்கொண்டு மெதுவாகச் சென்றார். அப்பொழுது ஜனக புத்திரியே! அதோபார் பலவகைத் தாதுக்கள் நிறைந்து உயர்ந்த சிகரங்களை! அங்கே பலவகைப் பறவைக ளிருக்கின்றன. இம்மலையில் சிலவிடங்கள் வெள்ளி போன்றனவும், சில விடங்கள் உதிரம் போன்றனவும், சிலவிடங்கள் பொன் போலவும், சிலவிடங்கள் நீலமணி போன்றனவும், சிலவிடங்கள் புஷ்பராகம் போன்றனவும், சிலவிடங்கள் படிகம் போன்றனவும், சிலவிடங்கள் தாழைமடல் போன்றனவும், சிலவிடங்கள் நக்ஷத்திரங்கள் போன்றனவும், சிலவிடங்கள் பாதரஸம் போன்றனவுமாகி விளங்குகின்றன. இங்கு பலவகை மிருகங்களின் கூட்டங்களும், வேங்கைப் புலிகளும், சிறுபுலிகளும், கரடிகளும் மற்று மநேக மிருகசாதிகளு மிருக்கின்றன. அதோபார்! மான்களும், மான் குட்டிகளும் துள்ளி ஓடுகின்றன! மா, நாவல், வேங்கை, முள்ளம், பலா, கொன்றை, அழிஞ்சில், திமிசம், பில்வம், தும்மை, மூங்கில், குமிழம், வேம்பு, மாவலிங்கம், இருப்பை, மஞ்சாடி, இலந்தை, நெல்லி, கடம்பு, பரம்பு, இந்திரம், மாதுளை முதலிய மரங்கள் காற்றின் அசைவால் ஒருவித சப்தம் செய்கின்றனபார்! அவைகளைப் பார்த்தால் எவ்வளவு அழகாக விருக்கின்றன? மல்லிகை, விருபாக்ஷி, கொன்னை, நஞ்சாவட்டை, ரோஜா, தாழம்பூ, சம்பங்கி, முதலிய புஷ்பச் செடிகளைப் பார்! அவைகளில் புஷ்பங்கள் மலர்ந்திருக்கின்றன, வண்டுகள் ரீங்காரம் செய்துக்கொண்டு சுத்துகிறதையும் பார்! பழங்கள் பழுத்திருக்கின்றன, அதோ மரங்களெல்லாம் தழைத்தும் நிழல் நிறைந்தும் குளிர்ந்தும், மணங் கமழ்ந்து மிருப்பது எவ்வளவு அழகாக விருக்கின்றன? தரையைப் பிளந்து பெருகுகின்ற அருவி நீர் சிலவிடங்களில் தேங்கியும், சில விடங்களில் பெருகியும் வருகின்றன. இவைகளில் வித்தியாதரர்கள் வாள் முதலிய தம் படை-



கலைகளையும், சிறந்த வஸ்திரங்களையும் கிளைகளில் தொங்கவிட்டு ஸ்நானம் செய்கிறதைப்பார்! அதோபார்! அவர்கள் மனைவிமார்களும் சந்தோஷமாக ஸ்நானம் செய்துவிட்டு பூக்கொய்துகொண் டிருக்கிறார்கள். இன்னும் இம்மலையின் சிலைகளும், பற்பல நிறமுள்ளனவாக விருக்கின்றன. இம்மலையில் சில விடங்கள் மாளிகைபோலவும், உத்தியான வனம்போலவும் சிலவிடங்கள் கல்லுகள் நிறைந்தனவாயும் விளங்குகின்றன. இம்மலையின் நடுவிலுள்ள சிகரமானது பூமியைப் பிளந்து மேலெழுந்ததுபோல் தோன்றுகிறதைப் பார்! கீழாநெல்லி, புன்னைமலர், தகரமலர், மரவுரி முதலியவைகளா லியற்றி அதன்மேல் தாமரை யிதழ்களைப் பரப்பிச் செய்யப்பட்ட படுக்கைகளைப் பார்! இந்தமலை இந்திரன் நகரியையும் அளகாபுரியையும், மானஸமென்னும் ஸரோவரத்தையும் விடச்சிறந்து விளங்குகின்றதையும் பார்த்தாயா"வென்று இராமர் கேட்க, சீதாபிராட்டியார் "மிகச் சந்தோஷத்துடன் யாவற்றையும் பார்த்து மகிழ்ந்தேன்" என்றாள்.

ஸ்ரீராமர் தமது மனைவியாருக்கு, நதி பர்வதம், முதலியவைகளைப்பற்றி விவரித்துச் சொல்லியபிரகாரம் நமது தேசத்திலுள்ளவர்களும் தங்கள் மனைவிமார்களுக்கு ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் நன்றாகத் தெரியும்படியாகச் சொல்லவேண்டும். இவ்விதமான விநோதங்களைப் பார்ப்பதற்காகவே யாத்திரைசெய்ய வேண்டுமென்று சொல்லப்பட் டிருக்கிறது. இப்படி யாத்திரை செய்வதினால் ஒவ்வொரு தேசத்திலுள்ள விநோதங்களைப் பார்ப்பதுடன் ஜனங்களுடைய நடையுடை பாவனைகளையும் அறிந்துகொள்ளலாம். இராமேஸ்வரம் காசி முதலிய விடங்களுக்கு ஜனங்கள் சென்று வருவது நலமே. இவ்விதம் யாத்திரை செய்வது நலமென்று ஸர் ஹென்றி காட்டன் என்பவர் தமது புஸ்தகங்களி லொன்றில் எழுதி யிருக்கிறார். ஒருவன் பெரும் வியாதியால் வெகுகாலம் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தானாம். அநேக மருந்துகளைப் புசித்தும் பிரயோசன மில்லையாம். பின்பு இவன் ஜகந்நாதம் என்ற க்ஷேத்திரத்திற்கு நடந்து சென்று அங்குள்ள திவ்விய நதியில் ஸ்நாநம் செய்து கடவுளைத் தெரிசித்தபின் மறுபடியும் நடந்து தனது சொந்த ஊருக்குத் திரும்பி வந்தானாம், சுமார் 200-மைல் தூரம் இவன் நடந்து வந்ததாகத் தெரிகிறது. இப்படி இவன் செய்தமையால் வியாதி நீங்கிவிட்டதாம். இதனால் இவன் நடந்து சென்றமையால் சுத்த ஆகாயத்தை உட்கொண் டிருக்கலாம். அந்தந்த தேசத்திலுள்ள நதியில் ஸ்நானம் செய்திருக்கலாம். இவைகளால் வியாதி நீங்கி யிருக்கக் கூடுமெனச் சொல்லுகிறது உண்மையே.

ஆதலால் யாத்திரை செய்வது மிகவும் உசிதமே; மேலும் நமது மாதர்களுக்கு அவர்களைச் சேர்ந்தவர்கள் கூடியவரையிலும் நமது தேசத்திலுள்ள விநோதங்களைக் காட்ட முயல்வது நலமே; அவர்கள் ஒவ்வொன்றையும் அறிந்திருந்தால் நலமல்லவா? அவர்கள் மனதும் சந்துஷ்டி யடையாதா?

அவர்களும் இவ்விதமே தங்கள் புத்திரர்களுக்கும், புத்திரிகளுக்கும், பல விஷயங்களைப்பற்றி போதிக்க முயல்வார்களன்றோ?

## திருவல்லிக்கேணி விஜயநகர மகாராஜா
## பெண் பள்ளிக்கூடம்.

I

இந்தப் பாடசாலையை இதுவரையிலும் நடத்தி வந்த மிஸ்டர் திருமலாச்சாரியார் இறந்துபோய் விட்டபடியால் இதை இனி நடத்திவர திருவல்லிக்கேணியிலுள்ள சில கனவான்கள் ஒன்றாய்க்கூடி ஒரு கமிட்டி ஏற்படுத்தியதைக் குறித்து சந்தோஷப் படுகிறோம். சபை கூடின பொழுது சுமார் 50 ரூபாய் வரையிலும் கைபொப்பம் சேர்ந்ததாம். மிஸ்டர் T. K. ஹநுமந்தராயரும், மிஸ்டர் N. குப்புசாமி ஐயரும், மிஸ்டர் இராமசுவாமி நாயுடுவும், மிஸ்டர் கங்காதரசாஸ்திரியாரும், மிஸ்டர் கிருஷ்ணசுவாமி ராயரும், ராவ்பஹதூர் M. ரங்காசாரியாரும் இங்குள்ளவர்களிடம் பணம் வசூல் செய்து வருகிறார்களாம். இப்படி இவர்கள் செய்து இப்பாடசாலையை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருவது மிகவும் நலமே; ஆனால் இதில் பாலிகைகளுக்கு பரிசு கிரமமாக அளிப்பதில்லையென்றும், போதனாமுறை விசேஷமாக விருத்தியடையவில்லையென்றும், ஆங்கிலம் போதிக்கப்படவில்லையென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இது உண்மையாகவிருந்தால் இக்கமிட்டியார் இக்குறைகளை நீக்க முயலுவார்களென்று நம்புகிறோம். இங்கு இப்பொழுது நான்கு வகுப்புகள்தானிருக்கின்றனவாம். இவர்கள் நாளாவர்த்தியில் இதை லோயர் சகண்டரி பெண்பாடசாலையாகச் செய்தால் அநேக பெண்கள் படிக்கவும் சேர்வார்கள். உபாத்தியாயர்கள் கூடியவரையிலும் மாதர்களாகத் தானிருக்கவேண்டும். இவ்விதமிருக்க அதிக பணம் தேவை. இதற்கு கமிட்டியார் பணம் சேகரித்து பம்பாய், மைசூர் முதலிய விடங்களில் எப்படி பெண் கல்வி விருத்தியடைந்து வருகிறதோ அவ்விதம் இங்கு செய்யலாம்; இதற்கு ஊக்கமும், விடாமுயற்சியும்தான் தேவை.

சில காலங்களுக்கு முன் டோரானேன் என்ற விடத்தில் சில கனவான்கள் சேர்ந்து ஒரு சிறிய பெண்பாடசாலையை ஏற்படுத்தினார்களாம். முதலில் பெண்களின்தொகை சொற்பமாகவிருந்ததாம். பின்னிட்டு அதிகரித்ததாம். பெண்களுக்கு கணக்கு, எழுதல், வாசித்தல், இங்கிலீஷ், சரித்திரம், பூகோளம், எலிமெண்டரி ஸைன்ஸ், சங்கீதம், பாகசாஸ்திரம், தையல்வேலை, சுகவழி முதலியவைகளைப் போதித்து வருகிறார்களாம். பெரிய கனவான்களைச் சேர்ந்த மாதர்கள் இப்பாடசாலையைத் தாங்களே நடத்துவதாக முன் வந்து பாலிகைகளுக்குப் போதித்தும் வருகிறார்களாம். அநேகர் இதற்கு திரவிய உதவிசெய்ய தாமே முன் வந்தார்களாம். கபர்தலமகாராணியார் இதற்கு சகாயம் செய்து வருகிறார்கள். ஜிரீராஜா அவர்கள் 5000 ரூபாய் இனாமாகக் கொடுத்ததுமன்றி வருடம் 300 ரூபாயும் கொடுத்து வருகிறாராம். மொத்தமாக அப்பாடசாலைக்கு இப்பொழுது 24,000 ரூபாய் சேர்ந்திருக்கிறதாம். இப்படிச் செய்தால் தான் பாடசாலை எப்பொழுதும் சரிவர நடக்கும். இப்பொழுதுள்ள கமிட்டியார்கள் இப்பொழுது உழைத்து வருவதுபோல் உழைத்து வந்தால் இப்பாடசாலையும் டோரானேன் பாடசாலையைப்போல் முன்னுக்கு வருமென்பதற்கு ஐயமில்லை. இவர்களுக்கு ஈஸ்வரன் ஆயுளையும் தேகவலிவையும் அளிப்பாராக.



## லட்சுமி கல்யாணம்.*

கொங்கு தேசத்தில் அவிநாசி யென்றோர் சிவக்ஷேத்திர முளது. அதில் மற்ற க்ஷேத்திரங்களிற் போலவே ஒரு அக்கிராரம் இருக்கிறது. அவ்வக்கிராரத்தில் ஜனங்கள் இன்னும் தங்கள் வேலை முடிந்து இளைப்பாறும் பொழுது லட்சுமி சரித்திரத்தைச் சொல்லியும் கேட்டும் ஆநந்திப்பதுண்டு. லட்சுமிதான் அவ்வக்கிராரத்தில் சுமார் 50-வருஷங்களுக்கு முன் புரோகிதராயிருந்த சுப்பிரமணிய சாஸ்திரியின் ஒரேகுழந்தை. அவளைக் கம்பன் பார்த்திருப்பானானால் தான் வர்ணித்திருக்கும் சீதை அழகுள்ளவளென்று சொல்லத் தக்கவளோ என்று சந்தேக மடைந்திருப்பான். அத்தகைய பெண்ணை அவள் தாய் தந்தையர் தங்கள் கண்ணென நினைந்து கருத்தொருப்பட்டு வளர்த்து வந்தார்கள். நம்மவர்கள்பெண்பெற்றவுடனே வரன்தேட ஆரம்பிப்பது வழக்கமல்லவா? ஆனால் சுப்பிரமணிய சாஸ்திரிக்கு அதிகமாகத் தேட ஆவசியகமில்லை. அவர் ஏழையாகவே இருப்பினும் பெண் வளர்ப்பு காரணமாக எல்லோருமே எம் பிள்ளைக்கு பெண்ணைக் கொடு, எம் பிள்ளைக்குப் பெண்ணைக் கொடு என்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். சாஸ்திரியாருக்கு பெண்ணை ஒருபணக்காரன் வீட்டில் கொடுத்தால் அவள் சாப்பாடு முதலிய வற்றிற்கு கஷ்டமில்லாம லிருப்பாளென்று பணக்காரரா

* Adopted from the Indian Ladies' Magazine.

கிய ராமசாமி சாஸ்திரி பிள்ளை சுந்தரத்துக்குப் பெண்ணைக் கொடுப்பதாக யோசித்து வைத்திருந்தார். ராமசாமி சாஸ்திரியாரும் பொன்போலும் வளப்புள்ள லட்சுமியை மருமகளாகப் பெறுவதில் மிகுந்ததிருப்தி யுள்ளவராகவே யிருந்தார். குழந்தை சுந்தரமும் லட்சுமிக் கேற்றமணவாளனே யாம். அவர்களிருவரும் தங்கள் பெற்றோர் மனக்கருத் துணர்ந்தவர்களாய் தங்களுக்குச் சினேகம் தினேதினே அதிகம் பெற்றவர்களானார்கள். இவ்வளவோ! இருவரும் கல்யாணம் செய்து கொள்வதாகவும் ஒருவரை யொருவர் கனவிலும் மறப்பதில்லை என்னும் சத்தியம் செய்துகொண்டார்கள். இவ்வுலகில் நாம் நினைத்த வெல்லாம் நினைத்தபடியாகின்றனவோ? இல்லையே. நமக்கு மேல் ஒருவன் இருந்து நம் காரியங்களில் பிரவேசித்தல்லவோ நம்மை வாதிக்கின்றான். அவன் செயல் நம் நன்மைக்கேயாயினும் நமக்கு அவ்வக் காலத்து அப்படித் தோன்றுவதில்லையே.

குமாரசாமி யென்றோர் பிராம்மணச் சிறுவன் சீமை சென்று பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறி திரும்பிவந்தான். அவன் கோயமுத்தூரில் செய்வித்த ஒரு பெருவிருந்துக்கு ராமசாமி சாஸ்திரியாரும் அழைக்கப்பட்டார். அவர், ஒருவர் தன் ஆசாரத்தை விடாமலிருப்பாரானால் சீமைக்குப் போவதில் கெடுதலொன்று மில்லை யென்னும் கொள்கை யுடையவராகையால் குமாரசாமியோடு பந்திபோசனம் செய்து வந்துவிட்டார். ஆனால் சுப்பிரமணிய சாஸ்திரியும் இன்னும் சிலரும் சீமைக்குப் போனவனைத் திரும்பி சாதியில் சேர்க்க்க் கூடாதென்னும் பிடிவாதமுள்ளவர்கள். ஆகவே சம்பந்திகளாக விருந்த இருவருக்கும் விரோதம் உண்டாக ஆரம்பித்தது. ஆனாலும் இவ்விரோதம் ராமசாமி சாஸ்திரி பணக்காரரா யிருந்தவரை சுந்தரம் லட்சுமி யிவர்கள் கல்யாணத்தைப் பாதிக்காது. பணமல்லவோ முக்கியமான விஷயம் கல்யாண காரியங்களில். கொஞ்சக்காலத்துக் கெல்லாம் அப்பணத்துக்கும் முடிவு வந்ததாக வதந்தியுண்டாயிற்று. ராமசாமி சாஸ்திரி தன் பொருளை யெல்லாம் கோயமுத்தூர் பாங்கிகளொன்றில் போட்டிருந்தார். அப்பாங்கியில் ஒரு பெருந்தொகை கடன் வாங்கியிருந்த மரக்காய னொருவன் புதுச்சேரி யோடிவிட்டபடியால் பாங்கி இன்சால் மெண்ட் ஆகவேண்டியிருந்தது. பாங்கி இன்சால் மென்டானால் ராமசாமி சாஸ்திரி ஆண்டியாக வேண்டியதே. இச்சமாசாரம் வெகு சீக்கிரம் அவிநாசி யெட்டிற்று. உடனே சுப்பிரமணிய சாஸ்திரியும் இனிமேல் ஒருக்ஷணமும் கல்யாண யோசனை வைத்திராதேயும் என்னும் சமாசாரத்தை ராமசாமி சாஸ்திரிக்குச் சொல்லியனுப்பி விட்டு லட்சுமியையும் இனிமேல் நீ சுந்தரத்தோடு பேசக்கூடாதென்று உத்தரவுசெய்தார். லட்சுமி காரணங் கேட்டதற்கு உனக்கொன்றும் தெரியாது, நீ சிறுமி என்னும் விடையே கிடைத்தது. சிறுமியென் செய்வாள்! தாய்தந்தையர்ப் பெண் என்றல்லவோ ஆன்றோர் சொல்லியுள்ளார்கள். தன் கல்யாணகாரியத்தை முடிவு செய்வது தாய் தந்தையரே. சுந்தரம் ஓர் நாள் லட்சுமியை வழி



யில் கண்டு 'என்னோடு வார்த்தையாடாது என்னை முன்னறியாதவள்போலும் நீ செல்வது சரியோ? நம்முடைய முன் சத்தியங்களெல்லாம் என்னவாயின' என்று கேட்டபொழுது, லட்சுமி ஆற்றாது கண்ணீர்விட்டழுது 'எனக்கொன்றும் தெரியாது. என் பெற்றோர் சொல்லியபடி நான் நடக்கின்றேன்,' என்றாள். சுந்தரம் தன் தந்தையை வினவி, உண்மையை அறிந்து, தனக்கு மீறிய மனவருத்தத்தி லாழ்ந்திருந்தான்.

சுப்பிரமணிய சாஸ்திரி சீக்கிரத்தில் தன் பெண்ணுக்கு ஓர் வரன் சம்பாதித்து விட்டார். இக்காலத்தில் அவிநாசிக்கு ஓர் 60 வயதுப் பணக்காரன் வந்து ஸ்தல வாசம் செய்யத் தலைப்பட்டான். அவனோடு வந்திருக்கும் ஆட்களையும், அவன் அணியும் பட்டுகளையும், நகைகளையும் பார்த்தவர்கள் அவன் ஓர் மகாராஜாவாகவே யிருக்கவேண்டுமென்று நினைத்தார்கள். அவன் தன்னுடைய இரண்டாவது பெண்சாதி யிறந்துபோய்விட்ட தாகவும் மூன்றாவது ஒருத்தியை மணக்க யோசித்திருப்பதாகவும் சொல்லிக்கொண்டான். சுப்பிரமணிய சாஸ்திரி தனக்கோர் நல்ல காலம் அதுவென நினைத்தார். வந்தவனும் லட்சுமி தனக்கு மனம் பிடித்தவளென்றும், அவள் தகப்பனுக்கு ரூபா 10,000 கொடுப்பதாகவும் சொன்னார். இதைவிட வேறென்ன வேண்டும்; சில வருஷங்களில் அவன் இறந்துபோகலாம். போனாலென்ன? பணங் குவியல் குவியலாக இருக்கும் பொழுது வைதவ்யம் வந்தாலென்ன? சாப்பாட்டுக்கில்லா விட்டால் தானே கஷ்டம். லட்சுமியின் கல்யாணம் சீக்கிரத்தில் ஆக ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. லட்சுமியோ வெனில் தன்விதியை நொந்து கடைசி நாள்வரை காத்திருந்து அதற்குள் அவளைப் பிடிக்க வரும் சனிவிலக வில்லையாகில் பாஷாணம் சாப்பிட்டு உயிர்துறப்பதாக முடிவுசெய்து கொண்டிருந்தாள். கல்யாணத்துக் குறித்திருந்த நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன் லட்சுமியின் நற்காலம் ஓர் வடிவெடுத்து வந்தாலொப்ப ஓர் போலீஸ் இன்ஸ் பெக்டர் வந்து அவள் கொழுநனாக இருக்கப்போகிறவனைச் சிறை செய்து அவன் பல கொள்ளைகளிலும் கொலைகளிலும் சம்பந்தப்பட்டிருந்ததற்கு தகுந்த ஆதாரம் காட்டினார். அடுத்த செஷனில் அவன் விசாரணை செய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பெற்றான். மணக்கோலங் காணவிருந்த இவன் பிணமானது சுப்பிரமணிய சாஸ்திரிக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுத்தது மன்றி, அயலார் பழிப்புக்கும் இடந்தந்தது. இம்மட்டோ! புதுச்சேரி சென்ற மரைக்காயன் தன்னைத் தெரிந்தவர்களொருவரும் இல்லை யென்று சென்னப்பட்டணம் சென்றவனை அவனுக்குக் கடன் கொடுத்தவர்களில் ஒருவன் கண்டு கைதி செய்யவே கோயமுத்தூர் பாங்கியின் பணமும் வந்து விட்டது. ராமசாமி சாஸ்திரி முன்போலவே பணக்காரராய் விட்டார். சுப்பிரமணிய சாஸ்திரிக்கு காய்ச்சலும் இப்போது வரத்தலைப்பட்டது. என் செய்வான் ஏழை! தன்சாவு காலம்வந்து விட்டதென்று நினைத்து ஓ வென்றழ ஆரம்பித்தனர்.

ராமசாமி சாஸ்திரி பெருந்தன்மை யுள்ளவர். நிரம்ப நல்லவர். அவர்
சுப்பிரமணிய சாஸ்திரியின் கஷ்டகாலத்துக்கு இரங்கி அவரைப்பார்க்க
அவர் வீட்டுக்குச் சென்றார். அப்போது சுப்பிரமணிய சாஸ்திரி தான் முன்
செய்த கெட்ட காரியங்களுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தாங்கள்
முன் யோசித்திருந்தபடி தன் பெண்ணை சுந்தரத்துக்கு மணஞ்செய்துகொள்
ளும்படி வேண்டினார். தன் ஒரே மகனாகிய சுந்தரம் லட்சுமியையன்றி வே
றொரு பெண்ணையும் மணப்பதில்லை யென்னும் பிடிவாதங் கொண்டிருந்த
மையாலும் தனக்கே மிகுந்த இரக்கம் பொங்கினமையாலும், புரோகிதர்
வார்த்தைக் கிணங்கினார். சீக்கிரம் கல்யாணமும் நடந்தேறியது. சுப்பிரம
ணிய சாஸ்திரியும் வியாதி நீங்கி சொஸ்தமடைந்தார்.

"பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ."

T. A. இராமலிங்கம், பி-ஏ.

# மிஸ்ஸஸ் ஆனிபெஸன்டு அம்மாள் செய்த பிரசங்கம்.

சகோதரர்காள்! நாம் ஏன் இன்று இங்கு இவ்வளவு திரளாகக்
கூடி யிருக்கின்றோம், அறிவீர்களா? நம்மை யிங்கு என்ன
உத்தேசம் கூடும்படி செய்தது உங்களுக்குத் தெரியுமா?
இந்தியா இந்த பூலோகத்திலுள்ள மற்ற நாடுகள் எப்பத
வியை யடைந்திருக்கின்றனவோ அப்பதவியை யடைய ஒரு ஏணியின் படி
களில் ஏறுவதுபோல ஏறிக்கொண்டே யிருக்கிறது. அந்த ஏணிப்படியில்
இதுவரை எந்தப் படியில் கால்வைத் திருக்கிறோமோ அந்தப் படிக்கு அடுத்
தாற்போல மேலேயிருக்கிற உயரப் படியில் கால்வைக்க முயற்சி செய்வதற்
காகவே நாம் இங்கு கூடி யிருக்கின்றோம். இந்தியாவென்ற மாளிகைக்
கட்டியாய்க் கொண்டே யிருப்பதால், அப்பெருங் கட்டிட வேலைமுடிய ஒரு
வரிசைச் செங்கல்லை வைக்கப்போகிறோம் என்றுகூடச் சொல்லலாம். நம்
முடைய பிற்காலத்து நன்மையைத் தேட ஆரம்பித்திருக்கிறோம். அந்
நன்மை கனவில் கண்ட நன்மையாகவும் அனுபவியா நன்மையாகவும் போய்
விடாமல் கைகூடும் வண்ணம் செய்துகொள்ள முயற்சி செய்வதற்காக
கூடியிருக்கிறோம்.

இச்சபை யேன் இன்னொருசபை யிருக்கவும் ஸ்தாபிக்கப்பட் டிருக்கிற
தென்று எனக்கு முன் பேசினவரால் சொல்லப்பட்டது. அச்சபை வரு



ஷக்கணக்காய் நடந்து வந்தபோதிலும், இந்தச் சபை ஹிந்து ஆசாராபி
விருத்தியையும் மதாபி விருத்தியையும் பழையநாளை ஹிந்துநாகரிகம் கெடா
வண்ணம் அடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு ஸ்தாபிக்கப்பட் டிருக்
கிறது. இதுதான் இச்சபைக்கும் ஏற்கெனவேயுள்ள சபைக்கும் வித்தியா
சம். நாம் ஒருவரோடு சண்டை போட்டுவிடவில்லை. ஒருவரை நாம் கடுஞ்
சொற் சொல்லப்போகிறது மில்லை. ஒருவரை நாம் நிந்திக்கப்போகிறது
மில்லை. ஆனால் நாம் என்னசெய்யப் போகிறோம். நாம் உத்தேசித்தக்
காரியத்தில் சித்தியடைய எந்த மார்க்கம் சன்மார்க்கம் என்று தோன்று
கிறதோ அந்த மார்க்கத்தைப்பற்றி நடக்கப் போகிறோம், அந்த மார்க்கம்
பழையகால ஹிந்து நாகரிகத்துக்கு உற்றபாதை. மேல்நாட்டு நாகரிகத்
துக்குற்ற பாதையன்று. ஹிந்து ஜாதியாருக்குற்ற பாதை. ஆனால் மேல்
நாட்டு நாகரிகப் பாதைகளைத் தழுவவே மாட்டோம் என்று நான் சொல்ல
வில்லை. அதனில் எது உபயோகப்படுமோ, எது அறிவை யதிகப்படுத்
துமோ எது இரக்கச் சிந்தையை அதிகப்படுத்துமோ அப்பாதையைத் தழு
விக்கொள்ளுவோம். எந்தப்பாதை ஹிந்துக்களிடமுள்ள தெய்வ பக்தியைக்
கெடுக்குமோ, எது ஹிந்துக்களை ஒரு கூட்டத்தார் என்று எண்ணும்படி
செய்யாதோ அந்தப் பாதையை நாம் தழுவமாட்டோம். வேற்றூர்ச்
செடியை இவ்விந்தியாவில் வைத்து வளர்க்கப் பிரியப்படவில்லை. அது
இவ்வுஷ்ணப் பிரதேச சூரியவெப்பத்தைத் தாங்கமாட்டாமல் எரிந்து பட்டு
போக வேண்டுமென்பதும், இங்கடிக்கும் புயலில் கொம்பு வேறு கிளைவே
றாய்ப் போய்விட வேண்டுமென்பதும் எங்களுடைய கொள்கையில்லை.
அச்செடி இந்தியாவிலேயே உண்டான செடியாயிருக்க வேண்டுமென்பதே
எங்களுடைய நோக்கம். எந்தக் கூட்டத்தாருள் சீர்திருத்தம் நடந்தாலும்
சரியே; அச்சீர்திருத்தம் அவர்களுடைய பழைய நாள் வழக்கங்களை அனு
சரித்ததா யிருக்கவேண்டும். அவர்களுடைய புத்திக்கு எட்டக் கூடியதா
யிருக்கவேண்டும். இதனால் நான் மேல்நாட்டு வழிகளையும் மேல்நாட்டு
வழக்கங்களையும் நிந்திப்பதாய் நினைக்கவேண்டாம். அவைகள் ஹிந்துக்க
ளது வழக்கங்களுக்கு ஒத்துவரமாட்டா. ஹிந்துகோயில் ஒன்றை கட்ட
ஆரம்பிப்போர் அதனை மகமதியர்களது மசூதியைப்போலவும் கிறிஸ்தவர்க
ளது மாதாக் கோவிலைப் போலவும் கட்டினால் நன்றாயிருக்குமா? அந்தக்
கட்டிடம் ஜாதியாசாரத்துக்கு ஒத்தபடிக் கட்டப்பட்டிருக்கும் கட்டிடம்
ஆகமாட்டாது.

இப்பொழுது இந்தச் சங்கத்தார் என்ன வழிகளில் உழைக்கப்போகி
றார்கள் என்பதைக் கவனிப்போம். நான் முக்கியமா யுள்ளவைகளையும
விருத்திக்குக் காரணமா யிருப்பவைகளையும் பொறுக்கி யெடுத்துப் பேசு
வேன். ஹிந்துப் பெண்களுக்கும், ஹிந்து ஸ்திரீகளுக்கும் படிப்பு சொல்
லிக் கொடுக்கப்பட வேண்டும். இந்தியாவின் பிற்காலநிலை அதனைப் பொருத்

ததா யிருக்கிறது. அக்கல்வி தற்கால தேவைக்குத் தக்கபடி இருக்கவேண்டும். புருஷர்களோடு ஸ்திரீகளும் ஒத்துழையாவிட்டால் இந்தியாவுக்கு க்ஷேமம் இல்லை. இந்திய மாதர்கள் கல்வழிப்பட வேண்டுமென்றால், அவர்கள் வெறுக்கத்தக்க வழிகளை நாம் அனுசரித்தால் காரியம் பலியாது. மேல்நாட்டு முறைகளை அனுசரித்தால் யாதொரு திருத்தமும் செய்ய முடியாது. பல்லாயிரம் வருஷங்களாய் ஏற்பட்டும் அனுஷ்டிக்கப்பட்டும் வரும் முறைகளைத் தழுவியே காரியத்தை சாதிக்கவேண்டும். ஹிந்து ஸ்திரீகள் மனதைக் கலக்குவது வெகு சிரமமாகும். அவர்கள் தங்கள் முன்னோர்களது மதக், கொள்கைகளை எளிதில் விடமாட்டார்கள். ஆகவே அவர்களுக்கு புகட்டப்படும் கல்வி இந்நாட்டுமதக் கொள்கைகளைத் தழுவினதா யிருக்கவேண்டும். ஸ்திரீகள் கல்வி கற்றாலன்றி யாதொரு பிரயோசனமுமில்லை. இந்நாட்டின் க்ஷேமம் அவர்கள் கல்வி கற்பதால் பெருகக்கூடியதா யிருக்கிறபடியால், இச்சங்கத்தாரின் முக்கிய நோக்கம் ஸ்திரீகளைப் படிப்பிக்க வேண்டுமென்பதே

அவர்கள் கல்வி கற்பதுமட்டுமன்றி ஹிந்து புரோகிதர்களும் பண்டிதர்களும் கற்று நாகரிகம் பெறவேண்டும். அவர்களுக்கு மேல் நாட்டுக் கல்வியை கற்று நாகரிகம் பெற்றிருக்கும் ஹிந்துக்களது நாகரிகம் இம்மாதிரியாகும் என்று தெரியவேண்டும். அதற்கு அவர்கள் மேல்நாட்டுப் படிப்புப் பரிச்சியமுள்ளவர்களா யிருத்தல் வேண்டும். அதுவும் இச்சபையின் முக்கிய நோக்கங்களில் ஒன்று என்பதை நீங்கள் கவனிக்கவேண்டும்.

அதுவே யன்றி பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும் வாசிக்கும் பிள்ளைகளுக்கு ஆங்கில படிப்போடு ஹிந்துமதக் கல்வியும் கற்பிக்கப்படவேண்டும். மேல்நாட்டு படிப்புமட்டும் போதாது. மதக்கல்வி யில்லாதிருக்குமாயின் மதாபிமானம் என்பதே ஒளித்துப்போம். நாம் அதனை ஒளித்துப்போகும்படி விட்டுவிடக்கூடாது. மதாபிமானமாகிய சிரோரத்தினத்தை ஹிந்துச் சிறுவர்கள் வேண்டாம் என்று எடுத்துக் கீழேவைத்து விடுவதாகயில்லை.

இதுவும் ஒழிய, நாம் விவாகமுறைத் திருத்தத்தைக் கவனிப்போம். அவ்விஷயமாய் செய்யப்படும் பிரேரோபணைகள் இப்போது நடைபெறும் வழக்கங்களை தலைகுப்புறமாற்றிவிட கூடியவையல்ல. காலக்கிரமத்தில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் கலியாணம் செய்யும் வயதை உயர்த்துவதாக பிரேரபிக்கப்படுகிறது. அப்படி செய்தால் சிறுவயதில் பெண்கள் புருஷர்களை யிழப்பது குறையும் என்று கருதப்படுகிறது. இந்த அம்சம் முக்கியமாய்க் கவனிக்கப்படவேண்டியது. காலேஜ்களில் வாசிக்கும் இந்தியர்களது தேகபுஷ்டி வரவரக்குறைந்து வருகிறது. காலேஜ்களில் வாசித்துவிட்டு வெளிவருகிற இந்தியச் சிறுவர்கள் எவ்வளவு தேகவலிமையுடையவர்களா யிருக்கவேண்டுமோ அவ்வளவு தேக வலிமையுடைவர்களா யிருக்கவில்லை. அவர்



கள் வாசித்து வாசித்து மெலிந்து போனவர்களாய்க் காண்கிறார்கள். கிழவனை யொப்ப நரம்புகள் தளர்ந்து போனவர்களாகிறார்கள். இவ்விந்தியாவில் ஆதிகாலத்திலே மனு என்ற நீதிமானால் ஏற்படுத்தப்பட்ட விதியைக் கண்டிப்பாய் அனுசரிக்கவேண்டும். வாசிக்கும் சிறுவர்கள் பிரமசாரியா சிரமத்தையுடையவர்களாகவே யிருக்கவேண்டும். கிரஹஸ்தாசிரமம் அவர்களுக்குக் கூடவே கூடாது. மனுவென்ற நீதிமான் இப்போதைய பள்ளிக்கூடங்களுள் புகுந்து பார்க்க, அப்பள்ளிக்கூடங்களில் பிரவேசப் பரீட்சைக்கு வாசித்துக்கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு வீட்டிலே குழந்தைகளிருக்கின்ற வென்று தெரியவருமானால், அவர் என்னசொல்வார்? கிரஹஸ்தாசிரமத்துக்கும், பிரமசாரியாசிரமத்துக்கும், வித்தியாசமில்லா திருப்பதைப் பார்க்க அவர் வருத்தப்படமாட்டாரா? பழையநாளை பிரமசாரியாசிரமத்தை யொளித்துப்போகாம லிருக்கும்படி பாதுகாப்பீர்களாயின், அதாவது, சிறுவர்களுக்கு அவர்கள் படித்து முடிகிறவரையில் கலியாணம் செய்யா திருப்பீர்களாயின் ஆதிகாலத்தில் இந்தியர்களுக்கு எவ்வளவுதேகவலியிருந்ததோ அவ்வளவு தேகவலி யிக்காலத்து ஹிந்துக்களுக்கும் உண்டாகாமற் போகாது. இதுமட்டுமன்றி கணவனை யிழந்த ஸ்திரீகளும் படிப்புள்ளவர்களா யிருக்கக்கூடிய வழியைத் தேடவேண்டும். இவைகளெல்லாம் கிரமப்படி நடக்குமாயின் பாலியத்திலேயே கணவனை யிழந்துவிட்டு, ஹிந்துக்களது நாகரிக நிலைக்கே ஒரு மறுவாய்த் தோற்றும்படி பரிதபிக்கும் சிறுமிகளே யிருக்கமாட்டார்கள். இம்மாதிரிச் சீர்திருத்த முறைகளை யனுஷ்டிப்பீர்களாயின் இந்தியாவின் க்ஷேமத்துக்கு உழைப்பவர்களாவீர்கள். இப்போதுள்ள துன்பங்களும் நீங்கும். இவைகளை யன்றி ஹிந்துக்களது ஜாதிகுலாசார முறைகளை யனுசரித்துச் சீர்திருத்தஞ் செய்யப்படவேண்டியது வேறு சில அம்சங்களுமிருக்கின்றன. அம்மாதிரி திருத்தங்களுள் அன்னிய நாடுபோய் விட்டுத் திரும்பும் ஹிந்துக்களை நடத்தவேண்டிய முறையும் ஒன்றாகும். அயல் நாடு சென்ற ஹிந்துக்கள் ஜாதிமத ஆசார முறைகளைவிட்டுச் சிறிதும் பிறழாதவர்களாய், மேல்நாட்டாரது முறைகளை யனுசரியாதவர்களாய்த் திரும்புவார்களானால், அவர்களை இங்குள்ள ஹிந்துக்கள் ஏன் தங்கள் கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளக்கூடாது? அவர்களுக்கு ஏன் ஹிந்துக்கள் இடைஞ்சல் செய்யவேண்டும்? அவர்கள் விஷயத்தில் யாதொரு இம்சையும் செய்யக்கூடாது. அவர்கள் அன்னிய நாடுகள் சென்று எவ்வளவு கற்றறிந்தவர்களாய்த் திரும்புகிறார்கள்? அவர்களை உங்களுடைய சிநேகிதர்களாய்ச் செய்து கொள்ளாமல் பகைவர்களாக்கிக் கொள்வதால் விளையும் நன்மையென்ன? அப்படிப்பட்டவர்களை மறுபடியும் ஹிந்துக்களது கோஷ்டியில் சேர்த்துக்கொள்ள, இச்சங்கம் பின்வாங்காது வேலை செய்யும். அவர்கள் இந்து கோஷ்டியில் சேர்த்துக்கொள்ளப் படவேண்டியது மெத்த அவசியம். நான் இதுவரை எவ்விஷயங்களைப்பற்றிப் பேசி வந்தேனோ அவ்விஷயங்களை யெல்லாம் இச்சங்கம் தனது நோக்கமாய்க் கொண்டிருக்கிறது. இப்போது உங்களைக்கேட்

பதெல்லாம் இதுதான். மேலே குறிக்கப்பட்ட காரியம் கைகூடும்படி நீங்கள் உழைப்பீர்களா? சில திருத்தங்கள் அவசியம் செய்யப்படவேண்டுமென்பதைச் சிறிது புத்தியுள்ள சாமானிய மனிதனும் ஒப்புவான், நாட்டுப்புறங்களில் ஜனங்கள் அறிவிலிகளா யிருக்கிறார்களென்பதையும், அவர்களுள் அறிவாகிய விளக்கையேற்ற வேண்டுமென்பதையும், யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனால் செய்யப்படவேண்டிய திருத்தங்களை ஒன்றன் பின் ஒன்றாய் அவைகளாகவே காலக்கிரமத்தில் உண்டாகும்படி செய்யப்போகிறீர்களா, அல்லது முரட்டடியாய் ஒரே மூச்சில் சாதித்துவிடப் போகிறீர்களா? சொல்லுங்கள். உங்கள் தீர்மானத்தைப் பொறுத்ததா யிருக்கும் இந்தியாவின் பிற்காலநிலை அதனை மட்டும் நன்றாய் யோசித்துக்கொள்ளுங்கள். இவ்விந்தியா நாடு ஏதோ சாமானியமான சிறியநாடு என்று நினைக்கவேண்டாம். அதன் பழையநாளை நாகரிகச் சின்னங்கள் எளிதில் ஒளித்துப்போகுமென்றும் நீங்கள் நினைக்கவெண்டாம். இந்நாட்டில் நினைத்த மாத்திரத்தில் முரட்டடியாய் திருத்தங்கள் செய்து விடுவது சாத்தியப்படமாட்டாது. காலக்கிரமத்தில்தான் செய்யமுடியும். இனி நான் என் உபந்நியாசத்தை அதிகமாய் வளர்த்தப்போகிறதில்லை. நீங்கள் மேல் நாட்டுச்சொத்துக்கு, அதாவது மேல்நாட்டாரை யொப்ப நினைத்தபடி யெல்லாம் திருத்தங்கள் செய்துகொள்வதற்கு, ஆசைப்பட்டு உங்களுடைய பூர்விக சொத்தை யிழந்துவிடாதேயுங்கள். அதாவது, ஹிந்துமதத்தை யிழந்து விடாதேயுங்கள். ஹிந்து மதமில்லையானால் இந்தியா வில்லை யென்பதை மறவாதேயுங்கள். நீங்கள் உங்கள் மதத்தை விடாமல் காலத்துக்குத் தக்க ஆசாரத் திருத்தங்களைச் செய்து கொள்ளுங்கள். ஹிந்துமத குலாசார முறைகளுக்கு உற்றவழிகளைப் பின்பற்றி திருத்தங்கள் செய்ய முற்படுங்கள். என்னைப் போன்றவர்கள் பேசுவதைக் கேட்டு சந்தோஷங் காட்டுவது மட்டும் போதாது. உங்களுடைய மனதையும், உங்களுடைய வாழ்நாளையும் உங்களுடைய பொருளையும் இந்தியாவுக்கு மறுஜனனம் உண்டாக்க அர்ப்பணம் செய்யுங்கள். அர்ப்பணம் செய்து, காரியசித்தி பெற்று புகழ் பெறுங்கள்.

ச. மி.

## முன்யோசனை.

### (சீதையும், அநுமானும்).

நூறுயோஜனை விஸ்தீரணமுள்ள சமுத்திரத்தைத் தாண்டி அநுமான் இலங்காபுரி சேர்ந்து ஆங்கெங்கும் சீதையைக் காணாது தள்ளாடி இராவணனது அசோகவனத்துக்குப் போனான். ஆங்கு, அழுக்காடை யுடுத்து, அழகு குன்றி, பதிவியோகமேலிட்டு அழுதுகொண்டு, 'இராமா, 'இராமா' வென்று



புலம்பிக்கொண்டிருந்த கோமளாங்கியான அந்த ஜானகி ஓர் அசோகமரத்தடியில் உட்கார்ந்திருந்ததைக் கண்டான். அவளே சீதை யென்று நிச்சயித்துக்கொண்டு அவளுக்கு நமஸ்காரஞ்செய்து அம்மரத்தின் மீதேறி யுட்கார்ந்தான். காக்கைக் கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்ட குயிற் குஞ்சைப்போற் சங்கடப்பட்டுக்கொண்டிருந்த சீதையைக் கண்ணுற்று அநுமான் துக்கித்து அவளை நோக்கி: தாயே! ஏன் சோகமுறுகின்றீர்? ஸ்ரீராமர் க்ஷேமமாயிருக்கின்றார்; நும்சிந்தையால் துக்கப்படுகின்றார்; ஸுக்ரீவனது சேனையுடனே வந்து நீசனான இந்த இராவணனைச் சங்கரித்து உம்மை யழைத்துக்கொண்டுபோவார்" என நவின்றான். சீதாபிராட்டியார் கழுத்து நிமிர்ந்து பார்த்து, ஈது அரக்கரது மாயையென நினைந்து சும்மாவிருக்க, அநுமான் ஸ்ரீராமரது முத்திரை மோதிரத்தை அவள் கையிற் கொடுத்துத் தான் உண்மையாகவே ஸ்ரீராமரது தூதனென்று அவளை சமாதானப்படுத்தி, ஸ்ரீராமர் விஷயமாய் அவளுடன் பேசிக் கடையில்: "தாயே! இவ்வளவு துக்கப்பட வேண்டாம்; தமது உத்தரவாயின், தங்களை யென் புஜத்தின்மீது வைத்துக்கொண்டு ஒரு நிமிஷத்தில் ஸ்ரீராமரிடத்திற் சேர்க்கவல்லேன்" என்றுரைத்தான். அப்போது சீதாதேவி அந்த மாருதியை நோக்கி: ஐயா! நீ எல்லாமுணர்ந்தவன்; உலகவிவகார மறிந்தவன்; இத்தகைய ஆலோசனை செய்வது நேரிதன்று; அன்னியரை யான் தீண்டுவல்லேன்; அல்லாது, யான் உந்தன் மீதூர்ந்து செல்லினும், வழியில் அரக்கர் கண்டு உன்னுடன் போருக்கு நின்றால் என்பாடு என்னாகுமோ தெரியாது; அப்போழ்து உன் சண்டை மும்முரத்தில் யான் உன் முதுகினின்று நழுவிச் சமுத்திரத்தில் விழுந்து போகக்கூடும்; அங்ஙனமாயின் உன் கஷ்டமனைத்தும் வாளாப்போகும். இதுவுமன்றி, நீ என்னை யழைத்துக்கொண்டு போவது யுக்தமாகாது; ஸ்ரீராமர் சூரியவமிசத் தரசர்; மகா பராக்கிரமசாலி; அத்தகையோரது மனைவியான என்னைத் துன்மார்க்கனான இராவணன் பலாத்காரமாய்ப் பிடித்துவந்தனன்; ஆதலின் ஸ்ரீராமர் சேனை சகிதராய் வந்து, இந்த நீசகாரியஞ்செய்த தசகண்டனை நாசஞ்செய்து என்னை யழைத்துப்போகவேண்டும்; இதுவே அம்மகானுபாவரது கீர்த்திக்குத் தக்க காரியமாகும். அல்லாது, உன்னுடன் யான்வரின், "ஐயோ! யாரோ இராமனாம், அவன் வெகுசூரனாம். அவன் மனைவியை இராவணன் திருடிப்போயினனாம்! ஒரு குரங்கு அவளைத் தூக்கிக் கொணர்ந்து இராமனிடத்தில் வைத்ததாம், இராமனது சௌரியத்தை என்னவென்று சொல்லலாம்; துன்மார்க்கர் பலரையும் சிக்ஷித்து நாசஞ்செய்த அந்த இரகு மகாராஜர் குலத்திற் பிறந்த இந்த இராமன் தோன்றலாகுமோ? பதிவிரதையான ஜானகி பரபுருஷனைத் தீண்டலாமோ? மகா ஸத்தியவந்தரான ஜனகர் வமிசத்திற்கு இவள் அபகீர்த்திதந்தாள்; நீதிநெறி பயின்று பரஸ்திரீகளைத் தாயெனப்பாவித்து நித்தியப் பிரம்மசாரியாயிருக்கும் ஆஞ்சநேயன் சீதையைத் தொட்டு, அவளை இராமரிடத்திற்குத் தூக்கிக்கொண்டுவரலாமோ"? என்று இவ்வாறாக உலகத்தில் ஜனங்கள் பேசிக்கொள்வதற்குக்

காரணமாகும்; ஸ்ரீராமருக்கும், எனக்கும், உனக்கும் அபவாதம் தப்பாது; ஆதலின் நீ சற்று தீர்க்காலோசனை செய்; அவசரப்படாதே" என்று சொல்லினள். சீதையின் வார்த்தைகளுக்கு ஒப்பி, அவள் தன் அடையாளத்திற்காகக்கொடுத்த சூடாமணியை யெடுத்துக்கொண்டு ஸ்ரீராமரிடத்திற்கு ஏகினன். இவ்வாறு சற்று நிதானித்து யோசியாதிருக்கின் எவ்வளவு கெட்டபெயருண்டாயிருக்கும்? ஆகையால் எந்தக் காரியஞ் செய்வதாயினும் அதனாற் பிற்காலத் துண்டாகக்கூடிய நன்மை தீமைகளை முன்னராகவே நன்றாய் ஆலோசிக்கவேண்டும். அங்ஙனஞ் செய்யாவிடின் கஷ்டம் நேரிடும்.

T. A. S.

# உத்தராராம சரித்திரம்.

## (குச, லவ வாக்கியம்.)

262. பஞ்சவடி தீரத்திலே பர்ணசாலை யருகே
மாரீசன் வந்தங்கே மானாகமேய
263. வணக்க முள்ள மைதலியாள் மான்வேணு மென்க
மானின் பின்னே தொடர்ந்த மஹானுபாவ ரூபா
264. வாளரக்கன் வந்துமங்கே மைதலியை எடுத்து
அசோக வனந்தன்னிலே அருஞ்சிறையில் வைத்தான்
265. சதுரங்க சேனையுடன் அலைகடலைத் தாண்டி
அரக்க னிந்திரசித்தன் கும்பகர்ணனையும் வதைத்து
266. விருப்பமுடனே கூட விபீஷணரைப் பார்த்து
அசுர சம்ஹார மெல்லாம் ஆச்சுது உம்மாலே
267. அயோத்திநகர்க் கெழுந்தருள அனுப்பவேணுமென்று
விடைகேட்க விபீஷணரும் மிகப்பிரியத்தோடே
268. அழகான அயோத்தியாபுரிக் கதிசியமாக
எந்த எந்த வஸ்துக்களை எடுத்துவர வென்றார்
269. விபீஷணரும் கேட்கலுமே மேகவர்ண நீரும்
(அங்கே) வேணுமென்ற வஸ்துக்களும் வெகுதனங்களுண்டு
270. ஆனாலும் நீர்சொன்ன வாக்கியந் தப்பாதே
(இந்த) வானரசேனை யெல்லாம் வெகுபிரயாசப் பட்டாள்
271. வானரங்களாலே நாமும் சாகரத்தைக் கடந்தோம்
அவர்மனங் குளிரவெகு மானம் வழங்குமென்று சொன்னீர்
272. அரக்கராஜன் அதுகேட்டு அதிபிரியத்தோடே
கொந்தளப்பொன் சரக்கரையை கோப்புடனே திறந்து
273. மாணிக்கமு முத்துக்களும் வைடூரியங்களும்
தங்கப்பொன் காசுகளும் தரந்தரமா யெடுத்து



274. வகைவகையாய் குவிக்கலுமே மனதுமெத்த மகிழ்ந்து
வானர சேனைதன்னை வரிசையாய் நிறுத்தி
275. அவரவர்க்கு வேணபடி வெகுதனங்க ளெடுத்து
அவர்தலைமேலே சுமக்குமட்டும் தான்கொடுத்து மகிழ்ந்தீர்
276. அனேகநாளா யிருந்தகுபேரன் தன்விமானம்
பட்டாலே தான்மூடி பலதிசையும் விளங்க
277. கொந்தன மாணிக்கத்தாலே கொடுங்கையது சேர்த்து
வஜ்ரமணிக் கல்லாலே விதவிதமா யிழைத்து
278. தளதளென்னவே விளங்கும் தங்கவிமானத்தை
புஷ்பகவி மானந்தன்னை பிரியத்துடன் கொணர்ந்தார்
279. (அந்த) சித்திரப்பூந் தேர்மேலே சேனையுடனேறி
அத்தனைபேர் மன்னருடன் அயோத்திவந்து சேர்ந்தீர்
280. (என்று) ஈஸ்வரனார் புகழ்ந்துரைத்த இன்பமான ஸ்துதியை
பிரியத்துடன் கேட்டெல்லாரும் போஜனங்கள் முடித்தார்
281. உத்தரா போஜனம்வாங்க அங்கதன் நீர்வார்த்து
ஆவல்தீர கையலம்ப ஆற்றை அழைப்பித்தான்
282. புசித்துமவாள் எழுந்திருந்து பொன்னாசனத்தி லிருக்க
பொற்தளிகை மாற்றியங்கே சுத்திகளும் செய்தாள்
283. தீரமன்னர் மூவருக்கும் சீரான இளையோர்
போஜனங்கள் செய்தவர்க்கு பொருந்த உபசரித்து
284. பாக்குடனே வெற்றிலையும் பச்சைக்கற்பூரமும்
தாக்குடனே கொண்டுவந்து சகலருக்கும் கொடுத்தார்
285. தம்பி நின்று உபசரிக்க தாசரதிமூவர்
வந்த மன்னருடன்கூட மணியாசனத் திருந்தார்
286. நின்றிருந்த பாலகனை வந்தமுனி தேவன்
(அவாள்) கண்களாலே ஆலிங்கனம் களிப்புடனே செய்தார்
287. சொல்லவொண்ணா வடிவுடைய சுபத்திரையாள் மகனை
எல்லவரும் உகந்திருக்க ஸ்ரீராமரும் உகந்தார்
288. மன்னர்முனி தேவர்களும் மகிழ்ந்திருந்த பின்பு
ஸ்ரீராமா எங்களுட தேசம்போரோ மென்றார்
289. மன்னர்விடை யளிக்கலுமே வந்தவர்களெல்லாம்
கன்றைவிட்டுப் போம்பசுப்போல் கைகாலோய்ந்து சென்றார்
290. நடந்துமவாள் நகர் புகுந்து ஸ்ரீராமன் கதையை
பலதினமும் மிகவாழ்த்தி பெருமையுட னிருந்தார்
291. ஜனகரிங்கே ரகுபதியை தீர்க்கமுடன் வாழ்த்தி
சதானந்தர் தன்னுடனே தவம்பண்ண நடந்தார்
292. மணிவிளக்கு நின்றெரியும் மண்டபத்தினடுவே
மன்னாராமர் சீதையுடன் மகிழ்ந்திருக்கும்போது
293. மைதலியாள் தன்னுடைய மதிமுகத்தைப் பார்த்து
மங்களமாம் ராகவரும் வார்த்தை சில உரைப்பர்
294. எந்தனுக்கு மாலையிட என்று சிலகாலம்
புகழ்பெறவே தவஞ்செய்த திருவினையே கேளாய்

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்.

# சிறுவர்க்கான கதை.

## ஒருகுரங்கின் குறும்பு.

சாதாரணமாக ஒரு போர்க்கப்பல் ஒருதுறை முகத்திற்போய் தங்கிய
வுடனே அக்கப்பலிலிருந்து ஒன்று அல்லது இரண்டு வெடிகள் போடுவது
வழக்கம். ஒரு காலத்தில் ஒரு போர்க்கப்பல் புறப்பட்டு நெடுந்தூரம் சென்
றுவருகையில் பலதுறை முகப் பட்டணங்களில் நிற்கவேண்டிய தாயிற்று.
அப்போது அப்பட்டணங்களி லெல்லாம் கப்பலிலுள்ளவர்கள் வெடிகுண்டு
போட்டார்கள். இவ்வாறு வெடிகுண்டு போடுஞ்சங்கதியை அக்கப்பலி
லிருந்த ஒரு குரங்கு வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டே வந்தது.
கடைசியாக இக்கப்பலானது லண்டன் நகரின் அருகாமையில் தேம்ஸ் நதி
யில் நங்கூரம்போட்டு நிறுத்தப்பட்டது. ஆனால் இவ்விடத்தில்மட்டும் எந்தக்
கப்பல் வந்தபோதிலும் வெடிகுண்டு போடக்கூடா தென்பது ஒரு உத்திரவு.
ஏனென்றால் அப்படி வெடி குண்டுபோடும் பட்சத்தில் அவ்வதிர்ச்சியால்,
நகரின் வீட்டுகளின் கண்ணாடி ஜன்னல்கள் எல்லாம் உடைவதோடு வீதிக
ளில்போகும் குதிரைகளும் மிரளும். குரங்கானது எவ்வெவ்விடங்களில் கப்
பல் நின்றதோ அவ்வவ் விடங்களிலெல்லாம் வெடிகுண்டு போடப்பட்டது,
இவ்விடத்தில்மட்டும் ஏன்போடாம லிருக்கவேண்டும் என்று யோசிக்கலா
யிற்று. லண்டன்மா நகரத்து விதிகளை குரங்கு எவ்வாறுணரும்?. யோசித்
துக் கடைசியாக தானே ஒரு குண்டு போட்டுவிடலா மென்று தீர்மானித்
துக்கொண்டு அது கப்பலின் வேலையாட்கள் வேறு வேலையி லமர்ந்து
கொண்டிருக்கையில் சமையலறைக்குச் சென்று ஒரு இடுக்கில் ஒரு எரியும்
நிலக்கரித் துண்டை எடுத்துக்கொண்டு பீரங்கிகள் ஒன்றன் வத்திவாயில்
வைத்துவிட்டு வந்துவிட்டது. அகஸ்மாத்தாய் அப்பீரங்கி மருந்து போட்டு
கெட்டித்திருந்தபடியால் உடனே வேட்டு உண்டாகியது. குரங்கின் மனம்
குளிர்ந்தது. ஏனையோர் மனம் எரிந்தது. இனி தண்டனைக் குட்பட
வேண்டுமென்பதே அவர்கள் மனதை வருத்தியது. கடைசியாக நகரின்
ஆபீசர்கள் அக்கப்பலின் அதிகாரியைச் சார்ஜ் செய்துவிட்டனர். விசாரணை
யில் அந்த அதிகாரி அப்படி வெடிகுண்டு போட்டதற்குக் காரணம்தான்
அல்லவென்றும் கப்பலிலே நெடுந்தூரம் பிரயாணம் செய்த ஒவ்வொரு
இடங்களிலும் வெடி போட்டதைப் பார்த்த குரங்கின் செய்கையே யென்
றும் விஸ்தாரமாய்க் கூறவே, அவனை விடுதலை செய்துவிட்டார்கள்.

சிறுவர்களே படித்தீர்களா இக்கதையை. இதனால் என்ன அறிந்து
கொண்டீர்கள்? குரங்கு பார்ப்பதற்கு ஏறக்குறைய மனிதனைப்போலவே
யிருக்கிறது. வால் ஒன்றுமட்டும்தான் அதிகம்; அதன் செய்கைகளோ ஏறக்



குறைய மனிதன் செய்வனவே. சாதாரணமாக சர்க்கஸ் முதலிய வேடிக்
கை யிடங்களில் குரங்குகள் குதிரை, வண்டி, முதலியனவற்றில் ஏறி சவா
ரிசெய்வதையும் மனிதர்கள் செய்யும்படியான காரியங்களையே தாங்களும்
செய்ய முயலுகின்றமையையும் கண்டிருக்கிறீர்களன்றோ. இதுவுமன்றி
நாம் ஒரு குரங்கின் எதிரில் நின்றுகொண்டு அதைக் கோபமுகத்துடன் உற்
றுப் பார்த்தால் அதுவும் நம்மை உள், உர் என்று சப்தித்துக்கொண்டு உற்
றுப் பார்ப்பதை நாம் எத்தனை முறை கண்டிருக்கிறோம். ஆள் ஏமாளி
யானால் அவனை வெருட்டிச் சில சமயங்களில் கடித்தும்கூட விடுகின்றன.
சிறு குழந்தைகள் பக்ஷணங்கள் வைத்திருப்பதையும் அவர்கள் பக்கத்தில்
பெரியவர்கள் ஒருவரு மில்லாதிருப்பதையும் குரங்கு பார்க்குமானால் உட
னே அது ஓடிவந்து குழந்தையின் பக்ஷணங்களைப் பிடுங்கி யோடிவிடும்.
குரங்குகள் சிற்சில சமயங்களில் பற்பலவாகக் கூடிக்கொண்டு கம்புக்
காட்டுகளிற் சென்று முன்னே தயாராக வைத்திருக்கும் ஊனுங்கொடிகளை
தங்கள் இடுப்பில் சுற்றிக்கொண்டு அதில் கதிர்களைச் சொருகிக் கொள்ளு
தலையும் பார்த்திருக்கின்றோம். இதனால் குரங்கு அறிவுள்ள பிராணி யென்
பது தெரியும். மேலும் மனிதர்களுள் எவ்வாறு கக்ஷி யிருக்கின்றனவோ
அவ்வாறே குரங்குகளிலும் கக்ஷி யிருக்கின்றனவாம். உதாரணமாக மதுரை
ஜில்லா பழனிமலையில் உள்ள குரங்குகள் மூன்றுபிரிவாக இருக்கின்றன
வாம். இவைகளில் ஒரு கூட்டத்தைச் சேர்ந்த குரங்கு மற்றொரு கூட்
டத்தை அணுகுமானால் அவைகள் புதிதாய் வந்ததை சண்டையிட்டு ஓட்டி
விடுமாம். இதனால் அது தன் கூட்டத்தைச் சேர்ந்ததா அல்லது வேறு
கூட்டத்தைச் சேர்ந்ததா என்றும் அறிந்துகொள்ளுகின்றதல்லவா? மேற்
கூறியவைகளாலும் இன்னும் பலவற்றாலும் டார்வின் (Darwin) "மனிதர்க
ளின் முன்னோர்கள் குரங்காய்த்தா னிருந்திருக்கவேண்டும். அதாவது பல
ஜன்மங்கட்குமுன் குரங்காயிருந்து பின்னால் மனிதனாகிறான்" என்று கூறி
யது முற்றும் உண்மையெனவே தோற்றுகிறது.

M. V. M.

## வடக்கே ஒரு புலியும் குரங்குகளும்.

பாடிகா என்றவன் ஒரு குக்கிராமத்தான், ஒரு காடுவழியாய்க் கடை
க்குப் போகவேண்டியிருந்தது. அப்போது நடுக்காட்டில் பல குரங்குகள்
ரஸ்தாவுக்குப் பக்கத்தில் ஒரு புதரைப்பார்த்து மரங்களில் ஏறுகிறதும்
இறங்குகிறதும் பல்லை இளிக்கிறதுமாய் இருந்தன. அப்போது அவன் அதை
ப்பார்த்து இப்படிக் குரங்குகள் செய்வதற்கு என்ன காரணமென்று கண்டு
பிடிக்கும்படிச்சற்று அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அப்போது அந்
தப் புதரிலிருந்து ஒரு புலி 15-கஜதூரத்திலிருந்து இரண்டு மூன்று தாண்
டலில் இவன்மேல் பாய்ந்து இவனைப் பிடித்துக்கொண்டது. இவனைப்பிடித்
துகொண்டதுகண்டு குரங்குகள் அந்தப் புலியை வெகு தொந்தரவுசெய்யத்
தொடங்கிற்று. அந்த தொந்தரவை புலி சகிக்கமாட்டாமல் அவனைவிட்டுக்

குரங்குகளைத் தூரத்த முயன்றது. குரங்குகள் புலிக்குப்பயந்து மரங்களில்
ஏறின. அவனைப் புலிவிட்டதுமே அவன் எழுந்திருந்து ஓடவில்லை. ஏனென்
றால் அவன் மூர்ச்சைபோய்ப் பிணம்போலிருந்தான். அவன் அங்கு அசை
யாமல் இருப்பதுகண்டு புலிகுரங்கைத் தூரத்துவதைவிட்டு மீளவும அவனை
ப்பிடித்துக்கொண்டது. மீளவும் குரங்குகள் அப்புலியைத் தொந்தரவுசெய்
யமுயன்றன. மீளவும் அவனை கீழேபோட்டுவிட்டு அப்புலி குரங்குகளைத்து
ரத்தப்போயின. அதற்குள் இன்னும் வழிப்போக்கர்கள் பலபேர்வந்து கூச்
சற்போட்டார்கள். அப்போது அப்புலி அக்கூட்டத்தைக் கண்டு ஓடிப்போய்
விட்டது. அவனும் தப்பித்து ஓடிப்போனான். அவனுக்கு அப்புலிக்கடி ஆற
ஒரு மாதம் சென்றது.

## அநுசூயா.

பதிவிரதாதர்மம் முதலான நல்ல குணங்களை யடைந்து முன் காலத்
து ஸ்திரீகளில் பிரசித்தி யடைந்த இந்த ஸ்திரீ ரத்தினம் கர்தம
ரிஷியினுடைய செல்வப் புத்திரி, சப்தரிஷிகளில் ஒருவராகிய
அத்திரி மகாரிஷியின் மனைவி. இந்த அநுசூயையினுடைய பதி
விருதா தர்மத்தின் மகிமையை யறிந்து கொள்ளும்படியானக்
கதைகளநேக மிருக்கின்றன. கலகப்பிரியரான நாரத மகாரிஷி
ஒரு காலத்தில் இரும்பாற் செய்யப்பட்ட கடலையைச் சுண்டலாகச் செய்யும்
படி திருமூர்த்திகளுடைய மனைவிகளாகிய சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி என்ற
வர்களிடத்தில் சொன்னார், அவர்கள் நாங்கள் இதை எவ்விதம் செய்வோம்?
இது எங்களால் முடியாது; மன்னிக்கவேண்டு மென்று பதிலளித்தார்கள்,
அப்பொழுது நாரதர் பூலோகத்திற்குப் புறப்பட்டு அநுசூயை யிருக்குமாசிர
மத்திற்கு வந்து அவளை அவ்விதம் செய்து கொடுக்கும்படிகேட்டார், தன்
னுடைய பதிவிரதா தர்மத்தின் மகிமையால் அம்மாது அக்கடலையைச் சுண்
டலாக நன்றாகச் செய்து அதிக வாசனையுடன் நாரதபகவானுக்கு அளித்
தாள். நாரதர் இதைக்கண்டு மிக மகிழ்ந்து விடைபெற்றுக்கொண்டு திருமூ
ர்த்திகளின் மனைவிமார்களிடத்தில் எடுத்துக்கொண்டு போய் அவர்களுக்கு
இதைக் காண்பித்து உங்களுக்கும் பூலோகத்திலுள்ள அநுசூயா தேவிக்கு
முள்ள தாரதம்மியத்தைப் பார்த்தீர்களா வென்று பரிகாசமாகச் சொன்னார்.
இவ்விதம் நாரதர் செய்ததின் நிமித்தம் மிகக்கோபங்கொண்டு அநுசூயை யிட
த்தில் பொறாமை கொண்டு தங்கள் பர்த்தாக்களை யழைப்பித்து, "நீங்கள்
சீக்கிரமாகச் சென்று அநுசூயையினுடைய பதிவிரதா தர்மத்தை கெடுத்தா
லொழிய நாங்கள் ஜீவித்திருக்கமாட்டோம்" என்றார்கள். "இதைக்கேட்ட



அவர்கள் உடனே பூலோகத்திற்குப் புறப்பட்டு அநுசூயை யிருக்குமிடத்தி
ற்கு வந்து சேர்ந்தார்கள். அநுசூயை யானவள் அவர்களுக்குச் செய்யவே
ண்டிய மரியாதையைச் செய்து தனது கிரகத்தில் புசிக்கவேண்டுமென்று
வேண்டிக்கொண்டாள், அவர்கள், "ஆம், சரிதான், நீ வஸ்திரமில்லாமல்
அன்னம் முதலியவைகளைப் பரிமாறினால் நாங்கள் புசிப்போம்" என்று
விடைகொடுத்தார்கள், இவ்வித வார்த்தையைக் கேட்டு கிஞ்சித்தேனும் கோ
பமடையாமல் அநுசூயை தன்னுடைய பர்த்தா விடத்திற்குச்சென்று முழு
சமாசாரத்தைச் சொன்னாள்.

அவர் "நீ அவர்களுடைய இஷ்டப்பிரகாரம் செய்" என்று உத்திரவளி
த்தார். பர்த்தாவின் உத்திரவுப் பிரகாரம் நிர்வாணமாய் அவர்களுக்கு அன்ன
மளித்துக்கொண்டிருக்கையில் இந்த பதிவிரதா சிரோன்மணியின் தர்மத்தி
னாலே அம்மூன்று மூர்த்திகளும் சிறுகுழந்தைகளாய் விட்டார்கள்.

பின்பு அநுசூயை இந்த மூன்று குழந்தைகளையும் வளர்த்துவந்தாள்,
சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி முதலியவர்கள் தங்கள் கணவர்கள் திரும்பிவரா
ததைக்கண்டு மிகவருந்தி அவர்களைத் தேடிக்கொண்டு அநுசூயை யிருக்கும்
வீட்டிற்கு வந்து தங்கள் பர்த்தாக்கள் குழந்தைகளா யிருப்பதைப்பார்த்து
அநுசூயா கிரகத்தில் வேலைசெய்ய அமர்ந்தார்கள்.

"அநுசூயா அவர்கள்மேல் கிருபைவைத்து உங்களுக்கு என்னவேண்
டுமென்று" கேட்டாள். அப்பொழுது அவர்கள் "எங்கள் பர்த்தாக்களான
மூன்று குழந்தைகளை தயவுசெய்து திரும்பிக்கொடுக்க வேண்டும் என்று
கெஞ்சிக்கேட்டார்கள். அவ்விதமே அவள் அந்த திருமூர்த்திகளாகிய குழந்
தைகளைக்கொடுத்து அவர்களை அனுப்பினாள். அதுமுதல் அந்த மாதின் பதிவி
ரதா தர்மம் லோகமுழுவதும் பிரசித்தி யடைந்தது.

அத்திரி மகாமுனிவருடைய தபசுக்கு திருமூர்த்திகள் மெச்சி இவரு
க்கு தெரிசனங்கொடுத்து, தங்களுடைய அம்சத்திலேயே அநுசூயைக்கு சந்
திரர், துர்வாச, தத்தாதிரேயராக மூன்று குழந்தைகள் பிறப்பார்களென்று
சொன்னதாகவும் அவ்விதமே நடந்ததாகவும் புராணங்களில் சொல்லப்பட்
டிருக்கிறது.

சீதாபிராட்டியாரும், ராமலக்ஷ்மணர்களும் வனவாசம் செய்யும்பொ
ழுது அத்திரி மகாரிஷியின் ஆஸ்ரமத்திற்குள் பிரவேசித்தார்கள், இவ்விதம்
வந்த அந்த மூன்று பேரையும் அந்த ரிஷியானவர் மிகவணக்கத்துடன் வர
வழைத்து தம்முடைய மனைவியைப்பார்த்து "பரமபதிவிரதையாகிய இந்த
ஸ்ரீதேவியை ஆதரியென்று சொல்லி, இராமருடன் அநுசூயை மகாபதிவிரதா
தர்மமுள்ளவளென்றும் சொன்னார்.

"2000 வருஷம் தபசுசெய்து பொறுமையில்லாம லிருப்பதென்ற விர
தத்தைச்செய்து இதன் பொருளமைந்த அநுசூயை யென்ற பேரையும்
அடைந்தாள், பத்துவருஷம் மழையில்லாம லிருந்தபொழுது மழையுண்டா
கும்படியும், செடிகள் தழைத்து ஓங்கி வளரும்படியும் செய்தாள், தேவர்கள்
வந்து தன்னைப்பிரார்த்தித்தபொழுது ஒரு இராத்திரியைபதினொன்று இரா
த்திரியாகச் செய்தாள். பூததயையுள்ளவள், இப்பேர்ப்பட்ட புண்ணியவதி
யை உங்கள் கௌசல்லியா தேவியை வணங்குவதுபோல் வணங்கும்படி சீதை
க்குச் சொல்லுங்கள்" என்றார், இவைகளைக்கேட்ட இராமர் தமது மனைவி

யைப்பார்த்து "மகாரிஷி சொன்னதைக் கேட்டாயா? பரிசுத்தமான மனதுடன் அந்தம்மாளை நீ வணங்கு" என்று சொன்னார்.

அப்பொழுது சீதையானவள் அதிக தபசால் இளைத்திருக்கிற சரீரத்தையுடைய அநசூயையினிடத்திற் சென்று 'ஏ மாதுசிரோன்மணி! நான் ஜனக மகாராஜாவின் 'பெண்' நீங்கள் சுகமாக விருக்கிறீர்களா "வென்று கேட்க அநசூயை ஜானகிக்குப் பிரதியுத்திரம் சொல்லி மரியாதை செய்து, குசலப்பிரஸனம் செய்து "உன் பந்து ஜனங்களை யெல்லாம் விட்டு காட்டிற்கு வந்தாயே. உனக்கு இங்கு சுகமுண்டா? தினம் தர்மத்தைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறாயா? நான் ஒரு சங்கதி சொல்லுகிறேன் கேள். புருஷன் தனதுபாரியையிடத்தில் மரியாதை பண்ணினாலும், செய்யாவிட்டாலும், சிநேகமாக விருந்தாலும், இல்லாவிட்டாலும், அவனைப் பிரியனாக நினைக்கிற ஸ்திரீக்கு இகபரலோகத்தில் சுகம் கிடைக்கும் அவன் சரியான நடவடிக்கை யில்லாதவனானாலும், அவனே கதி என்று எண்ணவேண்டும். அவனே பிரியன், பந்து, அவனே குரு, அவனே தேவதை. ஓ சீதை கேள்! ஆகையால் பர்த்தாவிற்குப் பிரதிகூலமாக நடக்கிற பாபசுபாவமுள்ள ஸ்திரீகள் இந்த லோகத்தில் அபகீர்த்தி யடைந்து, பின்பு பரலோகத்தில் நரகத்தை அநுபவிப்பார்கள்.

"பர்த்தாவுக்கு சிஷ்ரூஷை செய்வது ஸ்திரீகளின் தர்மம்." அவ்விதமில்லாவிட்டால் அவர்களுக்கு கெடுதி நேரிடும். நீயோ மகாபதிவிரதை.

(இன்னும் வரும்.) C. S. R.

# NEWES & NOTES.

## சமாசாரக் குறிப்பு.

இங்கிலாந்தில் ஒரு வாரத்தில் மிட்டாய் வகைராக்கள்செய்ய 4-லக்ஷம் பவுன் செலவாகிறதாம்.

***

உலகத்தில் மொத்த ஜனங்களின் பாதிபேர் 17-வயதாகிறதற்குமுன் இறந்துபோய்விடுகிறார்களாம். 1000-க்கு சராசரி ஒருவன்தான் 60-வயதுவரையில் ஜீவிக்கிறானாம்.

***

பர்லின் பட்டணத்திலிருந்து 20—மைலுக் கப்பாலுள்ள ஸ்பரன்பர்கில் ஒரு ஆழமான கிணறொன்றிருக்கிறதாம். இது 9,194 - அடி ஆழமுள்ளதாம். அதாவது $1\frac{1}{2}$—மைலுக்குமேலுளது.

***

அமேஸான் என்ற நதிக்கரையில் ஒருவிதமர மிருக்கிறதாம். இதற்குப் பெயர் இனுஜி. இது நீளத்தில் 30-அடியிலிருந்து 50-அடிவரையிலும் அகலத்தில் 10-அடியிலிருந்து, 12-வரையிலும் வளருகிறது. இதுவும் ஒரு அதிசயமானதே.

***



ஸிட்காவென்ற விடத்தில் ஒருமனைவியின் கணவன் இறந்தால் அவள் தனது நெற்றியின் மேல்பாகத்தில் கருப்பு வர்ணத்தை பூசிக்கொள்வதுவழக்கமாம். இதுதான் துக்கக்குறியாம். நமது தேசத்தில் இதைவிட நாகரீகமற்றதாக விருக்கிறதே!

***

ஐரோப்பா கண்டத்தில் கடிதாசியால் கைச்சட்டை, கால்சட்டைகள் வெகு அழகாயும் உறுதியாயு மிருக்கும்படி செய்யப்பட்டு வருகிறதாம். இவைகள் கடுதாசியால் செய்யப்பட்டிருந்தபோதிலும் சாதாரண துணிவஸ்திரங்களைப்போ லிருக்கின்றனவாம்.

***

பக்ஷிகளில் மிக புத்திசாதுரியமுள்ளது கிளிகளென சொல்லப்படுகிறது. இவைகளை மற்றஜாதி பக்ஷிகள் எதிர்க்காமலிருக்கும்படி தங்களுக்குள்ளேயே ஏற்பாடு செய்துக்கொள்ளுகிறதாம். இவ்விதம் செய்துவருவதால் அநேககாலம் ஜீவிக்கிறதெனச் சொல்லப்படுகிறது.

***

காலஞ்சென்ற விக்டோரியர் மகாராணியா ரவர்களுக்கு ஜூபிலிகாலத்தில் பிரதேசத்து மன்னர்களால் பரிசாகக்கொடுக்கப்பட்ட சாமான்களெல்லாம் ஸேன்ட்லூவியிலும், டாரன்டோவிலும் நடக்கும் பொருட்காக்ஷி சந்தைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

***

ஜப்பானுக்கும் ருஷியாவுக்கும் யுத்தம்நடக்கும் பக்ஷத்தில் அநேக அமெரிக்கா தேசத்து மாதர்கள் யுத்தத்தில் காயம்படுபவர்களுக்கு சிகிட்சை செய்யவும் தாதிகளாகவிருக்கவும் சம்மதித்து ஜப்பானியர்களுக்குத் தாங்களே கடிதம் எழுதியிருக்கிறார்களாம்.

***

மைசூர் மகாராணி காலேஜிலிருந்து ஸௌபாக்கியவதிகள் ஸ்ரீரங்கம்மா, சுப்பம்மா இவ்விருவரும் சென்ற டிசம்பரில் நடந்த (B. A.) பி ஏ பரீட்சைக்குப் போயிருந்ததில் இருவரும் முதல்வகுப்பில் கனடத்தில் தேறியிருக்கிறார்களென்றும், இவரிலொருவர் சற்றேறக்குறைய முதலாவதாய்த் தேறி யிருக்கிறாரென்றும் கேட்க மிகச் சந்தோஷமடைகிறோம். நம்சென்னையில் இந்தியமாதர்கள்கல்வி கற்பதில் ஆங்கிலத்தை முக்கியமாய்க் கொண்டாலும் தம்தேச பாஷைகளை அசட்டைசெய்யாதிருப்பார்களென்று நம்புகிறோம்.

***

ஜப்பான் தேசத்திய மந்திரியாராகிய மார்க்யூஸ்ஈடோ என்பவர் பாலியத்தில் லண்டன் மாநகரத்தின் தெருக்களில் கையில் துட்டில்லாமலும், கந்தைத் துணிகளை யணிந்துகொண்டும், அன்னத்திற்கு வகையின்றி திரிந்துகொண்டிருந்தாராம். இப்பொழுது இவர் மகா புத்திசாதுரிய முள்ளவரென்றும், இராஜாங்க விஷயத்தில் மகா நிபுணரென்றும் யாவராலும் மெச்சப்படுகிறார். ஜப்பான் இராஜ்ஜியத்திற்கும் பிரதம மந்திரியாயு மிருக்கிறார். கஷ்டப்பட்டால் சுகமுண்டல்லவா?

***

### விஜயநகரம் மகாராஜா பெண்பள்ளிக்கூடம்.

திருவல்லிக்கேணியிலுள்ள விஜயநகரம் மகாராஜா பெண்பள்ளிக்கூடத்தின் நிருவாகத்தை மேற்போட்டுக்கொண்டு பார்த்துவந்த மிஸ்டர் திருமலாசாரியார் இறந்துபோய்விட்டாராதலால் அப்பள்ளிக்கூடத்தை யுடைத்துப்போடாமல் நடத்துவதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்கனவேயுள்ள மெம்பர்களையன்றி இப்போது மிஸ்டர் பார்த்தசாரதி ஐயங்காரும் மிஸ்டர் ராமசாமி நாயுடுவும் ராவ்பகதூர் ரெங்காச்சாரியாரும் மெம்பர்களாய் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மிஸ்டர் T. V. சேஷகிரி ஐயர் காரியதரிசியாகவும் மிஸ்டர் ராமசாமி நாயுடு பொக்கிஷதாராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். மிஸ்டர் T. K. ஹநுமந்தராவும் மிஸ்டர் C. V. கங்காதரசாஸ்திரியும், மிஸ்டர் குப்புசாமி ஐயரும் பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குவேண்டிய பணம்சேகரிக்க முயற்சி எடுத்துக்கொள்வதாய் உறுதி கூறியதின் பிறகுதான் அப்பள்ளிக்கூடம் கிறிஸ்தமஸ் விடுமுறைக்குப்பிறகு திறக்கப்பட்டதாய்த் தெரிகிறது.

***


# DR. LOGAN'S
## RELIABLE REMEDIES,

டாக்டர் லோகன் அவர்களின் பிரசித்தமடைந்த கேசமோஹன தைலமென்றும் சுருங்கார சுகந்த கூந்தல்வளர் தைலம்.—இத்தைலமானது அனேக வனமூலிகைகளால், செய்யப்பட்டவை. இதை தினந்தோறும் ஸ்திரீ புருஷர்கள் இதர எண்ணெய்களுக்கு பதிலாக கூந்தலினுடைய உட்புறத்தில் இத்தைலத்தை தடவிவர சுண்டுகளை போக்கி சிரோஉஷ்ணத்தை தணித்து சிரோதுவாரங்களை மிருதுவாக்கி மயிரை நீளமாயும் செழிப்பாயும் அடர்த்தியாயும் அழகாயும் மினுமினுப்பாயும் கருப்பாயும் வளரச்செய்யும். தவிரவும் கண்ணெரிச்சல், சகலவிதமான கண்ணோய்களையும் போக்கடிக்கும். இதுவிஷயத்தில் விசேஷமாய் எடுத்தோதுவதில் அசாத்தியமானதால், ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவரும் இந்த அருமையான தைலத்தை உபயோகித்துவா உண்மை விளங்கும். புட்டி 1-க்கு விலை ரூபா 1—0—0.

டாக்டர் லோகன் அவர்களின் பிரெய்ன் அன்ட் நேர்வைன் டானிக்.
புட்டி 1-க்கு விலை ரூபா. 1—8—0.

டாக்டர் லோகன் அவர்களின் சூரத்ராவகமும், மாத்திரையும்.
ட்ராப்ஸ் புட்டி 1-க்கு விலை ரூபா. 0—12—0.
மாத்திரை புட்டி 1-க்கு விலை ரூபா. 0— 8—0.

டாக்டர் லோகன் அவர்களின் படை சம்ஹாரி.
புட்டி 1-க்கு விலை ரூபா. 0—4—0.

டாக்டர் லோகன் அவர்களின் சுகந்த பல்பொடி.
டப்பி 1-க்கு விலை ரூபா. 0—4—0.

**Dr. T. LOGAN,**
SOLE PROPRIETOR & MANUFACTURER,
AYURVEDIC PHARMACY
*Pycroft's Road, Triplicane, Madras.*


45 REGISTERED 17 JUN 1904 MADRAS.

# மாதர் மனோரஞ்சினி.




பாடசாலையில் கரடிகள் விளையாடுதல்.

MADRAS
47

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. VI. | Madras: March 1904. | No. 3.

புத்தகம் சு. | சென்னப்பட்டணம்: 1904 மார்ச்சுமீ. | இல. 3.

## இந்து ஸ்திரீகளின் தற்கால ஸ்திதி.

'இந்த பரதகண்டத்தில் இப்பொழுதுள்ள ஸ்திரீகளுக்கும் பூர்வகா
லத்து ஸ்திரீகளுக்கும் வித்தியாச மனேகமிருக்கின்றன. பூர்வகால
த்து ஸ்திரீகள் கல்வியிலேயும், சாஸ்திரங்களிலேயும் பா
ண்டித்திய முள்ளவர்களாயும், புருஷர்களுக்கும் போதிக்
கக்கூடிய ஸ்திதியிலேயும் இருந்தார்கள். வேதத்திலே
வர்ணிக்கப்பட்ட கார்கி, மைத்திரேயி, முதலானவர்கள்
மேற்கூறியதற்கு திருஷ்டாந்தமாகச் சொல்லலாம். அக்
காலத்திய ஸ்திரீகள் வேதங்களையும், அவைகளின் அர்த்
தங்களையும் அறிந்தவர்களென்று சகுந்தளா முதலானவர்
தங்களையும் அறிந்தவர்களென்று சகுந்தளா முதலானவர்
யாகங்களிலும் விவாகங்களிலும் ஸ்திரீகள் சொல்லவே
களைச்சொல்லலாம்; யாகங்களிலும் விவாகங்களிலும் ஸ்திரீகளும் பாஷா பாண்டித்திய
ண்டிய மந்திரங்களிருக்கிறபடியால், நமது ஸ்திரீகளும் பாஷா பாண்டித்திய
ண்டிய மந்திரங்களிருக்கிறபடியால், மந்திரார்த்தங்களை தெரிந்தவர்களாயு மிருக்கவேண்டிய
முள்ளவர்களாயும், மந்திரார்த்தங்களை தெரிந்தவர்களாயு மிருக்கவேண்டிய
தென நமது மகான்கள் கற்பித்துவந்ததாகத் தெரிகிறது. அக்காலத்தில் ஸ்தி
ரீகள் புருஷர்களைப்போலவே கௌரவப் படுத்தப்பட்டார்களே யொழிய
தற்காலத்திலுள்ள மாதிரி இழிவாக நடத்தப்படவில்லை. அவர்களுக்கு அப்
பேர்ப்பட்ட சுதந்திரம் பூர்வகாலத்தில் இருந்ததென்பதைக்காண்பிக்க சீதா,
திரௌபதி, தமயந்தி, சாவித்திரி முதலிய ஸ்திரீகளும்கூட பர்த்தாக்களுடன்
வந்து சபைகளில் உட்கார்ந்திருந்தார்களென சொல்லப்படவில்லையா? இதை
விட விசேஷம் என்னவேண்டும். அக்காலத்தில் ஸ்திரீகளுக்கு சுதந்திர
மெவ்வள விருக்கவேண்டுமோ அவ்வளவு சுதந்திரம் அவர்களுக் கிருந்த
தென்பதற்குச் சந்தேகமில்லை. அவர்களுக்கு அப்பொழுதிருந்த கல்வியின்
பெருமையால் அவ்வித சுதந்திரங்களுக் குரியவர்களா யிருந்தார்கள்.
நமது பூர்விக மகான்கள் மனைவி நடக்கவேண்டிய ஒழுக்கம் முதலியவை
களைப் போதித்தும், பர்த்தாவுக்கு மந்திரியைப்போல் ஆலோசனை சொல்ப
வள் மனைவியென்றும், தாயைப்போல் உபசாரம் செய்யவேண்டுமென்றும்,

குருவைப்போல் ஹிதோபதேசம் செய்யவேண்டுமென்றும், வைத்தியனைப்போல் பர்த்தாவினுடைய சரீரத்தைக் காப்பற்றவேண்டுமென்றும் ஸ்திரீகளுக்குப் போதித்திருக்கிறார்கள்.

இவ்விதமான வேலைகளைத் தகுந்தபடி நிறைவேற்ற ஸ்திரீகளுக்கு எவ்வளவு ஞானம் இருந்திருக்க வேண்டுமென்று நாம் சொல்லாமலே விளங்குகிறதல்லவா?

ஞானத்திற்கு ஆதாரமாகவிருக்கும் கல்வி என்றதனம் எந்தகாரணத்தினாலோ வரிசை வரிசையாக நமது தேசஸ்திரீகளை விட்டு விலகிவிட்டது? அதுடனே அவர்களுக்கிருந்த சுதந்திரம், யோக்கியதை முதலியவைகளெல்லாம் அழிந்துபோய்விட்டன. கடைசியாக ஸ்திரீகளுக்கு கல்வி அவசியமா என்ற எண்ணம் இப்பொழுதுதானுண்டாயிருக்கிறது. ஸ்திரீகள் கல்வியில்லாதிருப்பதால் மூடர்களாயிருந்து சம்சார பாரத்தை நன்றாக நிறைவேற்றுவதில் முன்போல புருஷர்களுக்கு சகாயம் செய்யமுடியாமலிருக்கிறார்கள். இதனால் புருஷர்களுக்கு ஸ்திரீகளிடத்திலுள்ள கௌரவமெல்லாம் குறைந்துவிட்டது. எந்த விஷயத்திலாவது ஸ்திரீகளை ஆலோசனை கேட்பதே கெடுதி என சாமானியமாய் புருஷர்கள் இப்பொழுது நினைக்கிறார்கள். ஆகையால் அநேக புருஷர்கள் ஸ்திரீகளுடைய அபிப்பிராயத்தையாவது அல்லது அவர்களுடைய இஷ்டத்தையாவது தெரிந்து கொள்ளாமல் அவர்களை மோசமாக அங்கஹீனர்களுக்கும், விருத்தர்களுக்கும் அதிக பணத்திற்கு ஆசைப்பட்டு விவாகம் செய்து வருகிறார்கள். மனுஷ தேகத்திற்கு அலங்காரமாயிருக்கிற கல்வியென்ற பூஷணம் ஸ்திரீகளுக்கில்லாமல் செய்து தங்கம் வெள்ளிகளால் செய்த ஆபரணங்களை மாத்திரம் போட்டு, பொம்மைகளைப்போல் செய்துவருகிறார்கள். அவர்களை கிரகத்தின் எஜமானிகளென்று எண்ணாமல் தங்களுக்கு வேலை செய்வதின் நிமித்தம் வேலைக்காரிகளாகச் செய்துவருகிறார்கள். புருஷர்கள் ஸ்திரீகள் விஷயத்தில் செய்யும் இவ்வித அநியாயத்தினால் ஸ்திரீகளை மூடர்களாகச் செய்வதுமன்றி, தாங்களும் அவர்களுக்குச் சமானமாய் அறிவீனர்களாயிருக்கிறார்கள். இதனால் புருஷர்களிலேயும் கூட நிஜமான ஈசுவரபக்தியும், நன்னடத்தையுமில்லாமல் மூடபக்தியும், நியாயமில்லாமலிருத்தலுமிருந்து கொண்டுவருகிறது. இதனாலேதான் உண்மையான சந்தோஷமும் சௌக்கியமுமில்லாமல் அநேகர்களுக்கு பூமியிலேயிருக்கும் சுவர்க்கம்போன்ற வீடு மகா அரணியத்தைப்போல் காண்கிறது. எந்த வீட்டிலே பார்த்தாலும் யாவரும் சேர்ந்திருக்கிறதற்குப் பதிலாக கலகமும், மனஸ்தாபமும், விருத்தியாய்க் கொண்டுவருகிறது. இவ்வித ஸ்திதி புருஷர்களுடைய குற்றத்தினாலாகிறதே யொழிய ஸ்திரீகளின் தோஷத்தினால் ஓரணுவும் கூட உண்டாவதில்லை. எக்காலத்திலும், எத்தேசத்திலும், ஜனங்கள் தங்கள் ஸ்திரீகளை



நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவராமலே தாங்கள் மாத்திரம் விருத்திக்கு வந்ததாகத் தெரியவில்லை. தாங்கள் நன்றாயிருக்க வேண்டுமென்று நினைக்கும் பக்ஷத்தில், தாங்கள் முதலில் தங்கள் ஸ்திரீகளை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டும். ஸ்திரீகளுடைய நன்மையே புருஷர்களுக்கும் நன்மையாம். ஸ்திரீகளுடைய யோகமே புருஷர்களுக்கு யோகமாம். ஆகையால் புருஷர்கள் தங்கள் க்ஷேமத்தின் விருத்தியைநாடி மூடர்களாகவிருக்கும் தங்கள் ஸ்திரீகளை முன்னிருந்த உந்நதஸ்திதிக்கு மறுபடியும் கொண்டுவருவதற்கு பிரயத்தனம் செய்யவேண்டும். ஸ்திரீகளினபிவிருத்திக்காக இங்குமங்கும் உத்தம புருஷர்கள் செய்யும் பிரயத்தனங்களுக்கு மூடர்களாயிருக்கும் ஸ்திரீகளே ஹானிசெய்கிறார்கள். அவ்விதம் செய்யாமல் நன்மைசெய்ய ஸ்திரீகளும் தங்கள் குமாரத்திகளுக்கும் கல்விபுகட்டிவரவேண்டும். வீட்டிலே ஸ்திரீகளுடைய சகாயமிருந்தாலொழிய குலாசாரம், மதாசாரவிஷயங்களில் பூர்வாசாரங்களுக்கு விரோதமான நூதன நல்ல ஆசாரங்களை ஏற்படுத்துவது புருஷர்களுக்கு சாத்தியமாகாது. ஆகையால் புருஷர்கள் தங்கள் ஸ்திரீகள் மூடர்களாயிருந்தால்தான் லோகத்திற்கு நன்மை உண்டாகுமென்ற அகங்காரத்தைவிட்டு ஸ்திரீகளுக்கும் தங்களைப்போல் கல்வி புகட்டி அவர்களுடன் நல்லகாரியங்களைச் செய்துகொண்டு வரவேண்டும். ஸ்திரீகளுடைய சகாயமிருக்கும்போது புருஷர்களுக்கு எல்லா காரியமும் அநுகூலமாகி லோகத்திற்கு சத்தியமான உபகாரமுண்டாகும். இவ்விஷயத்தில் ஸ்திரீகளுடைய விருத்தியைக் கோருபவர்கள் முதல் அவர்களுடைய அவிவேகமென்ற இருளை நீக்கி, கல்வி ஞானமுள்ளவர்களாகச்செய்து நமக்குச் சகாயம் செய்வதற்கு அவர்களுக்குப் போதுமான சக்தியும், அறிவுமிருக்கும்படி செய்வதுடன் நமது புத்திர புத்திரிகளுக்கும் புத்தி புகட்டக்கூடிய அறிவுடையவர்களாகவுமிருக்கும்படி நாம் செய்தால் நலமல்லவா?

# திருவல்லிக்கேணி விஜயநகரம் மகாராஜா பெண் பள்ளிக்கூடம்.

II

இப்பாடசாலையின் விருத்தியைப்பற்றி சென்ற பத்திரிகையில் நமது அபிப்பிராயத்தையும் அப்பொழுது சுமார் மாதம் 50 - ரூபா கையொப்பம் சேர்ந்திருக்கிறதென்றும் தெரிவித்திருந்தோம். இப்பொழுது அக்கமிட்டியாரின் நன்முயற்சியால் சுமார் ரூபா 100-க்குமேல் மாதம்மாதம் வசூல்செய்ய ஏற்பாடுசெய்யப்பட்டுவருகிறதாம். நாம்சொல்லியபிரகாரம் மாதர்களை உபாத்திமார்களாக ஏற்படுத்தவும் ஏற்பாடுசெய்யப்பட்டு வருகிறது. பரிசும் பாலிகைகளுக்கு மார்ச்சுமாதத்தில் அளிக்

கப்படுமாம். கூடியசீக்கிரத்தில் முதல்பாரமும் ஏற்படுத்த எண்ணியிருக்கிறார்கள். இங்குள்ள பாலிகைகளுக்கு சங்கீதம் சொல்லிக் கொடுக்கத்தக்க ஏற்பாடுசெய்தால் மிக நலமென்று நம்புகிறோம். அதாவது அக்கிரஹாரத்திலுள்ள சங்கீத பாடசாலையை இதுடன் சேர்த்துவிடுவார்களானால் அங்குள்ள பாலிகைகளும் இப்பாடசாலையிலேயே படிக்கவும், இங்குள்ள பாலிகைகள் சங்கீதம் கற்றுக்கொள்ளவும் முடியும். இப்படிச்செய்ய அதிக செலவு பிடிக்காதென்றே எண்ணுகிறோம். கிண்டர் கார்டன், கைதயல்வேலை முதலியவைகளும் கிரமமாக போதிக்க ஏற்பாடுசெய்யப்பட்டு வருகின்றதைப் பற்றி மிகக் சந்தோஷப்படுகிறோம். இப்பாடசாலைக்குத் திரவிய சகாயமேயில்லாமையால் இது மிக ஈனஸ்திதியிலிருக்கவேண்டியிருந்தது. இந்த திருவல்லிக்கேணியிலுள்ள பிரபுக்களும் மைலாப்பூர், பட்டணம்முதலியவிடங்களிலுள்ளவர்களும் இதற்கு திரவிய உதவிசெய்து இதை ஒழுங்குபடுத்தி ஒரு பெரியவகைக்குரியபெண்கள் பாடசாலையாகச் செய்யலாம். ஆனால் இப்படிச் செய்ய திரவியமதிகம்வேண்டும். கூடியவரையில் இப்பொழுது பணம் வசூல் செய்து வருவதுபோல் இரண்டு மூன்று வருடங்கள் செய்துவந்தால் வெளிஜில்லாக்களிலுள்ளவர்களையும் கேட்டு இதற்கு இன்னும் கொஞ்சம் மொத்தமாக தொகை சேர்க்கலாம். பம்பாயில் இந்து கைம்பெண்கள் சாலைக்கு கௌரவ காரியதரிசியாராகிய ப்ரோபஸர் கார்வே என்பவர் தமது விடாமுயற்சியால் சுமார் 70,000 ரூபா தமது ஊரிலேயும் வெளியிலேயும் வசூல்செய்து அச்சாலையை யாவரும் மெச்சும்படி நடத்தவில்லையா? இன்னும் அங்குள்ள சில பெண்கள் பாடசாலைகள் எவ்வளவு உன்னதஸ்திதியிலிருக்கின்றன? இதற்கெல்லாம் காரணம் அவர்களே அவர்களது நன்மைக்காக உழைத்து வருவதுதான். நாமும் அவ்விதம்செய்து அபிவிருத்தியையும் பொதுஜனங்களுக்குக் காண்பித்தால் அவர்கள்தாமே இதற்கு திரவிய சகாயம்செய்ய முன்வருவார்களென்பதற்கு தடையென்ன?

இப்பாடசாலையை இதுகாறும் தம் சுயநன்மையைக் கருதாது நடத்திவந்த மிஸ்டர் திருமலாச்சாரியார் இறந்துபோனதைப்பற்றி மிக விசனிக்கிறோம். அவரது மனைவியாரும் அவரைப்போல் தரும சிந்தையுள்ளவர்களெனக் கேட்க மிகச்சந்தோஷப்படுகிறோம். அம்மாதுசிரோன்மணி இப்பாடசாலைக்கு ஒரு கட்டடம் ஏற்படுத்தினால் மிகவும் நன்மையாகவிருக்கும். தமது குழந்தைகளுக்கு கல்வியழகாகிய ஆபரணத்தை அணிவது நன்மையல்லவா? எல்லா தர்மத்தைவிட வித்தியாதருமம் மேலல்லவா? இக்கருத்துக் கொண்டே நமது மிஷன் கனவான்களும் பெண்பாடசாலை யில்லாதவிடமெல்லாம் பாடசாலைகளை ஸ்தாபித்து உழைத்து வருகிறார்கள். இவ்விதமே "ராஜஷாயிக் காலேஜில் வேதாந்தசாஸ்திரம, ஸ்மிருதி, நியாய சாஸ்திரம் இவைகளும் மாணாக்கர்களுக்குக் கற்பித்துக்கொடுக்க ஒரு சமஸ்கிருத வகுப்பு ஏற்படுத்தவென்று அதற்காகப் பிடிக்கும் செலவு ரூபா 1600. வருஷ



வாரி கொடுக்க, பூஜியாவில் ஸ்ரீமதி ராணி ஹேமந்த குமாரதேவி ஒப்பியிருக்கிறார்கள். இதுவன்றி இந்த வகுப்பை நடத்தக் காலேஜ் கட்டடத்தில் இடமில்லாததால் தனியாகத் தக்கதோர் கட்டடமும் கட்டவேண்டிய செலவைக் கொடுக்க ஏற்றுக்கொண்டிருக்கிறாள். இந்த வகுப்பில் சேர்ந்து படிக்கும் மாணாக்கர்களில் மூவருக்கு மாதம் ஐந்து ரூபாய் விதம் சம்பள உபகாரஞ் செய்கிறதாகவு மிணங்கி யிருக்கிறாள்" என்பதைக் கேட்க மிகச் சந்தோஷப்படுகிறோம். தருமம் செய்ய எண்ணினால் இவ்விதமன்றோ செய்யவேண்டும்? இது இவ்வம்மணியின் கல்வி அபிமானத்தைக் குறிக்கின்றதன்றோ? ஆனது பற்றி மிஸ்டர் திருமலாச்சாரியாருடைய மனைவியாரும் இப்பாடசாலைக்கு கூடியசீக்கிரத்தில் தமது கணவர்பேர் விளங்கும்படியாய் ஒரு சாஸ்வதமாயுள்ள தருமமாகிய கட்டடத்தை அளிக்க ஏற்பாடு செய்வாரென்று நம்புகிறோம்.

இப்பாடசாலைக் கமிட்டியார் கூடியசீக்கிரத்தில் ஒரு பெரியசபை கூட்டி வைத்து பொது ஜனங்களுக்கு இப்பாடசாலையால் பெண்களுக்கு விளையும் பிரயோஜனங்களை எடுத்துக்காட்டுவதுடன் தக்க கனவான்களை இக்கமிட்டிக்கு மெம்பர்களாகச் சேர்த்துக்கொள்வதும் நலமே. இப்பாடசாலையின் காரியத்தை நடத்த ஒரு சிறிய நிர்வாகசபை ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் செய்துவந்தால்தான் பொது ஜனங்களுக்கும் இப்பாடசாலையின்மேல் மதிப்புண்டாகும். எப்பொழுது மதிப்புண்டாகிறதோ அப்பொழுது இதற்கு உதவி அதிகமாகச்செய்ய முயலுவார்கள். ஆனதுபற்றி இப்பொழுதுள்ள கமிட்டியார் மேற்கூறியபடி ஒரு பொதுக்கூட்டம்கூட ஏற்பாடுசெய்வார்களென்று நம்புகிறோம்.

## உள்ளதை உள்ளபடி சொல்லும் பஞ்சாங்கம்.

'நான் என்ன சொன்னாலும் நீங்கள் கேட்கிறதில்லையே, இப்படி ஆற்றுத்திண்ணையிலே உட்கார்ந்திருந்தால் மத்தியான போஜனத்துக்கு என்ன செய்கிறது? என்னாலே இனி முடியாது. இந்த ஊரிலிருக்கிறாளே அவாளெல்லாம் உங்களைப்போல தான் வெறுமனே இருக்கிறாளா என்ன. எங்கப்பா நீங்கள் இந்த ஊர் முதலியார் ஆப்தசினேகிதர் சுப்பிரமணிய சாஸ்திரிகள் பிள்ளையாச்சேன்னு என்னைக்கொடுத்தார். அந்தக்கிளம் இருந்தவரை அதன் துக்கம். அதற்கப்புறம் உங்கள் துக்கம். நான் உங்ககம் புகுந்தது

முதல் ஒருநாள் சந்தோஷமா யிருந்தேனென்று சொல்லுங்களேன் பார்ப்போம். என்னமோ அவாவாள் தலைவிதி அவாவாளுக்கு. இனி என்னண்டை பைசா கூடவில்லை. நீங்கள் ஏதாவது வெளியில் போய் சம்பாதித்துக் கொண்டு வந்தால் இன்னிக்கு ஆத்தில் சாப்பாடு; இல்லாவிட்டால் இல்லை.'

'கமலாம்பாள்! என்னடி இப்படிக்கோபிக்கிறையே. நானுந்தான் தினம் போய்ப்பார்க்கிறேனே. ஒரு காசு கூட வரட்டேனென்கிறதே. நான் என்ன செய்யறதடி நீ தான் சொல்லேன். நீசொல்லுகிறபடி செய்கிறேன்.'

'உங்களுக்குத்தான் பஞ்சாங்கம் தெரியும்; ஜோசியம் தெரியும் இன்னமென்னென்னவோ தெரியுமே. உங்கொப்பா தன் மகனுக்கு என்னென்னமோ சொல்லி வைத்தேன். ஒன்னும் வரதில்லை யென்று சொன்னாரே. அடுத்தாத்துக்காரருக்கு அவாப்பா என்னசொல்லி வைத்தார். இருந்தாலும் அவர் வெளியில் போய் சம்பாதிச்சு வந்து அவர், அவராம்பிடையா 4 பிள்ளை இத்தனைபேரையு மல்லவோ காப்பாற்றார். அவாள் விட்டு சமாசாரம் வெளிக்கு வரதா. அவாள் தான் தாராளமாயில்லையா.'

இனி அம்மாளோடு பேசுவதில் உபயோகமில்லை யென்று கண்ட சாஸ்திரியார் 'ஆகட்டும் நானும்போய் சம்பாதித்து வருகிறே' னென்று சொல்லிப் புறப்பட்டார்.

மேலே குறித்த சம்பாஷணை நடந்தது இப்போது கோயமுத்தூரென்று சொல்லப்படுகிற பட்டணத்துக்கு அருகாமையில் முன்மாடமாளிகைகளோடும் கூட கோபுரங்களோடும் விளங்கிப் பிரக்யாதி பெற்றதால் பேரூர் என்னும் பெயர் பெற்ற ஊரில். இப்போது பேரூர் போய்ப் பார்ப்பவர்கள் நாம்சொல்லப்போகிற கதை எப்படி அவ்விடம் நடந்திருக்கலாம். முதலியார் யார்? அங்கே எப்படிப் பணம் வெளியில் போய் சம்பாதிக்கிறது என்று சந்தேகிக்கலாம். நாம் அவர்களுக்குச் சொல்லக்கூடிய தெல்லாம் இக்கதை இப்போது நடந்ததல்ல, அது நடந்து சுமார் 200 வருஷங்களிருக்கலாம். அக்காலத்துப் பேரூர் 2 மயில் நீளமும், $1\frac{1}{2}$ மயில் அகலமுமுள்ள ஒரு பெரிய பட்டணமாயிருந்தது. அதை ஒரு முதலியார் ஆண்டார். இப்போது இங்கிலீஷ் அரசாட்சி வந்தபின் ஒரு முதலியார் ஒரு ஊரை ஆளுவதாவது என்று தோன்றும். ஆனால் சரித்திரம் படித்தவர்கள் 200 வருஷங்களுக்கு முன் இந்தியா முழுதும் ஒரு குழப்பமாய் இருந்ததென்றும் ஒவ்வொரு இடத்திலும் பலமுள்ளவன் அரசனாக ஏற்பட்டு சிறு சமஸ்தானங்கள் ஏற்படுத்திக்கொண்டார்களென்றும் நன்றாய்த் தெரியும். கம்பன், புகழேந்தி இவர்கள் காலத்து இருந்த சடையப்பன், காளிங்கராயன் இவர்களெல்லாம் பெரிய அரசர்களா? அதுபோலத்தான் பேரூரிலும். ஆனால் பேரூர் எப்படி அழிந்தது என்று சிலபேர்களுக்குச் சந்தேகம் உண்டாகலாம். இவ்விஷயங்களைப்பற்றி யெல்லாம் நமக்குச் சரியாக ஒன்றும் தெரியாது. நம் தேசத்தில் சரித்திரக்காரர்



என்று ஒருவருப்பார் இருக்கவே யில்லை. பேரூர் கோயில்கல்களில் ஏதாவது இவ்விஷயங்களைப்பற்றி யெழுதியிருக்கிறதோ வென்று போய்ப்பார்த்தோம், ஒன்றும் காணோம். ஆகையால் ஜனங்கள் அவ்விடத்திலும் மற்ற இடங்களில் பேசிக்கொள்வதை இங்கே நாம் எழுதிவைக்கிறோம். நாம் எழுதுவதில் ஏதாவது தப்பு இருக்குமேல் அதற்கு நாம் உத்தரவாதியல்ல. நம் கதை நடந்த கொஞ்சக்காலத்துக்கெல்லாம் ஒரு பெரியவர் சுவாமி தரிசனஞ்செய்ய பேரூர் போனதாகவும் அப்போது இருந்த முதலியார் அவரை ஏதோ அவமரியாதை செய்துவிட்டதாகவும் அதற்காக அவர் கோபித்து 'நீயும் உன் பட்டணமும் பாழாகப்போகட்டு' மென்று சாபம் கொடுத்துவிட்டு மறைந்துவிட்டதாகவும் அது முதல் 2 வருஷத்துக்குள் ஒரு பெரிய மண்மாரிபெய்து ஊர் அழிந்துவிட்டதாயும் இப்போது அரண்மனை இருந்த இடமும் தெரிகிறதில்லை யென்றும் ஜனங்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். நாம் ஏதோ வெறுஞ்சமாசாரத்தை ஆரம்பித்துக் கதையை நிறுத்திவிட்டோம். ஆயினும் இவ்விஷயம் யாவருக்கும் தெரிந்திருந்தால் நலமல்லவா?

பேரூரில் அந்தக்காலத்தில் நடுவீதி யென்று ஒரு தெரு இருந்தது. அது கோயிலுக்கு வடபக்கத்தில் இப்போது காஞ்சிமா நதிக்குப்போகும் பாதையாக இருக்கிறது. அது தான் அக்கிராரம். அங்கே ஒரு வீட்டுத்திண்ணையில் தான், நாம் மேலே சொன்ன சம்பாஷணை நடந்தது. அத்தெருவுக்கு அடுத்தது தான் முதலிமார் தெரு. முதலியார் தெருவுக்கு மேல்பக்கத்தில் தான் அரண்மனையிருந்தது. நம் சரித்திரம் நடந்த காலத்தில் அரசாண்டவர்களூர் சிதம்பரமுதலியார் என்பவர். அவர் தகப்பனார் முத்துசாமிமுதலியாருடைய ஆப்த சினேகிதர் சுப்பிரமணிய சாஸ்திரி. அந்தக்காலத்தில் இப்போதுபோல ஒவ்வொரு இடத்திலும் ஒரு திவான் இல்லை. அரசன் தனக்கிஷ்டமானபடி ஆள்களை ஏவி வேலைகளை முடிப்பான். இப்படியிருந்தால் அரசனுடைய ஆப்த சிநேகிதருக்கு மரியாதை அதிகமாக இருக்குமல்லவோ. இம்மரியாதையைக் கண்டு மயங்கி அடுத்த கோயமுத்தூரிலிருந்த விசுவநாத பட்டர் தன் மகள் கமலாம்பாளை அவர் மகன் குமாரசாமி சாஸ்திரிக்கு வதுவை முடிப்பித்தார்: இம்மணம் முடிந்த சிலவருஷங்களில் முத்துசாமி முதலியார் இறந்தார். சிதம்பரமுதலியார் பட்டத்துக்கு வந்தார். அவருக்கு சுப்பிரமணிய சாஸ்திரியண்டை பிரியம் அதிகமில்லை. இது சகஜமே. மக்கள் இஷ்டம் போல் தகப்பன்மார் நடக்க உடன்படுவதில்லை. ஆகையால் பெரிய குடும்பங்களில் தகப்பனுக்கும் மகனுக்கும் சச்சரவுகள் உண்டாவது வழக்கம். அப்போது தகப்பனுடைய சிநேகிதர் தகப்பனோடு தானே சேருவார்கள்? சச்சரவு முடிந்தபின் ரத்தசம்பந்தம் இருப்பதால் தகப்பனும் மகனும் சீக்கிரம் ஒன்று படுவார்கள். ஆனால் மத்தியில் இருந்த சிநேகிதன் மகனுடைய கோபத்துக்கும் விரோதத்துக்கும் உட்பட்டே தானாகவேண்டும். இது எல்லோர்க்கும் தெரிந்ததே. அதுபோலவே இங்கேயும் சுப்பிரமணிய சாஸ்திரி கதியும்.

ஆனாலும் வெகுநாளாக மரியாதை பெற்றிருந்தவராகையால் அவர் இறக்குமளவும் அவருக்குக் கொஞ்சம் மரியாதை இருந்தது. அவர் இறந்தவுடன் அவர் மகனுக்கு யார் மரியாதை வைக்கப்போகிறார்கள். ஒருவருமே யில்லை.

குமாரசாமி புத்திசாலி தான். ஆனால் அவன் முதலியார் சிநேகிதர் பிள்ளை யென்னும் கர்வம் அதிக மிருந்தமையால் பணம் சம்பாதிக்க வகை தேட முயலவே யில்லை. தகப்பனார் பொருள் அதிகம் சேர்ப்பதால் தான் சேர்க்கவே வேண்டியதில்லை யென்றெண்ணினான். மேலும் முத்துசாமி முதலியார் இவனிடம் மிக அன்பு வைத்திருந்தபடியால் தனக்கு எப்போதும் கெடுதல் வராதென்று நினைத்திருந்தான். சுப்பிரமணிய சாஸ்திரி இறந்தபின் 4, 5 வருஷங்களுக்கு அவர் சேர்த்து வைத்திருந்த பொருள் உதவிற்று. அதன் பின்என்செய்வது? அது தான் இப்போது யோசனை. அது விஷயமாகத் தான் கமலாம்பாள் பலதடவைகளிலும் குமாரசாமி சாஸ்திரியோடு பேசியது. அவள் பேசி என்ன பயன்? அவருக்கொன்றும் வழிதெரியவில்லையே! அவன் முன் பஞ்சாங்கமும், ஜோசியமும் படித்ததுண்டு. பஞ்சாங்கத்துக்குப் பணம் கொடுப்பவர் அங்கேயில்லை. ஜோசியத்தில் அவனுக்கு நம்பிக்கையில்லை. ஜோசியம் சொன்னால் சொன்னபடி நடந்தால்தானே பணம் தருவார்கள். என்ன செய்கிறது!

இவ்விதமான யோசனையுடன் குமாரசாமி நாம் மேற்குறித்த சம்பாஷணைக்குப்பின் திண்ணையைவிட்டிறங்கி ஊர் முழுதும் திரிந்தான். செய்வதொன்றும் தெரியாமையால் போனபடியே வீட்டுக்கு வந்தான். வீட்டில் அடுப்பு மூட்டி அடுப்பின்மேல் தோசைக்கல் வைத்திருந்தது. 'என்ன நம்மை திட்டி முடுக்கினாளா, நம் ஆத்துக்காரி. இப்பென்ன தோசைக்கல் அடுப்பில் இருக்கிறது? இவள் நடவடிக்கை பேதமுள்ளவள்போ லிருக்கிறதே! என்று யோசித்து எல்லாம் அவ்வறையிலிருந்த (மச்சு) அட்டாலிமேல் இருந்து பார்த்தால் தெரியுமென்று நினைத்து அதன்மேல் ஏறினான், கமலாம்பாள் தான் புருஷனை அதிகமாகத் திட்டிவிட்டதாக மனம்வருந்தி அவன் திரும்பிவந்தவுடன் அவனுக்குக் கொடுத்து சந்தோஷிப்பிக்கச் செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடன் தோசைக்குமா அரைத்துவைத்து அடுப்புமூட்டி தோசைக்கல் அடுப்பிலேற்றி தோசைசுட ஆரம்பிக்க, தோசை மாவுக்கு தண்ணீர் போதாதென்றுகண்டு தண்ணீர் வீட்டில் இல்லாததால் எதிராத்துக் கிணற்றில் எடுத்துவரப் போயிருந்தாள். அப்போதுதான் சாஸ்திரியார் மச்சின் மேல் ஏறினார். அவள் சீக்கிரம் திரும்பிவந்து மாகலக்கி தோசைசுட ஆரம்பித்தாள், சாஸ்திரியாருக்கு எவ்வளவு தோசை சுடுகிறாள் என்று எண்ண ஆவல். எப்படி அதை அறிகிறது, தலையை வெளியே நீட்டினால் பார்த்துக்கொள்ளுவாள். ஆகையால் 'சொய்' இரண்டுக்குத் தோசை யொன்று கணக்குச் செய்ய ஆரம்பித்தார். தோசை ஊற்றும்போது 'சொய்' என்று ஒரு சப்தம், பின் திருப்பிப்போடும்போது ஒன்று, ஆக இரண்டு; இம்மாதிரி 25-



தோசை கணக்குப்போட்டார். 'சொய்' யும் நின்றது, அடுப்பும் அவிந்தாய்விட்டது. பின் இரண்டு நாழிகைபார்த்தார் யாராவது வருவார்களென்று ஒருவரையும் காணோம். தான் அவள் நடவடிக்கையைச் சந்தேகித்தது தப்பு என்று தெரிந்துகொண்டார். இனி எப்படி கீழே வருவது? நேராகக் குதித்தால் அவள் வருத்தப்படலாம். தனக்கும்மானக்கேடு; இப்படியிருக்குந்தருவாயில் அவள் ஜலம் இன்னொரு குடம் வேண்டியிருக்க அதைக் கொண்டுவர எதிராத்துக்குச் சென்றாள். இதுதான் சமயமென்று சாஸ்திரியார் உடனே மச்சிலிருந்து குதித்து தெருத்திண்ணையில் வந்துட்கார்ந்தார்.

கமலாம்பாள்—தண்ணீர்கொண்டுவந்தவள் தன் புருஷன் தான் நினைத்த படியல்லாது முகமலர்ச்சியுடன் திண்ணையி லுட்கார்ந்திருந்ததைப்பார்த்துச் சந்தோஷத்துடனும் சிறுமுறுவலுடனும்,

'போன இடத்தில் ஏதோ இன்று கிடைத்துவிட்டாப்போலிருக்கு' என்றாள்.

சாஸ்திரி—ஜோசியம் பலிக்காதென்றல்லோ இருந்தேன். பலித்துவிட்டது. இனியொன்றும் ஆக்ஷேபணையில்லை.

கமலாம்பாள்—என்ன சம்பாதனை?

சாஸ்திரி—சம்பாதனை இப்போ என்ன. ஜோசியம் பலித்தால்தான் குவியல்குவியலாக சேர்க்கலாம்.

கமலம்பாள்—ஜோசியம் பலிக்கிறதுண்ணு எனக்கொன்றும் தெரியலையே.

சாஸ்திரி—நானொரு ஜோசியம் சொல்லுகிறேன் கேள். இன்று நம் வீட்டில் 50–சொய், 25-தோசை உண்டா இல்லையா?

கமலாம்பாள்—அதெப்படி உங்களுக்குத்தெரிந்தது? அடடா ஒருவருக்குமே தெரியாதே. கடைசி யடுக்கிலேயல்லவோவைத்து மூடியிருக்கிறேன்?

சாஸ்திரி—நானென்ன பார்த்தா சொன்னேன் ஜோசியமல்லவோ இது.

அவளுக்குச் சந்தோஷம் அதிகரித்துவிட்டது. தன்னுடையான் ஜோசியத்தில் வல்லவர். இனித் தரித்திர மென்கிறதே பக்கத்தில் வராது. உடனே உள்ளே கூட்டிப்போய்ச் சாஸ்திரியாருக்கு மிக்க மரியாதையுடனும் தோசை பரிமாறினாள். சாஸ்திரியும் விலாப்புடைக்கச் சாப்பிட்டார்.

மறுநாள் ஊர்முழுதும் சாஸ்திரியார் சாமர்த்தியமே புகழப்பட்டது. இதெப்படி தண்டோராப்போட்டார்களா என்று இதைப்படிப்பவர்கள் கேட்கலாம். அதொன்றும் வேண்டுவதில்லை. ஒரு பெரியவரை ஒரு அரசன் தன்

பெயரை வெளியில் தெரிவிக்க என்னசெய்ய வேண்டுமென்று கேட்டான். அதற்கவர் எல்லா சமாசாரங்களையும் தெரிந்தவராகையால் யோசிக்கத்தலைப்பட்டார். தர்பார்வைத்தால் பெரிய மனிதர்களுக்குமாத்திரமே தெரியும். தண்டோர் போட்டால் போட்ட இடத்தில்தான் தெரியும். பத்திரிகையில் எழுதினால் பத்திரிகை போகுமிடத்தில்தான்தெரியும். ஆனால் ஒரு பெண்ணிடம் சொல்லிவிட்டாலோ அது உலக முழுதும் பரவும். ஆகையால் ஒரு பெண்ணிடம் சொல் என்று அரசனுக்கு அவர் ஆக்ஞையிட்டதாகச் சொல்லப்படுகிறது. பேரூரில் கமலாம்பாள் எதிராத்தில் தண்ணீர் எடுக்கும்போது சமாசாரத்தைச் சொன்னாள். கேட்டிருந்த பெண்கள் தாங்கள் சென்ற விடமெல்லாம் இதே சமாசாரம் பேசினார்கள். ஆகவே மறுநாள் சாயந்திரத்துக்குள் ஊர் முழுதும் குமாரசாமி சாஸ்திரி வெகுபெரிய ஜோசியர் என்னும் சமாசாரம் எட்டிவிட்டது.

சாஸ்திரியார் ஒரு பாபமும் அறியார். அவர் தன் பெண்சாதி எங்கே தன்னை இன்னும் திட்டுகிறாளோ என்று பயந்து அதினின்றும் தப்ப ஒரு பொய் சொன்னார். மறுநாள் சாயந்திரமே ஒரு வண்ணான் அவர் திண்ணைமேலுட்கார்ந்திருக்கும்போதுவந்து 'சாமி' 'சாமி' என்றான்.

சாஸ்திரி—என்னடா வேணும்.

வண்ணான்—சாமி உங்கிட்டத்தான் வந்தேன்.

சாஸ்திரி என்ன வேணும்.

வண்ணான்—பெரிய கழுதை கருப்பு கழுதை யிருந்ததுங்களே அது காணாமெப்போச்சு.

சாஸ்திரி—அதுக்கென்ன.

வண்ணான்—எங்கே போச்சு சொல்லோணிம். முக்நாக்காளிக்கு மெனக்குமாகாது. அவன் ஓட்டிக்கிட்டுபோய்விட்டானா என்ன பார்த்துச் சொல்லோணிம். அது நல்ல கழுதைங்கோ எப்படியோ அதைத் திருப்பிக்கொண்டு வந்திடோணிங்கோ.

சாஸ்திரி—என்னடாபலே, பயமில்லாமல் என்னண்டைவந்து கழுதை கேட்கிறாய்.

வண்ணான்—நீங்கதான் சொல்லோணும்.

சாஸ்திரி—உனக்கு மரியாதை தெரியலே. நான் முதலியாரிடம் சொல்லி உன்னை ஒதைக்கச் சொல்லுவேன்.

வண்ணான்—சாமி, நீங்க கோபிக்கக்கூடாது. எப்படியாவது சொல்லோணும்.

சாஸ்திரி—எப்படியடா சொல்லுகிறது.



வண்ணான்—ஜோசியத்திலே பாத்து.

சாஸ்திரி—ஜோசியம் எனக்கென்னடா தெரியும்.

வண்ணான்—நீங்க அப்படிச் சொல்லக்கூடாது. ஏழைமேலே தயவு வைக்கணிங்கோ அரை ரூபா வேணுமென்னாலும் கொடுக்கிறனுங்கோ 6 - மாசம் வேணுமென்னாலும் காசில்லாமே உங்களுக்கு துவைக்கிறேனுங்கோ.

இச்சம்பாஷணையை ரேழியிலிருந்து கேட்டிருந்த கமலாம்பாள்,

'அவன்' ஏதோ கேட்கிறானே சொல்லிவிடுங்களேன் ரொம்ப வருத்தப்படறானே நமக்கென்ன காசா பணமா.'

சாஸ்திரியாருக்கு இப்போதுதான் தெரிந்தது எல்லாம் தான் முன்னாள்செய்ததின்பலன் கமலாம்பாள்தான் இதற்கு காரணம். இனிச்செய்வதென்ன. 'அடா நாளைவாடா' வண்ணானுக்குச்சொல்லி யனுப்பிவிட்டு எப்படியாவது வண்ணான் கழுதையைத்தேடி அவனிடம்சொல்லிவிட்டுத் தன் மரியாதையைக் காப்பாற்றிக்கொண்டு இனிமேல் ஒருவருக்கும் ஜோசியம்சொல்வதில்லையென்று சொல்லிவிடவேண்டுமென்று யோசித்துக் கழுதைதேடபுறப்பட்டார். அன்று பொழுதுபோய்விட்டது. 'இன்னும் கழுதையைக்கண்டுபிடிக்கவில்லையேயென்று, யோசித்துக்கொண்டு ஊர்வெளியில் ஒரு தோட்டத்தின் பக்கத்தில் வரும்போது தோட்டக்காரன் அடித்து ஒரு கழுதையை ஓட்டிக்கொண்டிருந்தான். சாஸ்திரியார் பக்கம்போனவுடன் அதுதான் தான்தேடின கழுதையென்று தெரிந்துகொண்டார். உடனே அதை ஓட்டிவிட்டு தோட்டக்காரன் அப்புறம் போனவுடனே அதைப்பிடித்து ஒரு மரத்தில் கட்டிவிட்டு சந்தோஷத்துடனும் வீடுவந்துசேர்ந்தார். மறுநாள் வண்ணான்வந்ததும்கிரகநிலையைக்குறித்துப்பார்த்துசக்கரம்போட்டுச்ஜோசியம் பார்த்ததாகப் பாசாங்குசெய்து தான்முன்தினம் கட்டிவந்த திசையில் மரத்தில் கட்டப்பட்டிருக்குமென்று சொன்னார். உடனே அவன் ஓடிப்பார்க்க அப்படியேயிருந்தது. வண்ணானுக்குச் சந்தோஷம்பொங்கி சாஸ்திரியார் சாகும்வரை காசில்லாமல் அவருக்கு வெளுப்பதாக உறுதிமொழிக்கூறிப்போனான். இச்சமாசாரமும் சீக்கிரம் ஊரில்பரவிற்று. அதன்பின் சாஸ்திரியாருக்கு வந்தவரும்படிக்குக் கணக்கேயில்லை. அவர் நல்லகாலம் எப்படியோ ஜோசியம் கேட்டதெல்லாம் அவர் கண்டுபிடிக்கக் கூடியதாகவேயிருந்தது, இந்த ஜோசியங்களையும் அவர் எப்படிச் சொன்னார் என்பதையும் இங்கே நாமெழுதிய இதைப் படிப்பவர்களை வருத்தப்படுத்த நமக்கு இஷ்டமில்லை. ஆகையால் முதலியார் வீட்டில்நடந்த ஒரு விஷயத்தையும் அதின் பலனாக நிறைவேறிய காரியத்தையும் மாத்திரம் எழுதி இன்று நிறுத்துவோம்.

ஒருநாள் முதலியார் வீட்டில் ஒரு முத்துமாலை காணாமல் போய்விட்டது. முதலியார் பெண்சாதி குளிக்கும்போது கழற்றிவைத்தது மறைந்து

ளி' ரூ. அம்மாலை 20,000, 30,000 ரூபாய் பிடிக்கும். ஆகையால் முதலியார் எப்படியாவது திருடனைக் கண்டுபிடித்து மாலையைத் திருப்பியடைய வேண்டுமென்று தீர்மானஞ்செய்தார். ஆனால் இவைகளைக் கண்டுபிடிப்பது யார்? அதற்குதான் குமாரசாமி சாஸ்திரியைக் கூப்பிட்டார். அவரைச் ஜோசியம் கேட்டார். இதை எப்படி கண்டுபிடிப்பது. முடியவில்லை. 3, 4 நாட்களாயும் ஒன்றுஞ்சொல்லவில்லை. முதலியாருக்கு கோபம் வந்துவிட்டது. இன்னும் ஒரு வாரத்துக்குள் இதைச்செய்யாவிட்டால் 'சிறைச்சேதம்தான் உமக்குத் தண்டனை' என்றுசொன்னார். என்னசெய்வார் சாஸ்திரி! ஓ இதைப்படிப்பவர்களே இதை வாசித்தவுடனே 'என்ன இக்கதை எழுதுபவன் வீண்பொய்யும் புரளியும் எழுதி நம்மை நம்பச்சொல்லுகிறான். நவாப்தர்பாரிலல்லவோ நினைத்தவற்றிற்கெல்லாம் சிரசாக்கினை. முதலியார் சமஸ்தானம் அல்லவோ இது என்று நினைத்துவிடாதேயுங்கள். ஆங்கிலேய ராஜாங்கம்வந்து நிலையூன்றியபின்னுங்கூட (அதாவது சுமார் 20-வருஷங்களுக்கு முன்) தாம் குடியிருந்ததெருவில் ஒருவனும் ஜோடு போட்டுக்கொண்டு வரக்கூடாதென்றும் அத்துமீறிவந்தால் அச்ஜோட்டாலேயே அவனையடிக்கிறதென்றும் விதியேற்படுத்தி அவ்விதியையும் அநுஷ்டானத்துக்குக் கொண்டுவந்த இந்து பிரபுக்கள் இருந்திருக்கிறார்கள், இதல்லாமலும் நான் நேரில் எழுதியதற்கு தகுந்த சாட்சியம் வைத்திருக்கிறேன்.

4 நாள் ஆயிற்று 5 நாளாயிற்று 6-ம் நாளும் பிறந்தது. சாஸ்திரியாருக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஜோசியமாவது இவருக்குச் சொல்வதாவது. அவருடைய முயற்சிகளெல்லாம் வீணாயின. மறுநாள் சூரியாஸ்தமனத்துக்கு முன் திருடனைப்பிடித்துத் தராவிடில் அவர் சிரசுபோய்விடும். சாஸ்திரியாரும் மறுநாள் உதயத்திற்குள் திருடன் அகப்படாவிடில் தான் தற்கொலை புரிந்து கொள்வதென்று தீர்மானஞ்செய்துகொண்டார். அன்று சூரியாஸ்தமனமாயிற்று. சாஸ்திரியாருக்கு ஒன்றும் தோற்றவில்லை. இரவு 12-மணிக்கு அவர் ஊருக்கு வெளியே ஒரு தோட்டத்தின் பக்கம் போய்க்கொண்டிருந்தார். கொஞ்சதூரம் போனபின் தனக்குக் கொஞ்சதூரத்துக்கு முன் 2 பேர் நின்று பேசிக்கொண்டிருக்கக் கண்டார். அவர்கள் வழிப்பறி செய்வோராய் இருக்கவேண்டுமென்று நினைத்துத் திகில் கொண்டார். தானே அடுத்த காலை தற்கொலைசெய்து கொள்ளத் தீர்மானித்திருந்தாலும் தன் உயிரின்பேரில் அவருக்கு இருந்த அபிமானம் கடைசி நிமிஷம் வரை இருந்து பார்த்திட யோசிக்கச் செய்ததே யன்றி தைரியமாகச் சொல்லவிடவில்லை. இவர் வருவது தெரியாமலே அவர்களிருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

முதல்வன்—அடே, ஊரைவிட்டுப் போய்விடவேண்டும். அப்பாப்பான் பொல்லாதவன். நாளை நம்மைக் காட்டிக்கொடுத்துவிடுவான். அபார ஜோசியனவன், விடமாட்டா னம்மை.

இரண்டாவான்—அவனாவது கண்டு பிடிக்கவாவது, நாம் நான் ஒருவருக்கும் தெரியாமல் எடுத்திருக்கிறோமே.



முதல்—ஜோசியம் சொல்லுட்டா.

இரண்—அதைமறந்துவிட்டேன் ஆனால் எப்படி நாம் 40-வருஷம் பிழைத்த ஊரைவிட்டுப்போறது, முதலியாரெல்லாம் எவ்வளவு பக்ஷம். என்னத்துக்கடா அதைத்திருடனம்.

முதல்—நாம் இதைவித்தால் பணக்காரராப்போவோம். என்ன எப்பப்பாத்தாலும் வேலையா, கண்டவங்கல்லாம் பேசறது வேறே.

இரண்—அதெல்லாமப்படித்தான் என்ன பண்ணுகிறது. சாஸ்திரியாருக்குச் சமாசாரம் தெரிந்துவிட்டது. உடனே அவர்கள் பக்கத்துக்குப்போனார். போய் 'என்னடா பசங்களா ஒடப்பார்க்கிறீர்கள். நான் உங்களை விட்டு விடுவேனா' என்றார்.

முதல்—அடே, நான் சொல்லலேயடா, இதபாத்தியா அய்யறே. சாமி ஓங்க காலிலே விழறம் சொல்வடாதேங்க முதலியார் கிட்ட.

இரண்—சாமி நகையை வேணன்னா நீங்கள் வெச்சுக்கிங்க. எங்களை எப்படியாவது தப்புச்சு விடுங்க.

சாஸ்திரியார் பார்த்தார். அவர்களோ மூர்க்கர், அவர்களோடு முரண்டினால் தன்னுயிருக்கே நஷ்டம் வரலாம்; ஆகையால் அவர்களிடம் நகையை வாங்கிக்கொண்டு அவர்கள் கேட்டுக்கொண்டபடியே அவர்களைத் தப்புவிப்பதாக வாக்களித்தார். மறுநாள் காலை முதலியாரிடம் சென்று மாலையைக் கீழேவைத்து காக்கை யொன்று அதையெடுத்துக்கொண்டுபோய் ஒரு குட்டிச்சுவரில் வைத்தது; அதைச் ஜோசியத்தில் கண்டு பிடித்து எடுத்துவந்தேனென்றார். முதலியார் மிகுந்த சந்தோஷத்துடன் அவரைச்சம்மானித்து தன் ஆப்த சிநேகிதராக அவரை எப்போதும் தன் பக்கம் வைத்துக்கொண்டார்.

சிலநாட் சென்றபின் சாஸ்திரி ஜோசியனென்று பேர் கிடைத்து. இனி அதை யெப்படியாவது விடக்கூடாது. ஆனால் இனிமேல் ஜோசியங்கேட்க வரவிடக்கூடாது என்று யோசித்து அதற்கோர் உபாயம் செய்தார். அதாவது தன் சிறுவீட்டுக்கு நெருப்புவைத்து விடுவது. உடனே அதைச் செய்தார்; வெளியில் நின்று அழஆரம்பித்தார். அவரைச்சுற்றிலும் ஊரே திரண்டது. முதலியாரும் வந்துவிட்டார் 'எதற்காக அழறீர்கள்' என்றுகேட்டார்கள் 'நான் வீடுபோனதிற்கு அழவில்லை. ஆனால் அதோடு உள்ளதை உள்ளபடி சொல்லும் பஞ்சாங்கமும் போய்விட்டதே' என்று சொல்லி விம்மி விம்மி அழுதார். அங்கு வந்திருந்தவர்களெல்லாம் அவரைத் தேற்றினார்கள். முதலியாரும் தன் சமஸ்தானத்திலிருந்து அவருக்கு மாசம் 100 ரூபாய் கொடுக்கத்திட்டம செய்தார்.

சகோதரிகளே! இதைப் படித்தபின்னேயாவது ஜோசியவேடம் பூண்ட கபடர்கள் உங்களை மோசம்செய்ய விட்டுவிடாதேயுங்கள்.

T. A. இராமலிங்கம்.

# சென்னைச் சித்திரக்காட்சி.

சென்னையில் சென்ற பிப்ரவரி௴ 20-ம் தேதிமுதல் 28-ம் தேதி வரையில் சமுத்திரக் கரையிலுள்ள கலசமால் என்று வழங்கிவரும் செனட் அவுசில் (Senatö House) ஓர்விநோத சித்திரக்காட்சி நடந்தது. இதற்கு சென்னை இராஜதானியிலும், பம்பாய் இராஜதானியிலும்பேர்பெற்ற சித்திரவேலைக்காரர்கள் தங்களுடைய சிறந்த படங்களை அனுப்பியிருந்தார்கள். அவர்களிற் சிலருக்கு பரிசு கிடைத்தது. மற்றவர்களுக்கு பரிசு கிடைக்காவிடினும் அவர்களது சித்திரப்படங்கள் மிக மெச்சப்பட்டன. பொதுவாய் பார்க்குமிடத்தில் எல்லாப் படங்களும் சிறந்தவைகளாகவே யிருந்தன. சாதாரணமாக வெள்ளிப் பதக்கங்களும், பித்தளைப்பதக்கங்களும் சிறந்த படங்கள் எழுதியவர்களுக்கு பரிசாக கொடுக்கப்பட்டன. சில சிறந்த படங்கள் எழுதியவர்களுக்குப் பொன் பதக்கங்கள் பரிசாக அளிக்கப்பட்டால் இவ்வேலையில் இன்னும் சிறந்தவர்கள் இக்காட்சிக்கு தாங்களெழுதிய படங்களை அனுப்பக்கூடுமென்று நமது 'இந்து பத்திரிகை சொல்லுகிறது நியாயமாகவிருக்கிறதென்று எண்ணுகிறோம். இவ்விதம் இக்கமிட்டியார் அடுத்த வருஷம் ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம்.

பிறகு, எண்ணெயிற் கலந்த வர்ணமிட்ட படங்கள் விசேஷமாக இல்லாவிடினும் அந்த மண்டபத்தின் மத்தியில் நமது சென்னைக் கவர்னரின் மனைவியாராகிய லேடி ஆம்ப்தில் அவர்களுடைய படம் வெகு நன்றாக சித்திரம் வரைவதில் பேர்பெற்ற ராஜா ரவி வர்மர் அவர்களால் எழுதப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. இப்படம் அவ்வம்மையாரைப் போலவே வெகு நன்றாகவும், அவ்வம்மையாருடைய புடவை முதலிய வஸ்திரங்கள் மிக அழகாகவும், பற்பல வர்ணங்களால் வெகு புத்திசாதுரியத்துடன் எழுதப்பட்டிருந்ததென்று சொல்லலாம். லேடி ஆம்பதில் பக்கத்தில் அவருடைய அருமையானவும் அழகுள்ளவுமான குழந்தை நிற்பதுபோல் எழுதப்பட்டிருந்தது. அக்குழந்தையினுடைய பளபளப்புள்ள கன்னமும், பவழத்தைப்போன்ற உதடும், புன்சிரிப்புள்ள முகமும் வெகு நன்றாக தக்க வர்ணங்களால் வரையப்பட்டிருந்தது: ரவிவர்மாவின் கைவேலையின் திறமையும், அவருடைய அபார புத்தி நுட்பமும் இப்படத்தால் நமக்கு நன்கு விளங்குகின்றதல்லவா? இப்படத்தை மாதர்களும், புருடர்களும் கண்டு மகிழ்ந்தார்கள். சிறுகுழந்தைகள் லேடி ஆம்ப்தில் அம்மையாரின் அருமைக்குழந்தையைப் பார்த்து அம்மா! இக்குழந்தை என்னைப்பார்த்து சிரிக்கிறதென்றும் சொன்னார்கள். மாதர்கள் அசைவற்று மிக ஆச்சரியத்துடன் இப்படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். புருடர்களும் மிகச் சந்தோஷத்துடன் கொஞ்ச



நேரம் இப்படத்தைப் பார்த்து பிரமித்து நின்றார்கள். சித்திரம் எழுதினால் இவ்விதமல்லவோ எழுதவேண்டும், இம்மகான் எழுதிய சித்திரப்படங்களையல்லவோ நமது கிரகத்தில் வைத்து, இவைகளைக்கண்டு அடிக்கடி ஆநந்தப்படவேண்டும். இம்மகான் இன்னும் 3 படங்களை அனுப்பியிருந்தார். அவைகளும் மிக நன்றாக விருந்தன.

ம-ா-ா-ஸ்ரீ. C. ராஜ, ராஜ வர்மா அவர்களும் 5 அழகானபடங்களை அனுப்பியிருந்தார்கள். இவைகளில் "நித்திரை" என்றது மிகநேர்த்தியாகவிருந்தது. அதாவது ஒருமலையாள மாது (இலையுதிர்காலத்தில்) வெயில் காலத்தில் ஒரு அழகு பொருந்திய கட்டிலில் படுத்து நித்திரை செய்யும் பாவனைபோலுள்ளது. கட்டிலின கீழ் ஒருவேலைக்காரி அம்மாதுக்கு கதைசொல்லிக்கொண்டும் விசிறிக்கொண்டும், தன் தலையை கட்டிலின்மேல் நீட்டிக்கொண்டுமிருக்கும் பாவனையாக எழுதப்பட்டிருந்தது. இதைப்பார்த்த ஒவ்வொருவரும் வெகு நன்றாக எழுதப்பட்டிருக்கிறதென்றே நினைத்திருப்பார்கள். அந்த வேலைக்காரி அவ்விதமிருந்தது அவளியற்கை சுபாவத்தைக்காண்பித்ததாகவே தோன்றுகிறது.

ராஜாரவி வர்மாவினுடைய குமாரர் மிஸ்டர் ராமவர்மா 'ஒருபையன் ஒரு வெண்மையான சுவற்றின் மேல் சாய்ந்து கொண்டிருப்பதுபோல்', ஒரு படத்தை எழுதியிருந்தார். இவர் இவ்விதம் எழுதியது இதுதான் முதல்தடவையாம். முதற் தடவையாயிருந்த போதிலும் இது வெகு நன்றாகவிருக்கிறதென யாவராலும் மெச்சப்பட்டது, மேலும் "திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஆலயம்" இவரால் வெகு நன்றாகவும் எழுதப்பட்டிருக்கிறது. "விளையும் பயிர் முளையிலே" என்பதற்கேற்ப ரவிவர்மாவினுடைய குமாரர் தமது தகப்பனாரைப்போல் சித்திரம் எழுதுவதில் புத்தியுள்ளவர்களாக விருக்க கேட்பானேன்.

மிஸ்பவல் என்றமாது இரண்டு நேர்த்தியான படங்களை அனுப்பியிருந்தாள். இவைகள் சூரிய வெளிச்சத்தை வெகு நன்றாக விளக்கிக்காட்டக் கூடியதாகவிருந்தன. இவைகளை இம்மாது பரிசுக்காகவென்று குறிப்பிட்டு அனுப்பாததால் பரிசுகொடுக்கப்படவில்லை. அவ்விதம் செய்திருந்தால் வெள்ளிப்பதக்கம் இம்மாதுக்கு கிடைத்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஏனெனில் அவைகளில் சூரியன் உதயமாகும் பொழுதுள்ள வர்ணம், பின்னுட்டுள்ள வர்ணம் முதலியவைகளை வெகு அழகாக எடுத்துக்காட்டி யிருந்தாள்.

மிஸ்சோனுபாய் ஜெஸ்வாலா என்ற மாதும் ஒரு அழகான படம் வரைந்திருந்தாள். இதில் மாதர்கள் சுவாமி தரிசனம் செய்ய தேங்காய் பழம் முதலியவைகளை யெடுத்துக்கொண்டு செல்வதுபோல் வரையப்பட்டிருந்தது. இம்மாது இவ்விதம் எழுத ஆரம்பித்தது இம்மாதின் புத்தியையும், சித்திரம் எழுதவேண்டுமென்ற ஆவலையும் காண்பித்ததென்றே சொல்லலாம்.

இனி நீரிற் கலந்த வர்ணமிட்ட படங்களில் சிலவற்றைப்பற்றி எழுதுவோம். இவைகளில் மிகமுக்கியமானவை மிஸ்ஸஸ் J. N. அட்கின்சன் என்ற மாது எழுதிய படங்கள்தான். இவைகளநேகமாக தேசகாட்சிகளைக் குறித்தவைகளாயிருந்தன. இம்மாது சுமார் 10 படங்களனுப்பியதில் 4 படங்கள் இந்தியர்களுக்கு மிகச்சந்தோஷத்தை உண்டாக்கியிருக்குமென்று நம்புகிறோம். "கோதாவரியில் படகுகள்" என்றதுமிக அழகாகவும் விநோதமாகவுமிருந்தது. ஜலத்தில் மிதந்துகொண்டிருந்த படகின் பாய்மரங்கள் மிக அற்புதமாக தக்க வர்ணங்களால் வரையப்பட்டிருந்தன. பார்ப்பதற்கு வாஸ்தவமான படகுதான் நதியில் செல்லுகின்றதோவென எண்ணவேண்டியிருந்தது. "மத்தியில் பழைய வாசற்படி" என்றதில் இடிந்துபோன சுவர்களும், மண்ணுடன் கற்களும் வெகு நன்றாக காட்டப்பட்டிருந்தன. "ஒரு குடிசையும் இதன் எதிரில் ஒரு கட்டைவண்டிவரும் பாவனைபோன்ற படம் பார்க்க மிக ஆச்சரியமாகத்தானிருந்தது. கடைசியாக "சிறுதேசத்து கிராமத்தில் இராக்காலம்" என்றபடம் மிக ஆச்சரியமாகவும் பற்பல வர்ணங்களால் வரையப்பட்டுமிருந்தது. இம்மாதைப்போல் நமது மாதர்கள் எப்பொழுது சித்திரம் வரைவதில் சமர்த்தராவார்கள்? மிஸ் மெய்ட்லண்ட் என்ற மாது உதகமண்டலத்தின் காட்சியைப்பற்றி மூன்றுபடங்கள் எழுதி யனுப்பியிருந்தார்கள். இவைகளில் மலையிலுள்ள பனி, விருட்சங்கள், வீடுகள், முதலியவைகள் வெகு அழகாக வரையப்பட்டிருந்தன. மேலும் மேகத்தின் வர்ணங்களும் வெகு நன்றாக காட்டப்பட்டிருந்தது.

திருவநந்தபுரத்திலுள்ள சித்திர பாடசாலையிலிருந்து தசாவதாரம் என்ற தந்தத்தால் செய்த சிறிய பொம்மைகளும் வந்திருந்தன. விசாகப்பட்டணத்திலிருந்தும் சந்தனமரத்தாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட அழகான பெட்டிகளும் வந்திருந்தன. சென்னை சித்திர பாடசாலையிலிருந்து சில அழகான பொம்மைகளும், தரைகள் முதலியவைகளும் வந்திருந்தன. பொம்மைகளில்சீமை மண்ணால் செய்யப்பட்டது ஒரு பையன் கோலி ஆடும் பாவனைபோலிருந்தது. இவன் உட்கார்ந்திருந்த அழகும், கைவிரல்களில் கோலியை வைத்திருந்த மாதிரியும், வெகு அழகாக விருந்தன. இன்னும் சிற்சில வேடிக்கைப் பொம்மைகளும், சில காகித புஷ்பங்களும் வந்திருந்தன.

நமது மாதர்கள் நூல், பாசி, இவைகளால் பற்பல விசித்திரமான வேலைகள்செய்து அனுப்பியிருந்தால் இன்னும் நன்றாகவிருந்திருக்கும். இனி அடுத்த வருடத்திலாவது நமது மாதர்கள் அவ்விதம் செய்வார்களென்று நம்புகிறோம்.



# ஆதென்ஸ் டைமன் கதை.

## 3

ஆதென்ஸ் நகரத்தில் டைமன் என்னும் ஒரு பிரபு குபேரனைப்
போல் ஏராளமான செல்வத்துக்கு எஜமானனாயிருந்தபோது,
அளவில்லாத தர்மத்தைச் செய்துவந்தான். ஜாதிபேதமில்லா
மல், ஏழையானாலும், பணக்காரனானாலும் எல்லாருக்கும்
வேண்டிய மட்டும் பணத்தைக் கொடுத்தான்; இல்லாவிட்டால்
அவனது அளவற்ற செல்வம் அவ்வளவு சீக்கிரத்தில் போ
காது. நன்றாகச் சாப்பிடுகிறவர்களுக்கும், வருவோர் போவோர் முதலியவர்
களுக்கும் ஆதென்ஸில் தன் வீட்டில் அன்னமிட்டு வந்தான்.
யாராவது ஒரு கவி ஒரு புதிய நூல் எழுதி அதை டைமனது அபிப்பி
ராயத்துக்காக அவனுக்குச் சாற்றினால் உடனே அக்கவி ஏராளமான பணத்
தைப்பெறுவ தல்லாமல் அன்றுமுதல் அவனுக்குச் சாப்பாடு முதலியன
டைமன் வீட்டிலே தான். சித்திரவேலைக்காரன் எவனாவது தன்னிடத்து
ள்ள சித்திரப்படங்கள் விலைபோகாவிட்டால் அதை டைமன் வீட்டுக்குக்
கொண்டுபோகவேண்டியது தான் தாமதம். எவ்வித ரத்தின வியாபாரிகளும்
மற்ற எவ்வித உயர்ந்த வியாபாரிகளும் டைமன் வீட்டுக்குத் தங்கள் சாமான்
களை யெடுத்துக்கொண்டு போனால், அவைகளை நியாயமான விலைக்கு இரண்டு
மடங்கு விலைக்குக் குறையாமல் விற்று விட்டு தான் வருவார்கள். இவர்கள்
அவன் வீட்டுக்குப் போனவுடன் அச்சாத்துவீக குணமுள்ள பிரபு, இவர்
களை மரியாதை செய்து இருத்தி சாமான்களை வாங்கிக்கொண்டு, பிறகு
அவர்களிடமிருந்து ஏதோ தான் பெரிய உபகாரம் பெற்றவன்போல் அவர்
களை வந்தனம் செய்து அனுப்புவான். இப்படி அவன் வீட்டில், எப்பொழுது
பார்த்தாலும், முகஸ்துதி செய்யும் ஜனங்களால் நிறைந்திருக்கும்.

இவர்களில் அநேகர், கடன் வாங்கிக் கண்டபடி கெட்டவழியிற் செல
வழித்து விட்டு, பிறகுக் கடன் தீர்க்கமுடியாமல் சிறைச்சாலையில் அடை
பட்டுப் பிறகு டைமனது கருணையால் விடுவிக்கப்பட்டவர்கள். இப்படி டை
மனை மொய்க்கும் ஈகளில் ஒருவனாகிய வென்டிடியஸ் என்பவன், டைமனால்
கொஞ்சநாளைக்கு முன்பு தான் ஐந்து பவுன்கள் கொடுத்து விடுவிக்கப்பட்
டவன்.

இப்படியில்லாமல், செல்வவான்கள் கூட டைமனை ஸ்தோத்திரம்
பண்ணி அதினால் லாபமடைவது வழக்கம். தங்களிடம் குதிரை, நாய் முதலி
யன விருந்தால் அவைகளை மிக்க புகழ்ந்து, அதினால் டைமனைக் கேட்கும்படி
செய்து, தாங்கள் அவ்வளவு தாழ்ந்த வஸ்துக்களைக் கொடுக்கும்படியாக
நேரிட்டதற்கு விசனப்படுவதாக நடித்துப் பிறகு அவைகளை டைமனுக்குக்
கொடுத்து, அதன் கிரமமான விலைக்கு நான்கு ஐந்து மடங்கு ஜாஸ்தியாக
வாங்கிக்கொள்வார்கள். ஒருநாள் லூஷியஸ் என்னும் பிரபு, தன்னிடம் இரு
ந்த வெள்ளிக்கடிவாளம் போட்ட நான்கு சங்கு வெள்ளைக்குதிரைகளை, டை

மன் மெச்சினதைப்பார்த்து, அவைகளை அப்படியே டைமன் வீட்டுக்கு
வெகுமதியாக அனுப்பினான். மற்றொரு பிரபுவாகிய லுகல்லஸ் என்பவன்
தன்னிடமிருந்த இரண்டு கொடி நாய்களை டைமன் அவைகளின் உருவத்துக்
கும், வேகத்துக்கும் மெச்சினதைக்கேட்டு, அவனுக்கு இனமாகக் கொடுத்
தான். இவர்களின் வஞ்சனையாகிய யெண்ணத்தை யறியாத டைமன் அவை
களைப் பெற்றுக்கொண்டு, அவற்றின் விலைக்குப் பதின்மடங்கு அதிகமாய்
விலைபொறும் நகைகளைப் பதில் இனமாகக் கொடுத்தான்.

டைமன் இப்படித் தனது செல்வத்தை, யோசனையில்லாமல் செலவழி
த்துவர, அச்செல்வத்துக்கும் ஒரு யெல்லை யுள்ளதால் வரவரக் குறைந்து
கொண்டே வந்தது. இப்படி ஏறக்குறைய ஆஸ்தி முழுதும் செலவழிந்து
போவதைப் பார்த்திருக்கும் டைமனது காரியஸ்தனாகிய பிளாவியஸ் அடிக்கடி
தன் எஜமானனிடத்தில் வந்து அவன் செல்வம் மிகக்குறைந்து போய்விட்
டதென்றும், இனிமேலாவது ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்றும் பல
முறை வேண்டிக்கொண்டும், டைமன் காதில் இவன் வார்த்தைகள் ஏறவேதே
யில்லை. இவன் இவற்றைப்பற்றிச் சொல்ல ஆரம்பித்தவுடன், டைமன் வேறு
ஏதாவதொரு விஷயத்தைப்பற்றிப் பேசி அவ்விஷயத்தை மாற்றி விடுவான்.

இப்படியிருக்க, டைமன் தனது காரியஸ்தன் பிளாவியஸ்ஸின் வார்த்தை
களை கொஞ்சங் கேட்க வேண்டிய காலம் வந்தது. செலவுக்குப்பணம் இல்
லாமையால் பிளாவியஸ்ஸைக் கூப்பிட்டு தனது ஆஸ்தியில் சிறிது பாகத்தை
விற்கும்படி கட்டளையிட்டான். அவனது நிலத்தில அநேகம் பாகம் முன்னா
லேயே விற்கப்பட்டதென்றும், இப்பொழுதிருக்கும் ஆஸ்தி முழுவதையும்
விற்பினும் அவன் பட்டிருக்கும் கடனில் பாதிக்குக்கூட போதாதென்றும்
பிளாவியஸ் சொல்ல, டைமன் திடுக்கிட்டு, 'ஐயோ! எனக்கு ஏராளமான
ஆஸ்தியிருந்ததே' என்றான். அதற்கு பிளாவியஸ் "தேவரீர், பூமி முழுதும்
தங்களுடையதா யிருந்தாலும், ஒரே நிமிஷத்தில் எல்லாவற்றையும் பிறருக்
குக் கொடுத்துச் செலவழித்து விடலாமே" யென்றான். டைமன் "ஆயினும்
நான் என் திரவியத்தைக் கெட்டவழியிற் செலவழிக்கவில்லை. என் சிநேகி
தர்களின் நன்மைக்காகவே செலவழித்திருக்கிறேன்" என்று தனக்குள்
தானே சமாதானம் செய்துகொண்டு இத்தனை நேசர்கள் இருக்கும்போது
தனக்கு என்ன குறைச்சலென்று எண்ணி பிளாவியஸ்ஸுக்கு ஆறுதல் சொ
ல்லிவிட்டு, தனக்குப் பிராண சிநேகிதர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்த
லூஷியஸ், லுகல்லஸ், ஸெம்ப்ரோனியஸ், என்பவரிடம் ஐம்பது வராகன்
கடன் வாங்கி வரும்படி மூன்று வேலையாட்களையும், தான் சொஞ்சநாளைக்கு
முன் ஐந்து வராகன் கொடுத்து விடுவித்த வெண்டிடியஸ் என்பனிடம் தான்
கொடுத்த ஐந்து வராகனை வாங்கி வரும்படி மற்றொரு வேலைக்காரனையும்
உடனே அனுப்பினான்.

லுகல்லஸ் என்னும் இழிகுணமுடைய பிரபு டைமனது வேலைக்காரன்
தன்னைப்பணம் கேட்க வந்த தினத்துக்கு முதல் நாள் ராத்திரி, டைமன் தன
க்கு ஒரு பெரிய வெள்ளிப்பாத்திரத்தை வெகுமதியாகக் கொடுத்ததாகக்
கனவு கண்டான். மறுநாள் டைமனது வேலைக்காரன் வந்திருக்கிறானென்று
கேள்விப்பட்டவுடன், தனக்கு அவ்வெள்ளிப் பாத்திரத்தை தான் அனுப்பியி
ருக்கிறானென்று எண்ணிக்கொண்டிருந்தான். பணத்துக்காக வந்திருக்கிறா
னென்பதைக் கேட்டவுடன், டைமனோடிருந்த வெளிச் சிநேகிதம் நீரின்



குமிழிபோல் மறைந்து போய், வந்த வேலைக்காரனுக்கு ஏதோ கொஞ்சம்
பணம் லஞ்சங்கொடுத்து, தான் வீட்டில் இல்லை யென்று தன் எஜமானிடம்
சொல்லி விடும்படி அனுப்பிவிட்டான்.

லூஷியஸ் என்னும் பிரபுவினிடம் போன வேலைக்காரனும் அப்படியே
சும்மா திரும்பி வரும்படியாயிற்று. டைமன் சோற்றை ஏராளமாகச் சாப்பி
ட்ட அக்கொடிய பிரபு, தான் அதற்கு முதல் நாள் தான் ஏதோ ஒருமிக்க
விலையுயர்ந்த வஸ்துவை தன்னிடத்திருந்த பணமெல்லாம் போட்டு வாங்கின
தாகப் பொய்சொல்லி அவ்வேலைக்காரனை அனுப்பினான்.

பிறகு ஸெம்ப்ரோனியஸ் என்பவனும் தன்னிடம் பணம் இல்லை
யென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். வெண்டிடியஸ் என்பவனும் தான்
டைமனால் மீட்கப்பட்டுப், பிறகுச் செல்வவானானபோதிலும் தன்னிடம் பண
மில்லை யென்றான்.

டைமன் நல்ல ஸ்திதியிலிருக்கும்போது எல்லோரும் அவன் வீட்
டுக்கு அடிக்கடிவந்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவன் கஷ்டதி
சையில் ஒருவரும் வருவதில்லை. முன்பு டைமனை மிக்க தர்மிஷ்டனென்
றும், கொடுப்பதில் கர்ணனுக்கு நிகரானவனென்றும் ஸ்தோத்திரம்செய்த
நாக்குகளே, இப்பொழுது, அவன் அவ்வளவு தாராளமாய் இருந்திருக்கக்
கூடாதென்றும், ஆகையால்தான் அவன் கடன்காரனாய் விட்டானென்றும்
அவனை நிந்திக்கத் தலைப்பட்டன. பொறுமை யில்லாதவும், கல் நெஞ்சுடை
யவுமான கடன்காரர்கள் டைமன் வீட்டைச் சுற்றிக்கொண்டு கண்டபடி
டைமனை அவமானமாகப்பேசிப் பணத்தைக் கேட்க, டைமன் வெளியில்
வரக்கூடாமல் சிறைச்சாலைபோல ஆய்விட்ட தன் வீட்டிற்குள்ளேயே யிருந்
தான்.

இப்படியிருக்க டைமன் ஒருநாள் திடீரென்று ஒரு பெரிய விருந்துசெ
ய்வதாகப் பிரசுரஞ்செய்து, வழக்கம்போல் லூஷியஸ், லுகல்லஸ் முதலிய
பிரபுக்களையும் மற்ற தனதனவான்களையும் விருந்துண்ண அழைத்தான்.
லூஷியஸ் முதலிய பிரபுக்கள், டைமன் தன்மேல் இவர்களுக்குள்ள நட்பின்
வலிமையைப் பரிசோதிக்க இப்படி யேழையாய்விட்டதுபோல் நடித்துப்
பணம் கடன்கேட்டானென்று எண்ணி, தாங்கள் முன்னாலே பணங்கொடு
த்திருந்தால் இப்பொழுது தாராளமாய்ப்போய் விருந்துண்டு வரலாமேயெ
ன்று விசனித்தார்கள். ஆயினும் தைரியத்தோடு எல்லாரும் டைமன் வீட்
டுக்குச் சென்றார்கள்.

இவர்கள் வந்தவுடன் டைமன் வீட்டில் வழக்கம்போல் அநேக வாத்
தியங்கள் கோஷிக்க, டைமன் இவர்களை சாப்பாட்டுக்கு உட்காரவைத்து ஒவ்
வொருவனுக்கெதிரில் ஒவ்வொரு மூடின கிண்ணியை வைக்கும்படி செய்
தான். வந்தவர்கள் இவைகளை யெல்லாம் பார்த்து, "முதல் நாள் கடன்கா
ரர்களால் தொந்தரவு செய்யப்பட்ட இவனுக்கு இன்றை இப்படி விருந்து
செய்விக்க பணம் ஏது". என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்
தில் இவர்களுக்கு உணவு பரிமாறியிருக்கும் கிண்ணிகளின் மூடிகள் திறக்
கப்பட்டன. திறக்கவே! முன்போல் பஞ்சபட்சிய பரமான்னத்துடன் உண்
ணலாமென்று நாக்கைத் நீட்டிக்கொண்டு வந்திருக்கும் பிரபுக்கள், தங்கள்
தங்கள் கிண்ணங்களில் சிறிது புகையும், வெந்நீரும் இருக்கக்கண்டுப் பிர
மித்திருக்க, டைமன் உரக்க "ஏ நன்றியில்லாத நாய்களே! எல்லாவற்றை

யும் வாழி உண்ணுங்கள், உங்கள் சிநேகிதம் இந்த வென்னீரும் புகையுமேபோலிருக்கிறது" என்றுசொல்லி கிண்ணங்களிலுள்ள வெந்நீரை, அங்கு வந்திருக்கும் எல்லா ஸ்திரீ புருஷர்களின்மேல் வாரி யிறைக்க, அவர்கள் தலைகால் தெரியாமல் அவமானப்பட்டு எழுந்து ஓடும்போது அவர்களின்மேல் அக்கிண்ணங்களை யெறிந்து "ஏ சிரித்துக் குடியைக் கெடுக்கும் வஞ்சகர்களே! சாப்பாட்டுச் சிநேகிதர்களே! சமயத்தில் கைவிடும் துர்ப்பாக்கியர்களே!" என்று வைதான். அவர்களில் சிலர் தங்கள் வஸ்திரங்களைப் போட்டும், சிலர் நகைகளை யிழந்தும், எப்படியாவது இந்த அவமானத்துக்குத் தப்பினாற் போதுமென்று ஓடிப்போனார்கள்.

இப்படி டைமன் கடைசியாக விருந்துசெய்து முடிந்தவுடன், "ஆதென்ஸ் நகரத்திலுள்ள அந்தத் துரோகிகள் தங்கள் வீடுகள் இடிந்து தலைமேல் விழுந்து நாசமாய்ப் போய்விடவேண்டுமென்றும், ஆதென்ஸ் நகரமே பூமிக்குள் ஆழ்ந்து போய்விடவேண்டுமென்றும்" சபித்து, அந்நகரத்தை வெறுத்துக் காடுசென்று, தன் உடையை யவிழ்த்தெறிந்து மிருகங்கள்போல் கிழங்கு முதலியவற்றைத் தின்று தண்ணீர்குடித்து ஒருகுகையில் தன் காலத்தைச் செலுத்தினான்.

டைமன் ஒரு நாள் தன் உணவுக்காக கிழங்கு வெட்டிக்கொண்டிருக்கும்போது, தன் மண்வெட்டி ஏதோவொரு கெட்டியான வஸ்துவின்மேல் தாக்க அது என்னவென்று டைமன் பார்க்கையில், யாரோ புதைத்து வைத்திருந்த ஒரு பெரிய தங்கக்கட்டியா யிருந்தது. டைமனது குணம்முன் போலவிருப்பின் இப்பொழுதும் வீடு முதலியன வாங்கி, லூஷியஸ் முதலிய சிநேகிதர்களைப் பெறுவதற்கு இத்தங்கக்கட்டிபோதும். ஆனால் டைமனுக்கு அது இஷ்டமில்லை. அச்சமயத்தில் தன் குகைக்குச் சமீபத்தில் போய்க்கொண்டிருக்கும் ஒரு சேனையைப்பார்த்து, தன் திரவியத்தை இவர்களின் விஷயத்தில் செலவிடலாமென்று நினைத்து அச்சேனாதிபதியைக் கூப்பிட்டு, தன் திரவியத்தை அச்சேனைக்குத் தருவதாயும் அதற்காக அவர்கள் செய்யவேண்டிய உதவியென்னவெனில், ஆதென்ஸ் நகரத்தின் வீடுகள் முதலியவற்றை யிடித்து, ஜனங்கள் எல்லாரையுங்கொன்று, அந்நகரத்தை தரையோடுதரையாய் ஆக்கிவிடவேண்டுமென்றுஞ் சொல்ல, அவர்கள் அதற்குச் சம்மதித்தார்கள். அவ்விடத்துள்ள கிழவர்கள் குழந்தைகளைக்கூடக் கொல்லாமல் விடவேண்டாமென்றான். ஏனெனில் கிழவர்கள் துரோகிகளென்றும், குழந்தைகள் இனிமேல் துரோகிகளாய் விடுவார்களென்றுஞ் சொன்னான். டைமனுக்கு ஆதென்ஸ்மேல் உள்ள அகங்காரம் அப்படியிருந்தது.

இந்த அனாதியான ஸ்திதியில் இருக்கும்போது டைமன் ஒரு நாள் தன் குகையின் வாசலில் யாரோ ஒரு கிழவன் நிற்பதைக் கண்டான். இவன் பிளாவியஸ் என்னும் டைமனது பழைய காரியஸ்தன். இவன் தன் எஜமானன் காட்டில் மிருகங்களோடு சஞ்சாரஞ் செய்கிறானென்பதைக் கேட்டுப்பரிதபித்துத் தன்னால் ஆனமட்டும் அவனுக்கு ஏதாவது உதவி செய்யலாம் என்றுவந்து டைமனைப் பார்த்தவுடன், ஒன்றுந் தோன்றாமல் பிரமித்து ஓர் கட்டைபோல் நின்றான். பிறகு கண்ணீர் தளும்ப ஏதோ சில வார்த்தைகளைச் சொன்னவுடன், டைமன் இவன் யாரோ தனக்கு கெடுதிசெய்ய வந்திருக்கிறானென்று எண்ணிப் பயந்தவுடன் பிளாவியஸ் தான் டைமனது பழைய காரியஸ்தனென்று பலவிதமாய்ச் சொன்னபிறகு, டைமன்



உலகத்தில் நல்லவன் பிளாவியஸ் ஒருவனேயென்று ஒப்புக்கொண்டானாயினும், பிளாவியஸ்ஸை சீக்கிரம் போய்வரும்படி கேட்டுக்கொண்டான். ஏனெனின் மனிதனது உருவத்தையே முற்றிலும் டைமன் வெறுத்தவனாகையால், பிளாவியஸ்ஸின் மனது நல்லதாயிருந்தும், அவனது உருவத்தைப்பார்க்கச் சகிக்கவில்லை.

சில நாளைக்குப்பின்பு டைமனது கோரிக்கைப்படி படைகள் ஆதென்ஸை முற்றுகைப்போட்டு நாசம்செய்ய எத்தனிக்கையில், அந்நகரத்திலுள்ள சில கௌரவஸ்தர்களை டைமனிடம் அனுப்பினார்கள். அவர்கள் டைமனிடம்வந்து, அநேகமுறை எதிரிகளை நாசஞ்செய்து ஆதென்ஸைக்காப்பாற்றினதுபோல் இப்பொழுதும் தயைகூர்ந்துவந்து யுத்தஞ்செய்து ஆதென்ஸையும், அதின் ஜனங்களையும் காப்பாற்றவேண்டுமென்றும் அதற்காக,ஜனங்கள் தங்கள் செல்வம் கௌரவம் முதலிய எல்லாவற்றையும் டைமனுக்குக்கொடுக்க தயாராயிருப்பதாகவுஞ் சொல்லிப் பலமுறை வேண்டிக்கொண்டும் டைமன் சம்மதிக்காமல் எல்லாரும் இறப்பின் தனக்கு மிக்க சந்தோஷமென்று உரைத்தான். டைமன், தனக்கு ஆதென்ஸின் உள்ள மிக்க கௌரவஸ்தரிடம்விட, அவர்கள் கழுத்தை யறுக்கும் கத்தியினிடம் மிக்க மரியாதையுண்டென்றான். இப்படிச் சிலகாலமிருக்க, ஒருநாள் ஒரு கிழ சேனைவீரன், டைமன் திரியும் காட்டுக்குச் சிறிது தூரமுள்ள கடற்கரையோரமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது, அவ்விடம் ஒரு சவக்குழியைக் கண்டு அதின்மேல் "டைமனது சவக்குழி யென்றும், அவன் இறக்கும்வரையில் மனிதர்களை வெறுத்தவனென்றும், இறக்கும்போது மனிதர்களுக்கு ஒரு பெருவாரிவியாதி வரவேண்டுமென்று" சபித்ததாகவும் எழுதியிருந்ததைப்பார்த்து டைமனது கதியைப்பற்றி மிக்கப்பிரலாபித்தான்.

இ. சுப்பிரமணியம் பி. ஏ.,

## புத்தகவரவு.

### ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்.

1. இது சுவாமி இராமகிருஷ்ண பரஹம்சருடைய திவ்ய சரித்திரம். இது மஹேச குமாரசர்மாவால் எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது. ஒரு பிராமண மாது யோகாப்பியாசஞ் செய்துவந்ததாகவும் இம்மாது சுவாமியாருக்கு உபதேசம் செய்ததாகவும் தெரிகிறது. இதனால் நமது மாதர்கள் உயர்ந்த கல்வியில் பாண்டித்திய முள்ளவர்களாகவே யிருந்தார்களெனத்தெரிகிறது. இவர் மகா யோகியெனவும் சத்தியவந்தரெனவும், மகா பக்திமானெனவும் சொல்லப்படுகிறது. இவ்வித புஸ்தகம் நம்மவர் கையிலிருக்கவேண்டிய தவசியமென எண்ணுகிறோம்.

---

2. இந்தியன் ரிவியூ என்ற ஆங்கிலப்பத்திரிகை மிஸ்டர் ஜி. ஏ. நடேச ஐயரால் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஜனவரிமாசப் பத்திரிகையில் பற்பல முக்கியமான விஷயங்களடங்கியுள. இவைகளில் மைத்திரேயி என்ற மாதின் திவ்விய சரித்திரம் மிக நன்றாக விருக்கின்றது. இதன் பத்திராசிரியரான மிஸ்டர் ஜி. ஏ. நடேச ஐயரவர்கள் இதைத் தமிழில் மொழிபெயர்த்து புஸ்தகரூபமாக அச்சிட்டால் நமது மாதர்களுக்கு மிக உபயோகமாக விருக்குமென்று நம்புகிறோம்.

---

# NEWS & NOTES.

## சமாசாரக் குறிப்பு.

[நாலடியார்:—அடுத்த பத்திரிகையில் நமது அபிப்பிராயம் பிரசுரிக்கப்படும்.]

***

மதுரையில் அமெரிக்கன் மிஷனைச்சேர்ந்தவர்கள் பெண்களுக்கு ஒரு புதிய ஐஸ்கூல் ஸ்தாபித்திருக்கிறார்களாம்.

***

ஜப்பானில் இரண்டு வருடங்களுக்குமுன் ஸ்தாபிக்கப்பட்ட மாதர்கள் படிக்கும காலேஜியிலிப்பொழுது 800 மாதர்களிருக்கிறார்களாம்.

***

லோயர்சகன்டரி பரிக்ஷைக்கு செருமாசாதியைச்சேர்ந்த ஒரு பெண் சென்றதில் அப்பரிக்ஷையில் தேறியிருப்பதைக் குறித்துமிகச் சந்தோஷப்படுகிறோம்.

***

சென்ற பிப்ருவரிமீ 12உ கல்கட்டாவில் கூடிய சர்வ கலாசபையில் 700 பேருக்கு வித்தியாப்பட்டங்கள் அளிக்கப்பட்டனவாம்.; அவர்களில் மூவர் பெண்பாலராம். ஒரு ஸ்திரீ எம். ஏ. யும் மற்றிருவர் பி. ஏ. யுமாம்.

***

நமது பத்திரிகையின் சாதாரண பதிப்புக்கு வருஷம் சந்தா ரூ. 1—அ. 12—என்பது யாவருக்கும் தெரியும். இப்பொழுது திக்பேப்பர் பதிப்புக்கு ரூ. 2—8. ஆக ஏற்படுத்தியிருக்கிறோம். திக்பேப்பருள்ள பத்திரிகை வேண்டுவோர் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

***

இவ்வருஷம் மார்ச்சு மாதம் கலசமாலில் 18உ யன்று கூடும் கான்வோகேஷன் சமயத்தில் ரெவரண்டு கேனன்ஸேல் என்பவரை உபந்நியாசஞ்செய்யும்படி நமது காருண்ணிய கவர்னர் கேட்டதற்கு இவரு மிசைந்திருக்கிறார்.

***

உஷ்ணமுள்ள நாடுகளில் பேரீந்துமரங்க ளதிகம்; ஒவ்வொரு மரத்திலும் 250 முதல 400 ராத்தல்வரை பிரதி வருஷத்திலும் பேரீச்சம் பழங்கள் அகப்படுமாம். இம்மாதிரியாய் 70 வருஷங்கள்வரை பேரீச்ச மரங்கள் கொடுக்கக்கூடியனவென்று ஒருவர் கூறுகிறார்.

***

மார்ச்சுமீ 2உ பிளாக்டவுன் பெண்பள்ளிக்கூடத்துச் சிறுமிகளுக்கு வெகுமதிகள் கொடுக்கப்பட்டன. அச்சமயம் மிஸ்ஸஸ்பென்ஸன் அக்கிராசனம் வகித்து இந்திய ஸ்திரீகளுக்கு கல்வி அவசியமென்பதை வற்புறுத்திப் பேசினார்கள். அவர் பிரசங்கசாரம் அடுத்த பத்திரிகையில்வரும்.



விநோதமும், வேடிக்கையும், கொந்தளிப்பும், குதூஹலமும், நவீன நாடகங்களும் புராதனக் கட்டடங்களும், ஆச்சரியமும் அற்புதமும் நிறைந்திருக்கும் லண்டன் நகரத்தில் எதுதான் நடந்திராது. 70 வயதுள்ள வயோதியர் ஒருவர் தாம் பிறந்த விட்டையும் அவ்விட்டைச் சுற்றிலுமுள்ள தோட்டத்தையும் விட்டுத் தாம் பிறந்த நாள்முதலாய் வெளியே சென்றதில்லையென்று கூறுகிறாராம. இதனுண்மையை யார் அறிவர்?

***

திருவநந்தபுரம் மகாராஜா அரண்மனையில் ஒரு பெண்பாடசாலையிருக்கிறது. இதில் 99 பிராமணப்பெண்களும், 168, சூத்திரப் பெண்களும், 9-கிறிஸ்தவப் பெண்களும் படித்துவருகிறார்களாம். மிஸ் பிளாண்ட்போர்ட் என்ற மாது இவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்துவருகிறார். ஒரே ஒரு பிராமணப்பெண்தான் மேல்வகுப்பில் படித்து வருகிறாளாம். மீதியுள்ளவர்கள் ப்ரைமரிவகுப்பி லிருக்கிறார்களாம். நாளாவர்த்தியில் இதர பிராமணப்பெண்களும் மேல் வகுப்புகளிலும் படித்து விருத்தியடைவார்களென்று நம்புகிறோம்.

***


# DR. LOGAN'S

## RELIABLE REMEDIES,

டாக்டர் லோகன் அவர்களின் பிரசித்தமடைந்த கேசமோஹன தைலமென்னும் சுருங்கார சுகந்த கூந்தல்வளர் தைலம்.—இத்தைலமானது அனேக வனமூலிகைகளால், செய்யப்பட்டவை. இதை தினந்தோறும் ஸ்திரீ புருஷர்கள் இதர எண்ணெய்களுக்கு பதிலாக கூந்தலினுடைய உட்புறத்தில் இத்தைலத்தை தடவிவர சுண்டுகளை போக்கி சிரோஉஷ்ணத்தை தணித்து சிரோதுவாரங்களை மிருதுவாக்கி மயிரை நீளமாயும் செழிப்பாயும் அடர்த்தியாயும் அழகாயும் மினுமினுப்பாயும் கருப்பாயும் வளரச்செய்யும். தவிரவும் கண்ணெரிச்சல், சகலவிதமான கண்ணோய்களையும் போக்கடிக்கும். இதுவிஷயத்தில் விசேஷமாய் எடுத்தோதுவதில் அசாத்தியமானதால், ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவரும் இந்த அருமையான தைலத்தை உபயோகித்துவா உண்மை விளங்கும். புட்டி 1-க்கு விலை ரூபா 1—0—0.

டாக்டர் லோகன் அவர்களின் பிரேயின் அண்ட் நேர்வைன் டானிக்.
புட்டி 1-க்கு விலை ரூபா. 1—8—0.

டாக்டர் லோகன் அவர்களின் சுரதிராவகமும், மாத்திரையும்.
ட்ராப்ஸ் புட்டி 1-க்கு விலை ரூபா. 0—12—0.
மாத்திரை புட்டி 1-க்கு விலை ரூபா. 0— 8—0.

டாக்டர் லோகன் அவர்களின் படை சம்ஹாரி.
புட்டி 1-க்கு விலை ரூபா. 0—4—0.

டாக்டர் லோகன் அவர்களின் சுகந்த பல்பொடி.
டப்பி 1-க்கு விலை ரூபா. 0—4—0.

**Dr. T. LOGAN,**
SOLE PROPRIETOR & MANUFACTURER,
AYURVEDIC PHARMACY
*Pycroft's Road, Tripilicane, Madras.*

# நமது சந்தாதாரர்களுக்கு அறிக்கை.

புதியவருஷம் பிறந்து 3 மாதங்கள் ஆய்விட்டன இன்னும் நமதுசந்தாதாரர்களில் சிலர் நாளது 1904-ம் ௵த்திய சந்தாவையும் இதற்கு முந்திய சந்தா பாக்கியையும் அனுப்பாமல் இருக்கிறார்கள். இந்த சஞ்சிகை கிடைத்தவுடனாவது தயவுசெய்து அனுப்பும்படியாய் கேட்டுக்கொள்வதுடன் பத்திரிகையையும் அபிமானித்து நடத்தி வருவார்களென்று நம்புகிறோம். மேல்கண்டபடி சந்தா அனுப்பாதவர்களுக்கு அடுத்த எப்ரல்௴ சஞ்சிகை வி. பி. யில் அனுப்பப்படும். பெற்றுக்கொள்ளும்படியாய் கேட்டுக்கொள்கிறேன். நமது சந்தாதாரர்கள் தகுந்த கனவான்களாதலால் இது ஓர் பெரிதல்ல. மேல் விலாசம் மாறும்பொழுது உடனே தெரியப்படுத்தவேண்டும்.

புஸ்தகங்கள், பத்திரிகைகள், நிரூபங்கள் முதலியவைகள் பத்திராதிபர் பேருக்கு அனுப்பப்படவேண்டும். மணியார்டர் ஆபீஸ் விஷயமான கடிதங்கள் முதலியவைகள் என் பேருக்கே அனுப்பப்படவேண்டும்.

பத்திரிகை சரியாய்க் கிடைக்காவிட்டால் உடனே எனக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

All remittances and communications regarding advertisements, &c., should be forwarded to P. Vaithynatha Iyer Manager, Tamil Zenana Magazine Office, Veeraragava Moodaly, St. Triplicane.

The Manager requests that Subscribers to the Tamil Zenana Magazine who do not receive it regularly will kindly bring the fact to his notice immediately.

All contributions, books for review, &c. should be addressed, to C. S. Ramaswamy Iyer, Editor, Tamil Zenana Magazine Triplicane.

திருவல்லிக்கேணி
13—2—04.

ஸ்ரீ பி. வைத்தியநாத ஐயர்,
மானேஜர், மாதர் மனோரஞ்சனி ஆபீஸ்,
வீரராகவமுதலி தெரு, திருவல்லிக்கேணி.

## மாதர் மனோரஞ்சினி சந்தா விபரம்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| வருட சந்தா தபால் சார்ஜ் உள்பட வெளியூர் உள்ளூராருக்கு... | 1-12—0 |
| 6 மாதத்திற்கு ... ... ... ... ... | 1—0—0 |
| தனிப்பிரதி ... ... ... ... ... | 0—2—6 |
| மேல் நாட்டாருக்கு ... ... ... ... | 2—4—0 |
| இக் பேபர் வருட சந்தா ... ... ... ... | 2—8—0 |

முன் பணம் அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

Printed at the Ripon Press Madras & Published by the Proprietor,
C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

REGISTERED
23 JUN 1904
MADRAS

# மாதர் மனோரஞ்சினி.

“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்”—ஔவையார்.

Vol VI. } Madras: April 1904. { No. 4.
புத்தகம் ௬. } சென்னப்பட்டணம்: 1904 எப்ரல்௴. { இல. 4.

## ஆம்தில் பெருமாட்டியின் தாதிகளின் சாலை.

நமது இராஜதானியில் பல தாதித்தொழில் செய்பவர்களுக்கு பழக்கமும், கல்வியறிவும், சூட்சுமபுத்தியு மிருக்கவேண்டும். இவ்விதமில்லாத தாதிகளின் குறையை நீக்க நமது காருண்ணிய ஆம்தில் பெருமாட்டி அவர்கள் ஒரு சாலை ஏற்படுத்த உத்தேசித்து, அதன்கருத்தை பின் வருமாறு விவரித்து எழுதியிருக்கிறார்கள்:—

“இவ்விராஜதானியில் கைபழகின தாதிகள் கிடைப்பது சமுசயமாயிருப்பதனால் காரியங்களை நடத்திப்பார்த்து விஷயங்களைச் சீர்ப்படுத்த சென்னப்பட்டணத்தில் ஒரு வித்தியாசாலை ஏற்படுத்த ஆவல்கொண்டிருக்கிறேன். இது விஷயத்தைப்பற்றி பேசும்படி சென்னையிலிருக்கும் வைத்தியர்களையெல்லாம் மார்ச்சு௴ 3௳ கவர்ன்மெண்டு மாளிகைக்கு வரும்படி கேட்டுக்கொண்டேன். கடைசியாக சென்னப்பட்டணத்தில் தாதிகளைப் பழக்கும் சாலை ஒன்று ஏற்படுத்தி, அதற்கு ஆங்கில தலைவி ஒருத்தியை கண்காணியாக ஏற்படுத்தி, அவள் கையின்கீழ் கைதேர்ந்த தாதிகளையும் ஏற்படுத்தி நியாயமான சம்பளத்துக்கு இராஜதானியிலுள்ள இடங்களுக்கு தாதிகளை அனுப்பவேண்டியதென்று தீர்மானித்தோம். இதுவுமல்லாமல் மேற்படி சாலையில் சென்னையிலுள்ள பழகின தாதிகளின் டாப்பு ஒன்று வைக்கவேண்டியதென்றும் உத்தேசித்தோம். இந்தக் கூட்டத்தில் இரண்டு வைத்தியர்கள், ஒரு வாரத்தில் தங்களுக்குள் ஏழு மருத்துவச்சிகள் வேண்டியிருந்ததென்றும் ஒருத்தி கூட அகப்படவில்லையென்றும் சொன்னார்கள். வெளியூர்களில் நல்ல தாதிகள் அகப்படாமையினால் அபாயமான நோய்கள் அநேகம் உண்டான திருஷ்டாந்தங்களை அநேகர் எடுத்துக்காட்டுவார்கள்.

இந்தச் சாலை ஏற்படுத்திய கொஞ்சகாலையில் அதின் செலவுக்கும் வரவுக்கும் சரிப்பட்டுப் போகுமாயினும், இப்பொழுது அதை சரியாய் ஏற்படு

த்தி அது நிலைபெற உத்திரவாதம் செய்ய 7,000 ரூபாய் பிடிக்கிறது. கூடிய சீக்கிரத்தில் டி சாலையை ஏற்படுத்த வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. தாதிகளின் வேலைக்காக கட்டணத்தின் ஜாபிதா ஒன்று ஏற்படுத்தப்படும். தாதிகளுக்கு மேற்படி சாலையிலிருந்து சம்பளம் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். இதற்காக சென்னையின் முக்கியமான வைத்தியர்கள் ஒரு கமிட்டியாக ஏற்படுத்தப்படுவார்கள். அந்த சபைக்கு யான் அக்கிராஸனாதிபதியாக இருக்கவும் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் இந்த நோக்கத்திற்காக கொடுக்கும் நன்கொடைகளையெல்லாம் மிகவும் களிப்புடன் ஏற்றுக்கொள்ள சித்தமாயிருக்கிறேன். அந்த தொகைகளை (Messrs. Arbuthnot) அர்பத்நட் கம்பெனியார் வாங்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்".

இவ்விதம் நமது மாட்சிமை தங்கிய ஆம்தில் பெருமாட்டி அவர்கள் ஒரு சாலை ஏற்படுத்த எண்ணியது நமது அதிர்ஷ்டமென்றே சொல்லலாம். இப்பொழுது இச்சாலையை ஸ்தாபித்து நடத்த ரூபாய் 7000-த்தையும் கிருஷ்ணா ஜில்லா நூஸ் வீடைச் சேர்ந்த சுபிலேசுரபுரம் ஜமீன்தார் ஸ்ரீராஜ வேங்கடரங்கய்ய அப்பாராவுகாரு கொடுத்து உபகரித்திருக்கிறதாகக் கேட்டு மிக சந்தோஷப்படுகிறோம்.

இச்சாலைக்கு இன்னும் நமது இந்திய மாதர்கள் பொருள் உதவி செய்ய முன் வருவார்களென்று நம்புகிறோம். இவ்வித உதவி புரிந்து இச்சாலையை விருத்திக்குக்கொண்டு வந்தால் இந்திய மாதர்களுக்கு தாதி வேலை செய்ய தக்க ஸ்திரீகள் மருத்துவ சாஸ்திரம் கற்று உதவி செய்யலாம். அப்பொழுது அநேகர் சௌக்கியத்தை யடைவார்கள், இப்பொழுதுள்ள மாதிரி கஷ்டப்பட வேண்டியதில்லை. ஆனதுபற்றி இச்சாலை நீடித்திருக்கும்படியும் இந்திய மாதர்களின் மீது தயை கூர்ந்து இச்சாலையை மிக ஊக்கத்துடனும் பச்சாதாபத்துடனும் ஸ்தாபிக்க முன் வந்த எச். இ. ஆம்தில் பெருமாட்டி அவர்களுக்கு தீர்க்க ஆயுளையும் அளிக்கும்படி ஈசனைப்பிரார்த்திக்கின்றோம்.

## *பெண்களின் புத்திகூர்மை.

ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் தேசத்துப் பெண்களின் புத்திகூர்மையைப் பற்றி அதிகமாக வியந்து கூறி இருக்கின்றார்கள். கீழ்தேசத்தார் இப்பொழுது விதிக்கு விலக்கல்ல. சுமார் இரண்டாயிரம் வருஷங்கட்குமுன் எழுதப்பட்ட 'மிருச்சகடி' என்னும் சமஸ்கிருத நாடகத்தில் பெண்களின் புத்தி கூர்மையைப்பற்றி நன்றாக மதித்துப் பேசப்பட்டிருக்கின்றது. அந்நூலாசிரியர் "பெண்கள் இயற்கையாகவே புத்தியுடையவர்கள். ஆண்கள் சாஸ்திராதிகளைப் படிக்கும் செயற்கையால்தான் புத்தியுடையவர்கள்" என்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். மகாகவியாகிய காளிதாசரும் சகுந்தலா என்னும் நாடகத்தில் "பெண் பக்ஷிகள் இயற்கை யறிவையுடையன" எனச் சொல்லுகின்றார்; ஆகவே பெண்கள் இயற்கையாகவே அறிவுடையவர்கள் என்பது வெள்ளிடை மலைபோலத் தெள்ளிதிற் புலப்படுகின்றது. நமது இதிகாசாதிகளை நாம் கவனித்துப் பார்க்கும்போது அவைகளில் பெண்கள் ஆண்களுக்கு சமயோசிதமாக புத்தி கூறுவதைக் காணலாம். அநுசூயை தன் கணவரைக் காட்டிலும் புத்தியிற் சிறந்தவள். வசிஷ்டர் பெயரைவிட அவர் மனைவியாகிய அருந்ததியின் பெயரே உலகப் பிரசித்தமாக இருக்கின்றது. குரூர சித்தத்தையுடைய கைகேயியுங்கூட, தசரதன் போர்க்களத்தி லாதரவற்று வீழ்ந்தபோது, அவருக்கு ஆறுதலளித்து தேறச்செய்தனள். தனது பிரிய சகியாகிய இந்துமதியின் பிரிவாற்றாமையைக் குறித்து அஜன் புலம்பும்போது அவள் தனக்குப் பலமுறைகளிலும் மந்திரியைப்போல் உதவிவந்தாள் எனக் குறிக்கின்றார். இன்னும் இவைபோல ஆயிர ஆயிரம் உதாரணங்கள் வேண்டுமானாலும் கொடுக்கலாம். அவைகள் எல்லாவற்றின் மொத்தக்கருத்து என்னவென்றால் மனிதர்கள் ஆபத்துக் காலங்களில் தங்கள் புத்தியைவிட தங்கள் மனைவிமார்களின் புத்தியே சிறந்ததெனக் கண்டதே. இத்தகைய பெண்கள் எல்லாம் மிகச் சிரேஷ்டமானவர்களே. இதனால் நாம் அறிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் பண்டைக்காலங்களில் நமது பெண்களுக்கு நல்ல கல்விப்பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கும் என்பதே. பூலோக முழுவதிலும் கணித சாஸ்திரத்தில் மிகவும் பெருமை வாய்ந்த லீலாவதி ஒரு இந்துப் பெண்ணே. இந்தியர்கள் சரஸ்வதியென்னும் பெண்மணியையே கல்வியின் தேவதையாகக் கொண்டாடுகின்றார்கள். இவற்றையெல்லாம் யோசித்துப் பார்க்குமிடத்து இந்துக்கள் பெண்கள் அதிக புத்தியுடையவர்கள் என்று மதித்துவந்தார்கள் என்றும், தங்கட்கு ஆபத்து நேர்ந்தகாலங்களிலெல்லாம் தங்கள் மனைவிமார்களையாவது தாய்மார்களையாவது அல்லது சகோதரிமார்களையாவது யோசனை கேட்டுவந்தார்கள் என்றும் அப்படிக் கேட்டபோதெல்லாம் அப்பெண்மணிகள் குறிப்பிட்ட ஆபத்துகளிலிருந்து தப்புவதற்கு வேண்டிய புத்திமதிகளை அளித்துவந்தார்கள் என்பதும் நன்கு புலப்படுகின்றது.

ஒரு பெண்மணி எப்படி தனது கணவனை ஒரு பெரிய ஆபத்தினின்றும் தப்புவித்தாள் என்பதைப் பற்றி ஒரு கதையுண்டு. அது ஒரு வெறும் கட்டுக் கதையே யாயினும் பெண்களின் விசேஷ புத்தியைக் காட்டுவதால் இங்கே அதைப்பற்றி விவரிப்போம்.

சோழமண்டலக் கரையிலே பெரிய ஜமீன்தார் ஒருவன் இருந்தான். அவனுக்கு அநேக ஆயிரம் காணி நிலங்கள் உண்டு. ஆனால் அவைகளெல்

* (Adopted from the Indian Ladies' Magazine).

லாம் ஒரே இனமாய் இல்லாது பலவிடங்களில் பரவிக்கிடந்தன. மேலும் அந்நிலங்கட்கெல்லாம் தண்ணீர் பாய்ச்சுவதற்கு அதிகபணம் செல்லும். ஜமீன்தாரனோ மகாலோபி, ஒரு காசென்றால் உயிரைவிடுவான், வேலையாட்களுக்குச் சரியான கூலி கொடுக்கமாட்டான். ஆகையால் குடிகளுக்கு அவனிடத்தில் மதிப்புக்கிடையாது. அவனுக்கு வேலையாட்களும் வருவதில்லை. அதனால் நிலங்களெல்லாம் தருசாய்க் கிடந்தது. அவனும் அதிக ஏழையாய் விட்டான். இப்படி யிருக்கையில் ஒரு நாள் ஒரு சன்னியாசி அவனிடம் வரவே, அவருக்கு வேண்டிய வந்தனை வழிபாடுகள் செய்து உபசரித்தான். அவரும் அவன் உபசரணையை யேற்றுக்கொண்டனர். ஒரு நாள் இருவரும் பேசிக்கொண் டிருக்கும்போது ஜமீன்தார் தன் நிலங்களை சாகுபடி செய்ய ஆட்கள் கிடைப்பதில்லையென்றும் அதனால்தான் மிக ஏழையாய் விட்டதாகவும் சொன்னான். இதைக் கேட்ட சன்னியாசி "அதற்கொன்றும் பயப்பட வேண்டியதில்லை. நீஎன் சிஷனாய் விட்டால் உனக்கு எல்லா வேலையையும் செய்ய ஒரு பிசாசை நியமிக்கின்றேன்" என்றார். ஜமீன்தார் இதைக்கேட்டு மிகவும் சந்தோஷம்கொண்டு அப்படியே ஆகட்டும் என்றான். அப்படியானால் நான் மந்திரம் உபதேசிக்கின்றேன். அதை ஆறுமாதகாலம் ஜெபிப்பாயானால் ஆயிரம் மனிதர்கள் செய்யும் வேலையைச் செய்யக்கூடிய ஒரு பிசாசு உன்கைவசமாகும். அப்பிசாசுக்கு வேலைகொடுக்க உன்னால் முடியுமானால் சொல் என்றார் சந்நியாசி. அதற்கு ஜமீன்தார் எனக்கு அம்மந்திரத்தை உபதேசிக்கும் பக்ஷத்தில் தான் தங்கட்கு எப்போதும் அடிமையாவேன் என்றான். அவனுக்கு செலவில்லாமல் பிசாசு கிடைக்கு மென்பதைப் பற்றி அவ்வளவு சந்தோஷம். உடனே சன்னியாசி "அந்த பிசாசுக்கு எப்போதும் வேலை கொடுத்துக்கொண் டிருக்கவேண்டும் கொஞ்சநேரம் வேலையில்லாவிட்டாலும் அது உன்னைக் கொன்றுவிடும்" என்றார். ஜமீன்தார் தன் நிலத்தைச் சாகுபடிசெய்யும் வேலையைப் பல நாளைக்கு பிசாசுக்கு கொடுக்கலாம் என்று எண்ணங்கொண்டு எனக்கு இரண்டு மூன்று பிசாசுகள் கிடைக்கும்படி உபதேசித்தருளவேண்டும் என்று வினயமாய் வேண்டினான். சந்நியாசி இதைக் கேட்டவுடன் "இரண்டு மூன்று பிசாசு வேண்டுவதில்லை. ஒரே பிசாசுபோதும். என்றுசொல்லி" மந்திரத்தை உபதேசித்தருளினார்.

ஜமீன்தார் உடனே மந்திரத்தை உச்சரிக்க ஆரம்பித்துவிட்டான். ஆறுமாத காலமானதும் அறுபது அடி உயரமும் அதற்குத் தகுந்த திட்காத்திரமுமுள்ள ஒரு பிசாசு அவன்முன் நின்றது. அவன் அதைப் பார்த்ததும் பிசாசு "ஏ! மகாநுபாவரே! தங்களுடைய மந்திரத்தின் வலிமையால் இன்று முதல் நான் தங்களுக்கு அடிமையானேன். காலாவிட்ட வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கின்றேன். ஆனால் ஒரு விஷயம் மட்டும் தாங்கள் தயவுசெய்து கவனித்துக் கொள்ளவேண்டும். ஒரு நிமிஷமேனும் நான் சும்மா இருக்கமுடியாது. ஆகையால் எனக்கு எப்போதும் வேலைகொடுத்துக்கொண் டிருக்கவேண்டும்" என்றது.



இப்போது ஜமீன்தாருக்கு உண்டாகிய சந்தோஷத்திற்கு அளவு கரை கிடையாது. "இனி நான் நிலத்தின் அபிவிர்த்தியைப் பற்றி ஒரு பைசா வேனும் செலவிட வேண்டியதில்லை. இந்தப் பேயைக்கொண்டே எல்லாவேலைகளையும் முடித்துக் கொள்ளலாம். இனி குறும்புக்கார வேலையாட்கள் ஒரு துரும்புகூட காணமாட்டார்கள். நான் பணக்காரனாய் விடுவேன்" என்று எண்ணிக்கொண்டே பேயைப்பார்த்து "நீ இப்போதே போய் நம்முடைய ஏரிகளை யெல்லாம் துரஸ்துசெய்துவிட்டு வரவேண்டும்" என்று சொல்ல பிசாசு அஞ்சலிசெய்து "அப்படியே ஆகட்டும் என்றுசொல்லி" போய்விட்டது. ஜமீன்தாரனும் தவத்தை யொழித்து இச்சந்தோஷ சமாசாரத்தைத் தன் மனைவிக்குத் தெரிவிக்கும்பொருட்டு வீட்டிற்குச் சென்றான். சென்று மனைவியிடத்தில் சமாசாரத்தைச் சொல்லவே அவளுக்கும் அதிக ஆநந்தமுண்டாயிற்று. இவ்விசேஷத்தை முன்னிட்டு தங்கள் பந்துக்கள் யாவருக்கும் ஒரு விருந்திட்டுக் களித்துக்கொண்டிருக்கையில் பிசாசு ஜமீன்தார் எதிரில் கைகூப்பி நின்றுகொண்டு "ஐயனே! தாங்களிட்ட வேலையைச் செய்துவிட்டேன். தாங்களே நேரில்வந்து பார்வையிடவேண்டும்" என்று வேண்டிற்று. இதைக்கேட்டதும் ஜமீன்தார் நடுங்கினான் "என்ன இருநூறு ஏரிகள்? ஒவ்வொன்றிலும் எவ்வளவோ வேலைசெய்ய வேண்டியிருந்தனவே! அவைகள் எல்லாவற்றையும் இவ்வளவு சீக்கிரம் பேய் முடித்துவிட்டதா" என்று தனக்குள்ளேயே யோசித்துக்கொண்டு தன் மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டு அவ்வேலையைப்பார்க்கப் பேயுடன் புறப்பட்டான். போய்ப்பார்த்ததும் வேலைகள் எல்லாம் சரிவரச் செய்திருப்பதைக் கண்டான். வேலையில் மிகவும் தேர்ந்த இஞ்சினீர்களாலும் இவ்வளவு நேர்த்தியாகச் செய்ய முடியாதென எண்ணினான். இவைகளையெல்லாம் இவன் சுற்றிப்பார்த்து வருவதற்கு பேய் வேலைகளையெல்லாம் செய்ய எவ்வளவு நேரமாயிற்றோ, அதைக்காட்டிலும் மூன்றுமடங்கு நேரமாயிற்று. எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வீடுவந்துசேர நடுராத்திரியாயிற்று. வந்ததும் பேயைப்பார்த்து "இப்போதேபோய் அந்த ஏரிகளிலெல்லாம் ஜலம் நிரப்பிவிட்டு வரவேண்டுமென்று கட்டளையிட்டு மனோவியாகூலத்துடன் படுக்கைக்குச் சென்றான். விடிந்ததும் விடியாததும் பேய் வீட்டுவாசலில் நின்றுகொண்டு ஜமீன்தார் வந்தவுடன் "ஏரிகளில் ஜலம் நிரப்பிவிட்டேன், போய் பார்க்க வேண்டுகின்றேன்" என்றது. ஜமீன்தார் மனம் எரிந்தது. என்ன செய்வான். போய்ப்பார்த்தான். ஏரிகளிலெல்லாம் ஜலம் நிரம்பி யிருந்தது: "சரி நமது பூமிகளையெல்லாம் நன்றாக உழுது தண்ணீர்பாய்ச்சி நாற்று நட்டுவிடவேண்டும்" என்று பேய்க்குக் கட்டளை யிட்டுவிட்டு வீட்டுக்குவந்து யோசிக்கலானான். என்ன பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காய் முடிந்தது! மந்திரத்தை உச்சரித்தோம். பிசாசு வந்தது. என்ன பிரமாதமான வேலையைக் கொடுத்தாலும் நொடிப்பொழுதில் முடித்து விடுகின்றதே! இதற்கு என்ன வேலையைக் கொடுக்கின்றது? வேலை கொடுக்காவிட்டாலோ நம்மைக்

கொன்றுவிடும். ஒன்றும் தோன்றவில்லை. இப்போது நான்கொடுத்திருக்கும்
வேலையை முடித்துவிட்டு நிமிஷநேரத்தில் திரும்பிவிடும். என்செய்வேன்!
வந்தால் வேறுவேலை யிடவேண்டுமே. வருவது வந்தே தீரும். நம்மால் ஒன்
றும் முடியாது என்று கடைசியாக தீர்மானித்துக்கொண்டு சாப்பிடப்
போனான். சாப்பாடு அவனுக்குக் கொஞ்சங்கூடச் செல்லவில்லை. மனதில்
அவ்வளவு வியாகூல மிருக்கும்போது சாப்பாட்டின்மேல் எப்படிப் பிரியம்
செல்லும்? சாயங்காலவேளையில் பேய்வந்து "வேலையை முடித்துவிட்டேன்"
என்று சொல்ல "அப்படியானால் நான்வந்து பார்க்கிறேன்" என்று
சொல்லி போய் பார்க்க வேலையெல்லாம் சரியாகச் செயயப்பட்டிருந்ததை
க்கண்டுவிட்டுக்குத் திரும்பினான். வந்ததும் தன் மனைவியைப் பார்த்து
பேயின் சமாசாரம் முற்றிலும் விஸ்தாரமாகச் சொன்னான். அவளுக்கு
அப்போதுதான் பேயின் சாமர்த்தியம் இன்னதென்றும் அதற்கு எப்போ
தும் வேலை கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதும் தெரிந்தது.
யானை தன் தலையிலேயே மண்ணைவாரி போட்டுக்கொள்வதுபோல தன்
புருஷன் தன் உயிருக்குத்தானே நாசத்தை வரவழைத்துக்கொண்டான்
என்று எண்ணினாள். தன் புருஷனை ஆபத்தினின்றும் நீக்கவேண்டுமென்
னும் கருத்தே அவள் மனதில் ஆழ்ந்திருந்தது. கடைசியாக ஒரு தீர்
மானத்துக்கு வந்து தன் பிராணநாதனை நோக்கி "இனித்தாங்கள் பய
ப்பட வேண்டியதில்லை. தங்களுக்கு இன்னும் என்ன வேலை ஆகவேண்
டுமோ அவைகளை யெல்லாம் செய்யும்படி வேலையைக் கட்டளையிடுங்கள்.
பிற்பாடு அந்தப் பேயை என்னிடம் அனுப்பிவிட்டால் மறுபடியும் அது
தங்களைவந்து தொந்தரவு செய்யாதபடி நான் அதற்கு எப்போதும் வேலை
கொடுத்து வருகின்றேன்" என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ஒருவாறு மனந்தேறி பேயிடம்போய்
"நீபோய் சிலமரங்களை வெட்டி நம்ம வீட்டில் செய்யவேண்டிய ரிபேர் வேலை
களை யெல்லாம் செய்து முடிக்கவேண்டும்" என்றான். உடனே பேய் புறப்
பட்டுப்போய் அவ்வேலைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு திரும்பிவந்த
தும் ஜமீன்தார் நீ எனக்கு செய்யவேண்டிய வேலை இவ்வளவு தான். இனி
என் மனைவியிடம் போய் அவள் கொடுக்கும் வேலைகளைச் செய்துகொண்
டிருக்கவேண்டும் என்று கூறினார். ஜமீன்தார் இவ்வார்த்தைகளை முடித்த
வுடனே பேய் ஜமீன்தார்மனைவியிடம் போய் "அம்மணி, எஜமான் தங்களி
டத்தில்போய் தங்கள் வேலைகளைச் செய்யும்படி ஆஞ்ஞாபித்தார். எனக்குக்
கட்டளையிட்டருள வேண்டும்" என்று கேட்டது. அதற்கு ஜமீன்தார்மனைவி
மிகவும் கம்பீரமான தொனியில் "எஜமான் வேலைகளையெல்லாம் செய்தாய்
விட்டதா" என்று வினவ "ஆம் அம்மணி செய்தாய்விட்டது" என்று பதில
ளித்தது. ஜமீன்தார்மனைவி, "அப்படியானால் எனக்கு ஒரு வேலை செய்ய
வேண்டும் அது சிறிய வேலை தான். ஆனால் ஒன்று மாத்திரம் கவனமிருக்க



வேண்டும் வெகுஜாக்கிரதையா யில்லாவிட்டால் வேலை நாசமாய் விடும். ஜாக்
கிரதை இல்லாவிட்டால் கொன்று விடுவேன்" என்று சொல்லி தன்தலையிலி
ருந்து ஒரு மயிரை இழுத்து பேயிடம் கொடுத்து "இந்த மயிரை நேராக
நிறுத்தி சீக்கிரம் என்னிடம் கொண்டுவரவேண்டும்" என்று ஆஞ்ஞாபித்
தாள். பேய்க்கு விசனம் உண்டாயிற்று. என்செய்யும்? அதை எடுத்துக்கொ
ண்டுபோய் ஒருமரத்தின் மேலுட்கார்ந்து கொண்டு அந்த மயிரை முறுக்கிப்
பார்த்தது. திரித்துப்பார்த்தது. ஒன்றாலும் அதை நேராக நிறுத்த முடிய
வில்லை. தட்டார்கள் கம்பிகளை நீட்டவேண்டுமானால் அதைக்காய்ச்சி அடிப்
பதை பேய் பலமுறையும் கண்டிருக்கின்றது. ஆதலால் அப்படிச்செய்தால்
நம் காரியம் சித்திக்கும் என்று எண்ணி கொஞ்சம் நெருப்புண்டாக்கி
அதன் பேரில் மயிரைக்காட்டிற்று. ஐயோ! அந்த மயிர் அப்போதே பொஸ்
ஸென்று பொசுங்கிபோய் விட்டது. பேய் என்செய்யும்! சும்மாபோனால்,
ஜமீன்தார்மனைவியின் கோபத்திற்கு ஆளாகவேண்டும் என்று எண்ணி நல்ல
வனுக்கு அடையாளம் சொல்லாமல் போவது என்ற மாதிரி ஓடிப்போய்விட்
டது. பேய் இனிமேல் திரும்பிவராது என்பது ஜமீன்தார்மனைவிக்கு நன்று
கத்தெரியும். அதுவும் அப்படியே வரவில்லை. ஜமீன்தார் தன்மனைவியின் புத்
திக்கு வியந்தான். பிற்பாடு பேயின் கஷ்டம் இன்றியில்லையாகலின் புருஷன்
மனைவியர்க ளிருவரும் சுகமாக நெடுங்காலம் வாழ்ந்தனர்.

பார்வதிபாகன்.

## வீட்டு வேலை.

நமது தேசத்தில் சாதாரணமாக சிறிய பெண்களும், மாதர்களும் தங்க
ளுக்குரிய வீட்டுவேலைகளைச் செய்து வருவது தெரிந்த விஷயம். இவர்கள்
தினம் தங்கள் வீடுகளைச் சுத்தமாக குப்பை கோளங்களை அப்புறப்படுத்தி
நன்றாக மெழுகிவைத்துக் கொள்ளவேண்டும், படுக்கைமுதலியவைகளை ஓரி
டத்திலும், வீட்டு சமையலுக்கு வேண்டிய சாமான்களை மற்றொருவிடத்தி
லும், விறகு முதலியவைகளை குழந்தைகள் நடமாடாத விடத்திலும் வைக்க
வேண்டும். சமையல் கட்டிடம் வெகு சுத்தியாக விருக்கவேண்டும். வீட்டில்
விசித்திரமான கோலங்களைப்போட சிறு குழந்தைகளுக்குச் சொல்லிக்
கொடுக்கவேண்டும், இவ்விதம் செய்யத் தெரியாதவர்களுக்கு பெரியவர்கள்
போதிக்கவேண்டும், வீட்டில் பலவிடத்தில் புஷ்பங்களை அழகுக்காகவைக்க
வேண்டும், இப்படிச் செய்வதால் நல்ல காற்றிருக்கும். பார்க்க ரமணீகரமா
யிருக்கும். வீட்டிற்குத் தலைவியாகிய மாது தமது குழந்தைகளுக்கு ஜீவகா
ருண்ணியம், தெய்வபக்தி சுத்தியாயிருப்பது முதலியவைகளைப் போதித்து
வரவேண்டும். இப்படிச்செய்தால் குழந்தைகள் நாளாவர்த்தியில் நல்ல

வழிக்கு வருவார்கள். தினம் காலை போஜனம் செய்வதற்குமுன் காக்கைக்கு அன்னமிடவேண்டும், வீட்டில் தேவபூஜை ஆனவுடன் இப்படிச்செய்வது நலம் இராத்திரியிலோ பகலிலோ நாய்களுக்கும் அன்னமிடலாம்.

முன் காலத்தில் கிளிமுதலிய பக்ஷிகளுக்கு தானியம் பழம் முதலியவைகளை வேளா வேளையில் கொடுத்து வந்ததாகத்தெரிகிறது. ஆனால் இப்பொழுது சிலர் தான் இவ்விதம் செய்கிறார்கள். பணமுள்ளவர்கள் பக்ஷிகளை வளர்த்தால் நலமே. அவைகளைப்பற்றி குழந்தைகளுக்குப் பலகதைகளைச் சொல்லலாம். மாதர்கள் தினம் கடவுளை வணங்கவேண்டும். தங்கள் குழந்தைகளுக்கும் கடவுளை வணங்கும்படி போதித்து வரவேண்டும்.

"எந்த வீடானது மங்களமாக மெழுகிப் பெருக்கி எப்பொழுதும் அழகாகத் தோன்றுகின்றதோ, அந்த வீட்டிலே இலட்சுமி பூர்ணகலைகளோடு வாசம் செய்கிறாள்" என்று வியாசர் சொல்லுகிறார்

ஓர்மாது.

# அநுசூயா.

(42-வது பக்கத் தொடர்ச்சி.)

உன்னைப்போன்ற பதிவிரதாசிரோன்மணிகள் சுகத்தையும் கீர்த்தியையும் அடைவார்கள்எனச் சொன்னாள் அநுசூயா தேவியார்.

அநுசூயாதேவியார் சொல்லியவைகளுக்கு சீதாப்பிராட்டியார் பின்வருமாறு பதில் சொன்னார்கள்:—"அம்மா! எங்கள் தாயாரும்கூட ஸ்திரீக்குப் பர்த்தாவே குருவென்றும், தெய்வமென்றும், எனதுசிறிய வயதிலேயே சொல்லியிருக்கிறாள். அவ்விதமே தாங்களும் சொன்னதைக்கேட்டு மிகச் சந்சந்தோஷப்படுகிறேன் பர்த்தாவுக்கு அநுகூலமாக நடக்கும் ஸ்திரீகள் அடைகிற புண்ணியத்தையஞ்ஞம் தபசுமுதலியவைகள் செய்கிறவர்களும் அடையமாட்டார்கள். பர்த்தா எப்படிப்பட்டவனானாலும் அவனை வணங்குவது சாஸ்திர சம்மதமாயிருக்க, மகா சாந்தமூர்த்தியாயும், கிருபை யுடையவராயும், உண்மை பேசுபவராயுமுள்ள வேதமுதலிய கலைகளிலும் பரமாத்மாவென முழங்கப்பெற்றவருமான ஸ்ரீராமரை நான் வணங்கிக்கொண்டேதான் வருகிறேன். எனக்குப் பதிவிரதைகளின் கதைகளையும் புண்ணிய ஸ்திரீகளுடைய சரித்திரங்களையும் எனதுபிரியமானமாமியார் எனக்குப்போதித்திருக்கிறாள்.

"ஏ! புண்ணியவதி உன்னுடைய இனிமையான வார்த்தையைக் கேட்க மிகச் சந்தோஷப்படுகிறேன். பதி பக்தி மகிமைவிஷயமாய் நீ சொல்லிய பிரகாரம் நீ நடந்துவருவதானது எனக்கு அதிக ஆநந்தத்தைக் கொடுக்கின்றது. உனக்கு ஒரு பரிசு அளிக்கவேண்டுமென்று எண்ணுகிறேன். சர்வமங்களங்களுக்கும் ஆதாரமானதும் சரீரத்திற்கு காந்தியைக் கொடுக்கக்கூடியதுமான குங்குமம் கொடுக்கிறேன் என்று சொல்லி அந்த சீதாதேவியார்க்கு நூதனவஸ்திர பூஷணங்களுடன் விசித்திரமான குங்குமத்தையும் கொடுத்தாள். அநுசூயாபின்பு சீதையினது விவாக சமாசாரத்தைக் கேட்டாள். சீதாதேவியாரும் மிகப்பெருமையுடன் தன் விவாக வரலாறு முழுவதையும் சொன்னாள். அநுசூயா மிகமகிழ்ந்து ஜானகி! சாயங்காலமானதால் பட்சிகளெல்லாம் தங்கள் கூடுகளுக்கு வந்துகொண்டிருக்கின்றன. இங்கிருக்கும்படியான ஆசிரமங்களிலுள்ள செடிகளுக்கு ஜலம் வார்த்தபின் ரிஷிகுமாரர்கள் பர்ணசாலைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். மான்கள் தங்களிருப்பிடங்களுக்கு வந்துகொண்டிருக்கின்றன. தடாகங்களிலுள்ள தாமரைப் புஷ்பங்களும் குவிந்துகொள்கின்றன. இருள் காந்தியைவிழுங்கி பரவுகின்றது! ஆகையால் நீ இந்த குங்குமத்தைத் தரித்துக்கொண்டு ஸ்ரீராமரிடத்திற்குப் போவென்றுசொல்ல, சீதாதேவியார் அம்மாதிடம் விடைபெற்றுக்கொண்டு நூதனமான அலங்காரத்துடன் தமது பர்த்தாவிருக்கு மிடத்திற்கு மிகச் சந்தோஷத்துடன் சென்றாள்.

[இந்தக் கதை பாகவதம், விநாயகபுராணம், ராமாயணம் முதலியவைகளிலிருந்து எடுத்து எழுதப்பட்டது.]

ஸி. எஸ். ரா.



# குடும்பசம்ரக்ஷணை: ஜலம்.

## 1-ம். அதிகாரம்.

ஜலமானது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத பஞ்சபூதங்களில் ஒன்றாகையால் இது மிகவும் முக்கியமாயுள்ள பதார்த்தமாயிருக்கிறது. சில ஜந்துக்கள் ஜலத்திலேயே வசித்துக்கொண்டிருக்கின்றன. சாதாரணமாய் ஜந்துக்கள் எல்லாம் அப்போதைக்கப்போது ஜலம் உட்கொள்ளாமலிருக்கமாட்டா. இப்படி குடிப்பது தம் உயிரைக் காத்துக்கொள்ளும்நிமித்தமே; ஏனெனில், நாம் புசிக்கும் ஒவ்வொரு வஸ்துவிலும் கொஞ்சமாகிலும் அதிகமாகிலும் ஜலம் கலந்திருந்தாலல்லது நாம் உட்கொண்ட ஆகாரம் ஜீரணமாகாது. மேலும் பால் முத

ஜலத்தின் உபயோகங்கள்.

லான சில வஸ்துக்களை நாம் குடித்து ஜீரணிக்கச் செய்துகொள்வதற்குக் காரணமென்னவென்றால் அவ்வஸ்துக்களிலேயே இயற்கையாகவே விசேஷபாகம் ஜலம் கலந்திருப்பதுதான். கோதுமையிலும் 100-பங்குக்கு 15-பங்கு ஜலமிருக்கும். காய்பதார்த்தங்களில் இயற்கையாகவே ஜலம் கலந்திருப்பது நமக்குத்தெரிந்திருக்கிறதல்லவா? இப்படிச் சொல்வானேன்? நமது தேசத்தில் மூன்று பங்கு ஜலமிருப்பதாய்ச் சாஸ்திர மறிந்தோர் சொல்லுகிறார்கள்.

1. ஆகையால் ஜலத்தின் முக்கியமான பிரயோஜனம் நமது தாகத்தைத் தணிப்பது; ஜீரணமாவதற்கு உதவியாகச் சரீரத்தை விருத்திசெய்வது; இன்னும் அநேக வேலைகளுக்கு ஜலம் உபயோகப்படும்.

2. தேகத்தின் அழுக்கைப் போக்கடிப்பதற்கு ஸ்நானஞ்செய்வதைத்தவிற வேறொன்றுமில்லை. சமையல் பாத்திரங்கள் முதலியவைகளைச் சுத்தி செய்வதற்கு நாம் ஜலத்தை உபயோகிக்கிறோம். வீடு துணி முதலியவைகளையும் அடிக்கடி ஜலத்தினால் சுத்திசெய்கிறோம்.

3. ஒருதேசத்தின் சீதோஷ்ண ஸ்திதிகள் ஒருவாறு அவ்விடமிருக்கும் ஜலத்தின் பிரமாணத்தைப் பொறுந்திருக்கும். ஒரு சிறிய தேசத்தைச்சுற்றி பெரிய சமுத்திரமிருக்கும்பக்ஷத்தில் இயற்கையாய் அத்தேசம் அதிக உஷ்ணமாயிருந்தபோதிலும் சுற்றிலுமிருக்கும் ஜலத்தினால் உஷ்ணம் குறைந்தேயிருக்கும். ஆனதினால்தான் நமது தேசத்தில் பலர் வெயிற்காலத்தில் சமுத்திரத்திற்கு அருகாமையிலுள்ள இடங்களுக்குச்சென்று வசிக்கிறார்கள். குளிர்காலத்தில் சமுத்திரத்தின் உஷ்ணம் வெளிப்பட்டு சமீபத்திலிருக்கும் ஜனங்களுக்குச் சௌக்கியத்தை உண்டாக்குகிறது.

**ஜலத்தின் பேதங்கள்.**

நாம்உபயோகிக்கும் ஜலத்தின் உருசியை அனுசரித்து இரண்டு விதங்களென்று சொல்லலாம். 1. நல்லஜலம். 2. சமுத்திரஜலம் அல்லது உப்புநீர்.

1. நல்ல ஜலம்:—குடிப்பதற்கும் சமையலுக்கும் தினசரிஸ்னானதிகளுக்கும் மிக உபயோகப்படும.

2. சமுத்திரஜலம்:—சாதாரணமாய் உப்பாயிருக்கும் சில கிணற்றுநீரும் சமுத்திரஜலமும்குடிக்க உபயோகப்படாது. இது பாத்திரங்கள் முதலியவைகளை சுத்தி செய்வதற்கும், ஸ்நானத்திற்கும் உபயோகப்படும். ஆயினும் உப்பு நீரில் எப்போதும் ஸ்நானம் செய்வது அவ்வளவு உசிதமன்று.

இன்னும் சில பேதங்களாவன:—ரூபத்தையனுசரித்து இரண்டுவிதங்கள் ஏற்படுகின்றன. சில பிரதேசங்களில் ஜலம் பரிசுத்தமாயும் மற்றசில விடங்களில் ஜலம் சுத்தமாயிராமல் சேறு கலங்கியுமிருக்கும். இதைத்தான் கலங்கின ஜலம் என்று சொல்லுகிறோம். இம்மாதிரி நதியில்வெள்ளம் வரும்பொழுது ஜலம் கலங்கியிருப்பது நமக்குத்தெரிந்த விஷயமல்லவா? இந்த ஜலத்தை சமையல் முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தக் கூடாது.



1. நல்ல ஜலம் தெளிவாகவிருக்கும்; அப்படிக்கன்றி கலங்கியிருக்கும் பக்ஷத்தில் அதுநல்ல ஜலமல்லவென்று நாம் எண்ணுகிறோம்.

2. இயற்கையில் நல்ல ஜலத்திற்கு வர்ணம், குணங்கள் கிடையாது.

**ஜலத்தின் குணங்கள்.**

ஆழத்தில் ஜலமிருப்பதால் நதிகளின் ஜலம் கறுப்புநிறமாயிருப்பதாக தோன்றுவதேயொழிய உண்மையாய் அதனிடத்தில் ஒருவிதநிறமும் கிடையாது. இந்த உண்மையையறிய விரும்புகிறவர்கள் அந்த ஜலத்தை ஒரு பாத்திரத்தில் போட்டுப் பார்த்தால் அதற்கு நிறமில்லையென்றும், சுத்தமானதென்றும் நன்றாய்த் தெரியும்.

3. காற்றிலிருக்கு மநேக உபவாயுகளை (சில்லரைக் காற்றுகளை)யும், உஷ்ணத்தையும், துற்கந்தத்தையும் தன்மயமாக்கும் சக்தி அதற்கு உண்டு.

ஸி. எஸ். ரா.

(இன்னும் வரும்.)

# பெண்மையின் கருத்து.

ஜஸ்டிஸ் சந்திரவர்க்கர் என்பவர் பம்பாயில் நாஷனல் இந்தியன் அஸோஸியேஷன் (National Indian Association) தரபில் பலதேசத்துக் கவிகளால் கூறப்பட்டிருக்கும் பெண்பாலாரின் மகிமையைக் குறித்து ஓர் உபந்யாசம் செய்தார். இந்து, ஐரோப்பிய மகம்மதிய பார்சீகமாதர்களும் கனவான்களும் உபந்யாசத்தை செவிகொடுத்துக் கேட்டனர். ஜஸ்டிஸ்சந்திரவர்க்கர் அவர்கள் சொன்னதைச்சுருக்கமாய் மொழிப்பெயர்த்துக் கூறுவோம். அவர் சொல்லியதாவது:—பிறக்கும் குழந்தைக்கு முகக்குறிகளும் அவயவங்களும்கூட தந்தையைவிட தாயைக்கொண்டே ஒற்றுமை ஏற்படுகிறதென்று டிகுவேன்சி என்னும் ஆங்கிலேய கவிசிரேஷ்டர் கூறியிருக்கிறார்.—அக்கவியே இன்னோரிடத்தில் நமது மேன்மை பொருந்திய பிரபுக்களை ஆலோசிக்கும் விஷயத்தில், அனேகமாய் புத்தியானது தாயினின்றும் குணங்கள் தந்தையினின்றும் உண்டாவதாக ஏற்படுகின்றதென்று சொல்லுகிறார். ஜர்மனிதேசத்துக் கவிகளும் ஞானிகளுமாகிய கீதே முதலியோர்தாம்பொருந்தியிருக்கும் யோக்கியதைக்காக தந்தையைவிட தாய்க்கே அதிக கடன்பட்டிருப்பதாய் கூறினர். அவர்களிலொருவர் இன்னம் விசேஷமாய்க்கூறினர். "என் தகப்பனிடத்திலிருந்து நான் அடைந்த விசேஷமாவது அவர்போன்ற அழகற்ற முகமும் தேகமுமாகும்; சிறுவயதில் அவர் எனக்குவைத்த திரவியத்தையும் சொல்லலாம்; ஆனால் என்னிடத்தில் என்

னுடைய விகாரமுகமும் தேகமும் தவிர இன்னும் யாதேனும் விசேஷமிருப்பதாக பிறர் கூறினால், அவையெல்லாம் என் தாயின் அளவற்ற புத்தியெனும் பொக்கிஷத்தினின்று உண்டானதாகவே கூறவேணும்." இம்மாதிரிமொழிகள் தாயின்பேரிலுள்ள அபிமானத்தினால் இப்பான்மை அதிகமாய் கூறினரென்றபோதிலும், எல்லா தேசத்திலும் தாயின்குணத்தை அதிகமாகவே கூறியிருக்கின்றனர். ஷேக்ஸ்பியர் முதலிய ஆங்கிலேய காளிதாசக் கவிகளும் உண்மையாகிய பெண்தன்மையே ஓர் தேசத்தின் முக்கிய திரவியமாகும் எனக்கூறினர். அக்கவி இயற்றிய செய்யுள்களெல்லாம் ஸ்திரீகளின் பெருமை, குணம் முதலியவைகளையே கூறுகின்றன. ஷேக்ஸ்பியர்ஸ்காட் என்னும்கவிகள் ஸ்திரீயே மனிதனுக்குப் போதித்து அவனைப் பாதுகாக்கும் தேவதையாய் ஊகித்துப்பாடினர். மில்டன் தவிர, டெனிசன் என்னும் மஹாகவியுள்பட, மற்றக்கவிகள் பெண்மையின் விசேஷத்தையே கூறினர். இக்கவி ஸ்திரீ கல்வியில் குறைந்தபோதிலும், இல்லறத்திற்கு வேண்டிய தயாளகுணங்கள் நிறைந்தவளாயும், மிருதுவான இருதயம் உடையவளாயும், நற்குணங்களுடையவளாயுமிருக்கின்றதாகச் சொல்லுகிறார். மனிதரை தப்பவைக்கும் தேவதை என்றும் கூறினர். "ஸ்திரீ இல்லறத்தைக் காக்கும் தேவதை மாத்திரமன்றி இம்மானிட ஜன்மத்தையே பாதுகாக்கும் அதிபதி. நன்மையைச் செய்யவும், மேன்மையை நோக்கவும், மேன்மையைநோக்கி அதைசாதிக்கவும், இடைவிடா நன்முயற்சியால் அதைசாதிக்கும் குணமும் ஸ்திரீக்குதான் அமைக்கப்பட்டிருக்கிறதென்று" சந்திரவர்க்கரவர்கள் கூறினர். இக்காலத்திலும் பூர்வமாதிரியாகவே மிஸ் பிலாரேன்ஸ் நைடிங்கேல் (Miss Florance Nightingale) என்னும் ஆங்கிலேய மாது, சென்ற விக்டோரியா மஹாராணியவர்கள்போன்ற மாதர்கள்செய்த நன்மையை நோக்குங்கால், அவர்கள் எவ்விதப் பெரும்பான்மையோராகிவிருக்க வேண்டுமென்று நமக்கு அதிக வியப்பைத் தருகின்றது.

K. ஏகாம்பர ஐயர். பி-ஏ.

## * மருத்துவ நூல்.

நமது தேசத்தில் பிரசவகாலத்தில் சாதாரணமாகமருத்துவ வேலை செய்ய ஆங்கிலேய மருத்துவம் கற்காத அறிவீன மருத்துவச்சிகளை வரவழைக்கிறோம். அவர்கள் ஏதோ தங்களுக்குத் தெரிந்த அநுபவத்தால் பிரசவ காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்கிறார்கள். தக்க கற்ற மருத்துவச்சிகள்

* Edited by C. P. Lukis, M. B F. R. C. S; for the use of Indiam Midwives and published by Messrs Thacker Spink & Co Calcutta, Price, 1 Re.



கிடைப்பது அரிதாயிருப்பதினாலே இவர்களையேநாம் வரவழைக்க வேண்டியிருக்கிறது. இவர்களால் அநேகமாக உயிருக்கே மோசம்கூட சம்பவிக்கின்றது. இவ்வித கெடுதல்கள் உண்டாகாமலிருக்கவும் நமது மாதர்களுக்கு ஆங்கிலேய மருத்துவம் கற்றஸ்திரீகளிருக்கவும் தக்க ஏற்பாடுசெய்ய நமது லேடிஆம்தில் பெருமாட்டியார் ஒருசாலை ஏற்படுத்தியிருக்கிறார்களென்பது நமது மாதர் மனோரஞ்சினியின் முதல் பக்கத்திலுள்ளதை வாசிப்பவர்கள் அறிவார்கள். மருத்துவத் தொழிலை கற்க முக்கியமாய் புஸ்தகம் வேண்டும். ஆங்கிலத்தில் பெரிய புஸ்தகங்களிருந்த போதிலும் அவைகளைப் படிக்க நமது தேசத்திய ஸ்திரீகளுக்கு அவ்வளவு அறிவு இன்னுமுண்டாகவில்லை. ஆனதுபற்றி நமது காருண்ணிய லேடிகர்ஸன் (Lady Curzon) பெருமாட்டியவர்கள் ஸிம்லாவில் சிறந்த டாக்டராகிய மிஸ்டர் N. ப்ராங்களின் என்பவரை ஒரு சிறு புஸ்தகம் எழுதும்படி கேட்டுக்கொள்ள, அவர் லப்டினண்ட் கர்னல் C. P. லூகிஸ் என்பவரை அவ்விதபுஸ்தகமொன்றை தெளிவான ஆங்கில நடையில் யாவருக்கும் எளிதில் விளங்கும்படியாக எழுதும்படி ஏற்பாடுசெய்தனர். இக்கனவானும் அவ்விதமே 14-அத்தியாயமடங்கிய ஒரு சிறு புஸ்தகத்தை எழுதி முடித்திருக்கிறார். கர்ப்பகாலம், பிரசவத்துக்கான ஆயத்தங்கள், பிரசவவேதனை, பற்பலவகை உதயங்களும், இரட்டைப் பிள்ளைகளும், சிசுவைப் பாதுகாக்கும் முறை, பிரசவத்துக்கு முன்னும் பின்னும் தாயைப் பாதுகாக்கும் முறை முதலிய பற்பல அருமையான விஷயங்கள் நன்றாகவும், யாவரும் எளிதில் அறிந்துக்கொள்ளும்படியாயும் சாதாரண நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இப்புஸ்தகம் சுதேச பாஷையிலும் மொழிபெயர்க்கப்படுமென்பதைக் கேட்கமிகச் சந்தோஷப்படுகிறோம். இப்புஸ்தகம் காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணியார் உபகாரச் சம்பளம்பெற்று மருத்துவத்தொழில் கற்கும் ஸ்திரீகளுக்கு வேண்டியே இது இயற்றப்பட்டது மிக்கவியக்கத்தகுந்ததே. எச். இ. லேடி கர்ஸன் பெருமாட்டியார் நமது தேசத்திய மாதர்களிடத்தில் வைத்திருக்கும் வாஞ்சையும், அநுதாபமும், இதனால் தெரிகிறதல்லவா? இவ்விதமல்லவோ நம்மவர்களும் தங்கள் மாதர்களிடத்திலிருக்கவேண்டும். கடைசியாக இப்புஸ்தகத்தை அவசியம் கற்றகனவான்கள் வாங்கி நன்றாகப் படித்து தங்கள் மனைவிமார்களுக்கு இதிலுள்ள முக்கிய விஷயங்களைச் சொல்லிவைத்தால் மிகவும் நலமெனவெண்ணுகிறோம்.

# சத்தியமே நமது குலதெய்வம்.

ஓர் நகரில் சத்தியத்தையே குலதெய்வமாகக்கொண்டு வெகு சிரத்தையுடன் அதை காப்பாற்றிக்கொண்டு வந்த ஒருமன்னவனிருந்தனன். அவன் பெயர் சத்தியவந்தன். அந்நகரில் யாராவது பொய்யுரைத்தால் அவரைக் கடும்சிட்சைக் குள்ளாக்குவான். இதற்காக அம்மன்னவன் சில மந்திரிகளை நியமித்து சத்தியத்தைக் குறைவன்னியில் பரிபாலிக்கவேணுமென்று உத்தரவு செய்தனன். அரசனது உத்தரவைச் சிரமேற்கொண்டு அவ்வூரின் எல்லையிலுள்ள ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் தங்கள் கூடாரத்தை யடித்துக்கொண்டு அம்மந்திரிகள் இருந்தனர். அவ்வூருக்கு வரப்பட்டவர்கள் அந்த ஸ்டேஷன் வழியாய்த் தான் வரவேணும். மந்திரிகள் அவ்விடத்திலிருந்துகொண்டு பின்வருமாறு ஆலோசனை செய்தனர். நம்முடைய ஊருக்கு யாராவது வரவேணுமானால் இந்த ஸ்டேஷன் வழியாய்த் தான் வரவேணும். இவ்வழியாக வருகிற ஒவ்வொருவரையும், எங்கே போகிறாயென்று கேட்கவேண்டும். அவர்கள் உண்மை சொன்னால் அவர்களை விட்டுவிடவேண்டும், பொய்யுரைத்தால் தங்களுக்குச் சமீபமாயுள்ள காட்சி பங்களாவிலுள்ள ஒரு சிம்மத்துக்கு அவர்களை யிரையாக்கவேண்டும் என்று தீர்மனஞ்செய்துகொண்டு அநேககாலமாய்ச் சத்தியத்தை தவராமல் காப்பாற்றிக்கொண்டு வந்தனர்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் ஒருமனிதன் புகைவண்டியிலேறிக்கொண்டு அந்த ஸ்டேஷனில் வந்து சேர்ந்தனன். அப்பொழுது மந்திரிகள் அவனைப்பார்த்து நீயெங்கே போகிறாய் பொய்யுரையாமல் உண்மையைச் சொல்லென்று கேட்டனர். அப்பொழுது அம்மனிதன் அதிக புத்திசாலியாகையால், அவர்களைப் பார்த்து, "இவ்வூர் மந்திரிகள் என்னைக் காட்சி பங்களாவிலுள்ள சிம்மத்துக்கு இரையாக்கப் போகிறார்கள்; அதற்காக நான் வந்தேன்" என்று மறுமொழி கூறினன். இதைக்கேட்டு அம்மந்திரிகள், பின் வருமாறு ஆலோசிக்கலாயினர். இம்மனிதனைப்பற்றி சிம்மத்துக்கு இரையாக்க வேணுமென்ற அபிப்பிராயத்தை நாம் கொள்ளவேயில்லை, இவனை முன்பார்க்கவுமில்லை, இவனைப்பற்றி நமக்கு ஒன்றுந்தெரியாது; இப்படியிருக்க நாம் இவனைச் சிம்மத்துக்கு இரையாக்கப் போகிறோமென்று பொய்யல்லவோ உரைத்தான். சத்தியவந்தன் காலத்தில் இப்பேர்ப்பட்ட பொய்யுரைத்தவரை நாம் இதுவரையில் கண்டதே யில்லை. ஆகையால் நம்முடைய சட்டப்பிரகாரம், இவன் பொய்யுரைத்ததற்காக இவனைச் சிம்மத்துக் கிரையாக்கவேணுமென்று தீர்மானங்கொண்டு தோட்டிகளை யழைத்து இவனை சிம்மத்தினது கூட்டில் தள்ளிவிடுங்களென்று உத்தரவளித்தார்கள். அதைக்கேட்ட அம்மனிதன் அவர்களைப் 



பார்த்து நான் பொய்யுரைக்கவேயில்லை, என்னை நீங்கள் சிம்மத்துக் கிரையாக்கப்போகிறீர்களென்றல்லவோ சொன்னேன். நீங்கள் நான் சொன்னபிரகாரமல்லவோ என்னைச் சிம்மத்துக் கிரையாக்கப் போகிறீர்கள் நான் எவ்விதம் பொய் சொன்னவனாவேன், நீங்கள் செய்யப்போகிற காரியத்தையல்லவோ உண்மையாகச் சொன்னேன் என்று மறுமொழி கூறினன். அதைக் கேட்ட அம்மந்திரிகள், அவன் சொன்னது வாஸ்தவந்தான் நாம் செய்யப்போகிற காரியத்தை யல்லவோ அவன் நமக்குச் சொன்னான். ஆகையால் அவன் பொய்யுரைக்கவில்லை சத்தியந்தான் சொன்னான் அவனை விட்டுவிடுங்கள் என்றார்கள். அதில் சிலர் அவன் பொய் சொல்லவில்லையென்று தீர்மானஞ் செய்துவிட்டோம்; அதாவது அவன் உண்மை தான் சொன்னானென்று நிச்சயித்தோம். உண்மை சொன்னவரை விட்டுவிடவேண்டியதுதான், அது நம்முடைய சட்டமாயிருக்கிறது; ஆனால் நம்முடைய சட்டத்தின் முறைப்படி உண்மை அல்லது சத்தியத்தைக் காப்பாற்றவேணும். அது நம்முடைய குலதெய்வம். அவன் சொன்னது சத்தியமானால், அதாவது அவன் உரைத்த பிரகாரம் "இவ்வூர் மந்திரிகள் என்னைக் காட்சி பங்களாவிலுள்ள சிம்மத்துக்கு இரையாக்கப் போகிறார்கள்" என்பது உண்மையானால் அவன் சொன்னதைப் பரிபாலிக்கவேணும். அதாவது அவனைச் சிம்மத்துக் கிரையாக்கவேணும்; மேலும் அவன் சத்தியம் சொன்னதினால் நம்முடைய சட்டப்பிரகாரம் அவனை விட்டுவிடவும வேண்டும். இதற்கென்ன செய்யவேணும்? தெரியவில்லையே! அவன் சத்தியஞ் சொன்னதற்காக நியாயப்படி அவனைக் கொல்லவும் வேண்டும், நம்முடைய சட்டப்பிரகாரம் அவனை விட்டுவிடவும் வேண்டும்? இதற்கு வழியென்ன வென்று ஆலோசிக்கலாயினர்.

இதை வாசிக்கும் நண்பர்காள்! யாராவது இதற்கு ஒரு தீர்மானஞ் செய்து இப்பத்திரிகையில் பிரசுரிப்பார்களானால் மந்திரிகள் அதிக நன்றியறிதலுள்ளவர்களா யிருப்பார்களென்று யான் நம்புகிறேன்.

வி — கோபால ஐயங்கார். பி. ஏ.

# பொற்கிளி.

குழந்தைகள்:—தாதா! நீங்கள் எங்களுக்குக் கதை சொல்லிவெகு நாளாச்சுது. இனிமேல் தாதா! நீங்கள் இங்கேதான் இருப்பீர்கள். நீங்கள் தயவு செய்து தினம் ஒரு வேடிக்கைக் கதை சொல்லவேண்டும்.

தாதா! என் அருமைக் குழந்தைகளே! நான் காசி, ராமேஸ்வரம்முதலிய விடங்களுக்கும் உங்களைவிட்டுப் பிரிந்திருந்தேன்.

இனி இங்கேயே உங்களிடத்தி லிருப்பேன். நீங்கள் கேட்டமாதிரி உங்களுக்கு நல்ல கதைகள் அடிக்கடி சொல்லுகிறேன். லக்ஷ்மிக்கு இப்பொழுது நன்றாக பிடில்வாசிக்கத் தெரியுமா என்றார். குழந்தை லக்ஷ்மி தாதா! எனக்கு இப்பொழுது நன்றாகத் தெரியும் கொஞ்சம்பிடில் இழுக்கட்டுமா வென்றாள். ஆனால் செய், உருக்குமணியும், சுந்தரியும் பாடட்டும் என்றார். கொஞ்சநேரம் குழந்தைகள் பாடினதையும் பிடில் வாசித்ததையும் தாதா கேட்டுமகிழ்ந்தார். குழந்தைகள் கதைசொல்லும்படி கேட்கவே, தாதா பின்வருமாறு கதை சொல்லத்தொடங்கினார்:—

ஒருகாலத்தில் கமலாபுரியென்றநகரத்தில் கமலநாதனென்ற அரசனிருந்தான். இவனுக்கு குணவதியென்ற ஒருமனைவியும் மூன்று குமாரர்களுமிருந்தார்கள். இராஜன் குழந்தைகள் உல்லாசமாகத் திரியும்படி ஒரு திவ்வியமான பூந்தோட்டமொன்று ஏற்படுத்தி யிருந்தான். இதில் பற்பல விநோதமானபுஷ்பங்களும்,கனிவகைகளுமுள்ள விருக்ஷங்களும்,செடிகளுமிருந்தன. குழந்தைகளும்,அரசன் மனைவியும் தினம் சாயங்காலத்தில் அந்த சிங்காரத் தோட்டத்திற்குச் சென்று கொஞ்சநேரம் வேடிக்கையாக யிருந்து விட்டு வருவதுவழக்கம். அதில் குழந்தைகள் பலவித பக்ஷிசாதிகளையும் வைத்து வளர்த்து வந்தார்கள். இவ்விதமிருக்கையில் குழந்தைகள் பெரியவர்களாகி இராஜாங்கவிஷயத்திலும் வேலைகள் செய்துவந்தார்கள். இத்தோட்டத்தில் எவனோ ஒருவன் இலந்தைச்செடியைக் கொண்டுவந்து இராஜனுக்கு வெகுமதி யளித்தான். இராஜனுக்கு இலந்தைப் பழமென்றால் மிகப்பிரியம். ஆனதுபற்றி அதைவெகு ஜாக்கிரதையாக வளர்த்துவரும்படி கட்டளையிட்டார். அது நாளாவர்த்தியில் பெரிய விருக்ஷமாய் பழங்களும் பழுக்க ஆரம்பித்துவிட்டது. இராஜன் அப்பழங்களைப் பார்த்தான், அவைகள் தங்கப்பழமாகவே யிருந்தன. ஆனதுபற்றி அவைகளை எண்ணிவைத்தான், மறுநாள் ஒரு பழம் குறைந்திருந்தது. இராஜனுக்கு இவ்விஷயம் தெரிந்தவுடன் மிக வருத்தமுண்டாய்விட்டது. மறுநாள் பார்த்தான்; அப்போதும் இவ்விதமே ஒன்று குறைந்திருந்தது. இராஜனுக்கு மிகவிசனமும் கோபமும் உண்டாய் விட்டது. முதலில் வேலைக்காரர்களை காவலாளிகளாக வைத்து அக்களவை கவனித்து வரும்படி திட்டம் செய்தான். அவர்களால் அக்களவு கண்டு பிடிக்கமுடியவில்லை. பின்பு இராஜன் தனது மூத்தகுமாரனை அனுப்பினான். இவன் சுமார் 11-மணிக்கு நித்திரைசெய்து விட்டான். பழமோ திருட்டுப் போய் விட்டது. காலையில் இராஜன் குமாரனை விசாரிக்க, நான் நித்திரை செய்துவிட்டேன், என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை யென்றான். மறுநாள் தனது இரண்டாவது குமாரனை அனுப்பினான். இவன்சுமார் பதினொன்றரை மணிவரையிலும் கண்விழித்துக்கொண் டிருந்தான். பின்பு இவனுக்குத் தெரியாமலே தூக்கம் வந்துவிட்டது. பழமோ வழக்கம்போல் திருட்டுப்போய் விட்டது. இராஜன் மிகவருந்தினான். இளைய குமாரன் இவைகளை யெல்லாம்



கேட்டு நம்மை நமது தகப்பனார் அத்தோட்டத்திற்கு அனுப்பினால் மிகவும் நல்லது. அத்திருட்டுப் பயலை எப்படியாவது கண்டுபிடிப்பேன் என்று சொல்லிக்கொண்டு தனது தந்தையை தன்னை அனுப்பும்படி கேட்டான். இராஜன், அப்பா! குழந்தாய்! உன் தமயன்மார்களே அத் திருடனைக்கண்டு பிடிக்காமல் தூங்கிவிட்டார்கள். நீயோ குழந்தை உன்னால் முடியாதென்றார். அப்பா! தாங்கள் தயவுசெய்து என்னை அனுப்புங்கள். நான் என்னால் கூடியமட்டும் பிரயத்தனம்செய்து அத்திருடனைக் கண்டுபிடிக்கிறேன் என்றான். இராஜன் கடைசியாக சம்மதித்து தனது இளைய குமாரனை அன்று இராத்திரி அனுப்பினார்.

இளைய குமாரன் மகா புத்திசாலி, விடா முயற்சியுள்ளவன், தெய்வபக்தி, விசுவாசம், இரக்கம் முதலிய நற்குணம் வாய்ந்தவன். சோம்பலென்பதே இவனிடத்தில் கிடையாது. இவன் அன்றிராத்திரி தோட்டத்திற்கு கத்தி துபாக்கிகளுடன்சென்று ஒரு மரத்தடியில் வெகு ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டிருந்தான். பனிரெண்டு மணி யடித்தவுடன் ஆகாயத்தில் ஏதோ ஒரு சப்தம் சலசலவென்று உண்டாயிற்று. இவன் அதைக் கவனித்தான். ஒரு பொற்கிளி பறந்துவந்து இலந்தப் பழ மரத்தி லுட்கார்ந்து ஒரு பழத்தை பறித்துக்கொண்டு கிளம்பிற்று. உடனே இவன் இப்பட்சியைச் சுட்டான். அதன் உயிர் தப்பியபோதிலும் ஒரு இறக்கை குண்டால் சிதறி கீழே விழுந்தது. பட்சியோ "உனக்கு நல்லகாலம் வருமென்று" சொல்லி பறந்துபோயிற்று. இராஜகுமாரன் அந்த இறக்கையை எடுத்து காலையில் தன் தகப்பனுக்குக் காண்பித்து இரவில் நடந்த விருத்தாந்தம் முழுவதையும் சொன்னான். இராஜன் மிக மகிழ்ந்து இந்த இறக்கையை தனது மனைவிக்குக் காண்பித்தபின் தனது மந்திரிமார்களுக்கு காண்பித்தான். அவர்கள் இந்த தங்க இறக்கையைப் பார்த்து மிகவியந்து இது இந்த இராஜ்ஜியத்தின் வரும்படிக்குச் சமானமானதென்று சொன்னார்கள். இராஜன் இந்த ஒரு இறக்கையின் மதிப்பு இப்படியிருக்க அந்த பட்சியின் விலை எவ்வள வதிகமாக விருக்கும்! ஆகையால் அந்த பட்சியுமிருந்தால் மிக நலமல்லவா வென்றான். ஆசைக்கோரளவில்லை என்பதற்கிணங்க இராஜனுக்கு அதிக ஆசைமேலிட்டபடியால் தனது மூத்த குமாரனிடத்தில் இப்பட்சியைக் கொண்டுவரும்படி உத்திரவுசெய்து அவனுக்கு வேண்டிய திரவியம்கொடுத்து அனுப்பினான்.

மூத்த குமாரன் அந்தப் பட்சியை எவ்விதமாகவாவது கண்டு பிடிக்கவேண்டுமென்று மனதில் நினைத்துக்கொண்டு பிரயாணஞ்செய்ய புறப்பட்டான். சுமார் ஒரு மைல்தூரம் சென்றவுடன் அங்கொரு நரி தென்பட்டது. அதைச் சுட ஆரம்பித்தான்; ஆனால் அது இவனைப் பார்த்து, "நீ என்னைச் சுடாதே, நான் உனக்கு ஒரு யோசனை சொல்லுகிறேன், கேள்! நீயோ பொற்கிளியைக் காணப் போகிறாய்! இன்று சாயங்காலம்

இதே வழியாகச் சென்றால் உனக்கு இரண்டு சத்திரங்கள் தென்படும். ஒரு சத்திரத்தில் பற்பல வர்ணங்களமைந்த சித்திரப் பதுமைகளும், பலவித விளக்குகளு மிருக்கும். அங்கு அநேகர் வேடிக்கையாகப் பாடிக்கொண்டும், குதித்துக்கொண்டு மிருப்பார்கள், ஆனால் அச்சத்திரத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் பார்க்காதே; உள்ளேயும் போகாதே. இதற்கெதிரில் ஒரு சாதாரண சத்திர மிருக்கும், இது பார்க்க ஒரு ஏழை வீடு போலிருக்கும். இதற்குள் நீ நுழைந்தால் நீ நினைத்துவந்த காரியம் கைகூடுமென்று" சொல்லிற்று. இராஜகுமாரன் 'இதென்ன! இந்த மிருகமா! எனக்கு புத்தி புகட்டக்கூடியது?' 'இதற்கென்னதெரியும்' என்று மனதிற்குள்ளேயே நினைத்து அதனருகில் சென்று அதைச் சுட்டான். அப்பொழுது அது தப்பித்துக்கொண்டு ஆகாயத்தில் காற்றைப்போல் வாலை ஆட்டிக்கொண்டு ஓடிப்போயிற்று. பின்பு இராஜ குமாரன் நடந்துபோகையில் இவனுக்கு முன் சொலலப்பட்ட இரண்டு சத்திரங்களும் தென்பட்டன. ஒன்று மிக விநோத மாளிகைபோலவும், மற்றொன்று பாழடைந்த வீடுபோலவும் தோன்றவே, வேடிக்கைகள் நடக்கும் வீட்டிற்குள் சென்றான். அங்கு நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக்கொண் டிருப்பதினால் இவன் வந்த காரியத்தையும், தாய், தந்தை முதலியவர்களையும் மறந்துவிட்டான். இவனும் சாராயம் குடித்து அவர்களுடன் சேர்ந்து ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டு மிருந்தான்.

இப்படி ஒரு மாதமாய் விட்டது. இவன் தகப்பனுக்குச் சங்கதிகள் ஒன்றும் தெரியவில்லை. உடனே வேலைக்காரர்களை யனுப்ப உத்தேசிக்கையில் இரண்டாவது குமாரன் தகப்பன்முன்வந்து "நான் சென்று அப்பட்சியைக் கொண்டுவருகிறேன்" என்று சொன்னான். தகப்பனுக் கொன்றும் தெரியவில்லை. ஆயினும் இவனுடைய சாமர்த்தியத்தைப் பார்க்கலாமென்று யோசித்து இவனுக்கு வேண்டிய திரவியம் முதலியவைகளைக்கொடுத்து அனுப்பினான்.

இவன் வெகுதூரம் சென்றுகொண்டிருக்கையில் முதலில்வந்த நரி இவனுக் கெதிரில்வந்து இவன் தமயனுக்குச் சொன்ன மாதிரி சொல்லிற்று. இவன் அதை லட்சியம் செய்யாமல் சென்று விநோதமும், கொந்தளிப்புமுள்ள வீட்டிற்குள் சென்றான். உடனே தனது தமயனு மிருக்கக்கண்டு மிக ஆநந்தம் கொண்டு இவனும் அவனுடன் சேர்ந்து கெட்ட வழியில் காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான்.

இப்படி இருவருடைய சமாசாரமும் 2, 3, மாதங்களாகத் தெரியாதபடியால் தகப்பனார் மிக வருந்திக்கொண்டிருந்தார். இச்சங்கதி இளைய குமாரனுக்குத் தெரிய வந்தவுடன் தனது தகப்பனாருக்கு தண்டஞ் சமர்ப்பித்து "ஐயா, நான் சென்று என் அண்ணன்மார்களைக் கூட்டிக்கொண்டு அந்தப்பட்சியையும் தேடித் திரிந்து சம்பாதித்துக்கொண்டு வருகிறேன். எனக்கு உத்திரவளிக்க வேண்டுமென்று" மிக வினயத்துடன் கேட்டான். இராஜன் அப்பா! குழந்தாய் நீயோ சிறுவன் அந்தப் பட்சிக் கிடைக்காமல் உனக்கு ஏதாவது ஆபத்து உண்டானால் என்ன பண்ணுகிறது? நீ போக வேண்டாம். இருவர் சென்றும் அவர்கள் விவரமொன்றும் இன்னும் தெரியவில்லையென்று பகர்ந்தான். இளையவன் "நான் சீக்கிரத்தில் திரும்பி



வருகிறேன். நீங்க ளொன்றுக்கும் அஞ்சவேண்டாமென்று சொல்லி உத்தரவளிக்கும்படி வேண்டிக்கொள்ளவே தகப்பனார் சம்மதித்தார்.

குழந்தைகளே! இன்றைபதினம் நாழிகையாய் விட்டபடியால் நித்திரை செய்யுங்கள். அடுத்த தடவையில் மீதிக் கதையைச் சொல்லுகிறேன் என்றார் தாதா. குழந்தைகளும் அவ்விதமே நித்திரை செய்யப்போய் விட்டார்கள்.

தாதா.

(இன்னும் வரும்.)

## உத்தராம சரித்திரம்.

### (குச, லவ வாக்கியம்.)

295. கௌசிகனுடன் கூடி கானகத்தில் நடந்து
ரிஷியுடனே பர்ணசாலை இருவருமாய் புகுந்தோம்
296. மாரீசன் வந்தங்கே பாணமழை சொரிய
மன்ன ராமாகாறுமென்று மகமுனியும் பயந்தார்
297. அஞ்சாதே என்று சொல்லி ஆதரவோடுடனே
அதிசூரமாய் நாணேற்றி சில பாணங்கள் தொடுத்தேன்
298. அதிவீர மாரீசனை கடலில் விழவடித்து
அஞ்சாத சுவாகுவையும் சேனையையும் வதைத்தேன்
299. மிதுலைநகர் காணவென்று வனம் நடக்கும்போது
வலியபெருங் கல்லாகி அகலிகையுங் கிடந்தாள்
300. வனந்தனிலே கிடந்தகல்லை மனமிரங்கிப் பார்த்து
(என்) மலரடியால் மிதித்தவுடன் அகலியெழுந் திருந்தாள்
301. மனமார ஸ்துதிக்கவுமே மகரிஷியாரிடத்தில்
அவளை நாங்கள் அனுப்பிவைத்து அவ்விடம் விட்டு நடந்தோம்
302. மிதுலாபுரி சேர்ந்து மின்னிடையே நாங்கள்
(உங்கள்) அரிதான யாகசாலை வந்தோம் அணியழகி
303. (உன்) தந்தை சனகர் கண்டு சந்தோஷத்துடனே
(நீங்கள்) வந்த சேதியுரையுமென்று மகமுனியைக் கேட்டார்
304. (உன்) மங்கையரை மணம்புரிய வந்தா ரிவாளென்று
மகமுனிவர் தானிரைக்க மன்ன ராஜர் மகிழ்ந்து
305. தனுவை ஒடிப்பாரோவென்று சஞ்சலமா யிருக்க
(உங்கள்) அழகீசர் வில்லை இங்கே அழைப்பியுங்கள் என்றேன்
306. (உன்) ஐயர் அப்போ ஏவலுமே ஆயிரம்பேர் ஓடி
பெரிதானவில்லை யவாள் சபைதனிலே கொணர்ந்தாள்
307. அதிசூரமாய் நாணேற்றி வளைக்கவில்லை எடுத்தேன்
சிதறி அந்தவில் முறிந்து துண்டுதுண்டா யாச்சு
308. பெரிதான வில்முறித்துமே நாண்மைகாட்டி
பின்னையல்லோ மணம்புரிந்தேன் பொற்கொடியே உன்னை
309. (என்று) அடி நாளில்தான் செய்த ஆண்மை சூரத்தனத்தை
வடிவான சிதையற்கு மன்ன ராமர் உரைத்தார்
310. மைதலியாள் ஜானகியும் மதிப்புடனே கேட்டு
மன்ன ராமருடன்கூட மகிழ்ந்து மவளிருந்தாள்

311. ஏகாந்தமாக நித்திரைசெய்யு மோரிரவில்
மகவீரர் ஜானகியை வனத்தில் விடக்கண்டார்
312. வனத்தில்விடக் கனவுகண்டு மனதுமெத்த உருகி
சடுதியிலே எழுந்து ஸ்நானம் பண்ணி
313. மறையோர்க் கனேகங்கோடி மகதானங்கள் கொடுத்து
ஒருவருக்கும் விஷயந்தன்னை உரையாமலே யிருந்தார்
314. ஏகாந்தமாய் சீதையுடன் இருக்குமொரு நாளில்
மைதிலியை வரவழைத்து மடியில்வைத்துக்கொண்டு
315. வாகுபுஜத்தை யணைந்து மதிமுகத்தை முகந்து
எதுனக்கு ஆசையென்று ராகவரும் கேட்டார்
316. ராகவரும் கேட்கலுமே பார்மகளும் மகிழ்ந்து
நாயகனுர் முகம்நோக்கி நயந்துமவளுரைப்பள்
317. ஆசையென்றும் குறைகள்வைத்து ஆண்டீரோ ராமா
வேணவேண பாக்கியங்கள் மிஞ்சமிஞ்ச அளுத்தேன்
318. ஆனாலும் ஓராசை அண்டியும்மை கேட்பேன்
கானகத்தில் அருந்ததிமாரை காணவேணுமென்றுள்
319. ஆனாலும் ஓராசை அண்டியும்மை கேட்பேன்
போகவிடுவோ மென்று பூமகளுக்குரைத்தார்
320. மாருதியை தூதர்களை மன்ன ராமர்பார்த்து
இந்த உலக வசனங்கள் தன்னை அறிந்துவாருமென்றார்
321. மாருதியும் தூதர்களும் மாறுவேஷங்கொண்டு
நாடுநகரந்திரிந்து நல்வசனங் கேட்டார்கள்
322. ராமருட கீர்த்திகளை நாட்டிலெங்கும் கேட்டு
ஸ்ரீராமர் புகழ்கள் தன்னை திக்கெல்லாங்கேட்டார்கள்
323. மீண்டுமங்கே வரும்போது வண்ணுனொரு பாவி
விழுப்புரிவோன் தன்தாரத்தை வெடுவெடுத்துச் சொல்லன்
324. அரக்கன் கொண்டமைதலியை அறிகெட்டராமன்
இனத்துடனே சேர்த்தாப்போல என்னை எண்ணினயா
325. மதத்துடனே ஐந்திரவு அன்னியர் மனைவசித்தாய்
வஞ்சகி நீ வேண்டாமென்று வெறுத்து மவனுரைத்தான்
326. மதிகேடன் பாவிசொன்ன வார்த்தைதன்னை கேட்டு
மாருதியும் சாரணரும் மனதுமெத்த வருந்தி
327. தாசரதி ராமருட சமுகந்தன்னில் வந்து
இலேசத்துடனே பணிந்து கைகாலோய்ந்து நின்றார்கள்.

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்.

## சிறுவர்க்கான கதைகள்.

ஒருஊரில் ஒரு அகமுடையானுக்கு ஒரு பெண்சாதி இருந்தாள். அவனுக்கு ஒரு தாயாரும் இருந்தாள். ஒருநாள் மாமியார் ஆற்றுக்குப்போய் வந்த தன் நாட்டுப்பெண்ணைப்பார்த்து.

"மின்னுமினுக்கியரே, விஜயனுடதேவியரே
தண்ணிக்குபோனவிடத்தில் தாமஸங்கள் ஏதடியோ".
என்று கேட்டாள். அதற்கு நாட்டுப்பெண்,
"இருகரையுங்காவேரி கரைபுரண்டு வந்ததம்மா
அதுபார்த்துநின்றிருந்தேன் ஆம்படையான் தாயாரே".
என்று சொல்லிவிட்டு.



"கணக்கெழுதப்போன கணவன் வருந்தனிலும்
ஒற்றைக்காலூன்றி உதிர்த்தானே கண்ணீரை".
அகமுடையான் வந்தவுடன் அவனைப்பார்த்து
"சோமனழகாடா, துப்பட்டாக்காரனடா
உங்கள்அம்மா என்னை உருகஉருகச்சொன்னுடா".
என்று சொன்னாள். அதைக்கேட்டு அவன் தன் தாயாரைப்பார்த்து.
"கடுகுசிறுத்தாளை (என்) காசாம்பூமேனியளை
(என்) இடைசிறுத்தசெண்பகத்தை என்னசொன்னாய் அம்மா நீ".
என்று கேட்டான். அதைக்கேட்டுத் தாயார்.
"பீற்றல்முறத்தை, பெருக்கிவைத்தவாருகலை
ஆற்றங்கரை நாணலையும், நீ அம்மாஎன்றழைக்கணமா".
என்று வெறுத்துச்சொன்னாள்.

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்.

## சமாசாரக் குறிப்பு.

[அடுத்த பத்திரிகையில் மிஸ்ஸஸ் பேஸன் பிரசங்கமும், லோபாமுத்திரையின் திவ்விய சரிதமும், பதார்த்தகுண சிந்தாமணியின் முதற் பகுதியும் சில சித்திரப் படங்களும், நாலடியாரைப்பற்றி நமது அபிப்பிராயமும் பிரசுரிக்கப்படும்—ப-ர்.]

***

வடசமுத்திரத்தில் கில்டைன் என்ற ஒரு தீவு உளது. இதன் மத்தியில் ஒரு ஏரி யிருக்கிறது. இதன்மேல்பாகத்திலுள்ள ஜலம் நல்லதாக விருக்கின்றதாம். இதில் நல்லஜல மீன்களு மிருக்கின்றனவாம். ஆனால் இதற்கடியில் உப்புஜல மிருக்கிறதாம். இதில் உப்புஜல மீன்களு முண்டாம். இது அதிசயமே.

***

விக்டோரியா கோஷாஆஸ்பத்திரி:—சேப்பாக்கத்திலுள்ள விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரியில் ஸர்-வி-பாஷியம் அய்யங்காரின் மனைவியார் தம்முடைய சொந்தச் செலவில் ஒரு பிரசவச்சாலை கட்டிவிடப் போகிறதாகக் கேட்டு சந்தோஷக்கிறோம். இவ்வித தர்மஞ்செய்வது மிகவும் நல்லதென்றே சொல்வோம். இம்மாதுமாதிரி மற்றவர்களும் தர்மம்செய்ய முயலுவார்களென்று நம்புகிறோம்.

***

மனிதர்களுடைய தலையிலுள்ள ரோமத்தால் அழகான பொம்மைகள் செய்யக்கூடுமாம். இப்படிச்செய்வது மிக கஷ்டமென்றும் வெகுநாள் பிடிக்குமென்றும், செலவு அதிகமென்றும் சொல்லப்படுகிறது. ஆயினும் காலஞ்சென்ற விக்டோரியா மஹாராணியாரைப்போன்ற ஒரு பதுமை ரோமத்தால் செய்யப்பட்டிருக்கிறதாம். இதன் கிரயம் 200 பவுண்டு அதாவது 3000 ரூ. ஸ்பெயின் தேசத்து ராணியாரின் பதுமைக்கு 300 பவுன்.

***

அநேகப் பிராணிகளுக்கு இரண்டு கண்களைவிட அதிகமாக விருக்கின்றன. ஆனால் இவைகளைக்கொண்டு ஒரே சமயத்தில் வேலைசெய்ய முடியாதாம். அட்டைக்கு அதன் தலையினுச்சியில் 10 கண்களிருக்கின்றன. ஒருவித

புழுவுக்கு தலையில் இரண்டு கண்களும், தேகமுழுவதும் வரிசையாக கண்களு மிருக்கின்றனவாம். சிலபல்லிகளுக்கு சுபாவமாயுள்ள இரண்டு கண்களைத் தவிர அதன் தலையில் ஒரு கண் இருக்கிறதாம். குழவிக்கு இரண்டு பெரிய கண்களுண்டு. இவைகளால் சமீபத்திலிருக்கும்படியான வஸ்துகளைக் காணும். அதன் தலையி னுச்சியில் மூன்று சிறிய கண்களிருக்கின்றன. இவைகளால் தூரத்திலிருக்கும்படியான வஸ்துக்களைக் காணும்.

* * *

கொச்சி மகாராஜாவின் அரண்மனையில் பெரும்பான்மை பிராமண வேலைக்காரர்கள் நியமிக்கப்படுவது வழக்கம். இந்த இராஜவம்சத்தினர்கள் பிராமணர்களன்றி வேறெந்த சாதியாரின், உணவு தீர்த்தம், முதலியவைகளைக் கொள்ளார். ஆனதுபற்றி அரண்மனையில் ஸ்திரீகள் பிரஸவகாலங்களில் அவர்களுக்குப் பிராமண ஸ்திரீகளே மருத்துவம்செய்ய நியமிக்கப்படுகின்றனர். தக்கமருத்துவ நூல் கற்றவர்க ளில்லாமையால் கொச்சி இராஜா அவர்கள் எரணுகுளம் மகாராஜாகாலேஜில் உதவி உபாத்தியாராகிய மிஸ்டர் தேவராஜ அய்யரின் சகோதரியை தம் கவர்ன்மெண்டு செலவில் சென்னைக்கனுப்பி மருத்துவங்கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறாராம்.

* * *

சென்ற மார்ச்சுமீ 18௳ செனட்அவுஸில் 654 மாணுக்கர்களுக்கு வித்தியா பட்டமளிக்கப்பட்டது. பின்பு ரெவரெண்டு மிகனண்செல் என்பவர் மாணுக்கர்கள் பெற்ற வித்தியா பட்டத்திற்காக மங்கள வாழ்த்துக் கூறி, அவரவர்கள் பெற்ற பட்டங்களுக்குத் தக்கபடி யோக்கியமாயும், உயர்வாயும், அவர்கள் இவ்வுலகத்தில் ஜீவிக்கும்படி கேட்டுக்கொண்டார். பின்பு மஹம்மதியர்களின் கல்வி விஷயமாக யூனிவர் ஸிட்டி வித்தியாவிஷயத்தில் மஹம்மதியர்கள் மற்ற வகுப்பினரைப் பார்க்கினும் எவ்வளவு குறைவாயிருக்கிறார்களென்பதைக் காட்ட ஒரு கணக்கைப்படித்தார், இவர் இவ்விதம் செய்தது சரி என்றே எண்ணுகிறோம். ஏனெனில் இவர் மகம்மதியர் விஷயத்தில் எப்பொழுதும் பக்ஷம் காட்டி வந்திருக்கிறார்.

* * *

## மதுரைத் தமிழ்ச் சங்கம்.

1903ஆு நவம்பர்மீ 14௳ யிலும் டிசம்பர்மீ 8 தேதியிலும் இச்சங்கத்தார் நடத்திய ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷையில் தேறிப் பரிசும் யோக்கிதாபத்திரமும் பெறும் பெண்மணிகளின் விபரம்:—

எப்-ஏ பரீக்ஷை:—2-வது வகுப்பு: பாப்பம்மாள் புஷ்பவதி மாசிலாமணி டவிடெண்ட். பொரோடெஸ்டண்டு காலேஜ் சென்னை.

மெட்ரிகுலேஷன் பரீக்ஷை.

1-வது வகுப்பு - டி. மாணிக்கம்மாள் - அமெரிக்கன் மிஷன் பெண் பாட்சாலை மதுரை.

(111) 20 ரூபாயும், யோக்கியதாபத்திரமும்.

2-வது வகுப்பு. (யோக்கியதா பத்திரமட்டும்).

1. டி. ஜெயமணி. அமெரிக்கன்மிஷன் பெண்பாடசாலை மதுரை.
2. யஸ். வி. ரத்னவதி „ „
3. ஜி. புண்ணியவதி „ „
4. சி. வை. பொன்னம்மாள் „ „

* * *




# DR. LOGAN'S
# RELIABLE REMEDIES,

டாக்டர் லோகன் அவர்களின் பிரசித்தமடைந்த கேசமோஹன தைலமென்னும் சுருங்கார சுகந்த கூந்தல்வளர் தைலம்.—இத்தைலமானது அனேக வனமூலிகைகளால், செய்யப்பட்டவை. இதை தினந்தோறும் ஸ்திரீ புருஷர்கள் இதர எண்ணெய்களுக்கு பதிலாக கூந்தலினுடைய உட்புரத்தில் இத்தைலத்தை தடவிவர சுண்டுகளை போக்கி சிரோஉணத்தை தணித்து சிரோதுவாரங்களை மிருதுவாக்கி மயிரை நீளமாயும் செழிப்பாயும் அடர்த்தியாயும் அழகாயும் மினுமினுப்பாயும் கருப்பாயும் வளரச்செய்யும். தவிரவும் கண்ணெரிச்சல், சகலவிதமான கண்நோய்களையும் போக்கடிக்கும். இதுவிஷயத்தில் விசேஷமாய் எடுத்தோதுவதில் அசாத்தியமானதால், ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவரும் இந்த அருமையான தைலத்தை உபயோகித்துவா உண்மை விளங்கும். புட்டி 1-க்கு விலை ரூபா 1—0—0.

டாக்டர் லோகன்பிரேயின் அண்ட் நேர்வைன் டானிக்.புட்டி 1-க்கு
விலை ரூபா. 1—8—0.

டாக்டர் லோகன் சுரதிராவகமும், மாத்திரையும். ட்ராப்ஸ் புட்டி 1-க்கு
விலை ரூபா. 0—12—0.

மாத்திரை புட்டி 1-க்கு விலை ரூபா. 0— 8—0.

டாக்டர் லோகன் படை சம்ஹாரி. புட்டி 1-க்கு
விலை ரூபா. 0—4—0.

டாக்டர் லோகன் சுகந்த பல்பொடி. டப்பி 1-க்கு
விலை ரூபா. 0—4—0.

**Dr. LOGAN,**
SOLE PROPRIETOR & MANUFACTURER,
AYURVEDIC PHARMACY
*Pycroft's Road, Tripilicané, Madras.*


## தங்கம் வெள்ளி கில்ட் சாமான்கள்.

| | ரூ | அ. | |
|---|---|---|---|
| (1) ஒட்டியாணம் 65 சலங்கையுள்ளது ... ... | 5 | 0 | 0 |
| (2) போல் கைகாப்பு ... ... ... | 9 | 0 | 0 |
| (3) கெட்டிக் கைகாப்பு ... ... ... | 7 | 0 | 0 |
| (4) புதுச்சேரி கொலுசு ... ... ... | 12 | 0 | 0 |
| (5) அட்டிகை ... ... ... | 12 | 0 | 0 |
| (6) காரை ... ... ... | 10 | 0 | 0 |
| (7) வங்கி ஒற்றை ... ... ... | 10 | 0 | 0 |
| (8) சலங்கை 100 ... ... ... | 10 | 0 | 0 |
| (9) ஷர்ட் பட்டன்ஸ் ... ... ... | 3 | 8 | 0 |
| (10) ஜடை நாகம் ... ... ... | 25 | 0 | 0 |
| (11) ரோஜா திருகுப்பூ ... ... ... | 2 | 0 | 0 |
| (12) அரைமூடி ... ... ... | 2 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| (13) மோதிரம் | ... | ... | ... | 0 12 0 |
| (14) தாழம்பூ | ... | ... | ... | 1 0 0 |
| (15) திருகுப்பூ | ... | ... | ... | 1 0 0 |

உள்ளும் புறமும் மெருகுபோட்ட வெள்ளி கில்ட் சாமான்கள் ரூ. எடை 2½ அணா விதம் விற்கப்படும்.

## பி. எஸ். சுந்தரம் அண்டுகோ.

திருவல்லிக்கேணி, 107-பெரிய தெரு,

---

## நமது சந்தாதாரர்களுக்கு

புதிய வருஷம் பிறந்து 3 மாதங்கள் ஆய்விட்டன. இன்னும் நமது சந்தாதாரர்களில் சிலர் நாளது 1904-ம் வருஷத்திய சந்தாபாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். இந்த சஞ்சிகை கிடைத்தவுடனாவது தயவுசெய்து அனுப்பும்படியாய் கேட்டுக்கொள்வதுடன் பத்திரிகையையும் அபிமானித்து நடத்தி வருவார்களென்று நம்புகிறோம். மேல்கண்டபடி சந்தா அனுப்பாதவர்களுக்கு அடுத்த மேயீ சஞ்சிகை. வி. பி. யில் அனுப்பப்படும். பெற்றுக்கொள்ளும்படியாய் கேட்டுக்கொள்கிறேன். நமது சந்தாதாரர்கள் தகுந்த கனவான்களாதலால் இது ஓர் பெரிதல்ல. மேல் விலாசம் மாறும்பொழுது உடனே தெரியப்படுத்தவேண்டும்.

## மாதர் மனோரஞ்சினி சந்தாவிபரம்.

| | ரூ. அ. பை |
|---|---|
| வருட சந்தா தபால் சார்ஜ் உள்பட வெளியூர் உள்ளூராருக்கு... | 1-12—0 |
| 6-மாதத்திற்கு ... ... ... ... ... | 1—0—0 |
| தனிப்பிரதி ... ... ... ... ... | 0—2—6 |
| மேல் நாட்டாருக்கு ... ... ... ... | 2—4—0 |
| திக் பேபர் வருட சந்தா ... ... ... ... | 2—8—0 |

முன்பணம் அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

---

ஏஜண்டுகள் தேவை !!

ஏஜண்டுகள் தேவை !!

வெளி ஜில்லாக்களில் நமது மாதர்மனோரஞ்சினி யென்னும் மாதாந்தரத் தமிழ்பத்திரிகைக்கு சந்தாதாரர்களைச் சேர்க்க ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

விபரம் தெரியவேண்டியவர்கள் மாதர்மனோரஞ்சினி ஆபீசு மானேஜருக்கு சீக்கிரம் யெழுதி பதில் தெரிந்துகொள்ளலாம்.

திருவல்லிக்கேணி }
15—4—04. }

☞ பி. வைத்தியநாத ஐயர்,
மானேஜர், மாதர் மனோரஞ்சனி ஆபீஸ்,
வீரராகவமுதலி தெருவு, திருவல்லிக்கேணி.

Printed at the Ripon Press Madras & Published by the Proprietor,
C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras,

REGISTERED
23 JUN 1904
MADRAS

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. VI } Madras: May 1904. { No. 5.
புத்தகம் சு. } சென்னபட்டணம்: 1904 மேயீ. { இல. 5.

## MRS BENSON ON THE EDUCATION OF INDIAN GIRLS.

If India is to have no future, then by all means leave the women ignorant, but if you look to a bright future, then for every day you postpone the education of your women, you postpone in equal measure, and in exact proportion that bright future, for, "a nation rises no higher than its mothers"—Mrs. Benson.

Sir. S. Subramania Iyer in his address said that he believed in the future—'He believed in innumerable civilisations to come', 'Indian Women have to be educated' "How can Indian women benefit by the high ideals of Indian womanhood presented in India's epic poems, if they have no education, no intellectual work to do, nothing to learn, and are simply mothers?."

---

## "மிஸ்ஸஸ் பென்ஸன்மாது பெண்கல்வியைப்பற்றி சொல்லியது."

இந்தியாவிலுள்ள ஆங்கில மாதர்களில் இந்திய ஸ்திரீகளின் விருத்தியைப்பற்றியும் அவர்களுக்கு முக்கியமாய் வேண்டிய கல்வியைப்பற்றியும் மிக்க அக்கரை யெடுத்துக்கொண்டு ஊக்கத்துடனும், பிரியத்துடனும் மனதார உழைப்பவர் சென்னை ஐகோர்ட் ஜட்ஜிகளில் ஒருவராகிய கனம் மிஸ்டர் பென்ஸன் என்பவருடைய உத்தம மனைவியாரென்றே சொல்வோம். இம்மாது இந்திய மாதர்களின் விஷயமாக உழைக்காத காரியமேயில்லை. நம்மிந்தியமாதர் விஷயத்தில் இம்மாதுக்கு மிக்க அநுபோகமுண்டு. இந்திய மாதர்கள் கல்வியறிவுள்ளவர்களாகவும் யாவராலும் மதிக்கப்பட வேண்டுமென்ற எண்ணமுமுடையவர். இவ்வித எண்ணமிருப்பதால்தான் இம்மாது சென்னையிலுள்ள கலவல கன்னைய செட்டியாருடைய பெண்கள் பாடசாலையின் வரு

ஷோற்சவம், சென்ற மார்ச்சுமாதம் 2உயன்று நடந்த காலத்தில் இந்திய கனவான்களுக்கு பெண் கல்வி விஷயத்திலுள்ள உணர்ச்சி யின்மையையும், உதாசினத்தையும் எடுத்துக்காட்டி அவர்கள் இனியும் அவ்விதமிருக்கக் கூடாதென பின்வருமாறு பிரசங்கம் செய்தார்கள். "மிஸ்டர் பால்லோர்கர்ட் தாம் அமெரிக்காவுக்குப் போனதைப்பற்றி ஒரு திவ்ய புஸ்தகம் எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தில் ஒரு அதிகாரம் முழுமையும் கல்வியைப்பற்றி வெகுநன்றாக எழுதப்பட்டிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரத்தின் வீதிகளில் ஒரு பிரயாணி சென்றபோது அவன்போகும் ஒவ்வொரு தெருவின் முனையிலும் ஒன்றைப்பார்க்கினும் ஒன்று புதிதாயும் அதிக மேன்மையாயுமுள்ள கட்டடங்களைப் பார்த்ததாகவும் அவைகளில் 607-கட்டடங்களும் பாடசாலைகளென்று எழுதப்பட்டிருக்கிறது. இவைகள் ஆறுவகுப்புகளாக பிரிக்கப்பட்டிருக்கின்றன: 39-கிண்டர் கார்டன் பாடசாலைகளும், 48-பிரைமரி பாடசாலைகளும், 55-மத்தியவகுப்பு பாடசாலைகளும், 10-ஐஸ்கூல்களும், 24-கைத்தொழில் பாடசாலைகளுமாம். இவைகளில் 1615-உபாத்தியாயர்களும், உபாத்திமார்களுமிருக்கிறார்கள். இவர்களுக்கு ஒருவருஷ மொத்த சம்பளம் 2,000,000 டாலர்கள்.

சர்க்கார் உதவியின்றி போஸ்டன் நகரத்தாரே இத்தொகையை இப்பாடசாலைகளுக்கு கொடுத்து வருகிறார்கள். இவைகள் இயற்கையாயுள்ள குணங்களை விருத்திசெய்வதற்கான ஏதுக்களை தங்கள் இனத்தார் விஷயத்தில் தவராது உபயோகப்படுத்த எண்ணும் அந்நகரத்தினரது உண்மையான எண்ணத்தை விளக்குகின்றதல்லவா?

போஸ்டன் நகரத்திலுள்ள பெண்களும் பிள்ளைகளும் ஒன்றாகவே கற்பிக்கப்பட்டு ஒரேவிதமான அனுகூலங்களுக்குப் பாத்திரர்களாயிருக்கிறபடியால் போஸ்டன் நகரத்துப் படிப்பையும், சென்னைப் படிப்பையும் ஒத்திட்டுப் பார்ப்பது அசாத்தியம், ஆனால் இச்சென்னையில் பாடசாலைகளுக்குப் போகும் வயதுள்ள 26,000 பெண்களில் 6000 பெண்கள்தான் கற்பிக்கப்படுகிறார்கள்.

எழும்பூரிலுள்ள "பிரஸிடென்ஸி டிரெயினிங் பெண்பாடசாலையும், ராயப்பேட்டையிலுள்ள மகம்மதிய பெண்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஹோபர்ட் பெண்பாடசாலையும் நமது கவர்ன்மெண்டாரால் ஆதரிக்கப்பட்டு வருகிறது. இங்கிலாந்திலுள்ள ஐரோப்பியர்களிடமிருந்தும் நம் தேசத்தினரிடத்திலிருந்தும் ஒன்றேமுக்கால் லக்ஷம்ரூபாய்க் கதிகமாக மிஷன் பாதிரிமார்களால் சேகரிக்கப்பட்டு பெண்பாடசாலைகள் வெகு நன்றாக ஆதரிக்கப்பட்டு வருகின்றன. இச்சென்னையிலுள்ளபிரபுக்கள் என்ன செய்கிறார்கள்? இச்சபையிலிருக்கும் சிலர்மட்டும் இக்காரியம் தங்கள் கடமையென்று அறிந்து தங்கள்மனதிற்றோன்றியவண்ணம் உதவி செய்து



கொண்டு வருகிறார்கள். ஆனால் இன்னும் அதிகமாக பெண்கல்வியை விருத்தி செய்யக்கூடாதா? இது தக்க சமயமல்லவா? பிறப்பு முதல் இறப்புவரையிலும் யாதொரு கல்வியறிவுமில்லாமல் காலத்தை வீணுகக் கழிக்கும் 20,000 பெண்களுடைய கதி என்ன? நாம் இச்சென்னை நகரைச் சுற்றிப் பார்ப்போமாகில் இந்நகரப் பெண்பாவையர்கட்கு இவ்வூர் மனிதர்களால் கட்டப்பட்ட பாடசாலை ஏதேனும் ஒன்றுண்டா? இல்லவே யில்லையே! மைலாப்பூரில் கனவான்களால் இப்பொழுது கட்டப்பட்டிருக்கும் அழகான பங்களாக்களுக்கு மத்தியில் ஒரு நல்லமாதிரி பெண் பாடசாலை ஏற்படுமானால் அவ்வூர் எவ்வளவு மேன்மைப்படும்? கூடலூரைச் சேர்ந்த மஞ்சக்குப்பத்திலிருக்கும் பெண்பாடசாலையானது ஒரு பெண்மணி யால் தனது இறந்துபோன கணவரின் ஞாபகக் குறியாகக் கட்டப்பட்ட தென்று என் ஞாபகத்தில் வருகிறது. இவ்விதமான நற்காரியத்தைவிட மேலானதெது?

அமெரிக்கா இளமையா யிருப்பதினாலும் வருங்காலத்தில் தனது லாபங்களை எதிர்பார்ப்பதினாலும் கல்வி விருத்தியில் அடங்காத ஆசைப் படுகிறது.

இந்தியாவிலோ நேர்விரோதமாக விருக்கிறது. நீங்களோ வருங்காலத் தைப்பற்றி கிஞ்சித்தேனும் யோசிக்காமல் சென்ற காலத்தில் நம்பிக்கை யுள்ளவர்களா யிருக்கிறீர்கள். உங்கள் கிரந்தங்களும், பிரசங்கங்களும், எண் ணங்களும், முன் காலத்தையே அநுசரித்தவைகளா யிருக்கின்றன. அநேக வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட பெண்மையின் கருத்தைப்பற்றியும், வித்வத்சிரோன்மணிகளான சில ஸ்திரீகளின் மேன்மையான சரித்திரங்களை க்கேட்டு திருப்தி யடைகிறீர்கள். ஆனால் இப்பொழுது உங்கள் முன் நடக் கும் அநுகூலமான மாறுதலையும், வருங்காலத்தில் மேன்மையான நம்பிக் கையும் நீங்கள் மறந்து விடுவது நியாயமா? இந்தியாவுக்கு வருங்காலத்தி னிடத்து நம்பிக்கை யில்லையா? அவ்வித நம்பிக்கை யில்லாமற்போனால் உங் கள் ஸ்திரீகளை கல்விப்பெருக்கமின்றி அந்தகாரநிலைமையில் விட்டுவிடுங்கள். ஆனால் வருங்காலத்தின் சிறப்பை நாடினால் உங்கள் ஸ்திரீகளின் கல்வியை ஒவ்வொருநாளும் நிறுத்தி வைக்கிறீர்களென்பதையும், வருங்காலத்தின் சிற ப்பை தள்ளி வைக்கிறீர்களென்பதையும் தெரிந்துகொள்ளுங்கள். அவ்வி தம் தாமதிப்பதால் ஒரு ஜாதியின் நேர்மையும் சிறப்பும் அச்சாதியிலுள்ள தாய்மார்களின் நேர்மைக்கு மேலானதாக ஒருக்காலும் ஆகாது.

ஜஸ்டிஸ். ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களும் 'இனி கணக்கிடக் கூடாத நாகரீகங்கள் அநுபவத்தில் வரும் என்று தாம் முற்றிலும் நம்பு கிறதாகச் சொல்லி யிருக்கிறார்கள். ஆகையால் அவருடைய வார்த்தை நம க்கு நம்பிக்கையைத் தருகிறது. இறந்த காலத்தினிடம் நம்பிக்கையை யொழித்து நம்முன் நடக்கும் நடவடிக்கைகளுக்கு தகுந்தாற்போல் நடந்து நம்பெண்மணிகளை கற்பிக்கவேண்டும்.

நம்முடைய ஸ்திரீகள் யாதொன்றும் கற்காமலும், அவர்கள் புத்தியை விருத்திசெய்யக்கூடிய வேலையாதொன்றும் செய்யாமலும் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு தாய்மார்களாக விருந்தால், நம்முடைய காவியங்களில் சொல்லியிருக்கும் மேன்மையான குணம் பொருந்திய ஸ்திரீகளின் சரித்திரங்களினால் அவர்களுக்கு என்ன பயன்? ஆகையால் "இந்துஸ்திரீகள் கல்வி கற்று முன்னுக்கு வந்தாலன்றி இந்து வாலிபர்கள் முன்னுக்கு வாரார்கள்" என்று சொன்னார்.

மிஸ்ஸெஸ் ஸோராப்ஜி அம்மாள் சென்ற டிசம்பர் மாதத்தில் நடந்த மகம்மதிய சங்கத்தார் சபையில் "அந்தப்புறங்களிலும் இந்துக்கள் வீடுகளிலுமிருக்கும் கல்வியற்றிருக்கும் பேதமையானஸ்திரீகளுக்கு கல்விகற்பித்து காப்பாற்றும்படி" யாவர் மனதையும் உற்சாகப்படுத்தும்படி பேசியது யாவருக்கும் தெரியும். இதுவுமன்றி "பெண்பிள்ளைகளுக்கு சிறுபாடசாலைகள் ஏற்படுத்தி அங்கு கொஞ்சம் கொஞ்சமாய் ஆங்கிலம் கற்பித்து வரவேண்டுமென்றும், இங்கிலாந்து தேசத்திய ஸ்திரீகளுக்கு அதிக சுதந்திரத்தையும், 'அந்தஸ்தையும்' கௌரவத்தையும் அளித்து, அவர்களிடத்தில் பிறருக்கு நேசத்தை யுண்டுபண்ணுகிறது ஆங்கிலபாஷையும், அப்பாஷையின் கிரந்தங்களுமாதலால், அவ்வாங்கில பாஷையானது நம் தேசமுற்றிலும் பரவி நம் ஸ்திரீகளுக்கும் அவ்வித அநுகூலங்களைச் செய்யவேண்டுமென்பது எனது கோரிக்கை" என்று மொழிந்திருக்கிறாள். இந்தியமாதர்கள் முன்காலத்திலிருந்ததை விட இப்பொழுது அதிக விருத்திக்கு வரகாரணமிருக்கிறது, பம்பாயிலுள்ள பண்டித ராமாபாய் என்றமாது 2000 இந்துகைம் பெண்களுக்கு கல்வியறிவை ஊட்டி வருகின்றாள், மிஸ்ஸெஸ்ஸோராப்ஜியும் மைசூரிலுள்ள பி-ஏ பரீக்ஷையில்தேறிய இரண்டு பிராமண மாதர்களும் இந்தியன் லேடிஸ் மகாஸின் பத்திரிகையை செவ்வனே நடத்திவரும் மிஸ்ஸெஸ் கமல சத்தியநாதன். எம். ஏ. பம்பாயில் பி-ஏ பரீக்ஷையிற் றேறிய நான்கு இந்திய மாதர்களும், தங்கள் சகோதரிகளின் விருத்தியைக்குறித்து எவ்வளவோ நன்மை செய்யலாம். 'ஏதோ சிலர் தான் பெண்களின் விருத்தியைக்குறித்து உழைத்துவருகிறார்கள் என்ன பிரயோஜனம்' என்று நினைப்பீர்களாகில் மிஸ்ஸோராப்ஜி பின் சொல்லிய பிரகாரம் நீங்களும் தைரியத்துடனும் ஊக்கத்துடனும் உழைக்கவேண்டும். அமெரிக்காவில் ஒரு யுத்தவீரன் யுத்தகாலத்தில் எதிரிகளை நோக்கிச் செல்லும்படி கட்டளையிடப்பட்டான். இவன் தைரியத்துடன் சில போர்வீரர்களுடன் மரங்களடர்ந்த காடுகளின் வழியாக ஜயம் அடைவோம் என்ற நம்பிக்கையில்லாமலே சென்றான். மேலும் இவனுடைய எதிரிகள் பக்கத்தில் போர்வீரர்களோ அதிகம். இவர்களை இவன் எவ்விதம் எதிர்க்கமுடியும்? விசாலமும் அதிக தூரமுமுள்ள அக்காட்டின் வழியாக இரவு முழுவதும் அவநம்பிக்கையுடன் தன் சேனைகளை யிட்டுக்கொண்டு சென்றான். விடியிற்காலையில் இவன் அக்காட்டை தாண்டியவுடன் நாலாபக்கத்திலிருந்தும் இவனைச்சேர்ந்த பல போர்வீரர்கள் தங்கள் சேனைகளுடன்



இவன் எண்ணியதுபோலவே எண்ணிக்கொண்டு வந்துவிட்டார்கள். இவனுக்கும் அவர்களுக்கும் அப்பொழுது எவ்வளவு சந்தோஷமிருந்திருக்கும்! அவர்கள் மனது எவ்வித மிருந்திருக்கும் ?!! இவ்விதமே பெண்களின் நன்மைக்காக உழைப்பவர்கள் சிலராகவிருந்தாலும் கிரமமாக யாவருக்கும் நன்மை பயக்கும்; ஆகையால் ஒவ்வொருவரும் நன்மைசெய்ய "முன்வைத்த காலை பின்வாங்காமல்" உழைத்துவரவேண்டும் என்று சொல்லி முடித்தார்கள்.

# லோபாமுத்திரை.

பூர்வகாலத்தில் விதர்ப்பதேசத்து அரசனுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. இது மிக அழகுபொருந்தி மகாலக்ஷ்மியைப்போ லிருந்தது. இக்குழந்தையை பெற்றோர்கள் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவருகையில் அதற்கு லோபாமுத்திரை எனப் பெயரிட்டார்கள். "குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழகு, மஞ்சளழகு மழகல்ல — நெஞ்சத்து, நல்லம் யாமென்னு நடுவு நிலைமையாங் கல்வியழகே யழகு" என்ற பாட்டின்பிரகாரம் பெரியோராகிய தாய் தந்தையர்கள் வித்தியாப்பியாசமும் செய்து வைத்து ரூபலாவண்ணியமும், நற்குண நற்செய்கைகளும் பொருந்திய இப்பெண்ணை மிகப் பிரியத்துடன் வளர்த்துவந்தார்கள். லோபாமுத்திரையோ தனது உபாத்தியாயர் சொல்லியபிரகாரம் கேட்டும் படித்தும் வந்தாள்.

சாயங்காலத்தில் தனது தோழிகளுடன் சிங்காரத்தோட்டத்திற்குச் சென்று பலவித விளையாடல்களை ஆடுவாள். வீட்டிலோ சங்கீதம் வெகு நன்றாகப் பாடுவாள். சித்திரமும் எழுதிவந்தாள். இவைகளையெல்லாம் தாய் தந்தையர்கள் கண்டு மிக மகிழ்ந்தார்கள். இப்பெண்மணி கல்வியிலும், புத்தியிலும் சரீர சுந்திரத்திலும் யாவரும் மெச்சும்படியாய் ஜலத்திலுள்ள தாமரைபோலவும், வணக்கத்தில் மகாலக்ஷ்மியைப் போலவும், சிரத்தையுள்ளவனிடத்தில் கல்வியைப்போலவும் விருத்தியடைந்து தாய்தந்தையர்கள் கண்களுக்கு ஒரு அழகான மாணிக்கம்போல் விளங்கிக்கொண்டிருந்தாள். வயதிலேயும் ரூபத்திலேயும் இவளுக்குச் சமானமாய் நூறு பெண்கள் இவளுக்குச் சகிகளாக விருந்தார்கள். இவர்களுடன் சேர்ந்து ஆடல்பாடல்களைச் செய்துகொண்டு சந்தோஷமாகவிருக்கும் சமயத்தில் இப்பெண்மணிக்கு யௌவனபர்வம் வந்தது.

இவ்வித நற்குணமும் ரூபலாவண்ணியமும் வாய்ந்த பெண்ணின்மேல் அநேக இராஜாக்கள் இச்சைக்கொண்டிருந்தார்களே தவிர இக்கன்னிகையை விவாகம் செய்துகொள்ளப் பிரயத்தினப்படவில்லை. ஏனெனில் ரிஷிகளிற் சிறந்தவரான அகஸ்திய ரென்பவர் இந்தக்கன்னிகையை மணம்புரிய வேண்டுமென்று வெகுநாளாக எண்ணங்கொண்டிருந்தார். இவர் ஒருநாள் இக்கன்னிகையை மணம்புரிந்து இல்வாழ்விலிருக்கவேண்டுமென நினைத்து தமது ஆசிரமத்தை விட்டு புறப்பட்டு விதர்ப்பதேசத்துக்கு வந்து இராஜனைக்கண்டார்.

இராஜன் இவருக்கு செய்யவேண்டிய மரியாதைகளைச்செய்து இவரை ஆசனத்தில் உட்காரச்செய்து க்ஷேமசமாசாரங்களையும் இவரிங்கு எழுந்தருளியதற்கு காரணத்தையும் மிகச் சந்தோஷத்துடன் கேட்டார். இதற்கு அகஸ்தியர் ஓ இராஜனே ! நீ மகாசத்திய வந்தனல்லவா என்றார்.

இராஜன் மகாரிஷியே ! ஆம், நான் சத்தியத்தை எனது குலதெய்வமாக பாவித்து வருகிறேன் என்றான்.

அகஸ்தியர் நீ தருமம் செய்வதில் கொஞ்சமாகிலும் அஞ்சாத நெஞ்சுடையவனன்றோ வென்றுகேட்டார். ஆம் தர்மம் தலைகாக்கும் என்றபடி நான்தர்மத்தை கைநழுவவிடாமல் பாதுகாத்து வருகிறேன் என்றான். ரிஷியானவர் மிகச் சந்தோஷப்பட்டு பேஷ்! மகா இராஜாவே! நான் இப்பொழுது உன் புதல்வியை மணம் செய்துகொள்ள எண்ணி வந்திருக்கிறேன். உன் சம்மதம் என்னவென்று கேட்டார்.

உடனே இராஜன் மிக வருந்தினான். இன்னது செய்கிறதென்று ஒன்றும் தெரியவில்லை. கொஞ்சநேரம் தயங்கினான். ஆச்சரியமும் துக்கமுமுண்டாயின. பின்பு பிரபஞ்ச சம்பந்தமான சுகத்தைவிட்டு எப்பொழுதும் தேசங்களில் திரிந்துகொண்டும் காட்டில் தபசு செய்துகொண்டுமிருக்கும் இந்தப் பிராமணனுக்கு க்ஷத்திரியகுலத்தில் பிறந்து இராஜ கிரகத்தில் வளர்ந்து சுகஜீவனம் செய்துகொண்டு கஷ்டமென்பதே கொஞ்சங்கூட அறியாமலிருக்கும் என் அருமைக் குமாரத்திக்கும் எவ்வளவு வித்தியாசம்! என்று மனதில் எண்ணிக்கொண்டு அந்தப்புறத்துக்குச் சென்று இச்சங்கதியை தனது மனைவிக்குச் சொன்னான். இவனது மனைவியும் இதைக்கேட்டு மிக வருந்திக் காட்டில் மரவுரியைத் தரித்துக்கொண்டும், கிழங்கு, கீரை முதலியவைகளைப் புசித்துக்கொண்டும், தேகத்தை தபசால் இளைக்கும்படி செய்துகொண்டும் மகா தபசியாயுமிருக்கிற இந்த ரிஷி நமது குமாரத்தியை விவாகம் செய்துகொண்டால் நமது பெண்ணை அவருடன் அனுப்பாமலிருக்க முடியுமா? எல்லாம் தெரிந்த நம் சுவர்ணவிக்கிரகமான நமது அருமையான குழந்தையை ரிஷிக்கு விவாகம் செய்துவைக்கலாமா? அவ்விதம் நாம் செய்துவைக்க சம்மதப்படாவிட்டால் அவரெங்கு சாபமிடுவரோ" வென்று பலவாறாக எடுத்துச் சொன்னாள்.



இவ்விதம் துக்கப்பட்டுக்கொண்டும் ஆலோசனை செய்துகொண்டுமிருக்கிற தாய்தந்தையர்களிடத்தில் லோபாமுத்திரை வந்து அவர்கள் துக்கப்பட்டுக்கொண் டிருக்கும்படியான காரணத்தை யறிந்து தான் தீர்க்காலோசனை செய்து அப்பா! அம்மா! உங்களுக்கு விருதாவாக இந்த துக்கம் என்னத்திற்கு? நீங்கள் மனப்பூர்ணமாய் சந்தோஷத்துடன் அந்த ரிஷிக்கு என்னை விவாகம் செய்துவைத்து இந்த துக்கத்தைப் போக்கடித்துக் கொள்ளுங்கள். அவரோ மகாநுபாவர். ரிஷிகளில் உத்தமர். இந்திரத்தாய்மன் மகாராஜனை மதங்கொண்ட யானையாகும்படி சபித்தவர். சமுத்திர ஜலத்தை ஒரு காலத்தில் உள்ளங்கையிலடக்கி பானம் பண்ணிவிட்டது உங்களுக்குத்தெரியும். இவரோ மகாசாஸ்திரவிற்பன்னர். பிரமசாரியனுஷ்டானமுள்ளவர். நமது கிரகத்திற்குத் தாமே வராதவர். யாவராலும் பூஜிக்கப்படும் மகானுபாவன். இவ்வித குணங்களமைந்தவர் நமது கிரகத்திற்கு வந்து விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்றுகேட்டால், நாம் மறுபேச்சு பேசாமல் சந்தோஷமாய் மங்களமான காரியத்தை நடப்பித்து வைக்க வேண்டியது தங்களுடைய கடமை. எனக்கு அவரை மணம்புரிவதில் மிக இஷ்டம். அவர் ரிஷியாகவிருந்தபோதிலும் அவரைப்போன்ற யோக்கிய சிகாமணி கிடைப்பது அரிது. ஆனதால் அவரை மணம்புரிவதில் எனக்குச் சந்தோஷம். தாங்களிருவரும் தயவுசெய்து விசனமன்றி சந்தோஷமாக இவ்விவாகத்தை நடத்திவைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன் என்று மிக பயபக்தி, விசுவாசத்துடன் வணங்கிக்கேட்டாள்.

தாய்தந்தையர்கள் தங்களது குமாரத்தியின் தைரியமான வார்த்தைகளைக் கேட்டு மிகச் சந்தோஷப்பட்டார்கள். ஆகாயவாணியும் லோபாமுத்திரைக்கு "குறைவேயில்லை தீர்க்க சுமங்கலீபவா" எனச் சொல்லிற்று. தாய் தந்தையர்கள் இதையும் கேட்டு மிக மகிழ்ந்து விவாகத்திற்கு ஒரு சுப முகூர்த்தம் ஏற்படுத்தி சாஸ்திர விதிப்பிரகாரம் தங்களது அருமையான குமாரத்தியை அகஸ்திய மகாரிஷிக்கு விவாகம் செய்து வைத்தார்கள்.

பிறகு, லோபாமுத்திரையும், அகஸ்தியரும் சில நாள் இங்கிருந்து பின் அகஸ்தியர் தமது மாமனார், மாமியாரிடத்தில் விடைபெற்று வனத்திற்குச் செல்ல பிரயத்தினம் செய்தார். உடனே குணசீலமுள்ள லோபாமுத்திரை, தனது அழகான வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் எடுத்துவிட்டு மரவுரி முதலியவைகளைத் தரித்துக்கொண்டு தனது பிரியமுள்ள பர்த்தாவுடன் கங்காதீர்த்தத்திற்குப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது லோபாமுத்திரை தனது தாய் தகப்பனரையும் பந்துஜன மித்திரர்களையும் பிரிந்துபோவதின் பொருட்டு மிக விசனப்பட்டாள். ஆயினும் தனது பர்த்தாவின் சுகத்தின் பொருட்டும், அவருடைய பிரயத்தினம் சித்திக்கும்பொருட்டும் "தான் கஷ்டப்படுவது உத்தம தர்மமென்று அறிந்த லோபாமுத்திரை வனத்தில் வசிப்பது கஷ்டமென்று கிஞ்சித்தே

னும் நினைக்காமல் அவருடன் சென்றாள். தர்ம சாரிணியாயிருக்கிற லோபாமுத்திரை யாதொரு சிரமமின்றி தமது பர்த்தாவுடன் காசிபோய்ச் சேர்ந்து அங்கு ஒரு ஆசிரமம் ஏற்படுத்திக்கொண்டு வசித்துவந்தார்கள். "குலமகட்கழகு தன் கொழுநனைப்பேணுதல்" என்பதற்கும் "ஸ்திரீகளுக்குப் பதிசுச்ரூஷையைத் தவிர வேறு விரதமில்லை" என் (118 வது சர்க்கம் அயோத்தியாகாண்டம், இராமாயணம்) பதற்கு மிணங்க லோபாமுத்திரை தமது கணவர்க்குப் பணிவிடைகள் செய்துவந்தாள். இவைகளைக் கண்டு அகஸ்தியர் மிக மகிழ்ந்து லோபாமுத்திரையினிடம் மிகப் பிரியமாகவிருந்தார். சில காலஞ்சென்ற பின் இவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை ஜனித்தது. இதற்கு திரிகியன் என்ற பெயரையிட்டு வளர்த்துவந்தார்கள். இக்குமாரனுக்குத் தக்க வயதுவந்தவுடன் உபநயனம் செய்துவைத்தார்கள். பின்பு இவன் சகலகலைகளையும் செவ்வனே படித்து அறிந்து கொண்டான். இவனும் தனது தகப்பனைப்போல் ஒரு ரிஷியாகவே வனத்தில் தபசு செய்து கொண்டிருந்தான்.

அக்காலத்து ரிஷிகளில் அகஸ்தியர் மிக பிரசித்தியடைந்தவர். சில நற்காரியத்தை இவர்செய்ததாக புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பிராமணவதை செய்து புசித்துவந்த ஒரு துஷ்டனாகிய வாதாபியை இவர் சம்ஹாரம் செய்தார். பரோபகார புத்தியுள்ள பர்த்தாவுக்கு லோபாமுத்திரை (கைப்பிடியாய்) ஆதாரமாய் நற்காரியங்கள் அவர் செய்வதில் அவருக்கு அதிக ஊக்கத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கிக்கொண்டு வந்தாள். ஆகையால் ஒரு காலத்தில் பெரிய சகாயம் செய்ய தேவகுருவாகிய பிரகஸ்பதி, புஷ்பத்திற்கு வாசனையுள்ளதுபோல அகஸ்திய மகாரிஷிக்கு தர்மங்களைச் செய்வதற்குச் சகாயமாயும், அருந்ததி, அநுசூயா, சாவித்திரி, முதலான புண்ணியவதிகளுக்குச் சமானமாயு மிருக்கிற லோபாமுத்திரை யிருக்குமிடத்திற்கு வந்து அவளைப்பார்த்து பின் வருமாறு சொல்லியதாக புராணங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

"அம்மா! பரமபதி விரதாசாரமென்ற உன் இராஜியம் கிரமமாக நடந்து வருகிறதா? பதிவிரதைகளில் நீ மகா உத்தமி. கொழுநனுண்ட பின்றானுண்டல் கொள்கையும், விழிதுயின்றபின் றுஞ் சதுமென்றாயில், எழுதல் முன்னெழுதலுமேயன்றே, பழுதில் கற்புடைப் பாவையர்க்காகுமே" அதாவது கணவர் சாப்பிட்ட பின் சாப்பிட்டும், அவர் நித்திரைகொண்டபின் நீ தூங்கியும், அவர் எழுந்திருக்குமுன் நீ எழுந்து வீட்டு வேலைகளை யெல்லாம் முடித்து, அவர் தந்தசுத்தி செய்து, முகத்தைக் கழுவி, நெற்றியில் குங்குமமிட்டுக்கொண்டு அவரை எழுப்பும் சுபாவமுடையவள். நீ இவ்வித குணம் வாய்ந்தவளாகையால் உன்னுடைய பர்த்தாவுக்கு உன்னிடத்தில் அதிக பிரியமும் கௌரவமு மிருக்கிறது. நான் வந்த காரியம் நிறைவேறும்படி நீ அகஸ்தியரைப் பிரார்த்திக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். அவ்



விதமே லோபாமுத்திரை அகஸ்தியரை வேண்டிக்கொண்டதாகவும் அவர் பிரஹஸ்பதிக்கு வரப்பிரசாதமளித்து அனுப்பியதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

பின்பு அகஸ்தியரும் லோபாமுத்திரையும் வெகு காலம் வாரணாசியில் (காசி) வசித்தார்கள். பின்பு தக்ஷிண இந்துஸ்தானத்திற்கு வந்தார்கள். இவர்கள் நடந்துவந்தமையால் ஒவ்வொரு தேசத்திலுள்ள விசித்திரமான வஸ்துக்களையும், மனோகரமா யிருக்குமிடங்களைக் கண்டு சந்தோஷித்து வெயிலுக்கும், மழைக்கு முட்பட்டு, தேசசஞ்சாரத்தால் உண்டாகும் கஷ்டசுகங்களை யனுபவித்தார்கள்.

இவர்கள் வழியில்கண்ட பர்வதங்களையும், நதிகளையும் அகஸ்தியா வர்ணித்து லோபா முத்திரையினுடைய சிரமத்தை நீக்கிக்கொண்டு வந்தார். இவர்கள் ஒரு பர்வதத்தின் சமீபத்தில் வரும்பொழுது அகஸ்தியர் தமது மனைவியைப்பார்த்து "ஏ! அர்த்தாங்கி! அதோ தெரிகிறது பார், அதுதான் மாலியவந்தமென்ற பர்வதம், அதுமிக மகிமையும் நானாவிதமான மணிகளால் பிரகாசித்துக்கொண்டும், ஸ்திரீகள் உலாவும்படியான சந்திரகாந்த மேடையும், ஆகாசத்தை அளாவியுள்ள திவ்யமான விருக்ஷங்களையும் பார்! அவைகள் எவ்வளவு அழகாக விருக்கின்றன! இன்னும் கொஞ்சம் தூரம் சென்றபின் அவர்கள் ஒரு ரிஷியின் ஆசிரமத்தைக் கண்டார்கள். அதிலுள்ள விசேஷ வஸ்துக்களை லோபாமுத்திரைக்குக் காண்பித்து பின்வருமாறு சொல்லுகிறார்:-"ஏ! பூங்கொடியாளே! இதோபார்! *யூபஸ்தம்பங்களிருக்கின்றன. அதோ! தர்ப்பங்களிருக்கின்றன. இதோபார் மணல் குவியலாகவிருக்கின்றன. அங்குள்ள ரிஷிகள் வளர்த்துவரும் மான்களைப் பார்த்தாயா? அதோபார்! ஓ சஹதர்மணி! அவர்களுடைய சிஷியர்கள் ஓமத்திற்கு வேண்டிய பால்கறக்க பசுக்களையும், அவைகளின் கன்றுக்குட்டிகளையும் நிழலில் நிறுத்திக்கொண்டும் காப்பாற்றிக்கொண்டு மிருக்கிறார்கள்.

அதோ சில ரிஷிகள் சாமவேதம் சொல்லும் சுரத்தைப்பார்த்து கிளிகளும், குயில்களும் அவ்விதமே சொல்லிக்கொண்டிருக்கும் அழகைப்பார்! இன்னும் அநேகவிதமான கொடிகள் செடிகளின் மீது பரவி புஷ்பங்களுடையதாயும் பார்க்க ரமணீகரமாயும் விளங்குகின்றதைப் பார்! அப்புஷ்பங்களினின்று தேன் கீழ் சொட்டுவதை வண்டுகள் குடித்துக்கொண்டும், ஆநந்தமாயு மிருக்கின்றதைப்பார்! என்று பலவித விநோதங்களைக் காட்டிக்கொண்டு கொஞ்சதூரம் செல்லுகையில் மத்தியான சமயமாகையால் அவர்கள் கொஞ்சம் ஆயாசம் தீர்த்துக்கொள்வதின் பொருட்டு அகஸ்தியர் தமது மனைவியைப்பார்த்து ஏ! பாரியே! அந்தக்குளத்தில் ஹம்சங்கள் தங்கள் சிர

* யாகத்திற்குரிய பசுவைக் கட்டும்படியான ஸ்தம்பம்.

மத்தை தீர்த்துக்கொள்ள அதிலுள்ள தாமரைப் புஷ்பங்களின் நிழலின் கீழிருப்பதைப் பார்!

சக்கரவாளப் பக்ஷிகளும் ஜலத்தின் மேழுள்ள சேற்றைக் கலக்கி அங்கு சுகமாக ஆயாசத்தைத் தீர்த்துக்கொண்டிருக்கின்றன. மயில்கள் யாகத்தி லுண்டாகும் புகையைக்கண்டு மேகமோவெனஎண்ணி தங்கள் தோகைகளை விரித்து ஆட ஆரம்பிக்கின்றதைப்பார்! யானைகள் குளத்திலிருக்கபபட்ட ஜலத்தை தும்பிக்கைகளால் எடுத்து இங்குமங்கும் யிறைப்பதைப் பார்த்தா யா? இந்தக் குளத்திலுள்ள மேல்ஜலம் சுட்டுக்கொண்டிருக்கிறது. காட்டி லுள்ள மிருகங்களெல்லாம் இந்த வெயிலைத் தாங்கமுடியாமல் தங்களிருப் பிடத்திலிருக்கின்றதைப் பார்! ஏனெனில் இது மத்தியானமாகையால் இவ் விதமிருக்கின்றன. நாமும் இவ்விடத்திலேயே கொஞ்சநேரம் நமது சிரமத் தைத் தீர்த்துக்கொள்ளலாமென்றார்.

இப்பேர்ப்பட்ட பிரயாணங்களில் லோபாமுத்திரை ஜகத்திலுள்ள வஸ் துக்களின் விசித்திரங்களைப் பார்த்து தன் சந்தோஷத்தையும் ஞானத்தை யும் விர்த்தி செய்துகொண்டாள். தன் பர்த்தாவினுடைய பிரியமுள்ள மன தை யறிந்து அவரிடத்தில் மிகப் பிரியமாயிருந்தாள். இவ்விதமல்லவோ மனைவிமார்களும் கணவர்களும் மனமும், ஆவலும், அன்பும் பிரியாநேய மும் உடையராகவேண்டும்.

இவ்விருவரும் தெற்கிலுள்ள துங்கபத்திரா பினாக்கினி முதலியநதிகளைப் பார்த்து அங்குள்ள புண்ணிய க்ஷேத்திரங்களில் தங்கி ரிஷி சிரேஷ்டரான பர்த்தாவால் இந்த லோகத்திலிருக்கிற விஷயங்களை யறிந்துகொண்டாள்.

ஒருசமயத்தில் லோபாமுத்திரை தீர்த்தங்களின்பிரபாவத்தை தனக்குச் சொல்லும்படி தன் பிரியமுள்ள கணவரைக் கேட்டபொழுது அவர் பின் வருமாறு சொல்லுகிறார்:—இந்த தீர்த்தங்களில் பரிசுத்தமா யிருக்கப்பட்ட நிர்மலமான மனசு என்ற தீர்த்தமே சிரேஷ்டமானது. கங்கா, யமுனா, முத லிய தீர்த்தங்களைக் காட்டிலும் மேலே நான் சொல்லிய மானஸ தீர்த்தம் தான் மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடியது. மனிதன் இதைவிட்டு கங்கா முத லிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வது உபயோகமாகமாட்டாது. இனி இவ் விரண்டு தீர்த்தங்களின் உபயோகங்களைக் குறித்துச் சொல்லுகிறேன். அநு ராகாதி தோஷங்களைப் போக்கடிக்கிறது மானஸ தீர்த்தம். சரீரத்திலுள்ள அசுத்தியைப் போக்குவது. இந்த நதிகளின் ஜலம்; எந்த நதியிலும் ஸ்நாநம் செய்வதினால் முக்திவருமென்று எண்ணாதே; மனசு பரிசுத்தமாக வில்லா விட்டால் சரீர பரிசுத்தம் பிரயோசனப்படமாட்டாது.

அநேக குடம் ஜலத்தினால் மண்கூசாவைக் கழுவினால் அதற்குப் பரிசு த்தம் வருமா? இந்த கங்காமுதலிய தீர்த்தங்களில், முதலை, மீன் நண்டுகள், ஆமை முதலியவைகளெல்லாம் எப்பொழுது மிருக்கவில்லையா? இவைகளு



க்கு என்ன முக்தி கிடைத்தது? அவ்விதமே தான் நமக்கும். பரிசுத்தமான மனதில் ஸ்நாநம் செய்யாமல் தீர்த்தங்களில் மனது பரிசுத்தமின்றி ஸ்நாநம் செய்பவர்களுக்கு அவைகளுக்குள்ள கதிதான். ஆகையால் ஞானவதியே! இந்திரியங்களை ஜெயித்து பரிசுத்தமான மனதால் பகவானை வணங்கினால் இகபர சௌக்கியங்கள் கிடைக்கும்."

இவ்விதம் அகஸ்தியர் உபதேசித்தவைகளை மிக கவனமாகக்கேட்டு அதன்படி நடந்தாள் லோபா முத்திரை.

[இதிலுள்ள கதைகள் மகாபாரதம், பாண்டு ரெங்கமகாத்மியம்,காசிகா ண்டம்முதலிய கிரந்தங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டது—ப. ர்.]

ஸி. எஸ். ரா.

# பொற்கிளி.

89-ம் பக்கத்தொடர்ச்சி.

இவனும் புறப்பட்டு வெகுதூரஞ் செல்லுகையில் முதலில் வந்த நரி இவன் கண்ணுக்குத் தென்பட்டது. பிறகு இவன் சமீ பத்தில் மெதுவாக வந்து "அப்பா! நீ போகிறகாரியம் என க்குத்தெரியும். அந்தப்பக்ஷி கிடைக்கவேண்டுமானால் நான் சொல்லுகிற பிரகாரம் செய்தால் அது உனக்கு நிச்சயம் கைகூடும். நீ பயப்படவேண்டாம் என்று அந்த இரண்டு சத் திரங்களின் விசேஷத்தைப் பற்றியும் சொல்லி அவனை தனது வாலின்மேல் உட்காரும்படி சொல்லிற்று. அவன் உட்கார்ந்தவுடன் அந்த நரி இவனை காடு வனாந்தரங்கள், நதிகள் முதலியவைகளைத் தாண்டி இவனை அந்த சத்தி ரங்களிருக்குமிடத்தில் விட்டது. இவன் அந்த நரியினிடத்தில் விடைபெற் றுக்கொண்டு விகாரமாகத் தோன்றும்படியான வீட்டிற்குள் சென்று அன்று இராத்திரி காலத்தைக் கழித்தான். மறுநாள் காலையில் இவன் எழு ந்து கொல்லைப்பக்கத்திலுள்ள தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள செடி களைப் பார்த்துக்கொண்டிருக்கையில் நரி வந்து அப்பா! குழந்தாய்! "இப் பொழுது நீ இனி செய்யவேண்டியதைச் சொல்லுகிறேன் கேள். நேராகப் போ மங்களபுரி என்றவூரில் ஒரு கோட்டை தென்படும். அதில் சேனைகள் குறட்டு விட்டுக்கொண்டு நித்திரைசெய்து கொண்டிருப்பார்கள். அவர்களைக் கண்டுபயப்படாதே அவர்களைத் தாண்டிக்கொண்டு நேராகவேபோகவேண் டும். இப்படிச்சென்றால் அங்கொரு அறைதென்படும். அங்குஒருமரக்கூண்டில் ஒருபொற்கிளி யிருக்கும்; இதற்குச் சமீபத்தில் தங்கத்தால்செய்த ஒரு அழ கானகூண்டிருக்கும். நீ இந்தக் கிளியை மரக்கூண்டிலிருந்து எடுத்து தங்கக் கூண்டில் வைக்காதே; "அப்படிச்செய்தால் உனக்கு ஆபத்து நேரிடும்"

என்று சொல்லி முன்போல இந்த இராஜகுமாரனை தன் வாலின்மேல் ஏற்றி
வைத்துக்கொண்டு அதிவேகமாக அக்கோட்டைக்குச் சென்றது. வாலிபன்
உட்சென்று பார்க்கையில் யாவற்றும் நரி சொல்லியபடியே தென்படவே,
இவன் தைரியமாக நேராக பொற்கிளியிருக்குமிடத்திற்குச் சென்று அதை
க்கண்டு அதிசயித்தான். இதன் சமீபத்தில் இவன் தோட்டத்தில் திரு
ட்டுப்போன மூன்று இலந்தப்பழங்களுமிருந்தன. இவைகளைக் கண்டவுடன்
இவனுக்குண்டான சந்தோஷத்திற் களவில்லை. ஆ! ஆ! இந்தப்பொற்கிளி
யை இந்த விகாரமான கூண்டிலேயா வைத்துக்கொண்டு போகிறது! இதை
இந்தஅழகான தங்கக்கூண்டில்வைத்துக்கொண்டுபோவதுதான் நலமென்று
எண்ணி, அக்கிளியை எடுத்து அழகான கூண்டில் வைத்தான். இவன் அவ்
விதம் செய்தவுடன் அப்பக்ஷி ஓர்வித சப்தம் கெட்டியாகச்செய்தது. உடனே
சோல்ஜர்கள் கண்விழித்துக்கொண்டு, எழுந்து என்ன சங்கதி என்று வந்து
பார்த்து இந்த இராஜகுமாரனை கிளியினிடத்திலிருக்கக் கண்டு உடனே
இவனை சிறைச்சாலையிலடைத்தார்கள். மறுநாள் காலையில் இவனை விசாரணை
க்கு அவர்கள் அரசன் முன் கொண்டு வந்தார்கள். அரசன் இவனைத் தீர
விசாரித்தான். இவனும் தான் செய்த தப்பிதத்தை ஒத்துக்கொண்டான்.
அரசன் மிக நல்லவனுகையால் இவனைப்பார்த்து "நீ காற்றைவிட அதிவேக
மாக ஓடும்படியான ஒரு தங்கக்குதிரை மாயாபுரியின் கோட்டையிலிருக்கி
றது. அதைக்கொண்டு வந்து எனக்குக் கொடுத்தால் உன்னை மன்னிப்பது
டன் உனக்கு இந்த பொற்கிளியையும் இனமாகக் கொடுக்கிறேன்" என்று
சொன்னன். உடனே இவன் மிக கம்பீரத்தொணியுடன் அவ்விதமே செய்கி
றேன் என்று விடைபெற்றுச் சென்றான்.

இளைய இராஜகுமாரன் மிகவருந்திக்கொண்டு "ஐயோ! தெரியாதனத்
தினுல் நரி வார்த்தையைக் கேட்காமல் விரோதமாக நடந்தேனே; பொன்
குதிரையை நாம் எப்படி அடைவது? மாயாபுரிக்கு எவ்விதம் செல்லுவது?
என்று பலவாருக மனதில் எண்ணிக்கொண்டு சென்றான். உடனே அந்த நரி
இவனெதிரில் வந்து "என்ன சம்பவித்தது, பார்த்தாயா" நீ நான் சொன்
னதைக் கவனிக்கவில்லை. ஆயினும் பயப்படாதே தைரியமாக விரு, நான்
உன்னைக்காப்பாற்றுகிறேன், அந்தக்குதிரை யிருக்குமிடத்திற்கு உன்னைக்
கொண்டு போகிறேன், ஆனுல் நான் சொல்வதுபோல் நீ செய்யவேண்டும்.
அந்த ஊருக்கு உன்னைக்கொண்டு போனதும் ஒரு கோட்டைதென்படும்.
அதினுள் சென்று தென்மூலையில் ஒரு குதிரைலாயம் தென்படும். இங்கு
வாசற்படி யண்டை ஒரு பையன் கும்பகர்ணனைப்போல் நித்திரை செய்துக்
கொண்டிருப்பான். பயப்படாமல் குதிரையை அவிழ்த்து கெட்டியாக கயி
ற்றைப் பிடித்துக்கொண்டு வரவேண்டும். முன்போலவே இங்கும் தங்கத்
தால் செய்யப்பட்ட சீனி யிருக்கும், இதைப்போட்டவே போடாதே. சாதா
ரண மரத்தினுலும் தோலாலும் செய்யப்பட்ட சீனியை மாத்திரம் போட்டு
க்கொண்டு குதிரையைக் கொண்டுவா" என்று பலவிதமாக புத்தி புகட்டி



இராஜகுமாரனை முன்போலவே தனது வாலில் உட்காரவைத்துக்கொண்டு
மாயாபுரிக்கு நொடியில் சென்று கோட்டைக்குள் போகும்படி இராஜகுமா
ரனுக்கு விடையளித்து விட்டு சென்றது நரி. இவன் உட்சென்று தெற்கி
லுள்ள குதிரை லாயத்திற்குஇவன் சென்று குதிரையைக் கண்டுமகிழ்ந்தான்.
ஆனுல் இவ்வித அழகான குதிரைக்கு உபயோகமற்றவும், அழகில்லாதவு
மான சீனியைப்போட்டு குதிரையை எடுத்துக்கொண்டு போவது தனக்கு
அவமானமல்லவா என்று சொல்லிக்கொண்டு தங்கத்தால் செய்யப்பட்டு
அதன் சமீபத்தில் வைக்கப்பட்டிருந்த சீனியையெடுத்து அதன்மேல் போட்
டான். உடனே அக்குதிரை பயங்கரமாக கனைத்தது. அங்குள்ள பையனும்
வெளியிலிருந்து சிலரும் ஓடி வந்து இந்த இராஜகுமாரனை சிறைப்படுத்தி
விட்டார்கள். மறுநாள் மாயாபுரி அரசன் முன்பாக இவனை விசார
ணைக்கு கொண்டுபோனர்கள். அரசன் மிகக் கடிந்து இவனை மரணதண்டனை
க்குள்ளாக்கினன். சிறுவன் ஒன்றும் பேசாமல் மிக பயந்துகொண்டிருப்
பதை அரசன்கண்டு இவன் விருத்தாந்தங்களைக்கேட்டு மிக விசனித்து "அப்
பா! வெகுதூரத்திற் கப்பால் சுவர்ணபுரி என்ற பட்டணமிருக்கிறது;
அங்கு ஒரு சுவர்ணக்கோட்டையுள்ளது. அங்கு அத்தேசத்திய இராஜாவின்
ரதியைப்போன்ற மிக அழகு பொருந்திய குமாரத்தி யிருக்கிறாள். அவளை
இங்கு நீ கொண்டு வருவாயானுல் உன்னை மன்னிப்பதுடன் உனக்கு இந்த
க்குதிரையையும் கொடுத்து விடுகிறேன்" என்று சொன்னன். மனோதைரிய
முள்ள இராஜகுமாரன் புன்சிரிப்புடன் அவ்விதமே செய்கிறேன் மகாராஜா
வென்று சொல்லிவிட்டு விடைபெற்றுக்கொண்டு சென்றான்.

இளைய இராஜகுமாரனுக்கு இன்னது செய்கிறதென்று தெரியவில்லை.
குமாரத்தி கிடைக்காவிடில் உயிர் போய் விடும். நான் என் இத்தடவையும்
நரியின் வார்த்தையை மறந்துவிட்டேன்! இது என் புத்தியீனமல்லவா வெ
ன்று மனதில் எண்ணிக்கொண்டு போனன். திடீரென்று அந்த நரி இவன்
முன் வந்து 'அப்பா! நான் உன்னை இந்த ஆபத்தில் விட்டிருப்பேன்; ஆனுல்
உன்மேல் எனக்கு இரக்கமுண்டாகிறது; உன்னை இந்த ஆபத்தினின்று
நீக்கி, இன்னொரு தடவை உனக்கு உதவிசெய்யக் கருதி யிருக்கிறேன்.
ஆகையால் நீ இத்தடவையாகிலும் நான் சொல்லுகிறபடியே செய்யவேண்
டும். உன்னை சுவர்ணபுரிக்கு இதோ எடுத்துக்கொண்டு போகிறேன்; நீ அங்
குள்ள கோட்டைக்குள் இரவு12-மணிக்குப் போகவேண்டும். அப்பொழுது
யாவரும் நித்திரை செய்வார்கள். சுவர்ணபுரி மகாராஜாவின் குமாரத்தி அப்
பொழுது தான் ஸ்நானம் செய்யவருவாள், அவளிடத்திற்கு வேகமாகப்
போய் அவளுக்கு ஒரு முத்தம் கொடு. உடனே அவள் உன்னுடன் வருவாள்.
ஆனுல் அவள் தன் பெற்றோரைப் பார்த்துவிட்டு வருவதாகக் கேட்பாள்; நீ
அதற்கு சம்மதிக்கவே கூடாது. அப்படிச்செய்தால் உனக்கு உடனே ஆப
த்து நேரிடும்" என்று சொல்லிய பின் இராஜகுமாரனை தன் வாலின்மேல்

முன்போல வைத்துக்கொண்டு வாயுவேக மனோவேகமாக சுவர்ணபுரியின் கோட்டையண்டை இவனை விட்டு மறைந்துவிட்டது.

இராஜகுமாரன் நடுராத்திரியில் சுவர்ணகோட்டைக்குள் சென்றான். நரி சொன்னபடியே இராஜன் பெண்ணும் சுமார் 12-மணிக்கு ஸ்நாநம் செய்யவந்தாள். இவன் உடனே வேகமாகச்சென்று அவளுக்கு ஒரு முத்தம் கொடுத்தான். ஆயினும் அவள் தன் பெற்றோரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்களுடன் வருகிறேன் என்று சொன்னாள். இவனோ போகக்கூடாதென்று பிடிவாதம் செய்தான். பெண்கள் சாதாரணமாக தாங்கள் நினைத்த காரியம் கைகூடாவிடின் அழத்தலைப்படுவது வழக்கமன்றோ ? அவ்விதமே இந்த அழகிய சுகுமாரி அழ ஆரம்பித்தாள். கண்களில் தாரைதாரையாக நீர்பெருகியது. அதிக பக்ஷமும் இரக்கமுமுள்ள இராஜகுமாரன் அவ்விதமே செய்துவிட்டு சீக்கிரம் வரவேண்டுமென்று உத்தரவளித்தான். இவள் சென்றதும் அவள் தகப்பனார், வேலைக்காரர்கள் முதலியோர் எழுந்துவிட்டார்கள். உடனே இந்த இராஜகுமாரனைப் பிடித்து சிறையிலடைத்து முன்போலவே மறுநாள் காலையில் இவனை விசாரணைக்கு அரசன் முன் கொண்டு வந்தார்கள். இவன் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டான்; பின்பு இவனுடைய விருத்தாந்தங்களை யெல்லாம் தீர விசாரித்தான். இவன் மகா புத்தி யுள்ளவனாகவும் இராஜகுமாரனாகவு மிருக்கக்கண்டு இவன்மேல் அரசனுக்கு தயை பிறந்தது. "அப்பா! இராஜகுமாரா இப்பொழுது நீ என்னுடைய மாளிகைக் கெதிரிலுள்ள இந்தப்பெரிய மலையை அடியோடே கல்லி 8-தினத்திற்குள் வேறுபடுத்திவிட்டால் உனக்கு என் குமாரத்தியை விவாகம் செய்துவைத்து உன்னையும் மன்னித்துவிடுகிறேன். இது உண்மையென அரசன் மிகவும் கம்பீரமாக உரக்கச்சொன்னான்.

அரசகுமாரன் மலையை வெட்ட ஆரம்பித்தான், இவனால் முடியும் காரியமா ? மலையை அடியோடே வேறுபடுத்த முடியுமா ? இதோ பெரியது. சுமார் 2—லக்ஷம் ஜனங்கள் இதை வெட்டினபோதிலும் இதை வேறுபடுத்த முடியாது. நாளோ 7-வது ஆய்விட்டது, இராஜகுமாரனுக்கு ஒன்றும் தெரியவில்லை, துக்கசாகரத்தில்மூழ்கி திகைத்துக்கொண்டிருந்தான். அன்று சாயங்காலம் நரி உடனேவந்து "அப்பா! நீயோ நான் சொன்னதைக் கேட்டாவது செய்கிறதில்லை. உனக்கு உபகாரம்செய்ய எனக்கு இஷ்டமேயில்லை; ஆயினும் உன்வேலையை நான் செய்துமுடிக்கிறேன். நீ புசித்துவிட்டு நித்திரை செய்" என்று சொல்லி தான் வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது. மறுநாள்காலையில் மலையென்பதே கண்ணுக்குத் தென்படவில்லை, இராஜகுமாரன் இவ்விதம் நரி செய்ததைக்கண்டு மிக மகிழ்ந்து, நரிக்கு வந்தனம் செய்துவிட்டு, இராஜனிடத்தில் சென்று மகாராஜாவே! தாங்கள் சொல்லிய பிரகாரம் இதோ செய்தாய்விட்டது. எனக்கு தங்கள் குமாரத்தியை விவாகம் செய்துவைக்க வேண்டுமென்று மிகச் சந்தோஷத்துடனும் புன்,



சிரிப்புடனும் தைரியமாக அரசனைக்கேட்டான். அரசன் மிக சந்தோஷப்பட்டு இச்சமாசாரத்தை தனது குமாரத்திக்குச் சொன்னான். அவள் அப்பொழுது தனதுகையில் அழகும் வாசனையும் பொருந்திய மலர் ஒன்றை வைத்துக்கொண்டிருந்தாள். அதுடன்வந்து தான் வகிக்கும் கணவருக்கு அதை சந்தோஷத்துடன் கொடுத்தாள்.

அன்று இராத்திரி நரிவந்து நீ உன் மாமனாரை அந்த சுவர்ணக் குதிரை வேண்டுமென்று கேள். அவர் உடனே கொடுத்துவிடுவார், பின்பு நாம் போகலாம் என்று சொல்லிவிட்டு மறைந்தது.

மறுநாள் விவாகம் வெகு விமரிசையாகநடந்தது. அப்பொழுது மங்கள புரிதேசத்து அரசன், மாயாபுரிதேசத்து அரசன் முதலியவர்கள் வந்திருந் தார்கள். அவர்கள் இவனைக் கண்டு வெகு ஆநந்தங்கொண்டாடினார்கள். விவாகமானவுடன் தனக்கு சுவர்ணக் குதிரைவேண்டுமென்று தனது மாமனாரைக் கேட்டான். அவர் தனது மருமகனுடைய புத்தி சாதுரியத்தைக் கண்டு வியந்து உடனே அக்குதிரையை மாயாபுரியிலிருந்து வரவழைத்துக் கொடுத்தார். இவன் அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தனது மனைவியுடன் குதிரைமேல் ஏறிக்கொண்டு சென்றான். உடனே நரிவந்து "அப்பா குழந்தாய்! சௌக்கியமாவென்று விசாரித்தது" இவன் அதற்குவேண்டிய மரியாதைசெய்துவிட்டு பொற்கிளியை எப்படி யடைவதென்றான்? நீ மங்கள புரிக்குப்போய் அரசனைக்கேட்டால் அவன் உடனே கொடுத்துவிடுவான். நீ அதை எடுத்துக்கொண்டுபோகலாம் என்றது. இவனும் அவ்விதமே மங்களபுரிக்குச்சென்றான். அத்தேசத்திய இராஜன் இவனைக் கண்டவுடன் மிக மகிழ்ந்து அந்தப்பொற்கிளியை இவனுக்குக் கொடுத்தான். இவன் தன் மனைவியுடன் அந்தப் பொற்கிளியை எடுத்துக்கொண்டு தன் தேசத்திற்குப் புறப்பட்டான். உடனே நரிவந்து "அப்பா? வெகு சந்தோஷம் நீ எனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டு"மென்றது. "உனக்கென்ன வேண்டும்" என்று கேட்டான் இராஜகுமாரன்.

"நாம் இந்தக்காட்டிற்கு வரும்பொழுது நீ என்னைச் சுட்டு, என் தலையையும் கால்களையும் துண்டித்துவிட வேண்டும்."

"ஆ! ஆ! பேஷ்! நீ எனக்குச்செய்த உபகாரத்திற்கு இப்படிச்செய்வதா பிரதி உபகாரம்? நான் ஒருபொழுதும் இவ்விதம் செய்யமாட்டேன்" என்றான்.

"நீ அவ்விதம் செய்யாவிடின் நான் உன்னிடத்தி லிருக்கமாட்டேன், நான் போய்விடுகிறேன்; ஆனால் நான் போகுமுன் உனக்கு ஒரு விஷயம் சொல்லுகிறேன் கவனமாகக்கேள்:—

நீ புசிக்குமுன் ஆகாரத்தை நாய்க்குப் போட்டபின் சாப்பிடு, ஜலக் கரையில் உட்காராதே; இவ்விரண்டையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நீ நடக்கவேண்டுமென்று சொல்லிவிட்டுப் போய்விட்டது.

ஆ! அது ஒரு ஆச்சரியமான மிருகம் தான். அதனிடத்தில் ஏதோ
விசேஷங்க ளிருக்கின்றன. அவைகள் நமக்கின்னதென்று புலப்படவில்
லையே! நான் அது சொன்னபடி நடக்கவேண்டிய தவசியம்தான் என்று
நினைத்துக்கொண்டு உல்லாசமாக தனது மனைவியுடன் சென்றான். அங்
கொரு கிராமத்தில் கூக்குரலும் ஜனக்கூட்டமும் விசேஷமாக விருந்ததைக்
கண்டு அங்குள்ளவர்களைப் பார்த்து "என்னவென்று" வினவினான். அங்
குள்ள ஜனங்கள் "இவ்விடத்தில் இரண்டு துன்மார்க்கர்களை தூக்குப்போடப்
போகிறார்களென்று சொன்னார்கள். இந்த இராஜகுமாரன் கொஞ்சதூரம்
செல்லுகையில் அந்த இரண்டு குற்றவாளிகளும் தனது தமையனாக விருக்
கக்கண்டு மிக விசனப்பட்டு அங்குள்ளவர்களைக் கண்டு 'ஐயா' இவர்களை
தப்புவிக்கச்செய்ய முடியுமா" என்று கேட்டான். அவர்கள் "ஆம்! அதிக
பணம் கொடுத்தால் செய்யலாம்; ஆனால் அவர்கள் மகா பாதகர் ஆனபடி
யால் அவர்களை இப்படிச் செய்யக்கூடாது. அவர்களுக்கு இத்தண்டனை
தகுதியே" யென்று சொன்னார்கள். இளைய இராஜகுமாரன் தனது சகோ
தரர்களை தப்புவிக்கவேண்டியதின் நிமித்தம் போதுமான பணம் கொடுத்து
அவர்களை அவ்வாபத்தினின்று நீக்கி அவர்களையும் தன்னுடன் சேர்த்துக்
கொண்டு தன் ஊருக்குச் சென்றான். வெகு நேரமாக இளைய இராஜகுமா
ரனும் அவன் மனைவியும் குதிரை சவாரி செய்துவந்தமையாலும் இவனு
டைய இரண்டு சகோதரர்களும் அன்ன ஆகாரமின்றி யிருப்பதாலும் இவன்
முதலில் நரியைச் சந்தித்தவிடத்தில் இளைப்பாற எண்ணினான். அவ்விதமே
யாவரும் சம்மதித்தார்கள், இவர்கள் அங்கொரு மரத்தடியில் தங்கினார்கள்.
அம்மரத்துக்கெதிரில் ஒரு தடாகமிருந்தது. யாவரும் கொஞ்சம் ஆகாரம்
புசித்தபின் தண்ணீர் அருந்திவிட்டு மரத்தடியி லுட்கார்ந்துகொண் டிருந்
தார்கள். இளைய இராஜ குமாரன் அயர்ந்து நித்திரை போய்விட்டான்.
உடனே இவனது சகோதரர்கள் இவனை மெதுவாக எடுத்து குளத்தில்
போட்டுவிட்டு பொற் கிளி, பொற் குதிரை, அழகிய ராஜகுமாரத்தி முதலிய
வைகளை எடுத்துக்கொண்டு தங்களது தகப்பனாரிடத்திற்குச் சென்று
"அப்பா! நாங்கள் பொற்கிளியைக் கொண்டுவந்ததுடன், பொற்குதிரை,
அழகிய இராஜகுமாரத்தியையும் பொன் கோட்டையிலிருந்து கொண்டுவந்
திருக்கிறோம்" என்றார்கள். இராஜன் இவைகளைக்கண்டு மிகச் சந்தோஷப்
பட்டான். இராஜன் உண்மையாகவே தனதுமூத்த இரண்டுகுமாரர்கள்தான்
கொண்டுவந்ததாக எண்ணினான். ஆனால் குதிரை ஆகாரம் தின்னவேயில்லை;
பொற்கிளி பாடவேயில்லை; அழகிய இராஜகுமாரத்தியோ ஒருவருடனும்
பேசாமல் அழுதுக்கொண் டிருந்தாள். அவள் கண்களில் நீர் தாரை தாரை
யாகப்பெருகியது. இவ்விதம் காலை முதற்கொண்டு இரவுவரையிலும் நடந்து
கொண்டிருந்தது. யாவரும் கண்டு இதென்னவென்று யோசிக்கத் தலைப்பட்
டார்கள். நிற்க, குளத்தில் போடப்பட்ட இளைய இராஜகுமாரன் இறந்து
போகவில்லை; ஏனெனில் அதில் அதிக ஜலமில்லை இவன் பாசிமேல் படுத்துக்



கொண்டிருந்தான்; இவனுக்கு காயமொன்றும் படவில்லை. ஆனாலும் இவ
னால் வெளியில் வரமுடியவில்லை. இவ்வித ஸ்திதியில் இவனிருக்கையில்
அந்தநரி உடனேவந்து "இவனைப்பார்த்து ஏ! மூடா! நான் சொன்னதை
மறந்தாயல்லவா வென்றுசொல்லி அவனைப் பலவாறாகத் திட்டிற்று. பின்பு
அவனை மெதுவாக தனதுவாலைப் பிடித்துக்கொள்ளும்படி செய்து அவனை
வெகு ஜாக்கிரதையுடன் வெளியிற் கொண்டுவந்து சேர்த்தது. உன் தமயன்
மார்கள் நீ இறந்துவிட்டதாக எண்ணவில்லை; ஆனதால் உன்னைக்கொல்ல
அவர்கள் ஏவலாளிகளை இக்காடெங்கும் திரிந்து உன்னைக் கண்டுபிடிக்
கும்படி செய்திருக்கிறார்கள். நீ சாயங்காலமானதும் மாறுவேடம் பூண்டு
இராஜன் அரண்மனைக்குப்போ அப்பொழுது உனக்கு சுகமுண்டாகும்"
என்று சொல்லிப்போயிற்று. இவன் சாயங்காலமானதும் நரி சொன்ன
மாதிரி ஒரு ஏழை மனிதன்போல் வேடந்தரித்துக்கொண்டு அரண்மனைக்
குள் சென்றான். இவன் சென்றதும், பக்ஷி பாடத்தொடங்கிற்று, குதிரை
புல்புசிக்க ஆரம்பித்தது, இராஜகுமாரத்தி அழுவதை நிறுத்திவிட்டாள்.
அரசன் இவ்வித மாறுதல்களுண்டானதைப் பார்த்து என்ன சங்கதி என்று
அந்த இராஜகுமாரத்தியைக் கேட்டார். அக்குமாரத்தி எனக்கொன்றும்
தெரியாது. ஆனால் எனது கணவர் திரும்பிவந்ததைக் குறித்துச் சந்தோஷப்
படுகிறேன். ஆகையால் தான் நான் விசனமாயில்லை" என மிக்க விநயத்
துடன் பகர்ந்தாள். பின்பு இராஜன் இவள் விருத்தாந்தத்தைக் கேட்க
ஆவல்கொண்டான். உடனே மூத்தகுமாரர்க ளிருவரும் "இவள் உண்மை
யைத் தெரிவித்தால் இவளைக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினார்கள்"
இவள் அவர்களுடைய பயமுறுத்தலுக்கு அஞ்சாமல் நடந்த யாவற்றையும்
விவரமாக இராஜனுக்குச் சொன்னாள்.

உடனே அரசன் அரண்மனையிலுள்ளவர்களை யெல்லாம் வரவழைத்
தான். அவர்களில் ஏழைவேடம்பூண்ட இளைய இராஜகுமாரனு மிருந்தான்.
அழகிய இராஜகுமாரத்தி தனது கணவரைக் கண்டதக்ஷணமே முகமலர்ச்சி
யுடன் இராஜகுமாரனைத் தழுவிக்கொண்டாள். பொற்கிளி கம்பீரத்தொனி
யுடன் வெகுநன்றாகப் பேசியது; குதிரை உற்சாகத்துடன் அடிக்கடி கனைத்
துக்கொண்டிருந்தது. இளைய இராஜகுமாரன் தனது பழைய உடுப்புகளைக்
களைந்துவிட்டு புதிய உடுப்புகளைத் தரித்துக்கொண்டு தனது தாய்தந்தையர்
களை வணங்கி தான் இவர்களை அடைந்த விருத்தாந்த முழுவதையும் விவ
ரித்துச் சொன்னான். அவர்களுக்கு அப்பொழுதுண்டான சந்தோஷத்திற்
களவில்லை.

பின்பு இராஜன் தனது மூத்தகுமாரர்க ளிருவரையும் தண்டிக்க ஏற்
பாடு செய்கையில் இளைய இராஜகுமாரன் அவர்களை மன்னித்துவிடும்படி
பலவாறாக தனது தந்தையை வேண்டிக்கொண்டான். அவர் தனதுஅருமை
யான இளையகுமாரன் வார்த்தைக் கிணங்கினபோதிலும் அவர்களை வேறு
தேசங்களுக்கு பணம் கொடுத்து அனுப்பிவிட்டு இளைய குமாரனுக்கு பட்
டாபிஷேகம் செய்துவைத்தான். இவனது மாமனார் மாமியார்முதலியோரும்
இன்னும் பற்பல தேசத்திய மன்னர்களும் வந்து பட்டாபிஷேக விமரிசை
யைக் கண்டு ஆநந்தித்துவிட்டு தம்பதிகளை ஆசிர்வதித்து விடைபெற்றுக்
கொண்டு தங்களிருப்பிடம் சென்றார்கள்.

நிற்க நாம் முதலில் சொல்லிய நரியைப்பற்றி என்னவென்று விசாரிப்போம். ஒருநாள் இளைய இராஜகுமாரன் காட்டிற்கு உல்லாசமாக வேட்டையாடச்சென்றான். அப்பொழுது இந்த நரி வந்து "அப்பா! குழந்தாய்! உனக்கு வேண்டியதெல்லாம் கிடைத்துவிட்டது. என்னை விடுதலை செய்ய உனக்கு சக்தியிருந்தும் நீ எனக்கு ஒரு நன்மையும் செய்யவில்லை. இது என் துரதிர்ஷ்டமே. ஆகையால் நீ இப்பொழுதாவது என் சிரசையும், கால்களையும் துண்டங்களாகச் செய்யமாட்டாயா வென்று" அந்த இளைய இராஜகுமாரனைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டது. இவனும் ஏதோ இது இவ்விதம் அடிக்கடி சொல்லுகிறதே பார்ப்போம் இதனிஷ்டப்படி செய்யலாமென்று நினைத்து, அவ்விதம் துணிகரத்துடன்செய்தான், இதன் தலையும், கால்களும் அறுபட்டவுடன் ஒரு அழகான வாலிப புருஷனாக எதிரில் நின்று நான் தான் உன்மனைவியினுடைய சகோதரன், என்னுடைய துர்ப்பாக்கியத்தால் யாரோ ஒரு மந்திரவாதி இவ்விதம் செய்துவிட்டான். சிலகாலம்சென்று பின்பு ஒரு மகான் என்னைக்கண்டு "அப்பா மகனே; ஒருயோக்கியனும், தெய்வபக்தியுமுள்ள இராஜகுமாரன் உன் தங்கையை மணம்புரிவான். அவனால் உனக்கு நன்மையுண்டாகுமென்று" சொன்னார். நான் அதை மனதில் வைத்துக்கொண்டிருந்தேன், நீ தான் யோக்கியனென்றும் தெய்வபக்தியுள்ளவனென்றும் எனக்குப்பட்டது. ஆகையால் தான் நானும் உனக்கு உதவிபுரிந்துகொண்டே வந்தேன். இப்பொழுது எனக்கு கதிமோக்ஷமும் கிடைத்ததென்றான். இளைய இராஜகுமாரன் தன்மைத்துனனை தனது அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோய் தனது தாய்தந்தையர்களுக்கு சகலவற்றையும் சொன்னான். அவர்கள் மிகச்சந்தோஷப்பட்டார்கள். இவன் மனைவி இதைக் கேட்டவுடன் ஓடி வந்து சந்தோஷத்துடன் அண்ணாவென்று கூப்பிட்டு மிக மகிழ்ந்து பேசிக்கொண்டிருந்தாள். பின்பு இச்சங்கதி தனது மாமனாருக்குத் தெரிவிக்க யாவரும் இத்தேசத்திற்கு துருப்புகளுடன் வந்தார்கள். இராஜன் இவர்களுக்கு தக்கமரியாதை செய்து நல்வரவு கூறினான். உடனே தனது ஒரே குமாரன் திரும்பி வந்ததைக்குறித்து மிகச்சந்தோஷப்பட்டு சந்தோஷசாகரத்தில் மூழ்கினார்கள். இவன் தாய்தந்தையர்கள். உடனே இவனுக்கு விவாகம் செய்துவைத்து அவ்விராஜ்யத்திற்கு பட்டாபிஷேகமும் செய்துவைத்தார்கள். யாவரும் சௌக்கியமாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். குழந்தைகளே! இன்றைய்தினம் இக்கதை முடிந்துவிட்டது. அடுத்த தடவை உங்களுக்கு ஒரு வேடிக்கை கதை சொல்லுகிறேன். நித்திரை செய்யுங்களென்றார் தாதா.

தா௱தா.

# அன்பினால் அகமழியும் சித்திரக்குள்ளர்.

குறுகிய உடல் கொண்டாரைக்குள்ளர் என்பவர் உலகத்தவர்; அவர்களினும் சிறுத்திருப்பரேல் அவர்கள் சித்திரக்குள்ளர் எனப்படுவர். சாதாரணமாய் இந்தியாவில் அவரவது வளர்ப்புக்கும் வயதுக்கும் தகுந்தவாறே குடிகள் முதிர்முதிரப் பெருத்துப் பலசாலிகளாகின்றனர். என்றாலும் எம்மூலையிலேனும் இரண்டொருவருர் மனிதரின் சேஷ்டையினாலோ, நன்றாய் ஆகாராதிகளைத்தின்று கொடுக்க சரியான வசதி ஏற்படாததனாலோ பார்க்கையில் மனத்திற் கருவருப்புண்டாகும் வண்ணம் சரீரம் மிகவும்



குறுகிச் சித்திரக்குள்ளர்களா யிருக்கின்றனர். நெய், பால், தயிர், வெண்ணெய் முத லான புஷ்டியைக் கொடுக்கத்தக்க பதார்த்தங்களுடன் ஆகாரங்களைப் பெற்றோர் குழந் தைகளுக்குக் கொடுத்தும் சில குழந்தைகள் தேகம்மெலிந்தவராய் மார்பெலும்பு முன் னிட்டு நிற்கக்காண்கிறோம்; ஆகாரங்களிருக்கையிலே அக்குழந்தைகள் என் மெலிந்து போகவேண்டுமென்று சிலர் கேட்கலாம்; "தான் செய்வதுபாதி தம்பிரான்செய்வது பாதி" என்பதுபோல சீனதேசத்து மாதர்களுக்குக் கால்கள் சிறியவையாயிருந்தால் தான்அழகென்று பிறந்தது முதல் கால்கள் பெரிதாய் வளராவண்ணம் இரும்புச்சோடுகள் செய்துபெற்றோர், பந்துமித்திரர் முதலாயினோர் அப்பெண் குழந்தைகளுக்குப் போடுவது வழக்கம். பக்குவகாலம் வந்த பின்னர் அந்த ஸ்திரீகளுக்கு நடக்கச் சக்தியின்றி அணில்கள்போல் துள்ளித்துள்ளி இடம்விட்டுப் பெயருவர். மற்றும் முற்காலத்தில் ரொமானியர் (Romans) குள்ளர்களின்மீது மிக்க ஆசைகொண்டு தம் குழந்தைகளை வளரவிடாதவாறு சிறு பெட்டிகளை யேனும் பலத்த கம்பளிகளையேனும் உபயோகிப்பர் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இப்போது அவ்வழக்கம் அவ்வளவாகக் காணப்படாவிடினும் நாகரீக மிகுந்த ஐரோப்பாவிலுள்ள இரண்டோரிடங்களில் இன்னும் அவ்வழக்கம் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

அவர்கள் வளருவது விநோதமாயிருக்க அவர்கள்செய்யும் வேலைகள் இன்னும் விநோதமாயிருக்கின்றன. உதாரணமாக பாரிஸ்நகரத்தில் நிகழ்ந்துவரும்ஒரு சமாசாரத்தை விவரிப்போம்.

பிரின்ஸெஸ் விக்வீடாஎனும் மாது அமெரிகாவில் 1881-வது வருஷத்திற் பிற ந்தவளாவள். அவள் இப்போது 2 அடி 4அங்குலங்கள் அல்லது 1 கஜ உயரமுள்ளவ ளாக யிருக்கிறாள். பிரான்ஸ்தேசத்துத் தலைநகரான பாரிஸில் அம்மாது சகல ஐசு வரியங்களுடன் தன் பெற்றோரினாதீனத்தில் வசித்து வருகிறாள். அதே நகரத்தில் வேறிரண்டுகுள்ளர்கள் தோன்றினார்கள். ஒருவனுக்கு அகஸ்டே என்று பெயர். அவன் பிரான்சுதேசத்தவன்; 26 பிராயமுடையவன்; 3 அடி 6 அங்குல உயரமுடைய வன்; சொற்சுவை பொருட்சுவை யில்லாது பேசுவதில் புலவன்! மற்றொரு குள்ளனு க்கோ டெல்பின் என்று பெயர்; அவன் ஜர்மனித்தேசத்தவன்; 21 பிராயங்கொண்ட வன்; 2 அடி $7\frac{1}{2}$ அங்குல உயரமுடையவன்; பொருட் பொலிவுடன் பேசுந்திறமையு டையான், இவ்விரு வாலிபர்களும் "மந்தையாட்டுக்கு முதலாடுபோனது சாக்கு" என் பதற்கிணங்க தம்மைப்போல் குள்ளமாயிருக்கும் உயர்குல ஸ்திரீயான பிரின்ஸெஸ் விக்வீடாவின் மீது மோகங்கொண்டு பிரதிதினமும் தனித்தனியே ஒருவரையொரு வர் அறியாவண்ணம் அம் மாதிடம்போய்ப் பேசுவதும் தமது பிரதாபங்களை விவரித் துரைப்பதுமாக ஒருவருஷகாலம் கழித்தனர். நவரஸத்தையும் விளைவிக்கும் இனிய பத ங்கள் நிறைந்த நயவார்த்தைகளைப் பிரயோகித்த கடிதங்கள் பலவற்றை இவ்விருவரும் அம்மாதுக்கு வரைய அவள் அவைகளைத் தனது பெற்றோரிடங் காண்பித்து விட்ட ளள். இதற்குள் ஜர்மனிதேசத்துச் சித்திரக்குள்ளன் ஒரழகிய ரோஜாமல்லிகைகளடங் கிய செண்டை அம்மாதுக்குக் கொடுத்து வந்த சமயத்தில் பிரான்சுதேசத்துக் குள்ளன் எதிர்ப்பட அவன் சமாசாரத்தைத் தெரிந்துக்கொண்டு டெல்பியைப் பார்த்து "நீ சோனி, உன் கையால் ஒன்றுமாகாது; நீ ஆடவனாயின் என்னுடன் குஸ்தி பிடித்து நீகெலிக்கவேண்டும், இல்லாவிடில் நான்தான் அவளை மணஞ்செய்து கொள்வேன்" என்று கடுமையாய்க் கூறினான்; வேறொருவர் இச்சமாசாரத்தை அம்மாதிடத்துரைத் ததும் அவள் "பிரான்சுதேசக்குள்ளனை அகஸ்டே முன்கோபிஷ்டி, இனமறியாத வன்" என்றும் "ஜர்மனிதேசத்துக் குள்ளனை டெல்பின் சிறியவன் வாக்கு சாதுர்ய முடையவன்; ஆனால் அவன் சொல்வதை முழுவதும் உண்மையென்று நம்புவதெப் படி; அவர்கள் விளையாட்டுச்சிறுவர்கள் ஆட்டுக்கிடாச் சண்டையில் நரியகப்பட்டு மாண்டதுபோல் எனக்காக அவ்விருவரும் உயிர்போக்கிக்கொள்ளாம லிருக்கட்டும்' 'என்று சொல்லி முடித்தாள். இம்மாது வயதானவள்போலும், உலக விவகாரங்களை நன்கறிந்தவள் போலுமல்லவோ பேசுகிறாள்; உயர்குலத் துதித்தவளானது பற்றி அவள் அவ்வாறு கூறுகின்றனள் போலும் நல்லெண்ணத்துடன் அவளிருப்பாளாயின் இவ்விருவரும் அடிக்கடி தன்னிடம் வந்து வார்த்தையாடிப் போவதற்கு இடங்கொடுப்பது யாதுகாரணம் பற்றியோ?

L. அநந்தய்யர்.

## விடுகதை.

மூன்றெழுத்தடங்கிய தோர்பட்டணம் அல்லது ஜில்லாவின் பெயர். முதலெழுத்துங் கடையெழுத்தும் சேர்ந்தால் ஒரு மிருகத்திற்குப் பெயராகும். நடுவெழுத்தும் கடையெழுத்தும் சேர்ந்தால் மேன்மக்கள் என அர்த்தம் தரும். முதலெழுத்தும் நடுவெழுத்தும் சேர்ந்தால் தேன் என்ற அர்த்தம் தரும். பெண்மணிகளே! இதுஎது?

ஓர்மாது.

## நேஷனல் இந்தியன் மகாசபை.

ஏப்ரல் மாதம் 22-ம் தேதி செனட்அவுசில் நேஷனல் இந்தியன் மகாசபையில் கனம் மிஸ்டர் பென்ஸன்துரை தலைமை வீற்றிருக்க நாஷனல் இந்தியன் அஸோசியேஷனுடைய வருஷாந்திர பொதுக்கூட்டம் நடந்தது. கௌரவ காரியதரிசியாராகிய கனம் என், சுப்பிரமணியம் என்பவர் 1903-ம் வருஷத்திய ரிபோர்ட்டை வாசித்தார்; இதில் சேர்ந்திருக்கும் மெம்பர்கள் 98. சந்தாவரும்படி ரூ 593. 1903-ம் வருஷத்தில் படித்தபெண்களின் தொகை 30, வந்தவர்கள் சராசரி 21, இதற்குக்காரணம் உபாத்தியாயர்கள் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு மாணுக்கரையும் சந்திக்கக்கூடாததினுலும் மனைவிகளாயும், தாய்மாராயுமிருக்கின்ற மாணுக்கருக்கு அடிக்கடி நேரிட்ட தடைகளினுலும் என்று சொல்லவேண்டும், தங்களுடைய வீடுகளின் அல்லது தாய்மாருக்குரிய கடமைகளை நிறைவேற்றக்கூடாத தடையிருக்குமானுல் நாங்கள் அவர்களைப் படிக்கும்படி கட்டாயப்படுத்துகிறதில்லை, இதுவுமல்லாமல் கடந்த வருஷத்தில் மாணுக்கர்களிலேயும், அவர்கள் பிள்ளைகளிலேயும் அநேகர் வியாதியால் வருந்தினுர்கள். இதனுல் 869- ரூபாய்க்குப் பதிலாக ரூபா 710-8-0. வசூல் செய்யப்பட்டது. இச்சென்னையில் ஓரே மாணுக்கர் வயது 18, மற்றவர்கள் சராசரி 15 வயது, அதாவது பள்ளியைவிட்டு 5 வருஷம் வரைக்கும் கற்பிக்கப்படுகிறுர்கள். 16 பிராமண ஸ்திரீகளும், 14 இதர ஜாதியைச் சேர்ந்தவர்கள் தான் படித்துவந்தார்கள். அக்டோபர்மாதம் மிஸ்கார் அம்மாளவர்கள் இவர்களைப் பரீட்சித்து உபாத்திமார் தங்கள் மாணுக்கர் இன்னும் அதிகஒழுங்காய்படிக்கும்படி பிரயாசைப்படவேண்டியதைத் தவிர மற்றவைகளெல்லாம் திருப்தியாயிருக்கிறதென்றபிப்பிராயப்பட்டார்கள். 1904-ம் வருஷத்துத் துவக்கத்தில் ஒரு விசேஷித்த மாறுதல் உண்டாயிருக்கிறது. இது இன்னொரு வருஷத்துக்குரிய ரிப்போர்ட்டாயிருந்தாலும் இங்ஙனம் கொஞ்சம் எடுத்துரைப்பது நன்மையாயிருக்கும். ஜனவரிமாதத்திலிருந்து சென்னை இந்து கனவான்கள் தங்கள் வீட்டுப் பெண்கள் படிப்பதைப்பற்றி அதிக சிரத்தையைக் காட்டியிருக்கிறுர்கள். சிலர் சம்பளப் பணம் சேர்ப்பதிலும், சிலர் படிக்க தங்கள் வீடுகளைக் கொடுப்பதினுலும், தங்கள் பெண்கள் தனிமையாய்ப் படிப்பதைவிட சேர்ந்து படிப்பதைக் குறித்தும் அதிக முயற்சிசெய்து வருகிறுர்கள். திருவல்லிக்கேணியில் மாத்திரம் 8 பேர் சேர்ந்து வாசிக்கிறுர்கள். இதனுல்



அவர்கள் அதிகநேரம் படிக்கக்கூடியதாகவும் உபாத்தியாயர்களுக்கும் அதிக சிரமமில்லாமலும் போகிறது. இப்பொழுது ஒரு சூப்பிரன்டெண்டும் 4 உதவி உபாத்திமார்களுமிருக்கிறுர்கள். மாணுக்கரும் 30 திலிருந்து 52 ஆகிவிட்டார்கள். இன்னும் சில உபாத்திமார்கள் வேண்டியதாயிருப்பதால்தகுந்தவர்கள் கிடைக்கும் பக்ஷத்தில் அதுவும் பூர்த்தியாய்விடும். இதே முயற்சி தொடர்ந்து வருமாயின் பெண்கல்வி என்னும் பெரியகுறை நீங்கிவிடும். பிளாக்டவுன் ராஜா சர். ராமசாமிமுதலியார் பள்ளியில் இந்தவருஷத் துவக்கத்தில் 149 மாணுக்கர் இருந்தார்கள்.

மைலாப்பூரிலிருக்கும் விஜயநகரத்து மஹாராஜா பள்ளிக்கூடத்தில் சென்ற வருஷக் கடைசியில் 84 பெண்களிருந்தார்கள். அவ்விடத்து ஜனங்கள் தாராளமாய் கொடுக்கிறதில்லை. அதை விருத்திபண்ணும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. சீக்கிரத்தில் அதுவும் தகுதியான நிலைமைக்கு வருமென்று நம்புகிறோம்.

இந்தக் கூட்டத்தில் மைசூரிலும் திருவாங்கூரிலும் இருக்கிறதுபோல சென்னை ராஜதானியிலும் பெண்களுக்காக ஒரு ஐஸ்கூல் (High School) ஸ்தாபிக்கும்படி சர்க்காரைத் தூண்டிவிட வேண்டுமென்று பேசப்பட்டது. கூட்டத்தின் முடிவில் மிஸ்டர் எம். ரங்காச்சாரியார் தற்கால இந்திய நிலைமைக்கு பெண்கல்வி எவ்வளவு விசேஷம் என்று பேசி இக்கூட்டத்தின் மேன்மையான வேலையைப்பற்றி புகழ்ந்தார்.

## சமாசாரக் குறிப்பு.

பெண்கள் பாடசாலைகளுக்கு உதவி இன்ஸ்பெக்டராகிய மிஸ். ஜெ. பெட்டர்ஸன் என்றமாது 1904-ஞ ஏப்ரல்மீ முதல் ப்ரிவிலேஜ்லீவ் பெற்றிருக்கிறுர்கள்.

***

நமது எட்வர்ட் சக்கிரவர்த்தியும் அலெக்ஸாண்டிரா மகாராணியும் அயர்லண்டுக்குச் சுற்றுப்பிரயாணமாகப் புறப்பட்டு ஏப்பிரல் மாதம் 25-ந் தேதி செவ்வாய்க்கிழமை கனமழை பொழிந்து கொண்டிருக்கையில் கிங்க்ஸ் டௌன் போய்ச்சேர்ந்து அனைவராலும் எதிர்கொண்டழைக்கப்பட்டனரெனக் கூறப்படுகின்றது.

***

சென்றமீ 19உ சாயங்காலம் இத்தேசத்திய கனவான்களுக்கு வந்தனமளித்து விட்டு எச். இ. லார்ட் ஆம்தில் அவர்கள் கல்கட்டாவுக்குச் சென்றுர். எச். இ. லார்ட்கர்ஸன் அவர்கள் சீமைக்கு லீவுபெற்றுக்கொண்டு சென்றமையால் இவருக்குப்பதிலாக வைஸராயாக இவர் நியமிக்கப்பட்டிருக்கிறுர், லார்ட் ஆம்தில்க்குப்பதிலாக சென்னையில் கனம் மிஸ்டர் தாம்ஸன் கவர்னராக நியமிக்கப்பட்டிருக்கிறுர்.

***

மாட்சிமை தங்கிய அலெக்ஸாண்ட்ரா சக்கிரவர்த்தினி இங்கிலண்டிலுள்ள ஸான்டிரிங்கம் அரன்மனையிலாவது மற்றும் தமக்குச் சொந்தமாயிருக்கும் வேறு வாசஸ்தலங்களிலாவது தங்கியிருக்குங்கால் நந்தவனங்களிலிருந்துகொண்டு வரப்படும் ரோஜா, மல்லிகை, சண்பகம் முதலான நறுமணம் வீசும் மலர்களை அரன்மனையிலுள்ள பற்பல அறைகளில் போடப்பட்டிருக்கும் மேஜைகளில் வரிசைவரிசையாய் வைத்தலங்கரிப்பதில் கவனத்தைச் செலுத்துவதே பெருங் காரியமாய்க் கொண்டிருக்கிறாராம். அவரவர் மனதிற்கு வந்த வண்ணம் புஷ்பங்களை வெவ்வேறு விதமாக அலங்கரிப்பதைச் சக்கிரவர்த்திக்கு ஒரு ஜபானிய மாது கற்றுக்கொடுத்தனளாம். ஜபானியர் இச்சித்திரவேலையில் பேர்போனவர்களாம்.

***

பங்காள மாகாணத்தைச் சேர்ந்த பர்ட்வான் மகாராஜா அவர்கள் பெண் கல்வியைப்பற்றி பின் வருமாறு சொன்னார்:—இந்திய மாதர்களுக்கு உயர்தரக் கல்வி கற்பிக்கப்பட்டாலொழிய நன்மை விளையாது. தற்காலம் நம்மவர்கள் தங்கள் பெண்பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதாகச் சொல்லிக்கொண்டு அவர்களுடைய மனம் தீயவழிகளில் சென்று கெட்டுப்போவதற்குள்ள வழியைத்தேடுகிறார்கள். பெண்கள் வாசிக்கத்தகாத புஸ்தகங்களை வாசிப்பதை தடுக்கிறதில்லை. அவர்கள் வீட்டுவேலைகளை அசட்டை செய்வதையும், பெரியோர்களை மதியாதிருப்பதையும் கவனிக்கிறதில்லை. மேல்நாட்டு நாகரீகத்திலுள்ள அருவருக்கத்தக்க பாகங்களைமட்டும் இந்நாட்டுப்பெண்கள் படிக்கிறார்களே யொழிய, அந்த நாகரீகத்திலுள்ள நல்ல அம்சங்களைப் படிக்காமலிருப்பது பிசகு, சில குடும்பங்களில் ஸ்திரீகள் தங்குடும்பத்தைச் சேர்ந்த ஆண்கள் முகத்தையும் பார்க்கக்கூடாதென்ற வழக்கம் சிறந்ததாகாது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் பரஸ்பர நம்பிக்கை வைத்துப் பழகவேண்டும். நம்மவர்கள் சதிர்க்கச்சேரிகள் வைக்கும் வழக்கத்தைப்பற்றியும் உயர்குல மாதர்கள் கோஷாக்களாயிருப்பதைப்பற்றியும் கடிந்து பேசினதாக அறிகிறோம்.


## தங்கம் வெள்ளி கில்ட் சாமான்கள்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (1) ஒட்டியாணம் 65-சலங்கையுள்ளது | ...15 | 0 | 0 | (8) சலங்கை 100 | ...10 | 0 | 0 |
| (2) போல் கைகாப்பு | ... 9 | 0 | 0 | (9) ஷர்ட் பட்டன்ஸ் | ... 3 | 8 | 0 |
| (3) கெட்டிக்கைகாப்பு | ... 7 | 0 | 0 | (10) ஜடை நாகம் | ...25 | 0 | 0 |
| (4) புதுச்சேரிகொலுசு | 12 | 0 | 0 | (11) ரோஜாதிருகுப்பூ | ... 2 | 0 | 0 |
| (5) அட்டிகை | ...12 | 0 | 0 | (12) அரைமூடி | ... 2 | 0 | 0 |
| (6) காரை | ...10 | 0 | 0 | (13) மோதிரம் | ... 0 | 12 | 0 |
| (7) வங்கி ஒற்றை | ...10 | 0 | 0 | (14) தாழம்பூ | ... 1 | 0 | 0 |
| | | | | (15) திருகுப்பூ | ... 1 | 0 | 0 |

பி. எஸ். சுந்தரம் அண்டுகோ.
திருவல்லிக்கேணி, 107-பெரிய தெரு,





## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.



4. லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:—தாம்பூலம் தரிப்பவர்கள் ஜேபிருப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ளவேண்டிய விலையுயர்ந்த வஸ்து. தந்த நோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு இதுகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது தனியாகவாவது சாப்பாட்டின்பேரில் 2-மாத்திரை உபயோகித்தால் எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன் வாயில் அனேகமணிநேரம் சுகந்த வாசனை யிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினிமந்தம், மலச்சிக்கல், அஜீரணத்தினு லுண்டாகும் வயிற்றழிவு வயிற்றுநோவு, நெஞ்செரிச்சல் முதலிய பற்பலவியாதிகள் தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்தால் ஜன்னி கிட்டகாடாது ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும். இதில் லாகிரிமுதலான யாதொரு அபாயகரமானவஸ்து சேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராக வரவழைத்த கஸ்தூரி, தங்கரேக், பச்சைகற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்து சாமான்களும் வாசனை திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சை கற்பூரம் முதலாகிய வாசனை வஸ்துக்கள் உபயோகிக்கவேண்டியது அனாவசியம். அறைகுழந்தைகள் முதல்வயது சென்றவர்களுக்கு சளி, இருமல், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1-முதல் 4-மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுகமாகும். 200-மாத்திரை அடங்கிய சீசா 1-க்கு விலை அணா-4. இந்தியாவில் 1-முதல் 12-சீசாக்கள் யனுப்ப பாக்கிங்கு தபால் சார்சு அணா 5-ம் சிலோனுக்கு அணா 7-ம் பிரத்தியேகமாகும்.

13. சுகந்த பரிமள சர்வதந்த ரோகநிவாரண பல்பொடி:—நல்ல சீர்ண சக்தியைத்தரும், பல்வலி எக்காலத்திலும் வராது பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1-க்கு விலை அணா 3. வி. பி. செலவு 1-முதல் 5-சீசாக்கள்வரையில் அனுப்ப அணா-5 பிரத்தியேகம்.

### நற்சாட்சிப்பத்திரங்கள்.

ஐயா,
இப்பவும் தங்கள் லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரையை நான் தாம்பூலத்தோடு உபயோகித்து வந்ததில் எனக்கு இன்னம்......

துரைசாமி அய்யர்.
பி. டப்ளு. டி. (P. W. D.)
பச்சப்பரா, திருவாங்கூர்.

தங்களுடைய லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள் மிகவும்நல்லது. அதனால் நான் உடனே குணத்தை அடைந்தேன்.

போலீஸ் இன்ஸ்பெக்டர்.
புத்தூர்.
வட ஆற்காடு ஜில்லா.

தாங்களனுப்பின 4 பாட்டில்களும் (லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரை) வந்துசேர்ந்து என் மனசுக்குரொம்பவும் திருப்திகரத்தை கொடுத்தது. தாங்கள் தயவுசெய்து உடனே அடியிற்கண்ட விலாசத்திற்கு......

ஓவர்சியர் நாரயணசாமி அய்யர்.
பெங்களூர்.

வேண்டியவர்கள் அடியில்கண்ட விலாசதாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ பி. சுப்பராய்,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.


16242
JL
Y15 m 211, M77M0
M99,6-7

## நமது சந்தாதாரர்களுக்கு

புதிய வருஷம் பிறந்து 4 மாதங்கள் ஆய்விட்டன. இன்னும் நமது சந்தாதாரர்களில் சிலர் நாளது 1904-ம் ௵த்திய சந்தாபாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். சந்தாவை முன்பணமாகவே அனுப்பவேண்டியிருக்க இன்னும் அனுப்பாமல் இருப்பதால் நமக்கு வீண் சிரமமும், நஷ்டமும் நேரிடுகிறது. சந்தாவை சரியாய் அனுப்பினால் தானே நமது சஞ்சிகை கஷ்டமின்றி சரியாய் நடந்துவரும். இந்தசஞ்சிகை கிடைத்தவுடனாவது தயவுசெய்து அனுப்பும்படியாய் கேட்டுக்கொள்வதுடன் இப்பத்திரிகையை தங்கள்நண்பர்களுக்கும் காண்பித்து பத்திரிகையையும் அபிமானித்து நடத்தி வருவீர்களென்று நம்புகிறோம். மேல்கண்டபடிசந்தா அனுப்பாதவர்களுக்கு அடுத்த ஜூன்௴ சஞ்சிகை. வி. பி. யில் அனுப்பப்படும். பெற்றுக்கொள்ளும்படியாய் கேட்டுக்கொள்கிறேன். நமது சந்தாதாரர்கள் தகுந்தகனவான்களாதலால் இது ஓர் பெரிதல்ல. மேல் விலாசம் மாறும்பொழுது உடனே தெரியப்படுத்தவேண்டும்.

## மாதர் மனோரஞ்சினி சந்தாவிபரம்.

| | ரூ. அ. பை. |
|---|---|
| வருட சந்தா தபால் சார்ஜ் உள்பட வெளியூர் உள்ளூராருக்கு... | 1—12—0 |
| 6-மாதத்திற்கு ... ... ... ... ... | 1—0—0 |
| தனிப்பிரதி ... ... ... ... ... | 0—2—6 |
| மேல் நாட்டாருக்கு ... ... ... ... | 2—4—0 |
| இக் பேபர் வருட சந்தா ... ... ... ... | 2—8—0 |

முன்பணம் அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

விளம்பரம் பக்கம் ஒன்றுக்கு ௴ 1-க்கு ரூ 3—0—0

ஏஜண்டுகள் தேவை !! ஏஜண்டுகள் தேவை !!

வெளி ஜில்லாக்களில் நமது மாதர்மனோரஞ்சினி யென்னும் மாதாந்தரத் தமிழ்பத்திரிகைக்கு சந்தாதாரர்களைச் சேர்க்க ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

விபரம் தெரியவேண்டியவர்கள் மாதர்மனோரஞ்சினி ஆபீசு மானேஜருக்கு சீக்கிரம் எழுதி பதில் தெரிந்துகொள்ளலாம்.

திருவல்லிக்கேணி
15—5—04.

ஸ்ரீ பி. வைத்தியநாத ஐயர்,
மானேஜர், மாதர் மனோரஞ்சனி ஆபீஸ்,
வீரராகவமுதலி தெரு, திருவல்லிக்கேணி.

Printed at the Ripon Press Madras & Published by the Proprietor, C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

23 JUN 1904 MADRAS
Page no 103 to 118
119

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. VI. | Madras: June 1904. | No. 6.
புத்தகம் ௬. | சென்னப்பட்டணம்: ஜூன்௴ 1904. | இல. 6.

## நல்லபெண்கள்.

புஷ்பங்களிலேயும் பழங்களிலேயும் எவ்விதம் சிலது நல்லதாயும் சிலது
கெட்டதாயுமிருக்கின்றதோ அவ்விதமே பெண்களிலேயும்
சிலர் நல்லவர்களாகவும், சிலர் கெட்டவர்களாகவுமிருப்பார்
கள். நல்ல புஷ்பங்கள் நல்ல பரிமளவாசனையையும் நல்லபழங்
கள் திருப்திப்பான ரசத்தையும் கொடுத்து நமக்குச் சந்தோஷ
த்தை உண்டாக்குவதுபோல் நல்ல பெண்கள் தங்களுடைய
நற்குணங்களால் மனிதர்களுக்குச் சந்தோஷத்தை உண்டாக்குவார்கள்.
கெட்டபெண்கள் கெட்ட புஷ்பங்களைப்போலும் கெட்ட பழங்களைப்போ
லும் இதரர்களுக்கு நற்காரியத்தைச் செய்வதற்குப்பதிலாக கெடுதிகளைச்
செய்து வருவார்கள்.

### நல்ல பெண்களுடைய லக்ஷணங்கள்.

நல்ல குழந்தைகள் எப்பொழுதும் தாய்தகப்பனார் உத்திரவு மீறாமல்
அவர்களிடத்தில் விசுவாசம் வைத்து நடப்பார்கள். நம்மைப் பெற்றுவளர்
த்து எவ்வளவு கஷ்டங்களையும் அவர்கள் கடந்து நம்மைக் காப்பாற்றி நம
க்கு கல்வி, நற்புத்தி முதலியவைகளைப் புகட்டி, எப்பொழுதும் நமக்கு தே
காரோக்கியத்தையும், நமது க்ஷேமத்தையும் விரும்பிவரும் தாய் தகப்ப
னாரைவிட இந்த லோகத்தில் நமக்கு முக்கியமாய் மேலானவர்கள் யார்?
இவ்வித சகாயத்தைச் செய்தவர்களிடத்தில் நாம் தயையும், வணக்
கத்தையும் வைக்காவிட்டால் நமக்கு என்னலாபம்? "என் மனதில் என்
தாயார் மேல் எவ்வளவோ அபேக்ஷை இருக்கிறதென்றும் மேலுக்கு
மாத்திரம் அவர்கள் மீது கோபிக்கிறேன்" என்றும் சில பெண்கள் சொல்
வார்கள்; ஆனால் அவர்கள் இப்படி செய்துக்கொண்டிருப்பது உத்தமமல்ல.
ஒவ்வொருவரும் தங்கள் பெற்றோர்களிடத்தில் கொஞ்சம் பிரியமாயிருக்
கிறது இயற்கையே ஆயினும் சகஜமாய் இந்த இயற்கையாயிருக்கிற பிரியத்
தை அதிகமாக விருத்திபண்ணிக்கொண்டு தகுந்தமாதிரி நடந்துகொண்டு
வந்தால் நமக்கு பிதுருபக்தியும், மாதுரு பக்தியு மிருக்கிறதென்று ஜனங்

கள் சொல்லுவார்கள். 'எனக்கு உன்மேல் மிக ஆசை யிருக்கிறது' என்று நம்முடைய சிநேகிதர்களில் எவராவது நம்மிடத்தில் சொல்லி, பின் நம்மை அடித்தாலாவது, திட்டினாலாவது அவர்களை நாம் நல்லவர்களென்றெண்ணுவோமா? எண்ணவே மாட்டோமல்லவா? அதுபோல உண்மையான பக்தியும் பிரியமும் நமது பெற்றோர்களிடத்திலிருக்கிறதோ இல்லையோ என்பது நாம் அவர்களிடத்தில் நடந்துகொள்ளுகிற விஷயத்தில் நமக்குத் தெரியும்.

ஆகையால் நல்லபெண்கள் எப்பொழுதும் தகப்பனார்களிடத்தில் மிகவும் வணக்கமாயும், பிரியமாயும், பக்தியாயுமிருந்து அவர்களுக்கு ஆநந்தத்தையுண்டுபண்ணுகிறதற்கு பிரயத்தனம் செய்வார்கள். சிலப் பெண்கள் வீட்டில் தாயார் ஏதாவது வேலையிட்டால் அதைச் சரியாய் செய்யாமலும் அதை அரைகுறையாகச் செய்து குழந்தைகளிடத்தில் விளையாடுவதற்கு பக்கத்து வீட்டிற்குப் போய்விடுவார்கள். இன்னும் சிலர் தங்கள் வீட்டில் கெட்டப் பெயர்பெற்று வெளியிலுள்ள சிநேகிதர்களுக்கு மாத்திரம் நல்லவர்களாக பாவிப்பதுமுண்டு. இவ்வித குணமுள்ளபெண்கள் நல்லவர்களல்லவென்று சொல்லவும் வேண்டுமோ? வீட்டிலிருக்கிற வேலைகளைச் செய்யாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற தாயைவிட்டு இதரர்கள் வீட்டில் ஆடுவதற்கும் பாடுவதற்கும் ஓடிப்போகிற பெண்கள் சீக்கிரத்தில் கெட்டகுணங்களைப் பெறுவார்கள்; இப்பேர்ப்பட்டவர்கள் முக்கியமாய் தாய்தகப்பனார் மீது குற்றம் சொல்வார்கள்.

இதரர்கள் சொல்லுகிற வேலைகளைச் செய்கிறதற்கு மாத்திரம் இவ்விதப் பெண்களுக்கு மிக்கச் சந்தோஷம். ஆனால் இவ்வித பெண்களிடத்தில் வேலை வாங்கும் இதரர்கள் அடிக்கடி இவர்களை ஸ்தோத்திரம் செய்தும் 'உன்னிடத்தில் எவ்வளவு பொறுமை, என்ன பிரியம், என்ன நற்குணமடீ' என்று புகழ்ந்து சொல்வார்கள். பார்த்தீர்களா! தாயார் வார்த்தைக் கேட்காத பெண்கள் இதரர்கள் வீட்டில் எப்படி பணிவிடை செய்து அவர்களிடத்தில் மனங்கலந்து பேசுவதுபோ லல்லவோ தங்கள் வீட்டிலேயுமிருக்கவேண்டும்! இவ்விதமில்லாத பெண்களுடைய மனதில் தப்பாமல் கெட்டகுணம் உண்டாகும்.

ஆனால் நல்ல பெண்கள் இவ்விதம் நடக்காமல் தங்களுடைய சௌக்கியத்தை விட முதலில் தங்கள் தாயார் சௌக்கியத்தை நோக்கி காரியஞ்செய்ய பிரயத்தனிப்பார்கள். தாயார்சொன்ன வார்த்தைப்பிரகாரம் நடந்துக்கொண்டு புத்தியுள்ளவளா யிருக்கும்பெண்கள் நல்ல பெண்களென்று பெயரெடுப்பார்கள்.

நல்லபெண்களுடைய இரண்டாவது லக்ஷணமும் சிரத்தையும்பற்றி சொல்வோம். தாயார் போதிக்கிறபிரகாரம் வீட்டுவேலைகளைக் கவனிப்பதிலும், கல்விகற்பதிலும் அக்கரையில்லாத பெண்களுக்கு வேலை, படிப்பு, பாட்டு முதலியவைகள் வருவது மிக கஷ்டமேயாம். ஆனால் சில பெண்கள்



படிப்பதில் ஆவல்கொண்டிருந்தாலும் வீட்டுவேலைகளைக் கற்றுக்கொள்ளுவதில் பிரியப்படுவதில்லை. இன்னும் சிலர் வீட்டுவேலைகளைச் செய்வதில் மனமுள்ளவர்களாயிருந்து படிப்பதில் இஷ்டமில்லாதவர்களா யிருக்கிறார்கள். இவ்விதம் செய்கிறது நல்லதல்ல. செய்யவேண்டிய எல்லாவேலைகளையும் 'செய்வன திருந்தச்செய்' என்பதற்கிணங்க பெண்கள் சிரத்தையோடு செய்துவரவேண்டியது. 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்பதற்கிணங்க ஒவ்வொன்றையும் பெண்கள் செய்யமுயலவேண்டும். கஷ்டமில்லாமல் சுகம் கிடைப்பது அரிது. கஷ்டப்பட்டு படிக்கிறபெண்கள் வெகு சீக்கிரத்தில் பல விஷயங்களை அறிந்துக்கொள்வார்கள். அக்கரையும் ஆவலுமில்லாத பெண்கள் படித்ததை அடிக்கடி படிக்கவேண்டிவரும். உபாத்தியாயரிடத்தில் கெட்டபெயரடைந்து பரிக்ஷையிலேயும் தவறிப்போய்அவமானப்படவேண்டிவரும். வீட்டுவேலைகற்றுக் கொள்ளுகிறதற்கு ஆவலிருக்கிற பெண்கள் தாயாருக்கு நல்ல தோழிகளாகவுமிருந்து, தாயாரிட்ட வேலைகளையெல்லாம் சரிவரசெய்ய அதிசீக்கிரத்தில் முயன்று, அவ்வேலைகளைச்செய்வதில் சமர்த்தர்களென்று பெயரெடுப்பார்கள். அவ்விதமின்றி வேலை செய்யாமலிருக்க விரும்புகிற பெண்கள் தாயார் ராக்ஷசியென்றும், தங்கள் தந்தை பிசாசென்றும் எண்ணுவார்கள். வீட்டிலேயே யிருக்கும் இதர பந்துக்களை விரோதிகளென எண்ணும்படியும் தோன்றும். அவர்கள் கண்களுக்குத் தென்படாமல் ஐந்து நிமிஷமாவது சௌக்கியமா யிருக்கக் கூடாதாவென எண்ணுவார்கள். ஐயோ! பாவம்! இவ்வித குணமமைந்த பெண்கள் எவ்வளவோ கஷ்டங்களுக்கு உட்பட்டிருக்கவேண்டிவருமல்லவா?

சிறிய வயதில் தாயாரிடத்தில் வேலைகளைக் கற்றுக்கொள்ளாத பெண்கள் மாமியார் வீட்டுக்குச் சென்றால் அங்கு எவ்விதம் வேலைகளைச் செய்வார்கள்? வேலைகளையும் பாட்டு முதலியவைகளையும் அறிந்துகொண்டு கல்விகற்று நற்குண மமைந்திருக்கிற பெண்களே சாதாரணமாய் மாமியார் நாத்தனாரிடத்தில் மிக ஏளனம் செய்யப்படுகிறார்களே! அவ்விதம் சிறிய வயதில் வேலைகளையும் பாட்டு, கோலம்போடுதல், கல்விமுதலியவைகளைக் கற்றுக்கொள்ளாத பெண்கள் பிற்பாடு மிக கஷ்டத்தை அனுபவிப்பார்களென்பதற்குச் சந்தேகமுண்டோ? ஆகையால் இளம்பிராயமுதல் பெண்குழந்தைகள் சிரத்தையுடன் படித்துக் கொண்டும், வீட்டு வேலைகளைக் கிரமமாகச் செய்துகொண்டும் வரவேண்டியது.

தாய்தகப்பனாரிடத்தில் பக்ஷமாயும், பிரியமாயுமிருந்து அவர்கள்சொற்படி கேட்டும், அவர்களிட்ட வேலைகளைச்செய்தும், கல்வியிற்தேறியுமுள்ள பெண்மணிகள் நற்பெயரடைவார்கள். ஒரு பெண்ணிடத்தில் ஒரு நற்குணமிருக்குமாயின் இது இன்னொரு நற்குணத்திற்கு நல்லவழியைக் காண்பிக்கும்.

தன் சொந்த பந்து ஜனங்களிடத்தில் பிரியமிருக்கிற பெண்களுக்கு நல்ல சகிகள் கிடைப்பார்கள். சிநேகத்தை விருத்திசெய்யவேண்டுமென்ற

எண்ணமிருந்தால் அவர்கள் அவ்விதமே கூடிய சீக்கிரத்தில் செய்வார்கள். அவர்கள் தயை, தர்மபுத்தி, பக்தி, சிரத்தை முதலியவைகளை அறிந்து கொள்வார்கள். இவ்விதம் சிரத்தையுடன் வேலை செய்ய கற்றுக்கொண்ட பெண்கள் உலகத்திலிருக்கும் கஷ்டங்களுக்குப் பயப்படாமல் தாங்கள் செய்யவேண்டியதைக் கடமைப்பிரகாரம் பொறுமையுடன்செய்து வருவார்கள். தங்களுடைய நற்காரியங்களால் மற்றவர்களால் நற்பெயரடைந்து சுகமுமடைவார்கள்.

## “பெற்றோர்களின் போதனை.”

நமது தேசத்தில் சாதாரணமாக ஒரு பெண்ணுக்கு விவாகமாயி அவளுக்குத்தக்க வயதுவந்தவுடன் கணவன் வீட்டிற்கு அனுப்பப்படுகிறாள். இவ்விதம் இப்பெண் தனது கணவர் வீட்டிற்குச் செல்லும்பொழுது இப்பெண்ணின் தாயார் இவளுக்கு புத்தி புகட்டி அனுப்புவது சகஜமாயிருக்கிறது. தாய்மார்கள் அநேகமாக தங்கள் பெண்களுக்கு நற்புத்தி புகட்டுவதற்கு பதிலாக பற்பல விநோதப் பொருள்களையும் நகை முதலியவைகளையும் கணவனைத் துன்பப்படுத்தி பெறவேண்டிய பிரயத்தனம் செய்யும்படி போதிப்பதுண்டு. “சீட்டி ரவிக்கை உன் கணவன் வாங்கிக் கொடுத்தால் வேண்டாமென்று சொல், குறநாட்டு புடவை 10-ருக்கு வாங்கிக் கொடுத்தால் 20-அல்லது 25-ருக்கு காஞ்சிபுரம் ஹம்ஸபொப்ளி புடவைதான் வேண்டுமென்று சொல். சிறிய கம்மல் 100-ரு யில் செய்கிறேன் என்றால் 400-ரு யில் உயர்ந்ததோடு ஒன்று வேண்டுமென்று சொல்” என பலவிதமான துர்ப்போதனைகளைச் சிறுபெண்களுக்குச் சொல்லியனுப்பும் வழக்கம் மிகக் கொடியது. இதை ஒவ்வொரு கற்றறிந்தமாதும் நீக்க முயலுவதுடன் தங்கள் பந்துமித்திரர்களுக்கும் இவ்விதம் நடப்பதுசரியல்லவென்று சொல்லி அடிக்கடி இவ்விதபோதனையை நீக்க முயலவேண்டும்.

நிற்க, முன்காலத்தில் அநேக இராஜாக்களும் ரிஷிகளும் தங்கள் குமாரத்திகளை கணவன் வீட்டிற்கு அனுப்பும்பொழுது அநேகவிதமான நற்புத்திகளைப் புகட்டி வந்ததாகத் தெரிகிறது. திருஷ்டாந்தமாக சகுந்தலை தனது கணவராகிய துஷ்யந்த மகாராஜன் கிரகத்திற்குப் போகும்சமயத்தில் கண்வரிஷி(சகுந்தலையை நோக்கி) “வத்ஸே! நீ உன் கணவன் வீட்டிற்குச் சென்று மாமியார் முதலான பெரியோர்களிடத்தில் ஒடுக்க வணக்கமாயும் மரியாதை



யாயும் பணிவிடை செய்துகொண்டிரு; உன் கணவன் இராஜனாகையால் அவனுக்கு அநேக மனைவிகளிருக்கக்கூடும். நீ எவ்விதம் உன் தோழிகளாகிய அநுஸூயை, பிரியம் வதை முதலியவர்களிடத்தில் சிநேகமாகவும் பிரியமாகவுமிருக்கிறாயோ அவ்விதமே அவர்களிடத்திலுமிரு; பர்த்தா உனக்கு இடர் செய்தாலும், நீ கோபத்தால் அவரிடத்தில் விரோதமாய் நடவாதே; வேலைக்காரர்களிடத்தில் தயையுள்ளவளாயும், அன்புடையவளாயுமிரு; இராஜனுக்கு அடிக்கடி அதிக திரவியமும் புதிய தேசங்களும் கிடைக்கும். அவ்விதம் கிடைத்த காலத்தில் கர்வம்கொள்ளாதே; மேற்சொல்லிய பிரகாரம் நடக்கிற பெண்மணிகளே கிரஹிணி அல்லது மனைவி” என்ற பட்டத்தை அடைகிறார்கள்; இவைகளுக்கு மாறாக நடக்கும் பெண்கள் குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்புகளே என்று சொல்லியதாகசாகுந்தல நாடகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகள் மிக சாதாரணமானவைகளாயிருந்தபோதிலும் எவ்வளவு சிலாகிக்கியத் தகுந்தவைகளாயும் புத்தி புகட்டக் கூடியவைகளாயுமிருக்கின்றன! இவ்விதமல்லவோ நாம் நமது பெண்களுக்கு நற்புத்தி புகட்டி அவர்களை கணவர் வீட்டிற்கு அனுப்பவேண்டும். வீட்டிற்கு அனுப்பும் வரையில் நம்மால் கூடியமட்டும் பெண்களுக்கு கல்வி புகட்டி வரவேண்டும். இவ்விதம் நாம் செய்துவருவோமானால் நமது பெண்கள் கணவர்களிடத்தில் மதிப்புள்ளவர்களாக விருப்பத்துடன் யாவராலும் மெச்சப்படுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

## குடும்பசம்ரக்ஷணை: ஜலம்.

### 1-ம் அதிகாரம்.

(81-வது பக்கத்தொடர்ச்சி.)

1. பிராணவாயு, 2. ஜலவாயு, இரண்டு உபவாயுக்களும் சேர்ந்து ஜலமாகிறது. ஜலத்திற்கு இந்த இரண்டு வாயுக்கள் மாத்திரம் சேர்ந்தால் போதுமானது. இப்படி இவ்விரண்டு வாயுக்களின் சேர்க்கையால் உண்டான ஜலம் மிகவும் சுத்தியுள்ளது. இதையே உபயோகித்து வந்தால் நமக்கு எந்தவித நீர்ச்சம்பந்தமான கெடுதிகள் உண்டாகாது. மிகவும் சுத்தியுள்ளதாயிருந்தபோதிலும் இவ்விதமுண்டான ஜலம் குடிப்பதற்கு மாத்திரம் ருசியாயிராது.

ஜலதத்துவம்: நல்லஜலம், கெட்டஜலம்.

ஆதலால்தான் நாம் அதை எப்பொழுதும் உபயோகப்படுத்துவதில்லை. சாதாரணமாய் இந்த நல்ல ஜலத்தில் காற்றிலிருக்கும் கரிமலவாயுமுதலானவைகள் சேர்ந்திரு

க்கும். அப்பொழுதுதான் ஜலம் நாவுக்கு ருசியாக விருக்கும். ஆனால் இந்த ஜலம் மிகவும் பரிசுத்தமுள்ளதல்லவென்று நன்றாகத் தெரியுமே.

பூமிமேல் மூன்று பங்கு ஜலமும், ஒரு பங்கு நிலமுமாக விருக்கிறது;

நல்லஜல உற்பத்தி.

ஆனால் பூமியில் அதிகமாய் சமுத்திரஜல மிருக்கிறது, சூரியனுடைய கிரணங்கள் சமுத்திரத்தின்மேரில் விழுகிறபடியால் அந்த ஜலம் உஷ்ணமாகி ஆவியாக மாறுகிறது. அதற்கு முந்தி சமுத்திர ஜலத்தில் கலந்திருக்கிற உப்பு, கரிமலவாயு முதலான அசுத்தமான வஸ்துக்கள் சமுத்திரத்தின் அடியிலே தங்கிவிடுகிறது. சுத்தமான ஜலம்மாத்திரம் (பிராணவாயுவும் ஜலவாயுவும் ஒன்றாய் சேரும்பொழுது உண்டாகிற ஜலமே) ஆவியாய் ஆகாயத்தில் செல்லுகிறது. இந்த ஆவி நமக்கு மேகங்களாகத் தோன்றுகின்றன. இந்த மேகங்கள் அப்போதைக்கப்போது ஆகாயத்தில் உண்டாகிற குளிரால் தணிந்து மறுபடியும் ஜலமாக மாறி கீழே விழுகிறது. இதைத்தான் நாம் மழையென்று சொல்லுகிறோம்.

இவ்விதம் பெய்யும் மழைஜலம், பூமியில் கரிமலவாயு முதலானவைகள் அழுக்குப் பதார்த்தங்களோடு சேர்வதற்கு முன் நல்ல சுத்தமான ஜலமல்லவா? பூமிமேல் விழுவதற்கு முந்தி இந்த மழைத் துளிகளை ஆகாசத்திலேயே சக்கரவாகப்பட்சிகள் பானம் செய்கிறதென்று நம்முடைய கவிகள் வர்ணித்திருக்கிறார்கள். இந்த பரிசுத்தமான ஜலம் பட்சிகளுக்கு மாத்திரமா பிரியம்? மனிதர்களுக்கும் மிகவும் பிரியமானதென்றும் தேகத்திற்கு மிகவும் ஆரோக்கியமானதென்றும் சொல்லுவோம். ஆகையால் வைத்தியசாஸ்திரத்தை யறிந்தவர்களும், வைத்தியர்களும் மழைஜலமானது பூமியில் விழுவதற்கு முன்னமேயே பாத்திரங்களில் பிடித்து அதை வியாதியஸ்தர்களுக்கு கொடுப்பதற்கும் மருந்துகளில் சேர்ப்பதற்கும் உபயோகித்து வருகிறார்கள்.

இன்னமும் பூமிமேல் விழுகிற மழை ஜலமானது ஏரிகளாகவும், ஆறுகளாகவும் ஆகின்றன. பர்வதங்களுள்ள தேசங்களில் மழை பெய்வதால் ஜலம் அதிவேகமாக கற்களோடும் கெட்டுப்போன பதார்த்தங்களோடும் சேர்ந்து நதியாக ஓடுகிறது. இவ்விதமுண்டாகிற நதிகளிலுள்ள ஜலம் பார்ப்பதற்கு வெகு பரிசுத்தமாக விருந்தபோதிலும் இதில் அநேக அசுசியான வஸ்துக்கள் சேர்ந்திருப்பதால் இது சுத்தமான ஜலமாக மாட்டாது.

மழை ஜலம் இன்னும் பூமிக்குள்ளேயே இறங்கி ஊற்று வழியாகச்சென்று கிணறுகளுக்கு ஆதாரமாகின்றது. இதில் அவ்வளவு அழுக்கிருப்பதற்கு இடமில்லை. ஆகையால் ஆழமாயிருக்கிற கிணற்றிலிருக்கும் ஜலத்தையும் வைத்தியர்கள் ரோகிகளுக்கு உபயோகித்து வருகிறார்கள்.

சிலவிடத்தில் உப்புள்ள மண்ணிருப்பதால் அவ்விடத்திலுள்ள கிணற்றின் ஜலம் உப்புள்ளதாக விருக்கும். முன் சொல்லியமாதிரி சமுத்திர ஜலம் மேகங்கள் மூலமாய் சுபாவத்திலேயே நல்ல ஜலமாகிறது. இம்மாதிரியே நாமிருக்கு மிடங்

ஜலத்தைப் பரிசுத்தமாக்கும்வகை.



களில் நல்ல ஜலம் அகப்படாமலிருந்தால் நமக்கு கிடைக்கும் உப்பு ஜலத்தையாவது அல்லது அழுக்கு ஜலத்தையாவது குடிப்பதற்காக உபயோகிக்க அநேக உபாயங்களிருக்கின்றன.

1. பாத்திரங்களின்மேல் மடிப்புள்ள வஸ்திரத்தைக் கட்டி ஜலத்தை வடிகட்டுவது.

2. ஜலத்தில் சேறு அதிகமாக விருக்கும்பொழுது சீனிக்காரம் கொஞ்சம் ஜலத்தில் போடுவதாலும் அல்லது தேற்றாங் கொட்டை, கந்தகம், இவை யிரண்டையும் சேர்த்து தண்ணீரில் போட்டுவைத்தால் கலங்கிய ஜலம் சுத்தமாய்விடும். பின்பு ஜலத்திற் கடியில் மண் தங்கிவிடும். மேல்பாகத்திலுள்ள தெளிவான ஜலத்தை பானம்பண்ண வைத்துக்கொள்ளலாம்.

3. ஆயினும் இப்படிச் செய்வதால் ஜலத்திற்குள்ளிருக்கும் அழுக்குகளெல்லாம்போவது கஷ்டம். இவைகளைப் போக்குவதற்கு ஒரு பானையில் பாதி மணல், கரி, முதலியவைகளைப்போட்டு இதற்கு கீழ் இன்னொரு பானையைவைத்து, மேல்மணல் கரியுள்ள பானையிலிருந்து அடியிலுள்ள பானைக்கு ஜலம் கொஞ்சம் கொஞ்சமாக விழும்படி சிறிய துவாரங்கள் செய்துவைத்துக் கொள்ளலாம்.

4. ஆனால் இப்படி செய்வதிலும்கூட தண்ணீரிலிருக்கும்படியான சிறிய பூச்சிகள் இறந்துபோகாதென்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனதுபற்றி ஜலத்தை மேற்சொல்லிய பிரகாரம் செய்வதுடன் அதை நன்றாக கொதிக்கவைத்து பின்பு பானையிலோ அல்லது வேறு பாத்திரங்களிலோ ஜலத்தை வைத்து சாப்பிடுவது நலம். இவ்விதம் காய்ச்சுவதால் நீரிலிருக்கும் சிறிய கிருமிகள் இறந்து விடும், இவ்விதம் காய்ச்சின ஜலம் குடிப்பதற்கு உருசியாயிராதென்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் கொஞ்ச நேரம் சென்றபிறகு அந்த பாத்திரத்தின் மேல்மூடியை எடுத்துவிட்டால் அந்த ஜலத்தில் கரிமலவாயுசென்று அதை நல்ல உருசியுள்ளதாகச் செய்யும்.

5. மேற்சொன்ன சாதனங்களால் அழுக்குகளையும் கிருமிகளையும் போக்கடிக்கலாமே யொழிய, அதில் சேர்ந்திருக்கும் உப்பை எடுக்க முடியாது. (மேற்சொல்லியவைகள் சாதாரணமாக நல்ல ஜலத்தை சுத்திசெய்ய உதவும்.) ஆனால் உப்பு ஜலத்திலுள்ள உப்பை எடுப்பதற்கு வேறு ஒரு உபாய மிருக்கிறது.

C. S. R.

(இன்னும் வரும்.)

# சந்திரமதி.

## முதல் அங்கம்.

### முதற்களம்: இடம்:—இந்திரலோகத்தில் இந்திரசபை.

(இந்திரன் சுரர்களும் முனிவர்களும் சூழ்ந்திருக்கச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கின்றான். இரண்டு கந்தர்வஸ்திரீகள் கானம் பண்ணுகின்றார்கள்.)

இந்திரன்: ஹா!! ஹா!! கானரசமே ரசம்! அதனினும் சிறந்ததென்ன விருக்கின்றது? சிசுக்கள், பசுக்கள், பணிகள் என்ற இவை யனைத்தும் இந்த ரசத்தை அனுபவித்தானந்திக்கின்றன. இதை அனுபவித்து மகிழாதஜீவனென்பது இந்த திரிலோகத்திலும் கிடையாது என்று உறுதியாகச்சொல்லலாம். ஒன்றுக்கும் உதவாத பேடியின் உள்ளத்திலும் மகாவீரபராக்கிரமசாலிகட்குரிய தைரியாதிகள் உண்டாமாறுசெய்வதும் உடைந்துழலும் உள்ளத்தை உவப்புறச்செய்வதும் இந்த கானமேயல்லவா? ஹா! ஹா!! போதும்! போதும்! சங்கீதமே உருவெடுத்து வந்தாற்போன்று விளங்கும இத்தும்புரு நாரதாதிமகான்கள் கூடியிருக்கும் இந்த சதசுக்கு சங்கீதத்தின் மேன்மையைப்பற்றி நான் எடுத்துச் சொல்லவேண்டுவதென்ன இருக்கின்றது?

[அடுத்துநிற்கும் சேவகனை நோக்கி.] இவ்வரம்பையர்க்குத் தக்க சன்மானம் செய்வித்தனுப்பு. [ரம்பாஸ்திரீகள் சேவகனுடன் சென்றுவிடுகின்றார்கள்.]

நாரதர்:—தேவேந்திராதிப, கானரசம் தாம்புகழ்ந்த புகழ்ச்சிக் கொருவாறு ஏற்றதுதான். ஆயினும் அதன் மற்றொருபக்கத்தையும் நாம் பார்க்கவேண்டும். கானரசத்தால் எவ்வளவோ நன்மைகள் விளைகின்றன என்பது உண்மையேயாயினும் தீமையும் அதனால் விளைவதுண்டு என்பது உமக்குத் தெரிந்த விஷயந்தானே?

இந்தி:—தங்கள் கருத்தென்ன; விளக்கமாகவில்லை.

நா:—நான் சொல்லுவதென்ன,விளக்கமில்லாமலா இருக்கின்றது;இதோ வீற்றிருக்கின்றாரே விசுவாமித்திர மகரிஷி; அவரைக்கேட்டால் எல்லாம் விளக்கமாகிவிடும். நீர் இப்போது இவ்வளவு புகழ்ந்துரைத்த கானரசம் மதிவதன ரம்பையர்களின் மலர்வாய்களினின்றும் போந்து எவ்வளவு முறை அவருடைய அருந்தவத்தையெல்லாம் வியர்த்தமாக்கியிருக்கின்றது.

விசு:—ஹோ! நாரதரே, நீரென்ன இச்சமயத்தில் என்னைப் பரிகசிக்கவா தொடங்கிவிட்டீர்? நீர் சொல்லிய தோஷங்களுக்கு நான் சிற்சில சமயங்



களில் ஆளாயினது வாஸ்தவந்தான். அவ்வாறு தப்பிப்போவது யார்க்குமே சகஜம். "யானைக்கும் அடிசறுக்கும்" என்பதைக் கேட்டதில்லையா? நிர்மலஸ்வரூபியாகிய ஜகதீசர் ஒருவரேயன்றி இத்திரிலோகத்தில் யார்தான் தோஷரகிதராக இருக்கின்றார்கள்?

வசிஷ்டர்:—ஏன் இருக்கக்கூடாது?

விசு:—[திரும்பிப்பார்த்து] ஏன் இருக்கக்கூடாதா; யார் சொன்னது அது; வசிஷ்டா! நீயா அங்ஙனங்கூறினை?

வசி:—ஆம்.

விசு:—ஹோ! வசிஷ்டா! இத்தேவசபையில் இந்த விபரீத பாஷணம் புரிய எவ்வாறு துணிந்தனை? ஜகதீசனையன்றி குணபூர்ணனான ஓர் புருஷன் இத்திரிலோகத்தில் எங்காவதுண்டு என்று சொல்ல எவனாவது துணிவானா? இவ்வசம்பாவித வார்த்தையை இச்சதசிலுள்ளவர்களில் யார் நம்பப்போகின்றார்கள்? இதற்குத்தானா நீ தவசிரேஷ்டன் என்று பெயர்வகித்தனை? உன்னுடைய பெருமை யெல்லாம் கடைசியில் உன்னை இம்மட்டிலேயா கொண்டுவந்து விட்டது? எதோ உன்னுடைய குணபூர்ண மகா புருஷனைச் சற்று வாய்திறந்து இன்னானென்று குறிப்பிடு பார்ப்போம்? இதோ அவனை அரை நிமிஷத்தில் ஆயிரந்தோஷங்களுக்கு ஆளாக ஆக்கிநான் காண்பிக்கின்றேன். இத்தேவர்கள் சாக்ஷியாக வீற்றிருக்கின்றார்கள். எதோ சற்று வாய்திற பார்க்கலாம்.

வசிஷ்:—இது என்ன பாவம்! விசுவாமித்திரா! நீ எவ்வளவோ பெருந்தவமெல்லாம் செய்து முடித்தும் இன்னும் உனக்குப் பொறுமை என்பது சிறிதும் பிடிபடவே இல்லை. என் உத்தரம் வரும் வரைச் சற்றுப் பொறுத்திரு.

[இந்திரனை நோக்கி] தேவேந்திர, நிர்த்தோஷியாய் சத்தியமாகி சன்மார்க்கங்களினின்று கனவிலும் பிசகாதொழுகும் உத்தமபுருஷன் எவனாவது பூமண்டலத்தில் உண்டா? என்று இந்தச் சதசில்நேற்று நீர் கேட்டீரல்லவா? அந்தக்கேள்விக்கும் இவ்விசுவாமித்திரன் இன்று கேட்ட கேள்விக்கும் ஒருங்கே உத்தரம் புகலச் சந்தர்ப்பம் வாய்த்தது பற்றி எனக்கு அதிக சந்தோஷமுண்டாகின்றது. பூலோகத்தில் அரிச்சந்திரன் என்றோர் வேந்தன் அயோத்தியாபுரியில் ஆட்சி புரிகின்றான். அவனைத் தர்மஸ்வரூபி என்றே சொல்லவேண்டும். அவன் மனுநெறியினின்று அணுவளவும் பிசகான். அவனது சத்திய விரதம் மகா அற்புதமானது. அவன் இதுவரை ஒரு பொய்யும் உரைத்தறியான்; வேதம் பொய்க்கினும் பொய்க்கும். சந்திர சூரியர்கள் தெற்கு வடக்காக கதிமாறினும் மாறுவார்கள். சமுத்திரம் கரைகடக்கினுங் கடக்கும். அரிச்சந்திரனது வாயிலிருந்துமட்டும் பொய்யென்பது ஒருக்கா

னும் வரவே வராது. அறநெறி நிரம்பாத அத்திவ்ய புருஷனைச் சிஷ்யனென்றழைக்கும் பாக்யம் எனக்குக் கிடைத்திருக்கின்றது.

இந்தி:—மகரிஷி, தமது வார்த்தையை நான் அங்கீகரிக்கின்றேன். அவ்வரிச்சந்திர மகாபுருஷனது வைபவங்களையெல்லாம் விஸ்தாரமாகக் கேட்டு மகிழவேண்டுமென்று எனக்கு ஆசையுண்டாகின்றது. உலகத்தார்க்கே அவன் ஒரு முன் மாதிரியாக இருக்கின்றான் போலிருக்கின்றது. நரமனுஷாள் மட்டுமல்ல; தேவர்களாகிய நாமும் கூட அவ்வுத்தம புருஷனுடைய ஒழுக்கங்களைப் பின்பற்றி யொழுக வேண்டியவர்கள் தான் என்பதில் என்னதடை? நிர்த்தோஷி என்ற பெயர்க்கு ஏற்றவராக நமக்குள்ளாகத்தான் யார் இருக்கின்றார்கள்?

விசு:—[அதிக கோபத்துடன்]

இந்திர, என்னபேச்சுப் பேசுகின்றாய்' உன்னுடைய உத்கிருஷ்ட விவேகமெல்லாம் எங்கே பறிகொடுத்தனை! மரர்களில் தானாகட்டும் அமரர்களிற்றானாகட்டும் நிர்த்தோஷி என்றுரைக்கப்பட உடம்பெடுத்த உத்தமபுருஷன் ஒருவன் இருப்பானென்று எவனாவது எண்ணுவானா? இருக்கட்டும். இப்போது நான் ஒன்றுரைக்கின்றேன். இங்கே கூடியிருக்கும் தேவர்களே, ருஷிகளே, நீங்கள் எல்லாரும் இதனை அறிந்து கொள்ளுங்கள். ஒரு பொய்யும் உரையா உத்தமனென்று இவ்வசிஷ்டன் புகழ்ந்த அவ்வரிச்சந்திரனையே ஆயிரம் பொய் சொல்லுபவனாக அரைக்கணத்தில் செய்விக்க மாட்டேனோ. அப்புறம் என்ன சொல்லுகின்றீர்கள்?

வசிஷ்:—[அதிகோபத்துடன் எழுந்து]

உன்னால் முடியாது! உன்னால் முடியாது!! ஒருபோதும் முடியாது!!! முடியுமானால் செய்வி பார்ப்போம் உன் சமர்த்தை!!!

விசு:—என்னால் முடியாதென்றா உரைக்கின்றனை? அனைத்தையும் சாதிக்க வல்லவன் நான் என்று உனக்குத் தெரியாதா? எனக்கு அசாத்தியமான காரியமும் ஒன்றுண்டா? திரிசங்குவுக்கு நவீன சொர்க்கம் சிருஷ்டித்துத்தந்த விசுவாமித்திரன் நான் என்பதை மறந்தா விட்டனை? உன் விம்பை ஒழித்துவிடு. இதோ ஒரு கணத்தில் உன் வாக்கின் பொய்மையை வெளிப்படுத்தி விடுகின்றேன்.

இந்திரன்:—[இருவருக்கும் நடுவேபோய் நின்றுகொண்டு] மகான்களே நிதானியுங்கள்! நிதானியுங்கள்! மஹாருஷிகளாகிய நீங்கள் சாமான்யர்களாகிய எங்கள் முன்னிலையில் இவ்வாறு ஒருவரோடொருவர் கலகித்துக் கொள்வது முறையல்ல; அடா! அடா! பொறுமை என்பது இத்தேவலோகத்தையே விட்டோடி விட்டாற்போலவே இருக்கின்றது! மகாரிஷிகளே, சாந்தமாகுங்கள் சாந்தமாகுங்கள்.



விசு:—அப்படியானால் அந்தப்புளுகனை அவ்வசம்பாவித வார்த்தையை
விட்டுவிடச் சொல்
வசி:—மாட்டேன் மாட்டேன். நான் புளுகனுமல்ல நீதான் புளுகன்.
சத்திய சீலனாகிய அரிச்சந்திரனைப் பொய்புகலச் செய்கின்றேனென்றுரை
த்து நீதான் உன்னைப் புளுகனாக்கிக் கொண்டிருக்கின்றாய். ஆதலால் நீதான்
உன் பயனற்ற வார்த்தையை விட்டுவிட வேண்டியவன்.
இந்தி:—மகருஷிகளே, பதராதேயங்கள்! பதராதேயுங்கள்! தயவு
செய்து நீங்கள் இருவரும் உங்கள் உங்கள் ஆசனங்களில் வீற்றிருங்கள். உங்
களைப்போன்ற மகான்கள் கலகித்துக்கொள்வதும் அதற்கு என்னைப் போன்
றவன் மத்தியஸ்தத்திற்கு ஏற்படுவதும் அழகாக இருக்குமா? ஒருவரோ
டொருவர் சச்சரவு செய்து கொள்ளுதல் உங்களுக்குள் ஏற்பட்டிருக்கும்
விவாதத்தைத் தீர்த்துக் கொள்ளுதற்குச் சரியான மார்க்கமல்ல. நீங்கள்
ஒவ்வொருவரும் கூறிய வார்த்தை பொய்த்து விட்டால் பொய்த்த வாக்கி
னர் இன்னது செய்வது என்று ஓர் பந்தயம் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.
மெய்மை பொய்மைகளை விரைவிற் கண்டறியவேண்டுமென்று ஓர் முடிவும்
செய்துகொள்ளுங்கள். அதுதான் சரியானமார்க்கம்.
விசு:—ஆம், அதுதான் சரியானமார்க்கம். அந்த அண்டப்புளுகனை அகப்
படுத்த அதுதான் சரியானவழி. ஓ! தேவர்களே! ரிஷிகளே! அனைவரும் கே
ளுங்கள். நான் அந்த அரிச்சந்திரனை சொற்பகாலத்துக்குள்ளாக ஆயிரம்
பொய்களை வழங்கும்படி செய்யேனே ஆயின் நான் அநேககாலம் அருந்த
வம் புரிந்து ஆர்ஜித்த பலனில் அர்த்தபாகத்தை இவ்வசிஷ்டனுக்குத் தத்
தம்பண்ணிவிடுகின்றேன். ஹே! வசிஷ்டா! நீ யாது சொல்லுகின்றனை?
வசி:—சரி, அப்படியே ஆகட்டும். இவ்விசுவாமித்திரன் எனது அர்ச்சந்
திரனது வாயிலிருந்து ஒரு பொய்யாகினும் வரவழைத்து விடுவானாயின்
நான் தவஞ்செய்தலைவிட்டு விட்டுத் தலைமண்டையோட்டில் கள்ளை அருந்
திக்கொண்டு கழுதைமேலேறி உலகையெல்லாம் மூன்றுமுறை பிரதக்ஷ
ணம் வருகின்றேன். ஆனால் வீண்காலஹரணம் மட்டும் ஆகக்கூடாது. உண்
மையைச் சீக்கிரத்திலேயே கண்டுபிடிக்கவேண்டும்.
விசு:—ஆம், சீக்கிரத்திலேயே காண்பிக்கின்றேன். (சபைநோக்கி) மூட
வசிஷ்டன் முட்டாள்தனமாகச் சபதம் செய்திருக்கின்றான்; இதோ நான்
இப்போதே பூமண்டலத்திற்குப் போய் அவனது சிஷ்யனாகிய அரிச்சந்திர
னுக்கு விசுவாமித்திரனது வல்லபம் இப்படிப்பட்டதென்பதை ஒரு க்ஷணத்
தில் உணர்த்துகின்றேன். விசுவாமித்திரன் எதையும் அரைகுறையாகச்செய்
வதில்லை என்பது யார்க்குத்தான் தெரியாது; இந்திராதி தேவர்களே, இதோ
நான் உத்தரவு பெற்றுக்கொள்ளுகின்றேன் [விசுவாமித்திரர் செல்கின்றார்.]
வசி:—அவன் பிரவேசித்திருக்கின்ற காரியம் வியர்த்தமென்றெனக்
குத் தெரியும். நானும் உங்களிடம் விடைபெற்றுச்சென்று எங்காவது ஒதுங்

கிய இடத்தில் சில காலம் ஒடுங்கியிருக்கின்றேன். இல்லாவிட்டால் நான் அரிச்சந்திரனுக்கு இவனது சபதத்தைப்பற்றி ஏதோ சொல்லிக் கெடுத்து விட்டேன் என்று இந்தப்பாபி என்மீது பழிபோட்டுவிடுவான். பந்தயம் கெலித்தவுடன் மீண்டும் ஈண்டுவருகிறேன். ஜெயம் எனக்குத்தான் என்பதில் சம்சயமே இல்லை. [வசிஷ்டர் செல்கின்றார்.]

நாரதர்:—கலகமோ கிளம்பிவிட்டது. இனி அதன் முடிவையும் கண்டறியவேண்டாமா நான்? ஆதலால் நானும் இப்போதே விடைபெற்றுக் கொண்டு பூமண்டலம் செல்கின்றேன். (நாரதர் செல்கின்றார்.)

(முதற்களம் முற்றும்.)

சி. திருச்சிற்றம்பலம்பிள்ளை.

# ஓர் விநோத சதுரம்.

| | | | |
|---|---|---|---|
| 8 | 1 | | 10 |
| 11 | | 4 | 5 |
| 2 | 7 | 9 | |
| | 12 | 6 | 3 |

இங்கு வரைந்திருக்கப்பட்ட பதினாறு கட்டமுள்ள ஒரு சதுரத்தில் ஒன்றுமுதல் பன்னிரண்டு வரையிலுள்ள இலக்கங்களை யடைத்திருக்கிறது. தவிர ஒவ்வொரு வரியிலும் ஒரு கட்டம் இலக்கமில்லாமல் காணப்படுகிறது. இச்சதுரத்திலுள்ள இலக்கங்களையும் அவைகளிருக்கிற இடத்தையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் அநேகவிதமான விநோதங்களைநாம் செய்யலாம்.

நாம் 117 என்ற ஒரு தொகையை எடுத்துக்கொள்வோம். இத்தொகையை இருபதால் வகுக்க அல்லது பிரிக்க, ஈவு 5-ம், மீதம் 17-ம் கிடைக்கிறது. இவைகளை வைத்துக்கொண்டு 117 என்று கொடுக்கப்பட்டதொகையை பதினாறு கட்டமுள்ள ஒரு சதுரத்தில் அடைப்போம். முதலில் இலக்கங்களில்லாத ஒரு சதுரத்தை வரைவோம், இதில் ஒன்றுமுதல் பன்னிரண்டுவரையிலுள்ள இலக்கங்கள் முன்னுரைத்த பிரகாரம் எந்த எந்த இடங்களிலிருக்கவேணுமென்று மனதினால் நினைத்துக்கொள்ளவேணும்.

| | | | |
|---|---|---|---|
| 40 | 5 | 22 | 50 |
| 55 | 17 | 20 | 25 |
| 10 | 35 | 45 | 27 |
| 12 | 60 | 30 | 15 |

117 என்ற தொகையை 20-ஆல் வகுக்கும்பொழுது கிடைத்த மீதம் 17 ஐ இரண்டாவது வரியிலுள்ள இலக்கமில்லாத இரண்டாவது கட்டத்தில் எழுதுவோம். கொடுக்கப்பட்ட தொகையை 20 ஆல் வகுக்கும்போது கிடைத்த ஈவு 5 ஐ ஒன்று முதல் 12 வரையிலுள்ள இலக்கங்களால் பெருக்கி வந்த தொகையை ஒன்றுமுதல் 12 வரையிலுள்ள இலக்கங்கள் இருக்கப்பட்ட கட்டங்க



ளில் எழுதவேணும். அதாவது முதல் வரியிலுள்ள 8-க்குப்பதில் 8×5=40 என்றும், 1-க்குப் பதில் 5×1=5 என்றும், 10-க்குப் பதில் 10×5=50 என்றும் எழுதி இம்மூன்று தொகையின் ஆகத்தொகையாகிய 95 ஐ கொடுக்கப்பட்ட 117-ல் குறைத்து மீதமாகிய 22 ஐ முதல் வரியிலுள்ள இலக்கமில்லாத மூன்றாவது கட்டத்தில் எழுதவேணும். இவ்விதமாக இரண்டாவது, மூன்றாவது, நாலாவது வரையிலுள்ள கட்டங்களில் தொகைகளையடைத்து, ஒவ்வொருவரியிலுமுள்ள மூன்று தொகைகளின் ஆகத்தொகையைக் கொடுக்கப்பட்ட தொகையினின்றும், குறைத்து மீதத்தை அந்தந்த வரியிலுள்ள இலக்கமில்லாத கட்டங்களில் முறையே யெழுதவேணும். இவ்விதமாக இச்சதுரத்திலுள்ள பதினாறு கட்டங்களையும் ஒவ்வொரு தொகையால் அடைத்துவிட்டோம். இச்சதுரத்தின் விநோதத்தை யிப்பொழுது வரைவோம்.

முதல்வரி, இரண்டாவது வரி, மூன்றாவது வரி, நாலாவது வரியிலுமுள்ள தொகைகளைத் தனித்தனியே கூட்டினால் ஒவ்வொன்றின் ஆகத்தொகை கொடுக்கப்பட்ட 117 ஆகிறது. தவிர மேல்கீழாக இருக்கிற ஒவ்வொரு வரி யிலுள்ள தொகைகளைக் கூட்டினாலும் அவைகளின் ஆகத்தொகை தனித் தனியே 117 ஆகிறது. மேலும், குறுக்கே உள்ள இரண்டுவரிகளின் தொகைகளைக்கூட்டினாலும் அவைகளின் தொகை, தனிதனி 117 ஆகிறது; அதாவது (40+17+45+15),= 117; 50+20+35+12=117; தவிர கனத்த வரைகளால் காட்டப்பட்ட சதுரமாயுள்ள நாலு தொகைகளைத்தவிர வேறே எவ்விதமான சதுரமாயுள்ள நாலு தொகைகளை யெடுத்தாலும், ஒவ்வொரு சதுரத்தின் ஆகத்தொகையும் 117 ஆகிறது. அதாவது, (40+5+17+55); (55+17+35+10); (10+35+60+12); (22+50+25+20); (20+25+27+45); (45+27+15+30); (17+20+45+35). தவிர முதல் வரியிலும் நாலாவது வரியிலுமுள்ள இரண்டு மூன்று கட்டங்களிலுள்ள தொகையைக் கூட்டினாலும் அவற்றின் ஆகத்தொகை கொடுக்கப்பட்ட தொகையாகிறது. இவ்விதமாக எத்தொகையையும் இச்சதுரத்தில் அடைத்துவிடலாம்.

குறிப்பு:—117 ஐ 20 ஆல்வகுத்து ஈவை 5-க்குப்பதில் 4 ஆகவும் மீதத்தை 37 ஆகவும், அல்லது, ஈவை 3 ஆகவும், மீதத்தை 57 ஆகவும், இவ்விதமாய் எடுத்து மேற்கூறிய பிரகாரம் எவ்வளவோ சதுரங்களை வரையலாம்.

| | | | |
|---|---|---|---|
| 32 | 4 | 41 | 40 |
| 44 | 37 | 16 | 20 |
| 8 | 28 | 36 | 45 |
| 33 | 48 | 24 | 12 |

ஈவு 4-ம்
மீதம் 37-ம்.

| | | | |
|---|---|---|---|
| 24 | 3 | 60 | 30 |
| 33 | 57 | 12 | 15 |
| 6 | 21 | 27 | 63 |
| 54 | 36 | 18 | 9 |

ஈவு 3-ம்
மீதம் 57-ம்.

| | | | |
|---|---|---|---|
| 16 | 2 | 79 | 20 |
| 22 | 77 | 8 | 10 |
| 4 | 14 | 18 | 81 |
| 75 | 24 | 12 | 6 |

ஈவு 2-ம்
மீதம் 77-ம்.

வி. கோபால ஐயங்கார் பி. ஏ.

# நடுவேனிற் கனவு.

ஆதென்ஸ் நகரத்தில், பெண்கள், தங்கள் தாய்தந்தையர்கள் ஏற்படுத்தியவர்களையே மணம்புரிந்துகொள்ளவேண்டுமென்றும், அப்படி அவர்களை மணம்புரியச் சம்மதிக்காவிட்டால் மரணதண்டனைக்குள்ளாக வேண்டுமென்றும் ஓர் சட்டம் ஏற்பட்டிருந்தது. ஆனால் தங்கள் புத்திரிகளைச் சாகும்படிசெய்யத் தந்தையர்களுக்கு மனந்துணியாதாகையால், அவர்கள் தங்கள் இஷ்டப்படி நடக்காவிட்டாலும், அச்சட்டம் அநுபோகத்திற்கு வராமலேயிருந்தது. ஆயினும் அந்நகரத்தோர்கள் அடிக்கடி தங்கள் புத்திரிகளை அச்சட்டத்தின் விஷயமாகப் பயமுறுத்திக்கொண்டு வந்தார்கள்.

இப்படியிருக்க ஒருநாள் இஜியஸ் என்னும் ஓர் கிழவன் ஆதென்ஸ் நகரத்து அரசனாகிய தீஸியஸ்ஸினிடம்வந்து, தன் புத்திரியாகிய ஹர்மியா என்பவளை உயர்குலத்தில் பிறந்த டெமிடிரியஸ் என்னும் ஓர் இளைவனை மணம்புரியும்படி தான் கட்டளையிட்டும் அவள் அதற்கு உட்படாமல், லைஸாண்டரென்னும் மற்றொரு ஆதென்ஸ் நகரத்து இளைவன்மேல் காதல்கொண்டிருப்பதாகவும் சொல்லி முறையிட்டு, அதற்காக ஏற்பட்ட சட்டத்திற்கு அவளை உள்ளாக்கவேண்டுமென்று அவ்வரசனை வேண்டிக்கொண்டான்.

ஹர்மியாவைக் கூப்பிட்டு விசாரித்தபொழுது, டெமிடிரியஸ் தனது அத்தியந்த நேசியாகிய ஹெலினாவின்மேல் மிக்க காதல்கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறானென்றும், ஹெலினாவும் டெமிடிரியஸ்மேல் அதிக ஆசைகொண்டிருப்பதாகவும், அப்படியிருக்கத் தான் டெமிடிரியஸ்ஸை விவாகஞ் செய்துகொள்வது நியாயமல்லவென்றும் வாதாடினாள். ஹர்மியா இப்பெருந்தன்மையான காரணத்தைச் சொல்லியும் இஜியஸ்ஸின் கல்மனம் இளகவில்லை.

தீஸியஸ் தான் இரக்கம் முதலிய அரியபெரிய குணங்கள் நிறைந்த அரசனாயிருந்தும், தன் தேசத்துச் சட்டங்களை மாற்றக்கூடாதவனாகையால் ஹர்மியாவுக்கு, அச்சங்கதியைப்பற்றி யோசிக்க நாலுநாள் கெடுகொடுப்பதாயும், அதன் பிறகு அவள் டெமிடிரியஸ்ஸை விவாகஞ்செய்துகொள்ள ஆக்ஷேபித்தால் உடனே மரணத்துக்குட்படவேண்டுமென்றும் கட்டளையிட்டான்.

ஹர்மியா அரசனிடமிருந்து வெளியில் வந்தவுடன், தன் காதலனாகிய லைஸாண்டரிடம்போய் தனக்கு நேரிட்ட ஆபத்தைச் சொல்லி இன்னும்



நாலுதினத்திற்குள் டெமிடிரியஸ்ஸை விவாகம்செய்ய சம்மதிக்காவிட்டால் தான் உயிரிழக்கவேண்டுமென்று பிரலாபித்தாள்.

லைஸாண்டர் இதைக்கேட்டு மிக்க துக்கித்துக்கொண்டிருக்கும்போது ஆதென்ஸ் நகரத்துக்குச் சிறிது தூரத்தில் தனது அத்தை இருக்கிறதும் அவ்விடம் இக்கொடிய சட்டத்தின் நிபந்தனை இல்லையென்பதும் அவன் நினைவிற்கு வந்தன. உடனே லைஸாண்டர் ஹர்மியாவிக்கு இச்சங்கதியைத் தெரிவித்து அவள் அங்கே வரும்பட்சத்தில் தான் அவளை விவாகஞ்செய்து கொள்ளுவதாகச்சொல்லி, அவளை அன்று இரவே ஒருவருக்குந் தெரியாமல் புறப்பட்டு அந்நகரத்துக்குக் கொஞ்சதூரத்துக்கப்பால் தாங்கள் ஹெலினாவோடு மேமாதத்தில் உல்லாசமாய்ப் போகுங்காட்டில் தன்னோடு வந்து சேரும்படி சொன்னான்.

ஹர்மியா இந்த யோசனையைக்கேட்டுச் சந்தோஷத்தோடு சம்மதித்து தன் தோழியாகிய ஹெலினாவிடம் மாத்திரம் இச்செய்தியை இரகசியமாய்ச் சொன்னாள். பெண்கள் மூடத்தனமான காரியங்களைச் செய்வது சகஜமாகையால், தன் காதலனாகிய டெமிடிரியஸ்ஸினிடம்போய்த் தன் சகி ஹர்மியா சொன்ன ரகசியத்தைச் சொல்லத் துணிந்தாள். இப்படி அவனிடம் சொல்லுவதில் ஹெலினாவுக்குப் பயன் ஒன்றும் இல்லாவிடினும், ஹர்மியா போகும்போது டெமிடிரியஸ் அவளைத்தேடிக்கொண்டு போவானென்றும் அப்பொழுது தானும் இவன் பின்னே போகலாமென்றும் எண்ணினாள்.

லைஸாண்டரும் ஹர்மியாவும் சேரத் தீர்மானித்திருந்த காட்டில் மிகச் சிறிய வடிவமுள்ள கந்தர்வக் கூட்டங்கள் இராக்காலங்களில் வந்து விளையாடிக்கொண்டிருக்கிற வழக்கம். அவ்விரவு இக்கந்தர்வர்களுக்கு அரசனாகிய ஓபிரான் என்பவனும் டிடானியா என்னும் அரசியும் தங்கள் பரிவாரங்களுடன் அவ்விடம் வந்து குதூஹலத்துடனிருந்தார்கள். இப்படியிருக்க ஏதோ ஒரு காரணத்தினால் இவ்வரசனுக்கும் அரசிக்கும் மனஸ்தாபமுண்டாய், அழகிய நிலவில் வேடிக்கையாயிராமல் சண்டை போட்டுக்கொள்ள, இதைப்பார்த்து அவ்விடமிருந்த சிறிய தேவதைகளெல்லாம் நடுநடுங்கி ஆலம்பழத்திற்குள் போய்ப்புகுந்து கொண்டன.

இந்த சச்சரவுக்குக் காரணமென்னவெனின், டிடானியா, தன் தோழியொருத்தி இறந்துபோக அவளுடைய அழகியகுழந்தையைப்பார்த்து ஆசைகொண்டு, மற்றொரு குழந்தையை அங்கே வைத்துவிட்டு, அக்குழந்தையைத்தான் ஒருவருக்குந் தெரியாமல் காட்டுக்கு எடுத்துக்கொண்டு போய் வளர்த்து வந்தாள். தன் கணவனாகிய ஓபிரான் அக்குழந்தையைக் கொடுக்கும்படி கேட்க டிடானியா மாட்டேனென்று வாதாடினாள்.

இச்சிறிய தேவதைகளில் ஒருவனாகிய பக் என்பவன், மிக்க கெட்ட நடவடிக்கையுள்ள ஒரு விகடக் குட்டிப்பேய் இவன் சமீபத்திலுள்ள கிராமங்களின் வீடுகளில் போய் அநேக விதமான விஷமங்கள் செய்வது வழக்

கம். சமையற்கட்டில் வைத்திருக்கும் பாலைப் பொங்கும்படி செய்வான். ஸ்திரீகள் தயிர்கடையும்பொழுது தான் தன் சிறிய உருவத்தோடு அத்தயிரிற் குதித்து விளையாடுவான். அவன் அப்படி விளையாடும்போது அந்தஸ்திரீ எவ்வளவு நேரம் கடைந்தாலும், வெண்ணெய் வராது. சாராயக்கடைகளில் கள்ளைச் சாராயமாய்க் காச்சும்பொழுது தான் அவ்விடம் போய் அதைக் கெடுத்து விடுவான். ஊரில் அநேகர் ஒன்று சேர்ந்து வேடிக்கையாய்ச் சாராயங் குடிக்கும்போது இவன் ஒரு கறுத்தவண்டின் உருவத்தோடு அச்சாராயக் கிண்ணியில் தொப்பென்று விழுவான். வயது முதிர்ந்த கிழவி சாராயக்கிண்ணியை யுதட்டில் வைத்துக்கொள்ளுந் தருணத்தில் இவன் அவள் உதட்டைக் கெட்டியாய் கவ்விக்கொண்டு, அச்சாராயம் முழுதும் கீழே வழிந்து போகும்படி செய்வான். அவள் பிறகு எல்லாருக்கும் ஏதாவது கதைசொல்ல மெதுவாக உட்காரப் போகும் சமயத்தில், அவள் உட்காரும் முக்காலியை மெதுவாகப் பின்னுக்கு இழுத்து விடுவான். உடனே அக்கிழவி மெல்லாக் காகத் திடீரென்று கீழே விழ, அங்கே வம்புவளக்க வந்திருக்கும் கிழவர்களெல்லாம் விலாவைப் பிடித்துக்கொண்டு நகைப்பார்கள்.

இப்படி இரவிற் சஞ்சாரஞ் செய்யும் பக் என்பவனை ஓபிரான் சக்கிரவர்த்தி கூப்பிட்டு, "சோம்பற்காமம் என்னும் புஷ்பத்தைக்கொண்டுவா. தூங்குகிறவர்கள் கண்ணின் மேல் இச்சிவந்த புஷ்பத்தைப் பிழிந்தால், எழுந்தவுடன் அவர்களுக்குத் தங்கள் எதிரில் நிற்பவர்களின்மேல் ஆசை உண்டாகும். என் டிடானியா தூங்கும்போது நான் இப்புஷ்பத்தின் ரஸத்தை அவள் கண்களில் பிழிகிறேன். அவள் நித்திரை பெழும்போது, அவள்கண்களுக்கு குதிரையோ, கழுதையோ, நாயோ, குரங்கோ ஏது தான் தென்படட்டும் உடனே அதின்மேல் ஆசைப்படுவாள். அச்சமயத்தில் அவளிடமுள்ள அச்சிறியபையனை எனக்குக் கொடுக்கும்படி செய்து விட்டுப் பிறகு மற்றொரு மூலிகையால் அவள் கண்களை முன்போல் சரியாக்குகிறேன் பார்" என்றான்.

பக் என்பவனுக்குச் சுபாவத்திலேயே விஷமம் மிக்க இஷ்டமாகையால், தன் எஜமானன் செய்யப்போகிற வேடிக்கையைக் கேட்டு மிக்க சந்தோஷித்து உடனே அப்புஷ்பத்தைக் கொண்டுவர ஓடினான். ஓபிரான் பக்கின் வரவைக் காத்திருக்க, டெமிடிரியஸ், ஹெலினா இவ்விருவரும் காட்டிற்குள் வருவதையும், டெமிடிரியஸ் நல்வார்த்தைகளாலும், கெட்டவார்த்தைகளாலும் ஹெலினாவைத் தன்னோடு வரவேண்டாமென்று தடுத்துத் தான் திடீரென்று இவளை விட்டுவிட்டு ஓடிப்போவதையும், ஹெலினா தன்னால் கூடியமட்டும் இவனைத் தொடர்ந்து யோடுவதையும் கண்டான். முன் லைஸாண்டர் சொல்லியபடி ஹெலினாவும், டெமிடிரியஸ்ஸும் அக்காட்டில் உல்லாஸமாய்த் திரிவதைப் பலமுறைப் பார்த்த ஓபிரான் இப்பொழுது ஹெலினாவைப் பார்த்து மனம் வருந்தி எப்படியாவது இவர்களை யொன்று சேர்க்கவேண்டு



மென்று எண்ணினான். இதற்குள் பக் என்பவன் அப்புஷ்பத்தைக் கொண்டுவர ஓபிரான் அதில் பாதி தானெடுத்துக்கொண்டு, மற்றொரு பாதியைப் பக்கின் கையிற்கொடுத்து இதை நீ கையில் வைத்துக்கொள். இவ்விடத்தில் ஆதென்ஸ் நகரத்துப்பெண் ஒருத்தி ஆசையில்லாத ஒரு இளைவன்மீது மிகப் பிரியப்பட்டு வருந்துகிறாள். அவன் தூங்கும்போது கிட்டப்போய், அவன் எழுந்திருக்குந் தருணத்தில் அப்பெண் எதிரிலிருக்குஞ் சமயம்பார்த்து இப்புஷ்பத்தின் ரஸத்தை அவன் கண்களில் பிழிந்து விட்டுவா. ஆதென்ஸ் நகரத்து உடுப்பு அவன் உடுத்துக்கொண்டிருப்பான். அதுதான் உனக்கு அவன் அடையாளம் என்றான்.

பக்கை இப்படி அனுப்பி விட்டு, ஓபிரான் தன் நாயகியைத் தேடிக்கொண்டு போனான். அக்காட்டில் செடிகளடர்ந்த ஓரிடத்தில் அச்சிறியதேவதைகளெல்லாம் தன் எஜமானிக்குப் படுக்கைத் தயார் செய்து வைக்க, அவள் அவர்களில் சிலரை, புஷ்பங்களிலுள்ள வண்டுகளைக் கொல்லும்படியும், சிலரைத் தனக்கு உடுப்புதைக்க வௌவால்களைக் கொன்று அவற்றின் இறக்கைகளைக் கொண்டு வரும்படியும், மற்றும் சிலரை ஆந்தைகளை இறையாமலிருக்கும்படி செய்யவும் கட்டளையிட்டனுப்பி விட்டுத்தான் ஒரு பாம்பின் சட்டையைப் போர்த்துக்கொண்டு தூங்க ஆரம்பித்தாள். அக்குட்டிப் பேய்கள் சக்கிரவர்த்தினியாகிய டிடானியாவைத் தூங்கும்படி தாலாட்டிப் பிறகு தங்களுக்கிட்ட வேலையைச் செய்யப் போயினார்கள். டிடானியா ஒண்டியாய்த் தூங்குவதைப் பார்த்த ஓபிரான், அவள் கிட்டப்போய் நீ எழுந்தவுடன் எதைப் பார்க்கிறாயோ அதன்மேல் ஆவல்கொள்ளக்கடவாய் என்று மெள்ள சொல்லிக்கொண்டு அவள் கண்களில் அச்சாற்றைப் பிழிந்தான்.

இது நிற்க, டெமிரியஸ்ஸை விவாகஞ் செய்துகொள்ள சம்மதிக்காததற்காக ஏற்பட்ட மரணதண்டனையினின்று தப்பித்து ஓடிப்போக ஏற்பாடு செய்தஹெர்மியா, காட்டிற்கு வந்து தன்காதலனாகிய லைஸாண்டர் காத்திருப்பதைக் கண்டாள். பின்பு லைஸாண்டர் ஹெர்மியாவோடு தன் அத்தைவீட்டைச் சேருவதற்கு அக்காட்டின் வழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது ஹெர்மியா மிக்க களைத்துப் போனதைக்கண்டு தாங்கள் அங்கேயோரிடத்தில் பொழுது விடியும் வரையில் படுத்திருந்து பிறகு போகலாமென்று லைஸாண்டர் சொல்ல, அப்படியே ஹெர்மியா ஒரு பசுமையான புல் நிறைந்த இடத்தில் படுக்க, அதற்குச் சிறிது தூரத்தில் லைஸாண்டரும் படுத்து இருவரும் நன்றாய்த் தூங்கினார்கள்.

இவர்கள் இப்படி நித்திரைசெய்யும்போது பக் அவ்விடம் வந்து ஆதென்ஸ் உடுப்பைத் தரித்த லைஸாண்டரையும், சமீபத்தில் தூங்கும் பெண்ணையும் பார்த்து தன் சக்கிரவர்த்தினியாகிய ஓபிரான் சொல்லிய இளைவனும், காமத்தோடு வருந்திய பெண்ணும் இவர்கள் தானென்று நிச்சயித்து லைஸாண்டர் கண்ணில் அப்புஷ்பத்தின் ரஸத்தைப் பிழிந்துவிட்டுப் போயினான்.

E. சுப்பிரமணியர், பி. ஏ.

(இன்னும்வரும்.)

## பாரிஜாதபுஷ்பஹரணம்

என்னும்

# நரகாசுரவதம்.

### பரம்பொருள்துதி.

தொழுவார்தம்வினைநீரமுக்கோலமாய்வேலைரும்பாரெயிற்
றுழுவானைநன்நாமமொன்றுகிலுங்கற்றோருருவோதினோர்
வழுவாதசுரராவர்நரராகபுள்ளாகமாவாகப்புன்
புழுவாகவொன்றிற்பிறந்தாலும்நரகிற்புகார்காணுமே.

### விக்நேசுரர்துதி.

காட்டகத்திருந்துகதறியவானைக்குக்கருகிவந்து
வாட்டமிலாநின்வலையினாலதின்வைரிசெற்று
தேட்டமிகுகண்ணாநின்சேவடியைத்தந்ததுபோல்
ஒட்டமாய்வந்தெனூழ்வினையறுத்துய்யச்செய்வாய்.

### சங்கரர்துதி.

வில்லாற்கிரீடிவிரைந்தடிக்கவெருளக்கண்ணன்
கல்லாகுமனதாத்தன்காற்செருப்பாலுனைக்கதறச்செய்தும்
சொல்லாலுமடித்தசுந்தரன்றூதாம்சிவசங்கரனே
பொல்லாதவெந்தன்பிழைதனைப்போக்கிப்போதடிச்சேர்ப்பாய்.

### வேலவர்துதி.

முருகாவுந்தன்முத்தினைப்பதமரக்கலத்தால்
கருவாமிப்பெருங்கடற்கரையேறிக்காலம்போக்கி
மருவாறற்றுப்பந்தனைவிட்டுப்பாசம்நீங்க
தருவாயிணையடிசமயமிதுகாண்தரணியிலே.

### அவையடக்கம்.

சுருக்கமில்கேள்வித்துகடீர்புலவர்முன்யான்மொழிந்த
பருப்பொருடானும்விழுப்பொருளாம்பணிமாலியைப்
பொருப்பதம்சேர்ந்தபொல்லாக்கருங்காங்கையும்பொன்னிறமா
யிருக்குமென்றிவ்வாறுரைக்குமன்றோவிவ்விருநிலமே.

### சரிதச்சீர்.

வாரிஜாதமாதியாய்வளர்ந்துநின்றஜோதியாய்
மாரிஜாதகாந்தியாய்மாதர்கட்குசாந்தியாய்
ஓரிஜாதமூர்த்தியாய்உலகுக்கெங்கும்பூர்த்தியாய்
பாரிஜாதசரிதையைப்பகரவெனத்துணிந்தேனே.



### பாடல்வரலாறு.

#### கும்மி.

1. வாருங்கோடிபெண்கள்வாருங்கோடி
வளைந்துகும்மியடியுங்கோடி
வாருங்கோடிதிவ்வியகண்ணன்சரிதையை
வளமையாகவேசொல்லுங்கோடி—(வாரு).

2. கண்களிலானந்தநீர்பெருக்கிக்
காட்சிதருமிந்தச்சரித்திரத்தை
கண்டவரானந்தம்கொள்ளவேநீங்களும்
கமலவாணியைப்போற்றுங்கோடி—(வாரு).

3. தச்சர்கள்கட்டும்பெருவீட்டைப்போல
மெச்சவேபேசிடும்குழந்தையெலாம்
இச்சையாகவேகட்டிடும்மண்வீட்டைத்
தச்சரும்காய்வரோபெண்மணிகாள்—(வாரு).

4. புவிதனிலான்றோர்கள்மிகப்போற்றி
புன்சொல்லதனைத்தள்ளிமிக
புனிதமாயிதைகிரஹிப்பாரென்றுப்
பூரித்துச்செய்தானேராகவனும்—(வாரு).

### சரிதவரலாறு.

#### இந்திரசபை.

5. ஆதிமூலத்தின்கிருபாகடாக்ஷத்தால்
அமரர்பதிக்கிறைவனான
அண்ணலாமந்ததேவந்திரபூபதி
அமர்ந்தானடிகொலுச்சபையில்—(வாரு).

6. தும்புருநாரதர்வீணைகள்பாடி
துலங்கும்ஊர்வசிநடித்திருக்க
துதித்துமகிழ்ந்துசுரபதிதானும்
தூய்மையாயொருவார்த்தைசொன்னான்—(வாரு).

7. இச்சபையிலுள்ளயாவருங்கேளுங்கள்
இன்பமாகவெல்லோருங்கூடி
இனிமையானசிங்காரவனத்தை
இச்சையுடனேபார்ப்போமெழுந்திருங்கள்—(வாரு).

8. சொன்னவண்ணமேசுரர்கள்யாவரும்
சோபிதமானநந்தவனத்தை
சுறுசுறுப்பொடுவந்தடைந்துமிக
சூழ்ந்துமகிழ்ந்தார்தோகைகளே—(வாரு).

9. பார்த்துஎல்லோருமானந்திக்குமொரு
பாரிஜாதப்பூவையிந்திரன்கண்டு

பக்தியுடனதைப்பறித்துத்தக்ஷணம்
பக்ஷமாய்க்கொடுத்தாண்டி நாரதர்க்கு—(வாரு).

10\. எள்ளளவுங்கூடமறுதளிக்காமல்
ஏகமனதுடன்நாரதரும்
இந்தவிதப்பூஎங்குகிடைக்குமென்று
இன்பமாய்வாங்கினர்தன்கரத்தில்—(வாரு).

11\. சற்றுநேரத்தின்பின்னெல்லோரும்
ச்வமந்த்ரம்சேருங்களென்றுசொல்லி
சுரபதிதானும்அவ்விடம்விட்டு
சுகமாய்ச்சேர்ந்தாண்டி இல்லத்திலே—(வாரு).

12\. மலரைவாங்கினநாரதரும்சற்று
மனதில்யோசனைசெய்தபின்னர்
மலரோன்விதித்தசாபத்துக்குஇது
மருந்தென்றேநினைவுகொண்டார்—(வாரு).

(இன்னும்வரும்.)

சருக்கை T. N. இராகவாசாரியார்.

## பழமொழி விடுகதை.

1\. தெருவழியே போகையில் ஓர் பட்டமரத்தை யான்கண்டேன்.

2\. அதையே நிமிர்ந்து பார்த்துக்கொண்டு நடந்ததால் காலிலே கல் இடறியது.

3\. இந்தக் கல்லினால் காயம்படும் என்று யான் சற்றும் நினைக்கவில்லை.

4\. என் கெட்டவேளையினாலே காலில் காயம்பட்டுவிட்டது.

5\. இதினாலே குடியே முழுகாது என்று மேலே நடந்து வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

6\. வீட்டிலும் என்கால் கெடும் என்று அம்மா சொல்லவில்லை.

மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு வாக்கியத்திலிருந்து ஒரு வார்த்தையெடுத்து, சேர்த்து வாசித்தால் ஒரு பழமொழிவரும். இது என்ன?

பட்டு.

## சமாசாரக் குறிப்பு.

### மகாராணியாரின் அபிமான புத்திரி.

இந்தியா ராஜப்பிரதிநிதியாயிருந்த லார்ட் கர்ஸனின் மனைவியார் இப்பொழுது பெற்ற பெண்குழந்தையை அலெக்ஸாண்டிரா மகாராணியார் தம் அபிமான புத்திரியாகக் கொள்ளப்போகின்றனராம்.



மே மாதம் 23-ந்தேதி முதற்கொண்டு 25 வரையிலும் ராணிப்பேட்டையில் சென்னை மாகாணக்கூட்டம் வெகு விமரிசையாக நடந்தது. அப்பொழுது திருவாங்கூரில் திவானாயிருந்த ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணசுவாமிராவு அக்கிராசனம் வகித்து அக்கூட்டத்தின் நடவடிக்கைகளை செவ்வனே நடத்தினர்.

***

டர்பன் மெஸர்ஸ் P. பாவாடைப்பிள்ளை கம்பெனியாரால் ஏற்படுத்தப்பட்ட தரங்கன்பாடி இந்து பெண்பாடசாலைக்கு மானேஜராக விருந்துவருகிற மிஸ்டர் S. A. முத்துத்தாண்டவராயப்பிள்ளை யென்பவர் ஸ்கூல் விஷயமாய் பிரதி சனிக்கிழமை வந்து வெகு கண்டிப்பான ஸ்திதியில் பெண்களை பரீட்சித்து ஸ்கூலை நல்ல ஸ்திதிக்கு கொண்டுவர பாடுபட்டு வருகிறார். மிஸ்டர் P. பாவாடைபிள்ளை தர்மகுணமும், பரதுரயோஜனையும, காரிய நிர்வாகமுமுள்ளவர்.

***

### ஜப்பானிய சக்கிரவர்த்தினியின் உபகாரச் சிந்தை.

சிமல்போ யுத்தத்தில் காயப்பட்டுப்போன 3 ருஷியர்கள் மத்ஸுயாமா ஆசுபத்திரியில் ஜப்பானியர்கள் தங்களுக்கு மிகுந்த ஆதரவுடன் சிகிச்சை செய்ததாக வெளியிட்டு அவர்களுக்கு நன்றி செலுத்தினதாகத் தெரிகிறது. அந்த ருஷியர்களுக்கு மத்ஸுயாமா ஆசுபத்திரியில் நன்றாய் சிகிச்சை செய்யப்பட்டது பெரிதாகுமா? அதே ஆசுபத்திரியில் சிகிச்சை பெறவந்த 3-ருஷியர்களுக்கு கால்களைத் துண்டித்து எடுத்துவிடவேண்டியிருந்ததாம. அவர்கள் மூவருக்கும் ஜப்பானியச் சக்கிரவர்த்தினி பொய்க்கால்கள் செய்து உதவி யிருக்கிறார்களாம். பிறர் துன்பம் சகியாத மனத்தையுடைய அந்த சக்கிரவர்த்தினியின் உபகாரச் சிந்தையல்லவோ புகழ்ச்சிக்கு இடமாகும்?

***

மேமீ 28உ காலையில் காஞ்சீபுரத்தில் விவசாய பொருட்காட்சியானது வெகு விமரிசையாகத் திறக்கப்பட்டது. அநேகர் வந்திருந்தார்கள். இதற்கு அத்தியக்ஷரான திவான் பஹதூர் சோமசுந்தர சாஸ்திரியவர்கள், கனம் மிஸ்டர். எ, இ. காஸ்ல் ஸ்டுவேர்ட் அவர்களை நோக்கி இந்தப் பொருட்காட்சியைத் திறக்கும்படி வேண்டினர். துரையவர்களுக்கு விவசாயிக ளிடத்திலுள்ள அன்பும், அநுதாபமும் அவர் அங்கு விஜயஞ்செய்திருப்பதனாலேயே வெளியாயிற்றென்றும், முன்னர் கவர்ன்மெண்டாரால் அமைக்கப்பட்ட பொருட்காட்சிகள் சரிவர நடந்தேறவில்லையென்றும் இப்பொழுது ஜனங்களே முன்வந்து விவசாயப் பொருட்காட்சியை விரும்பி யமைத்தது னாலும் கவர்ன்மெண்டாரது சகாயமுங் கூடுவதனாலும் நற்பயனே விளையுமென்றும் அவர் கூறினர். துரையவர்கள் பதிலுரைக்கையில் நிலையான விவசாயச் சங்கங்களேற்படுத்துவது அவசியமென்று வற்புறுத்தினர். இவ்விதம் ஒவ்வொருவிடத்திலும் நடந்தால் நாளாவர்த்தியில் விவசாயம் கைத்தொ

ழில் முதலியவைகள் விருத்திக்கு வரும். கவர்ன்மெண்டாரும் உதவிபுரிவார்கள்.

***

ராணிப்பேட்டையில் மே௴ 26உ செவ்வாய்க்கிழமை காலையில் மிஸ்டர் ஆர். வி. கார் அவர்கள் பொருட்காட்சிச் சந்தையைத் திறந்து இதற்கு முன் வடஆற்காடு ஜில்லாவில் இம்மாதிரியான சந்தைகள் இரண்டு கூடியிருக்கின்றன. இந்த ஜில்லா வாசிகளின் சாகஸ சாமர்த்தியங்களுக்கும் காரியசித்திக்கும் சந்தோஷப் படுகின்றோம். விவசாயத்தையும் கைத்தொழில்களையும் பற்றிக் கட்டுகட்டாய் எழுதுவதிலும் அல்லது அச்சிடுவதிலும், சாமான்களை நன்றாயும், கிரமமாயும், வரிசை வரிசையாயும் அடுக்கி வைத்து, அவற்றின் பெருமையையும், உபயோகங்களையும் விளக்குவது பதின்மடங்கு சிறந்தது. ஆதலின் இப்படிப் பட்ட மூன்று பொருட்காட்சிகளைச் செவ்வனே அமைத்துப் பாடுபட்ட கனவான்களது மேன்மையே மேன்மையாமென்றும் நெசவுத்தொழில் அந்தஜில்லாவின் சில சமயங்களில் நசித்து வருகின்றதென்றும், வேலூருக்குச்சமீபத்தில் அதிகமாய் காகிதம், மசியொத்தும் காகிதம், முதலியவைகள் செய்துவந்தவர்கள் இப்பொழுது செய்யாமலிருக்கிறார்களென்றும், பிறநாட்டு நெசவுக்காரர்களுடையவும் வியாபாரிகளுடையவும் போட்டியினால் வடஆற்காட்டில் நெசவுக்காரர்களும், தொழிலாளிகளும் நொந்துபோவதைப் பற்றிதாம் மிக விசனப்படுவதாகவும் சொல்லி முடித்தார்.

***

மே மாதம் 26-ந்தேதி ராணிப்பேட்டையில் ஆசாரசீர்திருத்த மகா சபை கூடியது. அப்பொழுது ம-௱-௱-ஸ்ரீ R. வெங்கிட்டரத்னம் நாயுடு அவர்கள் எம். ஏ, அக்கிராசனம் வகித்து அக்கூட்டத்தை வெகு விமரிசையாக நடத்தினாராம். அப்பொழுது, சபாநாயகர் ஜனசாரசீர்திருத்தத்தை சரியாக அநுசரித்துவரவேண்டுமானால் காலஞ்சென்ற ஜட்ஜி மகாதேவ கோவிந்தரானடே அவர்களின் கோட்பாடு பிரகாரம் ஒவ்வொருவரும் நடக்க வேண்டுமென்று வற்புறுத்தி பிரசங்கம்செய்தபின் பின்வரும் விஷயங்கள் அக்கூட்டத்தாரால் தீர்மானிக்கப்பட்டன. கடல்யாத்திரை, விவாகவயதை உயர்த்துதல், பெண்கல்வி, ஒவ்வொரு ஜாதியிலும் பற்பல உட்பிரிவுகளில்லாமல் சேர்ந்திருத்தல், கீழ்ஜாதியாரின் அபிவிருத்தி, முதலியவைகள் மதுரை ... கனம் G. ஸ்ரீனிவாசராயரவர்கள். பி. ஏ, மார்க்காபூர் மிஸ்டர் கே. ஏகாம்பர ஐயரவர்கள் பி. ஏ, பெல்லாரிராவுபஹதூர் G. H. கௌட், சென்னை டாக்டர் C. B. ராமராவு அவர்கள. கஞ்சம் V. V. ஜோகிய்யபந்துலு, வட ஆர்காட்டிலுள்ள மிஸ்டர் கிருஷ்ணசுவாமி ஐயரவர்கள், பி,ஏ,மனோஹரப்பிரசாத், V. சுந்தரம் அய்யரவர்கள் பி, ஏ, சக்கிரவர்த்தி. ஐயர் பி.ஏ. முதலியவர்களால் தீர்மானிக்கப்பட்டன. இந்து கைம்பெண்களின் ஸ்திதியை விருத்தி செய்வதற்குரிய விஷயத்தை வட ஆர்க்காட்டு மிஸ்டர் என். கே. இராமசாமி ஐயரவர்கள் பி. ஏ, பி எல் பிரேரேபித்தபொழுது தென்கன்னடம் மிஸ்டர் ராமராவு அவர்களும், அநந்தப்பூர் மிஸ்டர் P-M, ரங்காசாரியாரவர்களும் பி, ஏ, ஆர்காட் தாசில்தார் மிஸ்டர் ஸ்ரீ கண்டய்யரும், பி. ஏ, வட ஆர்காட் மிஸ்டர் கோட்டசுப்பய்யகுப்தா அவர்களும், சி. டி. பார்த்தசாரதி முதலிவார் அவர்களும் (பி. ஏ எல் டி) ஆமோதித்தார்கள்; ராவு பஹதூர் வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் "கனவான்களே! எந்தவழியிலாவது நீங்கள் ஜனசாரத்தை விருத்திசெய்ய உழையுங்கள்; ஆனால் நீங்கள் சொல்வதையும் செய்து காரியத்தில் காட்டுங்களென்று" மிக உறக்கத்துடன் சொன்னது யாவருக்கும் ஜனசார விருத்தியில் ஒரு உணர்ச்சியை உண்டாக்கியதென்றே சொல்லலாம். சபாநாயகருக்கு மிஸ்டர் வி. வீரராகவாசாரியாரவர்களாலும் கனம் மிஸ்டர். L. A. கோவிந்தராகவ அய்யரவர்களாலும் வந்தனமளித்த பின்பு ஜனசாரக்கூட்டம் கலைந்தது.



# Press Opinions.

THE TAMIL ZENANA MAGAZINE.—The current number of this magazine contains several interesting articles that bear testimony to the labours of the editor in doing his best towards the diffusion of useful knowledge for the female sex. Aptly does this number contain an appreciative notice on H. E. Lady Ampthill's Nursing Institute. By no means less interesting are the articles on woman's wisdom and Justice Chandavarkar, on the ideal of womanhood. Domestic work and domestic economy form the subjects of two good articles in the magazine. Mr. V. Gopal Iyengar has dealt ably with the motto of "truth" in another article, The short stories for children are good. The news and notes are all choice ones. We congratulate the Editor on his successfully bringing the magazine more and more in touch with modern requirements.

The Hindu Madras. 26-4-1904.

"மாதர் மனோரஞ்சினி":—வழக்கம்போல இதனில் அடங்கியுள்ள விஷயங்கள் பெண் பாலரின் அறிவைப் பெருக்கக் கூடியவைகளாயிருக்கின்றன. ஸ்திரீகளின் புத்தி கூர்மை, வீட்டு வேலை, குடும்ப சம்ரக்ஷணை, பெண்மையின் கருத்து, மருத்துவநூல், என்ற தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டுள்ளவை மாதர்கள் வாசிக்கத்தக்கவைகளே.

சுதேசமித்திரன் 1904 ஏப்ரல் 26.

மாதர் மனோரஞ்சினி:—தமிழறிந்த மாதர்க்குப் புத்திபுகட்டியவர்களை நல்வழியிற் றிரும்புமாறு பிரசுரிக்கப்பட்டுவரும் இப்பெயர்வாய்ந்த மாதாந்தப் பத்திரிகையின் ஏப்ரல் மாதத்துச சஞ்சிகையில் விசேஷ விஷயங்கள்

அடங்கியிருக்கின்றன. அவைகளில் பார்வதிபாகவன் எழுதிய ஸ்திரீகளின் புத்திக்கூர்மை, பத்திராதிபர் எழுதிய அனசூயை, ஆம்ப்தில் பெருமாட்டியின மருத்துவச்சாலை, குடும்ப சம்ரக்ஷணை முதலியன எளிதவறிந்துக்கொள்ளக் கூடியவாறு எழுதப்பட்டிருக்கின்றன.

இந்துநேசன் 1904 எப்ரல் 30.

விடை.

மாதர்மனோரஞ்சினி ஆறும் புத்தகம் ஐந்தாம். இலக்கப்பத்திரிகையின் 98-ம் பக்கத்திலெழுதிய விடுகதையின் விடை, "மதுரை" யென்றறிக.

மைமூன்.

## நமது சந்தாதாரர்களுக்கு.

புதிய வருஷம் பிறந்து 5 மாதங்கள் ஆய்விட்டன. இன்னும் நமது சந்தாதாரர்களில் சிலர் நாளது 1904-ம் வருஷத்திய சந்தாபாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். சந்தாவை முன்பணமாகவே அனுப்பவேண்டியிருக்க இன்னும் அனுப்பாமல் இருப்பதால் நமக்கு வீண் சிரமமும், நஷ்டமும் நேரிடுகிறது. சந்தாவை சரியாய் அனுப்பினால் தானே நமது சஞ்சிகை கஷ்டமின்றி சரியாய் நடந்துவரும். இந்த சஞ்சிகை கிடைத்தவுடனாவது தயவுசெய்து அனுப்பும்படியாய் கேட்டுக்கொள்கிறோம். மேல்க்கண்டபடி சந்தா அனுப்பாதவர்களுக்கு அடுத்த ஜூலைமீ சஞ்சிகை. வி. பி. யில் அனுப்பப்படும். பெற்றுக்கொள்ளும்படியாய் கேட்டுக்கொள்கிறேன். நமது சந்தாதாரர்கள் தகுந்த கனவான்களாதலால் இது ஓர் பெரிதல்ல. மேல்விலாசம் மாறும்பொழுது உடனே தெரியப்படுத்தவேண்டும். கையொப்பக்காரர்கள் ஆபீசுக்கு மணியார்டர் செய்யும்போதும் கடிதம் யெழுதும்போதும் அவர்களின் ரிஜிஸ்தர் நம்பரை குறிப்பிட்டு சரியான மேல்விலாஸத்துடன் யெழுதவேண்டும்.

## மாதர் மனோரஞ்சினி சந்தாவிபரம்.

| | |
|---|---|
| வருட சந்தா தபால் சார்ஜ் உள்பட வெளியூர் உள்ளூராருக்கு ... | 1-12—0 |
| 6 மாதத்திற்கு ... ... ... ... ... | 1—0—0 |
| தனிப்பிரதி ... ... ... ... ... | 0—2—6 |
| மேல் நாட்டாருக்கு ... ... ... ... | 2—4—0 |
| திக் பேபர் வருட சந்தா ... ... ... ... | 2—8—0 |
| முன்பணம் அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. | |
| விளம்பரம் பக்கம் ஒன்றுக்கு மீ 1-க்கு ... ... | 5—0—0 |
| அரைபக்கம் ... ... ... ... ... | 3—0—0 |
| கால்பக்கம் ... ... ... ... ... | 1—8—0 |
| வரி 1-க்கு ... ... ... ... ... | 0—2—0 |
| பட்டாபிஷேக மாதர்மனோரஞ்சினி ஜனவரி நம்பர் ... | 0—3—0 |
| மாதர்மனோரஞ்சினி 3-ம் புஸ்தகம் ... ... ... | 2—8—0 |
| டை 4-ம் டை ... ... ... | 2—8—0 |

திருவல்லிக்கேணி
15—15—04.

ஸ்ரீ பி. வைத்தியநாத ஐயர்,
மானேஜர், மாதர் மனோரஞ்சனி ஆபீஸ்,
வீரராகவமுதலி தெரு, திருவல்லிக்கேணி.

Printed at the Ripon Press Madras & Puplished by the Proprietor,
C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. VI } Madras: July 1904. { No. 7.
புத்தகம் சு. } சென்னப்பட்டணம்: ஜூலைமீ 1904. { இல. 7.

## படிப்புபெரிதா? அநுபவம்பெரிதா?

அறிவு படிப்பினாலும் அநுபோகத்தினாலும் அல்லது இரண்டினாலும் விருத்தியாகக்கூடியது. அந்நிய தேசங்களைப்போய் பார்த்திராதவர்களும் அந்நியர்களோடு பழகாதவர்களுங்கூட புஸ்தகங்களைப் படித்து அத்தேசங்களைப்பற்றியும் அந்த அந்நியர்களைப்பற்றியும் பல விஷயங்களை யறிந்துகொள்ளுகிறார்கள். ஆங்கிலேயர் வசிக்கும் இங்கிலண்டுதேசத்தை நம்மவர்களில் பெரும்பான்மையோர் பார்க்காதவர்களா யிருந்தபோதிலும் படிப்பினாலும் கேள்வியினாலும் அத்தேசத்தினுடைய இயற்கை இலக்ஷணங்களையும் ஜனங்களுடைய குணகுணங்களையும் இராஜாங்க முறைகளையும் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறே உலகத்தில் எத்தேசங்களைப்பற்றியும் மேற்சொன்ன படிப்பு கேள்வி ஆகிய இவைகளால் விசேஷமாய் எவரும் தெரிந்துகொள்ளக்கூடும். ஆயினும் படிப்பு கேள்வி இவைகளில்லாமலே அந்நியதேசங்களில் யாத்திரைசெய்து அங்கே அடையும் அநுபவத்தினால் அவைகளைப்பற்றி யறிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களை யறிந்துகொள்ளலாம். அறிவு க்கு உதவியாகிய படிப்பு அநுபவமாகிய இரண்டு சாதகங்களும் சிலருக்கு அருமையா யமைந்திருக்கின்றன. இந்தியர்கள் விசேஷமாய் தாங்கள் பிறந்த விடத்தைவிட்டு அந்நிய ஸ்தலங்களுக்குப் போய் சஞ்சரிக்கும் சுபாவமுடையவர்களல்ல. ஆகையால் அவர்களுக்கு அநுபோகத்தால் கிடைக்கும் அறிவு குறைந்ததாகவே யிருக்கும்.

அறிவுக்குரிய இந்த இரண்டு சாதகங்களில் எது பெரிதென்று ஆலோசிக்கும்போது அநுபோகம்தான் பெரிதென்று சொல்லவேண்டும். நம்முடைய சமீபித்த பந்து ஒருவர் அந்நியதேசத்திற்குப் போயிருக்கையில் அவர் அங்கு நல்ல ஸ்திதியிலிருக்கிறாரென்று நமக்குத் தெரிந்து நாம் சந்தோஷப்படக்கூடுமானாலும் அப்படி நல்ல ஸ்திதியிலிருப்பவரை நாம் கண்ணால் பார்த்து கூடப்பழகினால் எவ்வளவு சந்தோஷப்படக்கூடுமோ அவ்வளவு கடிதமூலமாக சந்தோஷப்படுதல் கூடாது. அப்படியே கங்கைநதியில் காசிப்பட்டணம் வெகு நேர்த்தியாயிருக்கிறதென்று புஸ்தகத்தில் படித்தாலும் அல்லது ஒருவர் சொல்லக்கேட்டாலும் அதை நேரப்போய்ப் பார்ப்பதால் உண்டாகிற உணர்ச்சி உண்டாகாது.

மேலும் அநேக விஷயங்களில் படிப்பினால் உண்டாகக்கூடிய அறிவா
னது அநுபவத்தில் பிரயோஜனப்பட்டாலொழிய அந்த அறிவு இருந்தா
லும் இல்லாவிட்டாலும் ஒன்றேயாகும். சாஸ்திரங்களிலும் மற்ற நூல்
களிலும் சத்தியம், தயை, சாந்தம் ஆகிய குணங்களைப்பற்றி புகழ்ந்து
பேசியிருந்தாலும் அக்குணங்கள் அநுபவத்தில் காட்டப்பட்டா லொ
ழிய சிறக்கமாட்டா. மேலும் சித்திரமெழுதல், கட்டிடங்கள் கட்டுதல்
முதலிய வித்தைகளைப்பற்றி ஒருவன் புஸ்தகத்தில் படித்ததை அநுபவத்
தில் உபயோகித்தாலன்றி படித்ததினால் பிரயோசனமாகாது. அநேகர்
கொஞ்சமேனும் படிப்பில்லாமலே உலகத்தில் கீர்த்தியடைந்திருக்கிறார்கள்.
17-ம் நூற்றாண்டில் மகாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்த சிவாஜி மஹாராஜ்
சக்கிரபதி எழுத வாசிக்க அறியாதவராயிருந்தாலும் டெல்லியில் ஆண்ட
மகம்மதிய சக்கிரவர்த்திகளது வல்லமையையும் பெருமையையும் ஒருவாறு
அடக்க சாமர்த்திய முள்ளவரா யிருந்தார். அவ்வாறே மைசூர் சமஸ்தா
னத்தை இந்து இராஜாக்களிடமிருந்து கைப்பற்றி ஆங்கிலேயர்களுடன் சரி
சமானமாய் போர்செய்த ஹைதர் ஆலிக்கு எழுத்து வாசனையே யில்லை
யென்று சொல்லப்படுகிறது.

இப்படி படிப்பைவிட அநுபோகம் பெரிதென்று சொல்வது புருஷர்
க்கு மட்டுமல்ல ஸ்திரீகளுக்கு மொவ்வும். இந்துபுராணங்களில் புகழப்
படும் தமயந்தி, சீதை, திரௌபதி ஆகிய ஸ்திரீகள் பதிவிரதைகளாயும், தைரி
யசாலிகளாயும், விவேகமுள்ளவர்களாயு மிருந்தபோதிலும் அவர்கள் புஸ்த
கங்களை வாசித்து அக்குணங்களைப் பெற்றதாகச் சொல்லப்படவில்லை.

அவர்களுக்கு சிறுபர்வத்திலும், முதிர்ந்த பர்வத்திலும் உண்டாயிருந்த
சுதந்திரத்தால் கிடைத்த அநுபவத்தினாலேயே அவைகள் உண்டாயிருக்க
வேண்டும். மகம்மதிய ஸ்திரீகளைப்போல வீட்டுக்குள்ளேயே அடைபட்டிரு
க்கும் ஸ்திரீகளுக்கு அநுபவமுண்டாகி அதனால் புத்திவிசாலித்தல் சாத்திய
மல்ல. ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல சுயேச்சையாய்சஞ்சரிக்கும் ஸ்திரீகளு
க்கு விசேஷப் படிப்பில்லாமற் போனாலும் அநுபவத்தினாலேயே விசேஷ
அறிவு உண்டாகக்கூடும். தற்காலம் இந்துஸ்திரீகள் இரண்டு வகைகளிலும்
சேராதவர்களா யிருக்கிறார்கள். மகம்மதிய ஸ்திரீகளைப்போல வீட்டிற்குள்
அடைபட்டிராவிட்டாலும் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல சுயேச்சையாய் சஞ்
சரிக்கிறவர்களா யிருக்கவில்லை. அவ்விதம் சஞ்சரித்தல் நமது இந்து ஸ்திரீ
களுக்கு நல்லதென்று நாம் சொல்ல வரவில்லை. அல்லது புருஷ சாதியோடு
ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல நெருங்கிப் பழகவேண்டுமென்று சொல்ல
வரவில்லை. ஆயினும் அமைதி, நாணம் முதலிய குணங்களை மீறாமல் ஸ்திரீ
கள், ஸ்திரீகளுடனே பழகுதலும் அவர்களுடன் கூடி சஞ்சரித்தலும் ஸ்திரீ
களுக்கு விரோதமென்று சொல்லக்கூடாது. உலகத்தில் கடவுள் சிருஷ்டிக
ளில் பலவேற்றுமைகளின் விநோதங்களையும் பார்த்து ஸ்திரீகள் அநுபவிப்
பதில் என்ன தடையிருக்கக்கூடும்? மலைகள், ஆறுகள், அருவிகள், காடுகள்,
இவைகளையும், மிருகங்கள் பக்ஷிகள் முதலியவைகளையும், மரங்கள் புஷ்பங்
கள் கொடிகள் முதலியவைகளையும் புருஷர்கள் கண்டு சந்தோஷப்படுவதை
ப்போல ஸ்திரீகளும் ஏன் சந்தோஷப்படக்கூடாது? அவ்வாறே பற்பல



ஸ்தலங்களைப் போய்ப் பார்த்து இதர ஜனங்களுடைய நடை, உடை, பாவ
னைகளை அநுபோகத்தினால் தெரிந்துகொள்வதிலும் தடையில்லை. இவ்விதங்
களால் ஸ்திரீகளுடைய அநுபோகத்தைப் பெருக்குவதில் பெற்றோர்களும்
புருஷர்களும் சகாயம் செய்ய கடமைப்பட்டவர்களென்பது நம் அபிப்பிரா
யம். இவைகளன்றி ஸ்திரீகள் சம்பாஷணை செய்வதில் அவர்களுடைய அபிப்
பிராயங்களை வெளிப்படுத்துவதிலும், நியாயமான காரியங்களில் அவர்களு
டைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதிலும், சுதந்தரம் கொடுப்ப
தும் அவசியம். இவ்வாறு ஸ்திரீகளுக்கு மிதமான சுதந்தரத்தைக் கொடு
த்து கூடியவரையில் அநுபவத்தை யுண்டாக்குவது அவர்களை வீட்டிற்குள்
ளேயே யடைத்து புஸ்தகங்களை மாத்திரம் படிக்க இடங்கொடுப்பதைவிட
பலமடங்கு பெரிதென்று நமது அபிப்பிராயத்தை இங்கு சொல்லத் துணிந்
தோம்.

ஜி. சுப்பிரமணிய அய்யர் பி. ஏ.



# சர்ப்பம். ஓர் விஷஜெந்து.

உலகத்தில் சர்ப்ப சாதிகளில் சுமார் நூறுவகைகளுள. இவைக
ளில் அநேகமாக விஷமுள்ளவைகள் 100-க்கு 40-க்குமே
லிருப்பதாகச் சொல்லப்படுகிறது. நம் தேசத்திலுள்ள
நாகசர்ப்பத்தின் விஷமோ மிகக்கொடியது. இந்த சர்ப்பம்
கடித்த ஐந்து நிமிஷத்தில் மடிந்துபோனவர்கள் பலர்; சிலர்
24-மணி நேரத்திற்குள்ளும் இறந்துவிடுவதுண்டு. இந்த
நாகசர்ப்பம் ஒருவனை கடிக்கும்பொழுது இதன் பல் ஆழ
மாக உட்சென்றும் விஷம் சரியாக உள்ளிறங்காவிடின் ஒரு

வேளை கடிபட்ட மனிதன் பிழைக்கக்கூடும். ஆனால் கடிபட்ட மனிதன் கொஞ்சநேரம் ஸ்மரணைதப்பி சுவாசமொன்றுமில்லாமல் இருப்பான் என்று சொல்லப்படுகிறது. இவ்விஷத்தை நீக்க இதுகாறும் யாதொரு மருந்தும் ஒருவராலும் கண்டுபிடிக்கப்படவில்லை. மந்திரத்தினால் பாம்புக்கடியைத் தீர்ப்போமென்று சிலர் சொல்வதுண்டு. ஆனால் மந்திரத்தினால் இதுவரையிலும் ஒருவராவது பிழைத்ததாகத் தெரியவில்லை. இந்நாகப்பாம்புகளைப் பாம்பாட்டிகள் பிடித்து பெட்டியில் வைத்துக்கொண்டு வீடுவீடாய்ச் சென்று புல்லாங்குழல் வாத்தியத்துடன் சர்ப்பத்தைப் பலவிதமாக விளையாடும்படி செய்து ஜீவிப்பதை நமது பெண்மணிகள் அறிவார்கள்.

பாம்பாட்டிகள் பாம்புகளை பின்வரும் பாடல்களைச் சொல்லி ஆடும்படி செய்வது வழக்கம்.

"வளைபுகும் போதேதலை வாங்கும் பாம்பே
மண்டலமிட் டெல்வளை வண்ணப் பாம்பே
நடைக்கஞ்சி நின்றிடும் சத்தியப் பாம்பே
நலையெடுத் தேவிளை யாடு பாம்பே."
"நாதர்முடி மேலிருக்கு நாகப் பாம்பே
நச்சுப்பையை வைத்திருக்கு நல்ல பாம்பே
பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடு பாம்பே."

இந்தசாதிப் பாம்புக்கு படமுண்டு, அந்தப் படத்தில் சில கோடுகளுள; அவைகளை கிருஷ்ணபாதமென்று நம்மவர் சொல்வதுண்டு. பாம்பாட்டிகளால் எடுக்கப்பட்ட விஷப்பற்கள் ஒருமாதமானவுடன் மறுபடியும் முளைக்கும். பாம்பாட்டிகள் தங்களிடத்தில் ஒருவித மணியிருக்கிறதென்றும் அதன் மகிமையால் விஷம் தங்களுக்கு ஏறாதென்றும் சொல்வதுண்டு. இவ்விதம் சொல்பவர்களில் அநேகர் பாம்புகளால் கடிபட்டு மடிந்திருக்கிறார்கள். அந்த மணி இரத்தம் வெளிவருவதைத் தடுக்க உதவுமேயொழிய வேறொன்றும் செய்யமுடியாது. சர்ப்பத்தின் வாயில் இருபக்கத்திலும் இரண்டுபற்களுள. அவைகள் கோரப்பற்களென்று சொல்லப்படுகிறது. அவைகளுக்குக் கீழ்தான் விஷப்பையிருக்கிறது. பாம்பு அப்பற்களால் கடித்தவுடன் விஷம் பையிலிருந்து கடிபட்டவிடத்தில் விழும்.

இந்த விஷம் இரத்தத்துடன் கலந்து தேகமுழுவதும் பரவி மார்பை அடைக்கும்படி செய்துவிடும்; அப்பொழுது மனிதனுக்கு சுவாசம் கொஞ்சமேனுமிராது. தக்க வைத்திய சிகிச்சை யில்லாமையால் கடிபடுபவர்கள் மாண்டுபோகின்றனர்கள். சாதாரண சர்ப்பம் 5-அல்லது 6-அடி நீளமுள.

இவ்வித சர்ப்பத்தின்மீது ஸ்ரீ கிருஷ்ணபகவான் நின்று நடனஞ்செய்து அதைத் தண்டித்ததாக ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது.

"யமுனா நதியின் ஒரு மடுவில் காளிங்கனென்ற சர்ப்பம் வசித்துக்கொண் டிருந்தது இது மகா பெரியது. இதனுடைய விஷத்தின்



காந்தியினாலேயே அந்த மடுவிலுள்ள ஜலம் கொதித்துக்கொண் டிருக்கும். அந்த ஜலத்திற்கு நேராய் ஆகாசவீதியிற் பறக்கின்ற பட்சிகள்யாவும் விஷவேகத்தினால் சோகித்து விழ்ந்தழியும். அந்த சலத்தினாலுண்டாகிய அலைகளின் திவலைகளைக் காற்றானது கொண்டுவந்து வீசுதலினால் அம்மடுவின் நாலாபக்கங்களிலும் விருட்சம், கொடி, செடி, பூண்டு முதலியதும் உண்டாகின்றதேயில்லை. இவ்விதமாயுள்ள அந்த மடுவில் ஸ்ரீ கிருஷ்ணன் குதித்து வெகு குதூகலத்துடன் நீந்தினான். இந்தசர்ப்பம் கிருஷ்ணன் செய்கிறதை அறிந்து மிக கோபத்துடன் கிளம்பிவந்து கிருஷ்ணனைக் கடித்து தேகமுழுவதையும் சுற்றிக்கொண்டது. கிருஷ்ணன் இதை விட்டுவிடக் கூடாதென எண்ணி உடனே அதனிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டு அதன் படத்தின்மீது தனது காலை வைத்துக்கொண்டு அதன் நுனிவாலைக் கையில் பிடித்துக்கொண்டு அந்தமடுவில் வெகு சந்தோஷமாக நர்த்தனம் செய்ய ஆரம்பித்தார். இவ்விதம் செய்யும்பொழுது இந்த சர்ப்பம் விஷத்தைக் கக்கியதுடன் இரத்தத்தையும் கக்கியது. இதற்கு பலம் போய்விட்டது. மிகச் சோர்வடைந்து பலஹீனத்துடன் தள்ளாடிக்கொண்டிருந்தது. கிருஷ்ணன் பின்பு இதை சமுத்திரத்தில் விட்டுவிட்டதாகவும், பிறகு அந்த மடுவை அங்குள்ள ஜனங்களுக்கு வெகு பிரயோசன முள்ளதாகச் செய்துவிட்டாரென்றும் சொல்லப்படுகிறது. பெண்மணிகளே! விஷஜந்துக்களிருக்கும்படியான இடங்களுக்கு தனிமையாகப் போகக்கூடாது, வீட்டிலேயும் மூலைகளில் குப்பை கூளம் முதலியவைக ளிருக்கும்படியான இடத்திலும் போகக்கூடாது. பாம்பாட்டிகளை நம்பி பாம்பு ஆடும் வேடிக்கையைப் பார்க்கவும் உங்கள் குழந்தைகளை விடக்கூடாது.

# பூனையிடத்தில் அன்பு.

## ஓர் சம்பாஷணை.

உருக்குமணி:—லட்சுமி! ஒருபெரிய கொம்பை கையில் வைத்துக்கொண்டு நீ ஏன் கதவின் மறைவில் நின்றுகொண்டிருக்கிறாய்? அகஸ்மாத்தாய் யாரையாவது அடிக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறாயா?

லட்சுமி:—உருக்குமணி! நான் மனிதர்களையாவது குழந்தைகளையாவது அடிக்கப்போகிறேனென்று எண்ணினாயா? என் வீட்டில் பிரவேசிக்கும் பூனையை இரண்டு அடி அடிக்கவேண்டு

மென்றுதான் இவ்விதமிருக்கிறேன். நீயும் இவ்விதமே ஓரமாயிரு. இல்லாவிடின் பூனை நம்முடைய ஜாடையை அறிந்து ஓடிப்போகும்.

உருக்மணி:—லட்சுமி! நீ நல்லவேலை செய்யநினைத்தாய்! இரண்டு தினங்களுக்கு முந்திதானே நாம் ஜீவஹிம்சை செய்யக்கூடாதென்ற பாடத்தைப் படித்தோம். அக்காலத்தில் நமது உபாத்தியாயரும் வாயில்லா ஜந்துக்களுக்கு நாம்செய்யும் ஹிம்சை மிகவும் பாபத்திற்குள்ளாகுமென்று சொல்லவில்லையா?

லட்சுமி:—உருக்மணி! நீ எப்பொழுதும் புஸ்தகத்திலிருக்கிற சங்கதிகளையும் உபாத்தியாயர்சொல்லும் வசனங்களையுமே நல்ல புத்தியென்றும் அவைகளை நாம் கிரகித்துக்கொண்டு நடக்கவேண்டுமென்கிறாய், அது சரியே: ஆனால் நான் நன்றாய் அடிக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிற பூனை எப்பேர்ப்பட்ட சுபாவமுள்ளதென்று உனக்குத் தெரிந்திருந்தால் நீ அதை அடிப்பது கெடுதியென்று நினைக்கவேமாட்டாய்.

உருக்மணி:—லட்சுமி! அந்தப்பூனை எப்பேர்ப்பட்டது? கொஞ்சம் சொல்லு கேட்போம்.

லட்சுமி:—பகலில் நாங்கள் வீட்டிலில்லாததை யறிந்து இந்தக் கெட்ட பூனை சமயல்கட்டில் புகுந்து மூடிவைத்திருக்கிற நெய், தயிர் முதலானவைகளைக் குடித்துவிடுகிறது. இன்றைக்காலையில் நான் கிண்ணத்தில் ஆடைத் தயிர் வைத்திருந்தேன். அதைக் கொட்டி குடித்துவிட்டது. இவ்வித துஷ்ட செய்கைகளைச் செய்கிற பூனையை யடித்தால் பாவமுண்டா? இல்லவேயில்லை.

உருக்மணி:—இவ்வித அற்பமான காரியங்களைச் செய்ததற்காகவா நீ அந்தப் பெரிய தடியினால் அதை அடிக்க பிரயத்னம் பண்ணிக்கொண்டிருக்கிறாய். பேஷ்! உன்னை உன் தாயார் ஒரு சிறிய குற்றத்திக்காக அடித்தால் உனக்கு எப்படியிருக்கும்? நீ அடிக்கும் அடியினால் பூனையின் காலோ, கழுத்தோ, மூக்கோ, கண்ணோ, தலையோ காயம்பட்டு, பூனை மிகவருந்துமல்லவா? இவ்விதம் செய்யக்கூடாது. ஆனால் பயத்தினால் அதை வெறட்டிவிடுவதுதான் நலம். சொற்பகுற்றத்திற்காக இந்த அற்பப்பிராணியை வருத்தத்திற்குள்ளாக்குவது மகா கொடியது. இது பாபமல்லவா?

லட்சுமி:—உருக்குமணி! உன்பேச்சு எப்பொழுதும் சொகுசாகத்தானிருக்கும். நீ பூர்வகாலத்து மனுஷியைப்போல் பேசுகிறாய், பூனையை யடிப்பது பாவமென்றும் நாயைத் துறத்துவது கெடுதியென்றும் நீதிகள் சொல்லுகிறாய், உன் பேச்சுப்பிரகாரம் கேட்டு நடப்பவர்கள் குடித்தனம் செய்ய முடியாது.

உருக்குமணி:—நீ ஏன் சும்மா பரிகாசம் பண்ணுகிறாய்? வாயில்லா பிராணிகளிடத்தில் அன்பாயிருப்பது பரிகாசமா, பைத்தியமா? நாம் எப்பொழுது ஒவ்வொரு பிராணியினிடத்தில் தயை, பச்சாதாப முள்ளவர்களா



யிருக்கவேண்டும். இப்படி நடக்க முயலும்பொழுது மிக கஷ்டமாகவிருக்கும், வரவர நமக்கு அதிக சுலபமாயும், லாபமாயும், சந்தோஷமாயு மிருக்கும்.

லட்சுமி:—உலகத்திலுள்ளவர்க ளெல்லாம் உன்னைப்போல் சாந்தமுள்ளவர்களென்றும் பூனைகளெல்லாம் நீ வளர்க்கிற பூனையைப்போல் நல்ல சுபாவமுள்ளதென்றும் நீ நினைக்கிறாய். நீயோ எப்போதும் உன் பூனையை சமீபத்தில் வைத்துக்கொண்டிருக்கிறாய். அதை நீ கலியாணப் பெண்ணைப்போல் கௌரவமாய் நடத்தியும் வருகிறாய். ஆனால் அது என்ன சகாயம் செய்யுமோ எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று நிச்சயம். நீங்கள் வீட்டிலில்லாத காலத்தில தயிர், பால், நெய், பலகாரம்முதலியவைகளைத் தின்றுவிடும். இதுதான் அது உங்களுக்குச் செய்யும் பிரதி உபகாரம்; அதை எவ்விதம் காப்பாற்றினாலும் அதனுடைய குணத்தை விடுமா?

உருக்குமணி:—உனக்கு சமாதானம் சொல்லுகிறேன் கவனமாகக் கேள்: நீசொல்லுகிறபடி நம் தேசத்திலிருக்கும் பூனைகள் கெட்டசுபாவமுள்ளதேயானாலும் அவைகளுக்குகாரணம் மனுஷராகிய நாமேதான். ஏனெனில் நாம் அவைகளை நம்பாமல் அவைகள் நமக்கெதிரில் தோன்றும்பொழுதெல்லாம் அவைகளைத் துறத்திவிடுகிறோம், அவைகளுக்கு நம்மிடத்தில் கொஞ்சமாகிலும் விசுவாசமில்லை. இவ்விதமிருப்பதால் நாம் வீட்டிலில்லாத காலத்தில் அவைகள் வீட்டிலுள்ள சாமான்களை நாசப்படுத்தி விடுகின்றது. ஆகையால் நாம் அவைகளுக்கும் கொஞ்சமாகிலும் ஆகாராதிகளைக் கொடுத்துவரவேண்டும். என்னுடைய பூனையைப்பற்றி கொஞ்சம் சொல்லுகிறேன்கேள். என்னுடைய பூனையும் சாதாரணப் பூனைகளைப்போல் வீட்டில் கெட்டகாரியங்களைச் செய்து வந்தது. அப்பொழுது நாங்களும் உன்னைப்போல் அதைத் துறத்திக்கொண்டிருந்தோம். ஒருநாள் என்னுடைய தமையன் அவ்விதம் அற்பப்பிராணியை அப்படிச் செய்வது நல்லதல்லவென்று எங்களுக்கு நற்புத்தி புகட்டினார்.

அச்சமயத்தில் அந்தப்பூனை தயிர்பானையில் வாயைவைக்கப்போயிற்று. அவர் உடனே கொஞ்சம் தயிர் எடுத்து அன்னத்துடன்கலந்து அதைக்கூப்பிட்டு அதற்குப் போட்டார். அது பயப்பட்டு எங்களிடத்திற்கு மெள்ளவந்தது.

லட்சுமி:—அப்பொழுது நீங்கள் அதைப்பிடித்து நன்றாய் அடிக்கவில்லையா?

உருக்குமணி:—நானும் என் தம்பிமார்களும், தங்கச்சிகளும் அப்படியே செய்ய எண்ணினோம். ஆனால் எங்கள் தமையன் அதை ஒன்றும் செய்யக்கூடாதென்று உத்திரவளித்தபடியால் நாங்கள் சும்மாயிருந்தோம்.

லட்சுமி:—ஐயோ! உங்களுக்கு புத்தியில்லாததினால் அதை அடிக்காமலிருந்தீர்கள், நானோ ஒருவருடைய உத்திரவுக்கும் அஞ்சாமல் சமீபத்தில்

வந்தபூனையை நன்றாக நாலைந்து அடி அடித்திருப்பேன்; மறுபடியும் கெட்ட காரியங்களைச் செய்யாதபடி அதற்கு புத்திசொல்லியு மிருப்பேன்.

உருக்குமணி:—உன்னைப்போலவே நாங்களும் அதை அடிக்க எத்தனித்து சிரித்துக்கொண்டு தடியை எடுத்தோம். ஆனால் எங்கள் தமையன் அப்படி குரூரமான காரியத்தைச் செய்யக்கூடாதென்று சொன்னமையாலும் அவ்விதம் செய்வதால் பூனைக்கு என்றைக்கும் புத்திவராதென்று எங்களுக்கு வற்புறுத்திச் சொன்னமையாலும் நாங்கள் அவர் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்தோம்.

லட்சுமி:—பின் என்ன நடந்தது சொல்.

உருக்குமணி:—மெதுவாய் அந்தப்பூனை மிகபயத்துடன் வந்து ஓரக்கண்ணால் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு தனக்குப் போடப்பட்ட தயிர் சாப்பாட்டை விலாப்புடைக்க புசித்தது, இவ்விதமே மறுநாளும் என்னுடைய தகப்பனார் அதற்கு சாப்பாடு போட்டார். இப்படி அது கிரமமாய் வழக்கப்பட்டு நாங்கள் சாப்பிடும் வரையில் காத்துக்கொண்டிருக்கும்; நாங்கள் அதன் கழுத்தை மெதுவாகத் தடவி அதற்குச் சாப்பாடு போடுவோம். இவ்விதம் நாளாவர்த்தியில் எங்களுக்கு பூனையினிடத்திலிருந்த வைராக்கியம்போய் அதனிடத்தில் அன்பும் ஆசையுமுண்டாயிற்று.

லட்சுமி:—(சிரித்துக்கொண்டு) பூனை எப்படி நடந்துகொண்டு வந்தது அதனுடைய கெட்டபுத்தி ஏதாவது மாறிற்று?

உருக்குமணி:—நீபரிகாசமாக சிரிக்கவேண்டாம்; சாதாரணமாய் அது எங்களுடன் உட்கார்ந்து தனக்குப் போட்ட சாதத்தைத் தின்றுகொண்டிருக்கும் மற்றசமயங்களில் சமயல் வீட்டிற்குள் போகவே போகாது. ஒருவேளை அது உட்புகுந்தால் தயிர் முதலான வஸ்துக்களைத் தொடாது. இதுவுமல்லாமல் அதனால் எங்களுக்கு ஒரு பெரிய பிரயோஜனமு முண்டாயிற்று.

லட்சுமி:—அதென்ன?

உருக்குமணி:—அது எங்களிடத்தில் பழகாமலிருந்தபொழுது எங்கள் வீட்டில் எப்பொழுதுமிராது. இரவிலோ எலிகள் உபத்திரவம் சொல்லமுடியாது. பூனை எங்களிடத்தில் பழகிவந்ததும் எங்களிடத்திலேயே சதாயிருந்தமையால் இரவில் எலி உபத்திரவம் கிடையவே கிடையாது.

அதுவும் எங்களிடத்தில் மிகப்பிரியமாக விருக்கிறது.

லட்சுமி:—நானும் இனி எங்கள் வீட்டிலுள்ள பூனையை இவ்விதமே பழக்கப்படுத்துகிறேன். இனி அதற்கு எவ்வித ஜீவஹிம்சை செய்யவேமாட்டேன் இரவிலோ எலிகள் சாமான்களை பத்திரமாய் மூடிவைத்திருந்தாலும் நாசப்படுத்தி விடுகின்றது. இதுவும் இனி ஒழியும், நீ சொன்னவைகள் என் புத்தியில் நன்றாகப் பதிந்தது எனக்கும் புத்திவந்தது. ஜீவஹிம்சை மகா



பாவம். அவ்வித பாவத்திற்குள்ளாவது மிக கொடியது. ஆகையால் நானும் இனி சரியாக நடக்கிறேன். உனக்கு அநேகவந்தனம்.

# இந்தியாவில் பெண்கல்வி விருத்தி.

இந்தியா க்ஷேமப்படுவதற்கு இங்கு கல்வி விசேஷமாகப் பரவவேண்டும். இதற்காகவே இந்தியா கவர்ன்மெண்டார் இங்கு கல்வி நிலைமை எவ்வித ஸ்திதியிலிருக்கிறதென்று அறிய 5-வருஷத்துக்கொருமுறை ரிபோர்ட் எழுதி பிரசுரிப்பது வழக்கம். இவ்விதமே கவர்ன்மெண்டார் 1897-முதல் 1902-வரையிலுள்ள 5—வருஷகாலத்துக்கு இந்தியக் கல்வி நிலையைப்பற்றிய ரிபோர்ட்டை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அதிலுள்ள முக்கியமாய் பெண்கல்வி விருத்தியைப்பற்றிய விஷயத்தை யாவரும் கவனிக்கவேண்டிய தவசியம்.

"பம்பாய், சென்னை, பர்மா இம்மூன்று மாகாணங்களும் மற்ற மாகாணங்களைவிட முற்பட்ட நிலையை யுடையனவாகவே யிருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் வாசிக்கும்படியான நிலைமையிலிருந்த பெண்களுள் 56-பெண்களுக்கு ஒருபெண் 1892-ம் வருஷத்தில் பள்ளிக்கூடத்தில் வாசிப்பவளாயிருந்தாளாம். 1902-ம் வருஷத்தில் 46-பெண்களுக்கு ஒருபெண் பள்ளிக்கூடத்தில் வாசித்துக்கொண்டிருந்தாள். பர்மா நீங்கலாக இந்தியாவை கவனிக்கும்போது பம்பாய் மாகாணத்தில் ரிபோர்ட் வருஷங்களில் (1897–1902) முந்திய கணக்குகளின்படி பள்ளிக்கூடங்களில் வாசித்துக்கொண்டிருந்த பெண்களைவிட 10,000 பெண்கள் அதிகமாய் வாசித்துக்கொண்டிருந்தார்கள். பம்பாய்ப் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் பெண்களில் பெரும்பாலார் பார்ஸி ஜாதிப்பெண்கள் என்று சந்தேகமற வெளியாகின்றது. இந்தியாவில் மற்ற எல்லாச் ஜாதிப் பெண்களைவிட பார்ஸிப்பெண்கள் படித்தவர்களா யிருக்கிறார்களென்பதில் தடையில்லை. பார்ஸிப்பெண்களே அதிகமாய் வாசிப்பவர்களாயிருந்தாலும், வாசிக்கும்படியான வயதையுடையராயிருக்கும் ஹிந்துப் பெண்களில் பம்பாய்ப் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் ஹிந்துப்பெண்களின் தொகையும், நூற்று விகிதமும் அதிகமேயாகும். சென்னையில் பெண்கல்வி பரவுவதற்கு பாதிரிமார்களின் முயற்சி முக்கிய காரணமென்று தோன்றுகிறது. சென்ற சில வருஷங்களாக கவர்ன்மெண்டார் பெண்கல்வியை சென்னை மாகாணத்தில் பரவச்செய்வதில் விசேஷ அக்கரை காட்டிவருகிறார்கள்."

போதனாமுறைப் பள்ளிக்கூடங்களில் பெண்பிள்ளைகள் சேர்ந்து படிப்பது சாத்தியமாகும்படி அப்பர்செகண்டரி வகுப்புகளில் படித்து முடிந்தவுடன் ஒரு பரீட்சை நடத்தப்படவேண்டுமென்று கல்விச்சங்கத்தார்சொல்ல, கவர்ன்மெண்டார் வித்தையிலாகாத் தலைவரை அவ்விஷயத்தைக்குறித்து ஒரு ரிபோர்ட்டு அனுப்பும்படி சொல்லியிருக்கிறார்கள். சர்வகலாசங்கத்தாரால் நடத்தப்படும் மெட்ரிகுலேஷன் பரீட்சை நீங்கலாக பெண்பிள்ளைகளுக்கென்று வேறு பரீட்சைகள் ஏற்படுத்தக் கவர்ன்மெண்டாருக்குப் பிரியமில்லை. ஆனாலும் அப்பர்செகண்டரி பரீட்சை விதிகளை இந்தியப் பெண்பிள்ளைகளும் அப்பரீக்ஷைக்குப் போகும்படி மாற்றக்கூடுமோவென்று பார்க்கப்போகிறார்கள். அந்தப் பரீட்சைக்கு பெண்பிள்ளைகள் போகாததற்குக் காரணத்தை வித்தையிலாகாத் தலைவர் அறிந்துசொல்லவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள்.

# குடும்பசம்ரக்ஷணை: ஜலம்.

125-வது பக்கத் தொடர்ச்சி.

இந்த உப்பை எடுப்பதற்கு வேறு ஒரு உபாயமிருக்கிறது. அது பின்வருமாறு:—ஒரு அடுப்பில் ஒருபாத்திரத்தைவைத்து அதில் உப்புஜலத்தை வார்த்து மேல்பாகத்தை ஒரு தகரத்தகடால் நன்றாக மூடவேண்டும். பின்பு அடுப்புக்குக்கீழ் ஒருபாத்திரத்தைவைத்து அதற்கும் மேல்பாகத்தை தகரத்தகடால்மூடவேண்டும். ஒரு வளைந்த தகரக்குழாயிருக்கவேண்டும். இக்குழாயை எடுத்து அடுப்பிலுள்ள பாத்திரத்தின்மேல் மூடியின் துவாரத்தில் ஒரு நுனியையும் மற்றொன்றை அடுப்புக்குக் கீழுள்ள பாத்திரத்தின் மேல் மூடியின் துவாரத்திற்குள்ளும் ஜாக்கிரதையாக உள்காற்றுசெல்லாமல் வைக்கவேண்டும். பின்பு அடுப்பை எரியவைத்து ஜலம் கொதிக்கும்படி நன்றாக காய்ச்சவேண்டும். இவ்விதம் செய்கையில் அடுப்பிலுள்ள பாத்திரத்திலுள்ள ஜலத்தின் கொஞ்சபாகம் ஆவியாகிறது. இந்த ஆவி குழாயின் வழியாகவந்து கீழுள்ளபாத்திரத்தில்வந்துசேரும். அப்பொழுது அந்தபாத்திரத்திலுள்ள ஆவி குளிர்ந்திருக்கும்படி அந்தபாத்திரத்தின்மீது ஈரத்துணியால் ஒத்தடங்கொடுத்து வந்தால் ஆகாயத்தில் எவ்விதம் மேகங்கள் குளிர்ந்து மழை பெய்கிறதென்று சொன்னோமோ அவ்விதமே அடியிலுள்ள பாத்திரத்தில் கொஞ்சம்கொஞ்சமாய் ஜலத்துளிகள் உண்டாக ஆரம்பிக்கும்; இவ்விதம் சற்றுநேரம் செய்துவருவோமானால் அப்பாத்திரமுழுவதும் ஜலம் நிறைந்துவிடும். இதைப்பின்பு பானஞ்செய்து பார்த்தால் நல்லஜலமாகயிருக்கும்.

*உப்புஜலத்தை சுத்தியாக்கும் வகை*



கிணறு, குளம் முதலானவைகளில் கெட்டவஸ்துக்கள் விழாமல் அநேகவிதமாய் கவனித்துவரவேண்டிய தவசியம். சுற்றியிருக்கும் விஷவாயுக்களையும் அழுக்குகளையும் ஜலம் இழுத்துக்கொள்ளுகிறதென்று முன் சொல்லியிருக்கிறோம். ஆனதுபற்றி கிணற்றைச்சுற்றி யிருக்கும் துர்க்கந்தமான வஸ்துக்களையும் அழுக்கு ஜலத்தையும் அடிக்கடி வெளிப்படுத்தவேண்டும். சில வேளைகளில் சுற்றிலுமிருக்கும் அழுக்குப் பதார்த்தங்கள் கிணற்றில் விழுந்து அந்த ஜலத்தை அசுத்தியாக்கிவிடும். இவ்வித அசுத்தியுள்ள ஜலத்தைப் பானம் பண்ணுகிறவர்களுக்கு சுரம் முதலான ரோகங்களுண்டாகும். தண்ணீரிலுள்ள அசுத்தமான வஸ்துக்கள் சரீரத்திற்குள் செல்வதால் அம்மை முதலானவைகளும் உண்டாகிறதென்று வைத்தியசாஸ்திர மறிந்தவர்களுடைய அபிப்பிராயம்.

*நல்லஜல விஷயத்தில் ஜாக்கிரதை*

சிலர் துணிகளை கிணற்றின் படிக்கட்டின்மேலேயே தோய்க்கிறார்கள். இதுவும் நல்லதல்ல. சாதாரணமாய் கிணற்றிலிருந்தாவது குளத்திலிருந்தாவது, குழாயிலிருந்தாவது எடுத்துவருகிற ஜலம் சுத்தமான ஜலமென்று அநேகர் எண்ணுகிறார்கள். இதுவும்சரியன்று. மேற்சொல்லியபிரகாரம் காய்ச்சின ஜலமே நல்லஜலம். ஆகையால் எப்பொழுதும் ஜலத்தைக்காய்ச்சி சாப்பிடுவது நலம். நம்தேசத்தில் அநேகருக்கு தாகமுண்டானகாலத்தில் எந்த விடத்தில் எந்தஜலம் கிடைக்கிறதோ அதைக் குடிக்கிறார்கள். இப்படி செய்வதும் சரியல்ல. ஏனெனில் நாம் குடிக்கும் ஜலம் தேகத்திற்குள்சென்று இரத்த நரம்புகளில் சேர்ந்து சரீரமுழுவதும் பரவும். அப்பொழுது அந்த ஜலத்திலுள்ள அழுக்குகளும் சரீரமுழுவதும் பரவுமல்லவா? ஆகையால் நாம் புசிக்கும்படியான ஆகாரபதார்த்தங்கள் நல்லவைகளா, கெட்டவைகளாவென்று எப்படி முன்னமேயே அறிந்து பின்பு புசிக்கிறோமோ அப்படியே நாம் குடிக்கும் ஜலவிஷயத்திலும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டிய தவசியம்.

இந்த ஜலமென்ற விஷயத்தில் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய விவரம்:—

1. ஜலமானது பிராணாதாரமென்றும்,

2. முக்கியமாய் நல்ல ஜலத்தையே குடிக்கவேண்டுமென்றும்,

3. பிராணவாயுவும் ஜலவாயுவும் சேர்ந்து அநேகவிதமான அழுக்குகள் சேராமலிருக்கும்படியான ஜலமே நல்ல ஜலமென்றும்,

4. பூமியின்மீது விழாதமழை ஜலம் நல்லஜலமென்றும், ஆழமான கிணறுகளிலிருக்கும் ஜலம் நல்லதென்றும்,

5. சாதாரணமாய் நதிஜலம், ஆழமில்லாத கிணறுகளின் ஜலம் நல்லதல்ல; ஆனால் அந்த ஜலத்தை சுத்திசெய்தால் நல்லஜலமாகுமென்றும் அறிந்துகொள்ளுகிறோம்.

முற்றிற்று.

C. S. R.

# மாதர்களுக்கு சுகவழி அவசியம் தெரியவேண்டும்.

மிஸ்ஸஸ் அனிபெசன்ட் அம்மாள் அபிப்பிராயம்.

"இத்தேசத்தில் பத்தினியாகவும் மாதாவாகவும் ஒரு சிறிய கிராமத்துக்குச் சமானமாகிய குடும்பத்தை யாளவேண்டியவளாகியும் ஏற்படக்கூடிய ஸ்திரீக்கு, சுகாதார விதிகளையும் ஆகார பதார்த்த குணங்களையும் தெரிந்துகொள்வதும், வியாதியுண்டானால் சுலபமான ஔஷதங்களைப் பிரயோகிக்கவும், ஆபத்துக்காலத்தில் அதற்கேற்ற சிகிச்சையை செய்துகொள்ளவும் நாகரீகமாய் சமையல் செய்யவும் கிரககிருத்திய விசாரணைசெய்து வரவு செலவு கணக்கு வைக்கவும், தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். அந்தந்த கிரகத்தில் தேகசௌக்கியத்தைக் கவனித்து நடக்க வேண்டிய முறையையும், நல்லகாற்று, வெளிச்சம், சுத்தமாயிருத்தல் முதலியவைகளின் பிரயோஜனத்தையும், அவர்களுக்குக் கற்பிக்கவேண்டியது. இவைகளை எல்லாம் பூர்விகத்தில் இந்துதேசத்து ஸ்திரீகள் நன்றாய் அறிந்து அனுஷ்டித்து வந்தார்கள். பாடசாலையிலேயே சிறியபெண்களுக்கு இவ்விஷயங்களை கற்றுக்கொடுக்கும் பக்ஷத்தில், பின்பு கிரகத்தில் அவர்கள் கிரமப்படி அனுஷ்டிப்பதற்கு உதவியாயிருக்கும். ஆனால் தற்காலத்துப் பெண்குழந்தைகள் இந்தவிஷயங்களில் அவர்களுடைய முன்னோர்களைக்காட்டிலும் கீழான ஸ்திதியிலிருக்கிறார்கள். ஆகாரத்துக்கு சம்பந்தப்பட்ட பதார்த்தங்களின் குணங்களை யறிந்து அவைகள் இவ்விதமாக தேகத்தின் அஸ்தி, நரம்பு, தசை முதலானவைகளுக்கு அனுகூலம் அல்லது பிரதிகூலமா யிருக்குமென்றும், அவைகளில் இன்ன இன்னது உன்மத்த ஆகாரம் அல்லது பலாபிவிர்த்திக்கு ஏற்றதென்றும், தெரிந்துகொள்ள வேண்டியது மஹா அவசியம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வைத்தியனை அபேக்ஷிக்காமல், சாதாரண ஔஷதங்களை தங்கள் சிசுக்களுக்கு அவசியமானபோது வினியோகிக்கவும், சொற்பகாயங்களுக்குப் பரிகாரம் செய்யவும், கொடுங்காயம் நேர்ந்தால் வைத்தியன் வரும்வரையில் உயிர்ச்சேதமன்றியில் பாதுகாக்கவும், அவர்களுக்குத் தெரியவேண்டியதுந் தவிர வியாதியஸ்தர்களை உபசரிக்கவும் வைத்தியன் சொல்லும் முறைகளை சரியாக அனுசரித்து காலக்கிரமமாக ஆகாரம், ஔஷதம் முதலியவைகளைக்கொடுக்கவும் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம். கிரககிருத்தியத்துக்கு அவசியமானபடி பதார்த்தங்களின் அளவு, விலை முதலியவைகளை விரைவாகவும் சரியாகவும் கணக்கு எழுதுவதற்குப் போதுமானமட்டில் கணிதமும், அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். இத்தேசத்து பத்தினி



பாகசாஸ்திரம் முக்கியமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியதா யிருப்பதாலும், அதன்றியில் அவள் புருஷனுக்காவது குழந்தைக்காவது கிரகத்தில் சௌகரியத்தை உண்டாக்கக் கூடாததாலும் அதைப்பாடசாலையில் கற்பிக்க வேண்டியதவசியம். இந்த தேசத்திலுள்ள பரிசாரர்கள், மற்ற தேசத்திலிருப்பதுபோலவே வீட்டின் எஜமானி மேம்பார்க்கவும சீர்திருத்தவும் தகுந்தவளா யிருந்தாற்றான் வேலைகளை நன்றாய் செய்யக் கூடியவர்களா யிருப்பார்கள்."

சு. மி.

# நடுவேனிற் கனவு.

135-வது பக்கத்தொடர்ச்சி.

டேமிடிரியஸ் ஹெலினாவை விட்டுவிட்டு ஓடிப்போக ஹெலினா ஸ்திரீயாகையால் அவனைப் பின்தொடர்ந்து செல்ல சக்தியில்லாமல் மிக்க களைத்துப்போய் மெதுவாக வந்துகொண்டிருந்தாள். வழியில் லைஸாண்டர் தூங்குவதைப் பார்த்து "இதோ! லைஸாண்டர் படுத்துக்கொண்டிருக்கிறானே. தூங்குகிறானோ அல்லது இறந்துபோய்ப் பிணமாய்க் கிடக்கிறானோ பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டு மெதுவாகத் தட்டினாள். அப்புஷ்பத்தின் மாயை எப்படிப்பட்டதோ! அவன் தூக்கத்தினின்று எழுந்து ஹெலினாவைப் பார்த்தவுடன் ஹர்மியாவின் மேலிருந்த அன்பெல்லாம் காற்றுப் பறந்துபோய்விட்டது! விரகதாபம் அதிகரித்து காக்கையைவிட புரா எப்படி மேலானதோ அப்படியே ஹர்மியாவைவிட ஹெலினா மேலானவளென்றும் இன்னும் பலவிதமாகவும் அவளை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தான். லைஸாண்டர் தன் தோழியாகிய ஹர்மியாவின் காதலனென்றும், அவன் அவளையே விவாகஞ்செய்யத் தீர்மானித்திருப்பதையும் அறிந்த ஹெலினா தன்னை லைஸாண்டர் இவ்விதமாக ஸ்தோத்திரம் செய்வதைப் பார்த்துத் தன்னைப் பரிகாசம் செய்கிறானென்று மிக்க கோபங்கொண்டு "இவ்வளவு கஷ்டப்படுவதற்காகவா நான் இவ்வுலகத்தில் பிறந்தது. டெமிடிரியஸ்ஸினிடமிருந்து ஒரு இனிய பார்வையாவது ஒரு நல்ல வார்த்தையாவது நான் அடையவில்லையே! அது போதாதா? இன்னும் நீகூட என்னை இப்படிப் பரிகாசம் செய்யவேண்டுமோ? இதுவரையில் நான் உன்னைப் பெரியமனுஷனென்று நினைத்திருந்தேனே" என்று சொல்லிக்கொண்டு அவ்விடம்விட்டுப் போனாள். உடனே லைஸாண்டரும், பக்கத்தில் படுத்திருக்கும் ஹர்மியாவை மறந்துவிட்டு ஹெலினாவைத் தொடர்ந்து சென்றான்.

விழித்துக் கொண்டவுடன் ஹர்மியாதான் ஒண்டியா யிருப்பதைப் பார்த்து திடுக்கிட்டுப் பயந்து லைஸாண்டரைத் தேடிக்கொண்டு அக்காட்

டின் வழியே சென்றான். இப்படியிருக்க டெமிட்ரியஸ் ஹர்மியாவையாவது தனக்கு போட்டியானாகிய லைஸாண்டரையாவது காணாமல் விணாக நடந்து கால் ஓய்ந்து ஓரிடத்தில் படுத்துத் தூங்குவதை ஓபிரான்கண்டான். பக் என்பவன் இவன் கண்ணிலல்லாமல் பிசகாய் மற்றொருவன் கண்ணில் அந்த இரசத்தைப் பிழிந்துவிட்டானென்ற சங்கதியை ஓபிரான் தெரிந்துகொண்டு இங்கே தூங்குகிற டெமிட்ரியஸ்ஸின் கண்ணில் அச்சாற்றைப் பிழிந்தான். உடனே டெமிட்ரியஸ் விழித்துக்கொண்டு பார்க்கச் சமீபத்திலிருந்த ஹெலினாவை அச்சாற்றின் மகிமையால் அன்புடன்ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தான். இதற்குள் மற்றொரு பக்கத்திலிருந்து லைஸாண்டரும் அவன்பின் ஹர்மியாவும் வந்துகொண் டிருந்தார்கள். பிறகு லைஸாண்டர் டெமிட்ரியஸ் இருவரும் அப்புஷ்பத்தின் மாயையில் இருப்பதால் இருவருஞ் சேர்ந்து ஹெலினாவை மோகித்தார்கள்.

இதைப்பார்த்து ஹெலினா ஆச்சரியப்பட்டு லைஸாண்டர் டெமிட்ரியஸ் ஹர்மியா மூவரும் ஒன்றுசேர்ந்து தன்னைப் பரிகாசம் செய்கிறார்களென்று எண்ணி விசனமுற்றாள்.

ஹர்மியாவும் தன்னை முன்பு லைஸாண்டர், டெமிட்ரியஸ் இருவரும் இச்சித்து இப்பொழுது ஹெலினாவின்மேல் இச்சை கொண்டதைப் பார்த்து ஒன்றுந் தெரியாமல் பிரமித்து நின்றாள். பிராண சிநேகிதர்களாகிய ஹர்மியா, ஹெலினா இருவருக்கும் மனஸ்தாபமுண்டாய் ஒருவரை யொருவர் வைதுகொள்ள ஆரம்பித்தார்கள். ஹெலினா ஹர்மியாவைப் பார்த்து "அன்பற்ற ஹர்மியா, என்னை இப்படி ஸ்தோத்திரம்பண்ணிப் பரிகாசஞ் செய்யும்படி நீ லைஸாண்டரைத் தூண்டுவது நியாயமா? உன்னுடைய மற்றொரு காதலனாகிய டெமிட்ரியஸ் என்னைக் காணும்பொழுதெல்லாம் என்னை உதைத்து வெருட்டினான். அப்படிப்பட்டவன் இப்பொழுது என்னை தெய்வமென்றும், ரம்பையென்றும், மாணிக்கமென்றும் கூப்பிடுகிறானே. நீ சும்மா இருந்திருந்தால் அவன் என்னை இப்படியெல்லாம் பேசுவானா? நாம் ஒன்றுசேர்ந்து படிக்கும்பொழுதிருந்த சிநேகிதத்தை மறந்துவிட்டாயோ? அவர்களோடு சேர்ந்து என்னை யிப்படி யிகழ்ந்து பரிகாசஞ் செய்வது உனக்கு நியாயமா?" என்றாள். அதற்கு ஹர்மியா "என்ன ஹெலினா இப்படிப் பேசுகிறாயே, உன்னைப்பார்த்தால் நீ என்னைப் பரிகாசம் செய்கிறதுபோல் தோற்றுகிறது" என்ன ஹெலினா "ஆம் ஆம் என்முன்னே இப்படிப்பேசுகிறது, என்பின்னேபோய் அழகுகாட்டி இகழ்கிறது போதும் போதும், என்மேல் உனக்குக் கருணையிருந்தால் நீ இப்படிச்செய்வாயா" என்றாள்.

இப்படி இவர்கள் சண்டை போட்டுக்கொள்ள, டெமிட்ரியஸ் லைஸாண்டர் இருவரும் ஹெலினாவை யார் அடைவதென்பதைத் தெரிந்துகொள்ள சண்டைசெய்வதற்காக அக்காட்டின் ஒருபக்கம் சென்றார்கள்.



இவர்கள் போனவுடன் இச்சச்சரவுகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஓபிரான் சமீபத்திலிருந்த பக்கைப்பார்த்து "இச்சங்கடங்கள் உன்னுடைய அசாக்கிரதையாலல்லவா சம்பவித்தன அல்லது நீ வேணுமென்று செய்தாயா" என்ன, பக் "இரவோனுக்கு அதிபதியே நான் வேணுமென்று செய்யவில்லை. ஆயினும் எனக்கு இதுவொரு மிக்க வேடிக்கையா யிருக்கிறது" என்றான், அதைக்கேட்டு ஓபிரான் "போனதுபோகிறது நீ உடனே அவர்கள் சண்டைசெய்யப் போயிருக்குமிடம் போய், அவ்விடம் மிக்க மூடுபனி பெய்யும்படி செய்து அவர்கள் ஒருவரையொருவர் பார்க்கமுடியாமற் செய்யவேணும். அவர்களில் ஒருவன் மற்றவன் தன்னோடுபேசுகிறானென்று எண்ணும்படி நீ நடுவிலிருந்துகொண்டு அவர்களைப்போல் பேசி கடைசியில் அவர்களைக் களைத்து நித்திரைபோகும்படிச் செய்யவேண்டியது. அப்பொழுது லைஸாண்டர் கண்ணில் வேறொன்றாகிய இப்புஷ்பத்தைப் பிழியவேணும். பிழிந்தால் அவன் எழுந்தபிறகு இப்பொழுதிருக்கும் மாயைபோய், பழையபடி ஹர்மியாவின்மேல் இச்சைகொள்வான். பிறகு அவர்களெல்லாம் இதுவரையில் நடந்த சங்கதிகளையெல்லாம் ஒரு வெட்கக்கேடான கனவாக நினைத்து அவ்விரு பெண்களும் தங்கள் காதலர்களோடு சேர்ந்து சுகமாயிருப்பார்கள். நீ உடனேபோய் இக்காரியத்தைச் செய்துமுடிக்க வேண்டும். இதற்குள் நான்போய் என் டிடானியாவுக்கு எப்படிப்பட்ட காதலன் அகப்பட்டிருக்கிறானென்று பார்த்துவருகிறேன்" என்று சொல்லிப்போயினான்.

அங்கே டிடானியா ஓரிடத்தில் நித்திரை செய்வதையும் வழிதப்பி வந்த யாரோவொரு நாட்டுப்புறத்தான் சமீபத்தில் தூங்குவதையும் ஓபிரான் கண்ணுற்று, 'இவனே நம் டிடானியாவுக்குச் சோர புருஷனாகவேணுமென்று'' சொல்லிக்கொண்டு அவ்விடமிருந்த ஒருகழுதையின் தலையைக் கொணர்ந்து இவன் தலையில் கவிழ்த்தான். ஓபிரான் இத்தலையை மெதுவாகக் கவிழ்த்ததும் விழித்துக்கொண்டு இச்சங்கதி தெரியாமல் அங்கே டிடானியா சக்கிரவர்த்தினி தூங்கிக்கொண்டிருக்கும் சாவடிக்குச் சென்றான்.

டிடானியா விழித்துக்கொண்டு இவனைப் பார்த்தவுடனே அப்புஷ்பத்தின் மாயையால் "ஆ, இவனெவன்? இவ்வளவு அழகாயிருக்கிறான்! நீ உன் அழகுக்குத்தக்கபடி புத்திகூர்மை யுடையவனா?" என்றாள். அம்மூடன் அதற்கு "அம்மா நான் இக்காட்டுக்கு வெளியிற்போகச் சமாளித்தால் கூடியவரையில் நான் கெட்டிக்காரன்தான்" என்றான்,

டிடானியா அதற்கு "காட்டுக்கு வெளியேபோக விரும்பாதே. நான் சாதாரணமான தேவதையல்ல நான் உன்மேல் மிகப்பிரியமுள்ளவளா யிருக்கிறேன். நீ என்னோடு வா என்னுடைய குட்டித் தேவதைகளை உனக்கு வேலைசெய்ய அனுப்புகிறேன்" என்று சொல்லிக்கொண்டு பட்டாணிப்பூ, சிலந்திக்கூடு, விளக்குப்பூச்சி, கடுகுவிரையென்னும் நான்கு தேவதைகளைக்

கூப்பிட்டாள். உடனே அவர்கள் வர "நீங்கள் எப்பொழுதும் இவனோடிருந்து இவனுக்கு வேண்டிய பணிவிடை செய்து வாருங்கள்" என்று கட்டளையிட்டாள். அம்முடன் தனக்கு இத்தனைபேர் வேலைக்காரர்கள் ஏற்பட்டார்களென்பதைப்பற்றி மிக்க கர்வங்கொண்டு "பட்டாணிப்பூ எங்கே" என்ற உடனே பட்டாணிப்பூ எதிரேவர "என் தலையைச் சொறி" என்று சொல்லிச் சிலந்திக்கூட்டைக் கூப்பிட்டான். அவன் வந்தவுடன் "சிலந்திக்கூடு நீபோய் அதோதெரிகிற மரத்திலுள்ள தேனீக்களைக்கொன்று அத்தேன் அடையை உடைக்காமல்கொண்டுவா. உடைந்தால் நீ முழுகிப் போய்விடுவாய்" என்று கட்டளையிட்டான். பிறகு கடுகு விரையைக் கூப்பிட்டு "நீ என்ன செய்கிறாய்? பட்டாணிப்பூவோடு சேர்ந்து என் தலையைச் சொறி, பிறகுபோய் ஒரு அம்பட்டனை அழைத்துக்கொண்டுவா. ஏனெனில் என் முகமெல்லாம் மயிர் மண்டிப்போயிருக்கிறது" என்றான். "இனிய காதலனே உனக்குத் தின்பதற்கு ஏதாவது வேண்டுமோ? அணிப்பிள்ளைகள் சேர்த்துவைத்திருக்கும் வஸ்துக்களைக் கொண்டுவரச் சொல்லட்டுமா" என்று டிடானியா கேட்க, "எனக்கு ஒன்றும் வேண்டாம் எனக்கு நல்ல தூக்கம் வருகிறது" என்று அக்கழுதை சொல்ல "ஆனால் நித்திரைசெய்" என்றுசொல்ல அக்கழுதை சுகமாக நித்திரைசெய்தது.

ஓபிரான் என்னும் தெய்வ அரசன், இப்படி அக்கழுதை தூங்குவதைக் கண்டு மிகக்கோபித்து அவளைப் பலவாறாக வைதான். கொஞ்சநேரம் அவளைப் பரிகாசம் செய்தபிறகு அவளிடத்திலுள்ள குழந்தையைத் தனக்குக் கொடுக்கும்படி மறுபடியும் கேட்டான். டிடானியா அப்பையனைக் கொடுக்க ஒரு ஆக்ஷேபணையுஞ் செய்யவில்லை.

ஓபிரான் வெகுநாளாகத் தான் இச்சித்த அப்பையனை அடைந்தவுடன் டிடானியாவின்மேல் தயைகூர்ந்து அவள் கண்களில் மற்றொரு புஷ்பத்தின் ரஸத்தைப் பிழியவே அவள் தன் இயற்கையான நிலைமையை யடைந்து, வெறுக்கத்தக்க அவ்விராட்சஸ உருவத்தைப்பார்த்துத் தான் சற்று முன் இருந்த ஸ்திதியைப்பற்றி மிக்க ஆச்சரியப்பட்டாள்

ஓபிரான் அம்முடன் தலையில் கவிழ்க்கப்பட்ட கழுதைத் தலையையெடுத்துவிட்டு அவனை முன்போல ஓரிடத்தில் தூங்கும்படி செய்துவிட்டான்.

பிறகு ஓபிரானும் டிடானியாவும், ராஜியானவுடன், ஓபிரான் தான் பார்த்த அக்காதலர்களது சங்கதிகளையும், சச்சரவுகளையும் விவரமாய்ச் சொல்ல, டிடானியா தான் போய் அவர்கள் சங்கதி யென்னமாய் முடிகிறதென்பதைப் பார்க்கவேணுமென்று சொல்ல, இருவரும் அவர்களிருக்குமிடம் போய்ச்சேர்ந்தார்கள்.



பக் என்னும் பேய், இப்பொழுது ஜாக்கிரதையோடு அந்நால்வரையும் ஒரேயிடத்தில் வந்து படுத்து உறங்கும்படி செய்து, லைஸாண்டர் கண்ணில் மற்றொரு புஷ்பத்தைப்பிழிந்து முன்னிருந்த மாயையைப்போக்கினான். இப்படியிருக்க முதலில் ஹர்மியா விழித்துக்கொண்டு, சமீபத்தில் லைஸாண்டர் படுத்திருப்பதைப்பார்த்து ஆச்சரியப்பட, லைஸாண்டரும் எழுந்திருந்தான். உடனே ஹர்மியாவினிடம் போய் ராத்திரி நடந்த சங்கதிகளையெல்லாம் பற்றிப் பேசிக்கொண்டு, ஒருவேளை இருவரும் ஒரே மாதிரியான கனவு கண்டார்களோவென்று ஆலோசித்து நின்றார்கள். இச்சமயத்தில் ஹெலினாவும் டெமிடிரியஸ்ஸும் எழுந்திருந்து நடந்த சங்கதிகளைப்பற்றிப் பேசினார்கள். பிறகு ஹெலினாவுக்கும், ஹர்மியாவுக்குமுள்ள மனஸ்தாபம் முற்றிலுந் தேர்ந்து பழையபடி அவர்கள் ஒருவர்க்கொருவர் அத்தியந்த சிநேகிதர்களாகிக் கடைசியில், ஹர்மியாவின் விவாகத்தை ஒருவிதமாக முடிக்க எல்லாரும் ஆலோசித்தார்கள். முடிவில் டெமிடிரியஸ் ஹர்மியாவை அவள் இஷ்டப்படி விட்டுவிடுவதாயும், அவள் தகப்பனாகிய இஜியஸ்ஸைத் தான் போய்ச் சமாதானப்படுத்தி அவள்மேல் ஏற்பட்ட குற்றத்தை நிவர்த்திசெய்வதாயும் ஒப்புக்கொண்டு ஆதென்ஸுக்குப் போகப் புறப்பட்டான். அச்சமயத்தில் இஜியஸ், தன் புத்திரி ஹர்மியா தப்பித்துக்கொண்டு, காட்டுக்கு வந்த சங்கதியைத் தெரிந்து அவளைத் தேடிக்கொண்டு காட்டிற்குள் வருவதை இவர்கள் பார்த்துத் திகைத்து நின்றார்கள். அவன் இவர்களிடம் வந்து டெமிடிரியஸ் ஹர்மியாவை விவாகஞ் செய்துகொள்ளப் போகிறதில்லையென்ற சங்கதியைத் தெரிந்துகொண்டவுடன், அவள் லைஸாண்டரை மணம்புரிவதில் சம்மதித்து அவளைக் கொலைசெய்யக் குறிப்பிட்ட அன்றைக்கு நாலாநாள் அவள் விவாகத்தை நடத்த நிச்சயித்தான். அன்றைத்தினமே ஹெலினாவும் டெமிடிரியஸ்ஸை மணம்புரிய ஒத்துக்கொண்டாள்.

இவற்றையெல்லாம் காற்றுருபமாய் நின்று கேட்டுக்கொண்டிருந்த அத்தேவதைகள் அக்காதலர்கள் க்ஷேமத்தை யடைந்ததற்குக் காரணம் தங்கள் அரசனாகிய ஓபிரானென்பதைப் பற்றி மிக்க சந்தோஷித்து, அக்கலியாணதினத்தில் தாங்களும் தங்கள் பட்டணத்தை அலங்கரித்து, எல்லோரும் குதூஹலத்தோடு காலங்கழிக்க வேண்டுமென்று நிச்சயித்தார்கள்.

E. சுப்பிரமணியம். B. A.,

முற்றிற்று.

# இராமயணசார வினாவிடை.

## முகவுரை.

### இராமாயணகதை ஏற்பட்டகாரணம்.

வைகுண்டலோகத்தில் பகவானாகிய நாராயணனுடைய சந்நிதியில் ஜயன் விஜயன் எனும் பெயருள்ள இரண்டுபேர் வாசல்காத்துகொண்டிருப்பவர்கள் இருந்தார்கள். முன்னொருகாலத்தில் ஸனகாதி முனிவர்கள் வைகுண்டலோகத்திற்குப் போயிருந்தார்கள் அவர்களை உள்ளே போகக்கூடாதென்று தடுத்து, வாசல் காப்பவர்கள் பரிகாசம் செய்தார்கள். இப்படிப் பிராமணர்களை அவமானம் செய்து அசுரபுத்தியுள்ளவர்களான காரணத்தால் நீங்கள் பூமியில் போய் அசுரர்களாகப் பிறக்க வேண்டுமென்று அம்முனிவர்கள் சபித்தார்கள், இதற்குப் பயந்து ஜயவிஜயர்கள் பகவானிடம்சென்று நடந்ததை அறிவித்தார்கள். நீங்கள் பிராமண சாபத்தை அனுபவிக்க வேண்டுமென்று பகவானவர்களிடம் சொல்லிவிட்டு அச்சாபம் நீங்க ஒரு உபாயமும் அருளிச்செய்தார். பூமியில் மூன்று தடவை நீங்கள் அசுரர்களாகப் பிறந்து எனக்கு விரோதிகளாயிருங்கள்; நானும் உங்களுக்கு விரோதியாகவந்து உங்களைக் கொல்லுவேன் நீங்கள் பிறகு துவார பாலகர்களாக வந்துவிடலாம் என்று வாக்களித்ததுதான் அந்த உபாயம். இதன்படியே அவர்கள் கிருதயுகததில் இரணியாக்ஷன் இரணிய கசிபு ஆகவும், திரேதா யுகத்தில் இராவண கும்பகர்ணர்களாகவும், துவாபர யுகத்திலே சிசுபாலன் தந்தவக்திரர்களாகவும் பிறந்துக்ஷத்திரிய அரசர்களானார்கள். அப்பொழுது தேவர்களையும் ரிஷிகளையும் பிராமணர்களையும் பிடித்துவந்தார்கள்.

2. இரணியன் பூவுலகில் செய்துவந்த கஷ்டங்களைப்பார்த்துச் சகியாமல் வைகுண்டபதியான பகவான் வராக அவதாரம் செய்து அவனை வதம் செய்தார். இவன் தம்பி இரணிய கசிபுவும் ஜனங்களைப் பிடித்துவந்தான் தான்தான் பகவான் தன்னையே எல்லோரும் வணங்கவேண்டுமென்று ஜனங்களை இம்சைசெய்துவந்தான். இப்படியிருக்கையில் அவனுக்குப் பிரகலாதன் எனும் ஒருபிள்ளை பிறந்தான், அவன் புண்ணியவான், அவனிடத்தில் விவேகமும், தெய்வ பத்தியு மிருந்தது. தன் புத்திரனான பிரகலாதனுக்கு நாராயணனிடத்தில் பத்தியுளதென்று அவனைச் சிலாகிக்காமல் இரணிய கசிபு அவனிடம் கொஞ்சமும் கருணையில்லாமல் பல தந்திரங்கள் செய்து அவனைக்கொல்ல யத்தனித்தான். பகவானை அவன் சரணமடைந்தமையால் பகவான் கிருபைகொண்டு அவனைக் காப்பாற்றினார். நீசரணமடைந்த தேவனாகிய நாராயணன் எங்கேயிருக்கிறானென்று தகப்பன் கேட்டதற்கு பிரகலாதன் நாராயணன் இல்லாத இடம் ஒன்றும் கிடையாதென்று பதில் சொன்னான். இதைக்கேட்டுக் குலுங்க நகைத்து, நாராயணன் இந்தஸ்தம்பத்தில் இருக்கிறானாவென்று கேட்டான். ஆம் இருக்கிறாரென்று பிரகலாதன்சொன்னான். உடனே அந்தத்தூணைக் காலால் இரணியன் உதைக்க ஆரம்பித்தான். நாராயணன் அந்தத்தூணிலிருந்து நரசிம்மமாக அவதாரம்செய்து வெளியில்வந்து இரணிய கசிபுவை வதம் செய்தான்.

௩. இந்த ராக்ஷஸவம்சத்தில் தோன்றின சுமாலியெனும் அரக்கன் கேகசி என்கிற தன்மகளோடு பாதாளலோகத்திலிருந்து, பூமியில்வந்து சஞ்சாரம் செய்தபோது பிர்மாவின் பேரனான விசிரவசு எனும் மகாரிஷியின் ஆச்சிரமத்துக்குப்போனான். அப்பொழுது அந்த மகாரிஷியின் புத்திரனான குபேரன் தன் பிதாவைப்பார்த்துவிட்டு புட்பகவிமானத்தி லேறிச் சென்று கொண்டிருப்பவனை சுமாலி கண்ணுற்கண்டு பொறாதவனாகி தன்மகள் கேகசியைப்பார்த்து நீ இந்த மகாரிஷியின் ஆச்சிரமத்துக்குள் போய் அவரைக் கண்டு அவர் அனுக்கிரகத்தால் விமானத்தில் செல்லுகிறவனைப்போல ஒரு ஆண் பிள்ளையைப்பெற்றுக்கொள் என்றுசொன்னான். உடனே அதன்படியே மாலைக்காலத்தில் அவள் அந்த மகாரிஷியிடம் உடனேபோய்ப் பிள்ளைவரம் கேட்டுக்கொண்டாள். நீ அசுரசந்திவேளையில் பிள்ளைவரம் கேட்டாய் ஆதலால் உனக்குப் பிறக்கும் பிள்ளைகள் கெட்டபிள்ளைகளாவார்கள் என்று அந்தரிஷி அறிவித்தார். இதைக்கேட்டுச் சகியாதவளாய் குணமுள்ள பிள்ளை பிறக்கவேண்டுமென்று கோரிக்கொண்டாள். கடைசிப் பிள்ளை குணவானாகப் பிறப்பானென்று அநுக்கிரகம் பண்ணினார்.

௪. பிறகு கேகசி வயிற்றில் ஜய விஜயர்கள் இராவண கும்பகர்ணர்களாகப் பிறந்தார்கள். சூர்ப்பநகையென்கிற பெண்ணும், கடைசிப்பிள்ளையாக விபீஷணனும் அவளுக்கே பிறந்தார்கள். இராவண கும்பகர்ணர்கள் கடுந்தவம்செய்து பிர்மாவைத் தியானம் செய்துகொண்டு வந்தார்கள். சதுர்முகனான பிர்மா இராவணன் முன்தோன்றி உனக்குத் தேவர்களாலும் ராக்ஷஸர்களாலும் அசுரர்களாலும் மரணம் உண்டாகாது; இதல்லாமல் பிர்மாஸ்திரம் முதலிய சகல அஸ்திரங்களும் உன்வசப்பட்டு நிற்கும் என்று அவன் கேட்டுக்கொண்டபடி வரம் கொடுத்தார். அவ்வரத்தின் வலுவினால் இராவணன் சகல அரசர்களையும் தேவர்களையும் ஜயித்து திக்குகள்தோறும் விஜயம் பெற்றதுமன்றி குபேரனிடத்திருந்த புஷ்பகவிமானத்தையும் இலங்கையில் கொண்டுவந்து வைத்துக்கொண்டு தேவர்களையும் ரிஷிகளையும் பலவாறு இம்சைபண்ணிவந்தான். இந்த இம்சையைப் பொறுக்கக்கூடாமல் இந்திரன் முதலிய தேவர்கள் பிர்மாவை முன்னிட்டுக்கொண்டு பாற்கடலில் பள்ளிகொண்டருளும் மகாவிஷ்ணுவினிடம்போய் முறையிட்டுக்கொண்டார்கள். நான்மனுஷியனாக அவதாரம் செய்கிறேன்; ராக்ஷஸர்களைக் கொல்லத் தேவர்களாகிய நீங்களெல்லோரும உங்கள் அம்சம் உள்ளவர்களாய் வானர வர்க்கங்களைப் பிறக்கும்படி செய்யுங்களென்று தேவர்களுக்கு தைரியஞ்சொல்லி அவர்களை நாராயணமூர்த்தி அனுப்பிவிட்டார்.

௫. இந்த ஏற்பாட்டின் படியே கமலா காந்தனாகிய நாராயணன் தசரத சக்கிரவர்த்தியின் குமாரனாக அவதாரம் பண்ணினான். இராமன் என்கின்ற சிலாக்கியமாகிய பெயரைப்பெற்றுத் தேவர்களையும் சுக்ரீவன் முதலியவானரவர்க்கங்களையும் சகாயமாய்க் கொண்டு இராவண கும்பகர்ணர்களை யுத்தம் செய்து கொன்று தேவர்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணினான். இந்தத் தசரத ராமன்கதையை வால்மீகிமகாரிஷி திருவாய் மலர்ந்துள்ள ஆதிகாவிய

மாம். இராமாயணத்தில் கூறியிருக்கிறபடி வினாவிடையாக நமது தமிழ்நாட்டிலுள்ள பெண்பிள்ளைகளும் அவர்களின் தங்கை தமக்கைமார்களும் பெண்களும் படித்தறிந்து இராமனிடத்தில் பத்தியுள்ளவர்களாய்க் குடும்ப வாழ்க்கையிலிருந்துகொண்டு தங்கள் நாள்களை நல்லநாள்களாக்கிக் கொண்டு சுகித்து வாழவேண்டித் தமிழில் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றது.

# பாலகாண்டம்.

௧. வினா:—இராமாயணமென்னும் சொல்லுக்கு அர்த்தமென்ன? அதைச் செய்தவர் யார்?

விடை:—இராமாயணமென்றால் இராமன் சரித்திரத்திற்குப் பெயர் அதை பிர்மாவின் கட்டளைப்படி வால்மீகி மகாரிஷி செய்தார்.

௨. வினா:—இராமன் யாருக்கு மகன்.

விடை:—இராமன் தசரத சக்கிரவர்த்தியின் மகன். அவர் கோசல தேசத்திலுள்ள அயோத்தியாபட்டணத்து அரசர்.

௩. வினா:—இந்தத் தசரதருக்குப் பெண்டாட்டிகள் எத்தனைபேர், அவர்களுக்கு யார் யார் பிறந்தார்கள்.

விடை:—கோசலை கைகேயி - சுமித்திரை இம்மூவரும் பத்நிகள். கோசலைக்கு இராமனும் கைகேயிக்குப் பரதனும் சுமித்திரைக்கு லக்ஷ்மணன் சத்துருக்கனன் இவ்விருவரும் பிள்ளைகளாகப் பிறந்தார்கள்.

௪. வினா:—தசரதர் பத்நிமார்களுக்கு கர்ப்பமுண்டாவதற்காக விசேஷமான காரியம் ஏதாவது நடத்தப்பட்டதா.

விடை:—தன் குலகுருவான வஸிஷ்டரின் கட்டளைப்படி தசரதர் ஸரயூநதிதீரத்தில் அசுவமேதயாகத்தையும் புத்திரகாம இஷ்டியையும் செய்தார். அப்பொழுது யாககுண்டலத்திலிருந்து சுவர்ணபாத்திரத்தில் பாயஸத்தை யெடுத்துக்கொண்டுவந்து அக்நிபகவான் தசரதரிடத்தில் கொடுத்தார். தேவிகள் மூவரும் அந்த பாயசத்தைப் புசித்துப் பிறகு கர்ப்பவதியானார்கள்.

௫. வினா:—தசரதர் ஜாதியென்ன.

விடை:—அவர் க்ஷத்திரியர் சூரியவம்சத்தில் சேர்ந்த வசுவதமனுவின் குமாரன்; இக்ஷுவாகுவின் வம்சத்தில் பிறந்தவர்.

௬. வினா:—க்ஷத்திரியஜாதியிற் பிறந்தவர்களுக்கு விசேஷமான குணமுண்டா.

விடை:—யுத்தத்தில் அதிக பராக்கிரமந்தான் அவர்களுக்கு விசேஷ குணம்.

௭. வினா:—விசுவாமித்திரர் என்பவர் யார்.



விடை:—அவர் ஒரு மகாரிஷி.

௮. வினா:—இராம லக்ஷ்மணர்களை விசுவாமித்திரர் எங்கேயாவது அழைத்துக்கொண்டு போனாரா.

விடை:—விசுவாமித்திரர் தசரதரிடம் போய் தாடகியென்னும் ராக்ஷியும் சுபாகுமாரீசன் என்கிற 2 ராக்ஷஸர்களும் இருஷிகளின் யாகங்கள் நிறைவேறாதபடி தடுத்துவருகிறார்கள் என்று முறையிட்டுவிட்டு அந்த யாகங்கள் யாதொரு தடையுமின்றி நிறைவேறும் பொருட்டுத் தன்னுடன் அனுப்புவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். உடனே தசரதருக்கு அதிக விசனம் உண்டாச்சுது. அப்படியிருந்தும் இராமலக்ஷ்மணர்களை விசுவாமித்திருடன் அனுப்புவித்தார்.

௯. வினா:—தாடகாதிகளை இராமன் என்ன செய்தார்.

விடை:—இராமனுக்குப் பாலியவயதாயிருந்தும் க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவனானதினால் அதிக பராக்கிரமத்தால் தாடகையை வதம்செய்தார். அவள் மூத்தமகன் சுபாகுவும் ஒரு பாணத்தால் கொல்லப்பட்டான். இளைய மகன் மாரீசனும் ஒரு பாணத்தால் கடலில் தூக்கி எறியப்பட்டான். இப்படியாக விசுவாமித்திரர் முதலிய ரிஷிகளின் யாகங்கள் தடையொன்றுமில்லாமல் முடிவு பெற்றன.

௧௦. வினா:—இப்படி யாகங்கள் நிறைவேறியபின் இராமலக்ஷ்மணர்களை விசுவாமித்திரர் எங்கே அழைத்துப்போனார்.

விடை:—மிதிலாபுரியிலிருக்கும் ஜனகராஜன் அரண்மனைக்கு இராமலக்ஷ்மணர்களை விசுவாமித்திரர் அழைத்துப்போனார்.

௧௧. வினா:—இப்படி மிதிலாபுரிக்குப் போகுமுன் வழியில் ஏதாவது செய்த விசேஷகாரியம் உண்டா.

விடை:—இராமன் கவுதமரிஷியின் ஆச்சிரமத்திற்குப் போய் அவர் சாபத்தால் அங்கே கல்லாய்க்கிடந்த அவருடைய பாரியை அகலியையைத் தன்பாததூளியினாலே முன்போல் பெண் ரூபத்துடன் எழுப்புவித்தார்.

௧௨. வினா:—இராமன் மிதிலைநகரியில் என்ன செய்தான்.

விடை:—ஜனகமகாராஜன் குமாரியான சீதாதேவிக்கு விவாகம் நடத்த ஜனகர் தன் அரண்மனையிலுள்ள சிவதனுஸை யார் எடுத்து நிறுத்தி நாணேற்றுகிறானோ அவனுக்குத்தான் அவளை கொடுக்க சம்மதித்திருப்பதாக இராமன் கேழ்விப்பட்டு உடனே அந்த வில்லையெடுத்து நாணேற்றிச் சீதையை விவாகம் செய்துகொண்டார்.

௧௩. வினா:—அப்பொழுது லக்ஷ்மணருக்கும் விவாகம் நிறைவேறியதா.

விடை:—ஜநகராஜாவின் ஒளரஸ புத்திரியாகிய ஊர்மிளையை லக்ஷ்மணர் விவாகம் செய்துகொண்டார்.

௧௪. வினா:—பரத சத்துருக்கினர்கள் யார் யாரை விவாகம் செய்துகொண்டார்கள.

விடை:—ஜனகமகாராஜாவுக்கு குசத்துவசா என்கின்ற சகோதரரிருந்தார் அவருக்கு மாண்டவி, சுருதகீர்த்தியெனப் பெயர்கொண்ட இரண்டு புத்திரிமாரிருந்தார்கள். பரதன் மாண்டவியையும் சத்துருக்கினன் சுருதகீர்த்தியையும் விவாகம் செய்துகொண்டார்கள்.

௧௫. வி:—இவ்வாறு விவாக மகோற்சவங்கள் நிறைவேறிய பின்பு இராமலக்ஷ்மண பரதசத்துருக்கன்மார் எங்கே போனார்கள்.

விடை:—தங்களுடைய அயோத்தியா நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

௧௬. வி:—அப்படி அயோத்திக்குச் செல்லுகையில் என்ன சம்பவித்தது.

விடை.—இராமன் சிவன் வில்லை வளைத்து நாணேற்றினன் என்பதினாலே பரசுராமன் அதிக கோபங்கொண்டு இராமனைக்கண்ட உடனே அகங்காரத்தோடு இந்த என் தனுசை எடுத்து நாணேற்று என்று சொன்னார். அதிபலசாலியான இராமன் உடனே அதை வெகு சுலபமாய் எடுத்து நாணேற்றிட்டு ஒரு பாணம் விடவே பரசுராமன் செய்த புண்ணியமும் சத்தியும் அதற்கு இரையாயிற்று.

௧௭. வி:—இவர்கள் சகோதரர்கள் நான்கு பேர்களும் அயோத்தியா நகரம் சேர்ந்தபின் அங்கேயே இருந்தார்களா.

விடை:—எல்லோரும் அவிடம்போய்ச் சேர்ந்த பின் பரதன்மட்டும் கேகயதேசம் போய்ச்சேர்ந்தான்.

வெங்கடராம ஐயங்கார்.

# பதார்த்தகுண சிந்தாமணி.

## முகவுரை.

இப்பூமியில் கடவுளால் பற்பல விருக்ஷங்கள், செடிகள், கொடிகள், புல் பூண்டு முதலிய தாவரவஸ்துக்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் ஒவ்வொரு வர்க்கத்தினின்றும் பிரிவற்ற பேதங்கள் அளவிறந்தவைகளா யிருக்கின்றன. சிலது வேர் முதல் வித்தீராகவெண்வகைப் பதார்த்தங்களா யிருக்கின்றன. இவற்றுள் ஒவ்வொன்றும பற்பல ரோகங்களைக்கொடுக்கும் ஆகலால் அப்பதார்த்தங்களின் குணங்களை செவ்வனே அறிந்துக்கொண்டுதான் உபயோகிக்கவேண்டும். தாபரவஸ்துக்களாகிய விருக்ஷங்கள் செடிகள், கொடிகள் புல் முதலியவைகளில் எட்டுவகை பதார்த்தங்களிருக்கின்றன. அதாவது வேர், பட்டை, கட்டை, ரசம், இலை, புட்பம், பழம், வித்து, முதலியவைகளாம். இவைகள் ஒவ்வொன்றும, கைப்பு, உவர்ப்பு, தித்திப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய ஆறுவகை ருசிகளையும் பெறறிருக்கும்.



சிலவற்றைப் புசித்தால் வாதமுண்டு பண்ணுமென்றும் சிலவைகள் சிலேஷ்மம் அல்லது கபத்தை உண்டாக்குமென்றும் வைத்திய சாஸ்திரமறிந்தோர் சொல்லுகிறார்கள். இவைகளைப் புசிப்பவர்கள் இவைகளின் குணங்களை அறிந்திருந்தால் மிக நலமல்லவா ? இவைகளின் குணங்களை கூடியமட்டும் நன்றாக அறிந்து பாகசாஸ்திர கிரமப்படி பாகஞ்செய்து புசித்தால் நல்லதல்லவா ? இவ்விதம் செய்துவந்தால் தேகாரோக்கியத்திற்கும், வியாதியின்றி கூடியவரையிலும் நோயில்லாமலிருப்பதற்கும் உதவுமன்றோ? மேலும் பதார்த்தங்களின் குணங்கள் நன்றாய்த் தெரிந்திருந்தால் பாகசாஸ்திரப்பிரகாரம் நாவுக்கு ருசியுள்ள பதார்த்தங்களைச் செய்து புசிக்கலாம். அவ்விதம் செய்வதினால் தேகசௌக்கியத்திற்கும் நன்மை; மிதமாகவும் புசிக்கத்தோன்றும். மேலும் எந்தெந்த சமயத்தில் எந்த பதார்த்தங்களைச் சேர்த்தால் தேகத்திற்கு சௌக்கியமோ அப்பதார்த்தங்களையே நாம் பக்குவமாகச்சேர்த்துவருவோம். ஆனது பற்றி நமது மாதர்களுக்கும் பெண்களுக்கும் பதார்த்தத்தின் குணங்கள் தெரிந்திருந்தால் மிகவும் நலமாகவிருக்குமென்று பல மாதர்களும், சில கனவான்களும் மாதர்மனோரஞ்சனி பத்திராதிபருக்கு கடிதமூலமாகவும் நேராகவும் சொன்னமையாலும் அப்பத்திராதிபர் என்னை இப்பெரிய விஷயத்தை அடிக்கடி இப்பத்திரிகையில் எழுதிவரும்படி கேட்டுக் கொண்டமையாலும் இந்த முகவுரை எழுதலானேன். அடுத்த தடவை முதல் ஒவ்வொரு பதார்த்தத்தின் குணங்களை வைத்திய சாஸ்திர முறைப்படியும், பாகசாஸ்திரத்தை அநுசரித்தும் உங்களுக்கு முக்கியமாய் வேண்டிய காய், பழம், கீரை, அரிசி, கிழங்கு, முதலியவைகளைப்பற்றி என் சிற்றறிவுக்குத்தோன்றிய மட்டும் எளிய தமிழ் நடையில் யாவரும் அறிந்துக்கொள்ளும்படியாய் எழுதியனுப்புகிறேன். எனது பிரியமுள்ள சகோதரிகளே! அடுத்ததடவை முதல் இப்பத்திரிகையில் வருமொவ்வொரு வஸ்துவின் குணங்களை நீங்கள் தெரிந்துக்கொண்ட பின் உங்கள் தோழிகளுக்கும் இனனும் மற்ற பந்துக்களுக்கும் இதன் விசேஷத்தைச் சொல்லுவீர்களென நம்புகிறேன்.

ஓர் நண்பன்.

# சமாசரக் குறிப்பு.

சென்ட்லூவி பொருட்காட்சியில் ஒரு கடியாரம் வைக்கப்படுமாம். அதிலுள்ள நிமிஷம் காட்டும்முள் 60-அடி நீளமிருக்குமாம்.

***

கற்களால் கட்டப்பட்ட வீடுகளைக்காட்டிலும் செங்கல்களால் கட்டப்பட்ட வீடுகள் வெகுநாள் உறுதியாகவிருக்குமாம்.

***

சாதாரணமாய் ஒரு மனிதனுக்கு 5-நிமிஷம்வரையில் நல்ல காற்றில்லாவிடின் இறந்துவிடுவான்; ஜலமில்லாவிடின் ஒருவாரத்தில் இறந்துவிடுவான்; நித்திரையில்லாவிடின் 10-தினத்தில் இறந்துவிடுவான்.

***

மான்சிஸ்டர் என்ற விடத்தில் புருக்கலை விற்கையில் ஒன்று 60-பவு னுக்கும், ஒவ்வொன்று 50-பவுன் விதம் வேறு இரண்டும் விலைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டதாம். இவ்விதம் விற்றதில் சுமார் 886-ப. 12-ஷி. 6-பெ. வந்ததாம். (அதாவது) ரூ. 13291. 2-அணா.

***

காமட்ஸ்கட்கா என்ற தீபகற்பத்தில் ஒருநரியின்தோல் 200-பவுனுக்கு விற்கப்படுகிறதாம்.

***

60,000,000 மகமதியப்பெண்களில் 4000, பெண்கள் பாடசாலைக்கு ச்சென்று வருகிறார்களாம். (அதாவது 15000-க்கு ஒருவர்).

***

சென்ற நூற்றாண்டில் 30,000,000 மனிதர்கள் யுத்தத்தில் மடிந்தார் களாம்.

***

ஒருவன் சுவிட்ஸர்லேண்டில் ஒரு கடியாரம் செய்திருக்கிறானாம். இத ற்கு ஒருதடவை சாவிகொடுத்தால் 15-வருஷகாலம் சரியாகச் செல்லுமாம்.

***

ஜர்மனியிலுள்ள 9-வயதுள்ள ஒரு பெண்ணுக்கு 15000,000 பவுன் ஆஸ்தியிருக்கிறதாம். மேலும் அநேக வியாபார யந்திரங்களும், ஷாப்புகளு மிருக்கின்றனவாம்.

***

ஜப்பான் சக்கிரவர்த்தியாகிய மிகாடோ சிறந்த தேர்ச்சியடைந்த கவி வாணராம். ஒவ்வொருநாள் மாலையிலும் இவர், வாஸ்கா வென்றழைக்கப் படுகிற இரண்டடிச் செய்யுட்களாகச் சுமார் 30-செய்யுட்கள் கவனஞ்செய் வாராம். 1892-ம் வருஷமுதல் சென்ற நவம்பர் மாதம் வரையில் 37,000 செய்யுட்கள் கவனம் செய்திருக்கிறாராம். சக்கரவர்த்தினியும் இப்படியே கவனசக்தியுடையவராயினும் சக்கிரவர்த்தியைப்போல் அத்தனை தேர்ச்சி பெற்றவரல்லவாம். ஆயினும் ஒருவாரத்தில் இரண்டு செய்யுட்களை கவனம் செய்கிறாளாம். மிகாடோபூ சக்கிரவர்த்தியாயிருப்பதோடு கவிசக்கிரவர்த்தி யாகவும் விளங்குகிறார் எனலாம்.

***

அமெரிக்காவிலுள்ள சில்லிவென்றவிடத்திலும் ஜப்பானிலும் வேறில் லாத ஒரு செடியிருக்கிறதாம். இதன் புஷ்பத்திற்கு ஆகாய புஷ்பமென்று பெயர். ஏனெனில் இது மண்ணில் வளருகிறதில்லையாம். ஆனால் இது ஒரு மரத்தையாவது அல்லது கல்பாறையையாவது சுற்றிக்கொண்டிருக்குமாம். இதில் 2 அல்லது மூன்று அழகான வெண்மை நிறமுள்ள புஷ்பங்களுண் டாகுமாம். இவைகளுக்கு நல்ல வாசனையு முண்டாம். இது சுமார் 600-அல் லது 700-மைல் தூரம் மரங்களில் சுற்றிக்கொண்டே செல்லுமாம்.

Printed at the Ripon Press Madras & Puplished by the Proprietor,
C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

| Vol. VI. | Madras: August 1904. | No. 8. |
|---|---|---|
| புத்தகம் ௬. | சென்னப்பட்டணம்: ஆகஸ்டுமீ 1904. | இல. 8. |


## FEMALE EDUCATION IN BARODA.

## பரோடாவில் பெண்கல்வி.

பம்பாய் இராஜதானியில் குஜராத் என்ற தேசமிருக்கிறது. இதற்கு சௌராஷ்டிரபூமி என்னும் பெயர். இதில் கேய்க்வார் மகாராஜாவுக்குச் சொந்தமானது பரோடா: இது 8099 சதுரமயிலுள்ளது. இதில் சுமார் 3083 கிராமங்களும் பட்டணங்களுமுள. இவைகளின் மொத்த ஜனத்தொகை 19,52,692. இத்தேசத்து மகாராஜா அவர்களுக்கு ஆங்கி லம் நன்றாகத் தெரியும். பெண்கல்வியில் இவருக்கு மிக்க அபிமானமுண்டு. ஆகையால் தமது தேசத்தில் பெண்கள் கற்று விருத்திக்கு வரவேண்டு மென்று அநேகபாடசாலைகளை ஏற்படுத்தி அவைகளுக்குத் தகுந்த உபாத்தி மார்களையும் நியமித்து அப்பாடசாலைகளைச் சரிவர நடத்திவருகிறார்கள். அத் தேசத்திய கல்வி இலாகா அதிகாரியின் ரிபோர்டின்பிரகாரம் பின்வரும் விஷயத்தைப் பிரசுரிக்கலாயினோம்:—

இந்த இராஜியத்தில் 97 பெண்கள் பாடசாலைகளிருக்கின்றன. இவை களில் 8,380 பாலிகைகள் சென்ற வருடத்தில் படித்துக்கொண்டிருந்தார் கள். இவர்களில் 5,542 பேர் பரிக்ஷைக்கு அனுப்பப்பட்டார்கள். 3,325 பாலிகைகள் பரிக்ஷையிற் றேறியிருக்கின்றார்கள். தாதாபார்சி பெண்பாட சாலையிலிருந்து 7 பேர் லோயர் சகண்டரி பரிக்ஷைக்குச் சென்று எல்லோ ரும் பரிக்ஷையிற் றேறினார்கள். 6-வது ஸ்டாண்டர்டு பரிக்ஷையில் 15 பேரு க்கு 9 பேர் தேறினார்கள்.

பாடசாலைக்குப் போகமுடியாத வயதுசென்ற ஸ்திரீகளுக்கு வீட்டி லேயே வாசகம், எழுதல் வீட்டுகணக்கு, சித்திரவேலை, தையல் முதலிய வைகள் போதிக்கப்பட்டு வருகின்றன. இவ்விதம் போதிக்கப்படும் வகுப்பு கள் 6 உள. பெண்கள் வீட்டு வேலைகளைச் செய்தபின்பு சுயர்ச்சியாயும் சாவ காசமாயுமிருக்கும் மத்தியானகாலத்தில் தினம் 3 மணிநேரம் இவர்களுக்கு

கல்வி போதிக்கப்பட்டு வருகின்றது. இவர்களில் மொத்தம் 124 மாதர்கள் கல்விகற்றுவருகிறார்கள். இவர்களில் 107 மாதர்கள் பரிக்ஷைக்குச் சென்றதில் 85 பேர்தான் பரீக்ஷையிற் றேறினார்கள். இவர்கள் ஒரு ஆங்கில ஸ்திரீயால் பரிக்ஷிக்கப்பட்டார்கள்.

பெண்கள் பாடசாலையில்லாத விடங்களில் பாலர்கள் படிக்கும் பாடசாலைகளில் பெண்களும் 10, 12 வயது வரையில் படித்துவருகிறார்கள். இவர்களின் மொத்தம் 4773. முன் 97 பாடசாலைகளில் படிக்கும் 8,380 பெண்களும் பாலர் பாடசாலைகளில் சேர்ந்து படிக்கும் 4773 பெண்களும் வீட்டில் படிக்கும் மாதர்களும் சேர்ந்து 13,381 பெண்கள் பரோடா ராஜியத்தில் கல்விகற்றுவருவதாகத் தெரிகிறது.

சில முக்கியமான பெண்பாடசாலைகளில் சித்திரவேலை, சித்திரத்தையல்வேலை, சங்கீதம், பாகசாஸ்திரம் (சமையல் செய்யும்வகை) முதலியவைகள் போதிக்கப்பட்டுவருகின்றன.

சமையல்வேலை கற்றுக்கொள்வதில் அநேக பெண்கள் மிக ஆவலுடனிருக்கின்றார்களென்றும் இது ஜனங்களுக்கும் மிகப் பிரியமாக விருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

மகம்மதியர்களுக்காகவும் பிரத்தியேகமாய் 5 பாடசாலைகளுள; இவைகளிலிருந்து 63 பெண்கள் பரிக்ஷைக்குச் சென்றதில் 49 பெண்கள் பரீக்ஷையிற் றேறினார்கள்.

பெண்கள் பாடசாலைகளில் உபாத்திமார்களாக விருக்க ஸ்திரீகளை பழக்க ஒரு காலேஜ் 1882-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டு இதுவரையிலும் நன்றாக மகாராஜா அவர்களால் போஷிக்கப்பட்டு வருகிறது. 5-வது ஸ்டாண்டர்டில் தேறிய மாதர்கள் இதில் சேர்ந்து உபாத்திமார் தொழிலுக்கு வேண்டியவைகளைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். இதில் இவர்கள் 4 வருஷம் படிக்கவேண்டும். இவர்கள் அங்கு நடக்கும் உபாத்திமார் பரிக்ஷையிற் றேறியபின்பு வேலையில் நியமிக்கப்படுவார்கள்.

இதில் 1900-1901-ம்வருஷத்தில்25-ஸ்திரீகளிருந்தார்கள்.1902–1903ல் 15 பேர் அதிகமாக சேர்ந்தார்கள். ஆக 40 பேரில் 13 பேர் பரீக்ஷையிற் றேறி உபாத்திமார்களாக நியமிக்கப்பட்டார்கள். மீதியுள்ள 27 பேர் பாடசாலையிலேயே படித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் 17 பிராமண ஸ்திரீகளும் 4 க்ஷத்திரிய ஸ்திரீகளும், 1 பனியஸ்திரியும், 1 பயிதார்ஸ்திரீயும் 4 கன்னான் தச்சன் சாதியைச் சேர்ந்தவர்களாம். இவர்களில் 4 பேர் அங்குள்ள உபாத்தியாயர்களின் மனைவிகளாம். இந்த காலேஜியிலுள்ள மாதர்கள் ஒவ்வொருவருஷக் கடைசியில் தக்க கவர்ன்மெண்டு கல்வியிலாகா உத்தியோகஸ்தர்களால் பரிக்ஷிக்கப்பட்டு வருகிறார்கள். 1902-1903-ம் வருஷத்தில் 2 ஸ்திரீகள் பரிக்ஷையிற் றேறியிருக்கிறார்கள். இவர்களில் பிக்



ஜீதேவ்ஜீ என்ற மாது பெட்லாட் ஜனனா பாடசாலைக்குத் தலைமையாக ரூபா 25 க்கும் திராஜ்நண்டால் என்ற மாது பரோடாஜனனா பாடசாலைக்குத் தலைமையாக 12 ரூபா சம்பளத்திலும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 1903-ம் வருஷக் கடைசியில் 52 உபாத்திமார்களிருந்தார்கள். இவர்களில் 44 பேர் போதனாமுறை பாடசாலைகளில் படித்தவர்கள். குஜராட்டி தேசபாஷாசபையார் சென்ற வருஷம் ஒருபரிக்ஷை நடத்தியபொழுது இந்த காலேஜியிலிருந்து 3 உபாத்திமார்கள் பரீக்ஷைக்குச் சென்று பரிக்ஷையிற்றேறி முதல் மாது ரூபா 30 ம், இரண்டாவது 20 ரூபாயும் மூன்றாவது ரூபா 15 ம் பெற்றார்கள். இது அந்த இராஜ்யத்திற்கு பெருமையல்லவா? பெண்கள் படிப்பதே கஷ்டம். அவ்விதம் படித்தாலும் பரிக்ஷைக்குப் போவது மகா துர்லபம். இவ்விதம் எவராவது நம் தேசத்திலும் செய்தால் மிக நலமாகவிருக்குமல்லவா?

காலேஜியிலுள்ள லேடி சூபிரண்டெண்டன்டாகிய மிஸ்மேரிபோர் (Mis Mary Bhore) என்ற மாது 1901 ௵ செப்டம்பர் ௴ 25-ந்தேதி நியமிக்கப்பட்டார்கள். இம்மாது மிக ஊக்கத்துடனும் மிக பிரியத்துடனும் அங்குள்ள ஸ்திரீகளின் கல்வி விருத்தி, போதனாமுறை, நல்லொழுக்கம், கிரமமாக பாடசாலைக்கு வருதல் முதலியவைகளைக் கவனித்து அந்த காலேஜியை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவந்தார்கள். இம்மாது ப்ரஷ், கூடை முதலியவைகளைச் செய்ய அங்குள்ள ஸ்திரீகளுக்குப் போதிக்க தக்க ஏற்பாடு செய்தார்கள். அந்த இராஜியத்து மகாராஜா அவர்களுக்கு ஸ்திரீகளுக்கு ஆங்கிலம் போதிக்கவேண்டுமென்ற அவா மிக யிருந்தமையால் மிஸ்போர் என்ற மாதும் அவர்களுக்குச் செவ்வனே ஆங்கிலம் போதித்தும் வந்தார்கள். முதலில் 45 ஸ்திரீகள் தான் படித்தார்களாம். பின்னிட்டு வருஷக் கடைசியில் 72 பேர் ஆங்கிலம் படிக்க ஆரம்பித்தார்களாம்.

1902 ௵ ஜனவரி ௴ 18உ யன்று மிஸ்போர் மாது காலேஜியிலுள்ள மாதர்களையும், அங்குள்ள பாடசாலைகளில் மேல்வகுப்பிலுள்ள எல்லாப் பெண்களையும், வீட்டில் படித்துக்கொண்டு வரும் மாதர்களையும், பாடசாலை உபாத்திமார்களையும் இன்னும் அங்குள்ள அநேக மாதர்களையும் வரவழைத்து ஒரு சபைக்கூட்டிவைத்து அவர்களுக்கு மேஜிக்லேன்டேர்ன் மூலமாக சரித்திரசம்பந்தமான சில விஷயங்களைச் சொன்னார்கள். அக்காலத்தில் சுமார் 400 மாதர்களும் பெண்களும் வந்திருந்தார்கள். இவர்கள் மிஸ்போர் மாது சொன்ன விஷயங்களை மிகக் கவனமாய்க்கேட்டு சந்தோஷப்பட்டார்களாம்.

இந்த காலேஜியிலுள்ள ஒவ்வொரு ஸ்திரீயின் வருஷசெலவு 248 ரூபா அணா 12 பை 5 ஆக 1901-1902-ம்வருஷம் 6717 ரூபா கவர்ன்மெண்டாரால் செலவழிக்கப்பட்டதாக அவ்வருஷ ரிபோர்ட்டால் தெரிகிறது. இவ்விராஜியத்தில்மேலும் பெண்கள் விஷயத்தில் 1901-1902-ம் வருஷம் மொத்

தம் ரூபா 64,576 அணா-9 பை-11 செலவழிக்கப்பட்டதாம். இங்குள்ள
ஒவ்வொரு கிராமத்திலுள்ளவர்களுடைய பிள்ளைகளும் பெண்களும் பாட
சாலையில் படிக்கவேண்டும்.

பிள்ளைகள் 7-வது வயதுமுதல் 12-வது வயதுவரையிலும், பெண்கள்
7 முதல் 10 வயது வரையிலும் படித்துவரவேண்டுமாம். இவ்விதம் செய்யா
விடின் அபராதம் பெற்றோர்களுக்கு விதிக்கப்படும். 3468 பிள்ளைகளும்
2217 பெண்களும் இந்தக் கட்டாய சட்டப்படிப்பு பிரகாரம் படித்துவரு
கிறார்களாம். இவ்விதம் செய்து வருவதினால் தான் அந்த இராஜியத்தில்
பெண்கல்வி மிகப் பரவிக்கொண்டு வருகிறது. அங்கு 5 பிள்ளைக்கு 1 பெண்
படிக்கிறாள். பம்பாய், மைசூர் ஜெய்பூர் இராஜியங்களைவிட இந்த இராஜியம்
பெண்கல்வி விஷயத்தில் மேலானதென்றும் தெரிகிறது. பரோடாவில் 100-
க்கு 9 பேரும், பம்பாயில் 100 க்கு 4 பேரும், ஜெய்பூரில் 100 க்கு 3 ம்,
மைசூரில் 100 க்கு 4 மாகவிருக்கிறது. 97 பெண்கள் பாடசாலைகளும்
1109 ஆண்பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளு மிருக்கின்றன. அதாவது
ஒரு பெண்பாடசாலைக்கு 11 ஆண்பாடசாலைகள் சமம். பெண்கள் பரீ
க்ஷையில் 100 க்கு சராசரி 60 பேர் சென்றவருஷம் தேறியிருக்கிறார்கள்.
இது வெகு திருப்திகரமாக விருக்கிறது. போதனாமுறை காலேஜ் வெகு
நன்றாக நடத்தப்பட்டு வருகிறது. 100 க்கு 97 பேர் சென்றவருஷத்தில்
பரீக்ஷையிற் றேறியதும் மெச்சத்தகுந்ததேயென மிஸ்டர் ஜே. எ. தலால்
(Mr. J. A. Dalal) அபிப்பிராயப்பட்டிருப்பது சரியே. மகாராஜாவின்
ஊக்கத்தினாலும், பெண்கல்வியில் அவருக்குள்ள அபிமானத்தினாலும் அந்த
தேசம் விருத்திக்கு வருகிறது. அம்மாதிரி நாமும் விருத்திக்குவர முயல
வேண்டாமா?

# ராணி துர்க்காவதி.

Adapted from the Indian Ladie's Magazine.

இந்தியாவின் மத்திய பாகத்தில் குர்மாந்தல் என்ற பெயருள்ள ஒரு
சிறுராஜ்ஜியம் இருந்தது. மாட்சிமைதங்கிய அக்பர் சக்கிர
வர்த்தியின் ஆளுகையின் கீழ் இமயமலை முதல் கன்னியா
குமரிவரைக்கும் இருந்த ஒவ்வொரு ராஜ்ஜியங்களும் அழி
ந்துகொண்டு வந்தபோது இந்த குர்மாந்தல் ராஜ்ஜியம்
ஒன்றுமட்டுமே நிலைகுலையாது தன் பெருமைதாங்கி நின்
றது. இப்படிநின்றது மட்டுமேயல்ல. இவ்விராஜ்ஜியத்தில்



வியக்கத்தக்கது மற்றொன்றுளது; அது அப்போது அந்த ராஜ்ஜியத்தை
ஆண்டுவந்தது ஒரு இந்து விதவை என்பதே. இந்த விதவை யார் என்பதைப்
பற்றிச் சற்று ஆராய்வோம்.

குர்மாந்தல் ராஜ்ஜியத்தின் ராணியாகிய துர்க்காவதி என்பவள் இந்தியா
வின் வடபாகத்திலுள்ள கானோஜ் தேசத்தின் அதிபதிகளி லொருவராகிய
சேளாடான் என்பவரின் புத்திரி. அக்காலத்துப் பெண்கள் எல்லாரைப்பார்க்
கிலும் துர்க்காவதி வனப்பு மிக வாய்ந்தவளாகவும் கல்வி யதிகமாகக் கற்ற
வளுமாக இருந்ததால் அவளுடைய தகப்பன் அவளை ஒரு ராஜபுத்திர அரச
னுக்கு விவாகம்செய்து தரவேண்டுமென் றெண்ணியிருந்தான். ஆனால்
துர்க்காவதிக்கு அது பிரியமில்லை. அவள் குர்மாந்தல் அதிபதியாகிய துர்பத்
ஷா என்பவரை நேசித்தனள். ஆதலால் அவளது இஷ்டப்பிரகாரமே சீக்கி
ரம் மணம் வெகு ஆடம்பரத்துடன் நிறைவேறிற்று. (இக்கதையினாலும் முற்
காலத்தில் விவாகம்செய்யும்போது பெண்களின் இஷ்டத்தை யறிந்து அவர்க
ளிஷ்டப்படியே விவாகம்செய்துவந்தார்கள் என்பது விளங்குகின்றது. இப்
போதுள்ள கெட்டவழக்கம் என்று நீங்குமோ அன்றே நமக்குநல்லகாலம்.)

இவ்வாறு விவாகம் முடிந்ததும் துர்க்காவதி தன் பர்த்தாவுடன் இன்
புடன் காலங்கழித்துவந்தாள். அவள் ஒருஆண்மகவை ஈன்றனள்; அக்குழந்
தைக்கு பர்நாராயன் என்று நாமகரணம் சூட்டப்பட்டது; கல்வி அழகு பொ
ருள் மன ஒற்றுமை புத்திரபாக்கியம் முதலிய எல்லாம் ஒருங்கே வாய்க்கப்
பெற்ற இத்தம்பதிகட்குக் குறைவென்ன? விசனமொன்றுமின்றி வெகு சந்
தோஷத்துடன் ராஜ்யமாண்டுவந்தார்கள்.

ஆனால் இவ்வுலக இன்பம் என்றும் ஒருமாதிரியன்று என்பதை நாம்
கண் கூடாகக் கண்டிருக்கின்றோமல்லவா. விசனம் சந்தோஷம், செல்வம்
தரித்திரம், கஷ்டம் சுகம், பிறப்பு இறப்பு, சுபம் அசுபம் முதலியவெல்லாம்
ஒவ்வொருவருடைய வாழ்நாளிலும் கலந்துகொண்டே வருகின்றன என்ப
தை யார்தான்மறுப்பார். இப்போது, நல்லநிலைமையிலிருந்து மிகத் தாழ்ந்த
நிலைமைக்கு வந்தபேர் எத்துணையோபேர் நமக்குத் தெரியுமே; அதேமாதிரி
மிக எளியநிலைமையிலிருந்து அதிக உன்னதபதவியை யடைந்தவர்களையும்
பார்த்திருக்கிறோமே. அதே மாதிரிதான் சுக துக்கங்கட்கும். இவ்வளவு கா
லமாக விசனமென்பதின்னதென்றறியாத நமது துர்க்காவதிக்கு ஒருபெருந்
துயரம் உண்டாகக் காலமாயிற்று. அவள்குமாரன் மூன்று வயதானவுடன்
துர்பத்ஷா என்பவர் இவ்வுலகவாழ்வை நீத்து அவ்வுலகிற் கேகினர். இத
னால் துர்க்காவதிக் குண்டான துயரம் படிப்போர் ஒருவாறு ஊகித்தறிந்தா
லன்றி இங்கு விவரித்துக்காட்டல் கூடாமையாக இருக்கின்றது.
எவ்வளவு விசனப்பட்டாலும் பயன் ஒன்றுமில்லை. ஆண்டாண்டுதோறு மழுது
புரண்டாலு மாண்டார் வருவரோ மாநிலத்தீர் என்ற ஔவையார் வாக்கிற்
கிணங்க நமது துர்க்காவதி தமது துயரத்தை ஒருவாறு ஒழித்து தன்னு

டைய குமாரன் நிமித்தம் ராஜ்யபாரத்தை ஏற்று அரசாளத் தலைப்பட்டாள். அவள் மிகவும் நியாயமாகவும் சாமர்த்தியமாகவும் நாட்டை ஆண்டுவந்தனள். சுற்றிலும் மகமதிய எதிரிகள் இருந்தபோதிலும் அவர்களை லக்ஷியம் செய்யாது தான் தனது இராஜாங்கத்தை நன்குகாப்பாற்றி வந்தனள்.

மத்திய இந்தியாவை ஆளவந்த ஒவ்வொரு கவர்னரும் குர்மாந்தலை எதிர்த்தடிக்க எண்ணங்கொண்டு அப்படிச்செய்வதற்கு டில்லிச்சக்கிரவர்த்தியாகிய அக்பரை அநுமதி கேட்டார்கள். அக்பர் சாமர்த்தியவான் மட்டுமன்று வெகு நல்லவன். ஆதலால் சீராக நடக்கும் இராஜ்யமொன்றை எதிர்க்க அவன் அநுமதிதரவேயில்லை. மேலும் அவன் துர்க்காவதியை அவள் சாமர்த்தியத்திற்காக மிகவும் வியந்தான். குர்மாந்தலில் ஜனங்கள் எல்லோரும்ராணியைத் தாயாராக மதித்துவந்தார்கள். ராணியும் ராஜ்யமெங்கும் கூபம் குளம் முதலிய வெட்டுவித்தும் அன்னசத்திரங்கள் கட்டுவித்தும் மற்றும் பிரஜைகட்கும் பிராணிகட்கும் வேண்டிய சௌகரிய மனைத்தும் செய்துவந்தனர். அவளது ஆளுகையில் பிரஜைகள் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருந்தார்கள். இந்தியாவிலிருந்த ராஜ்யங்களெல்லா வற்றிலும் இக் குர்மாந்தலே மிகவும் நன்முக ஆளப்பட்டுவந்தது. ஜனங்கள் திரவியவந்தர்க ளானார்கள். விவசாயம் பெருகி தானியங்கள் அதிகமாக விளைந்தன. வியாபாரம் விர்த்தியாயிற்று.

அக்பர் எவ்வளவோ கவர்னர்கட்கு குர்மாந்தலை எதிர்க்க அநுமதி கொடுக்காமலிருந்த போதிலும் கடைசியாக அப்போது இருந்த கவர்னராகிய அஜப்கான் என்பவன் எப்படியோ போதனைசெய்து அவன் அநுமதியை பெற்றுக்கொண்டான். அநுமதி கிடைத்தது தான் பாக்கி; உடனே ஒரு பெரிய சேனையு..ன் சிறுராஜ்யமாகிய குர்மாந்தலை நோக்கிப் புறப்பட்டான்.

அக்பர் சக்கிரவர்த்தியின் கீர்த்திபெற்ற சேனையின் முன்பு துர்க்காவதி ஒரு சிறு துரும்புதான் என்று சொல்லலாம். அதை எதிர்த்துச் சண்டை செய்வது என்பது யானையுடன் பூனை போர்புரிய முயல்வதை யொக்கும் அப்படி யிருந்தபோதிலும் துர்க்காவதி தனது நாட்டைக்காக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்தாள். தான் தோற்றுவிடும் பக்ஷத்தில் தான் போரில் இறப்பதே சரியென்றும் தீர்மானித்துக் கொண்டாள்..

ராணியின் தீர்மானம் ஜனங்களுக்குத தெரிந்தவுடன் அவர்களும் அவ்வாறே எண்ணங்கொண்டு நாட்டைக்காக்கச் சித்தமானார்கள். இப்படியாக பெரியசேனைஒன்று சேர்க்கப்பட்டது. அச்சேனையில் 2000-யானைப்படையும் 8000 குதிரைப்படையும் இருந்தன. இவைகளை ராணியே நேரில் நடத்தினாள். அஜப்கான் குர்மாந்தலில் இவ்வளவு பெரியசேனை சேருமென்று கனவிலும் எண்ணவில்லை. குர்மாந்தலை ஜெயிப்பது மிகவும் லேசானது என்றெண்ணி 5000-குதிரைப்படையோடு மட்டும் வந்திருந்தான். ஆனால் போர்க்களம் வந்து அப்பெரிய சேனையைப் பார்த்தவுடனே திகைத்துப்போனான் அஜப்கான்.



அவன் தன் தப்பிதத்தை அறிந்தான். ஆனால் அதைத் திருத்திக்கொள்ளக்
கூடிய காலம் கடந்துவிட்டது. சமாதானம் செய்துகொள்ளவும் முடியவில்லை.
சண்டைசெய்யாமல் திரும்பிப்போகவும் முடியவில்லை. இன்னது செய்வ
தென்று தோன்றாதவனாகிக் கடைசியாக சண்டைசெய்வதே சரியென்று தீர்
மானித்து போர்வீரர்கட்குக் கட்டளையிட்டான். ஒரு பெரும்போர்நடந்தது;
அஜப்கான் முற்றிலும் தோல்வியடைந்தான். அவன் உயிர் தப்பியதே பெரி
தாயிற்று. சிதறுண்ட சேனையுடன் தன்னூர்போய்ச் சேர்ந்தான்.

குர்மாந்தலில் எங்குபார்த்தாலும் சந்தோஷம் தான்; யாரைப்பார்த்தா
லும் இந்த சண்டையைப்பற்றிய பேச்சுத்தான். ஆனால் ராணியார் மனம் மட்
டும் சந்தோஷமடையவில்லை; ஏனென்றால் மறுபடியும் அக்பரின் சேனைவந்து
தன்னாட்டை எதிர்க்கும் என்று அவள் உறுதியாய் நம்பினாள். அந்த பெரிய
சக்கிரவர்த்தி இச்சிறு ராஜ்ஜியத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று எண்ணங்
கொண்டால் அது அவனுக்குப் ..ரியகாரியமல்ல என்றும் தன்னால் எதிர்
த்து நிற்க முடியாது என்றும் ரா..ி எண்ணினாள்.

துர்க்காவதி எண்ணியது முற்றும் சரியே. சுமார் ஒன்றரை வருடத்திற்
குள் அஜப்கான் ஒரு பெரிய சேனையுடன் குர்மாந்தலை நோக்கிவந்தான். துர்
க்காவதிக்கு மனதில் சஞ்சலமிருந்தபோதிலும் நாட்டைக் காப்பதில் தன்
உயிர்போனாலும் சரி என்ற திடச்சித்தமுள்ளவள் ஆதலால் ஒரு பெரிய சே
னையைச் சேர்த்துக்கொண்டு அஜப்கானை எதிர்த்தாள். இச்சண்டையில் தெய்வ
சகாயம் இவளுக்கு இருந்தது என்றே சொல்லவேண்டும். மீண்டும் அஜப்
கான் முறியடிக்கப்பட்டான் அவனும் அடியுண்டு தந்நகர் ஏகினான்.

அஜப்கானுக்கு உண்டான விசனத்திற் களவில்லை. "இரண்டுமுறை படை
யெடுத்துச் சென்றோம் இரண்டுமுறையும் தோல்வியடைந்தோம் என் செய்
வது" என்று எண்ணினான். ஒன்றும்தோன்றவில்லை; கடைசியாக மனதில் ஒரு
எண்ணம் உதித்தது, அதன்படியே நடக்கத் தீர்மானித்தான். "நேரானவழி
யில் குர்மாந்தல் நாட்டை ஜயிப்பது சாத்தியமான காரியமன்று ஏதாவது
மோசம் செய்யவேண்டியதுதான் தக்கவழி" என்பதேஅவன் எண்ணியது.
இப்படித் தீர்மானித்ததும் உடனே குர்மாந்தல் ராணுவத்தில் அமர்ந்திருந்
வர்கட்கு லஞ்சம் ஏராளமாகக் கொடுக்க ஆரம்பித்தான். பணம் என்றால்
பிணம்கூடவாய்திறக்கும் என்பது உண்மையன்றோ? (சில மாதங்கட்குமுன்
நமது மனோரஞ்சினியில் ஆட்கோல்லி என்ற தலைப்பின் கீழ்பணம் செய்
யும் வேலையெல்லாம் நாம் எழுதியிருந்ததை நண்பர்கள் வாசித்திருக்கலாம்
அடுத்த சஞ்சிகையில் மீண்டும் பணத்தாசையால் தகப்பன் பிள்ளையைக்கொ
ன்றகதை யொன்றை எழுதுவோம்) ராணுவவீரர்கள் அஜப்கான் அளித்த
பரிதானத்திற்கு இசைந்து தம் நாட்டைக்காக்க போர்புரிவதில்லையென்று
கூறவே அஜப்கானுக்கு உண்டான ஆனந்தத்திற்கு அளவு இல்லை; உடனே
ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு குர்மாந்தலை அதம் செய்துவிடு
வேனென்று போர்க்கோலம் கொண்டுவந்தான். துர்க்காவதி யிதனையறிந்து
சேனைசேர்க்க ஆரம்பிக்கும்போது தன் சேனையில் ஒற்றுமை யின்மையும்
குழப்பமுமே அதிகரித்திருந்ததைக் கண்டனள். வ்யாகூலமுண்டாயிற்று.

என்செய்வாள். எதிரியை நம் உயிர் உள்ளளவும் ஊரினுள் விடக்கூடாது என்று எண்ணங்கொண்டு இப்போது 14-வயதுள்ள தன் அருமைக் குமாரனையும் அழைத்துக்கொண்டு நாட்டின் மீதும் தன்மீதும் உள்ள அன்பினால் உயிர்க்கஞ்சாத வீரர்கள் சிலருடன் துருக்கசேனையையெதிர்த்தாள். சமர் கொடூரமாக நடந்தது. துருக்கன்சேனை மிகப் பெரியதாயிருந்ததால் குர்மாந்தலின் சிறியசேனை அதோடு எதிர்க்க முடியவில்லை. ஆனால் ராணியும் அந்தச் சில வீரரும் தம் இடம் விடாது தீரமாய்ப் போர் புரிந்தனர். தனது புத்திரர் போர்க்களத்தில் படுகாயப்பட்டு இறக்குந்தருவாயில் இருப்பதாகவும் அவனைப்போய் பார்க்கவேண்டுமென்றும் ராணியார்க்குச் சிலர் அறிவிக்க "நான் இப்போது போக முடியாது. என்னைப் பார்க்காவிட்டால் என் வீரர் தைரிய மிழந்துவிடுவார்கள். என் மகன் இறப்பானானால் போரில்தானிறக்கிறான். சுவர்க்கத்தில்அவனைப் பார்த்துக்கொள்ளலாம்." என்று பதிலளித்துவிட்டு மகனையும் கருதாமல் சண்டையையே கருதினள். அமர் வெகு மும்முரமாய் நடந்தது. துர்க்காவதியின் வலது கண்ணில் ஒரு அம்பு தைத்தது. அதைப் பிடுங்க முயன்றனள்; ஆனால் அது முடியவில்லை. தேகமுழுமையும் காயமாகிவிட்டது. போர்வீரர்களில் சிலரைத் தவிர எல்லோரும் மாண்டனர்கள். இங்ஙனமிருக்க அவள் தன் அன்புள்ள நாட்டை மனங்குளிர ஒரு முறை பார்த்துவிட்டு தன் கத்தியாலே குத்திக்கொண்டு இறந்தனள். எதிரி கையில் உயிருடன் அகப்படக்கூடாதென்பதே அவள் எண்ணம். அவள் இவ்வாறு தன் கத்திக்கிரையானதும் அருகிருந்த ஒரு வீரன் அவள் பிரேதம் துருக்கர்கையில் அகப்படாதிருக்குமாறு உடனே அதைத் தூக்கிக்கொண்டு தூரமாயோடி தகனம்செய்யத் தொடங்கினான். இச்சமாசாரங் கேட்ட குர்மாந்தலிலுள்ள பெண்மணிகள் எல்லாம் ராணியைத் தகனம்செய்யும் இடம் சென்று அந்நெருப்பில் வீழ்ந்து ராம ராம என்று சொல்லிக்கொண்டு இறந்தார்கள்.

அஜப்கானின் மோசத்தால் குர்மாந்தல் என்னும் நாடு அதன் சொந்த அரசியிடமிருந்து இவ்வாறு பிடுங்கப்பட்டு மோகலாய ராஜ்ஜியத்துடன் சேர்க்கப்பட்டது.

பார்வதிபாகன்.

# ஜப்பான் சக்கிரவர்த்தினி.

ஜப்பான் ராஜ்யம் ஓர் தீபகணம். இதில் ஆசியாவின் கீழ்க்கரையில் நெடுந்தூரம் எட்டியிருக்கும் பல பெரிய தீவுகளிருக்கின்றன. இத்தேசத்து ஜனங்கள் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு தேசாபிமானம் மிக உண்டு. இவர்கள் மகா பராக்கிரமசாலிகள். உழைப்பாளிகள், விடாமுயற்சியும் சமர்த்து முள்ளவர்கள், தீர்க்காலோசனையும் தைரியமு முடையவர்கள். ஒருகாரியத்தைச் செய்ய முன் வந்தால் அதைச்செய்து



முடிக்கிறவரையிலும் பின்னடையார்கள். நாம் இப்பொழுது இவர்கள் தேசத்து சக்கிரவர்த்தினியைப் பற்றி நமக்குத் தெரிந்தவரையில் எழுதுகிறோம்.

அநேக வருஷங்களுக்கு முன் ஜப்பானில் ஒரு சக்கிரவர்த்தினியிருந்தாள். இப்பெருமாட்டியினிடத்தில் அத்தேசத்து ஜனங்கள் மிக வணக்கமாகவும் மரியாதையாகவும் பிரியமாகவுமிருந்ததுடன் இச்சக்கிரவர்த்தினியை தங்கள் குலதெய்வமாகவும் எண்ணி பூஜித்து வந்தார்கள். அந்த சக்கிரவர்த்தினி தான் இப்பொழுது மறுஜனன மெடுத்திருக்கிறாளென்று சாதாரண ஜனங்கள் ஜப்பானில் சொல்லுகிறார்கள்.

இப்பொழுதுள்ள சக்கிரவர்த்தினியின் பெயர் காருகோ. இவர் 1850-ம் வருஷத்தில் ஜனித்தவர். இம்மாது இராஜவம்சத்தைச் சேர்ந்த டாடாகாவின் புத்திரி என்று சொல்லப்படுகிறது. இந்த காருகோ என்ற பெண்மணி சிறுபிராயத்திலேயே கல்வி புகட்டப்பட்டுவந்தாள். இப்பெண்மணி மகா சௌந்தரவதி யென்றும், இராணிகளுக்குள்ள அதிர்ஷ்டம் வாய்ந்தவளென்றும், நற்குணம், தயை, தெய்வபக்தி தேசாபிமானம் முதலியவைகள் பொருந்தியவளென்றும் அத்தேசத்திய பிரபுக்கள் சொல்லி வந்தார்கள். அப்பெண்மணியும் அவ்வித குணங்களுடையவளா யிருந்ததுடன் கல்வியிலேயும் தேர்ச்சியடைந்தாள். முன்னாளில் ஜப்பானுக்கு ராஜஸ்தானமாயிருந்த கயோடாவில் இப்பெண்மணி படித்துக்கொண்டு வந்ததாகவும் தெரிகிறது. இப்பெண்மணிக்கு 19 வயதானவுடன், ஜப்பான் சக்கிரவர்த்திக்கும் இப்பெருமாட்டிக்கும் விவாகம் வெகு விமரிசையாக நடந்தது; 1868-ம் வருஷத்தில் சக்கிரவர்த்தினி பட்டமு மளிக்கப்பட்டது.

இவர்களுக்கு விவாகமான காலத்தில் ஜப்பான் தேசத்தில் இராஜாங்க விஷயம் தாறுமாறாக விருந்தது. சமாதானம் மிகுதியாய் நிலைத்திருக்கும் காலமுமல்ல. அச்சமயத்தில் ஜனங்கள் தங்கள் சக்கிரவர்த்தி எவ்விதமாய் ராஜ்யத்தை சரிவர ஆளப்போகிறாரென்ற எண்ணமும் கவலையும் யாவர் மனதிலும் உதித்தன. சக்கிரவர்த்தி இத்தேசத்திலுள்ள மகா புத்தியுள்ளவும், இராஜாங்க விஷயத்தில் மிகபொறுப்பும் சாமர்த்தியமுமுள்ள மந்திரிமார்களைக்கொண்டு இராஜ்யத்தைச் சரிவர யாதொரு கலகமுமின்றி ஆண்டுவந்தார். இவருடைய மனைவி முன்யோசனையும் புத்திசாலியாயு மிருந்தமையால் சக்கிரவர்த்திக்கு சக்கிரவர்த்தினியும் பலதடவை இராஜாங்க விஷயத்திலும் உதவி செய்து வந்தார்கள். சக்கிரவர்த்தினியார் பழைய காலத்து வழக்கப்பிரகாரம் போதிக்கப்பட்டிருந்தபோதிலும் தமக்கு விவாகமான 3 வருஷமான பிறகு தமது தேசத்திய பெண்மணிகளுக்கு கல்வி புகட்டி அவர்களை நல்ல ஸ்திதியில் வைக்கவேண்டுமென்கிற எண்ணம்பிறந்தது. இதை நிறைவேற்ற முதல் முதலில் தமது இராஜ வம்சத்தில் சேர்ந்த பெண்களுக்கு கல்வி புகட்டி வர ஏற்பாடு செய்தார்கள்; இன்னும் ஐந்துபெண்களை கல்வி கற்றுவர அமெரிக்காவுக்கு அனுப்பினார்கள். பின்னிட்டு தமது தேசத்திலேயே

சில ஐரோப்பிய மாதர்களைக்கொண்டு பெண்களுக்கு பாடசாலைகளை ஸ்தாபித்தார்கள். இவ்விதம் செய்து வந்தமையால் அங்குள்ள பெண்கள் படிக்க ஆரம்பித்தார்கள். வரவர அவர்கள் விருத்திக்கும் வந்தார்கள். இப்பொழுது அங்கு பெண்களுக்கு பிரத்தியேகமாக ஒரு காலேஜ் யிருக்கிறது. அதில் சுமார் 1000 பெண்கள் படித்து வருகிறார்கள். சக்கிரவர்த்தினியார் பாடசாலைகளை ஸ்தாபித்தபின்பு, ஒவ்வொருபட்டணத்திலும் ஸ்திரீகளுக்கும் புருடர்களுக்கும் ஆஸ்பத்திரிகளை ஸ்தாபித்தார்கள். இவைகளாலும் ஜனங்களுக்கு மிக பிரயோஜன முண்டானதென்று நாம் சொல்லவும் வேண்டுமோ?

சக்கிரவர்த்தினிக்கு குடிகளிடத்தில் மிக விசுவாசமுண்டு. இந்த மாது சிரோன்மணி இப்பொழுது நடக்கும் ஜப்பான்-ருஷியா யுத்தத்தில் காயம்பட்டுத்தவிக்கும் போர்வீரர்களுக்கு சிகிச்சை செய்தும் அவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்தும் வருவது அந்த சக்கிரவர்த்தினியின் மேலான அன்பையும், பிரஜைகளிடத்திலுள்ள வாஞ்சையையும் காண்பிக்கிறதல்லவா? இச்சண்டை முடியும் வரையில் தங்கள் சுகங்களைக் கவனிக்காமலும் திரவியத்தை வீணாக செலவழிக்காமலும் யுத்தவீரர்களுக்கு நன்மை செய்வதின் பொருட்டே திரவியத்தை செலவு செய்து வருகிறார்கள். தமது ஜனங்களுக்கு ஏதாவது ஆபத்தொன்று நேரிட்டால் தமக்கு ஏதோ ஆபத்து நேரிட்டதாக எண்ணி அவர்களுக்கு ஆறுதல் சொல்லி திரவிய சகாயமும் செய்கிறார்கள். இதனால் தமது தேசத்திய ஜனங்களின் க்ஷேமம் வேறென்றும் தம்முடையது வேறென்றும் கருதாமல் அவர்கள் துக்கப்பட்டால் தமக்கு துக்கமுண்டாய் விட்டதென்றும் அவர்களுக்கு சந்தோஷமுண்டானால் தமக்கும் சந்தோஷமுண்டானதென்றும் எப்பொழுதும் ஒரே மனதுடையவராய் பிரஜைகளிடத்தில் விசுவாசம் பாராட்டி வருகிறார்கள்.

சக்கிரவர்த்தினியாருக்கு புஷ்பங்களிலும் புஷ்பத் தோட்டங்களிலும் மிகப்பிரியம். குழந்தையாயிருந்த காலத்தில் புஷ்பங்களைக் கொய்து பூமாலை அழகாகத்தொடுத்து வந்தார்கள். பற்பல வர்ணமுள்ள புஷ்பங்களை வரிசையாக சேர்த்து மேசைமேல் தாமே வைத்து வந்தார்கள். இப்பொழுதும் அவ்விதம் செய்து வருகிறார்கள். ஆயினும் ஸ்திரீகளுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்றும் அவர்களின் அந்தஸ்தை உயர்த்தி அவர்களை நல்வழிப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் இச்சக்கிரவர்த்தினிக் கிருக்கின்றமையால் அடிக்கடி ஸ்திரீகளிருக்கும்படியான ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று அவர்களுடைய யோகக்ஷேமங்களை விசாரித்து வருகிறார்கள். அங்குள்ள குழந்தைகளுக்கு பொம்மை சாமான்களை வெகுமதியாக கொடுத்துவிட்டும் வருவது வழக்கம். இவ்விதம் சக்கிரவர்த்தினி செய்துவருவதால் அங்குள்ளவர்களுக்கு சக்கிரவர்த்தினியாரின் நற்குண நற்செய்கைகள் நன்றாகத்தெரியும். சக்கிரவர்த்தினி ஆஸ்பத்திரிக்கோ, பாடசாலைக்கோ வரும்பொழுது குழந்தைகள் புன்சிரிப்புடன் சக்கிரவர்த்தினியாரிடஞ்சென்று கொஞ்சி விளையாடுவார்கள்.



பது சக்கிரவர்த்தினி தமது தேசத்திய பட்டாடைகளையே தரித்துக்கொள்வது வழக்கம். மேலும் அத்தேசத்திய ஆசாரங்களையும் தவறாது அநுஷ்டித்து வருகிறார்கள். சக்கிரவர்த்தினியாருக்கு ஜப்பான் தேசத்து பாஷை தெரியுமே யொழிய இதர பாஷைகள் பேசவுங் கூட தெரியாது. இதனால், இதர தேசத்து மாதர்களுடன் சயர்ச்சியாய் பேச முடிவதில்லையாம். ஆயினும் இந்த சக்கிரவர்த்தினியாரின் தோழிகள், அவ்விதம் இதரதேசத்து மாதர்களுடன் கலந்திருக்கும்போது அவர்கள் சொல்லுகிறதை ஜப்பான் பாஷையில் மொழிபெயர்த்து இராணியாருக்குச் சொல்லுவார்கள்.

ஜப்பான் சக்கிரவர்த்தினியார் கவனம் செய்வதில் சமர்த்தராம்; ஒரு வாரத்தில் இரண்டு செய்யுட்களை கவனம் செய்து வருகிறாராம்.

இவ்வித குணம் வாய்ந்த ஜப்பான் சக்கிரவர்த்தினியாரைப்போல் நமது தேசத்திய மாதர்கள் கல்விகற்று தங்கள் சகோதரிகளுக்கு நன்மைசெய்து வந்தால் நலமல்லவா?

## நன்மைமுன் தீமைகெடும்.

சாந்தானந்தர் என மிக்கப்பிரசித்திபெற்ற சந்நியாசியொருவர் இருந்தனர். அவர் துங்கா, பத்திரா என்னும் நதிகள் ஒன்றுசேருமிடத்திற்குச் சிறிது தூரத்தில் ஒரு சிறிய குடிசையில் தன் காலத்தைக்கழித்து வந்தனர். அவர் அவ்விடம் இருப்பினும் அவர்புகழ் வெகுதூரம் வியாபித்திருந்தது. யோகத்தில் இல்லாதபொழுது அவர் தமது வாசஸ்தலத்துக்குச் சமீபத்தில் உலாவிக்கொண்டிருப்பார். அநேகவிதமான கஷ்டங்களாற் பீடிக்கப்பட்டு மனோவியாதியினால் வருந்துபவர்கள் அவரிடந் தாராளமாய்ப் போய்ப்பேசி இனிய புத்திமதிகளைப்பெற்று வருவதும், கல்விப்பயிற்சியடைய விரும்புவோர்கள் இகபரசாதகமான மேலான மோட்ச விஷயங்களைக் கற்றுச் சந்தோஷித்து வருவதும் வழக்கமாயிருந்தது.

இப்படியிருக்க ஒருநாள், கொலை, களவு, வழிபறி முதலிய அநியாயமான காரியங்களைச் செய்தும், போலீஸ்காரர்களுக்கு அகப்படாமல் திரிந்துகொண்டிருக்கும சதாசோரன் என்னுங் கொடியோன் ஒருவன் தனக்கு வேலை யொன்றும அகப்படாததினால் இவ்வெளிய யோகியினது ஆஸ்தியாகிய சில பாத்திரங்களையும் சாமக்கிரியைகளையும் திருடிக்கொண்டுபோகத் தீர்மானித்துச் சமயம்பார்த்துக்கொண்டிருந்தான். கடைசியில் அவர் யோகநிஷ்டையிலிருக்கும்போது இவன் அவர் குடிசைக்குள்ளே நுழைந்தான். அவருக்கு இவ்வுலகத்தின் நினைவே யிருக்காதென்று எண்ணி அவர் பாத்திரங்கள் வைத்திருக்கும் அறைக்குட்சென்று மெதுவாக சிலவற்றை யெடு

க்க ஆரம்பித்தான். அவன் அப்பாத்திரங்களை யெடுத்துக்கொண்டு போய்விடத் தயாராயிருக்கும் சமயத்தில் திடீரென்று சாந்தானந்தர் அவ்வறைக்குள் வேறோ ரொரு காரியமாகவந்தார். ஆனால் இவர், சதாசோரன் திருடவந்திருக்கிறு னென்றும், அவனைத்தான் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றும் எண்ணி அவர் அவ்விடம் வரவேயில்லை.

ஆனால் சதாசோரன் தன் காரியத்தை முடித்துக்கொள்ளுஞ் சமயத்தில் இவரைக்கண்டவுடன் திடுக்கிட்டுப் பயந்து அப்பாத்திரங்களை அங்கே போட்டுவிட்டுத் தான் ஓட்டம்பிடிக்க ஆரம்பித்தான். சதாசோரன் அப்பாத்திரங்களைப் போட்டுவிட்டு ஓடுவதைக்கண்ட சாந்தானந்தர் அவற்றைத் தன் கையில் எடுத்துக்கொண்டு தானும் அவன் பின்னே ஓடினுர். சதாசோரன், சாந்தாநந்தர் இப்படிப் பாத்திரங்களோடு தன் பின்னே ஓடிவருவதைக் கண்டு பயந்து, தன்னைப் போலீஸ்காரர்வசம் ஒப்புவிக்கத்தான் இப்படித் துரத்திக்கொண்டு வருகிறுரென்று நிச்சயித்து இன்னும்வேகமாக ஓடினுன். இவரும் அப்பாத்திரங்களைச் சுமந்துகொண்டு தன்னுல் கூடியமட்டும் வேகமாக அவனை நிற்கச்சொல்லிக்கொண்டு அவன் பின்னே ஓடினுர். கடைசியில் சதாசோரன் மிக்ககளைத்து இனி தான் அகப்படுவது நிச்சயமென்றுஎண்ணி, நின்று தான் செய்தகுற்றத்திற்காக மன்னிக்கும்படி சாந்தாநந்தரைப் பலவிதமாகவேண்டிக்கொண்டான். அதற்குச்சாந்தாநந்தர் "நீயேன் என்னை வேண்டிக்கொள்ளுகிறுய். நீ இச்சித்த பொருளை யெடுத்துக்கொண்டு போவதற்கு இடையூருக நான் அவ்விடம் வந்ததற்கு நீயல்லவோ என்னை மன்னிக்கவேணும். இப்பாத்திரங்களை உன்னிடங்கொடுத்து உன் மன்னிப்பைக் கேட்டுக் கொள்ள அல்லவா நான் இவ்வளவுதூரம் ஓடிவந்தேன்" என்றுர். இதைக் கேட்டுச் சதாசோரன் இவர் அப்பாத்திரங்களைத் தன் கையிற் கொடுத்துத் தான் அவற்றைத் திருடினதாகப் போலீஸ்காரர் வசம் ஒப்புவிக்கப் போகிறுரென்று எண்ணித் தான் புத்தியில்லாமற் செய்த கெட்டகாரியத்திற்காகத் தன்னை மன்னிக்கும்படி கெஞ்சினுன். ஆனல் சாந்தானந்தருக்கு இவனைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணமேயில்லை. அவர் சாதாரண மனிதர்களைப்போலல்லாமல் மிக்க உயர்ந்த ஜன்மத்தை யடைந்தவர். மற்றொருவன் விரும்பியதைத் தனக்கென்று வைத்துக்கொள்ளாமல், அவனுக் கூப்பிட்டுக்கொடுக்கும் மனதையுடையவர். சாந்தானந்தர், சதாசோரனை அப்பாத்திரங்களைப் பெற்றுக்கொண்டாலன்றி, 'விடேனென்று' வழிமறித்துக் கொண்டிருப்பதும் அவன் 'மாட்டேனென்று' சொல்லி வேண்டிக்கொள்ளுவதும் பார்க்க மிக்க வேடிக்கையாயிருந்தது. சாந்தாநந்தர் தன்னை விடாததைக்கண்டு கடைசியில் சதாசோரன், தான் அக்களவுசெய்ய எத்தனித்தவன் இடத்துக்குப் போய் இவரோடு ஒரு வார்த்தை சொல்லவேண்டு மென்று முட் நிபந்தனைமேல் அப்பாத்திரங்களை வாங்கிக்கொள்ள, இருவரும் அவ்விடேன். சென்றுர்கள். சாந்தாநந்தரது பர்ணசாலைக்குள் இவன் வந்தவுடன் மரோதிக் கும்படி கண்ணீர்விட்டழுது "ஐயோ! இதுவரையில் நான் எத்தனையோ சொல்



பகரமான காரியங்களைச் செய்துவந்தேனே. அவையெல்லாம் போதாமல் மகாத்மாவாகிய உங்கள் சொத்தையும் திருட எத்தனிக்கவேண்டுமா! இனி என் பிராணன் உள்ளவரையில் தங்களுக்கு ஊழியஞ் செய்யும்படி உத்திரவு அளித்தாலன்றி, இப்பாத்திரங்களை கைக்கொள்ளேன்" என்றுன். சதாசோரனிடம் அப்பாத்திரங்களைக் கொடுத்து அவனைப் போகும்படிசெய்ய சாந்தானந்தர் எவ்வளவு முயன்றும் முடியவில்லை.

அன்றுமுதல் சதாசோரன் சாந்தானந்தரோடு இருந்து அவருக்குப் பணிவிடைசெய்துவரும் புண்ணியத்தைப் பெற்றுன். வரவர தன் கெட்டகுணங்கள் முழுவதையும் மறந்து சன்மார்க்கம் முதிர்ந்து தன் குருவுக்குச் சமானமான பதவியை யடைந்தான். சாந்தானந்தர் சமாதியடைந்த பின்பு, இவன் அவருக்கு ஏற்றசிஷனென்று பேரெடுத்து எல்லாராலும் பூசிக்கப் பட்டு வந்தான்.

இக்கதையால் நாம் தெரிந்துகொள்வது என்னவெனின், சத்சங்கத்தின் குணங்கள் விலையுயர்ந்த ஆபரணங்களைக் காட்டிலும் மேலானதென்பதும், கெட்டவழியில் நடப்பவர்கள் சன்மார்க்கத்திற்குத் திருப்பக் கடவுள் அநேக வழிகளை யேற்படுத்தி யிருக்கிறுரென்பதுவுமாம்.

E. சுப்பிரமணியம் பி. ஏ.

# யவனதேசக் கதைகள்.

## முகவுரை.

சில வருஷங்களுக்குமுன் ஒருநாள் வேலை சிறிதுமின்றி வெறுங் காலம் போக்கிக்கொண்டிருந்தேன். அப்போது என் ஆப்தர் ஒருவர்போந்தனர். அவர் பெருத்துக் குறுகிய மேனியும் சிவந்து வெளுத்தவர்ணமும் சிறித்தமுகமும் உடையவர். தன்னோடு பேசும் எவரையும் தன் வசப்படுத்தும் தன்மையாளர். எடுத்துக்கொண்ட காரியத்தை எப்படியும் செய்துமுடிப்பவர். தன் வாழ்நாளுக்கு வழித்துணையாகச் சில நீதிகளைக் கொண்டு அவற்றினின்றும் அணுவும் பிறழாது நடப்பவர். எப்போதும் காரியமே கண்ணுயிருப்பார். அவர் என்னிடம் வந்தபொழுது அவர் முகப்பொலிவும் அவசரநோக்கும் ஏதோ புதிதான விஷயமொன்றைக் கண்டுபிடித்துள்ளார் இவர் என்று தெரிவித்தன. அவர் 'நான் ஒரு புது நாடு கண்டுபிடித்துள் ளேன் உனக்கு இஷ்டமிருந்தால் நீயும் அதில் செல்லலாம்' என்றனர்.

'தாங்கள் குறிப்பது என்னோ?' என்றேன். அவர் 'நான் உனக்கு வழி மாத்திரம்தான் காட்டுவேன். மற்றகாரியமெல்லாம் நீயே செய்துகொள்ள வேண்டும். தன்முயற்சி யில்லார்க்கு ஒன்றுமில்லை இவ்வுலகில்' என்றனர். இதைச் சொன்னவர் என் உபாத்தியாயர். சாமியப்பரென்பது அவர் பெயர். அவர் வேடிக்கை, பரிகாசங்களில் மனஞ் செலுத்துபவரல்ல. ஆகையால் அவர் சொல் தனியேகட்டித் தூக்கப்பட்டிருக்கும் ஒரு இருப்புத்துண்டின் முன் ஒரு காந்தத்தைக் காட்டினால் அது எப்படி இழுக்கப்படுமோ அப்படி என் மனத்தை இழுத்தது. என் ஆப்தரும் என் அகக்குறியை முகத்தில் கண்டு 'என்பின் வா' என்று சொல்லிப் புறப்பட்டனர். சில நிமிஷங்களில் நாங்களிருவரும் ஒரு புத்தகசாலையில் புகுந்தோம். சாமியப்பர் என்னை ஒரு அல்மீராவண்டை நிறுத்தி 'யவனதேசமென்று ஓர் தேசம் இருந்ததாகக் கேள்விப்பட்டுள்ளாய். அத்தேசம் முன் நாகரிக விர்த்தி அதிகப்பட்டு கொஞ்சக்காலம் அக்கிரஸ்தானம் அடைந்துள்ளதாயும் உனக்குத் தெரிந்திருக்கும்; ஆனால் யவனர்கள் எப்படி வாழ்ந்தார்கள்? அவர்கள் காவியங்கள் என்ன அவர்கள் மனப்போக்கு எப்படி யிருந்ததென்று தெரிந்திருக்கமாட்டாய். இவ்வல்மீராவிலிருக்கும் ஏடுகளையும் புத்தகங்களையும் படித்தால் அவர்கள் உனக்கு முன்பாக இருப்பதாகத்தெரியும். உனக்கு இஷ்டமிருந்தால் ஆரம்பிக்கலாம்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். நான் அல்மீராவைத் திறந்தேன். அதிலிருந்த அநேக ஏடுகள் முழுதும் செல்லரிக்கப்பெற்றன. சில அரைவாசி போனவை. வேறு சில ஒன்று இரண்டு ஏடுகள் இல்லாதவை. வெகுகாலத்துக்குமுன் எழுதியவை ஆகையால் ஏடுகள் இருந்தவைகளையும் வாசிக்கமுடியவில்லை. புத்தகங்களோவெனில் அவைகளும் செல்லரித்து வாசிக்கக்கூடிய ஸ்திதியில் இருக்கவில்லை. நான் இவைகளைத் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தபோது பீமன், காமன், குமரன் முதலிய ஆண்பாற் பெயர்களும ரதி, சசி, சாவித்திரி முதலிய பெண்பாற் பெயர்களும் அடிக்கடி என் கண்ணில் பட்டன. எனக்கு அவைகளிடத்துள்ள ஆர்வம் அதிகப்பட்டது. அவைகளைப் படித்தபோது நம் காவியங்களுக்கும் யவனகாவியங்களுக்கும் ஒற்றுமை அதிகமிருப்பதாகக் கண்டேன். அநேக கதைகள் நமக்கும் அவர்களுக்கும் பொதுவாக இருந்திருக்கவேண்டும் என்று தெரிந்தேன். நம் நாட்டில் சீதை சிறைப்பட்டாள். யவனநாட்டிலும் ஒருபெண் சிறைப்பட்டுள்ளனள். நம் நாட்டில் சாவித்திரி தன் கணவனுடைய உயிரைக் காப்பாற்றினாள். யவனநாட்டில் தன் கணவன் வாழும்பொருட்டு தன் உயிரைக் கொடுத்த மாது ஒருவளும் இருந்திருக்கிறாள். நம் நாட்டில் அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை சென்று பல நாடுகளையும் கண்டான். யவனநாட்டில் பலநாடுகளுக்கும் சென்றுவந்தவர் ஒருவர் இருந்தார். இவ்விஷயங்களைப்பற்றி நான் யோசித்துக்கொண்டிருந்தபொழுது 56-தேசங்கள் நம் முன்னோர்களுக்குத் தெரிந்தவைகளில் யவனதேசமும் ஒன்று யிருந்திருக்கவேண்டும் என்று



தோன்றிற்று. அப்படி யிருந்திருந்தால் யவனதேசக் கதைகள் நமக்கு இதுவரை தெரிந்திராதகாரண மென்னவென்று ஒருகேள்வி யுண்டாயிற்று. இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டே யவனகாவியங்களில் இரண்டுவருஷம் போக்கினேன். எனக்கு அக்காலத்தில் இருந்த மனவெழுச்சியும் சந்தோஷமும் இத்தகையவென்று வர்ணிக்க முடியாது. யவன தேவர்களோடும் யவன ராஜாக்களோடும் யவனதேசத்தில் வசிப்பதாகத் தோன்றினதே யன்றி எனக்கு இவ்வுலகில் இக்காலத்திய விஷயங்களுடன் வசிப்பதாகத் தோன்றவேயில்லை. என் புத்தியை இவ்விதமாக வசீகரித்து என்னை யாட்கொண்ட காவியங்களை மற்றவர்களும் படித்து ஆனந்திக்கச் செய்யவேண்டுமென்னும் எண்ணம் உதித்தது. ஆனால் இவ்வுலகில் மனிதனுக்குள்ள அசௌகரியங்கள் மிகப்பல. ஆகையால் நினைத்தகாரியத்தை உடனே முடிக்கக்கூடுவதில்லை. ஆயினும் இப்போதாவது இக்காரியத்தை ஆரம்பிக்கச் சமயம் வாய்த்ததே என்று சந்தோஷப்பட வேண்டியதுதான். இப்போது யவனதேசக் கதைகளில் ஒன்றை ஆரம்பிக்கிறேன்; இதைப் படிக்கும் சகோதர சகோதரிகள் கதைகள் நன்றாக இருப்பதாக அபிப்பிராயப் படுவார்களாகில் பின்னும் எழுதுவேன் அப்படி யில்லையென்று தெரிவிப்பார்களாகில் இத்துடன் நிறுத்திவிடுவேன்.

T. A. இராமலிங்கம், பி. ஏ.

## * தென்சர்க்கிள் பெண்பாடசாலைகளில் படிக்கும் பெண்பிள்ளைகட்கு 1904-த்தில் கொடுக்கும் கவர்ண்மெண்டு உபகாரச்சம்பள விஷயத்தைப்பற்றிய ரூல்கள்.

### லோயர் சகிண்டேரி வகுப்புகள்.

முதல் வருஷம் மாதம் 1-க்கு ரூ2 விதமும், இரண்டாவது வருஷம் மாதம் 1-க்கு ரூ2—8—0 விதமும் மூன்றாவது வருஷம் மாதம் 1-க்கு ரூ3 விதமுமாக மூன்று வருஷங்கட்கு 14 உபகாரச்சம்பளம் பிரைமெரி பரீக்ஷைதேறி லோயர்சகிண்டெரி பரீக்ஷைக்குப் படிக்கும் பிள்ளைகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. உபகாரச் சம்பளம் பிரைமெரிபரீக்ஷை தேறின மெரிட்டின் ஒழுங்கின்பிரகாரம் கொடுக்கப்படும். மேற்கண்ட 14 உபகாரச்சம்பளம் இந்துப் பெண்களுக்கு 3ம், மகம்மதியப் பெண்களுக்கு 3-ம், சுதேச கிறிஸ்தவப் பெண்களுக்கு 4-ம், பஞ்சமப்பெண்களுக்கு 4-ம்மாக பகுக்கப்படும்: ஒருவகுப்பு ஜாதியாருக்கு ஏற்பட்ட உபகாரச் சம்பளம் முற்றுஞ் செலவாகாமல் மிஞ்சுமானால் அம்மிச்சம் மற்றஜாதி பிள்ளைகட்கு பரீக்ஷை மெரிட்டின் ஒழுங்குப்படி கொடுபடும். அங்ஙனம் கொடுபடுவதில் இந்து மகமதியப் பெண்களை முக்கியமாய் கவனிக்கப்படும்.

* Extract from the Tinnevelly District Gazette: Educational Sheet.

தவிரவும் முதல்வருஷம் மாதம் 1-க்கு ரூ 1ம், இரண்டாவது வருஷம் மாதம் 1-க்கு ரூ 1—8—0ம், மூன்றாவது வருஷம் மாதம் 1-க்கு ரூ 2-மாக 20 ஸ்பெஷல் உபகாரச்சம்பளம், பிரைமெரி பரீக்ஷைதேறி மேல் வகுப்பில் படிக்கும் பிள்ளைகட்கு ஏற்பட்டிருக்கிறது. இவ்விருபது உபகாரச்சம்பளம் மகமதியப் பெண்களுக்கு 5-ம், பிராமணப்பெண்களுக்கு 5-ம், பிராமணரல்லாத மற்ற உயர்தர இந்துப் பெண்களுக்கு 10-மாகப் பங்கிடப்படும். ஒரு ஜாதியாருக் கேற்பட்ட உபகாரச் சம்பளம் முழுதுஞ் செலவாகாமல் மிஞ்சுமானால், அம்மிச்சம் பாக்கி இரண்டுஜாதி பெண்கட்குக் கொடுக்கப்படும்.

மேற்கண்ட உபகாரச் சம்பளத்தின் நிபந்தனைகள் பின்வருமாறு:—

(1) உபகாரச் சம்பளம்பெறும் பிள்ளைகள் சர்க்காரால் அங்கீகாரஞ் செய்யப்பட்ட பள்ளிக்கூடத்தில் ஒருவருஷம் படித்து பரீக்ஷைக்குப் போனவர்களா யிருக்கவேண்டும்.

(2) இந்து, மகமதிய விதவைகளைத்தவிர மற்ற பெண்பிள்ளைகளாயின், வயது பரீக்ஷைகாலத்தில் 14-க்கு மேற்படாமலிருக்கவேண்டும்.

(3) உபகாரச் சம்பளம்பெற்ற பெண்பிள்ளைகள் சென்னை வித்தியா டிபார்ட்மெண்டு சம்பந்தமான சர்க்காரால் அங்கீகாரஞ்செய்யப்பட்ட செகண்டரி பள்ளிக்கூடத்தில் படிக்கவேண்டும். ஸ்பெஷல் உபகாரச் சம்பளமானால் பெற்றோராவது அல்லது கார்டியனாவது, தங்கள் பிள்ளைகள் சர்க்காரால் அங்கீகாரஞ் செய்யப்பட்ட பள்ளிக்கூடங்களில் படிக்கிறதற்கும் வருஷப் பரீக்ஷையில் ஆஜராகிறதற்கும் ஜாமீன்தாரா யிருக்கவேண்டும்.

(4) ஒருவகுப்பில் ஒரேபிள்ளைமட்டும் வாசித்து வருவதாயிருந்தால் அப்பிள்ளைக்கு உபகாரச்சம்பளம் கொடுபடமாட்டாது.

(5) ஒரு பள்ளிக்கூடத்திற்கு பொதுவாய் மூன்றிற்குமேல் புது உபகாரச்சம்பளம் கொடுபடமாட்டாது.

(6) உபகாரச் சம்பளகாலத்தில் போதனாமுறை பாடசாலையில் உபாத்தியாயர் வேலைக்குப் படிக்க பிள்ளைகட்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

### இந்து மகமதிய விதவைகட்கு உபகாரச்சம்பளம்.

உபகாரச்சம்பளம் அடியிற்கண்ட விவரப்படி ஒரு வருஷத்திற்கு சர்க்காரால் அங்கீகாரஞ் செய்யப்பட்ட பள்ளிக்கூடங்களில் படிக்கும் இந்து மகமதிய விதவைகட்கு கொடுக்கப்படும்:—

(1) 3. உபகாரச்சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 4 வீதம் 3-வது வகுப்பில் படிப்பவர்கட்கும்.

(2) 3. உபகாரச்சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 5 வீதம் 4-வது வகுப்பில் படிப்பவர்கட்கும்.



(3) 3. உபகாரச்சம்பளம் மாசம் ஒன்றுக்கு ரூ 6 வீதம் முதல் பாரத்தில் படிப்பவர்கட்கும்.

(4) 3. உபகாரச்சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 7 வீதம் இரண்டாவது பாரத்தில் படிப்பவர்கட்கும்.

(5) 3. உபகாரச்சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 8 வீதம் மூன்றாவது பாரத்தில் படிப்பவர்கட்கும்.

மேற்கண்ட (3), (4), (5)-வது உபகாரச்சம்பளம் பெற்றவர்கள் தங்கள் சொந்த ஊரில் தாங்கள் படிக்கும் வகுப்பில்லாமல் அயலூர்போய் படித்துவருவதா யிருந்தால் அவர்கள் சௌகரியத்துக்கு மாதம் ஒன்றுக்கு ரூ 5 வீதம 6 கார்டியன் அல்லவன்ஸ் ஒருவருஷத்திற்குக் கொடுக்கப்படும்.

(6) 2. உபகாரச்சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 10 வீதம் நான்காவது பாரத்தில் படிப்பவர்கட்கும்.

(7) 2. உபகாரச்சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 11 வீதம் ஐந்தாவது பாரத்தில் படிப்பவர்கட்கும்.

(8) 2. உபகாரச்சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 12 வீதம் ஆறாவது பாரத்தில் படிப்பவர்கட்கும்.

மேற்கண்ட (6), (7), (8)-வது உபகாரச்சம்பளம் பெற்றவர்கள் தங்கள் சொந்த ஊரில் தாங்கள் படிக்கும் வகுப்பில்லாமல் அயலூர்போய் படித்து வருவதாயிருந்தால் அவர்கள் சௌகரியத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ 6 வீதம் கார்டியன் 4-அல்லவன்ஸ் ஒருவருஷத்திற்குக் கொடுக்கப்படும்.

மேற்கண்ட உபகாரச்சம்பளமும் கார்டியன் அல்லவன்சும் கொடுக்கிறதெல்லாம் இன்ஸ்பெக்டரஸ் அம்மாளவர்கள் இஷ்டத்தைப் பொறுத்திருக்கிறது:

### உபகாரச்சம்பளத்தைப்பற்றிய பொதுவிதிகள்.

(1) உபகாரச்சம்பளம் பெறுகிறதற்கு வேண்டிய அப்ளிக்கேஷன் பாரங்கள் இன்ஸ்பெக்டரஸ் அம்மாள் அவர்களிடம் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) உபகாரச் சம்பளத்திற்குச் செய்யவேண்டிய அப்ளிக்கேஷன் இன்ஸ்பெக்டர்ஸ் அம்மாள் அவர்கட்கு உபகாரச்சம்பளம் பெறும் பிள்ளை எந்த ஸ்கூல் மானேஜர் ஸ்கூலிலிருந்து பரீக்ஷைக்கு அனுப்பப்பட்டாளோ அந்த ஸ்கூல் மானேஜர் அல்லது ஹெட்மாஸ்டரால் அந்தப்பிள்ளை படிக்கவிரும்பும் ஸ்கூல்மானேஜர் அல்லது ஹெட்மாஸ்டர் மூலமாய் அனுப்பப்பட வேண்டும். அப்ளிக்கேஷனெல்லாம் தேதி இடப்பட் டிருக்கவேண்டும். ஒவ்வொருவித உபகாரச் சம்பளத்திற்கும் தனித்தனிப் பாரம் உபயோகிக்க வேண்டும். ஒருபாரம் போராவிடில் மற்றொரு பாரம் உபயோகப்படுத்த வேண்டும். அப்ளிகேஷனோடு அது சம்பந்தமான இலட்டர் அனுப்பக்கூடாது.

(3) அப்ளிக்கேஷனெல்லாம் (முன் நடந்த பரீக்ஷை ரிசல்டின்பேரிலானல்) இது விளம்பரமான மூன்று வாரத்திற்குள்ளாவது; அல்லது இவ் விளம்பரத்துக்குப் பின்பு நடக்கும் பரீக்ஷை ரிசல்டின்பேரிலானல், அந்த ரிசல்டு பிரசுரமான மூன்று வாரத்திற்குள்ளாவது அனுப்பவேண்டும். குறித்த தேதிக்குப் பின்வரும் அப்ளிகேஷன் கவனிக்கப்படமாட்டாது.

(4) உபகாரச்சம்பளமெல்லாம் இன்ஸ்பெக்ட்ரஸ் அம்மாள் அவர்களால் சாங்ஷன் செய்யப்படும்.

(5) உபகாரச்சம்பளத்திற்கு தெரிந்தெடுத்த பிள்ளைகளின் பெயர் ஜில்லாகெஜட்டில் பிரசுரிக்கப்படும்.

(6) உபகாரச்சம்பளம் பெற்றவர்கட்கு ஒரு மாதத்திற்கு மேற்படாமல் சிக்லீவ் அந்தஸ்கூல் ஹெட்மாஸ்டரவர்கள் கொடுக்கலாம். ஒருமாதத்திற்கு மேற்படும்பக்ஷத்தில் அதிகப்பட்ட நாட்களுக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கப்படமாட்டாது. உபகாரச்சம்பளப் பிடித்தமின்றி ஒரு வருஷத்திற்கு 15 நாட்களுக்கு மேற்படாமல் தகுந்த காரணத்தின்பேரில காஷுயல் லீவ் கொடுக்கலாம். ஆனால் காஷுயல் லீவ் கெஜட்டு லீவோடு சம்பந்தப்படக்கூடாது.

ஹெட்மாஸ்டரவர்களால் கொடுக்கப்படும் எவ்வித லீவும் இன்ஸ்பெக்டர்ஸ் அம்மாள் அவர்கட்கு உடனுக்குடன் ரிபோர்டு செய்யப்படவேண்டும்.

(7) இந்த நோட்டீசின் பிரகாரம் உபகாரச்சம்பளம் பெற்ற ஒரு பிள்ளையாவது, டைரக்டரவர்களின் ஸ்பெஷல் உத்தரவின்றி, கவர்மெண்டாரால் அளிக்கப்படும் வேறுவிதமான உபகாரச்சம்பளம் முழுவதோ அல்லது பாகமோ அடையப்பெறார்கள். இவ்வித ஸ்பெஷல் உத்தரவு மிகவும் படிப்பில் தேர்ச்சி மிகுந்த பிள்ளைகளுக்குத்தான் கொடுக்கப்படும்.

(8) பரீக்ஷை மெரிட்டின் ஒழுங்குகண்டுபிடிக்கக்கூடாத போதாவது அல்லது உபகாரச்சம்பளத்திற்குரிய பிள்ளைகள், உபகாரச்சம்பளத் தொகைக்கு அதிகப்படும்போதாவது ஸ்கூல் தலைமை உபாத்தியாயர்கள் ஒன்று அல்லது மேற்பட்ட பாடங்களில் பரீக்ஷை வைத்து அதன்பேரில் பிள்ளைகளை தெரிந்தெடுக்கலாம்.

(9) மேற்கண்ட ரூல்களின்படி கொடுக்கப்படும் உபகர்ரச்சம்பளம், சோம்பல், துர்நடத்தை, ஒழுங்கீனம், படிப்பின் தேர்ச்சியின்மை, முதலியவையிருந்தால் நிறுத்தப்படும்.

(10) ஒவ்வொருவித உபகாரச்சம்பளத்திற்கும் தனித்தனி அப்ளிகேஷன் அனுப்பவேண்டும்.

(11) உபகாரச்சம்பளம், அதுபெற்ற பிள்ளை வகுப்பில் சேர்ந்ததேதியிலிருந்து கொடுக்கப்படும். பிள்ளை படிப்பு நிறுத்தினபிறகு உபகாரச்சம்பளம் கொடுபடமாட்டாது.

(12) உபகாரச்சம்பளம் புதுப்பிக்கிற விஷயத்திற்கு வேண்டிய அப்ளிகேஷன், அதற்கென்றேற்பட்ட பாரத்தில் அனுப்பவேண்டும். மேற்குறித்த விதிகளெல்லாம இந்த அப்ளிகேஷனுக்கும் பொருந்தும்.

Palamcottah,<br>29—3—04.

M. A. JUPE,<br>Sub-Asstt, Inpectress of Schools,<br>Tinnevelly Girls' Range.



# இராமாயணசார வினாவிடை.

## 2-வது அயோத்தியாகாண்டம்.

1. வினா.—இராமன் அயோத்தியாபுரிக்குப் போய்ச்சேர்ந்த மேல் நடந்த விசேஷம் என்ன?

விடை.—இராமனுக்கு அயோத்தியாபுரியில் பட்டாபிஷேகம் செய்விக்கத் தசரதர் பிரயத்தனம் செய்தார். அவருடைய பாரியை கைகேயி செய்ததடையினால் அந்தப் பிரயத்தனம் நிறைவேறாமற் போயிற்று.

2. வினா.—கைகேயி எவ்விதம் தடைசெய்தாள்?

விடை.—கைகேயி இடத்தில் மந்தரையென்னும் வேலைக்காரி ஒருத்தி யிருந்தாள்; அவள் முதுகு வளைந்திருந்தபடியால் அவளைக் கூனியென்று அழைப்பதுண்டு. இராமனுக்குப் பட்டாபிஷேகமானால் பரதன் என்றைக்கும் யஜமானனாக வழியில்லையென்றும் இதனால் கைகேயிக்கும் பலத்த அவமானம் நேருமென்றும் கூனி கைகேயிக்குத் துர்ப்போதனைசெய்தாள். அதற்குட்பட்டுக் கைகேயி இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யக்கூடாதென்றும் அவனை 14வருஷ காலம் தண்டகாரணியத்தில் வசிக்கும்படி அனுப்பிவிடவேண்டுமென்றும் தன் மகனாகிய பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்க வேண்டுமென்றும் தசரதனை நிர்ப்பந்தம் செய்தாள்.

3. வினா.—கைகேயி கேட்டுக்கொண்டதற்கு அப்படியே ஆகட்டுமென்று தசரதர் சம்மதித்தாரா?

விடை.—ஆம் சம்மதித்தார்.

4. வினா.—கிரம விரோதமாய்க் கைகேயி கேட்டுக்கொண்டதற்குத் தசரதர் ஏன் சம்மதித்தார்?

விடை.—முன்பு தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம் நடந்தது. தசரதர் தேவர்களுக் குதவியாய் இருந்தார். தசரதர் சம்பராசுரன்போட்ட பாணத்தால் களைத்து விழுந்தார். அப்பொழுது கைகேயி இரதத்தைத் தைரியமாய் நடத்தியதில் தசரதர் களைதீர்ந்து ஜயமடைந்தார். இவ்வுதவிக்காகத் தான் கேட்கும் இரண்டு வரங்களைப் பிறகு கொடுக்க வேண்டுமென்று தசரதனை அப்போது கைகேயி கேட்டுக்கொண்டாள். தசரதரும் அப்படியே தருகிறேனென்று வாக்குத்தத்தம் செய்திருந்தார். இந்தக் காரணத்தால் தான் நியாய விரோதமாயிருந்தாலும் கைகேயின் கோரிக்கைக்குத் தசரதர் சம்மதிக்கும்படி நேரிட்டது.

5. வினா.—கைகேயி இஷ்டப்படி இராமனை வனத்துக்குப் போம்படி தசரதர் கட்டளையிட்டாரா?

விடை.—அப்படிப் போம்படி உத்திரவு கொடுத்தார்.

6. வினா.—இவ்வளவு கொடுமையான உத்திரவு கொடுத்ததைப்பற்றி இராமன் மனவருத்தப்பட்டாரா?

விடை.—[illegible] தசரதர் உத்திரவின்படி நடக்கவேண்டாமென்று இராமனிடம் சொல்லியும் இலக்ஷ்மணனும் அப்படியே தடுத்தும் தாயார் கோசலைக்கும் இராமன் வனத்துக்குப் போவதில் இஷ்டமில்லையென்பதை யறிந்தும் இராமன் பிதாவின் உத்திரவின்படி நடக்கவேண்டியது கருமமென்றும் அந்த உத்திரவிற்கு மீறி நடந்தால் குற்றமாம் என்று சொல்லிவிட்டு வனத்துக்குப் பிரயாணமானார்.

7. வினா.—இராமனுடன் யார் யார் வனத்துக்குப் போனார்கள்?

விடை.—சீதையும் இலக்ஷ்மணனும் போனார்கள்.

8. வினா.—இம்மூன்று பேரும் எவ்வளவுகாலம் வனவாசம் செய்தார்கள்?

விடை.—14வருஷம் வனவாசம் செய்தார்கள்.

9. வினா.—அந்த வனத்தின் பெயர் என்ன?

விடை.—தண்டகாரணியம்.

10. வினா.—பெண்பிள்ளையான சீதை எப்படித் தைரியமாய் வனத்தில் சஞ்சரித்தாள்?

விடை.—வனத்துக்கு வரக்கூடாதென்று இராமன் சீதையுடன் சொல்லியும் அதை யெண்ணாமல் இராமன் நிழலைப்போல் அவனைவிட்டுப் பிரியாதிருப்பதே தன் காரியமென்று வெகு திடமாய்க் கூறிவிட்டு இராமனுடன் வனத்திற்குப் போனாள்.

11. வினா.—இராமன் வனத்துக்குப் போனதைக் கண்டபின் அயோத்தியா நகரத்திலிருந்த ஜனங்களின் சித்தம் எப்படியிருந்தது?

விடை.—ஜனங்களெல்லாம் சகிக்கமுடியாத துக்கத்தோடு இராமனை வனத்திற் கனுப்பக் கூடாதென்று தமசா நதிவரைக்கும் இராமன் கூடவே போனார்கள். அவர்களெல்லோரும் இரவில் பிள்ளைகளுடன் தூங்கும் சமயத்தில் இராமனும் சீதையும் லக்ஷ்மணருடன் அந்த நதியைத் தாண்டிப்போய் விட்டார்கள். விடிந்தபிறகு ஜனங்கள் மிகுந்த கிலேசத்துடன் அயோத்திக்குத் திரும்பி வந்துவிட்டார்கள். சுமந்திரர் ஒருவர்மட்டும் கங்கை நதிவரைக்கும் இராமனுடன் போய்விட்டுத் திரும்பிவிட்டார்.

12. வினா.—இராமன் சுமந்திரரிடம் தசரதருக்குச் சொல்லும்படி சமாசாரம் ஏதாவது சொல்லி யனுப்பினாரா?

விடை.—பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்க வேண்டுமென்றும் தான் வனத்தில் வசிப்பதைப்பற்றி விசனப்படக் கூடாதென்றும் கைகேயி வனவாசம் செய்வித்தவளானாலும் அவள்மீது கோபங்கொள்ளாது பிரீதியுடனிருக்க வேண்டுமென்றும் இராமன் தன் பிதாவாகிய தசரதருக்குச் சமாசாரம் சொல்லியனுப்பினன்.

13. வினா.—இந்த சமாசாரத்தைக் கேட்டபிந்த மேல் தசரதர் எந்த விதத்தியிலிருந்தார்?

விடை.—தான் இளவயதில் வேட்டையாடியபோது ஒரு பால குமாரனை இசைவுகேடாய்ப் பாணத்தைப் பிரயோகித்துக் கொன்றுவிட்டதாயும் அப்பாலகனுடைய பிதா கொடுத்த சாபத்தால் தான் இப்பொழுது தன் புத்திரனைவிட்டுப் பிரிந்து தனியே சோகமடையும்படி நேர்ந்ததென்றும் தசரதர் பல படியாய்த் துக்கப்பட்டுக்கொண்டிருந்தார்.



14. வினா.—இராம லக்ஷ்மணர்கள் தண்டகாவனம் போன மேல் பரதனும் சத்துருக்கனும் எங்கே யிருந்தார்கள்?

விடை.—அவர்கள் தங்கள் மாதுலராகிய (தாய்மாமன்) யுதாசித்தின் கிரகத்திலிருந்தார்கள். இராமன் வனத்திற்குப் போனதையும் அதைச் சகிக்காதே தங்கள் பிதா தசரதர் மரணமடைந்ததையும் இவர்கள் கேள்விப்பட்டு அயோத்திக்குத் திரும்பிவந்து துயர்க்கடலில் மூழ்கினார்கள். பரதனைப் பட்டாபிஷேகம் செய்துகொள்ளும்படி பிரதானிகள் மந்திரிமார் பல விதமாய்க் கேட்டுக்கொண்டதற்கு தனக்கு மூத்த தமயன் இராமனிருப்பதால் அவனைத் தள்ளிவிட்டுத் தான் பட்டங் கட்டிக்கொள்ளுதல் அடாதென்று பரதன் சொல்லிவிட்டான்.

15. வினா.—பரத சத்துருக்கினர்கள் இராம லக்ஷ்மணர்களைப் பார்த்து வர வனத்துக்குப் போனார்களா?

விடை.—பரதன் தன் பிதாவின் மரணக்கிரியைகளை நிறைவேற்றிவிட்டுச் சத்துருக்கனுடன் போய் வனத்திலுள்ள சித்திரக்கூட பர்வதத்தில் சீதா ராம லக்ஷ்மணர்களைக் கண்டான். சகிக்கமுடியாத துக்கத்தோடு பரதன் இராமனை அயோத்திக்குத் திரும்பிவரும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டான்.

16. வினா.—இராமன் அதற்குப் பதில் என்னசொன்னார்.

விடை.—பிதாவின் சட்டளைப்படி நான் 14வருஷம் வனவாசம் செய்ய வேண்டி யிருப்பதால், ஏபரதா! நீ அயோத்திக்குப் போய் இராச்சியத்தை ஆளவேண்டுமென்று இராமன் சொல்லிவிட்டுப் பரத சத்துருக்கனர்களை அயோத்திக் கனுப்பிவிட்டார்.

17. வினா.—அயோத்தியில் பட்டாபிஷேகம் செய்துகொள்ளப் பரதன் சம்மதித்தானா?

விடை.—பரதன் சம்மதிக்கவில்லை. இராமன் பாதுகைகளுக்கு அபிஷேகம் செய்வித்து அவைகளே அரசுஎனப் பாவித்து அயோத்தி நகரத்தின் எல்லைக்குள் நுழையாது நந்திக்கிராமத்தில் தங்கி வீரவிரதத்தோடு பரதன் இராச்சிய காரியங்களை நடத்திவந்தான்.

18. வினா.—இவ்வாறு பரதன் நந்திக் கிராமம்போய்ச் சேர்ந்த மேல் இராம லக்ஷ்மணர்கள் எங்கே யிருந்தார்கள்?

விடை.—அவர்கள் தண்டகவனத்திற்குப் போய்விட்டார்கள். மறுபடியும் ஜனங்கள் வராதிருக்கவே மலையை நீங்கி வனத்திற் புகுந்தனர்.

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர்.

# பத்திராதிபர் குறிப்பு.

நமது மகாராஜா அவர்களின் வருஷப்பிறப்பு தினத்தில் அநேகருக்கு கௌரதா பட்டங்களளிக்கப்பட்டன. அவர்களில் மிக முக்கியமானவர்கள் மிஸ்ஸஸ் E. A. மானிங், மிஸ்ஸஸ் R. A. பென்ஸன் என்ற மாதர்கள். மிஸ்மானிங் என்ற மாது நேஷனல் இந்தியன் சபைக்கு கௌரவ காரியதரிசியார். மிஸ்ஸஸ் R. S. பென்ஸன் சென்னை ஐகோர்ட் ஜட்ஜியாகிய கனம் மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸனவர்களின் மனைவியார். நேஷனல் இந்தியன் சபைக்கு மிஸ்மானிங் மிக உழைத்து வருகிருர். மிஸ் கார்பென்டர் என்ற பரோபகார சிந்தைவாய்ந்த மாது சிரோன்மணி இறந்தபொழுது, அச்சபை இனி விருத்திக்கு வராதென்றும் அது அழிந்துபோய்விடுமென்றும் யாவரும் இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நினைத்தார்கள். ஆனல் மிஸ்மானிங் தமது சகோதரிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்றும் அவர்கள் உன்னத பதவியை அடைய ஏற்பாடும் செய்யநினைத்து மிஸ்ஸஸ் கார்பென்டர் செய்துவந்த தர்ம வேலையை ஒப்புக்கொண்டு இதுவரையிலும் மனதளர்ச்சியடையாமல் செய்துவருகிருர்கள். இந்தியாவில் மிஸ் மானிங் இங்கிலாந்திலுள்ள சபைக்குக் கிளைச்சபைகளை பல முக்கியமான பட்டணங்களில் ஸ்தாபித்திருக்கிருர்கள். அச்சபைகள் இங்குள்ளவர்களால் நன்ருக நடத்தப்பட்டு வருகின்றன. இம்மாதுக்கு இந்தியர்களிடத்தில் மிகப் பிரியமும் அவர்கள் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமென்ற எண்ணமுமுண்டு. இதற்காகவே இங்கிலாந்தில் பற்பல மார்க்கமாக உழைத்துவருகிருர்கள். இம்மாதுக்கு நமது எட்வர்ட் சக்கிரவர்த்தியவர்கள் கேசரி ஹிந்த் பதக்கம் அளித்ததைப்பற்றி யாவரும் சந்தோஷப்படுகிருர்கள்.

மிஸ் E. A. மானிங் அண்டு மிஸ்ஸஸ் பென்ஸன்.

மிஸ்ஸஸ் பென்ஸன் அம்மாளைப்பற்றி நமது சகோதரிகளுக்கு நன்ருகத் தெரியும். இம்மாது அடிக்கடி சென்னையில் பெண்கல்வி விஷயமாக பிரசங்கங்கள் செய்திருக்கிருர்கள். இதுவுமன்னியில் "இந்தியன் லேடிஸ்மகாஸின்" என்ற பத்திரிகைக்கும் அடிக்கடி விஷயதானம் செய்திருக்கிருர்கள்.

இம்மாது எப்பிரல் மாதம் பெண்கல்வி விஷயமாகச் செய்த பிரசங்கம் மொழிபெயர்க்கப்பட்டு மேமாதப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது யாவருக்கும் தெரியும். இந்திய ஸ்திரீகளின் கல்வி விருத்தியைப்பற்றியும் அவர்களின் யோகக்ஷேமத்தைப்பற்றியும் இந்த மாது அநுதாபம் காட்டிவருகிருர்கள். மேலும் இம்மாது அடிக்கடி கோஷா ஆஸ்பத்திரி சென்னையிலுள்ள பெண்கள் பாடசாலைகள் முதலியவைகளுக்குச் சென்று விசாரித்துவருகிருர்கள். இவைகளெல்லாம் இந்திய ஸ்திரீகளிடத்தில் அம்மாது வைத்திருக்கும் அன்பைக் காட்டுகிறதல்லவா? இவ்வித நற்குணமும் பரோபகார சிந்தையும் வாய்ந்த மாதுக்கும் கௌரதா பதக்கமளித்ததைப்பற்றி சந்தோஷப்படாதாரில்லை. இவர்களிருவரும் நீடூழிவாழும்படி கடவுள் அநுக்கிரஹிப்பாராக.

***

பாலிய விவாகச் சட்டம்.

பரோடாவில் சென்ற வருஷம் மகாராஜா அவர்கள் விவாகசம்பந்தமாக ஒரு சட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று எண்ணி அவ்விதமே சிலவிதிகளை ஏற்படுத்தி அவைகளை பொதுஜனங்களபிப்பிராயத்திற்காக அனுப்பியிருந்தார். முதலில் பெண்ணுக்கு 12-வயதும் பிள்ளைக்கு 16-வயதுமிருக்கவேண்டுமென்றிருந்ததை ஜனங்கள் சம்மதிக்கவில்லை. ஆனல் பெண்ணுக்கு 10-வயதிருந்தால் நலமென்றும் அபராதம் கூடாதென்றும், இதற்குமீறி விவாகம்செய்தால் பெண்ணையாவது அல்லது பிள்ளையாவது பரீக்ஷைசெய்யக் கூடாதென்றும் பலர் அபிப்பிராயப்பட்டார்கள். காருண்ணிய மகாராஜா அவர்கள் பெண்ணுக்கு ஒன்பது வயதும் பிள்ளைக்கு 16-வயதுமிருக்கவேண்டுமென்றும், பரிக்ஷை நடத்தப்படாதென்றும், இந்த விவாக சட்டத்திற்கு மீறி விவாகம் செய்பவருக்கு ரூபா பத்து அபராதம் விதிக்கப்படுமென்றும் இச்சட்டம சென்ற மாதம் 27உ முதல் ஊர்ஜிதத்திற்கு வருமென்றும் சொல்லி தமது தர்பாரில்



சென்ற மாதம் 15உ யன்று இதை ஒரு சட்டமாகச் செய்தனர். இம்மாதிரியே மைசூரிலும் ஒரு சட்டம் 10 வருஷத்திற்கு முன் ஏற்படுத்தப்பட்டு அது அந்த இராஜ்ஜியத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. "பத்து வருஷத்திற்குமுன் குழந்தை பொம்மைகளுக்கு கலியாணம்செய்து விளையாடுவதுபோல் சிறிய குழந்தைகளுக்கு விவாகம் நடத்தப்படுவதில்லையென்றும், கைம்பெண்களின் தொகையும் இப்பொழுது மிகக்குறைந்திருக்கிறதென்றும்" நாம் அந்த இராஜ்ஜியத்திலுள்ள ஒரு அஸிஸ்டென்ட் கமிஷனருடன் சம்பாஷணை செய்ததில் தெரியவந்தது. இவ்விதமே பரோடாராஜ்ஜியத்திற்கும் நன்மை பயக்குமென்று நம்புகிரேம்.

***

பெண்களுக்கு உபகாரச் சம்பளம்.

இந்து மகம்மதிய கைம்பெண்கள் கல்விகற்று உபாத்திமார்களாக விருப்பதற்கு அவர்களுக்கு கவர்ன்மெண்டார் உபகாரச்சம்பளம் கொடுத்து உதவி புரிந்தால் நலமென அபிப்பிராயப்பட்டு மிஸ். இ. கார் என்ற மாது கனம். டைரக்டர் அவர்களுக்குச் சென்ற வருஷத்தில் தெரிவித்தபொழுது கனம். டைரக்டரவர்களும் இதை அங்கிகாரம் செய்தாரென்பது யாவருக்கும் தெரியும். இவ்வருஷத்தில் அவ்விதம் பாடசாலைகளில் படிக்க மனமுள்ள இந்து மகம்திய கைம்பெண்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். அதன் விபரம் நமது பத்திரிகையில் காணலாம். இந்த நற்காரியத்தைச் செய்த மிஸ் காரம்மாளுக்கும், கனம். டைரக்டரவர்களுக்கும் நாம் மிக்க நன்றி பாராட்ட உரியவர்களாயிருக்கிரேம்.

# சமாசாரக் குறிப்பு.

அமெரிக்காவிலிருந்து வருஷந்தோறும் 6-கோடி பொய்ப்பற்கள் செய்து ஏற்று மதியாகிறதாம்.

***

இந்தியா கவர்ன்மெண்டானது 300-லக்ஷம் ரூபாய் கடன்வாங்கத் தீர்மானித்திருக்கின்றது.

***

சமுத்திரங்களிலெல்லாம் ஆழமான பாகம் குவாம் என்றவிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் ஆழம் சற்றேறக்குறைய ஆறுமைலாம்.

***

உலகத்தில் ஒவ்வொரு நூறு சதுரமைல் விஸ்தீரணமுள்ள இடத்திலும் 31 சதுரமைலுள்ள இடம் நமது எட்வர்ட் மகாராஜாவின் அதிகாரத்துக்குள்ளிருக்கிறது.

***

ஆங்கிலம் கற்ற தமிழாபிமானிகள் தங்கள் மனைவிமார்களுக்கு உயர்தரக் கல்விபுகட்டி வருகிறவர்கள் சிலர்தானிருக்கிருர்கள். மற்றவர்களும் ஏன் இவ்விதம் செய்யக்கூடாது?

***

பெங்காள மாகாணத்தைச் சேர்ந்த மேமான்ஸிங் ஜில்லா ஷேர்பூர் ஜமீன்தார் பாபு கோபால்தாஸ் சௌதாரி சிறந்த தேஸாபிமானி. அவ்வூரிலிருக்கும் பெண்பாடசாலை சரியாக நடவாது சீர்கெட்டிருந்தமையால் இவர் அப்பாடசாலையை நடத்தவும் பெண்கள் சம்பளம் கொடுக்காமல் இனமாக படிக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறதைக் கேட்கச் சந்தோஷப்படுகிரேம்.

***

கோயமுத்தூரில் பெண்பாடசாலைக்காக ஒருபெரிய கட்டிடம் கட்டி முடிந்தது. இவ்விராஜதானியில் பெண்பாலர்க்கு ஏற்பட்டிருக்கும் கட்டிடங்களில் இது சிலாக்கி

யமானதொன்று. இதைத்திறக்கும்போது ம...ம்புத்தூர் சப்ஜெட்ஜ் ம-ா-ா-ஸ்ரீ சதாசிவ ஐயரவர்கள் மனைவியாரும் நமது ஆப்தர் மிஸ்டர். சே. ப. நரசிம்மலுநாயுடு அவர்களின் மனைவியாரும் பெண்கல்வி விஷயத்தைப்பற்றி வெகு நன்றாகப் பேசினார்கள்.

***

சென்ற மாதத்தில் மிஸ்டர் F. W. கெல்லட் பாதிரியார் இறந்ததாகக் கேட்க மிக விசனிக்கிறோம். அவர் நம்மிந்துக்கள் கல்வி நாகரீகங்களில் விருத்தியடையும் பொருட்டு சென்ற பத்து, பனிரெண்டு வருஷங்களாக மிக முயன்றார். உபாத்தியாயர்கள் ஸ்திதியை செரிப்படுத்தவும் அவர்களுக்குள் பரஸ்பரம் நல்லெண்ணம் உண்டாகவும் சென்னை உபாத்தியாய சங்கத்தைஸ்தாபிக்க மூலபூதராயிருந்தவர்தான். இவர்மரணம் சென்னை வித்தையிலாகாவுக்கே ஒரு பெரும் நஷ்டத்தை விளைத்தது.

***

பரோடா தேசத்து மகாராணியாரவர்கள் ஆகஸ்டுமீ முதல் வாரத்தில் பூனாவிலுள்ள பெண்கள் ஸ்கூலைப் போய் பார்வையிட்டார்கள். அச்சமயத்தில் பெண்களுக்கு உபாத்திமார்கள் போதிப்பதை நன்றாக கவனித்ததுடன் தாம் இன்னொருதடவையும் அப்பாடசாலையைப் பார்க்கவருவதாகவும் சொல்லிச் சென்றார்கள். சென்னையிலுள்ள உயர்ந்த வம்சத்தைச் சேர்ந்த மாதர்கள் இவ்விதம் செய்துவருவார்களானால் பெண்கள் விருத்திக்குவர தடையென்ன ?

## புதுப் புத்தகவரவு.

மாதர் மனோரஞ்சனியில் இராமாயணசார வினாவிடை எழுதிவரும் தமிழ்ப்பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ தி. வெங்கடராம ஐயங்காரவர்கள் வில்லிபுத்தூரர்-பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் இவ்விரண்டு பாவலர்களின் சரித்திரத்தைத் தமிழில் இனிய வசனநடையில் எழுதி வெளிப்படுத்தியிருக்கின்றனர். விலை தபாற்கூலி யுள்பட பிரதி ஒன்றிற்கு அணா ஏழு ஆகின்றது. வேண்டுவோர் சென்னை கிருஷ்ணன் கோயில் 27-ம் நெம்பர் வீட்டிலிருக்கும் அவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

நமது நாட்டுப் பெரியோர்களின் சரித்திரமும் தேசசரித்திரமும் நாடெங்கும் நன்னடையைப் பரவச்செய்பு மாதலால் இப்புதிய சரித்திரத்தை மாதர்களும் புருடர்களும் தமிழ்க்கல்வியில் கண்ணோக்கம் வைத்துள்ளவர்களும் படித்து ஆநந்தித்துப் பலன்பெறலாம்.

☞ மற்ற புஸ்தகங்களின் அபிப்பிராயம் அடுத்தப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.—ப. ர்.

## விடை.

சத்தியமே நம் குலதெய்வம். "ஒரு மனிதனை இரண்டு குற்றத்துக்குள்ளாக்கி அதில் ஏதாவது ஒரு குற்றஞ் செய்திருக்கவேணும் அது எதென்று நிச்சயப்படாமற்போனால் எந்தக் குற்றத்திற்கு இலகுவாயுள்ள தண்டனையுண்டோ அந்தத் தண்டனையைத்தான் கொடுக்கவேணுமென்று நியாயமும் சட்டமும் சொல்லுகிறது. அதாவது ஒரு கைதியிடத்தில் கூடியமட்டிலும் தயவு காண்பிக்கவேண்டும். இதை யனுசரித்தால் இந்த வழிப்போக்கனை ஒரே குற்றத்திற்காக சிம்மத்துக் கிரையாக்கவும்வேணும். விட்டுவிடவும் வேணும் என்று கண்டிருப்பதால் அவனுக்கு இலகுவாயுள்ள அல்லது அநுகூலமாயுள்ள சிட்சைகொடுக்கவேணும். அதாவது நியாயப்படி அவனைவிட்டுவிடவேணும்.

கோகிலா.

Printed at the Ripon Press Madras & Puplished by the Proprietor,
C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

...ரி.

...ளவையார்.

.904. No. 9.

...பர்மீ 1904. இல. 9.

## ...படித்து வரவேண்டும்.

...ன்கல்வி இப்பொழுது பரவிக்கொண்டு வருகிறதென்றுசொல்ல இடமிருக்கிறது. ஆனால் உயர்தரக் கல்வியில் நமது பெண்கள் தேர்ச்சியடையவில்லை. ஆயினும் இப்பொழுது பெண் கல்வி விஷயமாக ஒருவரும் இகழ்ந்து பேசுவதில்லை. ஏழை வீட்டு பெண்களும் கல்விகற்க பாடசாலைக்கு அனுப்பப்படுகிறார்கள். மேலும், இக்காலத்தில் கிராமந்தோறும் வேதாப்பியாசம்செய்து வைதீக அநுஷ்டானங்களை முறைதவறாது நடத்தி வருவதிலேயே ஊக்கமுள்ளவர்களும் நவீன நடவடிக்கை யாதொன்றும் தெரியாதவரும் அங்கிலேய பாஷையின் வாசனையேனு மறியாத வருமானவர்களாகிய குக்கிராமவாசிகளும்கூட ஊரிலுள்ள ஆண்குழந்தைகளுக்கு ஏற்பட்ட சிறு பாடசாலைகளுக்காவது தங்கள் பெண்குழந்தைகளை யனுப்பி அவர்கள் எழுத்துக்கூட்டி வாசிப்பதையும் அவர்கள் துணிகளில் சித்திரம் போடுவதையும் கண்டு பேரானந்தம் கொள்ளுகிறார்கள். இதுமாத்திரமா? எள் விழுந்த இடத்தைத் தேடிப்பார்க்கும் பிறர்க்கொருகாசு கொடுத்தறியாத கிருபண சிரோமணியுங்கூடத் தனது பெண் துணியில் நூலால் சித்திரம் போட்டிருப்பதையும் பாசியால் தாம்பாளம் முதலிய விசித்திரமான வேலைகள் செய்திருப்பதையும் பார்த்து அவள் கைத்திறத்தையும் சாதுரியத்தையும் புகழ்ந்து அவ்வேலைகள் கெட்டழிந்து போகாமலிருக்கும்பொருட்டுப் பணம் செலவழித்து கண்ணாடி போட்டும் இன்னும் பற்பலவிதமாகக் காப்பாற்றிவைத்தும் உற்று உற்றுப்பார்த்து ஆநந்தமடைகிறான். இன்னும் இம்மாதிரியான அதிசயமானவைகளையும், தன் பெண்போட்ட குல்லா பைகள் முதலியவைகளையும் பெண் தன் புருஷன் வீட்டுக்குப் போகும்போது சீராகப் பெண்ணுடன் அனுப்பவும் செய்கிறான். ஆனால் படிப்பில்லாமல் ...வகள்மாத்திரம் நமது பெண்களுக்குத் தெரிந்தால் போதுமா?

...பெண்கள் கையினால் இவ்வித வேலைகளைச் செய்வதினால் கண் பார்வை ...கரிக்கிறது; எப்பொழுது கண் பார்வை அதிகரிக்கிறதோ அப் ...து புத்தியும் விசாலப்படும். எப்பொழுது புத்தி விசாலப்படுகிறதோ ...ழுது கல்வி அதிகமாக கற்க அவர்களுக்கு ஆவலுண்டாகும். இதை

விருத்தி
மெட்டிரு
புகிறார்களோ
வரவேண்டும். இவ
றோர்ந்து நல்லமனைவிக
நாம் செய்துவராவிடின்
சிலர் பெண்கள் பாட
றிந்த மாதர்கள் வேண்டிய அ
கள். சிற்சில விடங்களில் இப்பொ
கூடியசீக்கிரத்தில் இக்குறை அடியோ
கிறது. மிஸ்கார் என்றமாது சிரோன்மணியை
ர்ன்மெண்டார் இந்துமகமதிய கைம்பெண்களுக்கு உ
டுத்து அவர்களை உபாத்தியாயர்களாக விருக்கப் போதனாமுறை
லைகளில் சேர்ப்பித்து கல்வி போதித்துவர ஏற்பாடு செய்திருக்க
ருக்கும் தெரியும். இவ்வித ஏற்பாட்டால் நமது பெண்மணிகளுக்கு
பயக்குமென்றே சொல்லுவோம். ஆனால் எப்பொழுதும் குறைப்படி
அதிக லாபமுண்டாகமாட்டாது. இவ்விஷயம் நம்மவர்களுக்குத் தெ
ஆகையால் நம்மவர்கள் தங்கள் குமாரத்திகளை பெண்பாடசாலைகளு
அனுப்பி உயர்தரக்கல்வி புகட்டிவர முயலவேண்டும்; அப்பொழுதுதான்
அவர்களுக்கு அறிவு விசாலித்திருக்கும்.

இச்சென்னை பிரசிடென்சி காலேஜியில் தெலுங்கு பண்டிதராயிருந்து பென்ஷனடைந்த ராவுபஹதூர் K. வீரேசலிங்கம் பந்துலு அவர்கள் இராஜமகேந்திர புரத்தில் பெண்களுக்கு ஒரு லோயர்சகண்டெறி பாடசாலை ஏற்படுத்தப்போகிறதாகவும் இந்தியப்பெண்மணிகளுக்கு மிகப் பிரயோஜனப்படக்கூடிய புஸ்தகங்களை எழுதப்போவதாகவும் ஏற்பாடு செய்திருக்கிறதைக் கேட்க மிகச் சந்தோஷப்படுகிறோம. இவரைப்போன்றவரெவராயினும் தமிழருக்கு நன்மைசெய்ய எப்பொழுது முன்வருவரோ?

# சந்திரமதி.

## இரண்டாம் களம்.

இடம் விஸ்வாமித்திரருடைய ஆச்சிரமம்.

விசு.—(தன்னிலே யுரைக்கின்றார்) சொல்லுவது எவ்வளவு எளிது; சொல்லியவண்ணம் செய்வது எவ்வளவு கஷ்டம்? நான் எவ்வளவோ அனுபவசாலியாக இருந்தும் எனக்கு இவ்
மை யறியும் புத்தியில்லாமற் போயிற்றே! எவ்வள
டாள்தனமாக,இந்திரசதசில்சபதம்செய்துவந்துவி
அந்த வசிஷ்டன் இருக்கின்றானே என் ஜென்மவி
அவன் எப்பொழுதும் தான் சொல்வதை அறிந்தே



றாகின்றான். இவ்விஷயத்தில் எனக்குத் தோல்விதான் சித்திக்கும்போல இருக்கின்றது. அவ்வரிச்சந்திரனைப்பற்றிக் கண்டும் கேட்டும் அறிந்தவற்றைக் கொண்டு ஆராய்ந்தால் நம்காரியம் சிறிதாயினும் பலிப்பதாகக் காணவில்லை. சிரமமெல்லாம் வீணாகத்தான் போகும்போலக் காண்கின்றது. ஆதலின் இப்பிரயத்தனத்தை இப்போதே கைசோர விட்டுவிடட்டுமோ? என்ன எடுத்த காரியத்தை இடையே நான் விட்டுவிடலாமா? என்ன விசுவாமித்திரனாகிய நான் அப்படிச் செய்யவா; கூடாது! கூடாது! ஒருபோதும் கூடாது! எடுத்ததை இடையேவிட்டான் என்ற பெயர் விசுவாமித்திரனுக்கு ஒருபோதும் வரவேகூடாது. செலிக்கட்டும் தோற்கட்டும் எடுத்த காரியத்தைக் கடைபோகப் பார்த்தே தீரவேண்டும். இறுதியில்தோல்விதான் வருமென்று கண்டிருந்தும் எடுத்தகாரியத்தை இடையில் சோரவிடாது கடைசிவரை ஒருகை பார்த்தே தீர்த்தான் விசுவாமித்திரன்என்று என்னைப்பற்றி ஜனங்கள் சொல்லிக்கொள்ளட்டும். இதாவது ஒரு திருப்தி எனக்கிருக்கட்டும். ஆனால் விஷயத்தை எப்படித் தொடங்குவது என்பதல்லவா எனக்கு விளங்கவில்லை; அதில்தானே இருக்கின்றது கஷ்டம். எனது விவேக முழுதும் செலுத்திப்பார்க்க வேண்டும். கார்யமென்ன சாமான்யமானதா? இதனுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் ஓர் சொர்க்கம் சிருஷ்டித்துத் தந்ததும் கூட ஒரு பெரிய காரியமல்லப் போலிருக்கின்றது. அரிச்சந்திரனை ஆயிரம் பொய் உரைக்கச் செய்வதாக அல்லவா சபதஞ்செய்துவிட்டேன்; ஆயிரம்பொய்!! இருக்கட்டும் முதலாவது ஒரே ஒரு பொய் உரைக்கச் செய்துவிட்டால் போதும்! அதற்குத்தான் வழி பார்க்கின்றேன். ஆரம்பிக்கும் வகையல்லவா தெரியவில்லை. எப்படி ஆரம்பிக்கிறது? எல்லாத் தீர்மானமும் செய்துவிட்டேன் காரியத்தை ஆரம்பிக்கும வழியல்லவா கஷ்டமாக இருக்கின்றதிப்போது. அஸ்திபாரம் சரியானதாக இருக்கவேண்டும்; ஏனென்றால் கட்டடமுழுதும் அதன்மேலே தானே ஏறவேண்டி யிருக்கின்றது.

[நாரதர் பிரவேசம்]

நார:—என்ன விசுவாமித்திரரே, இன்னும் இங்குதான் ஆலசியம் பண்ணிக்கொண்டிருக்கின்றீர்? இதற்குள்ளாக நீர் உம் பந்தயத்தைக் கெலித்தாயிருக்குமென்றல்லவா நான் நினைத்தேன்?

விசு:—நாரதமுனியா வாரும். வாரும் உம்முடைய பரிகாசமொன்றும் இப்போது வேண்டாம். அதற்கிது சமயமல்ல. நான் இப்போது அதற்கேற்ற ஸ்திதியில் இல்லை.

நார:—சரி. அப்படியானால் அன்று அவசரப்பட்டுச் சபதம் செய்து வந்துவிட்டு இப்போது அதை நிறைவேற்றுவதற்கு வகைதெரியாமல் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறீரென் றேற்படுகின்றது. அதற்கு நீர் ஆரம்பத்திலேயே நமக்கென்ன என்றிருந்திருக்கலாமே? மவுனமாயிராமல் வாயைத் திறந்து வம்புபேசியல்லவா இப்போது அகப்பட்டுக்கொண்டு விழிக்கிறீர்.

ஜெயம் வசிஷ்டருக்குத்தான் என்று அப்போதே சிலர் பேசிக்கொண்டார்கள்.

விசு:— என்ன விசுவாமித்திரன் வசிஷ்டனுக்குப் பின்வாங்கி விடுகிறதா? அது ஒருபோதும் முடியாது. என்ன வந்தாலும் வரட்டும். நாரதரே! இங்கேபாரும் உம்மை மகா விவேகியென்று நான் எப்போதும் அங்கீகரித்திருக்கின்றேன். உம்முடைய விவேகத்தால் ஆராய்ந்து உமது இஷ்டனாகிய எனக்கு ஒரு உபகாரம் பண்ணும் பார்க்கலாம். அவ்வரிச்சந்திரனுடைய வாயிலிருந்து ஒரே ஒரு பொய் வருவிக்கத்தக்கதாக ஓர் மார்க்கம் சொல்லும்.

நார:—ஓ! ஓ! ஆயிரம் பொய்களும் இதற்குள்ளாக ஒரே ஒருபொய்க்குள்ளாகவா வந்தொடுங்கின?

விசு:—வேடிக்கைபண்ணாதேயும். காரியத்தைப்பேசும். இந்த உபகாரம் பண்ணக்கூடாதா நீர்?

நார:—சரி, உண்மையாய்ச் சொல்லுகிறேன் கேளும். உம்முடைய க்ஷேமத்தைக் கருதிச் செய்யக்கூடிய உபகாரம் இதுதான். இந்த விருதாவான பிரயத்தினத்தை இம்மட்டோடே விட்டுவிடும்; ஏனென்றால் இக்காரியத்தில் நீர் ஓர்போதும் ஜெயமடையப் போவதில்லை. தோல்விதான் உமக்குச் சித்திப்பது. சமுத்திரத்தின் அலைகளை அடக்கலாம்! காலத்தையும் கடந்துபோகாவண்ணம் தடுக்கலாம்! விதியை மாற்றலாம்! ஆனால் ஒருபொய்யையேனும் அந்தச் சத்ய விரதனாகிய அரிச்சந்திரனது வாயிலிருந்து வருவிப்பது மட்டும் சாத்தியமல்ல. ஆதலின் இக்காரியத்தை இம்மட்டிலேயே விட்டுவிடுவதுதான் புத்திமானுக்கழகு.

விசு:—விட்டுவிடவா? அது என்னால் முடியாது. நீர் சொல்லுவதெல்லாம் வாஸ்தவமாகஇருந்தாலும் கூடப் பின்வாங்கிச் செல்லுதற்கு இதுஅல்லதருணம் அது தப்பிவிட்டது. ஒன்றைத் தொடங்கிவிட்டால் என்ன நஷ்டம் வந்தபோதிலும் அதைக் கடைசிவரையில் நடத்தித்தான் பார்ப்பேன்.

நார:—ஆம், நீர் ஓர் காரியத்தில் க்ஷத்திரியராக இருந்தவரென்பதை மறந்துவிட்டேன். அந்த வமிசத்துக்குள்ள ரோஷம் உம்மைவிட்டுப் போகுமா? போகாது. போகாது.

விசு:—ஐய, இவ்வளவுதானோ நீர் எனக்குச் செய்யக்கூடிய உபகாரம்? அவ்வரிச்சந்திரனை அசத்தியத்திற்குட்படுத்தக் கூடிய தந்திரம் ஒன்றுகண்டு சொல்ல உம்மால் முடியாதா? உமக்கு உள்ளபடியே என்மீது விசுவாசம் இருக்கும் பக்ஷத்தில் எப்படியாவது ஓர் மார்க்கம் கண்டுகூறும் பார்ப்போம்.

நார:—(மேலேபார்த்து ஆலோசித்துக்கொண்டு) பார்க்கலாம்—வருகிறேன் சரி—ஆம். நீ அவ்வரிச்சந்திரனை அடைந்து ஓர் பெரிய யாகம் செய்தற்குத் திரவிய உபகாரம் செய்யவேண்டுமென்றுகேள். மகரிஷிகள் கேட்பதொன்றையும் அவன் மறுக்கமாட்டான். அவன் ஆகட்டும் என்று சொல்லி



யதும் ஓர் அரசனால் நிர்வகிக்க முடியாத பெருந்தொகைத் திரவியத்தை அதற்கு வேண்டுமென்று குறிப்பிடு. அப்போது அவன் அவ்வளவு திரவியம் உதவமாட்டாமல் விழிப்பான். அவனை இச்சங்கடத்தில் அகப்படுத்திக்கொண்டு பின்பு சாத்தியமானால் ஒரு பொய் வருவிக்கப் பாரேன்.

விசு:—ஆம். அதைப்பற்றிச் சற்றே சிந்தித்துப் பார்க்கட்டும் (சிந்திக்கின்றான்)— சரி நாரதரே இனி நீர் போய்வாரும்.

நார:—சரி அப்படியே போய்வருகின்றேன். ஆனால் என் எச்சரிக்கையை மட்டும் மறந்து விடாதேயும். உம்முடைய கர்மத்தால் இறுதியில் உமக்குத் தோல்விதான் சித்திக்கும். [போய்விடுகின்றார்.]

விசு:—கர்மமாவது இன்னொன்றாவது. அதெல்லாம் என்னை என்ன செய்யக்கூடும்? நாரதன் சமர்த்தனே; நல்ல யோசனை சொன்னான். சற்று ஆலோசித்துப் பாரக்கலாம். [ஆலோசிக்கின்றான்.] சரி இப்பிரேரேபணையைப் பிடிகையாக வைத்துக்கொண்டு காரியத்தைத் தொடங்கிவிடலாம்; மேல் நடக்கவேண்டியவைகளையெல்லாம் அவ்வப்போது தருணத்துக்குத் தக்கவாறு ஆலோசித்துச் செய்து கொள்ளலாம். எல்லாவற்றையும் இப்போதே சிந்தித்தேற்படுத்திக்கொள்ளுவது சாத்தியமல்ல. இனி தாமதித்திருப்பதும் சரியல்ல. அந்தக் கலகப்புலியாகிய நாரதன் ஒருவேளை அவ்வரிச்சந்திரனது சதசுக்குப்போய் நம்மைப்பற்றி ஏதாவது உளறிவைத்தாலும் வைப்பான். ஏதோ கா்ரியத்தைத் தொடங்கி விட்டேன். அதன்முடிவு எப்படி யிருக்குமோ அது யார்க்குத் தெரியும். அது எப்படி யாயினும் சரி இதோ இந்தக்ஷணமே அரிச்சந்திரன் சதசுநோக்கிச் செல்லுகின்றேன். [செல்லுகின்றார்.]

## மூன்றாங் களம்.

இடம்:—அயோத்தியாபுரி.

[சந்திரமதி தனது பள்ளியறையுள் நித்திரைபுரிகின்றாள். குழந்தை. தேவதாசனும் அண்டையில் உறங்குகின்றான். பக்கத்தில் அரிச்சந்திரன் நின்றுகொண்டிருக்கிறான்.]

அரிச் :—நான் அவளை எழுப்பட்டுமா? இன்னும் இருளும் புலரவில்லை; இரவியும் உதிக்கவில்லை. என் புதல்வனும் மனைவியும் நன்றாக அயர்ந்து தூங்குகின்றார்கள். நானேன் அவர்களை அவர்களது இனிய துயிலினின்றும் எழுப்பி எனது தீக்கனவை அவர்களிடம் உரைத்து அவர்களது நன்மனத்தைப் புண்படுத்தவேண்டும் ? ஆயினும் அவளுடன் உரைக்கத்தான் வேண்டும். என் னுயிர்த்துணைவியாகிய அவள் என் இன்பும் துன்பும் ஒப்பறுகரும் உரிமையாளல்லவா?—அவள் எழும்வரைக் காத்திருப்பேனாக.—

சந்தி :—[கனாக்கண்டுகொண்டு] :-பிராணநாத் ! பிராணநாத் !

அரிச் :—[அவளண்டையோடி] சந்திரமதி ! சந்திரமதி! என்ன சங்கதி ? —அவளும் கனாக்கண்டு கொண்டுதான் இருக்கின்றாள்போல இருக்கின்றது—எழுந்திரு ! சகி ! எழுந்திரு ! உதயமாகிவிட்டது [அவளை எழுப்புகின்றான்.]

சந்தி:—[எழுகையிலேயே] பிராணநாத! கனாத்தானே அவ்வளவும்? அந்தமட்டுக்கும் கிருபை செய்ததற்காக நாம் ஆண்டவனை ஸ்தோத்திரம் புரியவேண்டும்.

அரிச்:—ப்ரியே! சும்மா இரு! சும்மா இரு! ஏன் இவ்வாறு நடுங்குகின்றனை? நீயும் கனவா கண்டாய்? என்னகனா? அதன் விவரமெல்லாம் என்னிடம் சொல்லு பார்ப்போம்.

சந்தி:—என் பிராணநாயகா! நான் மகா கொடியதொரு கனாவை இப்போதுதான் சற்று முன்னே கண்டேன். அதை வாயாற் சொல்லுகிறதற்குக் கூட எனக்குப் பயமாக இருக்கின்றது. போகட்டும் நல்லவேளை அது கனாவாகத்தானே போயிற்று.

அரிச்:—என் பிராணசகி, நீ ஏன் இவ்வாறு நடுங்குகின்றாய்? இப்படிப் பட்ட வீண் பயத்துக்கெல்லாம் நீ இடங்கொடுக்கலாமா? எங்கே உன் கனா முழுதையும் ஒன்றுகூட விடாது உரை பார்க்கலாம்.

சந்தி:—தாம் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும்போது கொடிய மகா நாகம் ஒன்று வந்து தம்மைப்பற்றித் தம் அடிமுதன் முடிவரை உடல் முழுதும் சுற்றிக்கொண்டு தம்மைக் கீழே தள்ளி உபத்திரவித்தது. தாம் அந்நாகத்தின் கட்டில் அகப்பட்டு நெடுநேரம்வரை அவஸ்தைப்பட்டுக்கொண்டேயிருந்து பின்னர் அந்நாகத்தைக் கண்டதுண்டமாக வெட்டித்தொலைத்து விட்டு மீண்டுவந்தீர்கள். அம்மா! அவ்வகோர சர்ப்பத்தை நினைத்தாலே இப்போதுகூட எவ்வளவு பயமாக இருக்கின்றதென்கிறீர்கள்? என்னவோ பகவத்கிருபை கண்டது கனவாக ஆயிற்றே.

அரிச்:—ஹா! ஹா! இதுவா உன்கனவு? போகட்டும் இடையில் கஷ்டப்பட்டாலும் இறுதியிலாவது சுகம் வருவதாக இருக்கின்றதே! அதுவேபோதும். அம்மட்டில் திருப்தியடைய வேண்டுவதுதான் நமது கடமை. பகவத் சங்கல்பமின்றி ஒன்றும் நடவாது. ஹே! சர்வேசா! தமது அபார சக்திக்கு முன்னால் கேவலம் நரஜெந்துக்களாகிய நாங்கள் எம்மாத்திரம்? எங்கள் மீது சற்றே கிருபாகடாக்ஷம் வைத்து ரக்ஷியும்.—[இவ்வாறு கூறி விட்டு சிந்தனையிலிருக்கின்றான்.]

சந்தி:—பிராணநாத, தாம் என்னவோ பெரிய சிந்தனையிலிருக்கின்றாற்போல இருக்கின்றதே! நான் கண்ட கனவின் பலனாக நமக்கேதாவது பெரிய கஷ்டம் வரப்போகிறது என்று உதேசிக்கின்றீர்களா என்ன?

அரிச்:—சந்திரமதி, உலகத்தில் நடக்கும் சகல கார்யங்களும் ஈஸ்வரச் செயலாலேயே நடை பெறுகின்றன. அவனன்றி யோரணுவும் அசையாது. நாமெல்லாம் என்ன சூத்திரப்பாவைகள்போல அவனாட்டிவைத்தபடி ஆடுகின்றவர்களேயன்றி வேறில்லை. சகி, நானுங்கூட இன்று ஓர் துற்சொப்பனம் கண்டுதான் விழித்தேன். இப்படி ஒரே காலத்தில் நாமிருவரும் கண்டிருக்கின்றதினாலே அவை நிஷ்பலமாகப் போகமாட்டாது. பிற்காலத்தில்



நமக்கு நேரிடுவதாக இருக்கும் கஷ்டபலனுக்கு அறிகுறியாகத்தான் அவை நமக்குண்டாயிருக்கின்றன என்பதில் தடையே இல்லை. வருவதென்ன வழியில் நின்றுவிடவாபோகின்றது? அது ஒருபோதும் இல்லை. வருவது வந்தே தான் தீரும். அதை விலக்க ஒருவராலும் முடியாது. ஏதோ அக்கஷ்டசாகரத்திலேயே மூழ்கிப்போய்விடாது கடைசியிலாவது க்ஷேமமாகக் கரை சேர்ந்துய்யுமாறு அனுக்கிரகிக்க வேண்டுமென்று பகவானைப் பிரார்த்தித்துக்கொள்வதுதான் நாம் செய்யக்கூடியது.

சந்தி:—பிராணநாத, தாமும்கூட துஸ்ஸ்வப்னம் கண்டீர்களோ என்ன? அதைச் சற்றுச் சொல்லுங்கள். ஆனாலும் அது என்னுடைய கனாவைப்போல அவ்வளவு அகோரமாக இராது என்றெண்ணுகிறேன்.

அரிச்:—அவ்வளவு அகோரமான தல்லாவிடினும் கெட்ட கனாத்தான். அதுவும், நான் உன்னையன்றி வேறு இரண்டு பெண்களையும் மணந்திருந்தாற் போலவும் ஓர் கொடியபூதம் வந்து அவர்களுள் ஒருத்தியை என்னிடமிருந்து பலவந்தமாகத் தூக்கிக்கொண்டோடிவிட்டாற் போலவும் பின்னர் நீயும் என்னைவிட்டுப் பிரிந்துபோய்விட மற்றவள்மட்டும் கடைசிவரை என்னுடனேயே தங்கியிருந்தாற் போலவும் இடையே எவ்வளவோ கஷ்டங்களையெல்லாம் அனுபவித்துக்கொண்டேயிருந்து கடைசியில் எல்லாக் கஷ்டங்களும் நிவர்த்தியாகி முன்னே பூதந் தூக்கிக்கொண்டுபோனவளும் நீயும் முன்னிலும் மகா மகிமையுடன் மீண்டும் என்னைச் சேர்ந்திட்டாற்போலவும் கண்டேன்.

சந்தி:—சரி இக்கனாக்களின் பலனென்ன?

அரிச்:—ஐசுவரியாதி பாக்கியங்களனைத்தையும் இழக்க நேரிடும். உன்னையும் பிரிந்து உரைக்கமுடியாத துன்பத்தை அனுபவிக்க வேண்டியிருக்கும். ஆனால் நான் இழப்பவை அனைத்தும் பகவத்கிருபையால் வந்துசேரும் [சந்திரமதி ததாஸ்து என்கிறாள்] என்று தோன்றுகின்றது. இவைதான் நம்முடைய ஸ்வப்னங்களுக்குப் பலன்.

சந்தி:—என்னுயிர்நாத, என்ன கஷ்டம் பார்த்தீர்களா விடிந்ததும் நமக்கு? தாங்கள் சொல்லுகிறபடியே ஒருவேளை நேர்வதாக இருந்தால் நான் தங்களுடைய பிரிவைச் சகித்தெப்படி உயிர்வைத்திருக்கப் போகின்றேன்!

அரிச்:—நன்றாக முடிவன அனைத்தையும் நன்றே எனக்கருதல் வேண்டும். எல்லாம் அவரது இச்சையின்படி நடக்குமேயின்றி நமது இச்சையால் என்ன இருக்கின்றது? பாக்கியம் வந்துவிட்டதென்று நாம் இறுமாப்படைந்திருந்தால் அல்லவா அது போய்விடுகிறதே என்று பிந்திவருந்தப் போகின்றோம்? எல்லாம் பிராரப்தத்தின்படி நடக்கும் என்ற உண்மை தெரியாதவர்களுக்கல்லவா அந்த வித்தியாசம்? எதுவரினும் வரட்டும். வருவதையெல்லாம் பொறுமையுடன் அனுபவித்துக்கொண்டு சத்தியாதி சன்மார்க்கங்களை கைவிடா தொழுகவேண்டுவது தான் நமது கடமை.

தேவதா:—[உறங்கியெழுபவன் தாய்தந்தையர்களை நமஸ்கரித்துக்கொண்டே] மாதா, பிதா.

அரிச்:—குழந்தாய், இக்கஷ்டங்களெல்லாம் உன்னைப் பிடியாதபடி உனக்குப் பூர்ணமாக ஈஸ்வரானுக்கிரகம் உண்டாகட்டும்.

தேவதா:—பிதா, உமது முகாரவிந்தம் வாடியிருப்பதேன்? மாதாவேன் கண்ணீர்விடுகின்றாள்? என்ன சங்கதி! நான் ஏதாவது தப்பிதம் பண்ணிவிட்டேனோ என்ன? நான் இன்று சற்று அதிக நேரம்வரைத் தூங்கிவிட்டேன்.

அரிச்:—சந்திரமதி, அழாதே! நமக்கென்ன இப்போதே கஷ்டம் வந்தாவிட்டது? சமீபத்தில் நமக்கு வருவதாக இருந்தாலும் அதற்காக நாம் இப்போதே ஏன் வருந்தவேண்டும்? தத்கால ஸ்திதியைப்பற்றி மட்டும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டுமேயன்றி வருங்கால ஸ்திதியைப்பற்றிக் கவலைப்படுதல் முறையல்ல. அந்தக் கவலையை நம்மைப்படைத்த ஜகதீசனுக் கொப்புவித்து விடல்தான் முறை. ஆதலால் துக்கப்படாதே. சந்தோஷமாக இரு. இன்று உதயகாலம் பார்த்தனையா எவ்வளவு சுந்தரமாக இருக்கின்றது. வசந்தருது வல்லவா இது?

சி. திருச்சிற்றம்பலம் பிள்ளை.

(இன்னும் வரும்.)

## வரதுங்கபாண்டியன் மனைவி.

ஏறக்குறைய நானூறு வருஷங்களுக்கு முன்னே செந்தமிழ்ப் பாண்டி நாட்டில் அரசு செலுத்திவந்த வரதுங்கபாண்டியன் என்பவனுக்கு அதிவீரராம பாண்டியன் என்று ஒரு தம்பி உண்டு. சகோதரர்கள் இருவரும் நூலாராய்ச்சியும் தமிழ்ப் பாண்டித்தியமும் பெரிதுமுடையோர். ஆனால் இவர்களில் இளையோனாகிய அதிவீரராமன் கற்றறி மூடனாய் வெய்யர், பதகர், பரதாரவிருப்பர், வீணர், கையர், கயவர், பொய்யர், புலையர் முதலிய பல கீழ்மக்களோடு சேர்ந்து தனது காலத்தைக் கழித்து வந்தான்.

தமையன் தனது தம்பியைச் சீர்திருத்தப் பலவிதம் முயன்றும் முடியாமல் தன் முகத்தில் என்றென்றும் விழியாதிருக்குமாறு அவனைத் தனது ஊரினின்றும் ஓட்டிவிட்டான். துரத்துண்ட அதிவீரராமன் தன்மனத்திற்கிசைந்த சில மூர்க்கர்களின் உதவியால் தற்காலம் தென்காசியென்று வழங்கும் கோற்கை என்னும் நாட்டைப் பிடித்து அரசு செலுத்தி வருவானாயினன்.



இவன் கல்விப்பிரியனும் தமிழ்ப்பாண்டித்தியம் பெரிது முடையோனாயும் இருந்தபடியால் பொழுது போக்காக நிஷதபுரியை ஆண்ட நளராஜனது திவ்ய சரித்திரத்தை விருத்தப்பாவில் எழுதிமுடித்து அதற்கு "நைஷதம்" எனப் பெயரிட்டனன். தான்செய்த நூலின் சொல் நயம், பொருள் நயம், கற்பனை முதலியவற்றைக் கண்டு, தான் மகிழ்வெய்தியதோடு நில்லாமல், பற்பல தேசங்களிலும் உள்ள புலவர் பெருமக்களை வரவழைத்து, அவர்களுக்கும் தன் நூலைப் படித்துக்காட்டி, அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டான். அவன் தயவை எதிர்பார்த்த சிலர் "நைஷதம் புலவர்க்கு ஔஷதம்" என்றனர். அவன் பரம துஷ்டனாகையால் அவனது தண்டனைக்கு அஞ்சியோரும் சிலர் உண்டு. ஆயினும் அவர்களுக்குத் தங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமாக நூலைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொடுக்க மனமே இல்லை. ஆதலின் அவர்கள் அரசனையும் தம்மையும் திருப்திப்படுத்திக் கொள்ளுமாறு அந்நூலின் நடை "கரும்பு" போன்றிருக்கின்றதெனக் கூறினர். இவற்றையெல்லாம் கேட்ட அதிவீரராமன், உளம் பூரித்துத் தன்னைவிட சிறிதும் கல்வியில் தாழாத தன் தமையனுக்கும் ஓர் பிரதி அனுப்பி அவனது அபிப்பிராயமும் வேண்டினான். இதுவந்து சேர்ந்த சமயம் வரதுங்கன் இராஜாங்க விசாரணையில் தனது முழு கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்த காலமாய் இருந்தது. ஆதலின், அவன் தனது இன்னுயிர்த் தோழியாகிய மனைவிகையில் கொடுத்து அவளையே அதன் குணதோஷங்களைக் கண்டறிந்து அதிவீரராமனுக் கறிவிக்கச் சொன்னான். அக்கற்பரசியும் அதனை ஆதியோடந்தமாய்ப் படித்து, அதன் நடை "வேட்டை நாய்" நடைபோன் றுள்ளதென அறிவித்தாள். இவ்வபிப்பிராயம் பெற்ற அதிவீரராமனுக்குக் கோபத்தால் முகம் பொங்கியது. ஏனெனில் கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்றவர்கள் "நைஷதம் புலவர்க்கு ஔஷதம்" என்றும், அதன் நடை "கரும்பு போன்றுளது" என்றும் கூறியிருக்க, கேவலம் பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தி, "வேட்டை நாய்" போலிருக்கின்றதெனத் துணிந்து சொல்லலாமா? என்று நினைத்தான். தவிரவும், தான் அபிப்பிராயம் வேண்டியது தன் தமையனிடமிருந்தே யாதலால், தமையன் தன்னை அவமதிக்க வேண்டுமென்றே தன் மனைவியின் மூலமாய்த் தன்னை அவமானப்படுத்தினான் எனக் கருதினான்.

இவ்விதமாக அவன் என்னாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி மனம் புழுங்கித் தன்னை அவமதித்தவனைத் தக்கபடி சிக்ஷிக்கக் கருதி நால்வகைப் படைகளுடனும் புறப்பட்டு வரதுங்கனது ராஜ்யத்திற்குட் பிரவேசித்து யுத்தபேரிகை முழக்கினான். அதிவீரராமன் போர்க்கோலம் பூண்டு வந்திருக்கும் செய்தி வரதுங்கனுக் கெட்டவே, தம்பிபால் ஓர் தூதனை விடுத்துப் போருக்குக் காரணம் கேட்டறிந்தனன். பிறகு அவன் தன் மனைவியை அழைத்து "பெண்கள் நாயகமே! பெண்புத்தி பின்புத்தி" என்ப

தற்கேற்பக் காரியத்தைச் செய்து முடித்தலையே முதலையும் மூர்க்கனும் கொண்டது விடாவே. நம்மிருவர்க்கும் சம்பவிக்கும் அபாயத்தைக் கருதி இதுயான் சொல்ல வரவில்லை. ஏனெனில் வெற்றியோ தோல்வியோ இருதிறத்தாருக்கும் பொது. ஆயினும் இருதகூழியினும் எவ்வளவு உயிர்ச்சேதம் நேரிடக்கூடும் என்பதை நினைக்குங்கால் என்மனம் வருந்துகிறது. இதற்கு யாம் என் செய்வது?" என்றனன். அதற்கவள் "அன்பரே! யான் இச்சண்டைக்குக் காரணமாவதெப்படி? அதிவீரராமன் வேண்டியது அபிப்பிராயமா? புகழ்ச்சியா? அவன் அபிப்பிராயமே விரும்பியதால் நானும் அபிப்பிராயமே கொடுத்தேன். இருக்கட்டும். இதற்காக வருந்தவேண்டாம். கூடுமாயின் ஓர் உபாயத்தால் நேர்வழியிலேயே சண்டையை நிறுத்தப் பார்க்கிறேன்" எனக் கூறி ஓர் ஏடும் எழுத்தாணியும் எடுத்து "இருந்திருந்தும் ஒரு தாய்வயிற்றில் பிறந்தும் பிராதத் துரோகிகளாய்ப் போய்விட்ட சூரிய புத்திரனாகிய சுக்கிரீவன், லங்காதிபதியான விபீஷணன், பஞ்சபாண்டவர்களில் ஒருவனாகிய அர்ச்சுனன் ஆகிய இம்மூவருடைய உதாரணத்தையுமா நீர் பின்பற்றவேண்டும்? தமையன்சொல்லை வேதவாக்காய்க் கருதி நடந்துவந்த பரதனை அறியீரோ? ராமனும் பரதனும் யாவர்? உங்களிருவரையும்போல் ஒரே தாய்வயிற் றுதித்தவர்கள் கூட இல்லையே! மாற்றாந்தாய் வயிற்று மக்களன்றோ? அப்படி இருந்தும் அவர்களுடைய பரஸ்பரநேசம் எத்தன்மையது? நீரும் பரதனுடைய உதாரணத்தைப் பின்பற்றுவீரானால் எவ்வளவு பெருமையாய் இருக்கும்! என்ற கருத்தை யடக்கி,

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிருந்த மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார்."

என்ற ஓர் வெண்பா எழுதி அதனை அவனிடம் போக்கினளாம். அதிவீரராமன் அதைவாங்கிப் படித்து அதில் கூறியவற்றின் பொருளைச் சிந்திப்பானாயினன். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கைப்பிடித்த வாளாயுதம் அவனறியாமலே நழுவிக் கீழே விழுந்தது. இரண்டு கண்களினின்றும் நீர் ததும்பியது. அவன் தனது தகாத செய்கைக்காக அத்தியந்த விசனம் அடைந்து தனது சைனியங்களைத் தக்ஷணமே தன் ஊர்போய்ச் சேரும்படி ஆக்ஞாபித்து அண்ணன் அண்ணியாரைத் தரிசித்து அவர்கள் திருவடிக் கமலங்களில் விழுந்து "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே" என இரந்தனன். இது நடந்த சில நாள்களுக்குப் பிறகு அதிவீரராமன் "அண்ணா! அமிழ்தினும் இனிய தமிழ்மொழிப் புலவர்கட்கெல்லாம் கரும்பு போன்று இருக்கும் எனது நூலின் நடை அண்ணியார்க்கு மட்டும் வேட்டை நாய் போன்றிருப்பானேன்? என விநயமாய்க் கேட்க, அவன் உனது அண்ணியாரையே கேட்டுத் தெரிந்துகொள் என்றான். அவனும் அவளை அப்படியே கேட்க அவள்



"வேட்டை நாய் வேட்டை பிடிக்கும்போதுள்ள சுறுசுறுப்பும், அது வேட்டை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போதுள்ள சோர்வும் மந்தகதியும் அநுபவத்தில் நீர் கண்டறிந்திருப்பீரே? என்றனள். அதற்கவன் "ஆமாம் அப்படிப்போல்?" என்றனன். "அப்படிப்போல் உமது நூல் நடையும் வேட்டை நாய் நடைபோலவே ஆரம்பத்தில் குதூகலமாய்த்தான் ஓடுகிறது. ஆயினும் அதன் ஓட்டமெல்லாம் புனல் விளையாட்டுப் படலம் முடியும் மட்டே. காரணம் அறியக் கஷ்டம் சிறிதும் இல்லை. நீர் ஓர் சிற்றின்பப்பிரியர் என்பதை உமது நூலாலேயே வெளிப்படுத்திக்கொண்டீர். ஏனெனில் சிற்றின்ப வர்ணனைகளே அக்காண்டம்வரை அதில் பெரும்பாலும் நிறைந்துள. எஞ்சிய காண்டங்களிலும் இத்தகைய விஷயத்தை உம்மால் கூடியமட்டும் நுழைக்கத்தான் பார்த்தீர். ஆயினும் முடியவில்லை. ஆதலால் வெகு கஷ்டப்பட்டு வேண்டா வெறுப்பாய்ச் சிற்சில பாக்களைப் பாடி நூலை முடித்திருக்கின்றீர். யான் கூறியது உண்மைதானா?" என்றாள். அதற்கவன் உத்தரஞ் சொல்லாது நின்று சிறிது நேரத்திற்கெல்லாம் "உண்மையே ஆயினும் புலவர் பெருமக்கள் ஏன் என் நூலின் நடை கரும்பு போன்றுள்ளதெனக் கூறினர் என்று எனக்குப் புலப்படவில்லை" என்றனன். அதற்கவள் "மைத்துனரே! அவர்கள் சொல்லியது வஞ்சகப் புகழ்ச்சியே ஆகும். இவ்வாறு அவர்கள் உமது ஆக்ஞைக்கு அஞ்சியே உரைத்திருக்கக் கூடும் ஆயினும் அவர்கள் வாக்கும் பொய்யாகாது. நுட்பமாய் ஆராய்பவர்களுக்கு உண்மை புலப்படாமல் போகாது. நீர் கூறிய புலவர்கள் யான் கொண்ட கருத்தே கொண்டவர்கள். எவ்வாறெனில், கரும்பு எப்படி ஆரம்பத்தில் அதிக இனிமையும் ருசியுமாயிருந்து கொழுத்தாடைப் பக்கம் போகப் போக இனிமை குறைந்துவிடுகிறதோ அப்படியே உமது நூலின் நடையும் ஆரம்பத்தில் இனிமையாய் இருந்து கடைசியில் போகப்போக இனிமை குன்றி யுள்ளதென இரகசியமாய் வெளிப்படுத்தினர். இது உமக்குத் தெரியாமல்போயிற்றே" என்றாள்.

இதனைச் செவியுற்ற அதிவீரராமன் நாணித் தலைகவிழ்ந்து வாயடங்கி நிற்க அவன் அண்ணியார் இதுதான் அவனைத் திருத்தத்தக்க சமயமெனத் தேர்ந்து அவனைநோக்கி "மைத்துனரே! நான் ஒன்று தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். யான் புகல்வது கடுமொழிபோற் காணப்படினும் இன்சொல் எனவே ஏற்குமாறு வேண்டுகிறேன். வேறொன்றுமில்லை. உமதுபடிப்பெல்லாம் விழலுக்கு இறைத்தநீர்போல் வீணாயிற்றே என்று விசனப்படுகிறேன். "கற்றதனாலாயபயன் வாலறிவன் நற்றாள் தொழாஅர்" அன்றோ? உமது கல்வித்திறத்தை இதுபோன்றசிற்றின்பாதிகளிற் காட்டாமல் பேரின்பவிஷயமாய் யாதாலும் ஓர் நூல் செய்வதில் உபயோகித்திருப்பீராயின் எத்துணை பெருமையாய் இருக்கும்!" என்ன, அவன் தனது மூடத்தனத்திற்கு இரங்கி, தான் முன்பு பெண்ணென அவமதித்த பேரறிவுடையாளைப் பெரிதும் வியந்து, இனித்தான் ஒருகாலும் சிற்றினம் சேர்வதில்லை என்றும் இனிச்

சற்கால க்ஷேபம் செய்வதாகவும் அவளுக்கு உறுதிமொழி கொடுத்துத் தன் வாக்கையும் நிறைவேற்றினான். எங்ஙனமெனில் இவன் இதற்குப் பின்பு தான் காசிகாண்டம் முதலியன இயற்றினான் என்றும், அப்பொழுது வரதுங்கன் மனைவிக்கே தான் இயற்றிய நூலின் பிரதி அனுப்பி அவளது அபிப்பிராயத்தை வேண்ட அவள் அவற்றின் நடை "வேட்டைக்குதிரை" நடை போன்றுள்ளதென்று கூறினள் என்றும் தெரியவருகிறது [வேட்டைக்குதிரையின் நடைபோகப்போகத் தீவிரமும் சலிப்பின்மையுமாயிருக்கும் என்று அநுபவசாலிகள் கூறக் கேட்டிருக்கிறோம்]. நிற்க, அதிவீரராமன் அவளுடைய நல்லுபதேசங்களைக் கேட்டுத் திருந்திய பிற்பாடு, தான் துஷ்டனாய் அடங்காப் பிடாரியாய்த் திரிந்த காலத்தில் வந்த சிறுமையையும் சற்குணவான் ஆனதன்பின் தனக்குக் கிடைத்த பூஜ்யதையையும் நினைத்து நினைத்து "பெருமையும் சிறுமையும் தான்றரவருமே', என்று அடிக்கடி சொல்லிக் கொள்வானாம். அவனியற்றிய "வெற்றிவேற்கை" என்னும் "நறுந்தொகை' யானது பெரும்பாலும் அவனது சுவாநுபவங்களைப் பற்றியே கூறும் ஓர் சிறு நூல்என்றாலும் பொய்யாக மாட்டாது.

நிற்க, பொற்புறுகற் பரசியாகிய இவ்வற்புதக் கலைமாதைப்பற்றி மற்றும் சில கூறவேண்டியிருக்கிறது. அவளுடைய ஆருயிர்க் கொழுநனாகிய வரதுங்க பாண்டியனுக்கு உலகவாழ்க்கை குறுகியது. அவன் அதி புத்திசாலியாக விருந்தும் தன்மனைவியினின்றும் பிரியும் காலம் சம்பவித்ததற்காகச் சிறிது மனம் கலங்கிப் பின்னர்,

"அஞ்சல் என்ற கரதலமும் கணபண கங்கணமும்
அரைக்கிசைந்த புலி உடையும் அம்புலிச் செஞ்சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும் கனகமுழும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும் கண்களொரு மூன்றும்
நஞ்சையுண்ட மணிமிடறும் முந்நூலும் மார்பும்
நலம்திகழ் வெண்ணீற்றொளியும் மறிமானும் மழுவும்
பஞ்சணைச் சிற்றிடை உமையாள் ஒப்பனைப்பாகமுமாய்
பால்வண்ணன் உளத்திருக்கப் பயம் உண்டோ எமக்கே"

என மனந்தேறினனும்.

இஃதறிந்த அவனது மனைவி பிறப்பிறப்பிற்குச் காரணமாயிருக்கும் பற்றினை ஒழிக்குமாறு அவனுக்குப் புத்திபுகட்டி "உடம்பு என்ற புழுக்கூட்டைச் சேர்ந்தும் சேராமலும் இருக்கும் பரம்பொருளும், அருட்பிரகாசமும் பரம் அபரம் (ஆதி, அந்தம்) என்பவற்றிற்கும் அப்பாலாகிய அறிவும் மயிர்முனைகூட இடமில்லாமல் எங்கெங்கும் நிறைந்த முழுமுதற்பொருளும், நினைத்தமாத்திரத்தில்உதிக்கக்கூடிய ஜோதியும், பெரும்பாக்கியம் செய்துபல குறைகளை நிவர்த்திக்க விரும்பும் மெய்யடியார்களுக்கு வேண்டுவன உதவும் பசுமையான பூங்கொத்துகளையுடைய கற்பகவிருக்ஷம் போன்றுள்ளதும்,



மனம்வாக்காதிகளின் வேறுபாட்டால் அளவிடக்கூடாததுமான களங்கமற்ற வெட்டவெளியை மனமாகிய ஆகாயத்தில் அடைப்பாம் என்ற கருத்தடங்கிய

"ஆக்கையெனும் புழுக்குரம்பை அணைந்து அணையாப்பொருளை
அருள் ஒளியை பராபரத்திற் கப்புறமாம் அறிவை
நீக்கமற மயிர்முனைக்கும் இடமற எங்கெங்கும்
நிறைந்துநின்ற முழுமுதலை நினைவில் எழும்சுடரை
பாக்கியங்கள் செய்து அனந்த தவக்குறைகள் முடிக்கும்
பழஅடியார் தமக்கு உதவும் பசுந்துணர்கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறுவெளியை மனவெளியில் அடைப்பாம்."

எனக்கூறவே என்ன ஆச்சரியம் பாருங்கள்! நமது கதாநாயகி உடனே குன்றாத மங்கலியக் கோமளமாகவே பரமபதம் அடைந்தனளாம்.

சகோதரிகளே! இவ்வுத்தமியின் உண்மைச் சரிதையைப்பற்றி சற்று சித்துப் பாருங்கள்! இவ்வற்புதக் கலைமாது கல்விமானாகிய அதிவீரராமகுப் புத்திபுகட்டி, கல்வியைக்கொண்டே அவனை நல்வழிப்படுத்தியது வளவு பாராட்டத்[illegible]து! இதனால் நமது தேசத்து ஸ்திரீகள் முற்காதில் கல்விகேள்வி[illegible]ல் தேர்ச்சிபெற்றவர்களாய் இருந்தனரென்று தெரியவருகிறதல்லவா[illegible]ர் அரியநூலில் குணதோஷங்களைக் கண்டறிய அத்துணை கல்விப்பயிற்சி இருத்தல் வேண்டும்? இம்மட்டோ? அரிவையரை அந்தப்புரங்களில் அடைத்துவைத்து அஞ்ஞானம் என்னும் அந்தகாரத்தில் ஆழ்த்துவது பூர்வீக சம்பிரதாயம் இல்லையென்பதுவும் வெள்ளிடைமலை போல் தெள்ளிதிற் புலப்படும் அன்றோ? பாருங்கள்! அந்தப்புரத்திலேயே நமது வரதுங்கன் மனைவி அடைபட்டிருப்பாளேயாயின், "வேட்டைநாய்", "வேட்டைக்குதிரை" இவைகளைப்பற்றிய இயற்கை விசேஷங்கள் எப்படி அறிந்திருக்கக்கூடும்? மேலும், கல்விகற்பதாலும் கணவனையன்றி மற்றோரைக் கண்ணுறுவதாலும் கற்பு நிலைதவறும் எனப் பிதற்றும் பேதைமாக்களுக்கு அப்பெண்மணியின் திவ்யசரித்திரம் சற்புத்தி புகட்டாமற் போகாது. 'கற்பு" என்ற பதத்திற்குக் கல்வியென்றே அர்த்தம். ஆதலால் கற்புவேண்டுமாயின் கல்வியும் வேண்டும் என்பது அப்பதத்தினாலேயே விளங்கவில்லையா? ஒருவன் பெறுதற்கரிய பொருள்களுள் கற்புடைய மனையாளினும் உயர்வானபொருள்கள் எவை? "தையலர் சிறந்துழி வையகம் சிறக்கும்" என்பது ஆன்றோர் வாக்கு. இதனை ஆடவர்கள் கடைப்பிடித்துத் தங்கள் மனைவிமார், தாய்மார், சகோதரிகள் முதலியோர்க்கு வித்தியாப்பியாசம் முதலியன செய்வித்து அவர்களை அந்தகாரத்தினின்றும் அகற்றுமாறு வேண்டுகிறோம். சுகந்தத்தோடு கூடியசுவர்ண புஷ்பம்போல்குணமும் கல்வியும் வாய்ந்த பெண்மணிகளுடன் ஆடவர்கள் இல்லறம் நடத்திவருவது எத்துணை மேன்மையாயிருக்கும்! அன்பார்ந்த சகோதரிகளே! உங்களையான்

வேண்டுவது ஒன்று உண்டு அஃதென்னவெனில் நீங்கள் வாயில்லாப் பூச்சி போலிருப்பதேகற்பு என்று எண்ணாமல், நீங்களோ வித்தை பெரிதும் விரும்புகிறீர்கள் என்பதை உங்கள் புருஷர்களுக்குக் காட்டிஅவர்களது அநுமதி பெற்று கற்றுத் தேர்ந்தடங்கி அதி புத்திசாலிகளாவீர்களாக.

M. கோபாலகிருஷ்ணய்யர்
மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்ராசனாதிபதி.

## முதல்நாள்:—புகைக்கூண்டு.

முத்துலக்ஷ்மி:—அம்மா! இன்று 10-மணிக்கு உன்னை நான் புகைக்கூண்டைப்பற்றிக் கேட்டபொழுது சாயந்திரம் அண்ணா பள்ளிக்கூடத்திலிருந்து ,திரும்பி அகத்துக்கு வந்ததும் சொல் அவனைக் கேட்டறிந்துகொள்ளலாமென்றாயே! அண்ணாவந்து விளக்கண்டை சும்மா உட்கார்ந்துகொண்டிருக்கிறார்.

சிவகாமி அம்மாள்:—முத்து! சமயல் முடிந்துவிட்டது. ரசத்துக்கு தாளித்துக்கொட்டிவிட்டு இதோ வருகிறேன். தாதா என்ன செய்துகொண்டிருக்கிறார்?

முத்து:—தாதா ஜபம் முடிவுக்கு வந்துகொண்டிருக்கிறது.

சிவகா:—ஆனால் அவர் ஜபம் முடிவதற்கும் என் சமயல்காரியம் முடிவதற்கும் சரியாயிருக்கும். பின்பு அதைப்பற்றிப் பேசுவோம்.

முத்து:—அம்மா! உன் வேலையைச்சொல், நான் நிமிஷத்தில் செய்துவிடுகிறேன். கூடத்துக்குப் போகலாம்.

சிவகா:—நீ செய்யவேண்டியதொன்றுமில்லை. கூடத்துக்குப்போகலாம் வா.

(இராமசாமிதாதா சுவருடன் சாய்ந்துகொண்டுட்கார்ந்திருக்கிறார். விளக்கு தொங்கவிட்டிருப்பதலிருந்து ஒரு அங்கணதூரத்தில் சிவகாமிஅம்மாள் உட்கார பக்கத்தில் முத்து உட்கார்ந்துகொண்டிருக்கிறாள்.)

சிவகா:—ராஜம் நெற்றியிலொன்றும் காணமே! விபூதி இட்டுக்கொண்டு சந்தியாவந்தனம் செய்தாயிற்றா? என்னத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறாய்?

ராஜம்:—அம்மா! சந்தியாவந்தனம் செய்யாதிருப்பேனா? விபூதி வியர்வையால் அழிந்துபோயிருக்கும். ஏதோ பாடங்களைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன். ஏதாவது விசேஷமுண்டா? முத்து ஏன் படிக்காமல் சும்மாயிருக்கிறாள்?



சிவகா:—அப்பா ராஜம்! நீ பி. ஏ க்குபடிக்கிறபாகம் எது? சயன்ஸ் என்று என்னவோ ஒருநாள் சொன்னாய்?

ராஜம்:—ஆமாம் அது சயன்ஸ்தான். சயன்ஸ் என்றால் சாஸ்திரம் அதில் நான் படிப்பது ஜடதத்வசாஸ்திரம். அம்மா நீ என்னை இக்கேள்வி கேட்டதால் ஏதோ விசேஷமிருக்கவேண்டும். அதென்ன?

சிவகா:—ஒன்றுமில்லை, நீ பள்ளிக்கூடத்துக்குப் போய் அரைமணி நேரமிருக்கும். தாதா முத்துவைக் கூப்பிட்டு ஒரு சிறு புகைக்கூண்டைக் காட்டினார்களாம், உடனே நானும் போய்ப்பார்த்தேன். பார்த்ததுமுதற் கொண்டு அதைப்பற்றி அறிந்துகொள்ள விருப்பமுள்ளவளா யிருக்கிறாள். முத்து என்னைக்கேட்டாள். எனக்கென்ன தெரியும்? நீ வரட்டும் கேட்கலாமென்றேன். அதைப்பற்றி நீ சொல்லவேண்டும். உனக்கு அதைப்பற்றி நன்றாய்த் தெரியுமே.

முத்து! என்னவேண்டுமென்றாலும் அண்ணாவைக் கேட்டுத் தெரிந்து கொள்.

முத்து:—அண்ணா! மரங்களிலிருந்து கனி, இலை, பூ முதலியவைகளும் நாம் மேல் எறியும் கல் முதலியவைகளும் பூமி நோக்கிவருகின்றன. அப்படியிருக்க அதற்கு மாறாக இதுமாத்திரம் மேல்நோக்கிச் செல்கிறதே எக்காரணத்தால்?

தாதா:—என்னப்பா! புகைக்கூண்டைப்பற்றியா முத்து உன்னைக் கேட்கிறாள். நானும் பக்கத்தில் வருகிறேன். என்னைக்கேட்டாள். நான் சொன்னது அவளை திருப்திசெய்யவில்லை போலிருக்கிறது. நீ சொல்வதை நானும் கேட்கிறேன்.

ராஜம்:—முத்து கேட்டது சரியானகேள்வி. இதற்கு விடையளிப்பதன் முன் சில அனுபவ விஷயங்கள் சொல்லவேண்டியிருக்கிறது. கிணற்று ஜலத்தில் நாம் ஒரு கல்லைப்போட்டால் முழுகிப்போய் விடுகிறது. மரம் மிதக்கிறது. இதனாலென்னதெரிகிறது?

முத்து:—கெட்டிப்பதார்த்தங்கள் முழுகிப்போம். லேசானபதார்த்தங்கள் மிதக்கும்.

ராஜம்:—ஜடதத்வசாஸ்திரம் படித்தவர்கள் முத்துசொல்வதை வேறுவிதமாகக் கூறுவார்கள். அதாவது ஒரு கனப்பொருள் (Solid) முழுகிப்போகவேண்டுமென்றால், இதன் நிறையானது, அதேபருமனுள்ள (Volume) திரவபதார்த்தத்தின் (Liquid) நிறையைவிட ஜாஸ்தியாயிருக்கவேண்டும். உதாரணமாக ஒரு கல் துண்டத்தின் நிறையானது அதன் பருமனுள்ள ஜலத்தின் நிறையைவிட ஜாஸ்தியாயிருப்பதால் கல் முழுகிப்போகிறது. அவ்வாறின்றி ஒரு பதார்த்தத்தின் நிறையானது அதன் பருமன் ஜலத்தின் நிறையைவிட மட்டாயிருந்தால் பதார்த்தம் மிதக்கிறது. உதாரணமாக மரம், கார்க் (Cork) போன்றன மிதக்கின்றன. உதாரணமாக கல் மரம் கடினபதார்த்தங்

களாகவும், ஜலத்தை திரவபதார்த்தமாக எடுத்து சொன்னேன். இது எல்லாவற்றிற்கும் பொதுவே. தாம்பிரம், இரும்பு மிதக்கிறதென்றால் உங்களுக்கு ஆச்சரியமாகவே தோன்றும். ஆயினும் அனேகபதார்த்தங்கள் இரசத்தில் (Mercury) மிதக்கின்றன. ஜலத்தில் மிதக்கும் சில பதார்த்தங்கள் ஜலத்தைவிட லேசான திரவபதார்த்தத்தில் முழுகிப்போம்.

சிவகா:—என்ன! இரும்பு மிதக்கிறது அதிசயமே! அதை நான் நம்பவே மாட்டேன்.

ராஜம்:—இவைகளை நீங்கள் கண்ணால் பார்க்கும்படி ஒருநாள் செய்கிறேன். நம்முடைய விஷயத்திற்குத் திரும்பலாம்.

முத்து:—அண்ணா! நாளைக்கே நீ இவைகளை எனக்குக் காட்டவேண்டும். என்ன சொல்லுகிறாய்?

ராஜம்:—அப்படியே ஆகட்டும். நான் சொன்னவைகளையெல்லாம் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். நாம் வசிக்கும் பூமியைச்சுற்றி சமுத்திரம் இருக்கிறதென்பது பூகோளபடத்தில் கண்டறியலாம். இதனால் சமுத்திரத்தைப்போலவே பூமியைச்சுற்றி ஆகாய சமுத்திரமானது 40 - மயில்மட்டும் பரவியிருக்கிறது. ஜலத்தைப்பற்றிச் சொன்னதெல்லாம் ஆகாயம் அல்லது காற்றுக்கும்அமையும். கல் பழம் போன்றவைகள் பூமியில் விழுவதற்குக் காரணங்களில்பழம் கல் பருமனுள்ள காற்றின் நிறை பழம், கல்-முதலியவற்றின் நிறையைவிட பெரிதாயிருப்பதால் அவைகள் பூமியைச் சேர்ந்து விடுகின்றன. இப்பொருள்கள் பூமியின் கவர்ச்சி சக்தியால் (Force of Gravity of earth) இழுக்கப்படுகின்றன. ஏதாவது ஒரு பொருள் மிதக்கவேண்டியிருந்தால் அதேபருமனுள்ளக் காற்றின் நிறையைவிட குறைந்திருக்கவேண்டும். இப்படி செய்வதால்தான் புகைக்கூடு பறக்கிறது.

முத்து:—அண்ணா! பறவைகள் அநேகம் காற்றில் பறக்கின்றனவே மனிதர்கள் ஜலத்தில் நீந்துகிறார்களே. இவை எப்படி?

ராஜம்:—நான் முற்கூறிய மாதிரிதான் இவைகளைக் கூறிக்கொண்டிருந்தால் காலதாமதமாய்விடும். விஷயத்துக்குச் செல்வோம்.

தாதா:—அப்பா ராஜு! பறவைகள் சில ஜலத்தில் நீந்துகின்றன ஆகாயத்தில் பறக்கின்றனவே. மனிதனும் ஏதாவது இரக்கைகள் கட்டிக்கொண்டு பறக்குமுடியுமோ?

முத்து:—அப்படி பறக்க முடியுமாகில் நான்மிகவும் சந்தோஷமாயிருப்பேன். கனிகளைப் பறித்துத்தின்று வருவேன் எங்கு வேண்டுமென்றாலும் செல்வேன். இது சரியென்று எனக்குத் தோற்றவில்லை. அம்மா உனக்கென்ன தோன்றுகிறது?

சிவகா:—அவன் சொல்வதைக்கேட்போம், அவசரப்படாதே.

ராஜம்:—புகைக்கூண்டென்பது இன்றையநேற்றைய பொருளன்று; வெகுகாலத்திலிருந்து மனிதர்கள் ஆகாயத்தில் சஞ்சாரம் செய்யவேண்டுமென்று என்னென்னவோ முயற்சி எல்லாம் செய்து வந்திருக்கிறார்கள். மனிதன் பறப்பதென்பது கடவுளின் எண்ணத்துக்கு மாறானது. மனிதன் தானாக பறப்பதென்பது ஒருநாளும் கூடாதகாரியம். ஆயினும் கூடாதகாரியமென்று கூறமுடியாது. பறப்பதென்றால் நம் சரீரத்திற்கேற்ற பெரிய இரக்கைகள் வேண்டும். அவைகளைஅசைப்பதற்கு நமக்கு எவ்வளவோ சக்திவேண்டும். நமக்கு அபாரசக்தியிருந்து பெரிய இரக்கைகளும் கிடைத்தால் அது கூடிய காரியமே ஆகும்.



முத்து:—புகைக்கூண்டைப்பற்றிய எண்ணம் எந்த மகான்மனதில் உதயமானதோ! புகைக்கூண்டிலேறிச்சென்றால் என்ன விநோதமாயிருக்குமோ!

ராஜம்:—16, 17ம் நூற்றாண்டில் இங்கிலாண்டில் லார்ட் பேகன் என்றொருவர் செப்புத்தகடுகளால் நூதனமான பந்துகள்செய்து பறக்கச்செய்ய பலவாறு முயன்றார். இப்படி பலர் முயற்சித்துக்கொண்டு வருகையில் ஒருவர் மனதுக்கு காற்றைவிட லேசானகாற்று ஒன்று கண்டுபிடிக்கப்பட்டால் புகைக்கூண்டு சாத்தியமாகுமென்று தோற்றியது. பிறகு சிலர் சூடாக்கிய காற்றைக்கொண்டு புகைக்கூண்டு செய்தார்கள்.

முத்து:—அதெப்படி? அண்ணா!

ராஜம்:—நீ உலைநீரிலிருந்து நீராவி ஆகாயத்தில் போகிறதைப் பார்த்ததில்லையா? உஷ்ணத்தால காற்றானது அதிக கனமுள்ளதாகிறது. ஒரு பாத்திரத்தில் காற்றை அடக்கி காய்ச்சினால் பாத்திரம் உடைபட்டுபோம்.

(இன்னும் வரும்.) ஓர் நண்பன்.

# லியர் அரசன் கதை.

5.

பிரிடன் தேசத்தரசனாகிய லியர் என்பவனுக்கு கானரில், ரீகன், கார்டீலியா என்னு மூன்று புத்திரிகள் இருந்தனர். அவர்களில் கானரில் ஆல்பனி டியூக்கின் மனைவி; கார்ன்வால் டியூக்கின் மனைவி ரீகன் என்பவள். அப்பொழுது கார்டீலியா ஓர் இளங்கன்னிகை. இவள் மேல் காதல்கொண்ட பிரான்சுதேசத்தரசனும், பர்கண்டியின் டியூக்கும் லியரது அரண்மனையில் வந்திருந்தார்கள்.

என்பது வருஷங்களுக்குமேல் சென்று வயதுமுதிர்ந்து தளர்ந்த லியர் என்பவன் அரசாண்மையில் மனமின்றி, தன் ராஜ்ஜிய பாரத்தை மற்றுள்ள இளைஞர்களிடத்தில் விட்டுவிட்டுத் தான் தனக்குக் கிட்டிய மரணத்தை யடையத் தயாராகவேண்டுமென்று தீர்மானித்து, தன் மக்கள் மூவரையுங் கூப்பிட்டுத் தன்மேல் அவர்களுக்குள்ள அன்பின் அளவுக்குத் தக்கபடி தன் ராஜ்ஜியத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதாகச் சொன்னான்.

இதைக்கேட்ட மூத்த புத்திரியாகிய கானரில் என்பவள் தனக்குத்தன் தகப்பன்மேல் உள்ள அன்பைத் தன் வாயினாற்சொல்லி முடியாதென்றும்

தன்னுடைய கண்கள், உயிர், ஸ்வாதந்தரியம் இவைகளை விடத் தன் தகப்
பன்மேல் மிக்க அன்புடையவளென்றுங் கவடாகப்பேசித் தன் தகப்பனை
ஏமாற்றினாள். இவள் இவ்விதமாகத் தனது அன்பை வெளியிட்டதை அவ்வ
ரசன் வாஸ்தவமென்று எண்ணிச் சந்தோஷித்து அன்போடு அவளுக்கும்
அவள்கணவனுக்கும் தன் ஏராளமான ராஜ்ஜியத்தில் மூன்றிலொன்று கொடு
த்தான்.

பிறகுதன் இரண்டாவது புத்திரியாகிய ரீகனைக் கூப்பிட்டுக் கேட்க,
அவள் வஞ்சகவார்த்தைகளைச் சொல்லுவதில் தன் சகோதரிக்குக் கொஞ்
சங்கூடப் பின்வாங்காதவளாய்த் தன் தமக்கையைவிடத் தனக்கு அவ்னி
டத்திலுள்ள அன்பு அதிகமென்றும் தனது பிரியமுள்ள தகப்பனும் அரச
னுமாகிய அவனிடத்தில் தவிர இவ்வுலகத்தில் மற்றெதிலுந் தனக்கு ஆசை
யேயில்லையென்றும் வாதாடினாள். இதைக்கேட்ட லியர் தனக்கு இவ்வளவு
பிரியமுள்ளபெண்கள் வாய்த்ததைப்பற்றி சந்தோஷித்து ரீகனுக்கும் அவள்
கணவனுக்கும் தன் மூத்த பெண்ணுக்களித்த விதமாகவே தன் ராஜ்ஜியத்
தில் மூன்றிலொன்றைக் கொடுத்தான்.

பிறகு மிக்கப் பிரியமுள்ளத்தன் மூன்றாங் குமாரத்தியாகிய கார்டீலி
யாவைக்கூப்பிட்டு "நீயென்னசொல்லுகிறாய்" என்றான். ஆனால் அரசன் தன்
மற்றிரண்டு பெண்களைவிட இவளைச் சிறு பிராயமுதல் மிக்க அன்போடு
வளர்த்துவந்தமையால் இவள் அவர்களைவிட மிக்கஇனிமையானவும் உறுதி
யானவுமான வார்த்தைகளைச் சொல்லப்போகிறாளென்று எண்ணிக்கொண்
டிருந்தான். ஆனால் கார்டீலியா தன் தமக்கையர்களது வஞ்சகப்பேச்சுகளைக்
கேட்டு அருவருப்படைந்து, அவர்கள் தன்தகப்பனாரை ராஜ்ஜியத்தை விட்
டுத்துரத்தி அவர் உயிரோடிருக்கும்போதே அந்நாட்டைத் தாங்களும் தங்
கள் கணவர்களும் கைப்பற்றிக்கொண்டு அரசாள வேணுமென்பதற்கு
முயற்சிசெய்வதைத் தெரிந்துகொண்டு தன் தகப்பனாரைப் பார்த்து தனக்கு
அவரிடத்தில் உள்ள அன்பு ஏற்றக்குறைச்சலில்லாமல் கிரமப்படி இருக்க
வேண்டிய அளவு இருக்கிறதென்றாள். இவ்வார்த்தைகளைக்கேட்ட அரசன்
திடுக்கிட, கார்டீலியா அவன்தன்னை அன்போடு வளர்த்து வந்த தந்தையா
கையால் தானும் கிரமப்படி அவனுக்குக் கீழ்ப்படிந்தும் மிக்க அன்போடும்
கௌரவத்தோடும் நடந்துகொள்ளுகிறதாகவும் ஆனால் தன் சகோதரிகள்
சொல்லியபடி தனக்குத் தகப்பனாரிடத்தில் தவிர வேறொருவரிடத்திலும்
அன்பு இல்லையென்றும் மற்றுமுள்ள வஞ்சகப் பேச்சுகளையுஞ் சொல்லத்
தன்னால் முடியாதென்றும் சொன்னாள். "தகப்பனிடத்திலேயே அன்பைச்
செலுத்தினால் கணவர்கள் என்னத்திற்கு" என்றாள். தன்னை மணம் புரிந்த
கணவனிடம் பாதி அன்பையும் கவலையையும் கடமைகளையும் செலுத்தவே
ண்டுமேயல்லாது தன் சகோதரிகளைப்போல் மணம்புரிந்த கணவன்களை
விட்டுத் தன் தகப்பன்மேல் முழுவிசுவாசத்தையும் வைப்பதற்குத் தன்னால்
முடியாதென்றாள்.

கார்டீலியா இப்படித்தன் சகோதரிகள் வெளிக்காக விசுவாசத்தைப்
பாராட்டிச் சன்மானம் பெற்றதைப் பார்த்துத் தான் வாஸ்தவமாய் அவரி
டம் அன்புவைத்துச் சும்மா இருப்பது மேலானதென்று நினைத்தாள்.

கார்டீலியா இப்படி உண்மைப்பேசினதைக் கேட்ட அரசன் மிக்க
கோபங்கொண்டு கார்டீலியாவைக் கர்வங்கொண்டவளென்று வைது உன்



மை வஞ்சனை யென்பவற்றைக் கண்டுகொள்ளச் சக்தியில்லாதவராய் தான்
கார்டீலியாவுக்கு என்று வைத்திருந்த மற்றொரு தன் ராஜ்ஜியத்தின் மூன்றி
லொருபாகத்தைகானரில் ரீகன் இருவரையுங் கூப்பிட்டு அவர்களுக்குப்பேர்
பாதியாகப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டான். பிறகு தன் ராஜாங்கத்தார்களின்
முன்பாக அவ்விரு குமாரத்திகளின் கணவர்களை வரவழைத்து அவர்களிரு
வருக்கும் பொதுவாக ஒரு கிரீடத்தைக் கொடுத்து அத்துடன் தனக்குள்ள
அதிகாரம் வரும்படி அரசாண்மை இவற்றையும் அவர்களுக்கே அளித்தான்.
கடைசியில் தனக்காக வைத்துக்கொண்டது என்னவெனின் அரசன் என்ற
பெயரும், எப்பொழுதும் தன்னோடிருக்க ஒரு நூறுசேனை வீரர்களுமே
தான். அவர்களும் தன் இருகுமாரத்திகளினது அரண்மனைகளில் இங்கொரு
மாதம் அங்கொருமாதமாக சம்ரட்சிக்கப்பட்டு வரவேண்டுமென்றும ஏற்
பாடு செய்தான்.

இப்படி அரசன் திடீரென்று அநியாயமாய்த் தன் நாட்டையிழந்ததை
ராஜசபையோர் பார்த்து மிக்க துக்கித்தும் அவ்வரசனது கோபத்தைமாற்ற
முபல ஒருவருக்கும் மனந்துணியவில்லை. அப்பொழுது அவ்விடமிருந்த கெ
ண்டு (Kent) தேசத்துக்கு அதிபதியானவர் கார்டீலியாவின் நற்குணத்தைப்
பற்றி சிறிதுசொல்ல ஆரம்பிக்கவே அக்கோபக்கடலில் முழுகிய அரசன்
"நீயேதாவது அவள் பக்கம் பேசினால் உன்னை யிப்பொழுதே கொன்றுவிடு
வேன்" என்றுசொல்லி அவனைத்தடுத்தான். அப்பிரபு இதற்கு அஞ்சினவன
ல்லன். லியரினிடத்தில் அவன் அரசனுக்குரிய கௌரவத்தையும் தகப்பனுக்
குரிய அன்பையும் எஜமானனுக்குரிய கீழ்மையையும் உடையவன். தன் எஜ
மானனது சத்துருக்களை வெல்லப் போர்செய்வதற்காகவே தன்உயிர் இருக்
கிறதென்று எண்ணினவன். எஜமானனுக்கு ஆபத்துநேர்ந்த விடத்து அதை
நீக்குவதற்காகத் தன் உயிரை யிழப்பதில்பின் வாங்காதவன். இப்பொழுது
லியர் தனக்குத் தீங்குச்செய்தபோதிலும் தன் பழையகுணம் விடாமல் லிய
ருக்கு நன்மை செய்வதற்காகவே அவன்பேச்சைக் கேளாமல் அவனோடு
எதிர்த்து வாதாடினான்.

இப்பிரபு இப்படித் தைரியமாய் வாதாடினவுடன் அரசனுக்கு மிக்க
கோபம் மூண்டு ஒரு வியாதிஸ்தன் தன் வியாதியின்மேல் அபிமானங்கொ
ண்டு தனக்கு மருந்துகொடுக்கவரும் வைத்தியனைக் கொன்றதுபோல் அக்
கெண்டுக்கதிபதி ஐந்துநாளுக்குள் தன் இராஜ்ஜியத்தை விட்டு ஓடிப்போக
வேண்டுமென்றும் ஆறுவதுதினம் அவன் தன்தேசத்திற் காணப்படின் அவ
னைச் சிரச்சேதம் செய்யவேண்டுமென்றும் கட்டளையிட்டான். உடனே
கெண்டு அரசன் அப்படியிருக்கும் நிலைமையில்தான் அங்கேயிருப்பது நல
மல்லவென்று எண்ணி விடைபெற்றுச் சென்றான். போவதற்குமுன் உண்
மைபேசிய கார்டீலியாவை ரட்சிக்கும்படியாயும் அவளது சகோதரிகளை
தாங்கள் பேசியபடி நடந்துக்கொள்ளச் செய்யும்படியாயும் கடவுளைப் பிரார்
த்தித்துக்கொண்டு தன் குணத்தினால் தான் வேறுதேசம் போய்ப் பிழைப்
பதாகச்சொல்லிச் சென்றான்.

பிறகு அரசன் தன் அரண்மனையில் வந்திருக்கும் பிரான்சுதேசத்து
அரசனையும் பர்க்கண்டியின் டியூக்கையும் வரவழைத்துத் தனக்குக் கார்
டீலியாவின்மேல் இஷ்டமில்லை யாகையால் அவளுக்குத்தான் ஆஸ்தி யொன்
றுங் கொடுக்கப்போகிறதில்லை யென்றும், அவளை விவாகஞ்செய்து கொள்

ளுபவனுக்கு அவள் உடம்பைத் தவிர வேறொன்றுங் கிடைக்காதென்றுஞ் சொன்னான். பர்க்கண்டி டியூக் இதைக் கேட்டவுடன் அப்படியானால் கார்டீலியாவைத் தனக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டான். பிரான்சுதேசத் தரசனோ, கார்டீலியா தன் சகோதரிகளைப்போல் வஞ்சகப் பேச்சுகளைப் பேசாமல் உண்மை பேசினதற்காகத் தன் தகப்பனது அபிஷ்டத்தை யடைந்தாளென்பதை யறிந்து, அவளுடைய நற்குணங்களே ஒரு பெரிய தேசத்தைவிட விலையுயர்ந்ததென்றும் தன் சகோதரிகளுக்குக்கிடைத்த ஆஸ்தியைவிட நூறுமடங்கு விலையுயர்ந்த பிரான்சுதேசத்துக்கு அரசியாகப் போகிறாளென்று சொல்லி, அப்பெண்ணின் கையைப் பிடித்துக்கொண்டு தன் சகோதரிகளிடத்தும், கோபங்கொண்ட தகப்பனிடத்தும் விடைபெற்றுவரச் சொல்லி யனுப்பினான்.

கார்டீலியா கண்களில் நீர்தளும்பதன் சகோதரிகளிடத்தில் விடைபெறச் சென்று தன் தகப்பனாரை அவர்கள் வார்த்தைப்படி ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வரும்படி கேட்டுக்கொண்டாள். அதற்கு அவர்கள் தங்கள் கடமை தங்களுக்கே தெரியுமென்றும் இவள் தங்களுக்குப் புத்திமதிசொல்லவேண்டுவதில்லை யென்றுங் கண்டித்து இவளை லட்சுமிதேவியென்று நினைத்து விவாகஞ் செய்துகொண்ட தன் கணவனைச் சந்தோஷிப்பிக்கச் செய்யும்படிப் பரிகாசமாய்ப் புத்திசொல்லி யனுப்பினார்கள்.

(இன்னும் வரும்.)

E. சுப்பிரமணியம் பி - ஏ.

## விடுகதைகள்.

(1) ஒரு மனிதன் சில பழங்களை யெடுத்துக்கொண்டு ஒரு அரசனைக் காணப்போயினன். போகும்வழியில் முதல்கோட்டை வாசலிலுள்ள ஒரு சேவகன் சில பழங்கள் வேணுமென்று கேட்க, தான் வைத்திருந்ததில் பாதியும் ஒரு பழத்தில் பாதியும் கொடுத்து மீதியை யெடுத்துக்கொண்டு போயினான்: இரண்டாவது வாசல் சேவகனும் கேட்க, அவனுக்கும் தான் வைத்திருக்கிறதில் நேர்பாதிவும் ஒருபழத்தில் பாதியும் கொடுத்துவிட்டு மீதியை எடுத்துக்கொண்டு போகும் வழியில் மூன்றாவது வாசல் சேவகனும் அவ்விதமே கேட்க அவனுக்கும் மீதியாகத்தான் வைத்திருந்ததில் நேர்பாதியும் ஒரு பழத்தில் பாதியும் கொடுத்தனன். இம்மூவர்களுக்கும் கொடுத்தபிறகு தன் கையில் ஒன்றுமில்லாதிருக்க அரசனைக் காணாமல் திரும்பிப்போயினான். இதில் ஒரு பழத்தையாவது இரண்டாக வெட்டவில்லை. கடைசியில் தன் கையில் ஒரு பழமும் காணவில்லை. இம்மனிதன் முதல் எவ்வளவு பழம் கொண்டுவந்தான். ஒவ்வொருவருக்கும் எவ்வளவு கொடுத்தான்.

(2) ஒரு மனிதன் ஒரு புல்கட்டை தலையில் வைத்துக்கொண்டும், ஒரு புலியையும், ஒரு ஆட்டையும் நடத்திக்கொண்டும் போகும் வழியில் ஒரு நதியைக் கடக்கவேண்டிவந்தது. ஆற்றிலோ பிரவாகம் அதிகம். ஆனால்



அதைக் கடக்க ஒரு ஓடம் உண்டு. அந்த ஓடம் இம்மனிதனுக்கும் வேறே ஒரு மனிதனுக்கோ அல்லது மிருகத்துக்கோ அல்லது ஸாமானுக்கோ அதாவது இருவருக்குமாத்திரம் இடங்கொடுக்கும். இம்மனிதன் தன்னிடத்திலிருக்கப்பட்ட மிருகங்களையும் புல் கட்டையும் அக்கரையில் சேர்க்க வேணும்; புலியையும ஆட்டையும் ஓரிடத்தில் தனியாக வைக்கக்கூடாது. அதேமாதிரியாக ஆட்டையும் புல்லையும் ஓரிடத்தில் தனியாய் வைக்கக் கூடாது. ஏனெனில் புலி ஆட்டைத்தின்றுவிடும் அலலது ஆடு புல்லைத்தின்றுவிடும்; எல்லாவற்றையும் ஸாவதானமாய் அக்கரையில் சேர்க்கவேணும்; எவ்விதம் சேர்க்கலாம்?

(3) (————————) இதில் வரையப்பட்ட வரியைத் தொடாமல் சிறியதாக்கும் உபாயமென்ன?

கோகிலா.

---

### மறைந்த பட்டணத்தின் பெயர்.

ரிராதுமபு—ஒருபட்டணம்.
த்மைலோதித—ஒரு தேவஸதிரீ.
மிமஸாரா—ஒருமனிதன் பெயர்.
டீஸ்க்டில்ரங்—பத்திரமுள்ள ஓர்வஸ்து.

மேலேகண்ட சின்னாபின்னமாய் எழுதப்பட்டுள்ள பதங்கள் ஒன்றொன்றையும் சரியாய் எடுத்து எழுதி ஷை பதங்களின் முதலெழுத்துக்களை மட்டும் சேர்த்து வாசிக்க ஒரு பெரிய ரயில்வே ஸ்டேஷனுள்ள டவுனின் பெயர் வரும்.—என்ன டவுன்?

உருக்குமணி அம்மாள்.

---

### பழமொழி விடுகதை.

ஒ×யா×, கொ×டை×ம், தா×ம்×வா×, உ×ளே, பா×த்×ல், ஈ×ம், பே×ம்.

இந்த வாக்கியத்தில் விடப்பட்ட எழுத்துக்களை × இப்படி குறித்திருக்கிறேன். இதை சரியாய் எழுதி வாசித்தால் ஒரு நல்ல பழமொழி வரும் அதை சொல்லு.

ஆண்டாளம்மாள்.

## * சில புதுத் தமிழ்ப் புத்தகங்கள்.

கற்பிற் சிறந்த கிரிசல்டின் கதை:—இது ஆங்கிலப் பிரதம கவிவாணராகிய ஜியாப்ரே சாஸர் என்பவர் இயற்றிய அருமையானநூல். இதை எளிய நடையில் மிஸ்டர் M. S. நடேச ஐயரவர்கள பி-ஏ. மொழிபெயர்த் திருக்கிறார். இவ்விதமே நமது தமிழ் பி-ஏக்கள் ஆங்கிலத்திலுள்ள சில முக்கியமான புத்தகங்களை மொழிபெயர்த்

* இப்புத்தகங்கள் நல்ல காகிதத்தில் தெளிவான எழுத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

சால் நலமே. "ஒவ்வொருவரும் கிரிசில்டைப்போல் விபத்துக்காலங்களிலே மனநிலை மாறாது ஒழுகவேண்டும்" என்ற கற்பினை இக்கதையால் விளங்குகிறது. இதை ஒவ்வொரு இந்து மாதும் படிக்கவேண்டிய நவசியமென எண்ணுகிறோம். இதன் விலை அணா 4.

***

சத்திய விஜயம் அல்லது அரிச்சந்திரன் சரித்திரம்:—இது புத்தகம் பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ கா. ரா. நமச்சிவாய முதலியார் அவர்கள் எழுதியது. தோட்டக்காடு ம-ா-ா-ஸ்ரீ. இராமகிருஷ்ண பிள்ளையவர்கள் விருப்பப்படி வெளியேறுகின்றது. சாதாரண சிறுவர் சிறுமியர்கள் இதைப் படித்தால் அவர்களுக்கு மிக்க உபயோகமாகவிருக்கும். கூடியவரையில் நடை மிகச் சுலபமானதென்றே சொல்லலாம். ஆகையால் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசிப்பார்களென்று நம்புகிறோம். இது சென்னை மதராஸ் விடரரிபூரோ பிரசுரங்களிலொன்று. இதன் விலை அணா 4.

***

பார்வதி கல்யாணம்:—இது பாண கவியென்னும் மஹாகவியா லியற்றப்பட்டது. இது சம்ஸ்கிருதத்திலிருந்து பண்டிதர் ம-ா-ா-ஸ்ரீ N. சுவாமிநாத சாஸ்திரியாரவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது நாடகமாசையால் நாடகத்திற்குரியவைகள் இதில் அமைந்துள. இதில் பெண்கள் நடக்கவேண்டிய முறை தெய்வபக்தி விவாகமுறை முதலியவைகளடங்கி யிருக்கின்றமையால் இதுவும் யாவருக்கும் மிக உபயோகமான புஸ்தகமென்றே சொல்வோம். இதை வெளிப்படுத்தியவர் மிஸ்டர் பி. வைத்திநாத ஐயர். இதன் விலை அணா 4.

***

விசாலாக்ஷி:—இது "ஜார்ஜு W. M. உவில்லியம் ரயினால்ட்ஸ்" என்னும் பிரசித்திபெற்றதோ ராங்கிலக் கல்வியாளரால் இயற்றப்பெற்ற "லேளஸ் ஆவ்தி ஹேரம்" என்னும்நாவலின்மொழிபெயர்ப்பாம். இப்புஸ்தகத்தை மிஸ்டர் இராமலிங்க முதலியாரவர்கள் எளியநடையில் மொழிபெயர்த் திருக்கிறார். இதுபோன்ற புஸ்தகங்கள் தமிழில் மிக அருமையாயிருக்கின்றன. இவ்வித நாவல்களும் பொழுதுபோக்குக்கு மிக உபயோகமானதே. இதவும் ஒவ்வொருவரிடத்தி லிருந்தால் நலமே. இது மிஸ்டர் T. R. சந்திர அய்யரவர்களால் பிரசுரிக்கப்பட்டது. இதன் விலை அணா-14.

# பத்திராதிபர் குறிப்பு.

**மைசூரில் உபகார்ச்சம்பளம்.**

மைசூர் இலாகாவைச்சேர்ந்த பெண்களுக்குத்தான் உபகாரச்சம்பளம் கொடுக்கவேண்டுமென்று மிஸ்டர் H. J. பாபா அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள்; ஆனால் மகாராணி காலேஜ் சூப்பிரன்டென்டு இக்காலேஜ் தென்னிந்தியாவிலுள்ள பாடசாலைகளில் முதன்மையானதென்றும் மைசூர் பெண்மணிகளுக்கு மாத்திரம் உபகாரச்சம்பளம் கொடுப்பது உசிதமல்லவென்றும் வித்தியாசமின்றி இதரதேசத்துப் பெண்களுக்கும் உபகாரச்சம்பளம் கொடுப்பதுதான் நலமென்று அபிப்பிராயப்பட்டு தெரிவித்ததின்மேல் மிஸ்டர் பாபா அவர்கள் மைசூரைச் சேராதவர்களுக்கு குறைந்த உபகாரச் சம்பளம் கொடுக்க சம்மதித்திருக்கிறாராம்.

இவ்விஷயத்தை அக்காலேஜ் கமிட்டியார் தீர்க்காலோசனை செய்து பாரபக்ஷம் செய்யாமல் யாவருக்கும் சரிசமானமாக உபகாரச்சம்பளம் அவரவர் யோக்கியதைக்கு தக்கவாறு கொடுக்க ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறோம். இப்படிச்செய்தால் அவர்கள் தேசத்துக்கும் கௌரவம்; அவர்கள நற்காரியம் யாவராலும் மெச்சப்படும்.

***



**மைலாப்பூர் பெண்கள் பாடசாலை.**

மைலாப்பூரிலுள்ள பெண்கள் பாடசாலை சுமார் 30-வருஷங்களுக்கு முன் காலஞ்சென்ற விஜயநகரம் மகாராஜா அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. அதில் 4-வகுப்புகளிருந்தன. மகாராஜா அவர்கள் காலஞ்சென்ற பின்பு இப்பாடசாலையை நேஷனல் இந்தியன்மகாசபையார் நடத்தி வந்தார்கள். ஆனால் இவர்களுக்கு தக்க திரவிய சகாயமின்மையால் அங்குள்ள கனவான்களைச் சேர்ப்பித்து ஒரு சிறிய கமிட்டி ஏற்படுத்தி அவர்கள் மானேஜ்மன்டில் இப்பாடசாலையை ஒப்புவித்தார்கள். ஆயினும் இப்பாடசாலை இச்சபையாரின் மேல்பார்வையிலிருந்தது. சென்றவருஷம் மேமீ மிஸஸ் N. A. கோர்ட்ரைட் என்றமாதை கௌரவ சூப்பிரின்டெண்டாக நியமித்து இப்பாடசாலையை லோயர் சகண்டரி பாடசாலையாகவும் மாற்றி இதற்கு ரூ 5000 சேர்த்திருக்கிறார்கள்.

பெண்கள் இன்னும் இரண்டுவருஷம் அதிகமாக படித்து வருவதின்பொருட்டு ஸ்திரீ உபாத்தியாயர்களையே நியமிக்க பிரயத்தினம் செய்தும் வருகிறார்கள். பெண்களுக்கு சங்கீதம் சொல்லிக்கொடுக்க ஒரு உபாத்தியாயரையும், புராணக்கதைகளிலிருந்து நீதிகளடங்கியவைகளைச் சொல்லிக்கொடுக்க ஒரு உபாத்தியாயரையும் நியமிக்க ஏற்பாடுசெய்திருக்கிறார்களாம். நிற்க கங்குண்டி ஜமீன்தாரவர்கள் தமக்குச் சொந்தமான இடத்தை இப்பாடசாலைக்கு கொடுத்திருக்கிறார்கள். ரீவா மகாராணியாரவர்களும் உதவிபுரிவதாக வாக்களித்திருக்கிறார்களாம். இப்பொழுது இப்பாடசாலையில் 110-பெண்கள் படித்துவருகிறார்களாம். மைலாப்பூரிலுள்ள கனவான்களின் நன்முயற்சியால் இப்பாடசாலை மேலும் மேலும் நல்லஸ்திதிக்கு வருமென்றே நம்ப இடமிருக்கிறது. ஆனால் இப்பாடசாலை பூராவாக மதபற்றுள்ள பாடசாலையென யாவரும் எண்ணும்படி செய்யார்களென்று நம்புகிறோம். தற்காலத்தில் பெண்களுக்கு புராணக்கதைகள் அவ்வளவு விசேஷமுமல்ல.

***

**ராவுபஹதூர் எதிராஜுலு பிள்ளை.**

ராவுபஹதூர். M. எதிராஜுலு பிள்ளையவர்கள் பேஸ்வாடாவில் தமது விடாமுயற்சியினாலும் ஊக்கத்தினாலும் வியாபாரத்தில் விருத்தியடைந்து மிகச் செல்வமுள்ளவர். இவர் தமக்கு வயதானபடியால் தமது ஒரே அருமையான குமாரராகிய மிஸ்டர் M. E. கஜபதிராவு அவர்களை தமது அலுவலைப்பார்த்துவரும்படி ஏற்பாடு செய்துவிட்டு பட்டணத்தில் வசிக்க நிச்சயித்திருப்பதைக் கேட்க யாவரும் சந்தோஷப்படுகிறார்கள். இக்கனவான் திவ்விய சரித்திரமும் இவர் பொதுநன்மைக்காக உழைத்தவைகளும் இவருடைய உருவப்படமு மடங்கிய ஒரு அழகான ஆங்கிலப் புஸ்தகம் நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இதில் கிருஷ்ணா ஜில்லாவுக்கு கலெக்டராயிருந்த மிஸ்டர் J. N. அட்கின்ஸன் அவர்கள் இவர் உண்மையான நகரவாசியென்றும், நற்குணம் வாய்ந்தவரென்றும், தருமசீலரென்றும் உரைத்ததுடன் இவரை இவ்விராஜதானியிலுள்ள யாவரும் (தம்மையுள்பட) பின்பற்றி நடக்கவேண்டிய தவசியமெனச் சொல்லியிருக்கிறார். ம-ா-ா-ஸ்ரீ. பிள்ளையவர்கள் பொதுஜனங்களுக்கு மிக உபயோகமான பற்பல விஷயங்களைச் செய்து கீர்த்திபெற்றுள்ளார். கவர்ன்மெண்டாரும், ஜனங்களும் இவருடைய பரோபகார சிந்தையைப்பற்றி பலதடவைகளில் மெச்சியிருக்கிறார்கள். 1884-ஷ இவர் முனிசிபல் கௌன்சிலராக விருந்து தம் சிரமத்தை கிஞ்சித்தேனும் நினைக்காமல் ஜனங்களின் கஷ்டத்தின் பொருட்டு உழைத்து வந்ததற்காக கவர்ன்மெண்டார் இவருக்கு "ராவுபஹதூர்" என்ற பட்டத்தை யளித்தார்கள். 1897-ம் ஷ காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரின் டைமண்ட் ஜூபிலி காலத்தில் இவர் முனிசிபல் கௌன்சிலராகவும், டிஸ்டிரிக் போர்ட் மெம்பராகவும், தாலூகாபோர்ட்வைஸ் சேர்மனாகவுமிருந்து உழைத்து வந்ததற்காக இவருக்கு ஒரு மெரிட் சர்டிபிகேட் கொடுக்கப்பட்டது. நமது மகாராஜா அவர்களுக்கு பட்டாபிஷேகம் நடந்த காலத்திலும் இவர் கிருஷ்ணா ஜில்லாவில் செய்த தர்மத்திற்காகவும் ஒரு மெரிட் சர்டிபிகேட் கொடுக்கப்பட்டது. இவரைப்பற்றி புகழ்ந்து பேசாதவர்களுமில்லை. இவருடைய உருவப்படமொன்று முனிசிபல் கட்டிடத்திலும் இன்னொன்று விக்டோரியா டவுன் மண்டபத்திலும் வைக்கப்பட்டிருக்கின்றன. இவருக்கு இந்தியர்கள் கல்வியில் விருத்தி

யடைய வேண்டுமென்ற மிக்க அவா உண்டு. உதாரணமாக பெஸ்வாடாவிலுள்ள லி. எஸ். எம். பாடசாலையில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் ஸயன்ஸ் என்றதில் முதன்மையாகத் தேறிய பிள்ளைக்கு வெள்ளிப்பதக்கம் பிரதிவருடம் அளித்துவருகிறார். பெஸ்வாடாவிலுள்ள இவருடைய கிரகத்தில் அடிக்கடி ஏதாவதொரு விருந்து நடந்துகொண்டே யிருக்குமென்றும் அவ்வீடு கலியாணவீடோ என்று சொல்லும்படித் தோன்றுமென்றும் ஒரு கனவான் நமக்குத் தெரிவித்திருக்கிறார். மிஸ்டர் அனந்தாசார்லு அவர்கள் இப்புத்தகத்தின் முகவுரையில் "வரைமுறையச்கூடாத உபசரணைகளை இவர் செய்துவருவது மெச்சத்தகுந்தவைகளே. இவர் வீண்பெருக்கும் கௌரவத்தின்பொருட்டும் இவைகளைச் செய்பவரல்ல; ஜனங்களுக்கு நன்மை எப்பொழுதும் தம்மாலியன்றளவு செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் செய்துவந்தாரென்று" சொல்லியிருப்பது உண்மையே. இவருடைய சகோதரராகிய மிஸ்டர் M. வேணுகோபாலபிள்ளையவர்களும், காங்கிரஸ், மகஜனசபை முதலியவைகளில் மிக்க அபிமானம் வைத்து உழைத்துவந்தவர். இவர்களுக்கு பெண்கல்வி விஷயத்திலும் மிக அபிமானமுண்டு. இவர்கள் வீட்டு பெண்குழந்தைகளுக்கு கல்விபுகட்டி வருகிறார்களாம். ஆனால் பெண்கல்வியை விருத்திசெய்ய சயன்ஸில் தேறிய பிள்ளைக்கு வெள்ளிப்பதக்கம் கொடுப்பதுபோல் லோயர் சகண்டரியில் தேறிய பெண்பிள்ளைக்கும் பதக்கம் கொடுக்க ஏற்பாடு செய்வாரென்று நம்புகிறோம்.

மிஸ்டர் எதிராஜுலு பிள்ளையவர்கட்கு ஈசன் தேகபலத்தை யளித்து சென்னையிலுள்ள ஜனங்களுக்கு நன்மை செய்யும்பொருட்டு தைரியத்தையும் உற்சாகத்தையும் தீர்க்க ஆயுளையு மளிப்பாராக.

## சமாசாரக் குறிப்பு.

வடசர்க்கில் பெல்லாரி பெண்கள் பாடசாலைக்கு ஆக்டிங் இன்ஸ்பெக்டரஸாக மிஸ்சாரா கோவிந்தராஜலு அம்மாள் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்திய மாதர்கள் கல்விகற்று உயர்பதவியி லிருப்பவர்களில் இம்மாதுதான் முதன்மையானவரென்று சொல்வோம்.

***

திருவநந்தபுரம் சர்க்கார் பெண்காலேஜியில் உபாத்தியாயராயுள்ள மிஸ்வாட்ஸ் பி. ஏ. என்றமாது திருவநந்தபுரத்து இராஜவம்சத்தைச் சேர்ந்த ராணிகளுக்கு மாசம் 100-ரூபா பிரத்தியேகசம்பளத்துடன் உபாத்தியாயராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இதனால் திருவநந்தபுரத்து இராஜவம்சத்தைச் சேர்ந்தமாதர்கள் கல்விகற்று வருகிறார்களென்று தெரிகிறதல்லவா?

***

மைசூர் மகாராணி பெண்கள் காலேஜியின் நிர்வாக கமிட்டிக்கு அக்கிராசனாதிபதியாக சீப்கோர்ட் ஜட்ஜி ம-ா-ா-ஸ்ரீ H. V. நஞ்சுண்டய்யா அவர்கள் மைசூர் மகாராஜா கவரன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். இக்கனவானுக்கு பெண்கல்வி விருத்தியில் மிக்க அநுதாபமும் ஊக்கமும் பிரியமுமுண்டெனக் கேட்க மிகச்சந்தோஷப்படுகிறோம்.

***

மைசூர் மகாராணி பெண்காலேஜியில் உயர்ந்தஜாதி இந்துப் பெண்களும் சுதேச கிறிஸ்தவ, மகம்மதிய பார்சி யூரேஷிய, ஐரோப்பிய சாதியைச்சேர்ந்த தக்க கனவான்களின் குமாரத்திகளும் லோயர் சகண்டரி பரீக்ஷையிற்றேறியபின்பு சேர்ந்து வாசிக்கலாமென்ற ஏற்பாட்டை அக்காலேஜ் கமிட்டியார் அங்கீகரித்து ஊர்ஜிதத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

Printed at the Ripon Press Madras & Published by the Proprietor, C. S. RAMASAWMY IYER, Triplicane, Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
18 JAN 1905
MADRAS.


# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. VI } Madras: October 1904. { No. 10.

புத்தகம் ௬. } சென்னப்பட்டணம்: அக்டோபர்மீ 1904. { இல. 10.


## தாய்மார்கள் நடக்கவேண்டிய வழி.

'ஒரு குழந்தையின் விருத்தி அதன் தாயாரால் தான்' என நேபோலியன் என்றவர் சொல்லியிருக்கிறார். எப்படியெனில்; தாய் தன் குழந்தைக்கு நற்குணத்தைப் போதிப்பாள். இக்குணம் அக்குழந்தையின் விருத்திக்கு உபயோகமானது. குழந்தை இளம் பருவத்தில் தாயினிடத்திலேயே யிருக்கும். இங்குமங்கும் ஓடும். அப்பொழுது தாயின் பார்வை, குரலின்தொனி, செய்கை, முதலியவைகள் குழந்தையின் மனதில் நன்றாகப் பதியும். பின்பு குழந்தை வளரவளர முன் சொல்லிய பார்வை, தொனி, செய்கை முதலியவைகள் அதன் மனதில் உறுதியாய் நிற்கும். குழந்தை மனிதனானபோதிலும் இக்குணங்கள் அழியாமல் மனதிலிருக்கும்.

ஒவ்வொரு பருவத்திலும் நடக்கிற செய்கைகள், எண்ணங்கள் அடுத்த பருவத்திலும் வந்துவிளங்கும். இவ்விதமே கடைசிவரைக்கும் அதாவது முதிர்ந்த வயதுகாலத்திலும் இவ்வித குணங்கள் மனதிலேயே யிருக்கும். ஆகையால் கல்வி விஷயத்தில் நாம் கவனிக்கவேண்டிய அதிக முக்கியமானவிஷயம். குழந்தையின் மனோசக்தியை விருத்திசெய்யவேண்டுவதுதான். இதற்குத் தக்கவர் அதன் சமீபத்திலிருப்பவரும், அதனிடத்தில் மிகப் பிரியமாயிருப்பவருமான அதன் தாயார்தான். குழந்தையின் செய்கை, சுபாவம், முதலியவைகளை அறிந்து, தாயார் அதற்கு நல்லகுணத்தைப் புகட்டி வரவேண்டும். நம் தேசத்தில் குழந்தைகளை சில வேளைகளில் அதட்டி பயமுறுத்துகிறார்கள். அடிக்கவும் அடிக்கிறார்கள். இப்படிச் செய்வதால் குழந்தைகள் பயந்து இயற்கையாய் வரும் சுபாவச்செய்கைகளை மறந்துவிடுகின்றன. மேலும், பயமுள்ளவைகளாகவும் ஆய்விடுகின்றன. இது தப்பு. தாய் இழிவான குணமுள்ளவளாயும், தன்னயம் பார்க்கிறவளாயும், கோபமுள்ளவளாயும், பேதைமையுள்ளவளாயு மிருந்தால், இவள் குழந்தையும் இக்குணங்கள் பொருந்தி வளரும். தாய் தெய்வபக்தி, நட்பு, தர்மசிந்தை, பெருந்தன்மை, சுயநயம் பாராட்டாமலிருத்தல் முதலிய குணங்கள் பொருந்தியவளாயிருந்தால், குழந்தையும் இவ்வித குணமுள்ளதாய் வளரும். ஆகையால் நம் தேசத்திய மாதர்கள் தங்கள் குழந்தைகளை நல்வழியில் நடத்திவர முயலவேண்டும்.

குழந்தைகள் பேச ஆரம்பிப்பதற்கு முன் எப்படி இவைகளைக் கற்
றுக்கொள்ளும் என்றால், குழந்தைகள் பார்வையினாலும், முகக்குறியினா
லும் கற்றுக்கொள்ளும் என்று சொல்வோம். தாய்மார்களும் குழந்தை
களுடைய அழுகை, முகஜாடை, முதலியவைகளைக்கொண்டு அவைகள் பசி
யால் வருந்துவது முதலியவைகளை அறிந்துகொள்வதில்லையா?

இவ்விதமே குழந்தைகள் இளம்பருவத்தில் அடையும் சிந்தனைகள்
அக்குழந்தைகளின் நற்குணத்திற்குப் பொருந்தியவைகளா யிருக்கும்.
இவைகள் உயிருக்காதாரமானவைகளா யிருப்பதுடன், சந்ததிதோறும் இப்
படி யிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. நேபோலியன் என்றவரும் உண்
மையாகவே "பிரான்சியர் நேர்மையும் சிறப்புமுள்ள பெரிய ஜாதியாரா
யிருக்கவேண்டுமானால் அத்தேசத்திற்கு தாய்மார்கள் மாத்திரம் தேவை
யென்றும், அப்பொழுது தான் அத்தேசம் சீர்படுமென்றும்" சொன்னதா
கத் தெரிகிறது.

உதாரணமாகக் குந்திதேவியார் நற்குணம் வாய்ந்தவளாதலால் அத்தேவி
யாருடைய புத்திரர்களாகிய பஞ்சபாண்டவர்கள் பராக்கிரமசாலிகளாகவும்,
அறிவுள்ளவர்களாகவும், தருமசிந்தனையுள்ளவர்களாகவும், இன்னும், தயை
பெருந்தன்மை, தெய்வபக்தி, முதலியவைகள் பொருந்தியவர்களாகவு மிருந்
தார்கள். இவ்விதமே ஆங்கிலேயர்களுக்குள்ளும் அநேகரிருந்திருக்கிறார்கள்.
கூவியர் என்பவர் தமது தாயாரின் நற்போதனையால் தான் கல்வி கற்பதில்
ஆவல் உண்டானதென்று சொல்லியிருக்கிறார். காலஞ்சென்ற விக்டோரியா
மகாராணியாரும் தமது பெரியகுடும்பத்தை தமது நற்குணத்தால் பாது
காத்துவந்தார்கள்.

இம்மகாராணியார் இங்கிலாந்திற்கு தெற்கிலுள்ள "வைட்தீவில் ஆஸ்
போர்ன் என்ற அழகான அரண்மனையைச்சேர்ந்த தோட்டத்தில் தமது
குழந்தைகள் விளையாடவும், பூச்செடி, காய்கறி முதலியவைகள் பயிர் செய்ய
வும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இங்கு குழந்தைகள், தாங்களே கொத்தி
வெட்டி அழகான செடி கொடிகளை நட்டுப் பயிர் செய்துவந்தார்கள். இவர்க
ளொவ்வொருவருக்கும் தனிமையான தோட்டம் கொடுக்கப்பட்டது. ஒவ்
வொரு குழந்தைக்கும் அவர்கள் பேர் செதுக்கிய மண்வெட்டி கத்தி, கட்
டப்பாரை முதலிய கருவிகளைக் கொடுத்தார்கள். இவர்கள் ஒவ்வொருவரும்
தங்கள் தோட்டங்களை வெகு அழகுள்ளதாகச் செய்தார்கள். இவர்களுக்கு
தச்சுவேலை கற்றுக்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குழந்தை
கள் தச்சுவேலையில் நன்றாகத் தேர்ந்து தாங்களே ஒரு கோட்டை கட்டினார்
களாம். புத்திரிகளோ தங்களுக்கு கொடுக்கப்பட்ட தோட்டத்தில் சமை
யல் கட்டிடத்தில் சகல சாமான்களை வரவழைத்துக்கொண்டு பற்பல பணி
யாரம் முதலிய போஜனபதார்த்தங்களைச் சமைத்து வந்தார்கள். அங்கு
காய்த்த காய்கறிகளைச் சமைத்தும், பழங்களை எடுத்து இரசம் பிழிந்து ஓர்



வகை பாயசமாகச் செய்தும், ஊறுகாய்போட்டும் வந்தார்கள். இவர்கள்
செய்த ஒவ்வொன்றையும் தாயார் புசித்து, பின்பு சமீபத்திலுள்ள ஏழைகளு
க்கும் கொடுக்கும்படி உத்திரவுசெய்வது வழக்கம், இப்படி இராணியார்
செய்தது அவர்களுக்கு பரோபகார குணத்தை போதித்து வந்ததென்றே
சொல்வோம். இராணியார் தமது குழந்தைகள் ஒவ்வொருவேலையையும் கற்
றிருக்க வேண்டுமென்று எண்ணி இப்படிச் செய்து வந்தார்கள்.

மேலும் அத்தோட்டத்தின் பெரிய மண்டபத்தில் பொருட்காட்சி
சாலையொன்றை குழந்தைகள் அமைத்து, அதில் அவர்களே சம்பாதித்த
நானாவித பட்சிகளும், புலித்தோல், மான்தோல் முதலியவைகளும், மலர்க
ளும், பற்பல விதமான கற்பாறைகளும், குழந்தைகள் செய்த வினைதப்
பொருள்களும், குழந்தைகளாலேயே சேகரிக்கப்பட்டிருந்தன. இவைகளெல்
லாம் வரிசைக்கிரமமாக வைக்கப்பட்டு மிருந்தன. இப்படிச்செய்து வந்த
தால் குழந்தைகளுக்கு புத்தி விசாலித்து, பற்பல பொருள்களின் உற்பத்தி,
வர்ணம் முதலியவைகளும் நன்றாகத் தெரிந்திருக்கும். இதற்காகத்தான் இப்
பொழுதும் குழந்தைகளுக்கு அவர்கள் கண்களுக்குப் புலப்படக்கூடிய வஸ்
துக்களைப்பற்றியும், பக்ஷி, மிருகம் முதலியவைகளைப்பற்றியும் பாடசாலைக
ளில் பொருள்பாடமாக போதிக்கப்பட்டு வருகின்றன.

குழந்தைகள் தாமே செடிகளை நட்டு பயிர்செய்ததும், தாங்களே
தச்சுவேலை செய்ததும், பொருட்காட்சி சாலை ஏற்படுத்தியதுமானது, வேலை
யின்னதென்றும், வேலைக்காரர்களிடத்தில் குரூரமாயிராமல் பட்சமாயிருக்
கவும் போதித்ததென்றே சொல்லலாம்.

நமது காலஞ்சென்ற மகாராணியார் தமது குழந்தைகளை இவ்விதமாக
பழக்கி வந்தது ஆச்சரியமென்று அநேகர் எண்ணக்கூடும். அநேகமாக ஆங்
கிலேயர்கள் தாங்களே தங்கள் குழந்தைகளை இவ்விதம் தான் முதலில் பழ
க்கி வருகிறார்கள். நமது மகாராணியாரும் இவ்விதமே பழக்கப்பட்டு வந்த
மையால், இவர் சிங்காசனம் ஏறினகாலத்தில் ஜனங்களைப்பார்த்து "பிரிய
மான பிரஜைகளே! இவ்விங்கிலாந்திலேயே எனது அருமையும் பெருமை
யும் வாய்ந்த தயாளகுணவதியாகிய தாயாரால், தயாளகுணம் எனக்கு சிறு
வயதுமுதல் போதிக்கப்பட்டிருப்பதால் என் தேசத்தின் சட்டதிட்டங்களை
யும், சம்பிரதாயங்களையும் கைப்பற்றியொழுகி கௌரவப்படுத்துவேனென"
பகன்றனர்.

தாய்மார்கள் இவ்விதம் நம்தேசத்தில் தங்கள் குழந்தைகளை பழக்கி
வந்தால் எவ்வளவு மேன்மையாயிருக்கும். ஆனால் அவர்களுக்கு கல்வியறிவு
இல்லையே யென்று சொல்லலாம், இது உண்மைதான். கல்வியறிவு அவர்க
ளுக்கில்லாம லிருப்பதற்கு காரணபூதர்கள் கல்வியிற்தேறியவர்கள் தானே?
ஜட்ஜி கனம் S, சுப்பிரமணிய ஐயரவர்களும் "இந்துஸ்திரீகள் கல்விகற்று
முன்னுக்கு வந்தாலன்றி, இந்துவாலிபர்கள் முன்னுக்கு வாரார்கள்" என்று

சொன்னதும் உண்மையே. ஆகையால் நம்மவர்கள் தங்கள் மனைவி, புத்திரி,
சகோதரி முதலியவர்களுக்கு கல்வி புகட்டிவந்தால் நமது தேசத்திலும
நல்ல தாய்மார்களிருப்பார்கள். அப்பொழுதுதான் நாம் நேர்மையும் சிறப்பு
முள்ள ஜாதியாராயிருப்போம்.

# யவன சாவித்திரி.

## அத்தியாயம் - க.

யவனதேசத்திற்கு இப்போது தலைநகராக விருக்கும் ஆதென்ஸ்
பட்டணத்திலிருந்து ஒருவன் வடக்குநோக்கிச் சென்றால்
ஆதென்ஸைக்கொண்டுள்ள அயோனியா நாடுவிட்டதும்,
போஷியா நாட்டையும், அதை விட்டவுடன் தெஸ்ஸாலி
நாட்டையும் அடைவான். அத்தெஸ்ஸாலிநாடு ஒரு பெரிய
சமவெளி. இங்குமங்குமுள்ள சிறு குன்றுகள் தவிரவேறு
மலைகள் கிடையாது. விவசாயத்துக்கு ஏற்ற பிரதேசம் அது. கோதுமை ஏரா
ளமாக அங்கே விளையும். திராக்ஷைக்கொடியும் உண்டு. இலுப்பைமுதலிய மர
ங்கள்; காடுகள் காடுகளாக வளர்ந்து, நாடு பார்வைக்கு இனிமையை விளைக்
கும். இந்நாட்டின் மத்தியில் ஒருகுன்றின்மேல் ஒரு கோட்டை கட்டப்பட்
டிருந்தது. அது பின்காலத்தில் சத்துருக்களால் நாசஞ் செய்யப்பட்டது.
அக்கோட்டைக்கு தீப்ம் என்று பெயர். நாம் எழுதும் கதை நடந்த காலத்
தில் பிடிப்படாக்கோட்டைகளில் ஒன்றாக அது எண்ணப்பட்டது. அதுதான்
தெஸ்ஸாலிநாட்டின் முக்கியபட்டணம். அப்பட்டணத்தைச் சுற்றிலும் ஒரு
மதிலும், அம்மதிலில் ஏழுவாசல்களும் இருந்தன. மதிலுக்கு வெளியே நல்ல
வயல்களும், தோட்டங்களும் இருந்தன. தெற்கு வாசலுக்கு வெளியே மாத்
திரம் ஒரு பெரிய மரமடர்ந்த சோலை இருந்தது. அச்சோலைக்கு இருபக்கங்
களிலும் சோதிவயல்கள் இருந்தன. சோலைக்கும், வயல்களுக்கும் மத்தியில்
சிறு வாவிகள் பல உண்டு. சோலைக்குத் தென்பக்கத்தில் புற்றரை யொன்று
கண்ணுக்கெட்டும்வரை பரந்தோடி யிருந்தது. வானம்பாடி, ஊர்க்குருவி முத
லியன மரங்கள்தோறும் இருந்து பாடும். ஆடுமாடுகள் புற்றரையில் மேயும்.
சோலையில் மான், நரிமுதலிய மிருகங்களை அடிக்கடிபார்க்கலாம். மனக்கிலே
சமுள்ள ஒருவன் இவ்விடத்திற்கு வருவானாகில், அவன் மனவருத்தம் அடி
யோடு தொலைந்துபோகும். இச்சோலையும் அடுத்த நிலங்களும் அரசனுக்குச்
சேர்ந்தவை. ஆகையால் சாதாரண ஜனங்கள் விசேஷ காலங்களில் மாத்தி
ரம்தான் அவைகளில் சென்று திரியலாம். மற்றக் காலங்களில் அரசன்
நிலங்களில் வெள்ளாமைசெய்து அதன் வரும்படியிலிருந்து தம் சொந்தச்



செலவுகளைச் செய்துகொள்ளல்வேண்டும். அந்நாட்டில் வரி விதிப்பதானால்
அது பொதுச் செலவுக்கு மட்டுமேயாகும். சண்டைக்குப் போவதானால்
ஜனங்கள் அரசன் பின் செல்லல்வேண்டும். அதற்காகப் பணம் கொடுத்துத்
தப்பித்துக்கொள்ளல் முடியாது. பொதுவிஷயமான காரியங்களெல்லாம்;
வயதிலும் அறிவிலும் மிகுந்த பெரியோரெல்லோராலும் கூடி முடிக்கப்பட
வேண்டும்.

நாம் மேலே சொன்ன சோலைக்கும் புற்றரைக்கும் மத்தியில் ஒருசிறு
வாவி இருந்தது, அவ்வாவிக்கு பத்து கஜதூரத்தில் சில கற்பாறைகள் கிடந்
தன. அவற்றிலொன்றன் பேரில் ஒருமனிதன் உட்கார்ந்து தன்தலையை தன்
கையொன்றின்மேல் சாய்த்து இருந்தான். அவன் இடையில் ஒருசிறு வேஷ்
டிதவிர வேறு அவன் உடம்பில் ஆடையென்பதே கிடையாது. அவனைப்பார்
ததால் சுமார் 27, 28 வயதுள்ளவன் போலிருந்தான். அவனுடைய பருத்துச்
சரிந்த புயங்களும், உயர்ந்த மார்பும், இவன் ஒரு பெரிய வீரனும் என்று
கூறின. அவனுடைய கண்கள்; நீண்டு, நீலவர்ணம் படிந்திருந்தன. நெற்றி
சுமார் 3 விரற்கடை இருக்கும். இவைகளைக் கண்ணுற்றவனுக்கு அவன்
புத்தி சாதுர்யத்தைப்பற்றி ஒருவித சந்தேகமும் ஏற்படமுடியாது. நாம்
அவனைக் கல்லின்மேல் பார்க்கும்பொழுது அவன்கண்கள் பாரமாயும், அவ
ன்மயிர் ஒதுக்கப்படாமல் சொட்டை சொட்டையாய் முன்வந்து நெற்றியை
மறைத்துக்கொண்டும் இருந்தன. இவைகள் அவன் கொஞ்ச நாட்களாக
ஏதோ ஒரு பெரிய வியாகூலத்தில் ஆழ்ந்திருக்கிறான் என்று குறித்தன. கல்
லின்மேல் உட்கார்ந்திருந்த அவன் அடிக்கடி திரும்பி யுட்காருவான். ஒரு
முறை இன்னொரு கல்லின்மேல் சாய்வான். பின் தன் தலையைக் கையொன்
றின்மேல் சாய்ப்பான். சில நிமிஷத்திற்கெல்லாம் தலையைத் தூக்கி நிமிர்ந்து
உட்காருவான். கொஞ்சநேரம் தனக்குத்தானே பேசிக்கொள்வான். பின்
வாய்விட்டுச் சொல்வான். கொஞ்சநேரத்துக்குப்பின் மௌனம் சாதிக்கத்
தலைப்படுவான்.

கொஞ்சநேரம் அவன் அப்படியே உட்கார்ந்திருந்தான். ஒருவரும் அவ்
வழி வரவில்லை. சூரியாஸ்தமனமாயிற்று. கொஞ்சநேரத்துக் கப்புறம் ஒரு
சங்கு ஊதின சப்தம் கேட்டது. புற்றரையில் மேய்ந்துக்கொண்டிருந்த ஆடு
மாடுகளெல்லாம் ஒரு கம்பளியை முதுகின்மேல் போட்டுக்கொண்டு ஒரு
கையில் ஒரு சங்கையும், இன்னொருகையில் நாணலால் செய்த குழல் ஒன்
றையும் வைத்துக்கொண்டு நின்ற இடையன் ஒருவன் பக்கத்தில் போய்ச்
சேர்ந்தன. அவன் அவைகளை நடத்திச்சென்று அவைகளை ஒருபட்டிக்குள்
ஓட்டிக்கதவை மூடிவிட்டுத் திரும்பினான். திரும்பினவன் ஏதோ யோசித்
துக்கொண்டு, நாம் முன் குறித்த குளத்துக்கு அடுத்துவந்துவிட்டான். அப்
போது தான் அவனுக்குக் கல்லின்மேலுட்கார்ந்த மனிதன் தென்பட்டான்.
விரைவில் அவன் பக்கம் சென்று, அவன் முகக்குறியைக்கண்டு, மிக மனம்

வருந்தி அவன் விசனத்தை மாற்றத் தன் குழலை ஊத ஆரம்பித்தான். அவனுக்குக் குழல் ஊதுவதில் இருந்த தேர்ச்சி நம் சாப சாஸ்திரியார் அப்போது கேட்டிருப்பாராகில் அவரையும் ஆச்சரியப்படச் செய்திருக்கும். மிக இனிய சந்தோஷத்தைப் பெருக்கத்தக்கதுமான சுரங்கள் பலவாசித்தான். மற்றவன் விசனம் கொஞ்சமும் மாறிற்றில்லை. உடனே கலியாண வாழ்த்து ஆரம்பித்தான். கல்லின்மேலிருந்தவனுக்கு இதைச் சகிக்கக்கூடவில்லை. "போதும், நிறுத்து. நான் இதைக்கேட்கக் கூடிய ஸ்திதியில் இப்போது இருக்கவில்லை" என்றான். மற்றவன் முகம் மிகவாட்டமுற்றது. "என் குழல் வாசிப்பு மிக இனிமையுள்ளதென்று பலமுறையும் தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது அது மாறின காரணம் என்ன? சுரத்தில் இழுக்கு நேர்ந்ததா? அல்லது வேறான குறையுண்டோ? தயைசெய்து தெரிவிக்க வேண்டும்." என்றான். மற்றவன் 'மனிதனுக்கு திருப்தியென்பதுகிடையாது. அவனது ஆசைக்களவில்லை. அவன் ஆசைப்படும விஷயங்களில் அவனுக்கு அறிவிப்பதாகவும் தெரியவில்லை. நானும் அறிவினமாக கிடைக்கக்கூடாத வஸ்து வொன்றின்மேல் ஆசைவைத்து வருந்துகிறேன். அதை வெளியில் சொல்வதில் என்னபயன்?" என்றான். குழலூதி "மகாராஜ்! தாங்கள் தெஸ்ஸாலி முழுவதுக்கும் சக்கரவர்த்தியா யுள்ளீர்கள். சென்ற ஒலிம்பிய காட்சியில் தங்களையொத்த பராக்கிரமசாலியானவன் தேசத்திலேயே இல்லையென்னும் பெயரைப் பெற்றீர்கள். தங்கள் தீரம் இத்தகையதெனவும் எனக்குத் தெரியும். இதுவரை தாங்கள் கருதின காரியம் கைகூடப்பெறாதில்லையென்பது ஒன்றுமே கிடையாது. தங்களுடைய பெயர் ஆத்மதனம் என்பது தங்களுடைய மனத்திருப்திக்கு அறிகுறி யென்று நாங்கள் நம்பியிருந்தோம். இப்போது தங்களுக்குக் கிடைக்கக்கூடாத வஸ்து வொன்று உண்டு என்று கேட்கவும் எங்களுக்கு ஆச்சரியமாயிராதா? நீங்கள் கருதியதைக் கூறினால் எளியனாகிய என்னால் இயலுமேல் செய்து முடிப்பேன்" என்றான்.

முற்காலத்தில் சக்கிரவர்த்திகள் இப்போது நம் ஜமீன்தார்கள் முதலியோரைப்போலவும், பெரிய மனிதத்தனம் பாராட்டினார்களில்லை. அவர்களுக்கு இப்போதைப்போல சரிகைக் குல்லாத் தனியாகப் பூணப்பெற்றார்களில்லை. அவர்கள் தங்கள் ஆள்களோடு தோட்டங் காடுகளுக்குச் சென்று வேலைமேற் பார்வை பார்த்துக்கொண்டும், அவசியம் நேர்ந்துழி தாங்களும் வேலைசெய்துகொண்டும் இருந்தார்கள். அவர்கள் சுபாவத்தில் பெருந்தன்மை வகித்தவர்களே யொழிய, ஆடைஆபரணாதிகள், வண்டிகள், அரண்மனைகள் இவைகள் கொடுக்கும் பெருந்தன்மை கொண்டவர்களல்ல. நாம் கல்லின் மேல் இருக்கக் கண்டவன் தான், யவன தேசத்துக்கு தலைவன் என்று சொல்லத்தக்க பெருமை அக்காலத்து வகித்திருந்தவன். யவனதேசத்தில் தெஸ்ஸாலி நாட்டில் ஒரு சிற்றரசனுடைய தமக்கை புத்திரன் அவன். அச்சிற்றரசனுக்கு வேறு அடுத்த சொந்தக்காரரில்லாததால், இவனுக்கு அச்சிற்றரசு கிடைத்தது. தன் சாமர்த்தியத்தாலும் வீரத்தனத்தாலும் வெஸ்ஸாலிக்குச் சக்கரவர்த்தியானான். அந்த ஸ்தானத்துக்குமேல் ஒன்றுமில்லை. ஆனால் ஒலிம்பியாவில் 4-வருஷங்களுக் கொருமுறை ஒரு காட்சிச்சபை கூடும். அதில் தீரத்வம் மிக்கவனுக்கு ஒருவகை மாலை சூடுவதுண்டு. அதுவும் இவனுக்குக் கிடைத்திருந்தது.



ஆத்மதனன். "கைகூடாத காரியமென்று எனக்கே தெரியும். உன்னிடம் சொல்வதில் பயனென்ன?".

இடையன். "அதென்ன விஷயம் சொல்லுங்கள் பார்ப்போம்."

ஆத்ம. "தராசுதேசராஜ புத்திரியாகிய சாவித்திரியின்மேல் காதல்கொண்டேன். ஆனால் அவளை எவனொருவன் புலியொன்றும் சிங்கம் ஒன்றுமாக ஒருவண்டியில் பூட்டி ஓட்டி வருகிறானோ அவனுக்குத்தான் வதுவை முடிப்பார்களாம். அது என்ன முடியக்கூடிய காரியமா? ஆ! அவள் வனப்பு என்ன வனப்பு!".

இடை. 'நான் அதை முடிப்பித்துத் தருகிறேன்; நாளை இடைப்பகல் கோட்டை வடமதிலண்டை வாரும்" என்று சொல்லிவிட்டுச் சரேலென்று போய்விட்டான்.

அரசன் இதை நம்பவில்லை. இருந்தும் அடுத்தநாள் குறித்தகாலத்தில் கோட்டைவட வாசலண்டை போனான். அங்கே இடையன் சிங்கமொன்றும் புலியொன்றும் பூட்டிய வண்டியொன்றைத் தயார்செய்து வைத்திருந்தான். அரசனுக்கு ஆச்சரியம் உண்டானதிற்கு அளவேயில்லை. இடையன் அதைப்பற்றி யொன்றும் கேட்கவேண்டாமென்று சொல்லிவிட்டு, ஒரு குறடாவை அரசன் கையில் கொடுத்து, அக்குறடாவை எப்போதும் கையில் வைத்திருக்கும்படி சொல்லி, தராசுநாடுபோய்த் திரும்பி வந்ததும், அவ்வடவாசலண்டை வண்டியை விட்டுவிட்டுக் குறடாவையும் எறிந்துவிட்டுப் போகவேண்டுமென்று சொன்னான். அரசனும் அதற்கிணங்கி வண்டியிலேறிச் சென்று தராசுநாடுபோய் வதுவை முடித்துக்கொண்டு, பொன்போலும் மேனியளுடன் திரும்பி அவ்வண்டியிலேயே வந்து, தன் கோட்டைவடவாசலண்டை வண்டியை விட்டிறங்கி, குறடாவை எறிந்தான். வண்டி காட்டுக்குள் இழுபட்டு மறைந்தது. அரசனும் தன் காதற் கிழத்தியுடன் நகருள் சென்று வைகினான்.

# லியர் அரசன் கதை.

(210-வது பக்கத் தொடர்ச்சி.)

கோர்டீலியர் சென்றவுடன், அவள் சகோதரிகளது கொடிய குணங்கள் உள்ளதுள்ளபடிக் கொஞ்சங் கொஞ்சமாய் வெளிப்பட ஆரம்பித்தன. உடன்படிக்கையின் பிரகாரம் முதல்மாதத்தில் லியர் தன் மூத்த மகளாகிய,கானரில் வீட்டில் இருந்தான். அம்மாதம் கழிவதற்குள் இவன் தன் மகளது வார்த்தைக்கும் நடத்தைக்குங் கொஞ்சங்கூடச் சம்பந்த மின்மையைத்

தெரிந்துகொண்டான். இக்கொடியவள் 'தன் தகப்பனிடத்திலிருந்து அவ்வளவு சொத்தைப் பெற்றுந் திருப்தியாகவில்லை. அவன் ஐந்நூறு வீரரை தன்னோடு வைத்துக்கொள்வதைப் பார்க்கச் சற்றும் இவளுக்குப் பொறுக்கவில்லை. அவனைக் கண்டபோதெல்லாம் முகங் கடுகடுத்தும், அவன் இவளைக் கூப்பிட்டால் இவள் ஏதாவது ஒரு சாக்குச்சொல்லி அவனுக்கெதிரிற் போகாது தப்பித்துக்கொள்வதுமாக விருந்தது. வரவர இவளது வேலைக்காரர்கள்கூட இவனை யிகழத் தலைப்பட்டனர். சிலர் இவன் செய்யச்சொன்ன வேலையைச் செய்வதில்லையென்று கண்டிப்பாய் மறுத்தார்கள். மற்றுஞ் சிலர் இவன் சொல்வதைக் கேளாதவர்போல அலட்சியமாய்ப் போனார்கள். லியர் இவற்றையெல்லாம் அறிந்தும், தனக்குத்தானே செய்துகொண்ட தீங்காகையால் தன்னாற்கூடியமட்டும் பொறுத்துக்கொண்டிருந்தான்.

ஒருவனுக்குத் தீங்கு செய்வதினால், அவனுக்குள்ள அன்பும், நன்றியும் போகாவென்பதும், ஒருவனுக்கு நன்மை செய்வதினால் மாத்திரம் அவனுக்குள்ள வஞ்சகக்குணம் போகாதென்பதும் கேண்டு (Kent) பிரபுவின் விஷயத்தில் விசிதமாகின்றன. தன் நாட்டைவிட்டுப் போகாவிடின் மரணத்துக்குட்பட வேண்டுமென்று அரசன் இவனுக்கு ஆக்கியாபித்திருந்தும், இவன் பயப்படாமல், அத்தேசத்திலேயே மறைந்து திரிந்துகொண்டு, அவ்வரசனுக்குத் தான் உபயோகப்படுஞ் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். அரசன் இப்படிக் கஷ்டப்படுவதைக் கேட்டுத் தான் ஒரு எளிய வேலைக்காரன்போல் மாறுவேஷம் பூண்டு கேயஸ் என்னும் பேர்வைத்துக்கொண்டு அவ்வரசனிடம் போய்ப் பேசக் கடைசியில் அரசன் இவனைத் தன் வேலைக்காரனாக நியமித்துக்கொண்டான். இவனைத் தவிர லியரோடுகூட இருப்பவன் மற்றொரு விகடகவி; லியர் அரசனாயிருக்கும்போது இவன் ஆஸ்தான விகடகவி. லியர் இக்கஷ்டதிசைக்கு வந்ததைப்பார்த்து இவன் அடிக்கடி அவனிடம் போயிருந்து வேடிக்கையான பேச்சுகளால் அவனைச் சந்தோஷப்படுத்துவதுண்டு. அவனது மூடத்தனத்தையும் அவன் மகளின் கொடுமையையும் அடிக்கடி வேடிக்கையாய்ப் பேசுவதுபோற் சொல்லி அவர்கள் மனதிற்படும்படி செய்வதுமுண்டு.

தன் மகளிடத்தில் லியர் அனுபவித்தது அவமரியாதை மாத்திரமேயல்ல. கடைசியில் இவனோடு நூறுசேனை வீரர்கள் தன் அரண்மனையில் இருப்பது அநேக விருந்துகள் சண்டை சச்சரவுகளுக்குக் காரணமாகிறதென்றும், அவர்களையெல்லாம் விட்டுவிட்டுத் தன்னைப்போன்ற சில கிழவர்களை மாத்திரம் வைத்துக்கொண்டாலன்றி இவன் தன் அரண்மனையில் இருக்கக்கூடாதென்றும் அவள் வெளிப்படையாகச் சொல்லிவிட்டாள்.

அதைக்கேட்டு லியர் தன்னிடத்திலிருந்து ஏராளமான ராஜ்ஜியத்தையும் கிரீடத்தையும் பெற்ற இவள்; தன் பரிவாரத்தையும் கூட விட்டுவிடச் சொன்னதையும், தன் வார்த்திகத்தில் தன்னை இப்படி அவமானப்படுத்தியதையும் பற்றி மிகக் கோபித்து உடனே தன் இரண்டாவது மகளாகிய ரீகன் கிரகத்துக்குத் தான் தன் பரிவாரத்துடன் போகத்தன் குதிரைகளைத் தயார் செய்யச்சொன்னான். போகும்போது கானரில்லைப் பலவிதமாகச் சபித்துக்கொண்டும் தன் மூன்றாம் மகளாகிய கார்டீலியாவைத்தான் அநியாயமாகக் கஷ்டப்படும்படி விட்டதைப் பற்றித் துக்கித்துக்கொண்டும் இக்கொடிய கானரில் தன்னைக்கூட அழும்படி செய்ததைப்பற்றி வெட்கித்துக்கொண்டுஞ் சென்றான். ரீகன் தன் கணவனுடன் தன் அரண்மனையில் மிக்க குதூஹலத்துடன் காலங்கழித்துவந்தாள். லியர் தன் பரிவாரத்துடன் இவள் வீட்டுக்கு வருவதாகத் தன் வேலைக்காரனை கேயஸ்ஸினிடம் முன்னாற் சொல்லியனுப்பினான். ஆனால் இதற்கு முன்னாலேயே கானரில் தன் தகப்பனுக்குக் கோபம் முதலிய கெட்டகுணங்கள் அநேகம் உண்டாயிருக்கின்றனவென்றும் அவனோடு கூடவரும் அநேக பரிவாரங்களுக்குத் தன் வீட்டில் இடங்கொடுப்பது சரியல்லவென்றும் சொல்லி ரீகனுக்கு ஓர்கடிதம் எழுதியிருந்தாள். இக்கடிதத்தைக் கொணர்ந்தவனும் கேயஸ்ஸும் ஒரேசமயத்தில் ரீகன் வீடுவந்து சேர்ந்தார்கள். ரீகன் இச்செய்தியைக் கேட்டவுடன் கேயஸ்ஸைத் தன் தகப்பனிடமிருந்து வந்தவனென்று பார்க்காமல் தொழுக்கட்டையிற் போடுவித்தாள். லியர் தன் மகளின் வீட்டுவாசலை நுழையும்போதே தன் சேவகனை கேயஸ் இக்கொடுமையான ஸ்திதியில் இருப்பதைக்கண்டான்.



இதைப்பார்த்துவிட்டு லியர் உள்ளேசென்று தன்மகளும் மருமகனும் எங்கேயென்று விசாரித்தவளவில் அவர்கள் இரவுமுழுவதும் எங்கேயோ போய்வந்ததினால் மிகக்களைத்துப் போயிருக்கிறார்களென்றும் ஆகையால் லியரைப்பார்க்கச் சரிப்படாதென்றும் அங்கிருப்பவர்கள் சொல்ல லியருக்கு அடங்காத கோபம்வந்தது. பிறகு லியர் தான் அவர்களைப் பார்க்கவேண்டுமென்று பிடிவாதமாய்ச் சொல்லியவுடன், தன் செய்தியைச் சொல்லவும், ரீகனைத் தூண்டிவிடவும் அங்கே வந்திருக்கும் கானரில்லை யழைத்துக்கொண்டு ரீகன் தன் தகப்பன் எதிரில் வந்தாள்.

கானரில் அங்கேயும் வந்திருப்பதைப் பார்த்து அக்கிழவன் மனம் வருந்தி நிற்க, ரீகன் அவனைப்பார்த்து "உனக்கு ஏன் இத்தனைபேர் சேனைவீரர்கள்? இதில் பாதிபேரைத் தள்ளிவிட்டு, மற்றப்பேரோடு கானரில் வீட்டுக்குப்போய், நீ செய்த குற்றத்திற்காக அவள் மன்னிப்பைக் கேட்டுக்கொண்டுச் சண்டைபோடாமல் அங்கேயே இரு. உனக்குக் கிழத்தனம் வந்தமையால் யோசனையும் கொஞ்சம் குறைந்துகொண்டே வருகிறது; ஆகையால் உன்னைவிட யோசனை யதிகமாயிருப்பவர்கள் பேச்சை நீ கேட்கவேண்டும்." என்றாள். இதைக்கேட்ட கிழவன் தான் கானரில்லிடம் போய்த் தன் சோறு துணிக்காக அவளைக் கெஞ்சுவது மிக்க அவமானமென்று எண்ணி, தன் மற்றொருபாதி ஆஸ்தியை ரீகன் பெற்றிருப்பதாலும், கானரில்லைப்போல் கொடூரமான பார்வையில்லாமல், சாந்தமான முகம் வார்த்தைகளையுடைய

வளானதாலும் ரீகனிடத்திலேயே தான் நூறு வீரர்களோடு இருப்பதாகத் தீர்மானித்தாள்.

கானரில்லைவிட ரீகன் தனக்கு அநுகூலமாயிருப்பாளென்று லியர் நினைத்தது மிகப்பிழையாயிற்று. தகப்பனைத் தூஷிப்பதில் கானரிலுக்கு மிஞ்சினவளாய், அவனைப் பாதுகாக்க ஐம்பது வீரர்கள் அனாவசியமென்றும் 25 பேர்கள் போதுமென்றும் வாதாடினாள். லியர் இதைக்கேட்டு மனம் புழுங்கிக் கானரில்லைப்பார்த்து "நான் உன்வீட்டுக்கு வருவதேநலமென்றுதோன்றுகிறது ஏனெனின் ரீகனைக்காட்டிலும் உனக்கு என்மேல் இரண்டுமடங்கு அன்பு இருக்கிறது" என்றான். அதற்குக் கானரில் அவள் சொல்வதும்வாஸ்தவந்தான் உனக்கு 25-பேர்தான் என்னத்திற்கு என் சேவர்களும் எனது சகோதரியின் சேவர்களும் உனக்கு ஊழியஞ்செய்யக் காத்திருக்க உனக்கு பத்துபேர்தான் என்னத்திற்கு ஐந்துபேர்தான் என்னத்திற்கு ஒருவன்கூட வேண்டுவதில்லையே" என்றாள். இப்படி இவ்விருவர்களும் அவனை இம்சிப்பதில் போட்டிபோட்டுக் கடைசியில் அவனது பரிவாரங்கள் முழுமையையும் துரத்திவிடப் பார்த்தார்கள். முதல் நாளில் அநேக ஆயிரஞ் ஜனங்களுக்குத் தலைவனாயிருந்த அவனுக்கு மறுநாளில் ஒரு வேலைக்காரன்கூட இல்லாவிட்டால் அவன் மனது என்னமாயிருக்கும்! இவனது ஆஸ்தியைப் பெற்றுக்கொண்டும், இவனைப் பலவிதமாக வருத்துவதினால், லியரின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் மிக்க வியாகூலமடையக் கடைசியில் ஜனங்கள் கண்டு அஞ்சும்படித் தன் புத்திரி இருவர்களையுந் தான் சிட்சிப்பதாகச் சபதம் கூறினான்.

இப்படி இவன் தன்னால் ஆகாத காரியத்தைச் செய்வதாகப் பிதற்றிக்கொண்டிருக்கையில், சூரியாஸ்தமனமாய், மின்னல் இடியோடுகூடியக் காற்று மழை ஒன்று ஆரம்பித்தது. அப்பொழுதுகூட அவன்பரிவாரங்களை உள்ளே வரக்கூடாதென்று குமாரத்திகள்தடுக்க லியர் கோபங்கொண்டு நன்றியில்லாத அப்பெண்களின் வீட்டிலிருப்பதைவிடக் காற்று மழையில் அவஸ்தைப்படுவது மேலென்று எண்ணித் தன் சேனையோடு புறப்பட, அப்பெண்கள் "பிடிவாதக்காரர்கள் தங்கள் காரியங்களினாலேயே தகுந்த சிட்சையையடைவார்கள்" என்று சொல்லித் தங்கள் கதவை மூடிக்கொண்டுபோனார்கள்.

அநேக மைல்தூரம் வரைக்கும் தங்குவதற்கு மரஞ்செடிகள் ஒன்றுமில்லாத மைதானத்தில் வீசியடிக்குங் காற்றுமழையோடு கூடிய அவ்விரவு முழுவதும் லியர் நிற்க இடமில்லாமல் தன் விகட கவியோடு அலைந்து திரிந்து கொண்டிருந்தான்.

லியர் போகுமிடமெல்லாம் தானும் அவனுக்குத் தெரியாமற் போய்க்கொண்டிருக்கும் கேயஸ் என்னும் கெண்டுப்பிரபு அரசனுக்கு எதிரில்வந்து அவன் இப்படிக்காற்று மழையில் அலைவது சரியன்று என்று சொல்லிக் கடைசியில் சிறிது தூரத்தில் காணப்பட்ட ஒரு சிறுகுடிசைக்கு அவனை



யழைத்துக்கொண்டு சென்றான். அக்குடிசையில் ஒருகிழவன் ஒரு துணியை மாத்திரம் போற்றிக்கொண்டு நிற்பதைக்கண்டு லியர் அக்கிழவனைப்பார்த்து "நீயும் உனக்குள்ள ஆஸ்தியை உன் குமாரத்திகளிடங் கொடுத்துவிட்டு இப்படி அவஸ்தைப்படுகிறாயா என்ன இல்லாவிடில் நீயேன் இந்தஸ்திதியில் இருக்கிறாய்" என்றான்.

மிக்கப் பெருந்தன்மையுள்ள அக்கெண்டுப்பிரபு லியருக்குச் தன்பெண்கள் படுத்திய கஷ்டத்தினால் பயித்தியம் பிடித்து விட்டதென்பதைத் தெரிந்து, அவ்வரசனை அவனிடமிருந்த சில வீரர்களின் உதவியால் தன் உறவினர்களிருக்கு மிடமாகவும், தன் செல்வாக்கு மிக்க நடந்தும் உள டோவர் என்னுங் கோட்டைக்கு பொழுதுவிடிவதற்கு முன் கொண்டுபோய்ச்சேர்த்தான். உடனே கெண்டு பிரான்சுதேசம் புறப்பட்டுச்சென்று கார்டீலியாவைப் பார்த்து அவளது தகப்பனாகிய லியர் இருக்கும் பரிதாபகர நிலைமையையும் அவள் சகோதரிகளது கொடுமையையும் விவரித்துச் சொல்ல, அந்நற்குணமுள்ள கார்டீலியா கண்ணீருடன் தன் கணவனிடஞ் சென்று தன் கொடிய சகோதரிகளை வென்று அவர்களிடமிருந்து தன் தகப்பனது ராஜ்ஜியத்தைப் பிடுங்கி அவனுக்குக்கொடுத்து அவரை மறுபடிச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்துவிட்டுவரச் சிலவுபெற்றுக்கொண்டு ஒருபெரிய சைந்நியத்தோடு தன் தகப்பனிருக்கும் டோவருக்கு வந்துசேர்ந்தாள்.

பைத்தியம்பிடித்திருந்த லியர் தன்னைப் பாதுகாத்துக்கொண்டிருக்கும்படி ஏற்படுத்தப்பட்டவர்களிட மிருந்து தப்பித்து ஓடி டோவருக்குச் சமீபத்திலிருக்கும் வயல்களிற்குப்போய் அங்கு முளைத்திருக்கும் செடிகொடிகளினாலும், பூக்களினாலும் ஒரு கிரீடம்செய்து தலையில் வைத்துக்கொண்டும் தனக்குத்தானே சிரித்துக்கொண்டும், பாடிக்கொண்டு மிருந்தான்.

டோவருக்குள் வரும் வழியில் தன் தகப்பன் இப்பரிதாபநிலைமையில் இருப்பதைப்பார்த்த கார்டீலியா, அவனைப்போய்க் கட்டித் தழுவிக்கொள்ளு வதும், அவன் தன் மகளாகிய கார்டீலியாவைப் பார்த்தவுடன் சந்தோஷத்துடனும், வெட்கத்துடனும் திகைத்துத்தான் இருக்குமிடம் இன்னதென்று தெரியாமலும், நிற் தெரியாமலும், தன்னோடு பேசுகிறவள் இன்னாளென்று தெரியாமலும், நிற் பதும் பார்க்க மிக்க விசனகாமாகவிருந்தது. சிறிது பொறுத்து, அவளைத் தன் மகளாகிய கார்டீலியாவென்று நினைத்தது பிழையாயிருந்தால் பரிகா சஞ் செய்யவேண்டாமென்று அங்கிருப்பவர்களை வேண்டிக்கொண்டான். தான்செய்த குற்றத்திற்காகத் தன்னை மன்னிக்கும்படி அவள்காலில் விழுந் தான். ஆனால் அந்நற்குணசிரோமணியாகிய கார்டீலியா, தன் தகப்பனாகிய லியர் தன் காலில் விழுவது சரியல்லவென்று சொல்லி அவனை உட்கார வைத்துத் தனது சகோதரிகளுக்கு அவனை அப்படிக் குளிர்காற்றில் கஷ் டப்படும்படி துரத்தியதே ஒரு பெரிய அவமானமென்றும், தான் அச் செய்தியைக்கேட்டு, அவனுக்குத் தன்னால் ஆன உதவியைச்செய்ய பிரான்சி லிருந்து வந்திருக்கிறதாகவும் சொன்னாள்.

தங்களை வளர்த்தெடுத்த தகப்பனையே இப்படிக் கஷ்டப்படுத்திய அக்கொடும்பாவிகள் தங்கள் கணவர்களிடத்தில் மாத்திரம் நன்றி பாராட்டப்போகிறார்களா! தங்கள் புருஷர்களிடத்தில் தங்களுக்குரிய கடமையையும் அன்பையும் வெளிக்காகவேனும் காட்டுவதில் இஷ்டமில்லாதவர்களாய்த் தாங்கள் மற்றொருவன்மேல் காதல்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். கடைசியில் இவ்விருவரும், களஸ்டர் (Gloucester) தேசத்துக்கு அதிபதியாகிய எட்மண்டினிடம் தங்கள் காதலைச் செலுத்தினார்கள். இப்படியிருக்க ரீகனது புருஷன் இறந்துபோக அவள் இக்களஸ்டரை விவாகஞ்செய்துகொள்ளத் தீர்மானித்தாள்.

இச்செய்தியை யறிந்த கானரில் ரீகன்மேற் பகைகொண்டு அவளை விஷம்வைத்துக் கொன்றுவிட்டாள். உடனே அதை கானரில் கணவன் கண்டுகொண்டு அவளை சிறைச்சாலையில் போட்டுவிக்க அங்கே அவள் தற்கொலைசெய்து மறித்தாள்.

இப்படிக் கெட்டவளான கானரில்லைக் கடவுள் தக்கபடி சிட்சித்தாரென்று ஜனங்கள் சந்தோஷப்படுகையில் நற்குணமுடைய கார்டீலியாவுக்கு ஒரு கஷ்டகாலம் நேர்ந்தது. சாந்தம் அமைதி பக்தி முதலிய நற்குணம் பொருந்தியவர்கள் எப்பொழுதும் இவ்வுலகத்தில் நன்மையையே யடைகிறதில்லை யாகையால் அக்கொடிய கானரில், ரீகன் இவர்களின் துர்ப்போதனையினால் கெட்டநடத்தையுடைய அந்த களஸ்டர், கார்டீலியா தான் அரசனாவதற்கு இடையூறாக விருக்கிறாளென்று எண்ணி அவளைத் சிறையில் போட்டுவிக்கக் கடைசியில் அவள் அங்கேயே யிறந்தாள். இச்செய்தியைக் கேட்டு லியரும் கொஞ்சநாளைக்குள் வேறுலகஞ் சென்றான். கெண்டு தன் எஜமானன்பட்ட கஷ்டங்களைப்பார்த்து மனமுருகத்தாலும் தன் அரசன் பின்னேயே சென்றான்.

முற்றிற்று. E. சுப்பிரமணியம், பி. ஏ.

## காற்று.

பிராணிகளுக்கு ஆகாரம், ஜலம் முதலியவைகளைவிட காற்று தான் மிக முக்கியமான ஆகாரம். ஆகாரமில்லாமல், அநேக நாளும், ஜலமில்லாமல் அநேக மணிநேரமு மிருக்கலாம். ஆனால் காற்றை சுவாசிக்காமல் ஒரு நிமிஷங்கூட இருக்க முடியாது. காற்றில்லாவிட்டால் நாம் சுவாசிக்கமுடியாது. எப்பொழுது சுவாசம் விடாமலிருக்கிறோமோ அப்பொழுது மரணம் வருவது நிச்சயம். சாதாரணமாக காற்று எங்குமுளது. காற்றிருக்கிறதென்று கண்ணுக்குத் தெரியாது. ஆனால்



உணர்ச்சியால் காற்றிருக்கிறதென்றும் காற்றில்லையென்றும், அறிந்துகொள்ளுகிறோம். ஆயினும் காற்று சாதாரணமாக எங்குமுளது. ஆனால் காற்றில் சுத்தமான காற்றுதான் தேகத்திற்கு மிக சௌக்கியமானது. ஜனங்கள் அதிகமாயுள்ள இடத்தில் நல்ல காற்று அதிகமாயிராது.

ஆனால் சிலர் காற்று அப்பொழுதுக்கப்பொழுதுதான் உண்டாகிற தென்று எண்ணுகிறார்கள். சாதாரண ஜனங்களுக்கு இப்பேர்ப்பட்ட எண்ண மிருப்பதனாலல்லவா காற்றின் வார்த்தை காற்றில் சேர்ந்ததென்று, ஏதாவ தொருசங்கதியைப் பொய்யென்று சொல்லுவதற்காக ஒரு உபமானமாகச் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர் காற்றிருக்கிறதென்று நம்பியும், தாங்கள் எவ்வளவு சிறிய அறையிலிருந்தபோதிலும், அங்கு ஒரு வேலைக்காரனைப் போல் வந்து உபசாரங்கள் செய்கிறதென்றும், சிறிய அறையில் படுத்துக் கொண்டாலும் கெடுதலொன்றுமில்லை யென்றும் எண்ணுகிறார்கள். இது சரி யல்ல. வெயிற்கால இரவில் வேண்டிய காற்றில்லாம .லிருக்கும்பொழுது அவர்கள் எண்ணியது .கொஞ்சம் தப்பென்றும், அவர்களிருக்கும் சிறிய வீட்டில் வேண்டிய காற்று வராமற்போனால், அவர்கள் நல்லகாற்று அடிக்கு மிடத்திற்குப் போகவேண்டுமென்றும், அல்லது நல்லலகாற்று உட்புறம் விஸ்தாரமாய் பரவும்படி ஒரு பெரிய பலகணி யிருக்கவேண்டுமென்றும் தெரிந்துகொள்வார்கள்.

ஆகையால் நம்முடைய சௌக்கியத்திற்கும், ஜீவனத்திற்கும் காற்று முக்கியமாய் வேண்டியது. ஆனால் காற்றுமாத்திரம் போதாது. இதில் கெட்டகாற்று அதிகமாகவிருந்தால் பிரயோசனமில்லை. இதைச் சுவாசிப்ப தால் உயிர்க்கு கெடுதி சம்பவிக்கும். 1756-வது வருடத்தில் கல்கத்தாவில் ஒரு இருட்டறையில் ஆங்கிலேயர்களில் சிலரை அடைத்துவைத்தபொழுது இவர்கள் அங்குள்ள கெட்டகாற்றை சுவாசித்ததனாலும், இவர்கள் சுவா சித்த காற்று வெளியிற் செல்ல வழியில்லாததாலும், விடியிற்காலமான தும் இவர்களி லநேகர் மடிந்துவிட்டார்கள். இதைப்போல சிறிய அறையி லிருக்கும் கெட்ட காற்றைச் சுவாசிப்பதனால் உயிர்க்கு கெடுதி நேரிடு மென்று நமக்கு அப்போதைக்கப்போது தெரியவருகிறது.

ஆகையால் நமக்கு அதிகமாய் காற்றிருப்பதோடு, நல்லகாற்றும் அவ சியம் வேண்டியது. நல்ல காற்றிற்கும், கெட்டகாற்றிற்குமுள்ள வித்தியா சத்தையும், காற்றினுடைய சுபாவத்தையும், நாமிந்த விஷயத்தில் நடக்க வேண்டிய ஒழுக்கத்தையும் இங்கு சுருக்கமாய் எழுதுகிறேன்.

காற்று ப்ரகிருதி பதார்த்தங்களிலொன்று, கட்டில், மேஜை முதலான வைகளிருக்கு மிடத்திலேயே இன்னொரு வஸ்துவை வைக்கமுடியாது. அப் படிவைக்கவேண்டுமானால், இவைகளிலொன்றைஎடுத்துவிட்டு, பின் இந்த விடத்தில் வேறொருவஸ்துவை வைக்கவேண்டும்.

காற்று பாவுதல்.

இம்மாதிரியே காற்று எந்த விடத்திலாவது அங்குள்ள வஸ்

துக்களைப் போக்கடித்தாலொழிய அது பரவியிருக்காது. ஒரு சொம்பைதண்ணீரில் தலைகீழாகக் கவிழ்த்தால் அதில் ஜலம் செல்லாது. இதற்குகாரணமென்னவென்றால் இதற்குமுந்தியே சொம்புநிறையகாற்றிருப்பதினால் ஜலம் உள்செல்ல முடியவில்லை. ஆனால் அதை சாய்வாக வைத்தால் அதைச் சுற்றிலுமுள்ள ஜலத்தில் குமிழிக ளுண்டாகும். இந்த ஜலம் அதிக பலவந்தமாய் அந்த செம்பிலிருக்கும் காற்றை வெளியே தள்ளுகிறது. நீர்க்குமிழிகள் தானாகவேகிளம்பி அதிலிருக்கும் காற்றைப் போக்கடிக்கின்றனவென்று சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். இதைக்குறித்து கிரக நிர்வாக விஷயமாய் நல்ல சங்கதி ஒன்று தெரியவருகிறது. அதென்னவெனில் நாம் உலாவும் அறைகளில் பெட்டிகள் முதலான சாமான்களை மிக அதிகமாய் வைக்கக்கூடாது. அவ்விதம் செய்தால் முன்சொன்ன உதாரணத்தில் செம்பை சாய்க்கும்பொழுது, அதன் சுற்றிலுமிருக்கும் ஜலம், அங்கிருக்கும் காற்றைபோக்கடித்து, அந்த விடத்தைப் பிடித்துக்கொள்ளுகிறமாதிரி, சாமான்களும் அறைக்குள்ளிருக்கும் காற்றை வெளிப்படுத்திவிடும். C. R. S.

# இந்து சீமாட்டிகளுக்கு இயைந்ததொரு நிருபம்.

அருமையும் பெருமையும் வாய்ந்த
அன்புள்ள சகோதரிகளே!

உங்களுக்கு இப்பத்திரிகை வாயிலாய்ச் சில விஷயங்களைக் கூறுதற்கு மனந்துணிந்தேன்; செவிசாய்த்துக் கேட்பீர்களாக!

நாம் வசிக்கும் இந்தியநாடு புராதனகாலத்திலேயே வெகு நாகரீகமடைந்ததென்று, சீதையும், துரௌபதையும், ஔவையும், ஆண்டாளும் மங்கையர்க்கரசியாரும் காரைக்காலம்மையாரும், பிறந்து கற்பையும் கல்வியையும் வளர்த்துவந்த தேசமென்றும், உங்களுக்குத் தெரிந்தேயிருக்கிறது. இதல்லாமலும், அங்கே, வானமும் பூமியுங் கிடுகிடென்னும்படி வாளாலும் தோளாலும் அம்பாலும் கதையாலும் சண்டைபுரிந்த வீரர்களனேக ரிருந்தார்கள் என்றும், கற்பனைசக்தியால் கவிகள் பாடிய கம்பனும், காளிதாசனும் பற்பலர்கள் புஷ்பத்தைப் போல் பரிமளித்தார்கள் என்றும், மண்டபமும், மாளிகையும், கோயிலும், கோபுரமும், சிங்காரமாய்க் கட்டிய சிற்பிகள் விளங்கினார்களென்றும் சிறு குழந்தைகளும் நன்று யறிந்திருக்கிறார்கள். இவ்வாறு நாகரீகம் பொருந்து நாணயமுற்ற இந்த நாடு "வரவரமாமி கழுதைபோலானாள்" என்கிறவண்ணம் நைந்தும் நொந்தும் நாசப்படுவது ஏன்? அலங்காரத்தோடு ஆனந்தமுற்ற நாடு அலங்காரம் மாத்திரம் நிற்க அலங்கோலமடைந்து அவதியுறுவானேன்? என்பதுபோன்ற கேள்விகளைக் கேட்டுக்கொண்டீர்களா? என் அருமைச்சகோதரிகளே! இவ்விதமாய் நான் உங்களைக் கேட்பது உங்களுக்கு வெகு விநோதமாயிருக்கும். மண்டபமேறி எண்டிசையதிரப் பேசுவோரும், வெகு வீரத்துடன் அதிகாரஞ் செலுத்துவோரும், குட்டை



கட்டி வட்டி வரும்படி சம்பாதிப்போரும் ஆடம்பரம் மிகுந்த ஆண்களாயிருக்க, அடுப்பங்கரையில் அரிவாள் மணையே ஆஸ்தியாகவும், பானைசட்டியே பரமபதமாகவும் பாவித்துச் சேவித்துச் சாகத்தயாராயிருக்கும் ஏழைப்பெண்களாகிய எங்களுக்கேன் இதம் பேசத்தொடங்கினீர்" என்று நீங்கள் கேட்கக்கூடும். இதற்குத் தக்க பதில் கூறுவது வெகு கடினமல்லவாதலால், பின் வருமாறு சுருக்கமாய்ச் சொல்கிறேன்.

உலகம் தற்காலம் கணக்கில்லாத துன்பங்களை யுடைத்தாயிருக்கின்றதென்பதை ஒத்துக்கொள்ளாதவர் ஒருவருமில்லை. அங்குமிங்கும் சிறிது பொங்கும், புகழும் காணப்பட்டாலும், எங்கெங்கும்; துக்கமே மிகுந்து வருத்தமே விளைகிறது. எல்லாவீட்டிலும் மண் அடுப்பே தவிரப் பொன் அடுப்பேது? அரசன் மகுடமும், அதிக ஆபத்துக்கிடமானதென்றும், மடியில் கனமுள்ளவரைக்கும் வழியில் பயமிருந்தே திருமென்றும் அறியாதவர்கள் யாவர்? ஆயினும், கல்வியும் நாகரீகமும் அறிவும் ஆற்றலும் அதிகரிக்க அதிகரிக்க அநேக நற்கொள்கைகளும், அனேக இரக்கச்செயல்களும் ஓங்கி வளர்ந்து பாங்குபெற்று வருகின்றன. மூடாவேசமும் பயங்கர நடத்தைகளும் படிப்படியாய் மறைகின்றன. பலமே நலமென்பது மாறி, சத்யமே ஜயமென்பது பாராட்டப்பட்டு வருகின்றது. அன்பும் அருளும் இல்லாதவரைக் ஐதர்சாயபுக்கு அடங்கவேண்டும், அறிவும் ஆழ்ந்த எண்ணமும் உயர்ந்த ஆங்கிலர் துரைத்தனத்தில் உண்மைக் கொடிபிடித்து ஊரெங்கும் சுற்றிவரலாம். தேக பலமில்லாவிட்டாலும், புத்திப்பெருமையை இப்போது ஒவ்வொருவரும் எத்திக்கும் விளக்கக்கூடும். எளியாரை வலியாரடித்தால் வலியாரைத் தெய்வமடிக்கும், எனபது இவ்வுலகத்திலேயே இக்காலத்தில் விசதமாய்த் தெரிகின்றது. ஒரு குலத்துக்கொரு நீதியென்பது மனு என்பவர் காலத்தில் மாட்சியுற்றிருந்தாலும் இப்போது அது அனேகமாய் மறைந்தே வருகின்றது. ஆடும் மாடும் மனிதர் தின்னவே யென்று மறைகள் கூறுமாயின், ஆண்பிள்ளைகள் அதிகாரத்திற்கென்றே பெண்பிள்ளைகள் பிறந்தார்களென்று பேசப் பின்னடைவாரோ? பேதைமையைப் பெருக்கி அந்தகாரத்தி லடைத்துப் பெண்களைத் திட்டினால் பிழைசெய்வது யாவர்? 'பேதமையென்பது மாதர்க்கணிகலம்' என்று முன்னர்க்கூறிப் பின்னர் 'தையல்சொற்கேளேல்' என்பதும் தர்மமாகுமா? இவ்வாறு சொன்னவர் தையல் அல்லரோ? அவர் சொல்லைமாத்திரம் நாம் கேட்பது எற்றுக்கு? பெண்ணுயிருந்தும் இவர் பேதைமையைக் கொள்ளாது அறிந்தார்போல மற்றவர்க்கு அறிவு கொளுத்தவருவது அதிக ஆச்சரியம்! ஆடவர்க்கு மகளிர் அலங்காரமாக, மகளிர்க்குப் பேதைமை மாற்றில்லாப் பொன்னாக, ஆடவரிடத்தும் பேதைமை அதிகாரம் செலுத்த ஆக்ஷேபனையேது? இவ்வாறுபேசிய இணையில்லா ஔவையார், சத்தியம்தவறா உத்தமியானதால், அனைவர்களும் பேதைமையாக ஆபரணம்செய்து அதையேதாமும்அழகாய்த் தரித்து, பேதமையைக் கொண்டே பேதைமை பேசினர்போலும்; பேதைமையென்பது கள்ளங்கபடில்லாத வெள்ளை மனமுடைமை யென்று பொருள்படின், தையல் சொற்கேளேல், என்பது தகாத முடிவாகும். தையல் சொற் கேளாவிட்டால், கணவனுக்கு மந்திரி கற்புடைப்பெண்டிர் என்பது எவ்விதம் அமையும்?

புனிதசித்தங்கொண்ட வனிதா ரத்னங்காள்! மேற்கூறிய எல்லாவற்றையும் நீங்கள் நன்றாயாலோசியுங்கள். அறிவைப் பெருக்கவேண்டுமென்றால், அகங்காரத்தை வளர்க்கவேண்டுமென்பதல்ல. அரைக்குடம் அதிகமாய்த்தளும்பும், நிறைகுடம்நீர்தளும்பாது. கற்கவேண்டுமென்று ஒருவன் கூறினால், கர்வியாவதற்காவென்று அநேகர்சொல்வதை நீங்கள் கேட்டிருப்பீர்கள் 'எபீஸீடி படித்தானே, ஏற்றவழக்கங்களை விடுத்தானே, 'கோணஎழுத்தைப் படித்தானே, கொடியபழியைப் பிடித்தானே' என்று

பலர் பாடியழும்போது நீங்கள் கேட்டது நினைவிலிருக்கக்கூடும். ஆண்பிள்ளைகள் படிக்க அகங்களியாதவர்கள் பெண்கள் பாடசாலைவைத்தால் கல்லாலடிக்க முன்னால் வாராரோ.

இதெல்லா மிருக்கட்டும். இன்றுநான் உங்களுக்குச் சொல்வதைச் சற்றாயினும் கவனமாய்க்கேட்டு உத்தமமாயின் கொள்ளுங்கள். நீங்கள் உண்மையறிந்து வண்மைப் படாவிடின், நாங்களும் பாழாகி நாசமுறவேண்டும். உள்நாட்டு உள்வீட்டுச் சீர்திருத்தம் செய்யமுயல்வதே முதற்காரியம். இதுசெய்யாத வரைக்கும் வேறொன்றும் செய்ய நம்மாலாகவே யாகாது. கூரையேறிக் கோணச்சுரைக்காய், அறுக்க முடியாத அந்தகக் குருக்கள் வானத்தைக்கீறி வைகுண்டமு காட்டுவரா? எந்தச் சீர்திருத்தஞ் செய்யவேண்டுமாயினும், கல்வி யில்லாமல் ஒன்றுமே யாகாது. கல்வியென்னுங் களஞ்சியத்தைப் பாதியுயிர்களுக்குப் பகிர்ந்து கொடாத பாதகமல்லவோ, ஆங்கிலம் படித்தவரும், அறிவு விசாலம் பெற்றவரும் ஐந்துபேராயின், அறியாமையிலழுந்தி அனர்த்தப்படுவோர் ஐம்பதாயிரம் பேராயிருத்தலினாலன்றோ, ஒன்றும் விடியாது நாம் உறக்கங்கொண்டிருக்கின்றோம்? முன்காலத்தில் நன்றாய் ஓங்கத்தொடங்கிய நாடு பின் பலகாரணங்களால் வழக்கம் என்பதாற் கட்டுண்டன்றோ இப்போது கண்தெரியாது வாழ்கின்றோம்.

இது சம்பந்தமாக நான் மற்றொன்றுகூறி இதை முடித்துவிடுகிறேன். ஒவ்வொருவர்க்கும் நல்லபழக்கம் நடையாடவேண்டிய தென்றும், கெட்டபழக்கம் படிந்தால் முட்டமுழுதும் தீமையேகொடுக்கும் என்றும் தாதாகாலமுதல் ஓதாமலே கேட்டிருக்கிறோம் பழக்கம் கொடியதுபார் பாறையினைக் கோழிகிழிக்கும் என்று தமிழரும், பழக்கம் இரண்டாவது இயற்கை என்று ஆங்கிலரும் பழமொழியாகப் பறையடிக்கிறார்கள். நல்ல பழககம் உண்டாவதற்குச் சின்னவயதே தகுமானகாலமாதலாலும், சிறுவயதில் குழந்தைகள் தாய்மாராகிய உங்களோடுதான் கொஞ்சிக்குலாவி முத்து முத்தாடி மனத்தைக் களிப்பிக்க மழலையைப் பேசிமாயஞ்செய்து நேயமாய் விளையாடுதலாலும், உங்களை அறியாமையிலழுத்தி ஆகவேண்டியகாரியம் அனர்த்தமேதவிர வேறில்லை. ஆகையால், என் அனுபவ ரீதியாயும், அபிப்பிராய வழியாலும் உண்மையாய்த் தோன்றுவனவெல்லாவற்றையும் சிறிது சிறிதே கூடியவரைக்கும் கடிதங்கள் வகையிலெழுதித் தொடுத்து அடிக்கடி பிரசுரிக்க அவாக்கொண்டே யிதை முதற் கடிதயாக ஆரம்பித்தேன். சிறுவரைக்காக்கும் செல்விகளாகவும், சாந்தம் விளங்கும் எந்திழைகளாகவும் ஜொலிக்கிற நீங்கள் உங்களுடைய சந்திரவதனத்தால் மந்திரம் போதித்தும், இன்னையின் மொழியால் கீர்த்தியை விளைவித்தும், உங்களுடைய குழந்தைகட்குப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டுவதுபோலேயே அதனோடேயே அறிவையும், அருளையும்ஊட்டுவீரெனக்கருதி, வருகிறமாதத்துப் பத்திரிகையில் 'கல்வி' யென்பதைப்பற்றிய கடிதம் எழுதுகிறேன்.

T. பக்தவத்ஸலம் பி. ஏ.

# அருந்ததி.

ஸுரர்கள், தேவர்கள், முதலியவர்களின் பிறப்பையும் நதிகளின், உற்பத்தி ஸ்தானத்தையும் வெகு கஷ்டத்துடன் அறியவேண்டியிருக்கிறது. சிற்சில சமயங்களில் நமக்கு பூராவாக ஆதாரங்கள் கிடைப்பதும் அரிதாகத்தானிருக்கிறது ஆயினும் நமக்குத் தெரிந்தவரையிலும் நமது புராண இதிஹாசங்களிருந்து தெரிந்ததைக்கொண்டு, பூர்வகாலத்து இந்துபுண்ணிய ஸ்திரீகளில் பிரசித்தியடைந்த அருந்ததியினுடைய திவ்யசரித்திரத்தை எழுதுகிறோம்.



இந்த உத்தமஸ்திரீயின் தாய்தந்தையர்களைப் பற்றி நமக்கு விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் ஒரு ரிஷிசக்கிலியர்கள் வசிக்கும் கிராமம் வழியாகப் போய்க்கொண்டிருந்த பொழுது, இந்தக்குழந்தை இந்த ரிஷிக்குக் கிடைத்ததென்றும், தயாசமுத்திரமா யிருக்கும்படியான இந்த ரிஷியானவர் இக்குழந்தையை எடுத்துக்கொண்டு தமது இருப்பிடத்திற்கு போய் அதற்கு அக்ஷமாலை எனப்பெயரிட்டு, நாளொருமேனியும், பொழுதொருவண்ணமாக தமது அரும்குழந்தையைப்போல் வளர்த்து வந்ததாகத் தெரிகிறது. ரிஷிஆஸிரமத்தில் வளர்க்கப்பட்ட இக்குழந்தைக்கு தக்கவயது வந்தகாலத்தில், யாவரிடத்திலும் பட்சமாயிருப்பதே அதிகமேலான தென்றும், எல்லாதனத்திலும் மேலானது தபோதனமே சிரேஷ்டமான தென்றும் எண்ணம் உதித்தது. உடனே இப்பெண் தபசுசெய்ய ஆரம்பித்துவிட்டாள். அருந்ததி எனப்பெயர் வகித்த இம்மாதின் விசேஷமான தபசைக் கண்டு தேவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். பிரம்மாவுங்கூட பிரத்தியக்ஷமாய் உனக்கு என்னவரம் வேண்டுமென்று கேட்டார். அப்பொழுது, அருந்ததி என்னை மணம் செய்யும் புருஷன் நபுஞ்சகனாகவிருக்க வேண்டுமென்றுகேட்டாள். பிரம்மாவும் இவ்விதமான கேள்விக்கு மிகமகிழ்ந்து, முதலிலேயே வரன் அளிப்பதாக சொன்னமையால், அவ்விதமே நடக்குமென்று சொல்லி மறைந்துபோய்விட்டார்.

அக்காலத்திலுள்ள ஸ்திரீகளில், இந்த அருந்ததி நல்ல குணமுள்ளவளாக விருந்ததுடன், மிகச் சௌந்தரிய முடையவர்களாகவு மிருந்தாள். அநேக இராஜாக்கள் இந்த அருந்ததியின் அழகைக்கண்டு அவளை மணம் புரிய எண்ணின போதிலும், அப்படி விவாகம் செய்துகொண்டால் தங்களுக்கு என்ன ஆபத்து வருமோவென்று பயந்திருந்தார்கள். மேலும் இவளுடைய நற்குணம், தெய்வபக்தி, மனநிலைமை முதலியவைகள், அவர்களுக்கு மேற்பட்டிருந்தமையால் அவர்களுக்கு இவ்வித அபார நற்குணம் முதலியவைகள் வாய்ந்தவளை மணம்புரிய துணியவில்லை யென்றும் சொல்லலாம். தேவர்களும்கூட அருந்ததியின் பேரைக் கேட்டமாத்திரத்தில் நடுங்கிக் கொண்டிருந்தார்கள். இவ்விதம் தேவர்களும் ரிஷிகளும் இராஜாக்களும் இவளை மணம்புரிய சம்மதியாமலிருந்த பொழுது இவளுக்கு எவ்விதம் விவாகம் நடந்தது என்று அநேகர் எண்ணக்கூடியது சகஜம். இவ்விதகஷ்டத்தை நீக்க பிரம்மா பின்வருமாறு ஒரு உபாயம் செய்தார்:—மகாதபசியாயும், தனது குமாரனாயு மிருக்கிற வசிஷ்டனை வரவழைத்து, குமாரா! மனுஷ்ய ஸ்திரீகளில் அதிக ரூபலாவண்ணியத்திலும், நற்குணத்திலும் அருந்ததியை விட மேலானவள் இல்லையென உனக்கே தெரியுமல்லவா; என்வார்த்தையைக்கேட்டு அப்பெண்ணை மணம்செய்துகொள்ள உடனே புறப்படு என்று கட்டளையிட்டார்.

வசிஷ்டருக்குப் பிரியமில்லாமற் போனாலும், தமது பிதாவின் உத்தரவு பிரகாரம் அப்பெண்மணியை மணம்புரிய சம்மதித்தார்.

பின்பு வசிஷ்டர் அருந்ததியிருக்கும் இடத்திற்குச்சென்று, அருந்ததியை வளர்த்துவரும் ரிஷியைக்கண்டார். அந்தரிஷி வசிஷ்டர் வரவைக்கண்டு மகிழ்ந்து, அவரை மிக விநயத்துடன் வரவழைத்து அர்க்கியபாத்தியாதி விதிகளால் அவரைப் பூசித்து, ஓவசிஷ்டமகாரிஷியே! தாங்கள் இவ்வளவுதூரம் வந்த காரணமென்ன? தங்கள் வரவைக்கண்டு நாங்கள் மிகமகிழ்ந்தோம்.

எங்கள் ஆசிரமமும் புனிதத்தலமாயிற்று. தங்கள் க்ஷேமசமாசாரங்களை தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்" என்று மிக வணக்கத்துடன் கேட்டார். ஓமகாரிஷியே! நான் பிரமாசாரியென்பது தங்களுக்குத்தெரியுமே. நான் இல்லறதர்மத்தில் சிறிது ஆசைக்கொண்டிருக்கிறேன். ஆகையால் தங்கள் ஆதரவிலிருக்கும்படியான மகா புண்ணியவதியாகிய அருந்ததியை எனக்கு விவாகஞ் செய்வித்தால் தங்களுக்கு ஒரு யாகஞ்செய்வதின் பலன் உண்டாகுமென்று சொன்னார். இவ்விதம் வசிஷ்டர் அபிப்பிராயத்தைக்கேட்டு மிகச் சந்தோஷித்து, அருந்ததியினிடத்தில் யாவற்றையும் விவரமாய்ச்சொன்னவுடன், அவளும் வசிஷ்டருடைய குணம் முதலியவைகளைக் கேட்டிருப்பதால், அவரை மணம்புரிய சம்மதித்தாள். உடனே வசிஷ்டருக்கும் அருந்ததிக்கும் விவாகம் சாஸ்திர சம்பிரதாயப்படி வெகு விமரிசையாக நடந்தது.

அருந்ததியும், வசிஷ்டரும் இல்லறதருமத்தை வழுவாமல் நித்தியவிதி முதலியவைகளைச் சரியாகவும் கிரமமாகவும் செய்துவந்தார்கள். அருந்ததிக்கு பிரம்மா முதலில் கொடுத்தவரம் பலிக்காமல் போய்விட்டது. விவாக பந்தமானது சாமானிய இச்சைக்காக வல்லவென்றும், ஆனால் சாஸ்திரப்பிரகாரம் நித்தியானுஷ்டான விதிகளை தம்பதி சகிதமாய் செய்துவருவதே நலமென்றும் இத்தம்பதிகளால் தெரிகிறது. இப்பொழுது நமதுதேசத்தில் கலியாணம் நடக்கும் சமயத்தில் அருந்ததி என்ற நக்ஷத்திரத்தை தரிசனம் செய்யும்படி தம்பதிகளுக்குச் சொல்லுகிறார்கள். அருந்ததி பதிவிரதாஸ்திரீ ரத்தினங்களில் முதன்மையானவள். இவளுடைய பதிவிரதா தர்மத்தைப்பற்றிய சில அருமையான புராணக்கதைகளிருக்கின்றன. ஒருகாலத்தில் அக்னிபகவான் சப்தமகாமுனிவர்களின்மீது மோஹங்கொண்டு இதே ஞாபகமாகவிருந்தார். இவருடைய மனைவியாகிய ஸ்வாஹா தேவியார் அந்த ரிஷிகளின் மனைவிகளைப்போல் வேஷந்தரித்து தமது கணவருடைய இஷ்டத்தை பரிபூரணஞ் செய்தாளென்றும், ஆனால் மகா பதிவிரதையாயிருக்கிற அருந்ததியைப்போல் வேஷம்போட முடியவில்லை யென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

நிற்க, பரமசிவன் தாருகாவனத்திலிருக்கும் ரிஷிகளுடைய மனைவிகளெல்லாரையும் தம் அழகைக்கண்டு இச்சைப்படும்படி செய்தபொழுது, அருந்ததியை அவர் அவ்விதம்செய்யமுடியவில்லையாம். இவ்விதக்கதைகளால் அருந்ததியின் நற்குணங்கள் விளங்கவில்லையா? இத்தம்பதிகளுக்கு அநேக புத்திரர்கள் ஜனித்து தபசிலேயே காலங்கழித்தார்கள்.

சாதாரண ரிஷிகளின் மனைவிகளைப் போலல்லாமல் அருந்ததி வசிஷ்டர் காட்டில் எங்கு சென்றாலும் தானும்கூட சென்று, அவருக்குப் பணிவிடை செய்துகொண்டுவந்தாள். அருந்ததி பர்த்தாவினிடத்தில் மிகப் பிரியமாயும், விசுவாசமாயுமிருந்ததுடன், தனது மாமியாரிடத்திலும் மிகப் பிரியமாகவேயிருந்தாள். சாதாரணமாக நம்மவர்களில் மருமகளை மாமியார் கொரூரமாக நடத்திவந்த வழக்கம் குறைந்துவருகிறதென்று சொல்லலாம். ஆனால் மருமகள் தற்காலத்தில் மாமியாரை குரூரமாக நடத்திவருகிறவழக்கம் இங்குமங்கும் செவிக்கு எட்டுகிறது. மருமகள் நன்றாக கற்று நல்லவர்களுடன் சகவாசம் செய்துவந்தால், இவ்வித கெட்டகுணத்தில் அகப்பட இடம் கிடைப்பது கஷ்டம். நமது தேசம் நல்லஸ்திதிக்கு இன்னும் வரவில்லை. அவ்விதம் வரவேண்டுமானால் நம்மவர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு உயர்



ந்த கல்வி புகட்டிவரவேண்டும். அம்பொழுதுதான் மருமகள், மாமியார், நாத்தனார் முதலியவர்கள் அருந்ததியைப்போலிருக்கமுடியும். அருந்ததி இவ்வித நற்குணம் வாய்ந்தவளாயிருந்தமையால், ஒருகாலத்தில் ரிஷிகள் தேசசஞ்சாரம் செய்துவருகையில், ஒரு கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள குளக்கரையில் தங்கினார்கள். தங்களிடத்திலுள்ள தாமரைக்கிழங்குகள், மரவுரி முதலியவைகளை கரையில் வைத்துவிட்டு ஸ்நானம் செய்யப்போனார்கள். ஸ்நானம் செய்தபின் இவர்கள் கரைக்குவந்து தங்கள் சாமான்களை எடுத்துக்கொண்டு தாமரைக் கிழங்குகளைப் புசிக்க ஆரம்பம் செய்தார்கள். அப்பொழுது ஒவ்வொருவரிடத்திலும் கொஞ்சம் கிழங்குகள் குறைந்திருந்தன. அப்பொழுது ரிஷிகளுக்குச் சந்தேகம் உண்டானது. அருந்ததியைப் பிரமாணம் செய்யும்படி செய்தபொழுது, "எப்பொழுதும் மாமியாரைத் திட்டுகிறவளுக்கும், கணவனிடத்தில் கெட்ட மனதுடையவளா யிருப்பவளுக்கும், பாயசம் முதலியவைகளை தானே புசிப்பவளுக்கும் எவ்விதமான பாபதண்டனை நரகத்தில் கிடைக்குமோ, அவ்விதமே இக்கிழங்குகளைத் திருடினவர்களுக்கும் கிடைக்கக் கடவது" என்று புண்ணியவதியாகிய அருந்ததி சத்தியம் செய்தாள். பின்பு ரிஷிகள் நடுநடுங்கி இவளை மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். இவ்வித நற்குணம் வாய்ந்த புண்ணியவதியின் கீர்த்தி வெகுகாலம் நீண்டு வருகிறது யாவருக்கும் தெரியுமன்றோ? ஆகையால் நமது தேசத்திய மாதர்கள் இப்புண்ணியவதியைப் பின்பற்றி நடக்க பின் அடையமாட்டார்களென்று நம்புகிறோம்.

[இது பாரதம், புராணம் முதலியவைகளிலிருந்து எடுத்து எழுதப்பட்டது.]

# இராமாயணசார வினாவிடை

## 3-வது ஆரணியகாண்டம்.

1. வினா.—விராதன் என்பவன் யார்?

விடை.—இருஷிகளுக்கெல்லாம் இடஞ்சல் செய்துவந்த ராக்ஷஸர்களுக்குள் விராதன் ஒருத்தன். இவன் கெட்ட செய்கையுள்ளவனாய் எல்லாராலும் தூஷிக்கப்பட்ட காரணத்தால் இவனுக்கு விராதன் எனப்பெயருண்டாயிற்று. இவனை இராமன் அதம்செய்தார்.

2. வினா.—இராமன் வனத்தில் சஞ்சரித்தபோது எந்த எந்த இருஷிகளைப் பார்த்தார்? அவர்கள் யார் யார்!

விடை.—இராமன் பார்த்த இருஷிகளுக்குளெல்லாம் பரத்துவாஜர், சரபர், சுதீக்ஷணர், அகஸ்தியர் என்போர் முக்கியமானவர்கள்.

3. வினா.—இராமன் அகஸ்தியரைக் கண்டபோது அவர் என்ன கட்டளையிட்டார்?

விடை.—வனவாசம் செய்யவேண்டிய பதினான்கு வருஷங்களில் சென்றதுபோக பாக்கியுள்ள காலமெல்லாம் பஞ்சவடி தீரத்தில் நீ வசிக்கவேண்டுமென்று கட்டளையிட்டார்.

4. வினா.—இராமன் பஞ்சவடிதீரம்போய்ச் சேர்ந்த மேல்யாரைக் கண்டான்?

விடை.—கழுகு அரசனாகிய ஜடாயுவைக் கண்டார்.

5. வினா.—ஜடாயு இராமனிடம் ஏதாவது அறிவித்தாரா?

விடை.—பஞ்சவடியில் ராக்ஷஸர்களின் இடஞ்சல் அதிகமா யிருப்பதால் அதை நீக்கும்பொருட்டு ஜாக்கிரதையா யிருந்து வருகிறேனென்று ஜடாயு தெரிவித்தார்.

6. வினா.—சூர்ப்பநகை என்பவள் யார்?

விடை.—ராக்ஷஸர்களுக்குத் தலைவனான இராவணனுக்கு உடன் பிறந்தாள்.

7. வினா.—இராமனுக்கும் சூர்ப்பநகைக்கும் ஏதாவது சம்பாஷணை நடந்ததா?

விடை.—இராமன் வடிவழகைக் கண்டு சூர்ப்பநகை மோகம் கொண்டாள். என்னை நீ விவாகம் செய்துகொள்ளென்று இராமனை வேண்டிக்கொண்டாள்; இராமன் தனக்கு விவாகம் நடந்துவிட்டதென்று பதில் சொன்னான்; பிறகு இலக்ஷ்மணனிடம்போய் என்னை விவாகம் செய்துகொள்ளென்று அவனையும் வேண்டிக்கொண்டாள்; அவனுக்கு அதிக கோபமுண்டாகி சூர்ப்பநகையின் மூக்கையும் காதையும் அறிந்துவிட்டான்; இச்செய்தியைச் சூர்ப்பநகை தன் சகோதரர்களான கரன், தூஷணன் இவர்களிடம்போய் அறிவித்துக்கொண்டாள். இதைக்கேட்டமேல் அவ்விரண்டு சகோதரர்களும் இராமனோடு யுத்தம் செய்தார்கள். அந்த யுத்தத்தில் பதினாலாயிரம் ராக்ஷஸர்களை இராமன் ஒரு முகூர்த்தகாலத்தில் வதம் செய்தான். பிறகு சூர்ப்பநகை ராவணனிடம்போய் நடந்ததை யறிவித்தாள்.

8. வினா.—இராவணன் சங்கதி என்ன? உனக்குத் தெரிந்ததைச் சொல்லு.

விடை.—இராவணன் ராக்ஷஸர்களுக்குத் தலைவன். விச்சிரவசு என்பவனுக்கு மகன். அவனுக்கு கும்பகர்ணன் விபீஷணன் இவ்விருவரும் சகோதரர்கள். இராவணன் நெடுங்காலம் தவம் செய்து தனக்குத் தேவர்களால் சாவில்லை என்கிற வரத்தைப் பிர்ம்மாவிடம் பெற்றுக்கொண்டான். அவன் லங்காபுரிக்கு அரசனாயிருந்தான். அப்பொழுது தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் மற்ற ஸாதுக்களுக்கும் கண்டகனாகவிருந்தான். அவன் அதிக பலமுடையவன்; பயங்கரமான ரூபமுள்ளவன். தலை பத்துள்ளவன்; இருபது தோளுள்ளவன். அவன் பலதரம் தேவர்களுடன் யுத்தம்செய்து சரீரத்தில் தழும்புகளுள்ளவன்; இலங்கையின் அரசனாகிய வைச்சிரவணன் என்னும் குபேரனை ஜயித்து அவனது புஷ்பக விமானத்தைப் பிடுங்கிக்கொண்டவன்; சூரியன் ராவணனைக் காணும்போதெல்லாம் தன் கிரணங்களைச் சுருக்கிக்கொள்ளுவான். வாயு, சந்திரன் அக்நி இவர்களும் அவனைக்கண்டு நடுங்கி வாய் கை புதைத்துக்கொண்டு போவார்கள். இந்த ராவணன் பெண்கள்மேல் ஆசைகொண்டவன்.

9. வினா.—சூர்ப்பநகை சொன்ன விருத்தாந்தங்களை யெல்லாம் கேட்டபின் இராவணன் என்னசெய்தான்?

விடை.—சூர்ப்பநகை இராம லக்ஷ்மணர்கள் தனக்குச்செய்த அவமானத்தையும் கரதூஷணர்களின் வதத்தையும் இராவணனிடம் அறிவித்தபோது சீதையென்னும் ஓரழகுள்ளபெண் இராமனுடன் வந்திருக்கிறாளென்பதையும் அறிவித்தாள். இராவணன் அதையே மனதில் நினைத்துக்கொண்டு சீதையின்பேரில் அதிக மோகமுள்ளவனாய் அவளிருந்த இடத்திற்குப்போய் அவளைத் தூக்கிக்கொண்டு வந்துவிட்டான்.

10. வினா.—சீதையை அப்படித் தூக்கிக்கொண்டுவர இராவணன் என்னஉபாயம் செய்தான்? அதை விவரமாய்ச் சொல்லு.



விடை.—தாடகையின் மகனாகிய மாரீசனைப் பொன்மான் வடிவம் எடுத்துக்கொண்டு சீதையின் முன்பாகப் போய் விளையாடும்படி இராவணன் ஏவிவிட்டான். அம்மானைச் சீதைப்பார்த்த உடனே அதைப் பிடித்துத் தரும்படி இராமனை வேண்டிக்கொண்டாள். அதைப்பிடித்துவர இராமன் வெகுதூரம் போய்விட்டான். அப்படிப்போயும் இராமன் அதைப்பிடிக்க முடியாமல் அதன்பேரில் பாணத்தைப்போட்டான். அந்த மான் அடிபட்டுக் கீழே விழுகையில் இராமன் புலம்பி யழுததுபோல் சத்தம்போட்டான். இராமனுக்கு ஏதோ அபாயம் வந்துவிட்டதென்று நினைத்து சீதை லக்ஷ்மணரை அங்கே போய்ப்பார்த்து வரும்படி சொன்னாள். அதன்படியே லக்ஷ்மணர் அங்கேபோனார். இப்படி இராமலக்ஷ்மணர்கள் சீதையைத் தனியே விட்டுவிட்டு வேறிடம் போய்விட்டதைக்கண்டு அவர்கள் வசித்த இடத்தின்கிட்ட இராவணன் ஸந்யாஸிவேஷம் போட்டுக்கொண்டு சீதையிருந்த பர்ணசாலையிற்போய் பிக்ஷைகேட்டான். சீதைபிக்ஷை கொண்டுவந்துபோட்டபோது இராவணன் தன் நிஜரூபத்தைக் காட்டினான். சீதையைப் பலாத்காரமாக பிடித்துத் தனது புஷ்பக விமானத்தின்மீது வைத்துக்கொண்டு இலங்காநகரம்போய்ச் சேர்ந்தான்.

11. வினா.—பிறகு இராமலக்ஷ்மணர்கள் சீதை முன் இருந்த இடத்திற்குப் போனார்களா?

விடை.—சீதையை எந்தஇடத்தில் முன்விட்டுவிட்டுப் போனார்களோ அதே இடத்திற்கு இராமலக்ஷ்மணர்கள் போன உடனே சீதை அங்கில்லாமையால் அவளைத் தேடும்பொருட்டு முயற்சிசெய்தார்கள்.

12. வினா.—சீதையைத்தேடுகையில் இராமலக்ஷ்மணர்கள் யாரைக் கண்டார்கள்?

விடை.—முன் பஞ்சவடிதீரத்தில் சந்தித்த ஜடாயுவைப் பார்த்தார்கள்.

13. வினா.—ஜடாயு அப்பொழுது என்ன சொன்னார்?

விடை.—சீதையை ராவணன் கொண்டுபோனதைத் தான் கண்டு சீதையை மீட்டுக்கொள்ள அவனோடு யுத்தம் செய்ததில் அடிபட்டு மரணதசையி லிருக்கின்றேனென்று ராமனிடம் ஜடாயு புலம்பி யழுதார்.

14. வினா.—ஜடாயு பிழைத்தாரா?

விடை.—இராமனிடம் நடந்ததை அறிவித்த உடனே மரணமடைந்து விட்டார்.

15. வினா.—ஜடாயுவுக்கு உத்தரக்கிரியைகள் செய்தது யார்?

விடை.—இராமன்தான் ஜடாயுவின் உத்தரக்கிரியைகளைச் செய்தார்.

16. வினா.—பிறகு இராமலக்ஷ்மணர்கள் என்ன செய்தார்கள்?

விடை.—இருசியமூகபர்வதத்தின் பக்கமாகப் போனார்கள்.

தி. வெங்கடராம ஐயங்கார்.
தமிழ்ப்பண்டிதர்.

# கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்.

இவ்வுலகின்கணுள்ள ஜீவபிராணிகளினது நிலைமைகளெவற்றுள்ளும், மிக்க பரிதபிக்கத்தக்கதும், உதவியற்றதுமானதும் மானிடர்களது நிலைமையேயாம். பெருந்துயரத்துக்கும் பெருங்குறைகளுக்கும், எப்பொழுதும் அது உடன்படவேண்டியதாகவேயிருக்கின்றது. எதிர்பாராத கஷ்டங்களாலும் அப்படி எதிர்பார்க்கினும் நீக்கவொணாத் துன்பங்களாலும் அது சூழப்பட்டிருக்கின்றது; இது நாமறியாததுமல்ல.

இவ்வித கஷ்டங்களினின்று விடுவிக்கத்தக்கவர்கள் யாவரேனு முளரோவென்று உற்று நோக்குவோமே யாகில், உளர் என்றே நிர்மானிக்க வேண்டியிருக்கின்றது; அவ்வணம் ஒருவரிருந்தும், அநேகர் அவர் இருத்தலை யறியாமலோ, அல்லது அவரை நம்புவதில் யாதொரு நன்மையும் கிடைக்காது என்ற அபிப்பிராயங்கொண்டு அவரை நம்பாமலோ, வருந்துகின்றார்கள். இவ்வண்ணம் வீணில் வருந்தவேண்டுவதில்லை.

"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது"

அவரே நமதுதுன்பங்களையெல்லாம் நீக்கவல்லவர். நாம் எவ்வித உதவியைவிரும்புகின்றோமோ அதையறிந்து கொடுக்கத்தக்கவர். அசாத்தியமாக விருக்கப்பட்ட தொழில்களையெல்லாம் புரியவல்லவர். நாம் இவ்வுலகின்கண் இருப்பதும் அவரது அருளினாலே. வாழ்வதும் அவரது கருணையினாலே. இவ்வண்ணமிருப்பவரை யாரென்று அறியாதோர் அநேகருளரோ? அவர்தான் கடவுள். அவரது பாதாரவிந்தங்களை நாம் அடைவோமேயாகில் நமக்குக்கவலையென்பதே கிடையாது. எக்காலத்தும் எவ்விடத்தும் கஷ்டப்படவேண்டுவதே யில்லை.

"வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடுமையில்"

அவருக்கு நாம் செய்யவேண்டுவதெல்லா மொன்றே. அது மிக்க கஷ்டத்தைத்தாக்கத்தக்கதுமல்ல; நம்மால் செய்ய முடியாததுமல்ல. ஒவ்வொருவராலும் செய்து முடிக்கத்தக்கதே. கஷ்டமன்னியில், சுலபத்துடன்செய்து முடிக்கக்கூடியதே அவரை நம்புவதேயாம். நமது முழுமனத்துடனும், நாம் அவரை நம்புவோமேயாகில் கைவிடப்படமாட்டோமென்பது திண்ணம். ஒருவித அபாயத்துக்கும் பயப்படவேண்டுவதில்லை. மார்க்கண்டேயனது சரித்திரத்தை நோக்குங்கள். கடவுளின்பேரில் முழு நம்பிக்கையைச்செலுத்தி அவரையே நம்பியதால், எல்லாவற்றையும் அழிக்கவல்ல யமனையும் ஒரு நொடியில் அழிந்துபோகச் செய்தான். தனது மாதாப்பிதாக்கள் சந்தோஷமடையும் வண்ணம் நடந்தான், மேன்மையான சிவபதம் கிடைக்கவும் மார்க்கம் செய்துகொண்டான். கடவுளை நம்புவதில் பிரயோஜனமில்லாம லிருக்கவில்லையென்று, இவ்விஷயமொன்றே நன்கு வற்புறுத்துகிறதன்றோ ?

எவ்விஷயம் எண்ணினும், எக்காரியம் தொடங்கினும் அவரை எண்ணியே செய்யப்புகல் மிக்க உத்தமமாகும். நாம் செய்யும் தொழில்களையெல்லாம் அவருக்கு அர்ப்பிதம்செய்துவிடல் மிக்க சிலாக்கியமாகும். நன்மையோ, தீமையோ, அவருடையதேயென்று எண்ணல்வேண்டும். அவ்வண்ணம் நினைத்து நாம் ஒழுகுவோமேயாகில் இவ்வுலகின்கண் நமது வாணாட்களைச் சுகமாகக் கழிக்கலாமென்பதில் சற்றேனுமையமில்லை. சிற்சிலர் ஏதேனும் செய்யத்தகாதவற்றைத் தாங்கள் செய்யுங்கால் "எல்லாம் அவரது செயலே நம்மிடத்து என்னவிருக்கின்றது" என்று சொல்லுகின்றார்கள் நற்செய்கைகளைப் புரியுங்கால் "நான்தான் செய்தேன்" என்று தங்களை மேன்மைப்படுத்திக்கொண்டு பேசுகின்றார்கள். பழிக்கு பாத்தியப்படவேண்டிய கடவுள் மேன்மைக்கு பாத்திரமாகாரோ ?

ஒரகத்துவாசலின்கண் நெல் உணர்த்தியிருக்க, அதை ஒரு பசு கண்டு உண்ணப்புகுங்கால், அதைக்கண்ட அவ்வீட்டு சொந்தக்காரன் தடிகொண்டு அப்பசுவை நொய்யப்புடைத்தால் அப்பசு இறந்துபோகும். "பாவமில்லையா ? இவ்வண்ணம் செய்யலாமா ? " என்று அவனை ஒருவன் வினவ "இதெல்லாம் நமது செயலா என்னை யாளுமீசன் செயல்" என்று விடைபகர்ந்தனனும், சொற்பதினங்களுக்குப் பிறகு அவனே



அநேகம் பெயர்களுக்கு அன்னமளித்தனனும். அதை அவன் கண்டு "இச்செய்கையாருடையது" என்று வினவ "எனதே" என்று மறுமொழி கூறினனும். இது நியாயமாகுமா ? இவ்வண்ணம் நடத்தலிற் பிரயோஜனமில்லை.

"எல்லாவற்றிற்கும் தெய்வபலம் வேண்டாமா" என்று அநேகர் சொல்வதை நாம் கேட்டிருக்கின்றோம். ஆகையால் அநுபவிக்க ஆவசிகமென்றே ஏற்படுகின்றது. அவர்மீது நம்பிக்கைகொள்ளாமல் அவரது பலத்தை எவ்வண்ணம் சம்பாதித்தல் கூடும். ஆகையால் அவரை நம்பவேண்டுவது ஆவசிகமே. அவரை நம்பினால் நாம் கைவிடப்படமாட்டோம். இவ்வண்ணம் நம்பிக்கையைச் செலுத்துகின்றவனே பெருமையிற் சிறந்தோன், ஞானத்திலுயர்ந்தோன், வல்லமையில் சிலாக்கியதை பொருந்தியோன், இன்பமனுபவிப்பதில் நிகரற்றோன்.

இவ்வண்ணம் நம்மைச் செய்துகொள்வதால், நிர்பாக்கியதிசையில் நமது மனது அடையக்கூடிய வருத்தத்துக்கு தக்க சாதனத்தை அடைந்தவர்களாகின்றோம். நமது ஜீவன் நம்மை விட்டகன்று. புதியவுலகத்தையையும், புதிய காட்சிகளையும், கண்ணுறச் செல்லுங்கால் கூடவந்து துணைசெய்பவர் கடவுளைத் தவிர்த்து வேறு எவரேனுமுளரோ ? நமது நண்பர்களால் கூடுமோ? நமது உரவினர்களால் முடியுமோ? அயலார்கள் தான் வந்து உதவுவார்களோ ? வேலைக்காரர்கள் தான் வந்து உதவிசெய்ய முடியுமோ? ஒருவராலு முடியாது. அவரொருவரால் தான் முடியவேண்டும். ஆகையால் அவரை நம்பவேண்டுவது ஆவசிகமாகும். அப்படி நம்புவோமேயாகில் நாம் கைவிடப்படமாட்டோம். "கடவுளை நம்பினோர் கைவிடப்படமாட்டார்." ஆகையால் ஔவை "தெய்வமிகழேல்" என்று கூறியவணணம் நிந்தனைசெய்யாது போற்றிவாழ்வதே நமது கடமையாகும்.

"அறக்கடனீயே யருட்கடனீயே யருங்கருணாகரனீயே
திறக்கடனீயே திருக்கடனீயே திருந்துளமொளிபட ஞான
நிறக்கடனீயே நிகர்கடந் துலகின்னிலையுநீ யேயிருநீ நிலைநான்
பெறக்கடனீயே தாயுநீ யெனக்குப் பிதாவுநீ யனைத்துநீ யன்றே."

S. N. மீனாக்ஷி அம்மாள்.

## விடுகதை.

நான்கு எழுத்துள்ள ஓர்பட்டணம் இதில் முதலெழுத்தும் கடைசியெழுத்தும் சேர்ந்தால் 'சமம்' என்று அர்த்தம். முதலெழுத்து மூன்றாவது எழுத்து கடைசி யெழுத்தும் சேர்ந்தால் 'சம்பாதி' என்று அர்த்தம். முதலெழுத்தை தள்ள நாம் நடக்க உபயோகிப்பது என்று பொருள். என்னடவுன் இது?

ரங்கநாயகி அம்மாள்.

---

## பழமொழி விடுகதை வினாவுக்கு விடை.

1904ஹு ஜுன்மீ 7-ம் புஸ்தகம் 6-ம் வால்யம் 138-ம் பக்கத்தில் பிரசுரம்செய்த மேற்கண்ட வினாவுக்கு விடை.

பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்.

ருக்குமணி,
காவேரிப்பாக்கம்.

---

## அறிவினோத கணித வினா.

8-லிருந்து 3 ஐ யெடுத்தால் 5-ம். 5-லிருந்து 2-ஐ யெடுத்தால் 3ம். எப்படி மிஞ்சுமோ அதுபோலவே. [பத்திலிருந்து பத்தையெடுத்தால் முன் பத்தும் தங்கியிருப்ப தெங்ஙனம்.

மைமூன்.

## சமாசாரக்குறிப்பு.

ஜப்பானிய மாதர்கள் யுத்தத்தில் காயம்படும் ஜனங்களுக்கு அன்புடன் சிகிச்சை செய்து வருகிறார்களாம்.

***

மைசூரில் 16,325 பெண்கள் பாடசாலைகளில் படித்துவருகிறார்களாம். இவர்களில் 3046 பேர் மகம்மதியப்பெண்கள்.

***

லேடி கர்ஸன் அவர்கள் மிக அசௌக்கியமாயிருக்கிறதைப்பற்றி மிக விசனிக்கிறோம். ஆயினும் சீக்கிரத்தில் இம்மாது சிரோமணிக்கு வியாதி நீங்கி சௌக்கியமடையும்படி ஈசன் அருள்புரிவீராக.

***

ருஷியதேசத்து சக்கிரவர்த்தினியார் தமது கணவர் கேட்கும்படி இரவில் 11-மணி வரையிலும் சமாச்சாரப் பத்திரிகையையாவது அல்லது கதைப் புஸ்தகத்தையாவதுபடிப்பது வழக்கமாம்.

***

பம்பாயில் டிசம்பர்மாதக் கடைசியில் "பொருட்காட்சிசாலை வெகு விமரிசையாகவிருக்குமெனக் கேட்க சந்தோஷப்படுகிறோம். சுமார் 100 மாதர்கள் சேர்ந்து ஸ்திரீகள்செய்த பொருள்களை சேகரித்துவைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சென்னையில் இவ்விதம் நடத்தப்படவில்லை. இதற்குக் காரணம் பம்பாய் மாதர்கள் சென்னை மாதர்களைவிட கல்வியிற் றேறியவர்களென்றே சொல்லலாம்.

***

சேலத்திலுள்ள மகமதியப்பெண்கள் பாடசாலையின் கட்டடம் ஆகஸ்டு௴ 22உயன்று மிஸ்ஸஸ் க்ளாக் என்ற மாதுசிரோன்மணியால் திறக்கப்பட்டது. அங்குள்ள பெண்மணிகளுக்கும் வெகுமதிகளளிக்கப்பட்டன. அச்சமயத்தில் மிஸ் E. கார் மாது சிரோன்மணி அப்பாடசாலையின் ரிப்போர்ட்டை வாசித்தார்கள். இக்கட்டிடத்தின் செலவு ரூபா 9000, 1890௵ இப்பாடசாலையில் 30 பெண்களும் 22 உபாத்திமார்களுமிருந்தார்கள். இப்பொழுது 100 பெண்மணிகளும் 3 - உபாத்திமார்களுமிருக்கிறார்கள். "1894௵ முதல் இதுவரையிலும் 24 பெண்கள் ப்ரைமரிபரிக்ஷையிற் றேறியிருக்கிறார்களென்றும் இவ்விதவிருத்தி எந்தமகம்மதிய பெண்கள் பாடசாலையிலுமிராதென்றும் மிஸ் கார் மாது சொன்னது" உண்மையேயாம்.

***

## முக்கிய அறிவிப்பு.

நமது சந்தாதாரர்களுக்கு இம்மாதம் சந்தாவை யனுப்பும்படி கார்டு அனுப்பியிருக்கிறோம். தயவுசெய்து நமது சந்தாதாரர்கள் கூடியசீக்கிரத்தில் சந்தாவை யனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். மணியார்டருக்கும் வி-பி-க்கும் செலவு 1 அணாவாகையால் இஷ்டமுள்ளவர்களுக்கு வி-பி-யில் அனுப்பப்படும். ப. ர்.)

Printed at the Ripon Press Madras & Published by the Proprietor,
C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

REGISTERED 18 JAN 1905 MADRAS

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. VI. Madras: November 1904. No. 11.
புத்தகம் ௬. சென்னப்பட்டணம்: நவம்பர்௴ 1904. இல. 11.

## * விஜயநகரம் மகாராணியார்.

"இம்மாது சிரோன்மணி விஜயநகர சமஸ்தான மகாராஜாவின் மனை
வியார். இம்மாது சிறுகுழந்தையா யிருந்தபொழுது இம்மாதுக்கு
கல்விபுகட்டப்பட்டு வந்தது. மேலும் இம்மாது சித்திரம்
வரையல், சங்கீதம், சமஸ்தானத்திற்கு வேண்டிய சில இரா
ஜாங்க விஷயம் முதலியவைகளையும் கற்றுவந்தார்கள். இம்
மாது ஆங்கில கிரந்தங்களில் சிறந்தவைகளையும் படித்திருக்
கிறார்கள். ஆனதால் இம்மாதுக்கு ஆங்கிலம் நன்றாகப்பேச
வும், எழுதவும் தெரியும்; மேலும் இம்மாதுக்கு சம்ஸ்கிருத
பாஷையில் நல்ல பயிற்சியுமுண்டு. இம்மாதுக்கு சாவகாச மிருக்கும்பொ
ழுது படிப்பது தான் இம்மாதின் வழக்கம். காலஞ்சென்ற விஜயநகர மகா
ராஜாவுக்கு இம்மாது மந்திரியைப்போல் உதவிபுரிந்து வந்தார்கள். தமது
கணவரிடத்தில் இம்மாது வைத்திருந்த அன்பிற்கும், விசுவாசத்திற்கும்
அளவேயில்லை. இவ்விதம் இருந்தமையால் தான் அந்த ராஜ்யம் கூடியவரை
யில் கடனில்லாமலும், யாவராலும் மதிக்கும்படியாயு மிருக்கிறது. இம்மாது
தமது கணவரை கடவுளாக பாவித்து வணக்கத்துடன் சகல காரியங்களை
யும் செவ்வனே செய்து வந்தார்கள். இவ்விதம் செய்து வந்தது அபூர்வம்
என்றே சொல்லலாம். மகாராஜா அவர்கள் இறந்து சுமார் ஒருவருஷத்திற்கு
மேலாகிறது. இம்மாது அவருக்குச் செய்யவேண்டிய மாதச்சடங்குகளை
யெல்லாம் ஒவ்வொரு புண்ணிய ஸ்தலத்தில் செய்துவந்தார்கள். விஜயநகரத்
திலிருந்து ராமேசுவரம் சென்று அங்கு அவருக்குச் செய்யவேண்டிய சட
ங்கை அதிக விமரிசையாகவும், காசிக்குச் சென்று அங்கு வருஷாப்தீகத்தை
யும் அதிக சிறப்பாகவும் செய்து முடித்தார்கள். வெளியிற் செல்லாது
அந்தப்புரத்திலேயே வாசஞ்செய்யும் இம்மாது இப்படிச் செய்துவந்தமை
யால் எவ்வளவு கஷ்டத்திற்கு உட்பட்டிருக்கவேண்டும்! இம்மாது தமது
கணவர் இறந்ததினம்முதல் வாரத்திற் கொருமுறை விரதம் பூண்டு, பட்டினி
கிடந்து, கடவுளை ஸ்தோத்திரம் செய்து வருகிறார்கள். இவ்விதம் இம்மாது
செய்து வருவதானது, தமது கணவரிடத்தில் இம்மாது வைத்திருக்கும் உண்

* From The Madras Mail.

மையான அன்பை காட்டுகின்றதல்லவா? நமது தேசத்திய மாதர்களும் செல்வமிருந்தவர்களாயினும் தங்களது கணவர்களிடத்தில் மிக்க அன்பும் விசுவாசமுமுள்ளவர்களா யிருக்க முயலவேண்டும்.

நிற்க, இம்மாது தினம் தமது வேலைகளை எவ்விதம் செய்துவருகிறார்கள் என்பதை கவனிப்போம். காலையில் காபி சாப்பிட்டபின், இம்மாது பத்திரிகைகளைப் படிக்கிறார்கள். பின்பு தமக்கு வந்திருக்கும் தபால்களை ஒருவர் உதவியின்றி தாமே ஒவ்வொன்றையும் நன்றாகப் பார்ப்பார்கள். உடனே பகல்போஜனம் தயாராய்விடும்; இம்மாது ஸ்நாநம் ஜபம் முதலியவைகளை முடித்துக்கொண்டு பகல்போஜன முண்டபின் தமது குமஸ்தாக்களைக் கூப்பிட்டு இன்னின்ன கடிதத்திற்கு இவ்விதம் பதில் எழுதவேண்டுமென்று சொல்லி எல்லாத் தபால்களையும் கொடுப்பார்கள். இவ்வேலை சுமார் சாயங்காலம் வரையில் நடக்கும். அந்தப்புரத்திலேயே இம்மாது வசித்துவருபவரா யிருந்தபோதிலும், அடிக்கடி இம்மாதுக்கு குடித்தனக்காரர்கள் மனு அனுப்புவார்கள். அவைகளைச் சீராய்ப் படித்து அவர்களுக்குத் தக்கபதிலோ, அல்லது சகாயம் செய்யக்கூடுமானால் சகாயமும் செய்வார்கள். இவ்விதம் இம்மாது செய்துவருவது குடித்தனக்காரர்களுக்கு கஷ்டமும் காலதாமதமும் உண்டாவதே யில்லை. தமது குடித்தனக்காரர்களும், ஜனங்களும் சௌக்கியமாயிருந்தால் தான் நிலக்காரனுக்கும் சௌக்கிய முண்டாகும் என்பதை நீர அறிந்தவர். எந்தமனுவானாலும் நீரவிசாரிக்காமல் பதிலளிப்பதே வழக்கமில்லையாம். இவ்விதம் யாரால் செய்யமுடியும்? ஒரு தம்படி வரவேண்டுமானால் அதை சரியாக வசூல்செய்வார்கள், ஒரு பவுன் செலவுசெய்யவேண்டுமானால் ஒரு பவுன் செலவுசெய்வார்கள். தமது மருமகளுக்கு தமது சமஸ்தானத்தின் ஒருபாகத்தைக் கொடுத்தபொழுது குடிகளுக்கு 10,000ரூபா மதிப்புள்ள வரித்தொகையைத் தள்ளிவிட்டதும் தவிர, அவர்களுக்கு அன்றையதினம் நல்ல உணவும் வஸ்திரங்களும் அளித்தார்களாம். தர்மசிந்தையுள்ள மகாராணியார் இவரல்லவா? இவ்விதமே இந்த மகாராணியார் செய்யும் தர்மங்கள் நல்லவழியில் செய்யப்பட்டு வருகின்றன. தமது கணவர் ஞாபகார்த்தமாக ஒரு விசேஷ தர்மம் செய்ய உத்தேசித்துக்கொண் டிருக்கிறார்களாம். இக்காரியமும் சீக்கிரத்தில் முடிவுபெறுமென்று நம்ப இடமிருக்கிறது. இம்மகாராணியாரைப்போல் நமது தென்னாட்டிலுள்ள ஜமீன்தாரிகளின் மனைவிமார்களும் தங்கள் தங்கள் குடிகளுக்கு தங்களா லியன்ற நன்மைகளைச் செய்ய முயலவேண்டும். மேலும் தங்கள் ஜமீன்களில் வீணான விஷயங்களில் பணம் செலவழிக்கப்பட்டு வந்தால் இவைகளை நீக்கவும் இம்மகாராணியாரைப்போல் தங்கள் கணவர்களுக்கு மந்திரிகளைப்போலிருந்து உதவிபுரிய முயலவேண்டும். மற்றவர்களும் இம்மகாராணியாரைப்போல் கிரக நிர்வாகவிஷயத்தில் மிதமான செலவுகள் செய்துகொண்டும் தங்கள் கணவர்களிடத்தில் மிக்க உள் அன்புடையவர்களா



கவு மிருக்கவேண்டும். இவ்விதமிருந்தால்தான் அக்குடும்பம் விருத்திக்கு வருவதுடன் நல்ல கீர்த்தியையும் அடையும்.

## புனா கைம்பெண்சாலை.

புனாவிதவாக்கிரகத்தின் சூபரின்டெண்டாகிய ஸ்ரீமதி காசிபாய் தேவதார் அம்மாள் அவ்விதவாக்கிரகத்திற்காகப் பணம் சேகரிக்குமாறு சென்னைக்கு வந்து அக்டோபர்மீ 22உ சனிக் கிழமை மாலை 6-மணிக்கு டாக்டர் சி. பி. ராமராவ் வீட் டில் ஓர் பிரசங்கஞ் செய்தார்கள். பென்ஷன்பெற்ற மத்திய சர்க்கில் பெண்பாடசாலை இன்ஸ்பெக்டரசும் அன்று கூடிய கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியாயு மிருந்த மிஸஸ் பிராண்டர்துரைசானியும், சென்னை இராஜதானியிலிருக்கும் விதவைகள் கஷ்டத்தைத்தீர்க்க முயன்று வருகின்ற ராவ்பகதூர் வீரேசலிங்கம் பந்துலுகாருவும் டாக்டர் சி. பி. ராமராவும் மிஸ்டர் ஜி. ஏ. நடேசனும் இன்னும் சிலரும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். காசிபாய் அம்மாள் பிரசங்க ஆரம்பத்தில் இந்தியாவிலிருக்கும் விதவைகளின் நிலைமையைப்பற்றிப் பேசினார்கள். ஓர்பெண், குழந்தையாயிருக்கும்பொழுது, அவள் தகப்பனார், தாயார் அண்ணன்மார் முதலியோர் அக்குழந்தைக்கு வேண்டிய ஆடையாபரணங்களை வாங்கிக்கொடுத்து மிகுந்த அன்புடன் வளர்த்து வருகிறார்களென்றும், சில காலங்கழித்து மிகுந்த ஆடம்பரத்துடன் அப்பெண் ணுக்குக் கலியாணமாகிறதென்றும், பிறகு ஒருவேளை, அப்பெண் சிறுவயதினளா யிருக்கும்பொழுதே கணவனிறக்க நேரிடில் அநேக கஷ்டங்களைச் சகித்துக்கொண்டிருக்க வேண்டியவளா கின்றாளென்றும், இவ்வாறு பலவித மாய்த் துன்புறும் அநாதை விதவைகள் நிலைமையைப்பார்த்து புனா பார்க்குசன் காலேஜ் புரோபசரான கார்வியென்பவர் தான் சம்பாதித்ததில் மிகுந்திருந்த ரூபாய் ஆயிரத்தை தான் கட்டும் விதவாக்கிரகத்திற்கென்று வைத்து அப் பின்னும் மற்ற கொடையாளிகள் கொடுத்ததையுங் கொண்டு அவ்விதவாக்கிரகத்தைக் கட்டி நடத்திவருகின்றார்களென்றுங் கூறினார்கள்.

காசிபாய் அம்மாள் சொல்லியதிலிருந்து புரோபஸர்கார்வியவர்கள் அக்கிரகத்தைக் கட்டி நடத்துவதற்காக எடுத்த சிரமத்திற்கு அளவில்லையென வறிகிறோம். தான் சம்பாதித்து வைத்திருந்த ரூபாய் ஆயிரத்தைக் கொடுத்ததுமன்றி, தன் லைப் இன்ஷ்யூர் செய்து வைத்திருந்த ரூபாய் ஐயாயிரத்தையு மக்கிரகத்திற்கே யளித்தாராம். இதுவுமன்றி வாரந்தோறும் வரும் கலாசாலை விடுமுறைநாட்களில் புனாவிலிருந்து பம்பாய் நகரத்திற்குப்போய் அக்கிரகத்திற்குப் பணம் சம்பாதிக்க மிக முயல்வாராம்.

பின்னும் அந்தக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டபொழுது அதிற் பராமரிக்கப் பட்டவர்கள் இருவரேயென்றும், இப்பொழுது முப்பது பேருக்கதிகமாக விருக்கின்றார்களென்றும், நாள் ஆகஆக அதிற்சேருகின்ற விதவைகளின் தொகை யதிகமாகின்றதென்றும் அக்கிரகத்திலிருக்கும் மாதர்கள் அறிவு நன்னடக்கை தெய்வபக்தி முதலியன கொடுக்கக்கூடிய கல்வியினைக் கற்பிக் கப் படுகிறார்களென்றும், சாதாரணமாய் அறிவு விசாலிப்பதற்காக சமஸ்கிருதம் மாத்தி கணக்குமுதலியனவும், மதவிஷயமான பாடமாக பகவத் கீதையுங் கற்பிக்கப்படுகிறார்க ளென்றும், இங்கு கற்பவர்கள் பெண்பள்ளிக் கூடங்களில் உபாத்தியாயர்களாயும் வயதுவந்த ஸ்திரீகளுக்கு வீட்டிற் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர்களாயும், மருத்துவச்சிகளாயும் பயிற் றப்பட்டு வருகிறார்களென்றும் சொன்னார்கள். நாளுக்குநாள் அந்த கிரகத் தில் வந்துசேரும் விதவைகளின் தொகை யதிகமாவதால் இப்பொழுதிருக் கும் கட்டிடம் போதாததுகண்டு அதனை யடுத்தே யின்னும் கட்டுவதற்கு ரூபாய் 15,000 வேண்டுமென்றும், அதில் 6,000 ரூபாய் இப்பொழுது கையி லிருக்கிறதென்றும், இன்னும் வேண்டிய ரூபாய் 9000 சேகரிக்க முயற்சிகள் நடந்துகொண்டிருக்கிறதென்றும் அவ்விஷயமாயே தாமும் சென்னைக்குவந் திருப்பதாயும் சொன்னார்கள்.

இங்கு சுருக்கமாய்க் கூறப்பட்ட விஷயங்களையந்த அம்மாள் விரிவாய் இங்கிலீஷில் பிரசங்கஞ்செய்ய சுமார் அரைமணிநேரம் ஆயது. அவர்கள் அதற்குமுன் பத்துபேருக்கு மேலுள்ள கூட்டத்திலேயே பேசியதில்லையாம். அவர்கள் உச்சரிப்பும் தடுமாற்றமின்றிப் பேசியது மிகவும் வியக்கற்பாலது. இதுவுமன்றி, இந்து விதவைகள் படும் வருத்தத்தினை யறிந்து அவர்கள் மேற்கொண்ட பரிதாபத்தை யெடுத்துச் சொன்னது பிரசங்க வல்லவர்கள் சொல்வதை விடக்கேட்டார் மனமுருகும் வண்ணமாய் இருந்தது.

பிறகு மிஸ்டர் இராமசுவாமி அய்யர் எழுந்து வட இந்தியாவிலிருப் பவர்களைப்போல் தென்னிந்தியாவில் விதவைகள் விஷயமாய் இரக் கப்படுபவர்களில்லை யென்றும், அவ்வாறு இரக்கப்படுபவர்களிருந்தாலும், அந்த இரக்கம் பிரசங்கமேடையினும்,பிரசங்கமண்டபத்திலுமே நின்றுவிடு மென்றும், ராவ்பகதூர் வீரேசலிங்கம் பந்துலு ஒருவிதவாக்கிரகம் நடத் தும் விஷயம் தங்களுக்குஞ் சம்மதமென்று அநேகர் தெரிவிப்பார்களாயி னும் பந்துலு காருவுக்கு தம்மாலியன்ற உதவி செய்வதில்லையென்றும் சொல்லி, அங்கு வந்திருப்பவர்களெல்லாம் தாங்கள் புனவிதவாக்கிரகத்திற் குத் திரவிய சகாயம் செய்வதுடன் தங்கள் சிநேகிதர்களையுங் கொடுக்கச் சொல்லவேண்டு மென்றுஞ் சொன்னார்.

பிறகு மிஸ்டர் ஜி. ஏ. நடேச அய்யரெழுந்து புத்தியுள்ள மனிதர் யாவ ரும் விதவைகள் படுங் கஷ்டத்தைத் தெரிந்து அத்துன்பத்தை நீக்க முயல் வது அவர்கடமை யென்றும், அத்துன்பம் நீங்குமாறு முயன்று வருகிற புன



விதவாக்கிரகத்திற்காகப் பணம் சேகரிக்குமாறு சென்னைக் கனவான்கள் கிர கங்களில் கொஞ்சம்பேர் கூடிய சபைகளில் காசிபாய் அம்மாள் அவர்களைப் பிரசங்கிக்குமாறு கேட்டுக்கொள்ள வேண்டுமென்றுங் கூறினார்.

பிறகு அக்கிராசனாதிபதியாகிய பிராண்டர் துரைசானி யெழுந்து வித வைகளுக்குக் கல்வி கற்பிப்பது அவர்கள் படுந் துன்பத்தினோர் பாகத்தை யொழிக்குமென்று தம் அனுபோகத்திலிருந்து சில உதாரணங்களால் விளக்கி விதவைகளுக்குக் கல்வி பயிற்றுவிக்க புனவிலிருப்பதைப் போன்ற விதவாக்கிரகங்கள் நல்ல இடமாகுமென்று சொன்னார்கள். அங்கு வந்தி ருந்த கனவான்களிடம் ஓர் கடிதம் கொடுக்கப்பட்டது; அவர்கள் அதில் கையெழுத்துவைத்து கொடுப்பதாக வாக்குத்தத்தஞ் செய்யும் தொகையை யெழுதியபிறகு அன்று அக்கிராசனாதிபதியாக விருந்த மிஸஸ் பிராண்டர் துரைசானிக்கு வந்தன மளிக்கப்பட்டது; அதுவுடன் சபை கலைந்தது.

C. சோமசுந்திரம்.

[இம்மாது எழும்பூரிலும், சென்னை முத்தையாமுதலிதெருவிலும், திரு வல்லிக்கேணியிலும் பிரசங்கம் செய்தார்கள். பத்திராதிபர்]

# தேனும் தேனீயும்.

[இது மதுரை பாலதிராவிடசங்கத்தார் வேண்டுகோளின்படி ஷை சங்கத்தில் மேல்மதுரை ஸப்ஜட்ஜ் மிஸ்டர் M. விசுவநாதையர் B. A. F. M. U., அவர்களின் அக்கிராஸனாதிபத்தியத்தின் கீழ் உபந்யாஸிக்கப்பட்டது.]

## I. தேன் எனப்படுவது யாது ?

பல்வகைப் பூக்களினின்றும் தேன் ஈக்கள் அல்லது தேன் வண்டுகளால் சே கரிக்கப்படும் இனிமையான பதார்த்தமே தேன் எனப்படும். இத்தேன் சர்க்கரை, ஜலம், மெழுகு, பூச்சத்து, பூந்தாது (மகரந்தப்பொடி) சாயப் பொருள்கள், நிரசவஸ்துக்கள் முதலியன சேர்ந்து ஆகிறது.

## II. தேன் உண்டாகும் விதம்:

பூக்களில் உள்ள இனியசாரத்தை தேனீக்கள் நக்கிக் குடித்து இரைப் பையில் சேர்க்க அச்சாரமே தேனாக மாறும். பசுமாடு முதலில் வயிறுநிரம்ப மேய்ந்து பின்பு ஒரிடம் சென்றிருந்து உட்கொண்ட இரையை மீண்டும் கக்குவதுபோல், தே னீக்களும் வயிறு நிரம்பியவுடன் தமது உறைவிடம் நோக்கிச்சென்று இரப்பையினின் றும் தேனை வெளிப்படுத்தி அதில் (உறைவிடத்தில்) உள்ள அறைகளில் வைக்கும். இவை இங்ஙனம் மீண்டும் மீண்டும் சென்று திரும்பி அறைகள் யாவையும் நிரப்பும்.

## III. தேன்கூடு.

நாம் முற்கூறிய அறைகள் அடங்கிய தேனீயின் உறைவிடமே "தேன்கூடு" எனப்படும். இக்கூடு ஒன்றை எடுத்துப் பரிசோதிப்போமானால் அது அநேக துவாரங்கள் வாய்ந்திருக்கக்காண்போம். இத்துவாரங்களுக்குத் தான் "அறைகள்" என்று பெயர். இவ்வறைகள் ஆகாராதிகள் வைப்பிடமாகவும் ஈக்களின் துயிலிடமாகவும் பக்குவமடையாச் சிறு ஈக்களின் உறைவிடமாகவும் உபயோகப்படுகின்றன. இவற்றுள் தேன் முதலிய வைக்கப்படும் அறையின் முட்டைகள், ஈக்கள் இருக்கும். அறைகளிலும் அதிக ஆழமுள்ளனவாக இருக்கும். ஆகார அறையின் ஆழம் சுமார் 2 அங்குலம் இருக்குமாம். அறைகள் யாவும் மெழுகினாலானவை. இவற்றைப்பற்றிய ஏனைய விஷயங்கள் பின்னாடி அறிவிக்கப்படும். நிற்க,

## IV. மெழுகு பெறும் விதம்.

தேனீக்கு மெழுகு எது? பூக்கள்தோறும் ஈக்கள் உட்கார்ந்து உட்கார்ந்து கொஞ்சம் கொஞ்சமாய் அவற்றினின்றும் மெழுகு எடுத்துச் சேர்க்கின்றன என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இன்னோர் கொண்டது தப்பபிப்பிராயமே. ஏனெனில், மெழுகை ஈக்கள் பூக்களினின்றே பெறுவதில்லை. பின்னை, சிலந்திப்பூச்சிகள் தம் சரீரத்தினின்றும் நூலை வெளிப்படுத்துவதுபோல், தேனீக்களும் மெழுகைத் தம் உடம்பினின்றே உற்பத்திசெய்கின்றன. மெழுகை உற்பத்திசெய்ய ஈக்கள் சிறிதும் சிரமப்படவேண்டியதில்லை. ஏனெனில், அவை ஒருவேலையும் செய்யாமல் இருந்தஇடத்தில் இருந்து இளைப்பாறும் சமயத்தில் தான் மெழுகு உற்பத்தியாகுமேயன்றி வேலைசெய்யும் பொழுது உண்டாகாது.

சில சமயங்களில் யாதானும் ஓர் கட்டிடத்தையாவது மரக்கிளையையாவது பற்றிக்கொண்டு பூத்தொடுத்த ஹாரம்போல் சில ஈக்கள் தொங்க, அவற்றின் நடுவில் சர்க்கஸில் ஒருவர் காலை ஒருவர்பிடித்துப் பலர் தொங்குவதுபோல், வேறு சில ஈக்கள் சரம் சரமாய்த் தொங்கிக்கொண்டிருக்கவும் இவற்றின்மேல் வேறு சில மொய்த்துக்கொண்டிருக்கவும், சிலர் கண்டிருக்கலாம். இங்ஙனம் இவைகள் சுமார் 24 மணிநேரம் மொய்த்தவண்ணமாகவே தொங்கிக்கொண்டிருக்குமாம். இவைகள் எதற்காக இப்படித் தொங்குகின்றன என்று நினைக்கிறீர்கள்? மெழுகுபெறவே. இப்படி மொய்த்திருப்பது தான் அவைகள் இளைப்பாறிக்கொண்டிருத்தற்கு அடையாளமாம். நமக்குள் பலர் நெருங்கி உட்காருவதனால் புழுக்கம் மிகுந்து வியர்வை வெளிக்கிளம்பவில்லையா? அவ்வண்ணமே இவை இங்ஙனம் நெருங்கிமொய்ப்பதால் சூடு உண்டாகி இவற்றின்சரீரத்தைக் கவிந்துள்ள செதில்களின் அடியிலிருந்து அடையடையாய்ப் பாளம் பாளமாய் மெழுகு வெளிக்கிளம்பும். இங்ஙனம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் மெழுகை ஏனைய ஈக்களிற் சில உடனுக்குடனேயே எடுத்துச் சேர்த்துத் திரட்டும்.

## V. அறைகளின் அமைப்பு.

தமக்குப் போதுமான மெழுகு சேகரிக்கப்பட்டவுடன் இவ்வீத்திரளினின்றும் ஓர் ஈ கிளம்பி, ஏனைய ஈக்களைத் தனது தலையால் சுமார் ஒரு அங்குலம் விலக்கி, காலி இடத்தின் மத்தியில் உட்கார்ந்து தனது சரீரத்திலுள்ள மெழுகறையினின்றும் சில பாளங்களை ஒவ்வொன்றாய் எடுத்து, அவற்றை இடுக்கிபோன்றுள்ள தனது கால்களாற் பற்றி, நாவைக்கரணையாக உபயோகப்படுத்தும். பின்னர் இம்மெழுகடைகளைச் சீர்ப்படுத்தித் தனது உமிழ்நீரால் நனைத்து தான் உட்கார்ந்திருந்த இடத்தில் உறுதியாய் ஒட்டி, அங்கிருந்து கிளம்பி ஏனைய ஈக்களோடு ஈயாய்ப்போய் உட்காரும். இந்த ஈ



இப்பொழுது அஸ்திபாரம் போட்டுவிட்டுப்போய் இருக்கிறது. உண்மையிலே தேனீக்களும் மனிதரைப்போலவே அஸ்திபாரக்கல் ஊன்றிய பின்னர்தான் மேல் வேலை தொடங்குமாம். இதன்பிறகு வேறு சில ஈக்கள் அவ்வஸ்திபாரத்தின்பேரில் சுவர் எழுப்பி ஓர்அறைகட்டும். இவ்வறையைச்சுற்றிலும் அடுத்தடுத்துப் பல அறைகள் எழுப்பப்படும். இவ்வறைகள் நிரைநிரையாய் பெரும்பாலும் அறுகோணவடிவமுள்ளனவாகவே இருக்கும். தாம் அறுகாற் ஜெந்துக்களாகையால் தாம் இருக்கும் அறைகளை இவை அறுகோணவடிவமாய் அமைக்கின்றனபோலும். இங்ஙனம் இவை அறுகோணமாயமைப்பது தடுப்புச்சுவர்கள் ஏற்ற வித்தியாசமின்றிப் பொருந்தவும் அனாவசியமாய் மெழுகு அதிகமாகச் செலவழியாமல் இருக்கவுமே யென்றாலும் தவறாகமாட்டாது. நிற்க,

ஒரு அறைக்கும் மற்றொரு அறைக்கும் உள்ள மெழுகுத்தடுப்புச் சுவரின் கனதி $\frac{1}{8}$ அங்குலம் இருக்கும். ஒவ்வொரு அறையிலும் இருவகைச் சிறு அறைகள் உண்டு. இங்ஙனம் இவ்வீக்கள் அறைகள் கட்டக்கட்ட, வேறு சில ஈக்கள் கட்டப்பட்ட அறைகளைக் கரடுமுரடு இன்றிச் சமன்படுத்தும். மற்றும் சில ஈக்கள், தம் கை, கால், வாய் சரீரம் முதலியவற்றைக்கொண்டு வெகுநேரம் வேலைசெய்து உள்ளே புகுந்தும் வெளியேவந்தும் அறைகளைச் சீர்ப்படுத்தி மெருகு கொடுத்தாற் போன்று பளபளப்பாக்கும். பின்னும் சில ஈக்கள், இவ்வறைகளில் தப்பித்தவறி இருக்கும் இடுக்குகளும் நன்றாய் அடைபடுமாறு, முன்னரே தாம் தூக்கில் மொக்கிலிருந்து எடுத்துச் சேகரித்து வைத்திருக்கும் பிசுபிசுப்புடன் கூடியிருக்கும் குங்குலியத்தைப் பூசும். இன்னும் சில ஈக்கள் வீடுகட்டி முடிக்கும். வேலையில் அமர்ந்துள்ள ஈக்களுக்கு ஆகாரம் தேடிக்கொண்டு வந்து கொடுக்கும். ஏனெனில், இவ்வீக்கள் வீடுகட்டுவதைவிட்டு இரைதேடப்புறப்பட்டால் காலதாமதமாகுமென்றே போலும். இங்ஙனம் கட்டப்பட்ட அறைகளில் தான், ஈயானது தேனை நிரப்பி அது ஒரு சிறிதும் வழிந்தோடாவண்ணம் ஒவ்வொரு அறையையும் மெழுகுத்துண்டுகளால் அடைக்கும். சுமார் 14 அங்குலம் நீளமும் 7 அங்குலம் அகலமும் உள்ள ஓர் தேன்கூடு சிற்றீக்களால் 24 மணிநேரத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டுமேயானால், இவ்வீக்களின் சுறுசுறுப்பையும், விடாமுயற்சியையும், புத்திக்கூர்மையையும், திறமையையும் என்னென்று எடுத்துரைப்போம்!

இவ்வறைகள் யாவும் அநேகமாய் உருவத்தில் ஒத்திருப்பினும் அளவில் ஒத்திரா. அவை பெரிதும் சிறிதுமாய்த்தான் இருக்கும். அறைகள் யாவற்றினும் அடியில் தொங்குவதும் குவிந்த வடிவமுமுள்ளதுமான அறையே பெரிது. இப்பெரிய அறைக்கு "ராஜமாளிகை" என்று பெயர். இத்தகைய அரசமாளிகைகள் சில கூடுகளில் ஐந்து அல்லது ஆறும் இருக்கும்.

## VI. மூவகை ஈக்கள்.

அறைகள் யாவும் அளவில் ஒரேமாதிரியாய் இல்லாமல் ஏன் ஒரு அறைமட்டும் எல்லாவற்றினும் மிகப் பெரிதாயும், வேறு சில அறைகள் மிகச் சிறிதாயும் மற்றுஞ்சில அறைகள் இச்சிறு அறைகளினும் சற்றுப் பெரிதாயும் இருக்கின்றன? மூவகைப்பட்ட ஈக்களுக்கும் காரணம் தேன்கூண்டிலுள்ள ஈக்களிற் சிலவற்றைப் பரிசோதித்தறிவோமேல் நன்கு புலப்படும்.

### இராணி ஈ.

முதலாவது, நாம் அதி மிகப்பெரிய அறையாகிய "ராஜமாளிகை"யைப் பரிசோதித்தறிவோம். இவ்வரசமாளிகை சுற்றளவில் மூன்று சுற்றீக்களின் அறைக்குச் சரியாக இருக்கும். தவிரவும் அது ஏனைய அறைகளைப்போல அறுகோணவடிவமாய்

அமைக்கப்படாமல் ஓர் உருளையைப்போன்று இருக்கும். இவ்வறையில் இருக்கும் ஈயானது ஏனைய எல்லா ஈக்களைக்காட்டிலும் பெரிதாயு ம்நீண்டவயிறுடையதாகவும் இருக்கிறதெனத் தெரியவரும். இது தனது தேகத்தை முற்றிலும் மூடப்போதாத குட்டைச் சிறகுகளையுடையதாயிருக்கும். இதற்கு வளைந்த கொடுக்கு உண்டு. அதுகொண்டு இது படுகொட்டுக்கொட்டும். இதனை உற்றுநோக்கின், இஃதோர் பெண்ஈ என்பது தெற்றெனப் புலப்படும். அறைக்குள் இருக்கும் 60,000 ஈக்களிலும் இது ஒன்றுதான் முட்டையிடக்கூடியது. இதன் வேலை, ஆயிரக்கணக்கான முட்டைகளை இட்டுக்கொண்டு சுகமாய்க் காலம் கழிப்பதும் ஈக்கள் பல்கிய காலத்து அவற்றை வேற்றிடங்களுக்கு இட்டுச்சென்று புதுக்குடும்பம் ஸ்தாபித்து விருத்திசெய்வதுமே. உண்மையிலேயே இதற்கு ஒரு சிரமமும் இல்லை. ஏனெனில் அதற்குப் படுக்கை இருக்கை முதலிய அமைப்பதோ, உணவு ஊட்டுவதோ, தேன் உண்பிப்பதோ, சகலமும் சிற்றீக்களின் வேலையாய்ப் போய்விடுகிறது. சிற்றீக்களுக்கு இதனிடத்தில் பயபக்தி விசுவாசம் அதிகம். இப்பெண் ஈக்கு "இராஜாத்தி" அல்லது இராணிஈ என்று பெயர். இது முட்டையினின்றும் வெளிக்கிளம்பும்பொழுது ஏனைய ஈக்களைப்போலவே அதி அவலக்ஷணமுள்ள ஓர் சிறு வெண்புழுவாகத்தான் இருக்கும். இதற்கு எதற்கும் இல்லா மேன்மை கிடைக்கப்போகிறதென்று அதன் அறையைப்பார்த்தே அறிந்து கொள்ளலாமன்றோ? இது கொழுத்துப் பரிபக்குவமடையுங்கால் இதற்கு எவ்வளவு பெரியஇடம் வேண்டியிருக்குமோ அவ்வளவு பெரியஇடத்தை முன்னுக்கு முன்னாலேயே உணர்ந்து அமைக்கும் சிற்றீக்களின் புத்தி என்னபுத்தி! இம்மட்டோ? இவ்வீகூடியசீக்கிரத்தில் கொழுத்துப்பெருத்து பரிபக்குவமடைந்து சந்ததி விருத்திசெய்யுமாறு பூச்சத்துக்களினின்றும் ஓர் விதைப்பாகை உண்டாக்கி இச்சிற்றீக்கள் இதற்கு ஊட்டுமாமே! நிற்க.

இவ்வளவு மகத்துவத்துடனும் வளர்ந்து முதிரும் இந்த இராணிஈ சீதோஷ்ண நிலைமைக்கேற்ப முட்டையிட்டுத் தள்ளும். இது முட்டையிட முட்டையிட இம்முட்டைகள் இது இருக்கும் இடத்திற்கப்பாலுள்ள அறைகளில் வைக்கப்படும். பின்னர் இவை குஞ்சுபொரிக்கப்படும் பொழுது தாய்போலவே சிறகு முளையாச் சிறு வெண்புழுக்களாய் பட்டுப்பூச்சி நூற்பதுபோல் பட்டை நூற்று அதனைத் தமக்கு ஓர் போர்வையாக்கிக்கொள்ளும். ஏனெனில், அவைகளும் உயிர்ப் பிராணிகளேயன்றோ? அவைகட்குமட்டும் குளிராதா? இப்புழுக்கள் சிறகுபெற்றுத்தாமிருக்கும் கூடுகொள்ளும் மட்டும் வளரும்வரை சிற்றீக்களாலேயே பூர்த்தாது, தேன்முதலிய கொடுக்கப்பட்டு சம்ரக்ஷிக்கப் பெற்று வருகின்றன. நிற்க

இது காறும் இராணி ஈயின் சுகஜீவனத்தைப்பற்றிக் கூறிவந்தநாம் இப்பொழுது அதன்அந்திய காலத்தைப்பற்றிச் சில கூறுவோம். அதற்கு நாம் முற்கூறிய சீரும்சிறப்பும் பூஜ்யத்தையும் அது சந்ததி அபிவிருத்திசெய்துகொண்டு இருக்கும் வரையிற்றான். வயதாய்விட்டால் பக்குவந்தவறி இதனால் முட்டையிட முடியாதல்லவா? அப்பொழுது சிற்றீக்கள் பெரும் ராஜத்துரோகிகளாகித் தம் இராணியை ஈவிரக்கமின்றி கொட்டியேனும் அரசமாளிகையினின்றும் குளிரில் துரத்தியேனும், அல்லது மூச்சடைத்துச் சாகும்படி காற்று ஒரு சிறிதும் புக வழியில்லாதபடி மெழுகினால் அதன் அறையை நன்றாய் அடைத்தேனும் கொன்றுவிடும். முற்கூறிய விதத்தைத் தவிர பிறவி தங்களிலும் இராணி ஈக்கு அகாலமரணம் சம்பவிப்பதுண்டு. எங்ஙனமெனில் இவ்வீயானது ஆண் ஈக்கள் முட்டை அதிகமாய் இட்டாலும் ஈக்கள் பல்கியகாலத்து அதிகப்பட்ட ஈக்களை வேற்றிடத்திற்கு இட்டுச்செல்லாமல் இருந்தாலும் சிற்றீக்களுக்கு வெகு கோபம் ஜனித்து நாம் முற்கூறிய வகையில் யாதானும் ஓர்விதமாய் அதன் உயிரைப் போக்கி



விடும். இது அகாலமரணத்திற் குள்ளாகாது கருதி வளர்க்கப்பெறின் மூன்று அல்லது நாலுவருஷம் உயிரோடு இருக்குமாம். இராணி ஈ மட்டும் இல்லாவிடில் கூடு காலிதான். கூட்டில் ஈக்களே இரா. இவ்விஷயம் ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

சிற்றீக்கள்:—இனி, நாம் இராஜமாளிகையை விட்டுவிட்டு சிறிய அறைகளைப் பரிசோதிக்கப்புகுவோம். இச்சிற்றறைகளில் சிற்றீக்கள் காண்போம். இவை ஒவ்வொன்றும் ½ அங்குலம் நீளமும் ¼ அங்குலம் அகலமுமாய் இருக்கும். இவை அறு கூறுடைய அடிவயிறும், பன்னிருகணுக்கள் கொண்ட இரண்டுதும்பிகளும் வாயப்பெற்றன. இவற்றின் தும்பிகள் ஏனைய ஈக்களின் தும்பிகளினும் மிக நீண்டவையாயிருக்கும். இவ்வீக்களுக்குத்தான் மெழுகறையும் மகரந்தத்தூள் சேர்க்கும் பையும் உண்டு. இப்பைகள் இவற்றின் கால்களில் அமைந்துள. இவற்றிற்கு சிறிதும் வளையாது நீண்ட கொடுக்குகள் உண்டு. இவற்றின் கொட்டு இராணி ஈயின் கொட்டினும் அதிக வேதனை தரக்கூடியதாய் இருக்கும். இத்துணை இலக்கணமும் வாய்ந்த இச்சிற்றீக்களுக்கு "வினையாளர்" (Workers) அல்லது வேலைக்காரர் என்று பெயர். இவைகளுக்கு இப்பெயர் இடப்பட்டது வெகு சரியே. எங்ஙனமெனில், அறைகள் கட்டுவதும் ஆகாரம் முதலிய தேடிக்கொண்டுவருவதும், ஆகாரம் இருக்கும் இடங்களைப் புதிதுபுதிதாய்க் கண்டுபிடிப்பதும், சத்துருக்களைக் கொட்டித் துரத்திக் கூட்டைப் பாதுகாப்பதும், இராணி ஈக்குச் சகல சௌகரியங்களையும் செய்துகொடுத்து அதனையும் அதன் முட்டைகளையும் போற்றி வளர்ப்பதும், மாரிகாலத்திற்கு வேண்டிய ஆகாராதிகளை வெயிற்காலத்திலேயே சேகரித்து வைத்துக்கொள்வதும், ஏனையக்கருமங்களும் இவற்றைப் பொறுத்தவேலைகளே. இவ்வீக்களே கூட்டில் மிகுதியாய் காணப்படுவன. இவை ஆணோ பெண்ணோ என்று சாதாரணமாய்ப் பகுத்தறியமுடியாது. ஆயினும், சமீபத்தில் இவையாவும் பெண்ணீக்கள் என்றும், ஆனால் இவை பக்குவமடையாதிருக்குமாறு வேண்டுமென்றே முட்டைகளாய் இருக்கும்பொழுதே பெண் தன்மை போக்கப்பட்டும் சிற்றறைகளில் அடைக்கப்பட்டும் வேலையாட்களாக்கப்படுகின்றன வென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவைகள் ஒரு வருஷத்திற்கதிகம் உயிரோடிரா. இவற்றைப்பற்றிய ஏனைய விஷயங்கள் ஆங்காங்கு கூறப்படும்.

ஆண் ஈக்கள்:—இனி இச்சிற்றீக்களை விட்டு இவை இருக்கும் அறையினும் சற்றுப்பெரிதாய் உள்ள அறைகளைப் பார்ப்போம். அறைகள் பெரிதாய் இருந்தால் அவற்றில் உள்ள ஈக்களும் பெரிதாய் இருக்கும் என்று சொல்லாமலே தெரியவரும். இவை 13-கணுக்கொண்ட இரு தும்பிகளுடையன. இவற்றிற்குக் கொடுக்கில்லை; ஆதலின் இவை கொட்டவேகொட்டா. இவைகள் கதியும் மந்தகதியே; பறந்து செல்லும்பொழுது இவைதாம் உங்காரம் செய்துகொண்டு போவன. இவை உச்சந்தலைக்கு அப்புறமும் இப்புறமும் புடைத்துப் பரந்த கண்களையுடையன; பார்த்தமாத்திரத்திலேயே இவை ஆண் ஈக்கள் என்பது விளங்கும். இவை கட்குச் ("சோம்பர்") (Drones) என்று பெயர். ஏனெனில் இவ்வீக்களில் எதுவும் தேனும்சேர்க்காது. வீடும் கட்டாது. மெழுகும் உற்பத்திசெய்யாது. ஒருவேலையுமின்றி அகப்பட்ட பூக்களில் வாயைவைத்து மது அருந்தி வயிற்றை நிரப்பிச் சுகமாய்த் தன் இருப்பிடம்போய்க் காலங்கழிக்கும். ஆண் ஈயின் வேலையெல்லாம் சந்ததி உற்பத்திசெய்வது தான். இது மெத்த பாக்கியசாலி என்று எவரும் இதனிடத்திற் பொறாமைகொள்ள வேண்டாம். ஏனெனில், அந்தோ! இது பெண் ஈயோடு சம்பந்தப்பட்ட மாத்திரத்தில் தனது ஜீவாதாரபாகத்தையும் ஆதலால் உயிரையும் இழக்கவேண்டி வருகிறது. தவிரவும் ஆண் ஈக்களின் கொண்டாட்டம் எல்லாம் குளிர்காலம் வருமட்டே. மாரிகாலம் தலைகாட்டியதோ

இல்லையோ இவைபாடு திண்டாட்டம் தான். ஏனெனில் முதலிய அதற்குக் குளிரில் வெளிக்கிளம்ப மனம் வராது. மனம்வந்தபோதிலும் தேன்கிடைக்காது. காரணம்யாதெனில் தேன் உற்பத்திக்கு உஷ்ணகாலமே ஏற்றது. தவிரவும் மாரிகாலத்தில் பூக்கள் இருப்பது அரிது. ஆதலின் இவை பசியினிமித்தம் பெரிதும் வருந்தும். "சோம்பர் என்பவர் தேம்பித்திரிவர்" என்ற முதுமொழி பொய்க்குமா? இவை சிற்றீக்கள் சேர்த்து வைத்திருக்கும் தேனையாவது உண்டு பசி தீர்த்துக்கொள்ள எண்ணித் தேனண்டை செல்லும். ஆனால் சிற்றீக்களோ நிர்த்தாக்ஷண்யமாய் சிறிதும் இரக்கமின்றி, முன்னுக்கு முன்னேயே மாரிகாலத்திற்கும் வேண்டிய தேனை வேனிற்காலத்திலேயே சேர்த்து வைக்கச் சிறிதும் பிரயாசைப்படாது சுத்த சோம்பேறிகளாய்த் திரிந்து காலங்கழித்த ஆண் ஈக்களைப் படுகொட்டுக் கொட்டிக்கொல்லும். இவ்விஷயம் அறியும் நாமும் நமக்குப் பிற்காலத்தில் வேண்டியதை இப்பொழுது முதற்கொண்டே சோம்பேறித்தனத்தை ஒழித்துச் சுறுசுறுப்புடன் சிற்றீக்கள்போல் தேடி வைத்துக்கொள்ளாவிடின் அந்தியகாலத்தில் ஆண் ஈக்களைப்போல் பட்டினியால் வருந்தவேனும், உயிரிழக்கவேனும் நேரிடும் என்பதை உய்த்துணர்வோமாக.

(இன்னும் வரும்.)

M. கோபால கிருஷ்ணையர்.
மதுரை மாநகர் செந்தமிழ்ச் சங்கத்து
அச்சியந்திராலயாதிபதி.

# இஷ்டப்படி முடிதல்.

## அல்லது

# ரோஸலிண்ட்.

### 6.

பிரான்சுதேசமானது அநேக மகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த காலத்தில் அவற்றின் ஒன்றில், நியாயப்படி அரசாளவேண்டிய தனது தமையனது பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டு, அவனையுந் தேசத்தைவிட்டுத் துரத்திய ஒரு கொடியோன் அரசாண்டு வந்தான்.

இப்படி அநியாயமாய்த் துரத்தப்பட்ட அரசன் ஆர்டன் என்னுங் காட்டுக்குப்போக அவனது சில ஆப்தர்களும் அவன் பின் சென்றார்கள். இப்படித் தனக்காக தங்கள் வீடுநாடுகளை விட்டுவந்த அன்பர்களோடு அவ்வரசன் அங்கேசுகமாய்க் காலங்கழித்து வந்தான். ஆனால் அவர்களின் நிலங்களில் வரும் பலன்களையெல்லாம் அக்கொடியோன் அனுபவித்து வந்தான். அவர்கள் தங்கள் ஆஸ்தியின் விசாரமே யில்லாமல், இங்கிலாந்தில் முன்னே யிருந்த ராபின்ஹூட் (Robin Hood) என்பவனைப்போல் கொஞ்சங்கூட மனக்கவலையில்லாமல் தங்கள் இஷ்டப்படி வேடிக்கையாய்க் காலங்கழித்து வந்தார்கள் வேனிற்காலத்தில் அக்காட்டு விருட்சங்களின் நிழலில் வரிசையாய்ப் படுத்துக்கொண்டு அங்கு ஓடித்திரியும் மான்களின் வேடிக்கையைப் பார்த்து ஆனந்திப்பார்கள். அவ்வரசன் தன்மீது குளிர்காற்று வீசுவதினால், தன் கஷ்டதிசையை நினைத்து "இக்குளிர்காற்று நல்லமந்திரியை யொக்கும். என்னை ஸ்தோத்திரம் பண்ணாமல் என் ஸ்திதியை உள்ளதுள்ளபடித் தெரிவிக்கிறது. அது எவ்வளவு கொடியதா யிருந்தபோதிலும் நன்றியறிவு இல்லாதவர்களைப்போல் அவ்வளவு கொடியதல்ல. ஒருவனுக்குக் கஷ்டதிசை வரக்கூடாதென்று அநேகர் சொன்னபோதிலும் என் மனதிற்கு, பாம்பின்விஷமும் சிலசமயத்தில் மருந்துக்கு உபயோகப்படுவதுபோல், கஷ்டதிசையிலிருந்து அநேக நல்ல விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாமென்று தோன்றுகிறது" என்று சொல்லுவான். இவ்விதமாகத்தான் பார்க்கும் ஒவ்வொரு வஸ்துவினின்றும் ஒவ்வொரு நல்ல விஷயத்தைக் கிரகிப்பான்.



நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட இவ்வரசனுக்கு ரோஸலிண்ட் (Rosalind) என்னும் ஒரு புத்திரியிருந்தனள். ஆனால் அவளைமாத்திரம் அக்கொடிய பெடரிக் (Frederick) துரத்தாமல் தன்குமாரத்தியாகிய ஸீலியா (Celia)வுக்குத் தோழியாகத் தன் அரண்மனையிலேயே வைத்துக்கொண்டான். தங்கள் தகப்பனார்கள் எவ்வளவு விரோதப் பட்டிருந்தபோதிலும் ரோஸலிண்டும், ஸீலியாவும் மிக்க அநுகூலமாகவே யிருந்தார்கள்.

ஸீலியா தன் தகப்பன் செய்த அநியாயத்துக்காக ரோஸலிண்டை மிக்க அன்புடன் நடத்திவந்தாள். ரோஸலிண்டுக்கு எப்பொழுதாவது தன் தகப்பன் துரத்தப்பட்டுத்தான் பராதீனமா யிருப்பது நினைவிற்கு வந்தால் உடனே ஸீலியா நல்லவார்த்தைகளைச் சொல்லி அவளைச் சமாதானப்படுத்துவாள்.

இப்படி இவ்விருவரும் ஒருநாள் பேசிக்கொண்டிருக்கையில், ஓரிடத்தில் குத்துச்சண்டைப் பந்தயம் நடக்கப்போகிறதென்றுக் கேள்விப்பட்டு இருவரும் அங்கே சென்றார்கள்.

அவ்விடம் சண்டைசெய்ய வந்திருப்பவர்களைப் பார்க்க மிக்க ஆச்சரியமாக விருந்தது. ஏனெனில் அப்படிப்பட்ட சண்டையில் அநேகம்பெயரைச் சயித்துக்கொன்று மிகப் பிரசித்தி பெற்ற ஒரு பெரிய பலிஷ்டனும், ஒரு சிறிய இளைவனும் முஷ்டியுத்தஞ் செய்ய அவ்விடம் வந்திருந்தார்கள். அவ்விடம் வேடிக்கைபார்க்க வந்திருந்தவர்களெல்லாரும் சண்டையில் அச்சிறுவன் இறந்துபோய் விடுவானென்றே எண்ணினார்கள். அவ்விடம் இருந்த பிரடரிக் (Fraderick) தன் குமாரத்தியையும் ரோஸலிண்டையும் பார்த்து "பெண்களே, நீங்கள் ஏன் இங்கே வந்தீர்கள்? இச்சண்டையைப் பார்ப்பதில் உங்களுக்கு ஒரு சந்தோஷமும் இருக்காது. ஏனெனில் ஒருவன் மிக்க பலிஷ்டன். மற்றொருவன் மிக்க இளையவன். அச்சிறுவனைச் சண்டைபோடாமற்

செய்ய உங்களால் முடியுமா பாருங்கள்" என்றான். இதைக் கேட்டவுடனே அச்சிறுமிகள் இவ்வுபகாரத்தைச் செய்வதில் மிக்க ஆவல்கொண்டு அவ்விளைய வீரனிடஞ்சென்று அவனை எதிரியோடு சண்டைசெய்ய வேண்டாமென்றும், செய்தால் கட்டாயம் இறந்துபோய் விடுவாயென்றுஞ் சொல்லிப் பயமுறுத்தினார்கள். இதற்குக் கொஞ்சங்கூட அஞ்சாமல் அவ்விளையன் "நீங்கள் இதைத்தவிர வேறு எதைச்சொன்னாலுங் கேட்கிறேன். இச்சண்டையில்நான் தோற்றுப்போனால் எனக்கு ஒரு பெரிய அவமானமல்ல நான் இறந்தாலும் ஒரு பெரிய நஷ்டமல்ல. நான் இறப்பின் என்னிடத்திற்கு லோகத்துக்கு நன்மைசெய்யக்கூடிய வேறு யாராவது வரலாம்" என்று சொல்லிக்கொண்டு சண்டைக்குத் தயாராயினான்.

கடைசியில் ஆரம்பித்த முஷ்டியுத்தஞ் செய்கையில் ரோஸலிண்டு தன்னைப்போல் அவனும் அனாதியானவனென்று பரிதபித்து அவன்மேல்காதல் கொண்டாள். முடிவில் இச்சிறுவன் தன் எதிரியை நன்றாய்த் தோற்கடித்து அவனைப் பேசக்கூடச் சக்தியில்லாதவனா யடித்துவிட்டான்.

யுத்தம் முடிந்தவுடன் பிரடரிக் அச்சிறுவனது பராக்கிரமத்தைப்பற்றி சந்தோஷித்து அவனைக்கூப்பிட்டு அவனது பேர் ஊர் முதலியவற்றை விசாரித்தளவில் அச்சிறுவன் தன்பேர் ஆர்லேண்டோ (Orlando) என்றும், தான் ஸர் ரோலேண்ட் டி பாய் (Sir Rowland de Boys) என்பவனது கடைசியான புத்திரனென்றுஞ் சொன்னான்.

இந்த ஆர்லேண்டோவின் தகப்பனாகிய ஸர் ரோலேண்ட் டி பாய் இறந்துபோய்ச் சிலகாலமாயிற்று. ஆனால் அவன் இருக்கும்பொழுது, இத்துரத்தப்பட்ட அரசனது முக்கிய சிநேகிதன். ஆகையினால் ஆர்லேண்டோ என்பவன் தன் தமயனது சிநேகிதனுடைய புத்திரனென்று பிரடரிக் கேள்விப்பட்டவுடனே, அவன் மேலிருந்த பிரியமெல்லாம் அருவருப்பாக மாற, "இவன் வேறு எவனது குமாரனாகவாவது இருக்கக்கூடாதா" என்று சொல்லிக்கொண்டு அவ்விடம் விட்டுச் சென்றான்.

சண்டையில் கெலித்த அச்சிறுவன் தன் தகப்பனது நண்பனுடைய குமாரனென்று ரோஸலிண்டுக்குத் தெரிந்தவுடனே, மிக்க சந்தோஷப்பட்டு, அதை ஸீலியாவுக்குத் தெரிவிக்கவே, இருவரும் அவனிடஞ் சென்றார்கள். அக்கொடிய அரசனால் அகௌரவப்படுத்தப்பட்ட அவ்விளையனைப் பார்த்து அவனுக்கு இனிய வார்த்தைகளைச்சொல்லித் திரும்புகையில், ரோஸலிண்டு, தன் கழுத்திலிருந்த ஒரு தாவடத்தை யெடுத்து "என் நினைவிற்காக, நீ இதைப்போட்டுக்கொள். இப்பொழுது என் காலம் சரியாயில்லை. இல்லாவிடின் இதைவிட மிக்க விலையுயர்ந்த வெகுமதி கொடுப்பேன்" என்று சொல்லி யதை யவனுக்குக் கொடுத்தாள். அக்கொடிய அரசன் ஸர்ரோலேண்டு டி பாயின் குமாரனைப் பார்த்தவுடன், நாட்டைவிட்டுத் துரத்தப்பட்டும் தன் தமயனுக்கு அநேக செல்வவான்களாகிய சிநேகிதர்கள், இருப்பதும் ரோஸலி



ண்டை ஜனங்கள், அவளது நற்குணங்களுக்காகப் புகழ்வதும், தகப்பனையிழந்ததற்காக அவள் மேல் பரிதபிப்பதும், தன் நினைவுக்கு வந்தவுடன், ரோஸலிண்டின் மேல் மிக்க அகங்காரங்கொண்டு, அவளும் ஸீலியாவும் பேசிக்கொண்டிருக்கும் அறைக்குள் திடீரென்று வந்து, ரோஸலிண்டைத் தட்சணமே, அரண்மனையை விட்டுத் தன் தகப்பன் இருக்கும் காட்டுக்குப்போக வேண்டுமென்று கட்டளையிட்டான். இதைக்கேட்ட ஸீலியா "இத்தனை நாள் நான் அவளோடு ஒரேயிடத்தில் படுத்து, ஒரேயிடத்தில் வாசித்து, விளையாடிப் புசித்து, இப்பொழுது அவளை விட்டுப் பிரிந்திருப்பது அசாத்தியம்" என்று தன் தகப்பனோடு வாதாட, அதற்கு அவன் "அவள் சங்கதி உனக்குத் தெரியாது. அவளது நன்னடக்கையையும், சாந்தகுணத்தையும், பொருமையையும் பார்த்து ஜனங்கள் அவள் மேல் பரிதாபப்படுகிறார்கள். அவளுக்காக வாதாடுவது மிக்க முட்டாள் தனம். அவள் போய்விட்டால் நீ நல்லபேர் எடுப்பாய். ஆகையினால் நீ அவள் பக்கம் ஒன்றும் பேசாதே. என் கட்டளையை நான் மாற்றப்போவதில்லை" என்றான்.

ஸீலியா, ரோஸலிண்டைத் தன் தகப்பன் தன்னிடம் இருக்கச்செய்ய மாட்டானென்று அறிந்தவுடன், அவளுடன் தானும் அந்த ராத்திரியே ஒருவருக்குந் தெரியாமற் புறப்பட்டு, இருவரும் அவ்வெளிய அரசனிருக்கும் ஆர்டேன் காட்டைத் தேடிக்கொண்டு சென்றார்கள்.

ஆனால் புறப்படுவதற்குமுன் இவர்களுக்கு ஓர் சந்தேகம் தோன்றிற்று. இளம்பருவத்திலுள்ள இரண்டு பெண்கள் உயர்ந்த ஆடையாபரணங்களை யுடுத்துக்கொண்டுத் தனியாகப்போவது சந்தேகத்துக்கு இடமாகுமென்று பயந்து, அவர்களில் உயரமாயிருக்கும் ரோஸலிண்டு ஒரு நாட்டுப்புறத்தான் போலும், ஸீலியா அவன் தங்கையாகிய ஒரு பட்டிக்காட்டுப் பெண்போலவும் வேஷம் பூண்டும், கனிமீட் (Ganymede) அலீனா (Aliena) என்று முறையே பேர்வைத்துக்கொண்டும், புறப்பட்டார்கள். ஆர்டேன் என்னும் வனம் வெகுதூரம் இருப்பதால், இவர்கள் தங்களுடைய நகை யுடைகளை விற்றுப் பணமாகச்செய்து வழிச்சிலவுக்கு வைத்துக்கொண்டார்கள்.

கடைசியில் ஆர்டேன் வனத்திற்கு வந்து, உள்ளே வெகுதூரம் போயினும், அவ்வரசன் இருக்குமிடந் தெரியவில்லை. இவர்களுக்கு ஊண் உரக்கம் இல்லாததினால் மிக்க களைத்துப்போயினார்கள். ஆயினும் ரோஸலிண்டு, தான் ஆண்வேஷம் பூண்டு அப்படி அதைரியப்படுவது சரியல்லவென்று எண்ணி, அலீனாவுக்குத் தைரியஞ் சொல்லிக்கொண்டு இருவரும் ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தார்கள். இப்படிப் பசியினால் காதடைத்து, ஒருவரையுங் காணாமல் களைப்பினால் மிக்க வருந்திக்கொண்டிருக்கையில் யதேச்சையாய் ஒரு பட்டிக்காட்டான் அந்த வழியாகப் போய்க்கொண்டிருந்தான். அவனைப்பார்த்துக் கனிமீட் தைரியஞ் செய்துகொண்டு "அப்பா, இடையனே, இங்கே எங்கேயாவது, தர்மத்துக்காவது, காசுக்காவது கொஞ்சம் அன்னம் போடுவார்

களா? தயவுசெய்து அவ்விடத்திற்கு வழிகாட்டுகிறாயா? என் தங்கை வெகு தூரம் வழிநடந்து, களைத்துப்போய்ப் பசியினால் தவிக்கிறாள்" என்றான்.

அதற்கு அவன், தான் அவ்விடமிருக்கும் ஓர் இடையனது வேலைக்காரனென்றும், அவ்விடையன் தன் வீட்டை விற்கப்போகிறானென்றும், ஆனால் இவர்கள் தன்னோடு அங்கே வந்தால் கொஞ்சம் உணவு அகப்படுமென்றுஞ் சொல்ல, இவர்கள் எழுந்து அவனுடன் சென்றார்கள். போனவுடன் அவ்வீட்டையும், அங்கிருந்த ஆடுகளையும் இவர்கள் விலைக்கு வாங்கி, தங்களை யழைத்துக்கொண்டு போனவனை அங்கேயே வேலைக்காரனாக வைத்துக்கொண்டார்கள். இப்படிப் பதார்த்தங்களோடு கூடிய ஒரு குடிசையைச் சம்பாதித்தவுடன் அவர்கள் அக்காட்டின் எந்த பாகத்தில் இருக்கிறார்களென்று தங்களுக்குத் தெரியும் வரையில் அங்கேயே யிருக்கத் தீர்மானித்தார்கள்.

இவர்கள் தங்கள் பிரயாணத்தின் களைப்பு நன்றாய்த் தீர்ந்த பிறகு, தாங்களிருக்கும் வாஸஸ்தானத்தின் மேல் வரவர அபிமானமுண்டாயிற்று. அவர்கள் வாஸ்தவத்தில் ஒரு இடையன் இடைச்சிபோலவே இருந்து வந்தார்கள். ஆனால் சில சமயத்தில் கனிமீடுக்குத் தான் முன்னே ரோஸலிண்டாக விருந்து, ஸர் ரோலேண்டின் குமாரனாகிய ஆர்லாண்டோவின் மேல் அன்புவைத்த விஷயம் அடிக்கடி நினைவுக்கு வந்தது. தான் அக்காட்டுக்கு வந்த அவ்வளவு தூரத்துக்கு அப்பால் ஆர்லாண்ட் இருக்கிறானென்று கனிமீட் நினைத்து விசாரப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும், பிறகு உண்மையாகவே, ஆர்லாண்டும் அக்காட்டிலேயே இருக்கிறானென்று தெரிய வந்தது.

(இன்னும் வரும்.)

E. சுப்பிரமணியம் பி. ஏ.

# இராமாயணசார வினாவிடை.

## 4-வது கிஷ்கிந்தாகாண்டம்.

1. வினா:—இருசிய மூகபர்வதம் எங்கே இருக்கிறது?

விடை:—பம்பை எனும் ஓடைக்குப் பக்கத்திலிருக்கின்றது. அங்கே தான் இராமனிருந்தான்.

2. வினா:—சுக்கிரீவன் என்பவன் யார்?

விடை:—சுக்கிரீவன் சூரியனுக்குக் குமாரன்; வாலியின் தம்பி; சுக்கிரீவனை கிஷ்கிந்தை நாட்டிலிருந்து, வாலி துரத்திவிட்டதுமன்றி, அவன் பாரியைய "ருமை" என்பவளையும் கைப்பற்றிக்கொண்டான். பின்னும் ஏதாவது



சங்கடம் நேருமென்றெண்ணிச் சுக்கிரீவன் இருசியமூக பருவதத்தில் போய் வசித்துக்கொண்டிருந்தான்.

3. வினா:—வாலி இருசியமூக பருவதத்திற்கு ஏன் போகாதிருந்தான்?

விடை:—வாலி அங்கே போகக்கூடாது. மதங்கருஷி வாலியை அந்த மலைக்குப் போகக்கூடாதென்று சாபம் செய்திருக்கிறார்.

4. வினா:—அப்படி சாபமிட்டதற்குக் காரணம் என்ன?

விடை:—எருமை வடிவுகொண்ட துந்துபி என்னும் ஒரு ராக்ஷஸன் வாலியோடு போர்செய்தான். வாலி அவனைக்கொன்று அவன் சரீரத்தை எடுத்துக் கையாற் சுழற்றி தூர எறிந்தான். அந்த உடல் மதங்கருஷியின் ஆச்சிரமத்தில்போய் விழவே அங்கெல்லாம் ரத்தக்காடாய்விட்டது. மதங்கருஷி தனது ஞானக்கண்ணால் இப்படிச் செய்தவன் வாலி என்பதையறிந்து தனது ஆச்சிரம மிருக்கும் இருசியமூக பருவதத்திற்கு வாலி வருவானாயின் அவன்தலை ஆயிரம் சுக்கலாய்ப் போகத்தக்கதென்று சாபமிட்டார்.

5. வினா:—கபந்தன் என்பவன்யார்?

விடை:—கபந்தன் ஒரு ராக்ஷஸன். அவனுக்குத் தலை வெளியே தெரிகிறதில்லை; முகமும் பல்லும் வயிற்றிற்குள்ளாகவே யிருக்கும். மார்பிலே ஒரு கண்ணிருக்கும். இராம இலக்குமணர்கள் இருசியமூக பருவதத்திற்குப் போய்க் கொண்டிருக்கையில் அவர்களை இவன் வழிவிடாமல் தடுத்தான். அப்பொழுது அவர்கள் கபந்தனைக் கொன்றுவிட்டார்கள்.

6. வினா:—இருசியமூக பருவதத்திலிருந்த சுக்கிரீபன் இராமனைப் போய்ப் பார்த்தானா? அவர்களுக்குள் ஏதாவது சம்பாஷணை நடந்ததா?

விடை:—இராம லக்ஷ்மணர்களை வாலி தான் அனுப்பியிருக்கிறானென்று சுக்கிரீவன் சந்தேகித்து உண்மையறிந்து வரும்படி வாயு புத்திரனான அனுமானை முதலில் அனுப்பினான். பிறகு அனுமான் இராமனை அழைத்து வரவே சுக்கிரீவன் இராமனைக்கண்டு ஒரு ராக்ஷஸன் ஆகாயவழியாய் சீதையைக் கொண்டுபோகையில் துணியில் சில நகைகள் முடிந்து கீழேபோடப்பட்டனவென்று அறிவித்து அந்த நகை முடிச்சை இராமனிடஞ் சேர்ப்பித்தான். இராமன் அந்நகைகளைப்பார்த்து மிக மனம் வருந்தினான். வாலியைக்கொன்று சுக்கிரீவனுக்குக் கிஷ்கிந்தா பட்டாபிஷேகம் செய்விப்பதாய் அப்பொழுது இராமன் வாக்குத்தத்தம் செய்தார். சுக்கிரீவனும் சீதையைத் தேடத் தன்னாலாகும் சகாயம் செய்வதாக இராமனிடம் ஒப்புக்கொண்டான். இராம சுக்கிரீபர்களிருவரும் அக்கினி ஸாக்ஷியாகச் சிநேகம் செய்து கொண்டார்கள்.

7. வினா:—பிறகு வாலி சுக்கிரீவர்களுக்குள் ஏதாவது யுத்தம் நடந்ததா?

விடை:—ஆம். அவர்களுக்குள் இரண்டுதடவை யுத்தம் நடந்தது.

8. வினா:—இரண்டாம் யுத்தத்தில் நடந்த விசேஷம் என்ன?

விடை:—யுத்தத்தில் வாலி இன்னான் சுக்கிரீபன் இன்னான் என்று பகுத்தறிய சுக்கிரீபன் கழுத்தில் ஒரு மாலை போடப்பட்டது.

9. வினா:—பிறகு இராமன் என்ன செய்தார்?

விடை:—இரண்டாந்தடவை யுத்தம் நடந்தபோது கழுத்திலிருந்த மாலையைப் பார்த்துச் சுக்கிரீபனை அடையாளம் பார்த்துக்கொண்டு இராமன் மறைந்துநின்று யுத்தஞ்செய்து வாலியைக்கொன்றார்.

10. வினா:—இராமன் ஏன் மறைந்துநின்று வாலியைக் கொன்றார்?

விடை:—எதிர்நின்றால் வாலிக்கு இராமன் பலத்தில் பாதிசேரும் என்கிற வரத்தினாலும் தான் சுக்கிரீபனுக்கு முன்பே வாக்குத்தத்தம் செய்திருப்பதால் வாலியும் நேரில் தன்னைச் சரணமடைய இடம் நேரிடக்கூடாதென்றும் இராமன் அப்படி மறைந்துநின்று பாணம் போட்டார்.

11. வினா:—வாலி வதம் செய்தவுடன் என்ன நடந்தது?

விடை:—வாலியின் பாரியை தாரை யென்பவள் துயர்க்கடலிலாழ்ந்து புலம்பினாள்.

12. வினா:—இராமன் சுக்கிரீவனுக்குக் கொடுத்தவாக்குத் தத்தம் நிறைவேறியதா?

விடை:—வாக்குத்தத்தத்தின் படியே இராமன் சுக்கிரீவனுக்கு கிஷ்கிந்தா பட்டாபிஷேகம் செய்வித்தார்.

13. வினா:—இராச்சியத்தைப் பெற்றுக்கொண்ட சுக்கிரீபன் சீதையைத்தேடும் விஷயத்தில் எனன் உதவி செய்தான்?

விடை:—அவன் வானரசேனைகளைத் திரட்டி சீதையைத் திக்கெங்கும் போய்த் தேடிவரும்படி கட்டளையிட்டான்.

14. வினா:—இராமன் அப்பொழுது எங்கே இருந்தான்?

விடை:—இராமன் பிரசவணகிரியில் இருந்தார்.

15. வினா:—தெற்குத்திக்கை நோக்கிச்சென்ற வானர சேனைகளின் அதிபர்கள் யார்யார்?

விடை:—வாலிபுத்திரன் அங்கதனும் அவனுக்குதவியாகி அனுமானும் ஜாம்பவானும் தெற்குதிக்கிற் போன சேனாபதிகள்.

16. வினா:—இந்த அதிபர்கள் எங்கேபோய்ச் சேர்ந்தார்கள்?

விடை:—மகேந்திரகிரியின் உச்சியிற் கூடினார்கள்.

தி. வேங்கடராமஐயங்கார்.
தமிழ்ப்பண்டிதர்.



# நக்ஷத்திரங்கள் ஜீவராசிகளின் வாசஸ்தலங்களா?

வானசாஸ்திரக் கேள்விகளுள் இது ஒரு பிரதான கேள்வியேயாயினும் வானப்பொருள்களின் பரிமாணம், தூரம், பெயர்ச்சி, சேர்க்கை, மூலம் முதலியவற்றைப் பற்றிய கேள்விகளுக்கு ஒப்பிடில் இது அற்பமும், சாரமுமில்லாததாகவே பெரும்பாலார் கருதுவர். நக்ஷத்திரங்கள் எவ்வளவு பெரியனவாயிருந்தாலென்ன? அகண்டவானத்தில் எவ்வளவுதூரம் எவ்வாறு சுழன்றாலென்ன? அவைகள் எங்கிருந்து வந்திருந்தாலென்ன? எவ்விடத்துக்குப் போய்க்கொண்டிருந்தாலென்ன? ஒருவிதத்தில், இத்தகைய கேள்விகள் மானிடராகிய நமக்கு என்ன பயனைத் தரப்போகின்றன? என்பன ஆசங்கைகள் உண்டாவது சகஜமே.

மேற்கூறிய கேள்விகளுக்கெல்லாம் பதிலளிப்போமாகில் சில கணக்கு விஷயங்களே நமக்குக் கிடைக்கும். சூரியன் ஒருமைல் தூரத்திலிருக்கிறதாகத் தீர்மானித்துவிட்டால், அக்கேள்வி அத்துடன் முடிகிறது. அது விசாலமான ஆகாயத்தில் எவ்வழியாய் சுழல்கிறதென்பதையும் காட்டிவிட்டால் இக்கேள்வியும் முடிகிறது. ஜடதத்வக் கருவிச்சாலையில் சூரியனுடைய ஒளியின் வினாடி, சுற்றளவு முதலியவற்றை சில துணைக்கருவிகளைக்கொண்டு நிர்ணயித்துவிடலாம். இவைகள் நிலக்கரியை நிறுப்பதும், கலப்பதும், பரிசோதிப்பதும் நமக்கு எவ்வளவு ரசமாயிருக்குமோ அவ்வளவு ரசமாயிருக்கும்.

நாளை யாராவது ஒரு வானசாஸ்திரி அங்காரகன் அல்லது செவ்வாயில் மனிதர்களிருக்கிறார்களென்றும், அவர்களுடன் நாம் நம் அபிப்பிராயங்களை வெளியிட்டு அவர்களின் அபிப்பிராயங்களை அறிய இடமுண்டென்று வெளியிட்டால், இதைக்கேட்ட இவ்வுலகத்தோரெல்லோரின் சந்தோஷத்தையும் ஆவலையும் அளவிடலரிதன்றோ? நம்முள் ஒருவரும் பின்வரும் விஷயங்களை அறிய அவாக்கொள்வர். அவர்கள் யார்? அவர்கள் என்ன? நம்போன்ற ஜீவராசிகளா? நேசித்தலும், பகைத்தலும், ஆசீர்வதித்தலும், சாபமிடுதலும் நம்புதலும் நம்பாதிருத்தலும் ஆய் நம்போலிருக்கின்றார்களா? மேலும் சிலர் சன்மார்க்கர்களாயும், மற்றையர் துன்மார்க்கர்களாயும், சிறுபாலர் புத்திசாலிகளாயும், பெரும்பாலர் மடையர்களாயும், சிலர் ஆஸ்திவந்தராயும், சிலர் வறியராயும் அவர்களுள்ளும் இருக்கிறார்களா? பாபமும், பாபத்திற்காக வருந்துதலும், நோயும், இறத்தொழிதலும் அங்காரக உலகத்திலும் நம்முலகத்திலிருப்பதுபோலுண்டா? எங்குபார்த்தாலும் கோவில்களிலும், கடைகளிலும், தெருமூலைகளிலும், ஓட்டல்களிலும், ரயில்வண்டிகளிலும், ஜனங்கள் இவ்விஷயத்தைப்பற்றி விசாரிப்பது பெருங்குழப்பமா யிருக்குமென்றே இவ்விஷயத்தைப்பற்றி தத்வசாஸ்திரி, வண்டியோட்டி பணியாரம் விற்

போன் யார் தான் ஒருவிஷயம் சொல்லக்கூடாமலிருப்பார்கள்? என்ன! நம் உலகத்தாரை செவ்வாயில் உலகம் இருப்பதுண்மையானால் மிகவும் பாதிக்கும். அவர்கள் கொள்கைகளும், நடவடிக்கைகளும், மாதிரிகளும், நாம் கொள்ளற் கூடியனவா யிருப்பினும் வெகுநாளாய் நாம் அநுசரித்துவந்தவைகளெல்லாம் அடியோடு கைசோரவிடப்பட்டு, எண்ணிறந்த மாறுதல்கள் புதியன புகும். நம்முலகத்தைத் தவிர வேறு உலகங்கள் கண்டுபிடிக்கப்படுவதில் அநேக இடைஞ்சல்கள் நமக்குண்டு. உலகத்தாரின் மனதைக் கலவரப்படுத்த, வேறு உலகம் கண்டு பிடிக்கப்படுவதைப்போல ஒன்றுமில்லை. சமீபத்தில் நம்பூமிக்கு சம்பந்தமில்லாத நக்ஷத்திரங்கள் போன்ற உலகங்களில் நம்போல் ஜனங்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்படாவிட்டாலும், வெகு நாளைக்குப்பின் உண்டாகலாமென்பதுகூட மனதைக் கலவரப்படுத்துகிறது. இத்தகைய ஆழ்ந்தகருத்துள்ள கேள்விக்கு ஒருவித சமாதான மறுமொழி கூறல் மனிதராசைக்குள்ளடங்கும். ஆயினும் "இரவில் ஆகாயத்தில் நாம் கண்ணுறும் ஒரு கிரகத்திலெனிலாவது, உபக்கிரகத்திலாவது, நக்ஷத்திரத்திலாவது சீர்திருத்தப்பட்டவோ, அல்லது, ஆரம்பமானவோ ஜீவராசிகள் இருப்பதாக கொஞ்சம்கூட அத்தாட்சியில்லையாதலால் இதைப்பற்றி விசாரியாமலே இவ்விஷயத்தைத் தள்ளிவிடலாம். அப்படி ஆராயப்புகுவது காலவிரயமேயன்றி பிறிதன்று. இவ்விஷயத்தை ஆராயத்தகுந்த கருவிகளுமில்லை. நம் மனமும் அவ்வளவு விசாலமாயில்லை." இதைவிட சந்திரனின் நம் கண்ணுக்கு மறைந்திருக்கும் புறம் எவ்வாறிருக்கிறதென்பதைப்பற்றி நம் மனதை கலவரப்படுத்திக்கொண்டிருக்கலாம். பிரகிருதி மனிதன் அறியக்கூடாதென்று அரிய விஷயங்கள் பலவற்றை தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது. இத்தகையனவற்றை நாம் சிக்கெடுக்க முயல்வது வீண்" என்று பலர் பலவிதமாக நியாயம் கூறுநிற்பர்.

இவ்வகண்ட பிரபஞ்சத்தில், சூரியனைச் சுற்றி அநேக கிரகங்களிருப்பதுபோல ஒவ்வொரு கிரகத்துக்கும் உபகிரகங்கள் இருத்தல் கூடுமென்றும் அத்தகைய கிரகங்களில் ஜீவவர்க்கங்களும், செடிகொடி முதலிய விருக்ஷவகைகளு மிருப்பதாகக் கருதுவதும் பிரகிருதியைப்பற்றி உண்மையாய் நினைப்பது மேன்மையானது. இப்படி எண்ணுபவர்களுக்கு அகண்டசூரியன் தன் சுற்றிலுமுள்ள இடங்களில் உபயோகமின்றி தன்னொளியையும், உஷ்ணத்தையும், சக்தியையும் பிரகாசித்தளிப்பதானது நியாயமாகத் தோற்றவில்லை. ஆதலால் அநேக சூரியர்கள் நம் பூமிபோன்ற அநேக கிரகங்களில் பிரகாசித்து வருகின்றனவென்றும், அவைகளிலெல்லாம் நம்முலகத்திலிருப்பதுபோல் மனிதர்கள் பிறவி இறப்புத்துன்பங்களுடைய வர்களாகிறார்களென்று தோன்றுகிறது. இத்தகைய எண்ணமானது பல உலகங்களை கற்பிப்பதுடன் அவ்வுலகங்களிலெல்லாம் ஜீவராசிகளையும் கற்பிக்கிறது. நாம் ஏன், ஜலவாயு, ஆகாயம், இருப்புபோன்றவைகளை இருப்பதாகக் கருதி, கடவுள் சிருஷ்டியிற சிறந்தவனான மனிதனை மறந்துவிடவேண்டும்.? இப்படியும் சிலர் நியாயம் கூறுகிறார்கள்.



இவ்விஷயங்களை நன்றாய் சீர்தூக்கிப்பார்த்து நமக்குள் ஒரு தீர்மானத்துக்கு வரலாம். நக்ஷத்திரங்களில் ஜீவராசிகளிருக்கின்றனவா? இக்கேள்வி உடனே 4 விஷயங்களை மனதுக்குக் கொண்டுவருகிறது. (1) பூமியின்கவர்ச்சி, (2) கனம், (3) சீதோஷ்ணம், (4) ஆகாயம், பூமியின்கவர்ச்சி சக்திக்கு அடங்கினவர்கள் எந்த நக்ஷத்திரனும் இருப்பது அசாத்தியம். ஏனெனில் இச்சக்தி எப்பொருளையும் பூமிமையத்திற்கு எவ்வளவு சமீபத்தில் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சமீபத்தில் கொண்டுவர முயன்றுகொண்டேயிருக்கும். உதாரணமாக ஒரு மலையினுச்சியில் ஒரு பெருங்கல்லிருந்து, அது ஏதோ காரணத்தால் இடம்பெயர்ந்தால் தடங்கல் ஏதாவது இருக்கிறவரையில் அது உருண்டுகொண்டே வருகிறது இச்சக்தியால்தான்.

சூரிய உலகத்தில் சாதாரண மனிதன் 4,500 இராத்தலுக்கு மேலேயே நிறையுள்ளவனாயிருப்பான். அவன் உடைகளே 112 இராத்தல் பாரமுள்ளனவாயிருக்கும். நமக்குத் தெரிந்தவைகளுள் சூரியன் தான் மிகப் பெரிய நக்ஷத்திரமல்ல. கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் சிலவற்றோடு இதை ஒப்பிடில் இது சிறியநக்ஷத்திரம். ஒளியுள்ளனவும் ஒளியில்லாதனவுமாகிய சிலநக்ஷத்திரங்கள், சூரியக்கிரகத்தில் ஒருமனிதன் எவ்வளவு பாரமுள்ளவனா யிருப்பானென்றோமோ அதைவிட 50-மடங்கு பாரமுள்ளதாயிருக்கும். ஆதலால் நம்போல் தேக அவயவங்கள் ஏற்பட்ட மனிதர்கள்மேற்கூறிய தொத்து கிரகங்களிலும் நக்ஷத்திரங்களிலும் இருக்க ஏலாது. நுட்பமாய் அமைந்திருக்கும் நம் தேகம் அக்கிரகங்களிலுள்ள உஷ்ணத்தை தாங்கமுடியாதனவாய் சிதறிப்போய்விடும்.

**M. V.**

# தேங்காய்ப் பதார்த்த பாகசாஸ்திரம்.

இப்பெயர்கொண்ட புத்தகம் மிஸ். C. அலிசன் அம்மாளவர்களால் இயற்றப்பட்டது கிடைக்கப்பெற்றோம். தேங்காய் நமக்குத் தெரியாதவஸ்துவல்ல. ஆனாலும் அதை உபயோகப்படுத்தவேண்டிய மாதிரியும் அப்படி உபயோகப்படுத்துவதால் உண்டாகும் பிரயோசனமும் இதுவரை ஊன்றி யறியப்பட்டதில்லை. மேல்தேசங்களில் தேங்காயின் குணங்களை யறிந்தவர்கள் மிகச்சொற்பம். ஆகையால் அலிசன் மாதவர்கள் இவ்வகையானபுத்தகம் எழுத முன்வந்தது நிரம்பவும் புகழத்தக்கது. தேங்காய் மனித சரீரத்திற்கு முக்கியமான பதார்த்தங்களெல்லாம் சேர்ந்த ஒரு வெகுநல்லவஸ்து. அதைக் கிரமமானவழியில் உபயோகித்தால் மாமிஸதாரிகளாக இருப்பவர்களும் தங்கள் மாமிஸ உணவை வெகு சுளுவில் விட்டுவிடலாமென்று சொல்லுகிறார். தேங்காயை உபயோகிக்கும் வழிதெரியாமல் கண்டபடி உபயோகித்தால் அது அஜீரணத்துக்கும், பித்தத்துக்கும் காய்ச்சலுக்கும் காரணமாகும். ஆகையால் தேங்காயை உபயோகித்து அதனால் கிடைத்தற்குரிய பெரும்பயனை அடைய விரும்புபவர்கள் அதை உபயோகிக்கும் மாதிரியில் வெகு ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். இதற்கு மற்றவர்களுக்கு உபகாரமாக இருக்

கும்பொருட்டுத் தான் இவ்விஷயத்தை நன்றாக ஊன்றி ஆராய்ந்து இருக்கும் மிஸ் அலிஸன் மாது இப்புத்தகத்தை எழுதியிருப்பது. தேங்காயைத் திருகி அத்திருகலையாவது தேங்காய்த்தண்ணீரையாவது தேங்காய்ப்பாலையாவது தேங்காயெண்ணெயையாவது பதார்த்தங்கள் செய்வதில் உபயோகப்படுத்தலாம். ஆகையால் முதலில் இவைகளைத் தயார்செய்யும் வழி இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது. அதன்பின், கரி சாம்பார், கூட்டு வகைரா செய்யும் மாதிரி கூறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளவற்றின் பெரும்பான்மை நமக்குப் பழக்கமில்லாதன. இருந்தாலும் சில வெகு நல்ல பதார்த்தங்கள் செய்யும் முறைமை எழுதப்பட்டிருக்கிறது. சீக்கிரத்தில் நமக்குப் பழக்கமுள்ள பதார்த்தங்கள் செய்யும் முறைமையும் எழுதி வேறொரு புத்தகம் வெளியிடுவதாக அம்மாளவர்கள் எழுதியிருக்கிறார்கள். அது சீக்கிரம் வெளிவருமென்று எதிர்பார்க்கிறோம். புத்தகம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்துப்பெண்களுக்கு இப்போது அதிகமாகப் பயன்படத்தக்க மாதிரியில் இல்லை. இதை உத்தேசித்து அம்மாளவர்கள் நம் மாதர்மனோரஞ்சினியில் அப்புத்தகத்தை மொழிபெயர்த்து அப்போதைக்கப்போது வெளிப்படுத்தலாமென்று தயைகூர்ந்து அளித்த உத்தரவிற்கு நாம் அம்மாளவர்களுக்கு மிக நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இம்மாதம் முதல் நம் மாதர்மனோரஞ்சினியில் தேங்காய்ப் பதார்த்தங்கள் செய்யும் முறைமை நமக்குப் பிரயோசனப்படத் தக்கவை ஒன்றிரண்டாக வெளிப்படுத்தப்படும்.

## 1. உருளைக்கிழங்குக் குழம்பு.

நாலு பெரிய உருளைக்கிழங்குகளை எடுத்து மேல் தோலை உரித்துவிட்டு அலம்பி அதைச் சிறியலேசும் உருண்டையுமான துண்டுகளாக நறுக்கி கொதிக்கிற ஜலத்தில் போடவேண்டும். அதோடு 4 கிராம்பும், இரண்டு கரண்டி சிறுதுண்டு வெங்காயங்களும் சேர்த்துவிட்டு பாத்திரத்தை நன்றாகமூடிவிடவேண்டியது. நன்றாக வெந்தபிறகு (ஆனால் அதைக் கரையவிடக்கூடாது) கிராம்பை எடுத்துவிட்டு கால்ஆழாக்குத் தேங்காய்பாலையும், 1½-ரூபாயிடை உப்பையும் சேர்க்கவேண்டியது. கொதிவரும்போது ஒரு தேகரண்டி அரிசி மாவையும் ஜலத்தோடு சேர்த்து குழம்பு ஆகும்வரை கிளறிக்கொண்டிருக்கவேண்டும் கெட்டியாக இருந்தால் தேங்காய்பாலாவது ஜலமாவது சேர்க்கவேண்டும். இது பக்குவமானவுடன் இதைச் சாப்பிடவேண்டும். தேங்காய் எண்ணெய் விட்டுவிட்டால் கெட்டுப்போகும்.

## 2. தேங்காய்ச் சாதம்.

அரை ஆழாக்கு அரிசியைக்கழுவி உலையில் போட்டு குழையாமல் வேகவைக்கவும் வேறொரு பாத்திரத்தில் ½ ஆழாக்கு நல்லதேங்காய்ப்பாலை விட்டு கொதிவரும் வரைக் காய்ச்சி அதோடு ஒரு சிறுகரண்டி காரன்பிளோர் ஜலத்தோடு சேர்த்துவிட்டுக் கொஞ்சநேரம் காய்ச்சிப் பிறகு 2,3, ஜாதிக்காய் சிறுதுண்டுகளாக நறுக்கினதையும், 1½-ரூபாயிடை உப்பையும் அதோடுசேர்த்து எல்லாவற்றையும் வெந்த அரிசியில் கொட்டிவிடவேண்டும். இச்சாதம் இராப்போசனத்துக்கு மிகநல்லது.



## பத்திராதிபர் குறிப்பு.

*மிஸ்ஸஸ் காசிபாய் தேவதார்.

இம்மாது புனாவிலுள்ள இந்து கைம்பெண்கள் சாலையின் மேல்விசாரணை செய்பவர். இம்மது மைசூரிலுள்ள மகாராணியார் காலேஜியில் படித்து எப் ஏ பரிக்ஷையிற் றேறியவர். புனாவில் பெண்களுக்காக தனிமையாக காலேஜியில்லாமையால் இங்குவந்து படித்ததாகத் தெரிகிறது. இந்த காலேஜியில் விதந்துகள் நன்றாக போதிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் புனாவிலுள்ள கைம்பெண்கள் சாலையைப்போல் மைசூரிலில்லை. ஆயினும் விதந்துவாயுள்ள பெண்களும் விவாக இக் மான பெண்களும் இக்காலேஜியில் சேர்ந்து கல்விகற்று வருகிறார்கள். காலேஜியை விருத்திக்குக் கொண்டுவர வேண்டுமென்று மிக்க முயன்றவர் ராவுபஹாதூர் A. நரசிம்ம அய்யங்காரவர்கள். இவர் தமது வரும்படியையெல்லாம் பெண்கல்வி விருத்திக்காக மிக செலவு செய்ததுடன் இப்பொழுதும் செய்துவருகிறாராம். மைசூரில் பெண்கல்வியை விருத்திசெய்ய இப் புண்ணியவான் எவ்வளவோ சிரமப்பட்டதாகத் தெரிகிறது. இவராலன்றோ மைசூர் இப்பொழுது பெண்கல்வி விருத்தியில் விசேஷித்திருக்கிறதென்று யாவரும் மெச்சும்படியான ஸ்திதியிலிருக்கிறது'! ஆதலால் இவரை பெண் கல்விக்காக மிக ஊக்கத்துடன் உழைப்பவரென்று (Pioneer of Female education.) சொல்ல என்னத்தடை? ஆனதால் இம்மாதும் இந்தக் காலேஜியில் படித்துவந்தமையால் இம்மாதுக்கும் தமது சகோதரிகளுக்கு தம்மாலியன்ற உதவிபுரிய வேண்டுமென எண்ணத்துடன் ப்ரொபஸர் கார்வே அவர்கள் கைம்பெண் சாலையில் சேர்ந்து அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்துவருகிறார்கள். அச்சாலையை விருத்திசெய்வதற்காக இன்னும் திரவியம் சேகரிக்க சென்னைக்கு வந்திருக்கிறார்கள். இம்மாது சென்னையில்செய்த பிரசங்கம் மற்றோர்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அநேக விதந்துகள் மைசூரிலும் புனாவிலும் கற்றுவருகிறார்கள். இவர்கள் நாளாவர்த்தியில் பெண்கல்விக்கும் ஸ்திரீகளின் ஸ்திதியை உயர்த்தவும் உழைக்க உற்சாகத்துடனும் பிரியத்துடனும் அதிக அக்கரையுடனும் முன்வரலாம். திருஷ்டாந்தமாக இளம்பிராயமுள்ள காசிபாய் தேவதார் அம்மாள் புனாவைவிட்டு தமது சகோதரிகளுக்கு நன்மை செய்வதின் பொருட்டு சென்னைக்குத் தனிமையாக வந்ததே இம்மாதுவின் அபிமானத்தையும் விடாமுயற்சியையும் அவர்களின் மேலுள்ள பிரியத்தையும் விசுவாசத்தையும் காண்பிக்கின்றதல்லவா? இவ்விதமே கல்விகற்று வரும் மற்ற மாதர்களும் தங்கள் சகோதரிகளுக்கு நன்மைசெய்யும் பொருட்டு உழைக்க முன்வருவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இம்மாது எடுத்துக்கொண்ட காரியம் பூர்ணமாய் நிறைவேறும்படி நம் சென்னையிலுள்ள கனவான்கள் திரவிய சகாயம் செய்வார்களென்று நம்புகிறோம்.

* இம்மாதின் சகோதரியார் மகாராணி காலேஜியில் படித்துவருவதைக் கேட்க மிகச் சந்தோஷப்படுகிறோம்.

**லேடி கர்ஸன் தேக சௌக்கியம்.**

லேடி கர்ஸன் அசௌக்கியமாயிருந்த பொழுது ஜனங்கள் மிக வருந்தினார்கள். இப்பொழுது கொஞ்சம் சௌக்கியமடைந்து வருகிறதைப்பற்றி யாவரும் சந்தோஷப்படுகிறார்கள். இச்சிமாட்டி மருத்துவச்சிகளைப் பழக்கி இந்திய மாதர்களுக்கு தக்க உதவிசெய்ய ஏற்பாடுசெய்தார். இவ்வேற்பாடு முடிவுபெற்றால் மிக அநுகூலமாக விருக்குமென்றே சொல்லலாம். மேலும் இந்திய மாதர்களுடையவும் பெண்களுடையவும் விருத்தியை விரும்பிக்கொண்டே யிருக்கிறார்கள். ஆகையால் இம்மாது கூடிய சீக்கிரத்தில் தேக சௌக்கியத்தை பூராவாக யடைவதுடன் பலத்தையு மடைந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்துதமது முக்கிய கோரிக்கையை நிறைவேற்ற தேகசௌக்கியத்தையும், நமது மாதர்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்வதில் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தேகவலிவையும் தீர்க்க ஆயுளையும் ஈசன் அளிப்பாராக.

## சமாசாரக்குறிப்பு.

———o———

நமது எட்வர்ட் மகாராஜாவின் புத்திரிகளுக்கு நன்றாக நீந்தத்தெரியுமாம் அலக்ஸாண்டரா மகாராணியாருக்கும் அவர்கள் குழந்தைகளுக்கும் நன்றாக நீந்தத்தெரியும்.

***

மிஸ்பிக்கல் என்றமாது ஆஸ்திரேலியாவில் பெண்கள் காலேஜிகளில் படித்து உயர்ந்தகல்வியைப் பெறுகிறார்களென்றும் அங்கு 3-காலேஜிகள் பெண்களுக்காக விருக்கிறதென்றும் சொன்னதைக் கேட்க மிகச் சந்தோஷப்படுகிறோம். ஆனால் இந்தியாமாத்திரம் எப்பொழுது விருத்திக்கு வருமோ தெரியவில்லை!

***

இங்கிலீஷ்பாஷையில் இந்தியன் லேடிஸ்மாகஸின் என்ற பத்திரிகை மிகத்திறமையுள்ள மிஸ்ஸெஸ் சத்தியநாதன் என்ற மாது சிரோன்மணியால் நடத்தப்பெற்று வருகிறது. தெலுங்கில் இந்துசுந்தரி என்ற பத்திரிகை ஒரு இந்திய சீமாட்டியால் நடத்தப்பட்டு வருகின்றது. இப்போது எர்ணாகுளத்தில் I. B. கல்யாணிஅம்மாள், I. C. கல்யாணிஅம்மாள் I. அம்மாகுட்டிஅம்மாள் என்ற 3-மலையாளமாதர்கள் மாதாந்தப்பத்திரிகையொன்று டிசம்பர்மீ முதல் நடத்தப்போவதாகக் கேட்டு மகிழ்கிறோம்.

***

கொரியாவில் கைம்பெண்கள் மறுபடியும் விவாகம் செய்வதில்லையாம். எவ்வளவு சிறுவயதில் வைதவ்யமடைந்தாலும் ஆயுள்பரியந்தம் புருஷனில்லாமலே இருக்கவேண்டியவர்கள். ஹிந்து விதவைகளைப்போல சரீரத்தை அவலட்சணப்படுத்துகிறதும் வெள்ளையாடையே தரித்தலும் உண்டோ தெரியவில்லை. அனேகமாய் அந்த வழக்கமும் இருக்கலாம். கொரியாவில்



பௌத்தமதமே பிரபலமானதால் அந்த மதத்தின் கோட்பாட்டால் இந்த அநாகரிகமான வழக்க மேற்பட்டதென்று தோன்றுகிறது. இந்தியாவில் இந்த வழக்கமானது பௌத்த மதத்தில் சன்னியாசம் ஸ்திரீகளுக்கும் புருஷருக்கும் விசேஷமாகச் சொல்லப்பட்டதாலேயே ஏற்பட்டதென்று சில கல்விமான்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

***

இந்துமகாசமுத்திரத்திலுள்ள சிசேல்ஸ் என்னும் தீவிலிருந்து300 வயதுள்ள ஒரு ஆமையொன்றை, பாரீஸ் நகரத்துச் சாமானக செண்ட் லூயியின் பொருட்காட்சி சந்தைக்கு அனுப்பி இருக்கிறார்கள். இதன் நிறை 9701 பவுண்டு இருக்கிறதாம்.

***

(18-ந்தேதி) விஜயதசமியன்று மதுரையில் தியஸாபிகல் சபையுடன் சம்பந்தப்பட்டதாக ஓர் பெண் பாடசாலை ஸ்தாபனம் பெற்றது. தற்காலத்தில் அப்பள்ளிக்கூடம் தியஸாபிகல் ஹாலிலேயே நடைபெற்றுவரும். அப்போது கூடியசபைக்கு மதுரை நேடிவ் காலேஜ பிரின்ஸிபால் மிஸ்டர் வெங்கோபாசாரியார் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்தனர். மிஸ்டர் P. நாராயணய்யர் அப்பள்ளிக்கூடத்தின் நோக்கத்தைப்பற்றித் தமிழில் பிரசங்கித்தார். ரூபா 3500-வரை பள்ளிக்கூடத்திற்காக கையொப்பம் சேர்ந்திருப்பதுடன் சிலர் மாதாந்தப் பணம் செலுத்துவதாக சம்மதித்திருக்கின்றனர். மிஸ்டர் பிஷர் என்ற ஐரோப்பிய கனவான் ரூபா-1000 கையொப்பம் செய்திருப்பதும், மிஸஸ் ராஜம்மாள் விசுவநாதன், மிஸஸ் காமாக்ஷியம்மாள் என்ற இரண்டு சீமாட்டிகளும் பொருளுதவி யிருப்பதும் குறிப்பிடத்தக்கன.

***

தீவாந்தரங்களில் ஆடையின்றித் திரியும் காட்டு ஜனங்களுக்குள்ளே பச்சை குத்திக்கொள்ளும் வழக்கம் பிரதானமாக உண்டு. நமது ஹிந்துக்களுக்குள்ளேயும் அனேக ஸ்திரீகளும் சில புருஷர்களும் பச்சைகுத்திக்கொள்ளப் பார்த்திருக்கிறோம். ஆனால் தாங்கள் மிக்க நாகரிக முடையோரென்று பெருமை பாராட்டிக்கொள்ளும் ஆங்கிலேயருள்ளேயும் இவ்வழக்கம் ஒழிந்துவிடவில்லை. சிறிய பூச்சிகள்போலவும், வண்டுகள்போலவும் கையில் பச்சை குத்திக்கொள்ளும் ஆங்கிலேயர் பலருண்டு. ஒரு கவுண்டின் மனைவி தன்கையில் பெரிய பூச்செடியொன்று குத்திக்கொண்டிருக்கிறாள். ஒரு உயர்குலத்து ஆங்கிலேயமாது சிறகுடன்சேர்ந்த பாம்பொன்று குத்திக்கொண்டிருக்கிறாள். தனது வாலைத் தன் வாய்க்குள்ளே நுழைத்துக்கொண்டிருக்கும் ஒரு பாம்பு வடிவத்தை மிஸஸ் வெஸ்ட் என்றதோர் உயர்குடிமாது தனது இடுப்பைச்சுற்றிப் பச்சை குத்திக்கொண்டிருக்கின்றாள்.

***

நமது பத்திரிகைக்கு பெண்மணிகள் விடுகதைகள் எழுதி அனுப்பும்பொழுது தயவுசெய்து தங்கள் முழுவிலாசத்தையும், அவ்விடுகதைகளுக்கு விடைகளையும் எழுதி யனுப்புவார்களென்று நம்புகிறோம். ப - ர்.

## விசேஷ அறிவிப்பு.

புதிய வருஷம் பிறந்து 10 மாதங்கள் ஆய்விட்டன. இன்னும் நமது சந்தாதாரர்களில் சிலர் நாளது 1904-ம் வருஷத்திய சந்தா பாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். சந்தாவை முன்பணமாகவே அனுப்பவேண்டியிருக்க இன்னும் அனுப்பாமல் இருப்பதால் நமக்கு வீண் சிரமமும், நஷ்டமும் நேரிடுகின்றது. சந்தாவை சரியாய் அனுப்பினால் தானே நமது சஞ்சிகை கஷ்டமின்றி சரியாய் நடந்துவரும். இந்த சஞ்சிகை கிடைத்தவுடனாவது தயவுசெய்து பத்திரிகையையும் அபிமானித்து நடத்தி வருவீர்களென்று நம்புகிறோம். மேல்கண்டபடி சந்தா அனுப்பாதவர்களுக்கு அடுத்த டிஸம்பர் சஞ்சிகை. வி. பி. யில் அனுப்பப்படும். பெற்றுக்கொள்ளும்படியாய் கேட்டுக்கொள்கிறோம். அப்படிக்கு இஷ்டமில்லாதவர்கள் டிஸம்பர் 1-உக்குள் நமக்கு தெரியப்படுத்தவும். நமது சந்தாதாரர்கள் தகுந்த கனவான்களாதலால் இது ஓர் பெரிதல்ல. மேல் விலாசம் மாறும்பொழுது உடனே தெரியப்படுத்தவேண்டும். பத்திரிகை சேராவிட்டால் உடனே தெரியப்படுத்தவும்.

## THE TAMIL ZENANA MAGAZINE.

We gladly reproduce the following appreciative notice of the Magazine appearing in the current number of the *Indian Ladies' Magazine*:—

"This is a high class monthly magazine devoted to the cause of female education in Southern India. It was started some five years ago and has been all along doing excellent educative work in Indian homes. Conducted in Tamil—the chief vernacular of South India—it appeals to a very numerous class of our women. Its remarkable cheapness—the annual subscription is Rs. 1-12-0 with thin and Rs. 2-8-0 with thick paper—is calculated to place it within the easy reach of as many as could read Tamil. We have been carefully noting the articles appearing in the magazine, and from what we have seen we may safely recommend the publication to the patronage and support of the enlightened public. It is a healthy, homely and instructive companion to zenana ladies. The handling of subjects is practical and popular and admirably adapted for the useful education of Indian ladies. The Editor avoids religious philosophy and abstruse subjects of that sort which are only too common in the vernacular periodicals of the day. We wish him every success in his noble endeavour in a field where there is so much to be done and so few to come forward. By reason of the simplicity and purity of the style and subject-matter, the magazine is bound to be an invaluable help to girls in schools, and we trust it will soon enjoy the encouragement and aid it richly deserves."

"The current number of the *Magazine* is highly interesting as usual, and the style of excellence is well kept up. We are particularly struck with the taste and sound morals of the articles that are published. The article on "Parents' Advice" by the Editor is an amplification of a choice verse from Sakuntala and must prove highly edifying to the female readers of the Magazine. The printing and general get-up leave, as usual, nothing to be desired." *Hindu, Madras.*

## மாதர் மனோரஞ்சினி சந்தாவிபரம்.

| | |
|---|---|
| வருட சந்தா தபால் சார்ஜ் உள்பட வெளியூர் உள்ளூராருக்கு ... | 1-12—0 |
| 6-மாதத்திற்கு ... ... ... ... ... | 1—0—0 |
| தனிப்பிரதி ... ... ... ... ... | 0—2—6 |
| மேல் நாட்டாருக்கு ... ... ... ... | 2—4—0 |
| திக் பேபர் வருட சந்தா ... ... ... ... | 2—8—0 |

முன்பணம் அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

திருவல்லிக்கேணி
15—10—04. } மானேஜர், மாதர் மனோரஞ்சினி ஆபீஸ்,
வீரராகவமுதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

Printed at the Ripon Press, Madras, & Published by the Proprietor.
C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS. REGISTERED 10 JAN 1905

262-A



ஜப்பான் சக்ரவர்த்தி.

262-B



ஜப்பான் சக்கிரவர்த்தினி.

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. VI. } Madras: December 1904. { No. 12.

புத்தகம ௬. } சென்னப்பட்டணம்: டிசம்பர்மீ 1904. { இல. 12.

## பெண்கல்விக்குள்ளபிணி.

நம்நாட்டில் பாடசாலைகளிற் பத்து அல்லது பதினோராண்டளவும்
கல்விபயிலும் சிறுமிகள் அம்மட்டோடு தங்கள் கடையைக் கட்டி
வைத்துவிடுவதால் அடையும் பயனைச்சிறிது யோசிப்போம்.
அவர்கள் அறிவுமுதிர்ந்து கல்வியினால் தமக்குப் பிற்
காலத்தில் உண்டாகக்கூடிய உபயோகங்களையும் அவசியத்
தினையும் சரிவர உணர்ந்து அதில் கவனம் செலுத்தும்
ஆவலையும் ஊக்கத்தையும் அடையச் சாதாரணமாய் 12.
13. வயதுசெல்கின்றது.தாகமெழுகையில்தண்ணீர்ப்பாத்தி
ரம் தவறிவிழுவதுபோல் அப்படிப்பட்ட நல்லதருணத்தில் கல்விப்பயிற்சி
யும் தடைப்படுகின்றது. அதிக சூட்சுமபுத்தியும் சுறுசுறுப்புமுள்ள சில
பெண்களைத் தவிர சாமான்யபுத்தியையுடைய பலபெண்கள் இயற்கையாக
வும் அவசியமாகவும் அறிந்திருக்கவேண்டிய வீட்டுவேலைகளையும் குடும்பநிர்
வாகமுறைமையையும் செம்மைப்பெறத் தெரிந்துகொள்ள வெகு சிரமப்படு
கின்றனர். இந்தநிலைமையில் தானே இவர்கள் புருஷன்வீட்டுத் புதுக்குடும்
பத்திற்கு அனுப்பப்பட வேண்டியவர்களாய்ப் பருவமடைகின்றனர். அந்தத்
தடைகடந்தால் அதன்பின் இவர்கட்கு நம் நாட்டு அயுக்தமான இடைக்
கால வழக்கப்படித் தாய்வீட்டில் தாமதிக்க சுதந்திரங் கிடையாமற் போ
கின்றது. கல்விச்சாலைகளில் அப்பியஸிக்கும் மாணாக்கர்கட்கும் தங்கள்வகுப்
பிற்குரிய பாகங்களில் தாங்கள் தேர்ச்சியடைந்து பரீக்ஷைக்குட்பட 1. அல்
லது 2. என்கிற வருஷத்தவணைகள் உண்டு. கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்ட
கடன்காரனுக்கும் அவன் தொகையைச் செலுத்த கெடுவு உண்டு.
அத்தன்மையும் இதுவிஷயத்தில் நம்பாலிகைகட்கு வாய்த்திராதது எவ்
வளவு அயுக்தம்! ஆகவே தாய்வீட்டில் உள்ளபெரியோர் இப்பெண்கள்
புருஷன்வீட்டில் சாமர்த்தியமாய் நிர்வகிக்கவேண்டிய கடமைகளையும்முறை
மைகளையும் இன்னின்னவெனப் பன்னிப்பன்னி போதிக்கவும் பயிற்றவும்
தாராளமான அவகாசம் கிடைப்பதில்லை. இடையில் தானே புருஷன் வீட்டி
லிருந்து வாயுதாவுள்ள தாகவோ அதுவும் இன்றியோ? முகூர்த்தபத்திரி
கை கிடைத்துவிடுகிறது. இத்தருணத்தில் நம்சிறுமிகள் அதி அவசியமான

குடும்பதர்மப்பயிற்சியிலும் பாண்டித்தியமின்றி அதிக வுபயோகமான கல்விப்பயிற்சியிலும் குறைவுற்று புகுந்தவீட்டினராலும் பிறராலும் பலசமயங்களில் இகழவும் கடியவும் பாத்திரமாகி உற்சாகங்குறைந்து துன்புறுகின்றனர். புகுந்தவீட்டு நிர்ப்பந்தங்கள் தற்காலம் அநேகமாய் நீங்கிவிட்டதாயினும் இந்துதேசமாதர்களின் பழைய இயற்கைக்குத் தகுந்தவாறு திறமையுடனும் சாதுரிய விநயங்களுடனும் திருப்தியுண்டாகநடந்து தம்பதிநேசத்தை விர்த்திசெய்து கொள்ளவும் புகுந்தவீட்டு முதியோர்க்குப் பணிவாகவும் அடக்கமாகவும் ஒழுகவும் 15வயதிற்குமுன் ஒருநாளும் நமது பெண்கள் யோக்கியர்களாகமுடியாது. அப்படியாக வேண்டிக் கட்டாயப்படுத்துவது தர்மமுமல்ல. இதுவுமன்றி மேற்கண்டவயதிற்குள் ஒன்றிரண்டு பிரஸவங்கட்கும் இவர்கள் உட்பட்டவர்களாகச் சிலவிடங்களில்சம்பவிக்கின்றது. இதுவும் நேர்ந்த பிறகு இவர்கள் முன்னர்விட்ட கல்வியை விர்த்திசெய்து கொள்ள எந்தச்சந்துவழி பார்த்தாலும் இடமில்லையென்பது தெரிந்தவிஷயமே.

இவ்வாறு தெய்வகதியால் தாய்மார்களாகாமல் தப்பியிருக்கும் இதர பெண்களில் அபூர்வமாய் இரண்டொருவர்க்கு மட்டில் புருஷன்வீட்டில் அப்புருஷனாலேயே இவர்கள்கல்வி அபிவிர்த்திக்குத்தக்க சாதனங்கள் கிடைத்திருப்பது இப்புது நாகரீகவுணர்ச்சியின் பயனாய் உண்டென்றாலும் அதில் பலவித ஒழுங்கீனங்கள் விளைகின்றதுடன் போதுமானபலனும் துரித விர்த்தியும் உண்டாவது அருமையாகின்றது. ஒழுங்கீன மென்றது யாதெனில்:—கணவன் தன்பால் அதிக அன்புடைத்தா யிருப்பதாக இவ்விளமைப் பருவமுள்ள மனைவிநினைந்து அதன்வழி முதியோரிடம் அசட்டை பாராட்ட எளிதாக மார்க்கமுண்டாகின்றது.அதுபொறுமல் அப்பெரியோர் இவர்களை நிந்திக்கவும் இவர்கள் கல்விக்குத் தடைசெய்யவும் இதன்வழி குடும்பத்தில் ஒற்றுமை குறைந்து ஆடவன்மனம் நோகவும் இடமுண்டாதல் இயல்பு. கல்விமான்களாகிய நம் சோதரர்கள் நந்தேசமாதர்கள் அடக்கம்,பொறை,ஒழுக்கம் இவைகளில் முற்பட்டு பிரகாசிக்கவேண்டியதே.மற்றெல்லாச் சாதகங்களிலும் முக்கியமான தென்பதை ஆட்சேபிக்கமாட்டார்களென்றே நம்புகின்றோம். புருஷர்களும் அன்பை அடக்கி நயபயத்துடன் இப்பாலிய மனைவிகளை நடத்தி இவர்களைக் குணவதிகளாக்குந்தக்க வயதுவராத பாடசாலை மாணாக்கர்களாகவே பெரும்பாலும் அமைந்திருப்பதும் பிரதான கோணல்களில் ஒன்றென்பதை நாம் இந்தச்சந்தர்ப்பத்தில் மறப்பதற்கில்லை. இவைகளுமன்றி துரிதவிர்த்தியும் போதியபலனும் உண்டாகாமைக்குக் காரணம் யௌவனப்பருவத்தின்கூத்தே. பொருள்தேடிக் குடும்பத்தைரக்ஷிக்கக் கடமைப்பட்ட இளைஞர்களே பாலிய மனைவிவீட்டிற்கு வந்தால் (result) (ரிஜல்டு) பார்க்கவேண்டாதவர்களாய் விடுதல் பிரத்யக்ஷ பிரமாணமாதலின் பொருள்தேடும் பொறுப்புமில்லாத இப்பெண்கட்குக் கணவர்களது ஸந்நிதானத்தில் எங்கே கல்வியிற் கவலை சித்திக்கக்கூடும்? இக்காரணங்களால்



பெண்கட்கு 14வயது நிரம்புமளவும் இன்றியமையாதவைகளாகிய இருவகைப் பயிற்சிகளும் (கல்வியும, குடும்பமுறையும்) பிறந்தவீட்டில் இருந்தே பெற்றோர்களது முழுக்கவனமுள்ள மேற்பார்வையாலும் ஊக்கத்தாலும் பாலாரிஷ்டங்களின்றி விர்த்தியடைந்து சிறக்கவேண்டும்.

புகுந்தவீட்டில் சவுகரியக்குறைவுகள் அதிகமில்லாத பெண்களின் வியாபாரம் இதுவானால் அவைகளுமுடைய பேதையர்களின் சவுகரிய சாதனங்களைப்பற்றி விசாரணையும் வேண்டுமோ? இளமையில் சிலகாலம் பாடசாலைக்கிவர்களை அனுப்பியதற்காக இவர்கள் பெற்றோர்களையும் புருஷன் வீட்டார் நிந்திப்ப தொருபக்கமும் தன்னொத்த பெண்கள் பலர் தன்னைவிடக் கல்வியிற் றேர்ந்திருப்பதைக் காணும்போ துண்டாகும் வெட்க மொருபக்கமும் பாதிப்பதும் அல்லாமல் தாங்கள் குடும்பவேலைகளையே செய்வதால் ஏதோபெரிய அகௌரவம் இருப்பதாக எண்ணும்படிக்கும் தற்காலத்தில் அநுபவக்குறைவும் ஆராய்ச்சியுமில்லாத சிற்சிலர் தமது மனைவிகளைத்தாம் அருமைபாராட்டுவதற்கு அறிகுறியாக வீட்டுவேலைகள் எதிலும் பிரவேசிக்க வொட்டாமல் தடுத்து மேல்நாட்டுமாதர்கள் எவ்வாறு கணவர்களுடன் சுகசாலிகளாய் வாழ்கின்றனரோ? அதேமாதிரி யிருப்பது நாகரீகமென்றும் கண்ணியமென்றும் மதித்து நாடகம் புரிவதும் சமயம் வந்தபோது வெளிப்பட எடுத்துரைப்பதும் நாம்செய்த துர்ப்பாக்கியந்தான். எவர்களைக்கண்டு மேற்கண்டநம் சோதரர்கள் தாமும் அவ்விதம் வருமாறு ஆசைப்படுகின்றனரோ? அவ்வன்னியர் அவர்கள் சொந்ததேசத்தில் நடக்கும் விதத்தினையும், ஆடவனைப்போலவே பெண்பாலும் நாள்முழுதும் ஓடியலைந்து பொருள்தேடிக் குடும்பப்பாதுகாப்பும் செய்து நிர்வகிப்பது இயல்பென்பதையும்,அப்பெண்கட்கு எடுத்துரைப்பார் இன்மையால் தங்கள் கல்வியபிவிர்த்திக்குத்தடையாக விருந்த இக்குடும்பவேலையைச்செய்வது மிகக் குறைவென்று மனந்தளர்வதும்,இதைக்கொண்டே பெண்கல்வி கூடாதென மருண்டுரைப்பார் சிலரும், கல்வியிற் கவனமுள்ள பெண்கள் குடும்பவேலைகட்குப் பயன்படமாட்டார்களென்று ஆதியில் கற்ற அற்பகல்வியின் மேலும் அப்வாதமேற்படுத்தி தர்க்கம்செய்யத் தலைப்படுகின்றனர். இத்தகைய அபவாதங்கட்கும் தப்பான கொள்கைகட்கும் இடம் உண்டாகாதபடி நமது மாதர்கள் கணவன் வீட்டிற்குச் செல்லுமுன்பே கல்வி யபிவிர்த்திக்குக் கூடியமட்டில் அவகாசமிருக்கும்படி நம் கனவான்கள் தயைகூர்ந்து பருவம் வந்ததும் மனைவிகளாக்கும் அயுக்தவழக்கத்தை அடியோடு பரிகரித்துவருதலே பெண்கல்விக்குண்டாம் பிணிக்குப்பிரதான ஔஷதமாகும். அவர்கட்கு அவகாசம்கொடாமல் படிப்பது அவசியம் அவசியம் என ஓயாமல் எடுத்துரைத்து வருவதினால் மட்டில் யாதுபயன் உண்டாகக்கூடு மென்பது ஆலோசிக்கத்தக்கதே.

அசலாம்பிகையம்மாள்.

# தேனும்தேனீயும்!



## VII. ஈக்களின் அபிவிருத்தியும் இடப்பெயர்ச்சியும்.

இதுகாறும் மூவகை ஈக்களைப்பற்றியும் சிலகூறிவந்தோம். இனி, இவற்றின் அபிவிருத்தியையும் அதனால் நேரும் இடப்பெயர்ச்சியையும் பற்றிச் சிறிதுகூறுவோம். "இராணிஈ சீதோஷ்ண நிலைக்குத்தக்கபடி முட்டையிடும்" என்று முன்பு சொல்லியிருக்கிறோமல்லவா? அது ஒரேநாளில் 300 முதல் 2000வரை முட்டை இடக்கூடும். (ஆனால் இதுபிரதிதினமும் இவ்விழுக்காடு முட்டையிடும் என்று நினைத்துவிடக்கூடாது.) இங்ஙனம் ஈக்கள் அதிகமாய்ப் பல்குவதால் முன் இருந்த இடம் எப்படிப் போதும்? ஆதலின் இவை வேற்றிடம் நாடிச்செல்வது அத்தியாவசியம் அன்றோ?

இவை சாதாரணமாய் பல்கிப் பெருகுவது, மே மாதத்திலேயே. இருந்தாற்போலிருந்து நிசப்தமாயிருக்கும் நல்ல நிசி வேளையில் ஓர்நாள் உங்காரப்பேரிரைச்சல் ஒன்று உண்டாகும். இவ்விரைச்சலே அதன் அபிவிருத்திக்கு அறிகுறி. இவ்வுங்காரம் இரண்டு அல்லது மூன்றுதினங்கள் இருந்துகொண்டிருக்கும், மூன்றாம்நாள் மதியத்தில் இவைகளிற் பல வேற்றிடம் செல்ல ஆரம்பிக்கும். இவ்வீக்களை இராணி ஈதான் வேற்றிடத்திற்கு இட்டுச்செல்லும். இராணி ஈ தம்மை நடத்திச் செல்லாவிடில் இவை முன்னிருந்த கூட்டைவிட்டு நகரா. இராணி ஈயானது சிறிதுதூரம் அவற்றுடன் சென்று பின்னர் திரும்பித்தன் பழைய இடம் வரினும் கூடச்சென்ற ஈக்களும் இதனைத் தொடர்ந்தே தாமும் பழைய கூட்டிற்கு வந்துவிடும். அப்பொழுது சிற்றீக்கள் கோபங்கொண்டு பொதுநன்மை கருதி இருப்பிடம் விட்டுச்செல்ல மனமிலா இராணியைக் கண்ணோட்டமின்றி கொட்டிக்கொல்ல ஆரம்பிக்கும். ஆதலின் இராணி ஈயானது தன்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளவும் கூடச்செல்லும் ஈக்கள் திரும்பாதிருக்கவும் வேண்டிதான் பழைய கூட்டுக்குத் திரும்பாமல் இவற்றைப் பிறிதொரு இடத்திற் கிட்டுச்சென்று முன்போல இவைகளைக்கொண்டு ஒரு கூடுகட்டுவித்து ஆகாராதி சேர்ப்பித்து அவைகளை அதில் இருத்தித் தானும் வாழும்.

## VIII அரசுமாற்றம்.

"இராணிஈ இல்லாவிட்டால் கூட்டில் ஈக்கள் இரா என்று கூறப்பட்டதே. இப்பொழுது இராணிஈ தன் பிரஜைகளில் பலவற்றுடன் வேற்றிடம போய் விட்டதே இனிப்பழைய கூடு காலியாய்த்தானே இருக்கும்" எனச் சிலர் ஐயமுறலாம். பின் சொல்லப்படும் விஷயங்களால் இச்சந்தேகம் நிவர்த்தியாகும். தேன்கூட்டில் "அரசமாளிகைகள்" ஆறு இருக்கும் என



முன்பு நாம் கூறியது ஞாபகத்தில் இருக்கிறதா? இவ்வரசமாளிகைகள் எதற்காக என்று நினைக்கிறீர்கள்? கப்பல்களில் ஆபத்துக்காலத்தில் உதவுமாறு சில ஜீவரக்ஷக ஓடங்கள் (Life-boats) எக்காலத்திலும் தயாராய் வைத்திருப்பதுபோல், வேற்றிடங்கட்குப் புதுக்குடும்பம் ஸ்தாபிக்கப்போகவேண்டி வருவதனாலோ, அங்ஙனம் போகாமையால் கொட்டிக் கொல்லப்படுவதனாலோ, அல்லது ஆயுள் முடிந்து இறத்தலினாலோ, இராணி ஈ இன்றிக் கூடு காலியாகவிருக்கும் என்று முன்னுக்கு முன்னாலேயே உணர்ந்துகொண்ட சிற்றீக்கள் பின்னால் நேரிடக்கூடிய விபத்தைத் தடுக்குமாறு ஆறு பெண் ஈ முட்டைகளை எடுத்து, பெரும்பெரும் மெழுகறைகளுள் அடைத்து பாகு முதலிய கொடுத்துப் போஷித்துக் கொழுக்கவைத்திருக்கும். இராணிஈயானது தனது பரிவாரத்துடனும் பிரஜைகளுடனும் புறப்பட்டுப் போன சிறிது நேரத்திற்கெல்லாம் பருவம் முதிர்ந்து பக்குவம் அடைந்த இவ்வீக்களின் ஒன்று ஏனைய ஈக்களின் ஆரவாரத்தால் நிகழ்ந்தனயாவும் உணர்ந்து இராஜமாளிகையினின்றும் இராணி ஆக விரும்பி வெளிக்கிளம்பும். உடனே சிற்றீக்கள் யாவும் ஆனந்தம்மேலிட்டு இரைந்து அரசவாழ்த்துக் கூறல்போல் உங்கரிக்கும். இதற்கு எளிதில் பட்டம் கிடைத்துவிடுமென எண்ணவேண்டாம். ஏனெனில், இஃதொப்ப ராஜமாளிகைகளில் வளர்ந்த ஏனைய ஈக்களில் ஒன்றிற்கு அது பட்டம்பெறுவது பொறாமையாய் இருக்குமாம். தவிரவும், தான் அக்கௌரவமும் பட்டமும் பெறவேண்டுமென்று அது விரும்புமாம். ஆதலின் இது அதனை முற்றும் ஒழித்துவிட எண்ணி ஒரேபாய்ச்சலாய்த் தன் எதிரியின்பேரில்பாயும் அப்பொழுது அவ்விரண்டிற்கும் நடக்கும் போரை கம்பர், வில்லிபோன்ற கவிராயர்கள் அல்லவோ இருந்து வர்ணிக்கவேண்டும்! வெகுநேரம் பட்டசண்டையால் இவ்விரண்டும் சளைத்துக் களைத்துத் திகில் அடைந்து பின்னிட ஆரம்பிக்கும் இச்சமயத்தில் இதுகாறும் உங்கரித்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சிற்றீக்கள் சும்மாயிராமல் ஓர் பேரிரைச்சல் எழுப்பும். தக்ஷணமே சில சிற்றீக்கள் கூட்டத்தினின்றும் வெளிக்கிளம்பி தப்பியோடும் பெண்ணீக்கள்மேல் பாய்ந்து அவை பின்னிடுவதை நிறுத்த ஆரம்பிக்கும். உடனே இவ்விரண்டிற்கும் என்றுமில்லாக்கோபம் ஜனித்துவிடும். ஆனால் இவை தம் கோபத்தை சிற்றீக்கள்பேரில் செலுத்துவதற்குப் பதிலாக ஒன்று மற்றொன்றையே பரஸ்பரம் எதிர்த்துத் தாக்கும். முடிவில், இவ்விரண்டினுள் அதிபல சாலியாய் உள்ளது மற்றதன் சிறகிணைப்பற்றிக் கவ்விப்பிடுங்கிப் பாதுகாப்பு ஏதுவுமின்றி இருக்கும் அதன் சரீரத்தில் அதி உக்கிரகத்துடன் கொட்டும். இக்கொட்டினால் எதிரி மரணவேதனைப்பட்டு மாண்டுபோம்.

பின்னர் ஜயங்கொண்ட இவ்வீயானது எஞ்சிய ராஜமாளிகைகள் நான்கினும் புகுந்து யோசனையற்று மெய்மறந்து நித்திரை செய்துகொண்டிருக்கும் பக்குவமடையாக் குஞ்சுஈக்களை எல்லாம் ஒவ்வொன்றாய்க் கொட்டிக் கொன்று அவற்றின் அறைகளையும் சின்னாபின்னமாக்கிவிடும். இது இப்படி

அடுதொழில் புரிவது இவை எப்போதேனும் தனக்கு எதிரிகளாய் வரக்கூடும் என்ற அசூயையினாலும் அச்சத்தினாலுமே. இதன் குரூரச்செய்கை சிற்றீக்களுக்கு மனவருத்தம் உண்டுபண்ணும் என்று நினைக்கிறீர்களோ? சிற்றீக்களுக்கு இதனால் சந்தோஷமே பிறக்கும். இதன் வீரத்தனத்திற்குத் தாம் மெச்சியதாக ஓர்வகைச் சந்தோஷப் பேரிரைச்சலால் அறிவிக்கும். பின்னர் இது ஈக்களால் அரசியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ராஜ்யபாரம் வகிக்கும் பழைய இராணிக்கு எவ்வளவு மரியாதை நடந்ததோ அவ்வளவு மரியாதை இதற்கும் நடக்கும். இதன் கடமையும் வாழ்வும் பழைய இராணியைப்போலவே தான். மிற்க, இப்பொழுது ஒரு இராணி கிடைத்துவிட்டதால் கூடு காலியாகக் காரணம் இல்லையே. ஆதலால் இராணி ஈ இல்லாவிடில் கூடு காலிதான் என்று நாம் கொள்ளவேண்டுமேயன்றி இன்ன ராணி ஈ இல்லாவிடில் காலியாய்விடும் என்று நினைத்துவிடக்கூடாது.

## IX சிற்றீக்களால் இராணிஈ சிருஷ்டிக்கப்படுதல்.

இராஜமாளிகைகள் பல கட்டி எவ்வளவு சிரத்தையுடன் பாதுகாக்கப்பட்டு வரினும், சில சமயங்களில் ஒரு இராணி ஈ கூட இல்லாமற் போகுங் காலம் வரினும், வரும் அப்பொழுது ஈக்கள் என்னசெய்யும்? தங்களில் ஒன்றிற்கும் பட்டம்கட்டி அரசுகொடுக்கும் என்று நினைக்கிறீர்களோ? இல்லை. இல்லை. ஏனெனில் அரசியின் அதி முக்கியவேலை முட்டையிடுதல், சிற்றீக்களோ பெண்தன்மை போக்கப்பட்டவை. ஆதலால் அவை அவ்வேலைக்கு உரித்தானவையல்ல. பின்னை என்னதான் இவை செய்கிறதெனில், தாமாகவே புதிதாக ஓர் இராணி ஈயை சிருஷ்டிக்கத் தொடங்குகின்றன. இவை எப்படிச் சிருஷ்டிக்கின்றன என்று பார்ப்போம்.

இவை செத்த இராணிக்காக ஒப்பாரி வைத்தழுது துக்கம் காத்து ஓய்ந்தபின்னர், தங்கள் அதிவிசித்திரக் கூட்டின் அறைகளை ஒவ்வொன்றாய் அழித்துக் கலைத்து ஒரு பெண்புழுவைத் தேடிக் கண்டுபிடிக்க முயலும். இவை இங்ஙனம் செய்வதால் மெய்மறந்து நித்திரை செய்துகொண்டிருக்கும் புழுக்களிற் சில நசுங்கிச் சாகத்தான்வேண்டிவரும். ஆயினும் புழுக் கூட்டில் அதிக மரணசம்பவம் இராது. 5 அல்லது 6 புழு அழிந்தால் அதிகம். ஏனெனில் சீக்கிரத்தில் இவை நாடும் பெண்புழு ஒன்று தட்டுப்பட்டுவிடும். உடனே காலதாமதம் செய்யாது சிற்றீக்களிற் சில அதனைச் சுற்றிலும் உள்ள சிற்றறைகளைப்பிடுங்கி யெறிந்து அதனை ஓர் விசாலித்த ராஜமாளிகையாக்கும். இவ்விராஜமாளிகையில் அது 10 நாள் இருக்கும். இப்பத்துநாளும் அதற்குக்கொடுக்கும் பாகு முதலிய ராஜஉணவினால் அது பருத்துக்கொழுத்துப் பரிபக்குவம் அடைந்து இராணி ஈயாகி அரசு செலுத்த ஆரம்பித்துவிடும். சிற்றீக்களும் வழக்கம்போல் இவ்விராணியிடத்தில் முறை பிசகாது நடந்துகொள்ளும்.

(இன்னும் வரும்.)

M. கோபாலகிருஷ்ணையர்,
மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராஸனாதிபதி.



# சிறுவர்க்கான கதை.

## இவளே நல்லமனைவி.

பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கும்
அன்புடைய ராதல் இனிது (இனியது நாற்பது.)

சோழநாட்டிலே காவிரிக் கரையோரத்திலே சிவபுரம் என்னும் ஊர் உண்டு. அவ்வூரிலே வேளாளர் குலத்திலே சிதம்பரம்பிள்ளை என்பவர் ஒருவர் உண்டு. அவர் தமிழ்ப் பாஷையை நன்கனம் கற்றறிந்தவர். ஏழைமை நிலையினரே ஆயினும், அவர் தமது குலத்தொழிலாகிய பயிர்த்தொழிலை மிக்க உறுதியுடன் கவனித்துத் தமக்குத் தந்தை இறந்தபோது தாயமாய் வாய்த்த ஒருகாணி நிலத்தை ஒன்பதுகாணி ஆக்கினார். இவர் உலக விஷயங்களின் அந்தரங்க நடவடிக்கைகளை நன்றாய் அறிந்தவரேயாயினும், பிறருடைய விஷயங்களிலே தலையிடாதவர். பல துறைகளையும் நன்றாய் ஆலோசித்து அறிந்து செயற்கு உரியவற்றைச் செய்வாரே ஒழிய வேறு விஷயங்களிலே தலையிடார். இவர்க்கு இல்வாழ்க்கைத் துணைவியாய் வாய்த்த சிவகாமி அம்மாள் மிக்க சுகுணோத்தமி. "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் முதுரையைக் கவனித்து நாயகற்கு இன்புற நடப்பவள். பிள்ளையார் காலையிலே தினந்தினம் தம் பயிர்த்தொழிற்குப் போகும் முன்னே, தமது குழந்தைகளையும் மனைவியையும் கூட்டிக் கடவுளின் கருணையை வாழ்த்தி, வழிபட்டு அவரது அருள் என்றும் தப்பாது வாய்க்க வழிபடலே முறைமை என்று போதிப்பர். இவ்வண்ணமே இரவிலே தாம் படுக்கைக்குப் போகும் காலத்தும், கடவுளைத் தொழுதுபோற்றுவது இவர்க்கு வழக்கம். இவ்வரிய தம்பதிக்கு நான்கு குழந்தைகள் உண்டு. மூத்தோர் இருவரும் ஆண்பிள்ளைகள். சிறுமையிற் 'கல்வி சிலையில் எழுத்தே' என்னும் முதுரைக்கு ஏற்பப் பள்ளிக்குப் போய்வருகின்றார்கள். சிதம்பரம்பிள்ளையின் குடித்தனம் இல்வாழ்க்கையர்க்கு வேண்டியவைகள் அனைத்தும் உடையது. நாம் பின்சொல்லும் விஷயம் நடக்கும் தினத்திலே, சிவகாமிஅம்மாள் தான் செய்துதீரவேண்டிய வீட்டு பணிகளைக்குறித்து ஆலோசித்த விவரத்தைக் கவனிப்பாம்:— .

கோழிகூவிப் பொழுதும் விடிந்தது; வீட்டைமெழுகிக் கோலம் தீட்டல் வேண்டும், பழகும் பாத்திரங்களைத் தேய்த்தல்வேண்டும். கன்றுகாலிகளுக்கு நீர் காட்டிப் பசுவையும் எருமையும் பால்கறத்தல்வேண்டும். தோய்ந்து உறைந்த தயிரினைக் கடைதல்வேண்டும். வண்ணான்மூட்டை எனும்படி சேர்ந்த இத்துணிகளைத் தோய்த்துக் கழுவி உலர்த்தல்வேண்டும். பிறகு, முழுகி இளம் பிள்ளைகள் தாமதமின்றி 10 மணிக்குப் பள்ளிக்குச்செல்ல,

அவர்களுக்கு அன்னம் இடவேண்டுமே. பணிசெய்வதற்குச் சிறிது உதவாரும் இல்லையே. இன்றையதினம் நாற்றுநடும் கூலியாளர்களுக்கு அன்னம் சமைத்தலும் வேண்டுமே. இப்பணிகளை இயற்றுவது என்ன கஷ்டம்! புத்தகங்களைப் படிப்போம் என்றாலோ பொழுதும் இராதே என்று மனங் கலங்கிப் பண்ணியபாவம் அன்றோ பெண்ணாய்ப்பிறத்தல் என்று கிலேசம் உற்று.

பெண்டிர் படுந்துக்கம் பெண்களறிவாரேல் எண்ணார் மணம் விரையவே, என்று மனத்திலே சிந்தனை செய்துகொண்டு வந்துகொண்டிருந்தனள். அப்பொழுது சிதம்பரம்பிள்ளை "என் கண்ணே, சிவகாமீ உன் முகக்கலக்கம் எதன்பொருட்டு நீ நன்னெறி தவறாது இனிமையின் அகப்பணிகளை நடப்பித்துவரும் மாட்சியுடையவள் ஆதலால், நான் ஒருவிதத்துன்பமும் இன்றி என் அலுவல்களைக் கவனிப்பேன் ஆவேன். நான் உன்னைக் கடிந்து பேச இதுகாறும் காரணமும் இல்லை. என் குடித்தனத்தை நீ அன்றி, பிறர் இனிமையின் நடத்த இயலுமோ? மனைக்காக்கும் மாண்டமகளிர் மனைமாட்சி இல்லாதான் வாழ்க்கையி னின்பம், எனைமாட்சித் தாயினுமில் என்னும் ஆன்றோர் வாக்கின் பயனை அறியாயோ? காதலின் இன்பம் ஓதற்கு அரியது என்று தன் காதலியை அணைத்து முத்தமிட்டுத் தான் புலம்போய் விரைவிலே திரும்பி வருவதாகச் சொல்லிப்போயினர்.

பிறகு அவரது அகத்தே நடந்த பணிகளின் விவரத்தைக் கவனிப்பாம். வீடு மெழுகலும் கோலம் இடலும் சிறப்பின் செய்யப்பட்டன. பாத்திரம் தேய்த்தலும், பால்கறத்தலும், பால்கடைதலும் அதிவிரைவில் திருப்திகரமாய்ச் செய்யப்பட்டன; களைந்த உடைகளோ, மாசின்றிச் சிறந்து விளங்கின, திண்டியின் சுகமோ, உண்டவரே அறிவார், விருந்தின் இனிமைக்கு மேம்பாடு உடைத்து, மதலைகள் அனைவரும் அமுதம் என்று உண்டனர், கூலியர்க்கு அன்னம் மேலெனக் கிடைத்தது. கணவனும் மகிழ்ந்தனன்; வேலையும் சிறந்ததே. இரவில் அனைவரும் இன்பமோடு உண்டனர். கடவுளைப் போற்றி அவரது கருணையை வியந்தனர். பிறகு, சிதம்பரம் பிள்ளையார் மகிழ்ந்து, தன் காதலியை அழைத்து, அன்போடு அணைத்து "என் கண்மணி! நீ வந்தநாள்முதலாய் இந்தநாள்வரைக்கும் அன்போடு ஒழுகி, ஆனந்தம் விளைப்பாய்" என்று அன்போடுருகி, முத்தம் இட்டனர். இவ்வரிய ஒருமைவாழ் அன்பின் விளைவை எண்ணிய சிவகாமியும் தான் காலையில் எண்ணியதை மறந்து

பெண்டிர் படுமின்பம் பெண்களறிவாரேல்
எண்ணார் மறந்தாழ்ப்ப வே,

என்று தன் அன்புள்ள இளங்குழந்தைகளை அணைந்து முத்தம் இட்டு ஆனந்தம் கொண்டனள்.

M. S. நடேசய்யர், பி. ஏ.



# இராமாயணசார வினாவிடை.

## 5-வது சுந்தரகாண்டம்.

1. வினா:—முதல் முதல் சீதையைக் கண்டதுயார்?

விடை:—இலங்கைநகரில் அசோகவனத்திலிருந்த சீதையை முதலில் அனுமான் கண்டான்.

2. வினா:—சீதை இலங்கையி லிருக்கிறாளென்று அனுமானுக்கு எப்படித் தெரிந்தது?

விடை:—அனுமானும் அங்கதனும் வானரவீரர்களுடன் சீதையைத் தேடப்போனார்கள். அப்பொழுது ஜடாயு மரணமடைந்ததையும் இராமன் ஜடாயுவுக்கு உத்தரக்கிரியை நடத்தியதையும் கேள்விப்பட்டு ஜடாயுவின் தமயனான சம்பாதி அனுமானிடம் இராவணன் சீதையை லங்கைக்கு எடுத்துக்கொண்டு போய்விட்டானென்று சொன்னான்.

3. வினா:—அனுமான் இலங்கைக்கு எப்படிப்போனான்?

விடை:—மகேந்திரகிரியின் உச்சியிலேறி அங்கிருந்து கடலைத்தாவி இலங்கையில் குதித்தான்.

4. வினா:—தன்னை இராமன் அனுப்பினானென்று அனுமான் சீதையிடம் சொன்னானா?

விடை:—இராமனால் அனுமான் அனுப்பப்பட்டானென்பது முதலில் சீதைக்குத் தெரியாது. இராமன் மோதிரத்தைச் சீதையிடம் அனுமான் கொடுத்த மேல்தான் சீதைக்கு தெரியவந்தது.

5. வினா:—அனுமான் தன்னைக்கண்டான் என்பதை இராமனுக்கு அறிவிக்கச் சீதை அனுமானிடத்தில் ஏதாவது அடையாளம் கொடுத்தனுப்பினாளா என்ன?.

விடை:—சீதை அனுமானிடம் தன் அடையாளமாகச் சூடாமணியைக் கொடுத்து இராமனிடம் கொடுக்கும்படி சொன்னாள். ஒருநாள் தானும் இராமனுமாகத் தனித்திருந்தபோது தன் நெற்றியில் இராமன் திலகமிட்ட முக்கியமான அடையாளத்தையும் அறிவிக்கும்படி சொன்னாள்.

6. வினா:—சீதையைக் கண்டபிறகு அனுமான் என்னசெய்தான்?

விடை:—அசோகவனத்தை அழித்தான். இராவணனது இரண்டாவது குமாரன் அக்ஷனையும் பிறரையும் வதம்செய்தான். மகாசூரனும் இராவணனுடைய மூத்தகுமாரனுமாகிய இந்திரசித்து அனுமான் செய்ததைப் பொறுக்காமல் அனுமானைப் பிர்மாஸ்திரத்தால் கட்டி இராவணன் முன்பு கொண்டுபோனான்.

7. வினா:—இராவணன் அனுமானை எவ்விதமாய்ச் சிக்ஷித்தான்.?

விடை:—அனுமானைக் கொன்றுவிடும்படி இராவணன் கட்டளையிட்டான். வந்த தூதனைக் கொல்லுதல் சாஸ்திரவிரோதமென்று விபீஷணன் தன் தமயனாகிய இராவணனிடம் சொன்னான். அனுமானைக் கொல்லாமல் வாலில் துணியைச்சுற்றி நெருப்பு வைத்துவிடும்படி இராவணன் கட்டளையிட்டான்.

8. வினா:—வாலில் தீவைத்ததால் அனுமானுக்கு ஏதாவது கெடுதி சம்பவித்ததா?

விடை:—அனுமானுக்கு யாதொரு கெடுதியும் நேரிடவில்லை. வாலில்வைத்த நெருப்பைக்கொண்டு அனுமான் இலங்கையைக் கொளுத்திவிட்டான்.

9. வினா:—இலங்கையை இப்படிக் கொளுத்தியதால் சீதைக்கு ஏதாவது கெடுதி நேரிட்டதா ?

விடை:—யாதொரு கெடுதியும் நேரிடவில்லை.

10. வினா:—அனுமான் கிங்கரர்களையும் சம்புமாலியையும் வதைத்தது மல்லாமல் இராவணனுடைய சேனாதிபதிகளில் யார் யாரை வதைசெய்தான்?

விடை:—ஐந்து சேனாதிபதிகளையும்வதைசெய்தான். அவர்களாவர்? 1. துர்த்தரன் 2 விரூபாக்ஷன், 3 யூபாக்ஷன், 4 பிரகஸன், 5 பாஸகர்ணன் என்டவர்களே.

11. வினா:—அனுமான் இலங்கையில் குதிகொண்டதற்குமுன் இடைஞ்சல் செய்தவர்கள் யார் யார் ?

விடை:—தடைசெய்த சுரஸையை அவள் வாயில் நுழைந்து வெளிவந்து வென்றான். தடைசெய்த லங்கணியை நெற்றியி லடித்துவென்றான்.

12. வினா:—அனுமான் இலங்கைக்கு மகேந்திரகிரியி னுச்சியிலிருந்து தாவிச் சென்றபோது மைநாக பருவதத்துடன் எப்படிச் சம்பாஷணை செய்தான் ?

விடை:—மைநாகபர்வதம் கடலின்மேல் தோன்றி நரவடிவ மெடுத்துக்கொண்டு அனுமானைப் பார்த்து உன் தந்தையால் உதவிபெற்ற என் சிரமீதிற் சற்றுநேரம் தங்கிப் போகவேண்டுமென்று பிரார்த்தித்தபோது என் நாயகன் அடிமைத்தொழில் புரிந்துத் திரும்புகையில் வருவேனென்று அனுமான் விடைகொடுத்துவிட்டுப் போயினன்.

13. வினா:—அனுமான் மகேந்திரகிரியின் உச்சியில் திரும்பிவருமுன் வழியில் என்ன நடந்தது ?

விடை:—அனுமான் தான்கொடுத்த வாக்கின்படி மைநாககிரியைச் சந்தித்தான்.

14. வினா:—அனுமானிடம் சென்ற வீரர்கள் அனுமான் திரும்பிவரும்வரை எங்கிருந்தார்கள் ?

விடை:—மகேந்திரகிரியின் உச்சியில் கவலை கொண்டவர்களாய் அனுமான் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள.

15. வினா:—அனுமார் மகேந்திரகிரி உச்சிக்குக் கடலைத்தாவித் திரும்பிவந்தபின் நடந்த விசேஷமென்ன ?

விடை:—வானரங்களை எல்லாம் அங்கேகண்டு நாயகன் பணி நிறைவேறியதை யுணர்த்திச் சந்தோஷமடைந்தார்கள். மதுவனஞ்சென்று தேனைக்குடித்துக் களித்தார்கள்.

16. வினா:—பிறகு அனுமான் என்னசெய்தான் ?

விடை:—இராமபிரான் முன்போய்க்குறித்து 'கண்டேன் சீதையை'யென்றுணர்த்தி அவளுஞ் சுகந்தான், அவள்கொடுத்த சூடாமணியு மிதுதானென்று இராமபிரானிடம் கொடுக்கவே, இராமமூர்த்தி அனுமான் செய்கையைக் கண்டு மகிழ்ந்தான்.

இங்ஙனம்

தி. வேங்கடராம ஐயங்கார்,

தமிழ்ப்பண்டிதர்.



# இஷ்டப்படி முடிதல்.

(தொடர்ச்சி.)

ஸர்ரோலெண்டு டிபாய் என்பவனுக்கு ஆர்லெண்டோ இளையகுமாரன்.
ஸர்ரோலெணடிபாய், தான் இறந்துபோனதற்கு முன் தனது மூத்தகுமார
னாகிய ஆலிவரைக் கூப்பிட்டு அவனிடம் ஆர்லோண்டோவை ஒப்புவித்து
அவனுக்குக் கல்விகற்பிக்கும்படியும் தமது கௌரவத்துக்குத் தக்கபடி
அவனுக்கு உடைமுதலியன கொடுக்கும் படியுஞ் சொல்லிப்போயினான்.
ஆனால் ஆலிவர் தன் தகப்பன் சொற்படி நடக்கவேயில்லை. ஆர்லேண்டோ
வைப் பள்ளிக்கே யனுப்பாமல் மிக்க அலட்சியஞ்செய்து வந்தான். ஆயி
னும், ஆர்லேண்டோ நற்குணங்களில் தன் தகப்பனை யொத்து, மிக்க ஊக்
கத்துடன் கல்விபுகட்டப் பட்டவனைப்போல் அறிவையுடையவனாயினன்.
ஆலிவர் தன் இளைய சகோதரனது உருவத்தையும், மேன்மையையும் பார்
த்து பொருமைகொண்டு, அவனைக் கொன்றுவிட எத்தனித்தான்.

ஆர்லேண்டோ படுத்திருக்கும் அறைக்கு நெருப்பு வைப்பதாக ஆலி
வர் தீர்மானித்திருப்பதைக் கேட்ட ஆடம் (Adam) என்னும் ஓர் பழைய
சேவகன், ஆர்லேண்டோவினிடம் ஓடி "அப்பா' நீ படுத்து உறங்கும்
அறைக்கு நெருப்புவைத்து உன்னைக் கொன்றுவிட உன் தமையன் ஏற்பாடு
செய்துகொண்டிருக்கிறான். நீ எப்படியாவது இவ்வூரைவிட்டு ஓடிப்போய்
விடு; உனக்குச் சிலவுக்கு வேண்டுமானால் உன் தகப்பனார் எனக்குக் கொடு
த்த ஐந்நூறுவராகன் இதோ இருக்கிறது எடுத்துக்கொள்" என் உயிருள்ள
வரைக்கும் உனக்கு நான் வேலைக்காரனாக விருக்கிறேன் என்று பலவாறு
கச் சொன்னான். உடனே அக்கிழ ஆடமை (Adam) அழைத்துக் கொண்டு
ஆர்லேண்டோ பலவிடங்களில் அலைந்து திரிந்து கடைசியில் அந்த ஆர்டன்
என்னுங் காட்டுக்கு வந்து சேர்ந்தான். முன்னால் கனிமீட், அலீனா என்
னும் இருவரும் அங்கே ஆகாரத்திற்கு சங்கடப்பட்டதுபோல், இவர்களும்
பசியினால் வருந்தினார்கள். வெகுதூரம் அலைந்தும் மனிதர்கள் வசிக்கும்
வீடு ஒன்றையுங் காணாததினால், அக்கிழவன் பசியினால் மூர்ச்சை
யடைந்து கீழேவிழுந்து விட்டான். ஆர்லேண்டோ அவனை ஓர் மரத்து நிழ
லில் இருத்தித் தைரியஞ்சொல்லித் தான் கொஞ்சதூரம் அப்பால் செல்ல,
அங்கே அரசன் ஓர் பெரிய மரத்து நிழலில் தனது மித்திரர்களுடன் சாப்
பிடுந் தருணத்திலிருப்பதைக் கண்டான்.

உடனே ஆர்லேண்டோ, தைரியங்கொண்டு, அவர்களின் சமீபத்திற்
போய்த் தன் உடைவாளை உருவிக்கொண்டு "பொறுங்கள், நீங்கள் சாப்பிட
வேண்டாம், அவ்வுணவு எனக்கு வேண்டும் எனக்குப் பசி பிராணன்போகி
றது" என்று உரக்கச்சொன்னான். இவன்பசியினால் வருந்துகிறானென்பதை
அவ்வரசன் தெரிந்துகொண்டு தங்களோடு அவனையும் உட்கார்ந்து புசிக்கச்

சொன்னான். அப்பொழுது ஆர்லேண்டோ, தன் உருவினவாளை உரையில் போட்டு "நீங்கள் யாரோ காட்டுஜனங்களென்றும், அப்படி அதட்டிக் கேட்டாலன்றி உங்கள் உணவைக் கொடுக்கமாட்டீர்களென்றும் நான் நினைத்ததற்கு என்னை மன்னிக்கவேணும். நீங்கள் எனக்கு உணவுகொடுப்பதாகச் சொன்னதைப்பற்றி மிக்கசந்தோஷமாச்சுது. வயது முதிர்ந்து மிக்கத் தளர்ச்சியடைந்த கிழவன் ஒருவன் என்னோடு வந்திருக்கிறான். நடந்துவந்ததினாலும் பசியினாலும் மிக்க களைத்திருப்பதினால், அவன் புசிப்பதற்குமுன் நான் ஒரு கவளங்கூடத் தின்னமாட்டேன்" என்றான். அவர்கள் ஆர்லேண்டோவைப்போய் அக்கிழவனை யழைத்துவரச் சொல்ல அப்படியே யவன்போய் அக்கிழவனைத் தூக்கிக்கொண்டுவந்தான். இருவருக்கும் அரசன் உபசாரஞ்சொல்லி இருத்தி சாப்பாடுபோட, அக்கிழவன் சாப்பிட்டுக் களைப்பு தீர்ந்து உட்கார்ந்தான்.

பிறகு அரசன் ஆர்லேண்டோவோடு பேசுவதில் அவன்தனது பழைய சிநேகிதனாகிய ஸர் ரோலேண்டடிபாயினது குமாரனென்று தெரிந்து மிக்க சந்தோஷப்பட்டு அன்றுமுதல் அவனையும் அக்கிழவனையும் தனது ஸம்ரக்ஷணையில் வைத்துக்கொண்டான்.

கனிமீட்டும், அலினாவும் அக்காட்டுக்கு வந்து அவ்விடையனது வீட்டைவாங்கின சில நாளைக்கெல்லாம் ஆர்லேண்டோ அங்கே வந்தது. அக்காட்டில் அநேக மரங்களில் ரோஸலிண்டுபெயர் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்து கனிமீட் அலினா இருவரும் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்க சற்றுநேரத்துக்கெல்லாம் ஆர்லேண்டோவையும், ரோஸலிண்டால் கொடுக்கப்பட்ட தாவடம் அவன் கழுத்தில் அணிந்திருப்பதையுங் கண்டார்கள்.

ஆனால் கனிமீட், தன் மனதைக் கவர்ந்து, நாள்முழுதும் அவள் (ரோஸலிண்டு) பெயரை மரங்களின்மேல் எழுதும்படியும், அவள்மேல் பாட்டுகள் கட்டும்படியும் செய்த ரோஸலிண்டென்று ஆர்லேண்டோவுக்குத் தெரியவில்லை. ஆனால் அவ்வாலிபனது அழகிய உருவத்தைப்பார்த்துச் சந்தோஷித்து அவனோடு ஆர்லேண்டோ பேசத்தொடங்கினான். பேசுவதில் ஆர்லேண்டோ அப்பையனுக்கும் தனது காதலியாகிய ரோஸலிண்டுக்கும் மிக்க ஒற்றுமை யிருப்பதைக் கண்டான். கனிமீட் வேடிக்கையாக ஆர்லேண்டோவோடு, "இக்காட்டில் யாரோ வொருவன் ரோஸலிண்டு என்னும் ஒருஸ்திரீயின் பெயரையும் அவளைக்குறித்து அநேக பாட்டுகளையும் அநேக மரங்களின்மேலும் செடிகளின்மேலும் எழுதியிருக்கிறான். நான் அவனைப் பார்ப்பின் அவனது மோகப் பயித்தியத்தை விடுக்க நல்லமருந்து கொடுப்பேன்" என்றான்.

ஆர்லேண்டோ, அப்பயித்தியக்காரன் தான் தானென்று ஒப்புக்கொண்டு கனிமீட்டை தனக்குப் புத்திமதி சொல்லும்படி கேட்டான். அதற்குக் கனிமீட் "நீ செய்யவேண்டுவது என்னவெனின் நீ தினந்தோறும், நானும்



என் தங்கையாகிய அலீனாவும் இருக்கும் வீட்டுக்கு வரவேணும். அப்பொழுது நான் உன் காதலியாகிய ரோஸலிண்டு போல் நடித்து பெண்கள் தங்கள் காதலர்களின் மனதை வெல்லச்செய்யும் மாயகாரியங்களை காணும்செய்கிறேன். நீயும் என்னை ரோஸலிண்டாகவே பாவித்து சரசசல்லாபங்களோடிருக்கவேண்டும். கடைசியில் உன்னை வெட்கித்து உன் இச்சையை நீக்குகிறேன் என்றான். அப்படியே ஆர்லேண்டோ பிரதிதினமும் கனிமீட் வீட்டுக்குப்போய் அவனை ரோஸலிண்டாகவே பாவித்து காதலிகளோடு பேசுவதுபோல் இனியவார்த்தைகள் பேசிவந்தான்.

ஆர்லேண்டோ தான் பேசுவதெல்லாம் வேடிக்கைப் பேச்சுகளென்று எண்ணியிருந்தபோதிலும், கனிமீட், ஆர்லேண்டோவின் மனதையறிந்து அவன் உண்மையாகவே ரோஸலிண்டுமேல் காதல்கொண்டிருக்கிறானென்று தெரிந்துகொண்டும் அநேகநாள்வரைக்கும் உண்மையான சங்கதியை வெளிவிடாமல் இருந்தான்.

இப்படியிருக்க கனிமீட், அக்காட்டில் வந்திருக்கும் அரசனாகிய தனது வயதுசென்ற தகப்பனைப் பார்க்கப்போயினான். அரசன் இவனை எக்குலமென்று கேட்க இடையன் வேஷம் பூண்டிருக்கும் கனிமீட் தானும் ராஜகுலத்திற் பிறந்தவனென்று விடைபகர்ந்தான்.

ஒருநாள் ஆர்லேண்டோ கனிமீட் வீட்டுக்குப்போகும்போது வழியில் ஒருவன்படுத்துத் தூங்குவதையும், அவன் கழுத்தில் ஒருபெரிய பாம்பு சுற்றிக்கொண்டிருப்பதையும், அவன் தூங்கி எழுந்தவுடன் அவன்மேல்பாய்ந்து கொல்லுவதற்காக ஒரு சிங்கம் சிறிது தூரத்தில் காத்திருப்பதையுங் கண்டான். இவன் சமீபத்திற் போனவுடன் அப்பாம்பு ஓடிப்போய்விட்டது. கிட்டப்போய்ப் பார்க்குமளவில் தூங்குபவன் தன் தமையனாகிய ஆலிவர் என்று ஆர்லேண்டோ தெரிந்துகொண்டு சகோதர வாஞ்சையினால், தன்னிடமிருக்கும் வாளையுருவி அவ்விடம் காத்திருந்த அச்சிங்கத்தைக்கொன்று தன் தமையனை மரணத்தினின்றுந் தப்பிவித்தான். ஆர்லேண்டோ இப்படி அச்சிங்கத்துடன் சண்டைசெய்கையில் ஆலிவர் எழுந்திருந்து ஆர்லேண்டோ தனக்காக சிங்கத்தை வென்றானென்பதைத் தெரிந்துகொண்டு தன் தம்பியினிடம் போய்த் தான் செய்த குரூரச்செய்கைகளுக் கெல்லாந் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆலிவர் உண்மையாகத் தன் தம்பியைக்கொல்லவேண்டுமென்னும் எண்ணத்தோடு அக்காட்டுக்கு வந்தபோதிலும் தான் செய்த கெட்டகாரியங்களைப்பற்றி மிக்க துக்கித்துப் பிறகு உண்மையான சகோதர வாஞ்சையோடு தன் தம்பியைக் கட்டித் தழுவினான்.

அச்சிங்கத்துடன் யுத்தஞ் செய்ததினால் அநேக காயங்கள்பட்டு மிக்க இரத்தம் ஒழுகி ஆர்லேண்டோ நடக்கச் சக்தியில்லாதவனாய் தன் தமையனோடு "நான் வேடிக்கையாக ரோஸலிண்டு என்று கூப்பிடும் கனிமீட்டினிடம் என் சமாசாரத்தைச் சொல்லிவிட்டுவா என்று சொன்னான். ஆலிவர்

அப்படியே கனிமீட் வீட்டுக்குப் போய்த் தன்னை ஆர்லேண்டோ மரணத்தினின்றும் தப்புவித்ததையும், தான் அவனை முன்னே குரூரமாக நடத்திய விஷயத்தைப்பற்றி மிக்க விசனித்ததையும், இப்பொழுது தானும் தன் தம்பியும் ஒற்றுமையாயிருப்பதையும் பற்றிப் பேசினவுடன், கனிமீட் பக்கத்திலிருந்த அலினா, ஆலிவர் சொன்னவார்த்தைகளினால் மனமுருகி அவன்மேல் காதல்கொண்டாள். அலினா தன்மேல் காதல்கொண்டதைத் தெரிந்து ஆலிவர் தானும் அவள்மேல் ஆசைகொண்டான். ஆர்லேண்டோ இப்படி சிங்கத்துடன் மிக்க உக்கிரகமான சண்டைசெய்தானென்பதை கனிமீட் கேட்டவுடன் மூர்ச்சைபோய்க் கீழேவிழுந்தான். கொஞ்சநேரமானவுடன் எழுந்து தான் வேடிக்கையாக அப்படி மூர்ச்சைபோனதுபோல் விழுந்ததாக ஆலிவரோடு சொன்னான்.

இதையெல்லாம் பார்த்துக் கடைசியில் ஆலிவர் தன் தம்பியினிடம் வந்து நடந்த சங்கதியெல்லாம் விவரமாய்ச் சொல்லித் தான் அலினாவின் மேல் காதல்கொண்டிருப்பதையுந் தெரிவித்தான். ஆர்லேண்டோ அதைக் கேட்டு "சரிதான் எனக்கும் இஷ்டந்தான். நாளைத்தினமே உன் கலியாணம் நடக்கட்டும்; இங்கிருக்கும் அரசனையும் அவர் நண்பர்களையும் கல்யாணத்துக்கு வரச்சொல்லி நான் அழைக்கிறேன்; நீபோய் அவளோடு பேசி ஏற்பாடு செய்துகொள்" என்றான்.

இது இப்படியிருக்க கனிமீட் ஆர்லேண்டோவின் தேகஸ்திதியைப் பற்றி விசாரிக்க அவனிடம் வந்தபொழுது ஆர்லேண்டோ, தன் தமயனாகிய ஆலிவர் அலினாவின்மேல் காதல்கொண்டிருப்பதையும், தான் மறுநாள் அவர்கள் விவாகத்தை நடத்த எண்ணியிருப்பதாகவும், சொல்லி, பிறகு வேடிக்கையாக தனக்கும் ரோஸலிண்டுக்குங் கூட அத்தினமே விவாகம் நடந்தால் நன்றாயிருக்குமென்றுஞ் சொன்னான். இதைக்கேட்ட கனிமீட் ஆர்லேண்டோவின் கோரிக்கைப்படியே தான் தன்சிற்றப்பனிடம் கற்ற மந்திர சக்தியால் ரோஸலிண்டை அவ்விடங் கொணர்ந்து அவனுக்கும் ரோஸலிண்டுக்கும் விவாகம் நடப்பிப்பதாக வாக்குத்தத்தஞ் செய்தான். கனிமீட் சொல்வதை ஆர்லேண்டோ நம்பாமலிருப்பதைக் கண்டு, "நான் சொல்லியபடி நிறைவேற்றாவிட்டால் என் உயிரைவிடுகிறேன்; உனக்கு ரோஸலிண்டை நாளைத்தினமே விவாகஞ்செய்து கொள்ள இஷ்டமிருந்தால் நல்லுடைகளைத் தரித்துக்கொண்டிருக்கும்போது, இங்கிருக்கும் அரசனையும், அவர் நண்பர்களையும் கல்யாணத்துக்கு அழைத்துவா" என்று வற்புறுத்தினான்.

மறுநாள் கல்யாண காலத்தில் ஆலிவர் தன் அலினாவுடன், அவ்வரசனுக்கு எதிரில் வந்திருக்க, அவ்விடம் ஆர்லேண்டோவும் தனியாக வந்தான். ஆனால் எல்லாரும் கனிமீட், ஆர்லேண்டோவைப் பரிகாசஞ்செய்கிறானென்று, எண்ணினார்கள். அவ்விடமிருக்கும் அரசன், ஆர்லேண்டோ தன் குமாரத்தியை விவாகஞ் செய்துகொள்ளப் போகிறானென்று தெரிந்து, ஆர்லேண்டோவைக் கூப்பிட்டு, அவ்விடையனாகிய கனிமீட் தன் குமாரத்தியாகிய ரோஸலிண்டை அவ்விடங் கொணர வல்லவனாவென்று கேட்டான். ஆர்லேண்டோ ஒன்றுஞ் சொல்லாமல் இருக்க, கனிமீட் அரசனிடஞ் சென்று "ஐயா, தேவரீர், நான் தங்கள் குமாரத்தியாகிய ரோஸலிண்டை இவ்விடங் கொணர்ந்தால் அவளை ஆர்லேண்டோவுக்கு விவாகஞ் செய்து கொடுக்க உங்களுக்கு இஷ்டந்தானாவென்று கேட்க, அரசன் தனக்கு அப்படிச்செய்வது மிக்கச் சந்தோஷமென்றான். உடனே கனிமீட் அலினாவை யழைத்துக் கொண்டு, அப்புறம் போய்த் தான், தனது புருஷ உடுப்புகளை யெறிந்து விட்டுப் பழைய அழகிய ரோஸலிண்டாக ஆயினாள். அலினாவும் தனது நாட்டுப்புறத்து உடுப்புகளை மாற்றித் தனக்குள்ள விலையுயர்ந்த ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு பழைய ஸீலியாவாக ஆயினாள்.



இவர்கள் போனவுடன், அரசனும் ஆர்லேண்டோவும், கனிமீட்டே ரோஸலிண்டாக விருப்பாளோ வென்று சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கையில், ரோஸலிண்டும் ஸீலியாவும் அவ்விடம் வந்தார்கள். இதைப்பார்த்து அங்கிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கையில், ரோஸலிண்டு தன் தகப்பனுக்கு நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்று, உடனே அடிமுதல் நடந்த விருத்தாந்தங்களை விவரமாகச் சொன்னாள்.

அரசன் இவற்றையெல்லாங் கேட்ட பிறகு, எண்ணியபடி ஆர்லேண்டோவுக்கும் ரோஸலிண்டுக்கும், ஆலிவருக்கும் ஸீலியாவுக்கும் மிக்க குதூஹலத்தோடு அக்காட்டிலேயே விவாகத்தை நடத்தினான். பிறகு எல்லாரும் வேடிக்கையாய்ச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, ஒரு தூதன் அவ்வரசனது நாடுகள் மறுபடியும் அவனுக்கே திரும்பி வந்தன வென்ற நல்லசமாசாரத்தைக் கொணர்ந்தான்.

அது எப்படியாயிற்றெனில் இவ்வரசனது நாட்டைக் கைப்பற்றிய இவனது கொடிய தம்பி இவன் காட்டில்கூட மிக்கச் செல்வாக்குடையவனாக இருக்கிறானென்பதைப் பற்றிப் பொறாமைகொண்டு இவனைக் கொன்றுவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் ஒருபெரிய சேனையோடு அக்காட்டுக்குச் சென்றான். அக்காட்டிற்குள் நுழையுமிடத்தில் இருந்த ஓர் சன்னியாசி இவனுடன்பேசி நல்லயோகமார்க்கங்களை போதித்ததின்மேல் இவன் தான் அந்நியாயமாய்க் கைப்பற்றிய நாடுகளைத் தன் தமையனுக்கே கொடுத்து விட்டதாகச் சொல்லும்படி ஒரு தூதனை யனுப்பிவிட்டுத் தானும் ஓர் சன்னியாசியாய் அங்கே ஓர் குடிசையில் தபசு செய்து தன் காலத்தைக் கழித்தான்.

இச்சங்கதியைக் கேட்டவுடன் ரோஸலிண்டும் ஸீலியாவும் மிக்க சந்தோஷித்து எல்லாரும் தங்கள் அரண்மனைக்குப் போய்ச்சுகமாய்க் காலங் கழித்து வந்தார்கள்.

(முற்றிற்று.) E. சுப்பிரமணியம். பி. ஏ.

# இந்து சீமாட்டிகளுக்கு இயைந்த நிருபம்.

"சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோலொன்று வேண்டும்".

அருமையும் பெருமையும் வாய்ந்த அன்புள்ள சகோதரிகளே!

சென்ற மாதம் உங்களுக்கு நான் கடிதமெழுதின பிறகு நேர்ந்த சில
அசந்தர்ப்பங்களால் சற்று முன்பாக இக்கடித மெழுதி முடிப்பதற்குத் தடை
ப்பட்டது. ஆயினும் உங்களுடைய நல்லெண்ணத்தாலும், கடவுளுடைய கரு
ணைப் பெருக்கத்தாலும் நான் இதுவரைக்கும் க்ஷேமமாகவே யிருந்து இக்
கடிதம் வரைய நேரிட்டதற்காக உங்கள் பால் மிக்க நன்றி பாராட்டியும்
ஐயன் அருளை நினைந்து நினைந்து துதித்துத் துதித்து அவன் புகழ் பாடியு
மிருக்கின்றேன். நீங்களும் சுகசந்தோஷ சித்தர்களாகவே யிருந்து நான் எழு
துவதாய்ச் சொன்ன கடிதம் ஏன் இன்னும் வரவில்லை யென்று எதிர் பார்த்
திருக்கிறீர்களென்றும் கோருகிறேன்.

சில நாட்களுக்கு முன் இங்கு ஒரு வெகு விநோதமான சம்பவம் நடந்
தது. அதை உங்களுக்கு வெகு அவசியமாய்த் தெரிவிக்க வேண்டுமென்று
எனக்குத் தோன்றுகின்றபடியால், அதற்கென்றே சிறிது அவசரத்துட
னும் வெகு ஆவலுடனும் இக்கடிதம் எழுதலானேன். செலவுடன் செலவு
கந்தப்பொடி காற்பணம் என்பார்கள். அதைப்போலவே, வேலையுடன் வேலை,
தொல்லையுடன் தொல்லை இஃதொரு சள்ளை யென்று வெறுப்பாக வேனும்
இக்கதையைக் கேட்பீர்களென்று விண்ணப்பஞ் செய்து கொள்ளுகிறேன்.

காலம் கெட்டுவிட்டது. பஞ்சம் அதிகமாய் விட்டது. மழையே யின்றி
மண்வாரி பெய்யவும், பனியே பெய்து குளிரெடுத்துப் போகவும் தலைகீழ்ப்
பாடம்படிக்கும் இந்த நாட்களில் ஓர் நாள் அதிகாலையில் வீதியில் வந்து நின்
றேன். குறுகிய உடலினர் கூனிய முதுகினர் ஒருவர் வயோதி மிகுந்து உள்
ளம் அயர்ந்து ஊக்கம் குன்றி ஏக்கம் வளர்ந்து அன்னடை வீட்டருகில் ஆயா
சமாய் வந்து நின்றார். நின்றவர், முன்னும் செல்லாது பின்னும் நகராது, அங்
கேயே நின்று, ஆட்டம் போட்டு வாட்டம் காட்டி சற்றுப்போது உற்றுப்
பார்த்து, எத்திக்கும் சுற்றி விழித்துச் சும்மா விழித்தார். "ஐயா, என்ன
பார்க்கிறீர்கள்" ? என்று கேட்டேன். அவர் என் பெயர் கூறி "அவர் இரு
ப்பது எங்கே" என்று கேட்டார். "என்ன சமாசாரம் ?" என்றேன். உட
னே, சூரியன் உதயமாவதற்கு நேரம் இன்னு மதிக மிருந்தும், ஒரு சூரியன்
பளிச்சென்று தோன்றினான். விருத்தாப்பியர் முகத்தில் வீராவேசம் வெகு
கோரமாய் விளங்கிற்று. ஏற்கவே அவர் பஞ்சடைந்த கண்களில் தீப்பொறி
பிடிக்க, ஐயா உள்ள கண்ணும் கொள்ளையாய்ப் போமோ என்று சிந்தைகல
ங்கி நொந்து நின்றேன். அவர்க்குக் கோபம் அதிகமாய் விட்டது. "நான்
ஒன்று கேட்டால் நீர் ஒன்று சொல்கிறீரே ? அவர் இருப்பது எங்கே என்
றால், என்ன சமா-சா-ஆ ஆ-ர-ர-ம் என்-ன்-று நீ-இ-இர் ஏவவன் கேவெட்க
வேவவண்டும் ?" என்று தத்தித் தமோறி உளறிக் குளறினார்.



"ஐயா, தாங்கள் கேட்ட பேர்வழி நானாயிருந்தபடியால் தான் அவ்
வாறு யான் கேட்டேன்; அது பிழையானால் தாங்கள் என்னை மன்னிப்பது
மன்றி, இவ்வாறு கோபியாதிருக்கவும் வேண்டுகிறேன்" என்றேன்.

"அப்படியா! அப்படியா!" என்று அவர் ஒரு ஆனந்த உறுமல் உறு
மினார்.

எனக்கு அப்பொழுது ஒன்றுந் தோன்றவில்லை "இஃதென்ன அதி
காலையில் வந்த அவதார புருஷர், பைத்தியம் பிடித்த பண்டார ஸ்வாமிகள்
போல் பேசுகிறாரே" என்று யோசித்து நின்றேன். உடனே கிழவர் வெகு
சாவதானமாய் அதிநிதானமாய் வாயைத் துடைத்துத் தொண்டையைக்கனை
த்து "ஏன் ஐயா, தெரியுமா, அற்பசியும் கார்த்திகையும் வருணபகவான் கரு
ணைபுரியாது, மழையே யில்லாது அழையே மிகுந்து விட்டது! நீர் தானே
சென்ற மாதம் மாதர் மனோரஞ்சனியில் உமது சகோதரிகளுக்கு நிருபம்
எழுதினவர் ?" என்றார்.

இதேது கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலிருக்கிறதே! பிள்
ளையாரைப் பிடித்த சனி அரசமரத்தையும் பிடித்து விட்டதே! நம்மேல்
வந்த கோபம். நம் கடிதத்தின் மீது திரும்பி மழையின் மேலும் போய்விட்
டதே! என்று உள்ளுக்குள் நினைத்துக்கொண்டு "ஆம்! பெரியவரே! அவ
சரத்தால் எழுத்துப் பிழைகள் அச்சுப் பிழைகள் நேர்ந்திருக்கக்கூடும், இல
க்கணப் பிழைகள் இருந்தாலும் இருக்கக்கூடும். தாங்கள் மன்னிக்கவேண்
டும்" என்றேன்.

உத்ஸவம் பார்த்து உல்லாசமாயிருப்பவனுக்கு திடீரென்று படீரென்று
அதிர் வெடிகேட்டுப் பிதிர் கலங்குவதுபோல் என்னைத் தூக்கிப்போடும்படி
அப்பெரியவர் "உன் இலக்கணத்தைக் கொண்டுபோய் ஒலக்கடத்தில் போடு,
அடுப்பங்கரையில் அடங்கி ஒடுங்கி வாழவேண்டியவர்களுக்குப் படிப்பு வே
ண்டுமென்று முடுக்காய்ச் சொல்ல வந்தாயே! உன்னைப்போல் பாவிகள் எத்
தனையோ பேர். இவ்வாறு பேசுவதால் தான், மேகம் மறைந்து தாக மெடு
த்து விட்டது!" என்று துடிதுடிப்புடன் பேசினார்.

அந்த சமயம் கார்த்திகை நாட்களா யிருந்தபடியால், "படபடா" குச்
சுகள் கிழிக்கிறார்களென்று பசங்களெல்லாம ஓடி வந்தார்கள்—கிழவர் கோப
த்தைப் பார்த்தாவது நாமும் கற்றுக்கொள்ளலாமென்று சூரியனும் புறப்
பட்டான்.

இவ்வளவு அல்லோல கல்லோல மானதும் நான் அப்பெரியவரை நோ
க்கி, "ஐயா! தாங்கள் சிறிது சாவதானமாய்ப் பேசவேண்டுகிறேன்; சிறிது
ஆலோசனை செய்திருந்தால் இவ்வளவு அனர்த்தம் நேர்ந்திராதே! மழை
பெய்யவில்லை யென்று தாங்கள் மாளாப்போரிடுகிறீர்கள். சீர்திருத்தம் பேசு
வதால் தான் சீர் குலைந்து விட்டதென்று தாங்கள் சொல்லுகிறீர்கள். வய
தானவர்களெல்லோரும் வழக்கத்திற்கே அடிமைகளென்றும் இளம்பிராயத்
தினர் நவீனத்தின் மீதே நாட்டமுடையவர்களென்றும் ஒரு ஆங்கிலப் பழ
மொழி கூறுகிறதே! அதைப்போல் தாங்கள் வழக்கம், வழக்கம் என்னும்
சேற்றில் அழுந்தி அனர்த்தம் பேசுகிறீர்கள். இத்தனை நாள் பண்டிதர்கள்
அனேகர் பெண்கல்வி முதலியன வேண்டும், வேண்டும் என்று நியாயவாயி
லாய்க் காண்பித்திருக்கவும்—சிறிது மன்னிக்கவேண்டும்—இவெல்லாம்

இராமாயணம் கேட்டும் பொழுது விடிந்ததும் ராமருக்குச் சீதை என்னவே
ண்டும்? என்று பேசுவதுபோல், இத்தனை உபந்நியாசங்களுக்குப் பிறகும்,
இத்தனை தர்க்கத்திற்குப் பிறகும், இத்தனை நூல்கள் வெளி வந்த பிறகும்,
நான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று முன்னும் பாராமல் பின்னும்
பாராமல் நியாயம் ஓராமல் நடுநிலைமை தேராமல் உடும்புப்பிடியாய்ப் பேசு
கிறீரே! உம்மைப்போல் பலபேர் உலகத்திலிருப்பதால் மழைபெய்யவில்லை
யென்று கூறுதல் மரபல்லவோ? என்று சிறிது ஆத்திரமாய்ப் பேசினேன்.

பெரியவருக்கோ யோசனை வந்து விட்டது. கொஞ்சம் விழித்து, "கல்
வியினால் அகங்காரம் வாராதோ? கல்வியினால் அகங்கரிப்பவரைக் கண்ட
தில்லையோ நீவிர்?" என்றார்.

"நல்லது, ஐயா, ஆண்பிள்ளைகளுக்கு மாத்திரம் அகங்காரம் ஆகுமோ?
அவர்களை மாத்திரம் நீங்கள் எதற்காகப் படிக்கச் சொல்லுகிறீர்கள்." என்
றேன்.

"ஆண்பிள்ளைகள் அகங்காரப் பட்டாலும் படலாம். அடங்கி ஒடுங்கி
நடுங்கி யிருக்கவேண்டிய மடந்தைமார், அகங்காரப்படலாமா? ஆண்டை
மார்களுக்கு முன் அடிமைகள் தலை யசைக்கலாமா?" என்றார்.

"வெகு வேடிக்கை, பெரியவரே, தாங்கள் சொல்வது! என்னுடன்
சண்டை போடுவதற்கே போலும், நொண்டி நொண்டித் தாங்கள் முண்டாசு
கட்டி இங்குவந்தீர்கள். தாங்கள் கர்நாடக மனிதராகப் பேசுகிறீர்கள். கல்
வியில் அகங்காரம் வாராது. அகங்காரம் என்பது ஆண்பிள்ளைகளுக்கும்
அடாது பெண் பிள்ளைகளுக்கும் கூடாது. கல்வியால் அகங்கரித்தவர்கள்
கிடையவே கிடையாது. தாங்கள் சொல்வது, பரீக்ஷை பாஸ் பண்ண சிலர்,
நாய்போற் குலைத்து பேய்போல் அலைந்து, அர்த்தமில்லாமல் நர்த்தனம்
பண்ணி, இழிவே யடைந்து பழியே பூண்டு கோரமாகவே ஆரவாரித்து,
"தாகுஜந்தரி, தாகுகுந்தரி" என்று நாட்டுப்புறத்தார் ஆட்டம் போடுவது
போல், சட்டம் விட்டு வெட்கம் கெட்டுக் கொட்டம் கொட்டு முட்ட முடிய
ஆடிப்பாடும் ஆங்கிலப் படிப்பாளிகள் சிலரைத் தான். இவர்களுக்கு உண்
மைக் கல்வியில்லை யென்றே சொல்லவேண்டும். இதனால், "எல்லப்பசெட்டி
லக்க ஏகலக்க" என்று எல்லாரையும கர்விகள் என்று தாங்கள் சொல்வது
தர்க்கவிரோதம். அன்றியும் அகங்காரம் என்பது இன்னது என்று தாங்கள்
தெரிந்துகொண்டீர்களா? இருக்கட்டும், அது வேறு விஷயம்" என்றேன்.

இதையெல்லாம் சாவதானமாய்க் கேட்ட சாந்தஸ்வரூபிகள், சிறிது
தலையசைத்துப் புன்சிரிப்புடன், "ஐயா, உமது வயது சிறியதாக விருப்பி
னும், பேச்சு மாத்திரம் மூச்சுவிடாமல் பெரிதாக விருக்கிறதே! நீர் சொல்
லும் கல்வி வரிசையில்லாத கல்வியாக விருக்கிறதே! அது ஆகாசதாமரை,
முயற்கொம்பு, குதிரைக்கொம்பா? அது என்ன கல்வி சொல்லவேண்டும்"
என்று கூறி விதித்திண்ணையில் வந்து வீற்றிருக்க வாரம்பித்தார்.

அதன்மீது அவர் சாவதானத்திற்காக அவர்க்கு வந்தனோபசாரங்கள்
செய்து அவர்பால் மிக்க நன்றி பாராட்டி, அவர் நன்மைக்காகவும் பிறர்நன்
மைக்காகவும் என் நன்மைக்காகவும் எனக்குத் தெரிந்தவரைக்கும் சுருக்க
மாய் பின்வருமாறு சொல்லத் தொடங்கினேன்.

கல்வி யென்பது கடலுக்குச்சமானம். "கல்வி கரையில" வென்றார்,
ஒருவர். ஒவ்வொன்றையும் ஆராய்ந்தறிந்து, புத்தியை விருத்திசெய்து கொள்



வதே கல்வியின் முழுநோக்கமாயிருக்கிறது. தங்களைப்போல் பிடிவாதம்
செய்வதல்ல கல்வியின் கோட்பாடு. உண்மையைக் கண்டறிவதே உறுதிப்
பாடென்று அதன் முடிவாகிறது. ஆகவே, நம் தேகம் தொடங்கி நமக்குப்
புறம்பாயுள்ள பலவஸ்துக்களின் தன்மைகளையும், நமக்கு உள்ளாகி அகல
நிகள முதலிய பரிமாணம் ஒன்றுமில்லாமல் சித்ஸ்வரூபமாய் விளங்குகிற
மனோதர்மங்களையும் கூடிய வரையில் தெரிந்து தகுமான வழியில் நடந்து
கொள்ள நமக்குக் கற்பிப்பது கல்வியேயாகும். தற்காலம் வஸ்துக்களின்
லக்ஷணங்களைத் தெரிந்துகொள்ளுமாறு ஐரோப்பிய தத்துவ சாஸ்திரிகள்
மேற்படி பொருள்களைப் பல வகுப்புகளாகப் பிரித்திருக்கிறார்கள். பூமியின்
மாறுபாடுகளை பூதத்துவ சாஸ்திர வழியாகவும், பொருள்கள் ஒன்றுடன்
ஒன்று கலந்து மாறுபடும் வகைகளை ரசாயன சாஸ்திர வழியாகவும், வான
லக்ஷணங்களை வானசாஸ்திர வழியாகவும், கற்பிப்பதோடு இப்படிப் பல
பிரிவுகள் உண்டாக்கி அறிவை அபிவிர்த்தி செய்கிறார்கள். இவை ஒவ்வொ
ன்றிலும் சிறிது சிறிதாயினும் ஒவ்வொருவர்க்கும் தெரிந்திருப்பது அவசி
யமாயினும் எல்லாவற்றையும் ஒருவர் அறிந்திருப்பது அனேகமாய் அசாத்
தியமாயிருக்கிறது. ஆதலால், இவ்வித கல்வி வெகு பலன் கொடுப்பதாயி
னும் சில சில பேர்களுக்கே அவைகளில் ஆசையுண்டாவது மல்லாமல்
அவர்களுக்கே அது சாத்தியமாகிறது. இதைப் "பகுபடு கல்வி" யென்று
நாம் கூறுவோம். இவ்வித கல்வியல்லாமல் சாஸ்திரிகட்கும் சாஸ்திரிகள்
அல்லாதவர்களுக்கும் எல்லார்க்கும் ஒப்ப முடிந்து, மேற்கூறிய "பகுபடு
கல்விக்" கியைந்து அதனோடு மாறுபடாது எல்லோருக்கும் அவசியமாக
யாவர் மனதையும் வசீகரித்து உன்னத நிலைக்குக் கொண்டுவருவது யாதெ
ன்றால், நமக்குள் இலக்கிய நூல்கள் என்றும் ஆங்கிலர்களுக்குள் (Lite-
rature) (லிடரேசர்) என்றும் வழங்குவது தான். கம்பராமாயணம், திருக்
குறள் முதலிய நூல்களும், தற்காலத்திற் கேற்ப இயற்றப்படும் சில அருமை
யான வசனநூல்களும் இதன்பாற் பட்டன.

இவை பகுபடா நூல்கள் என்று யாம் கூறுவோம். ஏனென்றால் வான
சாஸ்திரிக்காயினும் சரி, பூதத்துவ சாஸ்திரிக்காயினும் சரி, சாஸ்திரியல்லா
தவனுக்கும் சரி—எல்லோருக்கும் உலக நடைகளை நன்கு கூறும். இவை
வெகு அவசியமானவை. இதைப்பற்றித் தான் அட்டிஸன் (Adision) என்
னும் ஆங்கில வித்துவான் "கல்வி முக்கியமாய் தர்மதத்துவத்திற்கும் நல்
லொழுக்கத்திற்கும் வழிகாட்டி" யென்று வரைந்திருக்கிறார்.

இப்படி நான் பேசிக்கொண்டிருக்கும் போதே பெரியவர் தடாரென்
றெழுந்து தன் பெயர் "தூண்டுகோல்" என்று சொல்லிக் காற்றாய்க் கரை
ந்து மறைந்து விட்டார்.

என் அருமைச் சகோதரிகளே! மேற்கூறிய விர்த்தாந்தத்தை, உங்களு
க்குத் தெரிவித்துக்கொண்டேன். எனக்கோ இப்பொழுது வெகு சிறிதும்
சாவகாசமே யில்லை. கூடிய சீக்கிரத்தில் உங்களுக்கு மறுபடியும் கடிதமெழு
துகிறேன். இதைப்பற்றி யாதாயினும் சந்தேகமிருந்து இப்பத்திரிகை வாயி
லாய் நீங்கள் கடிதமெழுதினாலும், நான் மிக்க வந்தனம் செய்வதோடு அவை
கட்கு என்னால் தெரிந்தவரைக்கும் பதிலெழுதவும் சித்தமாயிருக்கிறேன்.

இங்ஙனம்,
உங்கள் உண்மைச் சகோதரன்.
T. பக்தவத்ஸலம், பி. ஏ.

# ருஷியா-ஜப்பான்யுத்தம்.

நமதுபத்திரிகையில் ஆகஸ்டுமாதத்தில் ஜப்பான் சக்கிரவர்த்தினியாரைப் பற்றி எழுதியிருந்தோம். அத்தேசத்திய ஜனங்களின் மதக்கொள்கை ஆசாரம் முதலியவைகளைப்பற்றி மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் வெகுநன்றாக தமது புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். அப்புத்தகத்தைப் படித்தால் அவர்களைப்பற்றி நன்றாகத் தெரிந்துக்கொள்ளலாம். நாம் இப்பொழுது அத்தேசத்தாருக்கும் ருஷியா தேசத்தாருக்கும் நடந்துவரும்யுத்தத்தைப்பற்றி சுருக்கமாக உங்களுக்குத் தெரிவிக்கிறேன். இம்மாதப்பத்திரிகையில் ஜப்பான்தேசத்திய சக்கிரவர்த்தி, சக்கிரவர்த்தினி அவர்களின் அழகான உருவப்படங்களுள.

1903ளு ஆகஸ்டுமீ ஜப்பானியருக்கும் ருஷியருக்கும் மஞ்சூரியாவைப்பற்றி சிற்சில கேள்விகள் உண்டாயின. ஜப்பானியர்கள் சீனராஜ்யத்தின் சுவதந்திரத்தைக் கெடுக்கக்கூடாதென்றும் மஞ்சூரியாவை சீனர்களுக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்றும வற்புறுத்திசொன்னார்கள். ருஷியர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை. ஆறுமாதம் இவ்விஷயத்தைப்பற்றி வாதம் நடந்தது. முடிவுக்கு ருஷியர்கள் வரவில்லை. ஜப்பானியர்கள் தங்கள் சைனியத்தைப் பலப்படுத்தி யுத்தத்திற்கு ஆயத்தமாகவே யிருந்தார்கள். ருஷியர்களு மிவ்விதமே இரகசியமாய் சகல வேலைகளையும் செய்துவந்தார்கள். மகா யுக்திசாலியும், தேசாபிமானமுமுள்ள ஜப்பானியர்கள் 1904ளு பிப்ரவரிமீ 6உயன்று யுத்தம் செய்யத்தொடங்கி போர்ட் ஆர்தர் சமீபத்திலிருந்த அவர்கள் கப்பலைத் தாக்கினார்கள். ருஷியர்களும் இவர்களுடன் சமமாக யுத்தம்செய்யப் பிரயத்தனப்பட்டார்கள்; ஆனால் அவர்களுக்கு ஈடாகவிருக்கமுடியவில்லை. ஜப்பானியர்கள் யாலுநதியைத்தாண்டி அவர்களுடன் கடும்போர்செய்து ஜயமடைந்தார்கள். பின்பு இரகசியமாயும் சுறுசுறுப்பாயும் யுத்தத்திற்கு வேண்டிய சில ஏற்பாடுகளைச் செய்துக்கொண்டு போர்ட் ஆர்தரைத் தாக்கி துறைமுகத்தை தங்கள் கைவசமாக்கிக்கொண்டார்கள். பிறகு நன்ஷாங் என்றவிடத்தில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. இதிலும் ருஷியர்கள் தோல்வியடைந்தார்கள். லியோயாங் என்றவிடத்தில் பெருத்த போர் உண்டாயிற்று. ருஷியர்கள் தோல்வியடைந்ததும் தவிர அநேக யுத்த வீரர்களையும் சாமான்களையும் இழந்தார்கள். ஜப்பானியர்களுக்கும் அதிக நஷ்டமுண்டானபோதிலும் ஜயமுண்டானதைப்பற்றி யாவரும் மகிழ்ந்தார்கள். சிலகாலஞ் சென்றபின்பு ருஷியர்கள் ஷாஹோ என்றவிடத்தில் ஜப்பானியர்களுடன் போர்புரிந்ததில் தோல்வியடைந்தார்கள். ருஷியர்கள்பக்கம் 70,000 மடிந்தார்கள், ஜப்பானியர்கள்பக்கம்சுமார் 20,000,மடிந்தார்களாம்.

தரைச்சண்டையில் ஜயமடைந்தது போதாதென்று எண்ணி ஜப்பானியர்கள் போர்ட்ஆர்தரைத்தாக்கி அநேக ருஷியர்களுடைய கப்பல்களை நாசமாக்கியதுடன் அநேக முக்கியமான கோட்டைகளை யெல்லாம் பிடித்துக் கொண்டே வருகிறார்கள். சமீபத்தில் மீடர்ஹில் என்ற கோட்டையையும் பிடித்ததாகத் தெரிகிறது. பால்டிக்கப்பல் பிரிடிஷ் ஜாதியாராகிய மீன் பிடிக்கும் செம்படவர்களை தாக்கிக்கொன்றது பெருத்த அநியாயம் என்று யாவராலும் எண்ணப்பட்டது. பிரிடிஷாருக்கு மிகக் கோபமுண்டாயிற்று. இப்பொழுது இவ்விஷயத்தைப்பற்றி தக்க கனவான்கள் விசாரணைசெய்து



வருகிறார்கள். ஜப்பானியர்களோ சத்தியத்திற் குட்பட்டவர்களாய் நியாயமான மார்க்கத்தில் யுத்தம்செய்து வருகிறார்கள். ருஷியாவோடு சண்டையாரம்பித்து, யுத்தச்செலவுக்குப் பணம்வேண்டுமென்று தெரிந்ததும் ஜப்பானிய ஸ்திரீகள் தங்கள் நகைகளையெல்லாம் யுத்தநிதிக் குபயோகப்பட அனுப்பிவிட்டார்கள். பிரபுக்களும் தனவந்தர்களும் தங்கள்நிதிக்குவியல்களையெல்லாம்கொடுத்துவருகிறார்கள். ஒவ்வொரு ஜப்பானியரும் யுத்தஞ்செய்ய தயாராயிருக்கிறான்.ஸ்திரீகளோ யுத்தகளத்தில் காயம்படுபவர்களுக்கு சிகிச்சைசெய்துகொண்டு வருகிறார்கள். இதுவல்லவோ தேசாபிமானம்! இப்படியல்லவோ நாம் நமது தேசத்தில் பொதுவிஷயங்களில் சுயநன்மையைக் கருதாமல் உழைக்கவேண்டும்! ஸ்திரீகளை விருத்திக்கும் கொண்டுவரவும் வேண்டும்.

## சமாசாரக்குறிப்பு.

20-பெண்கள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு பெங்களூரில் இவ்வருஷம் சென்றிருக்கிறார்கள்.

***

கள்ளிக்கோட்டையிலுள்ள பி. ஜி. எம். பெண்கள் பாடசாலைக்குமாதம் ரூ-120 கொடுப்பதாக சென்னை கவர்ன்மெண்டார் உத்திரவளித்திருக்கிறார்கள்.

***

இம்மாதப்பத்திரிகையில் நமது சகோதரியாராகிய பண்டிதை மாது ஸ்ரீ அசலாம்பிகையம்மாளவர்கள் அனுப்பிய பெண்கல்விக்குள்ளபிணி, என்ற விஷயம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதை ஒவ்வொருவரும் செவ்வனே கவனிக்கவேண்டியதே,முக்கியமாய்ஆண்பாலார் கவனித்தல்மிகஅவசியமேயாம். நமது பத்திரிகைக்கு இனிவழக்கம்போல் இம்மாதும் இம்மாதின் சகோதரியாராகிய மாதுஸ்ரீ உருக்குமணி அம்மாளும் விஷயங்கள் எழுதுவார்கள்.

***

பம்பாயில் இவ்வருஷம் ஜனசாரசிருத்தசபையும், பொருட்காட்சி சபையும், காங்கிரஸ் மகாசபையும் வெகுவிமரிசையாக நடத்தப்படும்.ஜனசாரசிர்திருத்த சபையில் பரோடாமகாராஜா அவர்கள் பேசுவார்கள். பெண்கல்வி விருத்தி, சமுத்திரயாத்திரை, விவாகவயதை உயர்த்தல், ஜாதி உட்பிரிவுகளில் விவாகம் செய்துகொள்ளல், இந்துவைதம்பெண்களின் ஸ்திதியை உயர்த்துதல் முதலியவைகள் தக்ககனவான்களால் பேசப்படுமாம். நமதுசென்னையிலிருந்து பிரதிநிதியாக அநேக கனவான்களும் போவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

***

பரோடா மஹாராஜா அவர்கள் கல்கட்டாவுக்குச் சென்றிருந்தகாலத்தில் ஜனங்கள் மஹாராஜாவையும் மஹாராணியாரையும் வரவழைத்து நல்வரவு கூறினார்கள். மகாராஜா அவர்கள் தமது மனைவியாராகிய மகாராணியாருக்குப் பதிலாக பின்வருமாறு பதில்உரைத்தார்கள்:—இந்தியாவில் இப்பொழுது ஜனசாரவிஷயத்தில் அநேக மாறுதல்கள் உண்டாகின்றன. மாதர்கள் முன்காலத்திலிருந்தமாதிரி யிருக்க இஷ்டப்படுவதில்லை. அவர்கள் தங்

கள் சுயபுத்திப்பிரகாரம் நடக்கவும் சுதந்தரம் பெறவும் விரும்புகிறார்கள். தங்கள் ஸ்திரீகளை கௌரவப்படுத்தியே வருகிறார்கள். மனைவியை அர்த்தாங்கி என்று சொல்வதே இப்பொழுதிருக்கும்படியான ஸ்திதியைக்குறிக்கும். ஸ்திரீ ஒருபாகம், புருஷன் ஒருபாகம், இருவருஞ்சேர்ந்து சுகதுக்கங்களுக்கு உள்ளாகிறார்கள். ஆகையால் இந்தியர்கள் தங்கள் ஸ்திரீகளை தங்களைப்போல் மேன்மை அடையும்படி செய்யவேண்டியதுதான் அவர்களின் கடமை. பெண்களுக்கு கல்விபுகட்டி அவர்களை உன்னதபதவிக்குக் கொண்டுவர ஒவ்வொரு இந்தியரும் முயலவேண்டும்.

* * *

மிஸஸ் அன்னி பெஸண்டும் பெண்கல்வியும்.

மிஸஸ் அன்னி பெஸண்டு இங்கிலண்டிலிருந்து மீண்டு ஸ்ரீ காசிக்கு வந்து "ஸெண்ட்ரல் ஹிந்துகாலேஜ் பத்திரிகையின் ஆசிரியத் தொழிலைத் தாம் ஏற்றுக்கொண்டுவிட்டார். அவர் இம்மாதத்துப் பத்திரிகையிற் பின்வருமாறு எழுதுகின்றார்:—"நெடுநாளாக வெகு ஜாக்கிரதையுடன் சிந்திக்கப்பட்டதாகிய பெண்கல்வி முயற்சி சீக்கிரத்தில் கைகூடிவருவதைக் காணலாம். ஸ்ரீ காசியில் ஸெண்ட்ரல் ஹிந்து பெண்பாடசாலைக் கட்டிடம் அநேகமாய் முடிந்துவிட்டது. அடுத்தமாதத்திலேயே பள்ளிக்கூடம் திறந்துவிடக்கூடுமென்று நம்புகின்றேன். டில்லியில் ஓர் பெண்பாடசாலை திறக்கப்பட்டிருக்கின்றது. அதன் விவரங்கள் சமீபத்தில் வெளியிடப்படும். லாஹூர் பள்ளிக்கூடம் செம்மையாக நடந்துவருகின்றது. நாள்தோறும் 60 அல்லது 70 பெண்கள் ஆஜராகிவருகின்றனர்" நமது நாட்டுப் பெண்கல்வி விஷயத்தில் மிஸஸ் அன்னிபெஸண்டு எடுத்துவரும் முயற்சியின் பொருட்டு நாம் அவருக்கு நன்றி கூறுகின்றோம். இந்தப் பெருந்தரும விஷயத்தில் அவரது எண்ணங்களெல்லாம் கைகூடுமென்று நம்புகின்றோம்.

வேடிக்கை.

தாயார்:—முத்து.என்னடா உன்தங்கைக்கு பக்ஷணம் கொடு.

முத்து:—அம்மா! எங்கே வருவாளோ என்று எண்ணிக்கொண்டே சாப்பிட்டுவிட்டேன்.

# விடுகதைகள்.

என் பிரியமான சகோதரிகளே! அடியில் கண்ட விடுகதைகளுக்கு பொருள் சொல்வீர்களாக.

(1) காலே யிரண்டுண்டு நடக்கறியாள் இருகண்ணுண்டு சிமிட்ட வகையறியாள் அந்தமெல்லி நல்லாள்—பால்குடிக்க வகையறியாள் சிலபாக்கும் தின்பாள். ஆனையறிந்து சொன்னவருக்கு செம்பொன் ஆயிரமே.

(2) வட்டமாய் சந்திரனைப்போலிருக்கும் கொட்டுவார்கையில் கூத்தாடும், சுட்டால் அரஹரா என்று சொல்லும்.

(3) நாலுகால் படைத்திருக்கும் நடப்பதில்லை. நம்மைப்போ விருடையுண்டாம் பிடிப்பதில்லை. ஏலவே பின்னலுண்டாம் முடிப்பதில்லை. இவையிடையே கண்களுண்டாம் பார்ப்பதில்லை கோலமுடி அரசருக்கும் எல்லோருக்கும் கொடுத்திருக்கு முட்காருதலை. தவர்ப்பதில்லை சுகுணபோதினியே செப்புவாயே.

(4) ஓட்டாலே வீடுகட்டி வுள்ளே பிரிசுத்தி நாட்டாருக்கெல்லாம் நல்ல கரியும் சோறும் தரும்.

பி. பி.



1904-௵ செப்டெம்பர்௴ வெளியான பத்திரிகையில் சௌபாக்கியவதி கோகிலாம்பாள் எழுதிய விடுகதை விடை.

1-வது கதை. அரசனிடத்திற் கொண்டுபோன பழங்கள் 7. அதில் 1-வது வாசல் சேவகருக்குக் கொடுத்த பழம் 4. 2-வது வாசல்சேவகருக்குக் கொடுத்த பழம் 2. 3-வது வாசல் சேவகருக்குக் கொடுத்த பழம் 1.

2 வது கதை. 1-வது ஓடத்தில் மனிதனும் ஆடும் ஏறி ஆற்றின் அக்கரைபோய்ச் சேர்ந்தார்கள் 2-வது புல்லுக்கட்டையும் அப்படியே கொண்டுபோய்ச் சேர்த்து வரும்போது ஆட்டை இக்கரை கொண்டுவந்து நிறுத்திவிட்டு.

3-வது கதை. புலியைக்கொண்டுபோய்ச் சேர்த்தான்.

4-வது கதை. ஆட்டைக்கொண்டுபோய்ச் சேர்த்தான்.

1-வது வரி மதுராபுரி.
2-வது வரி திலோத்தமை.
3-வது வரி ராமசாமி.
4-வது வரி ஸ்டீல் டிராங்.

இதன் முதலெழுத்தைச் சேர்க்க மதிராஸ்.

எஸ். ஞானவடிவுடையம்மாள்.

அதிவிநோத கணித வினா.

8 லிருந்து 3. ஐ யெடுத்தால் 5-ம். 5 லிருந்து 2. ஐ யெடுத்தால் 3-ம். எப்படி மிஞ்சுமோ அதுபோலவே, பத்திலிருந்து பத்தையெடுத்தால் மூன்பத்தும் தங்கியிருப்ப தெங்ஙனம்?

மைழன். சிலோன்.

பழமொழி விடுகதை வினாவுக்கு விடை.

1904௵ ஜூன்௴ 7-ம். புஸ்தகம் 6-ம. வால்யம் 138-ம். பக்கத்தில் பிரசுரஞ்செய்த மேற்கண்ட வினாவுக்கு விடை.

பட்டகாலிலே படும், கெட்ட குடியேகெடும்

ருக்குமணி.
காவேரீபாக்கம்.

# புத்தகவரவு.

சந்யாஸி கீதம்: இது ஸ்ரீமத் விவேகாநந்தசுவாமிகள் இயற்றியருளிய ஆங்கில கீதத்திற்குத் தமிழ்மொழி பெயர்ப்பாக மதுரைமாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்ராஸநாதிபதியும், நமது பத்திரிகைக்கு நிருபம் எழுதிவரும் ம-ா-ா-ஸ்ரீ எம். கோபாலகிருஷ்ணையர் இயற்றியது.

இது அகவலில் நன்றாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது; கர்மத்தைப் பற்றி விசேஷமாக சொல்லப்பட்டிருக்கிறது; இது யாவருக்கும் பிரயோசனமேயாம்.

* * *

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர்பதிகம் உண்ணாமுலையம்மைபதிகம்.

இது திருஎவ்வுளூர் இராமசாமிசெட்டியாரவர்களால் இயற்றப்பட்டு அஸ்தலத்தின் தீபதரிசனச் சரித்திரச்சுருக்கத்துடன் ம-ா-ா-ஸ்ரீ அ. மஹாதேவசெட்டியாரால் ரிப்பன்பிரஸில் பதிப்பிக்கப்பட்டது. இதில், அருணாசலேஸ்வரர்பதிகம், உண்ணாமுலையம்மைபதிகம், தீபதரிசனச்சரித்திரச்சுருக்கம் முதலியவைகள் வெகு நன்றாகவிருக்கின்றன. இது பக்திமான்களுக்கு இன்றியமையாத புஸ்தகமென்றே சொல்வோம்.

## விசேஷ அறிவிப்பு.

புதிய வருஷம் பிறந்து 12 மாதங்கள் ஆய்விட்டன. இம்மாதப் பத்திரிகையுடன் ஆறுவது வருடம் பூர்த்தியாகிறது. இன்னும் நமது சந்தாதாரர்களில் சிலர் நாளது 1904-ம் வருஷத்திய சந்தா பாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். சந்தாவை முன்பணமாகவே அனுப்பவேண்டியிருக்க இன்னும் அனுப்பாமல் இருப்பதால் நமக்கு வீண் சிரமமும், கஷ்டமும் நேரிடுகின்றது. சந்தாவை சரியாய் அனுப்பினால் தானே நமது சஞ்சிகை கஷ்டமின்றி சரியாய் நடந்துவரும். இந்த சஞ்சிகை கிடைத்தவுடனாவது தயவுசெய்து பத்திரிகையையும் அபிமானித்து நடத்தி வருவீர்களென்று நம்புகிறோம். அப்படி சந்தா அனுப்பாதவர்களுக்கு அடுத்த ஜனவரி௴ முதல் பத்திரிகை யனுப்புவது நிறுத்தி பாக்கியை ஏஜண்டு மூலமாக வசூல் செய்யப்படும். ஏஜண்டினுடைய செலவு ... பாக்கிக்காரர்கள் கொடுக்கும்படியாய் நேரிடும். நமது சந்தாதாரர்கள் தகுந்த கனவான்களாதலால் இது ஓர் பெரிதல்ல. மேல்விலாசம் மாறும்பொழுது உடனே தெரியப்படுத்த வேண்டும். பத்திரிகை சேராவிட்டால் உடனே தெரியப்படுத்தவும்.

## THE TAMIL ZENANA MAGAZINE.

We gladly reproduce the following appreciative notice of the Magazine appearing in the current number of the *Indian Ladies' Magazine*:—

"This is a high class monthly magazine devoted to the cause of female education in Southern India. It was started some five years ago and has been all along doing excellent educative work in Indian homes. Conducted in Tamil—the chief vernacular of South India—it appeals to a very numerous class of our women. Its remarkable cheapness—the annual subscription is Rs. 1-12-0 with thin and Rs. 2-8-0 with thick paper—is calculated to place it within the easy reach of as many as could read Tamil. We have been carefully noting the articles appearing in the magazine, and from what we have seen we may safely recommend the publication to the patronage and support of the enlightened public. It is a healthy, homely and instructive companion to zenana ladies. The handling of subjects is practical and popular and admirably adapted for the useful education of Indian ladies. The Editor avoids religious philosophy and abstruse subjects of that sort which are only too common in the vernacular periodicals of the day. We wish him every success in his noble endeavour in a field where there is so much to be done and so few to come forward. By reason of the simplicity and purity of the style and subject-matter, the magazine is bound to be an invaluable help to girls in schools, and we trust it will soon enjoy the encouragement and aid it richly deserves."

"The current number of the *Magazine* is highly interesting as usual, and the style of excellence is well kept up. We are particularly struck with the taste and sound morals of the articles that are published. The article on "Parents' Advice" by the Editor is an amplification of a choice verse from Sakuntala and must prove highly edifying to the female readers of the Magazine. The printing and general get-up leave, as usual, nothing to be desired." *Hindu, Madras.*

## மாதர் மனோரஞ்சனி சந்தாவிபரம்.

| | |
|---|---|
| வருட சந்தா தபால் சார்ஜ் உள்பட வெளியூர் உள்ளூராருக்கு ... | 1-12—0 |
| 6-மாதத்திற்கு ... ... ... ... ... | 1—0—0 |
| தனிப்பிரதி ... ... ... ... ... | 0—2—6 |
| மேல் நாட்டாருக்கு ... ... ... ... | 2—4—0 |
| திக் பேபர் வருட சந்தா ... ... ... ... | 2—8—0 |

முன்பணம் அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

திருவல்லிக்கேணி
15—12—04.

மானேஜர், மாதர் மனோரஞ்சனி ஆபீஸ்,
வீரராகவமுதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

Printed at the Ripon Press, Madras, & Published by the Proprietor.
C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.


# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-VII. | Madras: January 1905. | No-1.

புத்தகம் எ. | சென்னப்பட்டணம்: ஜனவரி௴ 1905. | இல-1.


## ஸாவித்திரி யென்னும் பதிவிரதையின் சரித்திரம்.

மத்திர தேசத்தரசனாகிய அசுவபதி யென்பவன் அநேகநாளாய்த் தவம்புரிந்து, தேவர்களின்கிருபையால் ஒருபுத்திரியை அடைந்தான். அப்பெண்ணுக்கு ஸாவித்திரி யென்னும் பெயரிட்டான். அவள் மிக்க அழகுடையவளாய், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்துவர, ஜனங்கள் இவளைத் தாங்கள் செய்த புண்ணியத்தினால் தங்களுக்கு மேலுலகத்தினின்றும் அனுப்பப்பட்ட தேவியாகப் பாவித்து பூசித்துவந்தார்கள்.

தாய்தந்தையர்களுக்கு முதிர்ந்த வயது வந்தவுடன் ஒருநாள் அசுவபதி தன் குமாரத்தியைக் கூப்பிட்டு, "அம்மா, ஸாவித்திரி, உனக்கு யுக்த வயது வந்துவிட்டதே; இனி நீ போய் உனக்குத் தக்க கணவனைத் தேடிக்கொள்ளலாம்" என்றான். பிறகு ஸாவித்திரி தன்தகப்பனது பரிவாரங்களுடன் கணவனைத் தேடப் புறப்பட்டுப்போயினாள்.

இவள் தன் காரியத்தை முடித்துக்கொண்டு, திரும்பி தன் ஊருக்கு வந்தபொழுது, நாரத மகாமுனிவர் தன் வீட்டில் வந்திருந்தார். அவரும் தன் தகப்பனும் இருக்கும் சமயத்தில் ஸாவித்திரி அவ்விடம்போய், சத்துருக்களால் துரத்தப்பட்டும், வயது முதிர்ந்து கண் பஞ்சடைந்தும் ஒரு சந்நியாசியாகவிருந்தும் காலங்கழித்து வருபவனான சாளுவதேசத்து அரசனாகிய த்யுமத்சேனனது புத்திரனாகிய சத்தியவான் என்பவனைத் தான் மணம் புரிய ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னாள். அதைக்கேட்டு நாரதமுனி "ஐயோ! அரசனே! உன் மகள் ஸாவித்திரி, தெரியாத்தனமாய் ஒரு பெரும் பிழை செய்துவிட்டாள்" என்றார். அதற்கு அரசன் "அஃதென்னை? அவனுக்கு, வலிமை, தயை, தைரியம் இவை யில்லையா என்று" வினவ, நாரதர் "இவற்றில் ஒன்றினும் அவன் குறைந்தவனில்லை. ஸத்தியவான், சூரியனைப்போல் பலத்தையும், ஒளியையும், ரந்திதேவனைப்போல் உதாரத்து

வத்தையும், சிபியைப்போல் நியாயமார்க்கத்தையும், யயாதியைப்போல்
மேன்மையையும், சந்திரனைப்போல் அழகையும் உடையவன். ஆனால் அவன்
ஆயுள் மிக்க கொஞ்சமானதால், அவ்வளவு நற்குணமுள்ள ஸத்தியவான்
இன்னும் ஒரு வருஷத்துக்குள் இவ்வுலகம் விட்டுப்போய் விடுவான்'' என்
றார். இதைக்கேட்டவுடன் சாவித்திரி இடிவிழுந்தாற்போ லாயினாள். ஆயி
னும் தைரியமாய் "ஒருவள் தனது மனதை ஒருவனிடம் மாத்திரமே செலு
த்தவேண்டுமாகையால், நான் ஸத்தியவானிடமே செலுத்திவிட்டேன். என்
மனதை அவனுக்கே கொடுத்துவிட்டேன். இனி மற்றொருவனிடஞ் செலுத்
தேன்'' என்றாள். நாரதர், தான் போகும்போது ஸாவித்திரியைப்பார்த்து
"தீர்க்கசுமங்கலி பவா'' என்று ஆசிர்வதித்துச் சென்றார்.

உடனே தூதர்கள் தியூமத்சேனனிடம் போய் இச்செய்தியைத் தெரி
விக்க, அவன் அதற்குச் சந்தோஷப்பட்டு அப்படியே தன் குமாரனுக்குச்
சாவித்திரியை மணம் புரிவிக்கச் சம்மதித்தான். மிக்க குதூஹலத்தோடு
விவாகமும் நடந்தது.

பிறகு, சந்தோஷமாகச் சாவித்திரி தன் அரண்மனையைவிட்டுத் தன்
மாமனார் இருக்கும் குடிசைக்குச்சென்று வயதுமுதிர்ந்த அவருக்கும் தன்
மாமியாருக்கும் வேண்டிய பணிவிடையைத் திருப்தியாகச் செய்துவந்தாள்.
தன் கணவன் மனதுக்குத் தக்கபடி நடந்தும், அவன் மகிழும்படி இனிய
சொற்கள் பேசியும் அவன் மனதைக் கவர்ந்தாள். அப்படியிருந்தும் அவள்
மனதில், அன்று நாரதர் சொல்லிய வார்த்தைகள் நெருப்பைப்போல் எரி
ந்துகொண்டேயிருந்தன. நாரதர் குறிப்பிட்ட ஒருவருஷத்தில் ஒவ்வொரு
நாளையும் எண்ணிக்கொண்டேவந்தாள். கடைசியில் ஸத்தியவான் இறப்ப
தற்கு நான்குநாட்களே யிருந்தன. அப்பொழுது ஸாவித்திரி அம்மூன்று
நாளும் உபவாசமிருந்து தபம்செய்து தேவர்களிடம் வரம் பெறவேண்டு
மென்று தீர்மானித்து, ஒரு சொட்டுத்தண்ணீர்க்கூட குடிக்காமல் உபவாசி
த்துக் கடவுளைத் தியானித்தாள். நான்காவது நாளாகிய அக்கொடிய தினத்
தின் காலையில் எழுந்திருந்து தன் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு,
அக்காட்டிலுள்ள தேவர்களையெல்லாம் போய் நமஸ்கரிக்க, அவர்கள் இவளை
"தீர்க்க சுமங்கலீபவா'' என்று ஆசீர்வாதஞ் செய்தார்கள். பிறகு, ஸத்திய
வான் வழக்கம்போல் அன்றையதினமும், ஒரு கோடரியெடுத்துக்கொண்டு
காட்டிற்குள் வேலைக்குப்போகும்போது, ஸாவித்திரியும் அவன்பின்னேயே
சென்றாள். ஸத்தியவான், இவள் வருவதைப்பார்த்து ஆச்சரியப்பட்டு "நீ
என் வருகிறாய்'' என்று கேட்க, அவள் "இக்காட்டிலுள்ள வேடிக்கைகளை
யெல்லாம் பார்க்கவேணுமென்கிற ஆசையிருக்கிறது'' என்று சொல்லி அவ
னைத் தொடர்ந்தாள். இவர்கள் போகும்போது வழியிலுள்ள மலைகள், தடா
கங்கள், நதிகள், பலவிதப் பட்சிகள், மிருகங்கள் முதலியவைகளைப் பார்த்து
ஆனந்தித்துப் பிறகு ஸத்தியவான், அடுப்பின் விறகுக்காக அங்குள்ள சில
காய்ந்த மரக்கிளைகளை வெட்டிக்கட்டிக்கொண்டும், சில பழங்களைப்பறித்துத்
தன் பையிற் போட்டுக்கொண்டும் வந்தான். உடனே திடீரென்று அவனு
க்கு ஒரு கொடிய தலைவலியும், மயக்கமும்வர, அச்செய்தியை அவன் ஸா
வித்திரியோடு சொல்லிக் கீழே படுத்துக்கொண்டான். ஸாவித்திரி உடனே
கீழே உட்கார்ந்து அவனது தலையைத் தன் தொடையின்மேல் வைத்துக்
கொண்டு மிக்க துக்கத்தோடு, என்ன ஆகப்போகிறதோவென்று காத்தி



ருந்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் அவள், தன்னெதிரில் கறுத்தமேனி
யும், சிவந்த ஆடையும், ஸத்தியவானையே யுற்றுப்பார்க்கும் கண்களையு
முடைய ஒரு பயங்கரமான உருவத்தைக் கண்ணுற்றாள். உடனே அவள்
எழுந்திருந்து வந்தனஞ்செய்ய, அவ்வுருவம் "ஸத்தியவான் வாழ்நாள் இன்
றையோடு முடிந்தது. நான் சாவுக்கு அதிபதியாகிய எமன் என்பவன். ஸத்
தியவான் மிக்க புண்ணியசாலி யானதினால் என் தூதர்களை யனுப்பாமல்,
அவன் உயிரைக் கொண்டுபோக நானே வந்திருக்கிறேன்'' என்று சொல்
லிக்கொண்டு, ஸத்தியவான் சரீரத்திலிருந்து அவன் உயிரைப் பிரித்து எடுத்
துக்கொண்டு தென்திசைநோக்கிச் சென்றான். ஸாவித்திரியும் அவன் பின்
னே சென்றாள். அவளைப்பார்த்து யமன் "ஸாவித்திரி, நில்லு, நீ போய் உன்
கணவனுக்கு இனி ஆகவேண்டிய தகன சமஸ்காரங்களைச் செய். நீ செய்ய
வேண்டிய கடமையைச் செய்தாய். மானிடர்கள் வரக்கூடிய எல்லைவரையில்
நீ வந்துவிட்டாய், இனி வரக்கூடாது. திரும்பிப்போ'' என்றான். ஸாவித்
திரி அதற்கு 'என் கணவன் போகுமிடத்திற்கு நானும் போகிறேன். அது
தான் மனைவிக்குள்ள நீதி'' என்றும், மற்றும் கற்றோர்களிடத்தில் அறிந்த
தர்மசாஸ்திரங்களை, ஒரு சிறு பிள்ளைபோற் சொல்லிக்கொண்டும், பிடிவாத
மாய் யமன்பின்னேயே சென்றாள். மறுபடியும் யமன் திரும்பி "என் கண்
மணியே! நீ சொல்லுவதெல்லாம் சரியே. ஆனால், உன் கணவன் உயிரைத்
தவிர, வேறு நீ எதைக்கேட்டாலும்நான் கொடுக்கிறேன்'' என்றான். ஸாவித்
திரி அதற்கு "காட்டிலிருக்கும் என்மாமனாருக்குக் கண்பார்வையைக்கொடு
க்கவேண்டு''மென்று கேட்க, யமன் "அப்படியே கொடுத்தேன். இனி நீ
திரும்பிப்போ'' என்றான். ஸாவித்திரி கேளாமல் "நான் என் கணவனோடு
செல்லுவேன்'' என்று சொல்லிப்போக, யமன் மற்றொரு வரனைக் கொடுப்
பதாக ஒப்புக்கொண்டான். இத்தடவை ஸாவித்திரி, தன் மாமனார் அவரது
இழந்த ராஜ்ஜியத்தைப் பெறும்படி வரம்பெற்றாள். மறுபடியும் யமனைப்
பலவிதமாக ஸ்தோத்திரஞ்செய்து அவனது மனதைக் களிப்பித்து அவனி
டம் தன் தகப்பனுக்கு நூறுகுமாரர்களும் தனக்கு நூறுகுமாரர்களும் உண்
டாகக் கடவதென்னும் மற்றிரண்டு வரன்களை யடைந்தாள். இந்நான்காவது
வரனைப்பெற்றவுடன், இவள் ஒருவன் தர்மம்செய்வதினால் அடையுநன்மை
யையும், ஒருவன் செய்யவேண்டிய கடமைகளையும்பற்றிப் பேசி, யமன் மன
தை யுருகும்படிசெய்தாள். யமன் இவளது புத்திகூர்மையையும், வாக்கு சா
துர்யத்தையும்பற்றி வியந்து மற்றொருவரன் கொடுப்பதாகத்தீர்மானித்தான்.
உடனே ஸாவித்திரி,யமன் முன்னால் தனக்குநூறுபுத்திரர்கள் உண்டாகக்கட
வது என்று அநுக்கிரகித்திருப்பதினால் அவர்களைப்பெறுவதற்கு ஸத்தியவா
னைத்தவிர மற்றொரு புருஷனை யடைவது தர்மமல்லவென்று சொல்லித்
தன் கணவனாகிய ஸத்தியவானது உயிரைக் கொடுக்கும்படி வாதாடினாள்.
கடைசியில் யமன் தான்கொடுத்தவரன் உண்மையாவதற்கு, ஸத்திய
வானது உயிரை ஸாவித்திரிக்காகக் கொடுக்கும்படி நேரிட்டது.
பிறகு, ஸாவித்திரி, தன் கற்பு, அன்பு இவைகளின் வலிமையால் யம
னையும்வென்று இறந்துபோன தன் கணவனையும் பெற்று மிக்க செல்வமும்
செல்வாக்குமடைந்து தனது நூறு புத்திரர்களுடன் சவுக்கியமாக வெகு
நாள் வாழ்ந்திருந்தாள்.

அன்புள்ள சகோதரிகளே! நீங்களும் ஸாவித்திரியைப்போல் உண்மை
யாகவும் கணவனிடத்து அன்பும் உடையவராயின் உங்கள் வாழ்நாளில்

ஒருவித இடுக்கண்ணுமின்றி, மிக்க செல்வத்தை யடைந்து இகபர சுகங்களை யநுபவிப்பீர்க ளென்பதற்குச் சந்தேகமேயில்லை.

# தேனும், தேனீயும்.

(6-வது புத்தகம் 268-வது பக்கத் தொடர்ச்சி.)

## X. அரசியில்லாக் கூட்டிற்கு ஓர் அரசி அளித்தல்.

சில சமயங்களில் சிற்றீக்கள் தம் சொந்த முயற்சியினாலாவது, அரச மாளிகையினின்றாவது ஒரு இராணி ஈ கூடப் பெறக்கூடாமற் போகவேண்டி வரும். எங்ஙனமெனில், நாம் முற்கூறியபடி, குறித்த சில தினங்களுக்குள் பக்குவம் அடையக்கூடிய பெண்புழுக்கள் எக்காலத்தும் தயாராய் இருந்து கொண்டிருக்கும் என்பது என்ன நிச்சயம்? அன்றியும், மனிதரால் தேன் கொள்ளப்படும்பொழுது, கூட்டில் உள்ள ஈக்கள் பலவிதத்திலும் நாசமுறக் கூடுமே. அங்ஙனம் நாசமுறுவனவற்றுள் இராணி ஈயும் ராஜமாளிகை வாசிகளும் பெண்புழுக்களும் அடங்குமன்றோ? அப்பொழுது உயிர்க்கஞ்சி ஓடித் தப்பிய ஈக்களின் கதி என்ன?

இவ்விருவகை சம்பவங்களும் நிகழும் காலங்களில் அவை இன்னும் யாதாயினும் ஓர் கூட்டை நோக்கிச்சென்று அக்கூட்டில் உள்ள ஈக்களுடன் சேர்ந்து வாழ்ந்து காலங்கழிக்கும் என்று எண்ணுகிறீர்களோ? இல்லை. இல்லை. அங்ஙனம் செய்வது சிறிதும் முடியாத காரியம். ஏனெனில் ஒரு கூட்டில் உள்ள ஈக்கள் அதே கூட்டில் உள்ள பிற ஈக்களுடன் தான் யாதொரு வித்தியாசமுமின்றி ஒத்துவாழுமே யன்றி அந்நிய கூட்டு ஈக்களைக் கிட்டவரவொட்டா. அவை வந்து சேர்ந்த மாத்திரத்திலேயே கொட்டுண்டு சாகவேண்டியது தான். ஆதலின் உயிர்க்கஞ்சி ஓடும் ஈக்கள் என்ன செய்யும்? ஏற்கனவே தேன் கொள்ளப்பட்டதும் காலியாய்க் கிடப்பதுமான ஓர் கூடு சமீபத்தில் தென்பட்டால் அதனுள் போய் அடையும் அல்லது புதுக்கூடுகளை கட்டும் என வைத்துக்கொள்வோம். ஆயினுமென்ன? அக்கூட்டில் அவை தங்கி வசிக்கமுடியுமோ? ஏனெனில், அதில் மட்டும இராணி ஈ வது? ஆதலின் அவை அங்கிருந்து கிளம்பி வேறிடம் தானே செல்லவேண்டிவரும்?

ஆனால் தேனீ வளர்ப்போர் ஓர் வகைச் சூழ்ச்சியால் அவை தாம் முன்னிருந்த கூட்டை விட்டு ஓடாமல் அதிலேயே இருந்து வாழும்படி செய்வர். "தேனீ வளர்ப்போர்" என்ற வார்த்தையைக்கேட்ட மாத்திரத்திலேயே அநேகருக்கு வியப்பும் நகைப்பும் உண்டாகலாம். "தேனீக்களையும் வேலைமெனக்கட்டு வளர்ப்பவர் உளரா? அப்படி உள்ர் எனினும் அவற்றை வெகு சிரமப்பட்டாவது கூட்டிற்குள் இருக்கவேண்டுமென்ற அக்கறை ஏன்?" என அநேகர் எண்ணலாம். உண்மையிலேயே ஈக்களை சர்வஜாக்கிரதையுடனும் மேற்றிசையோர் போற்றி வளர்த்து வருகின்றனர். அங்ஙனம் அவர்கள் வளர்த்து வருவது, அவை கிளி, நாய், பூனைமுதலிய பிராணிகள்போல் கொஞ்சி விளையாடக்கூடியவை என்பதுபற்றி அன்று; பின்னை அவற்றை வளர்த்துப் பல்குவித்துப் பலகூடுகள் உண்டாக்கித் தாமும் மிக்க தேன்பெற்று வியாபாரம் செய்து பெரும் லாபம் அடையக்கருதியே. இவை தம் கூட்டை



விட்டு ஓடிப்போய் விடுமாயின் இவர்கள் தேன் பெறுவது எங்ஙனம்? ஆதலின் இவர்கள் தொழில் வீண் தொழிலாகாதே.

இனி அவர்கள் எவ்விதச் சூழ்ச்சியால் அவற்றைக் கூட்டிற்குள் இருத்துகின்றன ரெனப்பார்ப்போம்: சிற்றீக்கள் எவ்விதத்திலும் இராணி ஈ பெறக்கூடாத விஷயம் அவை எழுப்பும் ஓர் வகை அதிதுக்கப் பேரிரைச்சலால் தேனீ வளர்ப்போர் அறிவர். இவ்விரைச்சல் கேட்ட 30-மணி நேரத்திற்கெல்லாம் அவர்கள் தாம் வளர்க்கும் வேறொரு கூட்டில் உள்ள இராஜமாளிகையினின்றும் பருத்துக்கொழுத்துப் பக்குவமடைந்த ஓர் பெண் ஈயையேனும் அல்லது இராணியையேனும், அதன் கொட்டுக்குட்படாமல் ஓர் வகைச் சூழ்ச்சியால் எடுத்து அதனை அரசி இழந்த ஈக்களுக்கு அரசியாக்குவர்.

ஆனால் "இது என்ன சாமானிய காரியமா? வேறு கூட்டீக்களை வெருட்டிக்கொல்லும் ஈக்கள் இவ்வந்நிய கூட்டு இராணியை மட்டும் அங்கீகரித்திடுமோ?" என சிலர் ஐயமுறலாம். இவற்றிற்கு அதனை அங்கீகரித்திட மனமில்லைதான். ஆயினும் தேனீ வளர்ப்போர் ஓர் உபாயம் செய்து, அவற்றைத் தாம் கொடுக்கும் அரசியினை அத்தியந்த சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் அங்கீகரித்திடச் செய்வர். அவ்வுபாயம் தான் யாதெனப் பார்ப்போம்.

அநேகர் சிறுநுண்ணிய கம்பிகளால் அதிநேர்த்தியாய்ப் பின்னப்பட்ட சின்னஞ்சிறு சுண்டெலிகளைப் பிடிக்கும் பொறிகளைப் பார்த்திருக்கக்கூடும். தேனீ வளர்ப்போரிடம் பார்வைக்கு இச்சுண்டெலிக்கூடு போன்றுள்ளதும், ஆனால், அதினும் அதிநுட்ப வேலைப்பாடுள்ளதுமான ஓர் கம்பிக்கூடு இருக்கும். இக்கூட்டினுள் நாம் சற்று முன்கூறிய அரசியை (அல்லது பெண் ஈயை) அதனுடன் பழகிய அதன் பரிவாரங்கள் சிலவற்றுடன் பிடித்துப்போட்டு அக்கூட்டின் துவாரத்தை மெழுகினால் அடைப்பர். பின்னர் இக்கூடு சர்வஜாக்கிரதையுடனும் ஈக்களிருக்கும் தேன் கூட்டிற்கு முற்புறத்தில் வைக்கப்படும். அப்பொழுது அக்கூட்டின் காவல் ஈக்களிற் சில வாசனையால் புதிய ஈக்கள் சமீபத்தில் உள்ளதை உணர்ந்து அவற்றைக் கொல்லுமாறு அதிக உக்கிரகத்துடனும் கொட்டும். கொட்டி என்ன பிரயோஜனம்? கம்பி இருந்து காக்கும்பொழுது உள்ளே இருக்கும் ஈக்களுக்குச் சிறிதேனும் சேதம் விளையுமா? தம்முயற்சியும் எண்ணமும் வீணானது கண்டு அக்காவல் ஈக்கள் வெகு மூர்க்கமாய்க் கூட்டினை மொய்த்துத் தம் முழுபலத்துடனும் அதனை நெருக்கும். இச்செய்கையால் கல்லைக் கிள்ளிக் கைநோவுறுவார் போல் அவ்வீக்களாய் விடும். முடிவில் இவற்றிற்குக் கோபத்திலும் ஆச்சரியமே மேலிட்டு கொட்டுவதையும் நெருக்குவதையும் ஒழித்து பிரமித்து அக்கம்பிக் கூட்டினுள் உள்ள ஈக்களைப் பார்த்தவண்ணமாகவே இருக்கும். அகஸ்மாத்தாய் அவற்றின் கண்ணுக்கு அரசி புலப்படும். புலப்படவே அவை அரசிக்குச் செய்யவேண்டிய சகல மரியாதையுடனும் பணிந்து அதனை வணக்க ஒடுக்கத்துடன் சூழும். அரசியின்றித் தவித்த தமக்கு அரசி கிடைத்த நற்செய்தியை இவை உடனே மின்னலினும் அதிதீவிரமாய்ப் பரப்பும். தக்ஷணமே கூட்டீக்கள் யாவும் ஒருங்கு கூடி ஆலோசித்து இவ்வீயை அரசியாய் ஏற்கும். பின்னர் இவை கம்பிக்கூட்டை அதிநுட்பமாய்ப் பரிசோதித்து அடைத்துள்ள மெழுகுதுண்டைப் பற்றி எடுத்து இராணி ஈயையும் அதன் பழைய பரிவாரத்தையும் வெளிப்படுத்தும். இது முதல் இவ்வீ இக்கூட்டின் அரசியாகிக் குடும்ப அபிவிருத்தி செய்து தன் கடமையைச் சரிவரச் செலு

த்திவரும். அதன் பரிவாரமும் அதனுடன் இருக்க இடம் பெறும், ஒருவேளை அப்பரிவாரம் தம் புதிய இடத்தை விரும்பாது பழைய கூடுநோக்கி ஓடினும், இராணி ஈ எக்காலத்தும் நம்பிக்கை மோசம்செய்யவே செய்யாது! இப்படிச்சொல்வதால் இதன் பரிவாரம் ஓடிவிடுமோ எனில், அதுவும் கூடாது. ஏனெனில், இப்புதியகூட்டு ஈக்கள் தம்மை வெகுநேரம் நெருக்கிய காரணத்தால் அவற்றின் ஓர்வகை வாசனையை அவைபெற்று விடுகின்றன. ஆதலின் இவை இப்புதிய வாசனையுடன் தமது பழைய கூடு புகின் அதிலுள்ள ஈக்கள் வாசனை பேதத்தை உணர்ந்து வேற்றீக்களென எண்ணிக்கொன்றே விடும். தவிரவும், இவற்றிற்குத் தம் இராணியை விட்டுப் பிரிய மனம் வாராது.

அரசி இழந்த கூட்டிற்கு ஓர் அரசி கொடுப்போர் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுளது. அஃதென்னவெனில், இராணியை இழந்த 30-மணி நேரத்திற் கப்புறம் தான் புதிய இராணி ஈ அளிக்கப்படவேண்டும். ஏனெனில் இவை தம் மரித்த இராணியை மறக்கக்குறைந்தது அவ்வளவு காலம் செல்லுமாம். இடையில் கொடுக்கப்படின் அரசி கொல்லுண்டு சாகும் என்பது திண்ணம்.

## XI. சோர ஈக்கள்.

நாம் முற்கூறியபடி ஈக்கள் அரசமாளிகையினின்றாவது, தமது சுயமுயற்சியினாலாவது அல்லது தம்மை வளர்ப்போர் மூலமாகவாவது ஓர் அரசிபெறக் கூடாவிட்டால் ஈக்கள் யாவும் சுறுசுறுப்புக் குன்றி பெரும்சோம்பேறிகளே யாகும். தவிரவும் அவைகளுள் ஒற்றுமை யென்பது இராது. ஒன்றோடொன்று பொருது மாளும். அல்லது சோரஈக்களாகும். ஈக்கள் சோரத்தனத்திற் பிரவர்த்திக்க வேறு காரணங்களும் உள. அவை என்னவென்று பார்ப்போம்!

பஞ்சகாலத்தில் நாம் பாடுபட்டு அலைந்தும் பட்டினியால் வருந்த நேருவதுபோல் ஈக்களும் தமக்குப் போதுமான ஆகாரம் பெறக்கூடாமல் திண்டாடக்கூடிய காலம்வரும். அக்காலத்தில் இவை கொழுந்துவிட்டெரியும் பசித்தழல் அவிக்குமாறு கூட்டம் கூட்டமாய்த் தம் கூட்டினின்றும் வெளிக்கிளம்பி வேறொரு கூட்டைத்தாக்கிக் காவல் ஈக்களை வென்று கூட்டினுட் புகுந்து அதில் உள்ள தேன் முதலியவற்றைக் கொள்ளையடித்து அவற்றைத் தமது உறைவிடம் எடுத்துச் செல்லமுயலும். அப்பொழுது கொள்ளை யடிக்கப் பெறும்கூட்டீக்கள் தமது முழுபலத்துடனும் எதிரிகளை எதிர்த்துச் சண்டைசெய்யும். எதிர்க்கும் ஈக்கள் வலிகுறைந்திருப்பின் அவை கொட்டுண்டு ஹாரத்தப்படும். அவை வலி மிக்கதாயின், காவல் ஈக்களுக்குத்தப்பி உட்புகுந்து ஆங்கு காணப்படும் ஆகாராதிகளைத் திரட்டிக்கொண்டு வெளிக்கிளம்பி தமது கூடுக்குதாம் கொண்டு வந்ததை அக்கூட்டீகளுக்கு அளிக்கும். பின்னர், அவை முன்னினும் அதிகமாய் வெளிக்கிளம்பி தாம் கொள்ளையடித்த கூடுநோக்கியே திரும்பி பல்வழியாகவும் அதனுட்புகும். புகுந்த பின்னர் அவை செய்யும் முதல் வேலை இராணியைக் கொல்வதே. (ஏனெனில் அப்பொழுது தான் கூட்டீக்களுள் ஒற்றுமையிராது என்று அவை நன்றாய் அறியும்) இதன் பின் கூடுகொள்ளைதான். பாவம்! கூட்டில் உள்ள ஈக்கள் என்ன செய்யும்! தாமும் கொள்ளை ஈக்களோடு சேர்ந்து தமது கூட்டையே கலைத்து



அழித்து, கொண்டமட்டும் தேனை உண்டு அவ்வீக்களுடன் சேர்ந்து வசிக்கும். இவை இங்ஙனம் முதற் கொள்ளையில் சித்திபெறுமாயின், மானிடச் சோம்பேறிகளைப்போலவே கொள்ளைப் பொருளிலேயே பிரியம் கொண்டு சோரஈக்களாகி வயிறு வளர்க்கும்.

சில சோரஈக்கள் யாதானும் ஓர் கூட்டின் முன்புறத்தில் நின்றுகொண்டு கூட்டிற்குத் தேன் கொண்டுவந்து கொண்டிருக்கும் ஈக்களை வழிமறித்து நிறுத்தி பயத்தினாலும் பலத்தினாலும் அவை கொண்டுபோகும் தேனைத் தம் வாயில் கக்கும்படி செய்யும். அங்ஙனம் செய்வதால் அவற்றின் மணத்தை இச்சோர ஈக்கள் பெற்றுவிடும். உடனே இவை தைரியத்துடன் கூட்டினுட்புக ஆரம்பிக்கும். வேற்றுமண மின்மையாலும், தேனுடன் கூட்டிற்குள் நுழைவதாலும் காவல் ஈக்கள் ஏமாந்து இவை தமது இனத்து ஈக்களே என எண்ணிச் சும்மா உள்ளே செல்லவிடும். (கூட்டில் இருந்து தேன் எடுத்துச்சென்றால் அல்லவோ சந்தேகத்திற் கிடமுண்டாகப்போகிறது ?)

சில வேளைகளில் பலாத்காரம் ஏதுவுமின்றியே தேன் களவுபோவதுண்டு. எங்ஙனமெனில் ஒரு கூட்டு ஈக்கள் வாய்வைத்துக்குடிக்கும் மலர்கள் புற்கள் முதலியவற்றிலேயே வேறு கூட்டீக்களும் வாய்வைத்துக் குடிப்பதுண்டு. அப்படிச் செய்வதால் இவ்விரு கூட்டீக்களும் ஒரே மணமுடையனவாய் இருக்கும். ஆதலின் இவ்விரு கூடுகளில் ஒரு கூட்டு ஈ மற்றொரு கூட்டுக்குள் நுழைந்து கொள்ளையடிக்குமாயின் அவற்றைச் சோரஈக்கள் எனக் காவல் ஈக்கள் தெரிந்துகொள்ளா.

ஈக்கள் தனித்தனியாகவும் திருடப்போவதுண்டு; ஆனால் இவை கூட்டம் கூட்டமாய்ச் செல்லுகின்ற ஈக்களைப்போல் தங்கள் முழுப்பலத்திலும் நம்பிக்கை கொண்டு அதிகார தோரணையுடன் செல்லாமல் அஞ்சி நடுங்கிப் பதுங்கியே சர்வஜாக்கிரதையுடனும் செல்லும். இச்சோர ஈக்கள் யாவும் கொள்ளையடித்த பிற்பாடு தம் கூட்டு ஈக்களுக்குக் கொள்ளையில் ஓர் பங்கு கொடாமல் இருப்பதில்லை. நிற்க, இங்ஙனம் பலவிதத்திலும் தேன் திருட்டுப் போவதால் தேனீ வளர்ப்போர்க்கு நேரும் நஷ்டம் இவ்வளவு அவ்வளவு அல்ல. ஆதலின் அவர்கள் முன்னுக்கு முன்னாலேயே தம் கூட்டுத்தேன் களவு போகாதிருக்கும்படியான வழியைத் தேடிக்கொள்வர். எங்ஙனமெனில், அவர்கள் தம் கூட்டுமுகத்துவாரத்தில் புனுகு தடவி வைப்பர். அப்பொழுது சோரஈக்களும் இப்புனுகு வாசனைபெறும். இவை தமது கொள்ளையில் ஓர் பங்கு தமது இனத்தார்க்கு அளிக்கத் தம் உறைவிடத்திற்குத் திரும்புங்கால், புதுவாசனையைக்கண்டு கொண்ட அக்கூட்டு ஈககள் இவை வேறு கூட்டீக்களென மதித்துக்கொட்டிக் கொன்றுவிடும்.

இச்சோர ஈக்கள் ஏனைய ஈக்களைக் கொள்ளையடிப்பதோடு நில்லாமல் மனிதரையும் கொள்ளையடிக்கும். எங்ஙனமெனில், இவைகட்கு இரைகிடையாக்காலத்தில் கரும்புப்பயிர் எல்லாம் பாழ்தான். மகரந்தப் பொடிக்குப் பதிலாய் கோதுமை முதலிய சிலவகைத்தானியங்களை அபகரித்தேனும் உண்டு திருப்திபெறும். இம்மட்டோ ? தீம்பண்டசாலைகள் சர்க்கரைச் சாலைகள் யாவையும் இவை முற்றுகைபோட்டுச் சூரையிடுவதால் மேற்றிசை வியாபாரிகளுக்குக் கனநஷ்டம் விளையும்.

(இன்னும் வரும்.) M. கோபால கிருஷ்ணயர்.

# ஒரு தீரக்கிருஷிகன்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல். (திருக்குறள்.)

பல வருஷங்கள் முன்னே, ஐரோப்பாக் கண்டத்திலே இத்தாலியா தேசத்தின் வடபாகத்திலே ஒரு பெருவெள்ளம் புரண்டோடத்தொடங்கியது. இதற்குக் காரணம் என்னவெனின், ஆல்ப்ஸ்மலைத் தொடரின் தென்சாரிலே மிகுதியாய் உறைந்து கிடந்த பனிக்கட்டி வெகுவாய் உருகி வெள்ளத்தை உண்டாக்கியதே. இந்த ஜலப்பிரவாகத்தால் பயிர்கள் மிகச் சேதப்பட்டன; மரங்கள், வீடுகள் முதலியன நாசம் அடைந்தன; இப்பிரதேசங்களிலே வசித்தவர்களுடைய நஷ்டங்களை கணக்கிடல் இயலாது. இக்காலத்திலே அடீஜ் என்னும் நதி பொங்கி ஒரே ஜலப்பிரவாகமாய் விளங்கியது. இந்நதியின் கரைகளும், நதியைத் தாண்டக் கட்டப்பட்டுள்ள பாலங்களும் இடிந்துவிழத் தொடங்கின. வெரோனா நகரத்தில் அடீஜ் நதியின் கற்பாலமும் இடிந்து விழுந்துகொண்டிருந்தது. நீர்ப்பெருக்கின் வேகத்தால், பாலம் இரண்டு ஓரங்களிலும் இடிந்துவிழ, அதன் மத்தியிலே சுங்கம் வசூல்செய்ய வாசமாய் இருந்த உத்தியோகஸ்தனது குடித்தனத்தார் வாழும் பாலக்கல்வாய் ஒன்றே விழாது நின்றது. அவ்வீட்டு ஜனங்கள் வெள்ளப் பெருக்கத்தையும், அலைமோதி அடிக்கும் வேகத்தையும் கண்டு நடுநடுங்கித் தாங்கள் தங்கியிருக்கும் கல்வாயை எந்த சீக்கிரத்திலே பிரவாகம் இடித்து விழுத்துமோ என்று ஒன்றும் தோன்றாது திகைப்பமைகொண்டனர்; கைகளை விரித்துக்கூவி உதவி புரியுமாறு கரையில் இருந்தோரை வேண்டினர்; தங்கள் உயிரைக்காக்கக் கடவுளைப் பலவாறு இரந்தனர். அங்கு கரையிலே இருக்க வாய்ந்த இத்தாலியக் கனவான் ஒருவர், ஒரு பைப்பொன்னையும் இனாம் அளிப்பதாகச் சொல்லி, அக்கல்வாயில் பாதபித்து நின்ற அவ்வேழை ஜனங்களை ஒரு படகைக்கொண்டுபோய்க் காக்கும்படி பலரை வேண்டினர். எவரும் போகத் துணியவில்லை. திடீரென்று, ஒரு சிறு படகை ஆற்றிலே ஒருவன் தள்ளினன்; படகுக்கு அவனைத் தவிர்த்து வேறு துணையில்லை; கோலாற் றள்ளிப்போதலோ ஆற்றின் ஆழத்தாலும் வேகத்தாலும் இயலாது. இப்படகை ஓட்டுவதற்கு ஒரு 'அலேச்சா' தவிர வேறுகருவிவாய்க்கவில்லை. பாலத்தின் நடுக்கல்வாயும் இடிந்துவிழத் தொடங்கியது. படகைத் தள்ளுவோன் இரண்டு நிமிஷம் தாமதித்திருந்தால், ஐயோ! அக்கல்வாயில் இருந்தோர் நீர்க்கிரையாய்ப் போய் இருப்பது நிச்சயமே! ஆனால், தனது உயிரைச் சிறிதும் மதியாதே படகைத் தள்ளிய மனிதன் கல்வாயண்டை சேர்ந்து, தன்னிடம் இருந்த ஒரு கயிற்றை பாலத்திலே கட்டி அங்கே இருப்பாரைப் படகிலே இறங்கும்படி வேண்டினன். அவ்வண்ணமே அவர்கள் படகில் இறங்கவும் படகை அங்கிருந்து அலேச்சாவினால் தள்ளினன். சிறிது தூரம் போகும் முன்னே, எஞ்சிநின்ற கல்வாயும் இடிந்து விழுந்தது. படகும் ஜனங்களுடன் கரையண்டை சாவதானமாய்ச் சேர்க்கப்பட்டது. ஆங்கு இருந்தோர் அனைவரும் ஆச்சரியம் கொண்டனர். அங்கே இருந்த பிரபு படகைத்தள்ளிப்போனவனை அழைத்து "நீ யார்? இந்தா, நான் வாக்குத்தத்தம் செய்த பைப்பொன்னையும்" என்றனர். அதற்கு அம்மனிதன், "ஐயா, நான் ஒரு கிருஷிகன். என் உழைப்பால் எனக்கும், என் மனைவிக்கும் என் குழந்தைகட்கும் வேண்டியவை



ஈட்டவல்லேன். நான் துட்டு ஊதியத்தைக் குறித்து வேலை செய்வோன் அல்ல. உமது பணத்தைத் தன் சொத்தையும் வீட்டையும் இழந்த இச்சுங்கம் வசூல்செய்யும் உத்தியோகஸ்தனுக்குக் கொடுத்து அவ்வேழைகட்கு உதவிபுரிவீர்" என்று சொல்லிச் சென்றனன்.

இத்துணை விபத்துக் காலத்திலே தன்னுயிரை இறையும் கவனியாதே பரோபகாரம் செய்தவன் அன்றோ உலகத்தாராலே நன்கு மதிக்கப்படுபவன்.

M. S. நடேசையர். பி. ஏ.,

# ஸ்திரீ ரத்னம்.

## 1-வது அதிகாரம்.

ஒரு நாள் சாயங்காலவேளையில் விஜயநகரம் என்னும் பட்டணத்தின் சமுத்திரக்கரையில் இரண்டு சிறுவர்கள் வெகு உல்லாசமாய் நடந்துவந்தார்கள். அவர்கள் முகஜாடையைப் பார்க்கும்போதே சகோதரர்கள் என்று யாவரும் அறியக்கூடும். இவர்களில் பெரியவனுக்கு சுமார் 20 வயதிருக்கலாம். அவன் வயதுக்குத் தகுந்த உயரமும், சிவந்த நிறமும், கம்பீரமான பார்வையும், அழகிய நடையும் பார்ப்போர்களை பிரமிக்கச் செய்தன. ஆனால், அவன் உடையையும் கண்ணின்நோக்கத்தையும் பார்த்தால், ஏழையென்றும், ஏதோவொன்றை யோசித்துக்கொண்டே நடக்கிறான் என்றும் அறியக்கூடியதாயிருந்தது. இளையவனுக்கு சுமார் 12 வயதிருக்கலாம். இவன் முகக்குறியையும், அண்ணனுடன் பேசும்போது பெண்போல் வணங்கிக் கவனிப்பதையும் பார்த்தால் இவன் சாதுவென்றும், பெரியோர்களிடத்தில் வணக்கமுள்ளவனென்றும் விளங்குகிறது. இவன்தலை வாரப்பட்டிருப்பதினாலும், தேக மினுமினுப்பினாலும் இவன் தாயின் கவனமும் பிரியமும் நன்றாய் விளங்கின. சமுத்திரத்தின் கரையில் சோலைகள் அடர்ந்திருக்க, ஒருமை அக்கப்பால் பட்டணமும் இருக்க, இங்கு தனிமையாகவந்து இச்சிறுவர்கள் என்ன பேசுகிறார்களென்பதை சற்று கவனிப்போம்.

பெரியவன்—குணசீலா, இப்பேர்ப்பட்ட சாயங்காலவேளைகள் நமது யோஜனைகளுக்கும், நமது நடைக்கும் என்ன சுகந்தைத் தருகின்றனபார்? நீ ஒருவன் இருக்கிறதினாலல்லவோ, என் யோஜனைகளும், வீண் எண்ணங்களும், வெறும் கனவாயிராமல் என்றைக்காவது நிறைவேறுமென்று உறுதியாயிருக்கிறேன். நமது தாயோ நான் பேசும்போதெல்லாம் ஏதோ புஸ்தகத்திலிருந்து நான் படித்துக் காண்பிப்பதுபோல நினைத்து ஆஹா இப்பொழுது முதல் என்ன படிப்பு என்ன ஞானம் என்று ஆச்சரியப்படுகிறாள். நம்முடைய தகப்பனோ, நான் முற்காலசரித்திரத்தை படித்துக்காட்டி, இப்படி நம்ம விஜயபுரம் எப்பொழுது இந்த ஸ்திதிக்கு வரப்போகிறது என்று சொல்லும்போதெல்லாம், ஏதோ முடியாத காரியத்தை சொல்லுவதுபோல,

ஆச்சரியப்படுகிறார். நீ மட்டும் என்னைப்போல படித்திராவிட்டாலும், உன் யோஜனைகளிலும், உன் காரியங்களிலும், எனக்கு தைரியப்படுத்துவதைப் பார்க்குமளவில் நாம் என்றைக்காவது உயர்ந்த ஸ்திதிக்கு வருவோமென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்.

குணசீலன்:—அண்ணா, தெய்வம் என்விஷயத்தில் வஞ்சனைசெய்துவிட்டது. இல்லாவிடில் ஏன் உனக்கு நமது தகப்பனாரின் தைரியத்தைக் கொடுத்து, எனக்குமட்டும் நமது தாயின் சாதுகுணங்களை கொடுத்திருக்கிறது.

பெரியவன்:—குணசீலா! எது எப்படியிருந்தபோதிலும் நம் ஆயுள் நாளில்அனேக நல்ல நடவடிக்கைகளைச்செய்து நான் "தர்மசீலன்" என்னும் என் பெயரை, இப்பட்டணத்தில் நிலைநாட்டாமல் விடுவதில்லை. நான் கனகாபுரியிலிருந்து என் படிப்பை விட்டுவிட்டுக்கூடவந்தது இதற்காகத்தான்.

குணசீலன்:—அண்ணா! நான் உன்னை உயர்ந்த அந்தஸ்தில் என்றைக்காவது பார்க்கவேண்டும். இப்பொழுதே எல்லோரும் உன்னை சிறந்த புத்திமானென்றுசொல்லுகிறார்கள். நமதுதாயோ, நீவிசித்ரவரிப்ரபு வீட்டுக்குப்போவதையும் அவருக்கு உன்பேரில் இருக்கிற விசுவாசத்தையும் பார்க்கப்பார்க்க உனக்கு சீக்கிரத்தில் உயர்ந்த அந்தஸ்து வருமென்று நிச்சயிக்கிறாள்.

தர்மசீலன்:—குணசீலா! நீ என்ன அறியாமல் பேசுகின்றனை? விசித்ரவரிப்ரபுவா நம்மைக்காப்பாற்றப்போகிறான். விஜயபுரத்தில் பிரபு என்றால் தர்மம் கூடப் பயந்து ஓடிப்போய்விடுமே. என்னிடத்தில் நல்ல படிப்பும், சமயத்துக்குத் தகுந்த வேடிக்கைப் பேச்சுகளும் இல்லாமற்போனால் என்னை விசித்ரவரிப்ரபு லக்ஷியம் செய்வானா? என்னை உயர்ந்த ஸ்திதிக்கு இவனா கொண்டுவரப்போகிறான்? ஆம் ஒருவேளை கொண்டுவரலாம். எப்படியென்றால் ஏழைக்குடிகளை அடித்து, அவர்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்தை, கொள்ளையடித்து எனக்கு கொடுக்கலாம். அப்படி கொடுத்துத் தான் என்ன பிரயோஜனம். அப்போது அவர்கள்செய்த அக்கிரமங்களுக்கு நானும் உதவி செய்ததுபோலாகும். குணசீலா! இப்படி உயர்ந்த ஸ்திதிக்கு வருவதைக் காட்டிலும் நாம் ஏழையாக விருப்பதே நலம். ஜனங்களுக்கு ஒத்தாசை செய்து அவர்களை நல்ல ஸ்திதிக்கு கொண்டுவந்து அதன் மூலமாக நான் நல்ல ஸ்திதிக்கு வருவதை தேடுவேனே யல்லது, அவர்களை துன்பப்படுத்தி அவர்கள் வைது கொண்டே கொடுக்கும் பணத்தால் நான் முன்னுக்கு வருவதை ஒருபோதும் தேடமாட்டேன்.

குணசீலன்:—அண்ணா! நீ ஜனங்களை முன்னுக்குகொண்டுவரும் யோஜனையில் என்னை மறந்துவிடாதே. உனக்கு ஒரு அபாயமும் வரக்கூடாது. வந்தால் நான் சகிக்கமாட்டேன்.

தர்மசீலன்:—எந்த அபாயம் வந்தபோதிலும் அது ஜனங்களுக்கு ஒத்தாசை செய்யும் அபாயமாயிருந்தால் அதையும் நான் சகிப்பேன். நல்லது குணசீலா, நமது வீட்டு விஷயமாக உனது யோஜனைகளை கொஞ்சம் வெளியிடு.

தர்மசீலன் தனது வீண் யோஜனைகளை யெல்லாம் விட்டு விட்டு, குழந்தையாகிய குணசீலன் யோஜனைகளை கேழ்க்கத் தொடங்கினான்.



குணசீலன்:—அண்ணா! நாமோ புதிய படகு வாங்கிவிட்டோம். வீட்டையும் பிரபுக்களால் ஒரு அபாயமும் நேரிடக்கூடாத இடத்தில் கட்டிக்கொண்டோம். இனி கொஞ்சம் கொஞ்சமாக பணம் சம்பாதித்து அதோ சமுத்திரத்தில் வருகிறதே அதேமாதிரி ஓர் கப்பல்வாங்கி நாமும் வியாபாரம் செய்து பணம் சம்பாதித்தால், நமது குடும்பமும் விசாரமில்லாம லிருக்கலாம். உனக்கும் வேண்டிய புஸ்தகங்கள் நான் வாங்கித்தருகிறேன். நீ உன் படிப்பையும் முடித்துக்கொள்ளலாம். உனக்கு சம்பாதிக்கவேண்டுமென்கிற விசாரமே இருக்கக்கூடாது; அதெல்லாம் நான் பார்த்துக்கொள்ளவேண்டும்.

தர்மசீலன்:—குணசீலா, எனக்கு நீயா சம்பாதித்துப் போடுகிறது. நீ குழந்தை உனக்கு நானல்லவோ சம்பாதித்துப் போடவேண்டும். அது இருக்கட்டும். அதோ வருகிற கப்பலில் தானியம் அதிகமாக இருக்கும்போலத் தோன்றுகிறது. கப்பல்காரர்கள் சுற்றிலும் பயத்தோடு பார்க்கிறார்கள் பார். சாதாரண வியாபாரிகளாயிருந்த போதிலும் இப்பட்டணத்தில் எங்கே திருடர்கள் மறிப்பார்களோ என்று பயப்படுகிறார்கள். ஆனால் அதில் சந்தேகம் ஒன்றுமில்லை. அவர்கள் கரைசேருவதற்குள் விஜயபுரத்து பிரபுக்களாகிய திருடர்கள் நிச்சயமாக மறிப்பார்கள். ஐயோ! நமது தேசந்தான் எவ்வளவு கெட்டுப்போய்விட்டது! நாம் என்ன செய்யலாம். மேலே சொன்ன கப்பல் கொஞ்சம் சமீபத்தில் வந்தவுடன் 4, 5, சிப்பாய்கள் கப்பலிலிருந்து கரையை வெகு கவனமாய்ப் பார்த்தார்கள். சற்று நேரத்திற்கெல்லாம் கப்பலும் மறையவே, தர்மசீலன் ஓகோ நாம் வெகுதூரம் வந்துவிட்டோமே என்று சொல்ல, இருவரும் திரும்பிப்போக ஆரம்பித்தார்கள். கொஞ்சதூரம் போனவுடன் தர்மசீலன் திடீரென்று ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டவன்போல நின்று குணசீலா, நான் மறந்துவிட்டேன் பார்த்தனையா நேற்று என் சிநேகிதர் ஒரு புஸ்தகம் தன் வீட்டுக்கு வந்தால் கொடுக்கிறேனென்றார். அவர் வீடு இங்கேதானிருக்கிறது. நான் சீக்கிரம்சென்று அப்புஸ்தகத்தை வாங்கிவருகிறேன். நீ இங்கேயே இரு என்று சொன்னான்.

குணசீலன்:—அண்ணா நானும் அவ்விடம் வரக்கூடாதா?

தர்மசீலன்:—நீவரலாம். ஆனால் இன்றைக்கு நீ வெகுதூரம் நடந்திருக்கிறாய். உனக்கு அலைச்சல் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. ஆகையால் நீ இங்கேயே சற்று இளைப்பாறு. நான் புஸ்தகத்தை வாங்கிக்கொண்டு ஒரே ஓட்டமாக வந்துவிடுகிறேன் என்று சென்றான். குணசீலன் அரைமனதோடு சம்மதித்து அண்ணன் தலைமறையும்வரையில் அவனையே பார்த்திருந்து, பின்பு விஜயபுரத்தின் பழைய நிலைமைக்கும் தற்காலநிலைமைக்குமுள்ள வித்தியாசத்தை நினைத்துக்கொண்டே உட்கார்ந்திருக்கும்போது தன் சிறிய தங்கை பத்மாவதி தான் புறப்படும்பொழுது தனக்கு புஷ்பம் கொண்டுவரும்படி வேண்டிக்கொண்டதை நினைத்து அவ்விடத்திலிருந்த புஷ்பங்களைப் பறித்து ஓர் மாலையாகத் தொடுக்க உட்கார்ந்தான். உட்கார்ந்த சற்று நேரத்திற்கெல்லாம் குதிரைகளின் காலடி ஓசைகளும், கொட்டுசப்தங்களும் இரைச்சலும் குணசீலன் காதில் விழுந்தன. உடனே குணசீலன் எழுந்திருந்து, ஏதாவது பிரபுக்கள் வீட்டுக் கலியாணத்தின் ஊர்வலமாயிருக்கவேண்டும். பார்க்க நன்றாயிருக்கும். ஆனால் நாம் ஒதுங்கி நின்று அவர்கள் கண்ணில் படாமல் பார்க்கவேண்டுமென்று சொல்லி, மாலையைத் தொடுத்துக்கொண்

ஓட சமுத்திரத்தின் புறமாக நடக்க ஆரம்பித்தான். சற்றுநேரத்திற்கெல்லாம் கூட்டங்கள் சமீபத்தில் வந்தன. இருவர் குதிரையின்மீது முன்னே, குதிரை சிப்பாய்கள் அனேகரும், காலாட்களும் ஆயுதங்களோடு சண்டைக்குப் போவதுபோல வந்தார்கள். குணசீலனுக்கு இவர்களைப் பார்த்தவுடனே, குழந்தையாதலால் கொஞ்சம் பயங்கொண்டு ஓடலாமென்று யத்தனிப்பதற்குள் அவர்கள் பக்கத்தில் வந்துவிட்டார்கள். இந்த சிப்பாய்களுக்குத் தலைவனான நிர்க்குணன் சவுக்கை ஓங்கி, குணசீலனைப் பார்த்து அடேபையா! ஒரு கப்பல் சமுத்திரத்தில் போவதைப் பார்த்தாயா என்று கேட்டான்.

குணசீலன்:—அரைமணி நேரத்திற்குமுன் ஓர் கப்பலை சமுத்திரத்தில் பார்த்தேன்.

நிர்க்குணன்:—பச்சைக்கொடிபோட்டு சிப்பாய்களுடன் போகிறதா?

குணசீலன்:—ஆமாம்.

நிர்க்குணன் உடனே தன் சிப்பாய்களைப்பார்த்து, வேகமாய் செல்லுங்கள் சீக்கிரம் சத்துரு துறைமுகத்திற்குள் கப்பலை பிடிக்கவேண்டும். இந்த பையனையும் விடாதேயுங்கள். இவன் ஒருவேளை விசித்ரவனிடம் போய் சொல்லிவிடுவான் என்றான். உடனே குணசீலன் என்ன சொல்லியும் கேளாமல், ஏற்கனவே அவன் பயத்தால் நடுங்கிக்கொண்டு இருக்க, நடுக்கூட்டத்தின் மத்தியில் அவனை இழுத்துக்கொண்டு சென்றார்கள். குணசீலன் சற்று அழுதான். சற்று தன் நினைவில்லாமல் சென்றான். கடைசியில் கொஞ்சம் பயம் தெளிந்து இவர்கள் தான் என்ன செய்கிறார்களென்று பார்ப்போமென்று கூடச்சென்றான். சுற்றியிருந்தவர்கள் பேச்சிலிருந்து, தன்னை கூட்டிச்சென்ற ஆள்கள் நிர்க்குணன் சிப்பாய்களென்றும், அவனுக்கு எப்போதும் விரோதமான விசித்ரவனுக்குப் போகும் சாமான்கப்பலை கொள்ளையிடப்போகிறதாயும், குணசீலன் அறிந்து, தானும் தன் குடும்பமும் விசித்ரவ பிரபுவைச் சேர்ந்தவர்களாதலால், தன்னை என்னசெய்வார்களோ வென்று சற்றுநடுங்கினான். அடிக்கடி தன் அண்ணன் சென்ற திசையை நோக்கிப்பார்த்தான். அண்ணனையும் காணோம். இவர்கள் இப்படி கொஞ்சதூரம் சென்று ஓர் சந்து திருப்பின உடனே முன் சென்ற கப்பல் சமுத்திரத்தில் போவதைக்கண்டார்கள். உடனே தலைவன், பகவான் நமக்கு சகாயமாயிருக்கிறார். இன்றைக்கு இக்கப்பல் நம்முடையது தானென்றான். இப்படி சொல்லும்போது ஓர் சிப்பாய் தலைவனிடம் வந்து ஐயா அருகில் சோலையில் ஏதோ சப்தம் கேட்கிறது. ஜாக்கிரதை என்றுசொல்லத் தலைவன் புலி பூனைக்குபயப்படுமா செல்லுங்கள் என்று உரக்கச்சொன்னான். உடனே சைனியங்கள் அதிக வேகமாய்ப்போகவே, சோலையிலிருந்து அனேகம் போர்வீரர்கள் திடீரென்று கூட்டத்தின் மத்தியில் பாய்ந்து யுத்தத்துக்கு ஆரம்பித்தார்கள். உடனே இருபடைகளும் கலந்து யுத்தம் செய்ய, நிர்குணனுடைய ஆள்கள் அதிகமானதால், விசித்ரவன் சைனியம் தோற்றுப்போய் ஓட ஆரம்பித்தது. உடனே நிர்க்குணன் விடாதேயுங்கள், அவர்களைத்துரத்துங்கள் என்றுஉத்தரவுகொடுத்தான். இப்படியிருக்க தூரத்திலிருந்து கொம்பு சத்தம் கேட்கவே எல்லோரும் திரும்பிப்பார்க்க, விசித்ரவன் கொடியை முன் போட்டுக்கொண்டு அநேகம் சிப்பாய்கள் குதிரைமீது நாலுகால் பாய்ச்சலில் வந்தார்கள். உடனே நிர்க்குணன், காரியம் கெட்டுப்போய்விட்டது. இந்தப்பயல்கள் இப்படி



செய்வார்களென்று யாருக்குத்தெரியும் என்று சொல்லி, முன் தூரத்தச்சென்றதை விட்டு, தன் ஆட்களுக்கு ஓட உத்தரவு கொடுத்துத் தானும் ஓட ஆரம்பித்தான். இப்படி ஓட ஆரம்பிக்கவே, விசித்ரவன் சைனியங்கள் இவர்களைத் துரத்த ஆரம்பித்தன. துரத்தப்பட்டவுடனே, காலாட்களைத் தவிர எல்லோரும் ஓடிப்போய்விட்டார்கள். காலாட்களில் சிலர் மலையில் ஏறி ஒளிந்தார்கள். சிலர் சமுத்திரத்தில் விழுந்து நீந்தினார்கள். சிலர் ஓடுவதிலேயே விழுந்து மிதிக்கப்பட்டார்கள். சிலர் சத்துருக்கள் கையிலகப்பட்டு வெட்டுப்பட்டார்கள். இப்படி முன் துரத்தப்பட்டு ஓடுகிறவர்களில் ஒருவன் ஒரு குற்றமுமறியாத பாலன் குணசீலன். தன் தாய்தகப்பனை இதுவரையில் விட்டுப்பிரியாத குழந்தை, பயத்தால் தேகம்பதற, ஒரு தந்திரமும் செய்யத் தோன்றாமல், உயிர்போய் விடுமென்கிற பயத்தால் மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கும்படி ஓடுவதற்குள் சத்துருவும் பக்கத்தில் வந்துவிட்டான். பிறகு ஒன்றுஞ் செய்யத்தோன்றாமல் நின்று தலை நிமிர தன் அண்ணன் ஒத்தாசைக்கு ஓடிவருவதைக்கண்டான். உடனே அண்ணா! அண்ணா! என்னைக்காப்பாற்று அண்ணா என்று உரக்க கூப்பிடுகிறதற்குள் கத்தி உயரத்தூக்கப்பட்டது. ஒரு நிமிஷம் தான் தாமதம். உடனே, ஐயா! நான் குற்றவாளியல்ல. ஐயோ என்னைக் குத்திவிட்டார்களே என்று சொல்லிக்கொண்டே குணசீலன் கீழே விழுந்து பிணமாய்க் கிடந்தான். குதிரை வீரன் கத்தியை உடனே உருவிக்கொண்டு மற்ற ஜனங்களை துரத்திச்சென்றான். இதற்குள் தர்மசீலனும் வந்து சேர்ந்து காரியம் மீறிப்போனதைக் கண்டு பரிதபித்து, ஒன்றும் செய்யத்தோன்றாமல், தன் தம்பியின் பிணத்தண்டை மண்டிபோட்டுக்கொண்டு உட்கார்ந்தான். உடனே ஓர் கொம்பின் சப்தத்தோடு இன்னும் சில போர்வீரர்கள் வர, அவர்களுக்குத் தலைவனாக ஓர் கிழவன் குதிரையின்மீது முன் வந்தான். தலைவன், மண்டிபோட்டு உட்கார்ந்திருந்தவனைப்பார்த்து, பிரமித்து, இது என்ன ஆச்சரியம் தர்மசீலா, நீ ஏது இங்கு வந்தது. என்றான். தர்மசீலன் அவனை நிமிர்ந்து பார்த்து, விசித்ரவ பிரபு என்று அறிந்துகொண்டு, அவன் குதிரையைத் தடுத்து, அவன் இருகைகளையும் பிடித்துக்கொண்டு, பேசக்கூட சக்தி இல்லாதவனாய் துக்கம் நெஞ்சை அடைக்க, பிரபுவே! இவன் என் சகோதரன். ஒன்றுமறியாத பாலன். சிறுகுழந்தை! ஐயோ! அவன் தாய்தகப்பனை இதுவரையில் விட்டுப் பிரியாத பாலனையா! அவன் இரத்தம் என்னமாய் ஓடுகிறது பாருங்கள். ஐயோ உங்கள் குதிரை கூட அவன் ரத்தத்தில் நிற்கிறதே. பின் தள்ளும் பின் தள்ளும் ஐயா! ஒரு நியாயமுமில்லையா? தாங்கள் பெரியபிரபுவாயிருக்கிறீர்களே. என் தம்பி இப்படி கொல்லப்பட்டிருப்பதை தாங்கள் பார்த்திருக்கலாமா என்று அழுதான். உடனே, விசித்ரவன் மனமிரங்கி, யார் இவனைக்குத்தினது? இது நிச்சயமாக நிர்க்குணன் மனிதர்களாகத்தான் இருக்கவேண்டும். நான் கொலைக்குக் கொலை வாங்கி விடுகிறேன். நீ பயப்படாதே. உனக்கு நியாயம் கிடைக்காமல்போகாது என்று சொன்னான். தர்மசீலன் கண்ணில் ஜலம் தாரைதாரையாகத் ததும்ப, மறுபடியும் தம்பியினிடம் ஓடிப்போய் அவன் பக்கத்தில் உட்கார்ந்து, அவன் மாரைத்தொட்டுப்பார்த்து அவன் உயிர் ஒருவேளை இருக்கலாகாதா என்று மறுபடியும் தொட்டுப்பார்ப்பதும், தன்கையை ரத்தத்திலிருந்து திடீரென்று எடுத்துக்கொள்வதுமாயிருந்து, திடீரென்று எழுந்திருந்து ஐயோ இந்தப்பட்டணத்தில் நியாயம்ஒன்றுமில்லையா என்று உரக்கக்கத்தினான். விசித்ரவன் சிப்பாய்கள் சண்டையில் இப்படி காவுகள் வழக்கமாய்

பார்த்திருப்பதால் மனோதைரியமுடையவர்களாக இருந்தபோதிலும், இதில் இரக்கப்பட்டார்கள். ஓர் அழகிய சிறுவன் தன் கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருக, விசித்ரவன் சமீபத்தில் வந்து, மாமா இக்கொடிய செய்கையை நிர்க்குணன் ஆள்கள் தான் செய்திருக்கவேண்டும். நாம் ஒருமித்துடன் அவர்களைத் தாக்கவேண்டுமென்று சொன்னான். உடனே விசித்ரவன் அச்சிறுவனைப்பார்த்து உத்தமசேனா! நான் உன் தைரியத்தை மெச்சினேன். ஆகிலும் இன்றைக்கு நமது சைனியம் வெகுதூரம் வந்துவிட்டது. சத்துருக்கள் ஒருவேளை எங்கேயாவது ஒளிந்திருக்கலாம் என்று சொல்லி யாரடா கொம்பை ஊது எல்லோரும் திரும்பிவிடட்டும் என்றான். கொம்பு ஊதின சற்று நேரத்திற்கெல்லாம் எல்லோருடனும் பையனைக்கொன்ற வீரனும் வந்துசேர்ந்தான். அவனைப்பார்த்த மாத்திரத்திலேயே அவன் அப்படைக்கு தலைவனென்று விளங்கியது. உடனே விசித்ரவன் அத்தலைவனைப்பார்த்து, நல்லது வீரேசா என்மகனே, உன் தைரியத்தை மெச்சினேன். ஆகிலும் இச்சிறுவனை நிர்க்குணன்படையில் எவன்கொன்றவன் உனக்குத்தெரியுமா? எவ்வளவு கெட்ட செய்கையைச் செய்துவிட்டான். அவர்கள் குடும்பம் முழுவதும் நமக்கு வேண்டியவர்கள் என்று சொல்ல, வீரேசன் பிரமித்து சற்று நிதானித்து, என்ன ஆச்சரியம்! இக்கொலை செய்யப்பட்டமனிதன் நிர்க்குணன் ஆள்களுக்குள் எப்படி வந்தான். நான் நிர்க்குணன் ஆளென்றே நினைத்து அவனை நான் தான் என்று சொல்லி முடிப்பதற்குள், தர்மசீலன் நீ யல்லவோ இவனைக் குத்தினாய் என்று உரக்கக்கத்தி, ஐயா! விசித்ரவ பிரபுவே! எனக்கு அவசியம் நியாயம் செய்யவேண்டும். சற்று முன் நியாயம் செய்வதாக வாக்களித்தீர்கள் என்றான்.

விசித்ரவன் ஐயா! நான் முன்னமே சொல்லவில்லையா, நிர்க்குணன் ஆள்கள் இக்கொடிய செய்கையைச்செய்திருந்தால் உனக்கு நியாயம்கிடைக்கும். ஆனால் இது தெய்வச்செயலாய் நடந்த காரியமல்லவா. சற்று யோஜித்துப் பார். ஆனால் உனக்கு நியாயம்பேசினால் இப்போது உன் மனதிற்குப்படாது. ஆகிலும் நான இத்தப்பிதத்துக்காக உனக்கு உபகாரம் செய்கிறேனென்று சொல்லுமுன் வீரேசன் ஓர் பணப்பையை எடுத்து தர்மசீலன் கையில் கொடுத்து, நீ இதை இந்தப்பையனுடைய கிரியைகளுக்கு செலவுக்கு வைத்துக் கொள். அடுத்தவாரம் அரமனையில் வந்து என்னைப்பார் என்று சொல்லிவிட்டு விசித்ரவனைப்பார்த்து அண்ணா! நாம் இன்னும் நமது கப்பலை காப்பாற்றவேண்டும், போகலாம் வாருங்கள் என்று சொன்னான். உடனே விசித்ரவன் இரண்டு ஆள்களை தர்மசீலனுக்கு உதவிசெய்ய விட்டு விட்டு மற்ற சைனியங்களோடு புறப்பட்டான். எல்லோரும் போனபிறகு உத்தமசேனன் மட்டும் இரக்கத்தால பின் தங்கி தர்மசீலனை தேற்றிக்கொண்டு நின்றான். தர்மசீலன் தன் நினைவே இல்லாமல் ஓடிப்போன சைனியங்களைப் பார்த்துக்கொண்டே சற்று இருந்துவிட்டு, பிறகு பெருமூச்சு விட்டுக்கொண்டு நியாயமில்லாமலே போய்விடுமா. எனக்கும் ஒரு சமயம் நியாயம் கிடைக்கும். கடவுள் கிருபை செய்வார் என்று சொல்லும்போதே, விசித்ரவன் கொஞ்சதூரத்திலிருந்து உத்தமசேனனைக்கூப்பிட்டான். இவன் அந்த இடத்தை விட்டு நகர மனம் வராமல், மறுபடி தர்மசீலனைப்பார்த்து, அப்பா! நீ வருத்தப்படாதே உனக்கு நான் தம்பியாயிருக்கிறேன். எனக்கு இப்படிப்பட்ட அண்ணன் வேண்டுமென்றான். தர்மசீலன் ஒன்றையும் கவனிக்காமலே யோஜித்துக் கொண்டே இருந்தான். ஆனால் இது தம்பியைப்பற்றி யல்ல. கொஞ்சகால



த்தில் தன்னால்வரப்போகிற கலகத்தை யோஜிக்கலானான். பின்பு சிப்பாய்கள் பாடைகட்டி யாகிவிட்டதென்று சொல்லவும் இவன் திடுக்கிட்டு விழித்துக்கொண்டு, தன் தம்பியை ரத்தத்தைக்கூடப்பாராமல் அப்படியே கட்டிக்கொண்டு அழுதான். அந்தக்குழந்தை இறந்தும் அதன் கையிலிருந்த மாலை அப்படியே இருந்தது. அதைப் பார்க்கப்பார்க்க, தன் தம்பியின் சாதுகுணங்களும் நல்ல நடத்தைகளும், அவன் பேசுகிற பிரியமும் திடீரென்று ஞாபகத்துக்குவர தர்மசீலன், குணசீலா! குணசீலா! நான் வீட்டுக்குப்போய் எப்படி யடா நம்ம அம்மாவைப் பார்ப்பேன். ஐயோ! வீட்டுக்குப்போனவுடன் பத்மாவதி ஓடிவந்து அண்ணா எங்கே என்று கேழ்ப்பாளே நான் அவளுக்கு என்னடா சொல்லட்டும். அப்பாவுக்கு நான் வயது காலத்தில் என்ன தேறுதலை யடா சொல்லட்டும். அண்ணா நீ விசாரப்படாதே. நீ படி நான் சிரமப்பட்டு சம்பாதித்து உனக்கு புஸ்தகங்கள் வாங்கித்தருகிறேனென்று சொன்னாயே. எனக்கு இனி யாரடா இப்படி சொல்லப்போகிறார்கள். அண்ணா என்று என்னை யாரடா கூப்பிடப்போகிறார்கள். நான் இனி தனியாய் வீட்டில் நீ இல்லாமல் எப்படி யடா இருப்பேன். எங்கே பார்த்தாலும் உன் ஞாபகம் வருமே. என் யோஜனைகளுக்கு துணை இனி ஒருவருமில்லையே என்று அழுது சுற்றியிருக்கிறவர்களைப் பார்த்து ஐயா! இவன் ரொம்பசாது. ஒரு பாவத்தையுமறியாத பாலனையா, இப்படிப்பட்ட தம்பி இனி எனக்கு கிடைக்கப்போகிறானா. விசித்ரவப்பிரபு தன் மகனே இவனைக் கொன்று விட்டதாலல்லவா எனக்கு நியாயமில்லையென்று சொல்லிவிட்டார். இந்தப்பையும் இந்தப்பணமும் என் தம்பிக்கு பதிலாகுமா. இருக்கட்டும். எனக்கும் ஒருகாலத்தில் நியாயம் கிடைக்கும். கடவுள் அக்கிரமத்தை தண்டிக்காமல் விடமாட்டாரென்று சொல்லி, தன் தம்பியை மறுபடியும் கடைசியாக உற்றுப்பார்த்துவிட்டு திடீரென்று எழுந்தான். எழுந்ததும் அவன் முகம் சிவந்திருந்தது; ஆனால் விசனத்தாலல்லவென்பது இதை படிக்கப்படிக்கத் தெரியவரும். அப்போது எழுந்திருந்தது முதல் தர்மசீலன் புதுமனிதனாக மாறிவிட்டான். தன் தம்பியோடு தன்பால்யமும் விளையாட்டும் போய்விட்டது. இவன் தம்பி இறக்காமலிருக்கும்பக்ஷத்தில் இவன் வீண் யோசனைக்காரனாகவும் ஒரு காரியமும் செய்ய முடியாதவனாகவும்தானிருக்கவேண்டும். தன் தம்பி இறந்ததும் அவன் மரணத்தைப்பற்றி கேள்விமுறை இல்லாமற்போனதும், அவன் உயிரை பிரபுக்கள் அலக்ஷியமாய் நினைத்து அவனை கவனியாமலிருந்ததும், இவன் மனதில் குடிகொண்டே இவனை மென்மேலும் தன் தேசத்து சீர்திருத்தத்திற்காக உழைக்கச்செய்தது. இவன் தம்பி இறந்ததுமுதல் இவன் எண்ணங்களும் இவன் காரியங்களும், இவன் புத்தியும் பலமும் எல்லாம் ஒரே விஷயத்தில் செலுத்தப்பட்டு, தனது பட்டணத்தையும், குடிகளையும் சீர்திருத்தி தன் ஆளுகைக்கு கொண்டுவரவேண்டுமென்றும், பிரபுக்கள் இப்போது அலக்ஷியமாக நினைத்த உயிரானது, அவர்கள் உயிரைவிட சிலாக்யமானது என்பதை அவர்களுக்கு காண்பிக்கவேண்டுமென்றும், தன் தம்பியின் கொலைக்குக் கொலை வாங்கவேண்டுமென்றும், தன்னை அலக்ஷ்யமாக நினைத்த பிரபுக்கள் தன்னை வணங்குவதினால் தங்களுக்குத் தானே, தன் தம்பியை அலக்ஷ்யம் செய்தது பிசகு என்று அறியவேண்டுமென்னும் எண்ணங்களால், மேன்மேலும் விருத்தியடைந்து, கடைசியில் இவன் கௌரவத்தை யடையவும் காரணமாயிருந்தன.

S. இராமசுவாமி ஐயர் பி-ஏ.

# திருவனந்தபுரத்து ஐப்பசி உத்ஸவம்.

திருவனந்த புரமானது திருவிதாங்கூர் இராச்சியத்திற்கு பிரதான பட்டணமா யிருக்கிறது. இந்தப் பட்டணந்தான் திருவிதாங்கூர் மகாராஜா அவர்களுடைய வாசஸ்தலமா யிருக்கிறது. திருவனந்த புரத்திலுள்ள க்ஷேத்திரங்கள் எல்லாவற்றிலும் அதிக விசேஷமா யுள்ளது பத்மநாபஸ்வாமி க்ஷேத்திரம். பத்மநாப ஸ்வாமியைத் தெரிசனம் செய்கிறதற்காக ஆயிரக் கணக்கான ஜனங்கள் வடக்கே காசிமுதலான ஸ்தலங்களிலிருந்து வருகிறார்கள். இந்த க்ஷேத்திரத்தைப்பற்றிச் சுருக்கமாக வரைகிறேன். திருவனந்தபுரம் கோட்டைக்குள் அநேக தெருக்களிருக்கின்றன. அவைகளுக்கு நடுவிலும் கனம்பொருந்திய மகாராஜா அவர்களுடைய அரண்மனைக்குச் சமீபத்திலும், கிழக்கே கோட்டைவாயிலை யடுத்தும் இந்த க்ஷேத்திரமிருக்கிறது. இதற்குமுன் பாகத்தில் வலது புறத்தில் கனம்பொருந்திய மகாராஜா அவர்களுடைய அரண்மனையும், இடதுபுறத்தில் ஒரு பெரிய குளமும் காணப்படும். இந்தக் குளத்திற்கு "பத்ம தீர்த்தம்" என்று சொல்வார்கள். க்ஷேத்திரத்தின் முன்பாகத்திலுள்ள கோபுரம் அதிக விசேஷமானச் சித்திரவேலைகளால் செய்யப்பட்டிருக்கிறது. அதின் உச்சியில் எழு தங்க ஸ்தூபிகள் காணப்படும். க்ஷேத்திரத்தின் முன்வசத்தில் தாசிகள் நடனம் செய்கிறதற்காக ஒரு இடம் பிரத்தியேகமாக ஏற்பட்டிருக்கிறது. அதற்கு நாடகசாலையென்று பெயர். க்ஷேத்திரத்தைச் சுற்றிலும் பிரமாண்டமான மதில்கள் காணப்படும். அவை கருங்கல்லால் செய்யப்பட்டவைகள். இதற்குள் மூன்று வாகனங்கள் கொண்டு போகும்படியான வீதியையுடைய ஒரு பாதையுண்டு. இதற்கு சீவேலிமண்டபமென்று பெயர். உத்ஸவாதி தினங்களில் இந்த மண்டபத்தின் வழியாகத்தான் ஸ்வாமிகளை எழுந்தருளப்பண்ணி நாலு பிரதக்ஷிணம் செய்வார்கள். இதற்குள் தான் பிரதான க்ஷேத்திரமிருக்கிறது. அவ்விடத்தில் பத்மநாப ஸ்வாமியையும் நரஸிம்ம ஸ்வாமியையும் எழுந்தருளப்பண்ணி யிருக்கிறார்கள். க்ஷேத்திரத்திலுள்ள வேலைகளெல்லாம் கருங்கல்லால் செய்யப்பட்டது. இவற்றைப் பார்க்க அதிக விநோதமா யிருக்கும். பத்மநாபஸ்வாமி எழுந்தருளி யிருக்கப்பட்ட இடத்துக்கு மூன்று வாயில்களுண்டு. பத்மநாபஸ்வாமி தலை தெற்காகவும் கால் வடக்காகவும் ஐந்துதலை நாகத்தின்பேரில் பள்ளிகொண்டிருக்கிறதைக் காணலாம். தவிர, மத்தியில் சுவர்ணத்தினால் ஒரு விக்கிரகம் காணப்படும். இவற்றிற்கு முன்னால் மூன்று வாயில்களுக்கு வெளியில் ஒரு சதுரக் கருங்கல் பீடம் காணப்படும். அது 25-அடி சதுரத்துக்குக் குறையாமலிருக்கும். அது ஒரே கல்தான். இதைப்பார்க்க அதிக விசேஷமாயிருக்கும். இவற்றிற்குத்தென்புறத்தில் நரஸிம்மஸ்வாமியை எழுந்தருளப்பண்ணி யிருக்கிறார்கள். இவைகளைச்சுற்றி சற்சுவர்கள் உண்டு. சுற்சுவரின் வெளிப்புறமாக ஆயிரக்கணக்கான சிறு விளக்குகள் காணப்படும். இந்த பிரதான க்ஷேத்திரத்திற்குப் பின்னால் மேற்கே வடக்குபாகத்தில் ஒரு சிறு க்ஷேத்திரமுண்டு. அதில்தான் கிருஷ்ண ஸ்வாமியை எழுந்தருளப்பண்ணி யிருக்கிறார்கள். இந்த க்ஷேத்திரத்தைச் சுற்றிலும் ஆயிரக்கணக்கான சிறு விளக்குகள் முன்னுரைத்தபடி காணப்படும். இவைகள் எல்லாவற்றையும்சுற்றித்தான் சீவேலிமண்டபமிருக்கிறது. சீவேலிமண்டபத்திலுள்ள ஒவ்வொரு கல்தூணிலும் விளக்குகளும் சிலைகளும் காணப்படும். சீவேலிமண்டபத்



தின் உயர உள்வசத்தால் பெரிய வெங்கலவிளக்குகள் காணப்படும்; தவிர உயர இரண்
டுபக்கங்களிலும் மூன்றுநாலு வரியாக சுமார் முக்கால் அடி வித்தியாசத்தில் சிறுவிள
க்குகளைக் காணலாம். கிருஷ்ணஸ்வாமி க்ஷேத்திரத்திற்குத் தென்புறமாகவும் பத்மநா
பஸ்வாமி க்ஷேத்திரத்திற்கு மேற்புறமாகவும் இரண்டு கம்பவிளக்குகள் பிரமாண்டமாய்
காணப்படும். இதில் தட்டுதட்டாக அநேக சிறுவிளக்குகளைக் காணலாம். கிருஷ்ணஸ்
வாமி க்ஷேத்திரத்திற்கு முன்பக்கம் ஒரு கம்பவிளக்குக் காணப்படும். தவிர பத்மநா
பஸ்வாமி க்ஷேத்திரத்திற்கு முன் ஒரு சுவர்ணகொடிமரமும்கிருஷ்ணஸ்வாமி க்ஷேத்தி
ரத்திற்கு முன் ஒரு வெள்ளிக்கொடிமரமும் இருக்கின்றன. இவற்றை யெல்லாம் அதி
கச் சுருக்கமாக வரைந்தேன்; இதில் இன்னும் அதிக விசேஷங்க ளிருக்கின்றன.

V. G.

(இன்னும் வரும்.)

# லேடி பாஷியம் ஐயங்கார் வார்டு.

ஜனவரி மாதம் 16-ந்தேதி மாலை சென்னை விக்டோரியா கோஷா ஆஸ்பத்திரி
யில் ஆம்ப்தில் பெருமாட்டியினால் 'லேடி பாஷியம் ஐயங்கார் டெலிவரி வார்டு' திறக்
கப்பட்டது. "(டெலிவரி வார்டு' என்றால் பிரசவகாலத்தில் மாதர்களுக்காக சுகாதார
வசதியை யொட்டி கட்டப்பட்டிருக்குமிடம்) இச்சமயத்தில் அநேக ஐரோப்பிய இந்து
மாதர்கள் வந்திருந்தார்கள். அங்கு வந்துள்ள மாதர்கள் ஒருவருக்கொருவர் உல்லாச
மாகப் பேசிக்கொண்டிருந்தார்கள், நமது கவர்னரின் மனைவியாராகிய ஆம்ப்தில் பெரு
மாட்டி வந்தவுடன் லேடி பாஷியம் ஐயங்கார் எதிர்கொண்டு அழைத்தார்கள். உட
னே அங்கு ஒரு உருவப்படம் எடுக்கப்பட்டது. பின்பு லேடி பாஷியம் ஐயங்காருக்குப்
பதிலாக அவரது குமாரத்தியார் இவ்விதகட்டடம் இந்த ஆஸ்பத்திரிக்கு மிக ஆவசிய
மென்றும் லேடி ஆம்ப்தில் அவர்கள் தமது வேலைகளில் இதை ஒன்றாக எண்ணி இப்
பொழுது இதைத்திறக்க வந்ததானது அங்குள்ள யாவருக்கும் மிக்க கௌரவத்தை
யுண்டுபண்ணுகிறதென்றும், இச்சமயத்தின் ஞாபகக்குறியாக பொன்சாவியை அங்கீ
கரித்து இந்த வார்டை திறக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்கள்.

லேடி ஆம்ப்திலவர்கள் புன்சிரிப்புடன் எழுந்து பின்வருமாறு சொன்னார்கள்:—
"அவசியமாய் வேண்டியிருந்த இந்த வார்டை லேடி பாஷியம் ஐயங்காரவர்கள் அளி
த்ததற்கு நான் வந்தனமளிக்கின்றேன். சென்ற 1904-ம்வருஷத்தில் சுமார் 500 குழந்
தைகள் வரையில் இந்த வைத்தியசாலையில் பிறந்தார்கள். இங்கு இடம் போதாமலிருந்
தது. இப்பொழுது இக்குறையை நீக்கி இக்கட்டடத்தை முடித்துவைத்த லேடி பாஷி
யம் ஐயங்காரவர்களுக்கு நம்மவர்கள் எப்பொழுதும் நன்றிசெலுத்தக் கடமைப்பட்
டிருக்கிறார்கள். மேலும் இந்த ஆஸ்பத்திரிக்கு வெளிஜில்லாக்களிலிருந்தும் ஸ்திரீகள்
அதிகமாக வருகிறதற்கு காரணம் இதன் லேடி டாக்டர் சாமர்த்தியமாயும், பிரியமாயு
மிருப்பதே. ஆகையால் லேடி டாக்டராகிய மிஸஸ் விங்ளர்கின் இந்த ஆஸ்பத்திரியி
லும், சென்னையிலுள்ள ஸ்திரீகளுக்கும் நன்மைசெய்துக்கொண்டு வருவதினால் அந்த
அம்மாளுக்கும் எனது வந்தனத்தை யளிக்கின்றேன். மாதர்களே! இந்த வார்ட் அனை
வர்க்கும் மிக உபயோகமாக விருக்கவேண்டுமென்று நம்பிக்கையுடன் இதைத் திறக்
கிறேன்' என்று சொல்லி திறந்தார்கள். அப்பொழுது மாதர்கள் கரகோஷம் செய்
தார்கள். லேடி டாக்டரால் லேடி ஆம்ப்திலுக்கும் அனைவர்க்கும் ஆஸ்பத்திரி முழுவ
தும் காட்டப்பட்டபின்னர் லேடி ஆம்ப்திலுக்குப் பூமாலை போட்டார்கள். அங்கு வந்
திருக்கும் மாதர்களுக்கும் பூமாலை பழம் முதலியவைக ளளித்தபின் கூட்டம் கலைந்தது.

ஓர் மாது.

## மைசூர் மகாராணியார் காலேஜ்.

இக்காலேஜ் வெகு நன்றாக நடத்தப்பட்டு வருகிறது யாவருக்கும் தெரிந்த விஷயம். இதை இவ்வளவுமேன்மையான ஸ்திதிக்குக் கொண்டுவந்தவர் ராவ்பஹதூர் A. நரசிம்ம அய்யங்காரவர்கள்தான். 1903-1904-ம் வருஷத்தில் இப்பாடசாலையில் பி. ஏ. பரிக்ஷையில் ஸ்ரீமதி K. சுப்பம்மாவும், ஸ்ரீரங்கம்மாவும் தேறியது அக்காலேஜ் கமிட்டியாரின் நன்முயற்சியையும், அபிமானத்தையும் நன்கு விளக்குகின்றதல்லவா? இவ்விருவரும் முதல்வகுப்பில் தேறியுள்ளார். ஸ்ரீமதி K. சுப்பம்மாள் இவ்விராஜதானியிலுள்ள பிள்ளைகள் மார்க்பெற்றதைவிட அதிகமாக தம் கல்வியின் திறமையால் அடைந்து அவர்களுக்கெல்லாம் அதிகமேன்மையாக முதலில் தேறினாள். 1903-ம் வருஷம் நவம்பர் மாதம் காலேஜியில் கண்ணியமுள்ள எல்லா வகுப்பாரின் குழந்தைகளையும் சேர்த்துக்கொள்ளலாமென்ற தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. எப். ஏ. பரிக்ஷையில் காசிபாயி தேவதார் என்ற மாது தேறியுள்ளார். காலேஜியிலுள்ள போதனாமுறை வகுப்பும் நல்லவேலை செய்து வருகிறது. 311 மாணவிகளிருந்தார்கள். இவர்களில் 304 பிராமணர்கள். காலேஜியில் 26 கைம்பெண்களும் கற்றுவருகிறார்கள். மருத்துவத் தொழிலில் கற்றுதேறின மூன்று மாதர்கள் மருத்துவச்சிகளாக வேலையில் அமர்ந்திருக்கிறார்கள். "இந்த மருத்துவத் தொழில் பழகின உயர்ந்தஜாதி மருத்துவச்சிகள் மிகத் தேவை; ஆனால் அநேகர் இத்தொழிலுக்குப் பிரவேசிப்பதில்லை. எனெனில் இத்தொழில் மிகக் கஷ்டமானதாயும், இவர்களுக்குத் தெரியாததாயும் பழக்கப்படாத தொழிலாயு மிருக்கிறபடியால் தான் காலேஜியிலுள்ள உயர்ந்த ஜாதியைச்சேர்ந்த மாதர்கள் சேர இஷ்டப்படுவதில்லை. அவ்விதம் சேர்ந்தால் அவர்களை ஜனங்கள் வருத்துகிறார்கள். அவர்களை ஜாதியினின்றும் நீக்குகிறார்கள். இதன்னியில் அவர்களுக்கு கொடுக்கும் சம்பளமோ மிக சொற்பம். ஆயினும் பொறுமை, சாந்தம் தொழிலில் சிரத்தையும் ஊக்கமு முள்ள இந்து மாதர்கள் விருத்திக்கு வருகிறார்கள். இவைகளுடன் நல்ல பயிற்சியு மிருந்தால் இவர்கள் மிகமேன்மையான தாதிகளாவார்களென" லேடி சூபிரன்டெண்டண்டு அவர்கள் சொல்வது உண்மையேயாம்.

இக்காலேஜ் அதிக பிரயோசனமான காரியங்களைச் செய்துவருகிறதானது அக்காலேஜ் கமிட்டியாருடையவும், லேடி சூப்பிரன்டெண்ட் அம்மாளவர்களுடையவும் நன்முயற்சியால் தான் என்று சொல்ல என்னத்தடை?

### பம்பாய் மாதர்கள்.

இவ்வருஷம் பம்பாயில் பிராம்ஜி கவாஸ்ஜி பாடசாலையில் மாதர்கள் ஆசாரத்திருத்த விஷயங்களைக் குறித்துப் பேச சபைகூடினார்கள். இவ்விதம் மாதர்கள் செய்தது முதல் தடவையென்றே சொல்வோம். பம்பாய் மாதர்கள் இச்சபை கூடியதுடன் காங்கிரஸ் மகாசபைக்கும் சென்று அங்கு நடந்த நடவடிக்கைகளையும் மிக கவனமாய்க் கேட்டும் பார்த்தும் வந்தார்களாம்.

நம் தேசத்தில் இவ்விதவிருத்தி இன்னும் வரவில்லையே என்று அநேகர் நினைக்கலாம். நமது தேசத்தில் பெண்பிள்ளைகள் உங்களுக்கு என்ன தெரியும், நம்முடைய உற்றார் பெற்றார் இம்மாதிரிக் காரியத்தைச் செய்வதாயிருந்தால் சிரிக்கமாட்டார்களா? 'ஆசாரத்திருத்தக்காரருக் கென்ன! எளிதாய்ச் சொல்லிவிடுவார்கள். நீங்கள் என் முதலில் அவர்கள் சொல்லுகிற பழையகால வழக்கங்களுக்கு விரோதமாய்ச் செய்யவேண்டும். நாகூள்ள மகாராஜன்கள் முன்னாலே செய்து காட்டட்டுமே! ஊரார் பிள்ளையை யாழம்பார்க்கச் சொல்வது எல்லார்க்கும் எளிதுதான். மாமூல்வழக்கம் தப்பி நாம் நடக்கவேண்டாம்' என்று சொல்லும் இந்துமாதர்கள் அநேகரிருக்கிறார்கள். இருந்தாலும் பம்பாய் மாதர்கள் தாங்களே தனிமையாகச் சில வேண்டிய திருத்தங்களைச் செய்துக்கொள்ள முன்வந்தது விசேஷிக்கத் தக்கதேயாம். இவ்விதமே மற்ற மாதர்களும் அவசியமான சில ஆசாரங்களைத் திருத்த முன்வந்தால் இந்தியாவிற்கு மிக அநுகூலமுண்டாகும்.



## பம்பாய் மாதர்களும் ஆசாரச் சீர்திருத்தச் சபையும்.

சென்ற டிசம்பர்மீ 30-ந்தேதி 31-ந்தேதியில் நடந்த ஆசாரச் சீர்திருத்தக் கூட்டமானது மிகவும் அனுபவத்துக்கு வந்ததாகவே காணப்படுகிறது.

முதல் தினத்தில் பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜி மிஸ்டர் சந்தர்வர்க்கர் சென்ற வருஷத்தின் இந்தியா முழுதும் விருத்தியாயிருக்கும் ஆசாரச் சீர்திருத்த ரிபோர்ட்டை வாசித்தானவுடன் பரோடா தேசத்து மகாராஜா அவர்கள் சாமானிய உடை தரித்தவராய் சுமார் 8000 ஜனங்களின் கரகோஷக் கொந்தளிப்பின் நடுவில் எழுந்து ஆசாரச் சீர்திருத்தத்தின் நோக்கங்களையும் அது செய்திருக்கும் வேலைகளையும் அது இந்தியாவின் தற்கால நிலைமைக்கு மிகவும் அத்தியாவசியமென்பதையும் ஆசாரச் சீர்திருத்தத்தினாலே மாத்திரம் பூலோகத்திலிருக்கிற ஒவ்வொரு ராஜ்ஜியம் நல்ல ஸ்திதியை அடைந்திருக்கிறதென்றும், நம்முடைய இந்தியா நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமானால் ஆசாரச் சீர்திருத்தத்தின் முறைகளை அனுஷ்டித்தால் ஒழிய ஒருக்காலும் முன்னுக்கு வர மார்க்கமில்லாததினாலே நாமெல்லோரும் ஒன்று சேர்ந்து நம்முடைய பெண்குழந்தைகளைப் படிக்கவைத்து, பாலிய விவாகங்களை நிறுத்தி, ஆடம்பரச் செலவுகளை நிறுத்தி, சரீரப்பயிர்ச்சி முதலியவைகளில் நாம் வலியவர்களானால் மாத்திரம் நாம் மற்ற ராஜியக்காரர்களுக்கு ஒப்பந்தம் முன்னுக்கு வரலாமென்றும் தெளிவாய்ப் பிரசங்கஞ் செய்தார். தம் ராஜ்ஜியத்தில் பெண்கல்வி விஷயமாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்றும், பாலிய விவாகத்தை நிறுத்தும் பொருட்டு ஏகதேசமாய்ப் பெண்குழந்தைகளுக்கு கலியாணமாகும்போது வயது 10-க்கு மேலும் பையன்களுக்கு வயது 16 க்கு மேலுமிருக்க வேண்டுமென்று சில சட்டங்கள்செய்திருக்கிறதாகவும்சொன்னார். மகாராஜா அவர்களின்படிப்பின் பெருந்தன்மையை அவருடைய நடை உடை பாவனைகளினாலேயே அறியலாம். ஐரோப்பா கண்டமெல்லாம் அனேகந்தடவை சுற்றுப் பிரயாணஞ் செய்தவர். இந்தியாவில் எல்லாப் பாகத்திலும் யாத்திரை செய்தவர். தீராது என்ற சமயத்தைத் தவிர மற்ற சமயங்களில் குதிரை, விருதுகள் முதலானவைகள்கூட கொண்டுபோகிறதில்லை. பல தேச யாத்திரை செய்யும் பொழுதும் எவ்வளவு சுருக்கமாய்ச் செலவழிக்கலாமோ அவ்வளவு செட்டாய் யாத்திரை செய்பவர். அதாவது அவசியத்தைத் தவிர குசாலுக்குப் போகிறதேயில்லை. 31-ந்தேதி நடந்த ஆசாரச் சீர்திருத்த சபையானது ஆனரபில் மிஸ்டர் கோகுலதாஸ் பரேக்கின் அக்கிராசனத்தின் கீழ் நடந்தது. இதில் வருஷாந்திரம் வழக்கம்போலே அனேகம் பெயர்கள் பேசினார்கள்.

அதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. அதாவது சுமார் 12-ஸ்திரீகள் பேசினார்கள். மொத்தம் சபையின் கூட்டம், சுமார் 3000. அதில் ஸ்திரீகளின் கூட்டம் சுமார் 500. அதில் அதிகமான ஸ்திரீகளுக்கு இங்கிலீஷ் தெரியுமென்றே தோற்றுகிறது. ஏனென்றால் பேசவேண்டும் விஷயங்களின் மசோதா இங்கிலீஷ் பாஷையிலேயே அச்சடித்துச் சபையில் ஆண்பாலார் பெண்பாலா ரெல்லோருக்கும் கொடுக்கப்பட்டன. அவற்றை ஸ்திரீகள் ஒருவருக்கொருவர் படித்துப் பார்த்துக்கொண்டிருக்க மெத்த ஆச்சரியமாயிருந்தது. இங்கிலீஷ் பிரசங்கங்கள்நடக்கும்போதெல்லாம் அதிகமான ஸ்திரீகள்கவனமாய்க் கேட்டார்கள். முக்கியமான இடங்களில்கரகோஷங்கள் செய்தார்கள். நடந்த நடவடிக்கைகளைப் பார்த்தால் பம்பாய் சமஸ்தானத்தில், தேசபாஷைகளாகிய மகாராஷ்டிரம், குஜராத்தி இவைகளில் மாத்திரம் அல்லாமல், இங்கிலீஷ் பாஷையில் கூட ஸ்திரீகள் மெத்தத் தேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். பம்பாய் சமஸ்தானமோ பூர்வ ஆசாரத்துக்குப் பேர்போன இடம். அப்பேர்ப்பட்ட இடத்தில் ஸ்திரீகளிப்படிப் படித்து முன்னுக்கு வந்து இந்தப் பெரிய மகாசபைகளில் நடக்கும் பிரசங்கங்களை யறியும்படியான நிலைமையைப் பார்த்தால் இந்தியன் ஆசாரச் சீர்திருத்த சபையானது சென்ற 18-ம் வருஷத்திற்குள்ளாக எவ்வளவு வேலை செய்திருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம். இன்னமும் 100-வருஷத்திற்குப் பின்னால் நம்முடைய ஜனங்கள் எவ்வளவு தேர்ச்சியும் பயிற்சியு மடைவார்களென்று பாருங்கள். இந்த 12-மாதர்கள் பேசினதில் 3-பேர் இங்கிலீஷில் பேசினார்கள். அதில் 1-குஜராத்து மாது B. A. பாஸ் பண்ணியிருக்கிறாள். மற்றொரு மாது சென்னை மாகாணம் ஸப் ஜட்ஜி மிஸ்டர் விசுவநாதய்யரின் மனைவியார் மற்றொரு மாது பீராரைச் சேர்ந்த மகாராஷ்டிர பாஷையிலேயே பேசினார்கள். நடுக்கமில்லாமல் துரிதமாய்ப் பேசின மாதிரியைப்பார்த்தால் துரிதமாய் நடக்கும் இங்கிலீஷ் பிரசங்கங்களை நோட்பண்ணுகிற பத்திரிகை ரிபோர்ட்டர்களாலும் கூடப் பின் தொடரமுடியாது. அர்த்தமில்லாமல் சபைக்கு விரசங்கொடுத்திருக்குமோ என்று கேட்டால் 15-நிமிஷம் அக்கிராசனாதிபதியவர்களால் பேசுவோர்களுக் கிடங்கொடுத்திருக்க சில ஸ்திரீகள் சபையோர்களின் சர்வ ஜன சம்மத உத்தரவின்பேரில் 1-மணி நேரங் கூடப்பேசினார்கள். மற்றொன்று முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதென்னவென்றால், மத்திய வயதுள்ள ஓர் விதந்து பூனாவில் விதந்துக்களின் சம்ரக்ஷணைக் கிரகத்தைப் பரிபாலித்து வருகிறவள். அந்த அம்மாள் பேசினதைப்பார்த்தால் பிரசங்கத்தில் பேர்பெற்ற சுரேந்திரநாத் பானர்ஜிக்கும் மேலென்று சொல்லலாம். பூனாவில் விதந்துக்களின் சம்ரக்ஷணார்த்தம் வைத்திருக்கிற கிராமமானது பூனாவிலிருந்து 5-மைல் தூரத்துக்கப்பால் ஓர் நதிக்கரை யோரமாயிருக்கிறது. அனாதைகளாயும், எந்தெந்த மதாசாரப்படி யிருக்கவேணுமோ அந்த மாதிரியுமாக மதவிஷயமான படிப்பு, ராமாயண, பாரத, பாகவதம் முதலானவைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. தையல்வேலை முதலியவைகளும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இதில் போதனாமுறை கற்பிக்கும் ஓர் விதந்து பம்பாய் மெட்ரிகுலேஷன் பாஸ்பண்ணினவள். இந்த மாதை பரோடா ராச்சியத்திலுள்ள ஸ்திரீகள் போதனாமுறை பாடசாலையில் வேலைபார்க்க மாதம் 250-ரூபாய் சம்பளத்துக்குக் கூப்பிட்டதற்கு தன் சகாக்களாகிய விதந்துகளை பரிபாலனஞ் செய்யவேண்டிய தர்மத்தைத் தவிர வேறே வேலை அவசியமில்லை யென்று சொல்லிவிட்டாள். மாதம் 25-ரூபா வாங்கிக்கொண்டு அநா



தவிதந்து கிரகத்தில் வாத்தியாராக இருந்துகொண்டிருக்கிறாள். ஒரு பாலிய மகாராஷ்டிர விதந்துவுக்கே இவ்வளவு தேசாபிமான மிருக்குமாயின் ஸினியர் ராங்கலர் பட்டம்பெற்று பூனா பெர்கூஸன் காலேஜில் வேலைபார்த்து வருகிறவும் தன் தேசாபிமானத்தைக் காட்டிவருகிற பராஞ்சிபியைப் பார்த்து நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை.

பம்பாய்க்குச் சென்றவர்.

# சமாசாரக் குறிப்பு.

சமீபத்தில் நடந்த எப். ஏ. பரீக்ஷையில் திருவனந்தபுரம் ஸ்ரீ T. B. கலியாணி அம்மாள் என்ற நாயர் மாது தேறினமைபற்றி நாயர் ஜாதியோரெல்லாம் மிகவும் மகிழ்ச்சி யடைகின்றனர். நாயர் ஜாதிப்பெண்கள் பொதுவாய் கல்வி கற்றோராயிருந்தும், இதுவரை F. A. பரீக்ஷைதேறின பெண் எவருமில்லையென்று தெரிகிறது. இம்மாது நாயர் ஜாதிக்குப் புகழளிக்கின்றனரென்றே கூறவேண்டும்.

***

புனா நகரத்து கைம்பெண்கள் கிரகத்துக்குப் பொருள் சேர்க்கும்பொருட்டுப் பலவிடங்களிலும் சென்று பிரசங்கித்து வருகின்ற காசிபாயி தேவதார் அம்மாள்சென்ற ஞாயிற்றுக்கிழமை திருவாங்கூரிலிருந்து மதுரைக்கு வந்தனர். திருவாங்கூரில் இவர் 'கிரகத்தின்' பொருட்டு 100 ரூபாய் சேர்த்தனர். திங்கட்கிழமை காலை இம்மாது மதுரையிலிருந்து இராமேசுரத்துக்குப் புறப்பட்டுப் போயினர்.

***

மசூலிப்பட்டணத்தில் சிறிதுகாலமாய் ஒரு பெண்பாடசாலை கட்டப்பட்டுவந்தது. அந்தக் கட்டிடம் தெற்குவள்ளூர் ராஜாவின் (ஜமீன்தார்) பொருளுதவிகொண்டு கட்டப்பட்டது. அக்கட்டடம் லேடி ஆம்ப்தில் ஹிந்து பெண்பாடசாலையென்ற பெயருடன் நேற்று சனிக்கிழமை கிருஷ்ணா கலெக்டர் மிஸ்டர் பார்ஸன் மனைவி மிஸஸ் பார்ஸனால் திறக்கப்பட்டதாகத் தெரிகிறது. அப்போது மசூலிப்பட்டணத்திலுள்ள ஐரோபிய மாதர்களுக்குள் முக்கியஸ்தர்களும், ஐரோப்பிய கனவான்களும் இந்திய கனவான்களும், வந்திருந்ததாகவும் சொல்லப்படுகிறது. தெற்கு வள்ளூர் ராஜாவின் வேண்டுகோளின்படி மிஸ்ஸஸ் பார்ஸன் அக்கட்டிடத்தைத் திறப்பதற்கு முன்னாக லேடி ஆம்ப்தில் அப்பள்ளிக்கூடம் நன்றாய் விருத்திக்கு வரவேண்டுமென்று தாம் விரும்புவதாக அனுப்பியிருந்த தந்தியொன்று வாசிக்கப்பட்டது. அக்கட்டிடம் திறந்து முடிந்ததும் அப்பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுமிகளுக்குத் தின்பண்டங்களும் பழங்களும் வழங்கப்பட்டனவாம். 7000-ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கும் அக்கட்டடம் வெகு நன்றா யிருக்கிறதென்று யாவரும் சந்தோஷப்பட்டார்களாம்.

***

## மாதர்கள் பிரசங்கமும் திவான்பகதூர் ரகுநாதராவும்.

பம்பாயில் சென்ற டிஸம்பர் மாசத்தில் மாதர்கள், ஆசாரத் திருத்தத்தைப்பற்றிச் செய்த பிரசங்கங்களில் திவான் பகதூர் ரகுநாதராவ் மிக்க மகிழ்ச்சி யடைகின்றார்.

வேதமார்க்கத்துக் குட்படாது, ஹிந்துமத விதிகளை திரஸ்கரித்தவர்களாகிய ஜனங்களின் பிரசங்கத்தைக்காட்டிலும், ரானடே சீமாட்டியும், மாது ஸ்ரீ பார்வதிபாயும், மிஸ்டர் விசுவநாதய்யர் மனைவியாரும் செய்த உபந்நியாசங்கள் ஆயிரமடங்கு அதிக முக்கியமானவையென்றும் அனேக ஹிந்து வைதிக மாதர்களும் இவ்விதமான அபிப்பிராயமே உடையோர்களென்றும் அவற்றை வெளியிட அவர்களுக்குச் சாவகாசம் ஏற்படவில்லையென்றும் மிஸ்டர் ரகுநாதராவ் தெரிவிக்கிறார். மிஸ்டர் ரகுநாதராவின் காலஞ்சென்ற மனைவியாரும், அவரது (ராயரது) மாதாவும் இதேவித அபிப்பிராயங்களை கொண்டிருந்தனரென திவான் பகதூர் கூறுகின்றார். மதவேறுபாடுகளிருப்பதாக எண்ணிக்கொண்டு திவான்பகதூர் குறை கூறுகின்ற ஆசாரத்திருத்தக் கட்சியாரின் உதவியில்லாமலே, கைம்மையருக்கு மணஞ்செய்ய வேண்டுமென்றும், பெண்களை ருதுவாகுமுன் மணஞ்செய்து கொடுக்கவொண்ணாதென்றும், ஹிந்து வைதிக வயோதிக மாதர்கள் அபிப்பிராயங்கொண்டிருக்கும் விஷயத்தை திவான்பகதூர் கூறக்கேட்டுக் களிப்புறுகின்றோம்.

***

பம்பாயில் பெண்கல்வியை விருத்திசெய்ய சில கனவான்கள் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் உழைத்துவருகிறார்கள். இவர்களைப்பார்த்தாவது மற்ற இராஜதானிகளிலுள்ள ஜனங்கள் பின் நடந்தால் நலம். பம்பாய் ஆசார சீர்திருத்தசபை பெண்கள் கல்வியில் தேறி விருத்தியடைவதற்காக மிகஉழைத்துவருகிறது. சிற்சில முக்கியமான இடங்களில் ஸ்திரீகளுக்கு ஆங்கிலம், கணக்கு, சரித்திரம், மராட்டி, குஜராட்டி தையல்வேலை, குடும்பசம்ரக்ஷணை முதலியவைகளைப் போதிக்க வகுப்புகள் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறது விசேஷமானதேயாம். ஸ்திரீகள் தங்கள் வீட்டுவேலைகளைச் செய்தபின்னும் அவைகளுக்குக் கெடுதல் வராமலிருக்கும்படியாயும் மத்தியானத்தில் படித்துவரத்தக்க ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் இவர்களுக்கு பற்பல விஷயங்களைப்பற்றி பிரசங்கம் புரியவும் ஏற்பாடு செய்யப்பட்டு இப்பொழுது மராட்டி இந்தி முதலிய பாஷைகளில் பிரசங்கங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இச்சபைக்கு B. S. பேடல் அம்மாள் அவர்கள் 100 ரூ இனமளித்திருக்கிறார்கள். மாதர்கள் படிக்க ஒரு புஸ்தகசாலையும் ஸ்தாபிக்க முயன்று வருகிறார்கள். ஸ்திரீகளின் விருத்திக்காக பற்பல விஷயங்களில் முயன்றுவரும் இச்சபை நீடூழிவாழ்க.

## புத்தகவரவு.

நான்காவது, மூன்றாவது, இரண்டாவது, முதலாவது வகுப்புகளுக்கு மிக முக்கியமான தமிழ் வாசகப்புஸ்தகங்கள் ம-ா-ா-ஸ்ரீ சிவஞானம்பிள்ளை யவர்களாலும் ம-ா-ா-ஸ்ரீ நமசிவாயமுதலியாரவர்களாலும் பிரைமரி வகுப்புகளில் படிக்கும் பாலர் பாலிகைகளுக்கு புத்திபுகட்டக் கூடிய பற்பல கதைகளும், அநேக நீதிவிஷயங்களும், பூமிசாஸ்திரம், ஒஷதிசாஸ்திரம் முதலியவைகளை யனுசரித்து சிற்சில விசேஷ பாடங்களும் வெகு நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. இவைகளுடன் சிறு குழந்தைகள் கிண்டர்கார்டன்விஷயமாக பாட்டுகளைச்சொல்லி விளையாடகதைகளடங்கிய இனிமையானபாட்டுகள் நன்றாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவைகள் மிகப்பிரயோஜனமென்றே நாம் சொல்வோம். மேலும் பிள்ளைகள் எழுதப்பழக்க கையெழுத்து லிதோகிராப்பால் எடுத்து சேர்க்கப்பட்டிருக்கின்றன; இது மிக அவசியமானதேயாம். ஏனெனில் சாதாரணமாக நான்காவது வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு கையெழுத்துள்ள கடிதங்



களைப் படிக்கத் தெரிவதில்லை. இவ்விதமிருப்பதால் பிள்ளைகள் கையெழுத்துள்ளவைகளையும் வெகு எளிதில் படிக்கக் கற்றுக்கொள்ளலாம்.

இவைகளில் சித்திரப்படங்களும் வெகு நன்றாக பாடங்களுக்குப் பொருந்திய வண்ணம் அமைக்கப்பட்டிருக்கின்றன. தற்காலத்தில் அநேகமாக இந்தியர்களால் பிரசுரிக்கப்பட்ட புஸ்தகங்கள் நமது பாடசாலைகளில் உபயோகிக்கப்படவில்லை. இந்தியர்களாலேயே எழுதப்பட்டும் பிரசுரிக்கப்பட்டுமுள்ளமேற்கூறியபுஸ்தகங்கள்கனம்டைரக்டரவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை மானேஜர்களும் பாடசாலைத் தலைவர்களும் உபயோகித்துவருவார்களானால் பிரசுரித்தோர்க்கு ஊக்கமும் விடாமுயற்சியுமதிகரித்து இன்னும் பிள்ளைகளுக்கு அதிக முக்கியமான புஸ்தகங்களைப் பிரசுரிக்க தூண்டுதல்செய்யும். ஆனதுபற்றி யாவரும் மேற்கூறிய புஸ்தகங்களை மனப்பூர்ணமாய் அங்கீகரித்து பிள்ளைகளுக்கும், பாலிகைகளுக்கும் பாடப் புஸ்தகங்களாக ஏற்பாடு செய்தலே நம்மவர்கள் நம்மவர்களுக்குச் செய்யும் பேருதவி என்று உறுதியாய்ச் சொல்வோம். புஸ்தகங்கள் வேண்டுவோர் மாதர்மனோரஞ்சனி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ரிப்பன் நேஷனல் டைரி:—வழக்கம்போல் மிஸ்டர் S. சிவசங்கரசெட்டியாரவர்கள் விசேஷ சமாசாரங்களும், பஞ்சாங்கமுமடங்கிய அழகான டைரியை பிரசுரித்திருக்கிறார். இது எல்லாருக்கும் மிக அவசியமானதென்று சொல்வோம். வேண்டுவோர் சென்னை ரிப்பன் பிரஸ் சொந்தக்காரர் மிஸ்டர் S. சிவசங்கரசெட்டியாரவர்களுக்கு என்று எழுதவேண்டும்.

## முக்கிய அறிவிப்பு.

நமது (Tamil Zenana Magazine) மாதர் மனோரஞ்சனி பத்திரிகைக்கு சென்ற வருடம் முழுவதும் மானேஜராயிருந்த மிஸ்டர் பி. வைத்தியநாதய்யரை 1905ளு ஜனவரி௴ 14உ முதல் அவ்வேலையினின்று நீக்கியிருப்பதால் அவருக்கும் இந்தப் பத்திரிகைக்கும் யாதொரு சம்மதமுமில்லை. ஆகையால் எல்லாக் கடிதங்களும் மணியார்டர்களும், புஸ்தகங்களும், பத்திரிகைகளும் என் விலாசத்திற்கே அனுப்பபடவேண்டும்.

வி. எஸ். இராமசுவாமி ஐயர்
மாதர் மனோரஞ்சனி எடிடர் & ப்ரோப்ரைடர்.
12, தணிகாசல பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி.

**Dr. H. L. BATTLIYALA.**
டாக்டர். எச். எல். பாட்லிவாலா.
ஒர்லி தாதர் பம்பாய்.

ஏராளமான நற்சாட்சி பத்திரங்களிலிருந்து சில உறுதிமொழிகள்:—பாட்லிவாலா என்பவரின் குளிர் காய்ச்சல் மருந்தும், மாத்திரைகளும், மலேசுரம், இன்ப்ளுவென்சாசுரம், பேருவாரிநோய் இவைகளுக்கு நிச்சயமான பரிகாரம்:—ஸர்ஜன் மேஜர் ஜைகர் என்பவர் இந்த மருந்தானது க்ஷேமகரமான நம்பிக்கையுள்ள மாற்று. ஸர்ஜன் மேஜர் ரிபோர்டர் என்னுடைய அனுபவத்தில் மிக்க பலத்தை தரும்படியான ஔஷதமென்று அறிந்துகொண்டேன். மிஸ்டர் ஜே. ஏ. லாங். (டிப்டி கிராண்டு மாஸ்டர். ஸ்காட்லாந்து ப்ரீமேஸன்றி இந்தியா) நான் அதை உபயோகித்ததினால் கைகண்ட பலனை யடைந்தேன். ரெவரண்டு பி. பொர்னுன்ஸ் (விசார்டிவாலி) இந்த ஔஷதமானது மிக்க திராணியுடையது. மிஸ்டர் ஜி. எஸ். ரிஸ்டி ஸிவில் இஞ்சினீர் தங்களுடைய மருந்து இடையூறில்லாத கைகொண்ட பலனைக்கொடுக்கும். மிஸ்டர் ஜே. பி. டாவி சீப் கார்டு எஸ். எம். ரெயில்வே:—மரணதாபத்திலிருக்கும் மனிதர்களுக்கு தேவாமிருதம்போன்ற சொட்டுகள் என்பதில் தடையேயில்லை. பாட்லிவாலாவின் குளிர் காய்ச்சல் மருந்தும், மாத்திரைகளும், பாட்லிவாலா கம்பெனியினுடைய காலரா மருந்தும் எல்லா மருந்து ஷாப்புகளிலும், இவ்வௌஷதங்களைச் செய்யும் பாட்லிவாலா என்பவரிடத்திலிருந்தும், சென்னை பிராட்வேயிலிருக்கும் ஒக்ஸ் கம்பெனியிலிருந்தும் ஒரு புட்டி ஒரு ரூபாய் வீதம் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரம் செய்பவர்களுக்கு கமிஷன் கன்னிகொடுக்கப்படும்.

## விசேஷ அறிவிப்பு.

நமது பத்திரிகைக்கு ஏழாவது வருடம் பிறந்திருக்கிறது. இன்னும் நமது சந்தாதாரர்களில் சிலர் நாளது 1904-ம் வருஷத்திய சந்தா பாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். சந்தாவை முன்பணமாகவே அனுப்பவேண்டியிருக்க இன்னும் அனுப்பாமல் இருப்பதால் நமக்கு வீண்சிரமமும், நஷ்டமும் நேரிடுகின்றது. சந்தாவை சரியாய் அனுப்பினால் தானே நமது சஞ்சிகை கஷ்டமின்றி சரியாய் நடந்துவரும். இந்த சஞ்சிகை கிடைத்தவுடனாவது தயவுசெய்து சந்தாத்தொகையைஅனுப்புவீர்களென்று நம்புகிறோம். அப்படி சந்தா அனுப்பாதவர்களுக்கு அடுத்த பிப்ருவரிமீ பத்திரிகையை வி-பி-யில் அனுப்புவோம். நமது சந்தாதாரர்கள் தகுந்த கனவான்களாதலால் இது ஓர் பெரிதல்ல. மேல்விலாசம் மாறும்பொழுது உடனே தெரியப்படுத்தவேண்டும். பத்திரிகை சேராவிட்டால் உடனே தெரியப்படுத்தவும்.

## NOTICE.

Mr. P. Vydyanada Iyer's connection as the Manager of the Journal called the Tamil Zenana Magazine, ceased on 14th January, 1905. All Correspontence, remittances, etc, connected with the said Magazine should be addressed the undersigned only.

C. S. RAMASWAMI IYER,
*Proprietor & Editor,*
*The Tamil Zenana Magazine, Triplicane, Madras.*

**Please attend to this!**

தயவுசெய்து இதைக் கவனியுங்கள்.

Subscribers are requested to remit the subscriptions at an early date for the current year, and also those who are in arrears are requested to remit the arrears together with the current year's subst cription to the undersigned only to enable him to publish the Magazine regularly.

நமது பத்திரிகைக்கு மிஸ்டர் பி. வைத்தியநாத ஐயரை 1905ளு ஜனவரிமீ 14வ முதல் மானேஜர் வேலையினின்று நீக்கியிருப்பதால் எல்லா சந்தாதாரர்களும் நாளது வருஷத்திய சந்தாவையும், முந்திய வருஷங்களுக்குப் பாக்கியிருப்பவர்கள் பாக்கித் தொகையையும் சேர்த்து விவரமாக மணியார்டர் கௌபனில் எழுதியும், கடிதம் முதலியவைகளையும் அடியில் கையொப்பமிட்டிருக்கிறவர்க்கே அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஸி. எஸ். இராமசுவாமி ஐயர்,
எடிடர் & ப்ரொப்ரைடர்
மாதர் மனோரஞ்சினி ஆபீஸ்,
12, தணிகாசலபிள்ளைத் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

## மாதர் மனோரஞ்சினி சந்தாவிபரம்.

| | |
|---|---|
| வருட சந்தா தபால் சார்ஜ் உள்பட வெளியூர் உள்ளூராருக்கு ... | 1-12—0 |
| 6-மாதத்திற்கு ... ... ... ... ... | 1—0—0 |
| தனிப்பிரதி ... ... ... ... ... | 0—2—6 |
| மேல் நாட்டாருக்கு ... ... ... ... | 2—4—0 |
| டிக்பேபர் வருட சந்தா ... ... ... ... | 2—8—0 |

முன்பணம் அனுப்பினாலன்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

C. S. இராமசுவாமி ஐயர்,
எடிடர் & ப்ரோப்ரைடர்,
12, தணிகாசலபிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

திருவல்லிக்கேணி
15—12—04.

Printed at the Madras Ripon Press & published by the proprietor
C. S. Ramaswamy Iyer, Madras.

...1905
...RAS.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-VII. புத்தகம் எ. | Madras: February 1905. சென்னப்பட்டணம்: பிப்ரவரிமீ 1905. | No-2. இல-2.

## நமது பத்திரிகையின் ஏழாவது ஆண்டு.

நமதுபத்திரிகைக்கு 6-வது வருடம் பூர்த்தியாய் 7-வது வருடம் ஆரம்பித்திருக்கிறது. சென்ற வருடத்தில் நமது பத்திரிகையை கூடியவரையிலும் அந்தந்த மாதத்திலேயே பிரசுரித்து வந்தோம். இவ்வருடம் ஒவ்வொரு மாதத்திலும் 15உயில் பிரசுரிக்க ஏற்பாடு செய்துவருகிறோம். இதுவரையிலும் நமக்கு பற்பல விஷயங்களில் உதவிபுரிந்து வந்த கையொப்ப நேயர்களுக்கும் போஷகர்களுக்கும் இந்து, மெயில், இந்தியன் சோஷல்ரிபார்மர், இந்தியன் எஜிகேஷனல் ரிவியு, மதிராஸ்ரிவியு, இந்தியன் லேடிஸ்மகஸின், சுதேசமித்திரன், இந்துநேசன், ஞானபோதினி ஸ்டாண்டர்டு, விவேகபானு, திராவிடவர்த்தமானி, சர்வஜனமித்திரன், தத்வதீபம், செந்தமிழ், சுதேசிமுதலிய பத்திராதிபர்களுக்கும் நமது வந்தனத்தை யளிக்கின்றோம். நமது பத்திரிகையைக் கிரமமாகவும் நன்றாகவும் அச்சிட்டுவருகிற மிஸ்டர் S. சிவசங்கரசெட்டியாரவர்களுக்கும் நமது பத்திரிகைக்கு அடிக்கடி அருமையான விஷயங்களை எழுதிவருகிறவர்களுக்கும் நமது வந்தனத்தை யளிக்கின்றோம். இவ்விதமே எல்லா கனவான்களும் இவ்வருடமும் உதவிபுரிந்துவருவார்களென்று நம்புகிறோம்.

நமது பத்திரிகையை கூடியவரையிலும் விருத்திக்குக் கொண்டுவர முயன்று வருகிறோம்; இன்னும் இதில் அடிக்கடி சித்திரப்படம் பிரசுரிக்க ஏற்பாடும் செய்துவருகிறோம்; இப்பொழுது வைத்திருக்கும் சந்தா மிக சொற்பமாயிருந்தபோதிலும் நமது சந்தாதாரர்கள் தாமதம் செய்யாமல் சந்தாவை முன்பணமாகவே அனுப்பிவந்தால் மிக அநுகூலமாகவிருக்கும். நாம் இதுவரையிலும் பத்திரிகையை நடத்திவந்தது பெருங்காரியமல்ல; ஆனால் இனி வகிக்கப்போவது தான் பெருங்காரியம்; ஏனெனில் 7 வயது

ள்ள குழந்தையை தக்கவழியில் நடத்தி அதற்கு நல்லுணவு முதலியவைகளால் போஷித்து வந்தால்தான் அது நன்றாக தழைத்தோங்கிவளரும். ஆகையால் பத்திரிகையின் விருத்தியைக்கோரும் அனைவரும் தங்களாலியன்ற உதவிபுரிவதுடன் தங்கள் பந்து, மித்திரர்களையும் இப்பத்திரிகையை வாங்கும்படியும் முயற்சிசெய்வார்களென்று நம்புகிறோம்.

C. S. இராமசாமி ஐயர்,
எடிடர் & ப்ரொப்ரைடர்,
மாதர் மனோரஞ்சனி.

## பெண்மதி.

இவ்வுலகின்கணுள்ள புருஷர் பலர், பெண்மதி கேட்பதெல்லாம் கேட்டை விளைவிப்பதுடன், நகைப்புக்கு மிடமாகும் என்றும், இவ் விஷயத்திற்காக தாயுமானவர் பட்டினத்தடிகள் கூறியவற்றைக் கூறிப்பிடிவாதம் கொள்வர். இதை உள்ளபடி ஆராய்ந்து பொருள் கொள்ளலே சிறந்ததாகும்.

“தையல்சொற் கேளேல்” என்று கூறியுள்ளார் நம்மூதாட்டியார் ஒளவை. ஒளவை பெண்பாலரே யாதலின், அவள் கூற்றை நாம் மேற்கோடல் சிறந்ததாகுமா? அப்படி ஒளவை மொழிகளை நாம் அங்கீகரியா திருப்போமேயாகில் நம்மைப்போல் துர்ப்பாக்கிய முடையவ ரெவருளர்? ஒளவை சொல் அத்தனையும் நீதியைக் கற்பிக்கக்கூடியதென அறியாதார் யாவரேனும் உளரோ?.

ஆகையால் அவ்வாக்கியத்தின் பொருள் எதுவாக விருத்தல்வேண்டு மெனில், ஸ்திரீகள் சொல்லும் வார்த்தைகளின் குணாகுணங்களை யோஜித்து, குணமுள்ளவைகளை அங்கீகரித்துக் குற்றமுள்ளவைகளைக் களைதலே நமது கடமை; மாதர்கள் வார்த்தைக ளெல்லாவற்றையும் தள்ளிவிடவேண்டு மெனப் பொருள் கொள்வது அத்துணை சிறவாது.

இது நிற்க “நுண்ணறிவுடையோர் நூலொடுபழகினும், பெண்ணறிவென்பது பேதைமைத்தே” என்று கூறப்பட்டுளதே! இதற்குச் சமாதான மென்ன என்று கேட்கப் புகுகிறார்கள். இதை ஆதாரமாக வெடுத்துரைப்பது அவ்வளவு பொருத்தமாக விருக்குமென என்னுதற்கில்லை. பெண்கள், வெளியே போய் எல்லாருடனும் பழகித் தங்கள் அறிவை விசாலித்துக்கொள்ளத்தக்க காரணங்கள் ஏற்படாததினால் அவர்கள் சொல்லுகின்றவைகளுள் குணமில்லாதவைகளும் கலந்திருத்தல்கூடுமென்ற கருத்துக்கொண்டு சொல்லியதே யல்லது வேறொன்று மிலது. மந்திரிபோலிருந்து புத்தி புகட்டுவது,



உத்தமஸ்திரீகளின் முக்கிய குணங்களுள் ஒன்றாகச்சொல்லப் பெற்றுளது. பெண்கள் வார்த்தைகளையே அங்கீகரிப்பது பிசகென்றிருக்கும் பட்சத்தில், புத்தி போதிப்பதை உத்தம ஸ்திரீகளின் குணங்களுள் ஒன்றாக ஏன் சேர்த்தல் வேண்டும்?

நாரியர் யார்? புருஷர்களுக்கு ஏற்ற சமயத்தில் ஏற்றவைகளை மந்திரி போலுரைத்து புருஷர்களுக்கு வலக்கைபோல் இருப்பவரன்றோ? புருஷர்களது மனது வருந்துழி ஆற்றுதற் குரிய அன்பும் குணமும் வாய்க்கப்பெற்றவர்களே ஸ்திரீகள். உள்ளம் கலங்கி திகைத்திருக்கும் புருஷர்களை அத்திகைப்பினின்றும் நீக்குபவர்கள் மாதர்கள். இவ்வண்ணமெல்லாம் இருக்கப்பெற்ற ஸ்திரீகளின் பேச்சைக் கேட்டல் கூடாதெனவுரைப்பது வியப்பே யாகும்.

மேலும் “தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை” எனப்பெரியோர் பகர்ந்திருக்கின்றனர். பெண்கள் சொற்களையே கேட்டல் கூடாதென்றிருக்கும் பட்சத்தில் ஏன் இவ்வாக்கியத்தை அவர்கள் பகரல்வேண்டும்? தப்பிப்பகர்ந்தனரோ, அவ்வண்ணம் நினைக்கிறவர்கள் தாய்சொற்களையே தெய்வ வாக்கென்று எண்ணி அவைகளின்படி நடந்து கெடுதலை அடைகின்றார்களாவென கவனிக்கட்டும். இவ்வண்ணம் கவனித்து உண்மையை எல்லோரிடமும் கூற, அவர்கள் வெட்கமுறினும் தங்கள் மனத்தையாவது திருப்தி செய்துகொண்டு மேற்கூறிய வாக்கியத்தின் உண்மையை யறிந்துகொள்ளட்டும். ஆனால் தாய்சொல்லைத்தட்டியவன் துன்புறுகிறான். உதாரணமாக பிரசங்கத்தில் நடக்கும் கொட்டகை உற்சவம் பார்க்கவிரும்பிய சகோதரர்களிருவரும் தங்களன்னையிடத்து விருப்பத்தை அறிவித்தார்கள். அவள் “இவ்வருடம் வேண்டாம் அடுத்தவருடம் பிழைத்திருந்தால் போகலாம் என்று சொல்லவும் அவர்களிலொருவன் அம்மொழி கேளாது புறப்பட்டான். அங்குசென்று மழையில் நனைந்து, குளிரால் நடுங்கி, பசியால்வருந்தி, படுக்கவு மிடமில்லாமல், துன்புற்று “ஐயோ! தாய்சொற்கேளாது போனேனே” என்று சொல்லிக்கொண்டு வீடுவந்தான். இம்மாதிரி விபத்தையவனடைய வேண்டுமென்று தாய்விரும்பியவருமல்ல. இம்மாதிரி விபத்தை அனுபவிப்பனென்றறிந்தவளுமல்ல. ஏதோ தெய்வச்செயல். சகலமும் அறிந்த தாய்மார்கள் கூறும் ஒவ்வொன்றும் நமது நன்மையைக் கருதியேயென்றுன்னி அவைகளின்படி நடத்தல் நன்மையைப் பயக்கும் என்று நாமறிவோமாக. ஸ்திரீ ரத்னங்களில் எத்தனையோபெயர்கள் நமக்கு நீதியைப்புகட்டும் வாக்கியங்களை யெல்லாம் கூறியுளர். அவைகளை எல்லாம் அங்கீகரிக்காதுவிட்டு விடலாமா? அது மதியீனமாகுமே யல்லாது புத்திசாலித்தனமாகாது. ஆகையால் ஸ்திரீகள் சொல்வதில் குணங்களைக் கைக்கொண்டு குற்றங்களைக் கொள்ளாது விடுதலே மேம்பாடான செய்கையென அறிவோமாக.

# ஓர் சம்பாஷணை.

## கல்வி.

பார்வதி:—லக்ஷ்மி! வரவேண்டும், வரவேண்டும்! ஏது அத்திபூத்தாபோலிருக்கிறது? நீங்களெல்லாம் பெரிய மனுஷியாள்!

லக்ஷ்மி:—ஏது பார்வதி! இப்படியெல்லாம் சொல்லுகிறாய், எனக்கு வரவேண்டுமென்று இஷ்டமிருந்தாலும் ஒழிவே யிருக்கிறதில்லை? என் செய்வேன்.

பார்வதி:—என்னசெய்வாய்! பாவம்! பெரிய சம்சாரி ஆய்விட்டாய், பிள்ளைகளும், உன்னை மூலைக்கொன்றாய் பிடுங்குகின்றன, மாமி நாத்திதொந்தரவும் சதாவீட்டு வேலையு மிருக்கிறது.

லக்ஷ்மி:—அவ்விதமிருந்தால் நீ இப்படி பரிகாசம் செய்வாயோ? அவ்வளவு பெரிய சம்சாரத்தை ஏன் எனக்கு சுவாமி கொடுக்கவில்லை என்றால் என்னுடைய நன்மைக்குத் தான் என்று எண்ணுகிறேன், பிள்ளை பெற்றால் எல்லாம் ஆய்விட்டதாக்கும்? நாம் அவர்களை சீராய் நடத்தவேண்டுமென்ற அபிப்பிராயம் உனக்கில்லை போல் தோன்றுகிறது, பன்றிகூட பத்துக்குட்டிகள் போடுகின்றன; என்னத்திற்குப் பிரயோஜனம்?

பார்வதி:—நீ படித்திருக்கிறாயம்மா! உன்போல் எனக்கு பேசவருமோ, பிள்ளைகளை நாம் என்ன நடத்தவேண்டியிருக்கிறது? கடவுளின் கிருபையால் அவைகள் வளருகின்றன, சாதத்தைப்போட்டால் சாப்பிடுகின்றன, நீசொல்வது எனக்குத்தெரியவில்லை.

லக்ஷ்மி:—தெரியவில்லையா? தெரியும்படி சொல்லுகிறேன் கேள். நீ நாளை சமையாமலும் வீட்டுவேலை செய்யாமலு மிரு, சாதம் வயிற்றில் வந்து விழுகிறதா பார்ப்போம். உன் கணவர் கச்சேரிக்கும் போகாமலும் கடையில் சாமான் வாங்கிவராமலுமிருக்கட்டும் சாப்பாடு எப்படி அகப்படும் பார். கடவுள் காட்டுவாரே தவிர ஊட்டுவாரா?

பார்வதி:—நீ படித்திருக்கிறபடியால் உன்னிடம் பேச எனக்குத்தெரியவில்லை. நீ சொல்வதும் எனக்கு அர்த்தமாக வில்லை.

லக்ஷ்மி:—ஏன் நீயும்படிக்கக்கூடாது? படித்திருந்தால் தெய்வபக்தி, உலக வியாபாரம், ஜீவகாருண்யம், ராஜாங்க விஷயம், குழந்தைகளைப் பழக்கும் முறைமைகள் மாமி நாத்தி, மற்ற பந்துக்கள் சிநேகிதர்கள் முதலியவர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய முறைமை, கணவரிடத்தில் அன்பு முதலியவைகளை யெல்லாம் ஒருவர் சொல்லிக்கொடுக்காமலே நீயேயறிந்துகொள்வதும் தவிர புத்தியும் அதிக விசாலப்பட்டு கடவுளிடத்தில் அன்பும் அதிகப்படும்; அதனால் இகபர சாதகமுமுண்டாகும்; சொல்லிக்கொடுத்த வார்த்தையும் கட்டிக்கொடுத்த சாதமும் எவ்வளவு நாளிருக்கும்?

பார்வதி:—அதென்னமோ நீ சொல்வதெல்லாம் எனக்குத் தெரியவில்லை, நம்முடைய பாட்டிகளெல்லாம் படித்து தானிருக்கிறார்களாக்கும், அவர்களெல்லாம் பிள்ளை குட்டிகளுடன் ஆம்படையானிடத்தில் இருந்து வாழவில்லை யாக்கும். அவர்களுக்கு கிடைத்த மாதிரி நமக்கும் கிடைத்தா போதாதா?



லக்ஷ்மி:—உனக்கு இன்னும் இந்த பேதைமை புத்திபோக வில்லையே! உன் புத்திக்கு நான் என்செய்வது? பாட்டி பூட்டிகளெல்லாம் படியாவிட்டால் நாமும் படிக்கக்கூடாதென்ற எண்ணம் உனக்கிருக்கிறாப்போல் காண்கிறது, மேலும் அவர்கள் படியாததனால் தான் இந்த ஊருக்கு அதிகாரி இவனென்றும், இந்தியாவை ஆளப்பட்ட அரசர் இன்னவிடத்தி லிருக்கிறாரென்றும், இந்தியா வென்றால் என்னவென்றும், நம்முடைய ராஜ்ஜியம் இன்னமாதிரி யிருக்கின்றதென்றும் அவர்களுக்குத் தெரியாது, மேலும் அவர்களுடைய தாய்தந்தையர்கள் கற்றுக்கொடுத்த மாதிரி குடித்தன வேலைசெய்துகொண்டும், ஒழிந்த நேரங்களை வம்பிலும், வீணிலும், கொடுமைகளிலும் கழித்துக்கொண்டும் "வழக்கம்" "வழக்கம்" என்று சொல்லிக்கொண்டு இல்லாத கட்டுக்கதைகளை கேட்டு நம்பிக்கொண்டு, தங்கள் ஊர் தவிர மற்றவிடத்தை அவர்கள் பார்த்திருக்கமாட்டார்கள், இதில் 100-ல் ஒரு ஸ்திரீ கெட்டிக்காரியா யிருந்து பாட்டிகளிடத்தில் சொல்லிக்கேட்ட ராமாயணம், பாரதம், மார்க்கண்டேயபுராணம் இவைகளைப் பாட்டாகப் பாடக்கேட்டுக்கொண்டு மிருந்தார்கள். முற்காலத்தில் ஸ்திரீகள் படித்திருந்தார்கள் என்பதற்கு அறிகுறியாய் மகா காவியங்களாகிய ராமாயண இதிகாசங்களில் இருந்து, அநேகம் ஸ்திரீகள் சொற்சுவை, பொருட்சுவை, இலக்கணம் அமைந்ததாய் அநேகம் பாட்டுக்களைக் கட்டி இருக்கின்றார்களே. அவர்களென்ன படியாமலோ இவைகளை இயற்றி இருக்கக்கூடும்? அவைகளை எல்லாம், திரட்டி பாட்டுக்களாகப்பாட எவ்வளவு புத்தியும் படிப்பும் வேண்டும்? நீ ஏன் இவைகளை யோஜிக்க வில்லை.

பார்வதி:—உனக்கிருக்கப்பட்ட புத்தியில் நூறில் ஒரு பங்குகூட எனக்கில்லையே. எனக்கு உன்னைப்போல் ஒன்றும் சொல்லத்தெரியாதே; நீ சொல்லும்பொழுது எனக்கும் இவைகளை எல்லாம் படித்து கற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது; உன்போல் புத்தியை சுவாமி எனக்கேன் கொடுக்கவில்லை? நீ புண்ணியவதியம்மா!

லக்ஷ்மி:—பார்வதி வழிக்குவந்தாய் போலிருக்கிறதே; கடவுள் நம் யாவருக்கும் பக்ஷபாதமன்னியில் சமமாக புத்தியைக்கொடுத்திருக்கிறார். அவைகளை விருத்தி பண்ணிக் கொள்ளத்தான் கல்வி வேண்டுமென்று நான் உனக்கு இவ்வளவு நேரம் சொன்னது தெரிந்ததா?

பார்வதி:—படியாவிட்டால் புத்தியேன் வரமாட்டாது? அதை தயவுசெய்து சொல்லவேண்டும், கேட்க ஆவலுடனிருக்கிறேன்.

லக்ஷ்மி:—ஆகாரம் சரீரத்தை எப்படி போஷித்து வளர்க்கின்றதோ அதே மாதிரி கல்வியானது புத்தியை வளர்க்கின்றது. அதற்காகத்தான் மக்களுக்கு கல்வி வேண்டுமென்றுமூத்தோர்கள் சொல்லியிருக்கிறார்கள். இனிமேலாகிலும் உனக்குப்படித்து எல்லாந் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற புத்திவந்திருக்கிறதே. கரும்பைத்தின்றவனுக்கு அதன் உருசி தெரியும். அதைக்கொண்டே தாயுமானவரும் 'பெற்றவருக்கே தெரியும் பிள்ளையின் அருமை கற்றவருக்கே கண்ணீர் கம்பலை எல்லாம் உண்டாகும்' என்று சொல்லியிருக்கிறார். உனக்கு படிக்கப்படிக்கத் தான் அதன் பெருமை தெரியும்.

பார்வதி:—இலக்ஷ்மீ நீசொல்லும்பொழுது எனக்குஇனிமேல் இப்படி எல்லாம் நல்ல படிப்பு சீக்கிரத்தில்வருமா? நான் என்னசெய்வேன்? முடவன்கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவதுபோல் இருக்கிறதே!

லக்ஷ்மி:—ஏன் அப்படிசொல்லுகிறாய்? முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் இங்கிலாந்தில் அநேகம் வீரர்கள் தாங்கள் ஒரு தொழிலில் இருந்துகொண்டே தன் முயற்சியால் எவ்வளவோ படித்து உலகிற்கு நன்

மைசெய்ததாக தன் முயற்சி என்னும் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. படிக்க வேணுமென்ற ஆசை மனதிலிருந்தால் எப்படியும் படிக்கக்கூடும். நம்மில் இன்னொருத்தி போட்டுக்கொண்டிருக்கும் நகையைப்பார்த்து எனக்கு அந்த மாதிரி புதுமோஸ்தர் வைத்த அட்டிகை கட்டாயம் செய்யவேண்டும். இந்தப் பாட்டிகாலத்தட்டிகை எனக்கு வேண்டாம். இஷ்டமிருந்தால் செய்துகொடுங்கள். இல்லாவிட்டால் அட்டிகையைக் கழற்றி பெட்டியிற் போட்டுவிடுகிறேன் என்று சொல்ல ஸ்திரீகளுடைய வார்த்தைக்கு பதில் சொல்லாமல் அவர்கள் இஷ்டப்படியே புருஷர்கள் செய்துகொடுப்பதில்லையா. புருஷர்களிடம் சொல்லாமலே நமக்கிஷ்டமான துணிமணிகளில் அவர்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை சிலவுசெய்கிறோம். அவைகளை எல்லாம் செய்யக்கூடாதென்று கட்டாயப்படுத்துகிறார்களா? படிக்கிறது வழக்கமில்லையென்று சொல்வதுபோல் நகை துணிகளிலும் நீசொல்லவேண்டாமா?

பார்வதி:—இவைகளெல்லாம் சகஜமாய்ப் போய்விட்டது. அதிக கல்வியிருந்தால் நம்ம ஊரில் பரிகாசம் செய்கிறார்கள் என்னசெய்வது?

இலக்ஷ்மி:—ஊரிலிருக்கப்பட்ட சகோதரிகளெல்லாம் ஒரேமனதினராய் நாங்கள் படிக்கத்தான் படிப்போமென்று சேர்ந்தால் ஒருவரும் பரிகாசம் செய்வாரில்லாமலேபோய்விடுமே, இதற்கு என்ன சொல்லுகிறாய்?

பார்வதி:—எனக்கு நேரமாய்விட்டது வீட்டில்இன்னம் வேலைக்கிடக்கிறது. உன்னிடத்தில் பேசப்பேச அதிக ஆசை எனக்கு படிப்புவிஷயமா யுண்டாகின்றது; மாதர் மனோரஞ்சனியாமே என்னபேர்? அது உனக்கு வருகிறதா என்ன?

இலக்ஷ்மி:—என்ன என்னமோ என்கிறாயே! அதை இப்பொழுது தானா கேள்விப்பட்டாய் ஏழுவருஷமாய்த்தான் வருகிறது. அதை நடத்தும் பத்திராதிபர் மிகவும் ஏழையாமம்மா. தம்முடைய சகோதரிகளான நாமெல்லாரும் கல்வியில் முன்னுக்கு வரும்பொருட்டு விடாமுயற்சியினால் ஏழுவருஷமாய் கஷ்டத்தையும் நஷ்டத்தையும்பாராமல் நம்பொருட்டு மிகவும் கஷ்டப்படுகிறாரென்று என்கணவர்சொல்லி பரிதாபப்பட்டாரம்மா. மேலும் அவர் நிரம்ப சாதுவாம். இதை வாங்கும் சந்தாதாரர்களிடமிருந்து இன்னம் வரவேண்டிய பாக்கித்தொகை ரூபா (1500-0-0) ஆயிரத்து ஐந்நூறும் ஏழுவருஷமாய் நடைபெறுவதால் இதை வாங்கும் நம்முடைய சகோதர சகோதரிகளெல்லாம் பாக்கிச் சந்தாக்களை கட்டி, தங்கள் நண்பர்களையும் இதற்குச் சேர்த்து தங்களாலான உதவியை செய்வார்களென்று நினைந்து நானும் என்னாலான உதவிசெய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். கடவுள் தான் இதை கைதூக்கவேண்டும். இதைத் தவிர சுதேசமித்திரன், இந்துநேசன், சர்வஜனமித்திரன், இவைகளெல்லாம் வருகின்றன கரும்புதின்னக் கூலிவேண்டுமோ படிக்கப்படிக்க ஆநந்தம்தான்.

பார்வதி:—அறிந்தேனம்மா பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும்போல் நானும் உன்னுடன் சேர்ந்து எனக்குத் தெரியாத சங்கதிகளை அடிக்கடி கேட்டு தெரிந்துகொள்ளுகிறேன்; அடுத்தமாதம் வருகிறேனம்மா?

இலக்ஷ்மி:—போய்வா அம்மா நிரம்ப சந்தோஷம் எஜமானர் வரும் வேளையாய் விட்டது; எனக்கும் வேலையிருக்கிறது.

இன்னும் வரும்.

சர்வஜனமித்திரி.



# நீதிசதகம்.

(பர்த்ருஹரி.)

1. தேசம் காலம் என்ற வசம் பற்றற்றதாயும், அகண்டமாயும், அறிவே உருவாயும் அவரவர் அனுபவத்தால் மாத்திரம் அறியக்கூடியதாயுமுள்ள சாந்தமான சோதிக்கு நமஸ்காரம்.

மூர்க்கர்வழி.

2. கற்றுக்கொள்பவர்களின்மேல் அசூயை கொள்ளுகிறது; பிரபுக்களை கர்வம் கெடுத்துவிடுகிறது. மற்றவர்களை அறிவின்மை அழித்துவிடுகிறது. (கேட்போரில்லாமல்) நற்சொல் உள்ளே அடங்கிவிட்டது.

3. (முழு)மூடனைச் சமாதானப்படுத்துவது எளிது. அதிகம் அறிந்தவனைச் சந்தோஷப்படுத்துவது இன்னும் சுளுவு. சிறிது அறிவைக்கொண்டு எல்லாம் அறிந்தோமென நினைக்கும் மூடனை தேவர்கள்கூட திருப்திசெய்ய முடியாது.

4. முதலையின் பற்களின் மத்தியிலிருந்து, இரத்தினத்தை பலாத்காரமாய்ப் பிடுங்கினாலும் பிடுங்கலாம்; எழும்பும் அலைமலைகளால், அலங்கோலமாயிருக்கும் சமுத்திரத்தையும் தாண்டலாம். சீறும் சர்பத்தையும் சிரசில், புஷ்பம்போல் அணியலாம். துரபிமானம் கொண்ட மூடனுடைய மனதை சமாதானம் செய்யமுடியாது.

5. மணலைப்பிழிந்து யத்தினத்தினால் எண்ணெய் எடுத்தாலும் எடுக்கலாம். தாகத்தால் வருந்துவோன் கானல் ஜலத்தைக்குடித்தாலும் குடிக்கலாம். அலைந்து திரிந்து ஒருக்கால், முயற்கொம்பை சம்பாதிக்கலாம். துராக்கிரகம்கொண்ட மூர்க்கன் மனதை வெல்லமுடியாது.

6. அமிருதம் ஒழுகும் நற்சொற்களால், மூடர்களை மாற்ற விரும்புவோன், யானையை இளம் தாமரைத்தண்டின் நூற்களால் கட்டவும், வைரக்கற்களை வாகைப்பூவின் நுனியால் பிளக்கவும், உப்பு சமுத்திரத்தை தேன் துளியால் தித்திப்பாக்கவும், முயலலாம்.

7. மூடத்தனத்தை மறைத்துக்கொள்வது எப்பொழுதும் அனுகூலம், அதற்கு உபாயம் கடவுள் அவனவன் வசத்திலேயே ஏற்படுத்தியிருக்கிறார்; எல்லாமறிந்தோர் சபையில், மூடர்களுக்கு மௌனமே உயர்ந்தபூஷணமாம்.

8. அறிவு அற்பமாயிருக்கும்போது, யானைபோல் மதத்தால் கண்ணிருண்டு, "எல்லா மறிந்தோம்" என்று என் மனம் கர்வம்கொண்டது; அறிவுடையோரிடத்திலிருந்து, கொஞ்சம் கொஞ்சம் தெரிந்துகொண்ட பிறகு, சுரம்போல் (என்னைப்பிடித்த) மதம், "மூடன் நான்" (என்றறியவே) என்னைவிட்டது.

9. புழுநிறைந்து, உளன் தண்ணி சுரந்து, சுவை அற்று, சதை அற்ற கழுதை எலும்பை, சுடில்லா ருசியோடு கடித்துக்கொண்டிருக்கும் நாய் தன்னண்டையில் நிற்கும் இந்திரனையும் மதிக்காது. அற்பஜந்து தன்னைச் சேர்ந்த வஸ்துவின் தாழ்மையை ஆலோசியாது.

10. சுவர்க்கத்தை விட்டு கங்கை சிவன் சிரசை அடைந்தாள். அங்கிருந்து இமயமலையை அடைந்தாள். உயர்ந்த மலையிலிருந்து, பூமியில் இறங்கினாள். அங்கிருந்து சமுத்திரம் சென்றாள். அப்பேர்ப்பட்ட கங்கை அற்பமான தாழ்ந்த பதவிக்கு வந்தாள். விவேகமற்றவர்களுக்கு தாழ்வு நூறுவிதமாய் வரும்.

11. அக்கினியை ஜலத்தால் அணைக்கலாம். வெயிலை குடையால் விலக்கலாம். மதம்பிடித்த யானையை அங்குசத்தாலும், எருதையையும் கழுதையையும் கோலாலும், அடக்கலாம். வியாதியை மருந்தினாலும், விஷத்தை மந்திரத்தினாலும் மாற்றலாம். எல்லாவற்றிற்கும் சாஸ்திரங்கள் மருந்து விதித்தன. மூடர்க்கோ மருந்து இல்லை.

12 சாகித்தியமும், சங்கீதமும், சாஸ்திரமும் வராதவன், வாலும் கொம்பு மில்லாத மிருகமேயாம்; அவன் புல் தின்னாமல் பிழைக்கிறது, பசுக்களின் பெரும்பாக்கியமே.

(இன்னும்வரும்.) A. சீனிவாசன், பி-ஏ.

# ஸ்திரீரத்னம்.

## உ-வது அதிகாரம்.

இப்படி குணசீலன் இறந்தபின், வருஷங்கள் செல்லச்செல்ல இவன் தாயும் தகப்பனும், இதைப்போல பிரபுக்களால் அனேகம் கொலைகளையும் கொள்ளைகளையும் பார்த்து தங்கள் பெரிய மகன் தர்மசீலன் விருத்திக்கு வருவதில் ஆசையை செலுத்தி, கொஞ்சம் கொஞ்சமாக குணசீலனை மறந்தார்கள். ஆனால் அந்த பெரியமகன் தர்மசீலன் மட்டும் தன் தம்பி குணசீலனை மறக்கவில்லை.

இது நிற்க இக்கதையைப் படிப்போர்களுக்கு, பின்வரும் சமாசாரங்களை தெளிவாய் அறியும் பொருட்டு விஜயபுரத்தின் தற்காலநிலைமை தெரிய வேண்டியிருப்பதாலும் அதற்கு இதுவே தகுந்த சமயமாதலாலும், விஜயபுரத்தின் தற்காலநிலைமையை சற்று கவனிப்போம்.

விஜயபுரத்தின் ஜனங்கள் சாதாரணகாலங்களில் மிகவும் பயந்தவர்களாயிருந்தபோதிலும் நிரம்பவும் கோபம் வருங்காலத்தில் கொலைக்குக்கூட அஞ்சாதவர்கள். இப்படி ஜனங்கள் பயங்காளிகளாயிருப்பதைக் கண்டு, சில பணக்காரர்கள் பிரபுக்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு பெரிய கோட்டைகள் கட்டிக்கொண்டு அனேகம் கூலி சிப்பாய்களை தூர தேசங்களிலிருந்து வரவழைத்து வைத்துக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட அனேகம் பிரபுக்களில் மிகவும் பெயர்போனவர்கள் விசித்ரவன், நிர்குணன், பதுமன் என்ற மூன்று பிரபுக்கள். எப்பொழுதும் சன்னடியிலே



யே இருந்துகொண்டு இவர்கள் விரோதத்தில் ஜனங்களை கொள்ளையடிப்பதும், ஸ்திரீகளை கெடுப்பதும், சிலசமயங்களில் கொலைகூட செய்துகொண்டுமிருந்தார்கள். விஜயபுறத்து ஜனங்களுக்கு பிரபுக்களால் இக்கஷ்டங்கள் போதாமல் கொள்ளைக்காரர்களாலும் நஷ்டமுண்டாயின. இக்கொள்ளைக்காரர்களுக்கு சில சமயங்களில் பிரபுக்கள் கூட ஒத்தாசைசெய்து தாங்களும் நேரில் கொள்ளையிடவும் வருவார்கள். அனேகம் வருஷங்களுக்கு முன் மலையன் என்ற வீரன் விஜயபுரத்தில் அனேகம் திருடர்களை ஒன்றுசேர்த்து தான் தலைவனாக இருந்து கொள்ளையடித்துவந்தான். இவனைப்பார்த்து அனேகங் கொள்ளைக்கூட்டங்கள் உண்டாயின. இவர்கள் திடீரென்று ஒரு பட்டணத்தில் பிரவேசிப்பார்கள். எந்தப்பட்டணத்து ராஜாக்களுக்கும் இவர்களைப்போல சைனியங்களிருக்கமாட்டாது. ஆதலால் எப்பொழுதும் இவர்களுக்குத் தகுந்தபணம் அல்லது கொள்ளை எதாவது அகப்படுவது நிச்சயம். இந்தக்கொள்ளைக்காரர்களுக்கெல்லாம் அதிர்ஷ்டவசத்தால் கார்த்தவீரன் என்று ஒருவன் தலைவனானான். இவனிடத்தில் சில சமயங்களில் பெருந்தன்மையான குணங்கள் இருந்ததுமல்லாமல், பெரும் கொள்ளையடிப்பதில்மட்டும் ஆசையில்லாமல் தேசங்களைப் பிடிப்பதிலும் ஆள்வதிலும் மிகுந்த ஆவல்வைத்தவனாக பிரபுக்களுக்கெல்லாம் வேண்டியசமயத்தில் சிப்பாய்கள் கூலிக்கு கொடுத்துக்கொண்டுவந்தான். சக்ரவர்த்திகூட இவர்களுக்குப் பயந்து இவர் ராஜதானியான விஜயபுரத்தைவிட்டு கனகாபுரியில் குடியிருந்து வந்தார். இவரைப்பார்த்து ஜனங்களுக்கு மடாதிபதியாக இருந்தவரும் தனது வாசஸ்தலமாகிய விஜயபுரத்தை விட்டுவிட்டு சக்ரவர்த்தி கூடவே கனகாபுரிக்குப் போய்விட்டார். ஆனால் தன் பிறந்தநாள் பண்டிகைக்கு மட்டும் விஜயபுரத்துச்கு வந்துகொண்டிருந்தார்.

விஜரபுரத்தின் நிலைமை நமது கதை ஆரம்பிக்கும் சமயத்தில் இவ்விதம் இருந்தது.

ஒருநாள் சாயங்காலவேளையில் விஜயபுரத்தில் ஓர் மைதானத்தில் இரைச்சலுடனும் கோபத்துடனும் வெகு ஜனங்கள் கூட்டங்கூட்டமாக நின்றார்கள். அன்று காலையில் விஜபபுரத்தில் ஓர் ஏழைதட்டான்வீட்டில் நிர்குணன் சிப்பாய்கள் கதவைப் பெயர்த்து, உள்ளே புகுந்து கொள்ளையிட்டதால் ஜனங்களின் கோபம் இவ்வளவுதானென்று அளவிடக்கூடாததாயிருந்தது.

ஒருவன்—இந்த அக்கிரமத்தைப் பொறுத்துக்கொண்டு நாம் சும்மாயிருக்கிறதா? இதற்கு தகுந்த ஏற்பாடு செய்யவேண்டும்.

மற்றொருவன்—நான் இதை ஒருக்காலும் பொறுக்கமாட்டேன்.

வேறு ஒருவன்—இதை நாம் சாதாரணமாக விடக்கூடாது. ஒவ்வொரு தடவையும் போனால் போகிறதென்று நாம் விடத்தொட்டுதான் இப்படியாகிவிட்டது.

இப்படி ஜனங்கள் சொல்லிக்கொண்டிருக்க, சிலர் தெருவின் வழியாக கோபாவேசத்தோடும் ஆயுதங்களோடும் நிர்குணன் வீட்டைநோக்கிச் சென்றார்கள். இவர்களைப்பார்த்து, பிரபுக்கள் வமிசத்தைச் சேர்ந்த ஓர் சிறுவன் ஜனங்களே! உங்களுக்கு யார் என்னசெய்தார்கள்? என்ன அக்கிரமம் நடந்தது? என்று வினவ, இரண்டு மூன்று பெயர்கள் ஐயா! பிரபுவே! நீர் விசித்

ரவ பிரபுவைச்சேர்ந்தவராயிருக்கிறீர். நீர்தான் இந்த அக்ரமத்தைதண்டிக்க
வேண்டுமென்றார்கள். இவர்கள் இப்படி சொல்லும்போதே இன்னும் சிலர்
விசித்ரவபிரபுவா? அவரிடத்தில் இதைப் பார்க்க நியாயம் கிடைக்குமா? நிர்
குணன் இரவில் தெரியாமல் கொள்ளையிட்டால், விசித்ரவ பிரபு பகலிலே
யே கொள்ளையிடுவார் என்றார்கள். உடனே உத்தமசேனன் அவர்களை வில
க்கி நடுவிலே நின்றுகொண்டு முட்டாள்களே என் அக்ரமம் பேசுகிறீர்கள்.
நாங்கள் எப்போதாவது இப்படிப்பட்ட அக்ரமம் செய்திருக்கிறோமா? நல்
லது நீங்கள் வீட்டுக்குச்செல்லுங்கள். எங்களை நிர்குணனுக்குச் சமானமாக
சொல்லும்பக்ஷத்தில் உங்களைப்போல பாதகர்கள் ஒருவருமில்லை. இதோ
பாருங்கள்! இப்பொழுது உருவியிருக்கிற கத்தியைக்கொண்டு உங்களுக்கு
கெடுதல்செய்கிற நிர்குணனை தண்டிக்காமல், நான் இந்தக்கத்தியை உரை
யில் போடுவதில்லையென்றான். உடனே ஜனங்களுக்குள் துஷ்டபுத்தி
யென்ற ஒருவன் ஆமாம் பிரபுக்களும் இப்படித் தான் சொல்லுகிறார்கள்.
அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டைசெய்துகொள்வதெல்லாம் எங்களுக்
காகத்தான். ஒரு பிரபு நிர்குணனுடைய தையல்காரனை கொலைசெய்கிறான்.
அது எங்கள் நன்மைக்காகத்தான். மற்றொரு பிரபு நிர்குணன் பெண்ணை
இழுத்துக்கொண்டுபோகிறான். அதுவும் எங்கள் நன்மைக்காகத்தான் என்
றான். உடனே உத்தமசேனன் துஷ்டபுத்தியைப் பார்த்து, பயலே என்ன
அக்ரமம் பேசுகிறாய்! விசித்ரவ பிரபுவின் வமிசத்தில் எவனாவது ஒருவன்
அக்ரமம் செய்தால் அதற்காக எல்லோரையும் சேர்த்துச் சொல்லுகிறாயா
என்றான். உடனே ஒருவருக்கொருவர் ரோஷம் பிறக்க விசித்ரவ பிரபுவின்
வமிசத்தாரும் நிர்குணன் வமிசத்தாரும் ஒருவருக்கொருவர் சண்டை
க்கு ஆரம்பித்தார்கள். உத்தமசேனன் இதைத் தடுக்கமுயன்றும் பயன்பட
வில்லை. இதைப்பார்த்து துஷ்டபுத்தி, நான் முன்னமே சொல்லவில்லையா,
விசித்ரவ பிரபுவின் வமிசத்தில் இபபடித்தான் ஒத்தாசைசெய்வார்கள்.
அதோ எத்தனை ஜனங்கள் வெட்டப்பட்டு விழுந்துகிடக்கிறார்கள் பாரென்
றான். உடனே உத்தமசேனன் போடா முட்டாளென்று அவனை தன் கத்தி
நுனியால் தூரதள்ள துஷ்டபுத்தி தன்கத்தியை கோபத்தோடு தூக்கினான்.
தூக்கவே விசித்ரவன் வமிசத்தில் கூலிக்கு வேலைசெய்யும் ஓர் சிப்பாய்
இவனை விடாதேயுங்கள் கொல்லுங்கள். இவன் ராஜாங்கத்துக்கு விரோதி
களில் ஒருவன், இவன் தர்மசீலனுடன்சேர்ந்து, ஜனங்கள் ஜனங்கள் என்று
பிதற்றுகிறவர்களில் ஒருவன் என்று சொல்ல, துஷ்டபுத்தி தன் அங்கவஸ்
திரத்தை வரிந்து கட்டிக்கொண்டு அந்த சிப்பாயை பார்த்து அடே துன்
முகா நீ சொன்னது சரியே. ஒவ்வொருவரும் வாருங்கள் சண்டைசெய்யுங்
கள், நான் இந்த ராஜாங்கத்துக்காக இறந்ததனால் பாதகமில்லை. என்னைக்
கொன்று என் நெஞ்சைப்பிளந்து பார்த்தால் உங்களுக்கு விரோதமான
தர்மசீலனும் விஜயபுரத்து ஜனங்களும் என்று நிச்சயமாக என்நெஞ்சில்
எழுதப்பட்டிருக்கும் என்றான். இவன் இப்படி சொல்லும்போது ஜனங்
களுக்குள் ஓர் குதூகலம் உண்டாகி சப்தமெல்லாம் அடங்கி சிறிது நேர
மிருந்து பிறகு எல்லோரும் ஒரே இரைச்சலாக தர்மசீலன், எங்கள் தர்ம
சீலன் என்று கத்தினார்கள். தர்மசீலனுடைய பெயர் சொல்லப்படவே உத்
தமசேனனுக்கு கூட ஓர் பயம்தோன்றி சற்று ஒன்றும் செய்யத் தோன்றா
மல் நின்று, பிறகு துஷ்டபுத்தியைப் பார்த்து சிநேகிதா நீ என்னை மன்
னிக்கவேண்டும். நீசாவகாசமாய் என்னைப்பார்த்தால் நீ செய்தது பிசகெ



ன்று நான் ருஜூபடுத்துகிறேன் என்று சொல்லி வீட்டிற்கு போவதற்காக
துன்முகனை முன் செல்லச்சொல்லித் தானும் பின்சென்றான். விஜயபுரத்து
பிரபுக்களிடத்தில் ஜனங்களுக்கு என்ன விரோதமிருந்தபோதிலும் அவர்
களைக் கண்டுவிட்டால் ஓர்விதமரியாதை அவர்களுக்குத் தோன்றுமாதலால்
ஜனங்கள் உத்தமசேனன் நகரவே அவனுக்கு மரியாதையாக விலகி வழிவிட்
டார்கள். உத்தமசேனன் முன்செல்ல, சில ஜனங்கள் அவனை பின்தொடர்ந்
தார்கள். ஒருவன் உத்தமசேனனைப்பார்த்து இவன் நல்லவன்தானென்றான்.
வேறு ஒருவன் இவன் துஷ்டத்தனமும் செய்வதில்லையென்றான். மற்ற
ஒருவன் இவன் பெண்களைக் கண்டால் கூட வெகு மரியாதையாக நடந்து
கொள்கிறானென்றான். இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த ஓர் கிழவன்
ஆமாம் சர்ப்பம் இப்போது சிறியதாயிருப்பதால் பார்க்க சாதுவாயும் அழ
காயும் இருக்கிறது. வயதானால் தெரியும் படமெடுத்து கடிக்கும்போது
என்றான். உத்தமசேனன் இப்படி செல்ல, துன்முகன் குதிரைமீது போகும்
போதே ஜனங்களை வெகு வெறுப்புடன் பார்க்க, ஜனங்கள் அவன் முகத்
தைப்பார்க்கபிரியமில்லாமல் வைத்துகொண்டுசென்றார்கள்; இதையெல்லாம்
பார்த்திருந்த துஷ்டபுத்தி ஐயோ! விஜயபுரமே உன் நிலைமை இப்படியா ஆக
வேண்டும்! ஒரு கூலிக்கார சிப்பாயைக்கண்டு உன் குழந்தைகள் நடுங்கவே
ண்டியிருக்கிறதே! இனி எப்போது நல்லகாலம் வரப்போகிறது என்றான்.
வேறு ஒருவன் நமது துஷ்டபுத்தி சொல்வதை எல்லோரும்கேளுங்களென்
றான். மற்ற ஒருவன் அவன்தர்மசீலனுடைய சிநேகிதன் அல்லவா என்று
சொல்லி மரியாதையாக அவனுக்கு வணங்கினான். இப்படி உத்தமசேனன்
கொஞ்சதூரம்சென்றபிறகுதிரும்பிதுன்முகனைப்பார்த்துதுன்முகா! நீஜனங்
களிடம் சென்று அவர்களை தொந்திரவுசெய்யாமல் சாந்தப்படுத்தி அவர்
களை வீட்டுக்கனுப்பு. இன்றையதினம் அவர்கள் நமது வமிசத்தை இகழும்
படி செய்து கொள்ளக்கூடாது ஜாக்ரதை என்று சொல்லிவிட்டு பிறகு
அவன் போகிறதைப் பார்த்துக்கொண்டே சற்று நின்று ஐயோ! விஜயபுர
மே! உன் பழையஸ்திதி என்ன? நீ இப்போது இருக்கிறதென்ன! உன் பிர
புக்கள் ஒருவருக்கொருவர் சண்டைபோடுவதும் உன் ஜனங்கள் பிரபுக்களை
வைவதும், பிரபுக்கள் கூலி சிப்பாய்களால் தங்களைக் காப்பாற்றிக்கொள்வ
தும், அச்சிப்பாய்கள் நமது பலஹீனத்தைக்கண்டு இகழ்வதும், ஐயோ எப்
பொழுது இந்த ஜனங்களுக்கு நன்றியுண்டாகும்படி நாம் ஆளப்போகிறோம்
என்று உறக்க அவன் சொல்லும்போதே கண்களில் நீர் தாரைதாரையாக
பெருகிற்று. உத்தமசேனன் அந்த இடத்தைவிட்டுப்போக எத்தனிக்கும்
போது, தர்மசீலன், தர்மசீலன் என்ற இரைச்சல் காதில்விழுந்தது; விழுந்த
சற்று நேரத்திற்கெல்லாம் யாதொரு பேச்சுக்குரலுமில்லாமல் அமர்ந்திரு
க்க கூட்டங்கள் முன் நின்ற இடத்தில் ஓர்மேடையின்மீது தர்மசீலன் நிற்
கக்கண்டான். உத்தமசேனன்நின்ற இடத்திலிருந்து தர்மசீலன் உருவம் தெ
ரிந்ததேயொழிய அவன் பேசினது ஒன்றும் காதில்படவில்லை. ஆனால்
இடையிடையே அவன் குதூகலத்தோடு இரைந்து பேசுகிறதும், ஜனங்கள்
இரையாமலும் மூச்சுக்கூட விடாமலும் இவனை கவனிக்கிறதும் உத்தம
சேனனுக்குத் தெரிந்தது. இடையிடையே, தர்மசீலன், எங்கள் தர்மசீலன்
என்று இரைச்சல் கேட்டதே. இவனுக்கு தர்மசீலனிடம் ஓர் மரியாதை
யும் வணக்கமும் கொடுக்கப் போதுமானதா யிருந்தது; சற்றுநேரத்திற்
கெல்லாம் தர்மசீலன் பிரசங்கம் முடிந்ததென்று நம்பும்படியாக இன்னும்

பெரியதான ஓர் இறைச்சல் கேட்கவும் ஜனங்களெல்லாம் கலைந்து ஒவ்வொருவரும் தர்மசீலன் பேரிலேயே தங்கள் அன்பையெல்லாம் வைத்து அவனையே ஸ்தோத்திரம் செய்துகொண்டு மூலைக்கொருவராக சென்றார்கள்; ஒரு ஆயுதமுமில்லாமல் ஒரு சிப்பாயாவது இல்லாமல், ஒருவித அதிகாரமும் கொடுக்கப்படாமலிருக்கும்போது ஒரே வார்த்தையால், இதுவரையில் வெகு கோபத்தோடு இருந்த கூட்டத்தை தர்மசீலன் ஒரு நிமிஷத்தில் கலைத்துவிட்டான். கூட்டங்கள் கலையவே, உத்தமசேனன் அவர்கள் போன வழியில்செல்ல மனம்வராமல் தனிவழியாக தன் அரண்மனைக்குச் சென்றான். இவன் படித்தபடிப்பும் நல்லகுணமும், தன் ராஜ்யத்தின் விஷயத்தில் கொஞ்சம் கவனம் வைக்கும்படி செய்தன. விசித்ரவன்வமிசத்துக்கு கொஞ்சம் தாழ்வானவமிசத்தில் பிறந்து தாய்தகப்பனில்லாதபடியால், சிறுவயது முதல் விசித்ரவ பிரபுவாலேயே உத்தமசேனன் வளர்க்கப்பட்டு நல்ல படிப்பும் சொல்லிக்கொடுக்கப்பெற்றான். சிறுவயதுமுதல் நல்ல புத்திமானானதால், சீக்கிரத்தில் படிப்புக் கற்றுக்கொண்டதோடுகூட, தன்தேசத்தின் பூர்வசரித்திரத்தையும் படித்திருந்தான். தர்மசீலனுடைய தம்பி இறக்கும் சமயத்தில் இவன் சிறுபிள்ளையா யிருந்தபோதிலும் தர்மசீலனை பார்க்கும்போதே இவன் மிகவும் இறக்கப்பட்டு அவனைவிட்டு அகலாமலிருந்து தன் ஜனங்களால் இப்படிப்பட்ட கெட்டகாரியம் நேர்ந்ததேயென்று விசனப்பட்டான். அச்சிறுவயதிலேயே அவன் தர்மசீலனுடைய குணங்களையும் புத்தியையும் அறிந்திருந்தான். தன் தம்பி இறந்தபிறகு தர்மசீலன் அடிக்கடி பிரபுக்கள் வீட்டுக்குப் போனபோதிலும் முன்போல சந்தோஷமாயிராமல் ஒருமாதிரியாகவிருந்தான். பிரபுக்கள் எவ்வித ஒத்தாசைசெய்ய எத்தனித்தபோதிலும் அவைகளை மறுதளித்து வந்தான். முன் கபடமில்லாமல் கேலியாகப் பேசினவன் இப்பொழுது மனதில் ஒன்றுவைத்து வெளியில் கேலியாகப் பேசலானான். அப்படியிருந்தும் பிரபுக்களுக்கு இவனையறிய முடியவில்லை. இவன் மனது உத்தமசேனன் ஒருவனுக்குமட்டும் தெரிந்திருந்தது. அடிக்கடி தர்மசீலன் பிரபுக்கள் பக்கத்திலுட்கார்ந்து அவர்களுடன் சரஸமாகப் பேசுங்காலத்தில் பிரபுக்களும் அவன் பேசுவதை கேட்கக் கேட்க ஆனந்தத்தை யடைந்தார்களேயொழிய அவன் மனது தங்களுக்கு விரோதமான காரியத்தை தேடிக்கொண்டிருக்கிறதென்பது ஒருவருக்கும் தெரியாது. அப்பொழுதும் அவன் ஏழை ஜனங்களுக்கு பிரசங்கம் செய்வதை விடுவதில்லை. அவர்களும் இவன் பிரபுக்களிடத்தில் இருக்கும் சிநேகிதத்தைக்கண்டு இவனிடத்தில் மரியாதையாயிருந்தார்கள்; ஒருவேளை இதற்காகவே தர்மசீலனும் பிரபுக்களிடத்தில் சிநேகம் பாராட்டியிருக்கலாம். தர்மசீலன் இப்படி விஜயபுரத்திலிருக்குங் காலங்களில் உத்தமசேனன் அநேகத் தூரதேசங்களுக்குப் போயிருந்தான். அப்படிசென்றதில் இவன் ஒவ்வொரு தேசத்தையும் வெகுகவனமாகப் பார்த்து அதன் சரித்திரத்தை அறிந்துகொண்டுவந்தான். மேலும் அநேகம் நற்குணங்களும் பெருந்தன்மையும் இவனுக்கு ஏற்பட்டன. இவன் தன்தேசத்திற்கு திரும்பிவந்து இரண்டுவாரமாகியும் தர்மசீலனை இன்னும் பார்க்கவில்லை. தர்மசீலனை தூரத்திலிருந்தே அறிந்து பிறகு அவனிடம் நெருங்கி பார்க்க வேண்டுமென்று எண்ணியிருந்தான். உத்தமசேனன் இப்பொழுது தனக்குள்ளாகவே நிச்சயமாக இவனைத்தவிர வேறு ஒருவருக்கும் நமது தேசத்தை பழைய ஸ்திதிக்கு கொண்டுவரும்படியான சக்தியில்லை என்று எண்ணிக்கொண்டான். ஆனால் நாம்



அநேகதேசங்களில் இப்படி ஜனங்களை வசியப்படுத்தி ராஜ்யங்களையடைந்து சிலர் மறுபடி அதேஜனங்களை வருத்துவதைப்பார்த்திருக்கிறோம். இந்ததர்மசீலன்மட்டும் அப்படி செய்யமாட்டான் என்பது என்ன நிச்சயம் இருக்கட்டும், நாம் இவனை சமீபத்தில் சென்று பார்த்து நேரில் ஒவ்வொரு விஷயத்தையும்அறிவோம். அவன் அப்படி இந்த ராஜ்யத்தை பழையஸ்திதிக்கு கொண்டுவர தகுந்த ஏற்பாடுகள் செய்திருந்து அந்த ஏற்பாடுகள் என் மனதுக்குத் திருப்தியாயிருந்தால் நானும் அவனோடு சேர்ந்துகொள்ளுகிறேனென்று எண்ணினான்.

எஸ். இராயசுவாமி ஐயர் பி-ஏ.

# தேனும் தேனீயும்.

## XII. தேனீக்களின் ஆகாரம்.

இதுகாறும் நாம் ஈக்களைப்பற்றி சில கூறிவந்தோம். இனி அவற்றின் ஆகாராதிகளை யாராய்வோம். பூக்களின் ரசமும் பூந்தாதும், பாகும் எனைத் தித்திப்புப் பதார்த்தங்களுமே தேனீக்களின் விசேஷித்த ஆகாரங்களாம் (இவற்றுள் பாகு இராஜ உணவாகும். பூந்தாது ஈ உருப்பெறாத புழுக்களின் ஆகாரமாகும்). தேனீக்கள் எப்படியாவது நிரம்பத் தேன்பெறப் பிரயாசைப்படுகின்றனவேயன்றி நல்ல சேனாய் பார்த்துச் சேகரிக்கவேண்டும் என்ற சிந்தனையே இவற்றிற்குக் கிடையாது. நச்சுப் பூக்களினின்றும் இவை சில வேளைகளில் தேன் எடுக்கும். தேனீக்கள் தண்ணீரும் குடிக்கும். சுத்த தெளிந்த நீரைவிட அழுகி நாற்றமெடுத்து ஊசிக்கிடக்கும் கட்டுக்கிடை நீரும் சிறுநீருமே அவற்றிற்கு அதிகப் பிரியமாம். இவ் விஷயங்களே எரிச்சலும் கடுப்பும் வேதனையும் விளைவிக்கக்கூடிய அவற்றின் கொட்டிற்குக் காரணம்போலும். இவற்றிற்குப் பல்விரண்டும் இரைப்பை இரண்டும் உள. இவ்விரைப்பைகளுள் ஒன்றை தேன்சேர்க்கவும் மற்றொன்றை அவை உட்கொள்வன ஜீரணிக்கவும் உபயோகித்துக் கொள்ளும்.

## XIII. விவாகமுறை.

“காணாமல் இன்புறுதல்” காக்கைக் குணமென்ப. பெண் ஈயாகிய இராணி ஈயும் பிற ஈக்கள் காணக் கூட்டிலேயே ஆண் ஈ யுடன் சேராது. பின்னை, அது கர்ப்பந்தரிக்குமாறு வேனிற்காலத்தில், வெயில் அழகாய்க் காய்ந்துகொண்டிருக்கும் வேளையில் பெருங்காற்றடியா நேரம் பார்த்துக் கூட்டினின்றும் ஆணீக்களோடு வெளிக்கிளம்பி ஆகாயத்தில் பறந்தெழுந்து மூன்றுமணி நேரத்திற்குள் கூடு திரும்பும். அது திரும்புமட்டும் ஈக்களுக்கு மனச்சமாதானமே இராது. இச்சமயம் கூட்டண்டை போவோர் கொட்டுண்டே வருந்துவர். அவை இதன் பிரிவாற்றாலும் இராணி ஈக்கு பிற கூட்டீக்களாலும் கால நிலையாலும் சம்பவிக்கக்கூடிய விபத்துக்களை நினைந்தும் சஞ்சலப்பட்டு அதி துக்கப்பேரிரைச்சலெழுப்பிக்கொண்டிருக்கும். சென்ற இராணி சுகமாய்க் காரியசித்திபெற்றுத் திரும்பிவிட்டாலோ பேரானந்தம்கொண்டு அவை உங்கரிக்கும். அது காரியசித்தி பெற்றதும் பெறாததும் பார்த்தமாத்திரத்திலேயே சிற்றீக்கள் அறியும். எங்ஙனமெனில் அது கருத்தரித்திருப்பின் ஆணீயின் ஜீவாதாரபாகம் அதன் புறத்தில் பொருந்தியிருக்க அவைகாணும். காரியசித்தி பெறாவிடின் பிரதிதினமும் அதுபெறும் மட்டும் ஆகாயத்தில் ஆணீயுடன் பறந்தெழவேண்டியதுதான். ஈக்கள் கருத்தரித்துத் தமது இராணி வந்துவிட்டதெனக் கண்டுவிட்டால் அவைகள் தலைகால்

தெரியாதபடி சந்தோஷங்கொண்டு அதன் வரவை சகல மரியாதையுடனு மேற்று அதனைக் கட்டித் தழுவிச் சூழ்ந்துகொள்ளும். அது செல்லுமிடந்தோறும் அதற்கு எல்லாக் காரியங்களிலுந் துணை நின்று உதவ அது 20 ஈக்களுக்குக் குறையாமல் பரிஜனமாய்ப் பெறுமாம். காரியசித்திபெற்ற இராணி ஈக்கு நடக்கும் மரியாதையில் கால்பங்கு கூட கருத்தரியா இராணிக்கு நடவாது. அன்றியும், சிற்றீக்கள் அதனை அதிகமாய் அசட்டை செய்யும்.' நிற்க;

இது ஆண் ஈ யுடன் சேர்ந்த இரண்டொன்று தினங்களுக்கெல்லாம் முன்பு நாம் கூறியபடி காலநிலைக்கேற்ப முட்டையிட ஆரம்பிக்கும். இது தன் இஷ்டப்படி முட்டைகள் ஆண் ஈக்களாகவும் பெண் ஈக்களாகவும் இடக்கூடுமாம். இடுமுன் அது தனது தும்பிகளைக்கொண்டு அறையானது காலியாகவும் மெருகிட்டுச் சுத்தமாகவும் இருக்கிறதா எனப் பார்த்தறியும். அது காய்ந்து கருகிஅழிய கூட்டின் வெளிப்புறத்திருந்து தரையில் முட்டையிட்டாலும் இவையேயன்றி காலியாகவும் சுத்தமாகவும் இல்லாத அறையில் இடாது. பரிக்ஷார்த்தமாய் மேற்றிசையோர் ஒருவர் கருத்தரித்த ஓர் இராணி ஈயின் தும்பியை நறுக்கிவிட்டதால் பாவம்! அது கூட்டைவிட்டு ஓட நேர்ந்ததெனத் தெரிய வருகிறது. ஏனெனில், ஸ்பரிசிக்கும் தும்பியை இழந்துவிட்டதால் கூடு சுத்தமாய் இருந்தும் கூட்டைப்பற்றி எதுவும் அது தெரிந்துகொள்ளக் கூடவில்லை. ஆதலின் அது கூட்டிற்கு வெளிப்புறம் வந்து தரையிலேயே முட்டைகளை யிட்டதாம். பின்னர் சந்ததி அபிவிருத்தியின்மையைக் கண்டுகொண்ட சிற்றீக்களின் கொட்டுக்கஞ்சி அது தன் வேலையைத்தானே ராஜிநாமா செய்துபோட்டு பனியினாலோ குளிரினாலோ எதிரினாலோ செத்ததாம்.

ஆண் ஈக்களுடன் சம்பந்தப்படாமலும் பெண் ஈக்கள் கருத்தரித்து முட்டையிடக்கூடும் என்று சொல்லுகிறார்கள்.

## XIV. தேனீ கூடுகட்டுமிடங்கள்.

இதுகாறும் மூவகை ஈக்களைப்பற்றியும் சில தெரிந்துகொண்டோம்; இனி தேனீக்கள் கூடுகட்டு மிடங்களைப்பற்றிக் கூறுவாம். காட்டு ஈக்கள் சாதாரணமாய் மலைப்பிளவுகளிலும் மரப்பொந்துகளிலும் கூடுகட்டுகின்றன. தவிரவும், நமது முன்னோர்கள் அவை சூரைச் செடிப்புதரிலும், அகப்பட்டாரை அறைந்துகொல்லும் பார்ப்பனப்பேய் வாழும் இடுகாட்டிலுள்ள புற்றுகளிலும் கருக்குவாய்ந்து வானுற வோங்கி வளம்பெற வளரும் மடற்பனை மரத்தின்மீதும் தேனை வைக்கிறது என்று கூறியிருப்பதுடன் இவ்விடங்களில் உள்ள தேனை லோபிகளின் திரவியத்திற்கு ஒப்பிட்டும் இருக்கிறார்கள். மேற்சொல்லியவற்றின் உண்மையை

> "சுற்றும் கருக்குளவி சூரைத்தூறு ஆரியப்பேய்
> எற்றும் சுடுகாடு இடிகரையின்—புற்றில்
> வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததேன் ஒக்கும்
> தளர்ந்தோர்க் கொன்றீயாத் தனம்." என்னும்

வெண்பாவால் அறிக. ஏன் இவை இங்ஙனம் அதி உன்னதமாயும் கொள்வதற்கரிதாயும் உள்ள இடங்களில் கூடுகட்டுகிறதெனில், சுயநயம் பாராட்டும் மனிதன், தமது சொத்தைக் கொள்ளையடிப்பதோடு நில்லாமல் தம்மையும் நாசப்படுத்துவன் என்ற பயத்தினாலேயே ஆயினும் இவற்றின் எண்ணமெல்லாம் வீண் எண்ணமே. ஏனெனில் எந்த இடத்தில் இவை கட்டினாலும் என்ன? மனிதனுக்குத் தேன் பெறுவது அசாத்தியமான காரியமா? (இன்னும் வரும்.)

M. கோபாலகிருஷ்ணய்யர்.



# பெண்கல்விக்கும்மி.

கலைமகள்துதி.

அன்னம்படைத்த ஒருவனுக்கே—தினம்
அன்னம்படைக்கும் ஒருத்தியையே
சொர்னம்படைத்தபெண் கல்விக்கும்மி [சொலத்
துதித்துக்கொம்மி யடியுங்கடி—நீங்கள்
மதித்துக்கும்மி யடியுங்கடி.

கும்மி.

விண்ணுக்கழகுமதிபமடி—நல்ல
மேன்மைக்கழகுபொறுமையடி
பெண்ணுக்கழகுநற் கல்வியடியென்று
பேசிக்கும்மியடியுங்கடி—கை
வீசிக்கும்மியடியுங்கடி. (1)

புத்திதருவதுங்கல்வியடி—நல்ல
புண்யந்தருவதுங்கல்வியடி
பக்திதருவதுங்கல்வியடியென்று
பாடிக்கும்மியடியுங்கடி—மனம்
நாடிக்கும்மியடியுங்கடி. (2)

நீதிதருவதுங்கல்வியடி—பதி
நேசந்தருவதுங்கல்வியடி
கதிதருவதுங் கல்வியடியென்று
கனிந்துகும்மியடியுங்கடி—தலை
குனிந்துகும்மியடியுங்கடி. (3)

மானங்கொடுப்பதுங்கல்வியடி—நல்ல
மனங்கொடுப்பதுங்கல்வியடி
ஞானங்கொடுப்பதுங்கல்வியடியென்று
நாடிக்கும்மியடியுங்கடி—நீங்கள்
கூடிக் கும்மியடியுங்கடி. (4)

அருமைதருவதுங்கல்வியடி—நல்ல
அன்புதருவதுங்கல்வியடி
பெருமைதருவதுங்கல்வியடியென்று
பேணிக்கும்மியடியுங்கடி—உடல்
நாணிக் கும்மியடியுங்கடி. (5)

குலந்தருவதுங்கல்வியடி—நல்ல
குணந்தருவதுங்கல்வியடி
நலந்தருவதுங்கல்வியடியென்று
நயந்துகும்மியடியுங்கடி—மனம்
இயைந்துகும்மியடியுங்கடி. (6)

கற்பைத்தருவதுங்கல்வியடி—மிகு
கண்யந்தருவதுங்கல்வியடி
பொற்பைத்தருவதுங்கல்வியடியென்று
புகழ்ந்துகும்மியடியுங்கடி—மனம்
மகிழ்ந்துகும்மியடியுங்மடி (7)

சீதைசிறந்ததுங்கல்வியினால்—நளன்
தேவிசிறந்ததுங்கல்வியினால்
மாதர்சிறப்பதுங்கல்வியினாலென்று
வணங்கிக்கும்மியடியுங்கடி—நீங்கள்
இணங்கிக்கும்மியடியுங்கடி. (8)

சந்திரமதிமாதுங்கல்வியினால்—அந்தச்
சாவித்திரிதானுங்கல்வியினால்
இந்தஉலகிலும்எந்தஉலகிலும்
ஏற்றம்பெற்றாரென்றடியுங்கடி-கற்பின்
ஆற்றல்பெற்றாரென்றடியுங்கடி. (9)

அம்மைசிறந்ததுங்கல்வியினால்—அந்த
ஆண்டாள்சிறந்ததுங்கல்வியினால்
செம்மைதருகின்ற கல்வியைப்போலொரு
செல்வமுண்டோவென் றடியுங்கடி— [இதை
வெல்வதுண்டோவென் றடியுங்கடி.

கூந்தலழகும்அழகல்ல—இந்தக்
கொண்டையழகும்அழகல்ல
சாந்தந்தருகின்றகல்வியழகொன்றே
தக்கஅழகென்றடியுங்கடி—வெகு
முக்கியஅழகென்றடியுங்கடி. (11)

பல்லினழகுமழகல்ல—செம்
பவளஇதழுமழகல்ல
சொல்லினழகே அழகென்று—நீங்கள்
தொடர்ந்துகும்மியடியுங்கடி—நீங்கள்
அடர்ந்துகும்மியடியுங்கடி. (12)

ஆடையணியுமணியல்ல—மே
லணியுமணியுமணியல்ல
தேடருங்கல்வியணியொன்றேநலம்
சேர்க்கும்அணியென் றடியுங்கடி-குறை
தீர்க்குமணியென்றடியுங்கடி (13)

இளமைப்பருவமும்போய்விடுமே—அதற்
கேற்றஅழகதும்போய்விடுமே
வளமைதருகின்றகல்விபோகாதென்று
மதித்துக்கும்மியடியுங்கடி—கால்
குதித்துக்கும்மியடியுங்கடி. (14)

(இன்னும் வரும்.)



G. சதாசிவம்பிள்ளை,

நாகைநீலலோசனி பத்திராதிபர்.

# திருவனந்தபுரத்து ஐப்பசி உத்ஸவம்.

(17-ம் பக்கத்தொடர்ச்சி.)

உத்சவம் முதல் நாளை கோடியேற்று என்று சொல்வார்கள். அன்றையதினம் முன் சொன்ன இரண்டுகொடி மரத்திலும் கொடிகட்டுவார்கள். மகாராஜா அவர்கள் வந்துதான் இது நடக்கும். நமது மகாராஜா அவர்களது தெய்வபக்தியையும் ஆசாரத்தையும் நம்மால் விவரிக்கமுடியாது. இத்தவிஷயங்களில் இவரைப்போல வேறொருவரைக் காணவும் முடியாது. திருஷ்டாந்தமாக:—ஒவ்வொரு தினமும் காலையில் 8-மணிக்குப் பிறகு மகாராஜா அவர்கள் முன்சொல்லப்பட்ட மூன்று க்ஷேத்திரங்களுக்கும்போய் சுவாமியைத் தெரிசனம் செய்து நமஸ்கரித்து பிரசாதங்கள் வாங்கிக்கொண்டு போகிறார்கள். ஒருநாளாவது இதற்கு தவக்கம் வராது. இது போதாதென்று நினைத்து அரண்மனைக்குள்ளும். ஒரு க்ஷேத்திரமுண்டாக்கி அவ்விடத்திலும் தினசரிசுவாமி தெரிசனம் செய்யப்போவார். உத்ஸவத்தின் முதல் நாளில் கொடி யேறியாய்விட்டதென்று சொன்னோம். உத்ஸவத்தின் ஒவ்வொரு நாளிலும் சுவாமிகளை எழுந்தருளப் பண்ண வெவ்வேறு வாகனங்களுண்டு. இந்த வாகனங்களெல்லாவற்றிலும் அதிக விசேஷமானது இந்திரவாகனம், பல்லக்குவாகனம். பத்மநாப ஸ்வாமிக்குள்ள வாகனம் சுவர்ணத்தினால் செய்யப்பட்டுளது. மற்ற வாகனங்கள் வெள்ளியினால் செய்யப்பட்டன. இவற்றின் மகிமையை பார்த்தால் தான் நன்றாய் விளங்கும். கொடியேற்று தினத்தின் இரவில் நடக்கப்பட்டவைகளை இப்பொழுது வரைகிறேன். இரவில் எட்டேகால்மணி சுமாருக்கு வாகனங்களில் பத்பநாப சுவாமியையும் நரஸிம்ம சுவாமியையும் எழுந்தருளப்பண்ணி, நவரத்தினங்களாலும் புஷ்பாதிகளாலும் அலங்கரித்து சீவெலிமண்டபத்தின் நடுவில் கிழக்குமுகமாக எழுந்தருளப்பண்ணுவார்கள். இதற்குள் முன் சொல்லப்பட்ட விளக்குகளை யெல்லாம் கொளுத்தி விடுவார்கள். அப்பொழுது அந்த இடத்தைப்பார்க்க அதிக விசேஷமாயிருக்கும். எங்கே திரும்பினாலும் விளக்குகள் தான் காணப்படும். இதல்லாமல் தீவர்த்திகளும் ஏராளமாய்க் காணப்படும். கிழக்கே சுவாமிகளை யெழுந்தருளப்பண்ணி, பலவித வாஸனாதிகள் தெளித்து தீபாராதனை சமயமாகிறபொழுது கனம்பொருந்திய மகாராஜா அவர்கள் தீபாராதனை தெரிசிக்க வந்துவிடுவார்கள்; தவிர திவான் முதலான உத்தியோகஸ்தர்களும் அவ்விடத்தில் வருவார்கள். சீவெலி மண்டபமும், மற்றமுள்ள இடங்களும் ஜனங்களால் நிறைந்து காணப்படும். மகாராஜா அவர்கள் வந்தவுடன் தீபாராதனை நடக்கும். இது கழிந்தவுடன் ஜனங்கள் யாவரும் சீவெலிமண்டபத்துக்கு வெளியில் இருபுறமும் வரிசையாக நிற்பார்கள். மண்டபத்திற்குள் முதலில் நகாராவுடன் ஒரு யானை போகும். இதற்கு பின்னால் கோவிலுக்குள்ள விருதுகளைக் கொண்டுபோவார்கள். இதற்குப்பின் அரண்மனையிலுள்ள சில தாசன்மார் போவார்கள். இதற்குப்பின் மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்களுடைய முத்திரைவாளையும் கேடகத்தையும் வைத்துக்கொண்டு ஒரு ஆள் போவான். இதற்குப்பின் அதிக தெய்வபக்தியையும் ஆசாரத்தையும் ஒரு ஆபரணமாக வைத்துக்கொண்டிருக்கிற நமது மகாராஜா அவர்கள் அதிக ஒழுக்க வணக்கத்துடன் ஒரு வஸ்திரம் மாத்திரம் தரித்துக்கொண்டு மண்டபத்துக்கு நடுவில் போவார்கள். அந்த சமயத்தில் மகாராஜா அவர்களைப் பார்த்தால் தெய்வபக்தி யில்லாதவர்களுக்குக் கூட அந்தக்ஷணமே தெய்வவிசுவாசம் உதித்துவிடும். மகாராஜா அவர்களுக்குப் பின்



னால் திவான் முதலான பெரிய பிராமண உத்தியோகஸ்தர்கள் ஒரு ஓரத்தில் வரிசையாக உத்தியோக கிரமம்போல் போவார்கள். இவர்களுக்குப்பின் சுவாமிகளை வாத்திய கோஷங்களுடன் எழுந்தருளப்பண்ணுவார்கள். வாகனங்களுக்குப்பின் கோவிலிலுள்ள சில சின்னங்களையும், வெள்ளி தங்கக்கொடைகளையும் கொண்டுபோவார்கள். இவர்களுக்குப்பின் தேவதாசிகள் கைகளில் தீபங்களை வைத்துக்கொண்டு போவார்கள். இவர்களுக்குப்பின் முன்சொன்ன உத்தியோகஸ்தர்களைத் தவிர மற்ற பிரதான உத்தியோகஸ்தர்கள் அவர்களுக்குப்பின் போலீஸ் கான்ஸ்டேபிளில் சிலர் பந்தோபஸ்துக்காகப் போவார்கள். இவர்களுக்குப்பின் அரண்மனையைச்சார்ந்த பாகவதர்கள் பாடிக்கொண்டுபோக, அவர்களுக்குப்பின் புள்ளாங்குழல் வாசிக்கப்படும். இவ்விதம் ஜனங்களால் சூழப்பட்டு தீவர்த்திகளோடு சுவாமிகளை எழுந்தருளப்பண்ணி மேல் நடையில் போனவுடன் கிருஷ்ணசுவாமி க்ஷேத்திரத்திலிருந்து கிருஷ்ணசுவாமியை யெழுந்தருளப்பண்ணி, மற்ற இரண்டு சுவாமிகளுடன் சேர்த்து அவ்விடத்தில் மூவர்களுக்கும் தீபாராதனை நடக்கும். இவ்விடத்தில்தான் இத்திருவிதாங்கூர் இராணிகள் சுவாமி தெரிசனம் செய்யவருவார்கள். மூன்று வாகனங்களைக் கொண்டுபோகும் போது பார்ப்பவர்களுக்கு பிரம்மானந்தத்தைக் கொடுக்கும். இவ்விதம் மேற்கே சீவெலி மண்டபம் வடக்கே சீவெலிமண்டபம் வழியாகப்போய் கிழக்கே நடையில் வந்தவுடன் மகாராஜா அவர்கள் பிரசாதம் வாங்கிக்கொண்டு அரண்மனைக்குப் போக, மற்ற உத்தியோகஸ்தர்களும் தங்களிருப்பிடம்போய்ச் சேருவார்கள். மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்களும் மற்ற பிரதான உத்தியோகஸ்தர்களும் வழக்கமாய் ஒரு பிரதக்ஷிணத்துக்கு மாத்திரம் வருவார்கள். இவர்கள் போனபின் மூன்றுதரம் பிரதக்ஷிணஞ்செய்து சுவாமிகளை கோவிலுக்குள் எழுந்தருளப்பண்ணுவார்கள்.

இவ்விதமாக இரவு எட்டேகால் மணிக்குமேலும் சாயங்காலம் நாலேகால்மணிக்கு
மேலும் ஒன்பதாநாள் சாயங்காலம்வரை மகாராஜா அவர்கள் வந்து உத்ஸவத்தை
வெகு விமரிசையாய் நடத்துவார்கள். ஒன்பதாநாளை இவ்விடத்தில் வேட்டைதின
மென்று சொல்லுவார்கள். அன்றையதினம் இரவு சில விசேஷங்கள் நடக்கும். வழக்
கம்போல் மகாராஜா அவர்கள் வராமல், 2,3 பிரதக்ஷிணம் நடக்கும். நடந்து கிழக்கே
நடையில் வந்து சுவாமிகளை எழுந்தருளப்பண்ணி யிருக்கையில் மகாராஜா அவர்கள்
சுவாமி தெரிசனத்துக்காக பூச்செண்டுகளைக் கொண்டுவருவார்கள். வந்தவுடன் வாத்
தியகோஷங்கள் நின்று நிசப்தமாயிருக்கும். உடன் பூச்செண்டுகளை சுவாமிகளுக்கு
சமர்ப்பிக்க ஒருமனிதன் வந்து பாணிகொட்டுகிறவர்களை மூன்றுதரம் கூப்பிடுவான்.
கூப்பிட்டவுடன் அவர்கள் என்னவென்று கேட்க பாணிகொட்டுகிறதற்கு உத்திரவா
கும். உடன் மூன்றுதரம் பாணிகொட்டுவார்கள். உடன் வழக்கம்போலுள்ள வாத்
தியகோஷங்கள் ஒன்றுமின்றி நிசப்தமாய் மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்களும்
திவான் முதலிய பிரதான உத்தியோகஸ்தர்களும் முன்சொன்ன கிரமம்போல் சுவாமி
களை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு போவார்கள். கோவிலில் மேல்வாசலில்
போனவுடன் மகாராஜா அவர்கள் முத்திரைவாளைக் கையில் தரித்துக்கொண்டு எல்லா
ருடனும் கோவிலுக்கு வெளியில் போவார்கள். மேல்வாசலில் பட்டாளங்களை இரட்
டை வரியாய் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் நிறுத்தியிருக்கும். தீவர்த்திகளும் மத்தாப்
புக்களும் வெகு ஏராளமாய்க் காணப்படும். இவர்கள் போகப்பட்டவழி முழுவதும்
திருவனந்தபுரத்தில் விசேஷப்பட்ட ஒருவகை வெள்ளைமணலால் விரிக்கப்பட்டிருக்
கும். இதைக் காணுகிறபோது வெகு அலங்காரமாய்க் காணப்படும். பட்டாளங்கள் இர
ண்டுவரியாக பாண்டுவாத்தியங்கள் வாசியாமலும் முன்சொன்ன கிரமமாய் நடுவில்

மகாராஜா அவர்களும் திவான் முதலிய உத்தியோகஸ்தர்கள் சகிதம் சுவாமிகளை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு மேலைத்தெருவழியாக நிசப்தமாய் வடக்கே சிறிதுதூரம் போவார்கள், அப்பொழுது கண்ணால் பார்த்தால் அதின் மகிமை நன்றாய் விளங்கும். அந்தப்பாதை எண்ணிறந்த ஜனங்களால் நிறைந்திருக்கும். வடக்கே ஒரு இடத்தை பலவித செடிகளால் காடாக நிர்மாணம் செய்திருப்பார்கள். அவ்விடத்தில் ஒரு இளநீரை இலேசாய் சீவிவைத்திருக்கும். அந்த இடத்துக்கு ஸ்வாமிகளை யெழுந்தருளப்பண்ணி மகாராஜா அவர்கள் அம்பெடுத்து ஒரு பாணத்தை இளநீரில்எய்ய அது இரண்டாய்ப்போய் ஜலம் வெளியாகும்; பாணம் இளநீரில் பட்டசப்தம் கேட்டவுடன் இதுவரையில் நிசப்தமாயிருந்த, நாகஸ்வரம், பாண்டு முதலான வாத்தியங்களை ஆரம்பிப்பார்கள். பாணம்பட்ட இச்சமயமும் சப்தங்களும்காலதாமதமன்னியில் அதே நிமிஷத்தில் நடக்கும். உடன் சுவாமிகளுக்கு தீபாராதனை நடந்து பட்டாளங்களால் இருபுறமும் சூழப்பட்டு மகாராஜா அவர்கள் வாளைக் கையில் வைத்துக்கொண்டு வடக்குவீதி வழியாக வந்து கோவிலின் வடக்குவாசல் வழியாக கோவிலுக்குள் பிரவேசித்து, வடக்கு சீவெலிமண்டபம் வழியாக கிழக்கே சீவேலிமண்டபத்துக்கு சுவாமிகளை யெழுந்தருளப்பண்ணி பிரசாதம் வாங்கிக்கொண்டு அரண்மனைக்குப் போய்ச்சேருவார்கள். இதற்குப்பின் பிரதக்ஷிணம் கழிந்து சுவாமிகளை கோவிலுக்குள் எழுந்தருளப்பண்ணுவார்கள். அன்றையதினம் வழக்கமாயுள்ள ஸ்தானங்களில் எழுந்தருளப்பண்ணாமல் அதற்கு வெளியில் எழுந்தருளப்பண்ணுவார்கள். வேட்டையென்றதின் தாற்பரியம் என்னவென்றால் ஒன்பதாநாளில் மூன்று சுவாமிகளும் வேட்டைக்கு பரிவாரங்களுடன் நிசப்தமாய்ப் போவதாயும், போனவிடத்தில் அசுத்தமானதாயும், அசுத்தத்துடன் தங்கள் சொந்த இருப்பிடத்துக்குப் போகக்கூடாதென்று நினைத்து வெளியில் தங்கியிருப்பதாயும், அடுத்தநாள் சமுத்திரத்துக்குப்போய் ஸ்நானம் செய்து சுத்தமாய்த்தான் கோவிலுக்குள் தங்கள் சொந்த இடத்துக்குப் போவார்களென்று சொல்லுவார்கள்.

(இன்னும் வரும்.) V. G.

## காலமறிந்து குற்றங்கடிதல்.

"குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை."

குணங்கள் நற்குணங்களென்றும் தீக்குணங்களென்றும் இரண்டுவகையல்லவா? அவற்றுள் நற்குணங்களைப் பயிருக்கும், தீக்குணங்களைக் களைக்கும் ஒப்பாகச் சொல்லலாம். நிலத்தை நன்றாய் உழுது பண்படுத்தி நாற்றுவிட்டு நட்டுப் பயிரை வளர்ப்பதுபோலவே, முதலில் பிள்ளைகளுடைய மனதை நன்றாய்ப் பண்படுத்தி அதில் நற்குணங்கள் உண்டாகும்படி பாடுபடவேண்டும். அப்படி வளர்க்கப்பட்ட பயிரோடு களை தானாகவே உற்பத்தியாகி அப்பயிரை மூடிக்கொள்வதுபோல, ஒருவராலும் கற்பிக்கப்படாமலே தீக்குணங்கள் தாமாகவே தோன்றி, நற்குணங்களை மேலோங்கவிடாமல் அடக்கிவிடும். ஆதலின் ஏற்றகாலத்தில் களைபறிப்பதுபோல, சிறுவர்களுடைய மனதில் தோன்றும் தீக்குணங்களாகிய குற்றங்களை உடனுக்குடனே கடிந்துகொண்டு வரவேண்டும். நகத்தால் கிள்ளியெறிவதைப் பிறகு கோடாரிகொண்டு வெட்டும்படி வைத்துக்கொள்ளலாகாது. இளமையில் அக்



குற்றங்களைக் கண்டிக்காமல் உபேக்ஷையாக விடப்படுகின்றவர்களே கடைசியில் சிறைச்சாலைக்கும் தூக்குமரத்துக்கும் இலக்காகின்றவர்கள். அவ்வாறன்றிக் குற்றங்கள் காணப்படும்போதே தாக்ஷிணியமின்றித் தண்டிக்கப்படுகின்ற பிள்ளைகள் கடைசியில் நாட்டிலே நல்லவர்களென்று பெயரெடுத்துச் சிறப்பாக வாழ்வார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒருகதை இதனடியில் கூறுவோம்.

சிலவருஷங்களுக்குமுன்னே வடக்கே கல்கத்தாநகரத்தில் ஒருஸ்திரீ ஒருநாள் மாலைவேளையில் பத்துவயதுள்ள ஒரு சிறுவனைக் கையில் பிடித்துக்கொண்டு ஒரு கடைக்குச் சென்றாள். அவள்மனதில் ஏதோ ஒரு தீர்மானங்கொண்டு கொஞ்சம் விசனத்துடனே போகிறாளென்பது அப்போது அவள் முகக்குறியால் காணப்பட்டது. அகத்தினழகு முகத்தில் தெரியுமல்லவா? அவள் படாடோபமாய் உயர்ந்த ஆடையாபரணங்கள் ஒன்றுமில்லாமல் சாதாரணமான உடை ஒன்று தரித்துக்கொண்டிருந்தாள். அவளுடன் போன சிறுவன் என்னவோ புலம்பிக்கொண்டு முகத்தை வெளியே காட்ட வெட்கி அவளுக்குப் பின்னாலே தலை குனிந்துகொண்டே போனான்.

அவள் குறித்துவந்த கடைபோய்ச்சேர்ந்து அங்கிருந்த கடைக்காரனை கூவியழைத்து அவனுக்குத் தன் பிள்ளையைக்காட்டி, ஐயா! இந்தப்பையன் உங்கள் கடையிலிருந்து ஒரு பொருளைத் திருடிக்கொண்டு வந்துவிட்டான் என்றாள். இவ்வாறு சொல்லும்பொழுதே அவள் கண்களினின்றும் பலபல வென்று தண்ணீர்பெருகத் தொடங்கியது; அவள் சொன்ன பேச்சைக் கேட்டுக் கடைக்காரன் தன் கைவேலையை நிறுத்திவிட்டு அவளை நோக்கி; அம்மா, இந்தக் குழந்தை அப்படி ஒருபோதும் செய்யமாட்டான்; நீயேன் வீணாய்ப் பழி சொல்லுகிறாயென்று வணக்கமாய்ச் சொன்னான்.

அதன்மேல் அந்தஸ்திரீ, ஐயா, நான் சொல்வது பொய்யன்று, இவன் இப்பொழுதுதான் திருடிஎடுத்துக்கொண்டுவந்தான். இவன்திருடினபாவை இதோ இருக்கிறது பாரும் என்று தான் கையில் கொண்டுவந்த பாவையைக் காட்டினாள். கடைக்காரன் அதை வாங்கிப்பார்த்து, ஆம், இது இந்தக் கடையிலிருந்த பொருள்தான்? சற்று நேரத்துக்கு முன்புதான் வெளியில் எடுத்துவைக்கப்பட்டது; நான் பின்பக்கமாய்த் திரும்பியிருக்கும்பொழுது யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்றான். அதைக் கேட்டு அந்தப் புத்தியுள்ள பெண்மணி, ஐயா நீர் சொல்வது என் மனதுக்கு மிகவும் சங்கடத்தை உண்டாக்குகிறது; நீர் யாரோவென்று சந்தேகிக்கவேண்டாம்; இந்தத் திருட்டுப்பையனே எடுத்துக்கொண்டு வந்துவிட்டான் என்றாள்.

"தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வார் பழிநாணு வார்."

அந்த வார்த்தையைக் கேட்டுக் கடைக்காரன் ஆச்சரியப்பட்டு, அம்மா, உமக்கு மனவுறுதி மிகவும் அதிகம். கடையில் இந்தப்பாவை காணாமற்போய் ஒருமணி நேரங்கூட ஆகவில்லை. அதற்குள் மகனைப் பொருளும் கையுமாய் பிடித்துக்கொண்டு வந்துவிட்டீரே. உம்முடைய தைரியமல்லவோ தைரியமென்று சொல்ல, அந்தப் பெண், ஐயா, இதில் தைரியமென்ன இருக்கிறது, தைரியமுமில்லைமனவுறுதியுமில்லை; நாம்சுவாமிக்குப்பொதுவாய் உண்மைதவறாமல் நடக்கவேண்டுமல்லவா? அந்தக் கடமைப்படி உள்ளதை

நான் ஒளியாமல் வெளிப்படுத்தினேனே யல்லது மற்றொன்றுமில்லை; பையன்கையில் பாவையைப் பார்த்தவுடனே எனக்குப் பிராணன் போவது போலிருந்தது. உண்மையான தாயாயிருந்தால், சுலபமாய்த் தோன்றினாலும் வருத்தமாய்த் தோன்றினாலும், அவள் செய்யவேண்டிய கடமையைச் செய்தே தீரவேண்டுமல்லவா? அப்படிச் செய்யாமையாலேதானே "மக்களுக்கு சத்துரு மாதாபிதாக்கள்" என்கிறார்கள். இப்போது இந்தப் பையல் செய்தகாரியம் கெட்டகாரியந்தான். அதற்காக இவனை உடனே காவல்கிடங்குக்கு அனுப்பிவிடவேண்டும். இதற்கு நானேசாக்ஷியாகிறேன்; இவன் தகப்பனார் வந்தாலும் அதற்குச் சம்மதிப்பார் என்று சொல்லி, தன் கையைப் பிடித்துக்கொண்டிருந்த பிள்ளையைக் கையை வாங்கிக்கொண்டு கடைக்காரன் வசத்தில் தள்ளிவிட்டுத் திரும்பிப் போகப்பார்த்தாள்.

அதுகண்டு பையன் அழுதுகொண்டே அவள் துணியை விடாமல் பிடித்துக்கொண்டு, அம்மா, நான் இனிமேல் இப்படிப்பட்ட காரியம் ஒருபோதும் செய்வதில்லை; என்னை இங்கே தனியே தள்ளிவிட்டுப் போகாதே? தெரியாமல் திருடிவிட்டேனென்று சொல்லிக் கோவென்று கதறியழுதான்.

கடைக்காரன் அதைப்பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டு அவளைக் கூவி, அம்மா, அவசரப்பட்டுப் போகவேண்டாம்; ஒருபேச்சுக் கேட்டுவிட்டுப் போம் என்று அவளைக் கிட்ட அழைத்து, பெண்கள் சிகாமணியே, உம்மைப்போலத் தருமமே ஜயமென்று நீதி மார்க்கத்தில் நடப்பவரை நான் எங்கும் கண்டதில்லை. உம்மைப்போலவே உம்முடைய புத்திரனும் கடவுளுக்குப் பயந்துநடக்கும்படி கற்பிக்க நீர் பாடுபடுகிறீர். இவன் செய்த காரியத்திற்கு இப்போது நீர் செய்ததே பெருமான சிக்ஷையாம். இனி ஒருபோதும் இவன் இப்படிப்பட்ட செய்கை செய்யத்துணியானென்று நான் உறுதியாய்ச் சொல்வேன்? சிறுபிள்ளைகளைக் காவற்கிடங்குக்கு அனுப்புவது சரியன்று; முக்கியமாய் இவ்வளவு ஜாக்கிரதையாக நல்வழி கற்பிக்கப்படுகிற பிள்ளைகளுக்கு அது தேவையேயில்லையென்றான்.

பிறகு அவன் அந்தப்பையனைப்பார்த்து, மகனே, திருட்டுப் புரட்டு இல்லாமல் நல்ல பிள்ளையென்று பேரெடுத்துப் பிழைப்பது நல்லதா, காவலில் அகப்பட்டு அவமானப்படுவது நல்லதாவென்று கேட்டான். அதற்கு அந்த மகன் நல்லவனென்று பெயரெடுத்துப் பிழைப்பதுதான் ஐயா சரியானதென்று வணக்கமாய்ச்சொல்ல, அப்படியானால் இப்போது நேரிட்ட அவமானத்தை இனி நீ ஒருபோதும் மறவாதே; இப்பொழுது நீ செய்த காரியம் மிகவும் அற்பமானதாயிருந்தாலும், இதுதான் கடைசியில் பிராணாந்தத்துக்குக்கொண்டுபோய்விடுவது; "இன்று தவிட்டுக்குவந்த கைதான் நாளைக்குத் தனத்துக்கும் வரும்" என்றுசொல்லக்கேட்டதில்லையா? திருடன்பெண்சாதி என்றும் கைம்பெண்தான். ஆகலால் இனிமேல் உன் நற்றாய் சொல்லும் நல்லுபதேசங்களைக்கேட்டு கடவுளுக்குப் பயந்து நட; என்று பலவிதமாய் அந்தப் பையனுக்குப் புத்திசொல்லியனுப்பினான். அந்தச்சிறுவனும் இனி நான் அப்படியே நடந்துகொள்ளுகிறேன் என்று சொல்லிச் செலவுப்பெற்றுக் கொண்டு போயினான்.

(இன்னும் வரும்.) ஜனவிநோதனி.



# இராமாயணசார வினாவிடை.

## 6-வது யுத்தகாண்டம்.

1. வினா இலங்கையைவிட்டு அனுமான் வந்தமேல் இராமன் என்னசெய்தான்?

விடை. சீதைகொடுத்த சூடாமணியை இராமனிடம் கொடுத்தபின்பு இலங்கையில் நடந்த சகல விருத்தாந்தங்களையும் அனுமான் இராமனிடம் அறிவித்தான் பிறகு இராமன், லக்ஷ்மணன், சுக்கிரீவன், அனுமான் எல்லோரும் வானரசேனைகளுடன் இலங்கைக்குப் பிரயாணம்புறப்பட்டார்கள்.

2-வினா. இப்படி இலங்கைக்குப் பிரயாணம் செய்யும்போது இராமன் சமுத்திரதீரத்தி லிருக்கையில் ஏதாவது விசேஷம் நடந்ததுண்டானால் அதைச் சொல்?

விடை. இராவணன் தம்பியான விபீஷணன் இராமனிடம் வந்து என் அண்ணன் மந்திராலோசனை பண்ணினபோது நான் ஸீதையை அசோகவனத்தில் சிறைவைத்திருப்பது அடாதகாரியம் அவளை விட்டுவிடு என்று பலவிதமாக எடுத்துச்சொல்லியும் அவன் அதைக் காதுகொடுத்துக் கேழ்க்கவேயில்லை அவனோடு கூடியிருக்க எனக்குச் சற்றும் இஷ்டமேயில்லை. உம்மைவந்து சரணமடைந்தேன். ஏ! ராமா! என்னை நீர் காப்பாற்றவேண்டுமென்று விபீஷணன் கேட்டுக்கொண்டான். ஆகட்டும் அப்படியே ரக்ஷிக்கிறேனென்று சொல்லி ராமன் விபீஷணனுக்கு அபயப்பிரதானம் செய்தார். இராவணனையும் ஜயித்து உன்னையும் இலங்கைக் கரசனாக்குகிறேனென்று வாக்களித்துக் கடல்நீரால் லங்காராஜ்ய பட்டாபிஷேகத்தை விபீஷணனுக்கு லக்ஷ்மணனைக்கொண்டு செய்வித்தார்.

3-வினா. வானரஸேனைகளும் இராமன் முதலானோரும் இலங்கைக்குப் போம்வழியில் கடலை எப்படித்தாண்டினார்கள்?

விடை. சமுத்திரத்தின் நடுவில் அணைகட்டும்படி விசுவகருமாவின் புத்திரனான நளனுக்கு ஸ்ரீராமன் கட்டளையிட்டார். அக்கட்டளைப்படியே நளன் வானரஸேனைகளைச் சகாயமாகவைத்துக்கொண்டு திருவணைகட்டினான்; அவ்வணையின்வழியாக ராமன் லக்ஷ்மணன் முதலினோரும் வானரஸைனியத்தோடு லங்கைக்குப் போனார்கள்.

4-வினா. சுகன், சாரணன், சார்த்தூலன் இவர்களால் என்ன சங்கதி தெரியவந்தது சொல்?

விடை. அவர்கள் இராவணன் இட்ட கட்டளைப்படி வானர ரூபங்களை தரித்துக்கொண்டு இராமனது சேனைகளின் நிலையை அறிந்துகொண்டு இராவணனிடம் போய் அறிவித்தார்கள்

5-வினா. ஸரமை என்பவள் யார்?

விடை. அவள் விபீஷணரின் பாரியை. இராமன் மாண்டுபோனானென்று காட்டச் சீதையின் முன் இராவணன் ஒரு தலையைக்கொண்டுபோய்ப் போட்டபோது அது பொய்யென்று சீதைக் கறிவித்துச் சமாதானம் செய்தவள் தான் இந்தப்பெண்மணி.

6-வினா. மாலியவான் என்பவன் யார்?

விடை. அவன் இராவணனுக்கு மாதா மகன் (தாயைப்பெற்ற பாட்டன்) இவன் இராவணனிடத்தில் சொன்னதாவது சேனையோடு லங்கைக்கு வந்திருப்பவன் சாதாரணமனிதன் அல்ல தேவனேயாம். அவனோடு நீ யுத்தம் செய்யவேண்டாம் சீதையை ராமனிடம் விட்டுவிடு என்று உபதேச மொழி கூறியதேயாம்.

7. வினா:—யுத்தம் தொடங்குவதற்கு முன் இராவணனிடத்தில இராமன் ஏதாவது வார்த்தை சொன்னாரா ?

விடை:—இலங்காபுரியின் வடக்குவாசலில் அனுமான் சுக்கிரீவன் அங்கதன் முதலான வீரர்களுடனும் சேனைகளுடனும் உத்தம் செய்யச் சித்தமாயிருந்த இராமன் சீதையை விட்டுவிடு இல்லாவிட்டால் யுத்தத்துக்குவா உன்னை நான் கொல்லச்சித்தமா யிருக்கிறேனென்று சொல்லும்படி இராவணனிடத்தில் அங்கதனைத் தூதனுப்பினான்.

8. வினா:—சீதையை விட்டுவிட இராவணன் சம்மதித்தானா ?

விடை:—சீதையை விட்டுவிடச் சம்மதியாது தன் முன் வந்து தன்னை எடுத்தெறிந்து பேசின அங்கதனைப்பிடித்துக் கட்டுங்களென்று இராக்ஷஸ வீரர்களை ஏவினான். அங்கதன் அவ்வீரர்களை யெல்லாம் கொன்று விட்டுத் திரும்பி இராமனிடம் வந்து நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் அறிவித்தான்.

9. வினா:—அங்கதன் சொன்னவைகளைக் கேட்ட மேல் இராமன் என்ன செய்தான்?

விடை:—இராவணனைக் கொல்ல யுத்தம் நடத்தவேண்டுமென்று அனுமான் முதலிய வானரவீரர்களை யெல்லாம் ஒருங்காகத் திரட்டிக்கொண்டு இராமன் தானும் யுத்தஞ்செய்ய ஆரம்பம் செய்தான்.

தி. வெங்கட்ராம ஐயங்கார்.
தமிழ்ப்பண்டிதர்.

## விடுகதைவினா.

1904வரு டிஸம்பர்மாதப் பத்திரிகையில் பி. பி. என்ற நாமமிட்டுப் பிரசுரமான விடுகதைக்கு விடை 1 பாக்குவெட்டி 2 சாணிஉருண்டை 3 நாற்காலி.

எஸ். ஞானவடிவுடை அம்மாள்.

## விடுகதைகள்.

I. ஒருகோயில் ஸ்தானிகர் அர்ச்சனை செய்யச் சில புஷ்பங்கள் கொண்டு போனார் ஷை கோயிலுக்குச் சில புஷ்பங்களை யர்ச்சித்தார்.

2-வது கோயிலுக்குப்போக மிகுதியாக இருந்த புஷ்பங்கள் ஒன்று பத்தாகப் பெருகியது 1வது கோயிலுக்கு அர்ச்சித்தபடியே அர்ச்சித்தார்.

3வது கோயிலுக்குப்போக மிகுதியாயிருந்த புஷ்பங்கள் ஒன்று நூறு கப் பெருகியது ஷைகோயிலுக்கும் ஷை கண்டபடியே அர்ச்சித்தார்.

புஷ்பங்கள் சரியாய்ப் போய்விட்டது அவர் கொண்டுவந்த புஷ்பங்களெத்தனை?

II. ஒருகுடியானவன் சிலமாங்கனிகள் கொண்டுவந்து அவ்வூர் அரசனைக் கண்டுக்கொண்டான். அந்த மாங்கனியை அந்தப்புரத்தும் தேவிமாருக்கு



அனுப்பினான். முதல்மனைவி கண்டு தன் குழந்தைகையில் ஒருகனிகொடுத்து ஐந்துபங்கிட்டு ஒரு பங்கை எடுத்துக்கொண்டாள். மிகுதியை 2,3,4,5 மனைவிமார்களும் முறையே தங்கள் குழந்தைகள் கையில் ஒரு கனிகொடுத்து ஐந்துபாகஞ் செய்து ஒவ்வொரு பாகத்தை எடுத்துக்கொண்டார்கள். மீதியை அரசன்வந்து மனைவிகள் ஐவருக்கும் சரியாய்ப்பங்கிட்டுக்கொடுத்தான்.

குடியானவன் கொண்டுவந்த கனிகளெத்தனை?

எஸ். ஞானவடிவுடையம்மாள்.

I. எட்டெழுத்துள்ள ஒருபெயர்.
1. 6. எழுத்துகள் சேர்ந்தால் பெருமை என்று அர்த்தம்
7. 4. 5 எழுத்துகள் சேர்ந்தால் தளர்ச்சி என்று அர்த்தம்
3. 8. எழுத்துகள் சேர்ந்தால் குரங்கு என்று அர்த்தம
6. 2. எழுத்துகள் சேர்ந்தால் அடைப்பு என்று அர்த்தம்
முழுதும் சேர்த்து வாசித்தால் உமையின் பெயர்களில் ஒன்றுவரும்.

II. பச்சைநிறம் பூண்டிருக்கும் திருமாலல்ல
பலகாலக் கொழுந்துகிள்ளும் கொடிக்காலல்ல
உச்சிதமாய் நீண்டிருக்கும் பாம்புமல்ல
உலகத்தார் ஆசைகொள்ளும் வேசியல்ல
மச்சிமேல் தூங்குமது வௌவாலல்ல
வரிகட்டி கல்சுமக்கும் எருதுமல்ல.

III. ஆறெழுத்துள்ள ஒருபட்சி.
முதலாவது இரண்டாவது எழுத்துகள் சேர்ந்தால் பால என்று பொருள்படும். இரண்டாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது எழுத்துகள் சேர்ந்தால் மூக்கு என்று பொருள்படும். மூன்றாவது நான்காவது எழுத்துகள் சேர்ந்தால் மூங்கில் என்று பொருள்படும்.

T. M. அறப்பெருஞ்செல்வி அம்மாள்.

## சமாசாரக் குறிப்பு.

கொச்சிஇராஜியத்தில் வைத்திய இலாகாவிலுள்ள மிஸ்டர் R. குந்தரின் குமாரத்தி மிஸ் I. குந்தர் பி. ஏ. பரீக்ஷையிற்றேறி இப்பொழுது எல். டி. என்ற உபாத்தியாயர் பரிக்ஷைக்கும் ரெவரெண்டு லாஸரஸ் என்ற தமிழ் வித்வான் குமாரத்தியும் சென்னை பிரசிடென்சி காலேஜியில் சேர்ந்து படித்துக்கொண்டு வருவதையும் கேட்க சந்தோஷப்படுகிறோம்.

***

சகண்டிராபாத்தில் பிப்ரவரிமீ 9உ சுமார் 60மாதர்கள் சேர்ந்து ஒரு கூட்டம் கூடினார்களாம். அக்காலத்தில் அங்குள்ள பாடசாலையில் படித்த பெண்களுக்கு பரிசுமளிக்கப் பட்டதாம். மிஸஸ் வின்டர்ஸ் என்றமாது இந்தியமாதர்கள் தங்கள் பெண்களின் கல்வி விருத்திக்காக சுறுசுறுப்புடன் உழைப்பார்களென்று தாம் நம்புவதாகச் சொன்னார்கள்.

***

துர்க்கிதேசத்தில் ஒரு குடும்பத்தில் ஆண் சந்ததி யில்லாவிட்டால் பெண்கள் ஷை சொத்தை தங்களுக்கு கலியாணமாகுமட்டும் ஒன்றும் செய்ய முடியாதாம்; கலியாணம் ஆன பிறகு தங்கள் புருஷன் அனுமதியில்லாமல் சொத்தின் மூன்றில் ஒரு பாகத்தை தங்கள் இஷ்டப்படி செலவு செய்யலாமாம்.

சமீபத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் சென்னை ராஜதானி சர்வகலா சாலை மாணவர்களுக்கு நடத்திய பரீக்ஷையில், மெற்றிக்குலேஷனில் முதல் வகுப்பிற் றேறியோர்களில் முதலாகத் தேறியிருப்பது திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் பாடசாலையில் படிக்கும் எலிஜபெத் ஸாமவேல் என்னும் பெண்பிள்ளை என்றறிய சந்தோஷிக்கிறோம். இவளுக்கு சங்கத்தாரால் 30ரூ பெறும்படியான வெள்ளிப்பதக்கமும் பணமும் அளிக்கப்படும்.

***

பம்பாயில் யாவராலும் நன்கு மதிக்கப்பெற்ற "மாதர்சபை" ஒன்று உளதென்றும், அதன் அக்ராஸநாதிபதி மிஸிஸ் ரானடே என்றும் நாம் அறிவோம். இனி கல்கத்தாவிலும் அப்பேர்ப்பட்ட "மாதர்சபை" யொன்று இராணிமிருணாலினீ தேவியின் நன்முயற்சியால் ஸ்தாபிக்கப்பெற்று நடைபெறும் என்றறிய சந்தோஷிக்கிறோம். இம்மாதிரி எங்கும் மாதர்சபைகள் ஏற்பட்டு நடைபெறுமாயின் இந்தியாவின் க்ஷேமத்தைக் குறித்துச் சொல்லவும் வேண்டுமோ?

***

மிஸ் கல்போனு I. J. மகமது என்னும் மகமதிய கன்னிகைபம்பாய்சர்வகலாசாலையார் நடத்திய மெற்றிகுலேஷன் பரீக்ஷையில் தேறி இருக்கின்றனள். இது காறும் பம்பாய் யூனிவர்ஸிடியில் இவளைத்தவிர எந்த மகமதிய கன்னிகையும் தேறினதில்லையாம்; ஆதலின் இவ்விஷயம் அவளுடைய பெற்றோர்க்கும் உற்றோர்க்கும் மற்றோர்க்கும் கலாசாலைக்கும் பெருமகிழ்வு விளைவிக்குமென்றே எண்ணுகிறோம். ஏனைய மகமதியஸ்திரிகளும் இவளைப் பின்பற்றி மேன்மைபெறுக. இவள்தன் பரீக்ஷையை இத்துடன் நிறுத்தாமல் F. A. B. A.யும் தேறி மகமதியபெண்கள் நாயகமாய் விளங்குக.

***

நமது சக்கிரவர்த்தினி மிஸ்மாக்கல், மிஸ்ஸெட்அப்புயின் என்ற இரண்டு மாதுக்களை ஜப்பானியரின் ஆஸ்பத்திரிகளை சுற்றிப்பார்த்து அவ்விடங்களிலுள்ள விசேஷங்களை தெரியப்படுத்தும்படி அனுப்பியிருக்கிறார். மேலும் ஜப்பானியர்கள் சேனையில் காயமடைந்தவர்களை எவ்வாறு சிகிச்சைசெய்து போஷிக்கிறார்களென்றும் தெரியப்படுத்தும்படி உத்திரவு கொடுத்திருக்கிறார். அவர்களின் அறிவிப்பு ரொம்பவும் மெச்சத்தக்கதாயிருக்கிறது. ஜப்பானியர்கள் ஆஸ்பத்திரிகளில் தங்கள் வேலைகளை அதிக சுத்தமாயும் சாதுரியமாகவும் யாவரும் கொண்டாடத்தக்க விதமாகவும் செய்துமுடிக்கிறார்களென்றும் ஜப்பானியர்களின் வைத்திய சாஸ்திரங்களும் நோயாளிகளை போஷிக்கும் திறமையும் எந்த ஐரோப்பிய நாட்டிற்கு சமமாகவே கூறலாம் என்றும் தெரிவிக்கிறார்கள்.

***

பண்டிதர் மிஸ்டர் சௌரிராயன் பிள்ளையவர்கள் நமக்கு பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

பொதுநன்மை ஒன்றையே கருதி தாங்கள் பெருமுயற்சியால் ஆறுவருஷகாலமாய் நடத்திவந்த இந்தப் பரோபகாரதருமத்தைத் தவிரவிடாது இன்னும் அதிக விருத்திக்கு கொண்டுவந்து நமதுபெண்களின் நிலையையுயர்த்துவான் அதியூக்கத்தோடு முயலுமாறு தங்களுக்குப் பலமும் தனிவும் பொருளும் அளித்தருள எல்லாம் வல்ல இறைவனைச் சிந்திக்கின்றேன்.

Printed at the Madras Ripon Press & published by the proprietor
C. S. Ramaswamy Iyer, Triplicane, Madras.

REGISTERED 30 JUN 1905

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-vii. | Madras: March 1905. | No-3.
புத்தகம் ௭. | சென்னப்பட்டணம்: மார்ச்சு௴ 1905. | இல-3.

## சென்னைச் சித்திரக்காட்சி.

சென்னையில் வழக்கம்போல் பிப்ரவரி௴ 26உ முதல் மார்ச்சு௴ 7உ வரையிலும் சமுத்திரக்கரையிலுள்ள கலசமால் என்று வழங்கிவரும் செனட் அவுசில் (Senate House) ஓர் விநோத சித்திரக்காட்சி நடந்தது. இக்காட்சிக்கு சென்னை இராஜதானியிலும் பம்பாய் இராஜதானியிலும் பேர்பெற்ற சித்திரவேலைக்காரர்கள் தங்களுடைய சிறந்த படங்களை அனுப்பியிருந்தார்கள். அவர்களில் சுமார் 40 பேருக்கு பரிசு கிடைத்தது. மற்றவர்களுக்கு பரிசு கிடைக்காவிடினும் அவர்களது சித்திரப்படங்களின் வேலைத்திறமைகள் மிக மெச்சப்பட்டன. வழக்கம்போல் இவ்வருஷமும் வெள்ளிப்பதக்கங்களும், பித்தளைப்பதக்கங்களும் சிறந்த பதக்கங்கள் எழுதியவர்களுக்கு பரிசுஅளிக்கப்பட்டன. சில சிறந்தபடங்கள் எழுதியவர்களுக்குப் பொன் பதக்கங்கள்அளிக்கப்பட்டால் மிக நலமென்றும்,இன்னும் இவ்வேலையில் சிறந்தவர்கள் இக்காட்சிக்கு தாங்கள் எழுதிய படங்களை அனுப்பக்கூடுமென்றும் சென்ற வருடத்தில் எழுதியிருந்தோம். அவ்விதம் அடுத்தவருடத்திலாவது செய்ய அக்கமிட்டியார் முயன்றால் மிக உசிதமாக விருக்கும்.

நிற்க, தேசக்காட்சி சம்பந்தமாக "ஒரு ஆச்சரியமான சாயங்கால வேளை" யென்ற அழகான படம் மிஸஸ் ஷாமியர் என்ற மாதால்அனுப்பப்பட்டிருந்தது. இது பார்க்க மிக அழகாகவும் இந்த மாதின் புத்திநுட்பத்தையும் நன்றாக தெரிவித்தது.

சில எண்ணெயிற் கலந்த வர்ணமிட்ட படங்களும் மிக அழகாக விருந்தன. அவைகளில் ஸ்ரீ நகர் மிக அற்புதமானது; புதுக்கோட்டைஅரண்மனை வெகு நன்றாக வரையப்பட்டிருந்தது. வழக்கம்போல் ராஜா ரவிவர்மா அவர்களும் சில சித்திரப்படங்கள் எழுதி அனுப்பியிருந்தார்கள். இவர் பரிசுபெறவேண்டுமென்ற எண்ணத்துடன் செய்பவரல்லஎன்பது யாவருக்கும் தெரியும்.

நீரிற் கலந்த வர்ணமிட்ட சில படங்களுமிருந்தன. இவைகளும் பார்க்க மிக ஆச்சரியமாகவே தோன்றின, ஹிந்திரியின் கரைகளைப்பற்றியும், சிம்ளாவிலுள்ள குன்றைப்பற்றியும் வரையப்பட்டவைகள். இன்னும் சித்திரவேலை

ப்பாடமைந்த பொருள்களும், திறமையாய் எழுதி விடுக்கப்பட்ட உருவமைப்புப்படங்களும், மரச்சாமான்களும், நிறைந்திருந்தன. இச்சென்னை இராஜதானியில் சித்திரமெழுதுவதில் திறமை வாய்ந்த இந்து மாதர்களில் ஸ்ரீமதி பி. சுப்பயம்மா எனும் மாது மிகத்திறமையாய் 3 அழகான படங்களை யனுப்பியிருந்தார்கள். இவைகளைக்கண்டு அநேகர் மகிழ்ந்தார்கள். இவைகளிலொன்று நமது கவர்னர் லார்டு ஆம்பதிலைப்போன்ற உருவமுடைத்தது. இவர் அணியும் உடுப்புகள் தக்க வர்ணத்தால் வெகு நன்றாக வரையப்பட்டிருந்தது யாவர் மனதையும் சந்தோஷப்படுத்திய தென்றே சொல்வோம். மார்ச்சுமீ 6வ நமது கவர்னரும் சென்று இக்காட்சியையும் மேற்சொல்லிய மாதால் அனுப்பப்பட்டிருந்த படங்களையும் கண்டும் ஆச்சரிய மடைந்தார்கள். இம்மாது டைப்ரைடிங் (Typewriting) என்ற அச்செழுத்து யந்திரத்தில் மாணவர்களைப் பழக்கி வைக்கும் மிஸ்டர். பி. கிருஷ்ண சர்மாவின் அன்பிற்கும் பிரியத்திற்கும் முகந்த பத்னியாவள்.

சென்ற வருடம் நமது பத்திரிகையில் மாதர்கள் நூல், பாசி, இவைகளால் பற்பல விசித்திரமான வேலைகள் செய்து அனுப்புவது நலமென்று சொல்லியிருந்தோம். அவ்விதம் அவர்கள் செய்து அனுப்பாவிடினும் இம்மாது படங்கள் வெகு நன்றாக எழுதியனுப்பினதைப்பற்றி மிகச் சந்தோஷப்படுகிறோம். இம்மாதை இனியாவது மற்றவர்களும் பின் பற்றி தங்களுக்குத்தெரிந்த சித்திரவேலைகளை அடுத்த வருட காட்சிக்கு அனுப்ப முயலுவார்களென்று நம்புகிறோம். இவ்வம்மையும் தைரியமாய் சித்திரப்படங்கள் எழுத முன் வந்தது மிகவும் சிலாகிக்கத் தக்கதே. மேன்மேலும் இம்மாது பற்பல விசித்திரப்படங்களைத் தமது புத்திகூர்மையால் எழுதிவர ஈசன் அருள் புரிவாராக.

# பெண்கல்விக்கும்மி.

வெள்ளத்தாற்சேதங்கள்வாராதே—அந்த
வெந்தியாலுஞ்சேதம்வாராதே
கள்ளத்தாற்சேதங்கள்வாராதேயிந்தக்
கல்விக்கென்றுகைகொட்டுங்கடி-அந்தச்
செல்வத்துக்குண்டென்று
கொட்டுங்கடி. (15)

மாமிவணக்கத்தைக்கல்விதரும்—அந்த
மாமன்வணக்கத்தைக்கல்விதரும்
சாமிவணக்கத்தைக்கல்விதருமென்று
சாற்றிக்கும்மியடியுங்கடி—நீங்கள்
போற்றிக்கும்மியடியுங்கடி. (16)

வெண்டாமரைமேலிருப்பவளே—எல்லா
வித்தைக்குந்தேவதையாயிருந்தால் [று
பெண்டுகள்கல்வியைக்கற்கக்கூடாதென்
பேசுவதென்னென்றடியுங்கடி—சிலர்
ஏசுவதென்னென்றடியுங்கடி. (17)

ஔவையருளியதெய்வமொழிதமை
ஆடவர்யாவருங்கற்றுவந்தும்
கல்வியர்க்குக்கல்விகூடாதென்றுசொலும்
நியாயமென்னவென்றடியுங்கடி-அநி
யாயச்சொல்லேயென்றடியுங்கடி. ()

காரைக்காலம்மைமகிழ்திய நூல்தமைக்
காளையர்யாவரும்பார்த்திருந்தும்
காரிகையாருக்குக்கல்விகூடாதென்று
சமருவதென்னென்றடியுங்கடி—சிலர்
உளறுவதென்னென்றடியுங்கடி. (19)

ஆண்டாளருளியநீண்டநூல்தம்மையே
வாண்பிள்ளையாவரும்பார்த்திருந்தும்
காண்டருபெண்கல்விகூடாதென்று
சொலுங்
காரியமென்னென்றடியுங்கடி—அவர்
வீரியமென்னென்றடியுங்கடி. (20)



ஆங்கிலமன்னரரசியற்று—மிந்த
அற்புதவிற்பனகாலத்திலே
பாங்குடன்பெண்கல்விச்சாலையமைந்தது
பாக்யமென்றேகைகொட்டுங்கடி
—வெகு
சிலாக்யமென்றேகைகொட்டுங்கடி. ()

நீதிநூல்யாவையும்நாங்கள்கற்போம் அந்த
நீதிவழியில்நிலைத்துநிற்போம்
நாதனுயிர்க்குயிராயிருப்போமென்று
நாடிக்கும்மியடியுங்கடி—நீங்கள்
கூடிக்கும்மியடியுங்கடி. (22)

காவியசாத்திரங்கற்றிடுவோம்—அதன்
கற்பனைகண்டுகளித்திடுவோம் [று
பாவினியல்யெல்லாம் பார்த்திடுவோமென்
பகர்ந்துகும்மியடியுங்கடி—மனம்
உகந்துகும்மியடியுங்கடி. (23)

பாகசாத்திரம்பார்த்திடுவோம்—அந்தப்
பக்குவமாகச்சமையல்செய்வோம்
ஓசையோடுகணவற்கருத்திநாம்
உண்டிடுவோமென்றடியுங்கடி—மகிழ்
கண்டிடுவோமென்றடியுங்கடி. (24)

வேண்டுங்கணிதமுறைதெரிவோம் எங்கள்
வீட்டுக்கணக்குமெழுதிவைப்போம்
ஆண்டகைதேடும்வரவுக்குமட்டாக [வெகு
அன்பாய்செய்வோமென்றடியுங்கடி—
இன்பாய்செய்வோமென்றடியுங்கடி()

தையல்மார்கள்தமக்குரிய—வெகு
தையல்வேலையுந்தானறிவோம் [று
கையின்திறத்தைநாம்காட்டிடுவோமென்
கரைந்துகும்மியடியுங்கடி—நீங்கள்
இரைந்துகும்மியடியுங்கடி. (26)

வாகடநூலுமறிந்திடுவோம்—வெகு
வாகாய்வைத்யமுறைகள்கற்போம்
ஆகுங்குழந்தையைகாக்குமுறைக
ளறிந்திடுவோமென்றடியுங்கடி—மிகத்
தெரிந்திடுவோமென்றடியுங்கடி.(27)

சங்கீதசாஸ்திரந்தானறிவோம்—அதைத்
தண்ணியவீணையிற்றான்பயில்வோம்
இங்கிதமானகணவர்செவிக்கின்பம்
ஈட்டிடுவோமென்றடியுங்கடி—இசை
ஊட்டிடுவோமென்றடியுங்கடி. (28)

ஓவியர்போன்றஉருவுடையோம்-நாங்கள்
ஓவியந்தீட்டவுணர்ந்திடுவோம்
தேவஉருவெல்லாஞ்சித்திரிப்போமென்று
தேர்ந்துகும்மியடியுங்கடி—நீங்கள்
கூர்ந்துகும்மியடியுங்கடி. (29)

கொழுநன்குறிப்பறிந்தேநடப்போம்
—அவர்
கூறுங்குற்றேவல்குனிந்துசெய்வோம்
பழுதுசொன்னாலுமிகழ்ந்துசொல்லோ
மென்று
பரிந்துகும்மியடியுங்கடி—நீங்கள்
செறிந்துகும்மியடியுங்கடி. (30)

கணவன்களிக்கக்களித்திடுவோம்—அவர்
கஷ்டப்படில்நாங்கள்விட்டுவிடோம்
கணமும்அவரைப்பிரியாமல்வாழும் [கு
கண்யமுள்ளோமென்றடியுங்கடி—வெ
புண்யமுள்ளோமென்றடியுங்கடி. ()

மாதாவைப்போலஉடல்வளர்ப்போம்—
மந்திரிபோலஅறிவுசொல்வோம் [நல்ல
காதலர்கண்மணியாயிருப்போமென்று
கழறிக்கும்மியடியுங்கடி—மொழி
குழறிக்கும்மியடியுங்கடி. (32)

இல்லறவாழ்க்கைச்சகடமதை—ஒன்றாய்
இரண்டுபேருமிழுத்திடுவோம்
பல்குறுசந்தானசம்பத்துடனேயிப்
பாராள்வோமென்றுகைகொட்டுங்கடி
—வெகு
சீராள்வோமென்றுகைகொட்டுங்கடி.

ஆங்கிலச்செங்கோலரசோங்க—எங்கள்
அந்தணர்வேதம்மிகவோங்க
மாங்குயிலார்க்குக்கலையோங்கவென்று
வாழ்த்திக்கும்மியடியுங்கடி—கை
தாழ்த்திக்கும்மியடியுங்கடி. (34)

வித்தையிலாக்காமிகவாழி—யதை
மேன்மையாய்க்காப்போர்மிகவாழி
சுத்தப்பரீக்ஷாகர்த்தாவாழியென்று
துதித்துக்கும்மியடியுங்கடி—கை
அதிர்த்துக்கும்மியடியுங்கடி. (35)

கலைமகள் திருவடிவாழ்க.

ஜி. சதாசிவம்பிள்ளை.



# தேனும் தேனியும்.

## XV. தேன் பெறுமாறு.

கூட்டினின்றும் தேன் கொள்ளல்:— வெகு தூரத்தில் இருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய அவ்வளவு பெரிதாய்ச் சில கூடுகள் இருக்கும். இத்தேன் கூடுகளை தெரிந்தமாத்திரத்திலேயே மனிதன் தீவர்த்தியுங் கையுமாய் நீண்ட கயிற்றுச் சுருள் ஒன்றையு மெடுத்துக்கொண்டு உயர ஏறிப் புகை போட்டு ஈக்களைத் தூரத்துவன். அப்பொழுது தீவர்த்திப் புகையால் மூச்சுவிடமாட்டாமல் ஸ்மரணையழிந்து விழும் சில ஈக்கள். உயிர் தப்பி ஓடும் வேறு சில. பொசுங்கிச் சாகும் பல ஈக்கள். எத்தனை ஈக்கள் செத்தால்தான் இவனுக்கென்ன? ஈக்கள் பாடு இவ்விதமாகவே! இவன் தேன்கூட்டை அடியோடு பெயர்த்தெடுத்துக் கயிறுகட்டிக் கீழே இறக்குவன். பின்பு அதில் உள்ள தேன் ஒட்ட வடித்து எடுக்கப்படும். ஆ! ஆ! என்ன பரிதாபம்!

பல பூக்களினின்றும் வெகு சிரமப்பட்டு ஒய்ச்சல் ஒழிவின்றிச் சேகரித்து வைத்த தேனைப் பறிகொடுத்தது மட்டுமின்றி உயிர்க்கே தீங்கையும் விளைவித்துக்கொண்ட இவ்வீக்கள், உண்டு உடுக்காது மெய்வருந்திப் பாடுபட்டுத் தேடிய ஏராளமான திரவியத்தை நல்வழியிற் செலவிடாது இரவோர்க்கீதல் முதலியன புரியாது சேர்த்துவைக்கும் பேதைமாக்களுக்குச் சிறந்த சற்புத்தி புகட்டக் கூடியராய் இருக்கின்றன. உண்மையிலேயே,

“உடாதும் உண்ணாதும் தம் உடம்பு செற்றும்
கெடாத நல்லறமும் செய்யார்—கொடா அது
வைத்து ஈட்டினார் இழப்பர் வான்தோய் மலைநாட
உய்த்து ஈட்டும் தேனீக் கரி.”

என்ற நாலடிச் செய்யுள் வெகுவாய்ச் சிந்திக்கத்தக்கதே.

“தேன்காட்டி”:—தேன் கூடு இருக்கும் இடம் தெரிந்தால்தானே மனிதன் இவ்வாறு தேன் எடுக்கக் கூடும்? தெரியாவிடில் என்ன செய்வன் எனில், யாதானும் ஒன்றன் உதவியினால் அறிவன். உதாரணமாக ஆப்பிரிக்காவில் வானம்பாடி அளவுள்ள ஓர் சிறு புள்ளிருக்கிறது. இப் பறவைக்குத் “தேன்காட்டி” (Honey guide) என்று பெயர். குயிலுக்குக் கூடு கட்டவேனும் குஞ்சு பொரிக்கவேனும் தெரியாதென்றும் அதன் குஞ்சுகளைக் காக்கை முதலிய வேறு பக்ஷிகளே பொரித்துக் காத்து வளர்க்கின்றன வென்றும் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா? இத்தேன் காட்டியும் இவ்விஷயங்களில் குயிலைப்போலத்தானிருக்கும். இஃதொரு பிழைக்கத் தெரியாத பறவையாய் இருந்தும் இதற்குத் தேனையும் தேனீக்களையும் உண்ண வெகு பிரியம். ஆயினும் என்? இவ்விரண்டில் ஒன்றேனும் அது தன் முயற்சியினால் பெறமுடியாது. ஏனெனில், அது தேன் கூட்டண்டை போகுமுன்னரே இறகினால் மூடப்பட்ட அதன் சரீரத்தில் கொட்டினாலும் பயனில்லையெனத் தெரிந்துகொண்ட சிற்றீக்கள் அதன் கண்ணையே பார்த்துப் பிடுங்கும். இப்பொழுது பக்ஷி தப்பித்துக்கொண்டால்தான் உயிரோடிருக்கும். இல்லாவிடில், இனி என்றென்றும் இரை தேட முடியாமல் பட்டினியால் வருந்திச் சாகவேண்டியதுதான். ஆயினும் இது மூடத்தனமாய் உயிருக்குத் தீங்கு தேடிக்கொள்வது அரிது. ஆனால்தான் தேன் ஈ இவற்றின்பேரிற்கொண்ட ஆசையை விடுகிறதோவென்னில் அதுவும் இல்லை. பின்னை யது எப்படித் தனதெண்



ணத்தை முடித்துக்கொள்ளுகிறதென்று பார்ப்போம். அது தேன் கூட்டை எங்கேனும் கண்டுகொண்டுவிட்டால் அதற்குத் தலை கால் தெரியாமல் சந்தோஷம் பிறந்துவிடும். உடனே அது எவனாவது ஒருவனைத் தேடிச்சென்று கண்டுபிடித்து அவன் தலையைச் சுற்றிச்சுற்றி வட்டமிட்டு அவனைத் தன்னை கவனிக்கும்படிசெய்து அவன் பார்க்கக்கூடிய ஓரிடத்தில்போய் உட்காரும். இது நடிப்பதைப் பார்க்கும்பொழுது,

பொற்புள் ளதனைப் பிடிப்பான் னளன்புகுதக்
கைக்குள் வருமாபோற் கழன்றோடி—எய்க்கும்
இளைக்குமா போல இருந்ததுகண் டன்றே
வளைக்கு மாறு எண்ணினான் மன்.

என்ற புகழேந்திவெண்பா ஞாபகத்தில் வராமற்போகாது. நிற்க, மனிதன் இப்பக்ஷியின் கருத்தை நன்கறிவன். அதனுடன் புறப்பட்டுச் செல்லத் தயாராய் இருக்கும் சமயத்தில் சீட்டி அடிப்பன். இக்குறிப்பைப் பக்ஷி அறிந்துகொள்ளும். உடனே அது புறப்பட்டு அவன் பார்க்கக்கூடிய தூரத்தில்போய் உட்கார்ந்துகொள்ளும். மனிதன் சமீபித்தவுடன் மீண்டும் சற்று அப்பால்போய் உட்காரும். இங்ஙனம் அது போகப்போக அவனைத் தேன் கூடு இருக்குமிடத்திற்கு இட்டுச்செல்லும். கூட்டைக் கண்டவுடன் முன்பு நாம் சொல்லியதுபோல் ஈக்களைத் தீயாலும் புகையாலும் கொன்று கூட்டைக் கைப்பற்றித் தேன் எடுப்பன். பின்னர் தான் தேன்பெறுவதற்குக் காரணமாய் இருந்த பறவைக்குத் தேனில் ஒரு சிறிது கொடுப்பன். அவன் கொடுக்கும் தேன் அதன் வயிற்றிற்குப் போதுமானதாய் இருந்தால் அது அங்கிருந்து பறந்தோடிவிடும். ஆனால் பேராசையுள்ள மனிதன் இதற்குப் போதுமான தேனை கொடுப்பதில்லை. இதற்குக் கொடுபடும் தேன்கிடந்த பசியையும் கிளறித்தான் எடுக்கும். ஆதலின் அது இம்மனிதனை வேறொரு கூட்டிற்கும் முன்மாதிரி அழைத்துப்போய் மீண்டும் கூலி பெறுமாம். சில சமயங்களில் இவை சேர்ந்தாற்போல் மூன்று நான்கு கூட்டிற்குக்கூட கூட்டிச்செல்லுமாம். தேன்கூடிருக்கும் இடங்களில் ஜாப்தா வைத்திருக்கும் இப்பறவைகளின் உதவியைப் பெறும் மனிதர் பாக்கியசாலிகள்தாம்.

### தேனீமூலமாய்த் தேன் கூடறிதல்.

தேன் காட்டி எங்குமா இருக்கிறது? இல்லா ஊர்களில் தேன்கூடிருக்கும் இடம் அறியும் விதம் கூறுவம்:—உதாரணமாக ஆஸ்திரேலியாவில் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம். சாதாரணமாகத் தேனீயானது தன்னிருப்பிடத்தைவிட்டு இரண்டு மைலுக்கு அப்பால் போகவே போகாது. தவிரவும் தேன்கொண்டுபோகும் ஈயானது அங்குமிங்கும் நில்லாது நேரே தனது வீடுநோக்கியே செல்லும். இவ்விரு விஷயங்களும் உண்மையே. ஆதலில் தேன்கூட்டின் இருப்பிடம் அறியவேண்டும். ஒருவன், தேன் கொண்டுபோகும் ஈ ஒன்றைக் கண்டுபிடித்து அதனைத் தொடர்ந்து சென்று அறியலாமல்லவா? வாயினால் இப்படிச் சொல்லலாமேயொழிய சாமானியமாய் முடிக்கக்கூடிய காரியமா? இது ஒரு ஈ கட்டுப்பட்டால் தேன் கொண்டுபோகிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ளலாமேயன்றி அதனைப் பின்றொடர்ந்துசெல்ல யாரால் இயலும்? அதன் ஓட்டம் எங்கே? மனிதன் ஓட்டம் எங்கே? ஒருவேளை அதனைத் தொடர்ந்து விரைந்தோடும் மனிதன் ஒருவன் இருக்கிறான் என்று வைத்துக்கொண்டபோதிலும் அது பல திக்குகளிலும் பாய்ந்து பாய்ந்து ஓடுமே. தவிரவும் பறக்கும்பொழுது கண்ணுக்குத்தான் தெரியுமா? எத்தனையோ ஜந்துக்கள் உயரப் பறக்கின்றனவே. இது தான் பார்த்த தேனீ என்று அவன் எப்படி அறிவன். ஆதலின், ஓர் தேன் கொண்டு

போகும் ஈயுடன் தொடர்ந்து செல்லவேண்டுமானால், முதலாவது அதன்வேகம் மட்டுப்படுத்தப்படவேண்டும். இரண்டாவது மற்ற ஈக்கள் அல்லது பறக்கும் ஜந்துக்களுக்கும் இதற்கும் வித்தியாசம்கண்டு பிடிக்கக்கூடிய யாதானும் ஓர் அடையாளம் இருத்தல்வேண்டும். இவ்விருகாரியமும் சாத்தியப்பட்டால்தான் மனிதன் அதனுடன் தொடர்ந்து செல்லக்கூடும். ஆதலின், ஆஸ்திரேலியன் என்ன யுக்திசெய்கிறான் பாருங்கள்! வெண்பஞ்சை உருட்டித்திரட்டிச் சிறு உண்டையாக்கி அதில் பிசின் தடவி அவ்வுண்டையைத் தேனீ முதுகில் ஒட்டவைப்பன். இப்பொழுது அவன் அதனைச் சுலபமாய்த் தொடர்ந்து செல்லலாமல்லவா? ஏனெனில், தேன் சுமப்பதுடன் பருத்தி உண்டையையும் அவ்வற்பஜெந்து தூக்கிச் செல்லவேண்டிவருவதால் அதிகமாய் ஓட அதனால் எப்படி முடியும்?

[இன்னும் வரும்]

M. கோபாலகிருஷ்ணையர்.

# ஸ்திரீரத்தினம்.

## 3-வது அதிகாரம்.

உத்தமசேனன் இப்படி மனதிற்குள் யோஜித்துக்கொண்டு செல்லும்போது இரவு சமீபிக்க தன்னோடு கூட யார் வருகிறார்கள் என்று கூட சுற்றிலும் பாராமல் வெகு வேகமாக வீடு நோக்கிச்சென்றான். இப்படிச் செல்லும்போது அதே தெருவில், இரண்டு ஸ்திரீகள் இவனைப் பின்தொடர்ந்து வந்தார்கள். இதற்குள் சந்திரனும் பிரகாசிக்க, இரண்டு ஸ்திரீகளும் பிறகு உத்தமசேனனை தாண்டி முன் செல்லும்பொழுது அவர்களில் சிறிய பெண் பின்னால் திரும்பி நிலவின் வெளிச்சத்தில் உத்தமசேனனை மிகுந்த ஆவலோடும், காதலோடும் கடைக்கண்ணால் பார்த்தாள். இதைக்கண்டு சுமார் 45-வயதுள்ளவளும் அவளுடைய தாதியுமான பெரியவள் என் கண்ணே! நீ ஏனிப்படி நடுங்குகிறாய்? இத்தெருவிலேயோ ஒருவருமில்லை, நமது வீடும் சமீபத்திலிருக்கிறது என்றாள்.

அச்சிறுபெண் பெரியவளைப்பார்த்து அடி சித்ரரேகா! இவரைத்தானடி உத்தமசேனன் என்று எல்லோரும் கூப்பிடுகிறார்கள்? பின்னால் வருகிறாரே, அவர் தானே?

சித்ரரேகா.—பத்மாவதி! நிரம்ப நல்லது; அவனும் மிக பலசாலியென்று கேள்விப்பட்டிருக்கிறோம். நீயும் இப்படி மெள்ள மெள்ள நடந்தால் அவனுடைய துணையை நிச்சயமாக எதிர்பார்க்கலாம்; அவன் வீடும் சமீபத்தில் தானிருக்கிறது. பத்மாவதி மறுபடியும் நடைதளர்ந்து பெருமூச்சுவிட்டாள்.

சித்ரரேகா.—அவன் அழகாய்த் தானிருக்கிறான். நீயும் அழகாய்த்தானிருக்கிறாய். அதற்காக நீ பெருமூச்சுவிட்டு என்னசெய்கிறது? அவன் உன்னை கலியாணம் செய்துகொள்ளப் போகிறானா? உன் அண்ணன் தான் அக்கலியாணத்துக்கு சம்மதிப்பனா? அவனோ பிரபு வமிசத்தில் என்பதற்குள்—.

பத்மாவதி.—சித்ரரேகா! உனக்கு இன்ன சமயத்தில் இன்னது சொல்லுகிறது என்று தெரிகிறதில்லை. நான் குழந்தைப் பருவமுதல் இதுவரையில் அவரிடத்தில் ஒரு பேச்சாவது பேசியிருக்கிறேனா? இது தெரிந்தும் நீ எப்படி என்னைப்பார்த்து இப்படியெல்லாம் சொல்லத்துணிந்தனை? நான் ஒருத்தி இருக்கிறேனென்றுகூட அவருக்குத்தெரியாதே. அவர்யோக்கியதை என்ன, அவரோ உத்தமசேன பிரபு, அவர் இந்த ஏழை பத்மாவதியை கனவிலாகிலும் நினைக்கப்போகிறாரா? வீண் எண்ணம்! வீண் எண்ணம்!



சித்ரரேகா.—அப்படியானால் நீ ஏன் அவரைப்பற்றி அடிக்கடி கனவு காண்கிறாய்?

பத்மாவதி பதிலொன்றும் சொல்லாமல் மறுபடியும் பெருமூச்சுவிட்டாள்.

சித்ரரேகா.—பத்மாவதி! பெண்ணாய் பிறந்து பிகுவில்லாமல் இப்படி இருக்கலாமா? நான் ஒருபோதும் இப்படியிருக்கமாட்டேன். என்னை என் புருஷன் இரண்டு தடவைக்குமேல் வருந்தியழைத்த பிறகுதான் நான் அவரிடம் சென்றேன்.

பத்மாவதி.—மறுபடியும் ஒன்றும் சொல்லவில்லை.

சித்ரரேகா.—பத்மாவதி! உனக்கு எப்படி உத்தமசேனன்பேரில் பிரியம் விழுந்தது? நீ அவனை அடிக்கடி பார்த்திருக்கக் கூட முடியாதே! அவனும் விஜயபுரத்துக்கு வந்து இப்பொழுது தானே இரண்டு வாரமாகிறது!

பத்மாவதி.—சித்ரரேகா! உனக்கு இவ்வளவு வயதாகியும் இது தெரியவில்லையே! நான் இவரை மூன்று வருஷத்துக்கு முன்னேயே நேசிக்க ஆரம்பித்து விட்டேனென்று உனக்கு சொல்லவில்லையா?

சித்ரரேகா.—என்னடி பத்மாவதி! 3 வருஷத்துக்கு முன்னால் என்கிறாயே. மரப்பாச்சி வைத்துக்கொண்டு விளையாடும் பருவத்திலா ஓர் புருஷனைக் கண்டு காதல்கொண்டாய்! என்ன ஆச்சரியமாயிருக்கிறது! இதுவும் கால வித்தியாசம் தான். பத்மாவதி! ஆனால் நீ உன் பாலியத்தை வீணாய்ப்போக்கவில்லை.

பத்மாவதி.—அவர் ஊரிலில்லாமலிருக்கும்பொழுது, அவர் பெயர் என் காதில் விழும்போதெல்லாம், அப்பெயரைக்கேட்டே நான் சந்தோஷிக்கவில்லையா! ஜனங்கள் அவரைக் கொண்டாடும்பொழுதெல்லாம் நான் சந்தோஷப்படவில்லையா! ஜனங்கள் அவரை இகழும்பொழுதெல்லாம் நான் வருத்தப்படவில்லையா! ஜனங்கள் அவர் சண்டையில் நிரம்பவும் தேர்ச்சியடைந்திருக்கிறார் என்று சொல்லும்பொழுதெல்லாம் என் கண்களில் ஆநந்தக்கண்ணீர் பெருகவில்லையா? இந்த 3 வருஷங்களும் எனக்கு 3 யுகங்களாக இருக்கவில்லையா? அவர் திரும்பி வந்த பிறகு இந்த 2 வாரங்களும் 2 நாள்கள் போலாகவில்லையா? நான் அடிக்கடிகோவிலில் அவர் என்னைப்பாராமல் போனபோதிலும் நான் அவரைப் பார்த்துக்கொண்டே ஒரு ஞாபகமுமில்லாமல் நிற்கவில்லையா? குதிரையின் மீது தெருவு வழியாகப் போகும்போது நான் ஓடி வந்து ஜன்னல் பக்கம் நின்று பார்த்ததில்லையா? இதுகளெல்லாம் எனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கப்போகாதா?

சித்ரரேகா.—நல்லது அவன் உன்மேல் ஆசை வைக்காவிட்டால் நீ என்ன செய்வாய்?

பத்மாவதி.—சித்ரரேகா! உனக்கு ஏன் ஒன்றுந் தெரியவில்லை? அவர்
என் பேரில் ஆசை வைப்பாரென்பதை உத்தேசித்தா நான் அவர் பேரில்
ஆசை வைத்தேன்; அவர் எப்படி இருந்தபோதிலும் இருக்கட்டும்; நான்மட்
டும் அவரை அடைந்ததாகவே எண்ணி சந்தோஷப்படுவேன். அவர் என்னை
நினையாமலிருக்கட்டும். அவருக்கு என்பேரில்இச்சை இல்லாமல்போகட்டும்;
அவர் என்னைப்பாராமலே இருக்கட்டும். அப்பொழுதும் நான் அவரைத்தான்
நினைப்பேன். ஆனால் நான் அவரைப்பற்றி எப்படி நினைத்திருக்கிறேனோ அப்
படி மட்டும் அவர் இல்லாமல் போனால் அப்பொழுது தான் என காரியம்
கெட்டுப்போனதாகும். என் வாழ்நாளெல்லாம் வீண்நாளாய்ப் போய்விடும்
என்றாள்.

சித்ரரேகைக்கு இப்படிப்பட்ட எண்ணங்களில் மனது செல்லவில்லை.
அவள் ஒருவேளை தன் சிறுவயதில் எப்படி இருந்தபோதிலும் இப்பொழுது
இவளுடன் தானும் சந்தோஷத்தை அநுபவிக்க முடியாதவளாய்வயதுசென்
றதினால் விரக்தியுள்ளவளாயிருந்தாள். ஆகிலும் பாலியத்தின் உபத்திரவம்
இப்படித்தான் இருக்குமென்று ஊகித்து தன் அழகான பத்மாவதிக்கு சீக்கி
ரத்தில் ஓர் அழகு வாய்ந்த புருஷன் வந்து அவளுடைய வீண் எண்ணங்களை
நிறைவேற்றுவானென்று நினைத்து திருப்தி யடைந்து ஒன்றும் பேசாமல்
கூட சென்றாள். இப்படி கொஞ்சதூரம் சென்று இரண்டு ரஸ்தாக்கள் ஒன்று
சேருமிடத்துக்கு போகிறதற்குள் அனேகம் குதிரைகள் காலடி சப்தமும்,
சிரிக்கும் குரல்களும் காதில் விழுந்தன. உடனே குறுக்கு ரஸ்தாவை நிமி
ர்ந்து பார்க்க, தீவர்த்தி வெளிச்சத்தோடு 7, 8 ஜனங்கள் நிற்குணனுடைய
கொடியோடு வந்தார்கள். அக்காலத்தில் விஜயபுரத்தில் பிரபுக்கள் எதாவது
சண்டை, கொள்ளை அல்லது ஸ்திரீ அகப்படுமென்று ராத்திரி வேளையில்
இப்படி புறப்படுகிற வழக்கம். இவர்கள் இருவரும் அப்படிப்பட்ட கூட்டத்
தைக் கண்டார்கள். உடனே சித்ரரேகா பயந்து பாதி ஓடத்தலைப்பட்டு ஐ
யோ! பத்மாவதி! நாம் என்னசெய்வோம்? நாம் இதுவரையில் முட்டாள்
தனமாக, கலாவதி வீட்டில்பேசிக்கொண்டிருந்து விட்டோமே. ஓடிவா என்
கண்ணே! ஓடிவா. இல்லாமற் போனால் இன்றைக்கு நாம் அவர்கள் கையில்
அகப்படவேண்டு மென்றாள். ஆனால் சித்ரரேகை சொன்ன புத்திமதி அதிக
தாமதத்தில் வந்தபடியால் இவர்கள் ஓட ஆரம்பிப்பதற்குள் இவர்களை அச்
சிப்பாய்கள் கண்டு விட்டார்கள். உடனே ஒரு நிமிஷத்தில் அவர்கள் இவர்
கள் இருவரையும் சூழ்ந்துகொண்டார்கள். ஒரு முரடன் சித்ரரேகையை
பிடித்து அவள் அழகைப் பார்க்கவேண்டு மென்று முகத்தை நிமிர்த்திப்
பார்க்க, கிழவியா யிருக்கக்கண்டு வெறுப்படைந்து அவளை சுவற்றில் வை
த்து மோத எல்லோரும் இடி விழுந்தாப்போல சிரித்தார்கள். அவர்களில்
ஒருவன், சித்ரரேகையை பிடித்தவனைப் பார்த்து அண்ணா! தங்களுக்கு
எங்கு சென்றாலும் அழகிய முகமாகவே அகப்படுகிற அதிர்ஷ்ட மொன்
றிருக்கிறதென்றான். மற்றொருவன் ஆமாம் நேற்றுத்தானே நமது அண்ணா,
60 வயதுள்ள ஓர் சிறுபெண்ணை கண்டு பிடித்தார். வேறு ஒருவன், இவ்வ
ளவு தானா உனக்குத்தெரிந்தது. பிறகு நமது அண்ணா அப்பெண்ணைப் பார்
த்து அவள் 16 வயதாகவிருக்கவில்லையென்று வருத்தப்பட்டு அவள்அழகை
அதிகப்படுத்தும் பொருட்டு அவள் முகத்தை கத்தியால் வெட்டவில்லையா!

இதற்குள் தலைவன் அவர்களைப்பார்த்து முட்டாள் பயல்களே இரை
யாதே யுங்கள், இங்கு பாருங்கள் என்று சொல்லி இருவர் கையில் அகப்



பட்டு மான்போல் நடுங்கிக்கொண்டிருக்கிற பத்மாவதியை தான பிடித்துக்
கொண்டு தீவர்த்தியை அவள் முகத்துக்கு நேரே கொண்டு வரச்சொல்லி
பார்த்து, ஆகா என்ன அழகு! என்ன பார்வை! பெண்ணே! நீ சற்று என்னை
நிமிர்ந்து பார்க்கக்கூடாதா? நீ எவ்வளவு அதிர்ஷ்டசாலியா யிருக்கிறா யென்
பது உனக்கு தெரியவில்லை. உன்னைப்பார்த்து ஆசைப்படுகிற நான் யார்
தெரியுமா? நான் தான் நிற்குண பிரபு என்று சொல்ல, பத்மாவதி கோபித்
துக்கொண்டு ஐயா என்னைத் தொடாதேயுங்கள், வேண்டாம், இந்த அக்ர
மம் வீண் போகாது. என்னைச் சேர்ந்தவர்கள் அனேகரிருக்கிறார்கள்
என்றாள்.

நிற்குணன் ஆகாஇரண்டு பேர்களைக் கூப்பிட்டு இப்பெண்ணை தூக்
கிக்கொண்டு சீக்கிரம் அரண்மனைக்கு கொண்டுவரும்படி உத்திரவு செய்
தான். ஆனால் பத்மாவதி கூச்சல்போடு முன்னே இவளுக்குத் துணைவந்து
விட்டது. உத்தமசேுனன் திரும்பி வரும்பொழுது சித்ரரேகை அவன்
காலில் விழுந்து ஐயா! பிரபுவே எங்களை காப்பாற்றவேண்டும். நாங்கள் உங்
கள் வமிசத்துக்கு வேண்டியவர்கள். விசித்ரவ பிரபுவின் தயவில் தான் நாங்
களிருக்கிறோம். எங்கள் பத்மாவதியை எப்படியாவது காப்பாற்ற வேண்டு
மென்று சொல்ல,

உத்தமசேனன் —அம்மா! எனக்கு வேண்டியவர்களென்பதை எதற்
காக சொல்லவேண்டும். அவள் பெண் என்பதே போதுமான காரணமா
யிருக்கிறது. அதிலும் இந்த அக்ரமம் செய்கிறவன் என் விரோதியாகிய நிற்
குணன் நீ பயப்படவேண்டாமென்று சொல்லி கூட்டத்திற்குள் பாய்ந்து
ஓட நிற்குணன் ஆள்கள் ஒதுங்கி நின்றார்கள். ஒரு நிமிஷத்தில் உத்தமசேனன்
பத்மாவதியை பிடித்து நின்ற ஆள்களில் ஒருவனை கீழே தள்ளிவிட்டு பத்மா
வதியை இழுத்து அவள் இடுப்பில் தனது இடது கையைப்போட்டு அணைத
துக்கொண்டு தன் கத்திமுனையை கீழ் நோக்கிவைத்துக்கொண்டு நிற்குணன்
எதிரில் நின்றான். நிற்குணனுக்கு திடீரென்று இவன் தோன்றி இப்படி செய்
ததில் ஒன்றும் தோன்றவில்லை.

உத்தமசேனன்.—(நிற்குணனை பார்த்து) ஐயா நிற்குணன் பிரபுவே!
இந்த அக்கிரமமான காரியத்தை நீரா செய்யத்துணிந்தீர்! உமக்கு அவமான
மாக விருக்கவில்லையா! விஜயபுரத்து ஜனங்கள் முழுவதும் நமக்கு விரோத
மாக கிளம்பி விடுமே. நீங்கள் பயமற்று இனி விஜயபுரத்தில் குடியிருக்கவே
ண்டுமானாலும், நீங்கள் விஜாரமில்லாமல் இரவில்தூங்கவேண்டுமானாலும், வி
ஜயபுரத்து ஸ்திரீயை தொடாதேயும். இப்படி அக்கிரமம் செய்தல்லவோ
ராவணன் கூட மாண்டான். நீர் எம்மாத்திரம்? நீர் இப்படி செய்தால் உமது
வமிசத்தாரின் இரத்தம் இத்தெருவில் வாய்க்கால்போல ஓடுவது நிச்சயம்.ஆத
லால் இந்த அக்ரமம் உமக்கு அழகல்ல. இதை விட்டுவிடும். உத்தமசேனன்
பேசின கம்பீரமும் அவனுடைய உருக்கமான வார்த்தைகளும் நிற்குணனு
டைய ஆள்களைக்கூட இரக்கப்படும்படியும் தாங்கள்செய்த அக்கிரமத்தைப்ப
ற்றி வருத்தப்படும்படியும் செய்தது. ஆனால் நிற்குணனுக்கு மட்டும் மனதில்
தன்து குற்றம் தெரியவில்லை. இவனுக்கு அழகிய பெண்ணைக் கண்டவுடனே
ஆசை யுண்டாகிவிட்டது. மேலும் இப்படிப்பட்ட அக்கிரமங்கள் அவனுக்கு
சகஜமாயிருந்தன சநதாரணமாகவே விசித்ரவன் வமிசத்தாரைக் கண்டால்.
ஆக்கிரப்படப்பட்டவன் இப்பொழுது நேராக தான் பிடித்த பெண்ணை தன்
னெதிரிலேயே விடுவிக்க முயலும்போது கேழ்க்கவும் வேண்டுமோ? உடனே

உதடு துடிக்க நிற்குணன் உத்தமசேனனைப் பார்த்து அடே முட்டாள்! நீ யாரிடத்தில இந்தக் கதைகள் பேசுகின்றாய். உன் உயிரே என் கையிலிருக்கும் பொழுது நீ எப்படி இப்பெண்ணைக் காப்பாற்றப்போகிறாய். என்னை யேமாற்றி நீ கொண்டுபோகலாமென்று எனக்கு நீதி பேசுகிறாயா. வேண்டாம் இவளை விட்டுவிடு உன் கத்தியை கீழேபோடு நேராக உன் வீட்டுக்குப்போ இல்லாமற்போனால் நீ இப்பொழுதே இறந்துபோவாய்; உத்தமசேனன் இதற்குள் பத்மாவதியை மெள்ள ஓர் சுவரின் பக்கத்தில் கொண்டுபோய் வைத்து அவளுக்கு முன் நின்று மறுபடி நிற்குணனைப்பார்த்து நிற்குண பிரபுவே இது நல்ல சமயம். நான் சொல்வதைக்கேளும். ஜனங்கள் உம்மை தூஷிக்கும்படி வைத்துக்கொள்ளாதேயும். நான் ஒருவன் நீங்கள் 8 பேர்கள். அப்படி நீர் சண்டைக்கு வரும்பக்ஷத்தில் நான் ஒரு கூச்சல் போட்டால் ஆயிரக்கணக்காக என் சைனியங்கள் வந்துவிடுவார்கள். நீர் என் ஜனங்கள் மத்தியிலிருக்கிறீர். ஜாக்ரதை ஒரே கூச்சலில் அவர்கள் வந்துவிட்டால் அப்புறம் நீர் தப்புவது கஷ்டம் என்றான்.

இதற்குள் நிற்குணன் ஆள்களில் ஒருவன் அவனிடம் வந்து ரகசியமாக பிரபுவே உத்தமசேனன் சொல்வது மெய்தான். நாம் இன்றைக்கு வெகுதூரம் வந்துவிட்டோம். விசித்ரவன் அரண்மனை சமீபத்திலிருக்கிறது. மேலும் இன்றைய சாயங்காலம் 100 சிப்பாய்கள் புதிதாய் வந்திருக்கிறார்கள் என்றான். நிற்குணனன் கோபம் பொறுக்கமாட்டாமல், 100 பேர் சமீபத்தில் இருந்தால் கூட என் ஆள்கள் இருக்கும்போதே இந்த அக்கிரமத்தைச் சகிக்கமாட்டேனென்று சொல்லி ஒரே பாய்ச்சலாய் பாய்ந்தான். உத்தமசேனன் இவனை குறிப்பாய் பார்த்திருந்தபடியால் நிற்குணன் கத்திவருவதற்குள் அதை தடுத்து விசித்ரவன் ஆள்களேஓடி வாருங்கள் என்று பலமாக கத்தினான். உத்தமசேனன் புத்திமானாதலால், காரியமில்லாமல் நிற்குணனிடம் இதுவரையில் தாமதிக்கவில்லை. ஏனென்றால் இவன் நிற்குணனிடம் பேச ஆரம்பிக்கும் பொழுதே இரண்டு சிப்பாய்கள் குதிரை மீது வருவதை கண்டுகொண்டு தன் ஆள்களென்பதை தெரிந்து கொண்டான். உத்தமசேனன் பத்மாவதியை மெதுவாய் சுவற்றின்மேல் சாற்றி, தான் முன் நின்று, தன்மீது விழும் அடிகளை தடுத்துக்கொண்டு நின்றான். ஆனால் நிற்குணனுடைய சிப்பாய்கள் இவனைத்தொட்டால் அனர்த்தம் விளையுமென்று பயந்து மேலுக்கு அடிப்பதாக பாவனைகள் செய்து யாராவது உத்தமசேனனுக்கு ஒத்தாசையாக வருவதைக்கண்டால் ஓடுவதற்கு தயாராய் சுற்றிலும் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். முதல் முதல் கத்திகளின் ஓசை காதில் படவே, சித்ரரேகை பயந்து, விசித்ரவ பிரபுவே! காப்பாற்றவேண்டும் என்று கத்திக்கொண்டு, அவர் வீட்டுவழியாக தர்மசீலன் வீட்டைநோக்கி ஓட ஆரம்பித்தாள். இதற்குள் குதிரை வீரர்கள் இருவரும் சாவகாசமாகப் பேசிக்கொண்டு அத்தெருவழியே வந்தார்கள். அவர்களில் ஒருவன் நல்லது துன்முகா, நீ இந்த வீண் கனவு காண்கிற தர்மசீலனிடத்தில் வைத்திருக்கிற பயத்தைப் பார்த்தால் உன்னை இவ்விடத்திலேயே நிறுத்திவிடுகிறது நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது. இருக்கட்டும். இந்த தர்மசீலனிடம் உண்மையாக உனக்குத் தெரிந்தமட்டும் எதாவது சாமர்த்தியமும் பராக்கிரமமு மிருக்கிறதா ?

துன்முகன்.—யஜமான் அவனிடத்தில் என்ன சக்தி இருக்கிறது. இவன் ஜனங்களுக்கு சந்தோஷத்தை யுண்டுபண்ணுகிறான். மற்றபடி பிரபுக்



கள் இவனை இகழ்கிறார்கள். சிப்பாய்கள் வைத்துக்கொள்ள இவனுக்குப் பணம் எது?

பெரியவன்.—ஆனால் இவன் ஜனங்களை வஸ்யப்படுத்தி யிருக்கிறானா?

துன்முகன்.—அது மட்டும் ஒரு சாமர்த்தியம் அவனிடத்திலிருக்கிறது. அவன் பேச ஆரம்பித்தால் விஜயபுரமே அவனிடத்தில் அடங்கியிருக்கிறதுபோல தோன்றுகிறது.

பெரியவன்.—எப்பொழுது ஜனங்களுக்கு பிரபுக்களைக் கண்டால் ஆகவில்லையோ, எப்பொழுது சிப்பாய்கள் கூலிக்கு அகப்படுகிறார்களோ அப்பொழுது ஜனங்கள் நிச்சயமாக ஜயிக்கலாம். இந்த தர்மசீலனை நான் சாதாரணமான மனிதனென்று நினைக்கவில்லை. இவனை ஜாக்ரதையாக பார்த்து அறியவேண்டும். இருக்கட்டும் என்ன சப்தம் கேழ்க்கிறது? ஓகோ அதிலும் நமது ஜனங்கள் குறைவாயிருக்கிறதே.

துன்முகன்.--விசித்ரவன் என்று கூட சப்தம் கேழ்க்கிறது. யஜமான் என்னை மன்னிக்கவேண்டும் நான் அவர்கள் ஒத்தாசைக்கு சென்று வருகிறேன்.

பெரியவன்.—நல்லது உனக்கு கூலி வாங்குவதற்குத் தான் வேலை வேண்டுமே. சென்றுவா. சற்றுநில் நானும் வருகிறேன் எனக்கும் வேடிக்கை பார்க்கவேண்டும்.

உத்தமசேனன் இதுவரையில தன்னால்கூடியமட்டும் சிரமப்பட்டுப்பார்த்துக் களைத்துப்போய் நின்றான். நிற்குணனும் தன் ஆள்களுடைய அதைரியத்தைக் கண்டு மனதிற்குள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது அவன் ஆள்களில்இருவர் ஓடுங்கள் ஓடுங்கள்சத்துருக்கள்வந்துவிட்டார்கள். நாம் அகப்பட்டுக்கொண்டோமென்று சொல்லி ஓடினார்கள். மற்ற பேர்கள் யஜமானனுடைய உத்திரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கையில், வந்த இருவர்களில் தலைவன் கூட்டத்திற்குள் புகுந்து ஐயா, பிரபுக்களே! சண்டையைமுடித்து விட்டீர்களாஎன்ன? அப்படியானால் மறுபடியும்நடக்கட்டும். ஆ! ஆ! 6 பேருக்கு ஒருவரா எதிர்த்து நிற்கிறது!! அப்பொழுது நீங்கள் நியாயத்தை யோஜித்து எங்களுக்கு கார்த்தது சரிதான். நாங்கள் இருவரும் உத்தமசேனனோடு சேர்ந்து மூவராகிறோம். மறுபடியும் சண்டை ஆரம்பிக்கலாமென்றான். நிற்குணனுக்கு கோபம்பிறந்து, யாரடா இவ்வளவு அலக்ஷ்யமாக பேசுகிறவன்? நீ யாரிடம் இவ்வளவு காலமாக பேசுகின்றனை தெரியுமா; நான் நிற்குண பிரபு என்று தெரியாதுபோலிருக்கிறது. ஜாக்ரதை நீயார் எனவே வந்த தலைவன் நான் இத்தேசம் முழுவதும் பெயர்பெற்ற கார்த்த வீரன் என்று அலக்ஷ்யமாய் மறுமொழி சொன்னான். அக்காலத்தில் கள்ளர்களில் சூரனும், யுத்தத்தில் தலைவனும் அத்தேசத்து சிப்பாய்களுக்கெல்லாம் யஜமானனுமுள்ள கார்த்தவீரன் என்னும் பெயர் காதில் படவே நிற்குணன் பயத்தால் நடுங்கினான். அவன் ஆள்கள் சித்தம் ஸ்வாதீனமில்லாமல் உளர ஆரம்பித்தார்கள். உடனே உத்தமசேனன் நிற்குணனைப் பார்த்து நிற்குண பிரபுவே ! என்ன சொல்லுகிறீர் ? நீர் இப்பொழுது என் கையில் அகப்பட்டு விட்டீர் அதோ பாரும் என் ஜனங்கள் வருகிறார்கள் என்றான். யதார்த்தமாகவே விசித்ரவன் அரண்மனையிலிருந்து தீவர்த்தி வெளிச்சத்தோடு ஒரு கூட்டம் புறப்பட்டது.

உத்தமசேனன்.—பிரபுவே! இன்றைக்கு இவ்வளவு அக்கிரமம்போதுமா னது நீர் வீட்டைப்பார்க்கப்போகலாம் என்றவே கிற்குணன் ஒன்றும் பதில் சொல்லத்தோன்றாமல் அவமானத்தையடைந்து வீட்டைநோக்கிச்சென்றான். உத்தமசேனன் பிறகு தன் ஞாபகமே இல்லாமலிருந்த பத்மாவதியை தூக்கி மூர்ச்சை தெளிவிக்க பிரயத்தனம் செய்து கொண்டே, திரும்பிப்பார்த்து, கார்த்தவீரரே தாங்கள் இன்றுசெய்த உபகாரத்துக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன் ஆகிறது எப்படியாகுமோ,

கார்த்தவீரன்.—இதோ ஒரு பெண்ணல்லவோ இச்சண்டை வந்திருக்கிறது. அது தான் கிற்குணனுடைய மனதை கவர்ந்துகொண்டு அவனை செல்லவிட மாட்டேனென்றது.

உத்தமசேனன்.—நீர் இந்த விஷயத்தில் அப்படி சொல்லுவது சரியல்ல. நான் ஓர் ஆட்டை ஓநாயின் வாயிலிருந்து தப்பவைத்திருக்கிறேன் என்று சொன்னான்.

யதார்த்தமாகவே தான் நல்ல எண்ணத்தோடு செய்ததை ஜனங்கள் வேறுவிதமாக நினைக்கப்போகிறார்களோ என்கிற பயம் உத்தமசேனனுக்கு இருந்தது. ஆகலால் பத்மாவதியை முதலில் தன் வீட்டுக்கு கொண்டுபோக பயந்தான். ஆகிலும் அவன் வேறுவிதமாக செய்ய முடியவில்லை. பத்மாவதியோ இன்னமும் மூர்ச்சை போய் கிடக்கிறாள். உத்தமசேனனுக்கு அவள் இன்னார் பெண் என்றும் அவள் வீடு இவ்விடமிருக்கிறதென்றும் தெரியாது. அவளைத் தெருவில் விட்டுப்போவதும் சரியாகத்தோன்றவில்லை. சிநேகிதையோ முன்னமேயே ஓடிவிட்டாள். பத்மாவதியை தான் காப்பாற்றியதினிமித்தம் அவனுக்கு அவள்பேரில் பிரியம் வந்தது. ஆகலால் பக்கத்திலிருப்பவர்களுக்கு சண்டைக்கு காரணத்தையும் தன்னுடைய மனக்குழப்பத்தையும் சொல்லி நிவர்த்திக்காரர்களை முன் செல்லச்சொன்னான். பிறகு கார்த்தவீரனைப் பார்த்து உத்தமசேனன் கார்த்தவீரரே! என் வீட்டில் வந்து தாங்கள் இரண்டு நாளாவது இருக்கவேண்டும்.

கார்த்தவீரன்.—உத்தமசேன பிரபுவே! நான் சமயம் பார்த்து தங்கள் வீட்டுக்கு வருகிறேன். இப்பொழுது எனக்கும் அவசியமான காரியமிருக்கிறது. நான் சென்று வருகிறேன். விஜயபுரத்தில் விஸ்தீரணத்துக்கு தகுந்த ஜனங்கள் இல்லாததால் அனேகம் தெருக்களில் கூட்டமே இல்லை. ஜனங்களுமில்லை. இதனால் தான் பிரபுக்கள் அவ்விடங்களில் தாராளமாக தங்கள் அரண்மனைகளை கட்டிக்கொண்டு சுற்றிலும் தங்கள் சுற்று ஜனங்களுக்கு வீடுகட்டிக்கொடுத்து ஒவ்வொரு அரண்மனையையும் ஒவ்வொரு ராஜாங்கம்போல வைத்திருந்தார்கள். விசித்ரவ பிரபு அரண்மனைக்கு எதிரில் உத்தமசேன பிரபுவின அரண்மனை யிருந்தது. இவரைக் கண்டவுடன் வாசல் பெரிய கதவுகள் திறக்கப்பட்டன. உத்தமசேனன்மேல் மாடியிலேறி அங்கே தகுந்த சித்திரப்படங்களுடன் சிங்காரிக்கப்பட்ட ஓர் அறையில் பத்மாவதியை படுக்க வைத்தான். விளக்குக்கொண்டுவாருங்கள் என்று கூவவும் விளக்குகள் கொண்டுவரப்பட்டன; உத்தமசேனன் ஆள்களைப் போகச்சொல்லி விட்டு தானும் நித்திரைசெய்யச் சென்றான். அவள் அழகைப் பார்த்தவுடன் இவனுக்கு அவள் பேரில் பிரியமும் அவளைக் காப்பாற்றினதில் சந்தோஷமும் திருப்தியும் உண்டாயிற்று.

ஸ்ரீ S. இராமசுவாமி ஐயர்.

## அன்னையை மறவேல்.

அன்னையை மறவேல் அன்னையை மறவேல்;
இளமை முதலாய் இற்றைநாள் காறும்
நின்னைக் காத்த அன்னையை மறவேல்;
நின்சுக மென்றும் தன்சுகம் என்றும்
நீதுய ருறுங்காற் றான்றுய ருழன்றும்
கண்ணீர்பெருக்கிக் கவலை மீதூரக்
குழவியைக் காமின் குலதெய்வங் காளெனத்
தொழுது வணங்கித் துயரிற் றுடிக்கும்
அன்னையை மறவே லன்னையை மறவேல,
விளங்குபுன் னகையும் மிழற்றிய மழலையும்
கண்டுங் கேட்டுங் களித்தவண் மறவேல்;
செல்வக் குமரன் கல்வியிற் றேர்ந்தான்
என்னச் சான்றோர் இசைப்பது கேட்பப்
பெற்ற பொழுதினும் பெரிதி துவக்கும்
நற்றாய் மறவேல் நற்றாய் மறவேல்;
இம்மையும் மறுமையும் என்றெமக் கருளுவன்
எம்மிளங் குமரனென் றிறும்பூ தடையும்
அன்னையை மறவேல் அன்னையை மறவேல்;
உணவுஞ் சுருங்கி யுடலும் மெலிந்து
நடைதடு மாறி நன்மொழி குழறும்
தருணம் வந்தாற் றாயினை மறவேல்
பெற்றமனம் பித்தெனப் பெட்புறக் காட்டிக்
குற்றமே செய்யினும் கொடுஞ்சொன் மொழியாதே
வாழையடி வாழையாய் வாழ்கென வாழ்த்தும்
அன்னையை மறவேல் அன்னையை மறவேல்;
அறுசுவை யார்ந்த அறுசில் வட்டித
தையா அருந்தென் றன்பின் உரைக்கும்
செல்வ மொழியின் திறமுரைப் பரிதால்;
அன்னையை மறவே லென்றும்
முன்னறி தெய்வமாம் அன்னையை மறவலே.

M. S. நடேசய்யர் பி–ஏ.

# முன்காலத்து இந்து ஸ்திரீகளுக்கும் தற்காலத்து ஸ்திரீகளுக்குமுள்ள தாரதம்மியம்.

## I.

முன்காலத்தில் ஸ்திரீகள் அதிகமாக சூதுவினை அறியமாட்டார்கள். கணவனிட்ட வேலைகளைத் தவிர வேறு இதர வியாபாரங்களில் பிரவேசிக்காமல் கணவனுக்கு சிசுருஷை செய்து கொண்டு எப்பொழுதும் காலத்தையும் கணவனுடன்போக்குவாள். சாதாரணமாக அவர்களுக்கு கலியாணம் செய்யும்பொழுது கணவனுக்கு குறைந்தது வயது 30. 60 வயது கிழவிகூட 10-வயதுள்ளபையனைக் கண்டால் வெகு மரியாதையுடன் பேசாமல் அவன் வந்ததும் எழுந்திருந்து நிற்கிறது வழக்கம் வயது முதிர்ந்த கிழவிகள் கூட 10, 15 வயதுள்ள ஆண்பிள்ளையுடன் பேச நிரம்பவும் லஜ்ஜை படுவார்கள். ஸ்திரீகள் அணியும் ஆபரணங்களின் மதிப்பு பெரிய சீமானுடைய மனைவியாயிருந்தபோதிலும் 400, 500 ரூபாய்க்கு மேலிரா. ஸ்திரீகள் தரிக்கும் உடைகள் பெரியமனிதர்கள் வீட்டிலும் விலையுயர்ந்ததாயிருக்கமாட்டா. ஒரு ஏழை சம்சாரிக்கு 4 கன்னிகைகளிருந்தால் குறைந்த பட்சம் பெண் ஒன்றுக்கு 300, 400 ரூபாய் கையில் வாங்கிக்கொண்டு தான் பெண்களை கலியாணம் செய்துகொடுத்து தனிகனாவான். சாதாரண ஜனங்கள் வீட்டில் உபயோகப்படுத்தின கலங்கள் மண்பாத்திரமே. தண்ணீர் தூக்கி வரும் குடம் முதல் மண்பாத்திரம் தான். ஏழைகள் பிராமணர்களானாலும் கம்பங்கூழ் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். கணவனுடைய பெற்றோர்கள், உடப்பிறந்தாள் வீட்டிலிருந்தால் நாட்டுப்பெண்ணிருக்கிற யிடமே தெரியாமலிருந்துகொண்டு தன் வேலைகளை செய்துகொண்டிருப்பாள். வீட்டில் சுபாசுபங்கள் நடக்கும் காலத்தில் விசேஷமான விருந்தினர்கள் வந்திருந்தாலும் பெண்டுகளே சமையல் செய்து இலை போஜனம் பரிமாரிக்கொண்டு வந்தார்கள். வீடுகளில் பசு, எருமை வைத்து சம்ரக்ஷணை செய்து கால்நடைகளுக்கு வேண்டிய பில்லு பிடுங்கிக்கொண்டு வந்து போஷணைசெய்து கன்றுவிட்டு பால்கறந்து பாலைப் பொரைக்குத்தி தாழியில் பெரிய மத்து பிடித்துக் கடைந்து வெண்ணெய் வேறு தயிர் வேறுபிரித்து வெண்ணெயை உருக்கி நெய்யையும் தயிரையும் வீட்டுக்கு உபயோகப்படுத்துவார்கள். பசு எருமைபோடும் சாணிகளை முட்டைதட்டி அடுப்புக்கு உபயோகப்படுத்துவார்கள். வீட்டுக்கு புழுங்கலரிசி வேண்டுமானால் நெல்லைப்புழுக்கியும் பச்சரிசி வேண்டுமானால் நெல்லை இரண்டு மூன்று தடவை நன்றாய் வெய்யலில் காயவைத்தும் குத்தியும், புடைத்து உமி வேறு, தவிடு வேறு அரிசிவேறாகவும் பிரித்து அரிசியை மறுபடியும் கொழித்து கல்லுமட்டை முதலியவைகளை நீக்கியும் வெகு ஜாக்கிரதையாய் அக்கரையுடனும் வேலைசெய்து அரிசி பழகும்படி பெரிய மண்பானைகளில் எடுத்து வைப்பார்கள். முன்காலத்து ஸ்திரீகளுக்கு எழுதப்படிக்கத் தெரியாது.

தற்காலத்திலோ பெண்களுக்கு நாகரீகம் மேலிட்டு மேலே சொன்னவைகளெல்லாம் அநேகமாக முற்றிலும் மாறுபாடாய் நடக்கின்றன. ஒவ்



வொரு பெண்களும் அவரவர்கள் சுயநயத்தைப் பாராட்டி அவரவர்களுக்குச் சம்பந்தப்பட்டவைகளை மாத்திரம் கவனிக்கிறார்களே தவிர ஜனோபகாரத்தை கவனிக்கிறதேயில்லை. கணவனைத்திருணமாக பாவித்து அவர் சொல்லுகிறதை கேழ்க்கிறதே கிடையாது. புருஷன் ஒருநியாயம்சொன்னால் பெண்டுகள் வேறு குதர்க்கமான ஒரு நியாயம் சொல்லி கணவன் வார்த்தைக்கு மதிப்புவைக்காமல் தள்ளிவிடுகிறார்கள். பெண்டுகள்கொடுக்கல்வாங்கல் லேவாதேவி வகையராக்களை கணவனுக்குத் தெரியாமல் சுயமாக வைத்துக் கொள்ளுகிறார்கள். பெண்டுகளை பாலியத்தில் 2, 3, 4 வயதிலேயே 9,10,12 வயதுள்ள பையன்களுக்கு கலியாணம் செய்துகொடுத்துவிடுகிறார்கள். தெய்வசங்கல்பத்தால் அப்படி கலியாணம் செய்துகொண்ட பையன் தேகவியோகமாகும் பட்சத்தில் குழந்தையில் நேரிட்ட விதவையின் கதி எப்படி. ஐயோ! பாவம்! கவர்ன்மெண்டார் இக்கொடுமையான வழக்கத்தை விலக்க முயற்சி எடுத்துக்கொள்ளுகிறதில்லையே! தகுந்த புத்தி தெரிந்து யோக்கியதையும் அடைந்திருக்கும பிள்ளைகளை கூட ஆண்பிள்ளை யென்று கவனியாமல் கிழவியான தாய்களுக்கு ஆண்பிள்ளை அடங்கி கைகட்டி பதில் சொல்லும்படி அதிகாரம் பண்ணுகிறார்கள். தற்காலத்தில் பெண்டுகளுடைய ஆபரணமே ஒரு குடும்பத்திற்கு சொத்தாயிருக்கிறதே தவிர முன்காலத்தைப்போல பூஸ்திதியை விசேஷமாக சம்பாதிக்கிறதில்லை. அப்படி ஜங்கம சொத்தாயிருக்கிறபடியினால் அந்த சொத்தை மக்களுக்கும் தாயாதிகளுக்கும சேரவொட்டாமல் மோசம் செய்ய ஒருவிதமான ஹேதுவாக யிருக்கிறது. நிரம்பவும் கஷ்டப்படுகிற ஏழைகள் தவிர மற்றவர்கள் கிரகத்தில் மண்பாத்திரத்தை உபயோகப்படுத்தாமல் செம்பு, பித்தளை வெங்கலத்தினால் செய்த பாத்திரங்களை விசேஷமாக உபயோகப்படுத்துகிறார்கள். மிக ஏழைகள் வீட்டிலும நெல்லரிசி சோறு சாப்பிடுகிறார்களே தவிர கம்பங்கூழ் சாப்பிடுகிறதில்லை. நாகரீகம் விருத்தியாக யாககாலையில் வாலிபர்கள் பழையசோற்றைப் புசியாமல் ஆப்பமென்றும் புட்டென்றும் தோசை யென்றும் உப்புமா வென்றும் காப்பி யென்றும் டீ யென்றும் செய்து கஷ்டப்படுகிற ஜனங்கள் கூட சாப்பிடுகிறார்கள். பெண்டுகள் மாமியாருக்கும் மச்சினனுக்கும், மருமகனுக்கும் மரியாதை செய்கிறதே கிடையாது. 4 மச்சினர்கள் 2 நாத்தனார்களிலிருக்கிற ஒரு பெரிய குடும்பத்தில் ஒரு நாட்டுப்பெண் வந்து சேர்ந்தால் நாத்தனார்கள் மாமியார் முதலானவர்களுடன் சண்டை சச்சரவு செய்து குடும்பத்தைக் கலைத்து சின்னா பின்னமாக்கி அவள் புருஷனுக்குக் கிடைக்கக்கூடிய சொத்தைப் பிரித்துக்கொண்டு தனிக்குடித்தனம் செய்ய எத்தனிக்கிறாள். மேலும் அவளுக்கு மேலேயிருந்து ஹிதாஹிதங்களைசொல்லி அவளுடைய தப்பான காரியத்தை கண்டித்து கெட்ட நடவடிக்கையிலிருந்து நல்ல நடவடிக்கைக்குத் திருத்தி நல்ல புத்திமதிகளைச் சொல்லி பந்துக்கள் அன்னியர்கள் அவள் வீட்டைச்சேர்ந்தால் அவள்நடக்கவேண்டிய மரியாதை ஒழுக்கங்களை கற்பிக்க யிடம்கொடாமல் மாமியார்முதலானவர்களை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டு தனக்கு ஹிதம் சொல்லாதவர்களும் தான் செய்கிற குற்றங்களை சகித்தும் தான் நடக்கும் கெட்ட நடக்கையிலேயே நடக்க யிடம்கொடுக்கிற தன் மனுஷாளாகிய தாயார் உடப்பிறந்தாள் முதலானவர்களை கொண்டுவந்து வைத்துக்கொள்ளுகிறார்கள். இத்தனைக்கும் புருஷன் உடன்படுகிறான். அப்பொழுது புருஷனைப் பெற்று வளர்த்து படிப்பு சொல்லிக்கொடுத்து நல்ல ஸ்திதியில் கொண்டுவந்த தாய் இந்த கூற்றைப்பார்க்க

அவள் மனது எப்படி கொதிக்குமென்பதை இதை வாசிப்பவர்கள் யோசியுங்கள்.

வரதராஜ அய்யங்கார் பி-ஏ-பி-எல்.

## காலமறிந்து குற்றங்கடிதல்.

(44-வது பக்கத் தொடர்ச்சி.)

தாயும் மகனும் ஒன்றும் பேசாமலே கைகோத்துக்கொண்டு வீட்டுக்குப் போனார்கள். வீட்டுக்குப் போய் தாய் தனியே அந்தப் பிள்ளையை ஒரு அறைக்குள் அழைத்துக்கொண்டுபோய்க் கதவை மூடிக்கொண்டாள்; அங்கே அவள் அம்மகனை என்ன அடித்தாளோ அது ஒருவர்க்கும் தெரியாது; இவ்வாறு அந்தப்பையன் பாவை திருடிக்கொண்டுவந்த வெட்கக்கேடான செய்தியை அவர்கள் அப்புறம் மற்றொருவரோடும் சொல்லவில்லை; சுகதுக்கங்களுக்கு உடன்பட்டவனான கணவனுக்குமாத்திரம் அவள் தெரிவித்தாள்.

அன்றுமுதல் அச்சிறுவன் "தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை" என்று, தாய்சொல்லுகிற ஒவ்வொருவாக்கியமும் வேதவாக்கியம் போலக்கொண்டு அவள்சொற்படி கேட்டு நடந்துவந்தான்; அவள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் அவளுக்குத் துணையாயிருந்து, தன் சகோதரர் சகோதரிகளுக்கும் வேண்டிய நீதி நன்னெறிகளைக் கற்பித்துவந்தான்.

இவ்வாறே ஏழெட்டு வருஷகாலம் சென்றது; இதற்குள் அவனுடைய யோக்கியதை எங்கும் பரவியது. அதனால் அவன் ஒரு பெரிய உத்தியோக சாலையில் பொக்கிஷதாரனாக நியமிக்கப்பட்டான். அவன் சத்தியவாக்குடையவனென்று எல்லோரும் அவனை நம்பத்தொடங்கினார்கள். அவனிடத்தில் எந்த விஷயத்தைப்பற்றியும் சந்தேகப்படுகிறவர்கள் ஒருவருமில்லை; அதனால் அவன் வெகு சீக்கிரத்தில் இன்னும் மேலான அதிகாரங்கள்பெற்று மேன்மேலும் விருத்தியடையலானான்.

பின்பு ஒரு சமயத்தில் அந்தமகன் இவ்விஷயங்களைப்பற்றித் தாயுடன் பேசும்பொழுது, அம்மா, முன்னே நான் சிறுவனாயிருக்கும்பொழுது ஒருநாள் பொம்மையும் கையுமாய் என்னை நீ கடைக்காரனிடத்திற்கு இழுத்துக் கொண்டுபோனாயே; அது எனக்குக் காலத்தில் களைபறித்ததுபோலாயிற்று; அந்தச்சமயத்தில் நீ அப்படிச் செய்திராமற்போனால் இந்த மேலான பதவிக்கு நான் ஒருபோதும் வந்திருக்கமாட்டேன். நீ அவ்வாறு செய்தபிறகு, எனக்கு வேண்டியபொருளைப் பெற்றுக்கொள்ளக் கையில் ஒருகாசுகூடக் கிடைக்காமல் நான் வருத்தப்பட்ட சமயங்கள் பலவுண்டு. அப்படிப்பட்ட காலங்களில் தீயவழியில் மனஞ்செல்லாமல் அதைத்தடுப்பது மிகவும் கடினமாயிருந்தது. அந்தத் தருணங்களில் மனதுபோனபடி போகவொட்டாமல் என்னைக் காப்பாற்றி முன்னுக்குக்கொண்டுவந்தவர் கடவுளே. இதன் பெருமை அக்காலத்தில் எனக்குச் சிறிதும் தெரியாமற்போயிற்று; இப்படி அற்பகாலத்தில கண்டிக்கப்படாமையினாலே தான அநேகம் பிள்ளைகள் அநியாயமாய் அழிந்துபோகிறார்களென்னும் உண்மையை இப்போது நான் அறிந்துகொள்ளலானேன். அந்தக்காலத்தில் நீ ஐயோ பாவமென்று என்னைச் சும்மாவிட்டிருந்தால் இப்போது நான் என்ன கதியாயிருப்பேனோ? இப்படியெல்லாம் பாடுபட்டு மக்களை முன்னுக்குக் கொண்டுவருவதனாலே தான் "அன்னையும் பிதாவு முன்னறிதெய்வம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது; என்று சொல்லித் தாயினால் தான் முன்னுக்கு வந்ததை நினைத்து அவளைத் தெய்வமாகக் கொண்டாடினான்.

ஐ. வி.



## இராமாயண வினாவிடை.

6-வது யுத்தகாண்டம் 46-வது பக்கத்தொடர்ச்சி.

10. வினா.—இராவணனது சேனாதிபதிகளுக்குள்ளே யுத்தத்தில் முதன்மையாயிருந்தவர்கள் யார் யார்? அவர்களின் பெயர்களைச் சொல்லு?

விடை.—அவர்கள் பெயர்கள். மகாராக்ஷன், யூபாக்ஷன், தூம்ராக்ஷன், அகம்பனன், பிரகஸ்தன், மகோதரன், மகாபார்சுவன் என்பவை.

11. வினா.—இராமபிரான் சேனையில் முக்கியர்கள் யார் யார் சொல்லு?

விடை.—அனுமான், அங்கதன், ஜாம்பவான், தாரன், நளன், நீலன், மைந்தன், துவிதன், கஜன், கவாக்ஷன், சுஷேணன் முதலியோர் இராமபிரான் சேனையில் முக்கியர்கள்.

12.—வினா.—இவர்களுள் இராவணனால் பீடிக்கப்பட்டவர்கள் யார் யார்?

விடை.—அனுமான், நீலன், வானரர்களுக்கரசனான சுக்கிரீவன், இராமன் தம்பி இலக்குமணன் இவர்களைத்தான் இராவணன் பீடித்தான்.

13. வினா.—யுத்தத்தில் இராவணனுக்கு உதவிசெய்யவந்தவன் யார்?

விடை.—அவன் தம்பி கும்பகர்ணன்தான் சகாயம்செய்யவந்தவன்.

14. வினா.—கும்பகர்ணன் விஷயத்தில் ஏதாவது விசித்திரமான சங்கதி உண்டா?

விடை.—ஆம். உண்டு. கும்பகர்ணன் ஆறுமாதகாலம் நித்திரைசெய்வான்; பிறகு ஒருநாளில் விழித்தெழுந்திருப்பான். அவன் சுக்கிரீவனுடன் யுத்தம்செய்தபோது அவன் காதையும் மூக்கையும் சுக்கிரீவன் அறுத்துவிட்டான். பிறகு ஸ்ரீராமபிரான் அவனை யுத்தத்தில் வதம்செய்தான்.

வினா.—கும்பகர்ணன் அல்லாமல் இராமபிரான்செய்த யுத்தத்தில் அடிபட்டவர்கள் யார் யார்?

விடை.—கும்பகர்ணன் வதம் செய்யப்பட்டமேல் திரிசிரசு, தேவாந்தகன், நராந்தகன், அதிகாயன் எனும் பேர்கொண்ட இராவணனுடைய குமாரர்கள் நன்றாய்ப் புடைக்கப்பட்டார்கள். நன்றாய் நையதுகைக்கவும் பட்டார்கள்.

16. வினா—அங்கதன், சுக்கிரீவன் முதலினோரை புண்ணுண்டாம்படி அடித்தவன் யார்?

விடை.—இராவண புத்திரனான இந்திரஜித்து அங்கதன் முதலினோரை நன்றாய்ப்புடைத்துப் புண்ணுண்டாக்கினான்.

17. வினா.—அந்தப் புண்கள் ஆறினவிதமெப்படி?

விடை.—இராமபிரான் அனுமானை ஒஷதிபர்வதத்தைக் கொண்டுவரும்படி கட்டளையிடவே அனுமான் அப்படியேபோய் அந்த மலையைத் தாங்கிக்கொண்டு வந்தான். அதிலிருந்த மூலிகைகளால் புண்கள் ஆறிவிட்டன.

வினா.—இராவணகுமாரனான இந்திரஜித்தை யுத்தத்தில் கொன்றது யார்?

விடை.—இலக்ஷ்மணனால் இந்திரஜித்துக் கொல்லப்பட்டான்.

19. வினா.—இராமபிரான் இராவணன் இவர்களுக்கு யுத்தம் நடந்ததுண்டா?

விடை.—இராவணன் லக்ஷ்மணன் பேரில் சத்தி யெனுமாயுதத்தை எறியவே லக்ஷ்மணன் கீழே விழுந்துவிட்டான். அச்சத்தி ஆயுதம் லக்ஷ்மணன் மார்பிற் புகுந்து பூமியிற்போய் மறைந்தது. இப்புண்ணை ஆற்ற ஒஷதி பர்வதம் கொண்டுவரவேண்டுமென்று சுஷேணன் எனும் வைத்தியத்தில் வல்லவன் வேண்டிக்கொண்டான். இராமபிரானின் கட்டளைப்படி ஒஷதி பர்வதம் கொண்டுவரப்போன அனுமானுக்கு ஒஷதி தெரியாமையால் மலையையே கொண்டுவந்து இராமபிரானிடம் வைத்தான். அம்மலையிலிருந்து அடித்தகாற்று யோதவே லக்ஷ்மணனுக்குண்டாயிருந்த புண் ஆறிவிட்டது.

20. வினா.—இராமபிரானுக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்த ஸமாசாரத்தை நீ சொல்லு?

விடை.—முதல் முதலில் இராமபிரானுக்கும் இராவணனுக்கும் இலங்காபுரியில் வடக்குக்கோட்டை வாசலில் யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் இராவணசேனையையும் குதிரைகளையும் வீரர்களையும் மற்றுமுள்ளவர்களையும் இராமபிரான் கொன்றுவிட்டு இராவணனைமட்டும் ஒன்றியாய்விட்டார். நீ சீதையைக்கொண்டுவந்து விட்டுவிடு. நீ அப்படிச்செய்தால் உன்னை நான் காப்பாற்றிவிட்டு உன் இலங்கா ராச்சியத்தையும் கொடுத்துவிடுகிறேன் என்று இராமபிரான் இராவணனுக்கு அறிவித்து இதைப்பற்றி நீ நன்றாய் ஆலோசிக்க ஒரு நாள் கெடுக்கொடுத்திருக்கிறேனென்றும் சொன்னார். இதுதான் முதல்யுத்தசமாச்சாரம். இதன்மேல் நடந்த விருத்தாந்தங்களை பின்பு சொல்கிறேன்.

(இன்னும்வரும்.)

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர்.

# கல்வி.

(30-வது பக்கத்தொடர்ச்சி.)

பார்வதி:—லக்ஷ்மி! நீ வேலை செய்துகொண்டிருக்கிறாய்போல் காண்கிறதே நான் வந்தவேளை சரியல்ல; வரும்போதே பூனை குறுக்கே போனது. இன்னொரு சமயம் வருகிறேன்.

லக்ஷ்மி:—என்ன பார்வதி! பார்த்து நெடுநாளாய்விட்டதே, வருமுன்னமே போகவேண்டுமென்கிறாயே, என்ன அவசரம்?

பார்வதி:—அவசரமொன்றுமில்லை போனதடவை உன்னிடத்தில்வந்து பேசிக்கொண்டிருந்தேனே அதன்பிறகு வீட்டிற்குப் போனேன், என் எஜமானர் இவ்வளவு நேரம் எங்கேபோயிருந்தாய்? அம்மாளை வீட்டில் தனிமையாய்விட்டு என்று கேட்டார். அடுத்த வீட்டிலிருக்கும் லக்ஷ்மியினிடம் போனேன். அவள் கல்வி விஷயமாய்ப்பேசுகிறது கேட்க கேட்க எனக்கு சொல்லமுடியாத ஆனந்தமாயிருக்கு. எனக்கு



ஒன்றும் தெரியவில்லையே என்று வருத்தமாயிருக்கு. மனோரஞ்சனி என்று சொன்னீர்களே அதையும் அவள் எஜமானர் வாங்கித்தருகிறாராம். அதற்கு வருத்தப்படுவானேன். அவள் குழந்தையில் பள்ளிக்கூடத்தில் படித்திருக்கிறாள். மேலும் அவள் கணவனிடத்திலும் தினம் தமிழும் இங்கிலீஷும் சொல்லிக்கொண்டு படிப்பை விருத்திபண்ணிக்கொள்ளுகிறாள். உன்னைப்போல் முட்டாள் யாரிருக்கிறார்கள்? அவள் புத்திசாலியென்று சொன்னார். அதற்கு நான் இனிமேல் படித்தால் எனக்கு லக்ஷ்மி மாதிரி படிக்கவும் அதன்பொருளைத் தாராளமாயறிந்து பிறருக்கு சொல்லவும் தெரியுமோவென்று கேட்டேன். தெரியாமலென்ன? எல்லாம் கவலையுடன் படித்தால் வருகிறது. முயற்சியிருந்தாலல்லவா என்றார். அன்றையிலிருந்து நான் தினம் தப்பாமல் வேலைகளுடன்கூட பாடம்படித்துக்கொண்டு வருகிறேன். என் கணவரும் எனக்குத் தினம் ஒரு மணிநேரம் சொல்லிக்கொடுத்துக்கொண்டு வருகிறார். நான்காம்பாடமுழுவதும் படித்துவிட்டேன். உன்னிடத்தில் அடிக்கடி தெரியாதகேள்விகளைக் கேட்டுக்கொள்ளும்படி என் கணவர் சொல்லுகிறார். சிலகேள்விக்கு அர்த்தம் கேட்டுக்கொண்டுபோகலாமென்று வந்தேன்; நீ என்னமோ வேலையாயிருக்கிறாய். லக்ஷ்மி! நிரம்ப சந்தோஷம் நீ எதைக்கேட்டாலும் எனக்குத் தெரிந்தவரையில் சொல்ல ஆக்ஷேபனையில்லை. என் வேலையை இரவில் கூட செய்துக்கொள்ளலாம் அவசரமில்லை. நாளைக்குத்தானே.

பார்வதி:—நாளைக்கென்ன உங்கள் வீட்டில்? ஏதேதோ பாத்திரங்களை யெல்லாம் தேய்க்க வாசலில் போட்டிருக்கே இந்த சொம்புக்கு ஏன் சுண்ணாம்பு பூசுகிறீர்கள்? எனக்குத் தெரியவில்லையே.

லக்ஷ்மி:—நாளை அநந்த விரதம் உங்களுக்குக் கிடையாதோ?

பார்வதி:—அநந்த விரதம் என்று நான் கேள்விப்பட்டதுண்டு, அதை எதற்காகச்செய்வதென்று எனக்குத் தெரியாது; திருவநந்தபுரத்தில் அநந்த பத்மநாபர் பள்ளிக்கொண்டிருக்கிறார், போன வருஷம் தான் போயிருந்தோம். அந்தக் கதையின் வரலாறு எனக்குத் தயவுசெய்து சொல்லவேண்டும்.

லக்ஷ்மி:—சொல்லுகிறேன், கவனமாய்க் கேள்.

"துவாபரயுகத்தில் பாண்டு மகாராஜாவின் புத்திரர்களாகிய பாண்டவர்களுடன், திருதராஷ்டிரன் புத்திரர்களாகிய கௌரவர்களுக்குள் துரியோதனன் பாண்டவர்களுக்கிருக்கும் செல்வத்தைக் கண்டு பொறாமையினால், துர்மந்திரிகளாகிய சகுனி, கர்ணன், துஸ்ஸாஸனன், முதலியவர்களுடன் ஆலோசித்து, மாயத்தால் சூதாடிஅவர்கள் பொருள்களை யெல்லாம் பரித்துக்கொண்டு காட்டுக்குப்போகும்படி செய்தவர்களல்லவா? அப்பொழுது தர்மஸ்வரூபியாகின்ற யுதிஷ்டர் சகுனியினுடைய மாயச்சூதினால் தர்மமே ஜெயமென்று தம்பிமார்களுடன், காட்டிற்குச் சென்று ஜகத்ரக்ஷகராகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை தியானித்துக்கொண்டிருந்தார்.

பார்வதி:—ஆ! ஆ!! கேட்க கேட்க அதிகசாரமாயிருக்கிறதே. இந்தக் கதை முழுவதையும் எனக்குச் சொல்லவேண்டுமம்மா.

லக்ஷ்மி:—யுதிஷ்டராகிய தர்மநந்தனருடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் உடனே இவ்விடத்திற்கு வர, தர்மரும், தம்பிமாரும் அவருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து தங்களுக்கு துரியோதனாதியார் செய்த கொடுமையைப் பற்றி வருந்தியிருக்கும் தருமரைப்பார்த்து, ஸ்ரீகிருஷ்ண பகவான் சொல்லத்தொடங்கினார்:—கேளும், தருமநந்தனரே! நீங்கள் இந்த இராஜியத்தை இழந்ததற்காக இவ்வ-

ளவு வருந்துவானேன்? உங்களைவிட உலகில் துன்புற்றவர்கள் முன் அநேகரிருக்கிறார்களென தருமர் கேட்டு, உன் தயவு யிருக்கையில் வருத்தமும் எங்களுக்குண்டோ? ஆகிலும் அப்படி வருந்தி உன்னுடைய கிருபையைப்பெற்று ஐசுவரியத்தைத் திரும்பவும், அடைந்தவர் ஒருவரைப்பற்றி எனக்குச்சொல்ல வேண்டுமென்று கேட்ட யுதிஷ்டருக்கு கிருஷ்ணர் சொல்லத் தொடங்கினார்.

கேளும், தருமநந்தனரே! முன்னொருகாலத்தில் கவுண்டனியரென்னும் மகாரிஷி தன் இல்லாளுடன் ஐசுவரியத்தை யிழந்து பரிதபிக்கும் நாளில் ஸ்ரீ அநந்த பத்மநாபரை பூசைசெய்து திரும்பி முன்னிருந்த பாக்கியத்தை அடைந்து அந்தியில் மோக்ஷத்தையடைந்தார். அதைப்போல் நீங்களும் ஸ்ரீ பத்மநாபரை பூஜித்து முன் இழந்த ஐசுவரியத்தை அடையுங்களென்று சொன்ன ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைப்பார்த்து கௌண்டனியர் யார்? அவருக்கு எவ்விதம் கஷ்டம் வந்தது? அவைகளை எங்களுக்கு விவரமாகச் சொல்லவேண்டுமென்று தருமர் கேட்க ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லத்தொடங்கினார்

சர்வஜனமித்திரி.

☞ [அடுத்தடவை இம்மாதால் அனுப்பப்பட்ட அநந்தவிரதக் கதையின் வரலாறு பிரசுரிக்கப்படும்.—ப—ர்.]

## ஐப்பசி உத்சவம்.

(42-வது பக்கத்தொடர்ச்சி.)

அடுத்தநாள் காலையில் ஐந்துமணி சுமாருக்கு மகாராஜா அவர்கள் க்ஷேத்திரத்துக்குப்போய்த் தான் நடைதிறக்கப்படும். அதற்குப் பிறகு தான் வழக்கம்போலுள்ள பூசை முதலானதுகள் நடக்கும்; அவர் போகாமல் நடையைத் திறக்கமாட்டார்கள். உத்ஸவத்தின் பத்தாம்நாள், இவ்விடத்தில் "ஆறாட்டு" என்று சொல்லுவார்கள். அன்றைய தினம் கச்சேரிகளுக்கெல்லாம் ஒய்வுநாள் கொடுப்பார்கள். அன்று சாயங்காலம் நாலு மணி சுமாருக்கு மகாராஜா அவர்கள் க்ஷேத்திரத்துக்கு வந்து அதற்குள்போய், அவ்விடத்தி லிருக்கப்பட்ட "யோகப்போத்திகள்" என்று சொல்லப்பட்ட சிலபேர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு சிறியவாளும் கச்சையையும் கொடுத்து சில கிரியைகள்செய்து வெளியேவந்தவுடன் வாத்தியகோஷத்துடன் ஸ்வாமிகளை எழுந்தருளப்பண்ணி தீபாராதனை நடக்கும். நடந்து மேல்நடையிலும் முன் சொன்னபிரகாரம் தீபாராதனை நடக்கும். இவ்விதம் 2, 3, பிரதக்ஷிணம் செய்து கிழக்கே நடையில் எழுந்தருளியிருக்கிற சமயத்தில் மகாராஜா அவர்கள் வாளைக் கையிலேந்திக்கொண்டுவந்து, வேட்டைதினத்தில் நடந்ததுபோல பாணிகொட்டி வாத்தியகோஷத்துடன் க்ஷேத்திரத்தின் மேல் வழியாய்க்கடந்து சின்னம், விருதுகளுடன், பட்டாளங்களால் சூழப்பட்டு திவான் முதலிய உத்தியோகஸ்தர்கள் சகிதமாய் சமுத்திரத்தை நோக்கி ஸ்வாமிகளை எழுந்தருளப் பண்ணுவார்கள். அவர்கள் போகின்ற கிரமத்தை இப்பொழுது வரைகிறேன்: முதலில் கொடி கட்டிய ஒரு யானைபோகும், பின்விருதுகள், பின்செல்ல, ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட சில குதிரைகள், பின் நகரா யானை இதற்குப்பின் நல்ல உடுப்புகள் தரித்த துருப்புகள் குதிரைமே லேறிக்கொண்டு ஈட்டிகளைக் கையில் தாங்கிக்கொண்டு இரட்டைவரியாய்ப் போவார்கள். அதற்குப்பின் பட்டாளர்கள் இரட்டைவரியாய் பாண்டுவாத்தியங்கள் வாசித்துக்கொண்டு போவார்கள். இதற்குப்பின் கோவிலைச் சார்ந்த சில தாஸன்மார்கள் இதற்குப் பின் முன் சொல்லப்பட்ட போத்திகள் கச்சைகளை உடுத்திக்கொண்டும் கையில் வாளைவைத்துக்கொண்டும்



வரிசையாய்ப் போவார்கள். இதற்குப்பின் மகாராஜா அவர்களுடைய கேடகத்தை வைத்துக்கொண்டு ஒரு ஆள்போகும். இதற்குப்பின் மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்கள் வாளை கையில் பிடித்துக்கொண்டு அதிக ஆசாரம் வணக்கம், தெய்வபத்தியுடனும் ஒரு வஸ்திரம்மாத்திரம் உடுத்திக்கொண்டு போவார்கள். இதற்குப்பின் திவான் முதலான உத்தியோகஸ்தர்கள் இதற்குப்பின் ஸ்வாமிகளை வாகனங்களில் வைத்து எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போவார்கள். இதற்குப்பின் பாகவதர்கள் சங்கீதத்துடன் போவார்கள். இதற்குப்பின் அம்பாரிவைத்த யானைகள் போகும். கோட்டைவாயிலுக்கும் சமுத்திரக்கரைக்கும் சுமார் மூன்று மைல்தூரம்வரும். இவ்வளவு தூரமும் பாதையை வெள்ளை மணலால் இலேசாய்ப் பரவியிருப்பார்கள். இந்தமூன்று மைல்தூரத்தை மகாராஜா அவர்கள் வாளைக் கையில் வைத்துக்கொண்டு கால்நடையாய் ஸ்வாமிகளையெழுந்தருளப்பண்ணிக்கொண்டு போவார்கள். பங்குனிமாசத்திலுள்ள ஆறாட்டுதினத்திலும் மகாராஜா அவர்கள் க்ஷேத்திரத்திலிருந்து சமுத்திரக்கரைக்குக் கால்நடையாய்ப் போவார்கள். இதைக்காண அதிக விசேஷமாயிருக்கும். நேரில்பார்த்தால்தான் அதின் மகிமை நன்றாய் விளங்கும். இவர்களெல்லாரும் மேலக்கோட்டை வாசலுக்கு வெளியில் போனவுடன் 21 பீரங்கிவெடி போடுவார்கள். மகாராஜா அவர்கள் கோட்டைக்கு வெளியில் போனவுடன் இந்த ஆசாரம் செய்கிற வழக்கமுண்டு. கோட்டை வெளியில் போனவுடன் திருவிதாங்கூர் தேசத்து இராணிகள் க்ஷேத்திரம்பந்தபஸ்தாயிருக்கிறதாவென்று பார்க்க சீவெலிமண்டபத்தைச் சுற்றி ஒரு பிரதக்ஷணம் வருவார்கள். இதுவும் இத்தேசத்து வழக்கம். மகாராஜா அவர்கள் கோட்டைக்கு வெளியில் போகும்போது இராணிகளிடத்தில் க்ஷேத்திரத்தை ஒப்பிவித்துப் போவதாயும், அவர்கள் பந்தோபஸ்தாயிருக்கிறதாயென்று பார்ப்பதாயும் இதன்தாற்பரியம். இந்த மூன்று மைல்தூரமும் இருபக்கமும் எண்ணிறந்த ஜனங்களால் சூழப்பட்டிருக்கும். இவ்விதமாகப்போய் சமுத்திரக்கரையை யடைந்தவுடன் சில கிரியைகள்செய்து, ஸ்வாமிகளை சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்விப்பார்கள். தெய்வபக்தியில் சிறிதும் விலகாத நமது மாக்ஷிமைதங்கிய மகாராஜா அவர்களும் அச்சமயத்தில் ஸ்நானஞ் செய்வார்கள். வேடிக்கைகளைப் பார்க்கவந்தவர்களிலும் அநேகர் அந்த சமயத்தில் ஸ்நானஞ் செய்வார்கள். இது கழிந்தவுடன் மகாராஜா அவர்கள் போசனமுண்டு, மேலக்கோட்டை வாயிலுக்கருகில் கோட்டைக்குள்ளிருக்கப்பட்ட இராணிகளுடைய அரண்மனையில் தங்கியிருப்பார்கள். ஸ்வாமிகளை சமுத்திரக்கரையிலிருந்து பட்டாளங்கள் சகிதம் தீவர்த்திகள் மத்தாப்பூக்களால் சூழப்பட்டு எழுந்தருளப்பண்ணி எட்டரைமணி சுமாருக்கு மேலக்கோட்டை வாயிலையடைந்தவுடன் மகாராஜா அவர்கள் உத்தியோகஸ்தர்களுடன் வாளைக் கையில் வைத்துக்கொண்டு க்ஷேத்திரத்திற்குள் பிரவேசித்து பிரதக்ஷிணங்கள்செய்து ஸ்வாமிகளை உள்ளே எழுந்தருளப்பண்ணி கொடியை கீழே யிறக்குவார்கள். கோட்டைக்குள் ஸ்வாமிகளை யெழுந்தருளப்பண்ணியவுடனும் 21 பீரங்கிகள் போடப்படும். இத்துடன் உத்ஸவம் முடியும். இதில் சிறிதும் பிசகாமல் இந்த அற்பசிமாதத்தில் நடந்தது. கோட்டைக்குள் கோவிலின் முன்பாகத்தில் பலவிதமான வேடிக்கைகளும், வித்தைகளும், கம்மாளையாட்டம், கயிற்றூட்டம் முதலியவை இந்த பத்துதினமும் இரவும் பகலும் நடந்துகொண்டேயிருக்கும். இரவில் சீவெலி கழிந்தவுடன் சீவெலிமண்டபத்திலும் அம்மானையாட்டம் நடக்கும். பங்குனிமாதம் இதைவிட சில விசேஷங்களுண்டு. அவற்றை அந்த சமயத்தில் வரைகிறேன். இந்த உத்ஸவத்தின் பத்தாநாள் ஸ்வாமிகளை க்ஷேத்திரத்துக்கு வெளியில் எழுந்தருளப்பண்ணுகிற வரை நல்லமழையுண்டாயிருந்தது; வெளியில் எழுந்தருளப்பண்ணுகிற சமயத்தில் மழை ஒடிவிட்டது. அது எதிரொலென்றால்:—

"கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான்றவசி கொடிதோரீயி
நல்லவை செய்வா னரசனிவர் மூவர்
பெய்யெனப் பெய்யு மழை."

என்றபாடல் நாம் வாசித்திருக்கிறோம். அதாவது தன்பர்த்தாமனதில் நினைத்துக் கொண்டிருக்கிறதை தானாகவே அறிந்து அவற்றைச் செய்கிற மனைவியும்; தான் மேல் கொண்ட காரியங்களைச் செய்யவேண்டிய முறைப்படி செய்து நிறைவேற்றும் தபசியும் ஜனங்களுக்கு நல்ல காரியங்களையும், தானதருமங்களையும் செய்துவரும் அரசனும் ஆகிய இம்மூவர், மழைபெய்யென்றால் மழைபெய்யும், வேண்டாமென்றால் போகும். இதுமாதிரியாக நமது மகாராஜா அவர்கள் அநேக தானதருமங்களைச் செய்து ஜனங்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து தர்மமே நமது குலதெய்வம் என்று தருமத்தைப் பாதுகாத்துக்கொண்டு வருகிறதினால், இந்த விசேஷகாலத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மழையால் கஷ்டப்படுவார்களே, மழை ஒடிப்போகவேணுமென்று நினைத்தார். இவர் நினைக்கவே மழை மாயமாய்ப் பறந்துவிட்டது. ஜனங்களெல்லாம் சந்தோஷமாய் ஆறாட்டைக்கண்டு களித்திருந்தார்கள். சில தினங்களில் மழையில்லாமல் வருந்தும்போது மகாராஜா அவர்களுடைய தானதருமங்களானது அவர் மழை பெய்யென்று நினைக்க மழை பெய்கிறதும் இவ்விதமான அதிசயங்களை அநேகம்தடவை காணலாம்; மாட்சிமைதங்கிய மகாராஜா அவர்களுக்கு பத்மநாபஸ்வாமி தீர்க்காயுளை அளிப்பாராக.

முற்றிற்று. V. G.

# கற்றோர் காலடி.

1. சாஸ்திரங்களைக் கற்று கல்வியால் மனோகரமாய் பேசி, சிஷ்யர்களுக்கு சாஸ்திரங்களை கற்றுகொடுத்துகொண்டிருக்கும் கீர்த்திபெற்ற கவிகள் எந்த அரசன் நாட்டில் தரித்திரர்களா யிருக்கிறார்களோ, அந்த அரசனுடையதே. அறிவின்மை கவிகளோ, பணமன்றியும் பிரபுக்களே இரத்தினங்களுக்கு சரியாய் விலையிடாவிட்டால், குறைவு. பரீக்ஷை தெரியாத வியாபாரிக்கு அல்லாது, இரத்தினத்திற் கல்ல.

2. வித்தை என்ற இரகசியமான தனம் அபகரிப்போருக்கு எட்டாது. ஏதோ ஒருவிதமான சுகத்தை எப்போதும் விருத்திசெய்யும் யாசகர்களுக்கு இடைவிடாமல் அளித்துகொண்டிருந்தாலும் பெருகிகொண்டே இருக்கும்; பிரளயகாலத்திலும் அழியாது. இந்த இரகசிய தனமுடையோரிடத்து அரசர்களே உங்கள் கர்வத்தை விட்டுவிடுங்கள் அவர்களோடு போட்டிபோடுவது யார்?

3. புருஷார்த்தத்தை அடைந்த பண்டிதர்களை அவமானம் செய்யாதே (ஓ அரசனே); புற்போன்ற உன்னுடைய அற்பசம்பத்து அவனுக்கு இடையூறாகாது. மதம்கொண்டு கன்னங்களில் மதஜலம் பெருகி ஓடும் யானைகள் தாமரைத்தண்டின் நூலால் கட்டுப்படா;

4. பிரம்மதேவனுக்கு அன்னத்தின்பேரில் வெகு கோபம் வந்தால் அதற்கு தாமரை குளத்தில் இருக்கும் சுகத்தை போக்கடிக்கலாம். ஜலத்தை



யும் பாலையும் பிரிப்பதில் அதற்குள்ள பிரசித்தமான சாமர்த்தியத்தை பிடுங்க அவராலும் ஆகாது.

5. வங்கிகளும், நிலவுபோல் பிரகாசிக்கும் ஹாரங்களும்; ஸ்நாநமும், பூஜையும், புஷ்பமும், ஆபரணம்பூண்ட கேசங்களும், புருஷனுக்கு அழகல்ல, பரிசுத்தமான வாக்கு ஒன்றே மனிதனுக்கு ஆபரணமாம்; நற்சொல் என்றும் (நீடித்திருக்கும்).

6. வித்தை என்பது மனிதனுக்கு பேரழகு. போகத்தையும், சுகத்தையும், கீர்த்தியையும் தரும்; ஆசிரியருக்கும் ஆசிரியராகும். பிறதேசம் சென்றால் பந்துவைப்போல் (பாதுகாக்கும்.) வித்தையே பரமதெய்வம். வித்தையே அரசர்கள் பூஜிப்பார்கள். வித்தையில்லான் மிருகம்(மொத்தவன்).

7. பொறுமையிருந்தால் கவசம் என்னத்திற்கு, மனிதர்களுக்கு கோபமிருந்தால் பகையாளிகள் என்னத்திற்கு? தாயாதி இருந்தால் நெருப்பும் வேண்டுமா? சிநேகிதன் இருந்தால் திவ்வியமான மருந்துதான் என்னத்திற்கு, துஷ்டர்கள் இருந்தால் பாம்புகளும் வேண்டுமோ? குறைவற்ற கல்வியிருந்தால் பணம்தான் என்னத்திற்கு? (அகாரியம் செய்வதில்) வெட்கமிருந்தால், பிரயோஜனம் என்ன? நல்ல கவிராயனுயிருந்தால், ராஜியம்தான் என்னத்திற்கு?

8. இனத்தாரிடத்தில் தாட்சிணியம், அண்டினவரிடத்தில் தயை கெட்டவர்களுக்கு எப்பொழுதும் கேடுசெய்யும் தன்மை, நல்லோர்களிடத்தில் பிரீதி, அரசரிடத்தில் நீதி, படித்தோரிடத்தில் சரியாய் நடந்துகொள்தல், பகைவரிடத்தில் ஆசத்தன்மை. மூத்தோரிடத்தில் பொறுமை, பெண்டிரிடத்தில் மரியாதை; இந்த வித்தைகளில் தேர்ந்தவர்களால் தான், இவ்வுலகம் நிற்கிறது.

9. நல்லோர் சகவாஸம் புத்தியின் மந்தத்தை அடித்துவிடும். நாவில் உண்மையை நாட்டும் (தெளிக்கும்) கௌரவத்தை தரும். பாவத்தை போக்கும் மனதை மலரச்செய்யும். பேச்சை நாற்றிசைகளிலும் பரவச்செய்யும் நல்லார் சேர்க்கை மானிடர்க்கு என்னதான் செய்யாது.

10. காவ்வியரசம் அறிந்த கவிகளே புண்ணியம் செய்தவர்கள். அவர்களதே அவர்களது ஜயம். அவர்கள் கீர்த்திமயமான தேகத்திற்கு மூப்பு, பயம் மரணபயம் இல்லை.

N. B. ஸீதாதேவியை "உங்களை ஹிம்சித்த ராக்ஷஸ ஸ்திரீகளை கொல்ல கட்டளையிடவேண்டுமென" அநுமான் கேட்க குற்றமற்றவர் யார்? துஷ்டர்களையும் கெடுக்கலாகாது எனச் சொன்னாள் 7 (யுத்தகாண்டம்).

(இன்னும்வரும்.)

A. ஸ்ரீநிவாசய்யர், பி. ஏ.

# சமாசாரக் குறிப்புகள்.

["ஒரு பெண் வேலை" "ஜோதிசாஸ்திரம்" அடுத்ததடவை நமது அபிப்பிராயம் பிரசுரிக்கப்படும். ப-ர்.]

**

நமது பத்திரிகைக்கு விடுகதைகள் அதிகமாக எழுதிவரும் பெண்களில் முதலிருவருக்கு ஆகஸ்டுமீ கடைசியில் நல்ல கதைப்புஸ்தகம் இனாமாக கொடுக்கப்படும்.

***

பாலக்காட்டில் மாதர் சபை வெகு நன்றாக நடத்தப்பட்டு வருகிறதைப்பற்றி மிகச் சந்தோஷப்படுவதுடன் அது மென்மேலும் விருத்திக்கு வரும்படி பிரார்த்திக்கின்றோம்.

***

நமது பெண்களுக்கு நல்ல குணம், வருவதற்கு பெரியவர்களுடைய சரித்திரங்களும், சத்தியம், தன்னடக்கம் முதலியவைகளடங்கிய புஸ்தகங்களைப் படிக்கும்படி செய்யவேண்டுவது பெற்றோர்களின் கடமை.

***

ரோமேனியா தேசத்து ராணியாருக்கு 60-வயது இப்போது தான் முடிந்ததாம். அக்காலத்தில் ராணியார் தமது ஷஷ்டிபூர்த்தியின் ஞாபகார்த்தமாக வயது சென்றவர்களுக்கும், பலஹீனமுள்ளவர்களுக்கும் ஒரு சத்திரம் கட்டி வைத்தார்களாம்.

***

காசிபாய் தேவதாரம்மாளவர்கள் நமது தக்ஷிண தேசங்களில் தமது விதவாக்கிரகத்திற்கு திரவியம் சேர்க்க வந்தது யாவருக்கும் தெரியும். அம்மாது சுமார் ரூபா. 25,000 வசூல் செய்ததாகத்தெரிகிறது. இப்பொழுது அம்மாது பூனாவிலிருக்கிறாள். இன்னும் அக்கிரகத்திற்கு திரவியம் சேர்க்க தக்ஷணதேசங்களுக்கு வர எண்ணியிருக்கிறாளாம். அக்காலத்தில் நமது ஜனங்கள் இன்னும் அதிக சந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் அம்மாதுக்கு நல்வரவு கூறுவார்களென்று நம்புகிறோம்.

***

"பர்ஷியாவிலுள்ள பாடசாலைகளில் சிறுபிள்ளைகள் வெளியிலிருந்து நனைந்த கால்களுடன் பாடசாலைக்குள் சென்றவுடன், அவர்களுக்கு காலுசட்டையும், சோடும் கொடுக்கப்பட்டு வருகின்றன. நமது தேசத்தில் பெண்கள் வெய்யில் திக்ஷிண்யமாயுள்ளபோது பாடசாலைக்கு சோடும், குடையுமில்லாமற் செல்லுகிறார்கள், பம்பாய் முதலியவிடங்களில் பெண்களும், மாதர்களும், சோடு உபயோகித்து வருகிறார்கள். நமது தேசத்தாரும் சிறுகுழந்தைகளுக்காவது சோடும், கொடையும் கொடுத்து வந்தால் அநுகூலமாக விருக்காதாவென" ஒருமாது எழுதுகின்றார்.

***

நமது பத்திரிகைக்குச் சென்ற வருடத்திற்கும் இவ்வருடத்திற்கும் சந்தா கொடுக்காதவர்கள் தயைசெய்து சீக்கிரத்தில் தாமதம் செய்யாமல் அனுப்புவார்களென்று கோருகிறோம். புதிதாய்ச்சேர விரும்பவர்கள் முன் பணம் கட்டவேண்டும். கையொப்ப நேயர்கள் ஒவ்வொருவரும் தயவுசெய்து நமது பத்திரிகைக்கு ஒரு கையொப்பகாரரைச் சேர்த்து அனுப்ப முயற்சி செய்வார்களென்றும் நம்புகிறோம், இவ்வித உதவிபுரிந்தால் நம் பத்திரிகையை இன்னும் விருத்திசெய்யலாம்.

☞ C. S. இராமசுவாமி அய்யர்.
எடிடர் & ப்ரொப்ரைடர்,
மாதர் மனோரஞ்சினி.

Printed at the Madras Ripon Press & published by the proprietor
C. S. Ramaswamy Iyer, Madras.

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol - vii. } Madras: April 1905. { No-4.
புத்தகம் எ. } சென்னப்பட்டணம்: ஏப்ரல்மீ 1905. { இல-4.

## * ஜப்பான் தேசத்து மாதர்கள்.

ஜப்பான் மிக்க நாகரீக முற்றிருக்கிறதென யாவருமறிவார்கள். அத்தேசத்து மாதர்களின் நடவடிக்கைகளைப் பற்றி அறிவது இன்பம் பயக்குமென வெண்ணுகிறேன்.

அத்தேசத்தில், புது ஏற்பாடுகள் அநேகமாய் அநுஷ்டானத்துக்கு வந்திருப்பினும், பழைய வழக்கங்களின் சிலவற்றை அத்தேசத்து ஸ்திரீகளிடத்து இன்றைக்குங் கண்ணுறலாம். ஜப்பானிய ஸ்திரீகள் ஸௌந்திரியவதிகளெனக் கருதப்படுகிறார்கள். அவர்களது நாகரீக உடை, நல் நடத்தை, இனியகுரல் இவைகளெல்லாம் அவர்களது ஸௌந்தரியத்தை அதிகப் படுத்துவதாகவே தோற்றுகிறது. வெகுகாலம்வரை, ஜப்பானிலேயே ஒரு ஸ்திரீவசிப்பாளேயாகில், பின் தன்தேகம் காந்தியடைவதையும், அவள் நாட்டுஸ்திரீகள் மூர்க்கர்களாயும், அவலட்சணமுடையவர்களாயு மிருப்பதாகவும் அவளறிவாளென ஒரு சிறந்த மாது கூறியுள்ளாள்.

ஜப்பான் தேசத்துப் பெண்கள் மஞ்சநிற மேனியர்கள். கருத்து நீண்ட மயிற்றொகுதி யுடையார்கள். மான் கண்களினர். பொதுவாய், மனிதர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் வனப்புடையவர்களென மதிக்கப் படுகிறார்கள்; உடல் பெருத்தவர்களல்லர்; அவர்கள் செல்லும் நுண்மையான மார்க்கங்களும், அநுசரிக்கும் பழையகால ஆசாரங்களும் அவர்களுக்கு ஏற்றதாகவே யிருக்கிறது. அவர்கள் உடை மிக்க விசித்திரமானது. கைகளிடத்தில் மிக்கதொங்குகிறவும், உடல்முழுது மூடிக்கொண்டிருக்கிறவுமான 'கைம்மினோ' என்ற ஆடையும், இடுப்பிற்கட்டிக் கொள்ளுகிற ஒருக்கச்சையுந்தான் உயர்ந்த வனிதைகளின் ஆடை. அநேககுடியான ஸ்திரீகள் தங்கள் புருஷர்களைப் போலவே நிஜார், (Trouser) ஜாக்கிட்டு தரிக்கிறார்கள். தங்கள் குழலைக் கோதி முடிவதில் மிக்கக்கவலையுட னிருக்கிறார்கள். அவர்கள், மயிரை வாரிக்கொள்ள உபயோகப்படுத்தும் சீப்பும், முடிய உபயோகிக்கும் கொண்டை ஊசியும், ஆமையோடு, முத்துச் சிப்பி அல்லது இவை போன்ற விலையுயர்ந்த சாமான்களினால் செய்யப்பட்டுள்ளது. இவைகள், தங்கள் புருஷர்களின் வெகுகால சம்பாத்தியத்தின் சாயலா யிருக்கின்றன. ஆனால் இவ்வகை வஸ்துக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் தலைமுறை தத்து

* *Adapted from the Indian Ladies' Magazine.*

வமாயிருந்துவரும். அலங்கார ஆடைகளில் குழந்தைகள் விளங்குகின்றார்கள். வயது அதிகமாக அதிகமாக அணியும் ஆடைகளிலும் பளபளப்பு குன்றுகிறது. நன்னடக்கை, இனிய குரல், பேச்சு இவைகள் ஆடைகளுடன் கூடிப் பிரகாசிக்கின்றன. பட்சம், சாந்தகுணம், விஸ்வாசம், அழகு இவைகளின் ரூபமென்றே அம்மடந்தைகளைக் கூறலாம். கோஷாவழக்கம் அங்கு இல்லை. ஏறக்குறைய நமது இந்திய ஸ்திரீகள் நடத்தப்படுவதுபோலவே அந்நாட்டு ஸ்திரீகளும் நடத்தப்படுகிறார்களெனக் கூறலாம். அவர்களுக்கு சுவாதந்திரியம் அளிக்கப்படுவதுமில்லை. அவர்கள் நிலைமையை மூன்று வாக்கியங்களில் காணலாம். விவாகமாகும் முன் பெற்றோருக்குக் கீழ்ப்படிதல், விவாகமானபின் புருஷனுக்கடங்கி நடத்தல், புருஷன் துர்ப்பாக்கியத்தால் இறக்க நேரிடின் பிள்ளை முதலியோர் சொற்படி நடத்தல். இவ்வண்ணம் உயர்ந்த ஸ்திரீகளுள் தங்கள் புருஷர்களுக்குத் தொழும்பு செய்ய வேண்டியவளே. அவனுக்கு வேண்டிய சாமான்களைக் கொணர்ந்து கொடுத்து வாங்கிக் கொண்டு போதலும், புருஷன் நல்ல ஆடையணிந்து வெளியேபோய் அதிசயவஸ்துக்களை கண்டுகளித்துவர, ஸ்திரீ உள்ளே பதுங்கியிருத்தலும், சாப்பிடும்பொழுது பரிமாறுதலும், புருஷன் பிரியங் கொள்ளாது தள்ளிவைப்பினும் விதியென்றிருப்பதுமே ஸ்திரீகளது தொழிலாகும்.

நமது நாட்டிலும் மனைவியர்கள்மீது பிரியங் கொள்ளாது தள்ளி வைக்கும்வழக்கம் வெகு சகஜமாயிருந்துவருகிறது. அஸ்திரீகளின் நிலைமையை நினைக்கவும் கூட மனம் நடுங்குகிறது. ஐயோ, இவர்கள் தங்கள் மனைவிமார்களைக்கதறும் படி விட்டு விட்டு பிறருக்குப் புத்தி புகட்டவும் புகுகின்றனர்களே! தன்னைவந்து தஞ்சமென் றடைந்தவர்களைக் கஷ்டத்துக் குள்ளாக்குபவர்களா, பிறருக்குப் புத்திபுகட்டி அவர்களின் கஷ்டத்தை நீக்குபவர்கள்?

நமது நாட்டுப் பேதைகளினது சுகதுக்கங்கள் அவர்களுடையும் கணவர்களைச் சார்ந்ததென அறியாதோர் உளரோ? நேர்படக் கணவனில்லாதிருந்தால் மடந்தையர்களது கதி அதோ கதிதான். இவ்வண்ணமிருக்க மனைவிமார்களை நிர்க்கதியாய்விட்டு கவலையல்லாது லோக சஞ்சாரஞ்செய்ய எப்படித்தான் துணிகின்றனர்களோ? காரணமில்லாமல் இவ்வண்ணம் செய்வார்களா? அவர்களுக்கென்ன பைத்தியமா? அவர்கள் கூறுங் காரணங்களெல்லாம் பின் வருபவனவற்றுள் ஒன்றாகயிருக்கிறது.

(1) அழகில்லை.

(2) சமர்த்தில்லை.

(3) மாமியார், மாமனாருக்கு அடங்கி நடப்பதில்லை.

(5) வம்பு ஜாஸ்தி.

(6) காரியஞ் செய்யத் தெரியவில்லை.

(7) வியாதி, சங்கைக் கோளார்.

(8) வணக்கமில்லை. அங்கு நின்றுகொண்டிருந்தாள். வீட்டில் உட்கார்ந்தே இருந்தாள் என்ற இவைபோன்ற காரணங்களே. இவ்வகைக் குற்றங்களுக்கு அவர்களை, ஆயுசுகாலமுழுதும் வருத்துவது நியாயமாகுமா?



சமர்த்துடன் கூடிய இவர்கள்தான் அவர்களை சமர்த்தாக்கக்கூடாதா? அடங்கி நடக்கக் கற்றிருக்குமவர்கள் தான் அடங்கி நடக்க அவர்களுக்குக் கற்பித்தல் கூடாதா? இவ்விஷயங்களுக்காக பெண்டாட்டியைத் தள்ளிவைப்பது எவ்விதிக்கு அடங்கி நடக்கும் பொருட்டோ? அழகில்லை யென்பது, கல்யாண காலத்திலேயே விளங்கவில்லையோ? தப்பிதஞ் செய்வது மனித சுபாவம். அப்படி நினைத்து ஒன்றுமறியாத அப்பேதையர்களைச்சீர்திருத்தி அவர்களுடன் வாழ்வது மேலாகுமே யொழிய இவ்வண்ணம் தள்ளிவைப்பது சிலாக்கியமாகுமென்று எண்ணுதற்கில்லை. புருஷர்களென்றால் என்ன? தப்பிதஞ் செய்யாதவர்கள் என்று அர்த்தமோ? அவ்விதக் குற்றங்களுக்கெல்லாம் ஸ்திரீகள் எம்மாதிரி புருஷர்களைத் தண்டிக்கிறார்களோ? இவ்விஷயத்தில், அவர்கள் மேம்பாடுடையவர்களென்றே சொல்லவேண்டும். நமது இந்தியா நாடு ஒவ்வொரு விஷயங்களிலும் விருத்தியாகி வருவதை யாவருமறிவார்கள். இவ்வகைத்தான விஷயங்களிலும் சீர்திருத்தம் ஏற்படுமென் றெண்ணுகிறேன். சீக்கிரம் சீர்திருத்தம் ஏற்பட்டு இந்த வழக்கம் நமது நாட்டைவிட்டு ஓடிப்போகுங்காலம் எக்காலமோ! அதற்காக நாம் பாடுபட வேண்டுவது அவசியமேயாகும். நமது நாடு விருத்தியடைய நமது நாட்டார் நல்ல நிலைமையிலிருத்தல் வேண்டுமென அறியாதோர் யாவரேனுமுளரோ? ஸ்திரீகளும் நாட்டோர்களைச் சேர்ந்தவர்கள் தானே? அவர்கள் க்ஷேமத்தையும் கருதுதல் தகுதியாகாதா?

நம்மவர்கள் குழந்தைகளுக்கு, இளமைப்பருவத்திலேயே, விவாகத்தின் உண்மையான பொருளையும், அதின் தெய்வீகத்தன்மையும், பரிசுத்தத்தன்மையும் நன்குவிளங்க போதித்தல் வேண்டும். ஆயுட்கால முழுதும் இருக்கக்கூடியக் கூட்டுறவே கல்யாணமென்று அவர்களுக்கு அறிவித்தல் வேண்டும். பிற்காலத்து புக்ககம் சென்று செவ்வனே நடந்து கொள்ளும் விதத்தையும், காரியங்கள் செய்யும் மாதிரியையும் பெண்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே கற்றுக்கொடுத்தல் வேண்டும். ஜீவ்யகாலத்தில், மிக்கச் சிறந்ததும் தூய்மையானதும் கல்யாணமென்றே நமது சிறுவர்கள் அறியவேண்டும். பிரியத்துக்கல்லாது வேறுவிஷயங்களைக் குறித்து விவாகஞ்செய்து கொள்ளும் வண்ணம் பெண்களுக்குப் போதிக்கலாகாது. செல்வத்துக்காக ஒருவனைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறோம் என்ற எண்ணத்தை அவர்கள் வகிக்கும் வண்ணம் நாம் விடக்கூடாது. இவ்வண்ணம் மனைவிகளைத் தள்ளிவைப்பவர்களுக்கு வேறு கல்யாணஞ்செய்து கொள்வதற்கு ஏதேனும் தடைகள் ஏற்படவேண்டும். அவ்வண்ணம் மறுவிவாகஞ் செய்து கொள்பவர்களை நமது கண்ணில் படாதிருக்கும் வண்ணம் செய்தல் வேண்டும். நமது வாத்தியார்கள் அல்லது குருக்கள் இம்மாதிரி விவாகங்களைச் செய்துவைக்கச் சம்மதியாதிருப்பதும் மேன்மையே, மனதுக்குச் சந்தோஷமாயிராது. விவாகஞ் செய்துகொள்ளும் வண்ணம் நேரிட்ட தம்பதிகள், அப்புறமாவது சந்தோஷமாயிருக்க முயலல்வேண்டும். உற்றோர், உறவினர், பெற்றோர், பெரியோர் இவர்களெல்லோரும் இம்மாதிரியான வழக்கத்தை அநுசரிக்காதும், அதை இகழ்ந்தும், மேற்கூறிய வண்ணம் தங்கள் குழந்தைகளுக்குக் கற்பித்தும்வந்தால் துணைவியைத் தள்ளிவைக்கிறகொடுமையான வழக்கம் நமது நாட்டைவிட்டே சென்று விடுமெனக் கூறுகின்றேன். நாம் இங்கு எடுத்து எழுதப்புகுந்த விஷயத்தைக் கவனிக்கச் செல்லுவோம்.

ஜப்பானிய ஸ்திரீகள், தங்கள் கணவனிடத்து இருக்கவேண்டியமுறையைப்பற்றிச் சற்று அறிந்தோம். அதிலிருந்து, அவர்களும், நமது இந்து மாதர்களும் சற்றேறக்குறைய ஒரே நிலைமையிலிருப்பதாகவும் கூறலாகும்.

ஜப்பானிய ஸ்திரீகள், எப்பொழுதும் சுவாதந்தரியத்துடன் கூடியவர்களில்லை. தக்கபருவ மடைந்ததும், கணவனகஞ் சென்று மாமியார், மாமனார் சொற்படி நடக்கவேண்டுவதே. சிற்சில சமயங்களில் அவர்களிடத்திலிருந்து மிக்கதொந்தரவையு மடைகிறார்கள். ஆனால் எல்லாம் ஸ்திரீகளின் நிலைமையும் இத்தகைத்ததாயில்லை. 20-ம் நூற்றாண்டு, தன்வலிமையைஅவர்களிடத்தும் காண்பியாது இருக்கவில்லை. சிற்சில ஸ்திரீகள் பழைய வழக்கங்களை விட்டு, நாகரீக மடைந்தவர்களாயு மிருக்கிறார்கள்.

அவர்கள் கல்வியையும், விவாகமுறையையும்பற்றி சற்றுகவனிப்போம். முற்காலத்தில், பெண்களைக் கற்பிக்கவேண்டுமென்ற சிரத்தை அவ்வளவாய் அங்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை. இப்பொழுது அவர்களுக்கென்றே, சொந்தத்திலும், இராஜாங்கத்திலும், அநேகபள்ளிக் கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகளைத் தவிர்த்து பாதிரிமார்கள் கல்விச் சாலைகளுமுண்டு. 30 உயர்தரவித்தியாசாலைகளிருக் கின்றன. எல்லா விஷயங்களைப் போலவே பெண்களைக் கல்விக்கற்கச் செய்யும் விஷயத்திலும் ஜப்பான் நாகரீகமடைந்திருக்கிறது. ஜப்பானிய பெண்களுக்கு நல்ல ஞானம் உண்டு; மிக்க சுத்தமாயிருப்பார்கள். புஷ்பங்கள் ஒழுங்காய் அடுக்கிவைத்திருப்பதைப்பார்க்க வேண்டுமானால் ஜப்பானில்தான் பார்க்கவேண்டும். ஆனால் ஒரு தட்டில் புஷ்பங்களை அடுக்கிவைக்க இரண்டு மணி நேரத்துக் கதிகமாகும். ஜப்பானிய மாதர்களின் விவாகம், அவர்களின் பெற்றோரால்தான் நிச்சயிக்கப்படும். ஆனால் அங்கு பால்ய விவாகங்களைக் காணுத லரிது. ஒரு பொதுமனிதனிடத்து பெற்றோர்கள், விஷயத்தை அறிவிப்பார்கள். அவன் அவ் விருதிறத்தோரையும் ஏதேனு மோரிடத்து சந்திக்கச் செய்வான். அவர்கள் சம்மதிப்பார்களேயாகில் விவாகம் நிச்சயமாகும். முகூர்த்ததினம் ஏற்பாடாகும். முகூர்த்ததினத்தில் பெண்வெள்ளாடையில் விளங்குவாள். இவ்வெள்ளாடை துக்கத்தைக் குறிக்குமாடையாம். கல்யாண காலத்து அவ்வாடையைத் தரித்துக்கொள்வது, தன் சொந்தக் குடும்பத்திலிருந்து செத்தவள்போல் நீங்குகிறாளென்றும், இறந்தாலல்லது புருஷன் கிரகத்தை விட்டு நீங்குகிறதில்லை யென்றதுமான பொருளைத் தெரிவிக்கிறதாம். மேற்கூறப்பெற்றுள்ள பொது மனுஷனும், அவன் மனைவியுமாய் இம்மணப் பெண்ணை முகூர்த்த நாளிரவு புருஷன் அகத்துக்கு அழைத்துச் செல்லுவார்கள். பெண் இவ்வண்ணம் புக்ககம் சென்றதன்பின்னர், பிறந்தகம் நன்குவிளக்கப்படும். முற்காலங்களில், சொக்கப்பானங்கள் கூட கொளுத்தப்படுமாம். இவைகளெல்லாம் செத்த பிணத்தை வீட்டிலிருந்து தூக்கிச்சென்றதின் மேல் செய்யக்கூடிய சடங்குகள். விவாக காலத்து இவ்வித சுபகாரியங்கள் நடக்கும். ஆனால் இப்பொழுது எல்லாம் மாறுதலையடைந்து வருகின்றன.

பெண்கள், கல்வி அபிவிருத்திக்காக எதேஷ்டமாக கல்விச்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு கல்வி புகட்டுவதில் பெற்றோர்களும் சிரத்தையுட னிருக்கிறார்கள்.

S. N. சீனிவாஸன்.



# ஒட்டகம்.

(ஓர் சம்பாஷணை.)

தாய்:—(தனக்குள்) பள்ளிக்கூடத்திற்குப்போன குழந்தை, நாழிகை இவ்வளவாகியும் இன்னும் வரக்காணோமே. தினம் இதற்கு முந்தியே வந்துவிடுவாளே. என்னவோ விசாரமாயிருக்கிறதே. அதோ வருகிறது யார்? பர்வதம் தானா? ஆ! அவள் தான் ஆயுள் நூறுதான். நினைத்த மாத்திரத்தில் வந்துவிட்டாள். கண்ணே! உனக்கேன் இவ்வளவு தாமதம்? பள்ளிக்கூடம் இப்பொழுது தான் கலைந்ததா என்ன? இன்று பள்ளிக்கூடத்தில் என்ன விசேஷம்?

மகள்:—ஒரு விசேஷமும் இல்லையே. வழக்கப்படிதான் பள்ளிக்கூடம் 10-மணிக்குக் கலைந்தது. பின்னைத் தாமதிக்கக் காரணம் ஏனென்றால் சொல்லுகிறேன் கேளுங்கள்: நாங்கள் வருகிற வழியில் என்ன கூட்டம்! என்ன கூட்டம்!! யானை, குதிரை, யெல்லாம் வந்துகொண்டிருந்தன. அவைகள் மறையுமட்டும் பார்த்துக்கொண்டே நின்றேன். அப்பொழுது எங்கள் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் குப்புசாமி நாயக்கன் தோப்பு இருக்கிறது பாருங்கள்! அங்கே அவை போயின. பள்ளிக்கூடத்திற்குச் சமீபத்தில் அவை நுழைந்தமையால் அவைகள் அங்கு என்ன செய்கின்றன என்று பார்க்க எல்லாப்பெண்களும் போனார்கள். நானும் போனேன். அவைகள் ஏன் அம்மா இங்கு வந்திருக்கின்றன? இன்று இவ்வூரில் என்ன விசேஷம்?

தாய்:—கண்ணே! லோககுரு சங்கராசாரிய சுவாமிகள் நாளை இங்கு வருவரென்று நேற்று அப்பா சொன்னது ஞாபகமில்லையா? நீ சொல்வதைப்பார்த்தால் அவர் இங்கு வந்துவிட்டாற்போல் இருக்கிறது. நீ சொல்வன அவரது பரிவாரங்கள் தாம். இவைகளின் பின்னால் ஒரு பல்லக்கு தூக்கிச்செல்லப்பட்ட தல்லவா? அதில் இருப்பவர் தான் ஆசாரிய சுவாமிகள்.

மகள்:—நான் பல்லக்குச் சுமந்து சென்றவர்களின் ஏம் ஓம் ஏம் ஒம் என்ற சப்தத்தை மட்டும் கேட்டேனே யொழிய அதில் இருந்தவரைப் பார்க்க முடியவில்லை. ஏனென்றால் வெகு கூட்டம். தவிரவும் என் கவனம் முழுதும் வேறு இடத்திற் சென்றது.

தாய்:—எங்கு சென்றது?

மகள்:—என்ன அம்மா! நான் பார்த்தவைகளில் ஒரு மிருகம் மற்றைவற்றைப்பார்க்கிலும் தலை சிறுத்து செவி குறுகி இருக்கிறது. அதின் தேகம் இருக்கிற பருமனுக்கு தலையும் காதும் எவ்வளவு சிறிது! அதென்ன மிருகம்?

தாய்:—நீ சொல்வது இன்னதென நன்றாய் விளங்கவில்லையே எதைச் சொல்லுகிறாய்?

மகள்:—நான் சொல்வது புரியவில்லையா? அது கூட யானை, குதிரை, மாடு முதலியன போல் கால் எடுத்துவைக்காமல், வலப்புறத்து முன் காலை முதலில் தூக்கிவைத்துப் பிறகு வலப்புறத்துப் பின்காலையும், அப்புறம் இடப்புறத்து முன்காலை எடுத்து வைத்து இடப்புறத்துப் பின்காலையும், தூக்கிவைத்து நடந்து சென்றது. அப்படி நடப்பது அது நொண்டி நொண்டி நடக்கிற மாதிரி இருந்தது. அது அடியெடுத்துவைக்கும் தோறும் எனக்குண்டான நகைப்பும் வியப்பும் இவ்வள வவ்வளவல்ல. இன்னும் சொல்லுகிறேன் கேளுங்கள் அதற்குக் குதிரைமுகம் கூடக் கொஞ்சம் உண்டு.

தாய்:—அம்மா! சரிதான். இப்பொழுது தெரிந்துகொண்டேன் நீ சொல்லுகிற பிராணி ஒட்டகம்.

மகள்:—அது என்ன ஒட்டகமா? லப்பர் எடுக்கிறார்களே! அதுவா இது? என்ன அம்மா கேட்டால் சிரிக்கிறீர்களே?

தாய்:—அந்தப்பிராணி ஒட்டகம் இல்லை. ஒட்டகம் தான். "லப்டர்" என்று சொன்னயே. அதுவும் பிசகு "ரப்பர்" என்பதே வார்த்தை.

மகள்:—சரி இருக்கட்டும் அதற்கு இவ்வளவு சிரிப்பென்ன? எங்கள் பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சப்பு, மீனு, எச்சுமி எல்லாரும் அப்படித்தான் சொன்னார்கள் நானும் சொன்னேன்.

தாய்:—நான் அதற்காக மட்டும் சிரிக்கவில்லை. இருக்கட்டும். எங்கிருந்து "ரப்பர்" வருகிறது இன்னொருதரம் சொல்.

மகள்:—நான் சொல்லமாட்டேன்.

தாய்:—சும்மா சொல்.

மகள்:—அது ஒட்டகத்திலிருந்து தான்.

தாய்:—எனக்குத் தெரியுமே. அப்படி எண்ணிச்சொல்லுவாய் என்று தானே உன்னை அழுத்தி அழுத்திக் கேட்டேன்.

மகள்:—பின்னை ரப்பர் எங்கிருந்து அம்மா உண்டாகிறது?

தாய்:—ரப்பர் ஒட்டகத்திலிருந்து வருகிறது என்று தெரியாதவர்கள் தான் சொல்வார்கள். அப்படிச்சொல்லுகிறவர்களும் சிறிது யோசித்துப்பார்த்தால் அவர்களுக்கே உண்மை தெரிய வரும். நீயே யோசித்து பார்! ரப்பர் விலை என்ன இருக்கும்?

மகள்:—காலணு இருக்கும்.

தாய்:—அது நீங்கள் உபயோகப்படுத்துகிற சிறு ரப்பர் அல்லவா? உன் கணக்குப்படி இது மாதிரி பல ரப்பர் துண்டு ஒட்டகத்தில் எவ்வளவு இருக்கும்?

மகள்:—2 ரூபா இருக்கும் என்று எண்ணுகிறேன்.

தாய்:—ஒரு ஒட்டகம் என்னவிலை இருக்கும்?

மகள்:—எனக்குத் தெரியாது.

தாய்:—உத்தேசமாய்ச்சொல் 2 ரூபாய்க்கு மேலே இருக்குமா? குறைந்திருக்குமா?

மகள்:—100 ரூபாய் இருக்கக்கூடும் என்றெண்ணுகிறேன். நம்முடைய மாடே 70 ரூபாய்க்கு வாங்கப்பட்டதே. இது அதற்கு அதிகமாய்த்தான் விலை பெறும்.

தாய்:—இல்லை அதன் விலை குறைந்தது ஐந்து 100 ரூபாயாவது இருக்கும். இருக்கட்டும். நீ மதிப்பிட்டபடியே வைத்துக்கொள்வோம். இரண்டு ரூபாய் பெறும்படியான ரப்பருக்காக 50 இரண்டு ரூபாய் பெறும்படியான ஒட்டகத்தைக்கொல்ல யாராவது உடன் படுவார்களா?

மகள்:—ஆம் அம்மா! எனக்குத்தான் புத்தியில்லை. உங்கள் மதிப்புப்படி குறைச் சது 250 இரண்டு ரூபா பெறும்படியான ஒட்டகத்தை இரண்டு ரூபாய்க்காகக் கொல்பவர் எங்கும் இரார். நல்ல வேளையாய் இன்றாவது இதைப்பற்றிய உண்மை யறிந்தேன். நான் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடம் போய் இதனை என் பள்ளிக்கூடத்தில் படிக்கும் குட்டிகளுக்கெல்லாம் அறிவிப்பேன். இருக்கட்டும், பின்னை ரப்பர் எங்கிருந்து உண் டாகிறது அம்மா?



தாய்:—கண்ணே! நீ புதிது புதிதாய் விஷயங்களை அறிய ஆவல்கொண்டிருப்பதற்காக அதிக சந்தோஷம். "ரப்பர்" என்பது ஆலம்பிசினைப்போன்ற ஒருவகை மரத்துப் பிசினால் ஆக்கப்படுவதே.

மகள்:—ஆ! ஆ!! அப்படியா! பின்னை, ரப்பர் ஒட்டகத்தினின்றும் உற்பத்தியாகிற வஸ்து என்று பலர் சொல்லக்காரணம் என்ன?

தாய்:—காரணம் என்னமோ எனக்குத்தெரியாது. ஆனாலும் ஒருவேளை இப்படியிருக்கலாம் என்று நினைக்கிறேன். யாராவது ரப்பரை வாயில் வைத்துச் சவுக்குச் சவுக்கென்று கடித்து எச்சிலாக்கிக்கொண்டிருப்பதை நமது பெரியோர்கள் கண்டிருக்கக்கூடும். அப்படிச்செய்வது பிசகென்று அவர்கள் வற்புறுத்திக் கூறியும் இவர்கள் வாயில் ரப்பரை வைத்துக்கடிக்கும் வழக்கத்தை நிறுத்தி இருக்கமாட்டார்கள். நம்ம கிழங்களுக்குத்தான் நாக்கில் நரம்பிராதே. வாய்க்கு வந்தபடி வார்த்தை சொல்வார்களே. எப்படியாவது இத்துர்வழக்கத்தை நிறுத்துவதற்காக அவர்கள், இவர்கள் அருவருப்புக் கொள்ளும்படி இவ்வாறு கூறி இருக்கக்கூடும். அதுவே வழக்கமாய் எல்லாரும் காரணமறியாமற் சொல்லத்தலைப்பட்டு விட்டனர்போலும்!

மகள்:—ஆம் அம்மா! என்ன என்றாலும் நீங்கள் மிகப் புத்திசாலியே. அப்படித்தான் இருக்கவேண்டும். நல்ல வேடிக்கைக் கதை இது! இவ்வொட்டகம் எவ்வளவு அவலட்சணமுள்ள பிராணி பார்த்தீர்களா? அதின் முதுகில் எவ்வளவு பெரியமுண்டு இருக்கிறது! அந்த முண்டினால் தான் இதற்கு இவ்வளவு அவலட்சண ரூபம் என்று எண்ணுகிறேன். அந்த முண்டுக்குப் பெயர் என்ன?

தாய்:—நீ சொல்வது உண்மையே. அந்த முண்டினால்த்தான் ஒட்டகத்திற்கு அத்தனை அவலட்சணமும். அம்முண்டிற்குத் "திமில் அல்லது கூன்" என்று பெயர்.

மகள்:—திமிலா? மாட்டிற் கிருப்பதும் திமில் தானே? ஆனால் அது மாதிரி இல்லையே இது? தவிரவும் மாட்டிற்குத் "திமில்" என்பது தோளில் அன்றோ உள்ளது? ஒட்டகத்திற்கு முதுகின் மத்தியில் அல்லவா இருக்கிறது?

தாய்:—நீ சொல்வது வெகு சரியே. ஒட்டகத்திற் கிருப்பதும் ஓர் வகைத் திமில் தான். நீ சொல்லுகிறபடி மாடுபோல், தோளில் திமில் கொண்ட ஒட்டகங்களும் உண்டு. ஆனால் அவற்றிற்கு இரண்டு திமில்கள் உண்டு.

மகள்:—ஒன்று தான், தோளில் என்றீர்கள் மற்றொன்று எங்கிருக்கும்?

தாய்:—மற்றொரு திமில், தோளில் உள்ள திமிலுக்குச் சற்று தூரத்தில் இருக்கும்.

மகள்:—அதிகஅவலட்சணத்தைத் தரக்கூடிய இந்தத் திமில் ஏனோ அதற்கு? இவ்வளவு அவலட்சணமுள்ள மிருகத்தைக் கடவுள் வீணாக ஏன் தான் சிருஷ்டித்தாரோ தெரியவில்லை.

தாய்:—கண்ணே! அப்படி இனி எப்பொழுதும் சொல்லாதே. ஈசுவர சிருஷ்டியில் வீணான பிராணி எதுவும் கிடையாது. அதிலும் ஒட்டகத்தைப்போல், மனிதனுக்குக் கீழ்ப்பட்டிருக்கின்ற மிருகங்கள் பலவற்றுள்ளும் உபயோகமான பிராணி எது இருக்கின்றது? நீ பழித்துப்பேசும் திமிலும் வேண்டுமென்றே கடவுள் அதற்குக் கொடுத்திருக்கிறார். அது மட்டும் கொடுபட்டிராவிட்டால் உள்ளபடியே அதின் கதி அதோகதி தான். அந்தத் திமிலால் அதற்கு அதிக உபயோகமுண்டு. திமில் அவ்வளவும் அவ்வளவு கொழுப்பென்றே அறி, ஆகாரம் எப்பொழுதுமா ஒட்டகத்திற்குக் கிடைத்துக்கொண்

டிருக்கும்? உணவு கிடையாக் காலங்களில் அக்கொழுப்பே கரைந்து சிறந்தவுணவாகி ஆபத்திற்குதவி ஒட்டகத்தைப் போஷிப்பது.

மகள்:—ஆ! அப்படியா? இனி நான் எதையும் இழித்துப்பேசேன். மனிதனுக் கடங்கி நிற்கும் பிராணிகளில் ஒட்டகம் அதிகப் பிரயோஜனமானது என்றீர்களே. அதன் கருத்து எனக்கு விளங்கவில்லையே. யானை, கழுதை, குதிரை, மாடு முதலியவற்றைக்காட்டிலும் ஒட்டகம் எவ்விதத்தில் உபயோகமுள்ளது?

தாய்:—எப்படியா? கேள், "யானையைக்கட்டி தீனிபோட யாரால் முடியும்?" பழமொழி கேட்டிருக்கிறாய் அல்லவா? யானை தின்னும் தீனியில் இருபதில் ஒரு பங்குகூட ஒட்டகத்திற்கு வேண்டியதில்லை. இவ்வற்பத் தீனியைத்தின்று அது சாதாரணமாக ஒரு யானை செய்யக்கூடிய வேலையைச் செய்யுமென்றால் அதிகமாய்ச் சொல்வானேன்? இரட்டோ? நீ சொல்லும் குதிரை கழுதை மாடு ஆடு முதலிய நான்கினாலும் உண்டாகும் உபயோகமும் ஒட்டகம் ஒன்றினால் உண்டாகும் உபயோகத்திற்குச் சரி என்னலாம். எப்படி என்று கேட்பாயே இரண்டு குதிரைகள் அல்லது கழுதைகள் சுமக்கும் சுமைக்குக் குறையாமல் ஓர் ஒட்டகம், குதிரை தின்னும் தீனியினும் குறைவாய்த்தின்று, சுமந்து செல்லும். பசுவைக்காட்டிலும் ஒட்டகை அதிக காலம் பால் கொடுக்கும். அன்றியும் ஆட்டுரோமத்திலும் அதன் ரோமம் வேலைக்கு அதிக உபயோகமுள்ளது. இவ்வளவு தான் இதன் உபயோகமென்றெண்ணவேண்டாம். பிற்பாடு இதைப்பற்றி அதிகமாய்ச் சொல்வேன். ஆனால் ஒரு விஷயம் சொல்லித் தீரவேண்டியிருக்கிறது. அது என்னவெனில், நீ சொல்லும் பிராணிகள் செய்யக்கூடிய வேலைகளை ஒட்டகம் செய்யும். ஆனால் ஒட்டகம் செய்யும் அதி உபயோகமான வேலை எந்தப் பிராணியும் செய்யாது என்பதே.

மகள்:—மற்றப் பிராணிகளால் முடியாமல் ஒட்டகத்தால் மட்டும் செய்யக்கூடிய வேலையாது?

தாய்:—சுடுமணல் நிறைந்த பாலைவனங்களின் வழியாய் சுமையெடுத்துச் செல்வதற்குத் தகுதியான பிராணி ஒட்டகம் ஒன்று தான். ஒட்டகம் மட்டும் இல்லாவிடில், ஆபிரிக்காவிலும் அராபியாவிலும் வாசமாயுள்ளோர் அங்கங்கே போக்கு வரவு முதலியன செய்யவாவது நாகரீகம் அடையவாவது முடியாது.

மகள்:—அம்மா! தாங்கள் சொல்வனவற்றை நன்றாய் விளக்கி விஸ்தரித்துக்கூற வேண்டுகிறேன், போக்கு வரவிற்கு யானை குதிரை முதலியன ஏன் பயன்படா?

தாய்:—நான் சொல்வனவற்றை நன்றாய் கவனித்துக்கேள் ஒட்டகத்தின் கால்களைப்பார்த்தாயா?

மகள்:—ஆம்.

தாய்:—அவைகள் எப்படியிருக்கின்றன?

மகள்:—அவைகள் பார்வைக்குக் கடற்பஞ்சுபோல் மிருதுவாகவும் தரையில் பாதம்படும்பொழுது அவை முன்னிலும் அதிகமாய்ப் பரவுவதுபோலும் காணப்படுகிறது.

தாய்:—உண்மையே. இப்பொழுது யோசித்துப்பார். பாலைவனத்தின் தன்மை உனக்குச் சிறிதேனும் தெரியுமே. அதில் உள்ள மணல் இறுகியிராமல் உதிரியாக இருப்பதால் குறுகிய கூர்மையான கால்களையுடைய குதிரைகள், மாடுகள் முதலியன நடமாடும்பொழுது அவற்றின் கால்கள் புது புது என்று உள்ளுக்கு வாங்கி மணலில் பதிந்துகொள்ளுமன்றோ? ஆகையால் விசாலித்த காலையுடைய ஓர் பிராணியால் தானே அதில் சுலபமாக நடமாடக்கூடும். தவிரவும்,



மகள்:—அப்படியானால் யானைக்கு ஒட்டகத்தினும் விசாலித்த கால் உள்ளதே; அது பாலைவனப் பிரயாணத்திற்கு ஏன் பிரயோஜனப்படாது?

தாய்:—நான் சொல்லி முடிப்பதற்குள் அவசரப்படுகிறாயே. ஒட்டகத்தின் கால்களைப்போல் சுருங்கிப்பரவும் தன்மையுடையனவா யானையின் கால்கள்? மேலும் "சுடுமணல் நிறைந்த பாலைவனங்கள்" என்று நான் சொன்னதை மறந்துவிட்டாயே. கால் கொப்புளிக்கக் கூடிய கன உஷ்ணத்தில் யானை வீறிட்டுக் கதறுமே யன்றி அதனால் அடியெடுத்து வைக்கலாகுமா? பரவும் தன்மையுடைய பாதங்களிருத்தல் ஒன்றினால் மட்டும் ஒட்டகம் பாலைவனப் பிரயாணத்திற் கமைந்தது என்று எண்ணிவிடாதே. பிற காரணங்களும் உள. அவற்றை கவனமாய்க்கேள். அதன் தலையைக் கவனித்தாயா?

மகள்:—ஆம் அம்மா! அது அண்ணாந்து எப்பொழுதும் தன் தலையைத்தூக்கி நின்ற வண்ணமாகவே இருக்கிறது.

தாய்:—ஏன் அது அப்படி நிற்கிறதென்றெண்ணுகிறாய்?

மகள்:—ஏன் அம்மா அப்படி நிற்கிறது?

தாய்:—காற்றில் எத்தனை தூசிகள் பறந்து நாசிக்குள் நுழையக்கூடும்? அவை நுழையாதிருப்பதற்காகவே; சாதாரணமாய் வெறும் தூசிகள் நுழைந்து நம்மை எவ்வளவு உபத்திரவப் படுத்துகிறது! பாலைவனங்களைப் பற்றிச் சொல்லவாவேண்டும்! இருந்தாற்போலிருந்து திடீரென்று விஷத்தன்மையோடு கூடிய சுடுகாற்றுகள் கிளம்பி பாலைவன மணல்களைப் பலதிக்குகளிலும் சிதற அடித்து சகிக்கமுடியாத வேகத்துடன் வீசும். இச்சமயங்களில் நீ சொல்லுகிறபடி வேறு பிராணிகளின் கதி என்ன ஆகும்? யாவும் மூச்சடைத்துச் சாகவேண்டி வருமன்றோ? ஆனால் ஒட்டகம் மாத்திரம் ஏன் சாகாது? என்பாயே. காரணம் சொல்லுகிறேன் கேள். அதன் நாசித்துவாரங்கள் மெல்லிய தோலினாலாகிய கதவுகள் அல்லது அடைப்புகள் கொண்டன. இவ்வக்கனிக் காற்றடிக்கும்பொழுது இக்கதவுகள் தூசி மணல்கள் முதலியன உட்செல்லாமலும் மூச்சடைத்துச் சாகாமலும் இருக்குமாறு நாசித்துவாரங்களை மூடிக்கொள்ளும். இவ்வாறு தனக்கு இஷ்டமானபோதெல்லாம் மூடிக்கொள்ளக் கூடிய கதவுகள் பிறபிராணிகளுக்கு உண்டா? நல்லது இருக்கட்டும். அதன் பற்களைப் பார்த்தனையா?

மகள்:—ஆம் பார்த்தேன். அவைகள் கூர்மையாகவும் வலிமையுள்ளனவாகவும் காணப்பட்டன. என்ன அம்மா! முதலில் மிருதுவான தழைகளையும் பசும் புல்லையும் இது தின்றுக்கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஒட்டகக்காரன் காய்ந்து உலர்ந்து கருக்கும் முள்ளும்வாய்ந்த பூண்டுகளையும் வேப்பிலைகளையும் அதற்குப்போட்டான். என்ன ஆச்சரியம் பாருங்கள்! இவ்வொட்டகம் மிருதுவான புல் தழை முதலியனவற்றைத் தின்பதை நிறுத்தி இக்கருக்கும் முள்ளும் உள்ள காய்ந்த செடிகளைக் கடக்குக் கடக்கு என்று அதிக ஆவலுடனும் சந்தோஷத்துடனும் கடித்துத் தின்ன ஆரம்பித்துவிட்டது. அதன் பல் எவ்வளவு கூர்மையாய் இருக்கவேண்டும்! அது ஏன் அம்மா நன்றாய்ச் செழித்துருசியுடன் கூட இருப்பனவற்றைக் கொண்டாட்டத்துடன் தின்னாமல் அருவருத்துஒதுக்கக்கூடியவற்றை ஆவலுடன் உண்ணுகிறது? இதைக் கண்டால் யாருக்குத்தான் சிரிப்பு வராது? எல்லாரும் சிரித்தார்கள். இதை முதல் முதல் எங்களுக்குக் காண்பித்தவள் ஏழாவது வகுப்பில் வாசிக்கிறாள் பாருங்கள் எஸ். சீதா என்கிறவள். அவள்தான். அவள் அகிலாண்டத்தைப்பார்த்து "அடியே! அடியே. 'திருவினும் நல்லாள் மனைக்கிழத்தியேனும்' என்று நாம் முந்தைநாள் படித்த பாட்டுக்கு உதாரணம் இதோபார் இவ்வொட்டகத்தை" என்றனள். "எதற்காக அப்படிச் சொல்லுகிறாய்? ஒட்டகத்திற்கும் அப்பாட்டிற்கும் சம்பந்தம் என்ன? அது என்ன

பாட்டு? அதற்கு அர்த்தம் என்ன?" என்று நான் சீதையைக் கேட்டேன். அவள் "இப்பொழுது சொன்னால் உனக்குத் தெரியாது" என்றாள். அகிலாண்டமும் அப்படியே சொல்லிவிட்டாள். சீதை எதற்காக அம்மா அப்படிச் சொன்னாள்? உங்களுக்குத் தெரியுமா?

தாய்:—சீதை சொன்னது உண்மையே. ஆயினும் நீ அதை அறிந்துகொள்ள ஆசைப்படுவதனால் என்னால் கூடியமட்டும் நீ அறிந்துகொள்ளும்படியாய்ச் சொல்லுகிறேன். "திருவினும் நல்லாள் மனைக்கிழத்தியேனும்" என்பது ஓர் வெண்பாவின் முதல் அடி.

"திருவினும் நல்லாள் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பார் - நறவிய
வாயினவேனும் உமிழ்ந்து கடுத்தின்னும்
தீயவிலங்கிற் சிலர்".—என்பதே முழுப்பாட்டும்.

இனி இதன் கருத்தை கூறுகிறேன்:—"ஸ்ரீமகாலக்ஷ்மியைக்காட்டிலும் அழகு குணம் முதலியன உள்ளவளாய்த் தங்கள் சொந்த மனைவிமார் இருப்பினும் அவர்களை விரும்பாது மூதேவிக்கும் மூத்தவர்களாய் உள்ள அயலார் மனைவியைத் தங்களுக்குள்ள எல்லாப் பெருமையும் கெட அடைய விரும்பித் திரியும் அயோக்கியர்கள் எத்தனை பேர்கள் இருக்கின்றனர். இவ் வயோக்கியர்களும், கரும்பு முதலிய இனிமையான பொருள்கள் வாயில் இருந்தும் அவற்றை உமிழ்ந்து கசப்பான பதார்த்தங்களை ஆவலுடன் உண்ணும் அறிவிலாப் பிராணிகளாகிய சில துஷ்ட மிருகங்களும் சரியே." இதுவே இப்பாட்டின் கருத்து.

மகள்—:ஒரு காரியத்திற்காக சந்தோஷப்படுகிறேன். சீதையும் அகிலாண்டமும் எனக்குப் புரியாது என்று சொன்ன பாட்டையும் அர்த்தத்தையும் நன்றாய் அறிந்துகொண்டேன். இவ் வற்புதப் பிராணியைப்பற்றி மீதியும் சொல்லுங்கள்.

(இன்னும் வரும்.)

M. கோபால கிருஷ்ணையர்,
மதுரையாளவர் செந்தமிழ்ச் சங்கத்து
அக்ராஸநாதிபதி.

# * ஒரு வழிப்பறி மகரிஷியானது.

வால்மீகி என்னுங் கவிசிரேஷ்டர் பிராம்மண குலத்திற் பிறந்து முதலில் ரத்னாகரர் என்னும் பெயரை யடைந்தவர். அவர் ஓர் இழிகுலத்திற் பிறந்த ஸ்திரீயை மணம்புரிந்து கொண்டு, தன் பந்துமித்திரர்களை விட்டுச் சென்று, வழிப்பறிக்கொள்ளையினால் ஜீவனஞ்செய்யத் தலைப்பட்டனர்.

ஒரு நாள் தற்செயலாய்ச் சில சன்னியாசிகள் இவன் போகும் வழியில் எதிர்ப்பட இவன், அவர்களைத் தங்களிடமிருக்கும் சொத்துகளெல்லாவற்றையுங் கொடாவிடில் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்தினான். அப்பரிதாபமுள்ள முனி சிரேஷ்டர்கள், இவன் பூநூல் தரித்திருப்பதைப் பார்த்து "நீ பிராம்மணவேஷம் போட்டுக்கொண்டு, இக்கொடியகாரியங்களைச் செய்வதில், உனக்கு என்ன திருப்தி" என்று கேட்க, அதற்கு ரத்னாகரர் "எனது

* Translated from the "Hindu College Magazine".



மனைவியையும் குழந்தைகளையும் ரட்சிக்க, இப்படிப் பிரயாணிகளை வழிப்பறித்தும், கொடாதவர்களைக் கொன்று அவர்களது சொத்தைக்கைக்கொண்டும் வருகிறேன்" என்றான். அதற்கு அம்முனிவர்கள் "இப்பொழுது, நாங்கள், எங்களிடமிருப்பனவற்றைக் கொடுப்பதில் ஆட்சேபணையில்லை, ஆனால் நீ முதலில் உன் மனைவிபுத்திரர்களிடம் போய், நீசெய்யுங் கொடியதொழில்களின் பலனை அவர்களும் சரிபாகம் பெற்றுக்கொள்ளுவார்களாவென்று விசாரித்து வந்துசொல்லு. நீ திரும்பிவருவதற்குள் நாங்கள் ஓடிப்போவோமென்று சந்தேகப்பட்டால், எங்களை இவ்விடமுள்ள மரங்களோடு சேர்த்துக் கட்டிவிட்டுப்போ" என்றார்கள்.

ரத்னாகரர் யோசித்துப், பிறகு அவர்கள் சொல்லியபடி, அங்குள்ள மரங்களோடு அவர்களைச் சேர்த்துக் கட்டிவிட்டுத் தன் மனைவி குழந்தைகளிடம் போய்க் கேட்டான்.

அதற்கு அவர் மனைவி "நீ எப்படிச் சம்பாதிப்பாயோ எனக்குத் தெரியாது. நான் உனக்கு வாழ்க்கைப்பட்டதினால், எனக்கு அன்ன வஸ்திரம் கொடுத்து ரட்சிப்பது உன் கடமை. அப்படியிருக்க நீசெய்யும் பாபத்தை நான் ஏன் பெற்றுக்கொள்ளுவேன்? அதுவுமன்னியில் உனக்குப் பிறந்த குழந்தைகளும் உன்னால் காப்பாற்றப் படவேண்டுவன. நீ செய்யுந் தீத்தொழில்களின் பலனை அவர்களேன் அனுபவிப்பார்கள்" என்றாள்.

இக்கடூரமான வார்த்தைகளைக் கேட்ட ரத்னாகரர், மலையின் உச்சியிலிருந்து விழுந்தவனைப்போல் திடுக்கிட்டு, உடனே அவர்களை விட்டு, அக்காட்டுக்குப்போய், அவ்விடம் கட்டுண்டிருக்கும் முனிவர்களை அவிழ்த்துவிட்டு அவர் காலில் விழுந்து முறையிட்டுத் தனக்கு முக்தியைக்கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான்.

புண்ணியாத்மாக்களான அம்முனிவர்கள், இவன்மேற் பரிதபித்து, கொடுந்தொழில்களால் கெட்டிருக்கும் இவன் மனது வேதாந்த விஷயங்களை அறியவல்லதல்லவென்று அறிந்து, மிக்கபரிசுத்தமான "ராம" நாமத்தை ஒரே கவனமாக ஜெபம் செய்யும்படியும், அது அவன் செய்த பாபம் முழுதையும் அழிக்குமென்றுஞ் சொன்னார்கள்.

அப்படியே ரத்னாகரர் அப்பரிசுத்தமான வார்த்தையை உச்சரிக்கமுயல, அவர்வாயில் அது வரவில்லை. பிறகு, அவர் மிக்கச் சுலபமாய் உச்சரிக்கக்கூடிய "மரா" "மரா" என்னும் வார்த்தையையாவது ஓயாமல் ஜெபஞ்செய்யும்படி அந்தரிஷிகள் அவனோடுசொல்ல அப்படியே ரத்னாகரர் பிடிவாதமாய் உட்கார்ந்துகொண்டு, அன்னம், நீர் இல்லாமலே ராமஜெபம் செய்ய ஆரம்பித்தார். நாளாவர்த்தியில், அவர் உடம்பு முழுதும், கரையான் கூடுகட்டி, ஓர் மண்முட்டும்போல ஆய்விட்டது. அப்படி யிருந்தும், அவர் அந்நாமத்தை விடாமல் உச்சரித்துக் கொண்டே யிருந்தார்.

சிலகாலஞ் சென்றபின்பு, அம்முனிவர்கள் ஒருநாள் அதேவழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது, ஒரு மட்குவியலில் இருந்து "ராம, ராம" என்னுஞ் சப்தம்வந்து கொண்டிருப்பதைப் பார்க்க, அவர்களுக்கு, முன் தாங்கள் ரத்னாகரருக்கு ராம நாமம் உபதேசித்த சங்கதி நினைவிற்குவந்தது. உடனே அம்மட்குவியலைத் தட்டி உள்ளேயிருக்கும் ரத்னாகரரை யெடுத்துத், தங்கள் மந்திரபலத்தினால் அவரது உடம்பைச் சரியாக்கி, அவரது மனதை

அவர் சுவாதீனத்திற்குக் கொணர்ந்து வைத்து, அவருக்கு வால்மீகி யென்னும் பெயரை யிட்டார். அதுமுதல் அவர் முனிசிரேஷ்டராய்க் கொஞ்சநாளில் கவிசிரேஷ்டராயும் ஆயினர்.

ஒவ்வொருவரும் ரத்னாகரரைப்போல் உலகத்தை முழுதும் விட்டுத் துரந்துத் தனியாய்க் கடவுளைத் தியானிக்க வேண்டுமென்பது அவசிகமில்லை. அப்படிச் செய்வதும் ஒவ்வொருவருக்கும் சாத்தியமல்ல. ஆனால் நாம் செய்யவேண்டுவ தென்னவெனில், நமது உடம்போடு பிறந்து உடம்போடு கெடும் குணங்களை, காயத்தை விட்டுத்தாண்டி ஜீவாத்மாவைப் போய்ப் பற்றாமல் காக்கவேணும்.

இக்காயம் உலகப்பற்றுக்களுக்குச் சொந்தமென்றும், ஜீவாத்மா கடவுளுக்குச் சொந்தமென்றுஞ் சொல்லப்படும். ஆகையால் இக்காயம், தன்னைச் சேர்ந்த குணங்களின் பொருட்டும், ஜீவாத்மா கடவுளின் பொருட்டும் வேலைசெய்ய வேண்டும்.

தலையில் குடத்தை வைத்துக்கொண்டிருக்கும் ஒருஸ்திரீ, தன்மனதை அக்குடத்தின் பேரிலேயே செலுத்துவதுபோலும், சேற்றிலிருந்து பிறக்கும் தாமரைப்பூ அதைவிட்டு விலகி நிற்பதைப்போலவும், நாம்நமது மனதை இவ்வுலகப்பற்று நின்றும் விலக்கி வைப்பது அவசியம். நாம், நமது மனதாகிய கிண்ணத்தினின்று மயக்கத்தைத்தரும் சாராயத்தைப்போன்ற கெட்ட இச்சைகளைத் தள்ளிவிட்டு, சத்தியம் என்னும் நீரினால் கழுவிச் சுத்திசெய்து கடவுளின் கைங்கிரியம், அவர்மேல் அன்பு மரியாதையென்னும் அமிர்தத்தினால் அக்கிண்ணத்தை நிரப்பிக்கொண்டு, அதினின்றும் ஒருதுளிகூடக் கீழே விழாமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்து இவ்வுலகத்தில் நடக்கவேண்டும். இப்படிப்பட்ட அமிர்தத்தை பொத்த ஆத்மாவைப் பெறின், நாம் ஒருவித இடையூறும், கவலையுமின்றி எப்பொழுதும் இன்பத்தை யனுபவிப்பது நிச்சயம்.

E. சுப்பிரமணியம், பி-ஏ.

# ஸ்திரீரத்தினம்.

## 4-வது அதிகாரம்.

தர்மசீலன்:—தன்வீட்டில் ஓர் அறையில் சுற்றிலும் தன் புஸ்தகங்கள் அலமாரியில் அடுக்கியிருக்க, அவைகளையே பார்த்துக் கொண்டு தீர்க்காலோசனையில் மூழ்கி யிருந்தான். கடைசியில் திடீரென்று நிமிர்ந்து உட்கார்ந்து, நல்லது நமது விஜயபுரம் தன் தூக்கத்தைவிட்டு எழுந்திருக்கும்படி செய்ய சமயம் சமீபித்து விட்டது. அநியாயத்தை நியாயம் பயந்தோடச் செய்யவும் மனிதர்கள் பயமின்றி விஜயபுரத்தில் உலாவுவதற்கும் காலம் வந்துவிட்டது. விஜயபுரத்தில் ஜனங்கள் என்கிற பெயருக்கே ஒரு மரியாதை உண்டாகப் போகிறது. அந்த ஜயத்துக்கு நான் தான் காரணமா யிருக்கப்போகிறேன். நான் தான் முதல் முதல் ஜனங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்கப்போகிறேன். நான் தான் முதல் முதல் விஜயபுரத்தின் கொடியை எடுத்துக்கொண்டு வெற்றியோடு முன் செல்லப் போகிறேன். நான் இப்பொழுதே என்



மனதாகிய மலையிலிருந்து பார்ப்பதுபோல விஜயபுரி ஜனங்களுக்கு அதிகாரம் வருவதையும், இந்த தேசத்தின் கீர்த்தி எங்கும் பரவுகிறதையும் பின்னால் ஜனங்கள் இதற்கெல்லாம் காரணமா யிருக்கிறதையும் என்னைக் கொண்டாடுவதையும் பார்க்கிறேன். இப்படி தனக்குத்தானே சொல்லிக்கொண்டு தர்மசீலன் மிகுந்த ஆவலோடும் மனக்கவலையோடும் தன் அறையில் யோஜித்துக்கொண்டே இங்கு மங்கும் உலாத்திக்கொண்டிருந்தான். இப்படி யிருக்க வாசல் கதவை யாரோ தட்டுகிற சப்தம் காதில் பட்டது. இவன் கதவைத் திறக்க இவன் சிநேகிதனாகிய துஷ்டபுத்தி உள்ளேநுழைந்தான்.

தர்மசீலன்:—துஷ்டபுத்தி! நீவரவேண்டும். இந்த சமயத்தில்நீ இவ்விடம் வந்ததைப் பற்றி என் சந்தோஷம் இவ்வளவு என்று நான் சொல்லி முடியாது. நீ இவ்விடம் வராமலிருந்தால் நான் உனக்கு இன்னேரம் ஆள் அனுப்பி யிருப்பேன். இருக்கட்டும் ஏதாவது விசேஷமுண்டா ?

துஷ்டபுத்தி:—நேற்றையதினம் சாயந்திரம் சமுத்திரக்கரையில் விசித்திரப் பிரபுமுன்பாகவே அவன் சிப்பாய்கள் வழியில் சென்ற ஓர் பெண்ணை இழுத்துக்கொண்டு சென்றார்கள்.

தர்மசீலன்:—விசித்ரவன் ஒன்றும் சொல்லவில்லையா? ஆனால்அவ்வளவிற்குகூட துணிந்துவிட்டானா? அப்பொழுது நாமும் இனிமேல் தாமதிக்கக்கூடாது; நம்மால் என்று சொல்வதற்குள், துஷ்டபுத்தி—நாம் என்ன செய்கிறது? தர்மசீலா! நீ உன் கினவுகளையெல்லாம் விட்டுவிட்டு விழித்துக்கொண்டு நம்மால் யதார்த்தமாகச் செய்யக்கூடிய காரியத்தை யோசிக்கவேண்டும். மனக்கோட்டைகட்டுவதில் என்ன பிரயோசனம்? எவ்வளவோ சைன்னியங்களோடு பலமாக இருக்கிற பிரபுக்களோடு நாம் என்ன செய்கிறது?

தர்மசீலன்:—துஷ்டபுத்தி! உன்னைப்போலொத்தவர்களுக்கு என்றைக்கு ஜனங்களை நன்றாய் அறியும் படியான சக்தி வரப்போகிறதோ தெரியவில்லை? உயரமான மலைச் சிகரத்திலிருந்து, கீழே யார் பலர்களுக்கு எப்படி பூமியிருக்கும்படியான புல் பூண்டுகளும் அழகிய செடிகளும் தெரியாமல் மேகம் மட்டும் ஒரே சமுத்திரம்போல தெரியுமோ அதேமாதிரி உங்களுக்கெல்லாம் ஜனங்களுக்குள் நடக்கிறது இன்னதென்று தெரிகிறதில்லை. கொஞ்சம் மேகத்துக்கும் கீழாக இறங்கினவர்களுக்கு பூமியின் அழகு விளங்குவதுபோல எனக்கு ஜனங்களின் நடவடிக்கைகளும் அவர்கள் மனதும் தெரிகிறது. துஷ்டபுத்தி, பயப்படாதே பொறுமையென்பது பொறுக்கமுடியும் வரையில்தான் செல்லும். அதற்குமேல் செல்லாது. அப்படிப்பட்ட சமயம் இதோ சீக்கிரத்தில் வந்துவிட்டது. விஜபபுரம் தன் சத்துருக்களுக்கு விரோதமாய் கிளம்பும் சமயம் எப்பொழுது கிடைக்குமென்று பார்த்துக் கொண்டிருக்கிறது?

துஷ்டபுத்தி:—ஆனால் விஜயபுரத்துஜனங்களை நம்பியா இவ்வளவும் செய்கிறாயா? இவர்கள் தைரியமும் மன உறுதியுமில்லாதவர்களே.

தர்மசீலன்:—துஷ்டபுத்தி! என்னைச் சுற்றியிருக்கிற ஜனங்கள் சாமானியரல்லவென்று நினைத்துக்கொள். நான் பிரபுக்கள் எதிரிலேயே அவர்களை என் இஷ்டப்படி திட்டுவதை நீ பார்த்திருக்கிறாய், அவர்கள் இதையெல்லாம் கேட்டு என்னை மன்னித்து விட்டார்களென்று நினைக்கிறாயா? ஒருபோதுமில்லை. ஜனங்கள்மட்டும் பெயருக்குமாத்திரம் என் கக்ஷியிலிருந்தால் அவ

ர்கள் இத்தனை நாளில் என்னை கொன்றிருப்பார்களே, அல்லது ஜயிலுக்காவலு அனுப்பி யிருப்பார்களே; விஜயபுரம் முழுவதும் புதிதாக மாறியிருக்கிறதென்பது உனக்குத்தெரியாது. எனக்கு கத்தியும்வேண்டாம், வேறு ஆயுதங்களும்வேண்டாம். இதையெல்லாம் தோற்கடிக்கக்கூடிய மனது என்கிற ஆயுதத்தை இவ்விஜயபுரத்தில் ஒவ்வொருவருக்கும் நான் கொடுத்திருக்கிறேன். இனி நான் அதிகமாகச் சொல்லவேண்டுவதில்லை. துஷ்டபுத்தி விஜயபுரத்தில் இப்பிரபுக்களைத் தவிர என்னிடத்தில் தன்மனதையும் கத்தியையும் கொடுக்காதவன் ஒருவனுமில்லை. சகலஜாதியாரும் சகல கைத்தொழில்காரர்களும் சகல வியாபாரிகளும் தன் பெண்சாதி பிள்ளைகளுடன் தர்மசீலனோடு சேர்ந்து தன் தேசத்தை ஜயிக்கிறது அல்லது உயிரை விடுகிறது என்று நிர்மானித்திருக்கிறார்கள்.

துஷ்டபுத்தி:—அப்படியானால் நானும் என்னால் கூடியதைச் செய்யத் தயாராயிருக்கிறேன். இது முதல் நானும் உன் அடிமை.

தர்மசீலன்:—துஷ்டபுத்தி நீ எப்பொழுது எனக்குச் சகாயமாகச் சேர்ந்தாயோ அப்பொழுதே நமது யோஜனைகள் முடிகிறசமயம் வந்துவிட்டது. இச்சமயம் முதலே அந்த வேலை ஆரம்பித்துவிட்டதென்று நினைத்துக்கொள் என்றான். பிறகு துஷ்டபுத்தி நான் வந்து நாழிகையாய்விட்டது சென்றுவருகிறேனென்று சொல்லி எழுந்திருப்பதற்குள் ஒரு ஸ்திரீ அவசரமாகவும் அலங்கோலமாகவும் ஓடிவந்து தர்மசீலன் காலில் வந்து விழுந்து, ஐயா! எழுந்திரும், ஓடும் இல்லாமற்போனால் நமது குழந்தை பத்மாவதி தப்புவது கஷ்டம் என்றாள். தர்மசீலன் அவளைப் பார்த்து, சித்திரரேகா! நீ என்ன உளருகிறாய்? குழந்தை பத்மாவதி உள்ளேயில்லையா? சித்ரரேகா இல்லை ஐயா! நிற்குணன்! நிற்குணன்!

தர்மசீலன்:—நிற்குணனைப்பற்றி என்ன சீக்கிரம் சொல்; சித்திரரேகா மேல்மூச்சு கீழ்மூச்சுவாங்கி உளரிக்கொண்டு நிற்குணன் பத்மாவதியைப்பிடித்ததையும் சண்டை ஆரம்பித்ததையும் தான் பார்த்தவரையில் சொல்லி பத்மாவதிக்கு பிறகு என்ன நேர்ந்ததோ தனக்குத்தெரியாதென்று சொன்னாள். தர்மசீலன் ஒன்றும் பேசாமல் கவனித்தான். ஆனால் கேட்கும்போதே அவன் கண் சிவந்ததும் உதடு துடித்ததும் அவன் கோபத்தை வெளியிட்டன. சித்ரரேகை பேசி முடிந்தபிறகு,

தர்மசீலன்:—துஷ்டபுத்தி! விஜயபுரத்து ஜனங்களைக் கண்டால் இப்பிரபுக்களுக்கு எவ்வளவு அலக்ஷியமாயிருக்கிறது! பார்த்தனையா-யாரடா என் கத்தியைக் கொண்டுவா சீக்கிரம் என்று சொல்லி ஓட ஆரம்பித்தான்.

துஷ்டபுத்தி:—ஆனால் நீ இப்பொழுது எங்கு போகிறாயென்றான்?

தர்மசீலன்:—துஷ்டபுத்தி நீஎன்னை எங்குபோகிறாயென்றல்லவா கேட்கிறாய்! உனக்கும் ஓர் தங்கையிருந்தால் நீ இப்படி கேட்டிருக்கமாட்டாய். இருக்கட்டும் நான் நிற்குணன் வீட்டுக்குப்போகிறேன் என்றான். துஷ்டபுத்தி நிற்குணன்வீட்டுக்குத் தனியாகப்போகலாமாஎன்று சொல்வதற்குள் தர்மசீலன் கத்தியை வாங்கிக்கொண்டு பழிக்குப்பழிவாங்க ஒருவன் போதுமென்று சொல்லி ஓடினான். பிறகு துஷ்டபுத்தி இவனை இப்படி தனியாக நிற்குணன் வீட்டுக்கு அனுப்புவது சரியல்லவென்று நினைத்து தர்மசீலன் ஆள்களைக் கூப்பிட்டு, உங்கள் யஜமானி க்ஷேமமாய் வந்துசேருவாள். சீக்கி



ரம் நிவர்த்தி வெளிச்சத்தோடு நிற்குணன்வீட்டுக்குச் செல்லுங்கள் என்று சொல்லி அவர்களை அனுப்பினான். இதுநிற்க, உத்தமசேனன் கொஞ்சம் கொஞ்சமாக மூர்ச்சைதெளிந்து கொண்டுவரும் பத்மாவதியின் சமீபத்தில் உட்கார்ந்து அவளையும் அவளுடைய அழகையுமே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். கடைசியில் பத்மாவதி தற்செயலாய் உத்தமசேனனைப்பார்த்துக்கொண்டே கண்களை விழித்துக்கொண்டு சித்தரரேகா நீ எங்கேயிருக்கிறாய், அடிசித்தரரேகா நான் ஒரு நல்ல கினவுகண்டேனடி என்றாள்.

உத்தமசேனன்:—தன்மனதிற்குள்நானும் உன்னைப்பற்றித்தான் கினவு கண்டேன் என்று நினைத்துக்கொண்டான்.

உடனே பத்மாவதி படுக்கையைவிட்டெழுந்து சுற்றிலும் பார்த்து ஓகோ நான் எங்கே யிருக்கிறேன்? இது யார் வீடு? நான் ஏதாவது கினவு காண்கிறேனா என்ன? இந்த அறையினுடைய அழகைத்தான் நான் என்னவென்று சொல்லட்டும் ஒன்றும் தெரியவில்லையே. பகவானே என்று சொல்லும்போது உத்தமசேனனைப் பார்த்து திடுக்கிட்டு இது யார்? உத்தமசேனபிரபு வல்லவா! ஆகா! இதென்ன ஆச்சரியம்!

உத்தமசேனன்:—பெண்ணே! என் பெயரைச் சொல்லும்போதே நடுங்குகிறாயே. என் பெயரைக் கேட்க உனக்கு ஏன் அவ்வளவு பயம்? அப்படி பயப்படும்படி யாராவது சொல்லிக் கொடுத்திருக்கிறார்களா? அப்படியானால் இதோ நான் அந்தப்பெயரை மாற்றிக்கொள்ளட்டுமா சொல். பத்மாவதி உடனே ரொம்ப வெட்கப்பட்டு ஒன்றும் பேசாமல் சற்று நின்றாள். ஆனால் அது தன் ஆசை நாயகனுடைய வார்த்தையை முதல் முதல்கேட்டதாலல்ல; அவள் மனக்குழப்பத்தினாலும் புதிதான இடத்தில் இருக்கிறோமே என்கிற பயத்தினாலும், பத்மாவதிக்கு வருத்தம் மேல் மேலும் அதிகரித்து உத்தமசேனன் மேலேசொன்னபடி சொல்லிக்கொண்டு பக்கத்தில் வரவும் அவன் எவ்வளவு நயமாயும் மரியாதையோடும் பேசியுங் கூட இவள் பயம் நீங்காமல் சுற்றிலும் தன்னைச்சேர்ந்தவர்கள் ஒருவருமில்லையா என்று பார்ப்பது போல பார்த்து, சற்று விலகிநின்று அழ ஆரம்பித்தாள். தன் ஆசைநாயகன் எதிரிலேயே இருக்கிறானே என்ற எண்ணம் கூட அவள் பயத்தில் அவளுக்கு வரவில்லை. உத்தம சேனன் இதைக்கண்டு பரிதபித்து கடைசியில் அவள் மனதை அறிந்துகொண்டு தான் அவளிடத்தில் இன்னும் தைரியமாய் நடந்துகொள்ளவதற்குச் செய்திருந்த யோசனைகளையெல்லாம்நிறுத்தி சற்று ஒன்றும் சொல்லத் தோன்றாதவனாக நின்றான். பிறகு சற்று நிதானித்து மனதைத் திடப்படுத்திக்கொண்டு, வணக்கமாய்அவள் பக்கத்தில் சென்று, பெண்ணே நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். இங்கே உனக்கு யாதொரு கெடுதலும் சம்பவிக்கமாட்டாது, சற்று யோஜித்துப்பார். உன்னை அந்த துஷ்டப்பயல் நிற்குணனிடமிருந்து நான்தான் விடுவித்து இங்கே எடுத்துவந்தேன். இந்த வீடு உன் சினேகிதன் வீடேயொழிய சத்துருவின் வீடல்ல. உன்னுடைய பெயரையும் உன்னுடைய இருப்பிடத்தையும் நீ சொன்னால் உன்னை ஜாக்கிரதையாய் உன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகிறேன் என்றான். பத்மாவதிக்கு கொஞ்சம் கொஞ்சமாய் தைரியம் வரவும், கண்ணீர்வடிவது நிற்கவும் தன் நிலைமையை அறிந்தாள். உத்தமசேனன் வார்த்தைகளையுங் கவனித்தாள். பிறகு கொஞ்சம் பயம் தெளியவே தான் மனதிலேயே தியானம் செய்துகொண்டிருந்த ஆசைநாயகன்

இந்தச்சமயத்தில் தன்னைக் காப்பாற்றினதற்கு நான் எவ்வளவு நன்றியறிதலுள்ளவளாக இருக்கவேண்டுமென்ற எண்ணம் மனதில்தோன்றி சந்தோஷத்தோடு தன் நன்றியறிதலைக் காட்டும்படியாக, ஐயா உங்களுக்கு நமஸ்காரம். ஒரு ஏழையை லக்ஷியம் செய்து காப்பாற்றினதற்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன் என்றாள்.

உத்தமசேனன்—பெண்ணே! நீ எனக்காக உபசாரங்கள் சொல்லவேண்டாம். உன் கையைத்தொட்டு, உன் முகத்தைப் பார்த்ததிலேயே, நான்பட்ட சிரமத்துக்கெல்லாம் பிரதி பிரயோஜனத்தை நானே அடைந்துவிட்டேன். இனிமேல் நான் தான் உனக்கு வந்தனம் அளிக்கவேண்டும்.

மறுபடியும் பத்மாவதி இதைக்கேட்டு முன்போல தலைகுனிந்தாள். ஆனால் இந்தத்தடவை பயத்தாலும் மனக்குழப்பத்தாலுமல்ல; பிறகு சற்று நிதானித்து உத்தமசேனனைப் பார்த்து, தாங்கள் எனக்குச் செய்த உபகாரத்தை எவ்வளவு சாதாரணமாகச் சொல்லிக்கொண்டபோதிலும் எனக்கு அது எவ்வளவோ உயர்த்தியாகத்தானிருக்கிறது. ஆனால் எனக்குத் தாங்கள் செய்த உதவி இன்னும் முடியவில்லை. அதை முடித்துவிடவேண்டும். என் கூடவந்த தோழியை இவ்விடத்தில் காணோம். என் வீடு பக்கத்திலேதானிருக்கிறது. அவளை எனக்குக் காண்பித்து என்னை வீட்டுக்கழைத்துக் கொண்டுபோகும்படி செய்யவேண்டும்.

உத்தமசேனன்:—பெண்ணே, உன் தோழியை இங்கேகாணோம்; அவள் சண்டை ஆரம்பிக்கும்பொழுதே பயந்து ஓடிப்போய்விட்டாளென்று தோன்றுகிறது. எனக்கோ அந்த சமயத்தில் நீ யாரென்று தெரியவில்லை. அந்தசமயத்தில் நீயோ மூர்ச்சைபோய்விட்டாய்; உன்னை ஒன்றும் கேட்கமுடியவில்லை. ஆதலால் உன்னை என் வீட்டுக்குக்கொண்டுவரும்படியான பாக்கியம் எனக்கு கிடைத்தது. இருக்கட்டும் நானே உன்னை உன் வீட்டுக்கு கூட்டிப்போகிறேன். ஏன் உன் உடம்பு நடுங்குகிறது? நான் தனிமையாய் உன்னைக் கூட்டிப்போகவில்லை. என் ஆள்களையும் கூடவே கூட்டி வருகிறேன்.

பத்மாவதி:—பிரபுவே! உங்களுக்கு வந்தனம். நான் தாங்கள் செய்த உபகாரத்துக்குச் சந்தோஷப்படுவதைவிட என் அண்ணன் இதைக்கேட்டால் அவர் என்னைப் பார்க்கிலும் எவ்வளவோ அதிகமாக விசுவாசமாயிருப்பார். அவரும் தங்களுக்குத் தெரிந்தவர்தான் என்று சொல்லிக் கொண்டே பத்மாவதி வீட்டிற்குப்போகத் தயாராய் வாசற்படிவரையில் போய்விட்டாள். உத்தமசேனன் இதைப்பார்த்து, பெண்ணே! என்னைவிட்டுப் பிரிவதில் உனக்கு வெகுத் திருப்தியாக இருப்பதுபோல தோன்றுகிறதே! அதற்குள்ளே வாசற்படிக்கு போய்விட்டாயே நீ என்னைவிட்டுப்போனால் சந்திரன் இரவைவிட்டுப்போனால் எப்படியிருக்குமோ அப்படி எனக்கு இருக்கும். நான் என்னசெய்வேன்? ஆனால் உன் மனங்கோணாமலிருப்பதே எனக்குச் சந்தோஷமாதலால் உன்னிஷ்டப்படியே செய்கிறேன். பத்மாவதி தலைகுனிந்து சிரித்துக்கொண்டாள். இதைக்கண்ட உத்தமசேனன் எண்ணம் நிறைவேறியதென்பதை அவள் முகக்குறியால் அறிந்துகொண்டு, அவள் அடிக்கடி கடைக்கண்ணால் இவனைப் பார்த்ததைக் கண்டு இன்னும் அதிகமாகச் சந்தோஷித்தான். உத்தமசேனன் பிறகு, அவளை விட மனமில்லாமல் மெள்ளமெள்ள கதவண்டைபோய் தன் ஆள்களைக் கூப்பிட்டுவிட்டு, படியில் நின்றுகொண்டே, பெண்ணே! சற்று முன் உனது சகோதிரன் எனக்கும் தெரி



ந்தவனென்று சொன்னாயே அவன் யார், விசித்திரவ பிரபுவுக்கு சினேகிதன்தானே.

S. இராமசுவாமிஐயர். பி. ஏ.

# அநந்த விருதம்.

—:0:—

முன்னொரு காலத்தில் மத்துவஜர் என்னும் முனிசிரேஷ்டர் சர்கசி என்னும் மனைவியுடன் இல்லறத்தை நடத்திவரும்பொழுது தன் முதல் மனைவியிடத்தில் பிறந்த குழந்தையாகிய சுசீலை யென்னும்பெண்குழந்தைப் பருவ முதல் ஈஸ்வரபக்தியுள்ளவளாய் தேவதாபூஜை செய்யும் தன் பிதாவுக்கு வேண்டிய சிஷ்ருஷை செய்துக்கொண்டு தன்பேருக்குத் தகுந்தபுத்தியுடையவளாயிருந்தாள். பிதா தன் குழந்தையினுடைய செய்கைகளைக் கண்டு "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை, சான்றோன் எனக்கேட்ட தாய்" என்று தன்குமாரத்தியின் புத்திவிசேஷத்தைப்பற்றி எண்ணி, மகிழ்ந்து அவளுக்குத் தகுந்தகணவனைத் தேடிக்கொண்டிருந்தார். இவர் மனைவியோ சண்டிகைதான். தன்கணவரிடத்தில் சதாசண்டையிட்டுக்கொண்டும் மகாபாதகியென்றும் பேர்பெற்றிருந்தாள். இப்படி யிருக்கும்நாளில் மத்துவஜர் கிரகத்திற்கு கௌண்டன்னிய ரென்னும் மகா தபசிரேஷ்டர் வர, அவர் வரவை நல்வரவென எண்ணி, அவரை மிக மரியாதையுடன் வரவழைத்து, தங்கள் வரவு என்மனை என்னபாக்கியம் செய்ததோவென்றுசொல்லி ஆசனத்திலிருத்தி தன் அருமைக்குமாரத்தியாகிய சுசீலையை யழைத்து கௌண்டன்னியர் பக்கத்தில் நிருத்தி, ஓ மகாரிஷியே! என் குமாரத்தியாகிய சுசீலையைஉமக்கு இஷ்டமுள்ள மனைவியாகவைத்துக்கொள்ளும்என்று சுசீலையின் கரத்தைப் பிடித்து கௌண்டின்னியருக்கு தாரைவார்த்துக் கொடுத்தார். அப்பொழுது கௌண்டன்னியர் ஈஸ்வரருடைய கிருபையால் அதிகுணவதியாகிய இல்லாள் கிடைத்தது பாக்கியமென்று மகிழ்ந்தார். மத்துவஜர் தன் செல்வக்குமாரத்தியையும் மருமகனையும் மணையிலிருத்தி விவாகச்சடங்குகளைத் தாமே முன்னின்று அதிகமகிழ்ச்சியுடன் நிறைவேற்றி தம் இல்லாளைப்பார்த்து நம்முடையகுழந்தைசுசீலையை அவளுடையபர்த்தாவுடன் அனுப்பவேண்டுமாதலால் சீதனமாக நீ என்னகொடுக்க இஷ்டப்படுகிறாயோ அவைகளைக்குழந்தைக்குகொடு என்றார். அதிகப்பொறாமையுள்ள சர்கசியும் இதுதான் கணவரிடம் சண்டையிட நல்லதருணமென்று உக்கிராணஉள்ளை மூடிக்கொண்டு என்னை ஒன்றும் கேட்கவேண்டாமென்று சொன்னாள். மத்துவஜர் இந்தப்பேயுடன் பேச இது தருணமல்ல, பர்த்தாவிற்குஏற்ற பதிவிரதையுண்டானால் எத்தாலும் கூடியிருக்கலாம் என்றுநினைத்து விசனமுற்று அவள் சொல்லை கவனியாமல் தம்முடைய குழந்தையின் கையில் க்ஷேமத்தைக்கோரிகொடுக்க எண்ணி ஔபாசனத்திற்கு வைத்துக்கொண்டிருந்த படி அரிசி தாம்பூலமும் வெல்லம் இவைகளை எடுத்து தன் குமாரத்தி மடியில் வைத்து என் செல்வமுள்ள குழந்தையே! நீ உன்பர்த்தாவினிடத்தில் அதிக அன்புள்ளவளாய் நடந்து, கடவுளுக்குச் செய்யவேண்டியதைத் தவறாமல் செய்து உத்தம மனைவியாக உன்பதியுடன் க்ஷேமமாகவிரு என்று ஆசீர்வதித்து கண்களில் ஆநந்தபாஷ்யம் சொரிய தம்பதிகளை இரதத்தில் ஏற்றி யமுனா நதிவழியாய் அவர்களுடைய ஆசிரமத்திற்கு அனுப்பினர்.

கௌண்டன்னியர் இல்லாளுடன் யமுனா நதியில் இரதத்தை நிறுத்தி ஸ்நானம் ஜபதபம் செய்ய கீழே யிறங்கினர். அந்த யமுனா தீர்த்தத்தில் அன்று அநேகஸ்திரீகள் புருஷர்கள் ஸ்நானஞ்செய்து அநந்தபத்மநாப கலசம்வைத்து பூஜை செய்துகொண்டிருந்தார்கள். சுசீலை தானும் இரதத்திலிருந்து கீழேயிறங்கி ஸ்நானம் ஜபம் செய்து அதிக பக்தியுடன் அநந்தபத்மநாபருக்கு பூசைசெய்து பட்டுக்கயிற்றை கையில்தரித்துக்கொண்டு, தன்னிடத்திலிருந்த அரிசி, வெல்லம், தாம்பூலம்முதலியவைகளை குருவுக்குக்கொடுத்தபின் இரதத்தில் ஏறிக்கொண்டாள். உடனே சதிபதிகளிருவரும் பிரயாணம் செய்தார்கள். இவர்கள் போகும் வழியில் பூஞ்சோலைகளும் நந்தவனங்களும் தேவாலயங்களும் சத்திரங்களும் பசுவர்க்கங்களும் எண்ணிக்கையில்லாமலிருந்ததைக்கண்டு கௌண்டின்னியர் மிகமகிழ்ந்து நாம்லட்சணமுள்ள மனைவியை யடைந்தபடியால் ஈசன் இவ்வளவு ஐசுவரியத்தை யளித்தாரென்று சந்தோஷித்து அவ்விடத்திலேயே நித்தியகருமங்களைச் செவ்வனே செய்துகொண்டு இல்லாளுடன் சுகமாககாலத்தைக் கழித்துவந்தார்.

இப்படி அநேகநாள் சென்றபின் ஒருதினம் தன் மனைவியின் கரத்தில் ஒருபட்டுக்கயிற்றைக்கண்டு அநேகஆபரமத்தியில்இந்த வெறுங்கயிற்றைவன் தரித்துக்கொண்டிருக்கிறயென, சதியானவள் பதியின் முகத்தை புன்சிரிப்புடன் நோக்கி, என்பிராணநாதா! இந்த ஐசுவரியமெல்லாம் ஸ்ரீ அநந்தபத்மநாபரை பூஜித்து வந்ததேயல்லாமல் மற்றெதினாலுமல்லவென்றாள். உடனே கௌண்டினியர் அதிக கோபங்கொண்டு பொல்லாத காலம் சொல்லாமல் முன்னிற்க, கெடுமதிகண்ணுக்குத்தோன்றுமல் தன்மனைவியின்கையிலுள்ள கயிற்றை அறுத்து நெருப்பில்போட்டுவிட்டார். சிலநாளில் இவர்களுடைய பொருள்களெல்லாம் திருடர்களாலும் அக்னியாலும் நாசமடைந்தன. வந்தபாக்கியங்களெல்லாம் மறைந்துவிடவே கௌண்டன்னியருக்கு பிரமஞானம் பிறந்து நாம் கடவுளைக்காணுமல் உயிர்தரிப்பதில்லையென்று வைராக்கியசித்தராய் தன் மனைவியை அவ்விடத்திலேயே இருக்கச் சொல்லி தாம் வனத்திற்குப் புறப்பட்டார். இவர்போகும் வழியில் மெய்மறந்து "தீன பந்து என்ற நாமமே! என்னை கானகத்தில்வந்துகாருமே. உன் தரிசனம் செய்ய என்முன் வாருமே" என்று சொல்லிக்கொண்டு கல்லிலும், முள்ளிலும், வெய்யிலிலும், மழையிலும் தேகஸ்மரணை யில்லாமல் ஜகதீசனைக் கொண்டாடிக்கொண்டு வருகின்ற கௌண்டன்னியருடைய பக்திக்கு இரங்கி பக்தவத்சலனனவர் உடனே முன்தோன்றினர்.

(இன்னும்வரும்.) சர்வஜனமித்திரி.

# தேனும் தேனீயும்.

[முன் தொடர்ச்சி]

"இதென்ன கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கிறதுபோல் இருக்கிறதே. தேனீயைக் கண்டு பிடித்து அதை எடுத்து பிற்பாடல்லவா அதன் முதுகில் பஞ்சுண்டையைப் பொருத்த வேண்டும்? தவிரவும் அது எடுக்கும்பொழுது படு கொட்டுக் கொட்டாமல் விடுமா?" என்று சிலர் ஐயமுறலாம். ஆனால் ஆஸ்திரேலியன் சாமர்த்தியமே சாமார்த்தியம்! அவன் பஞ்சு கூட வீட்டிலிருந்து கொண்டுபோகமாட்



டான். காட்டில் அது எதேஷ்டமாய் அகப்படும். பிசினும் அநேகமாய் எந்த மரத்தி
லும் கிடைக்கும். தேனீ எங்கிருக்கும்? அதுவும் வாசனைப்புஷ்பங்கள் பலவற்றில் ஒன்
றிலேனும் இல்லாமல் போய்விடுமா? "மல்லிகையே வெண் சங்கா வண்டே" என்று
புகழேந்திப் புலவர் வர்ணித்தபடி அது பூவின் நாளத்திற்குள் தலையை நுழைத்துக்
கொண்டு தலை கீழும் கால் மேலுமாக இருந்து தேனருந்திக்கொண்டிருப்பதைக் காண்
பன். கண்டவுடன் என்ன செய்வன் என்று நினைக்கிறீர்கள்? தான் கொண்டுவந்த
பஞ்சுண்டையைத் தொப்பென்று போடுவான் என்றா? அப்படிச் செய்பவன் பெரு
மூடனாயிருக்க வேண்டும். ஏனெனில் எவ்வளவு விரைவில் தொப்பென்று போட்டுக்
கையை எடுத்தாலும் அதினும் விரைவாய்ப் பாய்ந்து தவறாமல் கொட்டும். இவ்விஷ
யம் ஆஸ்திரேலியனுக்குத் தெரியும். ஆதலின், அவன் அப்படிச் செய்யாது தன் வாய்
நிறைய ஜலத்தை அடைத்துக்கொண்டு பிசினூட்டிய பஞ்சுண்டையும் கையுமாய்ச்
சென்று மெய்மறந்து தேனருந்திக்கொண்டிருக்கும் ஈமேல் கொட்டித் தக்ஷணமே
வெகு துணிச்சலுடனும் தீவிரத்துடனும் ஜலத்தை உதறிக்கொண்டிருக்கும் ஈயைக்
கையில் எடுத்து அதி சாமார்த்தியத்துடன் அதன்பேரிற் பஞ்சுண்டையைப் பொருத்
திக் கீழே விடுவன். சற்றும் எதிர்பாராது தன்பேரில் வருஷிக்கப்பட்ட ஜலத்தை அது
ஆத்திரத்துடனும் உதறி உதறித் துடைத்துக்கொண்டு அரைக்கணமும் அங்கு நில்லா
மல், தானறியாமலே தனக்கும் தனது வாசஸ்தலத்திற்கும் தனது உடைமைக்கும்
இனத்தாருக்கும் பெருங்கேட்டைத் தலைப்பில் முடிந்துகொண்டு தனது உறைவிடம்
நோக்கி ஓடும். இங்ஙனம் அதன் வேகமுங் குறைபட்டு அடையாளமுள்ளதும் ஆகி
விடவே, ஆஸ்திரேலியன் பஞ்சிலேயே திருஷ்டியாய் அதனைத் தொடர்ந்து சென்று
கூட்டைக் கண்டுபிடித்து 'ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்'. அல்லது கூடு செங்கு
த்தான பாறைகளிலேனும் முள் மரங்களிலேனும் கட்டப்பட்டிருந்தால் அதனை வில்
லுண்டையால் வீழ்த்தித் தேன்கொள்வன்.

## ஈக்களை வளர்த்துத் தேன் எடுத்தல்.

இதுகாறும் நாம் சொல்லி வந்தவை காட்டீக்களினின்றும் தேன் பெறும் விதங்க
ளே. தேனீக்களை வளர்த்தும் தேன் கொள்ளுகின்றனர் என்று நாம் இப்பொழுது
சொல்லாமலே விளங்கும். ஏனெனில் முன்போரிடத்தில், தேன்றேர்க் குறமர் தேன்
கொள்வதுபோற் கொள்ளாமல் நாகரீகமுள்ள ஜனங்கள் மதுகரங்களைச் சர்வ ஜாக்
கிரதையுடன் வளர்த்துத் தேன் பெற்று கோடீசுவரர்களாயிருக்கிற விஷயம் கூறியு
ள்ளோம்.

## XVI. மதுபானிகள்.

மனிதன் ஒருவனுக்குத்தானு ஈசுவரன் [illegible] கொடுத்திருக்கிறார்?
அவனிலும் அதிக ஆவலுடன் தேனைச் சுவையறிந்து உண்ணக் கூடியவை பலவுள.
அவற்றுட் சில கூறுவம்:—

தேன் காட்டி:—இதனைப்பற்றி வேண்டுவன விரித்துரைத் தாய்விட்டது. அது
மனிதன் அகப்படாவிடில் ஓர்வகைக் கீரியின் உதவியினாலும் தேன்மட்டுமேயன்றி
தேனீயும் பெறுமாம்.

ரேட்டல்:—இதுதான் "தேன் காட்டி"க்கு உதவிசெய்யும் ஓர்வகைக் கீரி. இத
ற்கு தேனும் தேனீயும் மிகப் பிரியம். இது விசேஷமாய் ஆபிரிகாவில் காணப்படும்.
இதற்குப் புற்றுத்தேன் மிகுதியாய்க் கிடைக்கும். தேனீக்கள் இதனைக் கொட்டிய
போதிலும் அவ்வளவாய் வேதனை பெறாதாம். இது தானாகவே தேன்கூடு இருக்குமி

டங்தேடிச் செல்லுமென்று சிலரும், "தேன் காட்டி" யின் மூல மாகத்தான் தெரிந்து கொள்ளும் என்று வேறு சிலரும் கூறுகின்றனர்.

கரடி:—இது மரம் ஏறக்கூடிய பிராணியாதலால் மரக்கிளையிலேனும் மரப் பொந்துகளிலேனும் வைத்திருக்கும் தேன் கூட்டைத் தனது சடைபற்றிய கையால் பற்றி எடுத்துப் பிழிந்து, பொன்னிறத்த தேன் சொட்டச் சொட்டக் கன்னிறத்த சிங்கையுடன் விழுங்கும். பாவம்! சிற்றீக்கள் செய்யக்கூடியது என்ன? கொட்டத்தானே செய்யும். அப்படிக் கொட்டித்தான் பயனென்ன? தாமே உயிர் இழக்க வேண்டியது தான். ஏனெனில் கரடிகள் வேதனை சகியாது வெகு உக்கிரகத்துடன் ஈக்களைப்பிடிப்பிடியாய்ப் பிடித்து நசுக்கிப் பிழிந்து கொன்று விடும்.

தேன் எறும்புகள்!:—இதுகாறும் தேன் ஈக்களே தேன் சேர்ப்பன என்று எண்ணிக்கொண்டிருக்கும் நம்மவர்கள் எறும்புகளும் தேன் சேர்க்கிறதென அறிய ஆச்சரியப்படாதிரார். ஆனால், இப்பேர்ப்பட்ட எறும்புகளை இந்தியாவிற் காண்பதரிது. வட அமெரிக்காவில் மெக்ஸிகோநாட்டிலும் ஐக்கியமாகாணங்களின் (United States) தென்மேற்கு பாகங்களிலும் பிற இடங்களிலுமே இவ்வெறும்புகள் மிகுதியா யுள்ளன. ஆனால், இவை ஈக்களைப்போல் பிரத்தியேகமாய்க் கூடு கட்டி அதில் அறைகள் அமைத்து அவற்றுள் தேனை நிரப்புவதில்லை. உருவத்தில் நமது கட்டெறும்புபோன்ற இவ்வெறும்புகளின் சரீரத்திலேயே இடுப்பிற்கப்பால் ஓர் பை உண்டு. ஈக்களைப்போலவே இவைகளும் மலர்களில் உள்ள இனிய சாரத்தை இரைப்பையிற் போக்கித்தேனாகமாற்றி அதனை இரைப்பையில் நிரப்பும். தேனால் நிரம்பும்பொழுது இரைப்பைகள் பெருங் கழற்சிக்காய் அவ்வளவு பருமனாகி உப்பும். இவைகளை ஈசல், சுண்டைக்காய் அரிசி முதலியன போன்று படிப்படியாய் அமெரிக்கரும் மெக்ஸிகரும் அளந்துவிற்பர். அவற்றை வாங்குவோர் அவற்றின் பைகளை மட்டும் கிள்ளி எடுத்து அவற்றைப் பிழிந்து தேன் எடுப்பர். இத்தேனால் ஓர்வகை சாராயம் செய்யப்படுவதும் உண்டு. இவ்வெறும்புகளின் தேன் நிரம்பிய பைகள் அவ்வூரில் உள்ள பெரிய மனுஷர்களுக்கு வெகு தாராளமாய் விருந்தளிக்கும்பொழுது செலவு செய்யப்படும். அவர்கள் அப்பைகளை உறிஞ்சிச்சப்பி தேனருந்தி தோலை எறிந்து விடுவர். நமக்கு ஆடுமாடுகள் பால் தர சிருஷ்டிக்கப்பட்டிருப்பது போல் இவை ஏனைய எறும்புகளின் உபயோகத்திற்காகவும் சிருஷ்டிக்கப்பட் டிருக்கின்றன. வேண்டும்போதெல்லாம் ஏனைய எறும்புகள் இத்தகைய எறும்புகளினின்றும் தேன்பெற்று வளரும். எறும்புக் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாய்த் தேன் எறும்புகள் உண்டு. இவை ஏனைய எறும்புகளுக்கு மிகவும் உபயோகப்படுவதால் இவற்றை அவ்வெறும்புகள் பொன்போற் போற்றிவளர்த்து [illegible] இடங்தோறும் இட்டுச்செல்லும். சூழ்ச்சியுளங்கொண்ட துரோகசிந்தையராய் அயோக்கியர்கள் அயலார் உரிமையை அபகரிப்பதுபோல், ஒரு கூட்டத்துத் தேன் எறும்புகளை மற்றக்கூட்டத்து எறும்புகள் பொருது அபகரிப்பதுமுண்டு. நாம் எடுத்துப்பேசும் விஷயம் எறும்பன்று. ஆதலின் இம்மட்டோடு நிறுத்துவம்.

## XVII. தேனீக்களின் சத்துருக்கள்.

எதிலும் தலையிட்டுக்கொண்டு இடர் இழைத்துவரும் மனிதன் இதன் பரமசத்துரு என்று சொல்லித்தானா தெரியவேண்டும்? கரடி, தேன்காட்டி, கீரிமுதலியனவும் இவற்றின் சொத்தை அபகரித்துக்கொண்டு அவைகளைக் கொன்றுவிடுகிறதையுங்கண்டோம். முற்கூறியவைகளைத்தவிர வேறு பலசத்துருக்கள் இதற்குண்டு. உதாரண



மாக:—குளவியும் வண்டும் கூட்டங்கூட்டமாய் வந்து தேனீக்களுடன் சண்டைதொடுத்து இருதகக்ஷியிலும் அனேகம் மடியும். தகசு, எலி, சுண்டெலி இவை ஈக்களை எக்காலத்திலும் எதிர்த்துப்பொரும். தூக்கணங்குருவி, ஊர்க்குருவி, குயில், கோழி, வாத்து, ஈக்கொத்தி, பல்லி, காட்டோந்தி, தேரை, பெருஞ்சிலந்தி முதலியனவற்றுள் சில தேனீக்களை ஒவ்வொன்றாகவும் வேறு சில பலவாகவும் கொத்திக்கொத்தி விழுங்குமாம்.

பூச்சி, புழு, விட்டில் முதலியன செய்யும் ஹிம்சை சொல்லிமுடியாது. இவை உபாயமாய் தேனீக்கள் அறியாது உட்புகுந்து கூட்டிற் பல்லாயிரம் முட்டைகளிடும். இம்முட்டைகள் கிருமிகளாகி கூட்டை அடியோடு அரித்து அழித்து ஈக்களை இருப்பிடம் விட்டோடச் செய்யும்.

M. கோபாலகிருஷ்ணையர்,
அக்ராஸநாதிபதி, மாணவர் செந்தமிழ்ச்சங்கம், மதுரை.

# இராமாயண வினாவிடை.

## 6-வது. யுத்தகாண்டம். 65-வது பக்கத்தின் தொடர்ச்சி.

21 வினா, இராவணன் ஒன்றியாய் லங்கைக்குப் போன மேல் என்னசெய்தான்?

விடை, இராவணன் தன் மந்திரி மாலியவானிடம் இலங்கையில் போய் யுத்தத்
தில் இராமனால் தனக்கு நேரிட்ட கஷ்டங்களை எல்லாம் சொல்லி அழுதான். இதை
ப்பார்த்து இராவணனுக்கு மந்திரியும் சிறிய தாயாரின் பிள்ளையான மகோதரன் இரா
வணனைப் பயப்படாதே என்று தைரியப்படுத்திவிட்டு அளவற்ற ராக்ஷஸ ஸேனைக
ளொன்னும் மூலபலத்தைத்திரட்டி அதை யனுப்பும்படி இராவணனிடம் சொன்னான்.
இலக்ஷ்மணன் இந்திரஜித்தை வதம் செய்தபின்பு இந்த மூலபலச்சேனைகள் வந்தெதி
ர்த்தன. இந்த மூலபலப்படையின் பேரில் ஸ்ரீராமபிரான் ஒரு மோகனாஸ்திரத்தை
ட்போட்டான். இப்பாணத்தின் சத்தியினாலே மூலபலப் படைகளிலிருந்த ஒவ்வொரு
ராக்ஷஸனும் ராமன்வடிவமாகத் தோற்றினபடியால் அவர்களெல்லோரும் ஒருவனை
யொருவர் அடித்துக்கொண்டு மாண்டுபோனார்கள். இப்படி மூலபலப்படை அழிந்து
போனதைக் கண்டு ராவணன் இராமபிரான் முன்னேவந்து யுத்தம்செய்தான். இந்
திரன் அனுப்பிய ரதத்தின்மேல் இராமபிரான் ஏறிக்கொண்டு யுத்தம்செய்தான். இரா
வணன்மேல் ஒருபாணத்தைப்போட்டு, அவன் சிரஸை அறுத்தெறிந்தான். அந்தத்
தலை மறுபடியும் வளர்ந்துவிட்டது இப்படி நூறுதரம் தலை அறுபட்டும் வளர்ந்துகொ
ண்டே யிருந்தது. கடைசியாக அகஸ்தியர் கொடுத்திருந்த பிர்மாஸ்திரத்தை இராவ
ணன் மேற்போட்டு அவன் தலைகளை எல்லாம் அறுத்துத்தள்ளி அவனையும் படுக்கிடை
யாய்ப் போர்க்களத்தில் விழும்படிசெய்து அவனைத் தொலைத்துவிட்டார்.

22 - வினா, இப்படிப் பத்துத்தலையுள்ள இராவணன் கொல்லப்பட்ட மேல் அது
விஷயத்தில் இராமபிரான் என்ன செய்தார்?

விடை, கிரமப்படி இராவண சரீரத்தைத் தகனம்செய்வித்து மற்றப்பிரேதச் சட
ங்குகளையும் செய்வித்தார்.

23 - வினா, இப்படி ராவணனை வதம்செய்து அடைந்த ஜயத்தை ஸ்ரீராமபிரான்
எப்படிப் பிரசித்தப்படுத்தினார்?

விடை, இராவணன் இருந்த இடத்தில் விபீஷணனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்துவிட்டு அனுமானைக் கொண்டு இராவண ஸம்ஹாரம் முடிந்ததென்று ஸீதைக்கு அறிவித்தார்.

24 - வினா, ஜனகன் குமாரியான ஸீதையை யார் அசோகவனத்திலிருந்து அழைத்துவந்தார்களோ அதை விவரமாய்ச் சொல்லு?

விடை, ஸீதையைப் பல்லக்கிலேற்றுவித்து விபீஷணன் இராமனிடம் சேர்ப்பித்தார். இராமபிரான் ஸீதையை நீ எல்லாரையும் நடந்து சென்றுபாரென்று கட்டளையிட்டார். ஸீதாதேவி அக்கட்டளைப்படியே எல்லாரையும் போய்க் குளிரப்பார்த்தாள். அவர்கள் எல்லோரும் ஆநந்தப்பரவசராய்நர்த்தனம் செய்தார்கள். ஸ்ரீ இராமபிரான் ஸீதையைப் பார்த்து நான் சந்தோஷமடைந்தேனானாலும், இராவணன் நிர்ப்பந்தத்தில் சென்னாளிருந்த உன்னை நான் ஏற்றுக்கொண்டேனென்று, யாரும் என்னை இகழாதிருக்க நீ நெருப்பில் குதித்துவிட்டு வரவேண்டுமென்று சொன்னான். ஸீதாதேவிதான் இராவணன் நிர்ப்பந்தத்திலிருந்தும் தன் பதிவிரதம் கெடவில்லையென்று சொல்லித் தீயிற் குதித்தாள். அக்கினிபகவானும், ஸீதாதேவிக்கு எள்ளளவும் யாதொரு துன்பமும் செய்யாமல் குளிர்ந்தேயிருந்தாள். ஸீதை வெளியில்வந்து நின்றாள்; தேவர்களெல்லாரும் ஸ்ரீ இராமபிரானைப் பார்த்து நீயே நாராயணமூர்த்தி ஸீதையே லக்ஷ்மீதேவி யென்றுசொல்லிக் களித்து ஸ்தோத்திரம் செய்தார்கள்.

25 - வினா, தசரதர் தன் சரீரத்தோடே வந்து ஸ்ரீராமபிரானைக் கண்குளிரப்பார்த்து ஆநந்த மடைந்தாரா?

விடை, ஆம் அப்படியே வந்து இராமபிரானைப் பார்த்துக் களித்து ஆசீர்வாதம் பண்ணிவிட்டு ஜானகி மகாபதிவிரதை அவளை நீ ஏற்றுக்கொள் என்று சொல்லிவிட்டு சுவர்க்கத்திற்கே திரும்பிப் போய்விட்டார்.

26 - வினா, யுத்தத்தில் மரணமடைந்த வானர வீரர்கள் மறுபடி உயிரோடு எழுந்திருந்தார்களா?

விடை, ஆம், இலக்ஷ்மணனுக்குண்டான புண்ணை ஆற்ற அனுமான் கொண்டுவந்த ஔஷதிமலையின் காற்று வீசின உடனே எல்லாரும் உயிரோடு எழுந்து வந்தார்கள்.

27 - வினா, இப்படி யுத்தம் முடிந்த மேல் ஸ்ரீராமபிரான் எங்கே எப்படிபோனான்? அவனுடன் யார் யார் போனார்கள்?

விடை, ஸ்ரீராமபிரான் புஷ்பகவிமானத்தின் மேலேறிக்கொண்டு அயோத்திக்குப்போய்ச் சேர்ந்தார். ஸீதை, அனுமான் சுக்கிரீவன் விபீஷணன் இவர்கள் ஸ்ரீ இராமபிரான் கூடப்போனார்கள். அப்படிப்போனபோது சமுத்திரத்தில் கட்டிய சேதுவையும் வனவாஸம் செய்தபோது தங்கிய இடங்களையும் ஸீதைக்குக் காட்டி அவ்வவ் இடங்களில் நடந்த விருத்தாந்தங்களையும் சொல்லிக்கொண்டே ஸ்ரீராமபிரான் சென்றான்.

28 - வினா, போகும்போது வேறெங்கேயாவது ஸ்ரீராமபிரான் தங்கினானா?

விடை, பரத்துவாச முனி களிக்கும்படி அவராச்சிரமத்தில் தங்கினான்.

29 - வினா, அனுமானை ஸ்ரீராமபிரான் அப்போ எங்கேயாவது அனுப்பினானா?

விடை, ஆம் அனுப்பினான்; பிரயாகைக்குச் சென்ற உடனே அனுமானை அழைத்து நீ நந்திகிராமத்திற்குப் போய்ப் பரதனிடம் க்ஷேம ஸமாசாரம் சொல்லென்று ஸ்ரீ இராமபிரான் அனுப்பினான். அனுமானும் ஸ்ரீ ராமமூர்த்தியின் ஆஞ்ஞைப்படிப் பரதனிடம் சென்று க்ஷேம ஸமாசாரம் அறிவித்தான்.

30 - வினா, பிறகு பரதன் என்ன செய்தான்?

விடை, எல்லோரும் நந்திக்கிராமம் வந்த உடனே பரதன் தான் பூஜித்துவந்த பாதுகைகளை ஸ்ரீராமபிரான் திருவடிகளிற் சேர்ப்பித்துவிட்டு இராச்சியபாரம் அவைகளினிடத்திலிருந்து இப்போ நீயேயென்றும் அறிவித்தான்.



31 - வினா, பிறகு ஸ்ரீராமபிரான் முதலினோர் எங்கே போனார்கள்?

விடை, ஸீதை ஸ்ரீராமபிரான் பரதன் லக்ஷ்மணன் முதலினோர் அயோத்தி நகரை யடைந்தார்கள்.

32 - வினா. இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடந்ததா?

விடை, ஆம் நடந்தது. இலங்கை அரசன் விபீஷணன், கிஷ்கிந்தை யரசன் சுக்கிரீபன், வானரசேனைகளின் தலைவர்களான அனுமான், ஜாம்பவன், நீலன், நளன், கிஷ்கிந்தையின் இளவரசன், அங்கதன், அகஸ்தியர், வஸிஷ்டர், பாரத்துவாசர், அத்திரி, பிருகு, காசிபர், முதலிய ரிஷிகள் இவர்களெல்லோரும் கூடி உற்சாகத்தோடு ஸ்ரீ இராமபிரானுக்குப் பட்டாபிஷேகம்செய்து வைத்தார்கள். இவர்களெல்லோருக்கும் அவர்களுக்குத் தக்கபடி வெகுமதிகள்கொடுத்து அவரவர் தேசங்களுக்குப் போய்வரும்படி ஸ்ரீராமாபிரான் குளிரப்பார்த்து அனுஞ்ஞை கொடுத்தார். பிறகு ஸ்ரீராமாபிரான் ஸீதை, லக்ஷ்மணன், பரதன், சத்துருக்கினன் முதலினோருடன் ஆநந்தத்துடன் அயோத்தியில் ராச்சியபாரம் செய்துகொண்டிருந்தான்.

ஸீதை லக்ஷ்மணன் சத்துருக்கினன் அனுமானோடுகூடிய பரப்பிரம்மமாகிய ஸ்ரீராமச்சந்திரனை நமஸ்கரிக்கின்றேன்.

ஸ்ரீராம மூர்த்தியினிடம் பக்திநிலைக்கப் பெண்மணிகளுக்கும் சிறுவர்களுக்கும் பயன்படும்படி ஒருவாறு இந்த இராமாயண வினாவிடை நிறைவேறியது.

பண்டிதர் T. வெங்கட்டரம ஐயங்கார்.

# புதிதாய் வெளியான புஸ்தகம்.

**ஜோதி சாஸ்திரம்:**—இப்பெயர்பூண்ட ஓர் சோதிடநூல் திருப்பா திரிப்புலியூர் தே. ஆறுமுகசெட்டியா ரவர்களால் தமிழில் வசனரூபமாக எழுதப்பட்டு அச்சியந்திர வாயிலால் வெளிவந்துளது.

சோதிட சாத்திரஸாரமுணராதவர்கள் எளிதிலுணர்ந்து உ. இது புதுமாதிரியாய்ச் சோதிட சாத்திரஸாரமுணராதவர்கள் எளிதிலுணர்ந்து கொண்டு பஞ்சாங்கமில்லாமலே திதிவார நக்ஷத்திராதிகளை நிச்சயித்துக்கொள்ளவும் பஞ்சாங்கங்களை வைத்துக்கொண்டு ஜாதகங்களைப் பிழையில்லாமல் எழுதவும் எழுதிய ஜாதகங்களைச் சரிபார்த்து ஸ்புடம் பண்ணவும் ஜாதகங்களுக்குப் பாலாரிஷ்டம் பன்னிரண்டு பாவங்களை நிதானித்துப் பலன் சொல்லவும் ஒரு கையேடுபோலப் பயன்படும் சிறந்த புஸ்தகம். எழுதப்பட்டுள்ள நடையும் பெண்பாலர் முதலிய தமிழுணர்ந்தவர் யாரும் எளிதில் பொருளை யறிந்துகொள்ளக் கூடியதாயு மிருக்கின்றது.

ரு. வான சாஸ்திரத்திற்கும் அதை யொட்டியே ஜாதகபாவங்களை அறிந்து சொல்லக் கருவியாயுள்ள சோதிட சாஸ்திரத்திற்கும் உள்ள சம்பந்தங்களைப்பகுத்தறியாது பலரும் மயங்குமிக் கலிகாலத்தில் சோதிட சாஸ்திரத்தினுண்மையைத் தமிழுணர்ந்தோர் ஒருவாறு நன்குணர்ந்து அச்சாஸ்திரத்தில் திட நம்பிக்கை கொள்ள இது நல்ல சாதனமாய் விளங்குகின்றதென்பது நமது கொள்கை.

ச. ஜாதகங்களை ஜனன காலத்தில் சுத்தமாய் எழுதிவையாதபோது அதைப்பார்த்துக்கொண்டே சாஸ்திரத்தின்படி பலன் சொல்லும்போது தவறுதல்கள் நேர இடமுண்டாகின்றது. இந்த நூதன புத்தகத்தின்படி சரிவர ஜாதக மெழுதிவைத்துக்கொண்டால் சோதிட சாஸ்திரம் உண்மையுள்ளதென்பதை யாருமறிந்துக்கொள்ளலாம். சோதிட சாஸ்திரத்திலுள்ள பல நூல்களின் ஸாரம் இச்சிறு புஸ்தகத்திலிருக்கின்றது.

இதன் விலை ரூ. 1. வேண்டுவோர் திரிப்பாதிரிப்புலியூர் மிஸ்டர் தே. ஆறுமுக செட்டியாரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

## விடுகதை விடை!

நாளது 1905-ஞ பிப்ரவரிமாதச் சஞ்சிகையில் சகோதரி எஸ். ஞானவடிவுடையம்மாளால் வெளியிட்ட,

1-வது கதைக்கு! அர்ச்சகர் கொண்டுபோன புஷ்பங்கள் 1101.

2-வது கதைக்கு! குடியானவன் கொண்டுபோன மாங்கனிகள் 506.

விடுகதை விடை:—(1) மண்பிசைந்து வேலைசெய்வான்குயவனல்ல, வங்கம் எய்ப்போய்வருவான் செட்டியல்ல, கண்ணுண்டு மூக்கில்லை தேங்காயல்ல, காலுண்டு தலையில்லை கபந்தனல்ல, இன்றுபட்டு சிலபேர்க்கும் இச்சையாவான், ஈசனுக்கும் மாயனுக்கும் பிரியந்தானே.

(2) நாலெழுத்துப்பேரு. நடுவே நம்பிருக்கும் காலுந்தலையுங் கடைச்சாதி, ஒட்டி முதலெழுத்தும், ஒருமூன்று மெழுத்தும் விட்டால் பரமனுக்கு வீடு.

சர்வஜன சகோதரி.

## விடுகதை.

பூ.ரங்களிலெல்லாம் முக்கியமானவர் — பேதாளமல்ல;

அவர் அருபியாவர் — மன்மதனுமல்ல;

அதிக விரைவாயோடுவர்—துள்ளியோடும் மானினத்தினரல்ல;

மரங்களை வேரோடு வீழ்த்தவல்லமையுண்டு—கஜேந்திரனுமல்ல;

இவர்நுழையா இடமில்லை — சர்வாந்தர்யாமியாகிய ஈசுவரனுமல்ல; மனோரஞ்சினி படிக்கும் சிறுமியர்காள் இவர்யாவரென்று இயம்புவீரே!

நாலெழுத்தமைந்த ஒரு சொல், அதன் முதலெழுத்தைக் குறைத்திடில் நதிகளைக் கடக்கும், வாரவதியின் பெயராம் இரண்டாவதெழுத்தை யொழித்திடில் சோறுண்ணும் தட்டின் மற்றபெயராம். அச்சொல்லின் பொருள்மாணவர் மண்டையோடாகும். அதுஎன்ன?

மரகதம்.

1905-ஞ 7-ம் வால்யம் இரண்டாவது புத்தகம் 46-வது பக்கத்தில், எஸ். ஞானவடிவுடையம்மாள் எழுதிய விடுகதைகளின் விடை.

(1) "கோயில்ஸ்தானிகர் அர்ச்சிக்கக்கொண்டுபோன புஷ்பங்களின் மொத்தம்" 1101.

(2) குடியானவன் அரசனுக்குக் கொண்டுபோன பழங்களின் மொத்தம் 3121.

I முத்துப்போல் பூபூத்து முடிமுடியாய்க் காய்காய்த்து பச்சைநரம்போடி பவழம்போல் தன்னிறமாய் ஒற்றைக்கருப்போடி ஒருபுறமாய் பூண்போட்டு சித்திரைமாதத்திலே தெருத்தெருவாய் வரும் பெண்ணே.

II சந்தனம்புனுகுபோல் விதித்தகதை சொல்லவா, தகப்பனோர் ஓடிவந்து அடித்தகதை சொல்லவா, செங்காடு தீபட்டு வந்தகதை சொல்லவா, தேசமெங்கும் ஒருபுறமாய் மாண்டகதை சொல்லவா?

III சேலத்து செம்புறு செல்வமாம் பச்சைப்புறு மாடத்து வெள்ளைப்புறு, இவை மூன்றையும் சேர்த்து ஒரு கூட்டிலடைத்து பதினாறுபேர் எதிமிதிக்க அதை ஒருவன்தள்ள துளி இரத்தம்கக்க.

T. M. அறப்பெருஞ்செல்வி அம்மாள்.

Printed at the Madras Ripon Press & Published by the
Proprietor C. S. Ramasawmy Iyer, Madras.

14 SEP 1905
MADRAS
600 008
112429

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

| | | |
|---|---|---|
| Vol - vii. | Madras: May 1905. | No-5. |
| புத்தகம் எ. | சென்னப்பட்டணம்: மேமீ 1905. | இல-5. |

## மிஸ்டர் K. நாராயணராவ் பெண் கல்வியைப்பற்றிப் பேசியது.

"இவ்விஷயமாகஅடிக்கடிஅநேகர் சொல்லியிருக்கிறார்கள்; ஆயினும் நான்ஏதோ எனக்குத்தெரிந்த சிலவற்றைச்சொல்லுகிறேன். நமது ஸ்திரீகள் கல்வி அறிவில்லாமலும்அவர்கள் தாழ்ந்த நிலைமையிலிருப்பதுமே பெரியகெடுதி. ஸ்திரீகள்விருத்திக்கு வந்தால்தான் நாமும் விருத்திக்குவரலாம். நாம்நமது ஸ்திரீகளுக்குகல்வி புகட்டினாலொழியநாம் எல்லாதேசத்தவர்களுக்கும் சமானமாக முடியாது. 'மனைவிபர்த்தாவின் அர்த்த (பாதி) சரீரம்" என்றும், பத்தினி கிரகஸ்தர்களுடைய ஆத்மாவாக இருக்கிறாளென்றும், பார்யையே அவனுக்குச் சிறந்த மித்திரன்என்றும் அநேக கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்திரீகளின் தாழ்ந்த நிலைமையின் ஒரேஒருவிஷயமென்னவெனில் இந்துக்களுடையகிரகம் உண்மையானதல்ல; ஏனெனில் சந்துஷ்டியென்பதேகிரகத்தில் காண்பது அரிதாகவிருக்கிறது. இதற்கு காரணம் அவர்களுக்கு கல்வியில்லாததே. லார்ட் ஆவ் பேரி என்ற பிரபுவும் "குழந்தைப்பருவத்தின் ஞாபகமும், பெற்றோர்களின் வாஞ்சையும், அன்பும், வாலிபத்தின் விசேஷ நம்பிக்கைகளும், சோதரிகளின் அன்பும், சோதரர்களின் அநுதாபமும் பிரியமும், விசேஷித்து நாளுக்குநாள் விருத்தியாகி சுகதுக்கங்களுக்கும் அனுகூலமாகின்றதுடன் கிரகத்திற்கும் சந்தோஷத்தைக் கொடுத்து கிரகத்தைப்பரிசுத்தமாக்குகின்றதென"ச் சொல்லியுளார். மேற்கூறியவைகள் யாவும்கல்வியில்லாதமாதாவும், சகோதரிகளும், மனைவிமார்களுமுள்ள கிரகத்தில்அமைந்திருக்கின்றனவென்று ஒருகல்விகற்ற இந்துசொல்லக்கூடுமோ? கவர்ன்மென்டாரும், மிஷினிரிகனவான்களும் பெண்கல்விக்காக தங்களாலியன்றமட்டும் பாடசாலைகளை ஏற்படுத்திகல்விபுகட்டிவருகிறார்கள். ஆனால்நாமோ அவ்விதபாடசாலைகளுக்கு நமதுபெண்மணிகளையனுப்பிவருவதில்லை; பெண்களை அதிபாலியத்திலேயே அதாவது 10 வயதாவதற்கு முன் விவாகம் செய்யும் வழக்கமிருப்பதால் அவர்களைப்பாடசாலைக்குஅனுப்புவதிலிருந்து நிறுத்திவிடுகிறோம்; அத்துடன் அவர்கள் கல்வியும் நின்றுவிடுகிறது.

எவ்விதக்கல்வி நமது பெண்களுக்கு நாம் புகட்டவேண்டுமென்ற விஷயமாக பலர் பலவிதமாகச் சொன்னபோதிலும் ஒரு முக்கியமான யோசனை எனக்குப்புலப்படுகிறது. அதாவது அவர்களுக்கு கல்விபுகட்டவும்அறிவுஉண்டாக்கவும் முக்கியமானது ஆங்கிலம் தான்? இவ்விதம் செய்யகாரணங்கள் பலஉள. பிள்ளைகள் ஆங்கிலம்கற்கும்பொழுதுபெண்களும் ஆங்கிலம் படிப்பதில் கெடுதிஎன்ன? ஆனால்பிள்ளைகளைப்போல் இவர்களும் படிக்கவேண்டுமென்பதல்ல. பெண்களுக்குத்தகுந்தவிதமாக ஆங்கிலம்கற்பிப்பதுதான் நலம். இவர்களுக்கு அறிவுபரவும்படி உயர்தரக் கல்வி புகட்டினால் விசேஷ

TL
Y15 m 211, M98 M0
M98.6-7

லாபம் பயக்கும். மைசூரிலிருப்பதுபோல் உயர்தரக் கல்வி கற்கமனமுள்ள பெண்களுக்கு வேண்டிய சௌகரியங்களை உண்டாக்கவேண்டும். நமது ஸ்திரீகளுக்கு உயர்தரக் கல்வியையாவது பிரைமரி கல்வியையாவது புகட்ட ஏற்பாடொன்றும் நாம் இதுவரையிலும் ஒன்றும் செய்யவேயில்லை. கவர்ன்மெண்டாரும் இவ்விஷயத்தில் அக்கரையுடன் அதிக நோக்கம்வைப்பார்களென்றும் நம்புகிறேன். இந்து ஸ்திரீகளுக்கு கல்வி புகட்டினால் விவாகசீர்திருத்தம், வீண் செலவு, முதலிய சீர்திருத்தங்கள் தானே உண்டாகும். ஆகையால் நாம் வீண் பேச்சில் காலத்தைக் கழிக்காமல் காரியத்தில் ஒவ்வொன்றையும் செய்து வர முயல வேண்டும்."

## ஶிவாஜியின் துணிகரச் செயல்.

வைகாசி மாசத்திலே ஒரு நாள் சூரியன் அஸ்தமிக்கும் சமயம் இடையர்கள் தம் ஆட்டு மந்தைகளை மெள்ள மெள்ள ஓட்டிச்செல்கிறார்கள்; வயல்களை உழுது வீட்டுமுகம் திரும்பும் கூலியாளர்கள் தம் எருதுகளை ஓட்டிக்கொண்டு கலப்பைகளையும் சுமந்துகொண்டு மெள்ள மெளள ஊரை நெருங்கி வருகிறார்கள்; தடாகங்களில் திரிந்து விளையாடும் பட்சிகள் எல்லாம் தத்தம் தங்குமிடம் சேருகின்றன; திண்ணைப் பள்ளியில் சிறுவர்கள் தத்தம் பாடங்களை ஒப்புவித்து மறுதினம் சொல்லவேண்டிய ஞாபகக் குறிப்புகளை உபாத்தியாயரிடம் தெரிந்துகொண்டு மிகுந்த இரைச்சலுடன் வீட்டுமுகம் நோக்கி வருகிறார்கள். சூரியனோ அஸ்தமித்தது. இளம் பெண்கள் திருவிளக்கை ஏற்றி வாசற் பிறைகளிலே வைத்து நமஸ்கரிக்கிறார்கள்.

நல்ல திரைச்சீலை விடுத்தால் அன்ன இருள் உலகைக்கவிழத் தொடங்கியது. இந்தக்காரிருளில் நான்கு சந்நியாசிகள் யமுனை நதிக்கரையில் ஒருவர்க்கும் கண்படாதே நடந்துவருகிறார்கள். பக்கத்திலே எவரும் கண்படாததினால் இவர்கள் நதியைக்கடந்து அக்கரை சேர்ந்தனர். முன்சேர்ந்தவர் சொல்வார் "சீழ்முகமாய் நாம் போதல் நலம்" இரண்டாவது சந்நியாசி பிரபுவே, தாம் தனியாய்ப்போதல் சரி அல்ல.

முதல்சந்நியாசி: இப்பையன் என்னைத்தொடர நானெங்கேபோகலாம், என்னதைச் செய்யலாம்? அவனை இட்டுக்கொண்டு வேறுவழி போங்கள். நான் சில ஸ்தலங்களைப் பார்த்துத் திரும்பி உங்களைவந்து அடைவேன்.

முன்சந்நியாசி: நாம் குருவின் வார்த்தையைத் தள்ளுதல் பிசகு. அவரைத் தனியே விடுவதும் சரியல்ல. எந்தக் காலத்தில் எந்த ஆபத்துக்கள் வருமோ எவர் அறிவார்? இப்பையனைக் காக்கும் விஷயம் நமது பொறுப்பே. இவைகளைக் கேட்டபின் குரு மற்றவர்களின் வேண்டுகோளின்படி நடக்க நேர்ந்தது. அனைவரும் சேரக் கீழ்முகமாய் நடந்தனர். பாலிய சந்நியாசி பலமும் தேகசௌக்கியமும் உடையவனேயாயினும் இளம்பருவத்தனே. பதினாறு வயசுடையவன்போலத் தோன்றியது. இவர்கள் திவ்யஸ்த



லமாகிய ஹரித்துவாரம், அயோத்தி, வாரணாசி, பிரயாகை, கயை முதலியவைகளைக்கண்டு ஆநந்தித்து பூரிக்குக் கிளம்பினார்கள்.

மழை வெகு மும்மரமாய்ப் பெய்துகொண்டிருக்கையில் இந்நான்கு
சந்நியாசிகளும் வங்காளத்திலே வந்துசேர்ந்தனர். இத்தேசமோ அவர்க
ளுக்குப்புதிது. அவர்கள் தனிப்போகும் வழிகளையும், காட்டுமார்க்கங்களை
யுமே தொடர்ந்து பிரயாணம்போவார். காட்டின் கொடிய மிருகங்களும்
பயங்கரஸ்தலங்களும் அவர்களுக்கு அறிமுகம்போலவே இருந்தன. செடிக
ளும் மரங்களும் நெருங்கியகாட்டுப் புதர்வழியாய்ப் போகையில், பிரமாத
கூச்சலுடன் ஒரு புலி இவர்களை எதிர்த்தது. முதலிலேபோன சந்நியாசி
பாலியனைப் பின்னிருந்தாரிடத்தேவிட்டுத் தன்கையில் இருந்த பெருந்தடி
யால் புலியைத் தலையிலே வெகு பலமாய்த் தாக்கினன். புலி சிறிது பின்னி
டைந்து இரண்டாந்தரமும் மூன்றாந்தரமும் தாக்கத்தொடங்கியது. சந்நி
யாசி கையில் இருந்த கட்டைத்தடியும் முறிந்தது. புலியும் சந்நியாசியும்கொ
டும்போர் ஆடுகையிலே சந்நியாசியின் பிழைப்பு சந்தேகமானஸ்திதியில் இரு
ந்தது. அப்பொழுது பக்கத்தில் இருந்த தனோஜி என்பவன் முன்வந்து
புலியுயிரை மாய்த்தனன். முதலிலே சண்டைசெய்த குருவுக்கோ விசேஷ
காயம்பட்டது. பின்வந்தவர்கள் காயங்களைக்கழுவி சில மூலிகையின் ரச
த்தினாலே அவைகளை நனைத்து சில மூலிகை இலைகளை அரைத்து மாக்கட்டு
வதுபோலே மேல்வைத்துக் கட்டினார். குருவோ, நடக்க சக்தியற்றவ
னாய் ஆயாசப்பட்டனன். இரண்டு மணிநேரம் நடந்து மூர்ஷிடாபாத் நக
ரம்வந்து சேர்ந்தனர்.

வழியிலே சிறிதுநேரம் உட்கார்ந்து ஒருமரத்தின் கீழே இளைப்பாறு
வதன்முன்னே குருவுக்குத் தாங்கமுடியாத சுரம் வந்து உடல் நடுங்க மயக்
கம்மேலிட்டது. சிஷ்யர்கள் இந்த நிலைமையைக்கண்டு ஒருவீட்டிலே இறங்கி
இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிந்துகொண்டு நகரத்தி
லே தம்மாலான பிரயாசைப்பட்டு விசாரித்தும் தம்படியும் கையில் இல்லா
நான்கு சந்நியாசிகளைக் குடிவைத்துக்கொள்ள எவரும் ஒப்பவில்லை. இப்
படி வீணாய் அலைந்து திரும்புகையில், ஒரு பிராமணன் கூவி இவர்களை
அழைத்து, நீங்கள் என் வீட்டில் இருக்கிறதென்றால் இருங்கள், என் தாயா
ரைத் தவிர வேறு மனுஷர் இல்லை என்றனன். தனோஜி இப்பிராமணன் வீட்
டுக்குப்போய் வேண்டிய இடம் இருக்கிறது என்று கண்டு தன்குருவையும்
மற்றையவர்களையும் அங்கே இட்டுவந்து விட்டனன்.

ஒருமாசத்திற்குள் சந்நியாசிக்குக் காயங்கள் ஆறிச்சௌக்கியம் ஆயி
ற்று. அப்பொழுது தான் தனியே இருக்கவேண்டும் என்று சொல்ல, மற்ற
வர்கள் வாரணாசிக்குச் சென்றனர். வீட்டு பிராமணன், தான் காசிக்குச்
சென்றகாலத்திலே தன் பத்தினியையும் குழந்தைகளையும் இழந்தனன்.
பிறகு தான் சாஸ்திர விஷயங்களிலே பயின்று, வானப்பிரஸ்தன் போலக்
காலத்தைக் கழித்து வந்தனன். அவனுக்கு வேலை, வயது முதிர்ந்த தன்
தாயைக்காத்தலும் சந்நியாசியை அன்பின் போற்றலுமே. இவன் தினம்
இஞ்சுவர்த்தி வாங்கி ஜீவிப்பதே வழக்கம். தனக்கு ஒழிவுள்ள காலங்களில்
வேதசாஸ்திர விசாரணை செய்வான்.

இன்னும் ஒரு மாசம் இப்படி நடந்தது. அப்பொழுது சிலநாளிலே சந்
நியாசி தன் உபகாரியிடம் விடைபெற்றுச் செல்ல எண்ணினன். ஆனால்

எதிர் பார்க்கப்படாத ஒரு விஷயம் சந்நியாசியை வேறு மார்க்கத்திலே திருப்பியது. அவன் உடம்புக் காயங்கள் எல்லாம் ஆறின.

மூர்ஷிடாபாத் நகரின் சுல்தான் ஆகிய ஷயிஷ்டாகான் ஒரு நாள் மிகச் சந்தோஷமாய்த் தன் கையிலே ஒரு வேலைக்காரன் கொடுத்த நிருபத்தை அடிக்கடி வாசித்து வாசித்து, ஆலோசனையோடு இருந்தான். தன் பழைய பகைவனை, தன் வலதுகையைக் கத்தியால் வெட்டிப் பயன்படாதே செய்த பாவியை, அழிக்குந்தருணம் வாய்த்ததே யென்று பலவிதக் குரூரமான முகக்குறிப்புகளோடு நிருபத்தை அடிக்கடித் திருப்பிப் பார்ப்பன். நிருபத்தில் எழுதியிருந்தது இதுவே ஆகும்.

"இந்நிருபத்தைக் கொணர்கிற பிராமணன்வீட்டிலே ஸிவாஜி ஒருசந்நியாசி வேஷம்பூண்டு வசிக்கிறான். அவனைப் பிடிக்கவேண்டும் எனகிற எண்ணம் இருந்தால், இப்பிராமணனுக்கு 2000 மொகராக்கள் இனாமாய்க்கொடுத்து அவன் பின்தொடர்க. பிராமணனுக்குப் பணம் கொடாதே மோசம் செய்தால், பின்னாலே நீ இதன் பலனை அனுபவிக்க நேரிடும்."

இந்நிருபம் ஷயிஷ்டாகானுக்கு முன்னாலே தான் புனாவிலே கைதியாயிருக்கையில் மராட்டிய போர்வீரரோடு ஸிவாஜி வந்ததும், தன் கைவிரல்களைத் துணித்ததும், தன்மகனைக் கொலைசெய்துபோனதும் முதலியவிஷயங்களை ஞாபகத்துக்குக் கொணர்ந்தது. இவை மாத்திரம் அன்று. பெண்டிர்களின் அழுகையும், தான் கத்திச்சண்டை செய்ய நேர்ந்ததும், ஸிவாஜி உயிர்க்குத் துணிந்து திடபுருஷனுடன் சண்டை செய்ததும், தான் ஸிவாஜியின் கையிலிருந்து தப்ப ஜன்னல்மார்க்கமாய்த் தப்பி ஓடியதும் மறுநாள் போர் புரிந்து தோற்றதும், பிறகு டில்லி சக்கரவர்த்தியின் காலிலே விழுந்து மானங்கெட நேர்ந்ததும் ஒன்றன் பின் ஒன்றாய் சுல்தான் கண்முன் நடப்பது போலே இருந்தன. இவ்வண்ணம் பாடுபட்டானுக்கு ஸிவாஜி ஒரு சொட்டு உதிரமாவது நஷ்டப்படாதே, சிறிதும் அபாயம் இன்றியே, தானே வந்து வணங்கிப் பகைவனது எச்செயலுக்கும் ஒப்புவனாயின், எந்தக் குதூகலம் விளைக்கும் என்று ஆலோசித்தல் வேண்டும்.

டில்லி சக்கிரவர்த்தியின் காராக்கிருகத்தில் இருந்த மலைமூஷிகமாம் ஸிவாஜி, தப்பித்துக்கொண்டு போய்விட்டான் என்பதைக்கேட்ட ஷயிஷ்டாகானே மிக நடுங்கினன். நிருபத்தின் நிபந்தனைப்படிப் பணம் எண்ணமோ அந்தணனுக்குக் கொடுத்துத் தீரல்வேண்டும்; இதைக் கவனியாது போனால் கெடுதிநேரும் என்று வங்காள அதிபதி அறிவான். சில சிறந்த சேவகர்களை அழைத்துக்கொண்டு பிராமணன் பின்னே போய் அவனது வீட்டிலே இருந்த சந்நியாசியைப் பிடித்துச் சங்கிலியாலே கட்டிக் கைதியாய்ச்செய்தான். ஸிவாஜியின் முகமோ ஷயிஷ்டாகானுக்கு அறிமுகமே. ஸிவாஜியைச் சிறை செய்தபின் பிராமணனுக்கு 2000 மொகாரக்கள் பணம் எண்ணப்பட்டது. அவ்வெளிய வேதியன் ஒன்றும் தெரியாதே நிப்பிரமைகொண்டு இதன் அந்தரங்கம் தெரியாதே மலைத்தனன்.

(இன்னும் வரும்.)

எம். எஸ். நடேசய்யர், பி-ஏ.



## மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்தின் நான்காம்வருஷோற்சவ வாழ்த்துப்பாக்கள்.

(ஸ்ரீமதி-பண்டிதை அசலாம்பிகையம்மை யவர்களியற்றியவை.)

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

*வரந்தருவார் தமிழ்ப்பாவை வளர்ந்தாளெ னுதவளர் கின்று ளென்றே
கரந்தருவாண் மழுப்படையோ னுடனமர்ந்த கடைச்சங்கம் கடந்த பின்னும்
சிரந்தரமா யிசைத்தமையின் வருங்கால நிகழ்ச்சியிது நினைந்தோ வென்னத்
தரந்தருநற் புலவரெலாம் தனித்தனியுண் வியந்தேத்தித் தழைக்கின் றாரால். (க)

முன்பாண்டித் துரைமகரால் தமிழ்ச்சங்கம் வளர்ந்ததெனு மொழிமா றிம்
மன்பாண்டித் துரையளியால் வளர்கின்ற தெனவுலகோர் மகிழ்ச்சி கூர
நன்பாண்டித் தலைநகரா மாமதுரா புரிவளர் இன்னான்காஞ் சங்கத்
தின்பாண்ட வொருநான்காம் வருடவிழ வினுக்கியைந்த வேற்ற மென்னே. (உ)

சீர்க்கனக சபைக்குரிசில் பாண்டியர்முன் கடைச்சங்கம் சிறந்துற் றனைப்
பேர்க்கனக சபைக்குரிசில் பிறங்கினின மப்பாண்டிப் பெரியோன் றன்முன்
பார்க்கிலிது போற்புதுமை யாதோவித் தகையபெரும் பண்பார் சங்கம்
வார்க்கனக மலைவில்லோற் கினியர்செயுந் தவமேபோல் வளர்க மாதோ. (ங)

பணஞ்சேர்கங் கணன்றிருத்தாள் மறவாது பணிபாண்டித் துரையும் பாரில்
மணஞ்சேர்பொன் மலரதுதான் மன்னர்திரு முடியேறு மாபோற் சற்றோர்
கணஞ்சேரித் தமிழ்ச்சபைக்கோர் நாயகமாய்க் கலந்தோறும் கல்வி யோடு
குணஞ்சேர்நற் புலவர்களும் தெய்வீகத் தீந்தமிழின் கொடியும் வாழ்க. (ச)

## குடும்பசம்ரக்ஷணை.

### Air—காற்று.

பெரியோர்கள் காற்றுபஞ்சபூதங்களில் ஒன்றென்று (என்றால் அதில் பின்னங்களிருக்கும் பாகங்கள் காணக்கூடாத ஏக பதார்த்தமென்று) எண்ணிருந்தார்கள். ஆனால் இதுசரியல்ல; நல்லகாற்றில் சாதாரணமாய் நான்கு உபவாயுக்களிருக்கின்றன; முதலாவது பிராணவாயு; இதுவே உயிருக்கு ஆதாரம். வாயுவில் இது ஐந்தில் ஒரு பாகமிருக்கும். சுவாசகோசத்திற்குள் இது சுவாசிக்கப்பட்டு இரத்தத்தைச்சுத்திசெய்து சரீரத்திற்கு உஷ்ணத்தை உண்டாக்கும். இந்த பிராண வாயுவு நல்லகாற்று என்று எண்ணப்படுகிறது. இரண்டாவது இலவணவாயு. இது காற்றில் மற்றபாகங்களிலெல்லாம் நிறைந்திருக்கும். ஆனால் வாயுவினுடைய ஐந்துபாகங்களில் சுமார் நாலுபாகங்களிருக்கும். மிக சுறுசுறுப்புள்ள பிராணவாயுவினுடைய தீக்ஷண்யத்தைக் குறைப்பதற்கு இது இப்படி காற்றில் கலந்திருக்கிறது. மூன்றாவது கரிமலவாயு. இது காற்றில் மிக சுவல்பமாயிருக்கும்.

நல்ல காற்று.

* வரந்தருவார்:—பாரதம்பாடிய வில்லிபுத்தூராழ்வாரின் குமாரர்.

நல்லகாற்றில் ஆயிரபாகங்களில் இது சுமார்ஒருபாகத்தைவிட குறைந்திருக்கும். இதை விட அதிகமாயிருந்தால் உயிருக்கு (பிராணத்திற்கு) கெடுதிநேரிடும். விருக்ஷங்கள் இதை சுவாசிப்பதால் தான் வளருகின்றன. விருக்ஷங்களிலுண்டாகும் பழங்களைத்தின்று மனிதர்கள் ஜீவிக்கிறார்கள். ஆகையால் இந்தவாயுவும் மிக உபயோகமுள்ளது.

ஆகாயத்தில் இன்னம் கலந்திருப்பது ஜலவாயு; ஒரு பாத்திரத்திலே கொஞ்சம் ஜலம் விட்டு வெயிலில் வைத்தால் அந்தஜலம் மெதுவாக வற்றிப்போய் விடுவதைக் காண்கிறோம். சூரியனுடைய காந்தியினால் ஜலம் ஆவியாக ஆகாயத்தில் செல்லுகிறது. இதனால் தான் மேகங்கள் உண்டாய் மழை உண்டாகிறது, பனியும்பெய்கிறது. இந்த வாயுவுமில்லாவிடின் நமதுதேகம் வறண்டுபோகும்; பயிர்பச்சைகள் முளையாமல் கெட்டுப் போய்விடும்.

இனிகெட்ட வாயுவைக்குறித்து ஆலோசிப்போம். மேற்சொல்லிய கரியமலவாயு காற்றில் அதிமாயிருந்தால் அந்தகாற்றே கெட்டகாற்றென்று சொல்லப்படும். கெட்டகாற்று எவ்விதம் உண்டாகிறதென்பதையும் எங்கிருந்து உற்பத்தியாகிறதென்பதையும் விசாரிப்போம். ஒவ்வொரு நிமிஷமும் நம்மைச் சுற்றிலுமிருக்கும் நல்லக்காற்றை உட்கொள்வோம். இவ்விதம் உட்கொண்ட நல்லகாற்றுக்குள்ளிருக்கும் பிராணவாயு தேகத்திலிருக்கும் இரத்தத்தைச் சுத்திசெய்து அதன்மூலமாய் தன் நிர்மலத்தத்துவத்தைப்போக் கடித்துக்கொண்டு கரியமலவாயுவாக வெளியே வந்து விடுகிறது. இதை மறுபடியும் நாம் சுவாசித்தால் நோய்கள் உண்டாகும். எப்படியெனில் 1756-ஞ கல்கத்தாவில் இருட்டுக்கிடங்கு என்று சொல்லப்பட்ட ஒரு சிறு அறையில் 146 பேர் அடைக்கப்பட்டார்கள் அந்தச் சிறுஅறைக்கு இரண்டு சிறிய பலகணிகள் (ஜன்னல்கள்) இருந்தன. மறுதினம் காலையில் கதவுதிறக்கப்பட்டபொழுது 23 பேர் மாத்திரம் சுவாசிக்க சக்தியின்றியும் பலஹீனர்களாயும் வெளியே வந்தார்களாம்; மீதியுள்ளவர்களெல்லாம் இறந்தார்கள். இதற்கு காரணமென்னவெனில் கெட்ட ஆகாயம்தான். நல்ல காற்றிருந்தால் இவ்வளவு பேர் இறந்திருப்பார்களா? ஆகையால் தான் கெட்டகாற்றில்லாத விசாலமான அறைகளில் நாம் வசித்து வரவேண்டுமென்று சொல்லுகிறோம். அந்த அறைக்கு பலகணிகளுமிருக்கவேண்டும். அந்த அறையில் அதிகசாமான்களைப்போட்டு வைக்கக்கூடாது. இப்படிச் சாமான்களைப் போட்டுவைத்தால் கெட்டகாற்று வெளியேபோகவும் நல்ல காற்று உள்ளே வரவும் முடியாது. நமக்கு எப்பொழுதும் அதிகமாக காற்றிருக்கவேண்டும்; இது நல்ல காற்றாகவுமிருக்கவேண்டும்.

கெட்ட வாயு.

ஒவ்வொருமனிதனுக்கும் சுவாசிப்பதற்கு மணிக்கு பனிரெண்டு * கன அடியுள்ள காற்று நிறைந்த விடம் வேண்டும். ஆனால் அடிக்கடி சுவாசிக்கும் பொழுது இந்தக் காற்றே உள்ளுக்குள்ளே போகக்கூடாதாகையால் இதற்குக் கூட இன்னும் 200 மடங்கு நல்லகாற்று சேர்ந்திருக்க வேண்டியதவசியம். மேலும் ஒவ்வொருமனிதனுக்கும் மணிக்கு இரண்டாயிர கன அடியுள்ள நல்லபரிசுத்தமான காற்று சுற்றிலுமிருக்கவேண்டும். சாதாரணமாய் வெளியிற்சென்று வேலைசெய்கிறவர்கள் வேண்டிய காற்றை சுவாசிப்பார்கள் ஆகையால் அவ்விதம் கஷ்டப்பட்டு ஜீவனம் செய்வோர் மற்றவர்களைப்பார்க்கிலும் ஆரோக்கியமாயும், வலிவுள்ளவர்களாயுமிருப்பார்கள்; ஆகையால் நாம் எப்பொழுதும் சுத்தமானகாற்றை உட்கொள்ளவேண்டும். இரவில் நல்ல காற்று விசாலமாய் வரும்படியான இடத்தில் நித்திரை செய்யவேண்டும்; வியாதியஸ்தர்களும் இவ்விதிகளை அவசியம் அநுசரித்துவரவேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கு வேண்டிய காற்றின் விவரம்.

* கன அடி என்றால் ஒரு அடி உயரம், ஒரு அடி அகலம், ஒரு அடி ஆழமுள்ளது.



நாம் நித்திரைசெய்யும் அறை முக்கியமாய் பெரியதாயிருக்க வேண்டும். அறைகள் எவ்வளவு பெரியதாயிருந்தபோதிலும் கொஞ்சநேரத்திற்குள் அவ்வறையிலிருக்கும் காற்று கெட்டுப்போகும். ஆனால் நாம் அடிக்கடி அறையிலுள்ள ஜன்னல்களையும், கதவுகளையும் திறந்துவைப்பதினால் கெட்ட காற்று வெளிச்சென்றுவிடும்; நல்லகாற்று உள்புகவும் இடமுண்டாகும்.

வீட்டிற்குள் நல்ல காற்று வருவதற்கு சாதனங்கள்.

# உருக்குமணி நாடகம்.

விதர்ப்பதேசத்தில் மகாதர்மசிந்தையுள்ள பீஷ்மகன் என்ற மகாராஜன் அரசுபுரிந்து வந்தான். இவனுக்கு ஐந்து குமாரர்களும், ஸ்ரீ மகாலட்சுமியோவென்று சொல்லும் படியான சகல லக்ஷணங்களுமமைந்த உருக்குமணிதேவி யென்ற பெண் மணியும் உண்டு. தன் புத்திரிக்கு தக்க வயது வந்தவுடன் விவாகம்செய்ய பீஷ்மகர் எண்ணினார். இவருடைய மந்திரிமார்களும், ரிஷிசிரேஷ்டர்களும் இவரதுபுத்திரியை ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு விவாகம்செய்து வைக்கும்படி புத்திபுகட்டினார்கள். ஆனால் இவருடைய மூத்தகுமாரனாகிய உருக்குமிக்கு சேதிதேசத்து அரசனாகிய சிசுபாலனுக்கு தனது சகோதரியை மணம்புரியச் செய்யவேண்டுமென்ற எண்ணம் மிகுதியாகவிருந்தது. உருக்குமணிக்கு இச்சங்கதிகளெல்லாம தெரிந்தன. என்ன செய்வாள்! தனக்கு சிசுபாலனை மணம்புரிய இஷ்டமில்லை. ஸ்ரீ கிருஷ்ணன் தனக்கு பர்த்தாவாக அமையவேண்டுமென்ற பூர்ணவிருப்பமிருந்தது. இதற்காக ஒருபிராமணரை வரவழைத்து ஸ்ரீ கிருஷ்ணபகவானிடத்தில் சென்று உருக்குமணிதேவியார் தங்களை மணம்புரியவிரும்புவதால் தாங்களும் அவள் விருப்பத்திற்கிசைந்து அவளை மனைவியாக வகிக்கவேண்டுமென வணக்கத்துடன் கேட்டுவரும்படி அனுப்பினாள். பிராமணர் அவ்விதமே சென்று ஸ்ரீ கிருஷ்ணபகவானைச் சம்மதிக்கும்படி செய்ததுடன் அவரையும் தம்முடன் கூட்டிக்கொண்டு வந்தார். விவாகதினத்தன்று உருக்குமணிதேவியார் பார்வதிகோயிலுக்குச் சென்று பூசைசெய்தபின் திரும்பிவரும்பொழுது ஸ்ரீ கிருஷ்ணன் உருக்குமணியை தமது இரதத்தில் ஏற்றிவைத்துக் கொண்டார். உடனே உருக்குமியும் மற்றஅரசர்களும் உருக்குமணியை மீட்ட ஸ்ரீ கிருஷ்ணனுடன் யுத்தம் செய்தார்கள்; யாவரும் தோல்வியடைந்து அவமானமடைந்தார்கள். ஸ்ரீ கிருணபகவான் உருக்குமணியுடன் துவாரகாபுரிக்குச்சென்று ஜனங்களும் ரிஷிசிரேஷ்டர்களும் சந்தோஷமடையுபா வண்ணம் உருக்குமணிதேவியை மணம்புரிந்தார்.

## முதல் அங்கம்.

### முதற்களம்.

இடம் - குண்டினமாநகர் - ஆஸ்தானமண்டபம்.

(பீஷ்மமகாராஜன், பிரபுக்கள், மந்திரிகள் பிரவேசித்தல்.)

பீஷ்மமகாராஜா:— இந்த ஆஸ்தானமண்டபத்தில் வீற்றிருக்கும்படியான பிரபுக்களே! மந்திரிமார்களே! நமது அரும் குமாரத்தியாகிய உருக்

குமணிக்கு விவாகம் செய்யவேண்டியிருக்கிறது, அவளுக்குத்தகுந்த புத்தியிலும், சாதுரியத்திலும், கல்வியிலும், ஐசுவரியத்திலும், அழகிலும் சிறந்த புருஷன்யார்? உங்களுக்கு அவ்வித குணம்வாய்ந்த மகாபுருஷனைத் தெரிந்திருந்தால் அவன்பெயரைச் சொல்லுங்கள்.

பிரபுக்கள்:—மகாராஜாவே! ஒருபெண் சாதாரணமாக வெகு அழகுள்ளவனையும் தன்னிடத்தில் அன்புள்ளவனைக் கணவனாகவடைக்க விரும்புவாள். பெண்ணின் தாயார் தனது குமாரத்திக்கு ஐசுவரியவான் கணவனாக யிருக்கவேண்டுமென்று விரும்புவாள். பிதாவோ கல்வியிற்சிறந்தோனை அடையவிரும்புவார். அவளுடைய பந்துக்களோ நல்லகுடும்பத்தைச் சேர்ந்தவனாகவிருக்கவேண்டுமென்று எண்ணுவார்கள். மற்றவர்கள் திவ்வியமான போஜனத்திற்குப் பிரியப்படுவார்கள். ஆகையால் இவ்விஷயத்தைப்பற்றி தீர்க்காலோசிக்க காலம்வேண்டும். திடீரென்று எப்படிச் சொல்வது?

(உடனே நாரதமகா ரிஷியும், சானகர், சாநந்தனர் முதலிய ரிஷிசிரேஷ்டர்கள் வந்தார்கள். அவர்களுக்கு அர்க்கியபாத்தியம் முதலியவைகள் கொடுத்து மரியாதை செய்து ஆசனத்தில் அவர்களை உட்காரவைத்தார் மகாராஜா அவர்கள்.)

ரிஷிகள்:—ஓமகாராஜாவே! தாங்கள் தங்கள் குழந்தைகளுடன்சௌக்கியமாயிருக்கின்றீர்களா? பிரஜைகள் தங்களை விரும்புகிறார்களா? தங்கள் ஆக்கினைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்களா? தங்கள் சத்துருக்கள் பதுங்கிக்கொண்டு தொந்தரவொன்றும் செய்யாமலிருக்கிறார்களா?

மகாராஜா:—ஓ ரிஷிசிரேஷ்டர்களே! தங்கள் ஆசிர்வாதத்தால் நானும் என்குழந்தைகளும் க்ஷேமமாயிருக்கின்றோம்; என்னுடைய பிரஜைகள் தங்கள் தகப்பனுக்கு கீழ்ப்படிந்தும் பிரியத்துடனும் நடப்பதுபோலவேஎன்னுடைய ஆக்கினைகளுக்குக் கீழ்ப்படிந்திருப்பதுடன் என்னையும் நேசித்து வருகிறார்கள். எனக்கு புத்திர புத்திரி பாக்கியம் கிடைத்தது பெரும்மகிழ்ச்சியை உண்டாக்குகிறது. தங்கள் ஆசிர்வாதத்தால் என்னுடைய சத்துருக்கள் எனது வீரபராக்கிரம சாலிகளாயுள்ள சேனைக்குப்பயந்து ஓடி பதுங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

ரிஷிகள்:—தங்களுடைய குமாரத்தியையும் குமாரன் உருக்குமியையும் நாங்கள் பார்க்க மிக ஆவலாயிருக்கின்றோம்.

(ரிஷிகளுக்குமுன் உருக்குமணி, உருக்குமி வருகிறார்கள். உருக்குமணி ரிஷிகளுக்கு நமஸ்காரம் செய்கிறாள்.)

ரிஷிகள்:—ஓ பெண் இரத்தினமே! உனக்கு தீர்க்க ஆயுளையும், சுகவாழ்வையும் அளித்து ஆசிர்வதிக்கின்றோம்.

ஓ இராஜனே! உனதுபுத்திரி விவாகத்திற்குரியவளா யிருக்கிறாள்; அவளையாருக்கு பாணிக்கிரகணம் செய்துவைக்க யோசித்திருக்கிறாய்?

மகாராஜா:—ஓ மகாரிஷிகளே! இவ்விஷயம்தான் எனக்கும் பெருத்த யோஜனையாயிருக்கிறது. இப்பொழுது சற்று முன்தான் எனது பிரபுக்கள் மந்திரிமார் முதலியவர்களுடன் தக்க கணவன் யாரிருக்கிறான், எத்தேசத்திலிருப்பவன் என்று பிரஸ்தாபனைசெய்தேன்; தாங்கள் இப்பொழுது என் சபைக்கு வந்திருக்கிறபடியால் தாங்களே என்கவலையைத் தீர்க்கத்தகுந்தவர்கள். நீங்களே எந்தப்புருஷனுக்கு உருக்குமணியை விவாகம் செய்துவைக்கலாமென்பதைச் சொல்லுங்கள்.



ரிஷிகள்:—நாங்களும் வெகுநாளாக இவ்விஷயத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம்; துவாரகாபுரியை அரசுபுரியும் ஸ்ரீ கிருஷ்ணனுக்குத் தகுந்தமனைவி உன் அரும்குமாரத்திதான். ஸ்ரீ கிருஷ்ணனே பரமாத்மாவாகிய ஸ்ரீமந்நாராயணர்தான்; அவர் லட்சுமி அவதாரமாயுள்ள உன்பிரியமுள்ளபுத்திரிக்கும் தகுந்த கணவர். ஆகையால் உன் மகளை ஸ்ரீகிருஷ்ணனுக்கு விவாகம்செய்துவிடு; குழந்தையும் சௌக்கியமாகவிருக்கும்.

பிரபுக்கள்:—ஓ மகாராஜாவே! இந்த மகாரிஷிகளுடைய வார்த்தைகளைக்கேட்டு நடப்பதுதான் உசிதம். தமது புத்திரி ஸ்ரீகிருஷ்ணன் கையை அடையட்டும்.

உருக்குமி:—என்பிதாவாகிய மகாராஜாவே! தயைகூர்ந்து நான் சொல்வதைக்கேளுங்கள். இடைப்பிள்ளைகளுக்குத் தலைவனாகவுள்ள அந்த கிருஷ்ணனுடன் சம்பந்தம் நாம்வைத்துக்கொள்வது நமக்கு அடுக்குமா? அந்த கோபாலனுடைய வீரத்தன்மையைப்பற்றி பலவிதமாக பிரபுக்கள் வீண் ஸ்தோத்திரம் செய்தார்கள். அவன் மருதாசுரனைக் கொன்றானும். வேருடன் அசோகவிருக்ஷத்தைப் பிடுங்கினானும்; தேனகாசுரன், வட்சாசுரன், கடாசுரன், பூதலை முதலிய அசுரர்களையும் தனது மாமனாகிய கம்ஸனையும் கொன்றானும். தனக்குப் பால்கொடுத்த பூதலை என்ற ஸ்திரீயைக்கொன்றதும், விருக்ஷத்தை வேருடன் பிடுங்கியதும், கொக்கு, பாம்பு, எருது இவைகளைக் கொன்றதும் வீரத்தன்மையாகுமா? தனது சொந்தமாமனைக் கொன்றவன் எனது பிரியமுள்ள சகோதரிக்குக் கணவனாகவிருக்க அருகனா? இடையர்சாதியிற்பிறந்தவனுக்கு வீரத்தன்மையேது? இடையர்கள் சாதாரணமாக பயமுள்ளவர்களல்லவா? மடையர்களல்லவா? ஓ எனது பிதாவாகிய மகாராஜாவே! நான் ஒருபொழுதும் எனது அருமையான சகோதரியை அந்தப் பயலுக்குக் கொடுக்கச் சம்மதியேன். நீங்கள் சொல்வது எப்படியிருக்கிறதென்றால் உயர்ந்த வைடூரியம், மாணிக்கம், புஷ்பராகம் முதலியவைகளால் செய்யப்பட்ட அழகான ஒரு ஹாரத்தை ஒரு குரங்கின் கழுத்தில் மாலையாகப்போட்டால் எவ்விதமிருக்குமோ அவ்விதம்தானிருக்கிறது. நல்ல சம்பக புஷ்பமாலையை ஒரு காக்கையின் கழுத்தில் மாலையாகப் போட்டால் எவ்வளவு அழகாக விருக்கும்? உங்கள் வார்த்தைகளைக் கேட்டால்அம்பலம்தான். இந்த ரிஷிகளெல்லாம், கிருஷ்ணனுக்கு நல்லகுடும்பத்தில் சம்பந்தம் செய்வித்து அவன் ஸ்திதியை உயர்த்த எண்ணி அவனிடத்தில் திரவியம் பெற்று இங்குவந்து இவ்விதம் சொல்லுகிறார்கள். நான் ஒருபொழுதும் இவ்விஷயத்திற்கு இடம் கொடேன், சம்மதிக்கவும் மாட்டேன். சேதி தேசத்து அரசனும் மகாபராக்கிரம சாலியுமான சிசுபாலனுக்கு எனதுசகோதரியைக் கொடுக்கிறேன். அவன் கௌரவமுள்ள இராஜவம்சத்தில் உதித்தவன். இவனைக்கண்டால் எவனும் நடுங்குவார்கள்; இவனே எனது சகோதரிக்குத் தகுந்தகணவன்.

(சபாமண்டபத்திலுள்ளோருக்கு ஒன்றும் தோன்றவில்லை; எங்கும் குழப்பமாகவிருந்தது, ரிஷிகள் எழுந்து இராஜனைப்பார்த்து சொல்லுகிறார்கள்.)

ரிஷிகள்:—ஓ மூட அரசனே! எங்கள் அபிப்பிராயத்தை உன் புத்திரியின் விவாகவிஷயத்தைப் பற்றி வெளியிடச் சொன்னதின்மேல் நாங்கள் ஸ்ரீகிருஷ்ணபகவானே உன் அருமையான புத்திரிக்குத் தகுந்தகணவரென்று சொன்னோம், உன்பிள்ளையின்மேலுள்ள வாஞ்சையினால் நீ அந்த இடையப்

புள்ள குமாரனுடைய வார்த்தையைக் கேட்கிறாய், எங்கள் வார்த்தையை லக்ஷியம் செய்யவில்லை. உன்னுடைய புத்திக்கும் உன்னுடைய கர்வமுள்ள புத்திரனுடைய துர்மதிக்கும் மிகவருந்துகின்றோம்! இவன் எவனை அவ்வளவு அவமதிப்பாகப் பேசினானோ அம்மகானே இவன்கர்வத்தைப் பங்கப்படுத்தப்போகிறார். அவரே உன்குமாரத்தியை மணம்புரியப்போகிறார், உன்குமாரன் ஜீவகாலமுழுவதும் தன் ஞாபகத்திலிருக்கும்படியான அடையாளத்தைப்பெற்று அவமானமடையப் போகிறான். இது நிச்சயம். நாங்கள் விடை பெற்றுப் போகிறோம்.

(ரிஷிகள் யாவரும் சென்றார்கள்.)

உருக்குமி:—ஓ பிதாவே! இந்த ரிஷிபிண்டங்களினுடைய வார்த்தைகளுக்கு மதிப்பென்ன யிருக்கிறது! நாம் உடனே சேதிராஜ்யத்து அரசனாகிய சிசுபாலனுக்கு ஒருவிவாகப் பத்திரிகை எழுதி உடனே புறப்பட்டுவரும்படி அனுப்புவோம். அவனுக்கே நமதுகுமாரத்தியை மனைவியாக்குவோம்.

அரசன்:—அவ்விதமேசெய்; நான் உன்னிஷ்டப்படிச் செய்யமனப்பூர்ணமனதுடையவனாயிருக்கிறேன்; உனக்கு அதிருப்தி செய்ய எனக்கிஷ்டமில்லை. (எல்லாரும் சென்றார்கள்.)

## களம் 2.

இடம்:—மகாராஜாவின் பூந்தோட்டம்.

(உருக்குமணி, வனமாலிகா, கமலா, ஜயோத்சநா தோட்டத்திற்குள் பிரவேசித்தல்.)

வனமாலிகா:—பிரியமுள்ள தோழிகளே! நேற்றையதினம் நம்மை உருக்குமணி தேவியார் இப்பூந்தோட்டத்தைச் செப்பனிடும்படி நமக்கு உத்திரவளித்தார்களல்லவா? ஆனதால்தான் நாம் இப்பொழுது இங்குவந்திருக்கிறோம்.

கமலா:—ஆமாம் அவ்விதமே நானே உடனே ஆள்களைவிட்டு தோட்டத்தைச்சரிபடுத்திவிட்டேன். வேண்டுமானால் சுற்றிபார்ப்போம்வா. அழகுள்ள பழத்தோட்டத்தைப்பார்! அலையொலியுடன் இந்தத் தோட்டத்தின் வழியாகச் செல்லுகிற நீரோட்டத்தைப்பார்! மாம்பழங்கள் நிறைந்த மாவிருக்ஷங்களைப்பார்! மேலும் பழங்களுள்ளகிளைகள் இத்தோட்டத்தின் மாதரசியார் வரும்பொழுது அம்மாதரசியை வணங்கி அவளுக்குப்பழங்களை இஷ்டத்துடன் அளிக்கத் தயாராயிருப்பதுபோல் தொங்கிக்கொண்டிருக்கின்றதையும்பார்! நமது சகோதரியாகிய உருக்குமணி தேவியாரின் நல்வரவை எதிர்க்கொள்வதின் பொருட்டு மல்லிகைக்கொடிகளும் சம்பகக்கொடிகளும், அடர்ந்த புஷ்பங்களால் மூடப்பட்டிருக்கின்றதையும் பார்! மயில்கள் தங்களது விசித்திரமானவும் பலவர்ணங்களுடையதுமான தோகைகளை விரித்துக்கொண்டு, கக்கோ என்ற பக்ஷியின் இனிமையான சப்தத்தைக்கேட்க, ஆடுகின்றதையும்பார்! மான்களும், மான்குட்டிகளும் துள்ளிவிளையாடிக்கொண்டிருக்கின்றதையும்பார்! மேலும் இதோபார் கருடன் நமது உருக்குமணி தேவியாரைக்காண ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றது! அதோபார் பஞ்சவர்ணக்கிளிகள் 'ஸ்ரீஉருக்குமணி மாதரிசிக்கு மங்களம்' என்று சொல்லிக்கொண்டிருக்கின்றன!



ஜயோத்சனா:—வனமாலிகா! கமலா! அதோபார்! நமது உருக்குமணி ஒருகையில் கன்னத்தை சாய்த்து வைத்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். நாம் அவளிடத்திற்குப்போவோம்.

தோழிகள்:—அன்புவாய்ந்த உருக்குமணி! நாங்கள் சீக்கிரம் வராததைப் பற்றி எங்களை மன்னிக்கவும். இந்தத் தோட்டத்தில் விருக்ஷங்கள், செடிகள், பக்ஷிகள் முதலியவைகள் சரியாக விருக்கின்றனவாவென்று பார்த்தோம். மேலும் தோட்டத்திலுள்ள காக்ஷிகளைக்கண்டு மிகமகிழ்ந்து தங்களையும் கூட்டிக்கொண்டு சுற்றிலும்போக எண்ணிவந்தோம். நீங்கள் என்னமனம்வாடியிருக்கிறீர்கள்? நீங்கள் எப்பொழுதும் சிரித்தமுகத்துடனிருப்பீர்களே. இன்றையதினம் அவ்விதம் காணப்படாததற்கு காரணம் என்ன? தங்கள் மனதில் என்னவோ கவலையிருப்பதாகத் தோன்றுகிறதே! ஒருவேளை தங்களுக்கு யார் கணவனாகவருவானோ என்று யோசித்துக் கொண்டிருக்கிறீர்களா என்ன? (உருக்குமணி மறுமொழி ஒன்றும் சொல்லாமல் யோசனையிலேயே மூழ்கியிருந்தாள். அவள் கண்களிலிருந்து தாரைதாரையாக கன்னம்வழியாக நீர் வடியத் தலைப்பட்டன. கண்ணீரைத்துடைத்து அவள் கவலையை நீக்க முயலுகிறாள் வனமாலிகை, பிரயோஜனப்படவில்லை.)

வனமாலிகை:—சகோதரிகளே! நீங்கள் சற்று பூஞ்சோலைப்பக்கம் செல்லுங்கள். நான் தனிமையாக உருக்குமணியுடன் சில சங்கதிகள் பேசி அவள் மனதிலிருப்பதையறிகிறேன். தயவு செய்து செல்லுங்கள்.

மற்றதோழிகள்:—அப்படியேசெய் வனமாலிகை. நாங்கள் செல்லுகின்றோம். அவள் அழுவதை நிறுத்தி எவ்விதமாகவாவது அவள் மனதையறியப் பிரயத்தனம் செய்யம்மா.

வனமாலிகா:—எனது அருமை வாய்ந்தத்தாயே! நீ எப்பொழுதும் இவ்விதம் தேகமெல்லாம் வாடி மனவருத்தத்துடனிருந்ததில்லையே. உன் மனக்கவலையைச் சொல்லேன். நீசந்தோஷமாயிருக்கிறதை விட்டு ஏன் வாட்டமுகத்துடனிருக்கிறாய்? உன்மனதில் ஏதாவதிருந்தால் சொல்லேன் உருக்குமணி! நான் அதற்குத் தகுந்த உபாயம் செய்கிறேன். நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம.

உருக்குமணி:—அன்புள்ள வனமாலிகா! நான் என்ன சொல்வேனடி! நான் வாஸ்துவமாகவே வாடியிருக்கிறேனா? எனக்கு மனக்கவலையிருப்பதாகத் தோன்றுகிறதா?

வனமாலிகா:—ஆமாம். இது உண்மைதான். உனக்கு தேகத்தில் வியாதியொன்று மில்லையே!

உருக்குமணி:—வியாதியில்லாவிட்டால்.

வனமாலிகா:—வேறு என்ன அம்மா?

உருக்குமணி:—நீ என்னை வருத்தப்படுத்தாதே.

வனமாலிகா:—உன் விவாகத்தைப்பற்றி ஏதாவது பேச்சு நடந்ததோ என்ன?

உருக்குமணி:—உனக்குத்தெரியாதா?

வனமாலிகா:—எனக்கு நீ சொல்லாவிட்டால் எப்படித் தெரியும்?

உருக்குமணி:—எனது சகோதரன் உருக்குமி சிசுபாலனுக்கே என்னை விவாகம் செய்து வைக்கவேண்டுமென்று நிச்சயித்திருக்கிறான். எனது தகப்பனாரும் புத்தி கொஞ்சங்கூடயில்லாத எனது சகோதரன் பேச்சைக்கேட்டு அவனை உடனே விவாகத்திற்கு வரும்படி கடிதமும் எழுதியிருக்கிறார்.

வனமாலிகா:—சிசுபாலன் சேதி ராஜியத்திற்கு அதிபதி, மகாசூரன். தைரியவான். அவனை விவாகம் செய்துக்கொள்ளலாமே.

உருக்குமணி:—மனமிக பதறுதேடி! சிசுபாலனென்று செல்லாதே ஸகி! சிசுபாலனென்று சொல்லாதே.

வனமாலிகா:—சரி, சொல்லவில்லை யம்மா; ஆனால் யாரை மணம்புரிய உனக்கிஷ்டம்? அவர் பேரைத்தான் சொல்லேன்?

உருக்குமணி:—ஸ்ரீகிருஷ்ணபகவானைப்பற்றி நீ கேட்டிருக்கிறாயோ?

வனமாலிகா:—அவரைப்பற்றியெனக்குத்தெரியும்; அவர் துவாரகையி லிருப்பவர்தானே?

உருக்குமணி:—ஆம். அவர்தானடி.

வனமாலிகா:—சரி. அவரையே செய்துக்கொள்.

உருக்குமணி:—வனமாலிகா ஒன்றுகேள்: எனக்கு சிசுபாலனை மணம் புரிய இஷ்டமில்லவேயில்லை; இஷ்டமில்லாதபொழுது நான் எப்படி அவரை மணம்செய்துக்கொள்வது? எனக்கோ ஸ்ரீகிருஷ்ணன் பேரில்தான் மனம் சென்றிருக்கிறது. அவரைத்தவிர மற்றெவரையும் மணந்துக் கொள்ள எனக்குச் சம்மதமில்லை.

வனமாலிகா:—எனக்கும் அவரை நீ மணந்துக்கொள்வதில் பூர்ண சம்மதம்தான்.

உருக்குமணி:—நான் இனி எப்படி அவரை மணந்துக்கொள்வது? பாபி உருக்குமணன் பொல்லாதவனாச்சுதே! நாம் சொன்னால் நம்வார்த்தையைக் கேளான். நீ தான் இவ்விஷயத்தில் எனக்கு உதவி புரிந்து விவாகத்தை முடித்துவைக்க வேண்டுமம்மா?

வனமாலிகா:—நீபயப்படாதே எப்படியாவது அம்மா நான் உன்னை மணம் புரிவார். நீயோ மகாகீர்த்தியுடனும் பெருமையுடனும் கொண்டாடப்படு வாய். அவரும் உன்னை மனைவியாக அங்கீகரித்து துஷ்டர்களைத் தண்டிப்பார்.

உருக்குமணி:—நீ பரிகாசம் பண்ணுகிறாய்? ஏதாவது ஒரு வழியோ யுக்தியோ சொல்லேன்?

வனமாலிகா:—அம்மா! நமது சபாமண்டபத்தில் ரிஷிகள் அவ்விதம் உண்டாகக்கடவதென்று ஆசீர்வதித்துச் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். ரிஷிகள் வாக்கு வீண்போகுமா?

உருக்குமணி:—சந்தோஷம்! ஆயினும் நாம் பிரயத்தனம் செய்யவேண்டாமா? எவ்விதம் ஸ்ரீ கிருஷ்ணபகவானை அடைவது? தகுந்தயோசனை சொல்லு.



வனமாலிகா:—நாம் ஒரு யோக்கியமுள்ள பிராமணரை வரவழைத்து
உனது அபிப்பிராயத்தை ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குத் தெரிவிக்கும்படி செய்
வோம். இது தான் உத்தமமான மார்க்கமென்று எனக்குத் தோன்றுகிறது.

உருக்குமணி:—"போடி, போடி போடி போடி ஸகி.
"போடி அந்தணரை அழைத்தோடிவாடி ஸகி."
"நாடி ருக்மணி மேனி வருந்துகிறாளென்று
நாடி துவாரகையில் கண்ணனை அழைக்கவென்று
பாபி ருக்மணியிதை அறிந்துகொள்ளாமலே
கோபிநாதன் வரவழி பாராய் பூங்குழலே போடி
போடி, போடி, போடி ஸகி. போடி அந்தணரை
அழைத்தோடி வாடி - ஸகி."

(வனமாலிகா உடனே சென்று உத்தமவேதியராகிய அக்னிதியோதா
வென்பவரை அழைத்து வந்து).

வனமாலிகா:—உருக்குமணி! இதோ அந்தணச் சிரேஷ்டர் வந்திருக்
கிறார்.

உருக்குமணி:—ஓ பிராமணோத்தமரே! உம்மை நமஸ்கரிக்கிறேன். நற்
உருக்குமணி:—ஓ பிராமணோத்தமரே! உம்மை நமஸ்கரிக்கிறேன். நற்குணமும், தயாளகுணமும், தர்மசிந்தையும் பொருந்திய பிரம்மகுலத்தி
லுதித்தவரே! தங்களுடைய மகாராசாவின் துர்பாக்கியமுள்ள குமாரத்தியின்
வேண்டுகோளுக்கிணங்கி உதவி புரியுமாறு மிக வணக்கத்துடன் கேட்டுக்
கொள்ளுகிறேன். நான் சொல்வதை தயவுசெய்து கேளும ஐயா.

அக்னிதியோதா:—அருமைக்குழந்தாய்! உன் வருத்தம் என்ன? அதை
விவரித்துச் சொல்லம்மா, நான் என்னுயிரைக் கொடுத்தாவது உனக்கு உத
விபுரிய சித்தமாயிருக்கிறேன். இது உண்மை, சத்தியம். நீ ஒன்றுக்கும் பயப்
படவேண்டாம். இதரர்களின் மேல் அநுதாபமுள்ளவனும், விசனமுள்ள
வர்களை விசனத்திலிருந்து நீக்குபவனும், பொறுமையுள்ளவனும், சகாயம்
செய்பவனும் கல்விகற்றவனும், அறுவகைத் தொழில்களில் அதிகசிரத்தை
யுடையவனுமாகிய பிராமணன் துன்பப்படுவதில்லை என்பதாக ஸ்மிருதிகளில்
சொல்லப்பட்டிருக்கின்றன. இதரர்களுக்குஅநுதாபங் காட்டாதவனும்அவர்
களுடைய விசனத்தை நீக்காதவனும் பிராமணனா யிருந்தும் பிரயோஜன
மென்ன?

உருக்குமணி:—ஓ பிராமண சிரேஷ்டரே! எனது தந்தையார் புத்தி
யில்லா எனது சகோதரன் வார்த்தையைக்கேட்டு சேதிதேசத்தரசனை உட
னே வந்து என்னை மணம் புரியும்படி ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அவனை
வெறுப்பதைத் தவிர அவனை நான் விரும்பவில்லை. ஆகையால் தாங்கள் தயை
கூர்ந்து இக்கடிதத்தை எடுத்துக்கொண்டுதுவாரகாபுரிக்குச் சென்று கிருஷ்
ணனை நான் மணம்புரிய மிக விரும்புவதாகச் சொல்லி இந்தக் கடிதத்தைக்
கொடுத்து அவரை உடனே இங்கு வரவழைத்து வரவேண்டும். இது தான்
எனது வேண்டுகோள்.

(உருக்குமணி இரகசியமாக பிராமணர் காதில் ஏதோ சொல்லி விட்டு
அவருக்கு நமஸ்காரம் மறுபடியும் செய்தாள்).

பிராமணர்:— ஓ வட்சே! கடவுள் உனக்கு ஜயமுண்டாகும்படி ஆசிர்வதிப்பாராக. நான் உடனே துவாரகைக்குப்போய் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு உன் இஷ்டத்தை தெரிவித்து அவரை இங்கு நிச்சயமாக அழைத்து வருகிறேன். நீ பகவானை பக்தி சிரத்தையுடன் பூஜித்துக் கொண்டும் சந்தோஷமாயிரு.

(பிராமணர் சென்றதும் வனமாலிகா உருக்குமணியுடன் சந்தோஷமாகப் பேசியபின்பு உருக்குமணி, கமலா, ஜயோதி சேனுமுதலியவர்களையும் கூட்டிக்கொண்டு அரண்மனைக்குச் சென்றாள்).

ஓர் பண்டிதர்.

# ஸ்திரீ ரத்தினம்.

## 4-வது அதிகாரம்.

பத்மாவதி—விசித்திரவ பிரபுவுக்கு விரோதி என்று சொல்லிக்கொள்வதில் வெகு பெருமை பாராட்டுகிறவன் என் அண்ணன் தர்மசீலன் என்றாள். உத்தமசேனன் அந்தப்பெயரைக் கேட்கவே தன் எண்ணங்கள் கைகூடாதென்று வருத்தப்பட்டுக்கொண்டு பெண்ணே உன் அண்ணன் அந்த புத்திமானா? ஆகா விசித்திரவன் வமிசத்தில் பிறந்தவன் எல்லோரும் அயோக்கியரென்று அவன் நினைப்பானே. நான் அவனுடைய சிநேகத்தை வெகுநாளைக்கு முன் விரும்பியும் அவன் என்னை விசித்திரவன் வமிசம் என்று கவனிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டே கூட்டிச்சென்றான். பத்மாவதி பேசிக்கொண்டே கூடப்போனாள்.

பத்மாவதி—பிரபுவே தாங்கள் சொல்வதைப்பார்த்தால், என் அண்ணனுடைய குணங்களை தாங்கள் அறியவில்லைபோல் தோன்றுகிறது. இப்பட்டணத்தில் ஒரு ஏழைப்பெண்ணை யாராவது காப்பாற்றினாலுங் கூட அவர்கள் பேரில் என் அண்ணன் வெகு விசுவாசமாக இருப்பான். அதிலும் தங்கையையே காப்பாற்றியிருக்கும்பொழுது கேட்கவும்வேண்டுமோ.

உத்தமசேனன்—பெண்ணே, அவன்பேரில் தப்பிதம் ஒன்றுமில்லை. இந்தக்காலம் சரியானகாலமல்ல. தன்தேசம் கெட்டுப்போனதற்காக யதார்த்தத்தில் வருத்தப் படுகிறவர்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் நம்பிக்கையில்லை. பிரபுக்கள் வமிசத்தில் ஒருவன் பிறந்துவிட்டால் அவன் குணங்கள் எப்படியிருந்தபோதிலும் ஜனங்கள் அவனை விரோதி என்று தீர்மானித்து விடுகிறார்கள். ஜனங்கள் வமிசத்தில் பிறந்தவனெல்லாம் பிரபுக்களுக்கு விரோதி என்றும் ஏற்படுத்திவிட்டார்கள். பெண்ணே! ஆனால் எது எப்படியிருந்தபோதிலும் ஜாதிக்கு ஜாதி சண்டையாயிருந்தபோதிலும், கக்ஷி பிரதிகக்ஷிகள் இருந்தபோதிலும் என் ஞாபகம்மட்டும் உன் மனதைவிட்டு நீங்காமல் எப்பொழுதும் இருக்கவேண்டும்.

பத்மாவதி—தாங்கள் என்னைப்பார்த்து இப்படிச் சொல்லலாமா? என் மனது உங்களுக்குத்தெரியவில்லை. ஆனால் என்று சொல்லி சற்று தயங்கி



னாள். உத்தமசேனன் அதற்குள் பொறுக்கமாட்டாமல், பெண்ணே மேலே சொல் அதற்குள் நிறுத்திவிட்டாயே உன் வார்த்தையாகிய சங்கீதத்தை இந்தக் காதுமுழுவதும்கேட்க கொடுத்துவைக்கவில்லையே. என்ன மேலே சொல்லவந்தாய்? ஆனால் நீ என்னை இனி மறக்கமாட்டாயென்று நினைக்கிறேன். நான் மறுபடியும் உன்னைப்பார்க்கிறேன். இப்போது நாம் உங்கள் வீட்டுக்குத்தான் போகிறோம். நாளையதினம் நான் என்னுடைய பழைய சிநேகிதன் தர்மசீலனைப் பார்க்கிறேன். அப்போது உன்னையும பார்க்கிறேன்; பார்க்கலாமல்லவா என்றான்.

பத்மாவதி, தலைகுனிந்து சிரித்துக்கொண்டதால் அவளுக்கு சம்மதமென்று உததமசேனன் அறிந்துக்கொண்டான்.

உத்தமசேனன்—பெண்ணே, நான் மறந்தேபோய்விட்டேன். கலியாணத்தில் தாலிகட்ட மறந்துபோனதுபோலிருக்கிறது. சற்று முன் உன் அண்ணன் பெயரைமட்டும் நீ சொன்னாய். அப்பெயரைக்காட்டிலும் அதிக சந்தோஷத்தைச் கொடுக்கக்கூடிய பெயரைக்கேட்டால்தானே இக்காதுக்கும் கொஞ்சம் திருப்தி ஏற்படும்.

பத்மாவதி, தலைகுனிந்து சிரித்துக்கொண்டு என்பெயர் பத்மாவதி என்றாள்.

உத்தமசேனன்—பத்மாவதி, ஆகா இந்தப் பெயர்தான் என்ன அழகாயிருக்கின்றது! ரூபத்துக்குத் தகுந்தபெயர். பெண்ணே! இப்பெயர் என்ன இவ்வளவு உருசியாயிருக்கிறது? என் நாக்கைவிட்டு வெளியே வரமாட்டேனென்கிறதே என்று இப்படி ஸ்தோத்திரம் செய்துகொண்டு உத்தமசேனன் பத்மாவதியை ஓர் சுற்றுவழியில் கூட்டிப்போனான். பத்மாவதி ஒருவேளை வழி சுற்றுவழி என்று தெரிந்தும் தெரியாதுபோல் பாசாங்குசெய்து கூடவே போவதில் சந்தோஷமாயிருந்தாளோ அல்லது சுற்று வழியென்பதே தெரியாதோ, சந்தோஷமாகவே கூடச்சென்றாள். சற்றுநேரத்திற்கு எல்லாம் தர்மசீலன் குடியிருந்த தெருவின்பக்கத்தில் வரவே தீவர்த்தியும் கையுமாக சில ஜனங்கள் திடீரென்று ஓர் குறுக்குத்தெருவிலிருந்துவந்தார்கள். அவர்கள் தர்மசீலனுக்கு சிநேகிதனும் சக்கிரவர்த்தியின் பிரதிநிதியுமான குணசேகரனுடைய ஆள்கள். நிர்குணன் அரண்மனைக்குப்போய் அங்கே சண்டையில்லாமையால் பத்மாவதி அங்கே இல்லையென்றும், பத்மாவதிக்குப் பயமில்லையென்றும் அவளைக்காப்பாற்றினவன் இன்னானென்றும் தெரிந்துகொண்டு வழியில் தர்மசீலனையும் கண்டு கூட்டிக்கொண்டு எல்லோரும் சேர்ந்துவந்தார்கள்.

தர்மசீலனும் உத்தமசேனனுடைய குணங்களையும் நல்ல நடவடிக்கைகளையும் கேள்விப்பட்டவனாதலால் தன்னுடைய தங்கையின் சரீரத்திற்கு ஒரு கெடுதலும் சம்பவிக்கமாட்டாதென்று தைரியமாய் வந்தான். ஆனால் தங்கையின் சரீரம் சௌக்கியமா யிருந்தபோதிலும் அவள் மனதுக்கு அபாயம் வந்துவிட்டதென்றும், உத்தமசேனன் சரீரத்தைக் காப்பாற்றுவதுபோலக்காப்பாற்றி மனதை திருடிவிட்டானென்பது தர்மசீலனுக்கு எப்படிதெரியும்?

பத்மாவதி தர்மசீலனைக் கண்டவுடனே ஓடிப்போய் கட்டிக்கொண்டாள். தர்மசீலன் கண்ணில் நீர் ததும்ப, பத்மாவதி உன் சின்ன அண்ணுதான் எனக்கு என்றைக்கும் மறக்காத துக்கத்தைகொடுத்தான். நீயும் என்

லைசெய்துவிட்டாயோ என்று ஓடிவந்தேன். எனக்கு இவ்வளவாவது உயிரைக் கொடுத்தாயே என்றான். பத்மாவதி சற்று ஒன்றுஞ்சொல்லத் தோன்றாமலிருந்து பிறகு உத்தமசேனனைக் காண்பித்து அவர் தான் தன்னைக்காப்பாற்றினாரென்று சொன்னாள்.

உடனே தர்மசீலன் உத்தமசேனனுக்கு அநேகம் உபசாரவார்த்தைகள் சொல்ல உத்தமசேனன் சற்றுநேரம் அவனோடு பேசியிருந்துவிட்டு, பிறகு தர்மசீலா உன்னைக் கண்டுபேசி வெகுநாளாகிவிட்டது நான் நாளைக்கு சாவகாசமாய் உன்னைப் பார்க்கிறேனென்று சொல்லி அவனிடம் விடைபெற்றுக்கொண்டு, பத்மாவதியிடமும் சொல்லிக்கொண்டு அவளைப்பார்த்து புன்சிரிப்பு சிரித்தான்.

பத்மாவதி அந்த ஜாடையைப்பார்த்து தானும் புன்சிரிப்பு சிரிக்கவில்லையென்றால் கேட்போர்கள் நம்புவார்களோ. பத்மாவதியின் மனது தான் அப்படியிருக்க கேட்குமா. ஆனால் நமக்கு அவ்விஷயத்தில் என்ன சந்தேகமிருந்தபோதிலும், உத்தமசேனன் மனதுக்குமட்டும் அவள் பதிலாக சிரித்தாள் என்பதில் சந்தேகமே இல்லை.

உத்தமசேனன் அந்தப் பெரிய பிரபு வமிசத்தில் பிறந்து பத்மாவதிபேரில் காதல்கொள்வானேனென்று சிலர் சந்தேகிக்கலாம். பத்மாவதியும் நாம் ஏழைவமிசத்தில் பிறந்திருக்கிறோமென்றும் உத்தமசேனன் பிரபுவமிசமென்றும் தெரிந்திருந்தும் அவளும் உத்தமசேனன்பேரில் காதல்கொள்வானேனென்றும் சந்தேகிக்கலாம். ஒரு இமைப்பொழுது இருவர்கண்களும் சந்தித்தால் அதுவேபோதுமானதல்லவா? மேலும் அழகு குணமிருந்தால், பணமென்னத்திற்கு? உத்தமசேனன் ஆவலும் பத்மாவதியின் ஆவலும் நாளுக்குநாள் அதிகரித்துவந்தது. அவர்களுக்கு அடிக்கடி தனியாய் சந்திக்கும்படியான சந்தர்ப்பங்களும் நேர்ந்தன. ஆனால் முற்றிலும் தனிமையாக இல்லை. சித்திரரேகையும் கூடவே தெரிந்தும் தெரியாததுபோலிருந்துகொண்டேதான் சந்திப்புகளும் நடந்துவந்தன. சந்தித்துவிட்டால் அவர்கள் இருவருக்கும் பூலோக ஞாபகமே கிடையாது. சில சமயங்களில் தோட்டத்திலும் சில சமயங்களில் பக்கத்து காலி கட்டடங்களிலும் சந்திப்பார்கள். அவர்கள் ஆசையெல்லாம் நாளைக்கு இந்த ஆசைப்படியிருக்குமோ இது நீடித்திருக்கவேண்டுமே என்று யோஜனையோடு கூடின ஆசையாகவே இருக்கவில்லை. அன்றைய சந்தோஷம் தான் ஞாபகம். வேறு ஒன்றும் கவனமில்லை. சற்று கையை சேர்த்துக்கொள்ளுகிறதும், சற்று தோள்மேலே கைபோட்டுக்கொண்டு வேடிக்கையாகப் பேசுகிறதும் இந்த ஆசையைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்களேயன்றி, இந்த சிநேகத்துக்கு இடையூறு ஒன்றும் வராமலிருக்கவேண்டுமே என்கிற விசாரம் ஒன்றுமில்லாமலே இவர்கள் ஆசை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டுவந்தது.

## 5வது அதிகாரம்.

உத்தமசேனன் தர்மசீலன் வீட்டில் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்து கடைசியாக நல்லது விஜயபுரத்தை பழைய ஸ்திதிக்குக் கொண்டுவருவதுதான் உனது முக்கியமான காரியமென்று சொன்னாயே அதை நீ எப்படி செய்ய முடியும் என்றான்.



தர்மசீலன்:—இது உமக்குத் தெரியாதா? ஒரு தேசத்தின் ஜனங்கள் முன்னுக்கு வரவேண்டுமானால் அவர்கள் பிரயத்தனத்தினாலேதான். இராஜாங்கங்களை எளிதில் சம்பாதித்துவிடலாம்; ஆனால் ஜனங்களின் தயவு இல்லாமலும் அவர்களைத் திருப்திசெய்யாமலும் அவர்களை முன்னுக்குக்கொண்டுவராமலுமிருக்கிற இராஜாங்கம் நீடித்திருக்கமுடியாது.

உத்தமசேனன்:—இந்த விஷயத்தில் தான் நான் உனது அபிப்பிராயத்தை ஒப்புக்கொள்ள முடியவில்லை. என் அபிப்பிராயம் என்னவென்றால் இராஜாங்கங்கள் முன்னுக்குவருகிறது ஜனங்களாலல்ல; புத்தியும்சாமர்த்தியமும் உள்ள சிலரால் தான். ஜனங்கள் அச்சிலர் செய்த காரியத்தை ஒப்புக்கொள்ளுகிறார்களேயொழிய, ஜனங்களாகச் செய்கிறது ஒன்றுமில்லை. ஆனால் நாம் இந்த அற்ப விஷயத்திற்காக தகரார் செய்துகொள்ள வேண்டியதில்லை. நீயோ சமீபத்தில் ஓர் பெரிய விசேஷம் நடக்கப்போகிறதென்றும் பழையஇராஜாங்கம்ஏற்படப்போகிறதென்றும் சொல்லுகிறாய்! நீஎப்படிஏற்படுத்தப் போகிறாய் ? உனக்கு ஆயுதங்கள் எங்கே ? சைனியங்கள் எங்கே ? பிரபுக்களிடம் முற்காலத்துக்கு இக்காலத்தில் சைனியங்கள் குறைந்து விட்டனவா ? அல்லது ஜனங்களுக்கு முற்காலத்தை விட இப்போது பலமும் தைரியமும் அதிகமாகயிருக்கிறதா ? நீ ஒருவேளை நான் இதற்கெல்லாம் விரோதமாயிருப்பேனென்று சந்தேகிக்கலாம். ஆனால் என்னுடைய எண்ணம் பகவானுக்குத் தான் தெரியும். நான் பிரபு வமிசத்தில் மட்டும் பிறந்தேனேயொழிய எனக்கும் உன்னைப்போலவே இத்தேசம் கெட்டுப்போய்விட்டதே என்கிற வருத்தமும் எப்படியாவது ஜனங்களை முன்னுக்குக்கொண்டுவரவேண்டுமென்கிற ஆவலுமிருக்கிறது. ஆனால் உனது யோஜனையில் கலகம் நிரம்பவும் ஆகுமே என்கிற ஏக்கம் எனக்கு அதிகமாக இருக்கிறது. ஒருவேளை உனது யோஜனையின் பிரகாரம் ஜயமுண்டானால் அப்போதும் இதில் இருக்கும் ஜனங்களெத்தனை? அதனால் வரும் நஷ்டங்களெத்தனை? எத்தனை உயர்ந்தகுலமெல்லாம் பாழாகிவிடும்? ஜயித்தாலோ இத்தனை கஷ்டங்களும் உண்டாகின்றன. தோற்றுப்போனாலோ நான் சொல்ல வேண்டியதில்லை ! பிறகு ஜனங்கள் வெளியில் தலைகாட்டக் கூட முடியாது ! அவர்கள் ஜன்மத்துக்கும் அடிமைத்தனம் நீங்காது. ஜயிலில் அடைக்கப்பட்ட கைதி தப்பிப்போக பிரயத்தனம் செய்து அகப்பட்டுக்கொண்டால் இன்னும் பலமான இரும்புகள் போட்டு முன்விட அதிக ஜாக்கிரதையோடு காவல் காப்பார்கள் என்பது உனக்குத் தெரியாதா ?

தர்மசீலன்:—ஆனால் தாங்களென்ன செய்யலாமென்று சொல்லுகிறீர்கள் ? விசித்ரவனுக்கும் நிற்குணனுக்கும் சண்டை எப்போது முடியப்போகிறதென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாமா ? இல்லாமற்போனால் எங்கள் நியாயத்தை விசித்ரவன் நிற்குணன் இவர்களிடம் போய்சொல்லிக்கொள்ளலாமா ? பிரபுக்கள் செய்த அக்கிரமத்தை பிரபுக்களிடத்திலேயே போய் சொல்லிக்கொண்டால் நியாயம் கிடைக்குமா ? பிரபுக்களுடைய அதிகாரத்தைக் குறைத்துக் கொள்ளும்படி கேட்டால் அவர்கள்தான் குறைப்பார்களா ? நாம் தான் அவர்களுடைய அதிகாரத்தைக் குறைக்கவேண்டும். அப்படி பிரயத்தனப் படுவதில அபாயமும் இருக்கத்தான் இருக்கும். அதற்குப் பயந்தால் காரியம் ஆகுமா ? அப்படி அபாயம் வந்து இறந்தபோதிலும் அதுவும் எங்களுக்குப் பெருமையேயொழிய சிறுமையல்ல. நீங்கள் பிரபுக்களெல்லாம் எவ்வளவோ மரியாதைகளையெல்லாம் எதிர் பார்க்கிறீர்கள்! பட்

டப்பெயரை வைத்துக்கொள்ளுகிறீர்கள்! அதெல்லாம் உங்கள் பூர்வீக மரியாதையென்று சொல்லிக்கொள்ளுகிறீர்கள். அப்படி எங்களுக்கு மட்டும் பூர்வீக மரியாதை பட்டப்பெயர் ஒன்றுமில்லையா? எங்கள் பெரியோர்களெல்லாம் அப்படி அடிமைகளாகவா இருந்தார்கள்? அவர்கள் மரியாதைகளெல்லாம் எங்கே போய்விட்டன? அவர்கள் விற்றுவிட்டார்களா? யாருக்காவது தானமாகக் கொடுத்து விட்டார்களா? ஒன்றுமில்லையே! சில சமயங்களில் திருட்டுத்தனமாகவும் சில சமயங்களில் பலாத்காரமாகவும் இந்தப் பிரபுக்கள் தாங்களே எங்கள் மரியாதைகளையெல்லாம் அபகரித்துக்கொண்டார்கள். அந்த அபகரித்த மரியாதைகளை நாங்கள் இப்போது கேட்கிறோமேயொழிய, உங்களை இனும் ஒன்றும் கேட்கவில்லை. எங்களுக்குத்தான் ஸ்வயமான அதிகாரம் இல்லை. உங்களுக்குத் தான் இருக்கிறதா? நீங்கள் உங்கள் கோட்டைகள் இல்லாமலும் உங்கள் கூலி சிப்பாய்கள் இல்லாமலும் ஒரு நிமிஷமாவது உங்கள் வீடுகளில் இருங்கள் பார்ப்போம். இருட்டில் ஒருவருமில்லாத சமயத்தில் தெருவில் சற்றுநேரமாவது தனியாக நடந்துவாருங்கள் பார்ப்போம்! ஆனால் உங்களுக்கு ஒருகெடுதல் நேர்ந்தால் அதற்குப் பதிலாக வேறு யாரையாவது கெடுத்துவிடலாம். ஆனால் அப்படிச்செய்வதில் நீங்கள் அடைந்த கெடுதலும் துன்பமும் நீங்குகிறதா? இதை விட்டு எல்லோருக்கும் ஒரே சட்டமாயிருந்தால் எவ்வளவு நன்றாகயிருக்கும்? நான் மட்டும் விசித்ரவனுடைய ஸ்திதியிலிருந்தால், ஐயோ! கடவுள் நம்மை சிறையிலடைத்ததுபோல, கோட்டைக்குள்ளடைத்து நல்ல காற்றை அனுபவிக்க விடாமல் ஜன்னல்கள் வழியாகவும் சந்துகள் வழியாகவும் வரும் காற்றைஜனங்களுக்குப் பயந்து இங்கே கோட்டைக்குள்ளிருந்து அனுபவிக்கும்படி விட்டுவிட்டாரே என்று வருத்தப்படுவேன். ஜனங்களை சினேகம் பண்ணிக்கொண்டால் பயமில்லாமல் குடி யிருக்கலாம். அப்போது பகவான் நம்மைக் காப்பாற்றுவார். கொடுங்கோல் மன்னன் தான் ஜனங்களுக்கெல்லாம் அதிகாரி யென்று நினைக்கிறான். ஆனால் ஜனங்கள் ஒற்றுமையாகச் சேர்ந்துஆளும் ஓர் இராஜாங்கத்தில் சாதாரணமான மனிதனுடையஅதிகாரத்துக்கு அக்கொடுங்கோல் மன்னனுடைய அதிகாரம் ஈடாகமாட்டாது. உத்தமசேன பிரபுவே!, நீர் பிரபுக் குலத்தில் ஏதோ தப்பிப் பிறந்தவர். நமக்கும் ஓர் நல்ல இராஜாங்கம் இருந்ததென்று எங்களைப்போல நினைக்கிற தாங்களும் எங்களுடன் சேர்ந்தால் எங்கள் காரியத்திற்கு எவ்வளவு உதவியாயிருக்கும்?

உத்தமசேனன்:—நீ என் மாமனாகிய விசித்ரவனுக்கு விரோதமாகக் கலகம் ஆரம்பிக்கும்பொழுது அவன் எனக்கு அதிக சினேகமாயிருப்பதும் தவிர எங்கள் வமிசத்திற்கே தலைவனாக இருக்கிறானே. நான் உன்னோடு எப்படி சேரமுடியும்?

தர்மசீலன்:—நாங்கள் அவனைக்கொல்லப் போகிறோமா? அவன் உயிர் வீடு, அந்தஸ்து, சொத்து எல்லாம் அப்படியே இருக்கும். அவன் பிறருக்குத் தீங்குசெய்யும் சக்தியைக் குறைக்கப்போகிறோமே யல்லாது மற்றவை எல்லாம் அப்படியே தானே இருக்கும்.

உத்தமசேனன்:—ஆனால்உனக்கு உன் வார்த்தைகளைப்போல பலமுமிருக்கிறதென்பதை அவன் கண்டு கொண்டால் உன்னிடம் இரக்கமே வைக்கமாட்டான்.



தர்மசீலன்:—ஆனால் அவன் இன்னும் இதை யறிந்துகொள்ளவில்லையா? ஜனங்களுக்கு என் பெயரைச் சொன்னவுடனே உண்டாகும் சந்தோஷத்தினால் போடும் இரைச்சல் இன்னும் அவன் காதுக்கு கேட்கவில்லையா? அதினால் பயம் ஒன்றும் இன்னும் உண்டாகவில்லையா? அந்தக் கபடசிரோமணியாகிய, துஷ்டன் விசித்ரவ பிரபு கோட்டைமேல் கோட்டையாகக் கட்டி, அதன்மேல் கோபுரம்வைத்துக்கட்டியும் அந்தகோபுரத்தின் உச்சியிலிருந்து என்னுடைய கோட்டைகளையும், கோபுரங்களையும் பார்க்க முடியவில்லையா?

உத்தமசேனன்:—உனக்கு கோட்டைகள்கூட இருக்கின்றனவா? அவைகள் எங்கே?

தர்மசீலன்:—என்கோட்டைகள் விஜயபுரத்து ஜனங்கள் மனதில் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் இதை அவன் இன்னும்பார்க்கவில்லையா? ஆம்! அவனும் அவன் மனிதர்களும் பகல்குருடர்கள்! அவர்கள் எங்கே இதுகளையெல்லாம் பார்த்திருக்கப்போகிறார்கள்?

உத்தமசேனன்:—என் மாமனுக்கு உன்னிடத்தில் இவ்வளவு சக்தி இருக்கிறதென்பதே தெரியாது. தெரிந்திருந்தால் உன்னை முன்னமேயே நாசம் செய்திருப்பான். இப்போதுதான் மூன்றுநாளைக்குமுன், ஜனங்களை வசியம் செய்து கூட்டங்களில் அவர்களுக்கு நல்லவார்த்தைகளைச்சொல்லி கூட்டத்தைக்கலைத்துவிடுவதில் உன்னைப்போல ஒருவருமில்லை. அது எப்பேர்ப்பட்டவனாலேயும் முடியாது. அன்றையதினம் கலகத்தில்கூட உன்னைத்தான் அனுப்பி யிருக்கவேண்டுமென்று உன்பேரில் ஸ்தோத்திரமாகவே சொல்லிக்கொண்டுவந்தான்.

தர்மசீலன்:—விசித்ரவபிரபுவுக்கு, புசல்காற்று வருவதற்குமுன் சாதாரணக்காற்றுகூட அடங்கியிருக்குமென்பது தெரியாதுபோ லிருக்கிறது. அவனுக்கு என்னைக்கண்டால் அலக்ஷியம்தான். உங்களுக்கும் ஞாபகமிருக்கலாமென்று சொல்லி தர்மசீலன் நிறுத்தி சற்று பெருமூச்சுவிட்டு மறுபடியும் சொல்ல ஆரம்பித்தான்:—

நான் சிறுவயதில் அடிக்கடி அவன்வீட்டுக்குப்போய் வேடிக்கையாய் பேசுவதும் விநோதக்கதைகள் சொல்லிக்கொண்டும்அவனைத்திருப்திசெய்து கொண்டுவந்தேன். அவன் சிலசமயங்களில் (ஆ! ஆ! அவன் பணச்செருக்காலல்லவா என்னை அப்படியெல்லாம் சொல்ல ஆரம்பித்தான்) என்னை அவன் கோமாளியென்றும் விகடகவியென்றும் தென்னாலிராமனென்றும் கூப்பிடுவான். இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்க என் மனம் பரிதபித்தபோதிலும் நான் என்கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு வந்தேன். சிலசமயங்களில் அவன் சிரிப்புக்குக்கூட நான் தலைவணங்கினேன். நான் இம்மாதிரியெல்லாம் ஏன்பொறுத்துவந்தேன் என்று நீங்கள் சொல்லமுடியுமா? உங்களுக்குத்தெரியாமல்போனால் நான் இப்போது சொல்லுகிறேன் கேளும். என்னை ஒரு பொருட்டாக எண்ணாமலும் வழக்கம்போல அலக்ஷியமாயிருக்கும் பொருட்டுத்தான். அந்தஎண்ணத்திலேயே நான் என்னையும் எனது யோஜனைகளையும் சந்தேகத்திற்கிடமில்லாமல் காப்பாற்றிவந்தேன். காப்பாற்றவேண்டிய சமயமெல்லாம் தீர்ந்துவிட்டது. என்பேரில் சந்தேகம் வராமலிருக்கும்பொருட்டுவேண்டியவேஷமெல்லாம்போட்டேன்.

இப்போது எனக்கு வேஷம்வேண்டுவதில்லை; இனிநான் விசித்ரவனைக்கண்டு உன்னைநான் இனிலக்ஷயஞ்செய்யவேண்டியதில்லை, உன்கோட்டைகளும் உன் சிப்பாய்களும் என்னை ஒன்றும் செய்யமுடியாதென்று சொல்லமுடியும். இன்னும் அவன் என்னை நம்பினால் நம்பட்டும்; இல்லாவிட்டால் நல்லது எங்காலம் வந்தால் பார்த்துக்கொள்கிறேன்.

உத்தமசேனன்:—ஜனங்களுக்காக நீ என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமென்கிறாய்? அவர்களைத்தாண்டிவிட்டு கோபமூட்டுவதில் பிரயோஜனமில்லையே! அவர்களுக்கு நல்ல யோஜனையென்பது தெரியாதே!

தர்மசீலன்:—நான் நியாயநடவடிக்கைகளும் ஜனங்களுக்கு ஓர்பந்தோபஸ்தும் கேட்கிறேன். இதற்குக் குறைந்தால் நான் கேட்கமாட்டேன். பிரபுக்கள் தங்கள் கோட்டைகளை இடித்து விடவேண்டியது; சிப்பாய்களைத் தள்ளிவிடவேண்டியது; பிரபுக்கள் குற்றஞ்செய்தால் அதுகுற்றமில்லையென்கிற எண்ணத்தைவிட்டுவிடவேண்டியது; நியாயப்படி விசாரிக்க கோர்ட்டுகள் ஏற்படுத்துவதுடன் எல்லோருக்கும் ஒரேநியாயமாக இருக்கவேண்டியது:

உத்தமசீலன்:—இதுவீண்ஆசை; இதுநடக்காது; இன்னும் என்ன வேண்டும்?

தர்மசீலன் ஐயா! நான் முன்னமேயே சொல்லவில்லையா! பிரபுக்களிடத்தில்நியாயம் கேட்கப்போனால் கொடுப்பார்களா என்று நான் சொன்னேனே. அவர்களிடம் இப்படியெல்லாம் நியாயம்கேட்டால் கிடைக்காதென்று தானே நான் அந்த நியாயம் கிடைக்கக்கூடிய இடத்தை தேடியிருக்கிறேனென்று சொல்லி பிறகு தனது குரலை உயர்த்தி வெகுதைரியமாக உத்தமசேன பிரபுவே, மனிதன் விழித்துக்கொண்டே செய்யும் யோஜனைகளும் காரியங்களும் சிலசமயங்களில் கனவுபோல் ஆகலாம். அப்படியாயிருந்தபோதிலும் தெய்வபலத்தால் உண்டாகிற கனவுகள் மட்டும் நிச்சயமாக பலனைக்கொடுக்கின்றன. கடவுள் கிருபை எக்காரியத்துக்கும் வேண்டுமேயல்லாது மனிதனால் ஆகிறது ஒன்று மில்லை.

உத்தம சேனன் மனதிற்கு இது சரியான சமாதானமாகத் தோன்றாத போதிலும் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

இது நிற்க, அப்பட்டணத்தின் கோவிலில் வெளிப்பக்கத்தில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் நின்றார்கள். வெகுகூட்டங்கள் வந்து கொண்டே இருந்தன. ஒருவர்மேலொருவர் முட்டிக்கொண்டும் மோதிக்கொண்டும் எல்லோரும் குதிப்பாய் ஓர் இடத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் குதிப்பாய் சென்ற இடத்திலோ கூட்டம் வெகுஜாஸ்தியாயும் மூச்சுவிடக் கூட இடமில்லாமலுமிருந்தது. ஓர் உயரமும் பெருமனமுமுள்ள மனிதன் ஜனங்களைத்தள்ளிக்கொண்டு, ஏன் இப்படி கூட்டங்கூடுகிறீர்கள்? அடே நாகப்பா என் வலதுகையில் காயப்பட்டு கட்டுப்போட்டிருக்கிறது உனக்கு கண் தெரியவில்லையா? என்னை ஏதோ சுவர்போல் நினைத்துக்கொண்டு ஓரேமோதாய் மோதுகிறாயே என்றான். இதைக்கண்ட ஓர் குள்ளன் ஓகோ பராக்ரமகேதுவா பாவம்! நீ இந்தக் கூட்டத்தில் உன் தேகத்தைதூக்கிக்கொண்டு எப்படிப்போவாய்? இங்கேவா நான் உன்னை ஒரே தூக்காய் தூக்கி அந்தக் கூட்டத்தின் நடுப்புறத்தில் விட்டுவிடுகிறேனென்றான்.



ஜனங்கள் இதைக்கேட்டு கொல்லென்று சிரிக்க, பராக்கிரமகேது கோபங்கொண்டு, மூடர்களே! ஏன் சிரிக்கிறீர்கள்? அவனும் ஓர் சமயத்தில் உபகாரத்துக்கு வேண்டித்தானிருக்கும் என்று சொல்லி, கூட்டத்தில் வேறு ஒருவனைப்பார்த்து அண்ணா! துன்மதி! வரவேணும். இதென்ன வேடிக்கை? இதென்ன கூட்டம்?

துன்மதி:—சுவாமிகோவில் வாசலில் ஓர் பெரிய படம் வைக்கப்பட்டிருக்கிறது. சிலர் அது விஜயபுரத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறதென்று சொல்வதால் ஜனங்கள் அதற்கு அர்த்தம் பண்ணிப்பார்க்கிறார்கள். ஒன்றும் பயன்படவில்லை. என்றான் உடனே பராக்கிரமகேது, வழிவழி என்று கத்திக்கொண்டு சுற்றிலும் ஜனங்களைத்தள்ளிக்கொண்டும் ஆண் பெண்ணென்று பாராமலும் அவர்கள் வசவுகளைக்கவனியாமலும் முட்டிக்கொண்டும் வெகு வேகமாய்ப்போய் ஓர் பக்கத்தில் சங்கிலியால் தடுக்கப்பட்டு அதற்குள் ஓர் பெரிய படம் வைக்கப்பட்டிருப்பதைக்கண்டான். கண்டவுடன் இது தர்மசீலன் வேலையாகத்தானிருக்க வேண்டுமென்றான்.

மற்றொருவன்:—நான் விடியற்காலமே வந்தேன். அப்போதே இப்படம் வைக்கப்பட்டிருந்தது. யார்வைத்தார்களோ தெரியவில்லையென்றான்.

வேறு ஒருவன்:—தர்மசீலன் வேலைதானென்று எப்படி அவ்வளவு நிச்சயமாகச் சொல்லக்கூடும்?

உடனே சிலஜனங்கள் அவனைத்தவிர வேறு யார் இப்படிச் செய்யக் கூடுமென்று சேர்ந்து சொன்னார்கள்.

ஓர் கசாப்புகடைக்காரன்:—இது நிச்சயமாக அநியாயவரிகளைப்பற்றியும் ஜனங்கள் கஷ்டங்களைப்பற்றியும் தானிருக்கவேண்டும். தர்மசீலன் மட்டும் மனது வைத்தால் ஏழையோ பணக்காரனோ, அவனுக்கு வேண்டிய ஆகாரத்துக்கு மாமிசம் சலிசாய் கிடைக்குமென்றான்.

ஓர் ஹோட்டல்காரன்:—ஏன் அவனுக்கு சாப்பாட்டுக்குத்தான் என்ன குறைச்சல்?

இதுகளைக்கேட்டிருந்த ஓர் சாராயக்கடைக்காரன்:—சீ! சீ! முட்டாள்களே! மாமிசமும் சாதமும் யாருக்குத்தான் கிடைக்காது! மகாராஜன் தர்மசீலன் மட்டும் மனதுவைத்தால் எல்லோருக்கும் சிலாக்கியமான சாராயம் வெகு சலிசாய்கிடைக்கும்.

இப்படி ஒவ்வொருவரும் பேசிக்கொண்டிருக்க, சில ஜனங்கள் வழி விடுங்கள்! துஷ்டபுத்திககு வழி விடுங்கள்! அவர் மகாபுத்திமான்! சக்ரவர்த்திக்கும் பிரியமானவர். அவர் இந்த சித்திரத்திற்கு அர்த்தம் சொல்லுவார். வழி விடுங்களென்று கத்தினார்கள்.

துஷ்டபுத்தி தன் அறையைவிட்டும் படிப்பைவிட்டும் சாதாரணமாக வெளியிலெழுந்தருளப்பட்டவரல்ல. ஜனங்கள்போட்ட கூச்சலானது அவரை வெளியிலெழுப்பிக்கொண்டு வந்தது. அவர் பொறுமையாகவும் நிதானமாகவும் படத்தின் பக்கத்தில்போய் சற்று அப்படத்தை நோக்கிப்பார்த்து நிற்க, ஜனங்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு அவர் என்னசொல்லப்போகிறாரென்று வாயைத்திறந்துகொண்டு சற்று அவரைப் பார்ப்பதும் சற்று படத்தைப்பார்ப்பதுமாய். வெகு ஆவலோடு காத்திருந்தார்கள்.

கடைசியாக ஸ்வஸ்டாபுத்தி ஜனங்களைப்பார்த்து, ஜனங்களே! உங்களுக்கு இதன் அர்த்தம் தெரியவில்லையா? எவ்வளவு தெளிவாய் விளங்குகின்றதே. சித்திரக்காரன் ஓர் பெரிய சமுத்திரத்தை புசல்காற்றோடு எவ்வளவு நன்றாய் காட்டியிருக்கிறான் பாருங்கள்.

எஸ். இராமசுவாமி ஐயர். பி-ஏ.,

# பதிவிரதையின் சிறப்பு.

## மகாநாடகச் சுலோகம்.

### இராவணனுக்கும் மகோதரனுக்கும் நடந்த வினாவிடை.

மந்திரி மகோதரன்:—ஏ தோழனே படுக்கையிலிருந்து எழுந்திரு. இராமனிடத்திலிருந்து நீ அபகரித்து வந்த பெண் உனக்கு இணங்கினாளா?

இராவணன்:—ஜாநகி எனும் பெயர்கொண்ட அவள் என்ன தந்திரம் செய்தும் வசப்படுகிறதில்லை. அவள் இராமன் பெயரை யன்றி வேறொன்றையும் அறியாள்.

மந்திரி மகோதரன்:—நீ இராமன் வடிவமெடுத்துக்கொண்டு அவள் முன் போகவில்லையா?

இராவணன்:—இராமன் வடிவத்தை அப்படியே தரித்துக்கொண்டேன். பசிய இலையின் நிறம்போன்ற அவனவயவங்கள் சேர்ந்த பின் என்மனதில் அவளை எப்படியாவது வசப்படுத்த வேணுமெனும் குடில புத்தி உதிப்பதில்லை. தோழனே நான் என்செய்வேன் என்றான்.

பெண்மணிகாள் இதன்றோ கற்புநிலை. இராவணனை இராமன் ஜயித்தான் என்பது பிழையே. சீதாமணியின் பாதிவிரத்தியம் எனும் பெருந்திலைய விட இராமபிரானது பாணம் கொடியதோ. இராமபிரானுடைய பலம், வீரியம், பராக்கிரமம், கல்வி, அழகு, தவம், ஞானமுதலிய வனைத்தும் சீதாமணி கையிலிருந்துதான் வந்தனவாம். மந்திரம் விசுவாமித்திரர் உபதேசித்த பலை அதிபலை என்பவைகளே யாம். ஒளஷதமோ சீதாமணி பவழம்போன்ற இதழும் முத்தின் வரிசையின் காந்தியெனும் புன்னகையும் சேர்ந்தளித்த சொற்சுவையும் அம்மணி ஆங்காங்கு தன் பிராணபதமான நாயகனுக்களித்த அமுதமுமேயாம்.

இப்படி மணிமந்திர ஒளஷதங்கள் மூன்றும் பெற்ற ராமபிரான் மகிமையன்றோ இந்த வினாவிடை ரூபமான மகா நாடகச் சுலோகத்தில் விளங்குகின்றது.

தி. வெங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப் பண்டிதர், சென்னை.

# சமாசாரக் குறிப்புகள்.

ஈஜிப்ட் தேசத்தில் ஸ்திரீகளைவிட புருஷர்கள் அதிகமிருக்கிறார்கள். கெடீவில் சுமார் 1,60,000 புருஷர்கள் அதிகமாக விருக்கிறார்களாம்.

***

பாரிஸ்மியூசியத்தில் இரண்டடி உயரமுள்ள 19,000 சோல்ஜர்களைப் போன்ற சிறியபொம்மைகள் சோல்ஜர்கள் உடுப்பு, கத்திமுதலியவைகளுடன் வெகு அழகாகச் செய்துவைக்கப்பட்டிருக்கின்றன.

***

ஜப்பானில் சுகுரநதி என்ற கருப்புவர்ணமுள்ள ஓர்விதப் பக்ஷி வெகு நன்றாகப் பாடுமாம். இவைகளின்தொனி வெகு இனிமையாக விருக்குமாம், ஆனதால் இதன் விலை மிகவதிகமெனச் சொல்லப்படுகிறது.



ஜர்மனி தேசத்தில் தபால்தந்தி யிலாகாவில் 242,000 மாதர்கள் வேலைசெய்து வருகிறார்களாம். அமெரிக்காவிலோ 239,000 மாதர்களும், இங்கிலாந்து முதலிய இடங்களில் 184,000 மாதர்களும் வேலைசெய்து வருகிறார்களாம்.

***

ஐக்கிய மாகாணத்தில் அகன்ஸ்கோட் என்றமாது நியாயாதிபதியாயிருக்கிறாளாம். உலகமெங்கும் ஹைகோர்ட் ஜட்ஜிகளாயிருப்பவர்கள் கல்விற்றேறிய புருஷர்கள் தான். ஆனால் கல்வியிற்றேறி நியாயசட்டத்தில் மிக்கப்பயிற்சியும் ஞானமும் வாய்ந்த மாது இம்மாதொருவள் தான்.

***

மதுரைஜில்லாவிலுள்ள திண்டுக்கல்லில் ஒரு பெண்பாடசாலை கட்ட சென்னை கவர்ன்மெண்டார் 18,500 ரூபா செலவழிக்க நிச்சயித்திருப்பதைக் கேட்க மிகச்சந்தோஷப்படுகிறோம். திருநெல்வேலி ஜில்லாவிலும் ஒரு கவர்ன்மெண்டு பாடசாலை கட்ட சென்னை கவர்ன்மெண்டார் யோசிப்பார்களென்று நம்புகிறோம்.

***

ஏதன்ஸ் என்ற பட்டணத்தில் ஒரு அதிசயமான வாராந்தரப் பத்திரிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறதாம். அதில் விளம்பரங்கள் சகிதம் செய்யுள்களாகவே எழுதப்பட்டும் பிரசுரிக்கப்பட்டும் வருகிறது. இப்பத்திரிகையின் விஷயங்கள் யாவும் செய்யுள்களாகவே யிருக்கவேண்டுமென்ற எண்ணம் அப்பத்திராதிபருக்கிருக்கிறது போலும்.

***

தென் ஆபிரிகாவில் ஜனித்த மிஸ்ஜேன்நாதன் என்ற பெண்மணி ஐரோப்பாவிற்குச்சென்று பல் வைத்தியம் நன்றாகப்பயின்று இப்பரிக்ஷையிலும் தேறியுள்ளார். இப்பொழுது இம்மாது கேப்காலனியிலுள்ள டூராஜேவார்க்குச் சென்று பல்வைத்தியம் செய்துவருகிறாளாம். தென் ஆபிரிக்காவில் வைத்தியசாஸ்திரம் கற்க முதலில் முன்வந்தது இம்மாதுதானும்.

***

ஐரோப்பாகண்டத்தில் ஹாலண்ட், ஜர்மனிதேசங்களுக்கு வடக்கிலும், இங்கிலாந்துக்கு கிழக்கிலுமுள்ள அட்லாண்டிக்கு மகாசமுத்திரத்தின் வடக்கு கடலிலுள்ள ஹெலிக்கோலேண்ட் என்ற தீவில் 16 வயதுக்குட்பட்டவர்கள் நாடகம்பார்க்கவும் கள்ளுக்கடைக்கும் போகக்கூடாதாம். நமது தேசத்திலோ தாழ்ந்த சாதியில் சிறுவர் கள்ளுண்ணுகிறார்கள், நாடகத்திற்குச் சென்று திரவியத்தை வீணாக்குகிறார்கள்.

***

1863-ஆம் ஜப்பானில் முதலில் ஒரு சமாச்சாரப்பத்திரிகை பிரசுரிக்கப்பட்டு வந்ததாம். இப்பொழுதோ 1500 தினசரி பத்திரிகைகளும், வாரப்பத்திரிகைகளும் மாதாந்தரப்பத்திரிகைகளும் நடைபெற்று வருகின்றன. இந்தியாவில் பத்திரிகைகளை வாசிப்பவர்களோ அரிதாகவிருக்கிறது. பத்திரிகைகளோ மிகசொற்பம். அப்பப்போது புதிது புதிதாக சிலபத்திரிகைகள் தோன்றி மறைந்தும் போகின்றன. பத்திரிகாபிமானமும் தேசாபிமானமும் நம்மவர்க்கு இன்னும் மனதிலூன்றவில்லை.

***

இத்தேசத்தில் வடகிழக்கிலுள்ள டிபூநன் என்ற பட்டணத்தில் ஒரு நகை வியாபாரி முத்தால் ஒரு சிறிய அழகான படகுசெய்திருக்கிறானாம். அதற்கு பாய்மரமிருக்கிறதாம், இது இரத்தினங்களாலிழைக்கப்பட்ட தங்கத்தகடாம். காந்தப் பெட்டியோ ஒரு செம்புக்கல்லால் செய்யப்பட்டிருக்கிறதாம். படகைநடத்துங் கருவியோ பச்சைக்கல்லால் செய்யப்பட்டிருக்கிறதாம், இதன் மத்தியிலுள்ள ஸ்தம்பம் தந்தத்தால் செய்யப்பட்டிருக்கிறதாம். இதன் பளு 1 அவுன்சாம். விலையோ 1000 சவரனும்.

***

கள்ளிக்கோட்டை, பாலக்காடு முதலிய இடங்களில் மாதர்கள் சபை வெகு நன்றாக நடத்தப்பட்டு வருவதைக்கேட்க மிகச்சந்தோஷப்படுகிறோம். பாலக்காட்டு மாதர் சபைக்கு மிஸ்ஸஸ் க்ளேயன்பார்லோவும், கள்ளிக்கோட்டைமாதர் சபைக்கு மிஸ்ஸஸ் மேக்ரே என்ற ஐரோப்பிய மாதும் மிக ஊக்கத்துடனும் இந்தியாமாதர்கள் விருத்திக்குவரவேண்டுமென்ற பூர்ண எண்ணத்துடனும் விசுவாசத்துடனும் உழைத்து வருகிறார்கள். இவர்களுக்கு நமது வந்தனத்தை யளிக்கின்றோம். இன்னும் அச்சபைகளை

உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவர ஈசன் இவர்களுக்கு தீர்க்க ஆயுளையும், தேகவலிமையையும் அளிப்பாராக.

***

லார்ட் வுல்ஸலி என்பவரின் குமாரத்தியாராகிய மிஸ் வுல்ஸலி தோட்டவேலையில் மிகத்தேர்ந்தவர், கூர்மையான புத்தியுள்ளவர், தோட்டத்தில் செடிகளைவைத்து சாஸ்திரப்பிரகாரம் அவைகளை பயிரிடுவதில் மிகத்தேர்ந்தவர். இவ்விதபுத்தி வாய்ந்த மாது கிளேன்ட் என்ற ஊரில் தோட்டவேலையைப் போதிப்பதற்காக தாமே ஒரு பாடசாலையை ஸ்தாபித்ததும் தவிர தாமே உபாத்தியார்கள் போதிப்பதையும் மேல்பார்வை பார்த்து வருகிறார்கள். நமது தேசத்தில் முற்காலத்தில் திரௌபதி, சீதா, தமயந்தி, சாகுந்தலா முதலியமாது சிரோமணிகள் தங்களுக்கென்று தனிமையான பூந்தோட்டங்களை ஏற்படுத்திக்கொண்டு பற்பல புஷ்பங்கள், பழங்களுள்ள விருக்ஷங்கள், செடிகள் முதலியவைகளைவைத்து பயிர்செய்தும் கவனித்தும் வந்ததாகத் தெரிகிறது. இப்பொழுதோ பெண்மணிகளுக்கு புஷ்பங்களின் பெயர்தெரிவது அரிதாகவிருக்கிறது.



### விடுகதை.

(1) வட்ட வட்டச் சக்கிரம், வளப்பமான சக்கிரம்
பட்டுச் சக்கிரம், பருமனான சக்கிரம்;
ஆரக்காலுள்ள சக்கிரம், அழகான சக்கிரம்;
சூரியனையும் வெல்லவல்ல சக்கிரம், சுந்திரமான சக்கிரம்;
மாரியையும் தாங்கவல்ல சக்கிரம், மாயச் சக்கிரம்;
கையிலோர் கதையாகும், இதன் பொருள் காட்டுவீர்.

(2) நான்கு எழுத்து ஒருசொல்; இதில் மூன்றாவதெழுத்தைக் குறைத்திடில் அரசர்கள் அன்புடனளிக்கும் யோக்கியதா சின்னங்களின் பொதுப்பெயராம். இரண்டாவதெழுத்தை யொழித்திடில் "தனி" யென்று பொருள்படும். முதலெழுத்தையும் மூன்றாவதெழுத்தையும் நீக்கிவிடில் காலத்தை யுணர்த்தும் பெயராம். இச்சொல்லின் பொருளோ அன்பர்களுக்கும் ஆப்தர்களுக்கும் உறவின்முறையாருக்கும் ஆதரவுடனளிக்கும் போஜனமாகும். இச்சொல்லை யோர்ந்து கூறுவீர்

மரகதம்.

1905ஞு ஏப்ரல்மாதம் வெளியான பத்திரிகையில் சர்வஜனசகோதரி எழுதிய விடுகதையின் விடை:—

(1) கண்டு. (2) புகையிலை.

ஷை பத்திரிகையில் அதேபக்கத்தில் மரகதம்மாள் எழுதிய விடுகதையின் விடை:—

(1) காற்று. (2) கபாலம்.

T. M. அறப்பெருந்செல்வி அம்மாள்.

Printed at the Ripon Press & Published by the
Proprietor C. S. Ramaswamy Iyer, Madras.

14 SEP 190.
MADRAS
407

# மாதர் மனோரஞ்சனி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-VII. Madras: June 1905. No-6.
புத்தகம் எ. சென்னப்பட்டணம்: ஜூன்மீ 1905. இல-6.

## மாதர்களும் தமிழ்வேதமும்.

பெண்ணினத்தாரும் சூத்திரரும் வடமொழி வேதத்தைப் பாராயணம் பண்ணக்கூடாதென்பது நமது நாட்டுவழக்கு. இவர்களுக்கு ஞானோதயம் வேண்டுமானல் புராண இதிகாசங்களைக்கேட்டு அவைகளின் வழியால் அடையலாமென்று அதற்கென்றே பாரதத்தை ஐந்தாம் வேதமென்றும் நம்முன்னோர் சொல்லியிருக்கின்றார்கள். இதனால் நான்கு வேதங்களிலும் அதிகாரமில்லாத பெண்ணினத்தாரும் சூத்திரரும் ஐந்தாம் வேதமாம் பாரதத்தால் ஞானத்தையடைந்து நற்கதிபெறலாமென்று நம்மவர்கள் ஒருவழிகாட்டியிருக்கின்றார்கள். இதன்றி பெண்கள் தங்கள் புருஷன் மாருக்குப்பணிவிடை முதலியமனதோடு செய்துவந்து அவனையே தெய்வமென வரித்துப் பதிவிரதத்தைக் கைக்கொண்டால் நற்கதி பெறலாமென்பதும் நம்மவர்களில் பெரும்பாலார்கருத்து. சூத்திரர்களும் பணிவிடைசெய்துகொண்டு அந்தணர் முதலானோரை வழிபட்டுவந்தால் நற்கதிபெறலாமென்பதும் சிலரது அபிப்பிராயம்: கலிநாளில் சூத்திரர்களும் பெண்ணினத்தாரும் தங்கள் தங்கள் தொழிலில் வழுவாது நடந்தால் நல்ல கதியையடைவார்களென்பது வியாசமகா முனிவரின் கருத்து. கலிநாளில் ஞானம் பெறுவார்க்குப்பலன் சுலபமாய்க் கிடைக்குமென்றும் வியாஸ முனிவர் சொல்லியிருக்கின்றார். இதற்கு ஆதாரம் விஷ்ணு புராணமேயாம்: வேதம், உபநிடதங்கள் இவைகளின் ஸாரமாகிய பகவற்கீதை மகாபாரதத்திலடங்கியிருக்கின்றது. ஓங்காரகீதை முதலியதும் அதிலுண்டு. பெண்கள் வேதஸாரமாம் ஓங்காரஞ்சேர்ந்த மந்திரத்தையுச்சரிக்கக்கூடாதென்றும் ஓம் என்பதற்குப்பதிலாய் அம் என்பதைச்சேர்த்து மந்திரோச்சாரணம் செய்யவேண்டுமென்றும் விதிவற்பட்டுள்ளது. புராணமும் பாரதமும் புருஷர்களாலும் ஞானம் பெறவழங்கப்படுகின்றன.

இப்படிக்கிருந்தாலும் வைஷ்ணவர்களுக்குள் ஆழ்வார்களெனும் பரமஞானிகளும் சைவர்களுக்குள் மாணிக்கவாசகராம் மணிவாசகத்தாரும் வடமொழி வேதங்களில் முடிவாயமைந்திருக்கும் பரம்பொருளைத் தமிழ்வேதங்களால், வெளிப்படுத்தியுள்ளார். இந்தத்தமிழ்வேதம் ஸ்ரீராமானுஜரின்வழியடியாராம் பிராமணர்களுக்குள் மட்டும் வடமொழி வேதத்திலும் உயர்ந்ததென்று பாராயணஞ் செய்யப்படுகின்றது. திருமாலுக்கு முன்னே ஓத

ப்படுகிறது. வடமொழிவேதம் பின்புறத்தில் ஓதப்படுகிறது. வடமொழிவேதம் மன்றுடையபோல் ஸர்வாதிகாரம் பெறாமல் முதல் மூன்று வர்ணத்தாருள் புருஷர்களால் மட்டும் ஓதப்படுகின்றது. தமிழ்வேதமோ பிராமணர்கள், சூத்திரர்கள், எல்லாஜாதியிலுமுள்ள பெண்கள், எல்லாருக்கும் ஸர்வாதிகாரமுள்ளதாய் ஞானந்தந்து நற்பதமளிப்பதாகின்றது. இத்தமிழ்வேதம் அந்தணருள் இராமாநுஜரின் அடியார்களுக்குப் பயன்தருவதால் வடமொழிவேதத்தோடு சேர்த்துப் பாராயணஞ்செய்யப்பட்டு வருகின்றது; இப்படி வைஷ்ணவப் பிராமணர்களுக்கு மட்டும் இரண்டுவேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆழ்வார்களுள் ஆண்டாள் எனும் பெண்ணரசியும் தமிழ்வேதப்பாடல்கள்பாடியுள்ளாள். இவள் விவாகமின்றி ஞானத்தில் தேர்ந்து பல்லக்கின்மேற் சென்று அரங்கன்முன் கிட்டி தனது பாஞ்சபூதிக தேகத்தை மறைத்துக்கொண்டு அவன் வடிவில் மறைந்துகொண்டாள். பாணர் என்பவர் பறையர். அக்குலத்தில்வளர்ந்த திருப்பாணாழ்வார் பக்தசிகாமணியாய் ஞானத்தில் முதிர்ந்து வைஷ்ணவ ஸன்னியாசியின் தோள்மேலேறி அரங்கனிடம் சென்று தமது வடிவை மறைத்துக்கொண்டு அவன் வடிவில் ஐக்கியமாய் விட்டார்.

இப்படியாகப்பெண்களும் பறைக்குலத்தவரும் பக்தியில் மிகுந்து ஞானம்பெற்று வடமொழிவேதமோதும் அந்தணரும் பெறுதற்பதம் பெற்றார்கள். இதனால் வைணவர்களின் தமிழ்வேதச்சிறப்பு ஒருவாறு விளக்கிக் காட்டப்பட்டது. சைவர்களிலும் இப்படியே நந்தன் காரைக்காலம்மை முதலினோரும் நற்பதம் பெற்றுள்ளார்.

இனிச்சைவர்களின் தமிழ்வேதமாம் திருவாசகத்தைப்பாடியவர் ஸ்ரீ மாணிக்கவாசகர். சிவபிரான் இவருக்கு முன்தோன்றி திருவாதவூரில் ஞானோபதேசம் செய்துள்ளார். இவர் மகிமையைத் தமிழ்நாட்டில்யாருமறிவர். இவர்வேதத்தை சைவப்பிராமணர்கள் வட மொழிவேதத்தோடு ஒரேகாலத்திலாவது தனித்தாவது சிவபிரானது புறப்பாட்டில் வைணவர்களின் தமிழ்வேதம் பாராயணம் செய்யப்படுவதுபோல்பாராயணஞ்செய்கிறதில்லை ஆனால் நான்காவது வருணத்திலுள்ள ஓதுவார்கள்மட்டும் ஆலயங்களில் துவஜஸ்தம்பத்தடியில் நின்று ஓதிவருகின்றார்கள். இத்தமிழ்வேதம் சுவானுபவத்தால் மாணிக்கவாசகரால் பாடப்பெற்றதாயினும் அந்தணர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. காலகதியை யனுசரித்து இந்தக்கலிநாளில் ஞானம்பெறவிரும்புவார்க்கு இந்தத்தமிழ்வேதங்கள் பேருதவிபுரிகின்றன. வடமொழிவேதமார்க்கம் இக்காலத்தில் மலினமாய்க்கொண்டே வருகின்றது. வயிற்றை வளர்க்கபட்டும் இப்போ சிலர் வடமொழியில் பழகிவருகின்றார்கள். சைவர்களுள் தென்னவன் பிரமராயரென யாரும் கொண்டாடும் மாணிக்கவாசகரல்லாத மற்றைய மூவர்பாடல்கள் தேவாரரூபமாய் விளங்குகின்றன. இப்பாடல்கள் ரஸபுஞ்சமாய்ப் பொங்கி வழிந்த அமுத வெள்ளம் போன்றன. இராமாயணம், பாரதம், பாகவதம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், காந்தம், சைவபுராணம், ஆழ்வார் பாடல்கள், நால்வர் பாடல்கள், விஷ்ணுபுராணம் இவைகளெல்லாம் தமிழில் வசனரூபமாய்ச் சுத்தப்பிரதிகளாக அச்சிடப்பெற்றிருக்கின்றன. நமது தமிழ் நாட்டிலுள்ள எல்லாச்சாதிப் பெண்களும் பதிகளை வழிபடுவதோடு இவைகளை மனதோடு படித்துப் பொருள் தெரிந்துகொண்டு நல்வழிப்பட்டால், நமது நாடுசெழிக்கும். கலிக்கொடுமையாயும் ஞானமும் ஓங்கும்.



இக்காலத்திலோ சூத்திரரிலும் ஸன்னியாசிகளுண்டு. சூத்திரர்களிலும் பத்திமார்க்கமும் ஞானமும் தவமும் நடைபெறுகின்றன. புறநாட்டாரும் நமது தேச நன்னடைமார்க்கத்தையும் பத்திஞானமார்க்கத்தையும் கண்டுணர்ந்து அதன்படி நடக்கமுயலுகிறார்கள்.

பெண்கல்வி தலையெடுத்துத் தமிழ்ப்பத்திரிகைகளும் மலிந்து புருஷர்களும் இராஜபாஷையோடு தங்கள் தேசபாஷையாம் தமிழையும் நாட்டின் க்ஷேமத்திற்காக மனதோடு படித்துவந்து விருத்திசெய்தால் நமது நாடும் இப்பொழுதிருக்கும் ஈனஸ்திதிமாறி ஜப்பானைப்போலப் பலவிதத்திலும் தலையெடுக்கவழியாம். பெண்கல்வி மிகுந்தால் அவர்களிடம் நன்னடக்கை வேரூன்றும். அது ஊன்றத் தருமமும் நீதியும் ஓங்கும். அது ஓங்க நோயும், பஞ்சமும், வியாதியும் நீங்கி நல்ல சந்ததியு முண்டாம். காலமழையும் பெய்யும்.

பெண்மணிகள் தங்களினத்திற்சேர்ந்த ஸரசுவதி தேவியைத் தமது தேசபாஷையாம் தமிழ்மூலமாய் நாளும் போற்றினால் அவர்களுக்கும் அவர்கள் பிராணபதமான புருஷன்மார்க்கும் சுகம் உண்டாம். பங்களூர் திருவனந்தபுரம் முதலிய இடங்களிலும் தேசபாஷாபி விருத்திக்குப் பாடசாலைகளும் இனிச் சீராய் ஏற்பாடாகும். நாமமும் நமது தமிழை, மலையாளம், கன்னடம் போல் மேலோங்கச் செய்வது நமது கடமையாம். எவ்வித விருத்திக்கும் தேசபாஷையின் விருத்தியேதான் காரணம்.

தி. வேங்கடராம ஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர், சென்னை.

# ஸ்திரீ ரத்தினம்.

## 5 - வது அதிகாரம்.

### 118 - வது பக்கத் தொடர்ச்சி.

ஜனங்களில் சிலர் பலமாகச் சொல்லவேண்டு மென்றார்கள். பக்கத்திலிருந்தவர்களில் சிலர் அவர் பலமாகத்தான் சொல்லுகிறாரே. இன்னும் எப்படி பலமாகச் சொல்லுகிறது என்றார்கள். இப்படியிருக்க சில ஜனங்கள் ஓர் பெரிய மேஜையை எங்கிருந்தோ தூக்கிக்கொண்டு வந்து அவரை அதன் பேரில் நின்றுகொண்டு பேசச்சொன்னார்கள். துஷ்டபுத்தி வழக்கமாய் பேசினவரில்லை யாதலால் அதில் வெகு சங்கோஜத்தோடு ஏறிக்கொண்டார். நின்றுகொண்டு சுற்றிலும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தன்னையே கவனித்ததைப்பார்க்கவும், தன்னையறியாமலே ஓர் குதூகலம் உண்டாகி வெகு பலமாக பேசவாரம்பித்தார்.

ஜனங்களே, படத்தை நன்றாய்ப் பாருங்கள். புசல்காற்று சூழ்ந்து அலைகள் வெகு வேகமாய் மோதிக்கொண்டிருக்கும் ஓர் சமுத்திரத்தைப்பாருங்கள். இதில் 5 கப்பல்கள் நிற்கின்றன. 4 கப்பல்கள் முழுகிப்போய் ஜலம் பக்கங்களிலெல்லாம் புகுந்து உள்ளே ஓடுகிறதும் ஒவ்வொரு கப்பலின் உச்சியிலும் ஒவ்வொரு பெண் பெண்டாட்டி செத்தபிணமாகக் கிடப்பதையும் பார்த்தீர்களா. சித்திரக்காரன் ஒவ்வொரு பெண் பெண்டாட்டியின் தேகத்தையும் எவ்வளவு நன்றாய் சாவு என்பதைக்கண்டே ஜனங்கள் பயப்படும்படி கைகால்கள் விறைத்ததாகவும், முகம் வெளுத்ததாகவும் பார்க்க பயங்கரமாகவும், எழுதி யிருக்கிறான் பாருங்கள். அதன் கீழ் ஒவ்வொரு

பெண் பெண்டாட்டியும் உண்மைக்கு உபமானம் என்பதை காண்பித்திருக்கிறது பாருங்கள். அதோ ஒவ்வொரு கப்பலும் இன்னதென்று காட்டியிருக்கிறதையும் பாருங்கள். ஒன்று மகாபுரம்; மற்றதுகள் பீமபுரம், விராடபுரம், கம்ஸபுரம், இவைகளைச் சேர்த்து கீழே எழுதி யிருக்கிறதைப் பார்த்தீர்களா. அக்கிரமங்களினாலும் ஒற்றுமையில்லாததாலும் நாங்கள் இந்த கதியடைந்தோம் என்று எழுதி யிருக்கிறது. இப்போது சமுத்திரத்தின் நடுவில் பாருங்கள். 5-வது கப்பல் தத்தளித்துக்கொண்டும், பாய்மரம் உடைந்தும், பாய்கள் கிழிந்தும், ஆனால் மற்றவைகளைப்போல் முழுகாமல் முழுகுவதற்குத் தயாராயிருப்பதைப்பாருங்கள். அதன் உச்சியில் ஓர் பெண், உட்கார்ந்து கொண்டு கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருக, பகவானை ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கிறதைப்பாருங்கள். அவள் முகம் எவ்வளவு விசனகரமாக இருக்கிறது? அதன்மேல் இதுதான் விஜயபுரமென்று எழுதி யிருக்கிறதைப்பாருங்கள். ஜனங்களே! இந்தப் பெண்தான் உங்கள் தேசம். இவள்தான் கண்ணும் கண்ணீருமாய் பகவானுடைய ஒத்தாசையையும் உங்கள் ஒத்தாசையையும் கோருகிறாள். சற்று வலதுபுறம் பாருங்கள். இவ்வளவு புசல் காற்றுக்கும் காரணம் உங்களுக்குத்தெரிகிறதா? அதோ 4 ஜாதிப்பிராணிகள் தங்கள் கோரமான வாயைத்திறந்து அதிலிருந்து இந்தப்பயங்கரமான புசல் காற்றை வெளிவிடுவதைப்பாருங்கள். முதல் ஜாதி பிராணிகள் சிம்மங்கள், ஓநாய்கள், கரடிகள். இவைகள் உங்கள் தேசத்துப்பிரபுக்களைத்தவிர வேறுயாராயிருக்கக்கூடும்? இரண்டாவது ஜாதி நாய்களும், பன்றிகளும் இவைகள் உங்கள் பிரபுக்களுடைய துர்மந்திரிகளும், ஸ்தோத்திரக்காரர்களுமேயாம். மூன்றாவது ஜாதி மலைப் பாம்புகளும், குள்ளநரிகளும், நியாயாதிபதி என்று பெயர்மட்டும் வைத்துக் கொண்டு அக்கிரமம் செய்யும் நியாயாதிபதிகளும் நியாயத்தை விற்பவர்களுமேயாம். கடைசியாக முசல்களும், ஆடுகளும், குரங்குகளும் நிற்பதைப்பாருங்கள், இவைகள் உங்கள் தேசத்தைக்கெடுக்கும் திருடர்களும் கொலை செய்பவர்களுமேயாம். ஜனங்களே! உங்களுக்கு புத்தியில் பட்டதா அல்லது இன்னும் அர்த்தமாக வில்லையா? பதுமன், நிற்குணன் என்கிற பிரபுக்களுக்குதங்கள் விட்டிலிருந்தே ஜனங்கள் மேலேகேட்ட கேள்விகளுக்கு ஒரே கூச்சலாய் பதில் சொன்னது காதில் கேட்டது.

பிறகு சற்று நிதானித்து துஷ்டபுத்தி மறுபடியும், ஜனங்களே! உங்களுக்கு இன்ன செய்வதென்று தெரியவில்லையா? உங்கள் கஷ்டத்தினின்றும் உங்களைக் காப்பாற்றிக்கொள்ள வழி ஒன்றும் தோன்றவில்லையா? உங்கள் கஷ்டங்களைமட்டும் காட்டினபடம் இனி காப்பாற்றுகிற விபரமும் உங்களுக்கு காட்டாமற் போகுமா? அதோ அந்த சமுத்திரத்தின்மேல் ஆகாயத்தில் ஓர் வெளிச்சத்தையும், அவ்வெளிச்சத்தில் நீங்கள் மட்டும் ஒன்று சேர்ந்தால்உங்களைக்காப்பாற்றத் தயாராயிருக்கும்தேவதைகள் சந்தோஷமுகத்துடன் உட்கார்ந்திருப்பதையும் பாருங்கள். ஜனங்களே. சித்திரத்திற்கு அர்த்தம் சொல்லியாய்விட்டது; நான் சென்று வருகிறேன் என்று துஷ்டபுத்தி போகவும், ஜனங்கள் சந்தோஷத்தால் வெகு கூச்சல்போட்டார்கள்.

வெளியில் ஜனங்கள் கூப்பாடு இப்படியிருக்க, அதற்கு கொஞ்ச தூரத்தில் ஓர் பெரிய வீட்டின் அறையில் தர்மசீலன் தனது குமாஸ்தாக்களுடன் கச்சேரிபண்ணிக்கொண்டு இந்த சப்தங்கள் ஒன்றையும் கவனிக்காமல் வெகு ஊக்கத்தோடு கணக்குகளைப் புரட்டிப்பார்ப்பதும் மறுபடி கணக்கு



களை எடுத்து எழுதுவதுமாக விருந்தான். இப்படி யிருக்க வாசல் கதவை
யாரோதட்டுகிற சப்தம் கேட்டது. கதவைத்திறக்க துஷ்டபுத்தி உள்ளே
நுழைந்தார். உடனே தர்மசீலன் சிநேகிதரே! சமாச்சாரம் என்ன? நீர் என்
னிடம் ரகசியமாகத்தான் சொல்லவிரும்புவீர். நல்லது அந்த உள்ளுக்குப்
போகலாம், வாருமென்று தனிமையான ஓர் அறைக்குக் கூட்டிப்போய் கத
வைத் தாள் போட்டுக்கொண்டு துஷ்டபுத்தியின் இரு கைகளையும் பிடித்
துக்கொண்டு அதிக ஆவலோடு அர்த்தம் ஜனங்களுக்கு நன்றாய்த்தெரிந்ததா?
நீர் நன்றாய் எடுத்துச்சொன்னீரா? அவர்கள் மனதில் நன்றாய் பதிந்திருக்கு
மா என்றான். துஷ்டபுத்தி என்சிநேகிதரே, உமது சகவாசத்தால் எனக்கு
கூடபேசும் திறமைவந்துவிட்டது. நான் சொன்ன ஒவ்வொரு வார்த்தையை
யும் ஜனங்கள் நன்றாய் கவனித்தார்கள். அவர்கள் மனதில் நன்றாய்ப் பதிந்து
விட்டது. நீர் இப்போது வேண்டுமானாலும் சண்டைக்கு ஆரம்பிக்கலாம்.
அவர்கள் தங்கள் உயிரைவேண்டுமானாலும் கொடுக்கத்தயாராயிருக்கிறார்
கள். அந்தத்தடியன் பராக்ரமகேது என்பதற்குள்—

தர்மசீலன்:—பராக்ரமகேதுவா! அவன்மனது இரும்பாலல்லவா செய்
யப்பட்டிருக்கிறது. அவனுக்கு இரக்கமென்பதே கிடையாதே. அவன்
என்ன சொன்னானென்றான்?

துஷ்டபுத்தி:—அவன்கூட இவைகளையெல்லாம்கேட்டு பரிதபித்து என்
இரு கைகளையும் பிடித்துக்கொண்டு கண்களில் நீர் ததும்ப, பிரபுவே! என்
தேகத்தில் ஒவ்வொரு மயிர்க்காலிலும் ஒவ்வொரு உயிரிருந்தபோதிலும்
அத்தனை உயிரையும் என் தேசத்துக்குக்கொடுக்க நான் தயாராயிருக்கிறே
னென்றான்.

தர்மசீலன்:—அவன் நல்லதைரியமுள்ளவன். அவனைப்போல் தைரிய
முள்ளவர்கள் நமக்கு 50 பேர்கள் இருந்தாலும் போதும். அவன் வகுப்
பின் ஜனங்கள் அவன் சொன்னதைத்தான் கேட்கிறார்கள்.

துஷ்டபுத்தி:—அவன்பலத்தைக்கண்டு ஜனங்கள் அவனுக்கு நடுங்கு
கிறார்கள். அவனிடத்திலிருந்து அப்படிப்பட்ட வார்த்தைகள் வந்தது நல்
லதுதான்.

தர்மசீலன்:—படத்தைக்கண்டும் அதன் அர்த்தத்தைக்கேட்டும் யாரா
வது விரோதமாகச் சொன்னார்களா?

துஷ்டபுத்தி:—ஒன்றுமில்லை.

தர்மசீலன்:—அப்படியானால் நல்லகாலம் சமீபித்து விட்டது என்று
சொல்லிக்கொண்டு தர்மசீலன் தலைகுனிந்து யோசிக்கலானான்.

துஷ்டபுத்தி:—ஜனங்கள் குதூஹலத்தை நான் என்னவென்று சொல்
லுவேன். எல்லோரும ஏகக்கூட்டமாக இங்கேவந்து உன்னைப்பார்க்கவேண்
டுமென்றார்கள். நான் இதுசமயமல்ல நீர் உமது வேலையைக் கவனித்துக்கொ
ண்டிருக்கும்பொழுது உம்மைத் தொந்திரவு செய்யக்கூடாதென்று பராக்
கிரமகேதுவைக்கொண்டு சொல்லச் சொன்னேன். நான் செய்தது நல்லது
தானே.

தர்மசீலன்:—ரொம்பவும் நல்லது.

துஷ்டபுத்தி:—ஆனால் பராக்ரமகேதுமட்டும் உம்மைக் கட்டாயம் பார்க்கவேண்டுமென்று சொன்னான். ஒருவேளை சீக்கிரம் இவ்விடம் வந்தாலும் வருவான்.

தர்மசீலன் வரட்டுமென்று பதில் சொல்லுவதற்குள் பராக்ரமகேது கதவைத் தட்டினான். கதவு திறக்கப்பட்டது. பராக்ரமகேது உள்ளே நுழைந்து தர்மசீலனைக்கண்டு நடுங்கி கைகளைக் கட்டிக்கொண்டு ஒதுங்கினின்றான். துஷ்டபுத்திக்கு இதைப் பார்க்க வெகு ஆச்சரியமாயிருந்தது. ஏனென்றால் புத்திக்கு இருக்கும் மதிப்பும் யோக்கியதையும் அவனுக்கு அப்போது நன்றாய் தோன்றிற்று. தர்மசீலன் புத்தியின் விசேஷத்தால் பிரகாசித்தான். பராக்ரமகேதுவின் கைதப்பட்டால்கூட கீழே விழுந்துவிடுவான். அவ்வளவு பலம் பராக்ரமகேதுவுக்கு இருந்தும் விசேஷித்த புத்தி இல்லாததால், தர்மசீலனைக் கண்டு நடுங்கவேண்டியிருந்தது. இவன் தேகத்தையும் பலத்தையும் கண்டு ஜனங்கள் நடுங்க, தேகமும் பலமும் அதிகமாக இல்லாமல் புத்திமட்டும் அதிகமாக இருக்கும் தர்மசீலனைக் கண்டு பராக்ரமகேது நடுங்குவது ஆச்சரியமல்லவா? புத்திமான்தான் பலவானென்பதிலும் சந்தேகமா.

இதுநிற்க, தர்மசீலன் பராக்ரமகேதுவைப்பார்த்து, சிநேகிதா என் அருகில்வா. நீ செய்ததெல்லாம் கேள்விப்பட்டேன். நமது தேசம் உன்னால் தான் பழைய ஸ்திதிக்கு வரப்போகிறதென்றான். பராக்ரமகேது சந்தோஷத்தால் தர்மசீலன் காலில்விழுந்து நமஸ்காரம்செய்தான். தர்மசீலன், சிநேகிதா இந்தநமஸ்காரம் எனக்கல்ல. இது உனக்கு நல்லபுத்தி கொடுத்திருக்கும் பகவானுக்குத்தான். அவர்தான் இந்த நமஸ்காரத்தை வேஷமில்லாத நமஸ்காரமாகச் செய்யவேண்டுமென்றான்.

பராக்ரமகேது:—பகவான் எங்கிருக்கிறார்? எனக்கு பகவான்நீர்தான். எங்களைக் காப்பாற்றுகிறவர்தான் பகவான். நீர்தான் எங்களைக் காப்பாற்றப்போகிறீர். எப்போது நாங்கள் சண்டைக்கு ஆரம்பிக்கலாம்?

தர்மசீலன்:—நீ எல்லோருக்கும் சொல்லி அவர்களையெல்லாம் தயார் செய்துவைத்திருக்கிறாயா?

பராக்ரமகேது:—தர்மசீலன்பார்த்து கிணற்றில்விழு என்றாலும் விழுவதற்குத் தயாராயிருக்கிறார்கள்.

தர்மசீலன்:—நீ ஒரு லிஸ்டு தயார்செய்து அதில் அவர்கள்பெயர் வீடு தொழில் எல்லாம் குறித்து இன்று இராத்திரி என்னிடம் கொடுக்கவேண்டும்.

பராக்ரமகேது:—அப்படியே செய்கிறேன்.

தர்மசீலன்:—அதில் ஒவ்வொருவனும் தன்கையெழுத்தாவது ரேகையாவது போட்டிருக்க வேண்டும்.

பராக்ரமகேது:—அப்படியே செய்கிறேன்.

தர்மசீலன்:—நல்லது, இன்று சாயந்திரம் துஷ்டபுத்தி வீட்டுக்குப் போய் அவரைப்பார். இன்று இராத்திரி சில ஜனங்களை எந்த இடத்தில் காணப்போகிறோமென்பதை அவர் சொல்வார். அதைக்கேட்டு நீயும் அந்த இடத்துக்கு வரவேண்டும்.



பராக்ரமகேது:—அப்படியே செய்கிறேனென்றுசொல்லி தன்னை நம்பி
தர்மசீலன் அவ்வளவு சொன்னதை நினைத்து சந்தோஷித்தான்.

தர்மசீலன்:—நீ ஜனங்களை நன்றாய் கவனிக்கவேண்டும். எவனாவது
கோள்சொல்லியாயிருந்தால் நமது காரியமுழுவதும் கெட்டுப்போய்விடும்.
ஜாக்கிரதை.

பராக்ரமகேது:—நமக்கு வாக்களித்துவிட்டு பிறகு பிசகினவன் என்
தாய்வயிற்றில் பிறந்த பிள்ளையாயிருந்தபோதிலும் அவனை ஒரேகுத்தாய்
குத்திவிடுவேன.

உடனே தர்மசீலன் சந்தோஷத்தையடைந்து ஆ! ஆ! என்ன ஆச்சரியம்
என்சித்திரத்திற்கு உயிர்வந்து பேசுகிறது பாரென்றான். பிறகு தர்மசீலன்
அவர்களையனுப்பிவிட்டு நேரமாகி விட்டபடியாலும் இராத்திரி காலமானதா
லும் வெளியே புறப்பட்டுப்போக வாரம்பித்தான். போகும்போதே மனதில்
அடியில்வருமாறு சொல்லிக்கொண்டான். ஆ!ஆ! நானோ மலையின்சிகரத்தின்
சமீபத்திற்குகொஞ்சம்கொஞ்சமாகஏறிவந்துவிட்டேன். கீழேபார்த்தாலோ
பயங்கரமாக விருக்கிறது. மேலேபோகவோ இன்னும் கொஞ்ச தூரம்தானி
ருக்கிறது. கீழேமட்டும்விழுந்தேனாகில் இனிநான் தலையெடுக்கப்போகிறதே
யில்லை. பிறகு பிரபுக்கள் கொண்டாட்டமே கொண்டாட்டம். பிறகு என்
னைப்போல ஏழைவேறு எவனாவது இந்தஸ்திதிக்கு வரப்போகிறானா. இந்த
ப்பட்டணமே என்னை ஒருவனை நம்பி யிருக்கிறதே. ஒருகாற்று அடித்துக்
கொண்டு போகும்படியான நாணல்போன்ற இத்தேசத்தை நம்பி இத்தேச
மேமுன்னுக்குவர யோசித்திருக்கிறதே. பகவானே! என்னை மீதியாயுள்ள
உயரத்தையும் அடையும்படி செய்வீரோ அல்லது இங்கிருந்தே தள்ளிவிடு
வீரோ எனக்குத் தெரியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக நானும் எத்தனை
காரியம் செய்துவிட்டேன். பயங்காளி ஜனங்கள் பயத்தைவிட்டு ஒரே தைரி
யமாக எதிர்ப்பார்களானால் நான் பிழைப்பேன். வெகுநாளிருந்த அடிமைத்
தனத்தினால் பயந்து கொஞ்சம் கைநழுவ விட்டபோதிலும் நான் போன
இடம் தெரியாமல் போய்விடுவேன். என்னுடன் இந்த ராச்சியமும் கூடவே
போகவேண்டியதுதான் என்று இவ்விதமாக யோஜித்துக்கொண்டே செல்
லும்போது ஓர்நதியின் பாலம் தெரிந்தது. உடனே தர்மசீலன்நடை வெகு
வேகமாக ஆரம்பித்தது. இவன் எண்ணங்களும் மாறின. ஆனால் இவ்வெண்
ணங்கள் மண்ணாசையா லல்லவென்றும், பெண்ணாசையால்தானென்றும்
நாம் இங்கே சொல்லவேண்டியிருக்கிறது.

## 6-வது அதிகாரம்.

பெண்ணே சுந்தரி! இச்சிவப்பு உடுப்புகளை உன் தாயார் வாங்கிவைக்கச்
சொன்னார்கள். இதுகளை நாளைக்கே திருப்பி அனுப்பிவிடு. இவைகள் இந்த
தேசத்துப் பிரபுக்கள் பெண்சாதிகளுக்குத் தான் பிரியமானது. அவர்கள்
தான் பிறருக்காக அலங்காரஞ்செய்துக் கொள்வார்கள். பிறர் நன்றாயிருக்
கிறதென்று சொன்னால் அவர்களுக்குச் சந்தோஷம். எனக்கு என்சொந்தக்
கண்கள் இருக்கின்றன. பிறர் கண்கள் பார்த்து எனக்கு அபிப்பிராயம்
கொடுக்கவேண்டியதில்லை, என் மனம்போல்தான் நான் அலங்காரம் செய்து
கொள்வேன்.

சுந்தரி—அம்மா நாமென்ன செய்யலாம் ? நீயும் அப்பிரபுக்கள் பெண் சாதிகளுடைய அந்தஸ்துக்கு வந்தால் அப்போது அந்த உடுப்புகளை நீ நிந்திக்கமாட்டாய் உன்னுடைய அழகுக்கு அந்த உடுப்புகளைப் போட்டால் எவ்வளவு நன்றாயிருக்குமே !

கலாவதி—சுந்தரி உனக்குத் தெரியவில்லை. நாம் அவர்கள் ஸ்திதியிலிருந்தால் அப்போது அழகென்பது இப்படி யிருக்க வேண்டுமென்பதை நன்றாய் காண்பிப்போம். நாம் நடத்துகிற விருந்துகள் தான் சாதாரணமாயிருக்குமா அன்றைக்கு பதுமபிரபு வீட்டு விருந்தைப் பார்த்தாயே அது எப்படி இருந்தது ?

சுந்தரி—அம்மா நான் அந்த விருந்தின் சிறப்பை என்னவென்று சொல்லட்டும். அந்த விருந்திற்கும் அதில் நீ உனது அழகான உடுப்புகளுடன் வந்ததற்கும் அங்கே யிருந்தவர்களெல்லாம் உன்னையே பிரமித்துப் பார்த்து பதுமபிரபு யாரோ ஓர் தேவலோகத்துப் பெண்ணை அழைத்திருக்கிறரென்று சொன்னார்கள்.

கலாவதி—சுந்தரி ஏன் வீண் ஸ்தோத்திரம் செய்கின்றாய்? நான் தான் அழகில் சிறந்தவளா?

சுந்தரி—இல்லை யம்மா. நான் நிஜமாகச்சொல்லுகிறேன். ஆனால் அந்த விருந்து எவ்வளவு சிறப்பாய் நடந்தது? 50 ஆள்கள் தங்கமயமான உடுப்புகளைப் போட்டுக்கொண்டு வேலைசெய்தார்களே. சங்கீதம் தான் எப்படி இருந்தது? எத்தனை வித்துவான்கள் வந்திருந்தார்கள். அது உனக்குப் பிடிக்கவில்லையா. அன்றைக்கு எத்தனை பிரபுக்கள் உன்னிடம் வெகு பிரியமாய் பேசினார்கள்.

கலாவதி—சுந்தரி அத்தனை பிரபுக்கள் வந்தும் என்ன பிரயோஜனம்? அன்றைக்கு ஒருவரில்லாததால் அப்பாட்டுகளொன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. நான் மட்டும் அவ்வீட்டு யஜமானியாக விருந்தால் அதைப்போல் அல்பமான விருந்து போட்டிருக்கமாட்டேன்.

சுந்தரி—என்னம்மா இப்படி சொல்லுகிறாய் ? விசித்ரவ பிரபுவின் கலியாணம் வெகு அழகாய் நடந்ததாம். அந்தக்கலியாணத்தில் நடந்த விருந்தைக் காட்டிலும் இது இன்னும் சிறப்பாய் நடந்ததென்று எல்லா ஜனங்களும் சொல்லிக் கொள்ளுகிறார்களே.

கலாவதி—யார் எப்படிச் சொல்லிக்கொண்டபோதிலும் சரி. ஆனால் நான் அவள் ஸ்தானத்திலிருந்தால் (இருந்ததுமில்லை இருக்கப்போகிறதுமில்லை) நான் போடும் விருந்து அவ்வளவு சொல்பமாயிராது. பாத்திரங்களெல்லாம் தங்கப் பாத்திரங்களாக விருக்கவேண்டும். வீட்டின் தரையே தெரியக்கூடாது. தரைமுழுவதும் பட்டுத்துணியால் மூடி யிருக்கவேண்டும். எங்கே பார்த்தாலும் வாசனையாக இருக்கவேண்டும். வேலையாள்கள் சுறுசுறுப்புள்ள சிறு பையன்களாகவும் ஒரே உயரமாகவும் ஒரே மாதிரி உடுப்புகளுடன் பொருக்கி எடுத்திருக்கவேண்டும். பாட்டோ சாமானியமாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு வித்துவானும் போட்டிபோட்டுப் பாடவேண்டும். இவர்கள் போட்டியை அதிகப் படுத்த, எவன் நன்றாய்ப் பாடுகிறானோ அவனுக்கு நான் மரியாதையாக ஓர் ரோஜா புஷ்பம் கொடுக்கவேண்டும்.



உடுப்பு தான் எப்படி யிருக்கவேண்டும் தெரியுமா? அன்றைக்கு பதுமன்
பெண்சாதி போட்டு வந்தாளே அதுவும் ஓர் உடுப்பா? பச்சை, சிகப்பு, ஊதா
மஞ்சள், இப்படி எல்லா வர்ணங்களும் கலந்து சூரியனுக்குக்கூட அதைப்
பார்க்க, கண் கூசும்போலிருந்ததே. எனக்கு அதைப் பார்த்ததில் மறுநாள்
முடிய கண் வலி நிற்கவில்லையே.

சுந்தரி:—இருந்தபோதிலும் உடுப்பு நோட்டத்தில் உன்னைப்போல்பது
மன் பெண்சாதிக்கு கொஞ்சமாவது தெரியாது.

கலாவதி:—முகத்திலேதான் பதுமன் பெண்சாதிக்கு கொஞ்சமாவது
ராஜக்களை வேண்டாமா? அவள் போகும்போதே அவள் சகிமார்கள் அவள்
காலை மிதித்துக்கொண்டு போவதுபோல் போனார்கள். இதெல்லாம் போதா
தென்று ஏதோ பைத்தியம் பிடித்தவள்போல தனக்குத்தானே சிரித்துக்
கொண்டு, இந்த விருந்து நாளுடுப்புகளெல்லாம் விலையுயர்ந்த தென்றாலும்,
தேகத்துக்கு தூக்கமுடியவில்லையென்றாள். உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களுக்கு
விருந்து நாளென்று ஓர் நாள் வேண்டுமா? தினமும் விருந்து நாளாக வேணி
ருக்கக்கூடாது? உடுப்புகளில் விருந்து நாளுடுப்பென்று ஓர் உடுப்பு வேண்
டுமா? விருந்து நாளைக்குத்தான் தேகம் நமது தேகமா? மற்ற நாளெல்லாம்
அது யார் தேகம்? என்றைக்கும் அதே உடுப்பு போட்டுக்கொள்ள நமது
தேகம் தாங்கமாட்டாதா? உடுப்பில்கூட ஏனிந்தவித்யாசம் செய்யவேண்டும்?
எனக்கு அப்படியில்லை. தினம் விருந்து நாள்தான். விருந்து நாளைக்கு உடுத்
திக்கொள்வதும் சாதாரணமான நாள்களில் உடுத்திக் கொள்வதும் எனக்கு
ஒரே உடுப்புத்தான். பிறருக்காக அலங்கரித்துக்கொள்வது முதலான இந்த
வேஷங்களெல்லாம் எனக்கு ஆகாது.

சுந்தரி:—அன்றைக்கு நிற்குண பிரபு உன்னோடு வெகு பிரியமாய் பேசி

னார்.

கலாவதி:—அவன் பெயரே நிற்குணன் அதாவது குணமில்லாதவன்
அவன் நம்மோடு பேசினாலென்ன? பேசாவிட்டால்தானென்ன?

சுந்தரி:—அம்மா அவர் பிரபுக்களுக்குள் வெகுபணக்காரரல்லவா? விசி
த்ரவனுக்கு அடுத்த பிரபு அவர்தானே?

கலாவதி:—பணமிருந்தென்ன செய்கிறது? முட்டாள்பயலுக்கு அதைச்
சமயத்துக்குத் தக்கபடி உபயோகிக்கத் தெரியவில்லையே! பணத்தை சமயம்
பார்த்து உபயோகிக்கிறவனல்லவா பணக்காரன்!

சுந்தரி:—அந்தக் கம்பத்தண்டை உன்னோடுபேசினது உத்தமசேன பிர

புதானே!

கலாவதி:—இருக்கலாம், எனக்கு நன்றாய் ஞாபகமில்லை.

சுந்தரி:—ஆனால் உத்தமசேன பிரபுபெண்களுடன் ஒருவார்த்தை பேசி
னபோதிலும், பெண்கள் அவரை எப்போதும் மறக்கிறதேயில்லையாம்.

கலாவதி இதை யெல்லாம் கவனிக்காமல், தோழியைப் பார்த்து சுந்
தரி எனக்கு இவர்கள் பேச்சுகள் ஒன்றும் பிடிக்கவில்லை. எனக்கு பிடித்தது
ஒருவன் பேச்சுத்தான். அவன் பேச்சு ஒன்றுதான் என் காதுக்கு சங்கீ
தம் போலிருக்கிறது. அவனில்லாமல் அந்த விருந்து நன்றாயிருக்கவில்லை.

சுந்தரி:—அது யாரம்மா எனக்கு சொல்லக்கூடாதா?

கலாவதி:—கனகாபுரியிலிருந்து வந்திருக்கிறவர்தான். அவர் படிப்பைப்போல் யார் படித்திருக்கிறார்கள்?

சுந்தரி:—என்னம்மா! தர்மசீலனென்று சொல்லுகிறார்களே அவரையா சொல்லுகிறாய்? அவருக்கு மயிர்கூட நரைத்துப்போயிருக்கிறதே. அவர் பேரிலேயா நீ ஆசைவைத்தாய்.

கலாவதி:—ஆமாம். அவர் என்னோடு பேசும்போது எனக்கு என் ஞாபகமே இருக்கிறதில்லை. ஏனென்றால் அவர் பேச்சின் சாதுரியத்தைத் தவிர பேசுவதிலெல்லாம் எங்கும் நிறைந்தவராய் சர்வலோக சரண்யனாயிருக்கும் பரமாத்மாவைப்பற்றியே பேசுகிறார்.

கலாவதி இப்படி சொல்லிக்கொண்டே ஓர் பெருமூச்சு விட்டாள். கண்களினின்றும் நீர் தாரை தாரையாக விழுந்தது.

சகியோ அவள் முகக்குறிப்பைப் பார்த்து ஒன்றும் சொல்லத் தோன்றாமல் திகைத்து நின்றாள்.

கலாவதிபிறகு சகியைப்பார்த்து சுந்தரி! அதோ கிடக்கிறதே அந்தக் கடிதத்தைஎடு. அதல்ல! நீ என்னிடத்தில் எவ்வளவுபழகியும் எனக்கு எந்தக்கடிதத்தில் பிரியமென்பது உனக்கு இன்னும் தெரியவில்லையே! அதுதான் அதை இங்கேகொண்டுவா என்று வாங்கிக்கொண்டு அக்கடிதத்தை கையில்வைத்துப் பார்த்துக்கொண்டு ஜன்னலின்பக்கத்திலுட்கார்ந்து கொண்டு தன்முகத்தை மறைக்கும்படி ஓர் தீபத்தைவைத்துக்கொண்டு, தோட்டத்திலிருந்து நிலவுவெளிச்சம் ஜன்னல்வழியாகவீச, தோட்டத்தைப் பார்த்துக்கொண்டு,பார்ப்பவர்களுக்கு கடிதத்தைவாசிப்பவள்போலும் மனது தோட்டத்திலுமாக இருந்தாள். கலாவதி இப்பொழுது பிரபுக்களைவிட கொஞ்சம் தாழ்ந்த ஸ்திதியுள்ள ஓர் பிரபு வீட்டில் பிறந்திருந்தபோதிலும் இவள் முன்னோர்கள் பிரபுக்களைவிட உயர்ந்தவகுப்பில் சேர்ந்தவர்களாதலால், இவள்குடும்பத்துக்கு ஓர் மதிப்பு ஏற்பட்டிருந்தது. கலாவதியிடத்தில் அழகும், புத்தியும், படிப்பும் மேலிட்டிருந்ததுபோலவே ஓர் கர்வமும் பிடிவாதமும் மேலிட்டிருந்தது. படிப்பென்றாலும் சாதாரணமான படிப்பல்ல. அக்காலத்தில் பெண்கள் எவ்வளவு கல்வி கற்கக்கூடுமோ அதைப் பார்க்கிலும் அதிகமாகக்கற்றிருந்தாள். அவள் தாய்தந்தையர்க்கும் இவள் ஒரேமகளாதலால், அவள் மனங்கோணாமல் நடந்துவந்ததுமன்றி அவள் படிப்பையும் கண்டு மெச்சி அவள் தங்களிடம் பயப்படவேண்டியதற்குப் பதிலாக, அவள்பிடிவாதத்தைக்கண்டு அவளிடம் அவர்கள்பயந்துவந்தார்கள். ஆனால் தாய்தந்தைகளிடம் எப்படி நடந்தபோதிலும், தான்யாரையும் லக்ஷ்யம் செய்யாமலிருந்தபோதிலும், தனக்குவரும் புருஷன்மட்டும் தன்னைவிட படிப்பிலும் புத்தியிலும் சிறந்தவனாக இருக்கவேண்டுமென்றும் அவனுக்கு தான் எப்போதும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்றும் இவள் தீர்மானித்திருந்தாள். இவ்வெண்ணத்தால் தான்,அவள் சுவப்பனத்தில்கூட நினைக்கக்கூடாத அந்தஸ்துள்ள பிரபுக்கள் இவளைக் கலியாணம் செய்துகொள்ள எவ்விதபிரயத்தனங்கள்செய்தும் ஒருவரையும் கலியாணம் செய்துகொள்ளமாட்டேனென்று சொல்லி இன்னும் கலியாணமாகாமலிருக்கிறாள். பிரபுக்கள் ஆசைவைப்பதும் அவர்கள் கலியாணம் செய்துகொள்கிற மாதிரிகளும் சுத்த நாகரீகமற்ற வழக்க



மென்று அவள் மனதில்பட்டது. அவள் எண்ணம் நாம்முன்னமே சொன்னபடி பிறருக்காகவொருவிதவேஷமும்போடக்கூடாதென்பதும்,புருஷனென்றால் அவனை தெய்வம்போல வணங்கவேண்டுமென்பதும் அப்படி வணங்க அவனுக்கு தன்னைக்காட்டிலும் அதிகமான படிப்பும் புத்தியும் வேண்டுமென்பதேயாம். அவள் தாய்தந்தையர்களும் இந்த யோசனையையறிந்து அவள் மனதுபோனவழியில் விட்டுவிட்டார்கள்.

கலாவதி கடிதத்தைப்பார்த்துக் கொண்டிருந்தாளென்று நாம் முன்னமேயே சொன்னோமல்லவா. ஆனால் யதார்த்தத்தில் அவள் கடிதத்தைப்பார்க்கவில்லை. அவள் கண்கள் தோட்டத்தை நோக்கிச்சென்றன. தோட்டத்தில் நிலவு நன்றாய்வீசவும், மரங்களுக்குநடுவே ஓர் தடாகத்தில் ஓர் குழாயிலிருந்து நீர் துளிகள் மழைபோல தாரைதாரையாகவிழவும், தோட்டம் அச்சமயத்தில் பார்க்கவெகு அழகாயிருந்தது. ஆனால் கலாவதி இதுகள் ஒன்றையும் கவனிக்கவில்லை. வெகுதூரத்தில் மரங்கள் அடர்ந்து ஓர் சுவரை மறைத்துக்கொண்டு இருளினால் கருப்பாய்த்தோன்றிய ஓர் திசையைநோக்கியே பார்த்துக்கொண்டிருந்தாள். சற்றுநேரத்திற்கெல்லாம் அம்மரங்களின் கிளைகளும், தழைகளும் சற்று அசைந்தன. அதினின்றும் ஓர் உருவம் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு வெகு விரைவாய் ஜன்னலை நோக்கி வந்தது; ஜன்னலின் சமீபத்தில் வந்ததும் கலாவதி என்ற சப்தம் மெதுவாக இவள் காதில் விழுந்தது.

உடனே கலாவதி தன் தோழியைப்பார்த்து, சுந்தரி, சீக்கிரம் ஓடிவா, நூலேணியைக்கொண்டுவா, ஐயோ தாமதம் செய்கிறாயே, யாராவது பார்த்து விடப்போகிறார்கள். அவர் இதோ வந்துவிட்டார். அவரே தான். என் கண்ணே ! என் முத்தே ! என் கண்மணியே ! என் தர்மசீலா ! என்று கட்டிக்கொண்டாள். தர்மசீலனும் கலாவதியை கட்டிக்கொண்டு ஆ என் கண்மணி, எல்லோருக்கும் இரவாகவிருப்பது எனக்கு பகலாகவிருக்கிறது பாரென்று சொல்லி சற்று இருவரும் சந்தோஷத்தால் பேசிக்கொண்டே இருந்தார்கள். பிறகு இருவரும் உட்கார, தர்மசீலன் கலாவதி பேரில் சாய்ந்துகொண்டு, பெண்ணே நீ எனக்காக வல்லவா இவ்வளவு சிரமப்படுகிறாய். உன் தாய் தந்தையர்கள் உன்னைப் பார்த்துக் கோபித்துக்கொண்டா லென்னசெய்வதென்ற ஏக்கமிருந்தும் எனக்காக அதுகளைக்கூட நீ பாராட்டவில்லையே.

கலாவதி—என் கண்ணே, என் பிராணநாதா, தங்கள் சிரமத்தை விட என் சிரமம் பெரிதா? தங்களை என் தாய்தந்தையர்கள் இங்கே கண்டுகொண்டால் மரணம் நிச்சயமென்று தெரிந்திருந்தும், உயிரைக்கூட லக்ஷ்யம் செய்யாமல் சிரமப்பட்டு வந்த உங்கள் சிரமத்தோடு என் சிரமத்தை இணைகட்டலாமா?

தர்சிலன்:—கலாவதி, உன்தகப்பன் இந்த சிநேகத்தைக் கண்டால் ஓர் ஏழையைப்போய் கலியாணம் செய்துகொள்ளப் பார்க்கிறாயாவென்று கோபித்துக்கொள்ள மாட்டாரா?

கலாவதி:—என் கண்மணியே, ஏழை என்ற வார்த்தை உமது வாயில் வரலாமா? ஏழையா! யார் ஏழை! என் தகப்பனும் நானுமல்லவா? இந்தபிரபுக்களையெல்லாம் ஜயித்து ராஜாவாக வரும் யோக்கியதை தங்களுக்கிறது. இன்

னும் கொஞ்சநாளில் நிச்சயமாக ராஜாவாகவே ஆகப்போகிறீர்கள். நாங்கள் தான் ஏழைகள்.

தர்மசீலன்:—கலாவதி! என்வீண் ஸ்தோத்திரம் செய்கிறாய்? ஆனால் நான் ஒருவரிடமும் சொல்லாத ரகசியத்தை உன்னோடு சொல்லுகிறேன் கேள். என் யோஜனைகளெல்லாம் அனேகமாக முடிவுக்கு வந்துவிட்டது. இப்போது தான் என் மனதிற்கு இது முற்றிலும் முடிய வேண்டுமே யென்கிற விஜாரம் வந்திருக்கிறது. ஆனால் உனது தைரியமான வார்த்தைகளும் உனது ஒத்தாசைகளும் இல்லாமற்போனால் நான் ஒன்றும் செய்யமுடியாது. உன் முகத்தைப் பார்க்கப்பார்க்கத் தான் எனக்கு என் வேலையில் அதிக முயற்சி யுண்டாகிறது.

கலாவதி:—என் தங்கமே! தாங்கள் ஒன்றுக்கும்யோஜிக்கவேண்டாம். உங்களுக்குச் சந்தோஷம் வந்தால் அது எனக்கும் சந்தோஷம். உங்களுக்கு சமயத்தில் தைரியம் சொல்லவும் அபாயகாலத்தில் உங்களுக்கு வேண்டிய தந்திரங்கள் சொல்லவும் நான் தயாராயிருக்கிறேன்.

S. இராமசுவாமி ஐயர், பி. ஏ.,

## மகாவல்லிபுரம்.

நம்மவர்கள், ஆயிரக்கணக்காய் யாத்திரை செய்யும் புண்யஸ்தலங்களுள் ஒன்றாகிய மகாவல்லிபுரம், சென்னைக்குத்தெற்கே சொற்பதூரத்தில் கோவளத்துக்கும், சதுரங்கபட்டணத்திற்கும் நடுவிலுள்ளது. இதற்கு ஏழுகோயிற் பட்டணமென்ற வேறு பெயருமுண்டு. ஆறாம்நூற்றாண்டில், இது வெகு வலிமைபெற்ற பல்லவஅரசர்களின் தலைமைநகராயிருந்தது. நமது முன்னோர்கள் கல்வெட்டுத் தொழிலில் மிக்கதைதேர்ந்தவர்களென்பதைக்காட்டு மதிகுறியாய் இங்கு கோயில் அமைக்கப்பட்டிருக்கிறதுபோலும். சென்னைக்குச் சமீபத்தில் இவ்விடமிருப்பதால் சென்னையைக் கண்ணுறச் செல்லுமனேகர் இவ்விடத்தைக் கண்ணுறாது திரும்புவதில்லை. இங்கு சிற்பவேலை பல இடங்களில் சிதறுண்டுகிடக்கின்றன.

கோயில் சமுத்திரக்கரையோரம் கட்டப்பட்டிருக்கிறது. பார்ப்பவருக்கு இது ஐந்துபிரிவாய்த் தோன்றும். இதை இரதமென்றுஞ் சொல்லுவார்கள். இது மற்றைய நான்கினின்றும் பிரிந்து நிற்கிறது. அந்நான்கும் ஒரே பாறையினின்று வெட்டப்பட்டு தெற்குவடக்காய் ஒரே வரிசையிலிருக்கின்றன. வடகோடிக்கோயிலொன்றுதான் வேலைபூர்த்தியாகச் செய்யப்பெற்றுள்ள கோயிலாய்த் தோன்றுகிறது. இதின் உட்புறத்தில் விக்கிரகமொன்றையுங் காணோம். தென்புறத்து இதற்கடுத்தாற்போலுள்ள கோயிலும் இதைப்போலவே யிருக்கிறது. இதற்கடுத்த மூன்றாவது கோயில் மிக்கவிசித்திர வேலைப்பாட்டையுடையது; வெளிப்புறமுழுதும நன்கு வேலைசெய்யப்பெற்று உட்புறத்தில் அரைகுறை வேலைப்பாட்டுடனுங் கூடிய தாயிருக்



கிறது. மேலே ஒரு வெடிப்பு இருக்கிறது. கீழே நல்லவெளிச்சமும் உண்டு.
இவ்வெடிப்பிறகுக் காரணம் அநேகர் அநேகவிதமாய்க் கூறுகிறார்கள். மே
லே இருந்து அநேகம்பாறைகள் கீழே இடிந்து விழுந்திருப்பதையும் நாம்
அங்கே கண்ணுறலாம். நுனிப்புறமுழுதும் சித்திரவேலைப்பாட்டையுடைய
நான்காவது கோயில் அப்பொழுதுதான் வேலை துவக்கப்பெற்ற அடிவார
த்தையுடைத்தாயுள்ளது.

கடலோரத்தில் தனிமையாக கோயிலொன்று கட்டப்பெற்றுளது.
இக்கோயிலின்மேல் அலைவந்து மோதுகிறது. இக்கோயில் திராவிடர்களு
ளுடைய கோயிலைப்போலவே அமைக்கப்பெற்றுளது. மூலஸ்தானத்துக்கு
மேல் பெரிய விமானமொன்றுவிளங்குகிறது. கீழ்புறத்து கோபுரவாசலுக்
கும் மூலஸ்தானத்துக்கு மிருந்தவழி அடைபட்டிருப்பதாகத் தெரிகிறது.
கோயிலுக்கு சமீபத்தில் மகேஸ்வரன் உருவமும், ரிஷபங்களின் உருவ
மும் கல்லில் வெட்டப்பட்டிருக்கின்றன. இவைகளில் அநேகம் உருத்தெரி
யாது மழுங்கிப்போய்க் கிடக்கின்றன. கருங்கல்லில் செதுக்கப்பட்டு பக்கங்
களுடன் கூடிய லிங்கமொன்று மூலஸ்தானத்தில் இருக்கிறது. இதற்குப்
பின்புறத்தில் விஷ்ணு சேஷ சயனத்தில் பள்ளிகொண்டிருக்கிறார்.

அங்கு இருக்கப்பெற்ற பாறையின் இடப்புறத்தில் தான் அர்ச்சுனன்
தவம்புரிந்ததாகச் சொல்லுகிறார்கள். பாறையின் மேற்புறத்தில் மகாபலிச்
சக்கரவர்த்தி 'நான்கு' அரசர்கள், அவர்கள் மனைவிகள், சந்நியாசிகள் முதலி
யோர்களுடைய உருவம் செதுக்கப்பட்டிருக்கின்றன. சிங்கம், புலி, சிறுத்
தை, கலை மான் முதலிய மிருகங்களின் சித்திரங்கள் அங்கே காணப்படுகின்
றன. கீழ்ப்புறத்தில் ஒருகுரு ஐந்து சிஷ்யருடனும், ஒருமகரிஷியினுடனும்
உட்கார்ந்திருக்கிறார். சிஷ்யர்களின் மூவர் தலைகள் உடைந்திருக்கின்றன
பூனை தவஞ்செய்யும் பாவனையாக வெட்டப்பட்டிருக்கின்றன. இப்பூனைக்
கருகில் பல எலிகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. சிங்கம், யானை, காடி, கோ
ழி, வாத்து இவைகளின் உருவமும் காணப்படுகின்றன. ஜீவனோடிருக்கிற
யானைதான் அங்குளதோவென, தூரத்திலிருந்து பார்ப்பவருக்குச் சந்தேக
த்தை யுண்டுபண்ணக் கூடியதாயிருக்கிறது. பாறையின் மத்தியபாகத்தில்
வாசுகியின்வாலும், உடலின் அடிப்பாகமும் தென்படுகின்றது. இதே நாகரா
ஜனுடைய குமாரத்தியின் உருவம் காணப்படுகிறது. அப்பாறையின் மற்றொ
ருபாகத்தில் ஒருமண்டபம் வெட்டப்பெற்று அம்மண்டபத்தில் கிருஷ்
ணன் கோவர்த்தனகிரியை எடுத்துக் குடையாகப்பிடித்துக் கொண்டிரு
ப்பதுபோல் வெட்டப்பட்டிருக்கின்றது. அக்குடையாகிய கோவர்த்தனகிரி
க்குள் அநேகமனிதர்களும் விலங்குகளும் தங்கள் பாது காப்பின் பொரு
ட்டுவந்து தங்கியிருப்பதுபோல் காட்டப்பட்டிருக்கிறது. மற்றொருசார்
மண்டபத்தில் மகிஷாசுர யுத்தம் முதலான சித்திரங்கள் சித்திரிக்கப்பெற்
றிருக்கின்றன. இதை எல்லாம் பார்ப்பதற்கு வெகுசந்தோஷத்தை உண்டு
பண்ணுகிறதென்பதை நான் சொல்லாமலே யாவருமறிவார்கள். பாறையின்
மேல் ஒரே கல்லினின்றுஞ் செதுக்கப்பெற்ற ஒரு பெரிய கல்தொட்டியொ
ன்று காணப்படுகிறது. ஒரே பாறையில் வெட்டப்பெற்ற சிறு கோபுரங்க
ளும் இருக்கின்றன.

விவ்விஷயத்தைப்பற்றி முழுதும் உரைக்கவந்திலேன். முக்கியமானதை மட்டும் சொல்லி முடித்தேன். சமீபத்தில் இவ்விநோதத்தைக் கண்ணுற்று நேரிட்ட ஒரு காரணமே இவ்விஷயத்தைப்பற்றி எழுதும் எண்ணம் என்னைத் தூண்டியது.

எஸ். என். சீனிவாசன்.

# குடும்பசம்ரக்ஷணை.

## காற்று.

மேலும் வீட்டிலுள்ள கெட்டகாற்று வெளியே போவதற்கும் நல்லகாற்று வீட்டிற்குள் வருவதற்கும் வேண்டியசாதனங்கள் செய்யவேண்டும். நம் தேசத்தில் சாதாரணமாய் வீட்டிற்கு வேண்டிய பெரிய ஜன்னல்களை வைத்துக்கொள்வதில்லை; அப்படி ஜன்னல்களிருந்தபோதிலும் அவைகள் மிகச்சிறியதாயிருக்கின்றன. குக்கிராமம் முதலிய இடங்களிலோ ஜன்னல் என்ற பேச்சேகிடையாது. ஆனால் இப்பொழுது கற்றறிந்தவர்களும் தனவான்களும் வீடுகட்டும்பொழுது விசாலமாயும் காற்று தாராளமாய் உட்புகும்படியும் வெளியிற் செல்லும்படியுமான பெரிய பல கனிகளைவைக்கிறார்கள். இவ்விதம் மற்றவர்களும் செய்ய முயல வேண்டியதவசியமேயாம். ஜன்னல்களில்லாத வீடுகளிலுள்ளவர்கள் இரவு முழுவதும் நித்திரைசெய்து இரவில் தங்கள் சுவாசித்த காற்றை அடிக்கடி சுவாசிப்பதினால் பொழுது விடிந்தவுடன் அவர்களுக்கு இளைப்பும் ஆயாசமுமுண்டாகும்.

வீட்டிற்குள் நல்லகாற்றுவருவதற்கு சாதனங்கள்

சரீரத்திலிருந்து வெளிவருகிற வாயு நல்லகாற்றைவிட இலேசாயிருப்பதினால் அது வீட்டின்மேல் பாகத்தின் வழியாகவரும். ஆனதால் உள்வராமலிருக்கும்படி அதைத்தடுக்கத்தக்க ஜன்னல்கள் அறைக்குள் உயரமாயிருக்கவேண்டும். இல்லாவிடின் சிலநேரத்திற்குள் கெட்டகாற்று குளிர்ந்து சுற்றிலுமிருக்கும் காற்றைவிட பளுவாய் கீழேவிழும். இவ்விதம் விழும் கெட்டவாயு வீட்டிற்குள்ளிருக்கும் நல்லவாயுவைக் கெடுத்துவிடும். இவ்விதம் நேரிடாதபடி அறைக்குமேல் பாகத்திலும் ஜன்னல்கள் வைக்கப்படவேண்டும்.

நல்லகாற்று நம்முடைய தேகத்திற்குள் சென்று வெளிவருவதினால் கெட்டகாற்றாக மாறுகிறதென்று முன்சொல்லியிருக்கிறோம். இன்னொருவிதமாயும் நல்லக்காற்று கெட்டவாயுவாக மாறுகிறது. தீபம் எரியும் பொழுதும் நெருப்பு எரியும்பொழுதும் நல்லகாற்றிலிருக்கும் பிராணவாயுவை ஆகரிஷித்து கரியமலவாயுவை புகைரூபமாய் வெளியே விட்டுக்கொண்டிருக்கும்.

தீபமும் நாம் எவ்வளவு பிராணவாயுவை உள்ளுக்கு எடுத்துக்கொள்ளுகிறோமோ அவ்வளவு பிராணவாயுவை இழுத்துக்கொண்டு கரியமலவாயுவை வெளியே விடுகிறது. நம்மைப்போலவே தீபத்திற்கும் எப்பொழுதும் பிராணவாயுவேண்டும். இல்லாவிடின் விளக்கு எரியாது. ஆகையால் நமது படுக்கை அறைகளில் ஜன்னல்களில்லாமலும் விளக்குகளையும் வைத்துக்



கொண்டிருந்தால் கெட்டகாற்று அதிகமாகவுண்டாகுமல்லவா? ஆகையால் ஜன்னல்களில்லாத அறைகளில் விளக்குகளை வெகுநேரம் எரியும்படி வைக்கக்கூடாது. கூடியவரையிலும் ஜன்னல்களுள்ள அறைகளில்தான் விளக்குகளை வைத்துக்கொண்டு நித்திரை செய்வதுநலம்.

நாம் காற்றுஎன்ற விஷயத்தில் கற்றுக்கொள்ளவேண்டிய சங்கதிகளின் விவரம்:—

1. நாம் காற்றை சுவாசிப்பதற்கும் விடுவதற்கும் காற்று அவசியம் வேண்டியது.

2. நம்முடைய தேகத்திற்குள் நல்லகாற்று போய்க்கொண்டும் அங்கு கெட்டுபோகும். ஆகையால் நாம் சுவாசிக்கும்பொழுதும் கெட்ட காற்றில்லாமல் நல்லகாற்றிருக்கவேண்டும்.

3. நல்ல காற்று நமக்கு வெளியிலிருந்தே வரவேண்டியிருப்பதால் இது சுலபமாய் வருவதற்கு நாம் படுக்கும் அறைக்குள் விசாலமான ஜன்னல்களிருக்கவேண்டிய தவசியம்.

4. படுக்கும் அறைகள் மிகவும் சிறியதாயிருந்தபோதிலும் அவ்வறைகளில் சாமான்களை வைக்கக்கூடாது. கூடியவரையிலும் விசாலமானவும் சாமான்களில்லாதவுமான அறைகளில்தான் நித்திரை செய்யவேண்டும்.

5. தேகத்திற்குள்ளிருக்கும் கெட்டவாயு வெளியேவருமாகையால் அது அறைக்குளிராமல் சீக்கிரம் வெளியேபோகும் உபாயத்தை ஆலோசிக்கவேண்டியது. இது முதலில் உஷ்ணமாயிருந்து வீட்டின்மேற் பாகத்தின்வழியாய் செல்லுமாகையால் அது அவ்விதம் செல்லும்படி அறைக்குள் மேல்பாகத்தில் ஜன்னல்கள் அல்லது சிறு துவாரங்களிருக்கவேண்டும்.

6. இவ்விதம் கெட்டகாற்று போவதற்கு வழியில்லாதிருந்தால் குளிர்ந்த பளுவான கெட்டகாற்று மறுநாள்காலையில் வீட்டிற்குளிருக்குமாகையால் வீட்டிலுள்ள கதவுகளையெல்லாம் திறந்துவைத்து அதைப்போக்கடிக்க வேண்டியது.

(முற்றிற்று.)

# உருக்குமணிநாடகம்.

## களம் 3.

இடம்:— சேதிதேசத்திய ஆஸ்தான மண்டபம்.
(சிசுபாலன் மந்திரி, பிரபுக்கள், வேலைக்காரர்கள் முதலியவர்களுடன் சபாமண்டபத்திற்குள் பிரவேசித்தல்.)

சிசுபாலன்:—யார் அங்கே?

மந்திரி:—மகாராஜ்! இதோகாத்திருக்கிறேன்.

சிசுபாலன்:—இன்றையதினம் என்ன முக்கியசமாசாரம்?

மந்திரி:—மகாராஜ்! விதரப்பதேசத்து மகாராஜாவினிடத்திலிருந்து ஒருகடிதம்வந்திருக்கிறது.

சிசுபாலன்:—அதைப்படி.

(மந்திரிகடிதத்தைப் பிரித்துப்படிக்கிறார்.)

"பிரியம்வாய்ந்த சிசுபால இராஜனே! உமக்கு கடவுள் நீர்க்கஆயுளை யும், பூரணசம்பத்தையும், சுகவாழ்வையும் அளிப்பாராக. எங்களது அன் புள்ள குமாரத்தியாகிய உருக்குமணியை தங்களுக்கு மணம்செய்துவைக்க மிகவும் விரும்புகிறோம். ஆகையால் தயவுசெய்து இந்த கோரிக்கைக்கு இணங்கவேண்டும். தங்கள் பந்துமித்திரர்களுடன் உடனே விதர்ப்பதேசத் திற்குவரவேண்டும்.

"பீஷ்மன்"

சிசுபாலன்:—இச்சந்தோஷமான சமாச்சாரத்தைக் கேட்டதினால் நம க்கு மிகுந்த மகிழ்ச்சியை யுண்டாக்கியது. இங்குள்ளவர்களி லெவரேனும் அப்பெண்மணியைப் பார்த்திருக்கிறார்களா?

மந்திரி:—நான் அநேகதடவை பீஷ்ம மகாராஜாவின் அரண்மனைக்குச் சென்றதில் உருக்குமணியைப் பார்த்திருக்கிறேன். தேவதா ஸ்திரீகளும் இவளழகுக்கு ச்சமானமானவர்களல்ல. சந்திரனுக்கு மத்தியில் களங்கமு ண்டு. ஆனால் இவள் முகமோ களங்கமில்லாத சந்திரனைப்போல் பிரகாச மானது. அவளுடைய கன்னங்கள் ரோஜாப்பூ வர்ணமுடையது, அவளு டைய மூக்கோ சம்பக புஷ்பத்தைப்போலிருக்கின்றது. அவளுடைய இனி மையான குரலோ கக்கோவென்றபக்ஷியின் குரலைக் காட்டிலும் மேலானது. அவள் மகாலக்ஷ்மியின் உருவம் அமைந்தவளாயிருக்கிறாளே தவிர மானி டப்பெண்ணாகக் காணப்படவில்லை.

சிசுபாலன்:—பீஷ்மருடைய குமாரத்தி அவ்வளவு அழகுவாய்ந்தவளெ ன்று நீங்கள் அபிப்பிராயப்படுவதால் நாம் ஏன் உடனேசென்று அப்பெண் மணியை நான் அடையக்கூடாது?

மந்திரிகள்:—மகாராஜ்! அப்படியே செய்யுங்கள்.

விதூஷகன்.—மகாராஜ்! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது; ஆனால் என்று சொல்வதற்குள் (மகாராஜா உன்வாயை மூடு, இப்பொழுது கோமாளித்தனமாக ஒன்றும் பேசாதே என்று சொன்னார்.)

சிசுபாலன்:—பிரதானமந்திரி! இந்த நல்ல சமாச்சாரகடிதத்தை எடுத்து வந்தவனுக்கு உயர்ந்த வெகுமதிகளை உடனே கொடுங்கள். விதர்ப்பதேசத் திற்குப்போக ஏற்பாடுகளை உடனே செய்யுங்கள். காலதாமதம் செய்யக்கூ டாது.

(சிசுபாலன் தனது மந்திரிமார்களுடனும், சேனைகளுடனும், விதர்ப்ப தேசத்திற்குப் புறப்பட்டான்).

பண்டிதர்.



# பார்வதியின் பாக்கியம்.*

பார்வதியின் தகப்பனார் ஒருநாள் அவளை விளித்து "நான் இப்போது சொல்
லப்போகும் விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொள்ள இன்னும் வய
துவரவில்லை ஆயினும் உனக்குத் தக்கபருவம் வந்தும்காலை இவ்வார்த்
தைகள் உனக்கு ஞாபகம் வரக்கூடுமாதலால் சொல்லுகிறேன் கேள்.
நான் மட்டும் ஆயுசோடு இருக்கும் பக்ஷத்தில் உனக்குத்தக்க வயது
வந்து நீயே ஒரு வரனை உன்னிஷ்டப்படி தெரிந்துக்கொள்ளக்கூடிய
காலத்தில் தான் உன்னெண்ணப் பிரகாரம் உனக்கு மணம் செய்விப்பேன். ஆனால்
நான் இறந்துபோகும் பக்ஷத்தில் உன் தாயார் உனக்கு உடனே கல்யாணச் சடங்கை
நிறைவேற்றி விடுவாள். அப்படி யொரு சமயம் நடக்கும் பக்ஷத்தில் நீ உன் கணவனை
நேசித்து அவரும் உன்னை நேசிக்கும்படி செய்ய முயற்சி செய்யவேண்டும். நான் ஆசார
சீர்திருத்தச் சபையாரின் கொள்கைகளின்படி உன்னை வளர்த்து வர முயன்று வந்
தேன். நீயும் அக்கொள்கைகளின்படியே நடக்கவேண்டும்." என்று சொல்லி முடித்
தான். தான் இறந்துபோகும் சங்கதி ஒருவாறு அவனுக்கு முன்னமே தெரிந்திருக்கும்
என்றெண்ண வேண்டியிருக்கிறது. ஏனென்றால் இது தான் பார்வதிக்கும் அவள் தகப்
பனுக்கும் நடந்த கடைசி சம்பாஷணை. இது நடந்து இரண்டு நாளைக்கெல்லாம் தகப்
பன் ஒரு கொடிய வியாதியால் திடீரென்று இறந்து விட்டான்.
இப்போது பார்வதிக்கு வயது பத்தே. ஆனால் இந்த சொற்பகாலத்தில் அவள் நாட்
டிற்குள் நன்மை பயக்கக்கூடிய நாகரீக விதிகளைக் கையாண்டு வந்த தன் தகப்பனுடன்
அதிகமாக நெருங்கிப் பழகி வந்திருந்ததால் அக்குணங்கள் இவளுக்கும் பிடிபட்டது.
பார்வதியின் தகப்பன் ஒன்று எண்ணியிருந்தான். ஆனால் விதியும் நமதுகொடுமையான
வழக்கங்களும் குறுக்கே நின்றதால் அவ்வண்ணம் நிறைவேறாமற் போயிற்று; ஏனென்
றால் தகப்பன் இறந்த ஆறுமாதத்தில் பார்வதிக்குக் கல்யாணம் ஆய் விட்டது.
சுமார் ஐந்து வருஷத்திற்குப் பிற்பாடு பார்வதியின் புருஷன் நல்ல சம்பளத்தின்
பேரில் அதிக தூரத்திலுள்ள ஒரு ஜில்லாவிற்கு மாற்றப்பட்டான். ஆகையால் அவன்
தாய்தந்தையரை சொந்த ஊரில் விட்டுவிட்டு தன் மனைவியை மாத்திரம் அழைத்துக்
கொண்டு அப்புது இடத்திற்குப்போக நேர்ந்தது. சம்பளம் உயர்ந்ததால் சந்தோஷம்.
வேறு இடத்திற்குப் போகவேண்டியிருப்பதால் வியாகூலம். இவ்வாறாக அவன் தத்
தளித்துக்கொண்டிருந்தாள். இப்படி யிருக்கையில் அவன் தாயார் அவனை ராமசந்திரா
என விளித்து, நீ அந்த தூரம் போவதைப்பற்றி எனக்கு அதிக விசனம் உண்டாகின்
றது. வயது சென்ற உன் தகப்பனாரை இங்கு சரியாய்ப் பார்த்துக்கொள்ள நான் இருக்
கவேண்டிய தவசியம். இல்லாவிட்டால் நானும் உன்னுடன் வருவேன். உன்னுடைய
மனைவியை மட்டும் ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள். அவள் கட்டழகி. திடச்சித்தமு
டையவள். உன்னை எப்படி வேண்டினும் திருப்பிவிடக்கூடும். அவளுக்குச் சிறுவயதி
லேயே சில கெட்ட அப்பியாசங்கள் பிடிப்பட்டிருக்கின்றன. நான் இதுவரை அவை
மேல் வளராமல் கண்டித்துக்கொண்டு வந்தேன். நீ அவளுக்குக் கொஞ்சம் கூட இடம்
கொடாதே. நீ மனிதன் அல்லவா? உன் பழய வழக்காசாரப்படியே நடக்கவேண்டும்,
என்பது உனக்குத் தெரிந்தது தானே என்று பலவாறு கூறினள். இவை யெல்லாம்

* Adapted from the Indian Ladies' Magazine.

கேட்டுக்கொண்டிருந்த ராமசந்திரன் சரியம்மா! நான் எல்லாம் அப்படியே செய்கிறேன் என்று மொழிபகர்ந்தான். ராமசந்திரன் நல்ல அழகுடையவன், நல்லகுணசாலி. ஆனால் திடசித்தம் கிடையாது. யாவரும் சுலபமாக ஏமாற்றக்கூடியவன். தன் தாயிடமே அதிகமாகப் பழகி வந்ததால் நூதனமாக ஏற்பட்டு வரும் நல்ல வழக்கங்களிற் சிலவற்றை அவன் தன் தாய் மாதிரியே வெறுத்து வந்தான். அவன் அதிக புத்திசாலித்தனமுடையவனுமல்ல. விஷயங்களைச் சடுதியிற் கிரகிக்கக்கூடியவனுமல்ல.' இவை தான் அவன் குறைகள். ராமச்சந்திரன் போகவேண்டிய விடத்தில் அவனுக்கு உள்ள சிநேகிதர்கள் ஒருவரும் கிடையாது. ஆனால் அவன் மனைவியின் அதிகப் பழகிய ஒரு பெண்ணின் தமயன் அவ்வூரில் இருந்தான். பெயர் கோபாலன். இவனுக்கு ராமசந்திரனும் அவன் மனைவியும் அவ்விடம் வருகிறார்கள் என்ற சமாசாரம் தெரிந்தவுடன் அவர்களுக்கு அக்கிராமத்தில் நல்லவீடு ஒன்று பார்த்துத் திட்டம் செய்துவிட்டு சமயலுக்காக ஒரு பிராமணக் கிழவியையும் நியமித்து, அயல் வீட்டில் இருக்கச்செய்து தான் அவர்களை அழைத்துவருவதற்கு ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்தான். வண்டியும் வந்தது. ராமச்சந்திரனும் அவன் மனைவியும் இறங்கி கோபாலனைக் கண்டார்கள். கோபலன் சமாசாரம் எல்லாம் சொல்லவே ராமசந்திரனுக்கு அதிக சந்தோஷமுண்டாயிற்று. ராமசந்திரன் தன்னை பெரிய மனிதன் என்று எண்ணிக்கொண்டிருந்தபடியால் கோபாலனிடத்தில் பேசும்போது எஜமான் ஸ்தானத்திலிருப்போன் தாழ்ந்த ஸ்தானத்திலிருப்போன் ஒருவனிடம் பேசுவதைச் சிறிது ஒத்திருந்தது. இப்படியிருக்க, பார்வதி கோபாலனைப்பார்த்து "தங்களுக்கு மிகவும் வந்தனம் அளிக்கின்றேன். தாங்கள் எங்கள் மீது மிகுந்த கருணை பாராட்டியிருக்கிறீர்கள். தாங்கள் தங்கை எனக்கு நன்றாகத் தெரியும். நானும் அவளும் அதிக சிநேகமுடையவர்கள்" என்று இங்கிலீஷ் பாஷையில் பேசிக்கொண்டிருந்தாள். இது ராமசந்திரனுக்குப் பிடிக்கவில்லை.

உடனே ராமசந்திரன் வண்டியில் ஏறிக்கொண்டு மனைவியை நோக்கி வா! வா! வந்து வண்டியேறு என்று உரக்கக்கூறினான். அந்தப்பெண் இவ்வார்த்தைக்கு உடனே வணங்கி கோபாலனைப்பார்த்து "தாங்கள் சீக்கிரம் எங்களைவந்து பார்ப்பீர்கள் என்று எண்ணுகின்றேன்" என்று சொல்லிவிட்டு வண்டியேறிக் கொண்டாள்.

ராமசந்திரனுக்குக் கோபம் பிறந்துவிட்டது. அவன் தாயார் கூறியமொழிகள் ஞாபகத்திற்கு வந்தன. இனி இப்படி விடக்கூடாதென் றெண்ணினான்.

"பார்வதி! நீ இம்மாதிரி நடக்கலாமா? ஏன் அவனுடன் பேசினாய்?"

"நான் அப்படி பேசக்கூடாதா? அதில் ஒன்றும் குற்றமில்லையே" என்று ஆச்சரியத்துடன் மறுமொழி பகன்றனள் பார்வதி.

"ஒரு பிராமணப்பெண் அன்னியன் ஒருவனிடத்தில் பேசுவதில் குற்றமொன்றுமில்லையா? நீ அதை நிறுத்த வேண்டும்."

"ஏன்."

"நீ என்னுடன் இப்படித் தர்க்கிப்பதின் கருத்தென்ன? தெளியச்சொல்."

"என்னுடைய தகப்பனார் என்னை இவ்வழக்கங்களை அநுசரிக்கும்படி பழக்கி வந்தார்."

"உன் தகப்பனைக்கொண்டுபோய்க் கட்டையில் வை. இப்போது நீ என் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்."

"எனக்குச் சரியென்று தோன்றும் ஒவ்வொரு விஷயத்திலும் நான் தங்களுக்குக் கீழ்படிதலில் சிறிதும் ஐயமில்லை. எனக்கு ஒரு மனதில்லையா? நான் ஒன்றும் பேசக்



கூடாதா? அநுமதிகொடுத்தால் ஒரு விஷயம் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தாங்கள் என் மீது குற்றங்கண்டு பிடித்தீரே. நான் தங்களிடத்துக் குற்றம் கண்டு பிடிக்கட்டுமா? தாங்கள் என்னை யன்றோ முதலில் வண்டியில் ஏறச்சொல்லியிருக்கவேண்டும். இது தங்களுக்குத் தெரிந்தது தானே."

ராமச்சந்திரனுக்கு இதைக்கேட்டவுடனே வந்த கோபத்திற்கு அளவில்லை; எல்லாம் பின்னால் பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டான்.

வண்டியும் விடுதிக்கு வந்துவிட்டது; இருவரும் வீட்டில் தங்கினார்கள்.

பார்வதிக்கு வீட்டுவேலைகள் நன்றாய்த்தெரியும்; ஆனால் இதுவரையும் அவள் தன் மாமியின் கீழ் இருந்தமையால் ஒன்று செய்ய முடியவில்லை. இப்போது பலவிதத்தாலும் தன் கணவனைச் சந்தோஷிப்பிக்க வேண்டும் என்று எண்ணினாள். சிலநாள் வேலைகளையெல்லாம் கிரமமாகப் பார்த்துக்கொண்டு வருங்காலத்தில் சிற்சில நவீன நடவடிக்கைகளை தன் குடும்பத்திலும் அநுசரிக்க ஆரம்பித்தனள்.

உதாரணமாக ஒருநாள் ராமச்சந்திரன் சாப்பாட்டுக்கு வரும்போது இரண்டு இலைகளில் பதார்த்தம் அன்னம் முதலியன பரிமாறியிருக்கக் கண்டான். அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் ஒருவன் தானிருக்கிறேன். உறவினரும் ஒருவரும் இல்லையே. இரண்டிலை எதற்கு? என்று எண்ணிக்கொண்டே ஒன்றும் பேசாமல் தான் ஒரு இலை முன்னால் உட்கார்ந்தான். பின்னர் சிறிது நாணத்துடன் பார்வதி வந்து. "பிராண நாயகா? நானும் தங்களுடன் உட்கார்ந்து சாப்பிடலாமா? என் தகப்பனாருடன் நான் அப்படிச் சாப்பிடுவது வழக்கம்." என்று இனிய குரலில் கேட்டனள். ராமச்சந்திரன் அவளை முகத்தில் ஏறிட்டுப்பார்த்து ஒன்றும்சொல்லாது சாப்பிடஆரம்பித்தான். பார்வதி அவன் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தாள். உடனே அவன்,

"எனக்கு யார் பரிமாறுவது."

"வேலைக்காரி யிருக்கிறாளன்றோ."

"சரி இப்போது எல்லாம் தயாராயிருக்கிறபடியால் இன்று நீ என்னோடு உட்கார்ந்து சாப்பிடலாம். பிற்பாடு பார்த்துக் கொள்வோம்" என்று மனவெறுப்புடன் சொன்னான்.

உடனே பார்வதி அவன் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டாள். அப்போது இருவருக்கும் நடந்த சம்பாஷணையாலும் எல்லாம் நேர்த்தியாக இருந்தமையாலும் இப்புது வழக்கம் நல்லதென்றே ராமச்சந்திரனுக்கும் தோற்றியது. 'நான் தனிமையாயிருக்கும் போது எப்படிச் சாப்பிட்டால் என்ன குற்றமொன்றுமில்லையே, உறவினர் யாரேனும் வந்தால் அவள் கட்டாயம் என்னுடன் கூடச் சாப்பிடக்கூடாது தான்" என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். சாப்பாட்டறையின் சங்கதி யிப்படி யிருக்க படிப்பறைக்குச் சற்றுவருவோம்.

ஒருநாள் பார்வதி தன் பர்த்தாவின் படிப்பறையில் இரண்டு சாய்மான நாற்காலிகளும் ஒரு எழுதும் மேஜையும் அழகாகப் போட்டிருந்தனள். அவன் சாயங்காலம் வந்து காப்பி பலகாரம் சாப்பிட்டபின் படிப்பறைக்குச் சென்றனன். பார்த்தான். வெவ்வேறிடத்தில் இருந்த இவைகளை இங்கு ஏன் போட்டிருக்கவேண்டும் என்றெண்ணினான். பிற்பாடு ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு ஒரு சாய்மான நாற்காலியில் சாய்ந்துகொண்டு படிக்க ஆரம்பித்தான். இருட்டும் சமயம் ஆய்விட்டது. உடனே பார்வதி நல்ல விளக்கு ஒன்று கொண்டுவந்து அவன் கையிலிருக்கும் புத்தகத்திற்கு நல்ல வெளிச்சம் படும்படியாக ஒரு இடத்தில், அவ்விளக்கை வைத்தனள். ராமச்சந்திரனுக்கு அதிக

சந்தோஷம் உண்டாயிற்று; ஆனால் அத்தோடு முடியவில்லை. இன்னும் ஒரு புதுமையை அநுசரிக்கத்தான் அவள் இவ்வளவு ஏற்பாடு செய்தது. உடனே மற்றொரு சாய்மான நாற்காலியில் தானும் சாய்ந்துகொண்டு தான் புஸ்தகங்களில் ஒன்றை எடுத்து படிக்கத் தொடங்கினாள் பார்வதி. இதைப் பார்க்க ராமச்சந்திரனுக்கு மனம் சகிக்கவில்லை. தந்துச்சொல்ல வாயெடுத்தான். ஆனால் அவள் அங்கிருந்தது மிகவும் ஐய்கியத்தைத் தந்ததால் ஒன்றும் பேசவில்லை. இதுவும் நன்றாகத்தானிருக்கிறது. தனிமையாக இருக்கும்போது என்னவேண்டினும் செய்து கொள்ளலாம். அன்னியர் வந்த காலை இவ்வழக்கங்களை அகற்றிவிட வேண்டும் என்று மட்டும் தீர்மானித்துக்கொண்டான்.

(இன்னும் வரும்) பார்வதிபாகன் பி-ஏ.

## என்னுடைய மதம்.

ஞாயத்தைத் தழுவுவதும், தருமத்தை நாடுவதும், தயையைக் காட்டுவதும், துக்கப்படுகிறவர்களைப் பார்த்து இரங்குவதும், வல்லமை குறைந்தவர்களுக்கு உதவிசெய்வதும், எனக்குப் பிறர்செய்த தீமைகளை மறந்துபோவதும், அவர்செய்த நன்மைகளைப் பாராட்டுவதும், சத்தியத்தில் நிற்பதும், சிரத்தையோடு வாழ்வதும், உள்ளும்புறமும் ஒன்றாகவைத்துச் சொற்களைச்சொல்வதும், மேன்மைதங்கிய சுயேச்சையை விரும்புவதும், அஞ்ஞானத்தை சதாகாலமும் நீக்க மன்றாடுவதும், மனைவியையும் குழந்தைகளையும் சிநேகிதர்களையும் இல்வாழ்க்கை யின்பந்தருமாறு மனப்பூர்த்தியாய் நேசிப்பதும், சித்திரங்களிலேயும பிரபஞ்சத்திலேயும் உள்ளவனப்புகளை ஆதரிப்பதும், புத்தியை விருத்திபண்ணிக்கொள்ளுவதும், நல்லொழுக்கம் பொருந்திய பெரியஞானியர் யாரெனினும் அவரோடுபழகி அவரைக் கௌரவிப்பதும், பரோபகாரமான காரியங்களைக் கொண்டாடுவதும், தைரியத்தையும் மனவுவகையையும் கைப்பிடித்து நடப்பதும், பிறர்களை சௌக்கியப்படுத்துவதும், பெருந்தகைமையான காரியங்களை என்வாழ்நாட்களில் நிரப்பச்செய்வதும, இனிய வசனங்களை மொழிவதும், குற்றங்களை விலக்குவதும், நன்றாய் ஆராயாமல் கொண்டபக்ஷபாத அபிப்பிராயங்களை மனத்தினின்று வேரோடு களைந்து எறிவதும், சந்தோஷத்துடனே புதிதான உண்மைகளை அங்கீகரிப்பதும், பக்தியாயிருப்பதும், பிரபஞ்சவாழ்க்கையில் நிகழ்கிற இடுக்கண்களுக்கும் அப்பால் நிலைத்துநிற்கிற நிர்வாண சாந்தியைக் காண்பதும், இரவுக்குப்பின் நிகழும் விடியற்காலத்தை நினைத்து ஊக்கத்தோடு கருமத்தில் பிரவேசிப்பதும், நம்மால் செய்யவல்லது எல்லாவற்றையும் செய்து முடித்துப் பிறகு மனத்தனிப்புடனே பிரபஞ்ச நாடகத்தின் முடிவிற்குக் காத்திருப்பதுமே—ராபர்ட்டு ஜி. இங்கர்ஸால் என்னும் பெரியவர்மொழிந்த மகாவாக்கியங்கள்—யானும் இவ்விதக்கொள்கையனே,



இப்படி,

உலக சகோதரி.



## குணத்தைத்தெரிவிக்கும் முகக்குறிப்புகள்.

சிறியமுகத்தில் பெரியகண்கள் இருப்பன கொடுமையையும்; பாதிமூடின கண்கள் சுபாவமான கபடத்தையும்; சிறியமூக்கு சிறுமையையும்; கூரானமூக்குச் சம்பந்தமில்லாத காரியத்தில் தலையிட்டுக்கொள்ளுந் தன்மையையும்; சிறிதான வாய், மூக்கு, நாசித்துவாரம் இவை தீர்மானமின்மையையும் பயத்தையும்; பருத்த தாடையெலும்பு பிடிவாதத்தையும்; திறந்தவாய் புத்திகுறைவையும்; நீண்ட மேல் உதடு கடுமையையும், பணவாசையையும்; நீண்ட கீழ் உதடு ஆடம்பரம், மமதை, பேதமை இவைகளையும்; சின்னமுகவாய்க்கட்டை தீர்மானமின்மையையும்; முகவாய்க்கட்டையில் குழிவு அழகையும் செழுமையான புத்தியின்மையையும் தெரிவிக்கின்றனவாம்.

E. சுப்பிரமணியம் பி. ஏ.

## வேடிக்கையான விஷயம்.

1. எனது நண்பனே! உடனே எனக்கு நீ ஒருசாவரன் கடன் கொடுக்கவேண்டும். எனது பணப்பையை வீட்டில் வைத்துவிட்டேன். என்னிடத்தில் ஒரு காசுகூட யில்லையென்றான், மற்றொருவன்: இப்பொழுது உனக்கு கடன்கொடுக்க ஒரு சாவரனில்லை. ஆனால் உடனே பணத்தைப் பெறும் வழியைக் காண்பிக்கிறேன்.

நீ அதிகப் பிரியமுள்ளவரா யிருக்கிறீர்.

இதோ இரண்டு அணா உள. டிராம்வண்டியில் ஏறி வீட்டிற்குச்சென்று பணப்பையைக்கொண்டுவா என்றான்.

2. சுந்தரி: அம்மாலக்ஷ்மி! வைத்தியர் என் வாயை ஒருமணிநேரம் திறந்துகொண்டிருக்கும்படி செய்தார், அப்படிச் செய்தது என்னை மரணத்துக்குள்ளாக்கியதுபோ லிருந்தது.

லக்ஷ்மி: ஆம்; அந்தநேரத்தில் பாதிநேரம் அவர் உன்வாயை மூடி வைத்துக்கொள்ளும்படி செய்திருந்தால் நிச்சயமாகவே நீ இறந்திருப்பாயே.

## சமாசாரக்குறிப்பு.

அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன்நகரத்தில் மிஸ்டர் வின்ஸ்லோ என்பவர் பறக்கும் யந்திரமொன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம்.

***

விதவைகளுக்குள்ளே கல்வி விருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் அதற்கென்று மைசூர் கவர்ன்மெண்டார் பிரத்தியேகமான ஸ்காலர்ஷிப்புகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த ஸ்காலர்ஷிப்புகள் ஜுலைமாதம் 10 ந்தேதி முதல் கொடுக்கப்படும்.

***

நம்ம தேசாசாரத்தின் பழைமைப்ரோடிப்புகள் வேடிக்கைகள் முதலானவைகளை நம்முன்னோர்கள் பூர்வீக அரசர்கள் வருகையை எப்படி கொண்டாடினார்களோ அப்படி செய்வதில் நமது இளவரசருக்கும், இளவரசியாருக்கும் ஓர் கண்காட்சியாகவும் புதுமாதிரியாகவும் நம்மவர்களுக்கு நன்மையாகவும் இருக்கும்.

***

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் அடுத்தவருஷம் ஜனவரிமாதம் 5-ஆந்தேதியன்று கல்கட்டாவில் கட்டப்படும் விக்டோரியா ஞாபகச்சின்ன மாளிகைக்கு அஸ்திவாரக்கல் நாட்டுவார்களென்றும், அதற்கு மறுநாளாகிய 6-ஆந்தேதியன்று டார்ஜிலிங் நோக்கிப் பிரயாணமாவார்களென்றும் தெரியவருகிறது.

***

வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் அடுத்த பிப்ரவரிமாதம் மைசூர் இராஜ்யத்திற்கு விஜயம் செய்யும்போது அவ்விராஜ்யத்தில் யானைபிடிக்கும் வேடிக்கைகள் நடக்கவேண்டுமென்று மைசூர் கவர்ன்மெண்டார் ஒரு லட்சம் ரூபாய் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். இத்தொகையில் இருப்பத்தையாயிரம் ரூபாய்க்கு இரண்டு கும்வி யானைகளை (இராஜகுஞ்சரங்கள்) வாங்கப் போகிறார்கள்.

***

சக்கிரவர்த்தி மகனார் டெல்லிக்கு வருங்காலத்தில் படைக்காட்சி நடக்கப்போகின்றது. அப்படைகளுக்குப் பயன்படுமாறு 18 தடாகங்களும் 27 கிணறுகளும் வெட்டப்படப்போகின்றன. அச்செலவின்பொருட்டு லார்டு கிச்சனர் தற்காலத்திற்கு 10,000 ரூபாய் கொடுத்திருக்கின்றார். இவ்விஷயத்தில் 4,000 கூலிக்காரர்கள் வேலைசெய்கிறார்கள்.

***

ஜப்பான் தேசத்திலுள்ள ஸ்திரீகளுட்பலர் இப்பொழுது நடக்கும்யுத்தத்தில் தாம் தமது தேசத்திற்குச் செய்யக்கூடிய ஊழியம் வேறொன்றுமில்லாமையால் இப்பொழுது யுத்தத்தில் காயமடைந்து வைத்தியசாலையிற் கிடக்கும் யுத்த வீரரைப்பராமரிப்பதற்கு வலிந்து சென்றுகொண்டு வருகின்றனர். பலர் ஊர்தோறுஞ் சென்றுபொருட்சேகரித்து அப்போர்வீரர்களின் குடும்பத்தார் பலரைக்காப்பாற்றி வருகின்றனர். உண்மையாக இத்தேசத்துச் சனங்கள் தங்கள் சக்கரவர்த்தியாரைத் தெய்வமென்றே மதித்துநடக்கின்றனர்.

## விடுகதைகள்.

1.

ஆறு எழுத்து அமைந்த ஒரு சொல்.

1, 2, 6, எழுத்துக்கள் சேர்ந்தால் ஆதரவு என்று அர்த்தம்.
1, 2, 5, 6. ஷை ஆசனம் என்று அர்த்தம்.
4, 5, 6. ஷை மனிதர்க்கூட்ட மொன்று அர்த்தம்.
2, 3, 4, 5. ஷை காட்சி என்று அர்த்தம்.
முழுதும் சேர்த்து வாசித்தால் கண்ணாடியின்பெயர்.

இது காக்கா.



2.

நாலெழுத்து அமைந்த ஒரு சொல்.

1: 4. எழுத்துகள் சேர்த்து வாசித்தால் தினமாகும்.
முதலெழுத்தைக் குறைத்திடில் புத்திரியின் பெயர்.
முழுதும் சரச்சுவதியின் பெயர்.

உலக சகோதரி.

---

நாளது 1905 வருஷம் ஏப்ரல் மாத சஞ்சிகையில் டி. எம். அறப்பெருஞ்செல்வி அம்மாள் எழுதியவிடுகதைக்கு விடை.

1 மாம்பழம்.

3 வெற்றிலைபாக்கு.

1 மூன்று எழுத்துள்ள ஒரு ஊரின்பெயராம்.

முதலெழுத்தை யொழித்திடில் அரசாளும் மன்னவர்களின் பெயராம் இரண்டாவதெழுத்தை யொழித்திடில் கன்னமா மிருகத்தின் பெயராம் மூன்றாவதெழுத்தை யொழித்திடில் உண்ணியதேனின் பெயராம் அந்த ஊரின் பெயர் என்னவென்று இயம்புவீரே.

2. காட்டில் கட்டைவெட்டி கடலோரம் ஏற்றம்போட்டு நாட்டுக்கு சீட்டெழுதி நடக்கின்றான் தர்மராஜன்.

நாகம்மாள்.

---

ஏப்பிரல்மாஸ பத்திரிகையில் பிரசுரமான 4 நம்பர் பத்திரிகையில் சர்வஜன சகோதரி அவர்கள் எழுதிய 1-வது கதையின் வினாவிற்கு விடை—நண்டு.

2-வது கதையின் வினாவிற்கு விடை—புகையிலை.

மரகதம் அம்மாளவர்களால் 1-வதுஎழுதிய வினாவிற்குவிடை—காற்று.

2-வது வினாவிற்கு விடை—கபாலம்.

T. M. அறப்பெருஞ் செல்வியம்மாளவர்கள் எழுதிய 3-வது வினாவிற்கு விடை—தாம்பூலம் தரிப்பது.

### 1-வது விடுகதை வினா.

விலங்கினத்தொன்று ஆதி விடுத்திடில் வேலையாகும்
இலக்கிடு மிடையை நீக்கி யிசைத்திடி லசைச்சொல்லாகும்
அலம்பெரு மந்தம்நீக்கி லாகிடு முயற்சி யென்று
நலம்பெறு கலைகற்றுயர்ந்த நங்கையர் நவிலுவீரே.

### 2-வது விடுகதை வினா.

வருடப்பேர் மக்கப்பேர் மணியின்பேரும் வாணிபெயர் பலனற்றோனுக்கும் பேரும், புருடரோடு மாதர்பூணுரப்பேரும் புனமரப்பேர் பெண்கள்பேர் ஜாதிப்பேரிப் பொருடனிலே ஐந்தெழுத்தி னிடையை யொன்றாய்ப் பொருக்கி முறையாய்க் கோற்கிற் புனிதமாந்தற் கருடராயிப் புவிமீது சிறந்துலாவி அரிய விஷயஞ்சொலும் பத்திரிகையாமே.

வருடமொன்று—பிரமாதீச
மணியினொன்று—கோமேதகம்
பக்கமொன்று—சதுர்த்தி
வாணிபெயர்—கலைமகள்

பலனற்றோனாகும் பெயர்—அன்னோன்றி
பூணாரப்பெயர்—ஆபரணம்
மரப்பெயர்—அழிஞ்சில்
பெண்கள் பெயர்—வஞ்சியர்
ஜாதிப்பெயர்—வன்னியர்.

3-வது விடுகதை வினா.

நீர்பூத்துநிரைந்திருக்கும் சிவனுமல்ல—நீலநிறம் பூண்டிருக்கும் உமையுமல்ல, கூர்முனையாய் முள்ளிருக்கும் பலாக்காயல்லக்—குலைவடுத்துக் காய்த்திருக்கும் கதலியல்ல, சேற்பிழந்து முத்தினும் நதனையல்ல—நேர்த்தியாய் நெய்கொடுக்கும் நறுநெய்யாகா, சீர்பெருமிப் பத்திரிகை தன்னிலிந்தச் செய்யுளின் பயனதனைச் செப்புவீரே.

4-வது விடுகதை வினா.

ஓட்டிலன்ன மூண்ணும் பரதேசியல்ல—ஓமதில் நீர்குடிக்கும் குதிரையல்ல, பாட்டுயைகேட்குமது மனிதரல்ல—பாவையரைச் சேர்ந்தனையும்புருடரல்ல, தாட்டிகமாயடிதாங்குந் திருடரல்ல—சாணிமண்ணில் புரழுமது வண்டுமல்ல, நாட்டினிலே யெல்லோர்க்குமுரியதாகும் நலமுடனே யிதன் பயனை நவிலுவீரே.

5-வது வினா.

7 எழுத்துள்ள ஒருபெயர்.

| | | |
|---|---|---|
| 1-7 | எழுத்துச் சேர்ந்தால் ஒருமிருகம் | அர்த்தம் - மான் |
| 4-7 | ,, ,, கல் | ,, கன் |
| 4 6-7 | ,, ,, முறைமை | ,, கடன் |
| 1-6-7 | ,, ,, மடையன் | ,, மாடன் |
| 4-6-1 | ,, ,, காட்டுப்பசு | ,, கடமா |

என்றும் அர்த்தமாகும்-முழுதுஞ்சேர்ந்தால் ஒரு இருடியின் பெயர் ஆகும்.

6-வது வினா.

ஒரு விருக்ஷத்தின் பெயரிலொன்று அதின்முதலெழுத்தை நீக்கினால்ப் பன்றி என்றும்.

2-வது எழுத்தை நீக்கினால் பெண் என்றும்,

மூன்றெழுத்துஞ்சேர்ந்தால் ஒரு ஆயுதப்பெயராகும்.

S. ஞானவடிவுடையம்மாள்.

விடுகதைவிடை.

நாளது 1905 ஹு ஏப்பிரல் மாதச் சஞ்சிகையில் சகோதரி "சர்வஜன சகோதரியம்மாளால்" வெளியிட்ட, 1-வது கதைக்கு விடை வெருளாய் நண்டாயிருக்கலாம். அல்லது தோனியோ? 2-வது கை புகையிலை,

சகோதரி: மரகதம்மாளால் வெளியிட்ட முதல்கதைக்குவிடை காற்று.

சகோதரி "T. M. அறப்பெருஞ்செல்வியம்மாளால்" வெளியிட்ட 1-வது கதைக்குவிடை பச்சைமிளகாய். 2-வது கை மண், குயவன், சூளை, சட்டிப்பானை. 3-வது தாம்பூலம்.

பி-பு.

Printed at the Madras Ripon Press and Published by the Proprietor C. S. RAMASAWMY IYER, Madras.

REGISTERED 2-MAR 1906 MADRAS

# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-vii. புத்தகம் எ. | Madras: August 1905. சென்னப்பட்டணம்: ஆகஸ்டு 1905. | No-8. இல-8.

## மாதர் கல்விக்கு அளவு.

பிரபஞ்சத்தில் உயிரோடு கூடியிருக்கிற எல்லாச் சென்மங்களைவிட மனுஷிய ஜென்மம் சிரேஷ்டமென்பது பிரசித்தம். அவைகளுக்கும் இவனுக்குமுள்ள வித்தியாசம் புத்தி ஒன்றே யல்லவா? ஆகையால் பிராணிகளின் மேல் உயர்ச்சியைத் தருகிற அருமையான பொருளாகிய புத்தியை நிலை நிறுத்திக்கொள்வதும், விருத்திசெய்வதும், நமுக்கும் பிறருக்கும்பயன் படும்படி உபயோகிப்பதும், நம்முடைய முதன்மையான கடமையேயாகும். "கற்கக்கசடற கற்றபின் நிற்க அதற்குத்தக" வென்று பெரியாரும் சொல்லியிருக்கிறார். கற்றதற்குத் தகுதியாக நடந்துகொள்ளாவிட்டால் அவன் மிருகமேயாவன். ஆகையினால், கல்வி மனிதர்க்கு அடையவேண்டிய நல்ல ஆபரணமாகும். "எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்று ஔவையார் கூறிய வசனம் சத்தியமே. கற்காத மூடனுக்கு இருக்கிற கண்கள் புண்களாகும். ஏனென்றால் பிரபஞ்சத்தில் தன்னையும் நடத்திக் கொள்வதற்குச் சக்தியில்லை, பிறரையும் நடத்த வல்லமையில்லை. ஆகையினால் ஒவ்வொரு நிமிஷத்திலும் குருடனைப்போலவே தடுமாறுகிறான்; கல்வி கற்றவனோ அப்படி அல்லன். அவன் பூர்வீகர்களுடைய அனுபவத்தைத்தானே மறுபடியும் கஷ்டப்பட்டு அனுபவியாமல் வெகு விரைவில் புஸ்தகங்களினாலும் பெரியாரிடத்துக் கேள்வியினாலும் புத்தியினால் கிரகித்து உலகத்தில் செவ்வையாக நடந்துகொள்கிறான். ஆகையால் கல்வி கற்பது மாந்தர்க்கு முக்கியமே: மானிடப் பிறவியில் இரண்டு பெரிய வகுப்புகள் உள்ளன. ஆணும் பெண்ணும். முன்சொன்னபடி இவ்விரு வகுப்பினருக்கும் கல்வி கற்பது அவசியமே.

பெண்ணுக்குக் கல்வி கூடாது என்றது யுக்திக்கும் சரிப்படவில்லை. பெரியார் வசனங்களாலும் எவ்வித விலக்கும் காணப்படவில்லை. ஆயினும் பெண்ணுக்கும் ஆணுக்கும் ஒரேவிதமான கல்வி சரிப்படாமல் இருக்கலாம்.

இதனால் கல்வி பெண்களுக்கு அடையவும் கூடாதென்பதற்குக் கொஞ்ச
மும் ஏலாது. இனி மாதர்களுக்கு எவ்விதமான கல்வி கற்பிக்க வேண்டு
மென்பதை நிர்ணயிப்போம்.

இவ்விதமாய் நிர்ணயிக்கும்போதே அதற்கு எல்லையும் ஏற்படும். வெகு
அற்பமான பிராணிகள் முதல் மனிதஜாதி வரையிலும் நிரப் பார்ப்போமே
யானால் பெண்வகைக்குக் குட்டிகளை ஈவதும், அவைகளைப் பாதுகாப்ப
தும் அக்குஞ்சுகளும் முதிர்ந்து சுதந்தரமாய் நடந்துக்கொள்ளச் சக்தி
அடையும்படிச் செய்வதும் கடமையாய் இருப்பதைக் காணலாம். நாமும்
ஜெந்துக்களுடைய அனேக சுபாவங்களை உடைத்தாய் இருக்கிறோம். அவ்
விதமான சுபாவங்களில் அப்பிராணிகளுக் குண்டான வம்சவிருத்தி என்
பது நமக்கும் உண்டு. மனிதனுக்கு உயர்ந்தவகைப் பொருளான புத்தி என்
பது ஒன்று உண்டான போதிலும் புத்தியை விருத்தி செய்வது கடமை
யானபோதிலும் எவ்வித விருத்தியும் நன்மையும் அடைவது பிரஜாவிருத்தி
யின்மேல் சார்ந்த தாகையினால் அதை முதன்மையாக மதித்துப்பின் புத்தி
விருத்தியை மதிக்க வேண்டியதுபோலும். ஆதலால் பெண்களுக்குக் கல்வி
கற்பிக்கும்போது அவர்களைக் குணத்தினாலும், புத்தியினாலும், தேகவலிமை
யினாலும் முதல்தரமான தாயாகளாக செய்விப்பதையே முக்கியமாய்க் கவ
னிக்கவேண்டும். தாய்க்கடமையை அவர்களுக்கு எவ்விதமாயினும் நிவர்த்
திசெய்து ஒரு பாலான விருத்தியை மிக உண்டாக்கும் கல்வி நியாயமான
தல்ல. இவ்விதமான கல்விசிலபெண்களுக்கு நன்றாய் இருந்தபோதிலும் ஒரு
வரைப்போல உலகத்திலுள்ள எல்லாப் பெண்களும் அடையமுடியாது. இத
னால் சந்ததி அற்றுப்போகும். ஆதலால் புத்தி விருத்தி இல்லாமலும் தேக
வலிமை இல்லாமலும் கேவலம் மிருகங்களைப் போலப் பிரஜாவிருத்தி ஒன்
றையே செய்தாலும் அதுவும் பிரபஞ்சத்தில் துக்கம் நிரம்பிவிடும். ஆதலால்
இவைகள் எல்லாவற்றிற்கும் சமமான பயிற்சியே தரவேண்டும். இனி எவ்
வித கல்வி மாதர்க்குத் தரவேண்டு மென்பதை ஆலோசிப்போம்.

## தேகப்பயிற்சி.

எவ்வித புருஷார்த்தமும் நாம் அடையவேண்டு மென்றாலும் தேகம்
நன்றாய் இருக்கவேண்டும். இந்தப் பிரபஞ்சத்தில் உயிரோடு இருப்ப
தற்கேவலிமை ஒருவாறுவேண்டும். இன்னும் சுகமாய் வாழவேண்டு மென்
றால் எவ்வளவோ வலிமை மிகுதியாய்வேண்டும். தேக வலிமையினாலேயே
தேகசௌக்கியமும் உண்டாகிறது. சௌக்கியத்தினாலேயே வாழ்க்கை இன்
பமாகிறது. நல்ல பசியை உடைய ஒருவனுக்குச் சாப்பிட்ட போஜனம் எவ்
வளவு சந்தோஷத்தைத் தருகிறது? எவ்வளவு பலத்தையும் வாழ்வில் உற்
சாகத்தையும் தருகிறது? இதல்லாமல் அஜீர்ணத்தினால் பசிமந்தமடைந்த
மனிதனுக்குத் தேகத்துன்பமும் அதற்கு நெருங்கின சம்பந்தத்தை உடைய
மனத்துன்பமும் உண்டாகின்றது. ஆதலால் மனிதனுடைய சந்தோஷத்
துக்கு முதற்காரணமானது தேகசௌக்கியமே. இதனை அடைவது கல்வி
யின் ஒரு முக்கிய பாகமாகக்கொள்வது அதிக அவசியம். இந்தத் தேகவலி
மையை அடைவதற்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் உடம்பு இயற்கையினால்
வழி வித்தியாசப்படும். ஆயினும் பொதுவாகத் தேகசௌக்கியத்தை அடை
வதற்கு சில விதிகள் உண்டு. அவையாவன:—சுத்தமான வீடுகளில் வாசஞ்
செய்வதும், நல்லகாற்றை சுவாசிப்பதும், நிர்மலமான ஜலத்தைக் குடிப்ப
தும், நல்ல ஜலத்தில் ஸ்நானம் செய்வதும், அழுக்கில்லாத ஆடைகளை உடுப்



பதும், போஜன பாத்திரங்களை உள்ளும் புறமும் நன்றாய் விளக்கிச் ஜாக்கிர
தையாய்ப் போஜனங்களைச்செய்து உண்டு நாள்முடிவில் அளவுக்கு மிஞ்சா
மல் படுத்து உறங்குவதுமே. பெண்களுக்கு இப்பொழுது மேற்சொல்லி
யவையோடு வீட்டுக்காரியங்களை ஓடியாடித் திரிந்து செய்தால் போதுமான
தேகவலிமையும் அதனால் உண்டான சௌக்கியமும் தப்பாமல்வரும். இது
வே அவர்களுக்குத் தகுந்த தேகப்பயிற்சியாமென்று நம்புகிறேன். இந்து
தேசத்தினுடைய சீதோஷ்ண ஸ்திதியை எடுத்துப் பார்த்தால் இதைவிட
கடினமானதேகப்பயிற்சி அவர்களுக்குச் சரிப்படாதென்று தோன்றுகிறது.

## புத்திபயிற்சி.

இனி புத்தியின் பயிற்சியைக் குறித்துவரும். தேகப்பயிற்சி பெண்
களுக்கு எவ்வளவு இன்றியமையாததோ புத்தி பயிற்சியும் அவ்வளவு
அவசியமே. பிரமாதமான சாஸ்திர பாண்டித்தியம் பெண்களுக்கு மிக உப
யோக மில்லாமல் போனபோதிலும் பொதுவாய் சொன்னவற்றையும் கேட்
டவற்றையும் ஆராய்வதற்கு முன்னமே நம்பாமல் இருப்பதற்கும், நானாவித
விஷயங்களை நிதானித்து யோசிப்பதற்கும், வேண்டிய புத்தி விசாலமும் கூர்
மையும் உண்டுபண்ணுவதற்குத் தகுந்த கல்வி கற்பது அவசியமே யாகும்.
குடும்பத்தில் புருஷன் பகற்காலமெல்லாம் தன்னுடைய உறவினர்களுடைய
சம்ரக்ஷணைக்காகவும், தன்னுடைய சம்ரக்ஷணைக்காகவும் ஓடித்திரிந்து பணம்
சம்பாதிப்பதும் அல்லது அது உண்டாகும் வருவாய்களைச் சேர்த்திருத்திக்
காப்பதுமாய்ப் பெரும்பாலும் இருப்பதனால், குடும்பத்தினுடைய ஆளுகை
பெண்களுக்கு இயற்கையாய் வருவது நிச்சயம். ஆதலால் வரும்படிக்குத்
தகுந்தசெலவு செய்வதற்கும், சம்பாதித்த பணத்தை மிகப்பிரயோஜனமாக
தற்காலத்துக்கும் பிற்காலத்துக்கும் உண்டாகும்படிச் செய்வதற்கும் வரவு
செலவு கணக்குகள் செம்மையாய் வைத்துக்கொள்ளவும், குழந்தைகள்
கல்விச்சாலையினின்று வீட்டுக்கு வந்து தங்கும் நேரங்களில் அவர்களுக்குக்
கல்விபோதனை செய்வதற்கும், கணவனுக்கும் தன்னுடைய கல்வியினால்
செய்யத்தகுந்த உதவிகளைக் காலத்துக்கு ஏற்றபடிச் செய்வதற்கும், முன்
னோர்களுடைய குண விசேஷத்தையும் புத்தி விசேஷத்தையும் அவர்களு
டைய சரித்திரத்தில் படித்து ஆனந்திப்பதற்கும் உபயோகமான கல்வியை
பெண்கள் அவசியம் அடையப் பிரயத்தினப் படவேண்டும். சங்கீதமும்,
கோலங்களும், சித்திரங்கள் அடங்கிய தையல்வேலையும், சாதாரண தையல்
வேலையும் அவர்கள் கற்கவேண்டும். இவை அவர்களுடையச் சொந்தமான
கல்விகள். இனி முன் சொன்ன இரண்டிற்கும் சாதனமாய்ப் பெரியோர்க
ளால் ஆதிகாலம் தொடங்கிப் புகழப்பட்டு வருகிற குணத்தைப்பற்றி சொல்
லுவோம்.

## குணப்பயிற்சி.

குணப்பயிற்சி மிக அழகிய ஆபரணமாகும். நல்லகுணத்தை அடைய
முயல்வது யாவற்கும் முக்கியமானதே. மாதர்களுக்கும் நல்ல குணத்தை
அடைவதற்குத் தகுந்தக் கல்வி கற்பிக்கவேண்டும். இடைவிடாத சிரத்தை
யோடு கூடின முயற்சியினால் நற்குணத்தை அடைவது நமக்குச் சாத்தி
யமே. நல்லகுணத்தை அடைவதற்குச் சாதனங்கள் உள்ளன. அவை
யாவன:—அந்தச் சாதனங்கள் புத்தபகவான் சொன்னதுபோல எட்டு
என்னலாம். இவற்றுள் எல்லாம் அடங்கும்.

(1) நல்லகோள்கை. தருமத்திற்குப் பயந்து குற்றத்தை விலக்கி நடத்தல். நம்முடைய ஐம்புலன்களை ஆளுதல் (2) நல்ல எண்ணம். உயிர்வாழ்வன வற்றிற்கெல்லாம் நன்மையைக் கோருதல், கொடுமையும் லோபமும் கோபமும் மடிந்துபோகச் செய்தல். (3) நல்லவசனம். நாம் பேசும் எல்லாவார்த்தையையும் சாந்தமாயும் வினயமாயும் ஒருவர் மனதையும் புண்படுத்தாமலும் பேசல், உண்மையையே சொல்லல். (4) நல்ல நடக்கை. பெருந்தகைமையோடும் ஜீவகாருண்யத்தோடும் பிறர்க்கு நன்மையே உண்டாக்கும்படியான காரியங்களையே செய்தல். (5) நல்ல சுத்தம். உள்ளும் புறமும் அழுக்கில்லாமல் இருத்தல் (6) நல்லதியானம். தன்னைவிட மேன்மையான நிலைமையைக் குறித்து மனனம்செய்தல், பகவத் பக்தி என்பது இதுவே. (7) நல்ல ஏகாந்தம். பிரபஞ்சத்தினுடைய பாதைகளான புயற்காற்று நடுவில் அகப்பட்டு நிற்பினும் மனதைக் கொஞ்சமும் சலிக்காமல் வைத்துக்கொள்ளல். (8) நல்ல ஆனந்தம். பஞ்ச இந்திரியங்களும் தனக்கு வசப்படாமல் திரிவதனால் உண்டான சிற்றின்பங்களிலிருந்து நீங்கி நிரதிசயமான பேரின்பத்தையே இந்திரியங்களை தன்வசப்படுத்தி அடைய முயல்வதும் இவ்விதமான விதிகளை சததமும் மறந்துபோகாமல் மனதில் ஊன்றி இடையூறுகளினால் மனதைத் தளராமல்வைத்து அநுஷ்டிப்பதனால் குணம் கிரமமாய்த் திருந்தும். பெருமைதங்கிய முன்னோர்களுடைய பெருந்தன்மையையும் இப்பொழுது வாழ்ந்துக்கொண்டிருக்கிற மேன்மக்களுடைய குணங்களையும் பார்த்து மகிழ்ந்து தானும் அவ்விதம் நிற்கவேண்டுமென்கிற எண்ணம் உண்டாவதும் இதற்கு ஒரு சாதனமே. அதாவது நல்ல சங்கமாகும். ஆதலால் முன்சொன்னவிதம் குணத்தைச் சீர்திருத்திக்கொள்வது பெண்களுக்கு அவசியமாகும். புருஷர்களுக்கும் இது அவசியமே. இவ்விதமாகக் குணந்திருந்தின மாதர்கள் பொருந்தியக் குடும்பத்திற்குப் "பெண்ணிற் பெறுந்தக்கயாவுள கற்பென்னுந் திண்மை உண்டாகப்பெறின்." இந்தக்குடும்பத்தில் ஒருவருக் கொருவர் மனது கலந்த ஒத்தாசை செய்வதும் சத்தியஞ் சொல்வதும் தருமம் செய்வதும் மிக பெருகும். இந்தக் குடும்பமே இன்பப் பெருக்கு உள்ளதாகும். இவ்விதமான கல்வி பயின்ற மாதர் தங்களுடைய வாழ்நாட்களை மிக இன்பமாகவும் பெருமையாகவும் கழிப்பதல்லாமல் தங்கள் கணவர் பெற்றோர் உறவினர் இவர்களுக்கும் இயைந்து நடந்து அவரவர்க்குத் தகுந்த கௌரவமும் தந்து விளங்குவார்கள். இவர்களுடைய குழந்தைகளும் தேகபலத்தினாலும், புத்தியினாலும், குணத்தினாலும் குலத்துக்கு ஓர் அலங்காரமான கொழுந்துகளாய் இருப்பதுமன்றித்தேசத்துக்கும் அதிகமாய் நன்மையைசெய்ய வல்லவர் ஆவார்கள். இதுவரையில் என் சிற்றறிவிற் கெட்டியமட்டும் எடுத்துக்கொண்ட விஷயத்தைப்பற்றி எழுதத்துணிந்தேன். பெரியவர்கள் குற்றங் குறைகளை நீக்கி வாசித்து ஆனந்திப்பார்களென்று பிரார்த்திக்கிறேன்.

உலகசகோதரி.



## மாதர்களுக்கோர் நன்மதி.

இவ்வுலகிலுள்ள பாக்கியங்களெவற்றுள்ளும் புத்திர பாக்கியமே மேலானதென, அறியாதார் யாவருமிலர். அப்பாக்கியத்தை யடைய அநேகர் கஷ்டப்படுவதைக் கண்ணுறுவதிலிருந்தே அதின் அருமையை அறியலாம். இப்பயனை அடையக்கருதி காசி, இராமேஸ்வரஞ்செல்பவர் அநேகர், நாகப்பிரதிஷ்டை சர்ப்பசாந்திசெய்பவர் பலர்; பிராமணபோஜன சமாராதனை பண்ணிவைப்போர் எத்தனையோஜனங்கள். கோயில், குளம், சத்திரங் கட்டிவைப்போர் அநேகர். அப்பாக்கியத்தில் விசேஷமில்லாவிட்டால் ஜனங்கள் இத்தனைச் சிரமப்படுவார்களா?

"பொன்னுடையரேனு புகழுடையரேனுமற்
றென்னுடையரேனு முடையரோ—வின்னடிசிற்
புக்களையுந் தாமரைக் கைப்பூநாறுஞ் செய்பவாய்
மக்களை யிங்கில்லாதவர்."

ஆகையால் இவ்வுலகின்கண் எது இருந்துதான் என்ன பிரயோஜனம்? மகிழ்ச்சியமைந்த மக்களில்லாதவர்க்கு மனைவாழ்வினினிமையென்னாகும்? மக்களிலாதோர் மனை வாசனைப் புஷ்பங்களில்லாச் சோலையே, தாமரையில்லாப் பொய்கையே சந்திரனில்லா விசும்பே. சேயில்லாச் செல்வம் மணமற்ற மாலையே, நல்லோரில்லா நகரமே;

"பெறுமவற்றுள்யா மறிவதில்லை யறிவறிந்த
மக்கப் பேறல்லபிற." என்றார் நாயனாரும்.

ஆனால் மக்கட்பேறு இருந்துதான் என்னசெய்வது? அறிவிலா மூடர்களாய், புத்திரர்களிருப்பார்களேயாகில் மனதுக்கு சந்தோஷம் உண்டாகுமா? அம்மக்களும் அறிவிற்சிறந்து குணத்தில் மேம்பட்டிருந்தாலல்லவோ நாமும் சந்தோஷமடைய ஏதுவாகும்.

நமது மக்களை சிறந்தோர்களாக்குவது நம்மைச் சார்ந்ததே. அவர்கள் நல்லோர்களாவதும் தீயோர்களாவதும் நாம் அவர்களை வளர்த்த மாதிரியைப்பொருந்தியதே. "அந்தப்பிள்ளை அப்படி வளர்த்திருக்கா" என்ற வாக்கியம் உலக வசனமாயிருப்பதை யாவரு மறிவார்கள். அவ்வாக்கியத்தின்பொருளென்ன? குழந்தையைச் சீராக்குவதும் பாழாக்குவதும் நமது வசத்திலிருக்கிறதெனப்பொருள் கொள்ளவில்லையா? குழந்தைப்பருவத்தில் எவ்வண்ணம் அவர்களுக்கு போதிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வண்ணந்தான் அவர்கள் நடிக்கிறார்கள் என்று கருத்துக்கொள்ள வில்லையா?

மேலும், பொதுவாய் மாந்தர்கள் ஆடுகளைப்போல் ஒருவர் செய்த செய்கையையே பின்பற்றத்தயாராகவிருக்கிறார்கள். அச்செய்கை நன்மையா தீமையாவென கவனிக்கக் காலஞ் செலவழிக்கிறதில்லை; இவ்வண்ணமிருக்க, குழந்தைகள் விஷயத்தையோ சொல்லவேண்டுவதில்லை. செய்கைகள் சரியா

தப்பிதமாவென்று ஊகித்தறிவதற்குப் போதுமானசக்தி அவர்களிடமிருப்பதரிது. ஆகையால் அவர்களைச் சரியானவழிக்குக்கொண்டு வருவது நம்மைச்சார்ந்ததில்லையா? "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" என்ற வண்ணம் இளமைப்பருவத்தில் மனதில் பதிகின்றவைகள் வெகுகாலம்வரைமனதைவிட்டு நீங்காது. "தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றும் பெரியோர்கள் சொல்வது வழக்கம்.

மேலும், உற்றுநோக்குவாம். பல்லக்குக்கு மூங்கிலைவளைக்கவேண்டுமானால் மூங்கில் இளசாயிருக்கும் பொழுதே வளைக்கப்படவேண்டும். நகத்தால் கிள்ளியெறியக்கூடியதை வெகுகாலத்துக்குப்பின் கோடலியால் அசைக்கமுடியாது. குழந்தைப்பருவத்திலேயே துஷ்டத்தனத்தைக்கண்டிக்காது விட்டுவிட்டால், பின் அதைக்களைந்தெறிவது கஷ்டம். குழந்தைகளின் மனத்தை எவ்வண்ணம் வேண்டுமானாலும் திருப்பலாம். உதாரணமாக பட்சணத்துக் கழுதுகொண்டிருக்கிற குழந்தையை விளையாட்டுசாமான்களால் எதற்கழுதோமென்பதறியாது மறந்துபோகும் வண்ணஞ் செய்யலாம். வயது சென்றவர்களை அவ்வண்ணஞ் செய்தலாகாது. ஆகையால் விதைப்பதற்குத் தகுந்த பருவம் குழந்தைப்பருவமே.

சகோதரிகளே, இவ்வளவுதூரம் எதற்குச்சொல்லவந்தேனென்றால், பிள்ளைகள் உங்களாலேயே சீராக்கப்படவேண்டியிருக்கிறது. நீங்கள்தான், பிள்ளைவளர்ப்பில் அதிக கவனஞ் செலுத்தவேண்டியவர்களாகிறீர்கள். உங்களில் ஒவ்வொருவரும் குழந்தைகளுக்குத் தாயாராக ஆகிறீர்களெனக் கூறலாம். சற்று உற்றுநோக்குவோமேயாகில் இவ்விஷயம் புலப்படும். "எனக்குக் குழந்தையில்லையே" என்று வருத்தப்படுகிறவர்கள் அவ்வண்ணம் வருத்தப்பட வேண்டுவதில்லையென வெளியாகும். இவ்வுலகின்கண் தாயில்லாது வருந்துங்குழவிகள் எத்தனைபேர்? உற்றோர் உறவினர்களுக்குள்ளேயே இவ்வகைக்கான குழந்தைகள் எத்தனை இருக்கின்றன. இவ்வண்ணம் பார்க்கின் குழந்தைகள் அதிகமாயும் தாய்மார்கள் சொற்பமாயுமிருப்பதாகப் புலப்படும். சகோதரிகளே, உங்களில் எத்தனை பேர்கள் குழந்தையில்லையென வருந்தி புண்பட்டமனத்துடன் இறந்திருக்கிறார்கள். அவர்கள் ஏன் தாயற்ற குழந்தைகளுக்குத் தாயாய் இருந்திருத்தல் கூடாது. அக்குழந்தைகளை ஏன் அவர்கள் வளர்த்திருத்தல் கூடாது. போனதுபோகட்டும்; இனிமேலாவது அவ்வண்ணமிராதிருக்கமுயலுங்கள். மேலும் பாருங்கள், உற்றுநோக்குமளவில் நாமெல்லோரும் ஒருவருக்கொருவர்சொந்தமென்றே ஏற்படும். உங்களில் ஒவ்வொருவரும் இரண்டுபாட்டனார், பாட்டிகள் இருப்பதை அல்லது இருந்திருப்பதை அறிவீர்கள். எட்டாவது பாட்டி, தாத்தாமார்களைப்பற்றி உங்களிலே யாவரேனும் விஜாரித்தறிந்ததுண்டா? அவ்வண்ணம்விஜாரித்து அவர்கள் தமயன், தம்பி, அக்கா, தங்கைமார்களைப்பற்றி கவனியுங்கள். நமக்குத்தெரியாத உறவினர்கள் அநேகர் கிடைப்பார்கள். ஆகையால், இயற்கையில் பந்துத்துவம் ஏற்பட்டிருக்க அறியாது மதிமயங்கி, சொந்தக்காரர்களை அந்நியர்களென எண்ணியிருக்கிறோம். மேலும் பார்க்கலாம். இப்பொழுது காசியிலுள்ள ஒருவனுக்கும், இராமேஸ்வரத்திலுள்ள மற்றொருவனுக்கும் சம்மந்தமேற்படுவதை நாம் பார்த்துக் கொண்டே இருக்கிறோம். இன்றையதினம் அந்நியனாக இருக்கப்பட்டஒருவன் நாளையதினம் நமக்கு உறவினனாக ஆய்விடுகிறான். நாம் சம்மந்தம்செய்துகொள்ளமுடியாமற் போனபோதிலும் நமது பிள்ளைகள் அன்னியர்களின் பிள்ளைகளுடன் சம்மந்தம் செய்துகொள்ள நேரிடினும் நேரலாம். இவ்வண்ணம் நம்மவர்களெல்லோரும் உறவினர்களாகின்றனர்கள். தாயற்ற குழந்தைகளும் உறவினர்கள் குழந்தைகளே. அவைகள் நம்முடைய குழந்தைகள்போலவே. நாமும் வளர்க்க பாத்தியப்பட்டவர்களே. அடுத்த சஞ்சிகையில், பிள்ளைகள் யாவர்? அவர்களைப் போற்றுவதெங்ஙனம் என்றவிஷயம் எடுத்தாளப்படும்.



எஸ். என். ஸ்ரீனிவாசன்.

# உருக்குமணி நாடகம்.

## அங்கம் 3 களம் 1.

இடம்:—ராணியாரின் மாளிகை.

[உருக்குமணி, வனமாலிகா, கமலா, ஜயோத்சனா வந்தார்கள்.]

உருக்குமணி:—சகோதரிகளே! வாங்கோ, இதோ நல்ல இடத்தில் நாமெல்லோரும் உட்காரலாம்.

வனமாலிகா:—ஆம்; அவ்விதமே செய்வோம்.

[யாவரும் மாளிகையின்மேல் ஒருமேடையில் உட்கார்ந்தார்கள்.]

வனமாலிகா:—உருக்குமணி! பிராமணர் வந்தாரா?

உருக்குமணி:—அந்த சங்கதியை நீ ஏன் கிளறுகிறாய்? இன்னும் வரவில்லை, ஏன்வரவில்லையோ காரணமும் தெரியவில்லை. எங்கே கிருஷ்ணன் வரமாட்டேனென்று சொல்லிவிட்டாரோ அதுவும் சந்தேகமாகத்தானிருக்கிறது.

வனமாலிகா:—சிசுபாலன், ஜராசந்தன், இன்னும் மற்ற அரசர்களெல்லாரும் வந்துவிட்டார்களம்மா, கிருஷ்ணன்மாத்திரம் வராததற்குக்காரணமென்ன! அவர் இவர்களுக்கு இளைத்தவரல்லவே! பெருத்த சேனைகளை யுடையவர். மகாபராக்கிரம சாலி. தாமதம் என்ன? மேலும் அவருக்கும் விவாகப் பத்திரிகையும் அனுப்பி யிருக்கிறதாமே.

உருக்குமணி:—"இன்னும் வரக்காணேனே. மன்னன் வேணுகோபாலன் என்ன நினைத்திருக்கிறாரோ ஸகி."

கமலா:—அவர் வரும்பொழுது அவர்கூட சேனைகள் எப்பொழுதும் வரும், ஆகையால் தாமதமாகக்கூடும். இப்பொழுது வந்துவிடுவார்.

(உடனே, ஒரு தாதிவந்து அம்மா! தங்களை மகாராஜாவும், மகாராணியாரும், வரச்சொன்னார்கள் என்றாள்).

உருக்குமணி:—எல்லா இராஜாக்களும் வந்துவிட்டார்களா?

தாதி:—ஆம்! தாயாரே, எல்லாரும் வந்துவிட்டார்கள். தங்களுக்கு மங்களஸ்நாநம் செய்துவைத்து ஸ்ரீபார்வதிகோயிலுக்கு அழைத்துப்போக ஏற்பாடு நடந்துவருகிறது.

வனமாலிகா:—கிருஷ்ணன் வந்துவிட்டாரா என்று சொன்னவுடன் பிராமணர் உள்ளேவந்து அம்மா உருக்குமணி! ஸ்ரீகிருஷ்ணன் வந்துவிட்டார். உன் இஷ்டப்படியே சகலமும் நடக்கும் நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் என்றார்.

[உருக்குமணி அப்பிராமணருக்கு வெகுமதி அளித்துவிட்டு நமஸ்காரம் செய்தபின் தோழிகளுடன் உட்சென்றாள்).

களம் 2.

குண்டினபுரம் அரண்மனை.

[பீஷ்ம மகாராஜன், உருக்குமி, மந்திரிகள், புரபுக்கள் அரண்மனைக்குள் பிரவேசித்தல].

பீஷ்ம மகாராஜன்:—ஓமந்திரி! நமது உருக்குமணியின் விவாகத்திற்காக வருபவர்களுக்குத் தகுந்த அரண்மனைகளை அலங்கரித் திருக்கின்றீர்களா? அவர்களுக்கு வேண்டியகுதிரை, ஆள்கள் சாமான்கள், முதலியவைகளும் போதுமானதா யிருக்கின்றனவா? மற்றகாரியம் யாவற்றும் தயாரா யிருக்கின்றனவா?

மந்திரி:—மகாபிரபோ! எல்லாம் தயாரா யிருக்கின்றன.

[சிசுபாலன், ஜராசந்தன் முதலிய இராஜ குமாரர்களும் வந்திருக்கிறார்கள், இவர்களுக்கு இளவரசராகிய உருக்குமி நல்வரவு கூறி தக்க ஆசனங்களையும் அளித்தார்].

மந்திரி:—ஓ! மகா பிரபுவே! ஸ்ரீகிருஷ்ண பகவானும் அவர் சகோதரர்களாகிய பலராமரும், சாத்தியகியும் பலத்த யாதவக் கூட்டங்களுடன் வந்துகொண் டிருக்கிறார்கள்.

பீஷ்மன்:—ஆ! ஆ!! ஸ்ரீகிருஷ்ணனுக்கு நமது புத்திரியை விவாகம் செய்துவைக்க முடியாவிடினும் அவரே நமது குழந்தையின் விவாகத்திற்கு வருகிறபடியால் நாமே நேரிற்சென்று அவரைப் பூசித்து, அவருக்கு அர்க்கியபாத்தியம் முதலியவைகளையும் அளித்து நல்வரவு கூறுவோம்.

[பீஷ்மன் தனது மனதில் குமாரத்தியை ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மணம் புரிந்துவைக்க முடியாததைப்பற்றி மிகவருந்தினார். சிசுபாலனுக்கு என் குமாரத்தியை எப்படி விவாகம் செய்துவைக்கிறதென்றும் துக்கித்தார்]

[ஸ்ரீகிருஷ்ணனையும் அவர் சகோதரர்கள், யாதவர்கள் முதலியவர்களையும் பீஷ்மமகாராஜா மங்களவாத்தியத்துடன் எதிர்கொண்டுபோய் அரண்மனைக்கு அழைத்துவந்து அவர்களுக்குத் தகுந்த இடத்தைக்கொடுத்து உபசரித்தார்]

பீஷ்மன்:—மந்திரி! எல்லா ராஜாக்களும் வந்துவிட்டார்களல்லவா? நாம் செய்யவேண்டிய தேதாகிலும் இன்னும் பாக்கியுண்டா?

மந்திரி:—மகாராஜ்! யாவரும் வந்துவிட்டார்கள்; இனி விவாகமுர்த்தம் செய்யவேண்டியதுதான் பாக்கி.

பீஷ்மன்:—சந்தோஷம் நமது குழந்தை பட்டணத்திற்கு வெளியிலுள்ள ஸ்ரீபார்வதி ஆலயத்திற்குப்போய் ஸ்ரீபார்வதியை ஸ்தோத்திரம் செய்



துவிட்டு வரட்டும், முகூர்த்த காலமும் சமீபித்துவிட்டது. சைனியங்கள் ஆயுதபாணிகளாய் நமது அரண்மனையிலிருந்து ஸ்ரீ பார்வதி ஆலயம்வரையில் இருபக்கமும் நிற்கிறார்களா? சேனைத் தலைவரும் ஜாக்கிரதையா யிருக்கட்டும். நமது உருக்குமணி பந்துமித்திரர்களான எல்லா மாதர்களுடனும் ஆலயத்திற்குச் சென்று வரும்படி சீக்கிரம் ஏற்பாடுசெய்.

மந்திரி:—அவ்விதமே செய்கின்றேன், மகாராஜ்!

[மந்திரி மற்ற ஏற்பாடுகள் செய்ய சென்றபின் பீஷ்மர் தமது குழந்தையைப் பார்க்கச் சென்றார்].

பண்டிதர்.

# *சுகாதார விஷயங்கள்.

காரபதார்த்தங்கள் இரத்தக்குறைவை யுண்டாக்குகின்றன.

கடுகு மிளகு முதலிய வாசனை பதார்த்தங்கள் அதிகமாய்ச் சேர்ந்த உணவை உபயோகித்தால் அவை ஜீரணக் கருவிகளில் உறுத்தலுண்டாக்கி அவற்றின் வேலைகளைக் கெடுத்து விடுகின்றன. வாசனை கட்டிய உணவுகளை உபயோகித்தல் ஜீரண சக்திக் கடுத்ததல்ல. சாதாரணமான நல்ல போஜனத்தைவிட்டு இவ்விதம் வாசனைகட்டிய விலையுயர்ந்த உணவுகளை உபயோகித்து வரும் வழக்கத்தைப் பரிகரிக்க வேண்டும் என்பதாக லான்செட் பத்திரிகை கூறுகின்றது. இவ்விதமான காரமுள்ளதும் வாசனை யுள்ளதுமான பதார்த்தங்கள் ஜீரண சக்தியைக் கெடுத்து அதிக தாகத்தை உண்டுபண்ணுவதாலே கூடிய மட்டிலும் நீக்கப்படுதல் நன்மையைத் தரும்.

டீ, காபி என்னும் பானங்களைப்பற்றி ஒருபெரியவர் எழுதுவது.

சர்மைகேல் பாஸ்டர் என்னும் பெரிய சாஸ்திரிக்ஞர் கல்விச் சங்கதாருக்குத் தாம் சுகவழிப் பயிற்சியைப் பற்றி எழுதிய நிரூபத்தில் டீ. காபி என்னும் பானங்களைப் பற்றிய சில விஷயங்களை வெளியிட்டிருக்கின்றார். இந்த இரண்டு பானங்களிலும் முறையே உள்ள தீயின் காபியின் என்னும் இரண்டு முக்கிய அம்சங்களும் மனிதர்கள் அதிகமாக உபயோகித்தால் உண்டாகும் குணமானது சாராயத்தை உபயோகிப்பதினா லுண்டாகும் குணங்களைப் போலல்லா திருந்தாலும் இவை "வெறி" அல்லது 'போதை' அல்லது "மயக்கம்" உண்டாக்கும் வஸ்துக்கள் என்று சொல்லக் கூடியவையாயிருக்கின்றன. ஆனால் பிரிடிஷ் மெடிகல் ஜர்னல் என்னும் பத்திரிகையானது மேலே கூறியபடி பாஸ்டர் டீயையும் சாராயத்தையும் ஒற்றுமைப்படுத்தி யுரைப்பதானது சரியல்ல வென்று கூறுகின்றது. நாம் மிஸ்டர் பாஸ்டர் சொல்வது சரியென்றே சொல்லவேண்டும். ஆங்கிலேயர்களில் எண்ணிறந்த குடும்பங்களில் உபயோகப் பட்டுவரும் கனமான டீக்குழம்பிற்கும், பிரெஞ்சுக்காரர் உபயோகிக்கும் லகுவான சாராயத்திற்கும் வித்தியாசம் அதிகம் இல்லை. இவற்றின் பயனைப் பார்க்குமிடத்து மேற்கூறிய இரண்டில் டீபானமே ஜீரணக் கருவிகளில் மிகவும் அதிகமான சீர் கேடுகளை உண்டாக்குவதா யிருக்கிறது. டீக்குடிப்பவர்கள் அதி சீக்கிரத்தில் அந்தப் பானத்தினிடத்து அளவற்ற ஆசை கொண்டவர்களாக ஆய்விடுவதும்

* Specially written to our Magazine by Mr. C. K. Subramania Mudaliar, B. A.

அவர்களுக்கு அதைவிட் டொழிப்ப தென்றால் கஷ்ட சாத்தியமாக இருப்
பதும் ஆகிய இவையே டியானது லாகிரித் தன்மையை யுடையது என்றும்
இயற்கை விரோதமான இச்சையை உண்டாக்குகிற தென்றும் தெளிவாய்
விளக்குகின்றன.

காபியும் டீயைப்போன்றதே. ஆங்கிலேயர்களிட மிருந்து நம்மவர் பார்
த்துப் படித்துக்கொண்ட கெட்ட வழக்கங்களில் இவற்றைப் பானம் செய்
யும் வழக்கமு மொன்று. நமது பெரிய நகரங்களில் மட்டுமல்ல; சிறு கிரா
மங்களிலும் இக்கொடிய வழக்கம் பரவுவதாயிற்று. வைத்தியத்திலும்
உடற்கூற்று நூல்களிலும் வல்லவர்களான மேற்றிசைப் பண்டிதர்களே
இந்த இரண்டுபானங்களும் கொடியன என்று அபிப்பிராயப் படுகிறார்கள்
என்பதை அறிந்து இனியாவது நம்மவர் இந்தக் கொடியவழக்கங்களை விட்
டொழிக்க முயலவேண்டும்.

### உடல் பருத்திருத்தல் தேகம் கெட்டுவருகின்றதற் கறிகுறியாம்.

நமது தேகத்தில் வயிறு, கை, கால், முதலிய அவயவங்கள் நீரேறிப்
போனதுபோல மிகப் பருத்திருந்தால் அது தேகத்திற்கு அழகு கொடுப்
பதாகவும் அப்பேர்ப்பட்ட உடம்பை யுடையவன் மிகவும் சௌக்கியமான
நிலையிலிருப்பதாகவும் நம்மவரிற் பெரும்பாலார் எண்ணுகிறார்கள். இது
முழுவதும் தப்பபிப்பிராயம். ஒரு குடும்பத்தில் சாதாரணமாகப் பலர் அள
வுக்கு மீறி பருத்தவர்களா யிருந்தால் அவர்கள் உடற்கூறுகள் ஜீரணாஸ்தி
யடைந்து வருதல் அந்த குடும்பத்தில் பரம்பரையாக வருகின்ற தென்ப
தைக் காட்ட இதுவே முக்கிய அறிகுறி என்பதாக ப்ரேக் நகரத்திலுள்ள
ஈஹீன்ரிச் ரிஷ் என்னும் பண்டிதர் கூறுகின்றார். அவர் இதுவிஷயமாய் மிக
வும் பருத்த உடல்களை யுடைய 448 பேரை மிகவும் கவனமாய்ப் பரிசோ
தித்துப் பார்த்துவந்தார். அவர் பார்த்த மட்டில் யார்யார்க்குச் சிறுவயதிலே
தேகத்தில் மிகுந்த கொழுப்பு நிறைந்திருந்ததோ அவரவருடைய உடற்கூறு
களும் கெட்டுவந்தன என்பதைக் குறிக்க அறிகுறிகள் வெளிப்படையாகத்
தெரிந்தன. ரிஷ் பண்டிதர் எழுதிய விஷயங்களைப் பற்றி லான்ஸெட் பத்திரி
கையானது பின்வருமாறு கூறுகின்றது:—சாதாரணமாக உடல் பெருத்துக்
கொழுக்கும் தன்மையானது அரை வசிசை ஜனங்களில் பரம்பரையாக வரு
கின்றதென்று சொல்லப்படுகின்றது. ரிஷ்பண்டிதர் ஆராய்ச்சிசெய்து வெளி
யிட்டிருக்கும் விவரமும் இதனோ டொத்திருக்கின்றது. தேகத்தில் எந்தெ
ந்த பாகங்களில் கொழுப்பு அதிகமாகச் சேர்ந்திருக்கின்றதோ அவையே
கெட்டுவருகின்றன என்பதாகவும் தெரியவருகின்றது. மேலும் புத்திமாருட்
டமும் மூளை சம்பந்தமான பைத்தியம் முதலிய நோயுடையார்களுக்குக்
கொழுப்பு உடம்பில் மிகுந்து சேர்ந்து வருகின்ற தென்பதும் தெரிகின்
றது.

ஒருவனுடைய தேகத்தில் கொழுப்பு அதிகரித்துப் பெருக்க ஆரம்பித்
தால் அது தேகத்திற்கு நன்மையான தென்னும் அபிப்பிராயத்தை விட்டு
நம்மவர்கள் அவ்விதம் கொழுப்பு அதிகரித்தலைப் பரிகரித்தலுக்கு வழி
தேடவேண்டிய தவசியம்.

### படுக்கை வித்தியாசத்தினாலே குழந்தைகளிறத்தல்.

சமீபகாலத்தில் மான்செஸ்டர் நகரத்தில் பிரேத விசாரணைக் கர்த்தர்
ஸ்வாச பந்தத்தினாலே இறந்த 4 குழந்தைகளின் பிரேத விசாரணை நடத்த



வேண்டி வந்த தென்று லான்செட் பத்திரிகைகூறுகின்றது. தாயார்களுடைய
ஒரே படுக்கையில் குழந்தைகள் படுத்துறங்குகின்ற காரணத்தினாலேயே
மான்செஸ்டர் நகரமொன்றிலேயே வருஷத்திற்கு 100 குழந்தைகள் வரை
யில் இறக்கின்றதென்று தெரியவருகிறது. இதுபோலவே நம் நாட்டிலும்
எண்ணிறந்த குழந்தைகள் இறக்கின்றன என்பதை நாம் சொல்லவேண்டிய
தில்லை. நம்முடைய கணக்குக்குமட்டும் அவை வருகின்றதில்லை. இன்ன கார
ணத்தினால் அவை இறக்கின்றன என்பதை அறிந்து கொள்ளப் போது
மான கல்வியறிவு நம்மவருக்கின்னம் வரவில்லை. இந்த கெடுதியை நாம் சுல
சாய் தடுத்துவிடக் கூடும். இரண்டு பெஞ்சுகளை இணைத்துப் போட்டாவது
அல்லது இரண்டு பெட்டிகளைவைத்து அவைகளின்மேல் பலகைகளைப்
போட்டாவது தரை மட்டத்திற்கு சிறிது உயரத்தில் இருக்கக் கூடியதாக
குழந்தைகளுக்கு மிகவும்சுகத்திற்கேதுவான படுக்கையைலேசாக எளியவர்
களும் அமைத்துக்கொள்ளுதல் கூடும். அப்படித் தனித்து அமைக்கப்பட்ட
படுக்கையில் சயனிக்கும்போது குழந்தைகள் நாம் மேலே குறிப்பிட்ட
அபாயத்திற்கு உள்ளாகாதது மட்டுமல்ல; தாய்மாருடன் உறங்கும்போது
இருக்கும் தேகஉஷ்ணம் மிகுந்த சயனத்தில் இருப்பதைவிட பரிசுத்தமான
காற்றையும் சுவாசிப்பதற் கேது உண்டாகும். நம் தேசத்துத் தாய்மார்கள்
குழந்தைகளைத் தம்முடனேயே ஒரே படுக்கையில் உறங்கவைப்பதை விட்டு
தம் படுக்கைக்குச் சிறிது தூரத்தில் அவைக்கென்று தனியே $1\text{-}1\frac{1}{2}$ அடி
உயரத்தில் சிறிய படுக்கை ஒன்று அமைத்து அதில் தம் அருமைக் குழந்
தைகளைக் கண்வளர வைத்துவருவார்களானால் அவர்கள் தங்களுக்கு மட்டு
மல்ல நம் நாட்டிற்கே பெரிய நன்மையைச் செய்கின்றவ ராவார்கள்.

சி. கே. சுப்பிரமணிய முதலியார், பி-ஏ.

(இன்னும் வரும்.)

## இலக்ஷ்மி.

அது மாலைகாலம். பவபுரத்துச் சூரியன் உயர்ந்து பறந்து வளர்ந்துள்ள
பனை, தென்னைமரங்களிடையும், செவ்வானத்திடையும் மெல்ல மெல்ல திரு
டன்போல் மறைந்து கொண்டிருந்தான். அவனிடமிருந்து புறப்படும் கிரண
ங்கள் மஞ்சள் நிறமுடையனவா யிருப்பதுடன் பச்சையாயும் மஞ்சளாயுமிரு
க்கும் ஓலைகள் மீது வீழ்ந்து பிரதி பலிப்பதால் உண்டாகிய வெளிச்சம் ரம்
மியமாயிருந்தது. அவன் தன் காதலியாகிய பூமியை விட்டுப் பிரிவதில் மிக்
க துக்காக்கிரந்தனாய்த் தயங்கித் தயங்கி யோசிப்பவன்போல் தோற்றினான்.
சில குடிசைக்கூட்டங்கள் இருந்தன. இது பறச்
தென்னந்தோப்பு தாண்டி சில குடிசைக்கூட்டங்கள்போலும், காருண்யமு
சேரி. இக்குடிசைகளின் மீது பரிதாபங்கொண்டவன் உட்பாகங்களை விளங்கச்செய்
டையவன் போலும், அவன் குடிசைகளின் அசங்கியங்களும் ஒழுங்கின்மையும் புலப்ப
யாது (ஏனெனில் அவைகளின் செலுத்தினான்; அவன் தயாளகு
டும்) கூரைகளின் மீதே தன்னொளியைச் சிறிது காலத்திற்குள்
ணம் அருமையான தன்று; ஏனெனில் காலமுடிவை உத்தேசித்து தயாளகுண
அடைய விருக்கும் அவன் தான் தன்னிலைமையை தென்னமரங்கள் நிறைந்துள்ள
முடையவனாயிரான்? இருபக்கங்களிலும் சென்றால் கற்பூரமரச்சோலை யொன்
ஒத்தையடிப்பாதையில் கொஞ்சதூரம்

றை அடையலாம். இதற்கப்பாலுள்ளது பவபுர கிராமம். புரத்திலிருந்து சோலைக்குச்செல்லும் வழியில் சோலைக்கு 10 மார் தூரத்துக் கிப்பால் பெரிய கிணர் ஒன்றுளது. ஊரிலுள்ள ஜனங்கள் குடி ஜலத்துக்காக இங்கு தான் வருவது. காலை வேளைகளில் 4½-மணி முதல் 7½-மணி வரையில் பிராமண ஸ்திரீகளும் சூத்திரஸ்திரீகளும் இங்கு கூடுவதுண்டு. வெள்ளிக்கிழமையன்று சில ஸ்திரீகள் தங்கள் குடங்களையும் தோண்டிகளையும் தங்கம்போல் துலக்கிக்கொண்டு சம்பாஷித்துக்கொண்டும், நகைத்துக்கொண்டும் ஒரு புறமிருக்க, கிணற்றங் கரையண்டை சிலர் ஜலம் இழுத்துக்கொண்டும், ஜலம் நிறைந்த குடங்களை தலைக்கேத்திக்கொண்டும், இடுப்பில் வைத்துக்கொண்டும் போய்க்கொண்டும், போகவும் சித்தமாயிருந்தார்கள். இக்கிணற்றங்கரையில் பத்திரிகை நிருபர் ஒருவர் வந்து சில காலமிருந்தால் பல விஷயங்களைக்குறித்துக்கொள்ளலாம். இங்கு பிரஸ்தாபிக்கப்படாத விஷயங்கள் இருக்கவே இருக்காது. மாமியார் கொலுவிருக்கை, நாத்தனார் அரசாட்சி, மாட்டுப்பெண் அடிமைத்தொழில் முதலியன பேசப்படும் விஷயங்களில் கிரமமானவை. விசேஷமாக அன்று அந்த இடத்தில் சந்தோஷப் பேச்சுகள் நிறைந்து பொலிந்தன. அங்கிருப்பவர்களின் ஒவ்வொருவருடைய முகமும் அல்லித்தாமரைமலர்போல் மலர்ந்திருந்தது.

சந்தோஷமில்லாதவர்கள் கூட இவ்விடத்திற்கு வந்தால் தங்கள் கவலை நீங்கப்பெறுவார்கள். அவரவர்கள் தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு. இருள் சூழ்ந்து வருவதால் பெரும்பாலர் வீடுநோக்கிச் செல்வாராயினர். சிலரிருந்தார்கள். 5,6 பேர் இருக்கும். "பங்கஜம்! நீ எனத்திற்காக இன்னும் காத்துக்கொண்டிருக்கிறாய்" என்று பார்வதி ஒரு ஸ்திரீயைக் கேட்டாள். "நான் லக்ஷ்மிக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று பங்கஜம் சந்தோஷமாயும் இனிய முகத்துடனும் நயந்த குரலுடனும் மறுமொழி பகன்றனள்.

பார்வதி "ஆமாம், ஆமாம், நீ எப்பொழுதும் அவளோடு கூடத்தானே இருக்கிறாய். நீ எங்களை லக்ஷியம் பண்ணுகிறதில்லை. அவளிடத்தில் என்ன தான் இருக்கோ தெரியவில்லை. அவளிடத்தில் அவ்வளவு பிரீதியாயிருக்கிறாய், அவளென்ன அழகா? அந்தமா? பரம ஏழை. அவலக்ஷணம் நிறைந்திருக்கிறது. எனக்கு அவளைக்கண்டால் பிடிக்கிறதேயில்லை! ஏனென்றால் ஒரு காலத்தில் அவள் குடும்பத்தார்கள் சம்பத்துடையவர்களாயிருந்தார்கள், உண்மையாய் அவள் நம்மோடு பேசத்தகுதியுடையவள் அல்ல. அவளுக்கு புத்தி கற்பிக்கவேணுமென்று இருக்கேன்."

பங்கஜம்:—"நீ அப்படிபேசுவது சற்றும்சரியன்று. லக்ஷ்மி என் அத்யந்த தோழி. மிகவும்நல்லபெண். அவள் கர்வம்கொண்டவள் அல்ல. நீ அப்படி நினைப்பது தப்பு. அவள் மிக்கசங்கோஜி. நீ அவளுடன் பேசினால் தானே அவள் உன்னுடன் பேசுவள். மேலும் அவளுக்கு ஒரு பெருங்குறை. அவள் கணவன்——.

பார்வதி:—"ரொம்பசரி எனக்கு தெரியும். அவளுக்கு தகுந்த கணவன்தான். அவன் அவாள் குடும்பத்துக்கே ஒரு கோடரிக்காம்பு. என் மாமனார்——.

பங்கஜம்:—லக்ஷ்மியிடத்தில் உனக்கு அவ்வளவு அருவெருப்பும், துவேஷமு மிருக்கக் காரணமே யில்லை. ஒருவேளை அவள் உன்னைவிட நல்ல



ஸ்திதியில் இருப்பதாலும் கொஞ்ச காலத்திற்கு முன்பு ரொம்ப சம்பத்துள்ளவர்களாய் இருந்ததாலும், அவ்வளவுகர்வம் கொண்டிருப்பதற்கு காரணமே யில்லையே."

பார்வதி:—"எனது மாமனார் லக்ஷ்மியுடன் அவள் புருஷன் கெட்டவனாய் யிருப்பதால் சேரவேண்டாம் என்று கூறியுள்ளார்.

"நீயும் அவளும் உங்களைப் பற்றியே அவமானப் படவேண்டும். அவள் கணவன் கெட்டகுணங்கள் அவளை என்ன பண்ணும்" "பேசாதிருங்கடி வாயை மூடிக்கிங்கோ அதோ லக்ஷ்மி வராள்" என்று அலமேலு சொன்னாள்.

நிச்சயமாகவே கொலுசு சப்தமும், மெட்டி சப்தமும், கேட்டது. சில நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு ஸ்திரீ கிணற்றை யடைந்து மவுனமாய் கிணற்றிலிருந்து ஜல மிழுத்தாள், அங்கிருந்த அலமேலு பார்வதி முதலானவர்கள் திக்பிரமை கொண்டவர்கள் போல் சற்றுநேரம் வாயடைத்துக்கொண்டு நின்று பங்கஜம் லக்ஷ்மி இருவர்களை மட்டும் விட்டு விட்டு வீடுநோக்கி செல்வராயினர்.

பங்கஜம்:—லக்ஷ்மியின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு புன்சிரிப்புடனும் சந்தோஷத்துடனும், "லக்ஷ்மீ! வீட்டு சமாசாரமென்ன"

"அது என்ன சொல்லணுமா என்ன?" இருக்கிற மாதிரிதான் எல்லாக் குழப்பமும், கலக்கமும் தான். மாமனார் அவாளுடன் பேசுகிறதில்லை. அவாளும் வீட்டுக்கு ஆடிக்கொருதரம் அம்மாவாசைக் கொருதரம் வரா. இன்று தேதி (15) பதினைந்து, இன்னும் சம்பளம் கொண்டுவரல்லை. நாங்கெல்லாம் இராப்பகல் பட்டினி யிருக்கிறோம்.

"அடாபாவி பட்டினியா யிருக்கிறே. எல்லாம் அவனாலேதான். ஈசா! அவனுக்கு எப்பதான் நல்லபுத்தி தருவாயோ தெரியவில்லை. உனக்கு கொஞ்சம் பணம் கடனாக கொடுக்கிறேன். இதுதான் நான் உனக்கு செய்யக்கூடும் அம்மா!!

"வேண்டாம் வேண்டாம் முன்னமேயே எனக்கு எவ்வளவோ கொடுத்திருக்கிறாய், திருப்பிக் கொடுக்கவே யில்லை. நீ அவ்வளவு தயவுடையவளாய் இருந்ததற்கு வந்தனம். என் மனசுக்கு வியாகூலத்தையும் கலவரத்தையும் உண்டாக்குவது கடனல்ல. அவாளுக்கு என்னிடத்தில் கொஞ்சங் கூட பிரியமில்லை. வேணுமின்னுக்கா என்னிடத்தில் எவ்வளவோ பிரியமா யிருக்கலாம். என்னை சும்மாவிட்டாலே போதும். போஷிக்காமலிருந்தபோதிலும் தூஷிக்காமலிருந்தால் போதும். அவர் ரொம்ப கெட்டிக்காரனென்றும், நான் சுத்த முட்டாளென்றும் அபிப்பிராயம்."

"அது கிடக்கிறது. அவன் கெட்டான். உன்பேரில் எனக்கு ரொம்ப பிரியம்."

"என்னை தூஷிக்கிறவாளும் பகைக்கிறவாளும் பலபேரிருக்கிறார்கள். அவர்களுள் அவர் ஒருவர். அவருக்கு தகுந்த மனைவியா என்ன நான்?"

"அடிபோடி அவன் உனக்கு தகுந்த புருஷனல்ல, இன்னும் ரொம்ப நாளில்லை. உன்னுடைய மேன்மை குணத்தை அவன் அறிவான். அதுவரையில் நீ பொருத்துத்தான் தீரவேண்டும். இதுகாலம் வரையிலும் நீ எவ்வள

வோ பொருமைசாலியாய் இருந்தாய். இன்னும்கொஞ்சகாலம் பொரு. நல்ல காலம் வராமலேயா போகும்? எங்கெஜமானர் ஒருகாலத்தில் என்னை கண்டாலே ஆகாது என்றிருந்தார். இப்போ பார். நாங்கள் எவ்வளவோ சந்தோஷமாய் வாழ்கிறோம். இதுமாதிரியே நீயும் உங்காத்துக்காரரும் சந்தோஷமா யிருக்க காலம் சமீபித்து விட்டது, என்று இவ்வாறு பேசிக்கொண்டே நிச்சப்தமாயும் இருட்டாயும் ஆனால் அடிக்கடி நக்ஷத்திரங்களின் ஒளியால் வழிகாட்டப்பட்டு இவ்விருவரும் தத்தம் இல்லம் அடைந்தனர்.

(இன்னும் வரும்.)

தி. சி. சாம்பமூர்த்தி ஐயர்.

# கலியாணப்பெண்களின் விலை.

ஜாதி பேதத்தினாலும், ஸ்த்ரீஜாதியாருக்கு படிப்பின்மையினாலும், அந்நியதேசங்களுக்குப் பிரயாணஞ் செய்யத்தடை யுண்டாவதினாலும், வேறுவிதமான தடைகளினாலும், சமுசாரத்திலுண்டாயிருக்கும் அநேக ஏற்பாடுகளினாலும், நம் ராஜ்ஜியம் எவ்வளவு கஷ்டங்களுக்குள் அடங்கியிருக்கிறது? மாதர்களுக்கு படிப்பின்மையினாலும் நம் தேசத்து மாதர்களுக்கு எவ்வளவு கஷ்டங்கள் உண்டாயிருக்கின்றன? இவைகளெல்லாம் போதாமல், ஆங்கில கல்விகற்ற நம் பிரபுக்கள் இன்னும் அநேக துன்பங்களை உண்டாக்குகின்றார்கள்.

என்ன விபரீதம்! இக்காலத்தில் ஒரு பெண்பாலைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொடுக்க வேண்டுமென்றால், அப்பெண்ணின் தந்தையும் தாயும் எவ்வளவு கஷ்டங்களுக்குட்பட்டு தவிக்கின்றார்கள்! தமது அரியபெண்குழந்தையை தத்தம்பண்ணிச் கொடுப்பதுமல்லாமல், அத்துடன் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாயும் கொடுக்கவேண்டியிருக்கிறதே! ஒரு பெண் குழந்தைக்கே இவ்வளவு கஷ்டத்தை யடையவேண்டுமென்றால், இரண்டு மூன்று புத்திரிகளையுடையவர்கள் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியதாயிருக்கும்? தாய்தகப்பன் மார்களுக்குள்ள ஆடையாபரணங்களையும், வீடுநிலங்களையும் விற்றுக் கொடுத்தாலும் முடியுமா? ஐயையோ! இவை யெல்லாம் இல்லாதவர்கள் என்னசெய்வார்கள்? தம்முடைய பிள்ளைகளினால் தழைத்தோங்கி சம்பத்துள்ளவர்களா யிருந்து வாழவேண்டுமென்றும், பெண்களைப் பெற்றவர்கள் மேற்கூறிய சீதனத்தால் பிச்சைக்காரராய்ப் போய்விடவுமா, தற்காலத்தில் ஆங்கிலங் கற்ற சிறுவர்களும், அவர்களுடைய தாய்தகப்பன்மாரும், அவர்களுக்கிருக்கும் கல்வியுரிமையினால் ஆயிரம், இரண்டாயிரம் கொடுத்தாலல்லாமல் இப்பெண்மணிகளைக் கட்டிக்கொள்ள மாட்டோமென்று கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கின்றனர்? இப்போதைக்கு ஓர் ஐம்பது வருடங்களுக்கு முன் இச்சீதன முறைமை எப்படியிருந்தது? மாப்பிள்ளைமார்க் கலியா



ணஞ் செய்துகொள்ளும்படி இருந்ததல்லவா? இக்காலத்தில் அந்த ஏற்பாடு எவ்விதம் மாறிப்போயிருக்கின்றது பாருங்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே" என்னும் பழமொழிக்கிணங்கியிருக்கின்றது. நம்முடைய புத்திரி நம்மை விட்டுப் பிரிந்து போகின்றாளே என்று, மணவறைப் பந்தலில் கண்ணீர் விட்டழும் துக்கமானது, பிரிவாற்றுமையினாலல்லாமல், இப்பெண்மணியால் இத்தனை ஆயிரம் ரூபாய் கடன் வந்ததேயென்று அழுவதாக, தற்காலத்தில் ஆங்கிலங் கற்ற பிரபுக்களின் புதிய ஏற்பாடு தெரிவிக்கின்றது. இச்சீதனத்தாலுண்டாகும் வறுமையுடன், கலியாணச்செலவும், ஓர் பெண்ணின் தாய்தந்தையருக்கு, இப்பூமியின் கண்ணுள்ள சந்தோஷமான காரியங்கள்மறைந்துபோதல்ஆச்சரியமன்று.இக்காரணத்தினாலும்,பெண்மணிகளின் மேலுள்ள வேறு அநேக துரபிமானங்களினாலுமல்லவா ஓர் பெண்குழந்தை பிறந்ததெனக் கேட்ட பிதா மாதாக்கள் பிராணனை விடுகின்றனர்? ஓர் குழந்தை பிறந்தவுடன் தமக்கு கடவுள் ஓர் ஆண் குழந்தையை ஆசீர்வதிப்பாரென்று ஆவலுடன் காத்திருக்கும் பிதாவின் காதில் பெண்குழந்தை பிறந்ததென்ற நாராசம்போன்ற வார்த்தை விழவே, ஏதோ இடிமுழக்கத்தினால் பயந்தவர்போல் முகம்வாடி மூர்ச்சிக்கின்றனர். அப்போது கடவுளுக்கு நம்மிடத்தில் கருணை யில்லையென்று அவர் நினைக்க வேண்டியதாயிருக்கிறது. நமது தேசத்தில் ஒருவருக்கு ஏழெட்டு பெண்மணிகள் பிறந்துவிட்டால் அவருக்கு காலன் வேறொருவன் வேண்டாமென்று நினைக்கவேண்டியு மிருக்கிறது.

இவ்வகைத் துன்பங்களை விளைக்கும் சீதனக்கொடையைப் பொறுக்க நம்முடைய சமுசார ஏற்பாடுகளெல்லாம் உதவியாயிருக்கின்றன. பாலிய விவாக ஏற்பாட்டினால் ஓர் பெண்மணிக்கு ஏழெட்டு வயது ஆவதற்கு முன்பாகவே அவளுக்கோர் புருஷனைத் தேடல் அவசியமாயிருக்கிறது. ஏனென்றால், வயதான பிறகு அப்பெண்மணியை ஒருவரும் பாணிக்கிரகணம் செய்துகொள்ளாமல், சாதியிலிருந்து தள்ளிவிடுகின்றார்கள். மேலும் நம்முடைய சமுசார ஏற்பாட்டின்படி ஓர் பெண்மணியானவள் தன் ஜீவியகாலத்தில் விவாகம் செய்துகொள்ளாமலிருத்தல் கூடாது. இப்பெரும்பயத்தினால் ஓர் பெண்மணிக்கு மணப்பருவம் வருமுன்பாகவே விவாகம் செய்யவேண்டியிருக்கிறது. இது தவிர நம்முடைய சாதிபேதத்தினால் உண்டாகும் துன்பங்கள் இன்னும் அநேக முள்ளன. நமது சாதி யேற்பாட்டின் பிரகாரம் ஒவ்வொரு சாதியிலும் எத்தனையோ உட்பிரிவுகளிருக்கின்றன. அவைகளை யெல்லாம் தற்காலத்தில் வெவ்வேறு சாதிகளாகக் கொண்டு மனிதர்கள் வித்தியாசம் பாராட்டி வருகின்றனர். இதனாலன்றோ நம் தேசம் பிறர் கைவசப்பட்டு அடங்கி நடக்கவேண்டியிருக்கிறது? அவைகள் என்று ஒழியுமோ அன்று தான் தேச ஒற்றுமையுண்டாகும். அப்போது தான் ஜப்பான்தேசத்தாரைப்போல் எல்லா விஷயங்களிலும் பெருமை யடையலாம். ஸ்மிருதிகளிலே சாதி வேறுபாடுகளெல்லாம், உபசார நிபந்தமாகத் தானே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை மர்க்கட பிடிபோற் கொண்டு தேச ஒற்றுமையைக் கெடுப்பது அறிவுள்ளோர்கட் கடாது. ஒவ்வொரு சாதியாரும் தங்கள் வகுப்பிலன்றி, வேறொரு வகுப்பில் விவாக முதலியவை செய்யக்கூடாததலால், ஒருவர் தமக்கு இஷ்டமான மருமகனைத்தேடித் தெரிந்துகொள்ளக்கூடுமானதன்று. சாதி யேற்பாட்டுகளுக்கு நீங்கிவிடவேண்டியிருக்கிறது. அந்த வருத்தத்தினாலும், அதனால் வரும் துன்பங்களினாலும், அவ

ஸ்தைப்படா திருக்கும்பொருட்டு, நல்லவனோ, கெட்டவனோ, படித்தவனோ
மூடனோ, பந்துவோ, அந்நியனோ, எவனாகிலும் கிடைக்கக்கூடிய ஒருவனு
க்கு தன்னருமைப் புத்திரியுடன், எத்தனை ஆயிரம் ரூபா வாகிலும் அவர்
கள் வேண்டியபடி கொடுத்து, விவாகத்தை முடித்து வைத்தல் அவசியமா
யிருக்கிறது. இவ்வித விவாகங்களினால் தம்பதிகளுக்கு வரும் சுகதுக்கங்
களை இக்காலத்தில் என்னுபவர் யார்தான் இருக்கிறார்கள் ?

நம்முடைய ஸ்திரீ ரத்தினங்களுக்கு படிப்பின்மையால் அவர்களைத்
தேடி வருபவர்கள் யாருமிலர். நம் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிப்பதில், தெரு
த்தெருவாய் பிச்சை யெடுத்துத் திரியும் யாசகனுக்குக் கூட என்ன ஆசை
யிருக்கின்றது! நம் பிள்ளைகள் யாவரும்; பி. ஏக்களாகவும், எம். ஏக்களாக
வும் இருக்கவேண்டுமென்பது நம் முழு எண்ணமாயிருக்கிறது. தமது பிள்ளை
களின் படிப்பில் இவ்வளவு ஆசையுள்ள பிதாமாதாக்கள், தம் பேதைப்பெண்
குழந்தைகளின் படிப்பில் இவ்வளவு ஆசை வைப்பதைக் காண்பதரிதாயிரு
க்கிறதே! இதென்ன விபரீதவித்தியாசம்! நம் புத்திரர்கள் பி. ஏ. எம். ஏ.படி
த்தும், நம் பெண்கள் அங்ஙனம் படியாதிருப்பது நமக்கு பெருங்குறைவா
யிருக்கிறதென்று என்னுபவர் சிலரே யன்றி, பலரோ அல்லரே ? பிள்ளை
கள் படித்திருப்பதனாலன்றோ கலியாண காலங்களில் இவ்வளவு சீதனம்
கொடுக்கவேண்டி யிருக்கிறது ? நம் பெண்மணிகளில் எத்தன்மையர்? தம்
கணவனை நோக்கி நாங்கள் கற்றிருக்கும் கல்வியே எங்களுக்கு சீதனப்
பணம் என்று சொல்லக்கூடியவர்களா? நம்சிறுமிகள் படித்திருந்தால்,பிள்ளை
கள் தேடிவரமாட்டார்களா ? பாட்டு சங்கீதம முதலிய வித்தைகளில், பெண்
களுக் கிருக்கும் புத்திசாலித்தனத்தைகண்டு பெருமையாகப்பேசாத ஆடவ
ரெவருளர்? அவ்வித வித்தை தெரிந்தவர்கள் எத்தனை பெண்பிள்ளைகள்
இருக்கக்கூடும்? அதுவும் அரிதாகத்தானே இருக்கின்றது! நாலைந்து பெண்
குழந்தைகளை உடைத்தாயிருக்கும் பிதாமாதாக்கள், ஒரு பெண்ணுக்குக்
கொடுக்கும் சீதனப் பணத்தைக்கொண்டு படிப்பு முதலிய விஷயங்களில்
தேர்ச்சியடையும்படிசெய்து வைத்திருந்தால், அப்பிதா மாதாக்களை கடவுள்
ஆசீர்வதிக்கமாட்டாரா ?

கட்டாயமாய் பாலிய விவாகத்தை நீக்கியும், பெண்களுக்கு கல்வி கற்
பித்தும் இன்னும் அவர்களுக்குத் தெரியவேண்டிய மற்ற விஷயங்களையும்
கற்பித்து வந்தால், இச்சீதனக் கொடையினால் வரும் துன்பங்கள் குறைந்
துபோ மென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. கலியாண காரியத்தை, ஒரு
பொருளை விற்பனை செய்வதற்கு சமானமாக்கி, ஒரு பிதா தம் மகளை விற்க
வும், மருமகனைக் கொள்ளவும் எப்போது ஆரம்பிக்கின்றனரோ அப்போதே
அதனாலுண்டாகும் துன்பங்களையும் அவன் அநுபவித்தே தீரவேண்டும்.
தனவானாகிய ஒருவர், தம்மக்களுக்கு எத்தனை ஆயிரம் ரூபா சீதனம் கொடு
த்தபோதிலும், மறுப்போரெவருமிலர். கட்டாயமான சீதனக்கொடையா
னது, அநேகருக்கு அதிக துன்பங்களை விளைவிக்கின்றது.

கொஞ்ச நாளைக்கு முன்பு, தம்புத்திரனுக்கு கல்வி விஷயமாகச் செல
வழித்த ரூபாய்க்காக சீதனம் வாங்கல் சரியே யென்று ஒருவர் ஆங்கில
பத்திரிகையில் சாதித்தனர். ஆ! ஆ!! பேதைப் பெண்மணிகளின் மீது நம்ம
வர்கள் என்ன அன்பும்,அபிமானமும் வைத்திருக்கிறார்களென்பது இதனால்
நன்கு விளங்குகிறதல்லவா ? சீதனம் வருமென்றே இவர் தம் பிள்ளைக்கு



கல்வி கற்பித்தனர் போலும்; அங்ஙனம் பெண்மணிகளும் படித்திருந்
தால் பிள்ளைகளிடத்திலும் சீதனப்பணம் வாங்கலாமல்லவா ? அதையும் யாவ
ரும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாகத்தானே யிருக்கும். அதற்கு என்ன பதி
லளிப்பாரோ அறியோம். தன் சுகதுக்க முதலிய யாவற்றிற்கும் உடன்பட்ட
வளான மனைவியினிடத்தில, அழிவில்லாத படிப்பையும், சிறந்த குணத்தை
யும் விரும்பாமல், பணப்பிசாசியினிடத்தில் அகப்பட்ட புருஷர்களென்பதை
யல்லவோ இது காட்டுகின்றது ? இவ்விதமாக நம் பிரபுக்கள் சமுசார துன்
பங்களை நீக்காமலும், நம் சிறுவர்கள் அவைகளை விருத்தி செய்தும் வந்
தால் நம் சாதியார், மற்ற சாதியாரோடு எவ்விதம் ஒற்றுமை யடைந்து இருக்
கப்போகின்றனர் ? புண்ணிய பூமியென்று பெரும்பேர் பெற்ற இப்பரதகண்
டமானது, ஆயிரம் வருடங்களுக்கு முன், மற்ற தேசங்களெல்லாவற்றிலும்,
நாகரீகமும், திறமையும் உடைத்தாயிருந்தபொழுது, காட்டில் ஓடித்திரியும்
மிருகங்களைப்போலிருந்தவர்கள் எல்லோரும், இப்போது தழைத்தோங்கி
உலகமெங்கும் பிந்த இராச்சியங்களை ஸ்தாபித்து அளவில்லாத சாஸ்திரங்
களைப் புதிது புதிதாய்க் கண்டு பிடித்து, இப்பூமியின் நாகரீகத்தையும் அதி
கரிக்கச் செய்துவர இடங்கொடுத்து வருவது மேலே சொல்லிய நம்முடைய
கெட்ட செய்கைகளினாலல்லவா ? அவர்கள் யாவரும் விருத்தியாய்வர, நாம்
இப்பாழான நிலைமையை யடைந்து வருவது நம் சமுசார கட்டுப்பாடுகளி
னாலே யாம். மனிதன் காலில் ஒட்டிக்கொண்டிருந்து, அவனுக்குத் தெரியா
மலே, அவனுடைய இரத்தத்தைக் குடிக்கும் அட்டைகள்போல, இவைகள்
நம் சாதியாரின் இரத்த சாரத்தைக் குடித்து விடுகின்றன. இனியாவது ஆங்
கில கல்வி கற்ற நம் பிரபுக்களும், சிறுவர்களும், இச்சமுசார துன்பங்கள்
மீண்டு முளைக்காமல் வேரோடு கல்லி, சகல இராச்சியங்களுக்கும் சிலாவட்
டம்போதுள்ள இவ்வாரிய வர்த்தத்தை பின்னிற்க விடாமல், ஒருகால் முன்
னிற்குகொண்டுவர பிரயத்தனஞ் செய்வார்களென்ற மனோதைரியத்தினா
லேயே, இதை இங்ஙனம் இவ்வளவாக கூறத்துணிந்தோம்.

ஏ. கனக சபை.

# புரந்தர தாஸர்.$

பூனாவைச்சேர்ந்த புரந்தகேத கிராமத்தில் திம்மப்பன் என்றொரு ஸ்மா
ர்த்தப் பிராமணன் இருந்தான். அவன் மிகுந்த தனவான். அக்காலத்தில்
அவனைக்காட்டிலும் பணத்திற்பெருத்தவன் வேறொருவனும் இல்லையென்று
சந்தேகிக்கலாம். அவ்வளவு இருந்தும் யாசகருக்கு ஒருகாசுங்கொடான்.
இப்படியிருக்கையில் ஒருவிசேஷநாள் வந்தது. அன்று எல்லோரையும்போ
லத் திம்மப்பனும் ஸ்நானம் செய்யப் பீமாநதிக்குச்சென்றான். அந்த நாள்
விசேஷதினமாகையால் பிராமணர் எவராகிலும் தன்னிடம் தக்ஷணைக்கு
வந்துவிடுவார் என்று பயந்து, நதியின்கீழ்ச் சிறிதுதூரப்போய் வேறு எவ
ரும் வாராதோக்காத ஓர் பக்கத்தில இறங்கி ஸ்நானஞ்செய்தான். ஸ்நானம்
முடித்துக் கரையேறுகையில் விஷ்ணு ஒரு கிழப்பிராமண வேஷந்தரித்து
அந்தலோபியைச் சோதிக்கும் பொருட்டு அவனிடந்தோன்றி அவனை ஆசீ
ர்வாதஞ்செய்து தக்ஷணைக்காகத் தமதுகையை நீட்டினர். அங்கே எவரும்

$ Adapted from the "Central Hindu college Magazine."

வரார் என்று சந்தோஷித்திருந்த திம்மப்பன் சற்றுபயந்து அவரைக் கோபித்துத் துரத்திவிட்டான்.

சிலநாள் சென்றபிறகு, விஷ்ணு பழயபடி ஒருகிழவனாகவும், பிரமனைத் தமது குமாரனாகவும் அழைத்துக்கொண்டு திம்மப்பனுடைய கடைக்குப்போனார். போய் அந்தலோபிக்கு ஆசிர்வாதஞ்சொல்லித் தமது மகனுக்கு உபநயனஞ்செய்ய ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி கேட்டார். முன்போலவே திம்மப்பன் கையைவிரித்து விட்டான். உடனே இருவரும் அத்திம்மப்பனுடைய மனைவியிடஞ்சென்று தமது வேண்டுகோளைச் சொன்னார்கள். அவள் அதிக நல்ல குணசீலி, "அறஞ்செயவிரும்பு" என்னும் வாக்கியத்தின் அர்த்தத்தை நன்றாய் அறிந்தவள். அல்லாமலும் தான் நல்லதென்று தெரிந்து கொண்டவைகளை வழக்கத்தில் அநுஷ்டிப்பவள். ஆதலின் தனது கனத்த நகைகளில் ஒன்றைககழற்றி அக்கிழவன் கையிற்கொடுத்தாள்.

கிழவர் வெகு சந்தோஷத்தோடு நகையை வாங்கிக்கொண்டு வெளியே வந்துவிட்டார். வந்தவுடன் கிழவன் வேஷத்தைவிட்டுப் போர்ச்சேவகன் வேஷந்தரித்தார். விஷ்ணு அலங்காரத்தில் மிகப்பிரியமுள்ளவராதலால் கிழவேஷத்திலும் போர்ச்சேவக வேஷமே அவருக்கு நன்றாய்ப் பொருந்தியிருந்தது. அந்த அழகிய வேஷத்தோடு திம்மப்பனுடைய கடைக்குச்சென்று தாம் யாசித்த நகையை அவன்கையிற் கொடுத்து அதற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கும்படி சொன்னார். திம்மப்பனும் நகையை வாங்கித்திருப்பித் திருப்பிப் பார்த்து அது தன் மனைவியின் நகையாயிருக்குமோ வென்ற சந்தேகங் கொண்டு, அந்த நகையைத்தானே வைத்துக்கொண்டு, போர்வீரனைச் சிறுநேரம்பொருத்துவரும்படி சொல்லியனுப்பிவிட்டான். அவ்வீரியும் ஒத்துக் கொண்டு போயினர். உடனே திம்மப்பன் அந்த நகையைத் தன்பெட்டியில் வைத்து நன்றாய்ப்பூட்டி அரக்கு முத்திரையும் வைத்துவிட்டு வீட்டிற்குப் போனான். போய்மிகவும் அவசரமாகத் தன்மனைவியைத்தண்ணீர் கொண்டு வரச்சொன்னான். அவளும சீக்கிரமாகவே தண்ணீர்கொடுக்க வாங்கிக்குடித்தான். பின் தன்மனைவியைச் சற்று புன்சிரிப்போடு பார்த்தான். அப்பொழுது அவள் கழுத்தில் அந்தநகை இல்லாது போனதைக்கண்டு, அதைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். அந்த உத்தமி மிகவும் பயந்து, என்ன செய்வது என்று தெரியாமல், நகையைக்கொண்டு வருவதாகச்சொல்லிச் சமையல் அறைக்குட் சென்றாள். அங்கே ஒரு பக்கத்தில் தயங்கி நின்று கொண்டு கடவுளைநோக்கித் தனக்கு வந்துள்ள கஷ்டத்திலிருந்து தன்னைத் தப்புவிக்கும்படி மிகவும் வருந்திப் பிரார்த்தித்தாள். பின்பு ஒன்றும் பிரயோசனப்படவில்லையென்றுகண்டு, விஷத்தைக்குடித்துத்தன் உயிரைப்போக்கிக்கொள்ளத் தீர்மானஞ்செய்து, கவிழ்த்துவைத்திருந்த ஒரு கிண்ணத்தை நிமிர்த்தினாள். அப்பொழுது ஈசன அருள்புரிய, தனது ஆபரணம் அதன் அடியில் இருக்கக்கண்டாள். உடனே மிகவும் மனமகிழ்ந்து அந்த ஆபரணத்தை எடுத்துத் தன் நாயகனிடம் ஒப்புவித்தாள். திம்மப்பனும் அந்த நகையை எடுத்துக்கொண்டு கடைக்குப்போய்த்தான் முன்னமே அரக்கு முத்திரையிட்டபெட்டியை ஆவலோடு திறந்தான். ஆனால் அதில் அந்த நகையைக்காணாமல் மயங்கி அது என்னமோ ஒரு அற்புதமென்று பிரமித்து நின்றான். பிறகு வீட்டிற்குச்சென்று நடந்த சங்கதிகளையெல்லாம் நன்றாய் விசாரித்துக்கடைசியில் அவையெல்லாம் ஈசனுடைய மாயையாகவேயிருக்கவேண்டுமென்று தெரிந்துகொண்டான்.



இதன் பின் தான் திம்மப்பன் ஈசனை நினைக்க ஆரம்பித்தான். பின்னும் மோக்ஷம் அடையவேண்டுமானால் யாசகர்க்குக்கொடுத்தல் அவசியமென்றுங்கண்டான். அப்படியே 'தனது பெருத்த செல்வத்தையெல்லாம் வேண்டுவோரெல்லோர்க்கும் வேண்டுமளவு சந்தோஷத்தோடு கொடுப்பானாயினான். இதுவரைக்கும் அவனை ஆட்டிவைத்த பணப்பேயும் அவனை விட்டு நீங்கியதுபோலும். இந்த மாய உலக ஆசையைப்போக்குஞ் சமயமுங் கிட்டநெருங்கியது. அதன் வழியே திம்மப்பனும் காவி வஸ்திரம் உடுத்துக் கொண்டான். தனது வீட்டையுந் துறந்தான். இப்படித்துறவியாகவே பலவிடங்களிலும் சுற்றித்திரிந்து கடைசியில் பல்லாரி ஜில்லாவைச்சேர்ந்த பம்பா க்ஷேத்திரத்தைப் போய்ச்சேர்ந்தான். அப்பொழுது அஞ்ஞானிகளுக்கு ஞானம் ஊட்டும் வியாசராயஸ்வாமிகள் அங்கே எழுந்தருளியிருந்தார். திம்மப்பனும் அவரையே குருவாகக்கொண்டான். அவர் பல சாஸ்திரங்களையும் அவனுக்குப்போதிக்க, அவன் மத்வமதத்தைப் பின் பற்றி அவர்க்குச் சிஷனான். இப்படிக்கொஞ்சகாலம் இருந்தான். பின்பு அவருடைய உத்திரவின்பேரில் இந்தியா முழுமையும் யாத்திரைசெய்யப்புறப்பட்டான். கடைசியில் பீமாநதியின் ஓரத்திலுள்ள பண்டாரபுரத்தில் நிலையாய் வசித்தான். அவ்வூரிற் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்குந் திருமாலின்மீது 480,000 இனிய கீர்த்தனங்களை 32 ராகங்களிலும் அமைத்துப்பாடினான். இந்த உத்தமனையே நாமெல்லோரும் புரந்தரதாஸர் என்று புகழ்கிறோம்.

அந்த இனிய கீர்த்தனங்கள் எல்லாம் இப்பொழுது கிடைப்பதில் சில வே உள. அவைகளை மத்வமதத்தைச்சேர்ந்தவர்களில் அறியாதார் இல்லை. அவை கன்னடபாஷை பேசுபவர்க்குச் சுலபமாய் விளங்கும். அவைதத்துவங்க ளநேகவற்றை அடக்கிக்கொண் டிருக்கின்றன. ஆதலின் அவற்றை நாமும் ஓதி உணர்வொடு வொழுக்கமும் உற்றவராகி உய்வோமாக.

கோவை. சிதம்பரமுதலியார்.

## * பார்வதியின் பாக்கியம்.

[140-வது பக்கத் தொடர்ச்சி.]

ஒருநாள் சாயந்திரம் புருஷனும் பெண்சாதியும் இப்படி உல்லாசமாக படிப்பறையிலிருக்கும்போது கோபாலன் வந்தான். அவன் உட்காருவதற்காக ஒரு நாற்காலியை எடுத்துப்போட்டாள். கோபாலன் வந்ததும் பார்வதி அவ்விடத்தைவிட்டுப்போய் விடுவாள் என்று எண்ணினான் ராமச்சந்திரன். ஆனால் அவள் போகவில்லை. பார்வதி உள்ளே போகமாட்டாயா? வேலைக்காரி கூப்பிடுகிறாப்போ லிருக்கிறதே? என்று மெதுவாகச் சொன்னான். பார்வதிக்கு இதன் பொருள் நன்றாகத் தெரிந்ததனால் உடனே அறையை விட்டு வெளியே போய்விட்டாள்.

சுமார் ஒருவாரம் சென்ற பிற்பாடு ஒருநாள் ராமச்சந்திரன் வீட்டிற்கு வர கொஞ்சம் நேரமதிகமாய் விட்டது. வந்தபோது படிப்பறையில் விளக்கேற்றப்பட்டிருந்தது. இருவர் உள்ளே பேசிக்கொண்டிருந்தனர். சற்றுநேரம் கதவண்டை நின்றான். "ஆம் என் தகப்பனார் நவீன நடவடிக்கைகளை ஒட்டியே என்னை வளர்த்து வந்தார். நானும் அவற்றிற் சிலவற்றை இங்கு என்வீட்டிலும் அநுசரிக்க முயற்சி செய்து வருகிறேன் என் பர்த்தாவும் ஒருவாறு அதற்கு இணங்கி வருகிறார் போலவே காணப்படுகிறது. அவர் என்று—பார்வதி பேசிக்கொண்டிருக்கும்போதே ராமச்சந்திரன் கோபத்தோடு

* Adapted from the Indian Ladies' Magazine.

அறையினுட் புகுந்தான். பார்வதி அங்கேயே இருந்தாள். இதைப்பார்த்ததும் "பார்வதீ உள்ளேபோ" என்று கடுங்கோபமாய்ச் சொல்லினன். அன்று மாலை அவன் தன் மனைவியுடன் கடுமையாகவே பேசினன். "நீ ஒரு மனிதனுடன் தனிமையாய் உட்கார்ந்துகொண்டு ரகசியமாய்ப் பேசுவதின் கருத்தென்ன" என்று கேட்டான்.

"அதனால் குற்றமில்லை. தாங்கள் வீட்டிலில்லை. ஆதலால் நான் வந்தவரை யுபசரிக்கவேண்டியதாயிற்று."

"குற்றமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி இனிமேல் அந்த வழக்கம் கூடாது."

"என்னுடைய தகப்பனார்."

"போதும் போதும், நிறுத்து உன்பேச்சை, இனி நான் சொல்வதைக் கேட்கவேண்டும். தெரிந்ததா ?"

இதைக்கேட்ட பார்வதி படிப்பறையை சில தினங்கட்கு எட்டிப்பார்ப்பதையே விட்டுவிட்டாள். முதலில் ராமச்சந்திரனுக்குச் சந்தோஷம் தான். ஆனால் வரவர தனிமையாக இருந்ததனால் கொஞ்சம் கஷ்டம் உண்டாகவே பார்வதியும் இருந்தால் காலம் சுகமே கழியும் என்று கருதினவனாய் அவளை அழைத்து நீ என் சிலதினங்களாக படிப்பறைக்கு வருவதில்லை என்று கேட்டான். 'நான் வரலாமா? நான் இங்கு வரக்கூடாது என்பது தங்கள் எண்ணம் என்று கருதினேன்' "பாதகமில்லை. நீ வரலாம். அதனால் குற்றமில்லை." இப்படிச் சிலகாலம் சென்றது. ஒருநாள் இவ்விருவரும் படிப்பறையில் இருக்கும்போது கோபாலன் வந்தான். பார்வதி வெளியேபோக எழுந்தனள். இதைக்கண்ட ராமச்சந்திரன் பாதகமில்லை. நீ இங்கேயே இருக்கலாம் என்றனன்.

ஒருநாள் ராமச்சந்திரன் ஒருவண்டி வாடகைக்கு பேசிக்கொண்டு தன்மனைவியுடன் நகரத்தைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டான். எல்லாம் பார்த்துவிட்டுக் கடைசியாக கடற்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். சாயங்காலமும் ஆய்விட்டது. இருவரும் அதிக உல்லாசமாகவும் சந்தோஷமாகவும் இருந்தார்கள். இப்படியே இவர்கள் வண்டியில்போய்க்கொண்டிருக்கும்போது கோபாலனும் அவன் சிநேகனாகிய ராமசாமி என்பவனும் அவ்விடம் வந்தார்கள். இவர்களைப் பார்த்ததும் ராமச்சந்திரன் வண்டியைவிட்டிறங்கி அவர்களுடன் உலாவ எண்ணி அப்படியே இறங்கிவிட்டு வண்டி கதவை மூட எத்தனிக்கையில் பார்வதி தானும் அவனுடன் உலாவ வரும் எண்ணத்தினள் என்றும் குறிப்பைக் காட்டிய முகத்துடன் கணவனைப்பார்த்தனள். அவனும் அதை யறிந்துகொண்டு இப்போது கொஞ்சம் இருட்டாயிருப்பதால் நீ வருவதில் ஆக்ஷேபணையில்லை வரலாம் என்றனன். அப்படியே எல்லாரும் உலாவிக்கொண்டு போனார்கள். கூட்டம் அதிகமாக இருந்தபடியால் நால்வரும் ஒரே வரிசையில் போகமுடியவில்லை. ராமச்சந்திரனும் ராமசாமியும் முன்னால் போக கோபாலனும் பார்வதியும் பின்னால் வந்தார்கள். பின்னால் வந்தவர்கள் அதிக வேடிக்கையாகப் பேசிக்கொண்டுவந்தது ராமச்சந்திரனுக்குச் சகிக்கமுடியவில்லை. உடனே ஒரு சாக்குச் சொல்லிக்கொண்டு தன் மனைவியுடன் வண்டியேறிப் போய் விட்டான். அன்றிரவு மனைவியுடன் சரியாகப் பேசவில்லை. பார்வதிக்கு சங்கதி தெரிந்துவிட்டது. அவனை சந்தோஷிப்பிக்கப் பலவாறு முயன்றாள். ஒன்றும் பயன்படவில்லை. அவள் உபாயங்களை எடுத்துக்கட்டிப் பேசப்பேச அவனுக்குக் கோபம் அதிகரித்தது. கடைசியில் "இப்படி நீ இனி பேசக்கூடாது. இதை நான் பொறுக்கமாட்டேன். இத்தகைய மனைவி எனக்கு வேண்டுவதில்லை. இனியும் நீ இப்படி நடக்கும்பக்ஷத்தில் உன்னை ஓட்டிவிட்டு வேறு ஒரு பெண்ணை மணந்து கொள்வேன்" என்று அதட்டிச் சொன்னான். இதற்குப் பிற்பாடு அவ்விருவரும் சந்தோஷமாய்க் கூடிக் காலம்கழிக்கவில்லை யென்றே சொல்லலாம். இச்சமயத்தில் ராமச்சந்திரன் தாயார் மகனையும் மருமகளையும் பார்த்துப்போக வேண்டி வந்தாள். அவள் வந்த காலத்தில் பார்வதி கீயும் கூட இறக்கமுடியாமலிருந்தது. ராமச்சந்திரனிடமிருந்து அவள் தாயார் இதுவரை நடந்த சங்கதி பூர்த்தியாகவும் கிரகித்துக்கொண்டு "நீ அவள் மாயவலையிற் சிக்கி மயங்கி விடப்போகிறாய்? ஜாக்கிறதையா யிருக்கவேண்டும். அவளை அடக்கி ஆளவேண்டுமே; இல்லாவிட்டால் உனக்கு அவமானத்தைக்கொண்டு வந்து விடுவாள். அவளை விலக்கிவிட்டு வேறு பெண்ணை மணஞ்செய்து கொள்வதே மேன்மையாகும். அவளுக்குக் குழந்தை



யும் உண்டாகவில்லைப் பார்த்தாய ? தவனிடத்திலும் அப்படியே சொல் என்று பலவாறு
மகனுக்குப் போதித்து விட்டு தன்னூருக்குப்போய் விட்டாள்.

கோபாலன் நல்ல உயர்குடிப்பிற் பிறந்தவனாதலாலும் அடிக்கடி கனவான்கள்
வீட்டிற்குப் போவதால் அங்குள்ள ஸ்திரீகளுடன் பேசிப்பழக்கப்பட்டவனாதலாலும்
பார்வதியிடம் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டும் என்று நன்றாயறிந்திருந்தான்.
அவளைக் காணும்போதெல்லாம் மிக மரியாதையாகவே நடந்துகொண்டு வந்தான். ஒரு
நாள் கோபாலனுக்குத் தன் தங்கையிடமிருந்து வந்த கடிதத்தில் "நீ அடிக்கடி பார்வதி
யின் வீட்டிற்குப் போவதாக கேள்விப்படுகிறேன். அவளும் நல்லவள். ராமச்சந்திரனும்
நல்லவர். ஆனால் அவர் தாயார் ஒரு பேய். மேலும் நீ பார்வதியை மடைய விரும்புவ
தாக உன் நண்பனாகிய ராமசாமி ஒரு வதந்தி கிளப்பியிருக்கின்றான் என்றும் தெரிகி
றது. இது சங்கதி ராமச்சந்திரன் தாயாருக்குத் தெரிந்தால் அவள் அது காரணமாகவே
அவனை வேறு கல்யாணம்செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்துவாள். எனக்கு உங்
கள் குணம் எல்லாம் நன்றாய்த்தெரியும். நீ ஜாக்கிறதையாய் இருப்பது அவசியம்.'
என்று கண்டிருந்தது. இதைப் பார்த்தவுடனே கோபாலனுக்கு அதிக துக்கம் உண்டாய்
விட்டது அன்று சாயங்காலமே அவன் பார்வதியிடத்தில் இவ்விஷயத்தைச் சொல்ல
எண்ணிப் புறப்பட்டான் வழியில் ராமசாமியைக் காணவே அவன்.
"நீ எங்கே போகிறாய் நானும் உன்னுடன் வரலாமா" என்றனன்.

(இன்னும் வரும்.)

பார்வதி பாகன்.

## புதிய புத்தகங்கள்.

### ஸந்தியாவந்தனார்த்த தீபிகை.

இப்புத்தகம் ஆரியர்களுக்கு தினம் ஏற்பட்டிருக்கும் நித்திய கருமா
னுஷ்டானத்தைக் குறித்தது. இதில் கடவுளை காலையிலும், மத்தியானம்
சாயங்காலத்திலும் ஸ்தோத்திரம் செய்யவேண்டிய வேத மந்திரங்களும்
புராண சுலோகங்களும் அடங்கியுள. இவைகளுக்குப் பதார்த்தம் வெகு
நன்றாகவும் தெளிவாகவும் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படியும்
எழுதப்பட்டிருக்கிறது. 'சந்தியாவந்தனம்' என்ற பதத்திற்கு அநேகர் அர்
த்தம் தெரிந்துகொள்ளாமல் அம்மந்திரங்களை உச்சரித்து கடவுள் ஸ்தோத்
திரம் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கும் அர்த்
தம் தெரிந்துகொள்ள இஷ்டமுள்ளவர்களுக்கும் இப்புத்தகம் மிக பிரயோ
ஜனப்படும். இவ்வரிய விஷயத்தை மிக சிரமப்பட்டு அர்த்தம் எழுதி இந்
நாலை வெளிப்படுத்திய ம-ா-ா-ஸ்ரீ தி. எஸ். சுப்பிரமணிய அய்யருக்கு
நமது வந்தனத்தை யளிக்கின்றோம். புஸ்தகம் வேண்டுவோர் திருவனந்த
புரம் ரெஸிடெண்டாபீஸ் மிஸ்டர் தி. எஸ். சுப்பிரமணிய அய்யர் பி. ஏ.
என்று எழுதவேண்டும். இதன் விலை அணா 4.

### ஸ்ரீ ருக்மணீ பரிணயம்.

இப்புத்தகம் ஸ்ரீ ருக்மணி தேவியாரின் விவாகத்தைப் பற்றியது. இச்
சரித்திர கீதம் செவிக்கின்ப மூட்டக்கூடிய காலத்துக்கேற்ற சுலபமான
மெட்டுக்களால் அமைக்கப்பட்டுள்ளது. இவைகளை சுலபமாகவே பெண்
மணிகள் அறிந்துகொள்ளலாம். அவர்களுக்கு இது ஒரு பூஷணமென்றே
சொல்வோம். இதைப் படிப்பதால் அவர்களுக்கு மகிழ்ச்சியும், பக்தியும்

அறிவு முண்டாகுமென்பதற்குத் தடையில்லை. இவ்வரியபுஸ்தகத்தை வெளியிட்டவர் ஸ்ரீ ராமாயண ஸிம்ஹம் பருத்தியூர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள் குமாரர் ம-ா-ா-ஸ்ரீ ப. கி. கலியாணராம சாஸ்திரிகள் பி. ஏ. இவருக்கு சம்ஸ்கிருத பாஷையில் நல்ல பாண்டித்தியமுண்டு. இவருடைய அருமை புத்தகத்தால் பெண்பாலார் முக்கியமாய் மிக நன்மையை யடைவார்கள். இது பிழையின்றி நல்ல சுத்தமான எழுத்தில் நல்ல கடிதத்தில் ஸ்ரீரங்கம், ஸ்ரீவாணிவிலாஸ் பிரஸில் வெகு நன்றாக பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 2. வேண்டுவோர் ஸ்ரீரங்கம் வாணிவிலாஸ் பிரஸ் மானேஜருக்கு எழுதவேண்டும்.

## பாலர்க்கினிய கீதம்.

இது பாலபாலிகா பாடசாலைகளின் மாணாக்கர் மாணாக்கிகளுக்கு உபயோகமாகும்பொருட்டு காவேரிபாக்கம் இந்து பாலிகா பாடசாலையின் உதவி உபாத்தியாயர் மிஸ்டர் கா. ரா. சடகோபாசாரியரால் இயற்றப்பட்டு சே. ஸ்ரீராம ஐயங்கார் அவர்கள் பெருதவியால் பதிப்பிக்கப்பட்டது. இதில் கொம்மி, கோலாட்டப் பாடல்கள், மார்ச்சிங் பாடல்கள், வாழ்த்துப்பாடல்கள் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும் வண்ணம் பலவித வர்ணமெட்டுகளுடன் வெகு நன்றாக எழுதப்பட்டிருக்கின்றன. இதுவும் நமது பெண்மணிகளுக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடியது. இதன் விலை அணா 1. வேண்டுவோர் வட ஆற்காடு ஜில்லா, காவேரிபாக்கம் ம-ா-ா-ஸ்ரீ ஸ்ரீராம ஐயங்காருக்கு எழுதவேண்டும்.

[☞ புத்தகவரவு: இராம தீட்சதர், ஸ்ரீ வாணிவிலாசினி, நல்லாசிரியன். நமது அபிப்பிராயம் அடுத்த தடவையில் பிரசுரிக்கப்படும்.—பத்திராதிபர்.]

---

## பத்திராதிபரின் குறிப்பு.

**இளவரசரின் வரவு.** மாட்சிமைதங்கிய நமது சக்ரவர்த்தியின் திருமகனரான வேல்ஸ் இளவரசரும் இளவரசியாரும் வருகிற நவம்பர் மாதத்தில் இந்தியாவுக்கு விஜயஞ்செய்வார்கள். அவர்களுக்கு வந்தனை வழிபாடுகள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் இராஜவிசுவாசிகளாகிய நம்மவர்கள் செய்துவருவதைப்பற்றி மிக சந்தோஷப்படுகிறோம். பம்பாயிலுள்ள மாதர்களும் இளவரசருக்கும், இளவரசியாருக்கும் வந்தனோபசாரபத்திரம் அளிக்க ஏற்பாடுசெய்து வருகின்றதைப் பார்த்தாவது நமது தேசத்திலுள்ள மாதர்களும் அவ்விதம் செய்ய முயற்சிப்பார்களென்று நம்புகிறோம்.

**பெண்கல்வியும் திவான்பகதூர் ரகுநாதராவும்.** கும்பகோணம் கவர்ன்மெண்டு பெண்பாடசாலை வெகு நன்றாக இப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயராகிய மிஸ் செல்லம்மா ளவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. இப்பாடசாலையின் பரிசு மகோற்சவம் நடந்தகாலத்தில் திவான் பகதூர் ஆர். ரகுநாதராவ் அவர்கள் பெண்கல்வியைப்பற்றி தம்முடைய கருத்தை ஒரு கடிதத்தில் வெளியிட்டு எழுதியிருக்கிறார். இம் மகானுடைய அபிப்பிராயத்தை யாவரும் அங்கீகரித்து அதன்படி நடப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

அதன் சுருக்கம்: பெண்கல்வியினால் பெண்கள் சரிவர குடும்பத்தைப் பார்த்துக்கொள்ளாமல் அசட்டைசெய்து விடுகிறார்களென்று சிலர் சொல்



வது பிசகு. பெண்களுக்குக் கல்வி இன்றியமையாத பொருள். மிஸஸ் செல்லம்மாளிடத்தில் கல்வி பெறுகிற பெண்கள் ஒருவராவது ஒழுங்கீனமாக இருந்ததாகத் தெரியவில்லை. அக்கிராசனம் வகிக்கும் மாதை பார்த்தே பெண்கல்வியின் பிரயோஜனத்தை யாவரும் அறிந்துகொள்ளலாம். கும்பகோணத்தில் பெண்கல்வி இன்னம் மேன்மேலும் விருத்தியடையவேண்டும். செல்லம்மாள் நடத்திவரும் இப்பாடசாலை இந்த ராஜதானியில் உள்ள மற்றப் பாடசாலைகளுக்குப் பின்வாங்கவில்லை.

---

## சமாசாரக் குறிப்பு.

---

உலகத்தில் 10 லக்ஷம் பேர்களில் 60 பேர் குருடர்களா யிருக்கிறார்களாம்.

---

பர்மாவில் ஒரு வைத்தியபாடசாலை ஏற்படுத்த யோசித்து கவர்ன்மெண்டாரைக் கேட்டிருக்கின்றனராம்.

---

இராமேசுவரத்துக்கு இருப்புப்பாதை போடமட்டும் இந்தியா செக்ரடரி அனுமதி கொடுத்திருக்கிறாராம்.

---

பாரீஸ் நகரத்தில் 2000 மனிதர்கள் குறிசொல்லி ஜீவனம் செய்கிறார்கள். அவர்கள் வருஷத்தில் 400,000 பவுன் சம்பாதிக்கிறார்களாம்.

---

ஒரு தேனீ சும்மா பறக்கும்பொழுது மணிக்கு நாற்பதுமைல் போகுமாம். தேனை சுமந்துகொண்டு பறந்தால் மணிக்கு 12 மயிலுக்கதிகம் போகாதாம்.

---

சயம்தேசத்தில் பணக்காரமாதர்கள் தங்கள் தலைமயிர் நேராக இருக்கவேண்டுமென்று நினைத்து 1 அங்குலம் நீளம்விட்டு மீதியைக் கத்தரித்துவிடுகிறார்கள். இதுவும் ஒருபுதுமையே.

---

மாதர்மனோரஞ்சினி அக்டோபர், நவம்பர் மாசத்திய பத்திரிகைகள் கூடிய சீக்கிரத்தில் வெளிவந்துவிடும், நமது சந்தா நேயர்கள் தயவுசெய்து சந்தாவை அனுப்பிவருவார்களென்று நம்பப்படுகிறது.

---

நரம்பைப்பற்றிய வியாதிகளுக்கும், கால் கைப்பிடிப்புகளுக்கும் ஒரு வியக்கத்தக்க மாற்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது. நல்ல மழையில் நிர்வாணமாய் ஸ்நானம் செய்வதுதான் அந்த மருந்து. இதனால் அநேகர்கள் சுவஸ்தமடைந்திருப்பதாக ஒரு பத்திரிகையில் கூறப்படுகின்றது.

---

உலகத்திலுள்ள எரிமலைகள் எல்லாவற்றிலும் ஈக்குவேடாரிலுள்ள சாங்கே என்ற எரிமலையே மிகவும் பயங்கரமானதாம். அதன் உயரம் 17,120 அடி: அது 1928ம் வருஷத்திலிருந்து நெருப்பைக் கக்கிக்கொண்டே யிருக்கிறதாம். சில சமயத்தில் 150 மைல் தூரத்துக்கு அது வெடிக்கும் சத்தம் கேட்கின்றதாம்.

---

அல்பானியா தேசத்துப்பெண்கள் தங்களுக்கு விவாகஞ்செய்ய விரும்பும்போது தங்களிடமுள்ள பணங்களை மூட்டையாகக்கட்டி தலையில் சுமந்துகொண்டு திரிவார்களாம். அவர்களை விரும்பும் ஆடவர்கள் பண மூட்டையின் அளவைக் கவனித்து அம்மாதுக்களை விவாகஞ் செய்கின்றனராம். பணமில்லாதவர்கள் கற்களை மூட்டை கட்டிக்கொண்டு போனால் அங்குள்ள ஆடவர்கள் யாதுசெய்வார்?

---

## SONGS FOR GIRLS.

இராகம் பியாக். தாளம் ஆதி.

பல்லவி.

நலங்கிடவாரும்—நன்னயமுடன்—சுவாமீ, —நல.

சரணங்கள்.

இலங்கும் வடி வேற் கரா
இன்ப மயிற் குமரா
இக்கணம் வந்தருள் வாய்
எழிற் சிற்பரா. —நல.
பழமறை யோரளிர் சீலா,
பக்தர்கட் கனுகூலா;
பாமரர்க் கருளும் மூலா:
பார்வதி பாலா. —நல.
வளர்சிவ கிரி வாசா,
வள்ளி நாயகி நேசா;
வாழ் வளிக்கு முல்லாசா:
மன்னுங் குகேசா. —நல.

இராகம். காபி தாளம்-திஸ்ரம்.

கண்ணிகள்.

நலங்கிட வாரும் சுவாமீ,
நங்கையர் சூழ் பந்தலிலே;
புலவர் நிதம் போற்றும் பாதா
பூரணமய விநோதா. —நல.
சித்திர மயில் வாகனா,
தெய்வ குஞ்சரி மோகனா;
பக்தர்க் கருளுஞ் சிற்கனா. —நல.
பவசா கர மோகனா
அம்பிகை யளித்த சேயா,
அன்பு நிறை கார்த்தி கேயா;
கும்ப முனிக் கருள் தூயா:
குருபரனே வுபாயா. —நல.
சிவகிரி வளர் தீரா,
தின ரக்ஷக கம்பீரா;
கவலை யகற்றும் குமாரா:
கருணை யுளவு தாரா. —நல.

இன்னும் வரும்.

பிரம்மஸ்ரீ பழனி-சுப்பிரமணிய பாகவதர்.

2-MAR 1906
MADRAS

# மாதர்மஞ்சரி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-vii. Madras: September 1905. No-9.
புத்தகம் எ. சென்னபட்டணம்: செப்டம்பர்மீ 1905. இல-9.

## நாகரீகம்.

காட்டுப் புதர்களிலும், மலைக்குகைகளிலும், மரப்பொந்துகளிலும் வாலில்லாக் குரங்குகளைப்போலவும், மனிதர்களைத்தின்கிற மனிதசாதிகளைப்போலவும், கிழங்குகள் நத்தை நண்டு அழுகிப்போன மாமிசக்கண்டங்களைத் தின்கிற இன்னும் சிலர்களைப்போலவும், காலத்தைக் கழிக்கிற பூர்வநிலைமையிலிருந்து இப்பொழுது உண்டாயிருக்கிற அனேக விதமான விருத்திக்கு நாகரீகமென்று பெயர். ஆயினும் இந்தச் சொல்லைத் தெளிவாய் விவரிப்பதற்கு மிகவும் கஷ்டமாயும் சிக்காயும் இருக்கிறது. வியவகாரங்களில் வல்லமையும், உயர்ந்த மதக்கொள்கையும், சுயேச்சையும், கண்யத்தையும் உணர்கிறசக்தியும், பிரபஞ்சப்பொருள்களின் வைப்பை அனுபவிப்பதின் சக்தியும் உண்டாகும்படியான புத்திநுட்பமும், தேகவலிமையும், குணமேன்மையும் உடைய மனிதர்கள் பிறக்கிற சாதிகளே நாகரீகம் அடைந்தவைகள் என்று சொல்லப்படும். அதை நாம் நேராக இன்னதென்று விவரிக்கச் சந்தேகித்தபோதிலும் அதனுடைய அர்த்தத்தைக் குறுக்கான வழியில் கண்டு பிடிக்கலாம். அல்லாததை விலக்கினால் உள்ளது தேறுமல்லவா. அதுபோலவே உடுப்பதற்குக் காலவேற்றுமைகளுக்குத் தக்க உடைகளும், காலந்தவறாமல் நன்றாய்ச் சமைத்த போஜனங்களும், ஆயுதங்கள் முதலானவை செய்துகொள்ள இரும்பும், எழுத்துக்களும், கலியாண விவஸ்தைகளும், சில்பச் சித்திர வேலைகளும், மேன்மையான ஞானமும் இல்லாதவர்களை முரட்டுச்சாதியார் என்று நிச்சயிக்கிறோம்.

ஒவ்வொரு தேசத்தாரும் தங்கள் தங்களுடைய சாமர்த்தியத்துக்குத் தகுந்தபடி விருத்தியை அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் சொந்தமான நாகரீகம் வேறு வேறாய் உண்டு. சைனா ஜப்பான் தேசத்தவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வழியில் நாகரீகத்தில் பூர்த்தி அடைந்திருந்தபோதிலும், மேல் நாட்டவர்கள் அடைந்த நாகரீகத்தினின்று வித்தியாசப்படும். ஆதலால் இந்த நாகரீகமென்னுஞ் சொல் இவ்வளவென்றும் இவ்விதமானதென்றும் சொல்ல முடியாத அபிவிருத்தியை உணர்த்துகின்றது.

மிருகங்களில் கொஞ்சங்கூட இல்லை; மனித சாதிகளிலும் சில இன்றைக்கும் அபிவிருத்தி அடையாமல் இருக்கின்றன; ஆப்பிரிக்கா தேசத்தில் உள்ள நீகிரோ என்றவர்கள் இன்றைக்கு எப்படி இருக்கிறார்களோ அப்படியே தான் இரண்டாயிர வருஷத்துக்கு முன்னும் இருந்தவர்களென்று நமக்குத் தெரியவருகிறது.

ஆத்மாவினுடைய பிரமாதமான சக்தியில் நம்பிக்கையும் அதைக்கொஞ்சங் கொஞ்சமாய் வெளிப்படுத்துவதற்குச் சாதனமான உண்மையான பிரயத்தினமும் ஆகிய இவ்விரண்டினாலும் உண்டான விருத்திக்கே இப்பிரபஞ்சத்தில் நம்மால் அனுபவிக்கப்பட்ட பொருள்களை ஒன்றோடொன்று ஒத்துப்பார்க்கும் சக்தியும், அவைகளில் நின்ற ஒற்றுமை வித்தியாசங்களைக் கண்டு பிடிக்கும் அறிவும், மூடபக்தியான நிரந்தர அபிப்பிராயங்களை நீக்குவதும் நாகரீக மடைந்தவர்களுக்கே உள்ளவைகள். முரட்டு சாதியார்களில் அவர்களுடைய பழமையான வழக்கங்களிலிருந்து நீங்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தினால் முகத்தில் விசனமும் மனக்கலக்கமும் உண்டாகிறது. நூதனமானவர்களைப் பார்த்த உடனே அசைவற்று நின்று விடுகிறார்கள். ஒவ்வொரு விருத்தியும் உண்டாகும்போது ஏதோ ஆச்சரியகரமான ஒன்று மனதை தப்பிக்கச்செய்து நூதன வழியைத் துணிந்து செய்வதற்கு ஆசை உண்டாக்குகிறது. எப்பொழுதும் கப்பல் யாத்திரை செய்பவர்கள் நாகரீகம் மிக அடைந்தவர்களாகிறார்கள். கப்பல் யாத்திரை செய்கிற மனிதனுக்கு ஒருவித சக்தி வேண்டி இருக்கிறது. அதே அவனுக்கு சீக்கிரத்தில் ஆண்மைத்தனமும் தைரியமும் தருகிறது. ஊரூராய்த்திரிவதனாலும், புதிய சனங்கள் மத்தியில் நிற்பதனாலும் தன்னூரிலேயே அடைத்துக்கொண்டிருக்கிற போதுண்டானப் பிடிவாதமும், மூடபக்தியும் அவனிடத்திலிருந்து உடனே விலகுகின்றன.

இனி நாகரீக மடைந்ததற்கு அறிகுறியான அம்சங்களைச் சொல்லுவோமாக.

(1) வாசஞ்செய்வதற்கு வீடுகள் அமைத்துக் கொள்வது ஒன்று. வீடு கட்டிக் கொள்வதனால் கட்டினவனுக்கு மனச்சாந்தமும், சக்தியும், நயமும் உண்டாகின்றன. குகையிலும், கூடாரங்களிலும் வாழ்கிற மனிதனும் ஊரூராய்த்திரிகிற வீடற்றச்சாதியானும் சாகும்போது ஒரு நாயோ குதிரையோ சாகும்போது எவ்வளவோ அவ்வளவே. வெகு எளிதில் கட்டிக்கொள்ளக் கூடிய வீடு உண்டான உடனே மனிதனுடைய முக்கியமான பகையானவைகள் நிவர்த்தியாகின்றன. காட்டுக்கொடிய மிருகங்களும், பனியும், வெயிலும், காற்றும், மழையும் அவனை வருத்தா. யோசனைக்கு அவகாசம் உண்டாகிறது. யுக்தியினாலான வித்தைகளினால் பலன் அடைகிறான். புதிது புதிதாய்ப் பிரபஞ்ச ரகசியங்களைக் கண்டு பிடித்தலும், சில்ப சித்திரங்களில் பழக்கமும், ஒழுக்க விநயமும், சங்கத்தினால் உண்டாகும் பலவித சந்தோஷங்களும் ஆரம்பிக்கின்றன; சங்கத்தினால் உண்டான அநேகவித உதவிகளையும் அடைகிறான். பலமும் தேக சௌக்கியமும் உற்சாகமும் தன்னுடைய சகோதரர்களோடு வாழ்வதனால் அடைகிறான்.

(2) நாகரீகம் அடைபவர்கள் யுத்தங்களையும் வேட்டைகளையும் ஆடுமாடுகள் மேய்ப்பதையும் விட்டு கிருஷித்தொழிலை அவலம்பிக்கிறார்கள்.



(3) அஞ்சல் மூலமாய் சமாசாரக் கடிதங்கள் போக்குவரவு செய்வதும் நாகரீகமே. இதனால் செலவு வெகு கொஞ்சம் ஆகி வெகுதூரங்கள் வரைக்கும் சமாசாரங்கள் போய்ப் பிரதி உத்தரம் வருவதற்குச் சாத்தியமாய் இருக்கிறது. சாக்கிரதையாயும் உண்மையாயும் இந்தக் கடிதங்கள் செல்லுகின்றன.

(4) சங்கத்திலுள்ள கைத்தொழில்களைப் பங்கிட்டுக்கொண்டு அவரவர்க்குத் தகுந்த வேலைகளை அவரவர் எடுத்துக்கொண்டுச் செய்வதும் நாகரீகத்தின் குறியே. அவனவன் தனக்கு உருசியான வேலைகளை எடுத்துக்கொண்டு செய்வதனால் அந்த வேலையில் அற்புதமான திறமை அவனுக்கு உண்டாகிறது. பிடிக்காத வேலையை எடுத்துச் செய்வதனால் வேலையும் கெடுகிறது. மனிதனும் கெடுகிறான். இப்படி சுபாவத்தினால் கைவந்த திறமையினால் செய்த வஸ்துக்கள் விற்பனையினால் வேகமாகவும் ஸ்திரமாகவும் லாபத்தை அடைகிறான். சோம்பலினால் உண்டாகும் தீத்தொழில்களில் நின்று அந்தச் சங்கத்தில் மனிதர்கள் பெரும்பாலும் விலகுகிறார்கள். ஏதோ ஒரு வேலை ஒவ்வொருவனுக்கும் காணப்படுகிறதினால் சோம்பலுக்கு இடமுண்டாகாது. அந்தச் சங்கத்தில் இன்பம் பெருகும். பணம் சம்பாதிக்கும்போதைத் தவிர சனங்கள் மற்று எப்பொழுது சாத்விகமாய் இருக்கிறார்கள்?

(5) நாகரீகத்தினால் ராஜாங்கமும் அதனுடைய சூட்சுமமான வேலைத்திறமைகளும் விருத்தி அடைகின்றன. ராஜாங்கத்துக்கு அபரிமிதமான விவேகமும் நல்லொழுக்கமும் வேண்டி இருக்கிறது. இதனுடைய சக்தியையோசித்துப் பார்ப்போமேயானால் மிகவியப்பைத் தருகின்றது. அதனுடைய ஆக்கினையை எண்ணமுடியாத ஜன சமூகங்கள் தங்களுடைய மனப்போக்குக்கும் விருத்தமாய் தங்களால் பார்க்கமுடியாத போனபோதிலும் வணங்கியும் அதனாலேயே வெகு தூரத்துக்கப்பால் ஒரு மனிதன் செய்த குற்றத்தைக் கண்டுபிடித்து தண்டித்தும் வரக்காண்கிறோம்; இது என்ன ஆச்சரியம்?

(6) ஸ்திரீகளுக்குச் சங்கத்தில் தகுதியான பெரிய மரியாதை நிலைமையும் நாகரீகத்தின் முக்கியமான சின்னமே.

(7) புத்தியினால் தேர்ந்து அறியப்பட்ட நூதன சாத்திரங்களை மிக ஏழ்மையானவர்களுக்கும் பரவும்படி புஸ்தகம் பத்திரிகைகளைப் பிரசுரிப்பதும் வெகுதூரங்களுக்கு சமுத்திர யாத்திரை செய்வதும் பெருமையான நீராவிக் கப்பல்கள் முதலானவைகள் செய்துகொள்வதும் நாகரீகத்தினால் உண்டானவையே. இன்னம் அதிக நாகரீகத்தினுடைய குறிகள் எவை என்றால் பிரபஞ்சத்தில் வாழும் வாழ்க்கையில் நீடித்திருக்கும் சாமர்த்தியமும், அதற்குவேண்டிய கருவிகளை அமைத்துக்கொள்ள யுக்தியும், சிறைச்சாலையில் வைக்கப்பட்டத் திருடர்களுக்கு அதற்குவேண்டிய செலவுகளுக்கும், மேல்வரும்படிகளுக்கும் வேண்டுமானத் திரவியம் உண்டாகும்படி வேலைசெய்விப்பதும் நீராவியந்திரத்தினால் உப்பு ஜலத்திலிருந்து குடிக்கும்படியான நல்லத்தண்ணீர் உண்டாக்குவதும் இங்குகளையும் யுக்தியினால் நன்மை பயக்கும்படிச் செய்வதுமே.

இவ்விருத்திகளெல்லாம் அடைவதற்கு முன்னே மனித சாதிகள் உலகத்தில்பிழைத்து இருக்கவேண்டியது அவசியம். உலகசரித்திரத்தைப்பார்ப்போமேயானால் அநேக சாதிகள் நாகரீகத்தினுடைய குறிகள் காண்பித்த

போதிலும் காலக்கிரமத்தில் வேரோடு இருந்த இடம் தெரியாமல் அற்றுப் போயின. இதற்குக் காரணம் அந்தச் சாதிகளில் தருமத்தின் அழிவேயன்றி வேறல்ல. ஆதலால் நாகரிகத்துக்குப் பிராணாதாரமானது தருமம். தருமம் என்பது நியாயத்தில் நடப்பதும், சத்தியம் பேசுவதும் பிறருக்கு உதவி செய்வதும், மன உற்சாகத்தோடு நிற்பதும், ஆத்ம ரக்ஷணைக்காக தேகத்தையும் புத்தியையும் பிரவர்த்தியையும் செவ்வனே பாதுகாத்துக் கொள்வதும், இவை முதலியவாம். ஆதலால் முன்சொன்ன அம்சங்களில் எதனாலும் ஒன்றைக் காண்பிக்காத சாதிகள் மிருகங்களேயாம். அவைகள் நாகரிக மடைந்தவைகளல்ல; ஆகவே நாகரிக மென்பது இன்னதென்று பல விதங்களாலும் விவரிக்கப்பட்டது.

உலாசசோதரி.

# சம்பந்தர் செய்த அற்புதங்கள்.

## 1. அங்கம் பூம்பாவை ஆக்கியது.

மயிலாப்பூரில் சிவபக்தி அடியார் பக்திகளிற் சிறந்தவரும் பெருஞ் செல்வருமாகிய சிவநேசர் என்னும் வைசிய ரொருவரிருந்தார். அவர் திருஞான சம்பந்த மூர்த்திகள் பிறந்த மூன்றாமாண்டில் ஞானப்பாலுண்டமையும் உலகமுய்யும்பொருட்டு தமது பதிகங்களால் பரசமயங்களை இழித்துரைத்த சைவத்தை நாட்டினமையும் கேள்வியுற்று அவரிடத்தே மிக அன்பு கொண்டவராயினர். இவ்வாறு பெருஞ் செல்வமும் மிகக் கீர்த்தியுமுடைய இவருக்குப் புத்திர பாக்கிய மில்லாமையால் நெடுங்காலம் சிவபூசை அடியார் பூசைசெய்து கடைசியாக ஒருபெண் மகவைப்பெற்றனர். அப்பெண் இலக்ஷ்மிபோலஅதிசௌந்தரியமுள்ளவளாயிருந்ததனால் அவளுக்குப் பூம்பாவையெனப் பெயரிட்டனர். இவள் மிகக் குணவதியாய் தந்தையார் மகிழும்படி வளர்ந்து பெதும்பைப் பருவம் அடைந்திருந்தனள். அப்போது சம்பந்தமூர்த்தி சுவாமிகள் பாண்டி நாட்டில் சமணழித்து சைவம் பெருக்கிய திருவருட் செய்தியை பலரு முரைப்பக்கேட்டு மிகச் சந்தோஷித்து தன் சுற்றத்தார் யாவரும் கேட்கும்படியாக "என் புத்திரியாகிய பூம்பாவையும் எந்திரவிய மனைத்தையும் என்னையும் திருஞான சம்பந்த மூர்த்தி கட்கு கொடுத்துவிட்டேன்" என்று சொல்லி ஆனந்தம் கொண்டனர். இப்படியிருக்க ஒருநாள் பூம்பாவை தோழிமாருடன் பூஞ்சோலையுட் சென்று மலர் கொய்யும்போது ஒரு பாம்பு மாதவிப் பந்தரிலே மறைந்து வந்து அவளுடைய விரலிலே தன் பற்கள் எலும்பில் தாக்கும்படி கடித்து விஷம் கக்கிச் சென்றது. பூம்பாவை அங்கே மயங்கி விழுந்தனள். தோழிமார்கள் பயந்து அவளைக் கன்னியாமாடத்துள்ளே கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். சிவநேசர் சுற்றத்தாரோடும் மனங்கலங்கி அழுது நின்றனர். சிறந்த வைத்தியர்கள் பலரும் செய்த மணிமந்தர ஔஷதப் பிரயோகங்கள் யாவும் பிரயோசனப்படாது விஷந்தலைக்கேறி அவள் இறந்தாள். இறக்கவே சிவநேசர் "இவளைத்



திருஞானசம்பந்தமூர்த்திகட்கு கொடுப்பேனென்று இச்சயித்தேனாகையால் நான் கவலைப்பட வேண்டுவதென்ன? அவர் வரும்வரையும் இவ்வுடலைத் தகனஞ் செய்து எலும்பையும் சாம்பலையும் குடத்திலிட்டுப் பத்திரமாய் வைப்பேன்" என்றுதுணிந்து அப்படியே செய்து அக்குடத்தைக் கன்னியாமாடத்திலே ஆடையாபரணங்களா லலங்கரித்து பஞ்சணைமேல் வைத்துத் தினந் தோறும் தோழியர்கள் மஞ்சனம் மாலை முதலிய உபசாரங்கள் தவறாமல் செய்யும்படி திட்டம் செய்தனர். இப்படி யிருக்குங்காலத்திலே திருஞான சம்பந்த சுவாமிகள் திருவொற்றியூருக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து கொண்டிருக்கிறார் என்னும், சமாசாரத்தைப் பலர் வந்து சிவநேசருக்குச் சொன்னார்கள். அவரதைக்கேட்டு பெருமகிழ்ச்சியுடையவராய் திருவொற்றியூர் வரைக்கும் நடைப்பந்தரிட்டு வஸ்திரங்களால் விதானித்து கமுகுகளும், வாழைகளும் நாட்டி, தோரணங்களும் கொடிகளும், மாலைகளும் நிறைத்து அலங்கரிப்பித்தார். பின்பு திருவொற்றியூர் சென்று சுவாமிகளை வணங்கி எதிர்கொண்டழைப்பேன் எனத்துணிவால் அடியார் பலரும் உடன்செல்ல திருவொற்றியூருக்குச் சமீபித்தார். அப்பொழுது சுவாமிகளும் மயிலாப்பூர் நோக்கிப் புறப்பட்டு விட்டனர். சுவாமிகளும் சிவநேசருடைய செய்கையை அடியார் செப்பக்கேட்டு மகிழ்ந்து மயிலையை அடைந்தார். அடைந்து சிவநேசருடைய எண்ணத்தை முடிப்பதற்குத் திருவுளங்கொண்டு கபாலீச்சரம் என்னும் ஆலயத்துட் சென்று சிவபெருமானை நமஸ்கரித்துத் துதித்துக் கோயிலுக்குப் புறத்தே வந்து சிவநேசரை நோக்கி உம்முடைய மகளினது எலும்புநிறைந்தகுடத்தைக் கொண்டுவாரும் என்றருளிச்செய்தனர். அதைக் கேட்ட சிவநேசர் பெருங்களிப்போடு வீட்டிற்குப்போய் கன்னியாமாடத்திலிருந்த குடத்தைச் சிவிகையிலேற்றிவைத்து தோழியர்கள்சூழ எடுப்பித்து கொண்டுவந்து கோபுரத்திற் கெதிரே அக்குடத்தை சுவாமிகள் முன்னரே வைத்து நமஸ்கரித்தார்.

திருஞான சம்பந்த மூர்த்திகள் சர்வான்மாக்கட்கும் உறுதி பயப்பித்தற்பொருட்டு கோபுர வாயிலுள்ளே வந்து அக்குடத்தைக்கண்டு சிவபெருமான் திருவருளைச் சிந்தித்து அருள் நோக்கத்தினாலே "பூம்பாவாய்" என்று கூப்பிட்டு,

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார் தமையமுது செய்வித்தல்
கண்ணினா லவர் நல்விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர் முன் வருக."

(பூமியிலே மனிதப்பிறப் பெடுத்தவர்கள் பெறும் உறுதிப்பொருளாவது சிவனடியார்கட் கமுது செய்வித்தலும் பெருமானுடைய திருவிழாத் தரிசித்தலும் என்பது உண்மையாயின் இவ்வுலகோர் முன்வருவாய்) என்னுங் கருத்தடங்கிய,

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பில் உருத்திரன்பல் கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்."

என்பதை முதலாகவுடைய திருப்பதிகத்தை அருளிச்செய்தார். உடனே குடத்தையுடைத்துக்கொண்டு பூம்பாவை யெழுந்தனள். இதைக்கண்ட யாவ

ரும் வியந்து "ஹரஹர" என்று துதித்தார்கள். சிவநேசர் தன் மகளை விவாகம் செய்துக்கொள்ளும்படி திருஞானசம்பந்த சுவாமிகளை வணங்கினார். அவர் 'உம்முடைய புத்திரிக்கு உயிர் கொடுத்தமையால் பிதாவாயினோம்; ஆதலால் அது தகாது' என்று மறுத்தார். பின்பு சிவநேசர் தன் மகளைக் கன்னியாமாடத் திருத்தினர். இருவரும் திருஞான சம்பந்த மூர்த்திகளையே தியானித்துக்கொண்டிருந்து சிலகாலஞ் சென்றபின் சிவசாயுச்சிய மடைந்தனர்கள்.

ம. வி. மீனாக்ஷிசுந்திர முதலியார் பி. ஏ.

## தேக உழைப்பினாலே ஜீவிக்கும் உழைப்பாளிகள் கவனிக்கவேண்டிய * சுகாதார விதிகள்.

ஆல்சென் என்பவர் தேகசுகத்தைப்பற்றிய ஆங்கிலப் பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதுகின்றார். தன் கைகளாலேயே வேலைசெய்து ஜீவிக்கும் உழைப்பாளிகள் கவனிக்கவேண்டிய முக்கியமான சுகாதார விதிகள் ஐந்தென்று சுருக்கிச்சொல்லலாம், அவையாவன, (1) சுத்தமுள்ளவர்களா யிருக்கவேண்டும், (2) உணவு பானாதிகளில் மிதமுள்ளவர்களாயிருக்கவேண்டும். (3) வெயில் காற்று மழை முதலியவற்றில் தேகத்தை அதிகமாக வெளிப்படுத்தக்கூடாது; (4) எப்போதும் வேலையுள்ளவர்களா யிருக்கவேண்டும்; (5) இரவை மனைவிமக்களுடன் வீட்டிற் கழிக்கவேண்டும்.

(1) சுத்தமுள்ளவர்களா யிருக்கவேண்டும் : தேகசுகத்திற்குச் சுசி என்பது முக்கிய காரணம்; சுசியில்லாதவனும் பலவான் என்று பேர்பெற முடியாது. ஆனபடியினாலே வேலைசெய்யும் உழைப்பாளிதான் தக்க பலத்தோடு கூடி வேலைகளைச் சரிவரச் செய்துவரவேண்டுமானால் தன் உடம்பை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பது நாம் சொல்லவேண்டியதில்லை. தன் கைகால் உடம்பு உடை முதலியவற்றில் அழுக்குப் படியாமலிருக்க முடியாதவனாகிய உழைப்பாளியானவன் அதிர்ஷ்ட வசத்தால் வேலைசெய்யாமல் உட்கார்ந்த இடம்விட்டுப் பெயராமலே ஜீவனோபாயம் பெற்றிருக்கும் உயர்தரத்தாரைப்போல எவ்விதம் சுத்தமாயிருக்கும் வழிகளைத் தேட முடியும் என்று சிலர் ஆட்சேபிக்கலாம். ஆனால் நெற்றிவேர்வை நிலத்தில் விழ வேலைசெய்து ஜீவிக்கும் உழைப்பாளி உட்கார்ந்தபடியே சம்பாதித்து ஜீவிக்கும் பாக்கியவான்களை விடத் தன் உடம்பையும் உட்கருவிகளையும் சுத்தமாக வைத்திருக்கிறான் என்றே நாம் சொல்லவேண்டும். பாக்கியவான்களோ இருந்தபடியே இருந்து தங்கள் உடம்பிலுள்ள உட்கருவிகளிலும் அசுத்தம் நிறைந்து தங்குவதனாலே பலவிதமான நோய்களுக்கிருப்பிடமாக விளங்குகிறார்கள். மனிதனுடைய உள் அசுத்தங்களை அவ்வப்போது வெளிப்படுத்தப் போதுமான அளவு வேர்வை இவர்களிடத்திலே உண்டாகின்றதில்லை;

* Specially written to our Magazine by C. K. Subramanya Mudalliar, B. A.



ஆகையினாலே உள்ளே உற்பத்தியாகும் அசுத்த வஸ்துக்கள் அவ்வப்போதே வெளியில் தள்ளப்படாமல் அங்கங்கே அவயவங்களினுள் தங்கிக் கெட ஆரம்பித்து தேகத்திற்குக் கெடுதி விளைகின்றன. ஆகையினாலே இப்பேர்ப்பட்டவர்கள் பலமுறை வெளியில் ஸ்நானம் செய்தபோதிலும் உள்ளே அசுத்தமுடையவர்களாகவே யிருக்கிறார்கள். ஆனால் உழைப்பாளியோ என்றால் தன் தேக உழைப்பினாலே தினந்தோறும் ஜீவிப்பவனாதலால் அபரிமிதமான வேர்வையை வெளிப்படுத்தியும் ஆழ்ந்த சுவாசங்களினால் நெஞ்சு முதலியவற்றை உரப்படுத்தியும் இன்னும் பலவிதத்திலும் தன் தேக யந்திரத்தைச் சரியான ஸ்திதியில் வைத்துக்கொண்டிருக்கிறான். ஆனால் அவன் கவனிக்கவேண்டியதொன்றுள்ளது. தன் உழைப்பினாலே உள் அசுத்தங்கள் வெளிப்படுத்தப்பெற்ற அவன் அவ்வசுத்த வஸ்துக்கள் வெளியே வந்து தோலின் மேற்பக்கத்தே தங்கி வேர்வைக் குழாய்களை அடைத்து மேலும் வேர்வைத் தன்மைக்குக் கெடுதி விளைக்காதபடி அவற்றை அப்போதைக்கப்போதே அகற்றும்படியாகத் தினந்தோறும் ஸ்நானம் செய்தல் வேண்டும். இது தொழிலாளிக்கு அத்தியாவசியம். அல்லாமலும் நன்றாக ஸ்நானம் செய்துவிட்டு சுத்தமான உடை யணிந்துகொள்வதே தேகத்திற்கும் மனத்திற்கும் ஆச்சரியகரமான உற்சாகத்தையும் அமைதியையும் அளிக்கின்றன. (ஸ்நானத்திற்குக் குளிர்ந்த ஜலமே தக்கதென்று வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயம்) வேறு ஒன்றிற்குமில்லாவிட்டாலும் இந்த ஒரு காரணத்திற்காகவாயினும் தொழிலாளி மாலையில் வீடு வந்ததும் ஸ்நானம் செய்துவிட்டு சுத்தமான உடைகளை அணிந்துகொள்ளவேண்டும். இவ்விதம் ஒருவன் செய்து வருவானானால் இதன்பிறகு உட்கொள்ளும் இராப்போஜனத்தின்மீது பசியும் ருசியும் விருப்பமும் அவனுக்கு எவ்வளவாக அதிகரிக்கின்றது! பெண்டுபிள்ளைகள் அக்காலத்தே உடனிருந்து அநுபவிக்கும் இன்பமானது எவ்வளவு சுகத்திற்கும் இன்பத்திற்குங் காரணமாகின்றது பாருங்கள்! ஒரு குடும்பத்தின் வாழ்நாள்கள் சுகமும் இன்பமும் பொருந்தியனவாக இருக்கவேண்டுமென்றால் சுத்தமாக இருக்கவேண்டுவதவசியம் என்பதுண்மையே.

உழைப்பாளிகள் பல் துலக்கல் என்பதுபோன்ற சிறு கருமங்களையும் செவ்வையாகக் கவனித்து வருதல் வேண்டும். ஜீரணசக்தி சரியாய் இருக்கவேண்டுமென்றால் பற்கள் சரியான நிலைமையில் இருக்கவேண்டியது அவசியம் ஆகையினாலே பற்கொம்பு (Brush) போட்டுத் தந்தங்களைக் காலை மாலை இரு நேரங்களிலும் நன்றாகச் சுத்திசெய்தால் அவை நல்ல ஸ்திதியில் இருந்துவரும். கைகளையும் தினந்தோறும் தொழில் முடிந்தவுடன் நன்றாகச் சுத்திசெய்து வந்தால் அவை அழகான நிலைமையிலே இருக்கும். மேலே குறிப்பிட்டவைபோன்ற சிறு விஷயங்களையும் கவனித்து நடத்தல் தொழிலாளிக்கு மிகவும் சுகத்தையும் க்ஷேமத்தையும் விளைவிப்பதாயிருக்கும்.

(2) உணவு பானாதிகளில் மிதமுள்ளவர்களா யிருக்கவேண்டும் : போதை உண்டுபண்ணும் பானங்களை உபயோகித்தல் தேகத்திற்கு மிகவும் கெடுதி யுண்டாக்குவன என்பதைப்பற்றி நாம் அவ்வளவாக எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. நல்ல குடும்பத்தில் அவை விரும்பத்தகாத பானங்கள் என்று கருதப்படவேண்டும். மிதம் என்பது இவற்றை ஒழிப்பது மட்டுமல்ல. அதிகமான உணவை உட்கொள்வதையும் ஒழிக்கவேண்டும். பரிசுத்த

மானதும் சாதாரணமானதும் உடம்பை போஷிக்கக்கூடியதுமான உணவே தினந்தோறும் உபயோகிப்பதா யிருக்கவேண்டும். மாமிசபதார்த்தங்கள் பலத்தைக் கொடுக்கின்றன என்னும் விபரீத உணர்ச்சியை ஒழித்துவிடவேண்டும். பல் முண்டாக்குவதற்கு மாமிசபதார்த்தங்கள் காரணமாக எண்ணக்கூடாது. ஏனென்றால் அவை எவ்வளவுக் கெவ்வளவு விலை யுயர்ந்தவையாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவை உடலைப் போஷிக்கும் தன்மையிற் குறைந்தும் மாமிசங்கள் அழுகுவதனாலுண்டாகும் கெட்ட வஸ்துக்கள் நிறைந்தும் இருக்கின்றன. கடுகு, மிளகு, மிளகாய் முதலியவை அதிகமாகச் சேர்ந்த காரபதார்த்தங்கள் ஜீரணகருவிகளில் உஷ்ணத்தையுண்டாக்கி அதிக தாகத்தைக் கொடுப்பதனாலே அவையும் பெரும்பான்மையும் நீக்கப்படுதல் வேண்டும். வாயிலிருக்கும்போதே உணவைச் செவ்வையாக மென்று உட்கொள்ளவேண்டும்; அவசரமாகச் சாப்பிடக்கூடாது. சீக்கிரம் சாப்பிட்டேன் என்று சிலர் கொள்ளும் பெருமை வீண்பெருமை. அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடக்கூடாது. வெயிற்காலத்தில் நாம் சாப்பிடும் உணவை ஜீரணிப்பதிலும் அதற்குள்ள போஷணை வஸ்துக்களை உட்கொண்டு மீந்ததை வெளிப்படுத்துவதிலும் நமது ஜீரணக்கருவிகள் படும் அவஸ்தையே நாம் அக்காலத்தில் கொள்ளும் ஒருவிதமான களைப்பான உணர்ச்சிக்குக் காரணமாகும். வெயிற்காலத்தில் தேகத்தைச் சுகமாகவும் வேலைக்குத் தகுதியுள்ளதாகவும் வைத்திருக்கவேண்டுமானால் மிகவும் சொற்பமாகவும் மிதமாகவும் உணவை யுட்கொள்ளவேண்டும்.

(3) தேகத்தை மிதமிஞ்சி வெயில் காற்று மழை முதலியவற்றி லடிபட வைக்கக்கூடாது : இதனால் காற்று வெயில் முதலியவை உடம்பில் படக்கூடாது என்று அர்த்தமல்ல. வெளியில்போய் நல்ல காற்றில் நின்று வேலை செய்யும் தொழிலாளி உண்மையாகவே மிகவும் இன்பத்தை யனுபவிப்பவனே. சரியானபடி உடுப்புகள் மட்டும் தரித்திருப்பானேயானால் அவன் பருவங்களின் மாறுதல்களினால் யாதொரு கெடுதியும் அடையமாட்டான். வெயில் முதலியவற்றில் உடம்பை அடிபடவைத்தல் என்று நாம் சொல்வதெல்லாம் கூடி உடம்பு சீதோஷ்ண நிலைமைகளினால் பாதிக்கப்படக்கூடிய ஸ்திதியிலிருக்கும்போது சரியாகக் காக்கப்படவேண்டும் என்பதே. உதாரணமாக உடம்பில் வேர்வை மிகுதியாகுங் காலத்தில் குளிர்ந்த காற்று மேலேபடும்படி சும்மா இருத்தல் அபாயத்தைச் சேதமுண்டாக்கும், அதுபோலவே அக்காலங்களில் பாதங்களை ஈரமாக வைத்திருத்தலானது ஜலதோஷம் முதலிய பல வியாதிகளுக்கிடமாகும். இப்பேர்ப்பட்ட விஷயங்களில் சிறிது அசிரத்தையா யிருந்தால் அது நீண்ட வருத்தத்தைக் கொடுக்கும்; நோவிற் காதாரமாகும். சில சமயங்களில் மரணத்தையும் விளைவிக்கும்.

(4) எப்போதும் வேலையுள்ளவர்களா யிருக்கவேண்டும் : அதாவது உண்ணுமலும் உடுக்காமலும் உலக வாழ்க்கையைப் பிறவழிகளிலும் தனக்கும், பிறர்க்கும் சுகமுள்ளதாக ஆக்காமலும் நாள்முழுதும் வேலை செய்துகொண்டிருக்கவேண்டும் என்பதும் இதன்பொருளல்ல. தன் மரியாதையைக் காப்பாற்றுதலும் தன்னைத்தானடக்கியாளுதலும், தன்னாலான நன்மையைச் செய்தலும், எந்த விஷயத்திலும் தன்னால் கூடியமான முயற்சிசெய்தலும், உலக வாழ்க்கையில் இன்பந்தரத்தக்க அழகிய பொருள்களுடன் பழகிவருதலும் முக்கியமாக எப்போதும் மனிதனைப் பிறந்தவனுக்கு உள்ள கௌரவத்தை



யும் யோக்கியதையையும் மறந்துபோகாமற் காப்பாற்றுதலும் ஆகிய இவையும், இன்னும் இவைபோல் வன பிறவும் நோக்கமாக உடைமையே நாம் மேலே எப்போதும் வேலையுள்ளவர்களா யிருக்கவேண்டும் என்பதனாற் குறிப்பிட்ட பொருள். கையினால் உழைத்து ஜீவிப்பது யாதொரு விதத்திலும் இழிவானதல்ல, அதைச் சரியானபடி செய்தால் அது மனதையும் உடம்பையும் நல்வழிப்படுத்தி உயர்த்துகின்ற தொழிலாகும்; அப்படியில்லாமல் ஏதோ வயிற்றுப்பிழைப்புக்காகவும் பயனற்ற வேலையாகவும் கருதிச் செய்தோமானால் அது செய்கின்றவனைத் தாழ்த்துகின்றது. தொழில் செய்வதில் மேலே சொல்லியபடி மனிதனை இழிந்தவனாகச் செய்யும் தன்மையும் இருப்பதனால், அந்தத்தன்மை நாம் செய்யும் தொழிலிலணுகாதபடி காக்க வேண்டும். வேலைசெய்வதில் மனிதனுடைய இச்சையின்படி ஓட்டப்பெற்ற வாயில்லாத ஆடுமாடு முதலிய கால்நடைகளைப்போலத் தொழில்செய்யாமல் போர்முனையில் நிற்கும் யுத்தவீரனைப்போல சௌரியத்துடன் யாதொரு தொழிலையும் செய்யவேண்டும் என்று ஒருகவிவருணித்திருக்கின்றார். அதை நாம் கவனிக்கவேண்டும். மேற்கூறியதெல்லாம் மனிதனுடைய மனோதர்மத்தைப் பொறுத்த விஷயங்கள்; ஆனால் மனிதனுடைய தேகதர்மமானது மனோதர்மத்தையே பெரும்பாலும் சார்ந்திருக்கிறது; ஆகையினாலே நாம் நம் தேகம் சுகமாகவும், திடமாகவும் இருக்கவேண்டுமேயானால் நம் மனோதர்மங்களைச் சீர்படுத்திக்கொள்ள வேண்டியதவசியம். ஒருவன் தன் மரியாதையை இழந்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். அவன் அன்று முதல் தன் தேகத்தைப்பற்றிக் கவனிக்கமாட்டான் என்பது நிச்சயம். இறங்கிய முகமும், குனிந்தநடையும், பணிந்த மொழிகளுமாக நமது தொழிலாளிகள் காணப்படுவதை நாம் தினமும் காண்கிறோம். அவர்கள் தங்களுக்கும் ஒரு கௌரவமும், தன் மரியாதையும் உள்ளதென்பதைமறந்து சுயாதீனமற்றவர்களாய் நினைப்பதே அவர்களை இத்தன்மையாக்கி இழிந்தவர்களாக எண்ணும்படி செய்கின்றது; அல்லாமலும் தொழிலாளிகளுக்கு அவரவர் வேலைகளுக்குத்தக்கபடி கைகளோ கால்களோ உடம்பின் ஒவ்வோர் பாகங்கள் மட்டும் அதிகமாக வலுப்படவும் மற்றவை அப்படிக்கல்லாமல் பலஹீனமாயிருக்கவும் காரணமுண்டு. அதனால் அவர்கள் தங்கள் தேகத்தில் உள்ள எல்லாவற்றையும் சமமாகவே வலுவடையும்படியாகத்தினந்தோறும் சிறிது தேகப்பயிற்சியும் செய்துவருதல்வேண்டும். அப்படிச்செய்தால் தான் அவர் கள் கம்பீரமான நிமிர்ந்த நடையும் உற்சாகமும் உடையவர்களாவார்கள். இவ்விஷயமானது நாம் மேலே கூறிய சுகாதார விஷயங்களுக்கு அன்னிய மான விஷயம் என்பதாக நேயர்கள் நினைக்கலாம்; ஆனால் அப்படியல்ல; சுகாதார விதிகளுக்கு இது மிகவும் அடுத்த விஷயம் மாலைக்காலங்களில் தங்கள் தங்கள் இல்லங்களைவிட்டு வெளியே சஞ்சரிப்பதனாலே தம்முடைய தேகசுகத்தை இழந்தவர்களாய் வருந்துகின்றவர்களின் தொகை இவ்வளவென்பதை நம் நேயர்கள் கனவிலும் அறிந்திருக்கமாட்டார்கள். நன்றாக நடத்தப்படும் ஒரு வீட்டினிடமாக மருந்தைப்போலத் துன்பத்தைப் போக்கிச் சுகத்தைக் கொடுக்கின்ற தன்மைகள் பலவுள்ளன, இது காரணம் பற்றியே இல்லத்திற்கு வீடு என்று பெயர் கொடுத்திருக்கின்றார்கள். வெளியே சென்று உலக விவகாரங்களில் அலைந்து திரிவதனால் உண்டாகிய அலுப்பும், கவலையும், களைப்பும் ஆகிய இவற்றையெல்லாம் திரும்பி வந்தவுடனே விட்டுவிடச் செய்கின்றதனாலே அதற்கு வீடு என்று பெயர் (வீடு என்னும் பகுதியடியா

கப்பிறந்த முகனிலைத் தொழிற் பெயரே வீடு என்பது மோக்ஷம் என்ற பொருளில் வரும் வீடு என்பதற்கும் இதுவே பொருள். பிறப்பாகிய வேலையைவிட்டு அடையும் ஆனந்தமே வீடு என்பது) அல்லாமலும் ஒருவனுக்குள்ள முக்கிய குணநிசயங்களிற் பல இல்வாழ்க்கையிலே தான் வளர்ச்சியடைந்து உறுதிப்படுகின்றன. தினசரி தொழில் செய்வோனுக்கு அவசியமான ஓய்வும் இல்லத்தினிடத்திலே தான் பெறப்படுகின்றது. மேலும் தொழிலாளியை அன்பென்னும் பந்தத்திற் குள்ளாக்கி அவன் வாழ்க்கையைப் பயனும் உடையதாகவும் ஆக்குகின்றது.

மேலே கூறியவை தொழிலாளிக்கு மட்டும்தான் என்பதாகப் பலர் எண்ணி இவற்றை அலட்சியம் செய்வார்கள். ஆனால் அப்படிச்செய்யக்கூடாது. தினந்தோறும் வேலைசெய்து அதனாலுண்டாகும் தேகப்பயிற்சியினால் தேகத்தைச் சுகமாய் வைத்திருக்கும் தொழிலாளிக்கே மேலே கூறியிருக்கின்றவை அவசியமாயிருந்தபோதிலும் உட்கார்ந்த இடம்விட்டுப் பெயராத மற்றைப் பாக்கியவான்கள் மேலே கூறிய ஐந்து விதிகளைக் கவனிக்கவேண்டிய அவசியம். அவற்றோடு தினமும் தந்தேகத்திற்கு வேண்டிய அளவு வேர்வையுண்டாகத்தக்கதாக சுத்தமான காற்றுள்ள இடத்தில் தேகப்பயிற்சியும் செய்துவருதல் வேண்டும்.

சி. கே. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ,

## ஸ்திரீ ரத்னம்.

### 163-வது பக்கத்தொடர்ச்சி.

பத்மாவதி:—இப்போது அந்த காலம் சமீபித்துவிட்டது. அதன் விவரம் முழுவதும் எனக்குத்தெரியாது. ஆனால் அது உங்கள் குலத்திற்கும், உங்கள் இனத்தாருக்குமே விரோதமான தென்பது எனக்கு நிச்சயம். ஒருவேளை என் அண்ணன் ஜயித்தால் உங்களுக்குக்கூட ஓர் அபாயம் நேரிட்டாலும் நேரிடலாம். அப்போது என் பெயரை உமது சத்துருக்களுடைய பெயரோடு சேர்த்துத் தானே சொல்லுவார்கள். உங்கள் பத்மாவதி யென்று யாராவது சொல்ல நியாயம் ஏற்படுமோ? ஜயித்தாலே என் விசனம் இப்படி இருக்கிறது. தோற்றுப்போனாலோ நான் சொல்லவேண்டாம். அப்போது என் அண்ணன் என் பிரியமான அண்ணன், உங்கள் குலத்தையே முன்னுக்கு கொண்டுவந்து என் பேரில் தன் உயிரை யெல்லாம் வைத்திருக்கிற என் அண்ணனைக்கொல்லாமல் விடுவார்களா? காப்பாற்றுவார்களா? என் அண்ணன் போய் என் உயிர் நிற்குமா? அவன்போய் நானிருக்கவேண்டிய தில்லை. ஒருவேளை என் துரதிர்ஷ்டத்தினால் என் உயிர் போகாமலிருந்தபோதிலும், உங்கள் குலத்தார்கள் தானே அவனைத்தூக்கில் போடுவார்கள். அப்போது என் அண்ணனைக்கொன்ற வம்சத்தில் ஒருவராகிய உங்களை நான் பார்க்கும்போதெல்லாம் என் அண்ணன் ஞாபகம் வராமலிருக்குமா? அப்போது நான் உங்கள் பேரில் எப்படி ஆசைவைக்கமுடியும்? நான் உங்களை எப்படி கலியாணம் செய்துகொள்ள முடியும்? ஐயோ! என்பிராணநாதா! நானென்ன செய்வேன்? எனக்கு இதை நினைக்க நினைக்க பைத்தியம் பிடித்து விடும்போலிருக்கிறதே என்று சொல்லி, தேம்பித் தேம்பி யழுதாள். உத்தமசேனனுக்கும் இதைக் கேட்க வருத்தமேயிட்டது. அவன் இது வரையில் இதுகளை யெல்லாம்



யோஜிக்கவில்லை. அவன் தர்மசீலன் ஜயிக்கமுடியாதென்றும் அவனுக்குசைன்னியமில்லை யென்கிற எண்ணத்தால் அவன் கலககாரியம் இவ்வளவிற்கு வருமென்றே நினைக்கவில்லை. பிறகு யோஜித்து அப்படி அவன் தோற்றுப் போனபோதிலும் நாம் சிபார்சுசெய்து அவன் உயிரையாவது காப்பாற்ற நம்மால் முடியாமற் போய்விடுமோ வென்று தீர்மானித்து பத்மாவதிக்கு தைரியம் சொல்ல ஆரம்பிப்பதற்குள், பத்மாவதி மறுபடியும், என் பிராணநாதா நாம் இதை நமக்கு என்ன அநுகூலமாக நினைத்தபோதிலும் நமது சிநேகம் நமக்கு ஒருவிதத்திலும் பிரயோஜனமாக விருக்கவில்லையே! தாங்கள் என்னைப்போலொத்தவர்களை கலியாணம் செய்து கொண்டென்ன பயன்? நானும் ஒன்றும் யோஜிக்காமல் முட்டாள்தனமாக உங்கள் பேரில் ஆசைவைத்து விட்டேனே! நானென்ன செய்வேன்?

உத்தமசேனன்:—(கோபித்துக்கொண்டு) பத்மாவதி நீ மறுபடியும் யோஜித்துக்கொண்டு எனக்கு வாக்களித்ததை யெல்லாம் வேண்டுமானால் ரத்துசெய்துவிடு. வேறு யாரையாவது கலியாணம் செய்துகொள். என்னை நேசித்தது பிசகென்று நீ நினைக்கிறபடியால், இனிஎன்னைமறந்துவிடு. என்னை நேசிக்கவே இல்லை யென்று நினைத்துக்கொள்.

பத்மாவதி:—உத்தமசேனனைக் கட்டிக்கொண்டு ஐயோ! என் பிராண நாதா! தாங்கள் இப்படி சொல்லலாமா? தாங்கள் யதார்த்தமாக இப்படி சொல்லுகிறீர்களா?

உத்தமசேனன்:—பத்மாவதி! எனக்கு ஒரே பதில் சொல். உனக்கு என்ன கஷ்டம் வந்தாலும் சரி, உன் குலமே முழுகிப்போனாலும் சரி, என் குலமே முழுகிப்போனாலும் சரி, அல்லது பூலோகமே முழுகிப்போனாலும் சரி, நாம் ஏன் இவனை நேசித்தோமென்று வருத்தப்படாமலிருப்பாயா? சொல். நீ அப்படி வருத்தப்படுகிறதாயிருந்தால் சொல்லிவிடு, என்பேரில் உனக்குள்ள ஆசையைவிட்டுவிடு. ஆனால் என் ஆசையை நான்விடமுடியாது. உனக்கு என் பிரியம் இவ்வளவு இருக்கிறதென்று தெரியவில்லை.

பத்மாவதி:—நான் ஒருபோதும் உங்கள் சிநேகத்தைப்பற்றி வருத்தப்படமாட்டேன். நான் சொன்னது பிசகு. என் விசாரம் அப்படியெல்லாம் சொல்லும்படி செய்தது. என் வருத்தத்தில் நான் என்ன சொன்னபோதிலும் தாங்கள் என்னை மன்னிக்கவேண்டும்.

உத்தமசேனன்:—ஆனால் உன் அண்ணன் முன் இருந்ததைப்பார்க்கிலும் இப்போது அதிக முயற்சியோடு இருக்கிறானா? காரியம் சீக்கிரம் முடியும்போலிருக்கிற தென்றாயே. அது உனக்கு எப்படி தெரியும்?

பத்மாவதி:—ஏனென்றால், ஆயுதங்களோடு அநேகர் வீட்டிற்கு வருகிறார்கள். முன் புஸ்தகங்களை அடிக்கடி பார்த்துக்கொண்டிருந்த என் அண்ணன், இப்போது அதுகளை யெல்லாம் விட்டுவிட்டான். சுவற்றில் ஓர் பஞ்சாங்கத்தை தொங்கவிட்டிருக்கிறான். ஏதோ பைத்தியம் பிடித்தவன்போல் தானே ஏதாவது பேசிக்கொண்டு உலாத்திக்கொண்டே அப்பஞ்சாங்கத் தின் பக்கத்தில் வந்து விரல்களால் தேதிகளை துளாவுகிறான். விரல் ஓர் குறிப்பான தேதிக்கு வந்ததும் கத்தியை அப்படியே உருவிக்கொண்டு நிற்கிறான். தனக்குத் தானே சிரித்துக்கொள்கிறான். சென்ற இரண்டு இராத்திரி

களாக ஆயுதங்களும் மேல்மேலும் விட்டில்குளியல்களாக சேர்க்கப்பட்டிருக்கின்றன.

உத்தமசேனன்:—ஆ! ஆ!! இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது. ஆயுதங்கள் கூடவா சேர்த்துவிட்டான். நான் அவனை இவ்வளவு சமர்த்தனென்று எண்ணவில்லையே! ஆனால் கலகம் நிச்சயம் தான், பெண்ணே! அது எப்படி யிருந்தபோதிலும் நான் உயிரோடிருக்கு மளவும் உன் அமானன் இரத்தம் ஒரு பொட்டாவது சிந்தும்படி நான் பார்த்துக்கொண் டிருக்க மாட்டேன். எனக்கு அவன் எப்படி யிருந்தபோதிலும், அவன் பேரில் பிரியம் மட்டும் என்றைக்கும் குறையாது என்று இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, பெண்ணே பத்மாவதிநாழிகையாய்விட்டது, வீட்டிற்குப் போகவேண்டும், ஜனங்கள் கூட்டமாக வருகிறார்களென்று ஓர் சப்தம் கேட்டது. பத்மாவதி உடனே விடைபெற்றுக்கொண்டு சென்றாள்.

## 8-வது அதிகாரம்.

மறுநாள் காலையில் சூரியன் உதயமாகவும் ஜனங்கள் கோவில் வாசலில் கூட்டங் கூட்டமாக நின்றார்கள். சிலர் வேடிக்கை பார்ப்பதற்கென்றும், சிலர் தர்மசீலனுடைய அழகான பேச்சுகளைக் கேட்பதற்கும், இன்னும் சிலர் சக்கிரவர்த்தியின் பிரதிநிதியின் தாக்ஷிணியத்திற்காகவும் பிரபுக்களில் அநேகர் இந்தசமயத்தில் தங்கள் சைன்யத்தின் பலத்தைக் காட்டுவதற்குமாய் எல்லோரும் வந்திருந்தார்கள். கோவிலின் படியேறி ஓர் பெரிய மண்டபத்தின் நடுவில் கார்த்தவீரன் கூட்டம் வருகிற வேடிக்கையைப் பார்த்துக்கொண்டு நின்றான். பிரபுக்களில் அநேகர் கொடிகளுடனும் கூலி சிப்பாய்களுடனும் வந்தார்கள். ஒருவன் வழிவிடுங்கள் நிர்க்குணபிரபு வருகிறாரென்றான். மற்றொருவன் அவனைப்பார்த்து அடே முட்டாள்! விலகிக்கொள், உத்தமசேன பிரபு வருகிறார் என்றான். நிர்க்குணன் ஆள்கள் ஒரே உயரமாயில்லாமலும், ஒரே வரிசையாய் வராமலும் தங்கள் ஆயுதங்களைத் தேய்க்காததால் துருப்புப் பிடிக்கவிட்டு, அந்த அசுத்தமான ஆயுதங்களோடு தனித்தனியாய் வந்தார்கள். உத்தமசேனன் ஆள்களோ, கொஞ்சமாயிருந்தபோதிலும் வெகு சுத்தமான ஆயுதங்களுடன் ஒரே வரிசையாயும் ஒரே உயரமாயும் வந்தார்கள், ஜனங்கள் இதைக்கண்டதும் கைகொட்டி உத்தமசேன பிரபுவுக்குப் பிறகு தான் நிர்க்குணபிரபு போகவேண்டுமென்று கத்தினார்கள். உடனே நிர்க்குணனுக்கு கோபம் பிறந்து கத்தியை உருவிக்கொண்டு உத்தமசேனன் ஆள்கள்கூட்டத்தில் புகுந்து சண்டைசெய்ய ஆரம்பித்தான், இதைக் கண்ட சக்கிரவர்த்தியின் சிப்பாய் ஒருவன் ஓர் வெள்ளித்தடியில் அவனைத் தடுத்து ஐயா இங்கே ஒருவரும் கலகஞ் செய்யக்கூடாதென்று சக்கிரவர்த்தியின் உத்தரவென்றான். நிர்க்குணன் அதை லக்ஷியஞ்செய்யாமல் அடே என்னை எதிர்க்கிறாயா என்று கத்தியால் அந்தத் தடியை கீழேதட்டிவிட்டான்.

உடனே அச்சிப்பாய் இதற்கெல்லாம் பயப்படாமல் மறுபடியும் அவனைத் தன் கையால் தடுத்துக்கொண்டு சக்கிரவர்த்தியின் உத்திரவுக்கு மரியாதை செய்யும். நீர் இங்கே கலகம் செய்யக்கூடாது. பின்னே நகருமென்றான்.

கூட்டத்தில் ஒருவன்பராக்கிரமகேதுவைப்பார்த்துத் தன்னை சக்கிரவர்த்தி இங்கு அவனை சிப்பாயாக போட்டிருக்கிறார். நிர்க்குணன்கோபத்துக்கு



அவன் பயப்படுகிறானா பாரென்றான். இப்படி யிருக்க நிர்க்குணன் ஆள் ஒருவன் பராக்கிரமகேதுவை வெட்டக் கத்தியை ஓங்கவே, ஜனங்களில் சிலர் இந்த அக்கிரமம் உண்டா? சக்கிரவர்த்தி கட்டளையை மீறலாமா வென்று சொல்லவும், திடீரென்று ஜனங்கள் ஏகரும்பமாய் ஒன்றுசேர்ந்து பராக்கிரமகேதுவைத் தப்பவைத்து நிர்க்குணனைகீழே தள்ளிவிடவும், நிர்க்குணன் ஒன்றுஞ் சொல்லத் தோன்றாமல் தான் பிழைத்தால் போதுமென்று எழுந்திருந்து அடே பராக்கிரமகேது இன்றைக்கு நீ செய்த காரியத்துக்கு உன் தலை தப்புகிறது கஷ்டம்? உன்னைக் கொல்லாமல் விடுவதில்லை. இருக்கட்டுமென்றான். உடனே பராக்கிரமகேது ஜனங்களைப் பார்த்து, ஜனங்களே நிர்க்குணபிரபுவுக்கு வழிவிடுங்கள், அவர் அகாதசூரர் சக்ரவர்த்தியின் உத்தரவுப்படி நான் நடந்த குற்றத்துக்காக, என் உயிரை நிர்க்குணப் பிரபு வாங்கிவிடப் போகிறாராம். எல்லோரும் தெரிந்துகொள்ளுங்களென்று சொல்லவும், ஜனங்களெல்லோரும் சேர்ந்து அவன் என்ன பண்ணமுடியுமென்று கத்தினார்கள். இதைக்கண்ட கார்த்தவீரன் உத்தமசேனன் தன் பக்கத்தில் வரவும் அவன் காதில் ரகசியமாக பிரபுக்கள் இதைப் பார்த்துவிட்டுக் கூட, தர்மசீலனிடத்தில் சக்தியில்லையென்று சொல்லலாமாவென்றான். உத்தமசேனனும் கார்த்தவீரனும் தனிமையாய்ப் போயுட்கார்ந்தார்கள். அக்கோவிலில் இப்படி சிறப்பான ஏற்பாடுகள் இதுவரையில் இருந்திருக்கமாட்டாது. அந்த மண்டபத்தைச் சுற்றிலும் நாற்காலிகள் போடப்பட்டு கீழே ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. ஓர் புறத்தில் மேடைபோடப்பட்டு அதன் பக்கத்தில் ஓர் பெரிய கல் வைக்கப்பட்டிருந்தது. பிரபுக்களெல்லோரும் மண்டபத்தி லுட்கார்ந்தார்கள். ஜனங்கள் கீழே நின்றார்கள். எல்லா ஜனங்களும் கூடினவுடன் திடீரென்று ஓர் மணியடிக்க வாரம்பித்தது; மணியடித்தானவுடன் திரை தூக்கப்பட்டு தர்மசீலன் மேடைமீது வந்து நின்றான். தர்மசீலனைக் கண்டதும் ஜனங்கள் தங்கள் இரைச்சலையெல்லாம் விட்டு விட்டு கவனிக்கலானார்கள்.

தர்மசீலன்:—ஜனங்களே, பிரபுக்களே, நாம் இன்றைக்கு ஒன்று கூடியிருக்கிற காரணம் உங்களுக்குத் தெரியுமா? நமது தேசம் முன்னுக்கு வர வேண்டியதற்கு ஓர் ஆதாரவை உங்களுக்குக் காண்பிக்கவேயன்றி வேறல்ல. நமது பெரியோர்கள் வெகு சிறப்பாயிருந்ததை நாம் மறந்துவிட்டோம். ஆனால் அவர்கள் இறந்துபோன போதிலும் அவர்கள் செய்கைகள் நம்மை அவர்கள் சுவர்க்கத்திலிருந்து கூப்பிட்டு புத்திசொல்வது போலிருக்கின்றன. இன்றைக்கு நாம் கூடியிருப்பது சிலர் படித்தவர்களுக்குத் தான் பிரயோஜனமென்று நினைப்பார்கள்; அது வீண் எண்ணம், நான் சொல்லப்போகிறதெல்லாம் நமது தேசத்துக்கேயன்றி, படித்தவர்களுக்கு மட்டுமல்ல. சிலர் சங்கதியை இன்னும் சொல்லக்காணோமே யென்று என்னை வெகு ஆவலுடன் பார்க்கிறார்கள், ஆதலால் இதோ சொல்லுகிறேன் கவனித்துக்கேளுங்கள். இதோ உங்கள்முன் வைத்திருக்கிற கல்லைப்பாருங்கள்: இந்தக்கல் எங்கேயிருந்து எடுக்கப்பட்டதென்பதைச் சொல்ல எனக்கே வெட்கமாயிருக்கிறது. நீங்கள் உங்கள் ராஜியத்தை கவனிக்காமலிருந்ததால் கோவில்கள் பாழாகி, அக்கோவில்களிலிருந்து இந்தக் கல் எடுக்கப்பட்டது. இந்தக் கல்லிலிருக்கிற சித்திரத்தையும் எழுத்துகளையும் பார்த்தீர்களா? நீலமேக ராஜனுக்கு ராஜ்யபட்டம் கட்டினபோது இந்த சித்திரம் எழுதப்பட்டது. இதில் ராஜாவுக்கு என்ன அதிகாரங் கொடுக்கப்

பட்டிருக்கிறதென்பதையும் எழுதியிருக்கிறது. ராஜாவுக்கு சட்டங்கள்
போடவும் மற்ற ராஜாங்கங்களோடு சிநேகம் செய்துகொள்ளவும் அதிகா
ரங் கொடுக்கப்பட்டிருக்கிறது. நன்றாய்க்கவனியுங்கள் மேலும் (பிரபுக்களைப்
பார்த்து) பிரபுக்களே! உங்களுக்குத்தான் சொல்வது பிரபுபட்டம் யோக்ய
தைப்பார்த்துக் கொடுப்பதற்கும் ராஜாவுக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டிரு
க்கிறது. அவர்களின் பட்டங்களை குற்றம் செய்தால் பிடுங்கிக்கொள்ளவும
அதிகாரங்கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தஅதிகாரங்கள் முழுமையும் ராஜா
வுக்குத் தான் கொடுக்கப்பட்டன. இதைக் கொடுத்தவர்கள் யார்? கமிட்டி
மெம்பர்கள்; அவர்களை யார் நியமித்தார்கள்? அவர்களை ஏற்படுத்தியவர்கள்
ஜனங்களேயாம்.

பராக்ரமகேது:—அவன் கடைசியில் இதற்குத்தான் வருவானென்று
எனக்கு முன்னமேயே தெரியும்.

வேறு ஒருவன்:—அவன் தைரியத்தைப் பார்! பிரபுக்களை வைத்துக்
கொண்டே இப்படிசொல்லுகிறான் பாரென்றான். சக்கிரவர்த்தியின் சிப்பாய்
ஒருவன் பேசாதே என்றான். உடனே ஜனங்கள் இரைச்சலை நிறுத்த தர்ம
சீலன் மறுபடி ஆரம்பித்தான், ஜனங்களே இந்த அதிகாரங்களை ராஜாவுக்
குக் கொடுத்தது யார்? ஜனங்கள்தான். ஆனபடியால் இந்த அதிகாரங்கள்
ஜனங்களுடைய அதிகாரங்கள். ராஜா அந்த அதிகாரத்தை தனக்கென்றே
கொள்ளையடித்துக்கொண்டாரா? அது அவரோடேகூடப் பிறந்த அதிகார
மா? பிரபுக்களே அந்த அதிகாரங்கள் ராஜாவுக்கு கோட்டைகள் கட்டிக்
கொண்டநிலேயும், கூலிச்சிப்பாய்கள் போட்டுக்கொண்டநிலேயும்
கிடைத்ததா சொல்லுங்கள் இல்லை. ராஜா அப்போதைக்கப்போது ஜனங்
களுக்கு நியாயம் செய்ததால் ஜனங்கள் மேல்மேலும் அதிகமாகக் கொடு
த்த அதிகாரமேயன்றி வேறல்ல. ஆகையால் அதிகாரங்களெல்லாம் ஜனங்
கள் கொடுத்ததாயிருந்தன. ஜனங்களே இப்போது உங்களுக்கு கொடுக்க
என்ன அதிகாரம் இருக்கிறது? இப்போது யாராவது ஒருவன்தான் செய்
யும் அதிகாரங்களுக்கு உங்களைக் கேட்கிறானா? அவனுக்கு ஆலோசனைசபை
ஏது? தன் சக்திதான் அவனுக்கு கிடைத்த அதிகாரத்துக்கு ஆதாரபத்திரம்
முன்னாள்போல் மசியில் எழுதப்பட்டதா? இல்லை ஜனங்களுடையரத்தத்தால்
எழுதப்படுகிறது, ஜனங்கள் என்பவர்கள் எங்கே? ஜனங்களென்பதே கிடை
யாது; உங்கள் ராஜா இப்போதுயார்? ஓர் அன்னியதேசத்தான். உங்கள்
மடாதிபதி யார்? அவர் இருக்கிறஇடம் தெரியவில்லை. உங்களுக்கு யஜமானன்
யார்? ஒருவனுமில்லை, உங்களை ஆளுகிறவன் என்பவனே கிடையாது. ஆனால்
உங்களை கொல்கிறவன் அனேகரிருக்கிறார்கள். ஏனென்றால் சட்டத்தை
ஸ்தாபம் செய்யாத கொள்ளைக்காரர்கள் உங்கள் ராஜாங்கத்துக்குள் வந்து
விட்டார்கள்; உங்கள் பிரபுக்களுடைய நாகடத்தைகளும் அவர்கள் ஒருவரு
க்கொருவர் செய்துகொள்ளும் சண்டைகளும் கொள்ளைகளும் நமதுசக்ரவர்
த்தியையும் மடாதிபதியையும் வெளியில் துறத்திவிட்டன. உங்கள் சொத்
தெல்லாம் தினந்தோறும் கொள்ளையிடப்பட்டு தெருவெல்லாம் ரத்தமாக
ஓடுகிறது என்றான். இதற்குள் நிர்க்குணனும் பதுமனும் இதையெல்லாம் கே
ட்டு முகங் கடுத்துகொண்டதைப் பார்த்து தர்மசீலன் அவர்களை நோக்கி
பிரபுக்களே! இந்த இடத்தில் வந்துகூட உங்களுக்கு என்பேரில் கோபம்
நீங்கவில்லையே. நான் ஒரு ஏழை; எல்லோரையும் போலொருவன்; ஆனால்



இந்த ராஜாங்கத்தின் க்ஷேமத்தை நான் கோருகிற அக்கிரமத்துக்காக என
க்கு விரோதிகளனேகர் ஏற்பட்டு விட்டார்கள். நான் இந்த தேசம் முன்னு
க்கு வரவேண்டுமென்று சொல்கிறேனல்லவா? அதனால் பிரபுக்கள் எல்
லோரும் என்னை திட்டுகிறார்கள், நீங்களென்னை எப்படி வைதபோதிலும்
சரி, மூன்று ராஜ துரோகிகள் உங்கள் ராஜியத்தைக் கெடுக்கக் காத்திருக்
கிறார்கள். சுவயகாரியத்தைப் பார்த்துக்கொள்ளுதல், ஒருவருக்கொருவர்
சண்டைசெய்தல், ஒருவரைப்பார்த்து ஒருவர் பொறாமைப்படுதல்; இவ்வித
எண்ணமுடையவர்கள் சத்துருக்களன்றோ?

பராக்ரமகேது:—மனிதன் இப்படித்தா னிருக்கவேண்டும், என்ன
தைரியமாய்க் கண்டிருக்கிறான் பாரென்றான்.

வேறு ஒருவன் அவன் ஒருவன் இப்படி ஒத்தாசை செய்யும்பொழுது
நாம் பயங்காளிகளாக இருப்பது சரியல்ல. சக்ரவர்த்தியின் சிப்பாய் மறுபடி
யும் இவர்களைப் பார்த்து பேசாதே என்றான். தர்மசீலன் மறுபடியும்பேச
ஆரம்பித்தான். ஜனங்களே இனிமேலாவது உங்கள் தூக்கத்தைவிட்டு விழி
த்துக்கொள்ளுங்கள், உங்கள் முன்னோர்கள் எவ்வளவு அதிகாரத்தை வகித்
துவந்தார்களென்பதை இந்தக் கல்லைப் பார்த்தாவது தெரிந்துகொள்ளுங்
கள். உங்கள் க்ஷேமத்தைத் தேடிக்கொள்ளுங்கள். நமது மடாதிபதி பிறந்த
நாள் சமீபத்தில் வருகிறது; ஞாபகமிருக்கட்டும். அப்போது வெகுதேசத்து
ஜனங்களெல்லாம் இங்கே வருவார்கள். தாங்கள் சண்டைகளை யெல்லாம்
விட்டு விட்டு குருவைக்கண்டு உபதேசம் பெறலாமென்று வரும் ஜனங்கள்
உங்களிடம் சண்டையைக் கண்டால் கேலிசெய்ய மாட்டார்களா? இங்கே
புண்யம் சம்பாதிக்கலாமென்று அவர்கள் வரும்போது இங்கே பாபம்
குடிகொண்டிருந்தால் நன்றாயிருக்குமா? ஜனங்களே! இதுதான் நல்லசமயம்;
இனி சண்டை சச்சரவுகளை விட்டு விடுங்கள். அன்னியதேசத்தார் ரோட்டில்
பயமில்லாமல் இப்போது வரமுடியவில்லை; பாருங்கள்! இது கொள்ளைக்காரர்
களா லல்லவா? அவர்களை நீங்கள் ஒன்றுகூடி அடித்துத் துரத்துங்கள். கூலி
சிப்பாய்களை உங்கள் ராஜியத்தை அண்டாமல் செய்யுங்கள். அவர்களைத்
துலைக்க அவர்களை வைத்திருக்கிறவர்கள் உதவிசெய்யாமல் போனால் அவர்
களையும் சேர்த்து துலைத்துவிடுங்கள். துஷ்டர்களுடைய கத்திகளைப் பிடுங்கி
எறிந்து விடுங்கள். ராஜியத்தில் நியாயத்தை நிலைநாட்டுங்கள். அப்படி
செய்வதை யார் எதிர்த்தபோதிலும் அவர்களை ராஜ துரோகிகளென்று
நினைத்துக்கொள்ளுங்கள். அவர்களை முன்னடி துரத்துங்கள். இங்கே வரப்
போகிற ஒவ்வொரு தேசத்தாரும் நமது ராஜாங்கத்தைப் பார்த்து ஆச்
சரியப்படும்படி செய்யுங்கள். நீங்கள் இப்படி செய்ய ஆரம்பித்தால்தான்
பகவானும் உங்களுக்கு ஒத்தாசை செய்வார் என்றான். ஜனங்களுக்கு
இதைக் கேட்டவுடன் மிக ஆச்சரியமும் உத்ஸாகமும் மேலமேலும் அதிகரி
க்க தர்மசீலன்கீழே இறங்கி திரைக்குள் போனதுகூட ஒருவருக்குந்தெரிய
வில்லை. சிலர் தெய்வம்தான் இவனை அனுப்பியிருக்கிறதென்றார்கள். சிலர்
இவன் தெய்வமேதா னென்றார்கள். பிரபுக்களும் ஒன்றும் பதில் சொல்லத்
தோன்றாமல் விசித்ரவனைதர்மசீலன் நிந்திக்கும்பொழுது நிர்க்குணன்சிரிக்
கிறதும், நிர்க்குணனை நிந்திக்கும்பொழுது பதுமன் சிரிக்கிறதுமாய் இருந்
தார்கள். இப்படி யிருக்க சக்ரவர்த்தியின் சேவகன் மறுபடியும் ஜனங்களைப்
பார்த்து, இரையாதேயுங்கள் இதோ நமது யஜமானர் பேசப்போகிறாரென்

றான். குணசேகரன் உடனே எழுந்திருந்து ஜனங்களே, தர்மசீலன் என்ன சொல்லப்போகிறானென்பது எனக்கே தெரியாமல் நானும் கேட்க வந்தேன். அவன் சொன்னதெல்லாம் அநேகமாக நியாயமாகத் தானிருந்தது. ஆகிலும் நான் உங்களுக்கு முக்கியமாக சொல்லவேண்டியதென்னவென்றால் மடாதிபதி பிறந்தநாளை நீங்கள் மறக்காதேயுங்கள். அன்றைக்கு வெகு தேசங்களிலிருந்து எல்லோரும் வருகிறபடியால் நீங்கள் உங்களுடைய கலகங்களை விட்டுவிட்டு எல்லோரும் ஒன்றுசேர்ந்து ரோட்டுகளில் திருடர்கள்பயமில்லாமல் செய்துவிடவேண்டும். அதுதான் நான் உங்களை முக்கியமாய்க்கேட்டுக் கொள்வது. நீங்கள் இப்படி செய்தால் உங்கள் சக்ரவர்த்திக்கும் சந்தோஷமுண்டாகும் என்று சொல்லி உட்கார்ந்தார். பிரபுக்கள் பதிலுரைக்கத் தெரியாமல் ஒருவரை யொருவர் பார்த்தார்கள். இதைக்கண்ட உத்தமசேனன் எழுந்திருந்து, ஜனங்களே, பிரபுக்களே, நான் பலதேசங்களுக்குச் சென்றிருந்தமையால் மற்ற பிரபுக்களைப்போல எனக்கு ஒருவர் பேரிலும் விரோதமில்லை. ஆனால் நிர்க்குண பிரபுபேரில் மட்டும் நான் ஒருதடவை சண்டைசெய்யவேண்டி நேரிட்டது, அதற்கும் இப்போது அவரை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். இனி எனக்கு இந்த ராஜ்யத்துக்கு கெடுதல் செய்யும் சத்துருக்களைத் தவிர வேறு சத்துருக்கள் கிடையாது. இனிமேல் என்னைப்போல இந்த ராஜ்யத்துக்கு ஒத்தாசை செய்பப்பட்டவர்கள் வேறு ஒருவருமில்லை யென்று சொல்லும்படி நான் செய்துகொள்கிறேன். இன்னும் 10-தினத்தில் 40-யுத்தவீரர்கள் நான் தயார் செய்து அவர்கள் எங்கேயெல்லாமிருந்தால் நமக்கு அனுகூலமோ அங்கேயெல்லாம் அனுப்புகிறேன். பிரபுக்களே! நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் சண்டையை விட்டு என்னைப் போலிந்த ராஜ்யத்துக்கு ஒத்தாசை செய்யவேண்டும். ஜனங்களே நீங்களும் ஒன்றுகூடி உங்களா லானதைச் செய்யவேண்டுமென்று சொல்லி உட்கார்ந்தான். பிரபுக்கள் மறுபடியும் ஒன்றும் பேசாமலிருந்ததைக்கண்டு குணசேகரன் மறுபடியும் எழுந்திருந்து (உத்தமசேனனைப் பார்த்து) உத்தமசேனப்பிரபுவே! இந்த ராஜ்யத்துக்கு நீர் பிள்ளையென்பதை நன்றாய் காண்பித்தீர்! எல்லோரும் உம்மைப்போ லொத்தாசை செய்தால் போதும். பிரபுக்களும் தங்களுடைய மௌனத்தால் நீர் சொன்னது முழுவதும்சரியென்றும் அப்படியே தாங்களும் செய்வதாயும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஜனங்களே நாம் வந்தகாரியம் தீர்ந்துவிட்டது. இனி எல்லோரும் போகலாம் என்று சொல்லவும் எல்லோரும் இரைச்சலுடன் வந்ததுபோல போய்ச் சேர்ந்தார்கள்.

தர்மசீலன் தன் வீட்டிற்கு தனிமையாக மனதில் யோசித்துக் கொண்டே போகும்போது தனது தோளில் யாரோ கைபோட்டதைக் கண்டு திடுக்கிட்டு திரும்பிப்பார்க்க கார்த்தவீரன் நின்றான்.

கார்த்தவீரன் ஐயா! தங்களுக்கு என்னைத் தெரியுமா?

தர்மசீலன்—உம்மை விசித்திரவ பிரபுவீட்டில் பார்த்தஞாபக மிருக்கிறது; நீர் அவரைச் சேர்ந்தவரா?

கார்த்தவீரன்—ஐயா! நான் அவர்கள் வம்சத்தில் பிறக்கும் துரதிர்ஷ்டத்தை யடையவில்லை. நல்லது வாருங்கள் பேசிக்கொண்டே போவோம். நான் வெகுநாளாய் உங்கள் சிநேகத்தை எதிர்பார்த்தேன்; இன்றைக்குத் தான் உங்களைப்பார்க்கக் கொடுத்துவைத்தேன். அன்றைக்கு நீங்கள் சோவி



யில் செய்த பிரசங்கத்தைக் கேட்டேன். இன்றைக்கு பிரபுக்களை வைததையும் கேட்டேன்; இன்னும் ரகசியமாய் உங்கள் காதோடு சொல்லுகிறேன் கேளுங்கள். அன்று இராத்திரியில் பாழும் மண்டபத்தில் சில யுத்தவீரர்களிடம் சத்யம் வாங்கினீரே அதுவும் எனக்குத் தெரியுமென்றான்.

தர்மசீலன்—உடனே கோபங்கொண்டு திரும்பி அவன் முகத்துக்கெதிரில் நின்று கத்தியை உருவ ஆரம்பித்து மறுபடியும் யோசித்துக்கொண்டு ஆ! ஆ!! இந்ததேசம் இப்படி இருந்தால் துலையட்டும்! ஜனங்களுக்குள் ராஜதுரோகிகள்கூட இருக்கிறார்களா வென்றான்.

கார்த்தவீரன் ஐயா! நீங்கள் அப்படியெல்லாம் சந்தேகிக்க வேண்டியதில்லை. இந்த ரகசியம் எனக்குத்தான் தெரியும். ஜனங்களில் ஒருவரும் சொல்லவில்லை. இதை நான் மட்டும் வெளியே சொன்னால் இன்னேரம் உம்மை தூக்கில் போட்டிருப்பார்கள். நான் சொல்லாம லிருக்கிறதிலேயே நீர் என்னை சிநேகிதனென்று ஊகிக்கலாம்.

தர்மசீலன்—உமக்கு என்சக்தி இன்னும் தெரியவில்லை. இந்த தேசத்தில் என்னை தூக்கில்போடுகிறவன்கூட இருக்கிறானா? நல்லது இருக்கட்டும், உம்மைப்பார்த்தால் ஓர் யுத்தவீரர்போல தோன்றுகிறது. நீர் யார்?

கார்த்தவீரன் நல்லது நாம் தனிமையாய்ப்பேச வேண்டும், தனித்த இடமொன்றும் இல்லையா?

எஸ். இராமசுவாமி ஐயர், பி. ஏ.

# அநந்தவிருதம்.

(90-வதுபக்கத்தொடர்ச்சி.)

தேவர்கள் புஷ்பமாரி சொரிந்தார்கள்; செந்தாமரைக் கண்ணனுடைய திவ்வியபாத கமலத்தைக் கண்டு மெய்மறந்து அவர் பாதவடியில் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து ஓம் நமோ நாராயணா என்னைக் காப்பாற்றுமென்று இருகரங்களையும் கூப்பிக்கொண்டு ஸ்தோத்திரம் செய்யத் தொடங்கினார் கௌண்டன்னியர்; அண்ட பிரமாண்ட மெல்லாம் சிருஷ்டித்து இரக்ஷித்து சம்ஹாரம் செய்பவரே! ஓ கிருபா சமுத்திரமே! நீரல்லவோ திரௌபதியின் மானத்தைக் காப்பாற்றியவர்? நீரல்லவோ 'ஆதிமூலமே' என்று முறையிட்ட கரிராஜனைக் காப்பாற்றியவர்? பக்தர்களை இரக்ஷிக்கும் பக்த சுதந்திரனே! தீனபந்துவே! ஓ ஞானத்தையளித்து உம்பாதத்தைக் கொடுப்பவரே! ஏ! சங்கு சக்கரதாரியாயுள்ளவரே! உமக்கு அநேககோடி நமஸ்காரம். ஜகதீசா! ஜலஜாக்ஷனே! கோவிந்தா! மாதவா! உமக்கு அநேக நமஸ்காரம். மச்ச, கூர்ம, வாமன, நரசிம்ம, பரசுராம, இராம, கிருஷ்ண, கலிக,தசாவதாரனே! என்னை இரக்ஷியும், இரக்ஷியும்; வியாசசௌனகாதி விதுர, நாரத, சுக்கிரீவர் முதலியவர்களுக்கெல்லாம் நீரல்லவோ முன்னின்று அபயஹஸ்தம் கொடுத்

தருளினீர், சேஷசைனத்தில் பள்ளிக்கொண்டவரே! பாவியாகிய அடியேனை இரக்ஷித்துகாரும், கிருபையாகிய கண்ணால் பாருமென்று ஸ்தோத்திரஞ்செய்யும் கௌண்டன்னியரைப் பகவான் தமது திவ்விய கரங்களால் தழுவி, தமது பக்கத்தில் உட்காரவைத்து, ஓவத்ஸா! உன் பக்திக்கு மிக மெச்சிக் கொண்டேனென்று அன்புடன் களித்து நின்றார்.

'கேளும் தரும நந்தன! ஜெகதீசன் புன்சிரிப்புடன் முனிவரைப்பார்த்து உமக்கு என்னவரம் வேண்டும் என்றார். அஷ்ட ஐஸ்வரியத்துடன் இந்தபூமியில் வெகுகால மிருந்து புனர்பூச நக்ஷத்திரத்தில் சாயுஜ்ய பதவியை யடைவீரென்றவுடன், முனிவர் ஓ கிருபாகரக் கடவுளே! பிரம்ம இந்திரபட்டம் அடியேனுக்கு விருப்பமில்லை. உம்முடைய பாதாரவிந்தம் ஒன்றையே நான் விரும்பியிருக்கிறேனென்றுசொல்லி ஈசனை மனதென்னும் கயிற்றால்கட்டி மெய்மறந்திருந்தார். உடனே கடவுள் மறைந்துவிட்டார். முனிவர் கண்திறந்து ஈசனைக்காணாமல் மெய்சோர்ந்து கடவுளே! உம்மை இனி எப்பொழுது காண்பேன் என்று துக்கித்துக் கொண்டுவரும் வழியில் முன்போல தடாகங்களும் பிருந்தாவன சோலைகளும், சத்திரங்களும், கல்விசாலை, வைத்திய சாலைகளும், மாடகோபுரமமைந்தவும் பார்க்க ரமணியமாயுமுள்ள பத்மபுரி என்னும் பட்டணத்தைக் கண்டு அதிசயித்து நின்றார். வாத்திய கோஷத்துடன் மந்திரி பிரதானியும், ஜனங்களும், வேதியர்கள் பூரணகும்பத்துடனும், சுமங்கலிகள் ஆலாத்தி காப்பெடுக்க சுசீலையை முன் நடத்திக்கொண்டு கௌண்டன்னியர் பாதத்தில் யாவரும்வணங்கி அரசனில்லாத இப்பட்டணத்திற்குதங்கள்தான் இராஜாவாகவிருந்து எங்களைக் காப்பாற்றவேண்டுமென்று மிக வணக்கத்துடன் பிரார்த்தித்தார்கள். சுசீலை தன் பர்த்தா வரவால் மிகமகிழ்ந்து பரந்தாமனுடையகட்டளையை நாம்தள்ளக்கூடாதென்று அதிக வினயத்துடன் சொல்லி நின்றாள். முனிவர் தம் பத்தினி இஷ்டப்படியும், மற்ற ஜனங்களின் அபிப்பிராயப் படியும் இராஜ்யத்தையடைந்து நீதி நெறி தவறாமல் மனதை பரப்பிரமமிடத்திலும் உடலை இராஜாங்க விஷயத்திலும் செலுத்தி தாமரையிலுள்ள ஜலம்போல் வெகுகாலம் தம்மில்லாளுடன் இராஜ்யபாரஞ்செய்து அநந்த பத்மநாபனை பூஜித்து அந்தத்தில் பரமபதத்தை சுசீலையுடன் அடைந்தார்.

கேளும் தரும நந்தன! நீங்கள் இன்னும் கொஞ்சநாளில் உங்கள் இராஜியத்தையடைந்து தருமார்த்த காமமோக்ஷங்களை அடைவீர்களென்று ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியானவர் சொன்னார். பார்வதி! ஆம், இந்த விரதத்தை அவசியம்செய்ய வேண்டியதுதான். கேட்கும் பொழுதே வெகு ஆநந்தமாயிருக்கிறதே!

லட்சுமி! ஆமாம் பார்வதி! பெரியோர்கள் பூஜை, சபம், விரதங்கள் நோன்புகள் முதலியவைகளை யெல்லாம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். தினம் தினம் நாம் பூசை, சபம் செய்துகொண்டு ஈஸ்வரதியானத்துட னிருந்தால் பக்தியானது பெருகி முக்திக்குக் காரணமாகும். அதற்குத்தான் கல்வியென்னும் முதல்துணையும், நன்னடக்கை நற்சகவாசம், என்பவைகள் இரண்டாவது துணையாக விருக்கவேண்டும். இப்படி யிருந்தால்தான் காருண்ணியருடைய கிருபைக்கு பாத்திரமாவோம்; இதில் சிறிதும் பயப்படவேண்டாம்.

சர்வஜனமித்திரி.

[சர்வஜன மித்திரியால் எழுதப்பட்ட வாமனாவதாரம் அடுத்த பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்].

பத்திராதிபர்.



## LIVES OF NOBLE WOMEN.

I

## லீலாவதி.

(All Rights Reserved.)

கணித சாஸ்திரத்தில் மேதாவியாயுள்ள பாஸ்கரா சாரியாருக்கு ஒரு பெண்மணி யிருந்தாள். அப்பெண்ணின் பெயர் லீலாவதி. பாஸ்கரா சாரியரால் சித்தாந்த சிரோன்மணி என்கிற கிரந்தம் சாலிவாகன 1072-வது வருடத்தில் எழுதப்பட்டதாக அக்கிரந்தமூலமாகவே தெரிவதால் அக்காலத்தில் அதாவது 12-வது நூற்றூண்டில் லீலாவதியு மிருந்ததாகத் தெரிகிறது. லீலாவதி பால விதந்துவா யிருந்தமையால் அவள் புருஷன் வம்சம் ஏதோ தெரியவில்லை. நமது தேசத்தில் சரித்திரம் எழுதிவைக்கிற வழக்கம் முன் இல்லாமையால் கணித சாஸ்திரத்தில் அபார பாண்டித்திய முடைய லீலாவதியைக் குறித்து சிற்சில கதைகளி லடங்கியதை தவிர வேறொன்றும் காணப்படவில்லை; ஆயினும் வாயால் சொல்லப்படும் கதைகள் தவிர சரித்திரத்திற்கு வேறு சாதனமில்லாமையால் அந்த வாயால் சொல்லப்பட்ட கதைகளிலுள்ளதை இங்கு வரைகிறோம்.

பாஸ்கராசாரியாரவர்கள் ஜோதிட சாஸ்திரத்தில் அபார பாண்டித்ய முடையவ ராகையால் லீலாவதிக்கு வைதவ்ய முண்டாகு மென்று ஜாதகத்தால் அறிந்து கொண்டாராம். ஆனதுபற்றி பாஸ்கரா சாரியார் பூரண ஆயுளுள்ள வரனைத் தேடிக்கொண்டுவந்து ஒரு நல்ல முகூர்த்தத்தில் லீலாவதிக்கு விவாகம்செய்ய நிச்சயித்தார். விவாகத்திற்கு முந்தி செய்ய வேண்டிய விதிகளைச் சரிவர நிறைவேற்றி தம்பதிகளை கலியாண மண்டபத்தில் உட்கார வைத்தார்கள். முகூர்த்த காலமறிய தண்ணீரில் சிறிய துவாரமுள்ள கிண்ணமொன்றை வைத்து புரோகிதரோடு முகூர்த்த காலத்தை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார். சற்று நேரம் சென்றபின் லீலாவதி அந்தக் கிண்ணத்தில் ஜலம்வரும் மார்க்கத்தைப் பார்க்கவிரும்பி சற்று தனது இடத்திலிருந்து நகர்ந்துபார்த்துக்கொண்டிருந்தாள். அவ்விதம் லீலாவதி பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது அப்பெண்ணின் தலையில் அணிந்துள்ள நகையிலிருந்து ஒரு மெல்லிய முத்து அந்தக் கிண்ணியில் விழுந்து ஜலம்வரும் மார்க்கத்தை அடைத்துவிட்டது. அந்தமுத்து விழுந்தசங்கதி யாவருக்கும் தெரியாது. எவ்வளவு நேரம்பொறுத்தும் அந்தக் கிண்ணம் ஜலத்தில் முழுகாமையைக் கண்டு அதனுடைய காரணத்தை யறிந்து ஆசாரியரவர்கள் செத்தபிணம்போல் பிரமிதது நின்று ஏதோ ஒரு முகூர்த்தத்தில் விவாகத்தை நிறைவேற்றினர். "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்" என்கிற திருவள்ளுவர் வாக்கியப்படி ஊழ்ன்படி லீலாவதிக்கு முடிந்தது.

விவாகமான கொஞ்ச நாளைக்குள் லீலாவதிக்கு வைதவ்வியம் வந்துவிட்டது. தம் அருமைவாய்ந்த மகளுக்கு இப்பேர்ப்பட்ட கஷ்டம் வந்ததையால் தகப்பனர் மிகவருந்தினர். ஆயினும் அவர் இத்துடன் தன்னுடைய பெண் ஜன்மம் விருதாவென்று எண்ணவில்லை. லீலாவதிக்கு சம்சாரசுகமில்லாவிடினும் ஆசாரியரவர்கள் அப்பெண்மணிக்கு வித்தை விஷயத்தில்

ஆநந்தத்தை யுண்டாக்க நினைத்தார். லீலாவதி இதற்கு முந்தியே கல்வியிற் றேர்ந்தவளாகையால் அந்தம்மாளுக்கு தகப்பனார் கணித சாஸ்திரத்தைக் கற்பிக்க ஆரம்பித்தார். லீலாவதியும் கல்வி விஷயத்தில் அதிக விருப்ப முடையவளாய் தன்துக்கத்தை மறந்து எப்பொழுதும் கணிதசாஸ்திரத்தை அப்பியாசஞ்செய்து கொண்டிருந்தாள். சில தினங்களுக்குள் அந்தம்மாளுக்கு கணித சாஸ்திரத்தில் அதிக பாண்டித்ய முண்டாயிற்று. அந்தம்மாள் தன்னுடைய கணித பாண்டித்யத்தினால், ஒவ்வொரு அரைமணிநேரத்தில், மரத்திலிருக்கும் இலைகளின் கணக்கை சொல்லிக்கொண் டிருந்தாளென்று ஒரு உலகவார்த்தை உண்டு. இதுகொஞ்சமாவது நம்பக்கூடாததா யிருந்தபோதிலும் லீலாவதிக்கு கணிதசாஸ்திரத்திலுள்ள அபாரஞானத்தைப் பார்த்தே உலகத்தார் இந்தவார்த்தையை சொல்லிவந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை. அந்தம்மாளுக்கு கணிதசாஸ்திரங்கற்பிக்கும்பொழுதுகேள்விகளையும், அதனுடைய விடைகளையும் ஒன்றாய்ச்சேர்த்து பாஸ்கராச் சாரியாரவர்கள் லீலாவதி கணிதமென்று பெயரிட்டு பிரசித்தி செய்தாரென்று சொல்லுகிறார்கள். லீலாவதி கணித புஸ்தகத்தில் "லீலாவதி யென்கிற பெண்மணியே! இந்தக் கணக்கைச் சொல்லு" என்று அர்த்தமுள்ள வாக்கியத்தால் இந்த விஷயம் யதார்த்தமாகவே யிருக்கலாமென்று தோன்றுகிறது. லீலாவதி கணிதம் என்கிற புஸ்தகத்தினாலேதான் பாலவிதந்துவான லீலாவதியினுடைய கீர்த்தி சகல தேசத்திலும் பரவியிருக்கிறது யாவருக்கும் தெரியும். லீலாவதி கணிதம் பார்ஸீ, ஆங்கிலம் முதலான பாஷைகளில்கூட மொழிபெயர்க்கப்பட் டிருக்கிறது. லீலாவதி கணிதத்தி லிருக்கப்பட்ட எல்லா கணக்குகளையும் செய்ய புருஷர்களுக்கே மிகக் கஷ்டமா யிருக்கும். ஆகையால் இப்பேர்ப்பட்ட கஷ்டமான கணக்குகளை கற்றுக்கொண்ட ஸ்திரீயினுடைய புத்தி விசேஷம் எவ்வளவிருந்திருக்க வேண்டுமென்பதை படிக்கிறவர்களே அறிந்துகொள்வார்கள்.

இந்த லீலாவதி சரித்திரத்தால் பூர்வகாலத்தில் பெண்கல்வி யிருந்ததென்று தெரிகிறது.

## FEMALE EDUCATION IN BURMA.

## பர்மாவில் பெண்கல்வி.

பெண்கல்வி பிரிடிஷ் இராஜ்யத்தில் எங்கும் பரவிக்கொண்டு வருவதைப் பற்றி மிகச் சந்தோஷப்படுகிறோம். இந்தியாவிற்கு தென்கிழக்கிலிருக்கும் பர்மா ராஜ்யத்தில் 1903-1904 ல் 43,017 பெண்கள் படித்துவந்தார்கள். 1902-1903 ல் 38,492 அதாவது 100-க்கு 12 பேர் அதிகமாக படித்தார்கள்.

### படித்துவந்த பெண்களின் ஜாதி.

உயர்தர இங்கிலீஷ் பாடசாலைகளில் 1,496, ஐரோப்பிய பெண்களும் 227 சுதேச கிறிஸ்தவர்களும், 1 பிராமணப்பெண்ணும், 3 பிராமணரல்லாதவர்களும், 9 மகம்மதியப் பெண்களும், 331 பௌத்தர்களும், 13 பார்சிகளும், 50 மற்றவர்களும் படித்தார்கள்.

உயர்தர சுதேசபாஷா பாடசாலைகளில் 1 ஐரோப்பிய பெண்ணும், 556 சுதேசகிறிஸ்தவர்களும், 10 பிராமணரல்லாதவர்களும், 73 மகமதியர்களும் 1256 பௌத்தர்களும், 2 பார்சிகளும, 16 மற்ற ஜாதியைச்சேர்ந்தவர்களும் படித்தார்கள்.



பிரைமரி பாடசாலைகளில் 91 ஐரோப்பிய பெண்களும், 974 சுதேச கிறிஸ்தவர்களும், 1 பிராமணப்பெண்ணும், 13 பிராமணரல்லாத மற்றவர்களும், 339 மகமதியர்களும், 11694 பௌத்தர்களும், 1பார்சியும் 44 மற்ற ஜாதியைச் சேர்ந்தவர்களும் படித்தார்கள்.

### சென்ற வருடத்தில் பரிக்ஷையிற் றேறியவர்கள்.

பி. ஏ. வகுப்பில் ஒருவரும் தேறவிடினும் எப். ஏ. வகுப்பில் ஒரு பெண் தேறினாள். உயர்தர பாடசாலையிலிருந்து 31 பெண்கள் பரிக்ஷைக்குச் சென்றதில் 11 பெண்கள் தேறினார்கள்; மிடில் இங்கிலீஷ் பரிக்ஷையில் 256 ம், மிடில் சுதேச பரிக்ஷையில் 123 ம் அப்பர் ப்ரைமரி பரிக்ஷையில் 1147 ம், லோயர் ப்ரைமரி பரிக்ஷையில் 7803 பெண்களும் தேறியிருக்கிறார்கள்.

மேலும் 18 பேர், உபாத்தியாயர் பரீக்ஷையிலும் தேறியிருக்கிறார்கள்.

பெண்கல்விக்காக கவர்ன்மெண்டாரால் சென்றவருடத்தில் 1,98,032 ரூபா செலவழிக்கப்பட்டது.

பர்மாவில்பெண்கல்வி பொதுவாக விருத்தியடைந்து வருகிறது. ஸ்திரீகள் பெண்பாடசாலைகளை செவ்வனே நடத்தி வருவதுடன் அவர்கள் முயற்சியால் பெண்பாடசாலைகள் அதிகமாய்க் கொண்டுவருகின்றன. பர்மாவில் இந்துக்களும் மகமதியர்களும் தங்கள் புத்திரிகளுக்கு கல்விபுகட்டி வருவதைக்கேட்க மிகச்சந்தோஷப்படுகிறோம். பிராமணப்பெண்களும் உயர்தரக் கல்வியில் தேறிவருவதும் புகழத்தக்கதே. பர்மாவிலுள்ளவருக்கு மேன்மேலும் பெண்கல்வி விருத்தியடையுமாறு ஈசன் அருள்புரிவாராக.

## சமாசாரக்குறிப்பு.

உள்ளங்கையில் ஒரு சதுர அங்குலத்துக்குள் 2,500 துவாரங்களிருக்கின்றன.

***

அலகாபாத்துக்கு சமீபத்திலுள்ள "நைனி" யெனுமிடத்தில் ஒரு குஷ்டரோகி ஆஸ்பத்திரி யொன்று சர்க்கார் நியமிக்கப்போகின்றனர்.

***

உலகத்தில் 240,000 வகை பூச்சிகளிருக்கின்றனவாம். இவைகளுள் சில சுமார் 4000 கூடினால் ஒரு சிறு மணலுக்குச் சரியாயிருக்கக்கூடிய அவ்வளவு சிறியவையா யிருக்கின்றனவாம்.

***

ஒரு மனுஷன் சுவாசிப்பதற்குக் காற்றில்லாவிடின் 5 நிமிஷத்திலிறப்பான், நித்திரையில்லாவிட்டால் 10 நாட்களிலிறப்பான். குடிக்கத்தண்ணீரில்லாவிட்டால் ஒரு வாரத்தி லிறப்பான்.

***

மிண்டோ பிரபுவின் பெருமாட்டி தம் பெருமானைப் போலவே மிருக வேட்டையிலும், பறவை வேட்டையிலும், மற்றும் அநேக விளையாட்டுகளிலும் மிக்கத் தேர்ந்தவர்களெனத் தெரிய வருகிறது.

ஸையாம் தேசத்தில் உள்ள காடுகளில் ஒரு வகையான செடி இருக்கிறதாம். அச்செடியின் கிளைகளை சிறுதுண்டுகளாகவெட்டி மெழுகுவத்திபோல் கொளுத்திவிட்டால் நல்ல வெளிச்சம் உண்டாகிறதாம்.

***

உலாந்தக்காரர் உருளைக்கிழங்குச் செடியின் உலர்ந்த இலைகளால் காகிதம் செய்யும் வழியைக் கண்டுபிடித்திருக்கின்றனர்கள். அக்காகிதத்தினால் பல புஸ்தகங்களும் பத்திரிகைகளும் அச்சிடப்படுகிறதாம்.

***

சீமையில் நாளொன்றுக்கு 1,760,000,000,000 அதாவது லக்ஷத்து எழுபத்தாறுயிரம் கோடி தீக்குச்சிகள் செலவாகிறது. இந்தப்படிக்கு ஒரு ஆளுக்கு நாளொன்றுக்கு 8 தீக்குச்சிவேண்டியிருக்கிறதெனத் தெரிகிறது.

***

சுவிட்சர்லாந்துதேசத்தில் ஒரு ஸ்திரீயும் புருஷனும்சுமார் 45 வருஷகாலமாய் ஒருவரை யொருவர் காதலித்து முடிவில் விவாகஞ்செய்துகொண்டார்களாம். ஆகவே, இவர்களுக்கு இப்பொழுது வயது குறைந்தபக்ஷம் 60 ஆவது இருக்கவேண்டுமே!

***

உலகத்தில் செய்யப்பட்டுள்ள விக்கிரகங்கள் யாவற்றிலும் மிகப்பெரியது ஜப்பான் தேசத்திலிருக்கிறது. அது முழுவதும் வெண்கலத்தினால் செய்யப்பட்டு $63\frac{1}{2}$ அடி உயரமுள்ளதாய் 56 இதழ்களுள்ள ஓர் தாமரை யாசனத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

***

பாரீஸ் நகரத்தில் சாராயக்கடை விற்பவளாகிய ஒரு பெண்ணிற்கு 40,000 பவுன் லாட்டரியில் பிரைஸ் கிடைத்தது. அது கிடைத்த 2 வாரத்திற்குள்ளாக 10,010 வாலிபர்கள் அப்பெண்ணைக் கலியாணஞ்செய்துகொள்ள கடிதங்கள் அனுப்பி யிருக்கின்றார்கள். இது விந்தையன்றோ!

***

அமெரிக்காவில் சர்ப்பங்களை யெல்லாம் பெற்றி கிரப்பர் என்னும் பெயருள்ளவன் கொல்லுகிறானாம். இதில் இவன் சூரனென்பதற்கு இதுவரைக்கும் கொன்றிருக்கிற 4000 சர்ப்பங்களே சாட்சியாகும். இவன் இதன்பொருட்டு ஒருநாள் ஒரு விருந்துசெய்து அன்றைக்கு பாம்புதோலினாலேயே உடுப்பு போட்டுக் கொண்டிருந்தானாம்.

***

பாலிய விவாகம் செய்யும் துர்வழக்கத்தின் பொருட்டு நம் இந்தியாவில் லட்சத்து எழுபதினாயிரம் குழந்தைகள் விதவைகளா யிருக்கின்றார்கள். வங்காள நாட்டில் மட்டும் மணம் முடிக்கப்பட்டிருக்கிற குழந்தைகள் 6000 பேர். இவைகளில் 600 பேர் ஒருவயதுக்குட்பட்ட குழந்தைகள். இது மிக பரிதாபமன்றோ!

***

அமெரிக்கா கண்டத்து மிஸிஸிபி என்னும் ஒரு ஊரில் ஓர் பெண் மழையில் நடக்கும்போது துணி சேறுகாதபடி துணியை தூக்கி நடந்ததினால் சார்ஜ் செய்யப்பட்டு விசாரணையில் மேல்கண்ட விதமாக வாக்குமூலம் கொடுக்க தீர்க்காலோசனையின்பேரில் விடுதலை செய்யப்பட்டாளாம். இதினால் அத்தேசத்து வழக்கமானது துணியை தூக்கிக்கொண்டு நடக்கக் கூடாது போலும்.



# பெண்கள் பக்கம்.



## விடுகதைகள்.

1905 ம் வருஷம் மேமாதப் பத்திரிகையில் சகோதரி மரகதம்மாளவர்கள் எழுதிய விடுகதையின் விடை.

"1. குடை. 2. விருந்து"

1905.ம் வருஷம் ஜூன்மாதப் பத்திரிகையில் சகோதரி உலகசகோதரி யவர்கள் எழுதிய விடுகதையின் விடை.

"1. ஆதரிசனம் 2. நாமகள்"

"மேற்படி பத்திரிகையில் சகோதரி நாகம்மாளவர்கள் எழுதிய விடுகதையின் விடை.

"1, மதுரை 2. கப்பல்.

அதே பத்திரிகையில் சகோதரி எஸ் ஞானவடிவுடையம்மாள் அவர்கள் எழுதிய விடுகதையின் விடை.

"1. குதிரை. 2. மாதர்மனோரஞ்சினி

3. முத்துக்கொட்டை. 4. வண்ணான் துணிதுவைத்தல் 5. மார்க்கண்டன் 6. திகிரி.

1905ம் வருஷம் ஜூலைமாதப் பத்திரிகையில் சகோதரி எஸ் ஞானவடிவுடையம்மாளவர்கள் எழுதிய விடுகதையின் விடை.

"1. ஆகாயத்தின் பெயர் ககனம்."

"2. விருக்ஷத்தின் பெயர் மருது."

"3. டமாரம் 4 மட்குடம் 5 உரல்"

### விடுகதை வினா.

மருந்துண்பான் வந்ததொருபிணியே யில்லை
மாதுட்ட னெதித்தவர்கள் வாழ்ந்த தில்லை
தருந்தடத்தில் ததனைத் தோளில் தூக்கச் சொல்லி
தனிவீர ரிடமேவல் சரியாய்க் கொள்வான்.
இருந்த இடந்தன் குதிரை ஏறி நிற்பான்
எம்மருங்கும் கம்மிடவே இருமித் தும்மி
வருந்திடவா னுவனோ மதியூகத்தால்
வழுத்துவாய் எழுத்துணர்ந்த செழித்தமானே.

காதோ நான்குடையாள்—தன்னுடைய காயமுழுதும் வயிறுயிருப்பள்.

ஒது நெடுங்கழுத்துடையாள்—கால்கைகள் ஒன்றுமில்லை ஒடுங்கியே துன்றுமிடையாள்.

பேதமற்றதே மொழியாள்—கோலெடுத்தால் பேசுவாள் அங்குதலை கீழ்விழுவாள்.

மாதுமல்ல இவள் யார்சொல்—வக்கணையால் மாதுரஞ்சனி என்னும் வஞ்சிக்கொடியே.

வாயுமுண்டு பல்லுமில்லை—பேசுப்பேசமாட்டாள் தன் காதிலொரு வாளி புனைவாள்,

வாயினாலுண்டு கக்குவாள்—தன்னிடத்தில் வைத்தபொருள் கொஞ் சங் கொஞ்சமாகக் கொடுப்பாள்;

நேயமா வெண்ணீறு பூசுவாள்—உடலெங்கும் நிறைந்த வயிறுடை யாள் மகளுமல்ல.

தூயமணி மேனகையுமே—துதித்திடும் சுந்தரஞ் சேர் சந்திரமுக ரஞ் சனிப் பெண்ணே.

தி. மு. அறப்பெருஞ்செல்வி அம்மாள்.

---

ம-ா-ா-ஸ்ரீ, மாதர்மனோரஞ்சினிப் பத்திராதிபரவர்கள் திவ்விய சமுகத் திற்கு எஸ் ஞானவடிவுடையம்மாள் வணக்கமாக எழுதிக்கொள்ளும் விண் ணப்பம்:—உலோகோபகாரமாய்த் தங்களால் பிரசுரிக்கப்பட்ட மாதர்மனோ ரஞ்சினி யென்னும் சிறந்த பத்திரிகையானது நவரசங்களுமடங்கிய அரியவி ஷயங்களுடன் மகாவினோதமாக வெளியேவந்து உலாவி ஆரிய மாதர்களின் அஞ்ஞானத்தைப் போக்கி மெஞ்ஞானத்தை யுண்டாக்கி நன்னடக்கையைக் கற்பித்து அதிக இன்பந்தருவதாயுமிருந்தும் இடையிடையே ஒவ்வொரு குறைவுமுண்டாகிக் கொண்டே வந்தது. இனி அவ்வித முண்டாகாதென்று நம்புவதுடன் நண்பர்களும் இதை ஆதரிப்பார்களென்று நம்புகிறேன்.

---

முதலாவது விடுகதை வினா.

மூன்றெழுத்தைச் சேர்ந்த ஓர் ஊர் முதலெழுத்தை நீக்கி ககரமிடில் வயல் என்றும் இரண்டாவதெழுத்தை நீக்கி வகரமிடில் உலா என்றும் மூன் றாவதெழுத்தை நீக்கி மகர வொற்றிடில் பணி என்றும் அர்த்தமாகும் மாறு தலின்றி எழுத்துக்களை வாசித்தால் ஒரு ஸ்தலத்தின் பெயர் வரும்.

1905-ஆம் மேமீ வெளியான 5-வது இலக்கமுள்ள பத்திரிகையில் 12 ம் பக்கத்தில் மரகதம் எழுதிய விடுகதையின் விடை 1, குடை, 2, விருந்து.

1905-ஆம் ஜூன்மீ வெளியான 6-ம் நம்பர் பத்திரிகையில் 142 43 ம் பக்கத்தில் உலக சகோதரி எழுதிய விடுகதையின் விடை 1 ஆதரிசனம் 2 நாமகள்;

அதே பக்கத்தில் நாகம்மாள் எழுதிய விடுகதையின் விடை 1 மதுரை.

1905-ஆம் ஜூலைமீ வெளியான 7-ம் நம்பர் பத்திரிகையில் 168-ம் பக் கத்தில் அறப்பெருஞ்செல்வி யம்மாள் எழுதிய மூன்றாவது வினாவிற்குவிடை தேங்காய்.

அதே பக்கத்தில் நாகம்மாள் எழுதிய நான்காவது வினாவிற்கு விடை வருடம் மாசம் நாள் இரவு பகல்.

வி. பாலாம்பாள் யாழ்ப்பாணம்.

---

Printed at the Ripon Press & Published by the Proprietor
C. S. Ramasawmy Iyer, Madras.

OFFICE OF ... REGISTER... 2-MAR 1906

479

# மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-vii. } Madras: October 1905. { No-10.
புத்தகம்-எ. } சென்னப்பட்டணம்: அக்டோபர்மீ 1905. { இல-10.

## ஓர் விண்ணப்பம்.

"தக்கார்தகவிலர் என்பதவர் அவர்
எச்சத்தாற் காணப்படும்."

எனது அன்புநிறைந்த ஆரிய சகோதரிகளே! தெய்வீகப்புலவராகிய திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய இத்திருக்குறளினது அரும் பொருள் (கரதல அமலகம்) அம்கையிற் கனிபோல் நன்கு தெரிகின்றதல்லவா? அப்படி நாமெல்லோரும் அரிய பெ ரிய நூல்களை நன்குணர்ந்திருந்தும் நமது கல்வியினால் பெற்றோருக்காவது நம்மைச் சேர்ந்தோருக்காவது யா தொரு பிரயோசனத்தை யுண்டாக்காமல்விட்டால் நாம பூமியிற் பிறந்ததனால் என்ன பயன்!

நமது பெற்றோருடைய நற்குண நற்சிந்தை கல்வி முதலியன நம்மா லன்றோ விருத்தியடையவேண்டும்? அப்படியில்லாவிட்டால் நாம் கற்றதனா லாய பயன் என்ன? நமது பெற்றோர்கள் தக்கவர்களா? தகாதவர்களா என்பதை நமது செய்கைகளினால் யாவருக்கும் நன்கு விளங்கவரும். நாம் நற்செய்கை, தருமசிந்தை, கல்வி, விவேகம் முதலியவற்றில் விருத்தியடைந் திருந்தால் நமது பெற்றோர் நிர்மூடராக விருந்தாலும் தக்கவர் என்றே உல கத்தோர் மதிப்பார்கள். ஆகையால நாம் நமது பெற்றோர்கள் கல்விக்கும் கௌரவத்திற்குங்குறைவராமல் நடக்கும்படிபிரயாசைப்படவேண்டும். நாம் என்ன பிரயாசைப்பட்டு முயன்றபோதிலும், வராத விவேகமும் கல்வியும் வருமா என்றால், தங்களாலியன்ற அளவு கல்வியை நமது பெற்றோர்கள் ஊட்டியிருக்கிறார்கள். கடவுள் மாணிக்கக்கற்களை யொத்த விவேகத்தை நமக்கு அனுக்கிரகம் பண்ணியிருக்கின்றார்., நமது பெற்றோர்களாலும் கடவு ளாலும் அளிக்கப்பட்ட கல்வி விவேகங்களினால், நமக்காக எவ்வளவோ பாடுபடும் பெற்றோருக்காகவும் நமக்காக இம்மாதாந்தப்பத்திரிகையை நடா த்தும் பத்திராதிபரவர்களுக்கும்,மற்ற இதரஜனங்களுக்கும் உங்களாலியன்ற அளவு உதவிபுரிவீர்கள் என்று நம்புகிறேன். எனது சிற்றறிவுக்கெட்டிய வரையில் எழுதினேன். நான் எழுதியவற்றில் குற்றங்கள் அநேகமாய்

இருப்பினும் எனது சகோதரர்கள் சகோதரிகள் அக்குற்றங்கள் யாவையும் குணமாகவே பாவித்து,என் கருத்துக்கிசைந்து நேசித்து விசுவாசிப்பீர்கள் என்று நான் நன்றாக நம்புகின்றேன். யாவருக்கும் வந்தனம்.

ஸ்ரீ. ஷ. ஜயராஜவிஜயபத்மசுந்தரலக்ஷ்மிநாயகி அம்மாள்.
நல்லூர், யாழ்ப்பாணம்.

# இலக்ஷ்மி.

(128-வது பக்கத்தொடர்ச்சி.)

இலட்சுமியின் கொழுநன் அரிராவ்; அவன் தாய்தகப்பனுக்கு ஒரே பிள்ளை. அவர்கள் மிக்க செல்வவான்களாயிருந்தபடியால் அரிராவ் மிக்க செல்வமாய் வளர்க்கப்பட்டு வந்தான். அவர்கள் ஆராதுரியரா யிருந்தபடியால் ஐஸ்வரியத்தின் பெரும்பாகத்தை இழந்தார்கள். அரிராவ் இளந்தைப்பருவத்தில் சீராட்டப்பட்டு செல்வமாய் வளர்ந்தான். அவன் மனம் போக்கே போக்கு. தப்பு சொல்பவரில்லை. இக்காரணத்தால் அவனுக்கு நல்ல மனிதனாக நற்பயிற்சியில்லாமற் போயிற்று. இதனால் அவனிடத்தில் நற்குணங்க ளில்லையென எண்ணக்கூடாது. அவன் தயாளகுணமும், எல்லாரிடத்திலும் பிரீதியுங்கொண்டவனாயினும், அவன் கெட்ட குணங்களே பிரபலமாய்த் தோன்றின; பெற்றோர்களின் அத்தியந்தபிரியம் அவன் குணத்திற்கு எமனாயிருந்தது. கொஞ்சம் மிரட்டினால்கூட அவனுக்கு மிக்க கோபமுண்டுவிடும். இதெல்லாம் இளமை பழக்கம் அன்றோ? தகப்பனுடைய அளவற்ற ஆஸ்தி ஒன்றுமில்லாமற் போனதற்கு இவனே காரணம். இவனிடத்தில் சுயநயமும், முன்யோசனையின்மையும் குடிகொண்டிருந்தன. தனக்கு இன்பமும், சந்தோஷமும் உண்டாவதையே பெரும்பாலும் பாராட்டுவான்; அயலாருக்கு தன்னால் என்ன துன்பங்கள் நேரிடுகிறதென்பதைச் சற்றேனும் கருதான். தனக்குத் தாழ்ந்தவர்கள் என்று தோன்றினவர்களிடத்தில் தன்வெறுப்பை வெளிப்படுத்த பின்வாங்கான். இதைவிடகெட்டகுணம் அவனுக்கு ஸ்திரபுத்தியின்மையே. ஏதாவது ஒருகாரியம் முடித்தலில் இடையூறுகள் உண்டாயின், அவ்விடையூறுகளைக் களையமுயலாது காரியத்தை கைசோரவிடுவான். ஆனால் அவன் மிக்க சாமர்த்தியமுள்ளவன். சிநேகிதம் செய்துகொள்வதில் மிக்க திறமை வாய்ந்துள்ளவன். அவன் சிநேகிதர்களை விரல்விட்டு எண்ண முடியாது. நூற்றுக்கணக்காய் இருக்கலாம். இச்சிநேகிதர்களோ இவன்போல டம்பாச்சாரிகள். கோபமுள்ளவர்கள். ஒருவரையும் லட்சியம் பண்ணாதவர்கள், முன்யோசனையில்லாதவர்கள்; இவர்களுடைய துர்வழக்கங்களே இவன்நிலைமைக்கு காரணமாயிருந்தன. தற்காலத்தில் இவனைக் கேட்போர் ஒருவரும் இல்லாததால் மனம்போன போக்கெல்லாம் சென்று கெட்டழிந்துகொண்டிருந்தான்,



இவன் தன் தகப்பனுடைய தரித்திரத்தை அறியாதிருக்கவில்லையாயினும், வேலை சம்பாதிப்பதை ஒழித்து காலத்தை வீணாகக் கழித்து வந்தான். இது இங்ஙனமாக அவ்வேழைக் கிழத்தந்தை தன் மகனுக்காக பாடுபட்டு உழைத்து பணம் சம்பாதித்து வந்தார். கதை ஆரம்பிக்கும் காலத்தில் சமாசாரங்கள் இவ்வாறிருந்தன.

இந்தக் காலத்தில் துக்ககரமான ஒரு விஷயம் நடந்தேறியது. பங்கஜத்தின் கணவன் திடீரென மரணமடைந்தனன். லட்சுமியின் காதற்றோழியாகிய பங்கஜம் விதவையாய் விட்டாள். அவள் அடைந்த துக்கத்துக்கு எல்லையில்லை. ஓருயிரும் ஈருடம்பும் போல் சந்தோஷமாய் வாழ்ந்து வந்த பங்கஜம் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தது அதிகமன்று. கர்மாதிகள் நடந்தேறின. கணவன் இறந்தது குறையேயன்றி பாக்கி ஒருவிதமான குறையுமில்லாமலே பங்கஜமிருந்தாள். மாமியார் மாமனார் இவளிடத்தில் மிக்க பிரீதி வாய்ந்தவர்களா யிருந்தார்கள். அவளை எப்படியாவது சந்தோஷமாயிருக்கச் செய்வதே தம் தம் காரியமாகக் கொண்டிருந்தார்கள்.

பங்கஜம் அழகுவாய்ந்த ஓர் நற்பெண். அழகு அவள் முகத்தில் பிரகாசித்துக்கொண்டிருந்தது. சுபாவத்தில் அவள் பளபளப்பைக் கெடுக்க தேக உபாதிகள் ஏற்பட்டன. அவள் முகம் சாதாரணமாய் அப்பாவிபோலத் தோற்றும். முகத்தினிடத்தில் ஓர்வித அபூர்வக் கவர்ச்சி சக்தி இருந்தது. நற்குணமும் நற்சுபாவமும் பொருந்தியிருந்தன. ஆனால் அரிராவ் எப்பொழுதும் முன்யோசனை யில்லாதவனாதலால் இவளுடைய மெச்சத்தகும் குணத்தை அறிந்துகொள்ள முடியவில்லை. அவள் அப்பாவித்தனத்திற்காக அவளை வெறுத்தான்; தன் பெற்றோர்களை இவளை கலியாணஞ்செய்து வைக்காததற்காக தூஷிப்பான். இஃதிவ்வாறாக பங்கஜத்தின்மேல் மிக்க ஆசை. தன் மனைவியோடு அவள் கூடிச் செல்லுங்காலத்தில் அவளை குறிப்பாயும் நன்றாயும் பார்த்திருக்கிறான். லட்சுமியின் தோழி அவள் ஒருவளேயாதலால் அவளை நன்றாய் இவனுக்குத் தெரியும். அவளைப்பற்றி அவள் கணவனுயிர்த்திருக்கும் வரையில் அவன மனதில் கெட்ட எண்ணங்கள் தோன்றவில்லை. இப்பொழுதோ அவள் கைம்பெண். அவளைப்பற்றி வெகுவாய்க் கேள்விப்பட்டிருக்கிறான். அவள் குடும்பத்திற்கும் இவன் குடும்பத்துக்கும் நெருங்கிய விசுவாசும். அவளைப்பற்றிய எண்ணங்கள் மனதில் சதாகாலமும் குடிகொள்ள ஆரம்பித்தன. பங்கஜத்தின் மாமனார் அவள் சிறியவயதினளாதல் பற்றி வழக்கப்படி அலங்கோலங்கள் செய்யாமல் தடுத்துவிட்டார். அவள் விநயமாயிருந்தது தவிர, அவள் முகத்தில் இயல்பாயமைந்த மனதைக் கவரும் சக்தி இருந்தது. ஆனால் முன்புபோல அரிராவ் அவளை ஆடிக்கொருதரமும் அமாவாசைக்கொருதரமும் பார்ப்பதுகூட முடியாமலிருந்தது. இது தலைவிதி; அவளுக்கு பதிலாக இவள் என் மனைவியாயிருக்கக்கூடாதா? எவ்வளவோ சந்தோஷமாயிருப்பேனே என்று அரிராவ் பன்முறை நினைத்துக்கொள்வான். தன் சிநேகிதர்கள் பெண்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுவது அவசியம் என்று கூறியதைக் கேட்டு தானும் அதற்கு மனமொத்திருக்கிறேனென்றாலும், லட்சுமி உபயோகமில்லாதவள் என் கருதிவிட்டான். பங்கஜம் இதற்கு தகுந்தவள் என்று கருதிவிட்டான். பங்கஜம் இதற்கு தகுந்தவள் என்று அவன் கெட்ட மனதில் தோன்றியது. திசை அவன் எப்படியாவது பங்கஜம் தன் மனைவியாய் இஷ்டப்படி இருக்கவே எவ்

ண்டுமென்று நினைந்தான். ஓர் யுக்தியால் அவள் இஷ்டப்படி யிருக்கலாம், இது ஆசார சீர்திருத்தகாலம். எல்லாரும் விதவா விவாகம் முதலியவற்றில் கவனத்தைச் செலுத்துகிறார்கள். அவன் பங்கஜத்தை மறுமணம் புரிந்து கொண்டால் மனோபீஷ்டமும் நிறைவேறுகிறது. துணிகரமான செய்கைக்கு ஜனங்களின் புகழ்ச்சியும் கிடைக்கிறது. பங்கஜம் தன்னை வேண்டாமென்று சொல்லாள். அவள் கணவனுக்கு அழகிலாகட்டும் குணத்திலாகட்டும், சாமர்த்தியத்திலாகட்டும், குறைந்தவளல்லவே ? ஆனால் லட்சுமி ஒரு பக்கமிருக்கிறாளே ! அவளை என்னசெய்கிறது. பேரிழவு என்னசெய்கிறது? அவள் இறந்தொழியலாகாதா ? என்று பற்பல எண்ணங்கள் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்றிக்கொண்டிருந்தன.

இவன் மனதில் கெட்ட எண்ணங்கள் அதிகமாய்க்கொண்டிருக்க லட்சுமியின் மனதோ சந்தோஷத்தை இழந்து துக்கத்துக்கிடமாய்க்கொண்டிருந்தது. அவள் தன் கணவன் வெறுக்கிறவிஷயமும் பங்கஜத்தின் மேல் காதல்கொண்டிருப்பதும் மனதுக்கு வெள்ளிடைமலை விளக்குப்போலிருந்தது. பிந்திய விஷயம் ஒருநாள் கண் கூடாகக் காணப்பட்டதால் உறுதிப்பட்டதாயிற்று. ஒருநாள் லட்சுமி,பங்கஜம் வெளிவர கொஞ்சங்கூட இஷ்டமில்லாதவளாயிருந்தும் கட்டாயப்படுத்தி தன்னோடு கூட்டிக்கொண்டுதெருவில்போய்க்கொண்டிருக்கையில் அரிராவும் அவன் நண்பர் சிலரும் ஒருங்கு சேர்ந்து வருவதைக் கண்டார்கள். பங்கஜமும் லட்சுமியும் வெட்கத்தினால் முகத்தை முந்தானையால் மூடிக்கொண்டார்கள். என்னவோ எண்ணத்தால் லட்சுமி முகத்தைத் திறந்து பார்த்தாள். அரிராவ் மிக்க அருவெறுப்புடன் தன்னைப் பார்ப்பதைக் கண்டு மனமழுங்கினாள். மனம் தியங்கினவளாய் அரிராவையே உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தாள். அரிராவ் கண் பங்கஜத்தின்மேல் சென்றதைக் கண்டாள். அவன் குளிர்ந்த பார்வை பங்கஜத்தை தன்னைவிட மதிப்பது விசதமாயிற்று. அவர்கள் இருவரும் வெகுதூரம் பிரிந்துவிட்டார்கள். லட்சுமி தன் மனதின் கலவரத்தை வெளிப்படுத்தாமல் மறைத்துக்கொண்டே யிருந்தாள். பங்கஜம் தன் விசனத்தில் மூழ்கி ஆழ்ந்திருந்தாள். இருவரும் தத்தம் இல்லமடைந்தனர்.

(இன்னும் வரும்.)

T. C. சாம்பமூர்த்தி அய்யர்.

# சுதேசியம்.

## மாதர்கள் அவசியம் கவனிக்கவேண்டிய விஷயம்.

நமது தாய்த்தேசமாகிய இப்பரதகண்டத்தில் வருடா வருடம் அடக்க முடியாத பஞ்சம் நேரிட்டு, அதனால், கணக்கில்லாத ஜனங்கள் சாப்பாட்டுக்கு வருவா யில்லாமல், கொசுக்கள் மடிந்து போவதுபோல மரித்துப்போவதை நாம் நேரில் கண்டும், கேட்டும் வருகின்றோம். அதற்கு காரணம் மழை சரியாகப் பெய்யாமையினாலென்று அநேகர் கருதலாம். அதுவும் அப்



பஞ்சத்திற்கு ஒருவித காரணமாகும். மழைபெய்யாது பஞ்சம் நேரிட்டால் மழைபெய்த பிறகு அப்பஞ்சம்பறந்தோடிப் போகவேண்டியது நியாயம். அப்படிக்கின்றி மழையில்லாதகாலத்தில் அதிகமாகவும், மழைபெய்த காலத்தில் குறைவாகவும் பஞ்சம் பரவியிருந்து, நம் சகோதரர்களையும், சகோதரிகளையும் பசியுபத்திரவத்தினால் வருத்திக்கொண்டே யிருப்பதுந்தவிர, அநேக ஜனங்களை வயிற்றுக்கில்லாமல் நாளுக்குநாள் மெலிந்துபோகச் செய்து, உடலை வாட்டி உயிரைக்கொள்ளை கொண்டுபோய்க் கொண்டிருப்பதற்குக் காரணம் யாதென்று நாம் யாவரும் ஆழ்ந்து யோசிப்பதற் குரிய காலம் நம் சமீபத்தில் வந்து நிற்கிறது. இக்காலத்தை அசட்டையினால், இதுகாறுமிருந்ததுபோலிருந்து வறிதே கழித்துவிடுவோமானால், நம் தாய்த் தேசத்திற்கும், நம்முடன் நந்தாயினிடத் துதித்த சகோதரர், சகோதரிகளுக்கும் கெடுதிசெய்கிறவர்களாக எண்ணப்படுவோம். நம்மவர்களில் உயர்தரக் கல்வியைப்பயின்று, உன்னத பதவியை யடைந்திருக்கும் அநேக புத்திசாலிகள், அதன் காரணத்தை பல நாள் அநுபவத்தினால் கண்டறிந்து, அதன்பொருட்டு உழைத்து வருகின்றார்கள். அது பின்வரும் விஷயத்தால் தங்களுக்கு நன்கு விசதமாகும். அதனை தாங்கள் யாவரும் கல்விப் பயிற்சியினால் பரந்திருக்கும் அறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்த்து உசிதமென்று தோன்றுமானால், அதனை விடாமுயற்சியாகக் கடைப்பிடித்து நந்தாய்த்தேசத்தை செழிப்படையச் செய்யுமாறு வேண்டுகின்றேன். அது உங்களுக்கு உசிதமென்று தோன்றுவதற்கு யாதொரு சந்தேகமுமின்று. நம் சகோதரர் யாவராலும் கைவிடப்பட்டு வருகின்ற நந்தாய்த்தேசத்து பூர்வீகமான மதாசாரங்கள் யாவும், நம்மால் இன்றும், என்றும் வேரூன்றி நிலைபெற்று தலைகாட்டிக் கொண்டிருக்குமானால், நந்தாய்த்தேசமானது என்றும் பஞ்சத்தால் வருந்தி நிற்பது, இன்றே அவ்விடர் நீங்கி சுகத்தையடையுமென்று சொல்வதற்கு ஒரு சிறிதும் ஐயமிராது.

அக்காரணம் என்னவென்றால்; நம் பரதகண்டத்தில் பூர்வீக காலந்தொட்டு வேரூன்றி நிலைபெற்றிருந்த கைத்தொழில்களும், வர்த்தகங்களும் தேய்பிறைச் சந்திரன்போல் நாளுக்குநாள் குறைந்துபோகவும், எல்லாவித கைத்தொழில்களால் உண்டாகும் சாமான்களுக்கும், வர்த்தகங்களுக்கும் நாம்மேனாட்டையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கவும், நம்தேசத்திலிருந்து வருடாவருடம் அநேக கோடி ரூபாய்கள் மேனாட்டிற்குச் செல்லவும், அதனால் அவ்விடத்திலிருக்கிறவர்கள் பசியில்லாமல் தின்று களித்திருக்கவும், நம் தேசத்திலுள்ள கைத்தொழிலாளிகள் எண்ணிறந்தோர் கைத்தொழில்கள் இல்லாமையால் மிருகங்களைப்போ லுழைக்கும் வரம்பற்ற உத்தியோகங்களிற் பிரவேசித்து, அதனால் போதுமான வருவா யில்லாமல், அரை வயிறும், கால்வயிறுமாகப் புசித்து, அடங்காப் பிணிகளா லலைப்புண்டு வருந்துகின்றார்கள். அதற்கும் வழியில்லாத அநேகர் ஒருநாள் புசித்தால், மறுநாளைக்கு புசிப்பில்லாமலும், ஒருவேளைக்கு சாப்பிட்டவர்கள் மறுவேளைக்கு சாப்பாடு இல்லாமலும், அவ்வொரு வேளைக்கும் சாப்பாடு இல்லாது தெருத்தெருவாய் பிச்சை யெடுத்துண்டு திரிகிறவர்களாயும், அப்பிச்சையும் அகப்படாது, வீதிகள் தோறும் உள்ள திண்ணைகளில் படுத்துறங்கி வருந்தி யாண்டுபோகின்றார்கள்.

இதனை நாம் நேரில் பார்த்து வந்தும், நம் தாய்த்தேசத்தைக்ஷேமதிசைக்குக் கொண்டு வராவிட்டால் நமக்குப் பெருங்குறைவாகவே முடியும். எவ்

விதம் நம் தேசத்தை க்ஷேமதிசைக்குக் கொண்டுவருவதென்றால்; நம்தேசத்தின் பூர்விக கைத்தொழில்களை விருத்திக்குக் கொண்டு வந்து, அவைகளால் உண்டாக்கப்படும் சாமான்களையே நாம் வாங்கி உபயோகப் படுத்த வேண்டுமென்பதேயாம். அதற்குத் தான் நம் தேசத்திலுள்ள புத்திசாலிகள் யாவரும் ஒருமனதாய் "சுதேசியம்" என்று பெயரமைத்திருக்கின்றார்கள். அதற்கு சுதேச சம்பந்தமான கைத்தொழிற் பொருட்களையே வாங்கி உபயோகப்படுத்த வேண்டுமென்பது பொருள் விளங்கும். நாம் அவ்விதம் செய்வோமேயானால் நமது தேசத்திலுள்ள ஏழைகளுக்கெல்லாம் கைத்தொழில்களுண்டாய், வருவாய்க்கு வழியேற்பட்டு, பசியென்னும் பாழ்நோய் பறந்து வருடாவருடம் நம் தேசத்தை விட்டு மேனாட்டுக்குப்போகும் அநேகங் கோடி ரூபாய்கள் நம்தேசத்திலேயே புழன்று, வருடாவருடம் வருத்தி வரும் பஞ்சம என்னும் பாழ்நோய் நம்தேசத்தை யணுகா வண்ணம் தடுத்து நிற்கும். அது நிற்கவே வயிற்றுக்கில்லாமல் வீதிவீதியா யலையும் ஆதுலர்கள் கலிக்கத்துக்கும் அகப்படாமற் போய்விடுவார்கள். பிறகு நம் தேசத்து ஜனங்கள் என்றும் பாழ்நோயால் வருந்தாமல் சுகித்து வாழ்ந்து, இட்டகாலத்தில் காலன் கைப்படுவார்கள். இது கருதியே, நம் தாய்த்தேசத்தில் செவிலித்தாய்கள் போன்று விளங்கும் மூன்று இராஜதானிகளுள் பங்காளம், பம்பாய் இவ்விரண்டு இராஜதானிகளில் வெகு மும்மரமாக இந்நூதன முயற்சி சில மாதங்களாக கையாளப்பட்டு வருகிறது. அதன்படி நம் சென்னை ராஜதானியிலும், பல புத்திசாலிகளுடைய நன்முயற்சியால் கையாளப்பட்டு வருகிறது. ஆகையால் அதற்கு நம்மாலான பலவித உதவிகளைச் செய்து, நம் தேசத்துச் சாமான்களையே நாம் யாவரும் வாங்கி உபயோகப்படுத்தவேண்டுமென்று வேண்டுகிறேன். இது விஷயமாக நமது பத்திராசிரியரும் மாத மாதம் விஷயமெழுதி ஊக்கப்படுத்துவாரென்று வேண்டி நிற்கும்,

ஓர் மாது.

# பணத்தால் வந்த பரிதாபம்.

மணிக்கரை என்பதுகோவை நகருக்கருகாமையிலுள்ளதோர் சிறுகிராமம். இதனருகே ஒரு சிற்றாறு ஓடுகின்றது. அவ்வாற்றின் கரையோரத்தில் ஒரு தேவாலயம் உண்டு. அவ்வாலயத்தில் பிரதிதினமும் பூசை முதலிய புரியும் அந்தணன்பேர் சுப்பிரமணிய ஐயர். இவர் ஆதிசைவ குலத்தைச் சேர்ந்தவர். ஆலயத்திற்காக விடப்பட்ட மானிய பூமியிலிருந்து கிடைப்பதைக்கொண்டும், கோவிலுக்குத் தொழ வருபவர் ஆர்வத்தோடளிக்கும் சிறு தொகையைக்கொண்டும் தம் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார் நமது ஐயர். இவர் பெரியகுடும்பி; வயதுசென்ற மாதா, மனைவி, மகன், மகள், தான் ஆக ஐவரைக் காப்பாற்ற வேண்டியவராகஇருந்தார். அவ்வூரிலுள்ள கல்விச்சாலையில் தமது மகனையும் மகளையும் கல்வி பயிலும் படியும் செய்தனர். என்ன கஷ்டம் நேரிட்டபோதிலும் மக்களுக்குக் கல்விச் செல்வம் கொடுக்கவேண்டும் என்பதே அவர் முக்கிய கருத்து. மகள் பிரைமர் பாஸ்செய்து மேல் வகுப்பில் படித்து வந்தாள். மகன் லோயர் செகண்டரி பாஸ் செய்தான். அதற்கு மேல் கிளாஸ் அவ்விடத்தில் இல்லாததாலும், கோவை நகர்க்கு அனுப்பி



படிப்பிக்கும் சக்தியில்லாததாலும் என் செய்வதென்றேங்கினர். இச்சமயத்தில் நகரிலிருந்த ஒரு அந்தணர் நமது சுப்பிரமண்ய ஐயரின் குணத்தையும் அவர் மகளின் ரூபத்தையும் கேட்டு மகிழ்ந்து அக்கன்னிகையை தன் மகனுக்கு வதுவையாட்டக் கருதி பெண்பேச வந்தார். இச்சமாசாரம் சுப்பிரமணிய ஐயருக்கு சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோலாயிற்று. ஏனென்றால் சதாசிவய்யர், (அதுதான் பெண்பேச வந்த ஐயர் திருநாமம்.) நகரின் முக்கியமானவர்களில் ஒருவர். மிகுந்ததிரவியஸ்தர். அவர் மகன் மெட்ரிகுலேஷன் பாஸ்செய்து எப் ஏ யில் படித்துக்கொண்டிருந்தான். உடனே இருவர் மனமும் ஒன்றாகியது. முகூர்த்தமும் நிச்சயமாகி அத்தேதியில் கல்யாணச் சடங்கும் நிறைவேறியது. பிற்பாடு சுப்பிரமண்ய ஐயரின் மகனாகிய சுந்தரத்தை நகரின் கலாசாலையில் பயிற்றுவிக்க சதாசிவய்யர் எண்ணங்கொண்டு அவனை தமதுவீட்டிலேயே வைத்துக்கொண்டு, தம் செலவிலேயே படிப்பித்து வந்தார். அவனுக்கும் அங்கிருப்பது பிரியமாகவே யிருந்தது. இப்படிச் சிலகாலம் சென்றது. சுந்தரம் மெட்ரிகுலேஷன் பாஸ் செய்தான். இச்சமயத்தில் அவன் குடும்பத்திற்கே ஒரு கேடுவந்தது என்று சொல்லும்படியாக அவன் தங்கை காலஞ்சென்றனள். இதனால் அவனுக்கும் அவன் பெற்றோர்க்கும் உண்டான துயரம் அளவிடக்கூடியதல்ல. "ஆண்டாண்டு தோறு மழுதுபுரண்டாலும் மாண்டார் வருவரோ மாநிலத்தீர்" என்ற ஆன்றோர் மொழியைக் கைக்கொண்டு துயரை ஒழித்து மேல் நடக்கவேண்டியதைப் பற்றி யோசிக்கலானார்கள். சுந்தரத்தை மேலும் படிப்பிக்க சதாசிவய்யருக்கு இஷ்டமிருந்தபோதிலும் அவனுக்கு அப்படி யிருக்கப் பிரியமில்லை. ஆகையால் அவன் படித்தது போதும் என்றெண்ணி மணிக்கரைக்கு வந்துவிட்டான். அங்கு தான் தகப்பனாருக்கு அப்போது பூமி சரியாய் விளையாததனாலும் கோவிலிலும் வரும்படி குறைந்து விட்டபடியாலும் கடன் சிறிதாய்விட்டதாகக் கண்டான். கடனை எப்படிக் கட்டுவது என்று யோசித்தான். ஒன்றும் தோற்றவில்லை. தான் எப்படியாவது சம்பாதிக்கவேண்டும் என்று தீர்மானித்தான். என்னசெய்யவேண்டுமென்று எண்ணும்போது, கலெக்டர் கச்சேரிக்கு போனால் பி ஏ பாஸ் செய்தவர்களே 7 ரூபாய்க்குத் திண்டாடித் தத்தளிக்கும்போது நமக்கு ஒன்றும் கிடையாது. அதிற் சேர்வதில் பிரயோசனமில்லை யென்றும் வியாபாரம் நல்லவேலையே; ஆனால் அதற்குக் கைம்முதல் அதிகம் வேண்டும்; அது இல்லாததால் அதையும் விட்டொழிக்கவேண்டும் என்றும் இப்படியே ஒவ்வொரு தொழிலும் ஒரு குற்றம் கண்டு பிடித்து கடைசியாக ஒரு தீர்மானத்திற்கு வந்தான். அதென்னவென்றால் கப்பலேறி கடல்கடந்து அந்நியதேசங்களை அடைந்து அங்கு அதிகமாகச் சம்பாதித்துக்கொண்டு சீக்கிரமாக சொந்தஊர் திரும்பவேண்டும் என்பதே. இவ்வெண்ணம் இவனுக்குத் தோன்றியதற்குக் காரணம் சில வருடங்கட்குமுன் அதே ஊரிலிருந்து புறப்பட்டு பர்மா முதலிய இடங்கட்குச் சென்று அதிகபணம் சம்பாதித்துக்கொண்டு சிலர் திரும்பிவந்ததுதான். இவ்வெண்ணத்திற்குத் தன் தந்தை சிறிதும் சம்மதியார் என்பது அவனுக்கு நன்றாய்த் தெரிந்தவிஷயம். ஆகவே அவ்விடத்தில் சொல்லாது போகவேண்டியதே வழி என்றும், பிற்பாடு கடிதமூலமாய் தன் விருத்தாந்தங்களை தெரியபடுத்திக் கொள்ளலாமென்றும் நிச்சயித்தான். ஆனால் கப்பற் செலவுக்குப் பணம்வேண்டுமே அதற்கென்ன செய்வது என்று எண்ணிக் கொண்டிருக்கையில் நகரிலிருக்கும்போது அறிமுகமான ஒரு நண்பன் தன்

னைப் பார்க்கப் பிரியமுள்ளவனாகி கிராமத்திற்கு வரவே அவன் அதிக ஆனந்தங்கொண்டு சிறிது பேசியபின் நான் உன்னைப்பார்க்க எண்ணி நகரிற்கு வர எண்ணினேன், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் நீயே இங்கு வந்துவிட்டாய் என்றான். அப்படியானால் ஏதேனும் விசேடம் உண்டோ என்றான். ஆம் உண்டென்று சொல்லி இப்போது என் தகப்பனாருக்குக் கொஞ்சம் பணம் அவசியமாக இருக்கிறது. அதை நீ கொடுத்து உதவுவாயாகில் சீக்கிரத்தில் அதைத் திருப்பிக் கொடுப்பதும் தவிர நான் என்றென்றைக்கும் உன்பால் நன்றி செலுத்துவேன் என முடித்தான். இதைக்கேட்ட நண்பன் இதற்கென்ன இவ்வளவு ராமாயணம். நான் தருகிறேன். உன் தந்தையிடத்தில் வேண்டுமென்றால் சொல் அதிக அவசரமாயிருந்தால் இப்போது போகலாம் வா என்றான். இவ்வினிய மொழிகளைக்கேட்ட சுந்தரம் அப்படி அவ்வளவு அவசரமில்லை. இன்று இங்கு தங்கி நாளை போனால் போதும் என்று சொல்லவே இருவரும் இணங்கி அன்று அதிக ஆனந்தத்தோடு நாளைக்கழித்துவிட்டு மற்றைநாள் காலையில் நகரைநோக்கி புறப்பட்டனர். புறப்படுமுன்னரே சுந்தரம் தன் தகப்பனிடம் நகர் சென்று 2, 3 தினங்களில் வருவதாகச் சொல்லியிருந்தான். நகரமடைந்ததும் சுந்தரம் தன் அன்பன் வீட்டில் சாப்பிட்டுவிட்டு அவ்விடம் பணத்தையும் பெற்றுக்கொண்டு இனி அரைக்கணமும் தாமதிக்கக் கூடாது என்று உடனே அடுத்த புகைவண்டியேறி நாகைக்குச் சென்றனன். அங்கு சென்று விசாரிக்கும்போது அன்று சாயங்காலமே 8-மணிக்கு பினாங்குக்குக் கப்பல் புறப்படுவதாய்த் தெரியவந்ததால் தனக்கு அதில் ஒரு இடம் அமர்த்திக்கொண்டான். தன் நண்பனுக்கு "என் ஆருயிர் நண்ப! உன்னிடத்தில் நான் ஒரு பொய் சொல்லிவிட்டேன். மன்னிக்கவேண்டும். நான் வாங்கிக்கொண்ட பணம் எனக்கேயன்றி என் தகப்பனுக்கல்ல; திரைகடலோடியும் திரவியந்தேடு என்பதிற்கிணங்க பிற நாடுகள் சென்று பணம் சம்பாதிக்க வேண்டும் என்பது என் கருத்து. இதை வெளியிட்டால் எல்லோரும் என்னைத் தடுத்துவிடுவார்கள் என்று பயந்து ஒருவருடனும் என் உள்ளக் கருத்தை உரையாது வந்துவிட்டேன். மீண்டும் சுதேசம் வரவேண்டும் என்னும் கருத்து எனக்கு முற்றிலும் இருக்கிறது. ஆகையால் ஆயுள்மட்டும் பலமாக இருந்தால் நான் திரும்பி வருவதில் ஐயமில்லை உன் கடனையும் தந்துவிடுவேன்; என் பெற்றோர்கட்கு ஆறுதல் சொல்லுக. இங்ஙனம் அன்பன் சுந்தரம் என்று ஒரு கடிதம் எழுதி தபாலில்போட்டுவிட்டு சாயந்திரம் கப்பலேறிப் புறப்பட்டு விட்டான். எட்டு நாள் கப்பலிலே பிரயாணம் செய்தபிற்பாடு பினாங்போய்ச் சேர்ந்து அங்கிறங்கிச் சென்றான், இங்கிருந்து ரயிலேறி 3நாள் பிரயாணம்செய்து கொல்லம்பூர் சேர்ந்தான். அவ்வூரைப்பார்த்ததும் தான் அதிலேயே இருக்கவேண்டுமென்றெண்ணினான்.

இஃதிப்படியிருக்க மணிக்கரை செல்லுவோம். அங்கு சுப்பிரமணிய ஐயர் தம்மகன்போய் 3, 4 நாட்கள் ஆகின்றனவே இன்னும் வரவில்லையென்ன சமாசாரம் ஒன்றும் தெரியவில்லை இன்றுபோயாகிலும் பார்த்துவரவேண்டும் என்று தன் மனைவியுடன் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு ஆள்வந்து கதவைத் தட்டினான். சுந்தரம்தான் வந்துவிட்டானோ என்று ஆவலுடன் கதவைத்திறந்து பார்க்கையில் தமக்கு விலாசமிட்ட ஒருகடிதம் ஏந்திக்கொண்டு ஒரு ஆள் நின்றான். கடிதத்தைப் பிரித்துப் பார்த்ததும் சுந்தரத்தின் சமாசாரம் எல்லாம் விரிவாய்த் தெரிந்து நகரிலிருந்த சுந்தரத்தின் நண்பன்தான் இக்கடிதம் எழுதியது, என்னசெய்வார் ஐயர்? தம் குடும்பத்தைக் காப்பாற்றக்கூடியவன் சுந்தரம்தான் என்றெண்ணியிருந்தார். இவனோ இப்படிப்போய்விட்டான். வருவானோ வரமாட்டானோ ஒன்றும் விளங்கவில்லை. நிச்சயமாய் வருவதாய் எழுதியிருக்கிறான். அங்குபோய் அவன் மனம் என்னவாய் மாறி விடுகின்றதோ? போய்ச் சேர்வதற்கு முன் என்னென்ன ஆபத்துகள் நிகழ்கின்றனவோ? என்று பலவாறுவிசாரப்பட்டுக் கடைசியாக ஒருவாறு தம்விசனத்தை ஒதுக்கியிருந்தார். மீண்டும் நாம் கதா நாயகன் பால் செல்வோமாக. சுந்தரத்திடம் இருந்தபொருள் ஏறக்குறைய தீர்ந்துவிட்டது. என் செய்வான்? வேலையின்னும் ஒன்றும் கிடைக்கவில்லை. ஒருநாள்மாலையில் நல்லகாற்று வரும்படியான ஓர்பாதையில் தான் என்னசெய்வதென்று ஆழ யோசித்துக்கொண்டு மெதுவாக நடந்த நமது சுந்தரத்தை அவ்வூரிலுள்ள பாரிஸ்டர்களில் மிகவும் பேர்போன மிஸ்டர் ஜான் என்பவர்கண்டார். அவனைப்பார்த்ததும் அவருக்கு இவன் நல்லவன் நமக்கு உதவியாவான் என்ற எண்ணம் தோன்றியது. உடனே யார் ஐயா அங்கே செல்வது என்றனர் ஜான்.

சுந்தரம்:—சலாம் ஐயா, நான் தென்னிந்தியாவினின்றும் புறப்பட்டு ஏதேனும் சம்பாதிக்கும் எண்ணங்கொண்டு இவ்விடம் வந்தேன்; வந்து சில நாளாகியும் எனக்கு இன்னும் ஒரு வேலையும் கிடைக்கவில்லை.

ஜான்:—நீர் இங்கிலீஷ் நன்றாகப் பேசுகிறீரே எதாவது பாஸ்செய்திருக்கிறீரா.

சுந்தரம்:—ஆம் மெட்ரிகுலேஷன் பாஸ்செய்திருக்கிறேன்.

ஜான்:—பின் ஏன் அங்கேயே ஒருவேலை சம்பாதித்துக் கொள்ளக் கூடாது.

சுந்தரம்:—அங்கு வேலைகிடைப்பது வெகு அருமை. 5 ரூ கிடைப்பதும் வெகு அசாத்தியமாயிருக்கிறது.

ஜான்:—இங்குமட்டும் நல்லவேலை கிடைக்கும் என்று எப்படி தெரியும்?

சுந்தரம்:—இங்குவந்து சிலவருஷங்கள் தங்கியிருந்து ஏராளமான திரவியம் சம்பாதித்துக்கொண்டு எங்களூர்க்குத் திரும்பிவந்த சிலரால் அறிந்தேன்.

ஜான்:—அப்படியானால் சரி உன்னைப் பார்த்தால் யோக்கியன்மாதிரி காணப்படுகிறது. எனக்கு இப்போது ஒரு குமாஸ்தா தேவையாக இருக்கிறது; பிரியமிருந்தால் சொல் மாதம் ஒன்றுக்கு 30 ரூபாய் தருகின்றேன்; உனக்குச் சிலவு சுமார் 20 ரூபாய் ஆகும், 10 ரூபாய் மீதம் செய்யலாம்; மேலும் நாளாவர்த்தியில் உன் சாமர்த்தியத்தையும் யோக்கியதையும் கவனித்து உன்சம்பளத்தையும் உயர்த்துகிறேன். உனக்குப் பிரியமா அல்லவா என்பதை யோசித்துச் சொல்.

சுந்தரம் ஐயா, ஆதரவற்ற நிலைமையில் இருக்கும் எனக்குத் தாங்கள் அளிக்கும்வேலையை ஏற்றுக்கொள்ள எனக்கு அதிகதிருப்தி; நாளை முதலே ஆரம்பிக்கலாம். தங்கள் வீடு எங்கிருக்கிறது? நாளை அதிகாலையில் வந்து வேலையை ஒப்புக்கொள்கிறேன்.

ஜான் நீ இப்போது எங்கு தங்கியிருக்கிருய்? உன் சாமான்களை எங்கு வைத்திருக்கிருய்? தங்குவதற்கு வீடுபார்த்திருக்கின்ருயா?

சுந்தரம் வீடு ஒன்றும் பார்க்கவில்லை. ஒரு ஒட்டலில் இறங்கி யிருக்கிறேன். சாப்பாடும் படுக்கையும் அங்கேதான். நான் என்னுடன் கொண்டுவந்தது துணிமணிகள் அடங்கிய ஒரு சிறு பெட்டிதான். அதுவும் அந்த ஒட்டலிலேதா னிருக்கிறது.

ஜான் அப்படியானல் நீ உடனே சென்று உன் பெட்டியை எடுத்துக்கொண்டு என் பங்களாவிற்கு வந்துவிடு. (விலாசம் அச்சிட்ட ஒருகார்டைக் கையிற் கொடுத்தார்) உனக்கு ஜாகைக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.

இவ்வினிய மொழிகளைக்கேட்ட சுந்தரம் ஒட்டலுக்குச் சென்று பெட்டியை எடுத்துக்கொண்டு மிஸ்டர் ஜான்பங்களாவுக்குச் சென்ருன். அவரும் இவன் வருவதற்கு முன்னமே அவனுக்கென்று ஒரு அறை திட்டம்பண்ணி வைத்து அதில் அவனை இருக்கச்சொல்லிச் சாப்பாட்டுக்கு நல்ல ஒட்டல் ஒன்று ஏற்பாடுசெய்து கொடுத்தார்; அதுமுதல் சுந்தரம் அங்கேயே இருந்து வேலைகளைக் கிரமமாகச் செய்துவந்தான். நாளாக ஆக சுந்தரத்தின் சுறுசுறுப்பிற்கும் வேலைத்திறத்திற்கும் நற்குணத்திற்கும் பாரிஸ்டர் மிகவும் கொண்டாடி சம்பளமும் உயர்த்தினர்; கக்ஷிக்காரர்களிடத்திலும் சுந்தரம் அதிக அன்பும் ஆதரவுமாக நடந்துகொண்டபடியால் அவர்கள் தங்கள் வேலை முடிந்தவுடனே அவனுக்கு இனும் கொடுப்பது வழக்கமாயிருந்தது; இப்படி ஐந்து வருஷங்கள் செல்லவே சுந்தரம் 5000ரூபாய் மிச்சம் செய்து வைத்திருந்தான்; அப்போது தான் அவனுக்கு ஊர் ஞாபகம் வந்தது; இந்தப் பொருளைக் கொண்டுபோனல் எப்படியும் பிழைக்கலாம் என்று தோன்றியது; ஒருநாள் இரவு மிஸ்டர் ஜான் இடம் தன் கருத்தைச் சுந்தரம் வெளியிட்டான். அதைக்கேட்ட அவர் நீ சொல்வது மிகவும் சரியே, ஆயினும் இப்போது இப்பணத்தை உன்தகப்பனுக்கு அனுப்பிவிட்டு இன்னும் சிலநாள் இங்கிருந்து இன்னும் அதிகபணம் சம்பாதித்துக்கொண்டு போகலாமே என்றதற்கு இல்லை ஐயா, அவர்களைப் பார்க்கவேண்டும் என்னுமவா எனக்கு அதிகமாகிறது; அவர்களும் என்னை எண்ணியேஏக்கமாயிருப்பார்கள்; தாங்கள் தயைகூர்ந்து எனக்கு உத்திரவுகொடுக்கவேண்டும்; தாங்கள் எனக்குச்செய்த நன்றியை என்றும் மறவேன். என் பெற்றோர்கள் அநுமதித்தால் மீண்டும் இங்குவந்து தங்களிடத்தில் வேலை செய்ய எனக்கு ஆவலுண்டு; அது அங்கு போனதின்மேல் தெரிவிக்கிறேன் என்ருன் சுந்தரம்.

ஜான்: அப்படியானல் நீ எப்போது புறப்படுகிருய்?

சுந்தரம்: பினங்கிலிருந்து கப்பல் இன்னும் எட்டுநாளில் புறப்படுகிறதாம்; ஆகையால்நாலுநாள் சென்றபின் புறப்படலாம்என்றெண்ணுகிறேன்.

ஜான் நீ என்னைவிட்டு விடுவதால் எனக்கு விசனமே ஆயினும் நீ போய் உன் பெற்ருேர்களைப் பார்க்க விரும்புவதால் அவ்விசனத்தை ஒழிக்கிறேன். இப்போது எவ்வளவு பணம் சேர்த்துவைத்திருக்கிருய்?

சுந்தரம்: 5000 ரூபாய்

ஜான்: சந்தோஷம் இதோ நான் 5000 ரூபாய் உனக்கு இனமாகத்தருகிறேன். இதையும் எடுத்துக்கொள்; மேலும் என் கக்ஷிக்காரர்கள் பலரிடத்



தும் நீ அதிக அன்பாக இருந்தபடியால் அவர்களும் நீ இப்படி செல்லுவதை எண்ணி ஏதேனும் கொடுக்கலாம். நானும் அவர்களிடம் சரிப்பட்டால் பேசுகிறேன். நீயும் அவர்களைக்கேள்.

சுந்தரம்:—மிகுந்தசந்தோஷம் ஆயிற்று; தங்களுக்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்? என்று சொல்லிப்போய் விட்டான்.

கக்ஷிக்காரர்களும் இச்சங்கதி தெரிந்ததும் தங்களுக்குள் ஏற்பாடு செய்து 1500 ரூபாய் சேர்த்துச் சுந்திரத்திற்குக் கொடுத்தார்கள். சரியான காலத்தில் சுந்திரம் இந்த 7500 ரூபாயையும் எடுத்துக்கொண்டு எல்லோரிடத்திலும் செலவுபெற்றுக்கொண்டு ரயிலேறி பினங்கு சென்று கப்பலேறி நாளைக்கு வந்து மீண்டும் ரயிலேறி கோவை நகர் வந்து சேர்ந்தான். அப்போது சாயங்காலம் இருட்டி விட்டது. தன் நண்பன் வீட்டிற் றங்கி விட்டு மற்றைநாள் சாயங்காலம் புறப்பட்டு மணிக்கரை சென்ருன்.

இருக்க இருக்க வரும்படிகுறைந்துவிடவே மணிக்கரையில் சுப்பிரமணியஐயர் ஒரு ஒட்டல் வைத்துக்கொண்டு கஷ்ட ஜீவனம் செய்துவந்தார். சுந்தரம் ஒரு வழிப்போக்கன் மாதிரி அந்த ஒட்டலில் போய் இறங்கி இரவு போசனம் செய்துவிட்டு தன் தகப்பனுக்குத் தன்னை இன்னன் என்று உடனே தெரிவித்தால் ஒரு சமயம் அதிக சந்தோஷத்தால் கெடுதி நேரினும் நேரலாம் என்று கருதித்தன்னைத் தெரிவித்துக்கொள்ளாமல் தான் அயலூர் வாசியென்றும் அவர் குடும்பத்தைப்பற்றித் தனக்குத் தெரியும் என்றும் சொல்லி சுந்திரத்தைப்பற்றிப் பலகேள்விகள் கேட்கலானன். அப்போது சுப்பிரமணிய ஐயர் கண்களில் நீர்த்துளிகள் காணப்பட்டன. உடனே அவன் இந்த பேச்சைவிட்டு நேரமாகின்றது படுத்துக்கொள்வோம். இந்தப் பையில் பணம் அதிகமாக இருக்கிறது. ஆகையால் அதை ஜாக்கிரதையாய் வைத்திருந்து காலையில் தரவேண்டும் என்று பிரார்த்தித்து பையைக் கொடுத்துவிட்டு சுந்தரம் தெருத்திண்ணையில் படுத்துக்கொண்டான்.

"பணம் என்ருல் பிணமும் வாய்திறக்கும்" என்பது பழமொழி யன்ரே? நமது சுப்பிரமணிய ஐயர் பணத்தைப் பார்த்ததும் மாறிவிட்டார். இப்பணம் முழுதும் தானே அபகரித்துக்கொண்டால் இனிச்சுகமாக வாழலாம் என்று தீர்மானித்து அவ்வழிப்போக்கனைக்கொன்று விடுவதே உத்தமதொழில் என்று உன்னி தானும் தன் மனைவியுமாகச் சேர்ந்து அவன் நன்ருக நித்திரை செய்யும்போது கொன்றுவிட்டு பிரேதத்தை ஒருவருக்கும் தெரியாதபடி அடக்கம் செய்துவிட்டார்கள். மறுநாள் மத்தியானம் கோவையிலிருந்து சுந்தரத்தின் நண்பன் சுப்பிரமணியர் வீடு வந்து அவரைப்பார்த்து சுந்தரம் எங்கே என்ருன். அந்தணனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. என்ன நண்பா இப்படிக்கேட்கிருய்? அவன் போய் வெகுநாளாச்சுதே என்றனர். நண்பன் அது வாஸ்தவம் தானே, ஆனல் அவன் அதிக பணம் சம்பாதித்துக்கொண்டு திரும்பிவந்து விட்டானே. நேற்று இரவே இவ்குவந்திருக்கவேண்டுமே என்று சொல்லவே ஐயருக்கு அறிவுகெட்டுவிட்டது. மகனைத்தான் மாய்த்துவிட்டோமோ என்ற பயம் உண்டானது; உடனேபிரேதத்தை தோண்டிப் பரிசோதிக்கையில் அப்படியே தான் என்று அறிந்தான். அவர்மனைவி இதை யறிந்ததும் மூர்ச்சையடைந்தாள். ஐயர் விசனம் பொறுக்கமாட்டாமல் தற்கொலை புரிந்துகொண்டார். அவர் மனைவியும் மூர்ச்சையானவள் எழுந்திருக்கவே யில்லை. மூவரும் ஒழிந்து ஒரு குடும்பமே அற்றுப்போய்

விட்டது. இது சங்கதி அன்று சாயந்திரமே ஊரெல்லாம் பரவியது. கோவைக்கும் எட்டியது. அங்குள்ள பத்திரிகைகளிலும் பதிப்பிக்கப்பட்டது. இப்பத்திரிகைகள் சில சொல்லம்பூர் போய்ச்சேரவே மிஸ்டர் ஜானுக்கும் சமாசாரம் தெரிந்து அங்கும் அவர் அதிக விசனப்பட்டார். பாத்தீர்களா! பணம் செய்யும் வேலையை! "மற்றொருவன் பொருளைக் கைப்பற்ற எண்ணுதல் கெட்டது. ஆசை நாசம் என்பதும் பொய்யாமோ."

எம். வி. மீனாக்ஷிசுந்தர முதலியார் பி. ஏ.

## முக்கிய குறிப்பு.

கூடிய சீக்கிரத்தில் நவம்பர், டிசம்பர் மீ பத்திரிகைகள் வெளிவந்துவிடும். ஜனவரிமீ முதல் பத்திரிகையைக் கிரமமாகப் பிரசுரித்துவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அநேக சந்தாதாரர்கள் சரியானபடி சந்தாவை அனுப்பாமையாலேயே பத்திரிகை தாமதப்படுகிறது. ஆகையால் பாக்கியுள்ள சந்தாதாரர்கள் தயைகூர்ந்து சந்தாத்தொகையை அனுப்பி உதவி புரிவார்களென்று நம்பப்படுகிறது. [பத்திராதிபர்.]

# ஸ்திரீரத்னம்.

(209-வது பக்கத்தொடர்ச்சி.)

*தர்மசீலன்:*—நீர் சொன்னது நியாயந்தான். ஜனங்கள் நம்மை இருவரையும் தனிமையாய்க் கண்டபோதிலும் சந்தேகப்படுவார்கள். என் வீட்டிற்குப் போய் அங்கே சாவகாசமாய்ப் பேசுவோம் வாருமென்றான்.

*கார்த்தவீரனும்:*—அப்படியே சம்மதித்து இருவரும் தர்மசீலன்வீட்டிற்குப் போனார்கள். கார்த்தவீரன் கெட்டிக்காரனாயிருந்தபோதிலும் மனிதர்கள் நோக்கத்தை யறியக்கூடியவனல்ல. தர்மசீலன் ஒரு மனிதனைப் பார்க்கும்போதே இன்னகாரியமாக வந்திருக்கிறானென்பதை ஊகித்து விடுவான். கார்த்தவீரன் தர்மசீலனிடம் எல்லாம் சொன்னவுடனே,

*தர்மசீலன்:*—நல்லது நானும் இதைப்பற்றித்தான் விசாரப்பட்டுக்கொண்டிருந்தேன். ஜனங்களுக்கு உத்ஸாகமெல்லா மிருக்கிறது. பலமில்லையே பிரபுக்களுடைய சிப்பாய்களைக்கண்டு நடுங்குகிறார்களே என்று விசாரப்பட்டுக் கொண்டிருந்தேன்.

*கார்த்தவீரன்:*—தங்களுக்கு அந்த விசாரம் வேண்டுவதில்லை. விசித்ரவன் என்னைக் கெஞ்சிகேட்டுக்கொண்டான். அந்த பயங்காளிகளுடன் சேருவதில் எனக்கு பிரியமில்லை.

*தர்மசீலன்:*—ஆமாம் உமது சைனியங்களுக்கு பணம் வேண்டுமே நானென்ன செய்கிறது?

*கார்த்தவீரன்:*—அதற்காக தாங்கள் யோசிக்கவேண்டாம். நாம் முதலில் பிரபுக்களுடைய கஜானாவைப்பிடித்து விடுவோம். பிறகு அதை ஆளுக்குப்பாதி பிரித்துக்கொண்டால் போதும்.

*தர்மசீலன்:*—அவ்வளவு சிலவுசெய்ய நமது ராஜ்யத்துக்கு முடியுமாவென்று சற்று யோசித்து, இருக்கட்டும் அப்படியே செய்வோம்; ஆனால்



உமக்கும் நமக்கும் பழக்கத்தை திடீரென்று ஜனங்களுக்குக் காட்டக்கூடாது. நானும் யோசிக்காமல் காரியத்தை முடிக்கப்பார்த்து விட்டேன். என் யோசனைகள் முடிய் குறைந்தது இன்னும் ஒருமாதமாகும் போலிருக்கிறது.

*கார்த்தவீரன்:*—அத்தனை நாளாகுமா!

*தர்மசீலன்:*—ஆகும். அதற்குள் எல்லாவற்றையும் ஏற்பாடுசெய்து விடுகிறேன். நீரும் அதுவரையில் எப்போதும் போலவே பிரபுக்களிடத்தில் என்னை தூஷித்துக்கொண்டு விரோதமா யிருப்பதுபோல் பாசாங்குசெய்து உமது சைனியத்தை கொஞ்சங் கொஞ்சமாய் வெளியில் அனுப்பிவிடும். பிறகு சமயத்தில் கூப்பிட்ட வுடனே அவர்களெல்லோரும் திடீரென்று வரட்டும். பிரபுக்கள் தங்கள் சைனியங்கள் வந்துவிட்டதென்று தைரியமாயிருப்பார்கள். நாம் ஒரு நிமிஷத்தில் அவர்களை யேமாற்றி ராஜ்யத்தைப்பிடித்துவிடலாம்.

*கார்த்தவீரன்:*—அப்படியே செய்கிறேன்.

*தர்மசீலன்:*—விசித்ரவன் 19-ந்தேதி மிதிலைக்குப்போகிறது நிஜந்தானா? அன்றைக்கு நீரும் உமது சிப்பாய்களுடன் போனால் அவர்களுக்கு ரகசியமாய் சொல்லி வைக்கலாம்.

*கார்த்தவீரன்:*—அப்படி செய்கிறேனென்று சொல்லி பிறகு சற்று வேடிக்கையாய் பேசிக்கொண்டிருந்து, தர்மசீலனிடம் உத்திரவு பெற்றுக் கொண்டு சென்றான். கார்த்தவீரன் போனபிறகு, தர்மசீலன் (தனக்குள்) இவன் துராசையைப்பார்! என்னை ஏமாற்றப்பார்க்கிறான். கார்த்தவீரா உன்னை ஏமாற்ற நான் பிறந்திருக்கும்பொழுது என் வழியில் நீ வந்தால் உனக்கு அபாயம் நேரிடுமென்று ஏன் தெரியவில்லை யென்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு உள்ளே சென்றான்.

## 9-வது அதிகாரம்.

19-ந்தேதி காலையில் விசித்ரவன் தன் சைனியங்களோடும் உத்தமசேனன் தன் சைனியங்களோடும் புறப்பட்டார்கள். உத்தமசேனனோடு கார்த்தவீரனும் புறப்பட்டான். ஜனங்களுக்கு பயமுண்டாக்கவே இந்த ஏற்பாடு நடந்தபடியால் விசித்ரவன் ஆள்கள் தரித்துக்கொண்டிருந்த உடுப்பும் அவர்கள் கொடிகளுடன் குதிரைகள் மீது தங்கள் கொடிகளுடகளெல்லோரும் சேர்ந்து கூட்டமாக குதிரைகள் மீது தங்கள் கொடிகளுடனே சென்றதும் வெகு அழகாயிருந்தபடியால் ஜனங்கள் கூட்டங் கூட்டமாக வந்து பார்த்தார்கள். பிறகு வெகுநேரம் வரையில் பட்டணத்தில் சலனமில்லாமல் அமரிக்கையா யிருந்தது. மத்யானவேளை யானவுடன் சிலொன்று மில்லாமல் அமரிக்கையா யிருந்தது. மத்யானவேளை யானவுடன் சில ஜனங்கள் அங்கங்கே ஒன்று கூடுவதும் ரகசியமாய் ஏதோ பேசுவதுமா யிருந்தார்கள். இப்படி யிருக்க திடீரென்று ஓர் கொம்பு ஊதப்பட்டது. சற்றுநேரத்திற்கெல்லாம் தெருவில் வெகு ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் புறப்பட்டார்கள், ஒருமனிதன் குதிரைமீது ஏறிக்கொண்டு, ஒவ்வொரு தெருவிலும் நடுவில் போய் ஊதினான். ஜனங்கள் கூட்டம் சேர்ந்தவுடன் அக்குதிரை வீரன் ஜனங்களே, நாளைகாலையில் கோவிலண்டை எல்லோரும் ஆயுதங்களில்லாமல் வரவேண்டும். தர்மசீலர் நமது ராஜ்யத்தை சீர்திருத்துவதற்கு உங்கள் எல்லோரையும் அங்கே வரச்சொல்லுகிறார் என்றான். உடனே ஜனங்கள் சந்தோஷத்தினால் கத்தவும் இரைச்சல் வெகு தூரத்திற்கு

கேட்டது. குதிரைவீரன் தெருவிலும் இப்படியேசொல்லிக்கொண்டுபோனான். அன்றயதினம் பாதிராத்திரி முதல் கோவிலில் விளக்குவைக்கப்பட்டு சுவாமிக்கு அபிஷேகம்முதலியது செய்துவைக்கப்பட்டது. தர்மசீலன் பக்கத்தில் தூங்காமலே ராஜ்யத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து கடவுளை தியானித்துக்கொண்டே இருந்தான். பொழுதுவிடிந்து சூரியன் உதயமாவதற்குள் ஜனங்கள் ஏககூட்டம்கூடினார்கள். சற்றுநேரத்திற்கெல்லாம் மணியடிக்கப்பட்டது. உடனே கோவில் கதவுகள் திறக்கப்பட்டன. தர்மசீலனும், குணசேகரனும் நல்ல உடுப்புகளுடன் பின்னால் உருவின கத்தியுடன் 100 சிப்பாய்களோடு ஊர்வலம் வருவதுபோல் வந்தார்கள். வந்து கோவிலை பிரதக்ஷிணம் செய்துவிட்டு மண்டபத்தில் வந்து சேர்ந்தார்கள். உடனே தர்மசீலன் ஜனங்களைப் பார்த்து தங்கள் ராஜ்யம் கெட்டிருப்பதையும், அதை சீர்திருத்த தன் உயிரைக்கூட கொடுப்பதற்கு தயாராயிருப்பதாயும், உடனே ஜனங்கள் ஒன்றுக்கும் பயப்படாமல் சட்டங்களை ஏற்படுத்தி ஓர் ராஜாங்கத்தை யுண்டுபண்ணவேண்டுமென்றும் போதித்தான். உடனே ஒருவனை தான் ஏற்படுத்தியிருக்கிற சட்டங்களை வாசிக்கச்சொன்னான். அவன் வாசித்ததென்னவென்றால்:—ராஜாங்கத்தை யாள ராஜபிரதிநிதி சபையாரென்று ஓர் சபை ஏற்படவேண்டும். ராஜ்யத்தில் கொலை எவன் செய்தபோதிலும் அவனை தூக்கில்போட்டுவிடவேண்டும். எந்த பிரபுவும் நகரத்திலாவது சுற்றுப் பக்கங்களிலாவது கோட்டைகள் கட்டிக்கொண்டிருக்கக்கூடாது. ஒருவனும் கூலிக்கு சிப்பாய்களாவது கொள்ளைக்காரர்களாவது வைத்திருக்கக்கூடாது. பிரபுக்களிருக்கிற இடங்களிலெல்லாம் ஏற்படும் கொள்ளைக்கு அவர்கள் தான் ஜாமீனாயிருக்கவேண்டும். ராஜ்யத்திற்காக சிப்பாய்களேற்படுத்தி ராஜ்யத்தில் மணியடித்த உடனே எல்லாரும் புறப்படத் தயாராயிருக்கவேண்டும். ராஜ்யத்தைக் காப்பாற்றுவதற்கு சண்டையில் எவனிறந்தபோதிலும் அவன் வார்சுகளுக்கு ராஜாங்கத்தில் 500 ரூபா கொடுக்கவேண்டும். ராஜாங்க வருமானமெல்லாம் ராஜ்யத்தைக்காப்பாற்றுவதில் சிலவழிக்கப்படவேண்டும் என்று வாசித்தான். இதைக்கேட்டஜனங்கள் தர்மசீலன் மகாராஜனாயிருக்கவேண்டுமென்று கத்தினார்கள். உடனே பராக்ரமகேது எழுந்து ஜனங்களே! இந்த சட்டங்களெல்லாம் ஏற்படுத்தியதிலேயே நமக்கு இவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது. இதுகள் ஏற்படுத்தினவரே ராஜாவாயிருந்து ஆண்டால் இன்னும் நன்றாயிருக்குமல்லவா? ஆதலால் தர்மசீலனையே இச்சட்டங்களை அனுசரணைக்கு கொண்டுவருகிற அதிகாரங்கொடுக்கப்பட்ட ராஜாவாயிருக்கவேண்டுமென்கிறேன் என்றான். உடனே எல்லோரும் சந்தோஷத்துடன் அப்படியே அநுமதி கொடுத்தார்கள்.

இது நிற்க, மிதிலையில் ஓர் மனிதன் விசித்ரவனிடம் ஓடிப்போய் இச்சங்கதியைத் தெரிவித்தவுடனே, அவனுக்கு உண்டான ஆச்சரியத்தையும் கோபத்தையும்சொல்லிமுடியாது. அவன் உடனே தன் ஆள்களைப் புறப்படும்படி சொன்னான். கார்த்தவீரன் இதைக் கேழ்க்கவும் நம்பமுடியாமல் இது நிஜந்தானாவென்று விசித்ரவனைக் கேட்டான். வித்ரவன் நிஜந்தான் நாமிந்தப் பயலை என்னசெய்யலாமென்றான். கார்த்தவீரன் உமக்கு ஜனங்கள் சமாசாரம் ஒன்றும்தெரியாது உத்தமசேனன் எங்கேயென்றான். உத்தமசேனன் இந்தசமயத்தில் அங்கே வரவும் கார்த்தவீரன் உத்தமசேனா உனக்கு இந்தக் கலகமெப்படி யிருக்கிறதென்றான். உத்தமசேனன் எனக்கு பயமாயிருக்கிறதென்றான். உடனே கார்த்தவீரன் நல்லது உங்கள் காரியங்களில் இனி



நான் பிரவேசிக்க முடியாது, நான் போய்விடுகிறேனென்று விசித்திரவன் என்ன சொல்லியும் கேளாமல் புறப்பட்டு விட்டான்.

கார்த்தவீரன்:—(தனக்குள்) இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது! இந்த அயோக்கியப்பயலை நம்பினதில் என்னை ஏமாற்றிவிட்டானே. அவன் இவ்வளவு கெட்டிக்காரனென்று நானெண்ணவில்லையே. என்னைக் கூட்டாக சேர்த்துக்கொள்வதாக சொன்னதை நம்பி என் ஆள்களுக்குக் கூட பிரபுக்களை விட்டு விலகும்படி உத்திரவுகொடுத்துவிட்டேனே. இருக்கட்டும் இந்தப் பயலை இத்துடன் விடுகிறதா முன்னால் பிரபுக்களுடைய பலத்தைக் குறைக்கிறேன், பின்னால் இந்தப் பயலைத் தொலைக்க வழிதேடுகிறேனென்று சொல்லி உடனே தன் சைனியங்களைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டான். விசித்ரவன் கார்த்தவீரனை எங்கே பார்த்தும் அகப்படவில்லையென்று கண்டு ஒருவேளை அவனும் முன்னதாகவே போயிருப்பானென்று நினைத்து தானும் புறப்பட்டான். விசித்ரவன் நகரத்து வாசலுக்கு வந்தவுடன் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. உடனே கதவைத் திறந்துவிடும்படி ஓர் ஆளிடம் சொல்லியனுப்ப அவன் போய்த் திரும்பிவந்து உங்கள் ஆள்கள், கொடிகள் இதையெல்லாம் தள்ளிவிட்டு வெறும் ஆளாய் வந்தால்மட்டும் உள்ளே நுழையலாமென்று உத்திரவாமென்று சொன்னான். விசித்ரவனுக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. அடே! இது எந்தப்பயலுடைய உத்திரவென்றான். அவன் தர்மசீலன் குணசேகரன் இவர்களுடைய உத்திரவாமென்றான்.

விசித்ரவன்:—அடே நீ மறுபடியும் போய், உடனே கதவைத் திறக்காவிட்டால் நாளையசாயந்திரத்திற்குள் தர்மசீலன் குணசேகரன் இருவர்களையும் மலையுச்சியிலிருந்து உருட்டிவிடப்படுமென்று சொல்லென்றான். இதையும் சொல்லி அந்த ஆள் மறுபடியும் விசித்ரவனிடம் வந்து சுவாமி நீங்களும் உங்கள் ஆள்களும் ராஜதுரோகிகள்; சண்டைக்கு வரலாமென்று சொல்லிவிட்டானென்று சொல்வதற்குள் கதவுகள் திறக்கப்பட்டன. ஜனங்கள் கத்தியுடன் யுத்தத்துக்கு வெகு கூட்டமாய் புறப்பட்டார்கள். பிரபுக்கள் சைனியங்கள் சற்று சண்டைபோட்டுப் பார்த்து முடியாமல் ஓட ஆரம்பித்தார்கள்; உடனே அவர்கள் ஜனங்களை ஒருமைல்வரையில் துறத்திவிட்டுச் சென்றார்கள், உடனே பிரபுக்கள் ஒன்றும் செய்யத்தோன்றாமல், அவசரமாக ஓர் ஆலோசனைசபை கூடினார்கள், சில பிரபுக்கள் மலையபுறத்தில் விசித்ரவன் கோட்டையில் போய் குடியிருக்கலாமென்றார்கள்; சிலர் நமது சைனியங்களைப் பிரித்துக்கொண்டு ஒவ்வொருவராய் போகலாமென்றார்கள். இன்னும் சிலர் நாம் இந்த சமயத்தில் உள்ளே போகக்கூடாது, நாம் மலையபுறத்தில் போயிருக்கவேண்டும், ஒருவன் மட்டும் ரகசியமாய் நகரத்தில்போய் அவர்களுக்கு சைனியம் எவ்வளவிருக்கிறதென்று பார்த்துவரவேண்டுமென்றார்கள். சிலர் அது யாரால் முடியும்? அதற்கு ஒருவரும் துணியமாட்டார்களேயென்றார்கள். இப்படியிருக்க உத்தமசேனன் எழுந்து பிரபுக்களே! நீங்கள் இதற்காக யோசிக்க வேண்டாம். நான் போகிறேன். ஆனால் உங்களுக்காக நான் போகவில்லை. எனக்காக நான் போகிறேன். அங்கே போனபிறகு அவர்கள் ராஜாங்கமாளுவது நியாயமாயிருந்தால் ஒருவேளை நானதை அங்கீகரித்தாலும் அங்கீகரிப்பேன். என் மனதிற்கு சரியாக இல்லாமற்போனால் வந்துவிடுவேனென்றான்.

விசித்ரவன்:—நீ சொல்வது சரி, நீதானிதற்குத் தகுந்தமனிதனென்று சொல்லி சந்தோஷித்தான். உடனே பிரபுக்களெல்லோரும் இதை அங்கீகரி

த்துக்கொண்டு மலைபுறத்திற்குப் புறப்பட்டார்கள். உத்தமசேனன் தனது ஆள்களுடன் கதவுகளண்டை போனவுடன் காவல்காரன் சுவாமி உங்களை மட்டும் உங்கள் ஆள்களோடு விடும்படி யஜமானுத்திரவென்று சொல்லி நீங்கள் உள்ளே போகலாமென்றான். உத்தமசேனன் தன்னைப்பற்றி தர்மசீலன் அவ்வளவு ஞாபகம் வைத்திருந்ததைப்பற்றி சந்தோஷித்து உள்ளே சென்றான். உள்ளே கூட்டமே ஒன்றுமில்லை. பாதி ஜனங்கள் கோட்டை சுவர்களை காத்துக்கொண்டிருந்தார்கள். உத்தமசேனன் கொஞ்சதூரம் உள்ளே போகவும் கூட்டமெல்லாம் கோவிலண்டை நிற்கக் கண்டான். இது தர்மசீலனைபார்க்க சமயமல்லவென்று நினைத்து தன் குதிரையையும் ஆளையும் வெளியில் நிறுத்திவிட்டு உள்ளேபோய் கூட்டத்தோடு நிற்போமென்று சென்றான். உள்ளே போனதும் ஒருவனைப் பார்த்து இதென்ன கூட்டமென்றான். அவன் உமக்குத் தெரியாதா புதிய ராஜாங்கத்துக்கு ஜனங்கள் சேர்ந்து தர்மசீலனுக்கு ராஜா என்று பட்டங் கொடுக்கவேண்டுமென்று நிர்மானித்திருக்கிறார்களே; இப்போது பிரபுக்களில் சில்லறைபிரபுக்களும் மற்றவர்களும் அவருடைய பதிலைக் கேட்பதற்கு வந்திருக்கிறார்களென்றான். இந்த சமயத்தில் வாத்தியம்கேட்க்கவும் தர்மசீலனும் குணசேகரனும் சேர்ந்தாற்போல வந்தார்கள். தர்மசீலன் மேடைமீதுநின்றான். ஜனங்களைத் தவிர பெண்களும் வெகு ஆவலோடு வீட்டு மச்சுகளிலிருந்து பார்த்தார்கள். அந்தக் கூட்டங்களில் தனக்கு பிரியமான பத்மாவதி தன் அண்ணன் சந்தோஷங்களை அனுபவித்துக்கொண்டு வெகு அழகாய் நிற்பதை உத்தமசேனன் கண்டு அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவளுக்குப் பக்கத்தில் அந்த சமயத்திற்கென்று அதிக சந்தோஷத்தால் இவளைப்பார்க்கிலும் அதிகமான முகக்களையோடு தனக்கு ராணிப்பட்டம் வருவதை நினைத்து சந்தோஷித்துக்கொண்டு கலாவதி நின்றாள். தர்மசீலன் வந்த சற்று நேரத்திற்கெல்லாம் பேச ஆரம்பிக்கவும் கூட்டங்களின் இறைச்சலும்நின்றன. தர்மசீலன் தனக்கு ராஜாவென்றபட்டம் வேண்டாமென்றும் தான் எப்போதும் ஜனங்களைச் சேர்ந்தவனாகையால் பட்டமே வேண்டாமென்றும் சொன்னான்; துஷ்டபுத்தி இதைப் பார்த்து ராஜா என்று பட்டம் வகித்துக்கொள்ளாவிட்டாலும் பிரபு என்றாவது பட்டம் வைத்துக்கொள்ள வேண்டுமென்றான்; தர்மசீலன் அதுவும் தனக்கு தகுந்ததல்லவென்றும், தனக்கு அவசியமாக ஓர் பட்டம் கொடுக்கவேண்டுமானால் நியாயாதிபதியென்று பட்டம் கொடுக்கும்படிக்கும் சொல்ல ஜனங்கள் வெகு சந்தோஷத்தோடு அப்பட்டத்தைக் கொடுத்தார்கள். பிறகு தர்மசீலன் தன்னைப்போலவே குணசேகரனுக்கும் அப்பட்டத்தைக் கொடுக்கவேண்டுமென்று சொல்ல ஜனங்கள் அப்படியே செய்தார்கள். குணசேகரனும் எழுந்திருந்து ஜனங்களுக்கு வந்தனமளித்து உட்கார்ந்தான். உடனே ஓர் உத்தியோகஸ்தன் வெள்ளித்தடியுடன் முன்வந்து, ஜனங்களே பிரபுக்களே இங்கே இருக்கிறவர்களில் நமது சட்டத்தை யனுசரிக்காதவர்கள் இன்னாரென்று தெரியவில்லையாதலால் ஒவ்வொருவரும் வந்து தயவுசெய்து பிரமாணமாய் இந்த சட்டங்கள்படி நடக்கிறேனென்று சொல்லி புஸ்தகத்தில் கையெழுத்துப் போடவேண்டுமென்று சொன்னான்; தர்மசீலன் பேச்சையும் கேட்டு ஜனங்களுக்கு அப்போது இருந்த உத்ஸாகத்தில் அனேகர் கையெழுத்துப் போட்டார்கள்: முதல் முதல் கலாவதியின் தகப்பன் கையெழுத்து செய்தார்; பிறகு அவரைப்போன்ற மற்ற பிரபுக்கள் கையெழுத்துப்போட்டார்கள். பிரபுக்களில்



சிலர் குணசேகரன் தாக்ஷணியத்திற்கு போட்டார்கள்; சிலர் உற்சாகத்தால் இது நியாயமென்று போட்டார்கள். ஒவ்வொருவரும் கையெழுத்துப் போட்டுவிட்டுப் போகவும் தர்மசீலனுக்கும் உத்தமசேனனுக்கும் நடுவிலிருந்த கூட்டம் கலைந்தது. உத்தமசேனன் தர்மசீலனையெதிரில் கண்டான். மனதிற்கு ஒன்றும் தோன்றவில்லை. தர்மசீலன் தன்னைப்பார்த்து நீயும் கையெழுத்துப் போடுவாவென்று கூப்பிடுவதுபோலிருந்தது. தர்மசீலனுடைய நல்லமாதிரிகளைப் பார்த்த மட்டில் இவனுக்கு அவனை மறுதளிக்கவும் மனதுவரவில்லை. நிமிர்ந்து பார்க்க எதிரில் தன் கண்மணி பத்மாவதி நின்று பார்த்துக்கொண்டிருந்தாள்; அவள் நின்றதும் பாதகமில்லை, நானிருக்கிறேன், நீ கையெழுத்துப்போடலாமென்று சொல்வதுபோலிருந்தது. ஜனங்களின் உத்ஸாகமும் சந்தர்ப்பமும் இவன் மனதைக் கலங்கச்செய்தன. இதை தர்மசீலனும் கண்டு குணசேகரனுக்கு ஜாடைசெய்ய, குணசேகரன் ஜனங்களைப்பார்த்து வழிவிடுங்கள் உத்தமசேன பிரபு வருகிறாரென்றான். இனிமேல் அவ்விடத்தை விட்டு கையெழுத்துப் போடாமல்போவது முடியாதகாரியம். ஏதோ கனவு காண்பதுபோல உத்தமசேனன் ஒருயோசனையும் செய்யாமல் மண்டபத்தில் ஏறினான். ஏறினதும் பேனாவை எடுத்தான். புஸ்தகம் எதிரில் வைக்கப்பட்டிருந்தது. உடனே கையெழுத்துபோட்டோமென்ற ஞாபகம்கூட இல்லாதவனாய் கீழே இறங்கி வந்தான். இவ்விதமாக பிரபுக்கள் வம்சத்தில் முக்கியமானவனும் இந்த ராஜாங்கத்தை ஒப்புக்கொண்டான்.

இது நிற்க, கார்த்தவீரன், காவல்காரன் உள்ளேவிடமாட்டேனென்று சொன்னவுடன், தந்திரமாகத் தன் ஆளைவிட்டு தர்மசீலனை நேரில்கண்டு கேட்கச் சொன்னான். அவன் திரும்பிவந்து, இந்த தேசத்தில் இனிமேல் திருடர்களுக்கு இடமில்லை யென்றும் நாளையதினம் முடிவதற்குள் உன் யஜமானன இந்த ஊரைவிட்டு ஓடிப்போய்விட வேண்டுமென்றும் சொன்னதாகவும், தன்னைப்பார்த்து நாளைபதினம் இந்த ராஜ்யத்தில் காணப்பட்ட ஒவ்வொரு திருடனுக்கும் தூக்குமேடை தயாராயிருக்கிறதென்றும் சொன்னதாகச் சொன்னான்.

கார்த்தவீரன்—மோசம் பண்ணினது போதாமல், நம்மை எதிர்க்கவும் பார்க்கிறானு! இருக்கட்டுமென்று தன் சைனியங்களைக் கூட்டிக்கொண்டு தன்னூர் சென்றான். அங்கே கொஞ்சநாள் ரூபாவதியைக் கண்டு சந்தோஷித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் சிலர் நல்ல உடுப்புகளுடன் வெள்ளிக்கோல்களோடு வந்துசேர்ந்தார்கள். கார்த்தவீரன் அவர்களைப்பார்த்து யாரென்று கேட்கவும் தாங்கள் தர்மசீலனுடைய தூதர்களென்றும் ஓர் கடிதத்தையும் கொடுத்தார்கள். கார்த்தவீரன் கடிதத்தைப் பார்த்துவிட்டு, உங்கள் யஜமானர் இன்னும் இரண்டு நாளில் என் கோட்டையை இடிக்கவேண்டுமென்கிறார். நல்லது எனக்கு இவ்வளவு சாவகாசமாவது கொடுத்தாரே. விசித்ரவன் என்பதற்குள், அவர்கள் "விசித்ரவனும் ராஜாங்கத்தில் சேர்ந்து கையெழுத்துப் போட்டு ஒருவாரமாகிறது. அவர் கோட்டைக் கல்களையெல்லாம்சேர்த்துத்தான் இப்போது ராஜாங்கத்துக்கு புதுஜயில்தயார்செய்திருக்கிறது. அதற்கு ஜன்னல் கம்பிகளெல்லாம் நிர்குண பிரபுவின் கோட்டையிலிருந்து கொண்டுவரப்பட்டன. பிரபுக்கள் எல்லோரும் கையெழுத்துப்போட்டுவிட்டார்கள். இப்போது சுற்றுப் பக்கங்களில் திருடர்களென்பதே கிடையாது" என்றார்கள். இதைக்கேட்கவும் கார்த்தவீரன் மனதிற்குள் பயந்து நல்லது உங்கள் யஜமானனிடம்போய் நான் சீக்கிரம் அப்படியே

செய்து விடுவதாயும் ஆனால் இன்னும் கொஞ்சநாள்கூட கொடுக்கும்படி கேட்டுக்கொண்டதாயும் சொல்லுங்களென்று சொல்லி ஓர் கடிதமும் கொடுத்து அவர்களை யனுப்பினான். கார்த்தவீரன் மேலுக்கு கோட்டையை இடிக்க சம்மதித்ததுபோல் காட்டிக் கொண்டானே யொழிய கடிதம் வந்தது முதல் கோட்டைகளை பலப்படுத்த வாரம்பித்தான். கொஞ்ச நாளைக்குப் பிறகு உத்தமசேனன் இவனிடம் வந்தான். இருவரும் க்ஷேமசமாசாரம் விஜாரித்துக் கொண்டதில், தர்மசீலனுடைய கீர்த்தி அதிகமாகிக்கொண்டு வருவதாயும் அழகாபுரி அரசனின் தம்பி பெண்சாதி, புருஷனுக்கு விஷம் வைத்துக் கொன்ற கேசை தர்மசீலன் தான் விசாரிக்க வேண்டுமென்று அழகாபுரி அரசன் ஏற்படுத்தியதாயும் தான் அது விஷயமாய் விசாரணை என்றைக்கு என்பதை அறிவதற்கு அழகாபுரி அரசனிடம் போவதாக உத்தமசேனன் சொன்னான். கார்த்தவீரனுக்கு இதையெல்லாம் கேட்க தர்மசீலனைப் பற்றிய பயம் அதிகரித்தது. உத்தமசேனன் கார்த்தவீரனை தன் பெண்சாதி சௌக்கியமா வென்று கேட்டபொழுது சற்று மௌனமாயிருந்து பெருமூச்சு விட்டுக்கொண்டு, ஐயா! அவளை நான் என் பெண்சாதியென்று சொல்லிக்கொள்ள முடியவில்லையே! எனக்கு இதை நினைக்க நினைக்கத்தான் வருத்தம் அதிகரிக்கிறதென்றான்!

உத்தமசேனன்—இதென்ன ஆச்சரியம்! நான் வரும்போது அவள் என்ன அழகாய்ப் பாடிக்கொண்டு உம்மைக் கட்டிக்கொண் டிருந்தாள். அதனால்தானே நானப்படி கேட்டேனென்றான்.

கார்த்தவீரன்—ஐயா, என் ரூபாவதி நல்ல வம்சத்தில் பிறந்தவள். அவள்தாய் தந்தையர்களைக் கேளாமலே என்மீது ஆசைவைக்கத்தொடங்கினாள். எங்கள் ஆசை சாமானிய மானதல்ல. ஒருவரை ஒருவர்விட்டு சற்றுகூட பிரியமாட்டோம். இப்படியிருக்க திடீரென்று ரூபாவதியைக் காணாமல் நான் பட்டகஷ்டம் சொல்லிமுடியாது. எங்கேதேடியும் அவள் அகப்படவில்லை. பிறகு நான் கலியாணமே செய்துகொள்வ தில்லையென்று சத்தியம் செய்துகொண்டு இந்த சைனியங்களுக்குத் தலைவனாக சேர்ந்தேன். வெகு நாளைக்குப் பிறகு ரூபாவதி மறுபடியும் என்னிடம் வந்து சேர்ந்தாள். நானென்ன செய்வது? அவளைவிட முடியவில்லை. அவளுக்கும் என்னைவிட்டுப்பிரிய மனம்வரவில்லை. நான் சத்தியம் மீறி அவளை மறுபடியும் சேர்த்துக்கொண்டதற்காக என் குரு என்னை ஜாதிப்ரஷ்டம் செய்துவிட்டார். அப்படி செய்தும் நாங்கள் பிரியவில்லை. பிறகு எங்களுக்கு ஓர்மகன் பிறந்தான். அந்த மகனுக்கு ஒரு வயதானதும் அவனை ஒருநாள் காணோம். அவனையும் எங்கே தேடியும் அகப்படவில்லை யாகிலும் எனக்கு சந்தேகம் ரூபாவதியின் தாயான உத்தமி பேரிலேயே இருந்தது. ஏனென்றால் அவள் எங்கள் கலியாணத்தையும் எங்கள் சிநேகத்தையும் நிந்தித்தவள். இந்தக் குழந்தை பிறந்ததும் அவளின்னும் அதிகமாக நிந்திக்க வாரம்பித்தாள். அவள் புருஷன் தன் பெண்ணுக்கு நேர் கலியாணமில்லாமல் இப்படி அவமானம் வந்ததேயென்று மனவருத்தத்தால் பிராணனைவிட்டார். அக்குழந்தையை நான் வளர்க்கக் கூடாதென்று அந்த உத்தமி சண்டைபோட்டு வந்ததால் நான் அவளைச் சந்தேகிக்கலானேன். வெகுநாளைக்குப்பிறகு தற்செயலாய்அவளைக் கண்டு கேட்டதில் அந்தக் குழந்தை இறந்து போய்விட்டதென்று சொல்லிவிட்டாள். பிறகு நான் பட்ட துயரத்தை என்னவென்று சொல்லுவேன். என் ரூபாவதி அந்தக் குழந்தைக்காகத்தான் தன் உயிரை வைத்துக்கொண்



டிருக்கிறாள். இப்படி யிருக்க இந்த சமாசாரத்தை என் ரூபாவதியிடம் நானெப்படி சொல்லுவேன். அவள் ஏற்கனவே தனக்கு கிடைத்த அவமானத்திற்காக மனதிலேயே வருத்தப்பட்டு உருகிப்போகிறாள். இந்த சங்கதியையும் நானவளுக்குச் சொன்னால் குத்தினது போதாமல் குத்தின கத்தியையும் தேகத்தைவிட்டு பிடுங்குவதுபோலிருக்கும். நானென்னசெய்வேன்? நானிதற்காகத்தா னவளிடம் இந்த சமாச்சாரத்தை சொல்லாமலே அவளிடம் சந்தோஷமாகவே பொழுதைப் போக்குகிறே னென்றான்.

உத்தமசேனன்—கார்த்தவீரரே! உமது வீட்டு நிலைமையைக் கேட்க வருத்தமாகத்தா னிருக்கிறது.

கார்த்தவீரன்—இது கிடக்கிறது. எனக்கு இந்த வருத்தமெல்லாம் ஓர் லக்ஷியமா? நல்லது தர்மசீலனுக்கு ஓர் பிரபுவின் சம்பந்தமும் கிடைக்கும்போ லிருக்கிற தென்றான்.

உத்தமசேனன்—அதுதான் ஏற்கனவே கிடைத்துவிட்டதே. தர்மசீலனுக்கும் வீரபத்ர பிரபுவின் பெண் கலாவதிக்கும் கலியாணமாகிவிட்டதே.

கார்த்தவீரன்—அது எனக்குத் தெரியாதா? நானதைச்சொல்லவில்லை; வேறு ஓர் பெரிய பிரபுவின் சம்பந்தத்தைச் சொல்லுகிறேன்.

உத்தமசேனன் அந்த ஜாடையை யறிந்து சிரித்துக்கொண்டு ஆமாம், அதுவும் அதிர்ஷ்ட மிருந்தால் நடக்கலாம், உம்மிடத்தில் மறைப்பானேன்? எனக்கும் பத்மாவதிக்கும் சம்மதம்தான், நடக்கவேண்டிய வேளைமட்டும் இன்னும் வரவில்லை யென்று இப்படி வேடிக்கையாய் பேசி யிருந்து விட்டு, கடைசியில் உத்தம சேனன் கார்த்தவீரனிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

எஸ். இராமசுவாமி ஐயர், பி-ஏ.

## உத்தரராம சரித்திரம்.

### (குசலவவாக்கியம்.)

328 அருகில்வந்த தூதர்களை அபி ராமர் பார்த்து
ஒரு விஷயம் ஒளியாமல் உரைக்கவேணு மென்றார்.
329 சாரணரும் அதுகேட்டு தாங்கள் மெத்த பயந்து
நாடு நகரெங் கெங்கும் நல்வசனம் கேட்டோம்.
330 ஸ்ரீராமர் கீர்த்திதன்னை திக்கெங்கும் கேட்டு
திரும்பி நாங்கள் வரும்பொழுது தீயனொரு வண்ணான்.
331 சகச வார்த்தை தன்னை தாங்கள் பயந்துரைக்க
(அந்த) ஆகாத வார்த்தைகளை அபிராமர் கேட்டு
332 ஜானகியை மிகவெறுத்து தவிச்சு மனந்தளர்ந்து
மாநகரின் அவமதிப்பும் வைதேகி குணமும்
333 வருத்தமுடன் தாசரதி தம்பியரை அழைத்து
(இந்த) வணக்கமுள்ள மைதிலியை வனத்தில்விடு மென்றார்
334 தம்பியர்களிதுகேட்டுத் தவித்து மன முருகி
என்ன அபசாரம் செய்தாள் மைதிலியா ளுமக்கு

335 உலகவாக்கியம் நாலுமுண்டு எண்ணலாமோ ராமா
(எங்கள்) மதனியோடே புகழ்களுக்கு குறைவருமோ ஐயா
336 (நம்ம) தந்தையரும் தேவர்களும் வந்து முன்னே சொன்ன
மங்களமாம் வார்த்தைகளை மறந்திரோ அண்ணா
337 தணல் முழுகி தெளிவு சொன்ன ஜானகியாள் மகிமை
அறியோமோ நாமுமென்று அண்ணரடி பணிந்தார்
338 (அந்த) வண்ணான் சொன்ன பாவந்தன்னை எண்ணலாமோ என்று
(ஸ்வாமி) பங்கஜமாம் இருதாளில் பரதர் பற்றிப் பணிந்தார்
339 பரதர்பற்றிப் பணியலுமே இளங்கோவுக் கிளையோர்
மன்னருட முகநோக்கி மனது நொந்து உரைப்பர்
340 (அந்த) பழுதுசொன்ன பாஷாண்டியை பத்தியிங்கே இழுத்து
உயிர்வதைத்து கொல்லுவது உச்சிதமே ஐயா
341 ஆயுதம் என்கை யிருக்க தாயைச்சொல்லக்கேட்ட
(நான்) அலகெடுத் தென்தேகந்தன்னை அறுத்தெரிய வேணும்
342 (என்று) விறுவிறுத்து சத்ருக்னர் விசனத்துடன் கூட
அருவி யோட இருகண்ணிலும் அபிராமரைப் பணிந்தார்
343 இருபேரும் போனபின்பு (ராமர்) லக்ஷ்மணரைப்பார்த்து
அரக்கொடிய வார்த்தை தன்னை அபிராமருரைப்பர்
344 தம்பி சமுதாடுதனை எடுத்து என் தேகந்தன்னை பிளந்து
பிராணஹானி பண்ணிக்கவோ மாதைவிட்டு வரயோ
345 (என்று) கொடுநாகம்போல ராமர் கோபமிக மண்டி
(என்) உயிரான ஜானகியை ஓட்டிவா போ என்றார்
346 இளையகோவும் அதுகேட்டு எண்ணி மனநொந்து
தாஸரதி ராமருட தாளடியில் பணிந்து
347 (அந்த) வணக்கமுள்ள மைதலியை மாபாவி அடியேன்
வனத்தில் வாருமென்றழைக்க என்ன சொல்வே னய்யா
348 என்று தம்பிமுகநோக்கி ஏங்கி ரகுராமர்
இனியொருக்கால் வனம் பார்க்க வேணுமென்றாள் மாது
349 அந்த அடையாளஞ்சொல்லி ஆரணங்கை யழைத்து
அடவி தன்னில் விட்டுவா (என்) ஆன தம்பி என்றார்
350 (மிக) நொந்து வெகுவாய்ச் சலித்து வெறுத்து இளங்கோவும்
சர்வேஸ்வரியுடைய சமுகம் தன்னில் வந்து
351 (என்) தாயாரே கேளுமம்மா தாச ரதி தேவி
சந்ததமும் உந்தனுடன் எந்தன் விதியம்மா
352 இனியொருக்கால் வனங்கள் தன்னை காணவேணுமென்றும்
வனத்தி லுள்ள மாதர்களை பார்க்கவேணுமென்றும்
353 ஆடையோ டாப ரணம் அளிக்கணுமென்றீராம்
ஆதிரகுராமரும்மை அழைத்துப்போகச் சொன்னார்
354 சீதாதேவி கேட்டு சிந்தை மெத்த மகிழ்ந்து
கௌசலையாள் மனை புகுந்து களிப்புடனே உரைப்பள்
355 இனியொருக்கால் வனங்களுக்கு ஏகி நான் வருவேன்
விடைதாரு மென்று சொல்லி மிதுலை வாழ்வு பணிந்தாள்
356 பொடிவீசும் கானகத்தில் போனநாள் போராதோ
வனங்களுக்கு போகிறது மகிழ்ச்சியோ என்மகளே

R. S. சுப்பலக்ஷ்மி அம்மாள்.



# சமாசாரக்குறிப்பு.

மிஸ் கெலர்மேன் என்பவள் தேமிஸ் நதியில் 4 மணி நேரத்துக்குள் 13 மயில் நீந்தினளாம்.

***

இங்கிலாந்து வாசி ஒவ்வொருவனும் வருஷம் ஒன்றுக்கு 173 பவுண்டு உருளைக்கிழங்கு தின்கிறானும். ஆனால் இந்தியாவில் ஒவ்வொருவனும் 5 மூட்டையரிசி சோறு தின்கிறான்.

***

இந்தியாவில் பிறக்கிற இந்து ஜனங்களையெல்லாம் கணக்கிட்டால் ஒவ்வொரு இந்தியா சுதேசியும் சராசரி 24 வயதுக்குத்தான் இருக்கிறான். ஆனால் சீமையில் 44 வயது.

***

ஜப்பானில் ஒரு குறிப்பிட்ட வயதுக்குள் விவாகஞ்செய்து கொள்ளாத ஒவ்வொரு பெண்ணையும், தங்களாற் நியமிக்கப்படுகிற ஒவ்வொருவனுக்கு வாழ்க்கைப்படும்படி கட்டாயம் செய்கிறார்கள்.

***

நரம்பைப்பற்றிய வியாதிகளுக்கும், கால்கைபிடிப்புகளுக்கும் ஒரு வியக்கத்தக்க மருந்து கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது. நல்ல மழையில் ஸ்நானம் செய்வதுதான் அந்த மருந்து. இதனால் அனேகர்கள் சுவஸ்தமடைந்திருப்பதாக ஒரு பத்திரிகையில் கூறப்படுகின்றது.

***

ஜப்பானில் ஒரு பெண்ணுக்கு விவாகமானவுடன், அந்தப்பெண் தன்னைப் பெற்று வளர்த்ததற்கு உபகாரமாகப் பெற்றோருக்கு இனும் கொடுப்பது வழக்கம். இந்தியாவிலும் அப்படித்தானே! உபகாரம் செய்யாவிட்டாலும் தொந்தரவு செய்யாமலிருந்தாற் போதாதா?

***

மேலச் சைனாவுக்கும் திபெத்துக்கு மத்தியில் மலையில் ஒரு படி இருக்கிறதாம். அதில் 20,000 படிகள் இருக்கிறதாம். இவைகள் பளபளப்பான வெண் கற்களால் செய்யப்பட் டிருக்கின்றனவாம். மொத்தவுயரம் 5,000 முதல் 11,000 ஜாதிபடிவரை யிருக்குமாம். எவர் காலத்தில் யார் நிர்மாணித்ததோ அறியோம்!

***

கிரீன்வுட் என்னுமிடத்தண்டையிலுள்ள ஒரு காட்டில் சுமார் 50 வருஷங்களுக்குமுன் பிடித்த தீ இன்னு மெரிந்துகொண்டிருக்கிறதாம். அதை அணைப்பதற்காக எத்தனை லக்ஷம் ருபாயோ செலவு செய்தும் ஏராளமான தண்ணீர்களைக்கொண்டு அணைத்தும் இன்னும் அணையவில்லையாம்.

அபிஸீனியாவில் ஸ்திரீகளுக்குஅதிகாரம் அதிகமாம். வீடுவாசல் சொத்தெல்லாம் ஸ்திரீகளுக்குத்தானாம். புருஷன் ஏதாவது குற்றஞ்செய்தால் அவனை பிடரியைப்பிடித்து வெளியே தள்ளி விடுவார்களாம். அதற்குஅவன் மன்னிப்புக்கேட்டு உத்தரவுவாங்கிக்கொண்டு தான்உள்ளேவரலாமாம்.சமையத்தில் புருஷனை அடித்துக்கூடப் போடுவார்களோ என்னமோ தெரியவில்லை!

***

ஆங்கிலேய மாதர்கள் குதிரைச்சவாரி செய்யும்பொழுது புருடர்களைப் போல இருபக்கமும் இரண்டு கால்களைத் தொங்கவிட்டுக்கொண்டு சவாரி செய்யாமல் ஒரேபக்கமாக சேணத்தில் உட்காருவதால் சில சமயங்களில் அனுவசியமாகக் கீழே தள்ளப்படுவதுந்தவிர, தேகத்தின் ஒருபாக மட்டும் புஷ்டியடைந்து வருவதாகவும் அதை நிறுத்தி புருடர்களைப் போலவே ஸ்திரீகளும் குதிரைசவாரிசெய்யக் கற்றுக்கொள்ள வேண்டுமென வைத்தியர்கள் போதித்துவருகின்றனர். அதற்கிணங்கி நமது இராஜ வம்சத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும் இவ்விதம் குதிரைச்சவாரியை கற்கப்போகின்றனராம். சீக்கிரம் மற்ற ஐரோப்பிய மாதர்களும் இவ்விதமே நடந்துகொள்ள எத்தனிப்பார்கள் போலும்.

## புத்தகவரவு

கலியாணநாடகம். இந்நாடகத்தில் தமிழ்நாட்டில் அந்தணர்களுக்குள் நடக்கும் விவாகவிஷயங்கள் நன்றாகவிளக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நடையும் இடையிடையே பழமொழிகளும் கொஞ்சிக்குலாவுவதுபோன்ற செஞ்சொற்கோர்வையும் சோபிக்கின்றன. நாட்டிலுள்ள மகாஜனங்களின் மனதைக்கவர்ந்து கொள்ளச்சோபனம், நலுங்கு, ஊஞ்சல், லாலி, மங்களப்பாக்கள், ராகதாளங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளன. கலியாணத்திற்குப்பணம் சேர்த்தல், பெண்பேசல், நிச்சயித்தல் சாமான்சேகரித்தல் விவாகக்கொண்டாட்டம் விருந்து, நலங்கிடல், ஊர்கோலம் இவைகளெல்லாம் வெகுசெம்மையாயும் எப்படி நடந்துவருகின்றதோ அதேவிதமாகவும் விளக்கப்பட்டுள்ளன. இந்நாடகம் தேவக்கோட்டை மீனலோசனி அச்சுக்கூடத்தில் பதிக்கப்பட்டுள்ளது. இதன் கடுதாசி, அச்சு முதலிய அவ்வளவு திருப்திகரமாக வில்லையாயினும் விஷயம் வாசிக்க இன்பம் கொடுக்கத்தகுந்ததே. இதைப் பாடியவர் ஸ்ரீ. மீ. ஆத்மநாத பாகவதர். இதன் விலை அணா நான்கு. சென்னை தம்புசெட்டி வீதி, 273, ரிப்பன் அச்சியந்திரசாலையில் கிடைக்கும். வேண்டியவர்கள் பெற்றுக்கொள்ளலாம். இது பெண்கல்விவிருத்திவகையில் பெண்கள் படித்தறியத்தக்கதுபோலவே ஏனையோர்க்கும் பயன்றரும் அழகிய கருத்தமைதியுள்ள நூலேயாம்.



## பெண்கள் பக்கம்.



### இரண்டாவது விடுகதை வினா.

க — வி — க — கு — ச — ர — ழி — ல.

— இந்த அடையாளங்களில் ஒவ்வொரு எழுத்துகள் சேர்ந்தால் ஒரு முது மொழிவரும் இதை யுணர்ந்து கூறுவீர்

### மூன்றாவதுவிடுகதைவினா.

ஆகாசந்தனிற் பறக்கும் பக்ஷியல்ல அதிகமாய் வாலுண்டு அனுமாரல்ல
வாகாணகொம்புமுண்டு எருதுமல்ல
வாய்வடித்தாய் மேலெழும்புந்தூளி யல்ல
ஏகாந்த வெயிலில் நிற்குமெய்வாரில்லை,இரைச்சலுடனுடுமது பாம்புமல்ல
போகாது ஆழ்ந்து விடுங்கா லில்லாவிட்டால் புனித முடனிதன் பயனைப் புகன்றிடீரே.

### நான்காவது விடுகதை வினா.

பச்சைநிறம் பூண்டிருக்கும் உமையுமல்ல,
பல்வினையைப் போக்கடிக்குஞ் சிவனுமல்ல
அச்சணமே பகைதீர்க்கும் மாலுமல்ல
அகத்திதனை யுரவுகொள்ளு மரிசியுமல்ல
மிச்சமாய் நீர்முழுகி முகமினிக்கி
விலைகொடுப்பார் மடியேரும் வேசியல்ல
உச்சித முண்டாக்கி குவளழுக்காரி
உகப்புடையா ளிவளையரிந் துரைசெய்வீரோ

### ஐந்தாவது விடுகதை வினா.

ரூதகத்தி லதிகதொரு சொரூபக்காரி
சுரந்தகொங்கைப் பாலுடையாள் கலம்பாற்காரி
பாதகியாள் கிளியைப்போற் பெருவாள் பிள்ளை
பரக்கவிட்டுப் பார்த்திருப்பாள் பால்தானூட்டாள்
சாதனைக்கி இணக்கமில்லாத பேரைக்
தானடிக்கத் தலைப்படுவாள் சண்டைசெய்யாள்
மாதர்மனோரஞ்சனி நின்னேயார் பாற்போய்
மகிழ்ந்துரைத்து விடைபரித்து வருவாயோ

### விடுகதை வினா.

அரச சைனியத்தொன்று ஆதிவிடுத்திடிற் பகலவ நாமமாகும், இலக்கிடுமிடையை நீக்கி இசைத்திடிற் பூதமாகும், அலம் பெருமந்தந் நீக்கிலாகிடுமே நகரமென்றும், நலம்பெறு நாமந்தன்னை நங்கையர் நவிலுவீரே.

ஞானவடிவுடையம்மாள்.

## விடுகதை விடை.

நாளது 1905ம் வருஷம் ஜூலைமாதச் சஞ்சிகையின் 167-168 வது பக்கத்தில் பிரசுரித்துள்ள

எஸ். ஞானவடிவுடையம்மாள் வெளியிட்ட

3-வது கதைக்கு விடை ... யானை,
4-வது ஷை ... மண்பாண்டம்.
5-வது ஷை ... உறள்,

**T. M.** அறப்பெருஞ் செல்வியம்மாள் வெளியிட்ட

3-வது கதைக்கு விடை ... தேங்காய்,
4-வது கதைக்கு விடை ... தவ்வாஅல்லது வாணவி

நாகம்மாள் வெளியிட்ட

4. வது கதைக்கு விடை வருஷம், மாதங்கள், நாட்கள், அமாவாசை, பௌர்ணமி.

1905-ம் வருஷம் மே மாதம் வெளியான 1. இலக்கம் பத்திரிகையில் மரகதம் எழுதிய விடுகதையின் விடை 1-குடை, 2-விருந்து.

1905-ம் வருஷம் ஜூன் மாதம் வெளியான 6. இலக்கம் பத்திரிகையில் உலகசகோதரி எழுதிய விடுகதையின் விடை. 1. ஆசரிசனம். 2. நாமகள்.

ஷை பத்திரிகையில் நாகம்மாள் எழுதிய விடுகதையின் விடை. 1. மதுரை.

நாகம்மாளவர்கள் எழுதிய வினுவின்விடை 1-வது மதுரை. 2-வது கப்பல்.

எஸ். ஞானவடிவுடையம்மாளவர்கள் எழுதிய வினுவின் விடை.

1-வது ... குதிரை.
2-வது ... மாதர்மனோரஞ்சினி.
3-வது ... முத்துக்கொட்டை,
4-வது ... வண்ணான் துணிதுவைத்தல்.
5-வது ... மார்க்கண்டன்.
6-வது ... கிகிரி,

பிழை,

ஏப்ரல்மாத பத்திரிகையில் நான் எழுதியமுதல் விடுகதை பச்சைமினகாயுமல்ல மாம்பழமுமல்ல,

அறப்பெருஞ்செல்வி அம்மாள்.

2. அரசனையத்தொன்று ஆதி விடுத்திடிற் பகலவ நாமமாகும்,இலக்கிடு மிடையை நீக்கி இசைத்திடிற் பூதமாகும், அலம் பெருமந்தந் நீக்கிலக்கிடும நகரமென்றும், நலம்பெறு நாமந்தன்னை நங்கையர் நவிலுவீரே,

**V.** பாலாம்பா,
யாழ்ப்பாணம்.

Printed at the Ripon Press & Published by the Proprietor
C. S. Ramasawmy Iyer, Madras.

# மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol - vii. } Madras: November 1905. { No-11.
புத்தகம் எ. } சென்னப்பட்டணம் : நவம்பர்மீ 1905. { இல-11.

## *மஹிளா மண்டலம்.

இந்திய மாதர்கள் தங்கள் சம்பந்தமான விஷயங்களைக் கவனித்து
வர இப்பொழுது கண் விழித்துக்கொண்டிருக்கிறார்கள். புரு
ஷர்களைப்போல் அவர்களும் அறிவுள்ளவர்களாயிருப்பதாலும்
அவர்களும் புருஷர்களைப்போல் மதிக்கப்பட்டு வருவதாலும்
அவர்கள் பற்பல விஷயங்களைக் குறித்துநினைக்க ஆரம்பித்து
விட்டார்களென்றுசொல்லலாம். இவ்விஷயமாக நினைப்பதற்கு
ஆரம்பம்செய்தது கற்றவர்கள் மாத்திரமல்ல, அநேககோடி கற்றறியாத
ஸ்திரீகள் கூட ஒரு ஜாதியின் விருத்தியில் முக்கியமாய் ஸ்திரீகளின்விருத்தி
சேர்ந்திருக்கிறதென்று நினைக்கத் தலைப்பட்டு உழைக்க ஆரம்பித்து விட்
டார்கள். உதாரணங்களோ பல உள. சென்னை இராஜதானியிலுள்ள மாதர்
கள் தங்கள் புத்திரிகளுக்கும் கல்வி புகட்ட ஆரம்பித்துவிட்டார்கள். கலி
யாணகாலங்களில் செலவையும் மட்டுபடுத்தி வருகிறார்கள். இன்னும் என்
னென்னவிதமாய் நடந்தால் தங்கள் கிரகம் சந்தோஷமாக விருக்குமென்
பதை அறிந்து அவ்விதம் செய்தும் வருகிறார்கள். உலக சமாசாரங்களையும்
நன்றாக அறிந்துக்கொண்டு வருவதுடன் தங்கள் தேச நன்மைக்காகவும்
தங்களாலியன்ற உதவிபுரிகிறார்கள். கனம் சர். வி. பாஷியம் அய்யங்கார்
மனைவியார் சுமார் 4000-ரூபா வரையிலும் செலவுசெய்து கோஷா ஆஸ்பத்
திரியில் ஒரு கட்டடம் கட்டிவைத்திருக்கிறார்கள்.

பார்சிமாதாகிய மிஸ் கார்னீலியா நிற்க, வக்கீல் பரீக்ஷையிற்தேறியுள்ள
சோரப்ஜியைப்பற்றி நமது மனோரஞ்சினியைப் படிக்கிறவர்களுக்குத் தெரிந்
திருக்கும். இம்மாது தமது கற்ற கல்வியின் அறிவால் கோஷா ஸ்திரீகளு
க்கு பற்பல மார்க்கங்களில் உதவிபுரிந்து வருகிறார்கள். இந்த கோஷாஸ்திரீ
கள் தங்கள் தியாயாதிகளால் பல கஷ்டங்களுக் குட்படாமலும் கோர்ட்டுக்
குப்போய் ஜீவனும்சத்திற்காக பணத்தை வீணாக விரயம்செய்யாமலு மிருக்
கும்படி இரு கக்ஷியாருக்கும் இம்மாது சமாதானம்செய்து வைத்துவருவது
மிகவும் புகழத்தகுந்ததல்லவா?

இன்னொரு அதிசயமான சமாசாரம் பம்பாயிலிருந்து நமக்கு எட்டியி
ருக்கிறது. அதாவது, பம்பாயிலுள்ள மாதர்கள் முனிசிபல் கமிஷனர்களாக

* "மஹிளாமண்டலம்" என்றால் ஸ்திரீகள் கூட்டம் என்று அர்த்தம். அதாவது ஸ்திரீகள்செய்யும் நற்காரியங்கள் இதன்கீழ் இனி பிரதிமாதமும் பிரசுரிக்கப்படும். ப-ர்

விருக்க சுவதந்திரத்தை அடையவேண்டுமென்றதுதான். ஸ்திரீகளே அறிந்
துக்கொள்ளும்படியான முனிசிபல் விஷயங்கள் பல உள. நமது மாதர்கள்
எவ்வளவு தடவை முனிசிபாலிடியாரின் ஜனங்களின் பாதுகாப்பு பூர்த்தி
யான தல்லவென்று மறுத்து சொல்லவில்லை? பம்பாய், கல்கட்டா, சென்னை
முதலிய விடங்களில் கிரஹணிக்கு அநேக அசௌகரியங்கள் உண்டாகும்
படியான காரியங்களை முனிசிபாலடி வேலைக்காரர்கள் செய்கிறார்கள். சில
சமயங்களில் நமது ஸ்திரீகளின் பிடிவாதத்தினாலும் மூடத்தன்மையினாலும்
முனிசிபாலிடியார் ஆஞ்ஞாபிக்கிற விசேஷ ஏற்பாட்டின் எண்ணம்
தடுக்கப்படுகிறது. அவ்விதமான விஷயங்களிலும்கூட ஒரு ஸ்திரீ முனிசி
பல் கமிஷனராக விருந்தால் வீட்டுக்குடையவர்களுக்கும் முனிசிபாலிடி
உத்தியோகஸ்தர்களுக்கும் உதவி புரியக்கூடும். ஒரு முனிசிபல் கமிஷ
னர் புருஷராக விருந்தால் அவர் அன்னிய ஸ்திரீகளிடத்தில் வணக்க
முடன் பேசமுடியாது. தண்ணீர்க் குறைவையும், சுகாதாரக் குறைவை
யும், முனிசிபல் வேலைக்காரர்களுடைய அஜாக்கிரதையான வேலைகளை
யும் இன்னும் மற்ற அசௌகரியங்களையும் அவர் அறிந்துகொள்ள முடி-
யுமா? மேற்கூறிய யோசனை பிரஸ்தாபிக்கப்பட்டபொழுது பம்பாய் முனிசி
பாலிடியார் இவ்விதமான சுதந்தரங்களை மாதர்கள் அடைய இதுதான் தக்க
சமயமென்று நினைக்கவில்லை; ஆனால் பம்பாய் மாதர்கள் இவ்விதமான விஷ
யங்களை நினைக்க ஆரம்பித்தது யாவரும் கவனிக்கத் தக்கதா யிருக்கிறது.
இவ்வித எண்ணங்கள் தான் நமது மாதர்களின் விருத்தியைக் குறித்தவை
கள் என்போம்.

தற்காலத்தில் மற்ற தேசங்களிலுள்ள மாதர்கள் தங்கள் விருத்தியைக்
குறித்து என்ன நினைக்கிறார்கள்? அவர்கள் எண்ணங்கள் யாவை? இங்கிலாந்
திலஸ்திரீகள் பி. ஏ. எம். ஏ. எம். டி முதலிய பரீக்ஷைகளில்மாத்திரம் தேறு
வதில் திருப்தி யடையவில்லை. அவர்கள் உண்மையாகவே கற்றவர்களாக
விருக்க விரும்புகிறார்கள். அவர்கள் மேலும் தங்கள் அறிவுபேர்பெற்ற வித்
துவான்களுக்குச் சமமாக விருக்கவும் விரும்புகிறார்கள்.

இங்கிலாந்திலே அநேகமாதர்களால் புஸ்தகங்கள் வெகுநன்றாக எழு
தப்பட்டிருக்கின்றன. இவைகள் உலகத்திலுள்ள புருஷர்களால் புகழ்ந்தும்
பேசப்பட்டிருக்கின்றன. ஆனால் அவர்கள் புஸ்தகம் எழுதுவதில் புருஷர்க
ளுக்குச் சமமாக விருக்கிறார்களென்ற பெயரை அடைந்தபோதிலும், அவர்க
ளுக்கு இத்துடனிருக்க இஷ்டமில்லை. இவ்விதமானபெருமையையும் அடைய
அவர்களுக்கு எண்ணமுமில்லை. இப்பொழுது அவர்கள் புருஷர்களைப்போல
வே, சரித்திரம் (History), பௌதிக ரசாயன சாஸ்திரம் (Chemical
Science), பூகோள உறுப்புவிலக்கணம் (Geology), வானசாஸ்திரம் (Ast-
ronomy) பழைபொருளை யாராயும் சாஸ்திரம், முதலிய சாஸ்திரங்களைக்
கற்று ஆராய்வதில்சிறப்படையவிரும்புகிறார்கள். இங்கிலாந்தில் ஸ்திரீகளுக்கு
போதுமான ஆதரவு இப்பொழுது இல்லையென அவர்கள் முறையிடுகிறார்
கள். அவ்வித சாஸ்திரங்களில் பயில மனிதர்களுக்கு உபகாரச்சம்பளம் கொ
டுத்து வருவதுபோல் இவர்களுக்கும் கொடுக்கப்படவில்லையாம். அங்குள்ள
ஸ்திரீகள் இப்பொழுது தங்களுக்கு அவ்வித ஆராய்ச்சிசெய்ய உதவிபுரியு
மாறு தனவான்களையும், தேசாபிமானிகளையும், தருமசிந்தையுள்ளவர்களை
யும் கேட்டு வருகிறார்கள். "முன்காலத்தில் திரவியமுள்ள ஸ்திரீகள் புரு



டர்கள் ஆராய்ச்சி செய்வதின்பொருட்டு உபகாரச்சம்பளம் ஏராளமாகக்
கொடுக்கவில்லையா? ஸ்திரீகளுடைய தயாளகுணத்தினாலும் தருமத்தினா
லும் லாபமடைந்து வரவில்லையா? புருடர்களும் அவ்விதமே இப்பொழுது
முன்வந்து ஸ்திரீகளுக்கு உதவிபுரிய வேண்டாமா? ஆராய்ச்சிசெய்ய
வருபவர்களில் புருடர்களின் தொகையோ அதிகம். அதிகமாகவிருப்பினும்
அவர்களுக்கெல்லாம் உதவிபுரிய பணம் தாராளமாககிடைத்துக்கொண்டே
வருகிறது. எங்களிலோ நேர்விரோதமாக விருக்கிறது. சிலர்தான் ஆராய்ச்சி
செய்ய முன் வருவார்கள். இந்தச் சிலருக்கு உதவிபுரிய உங்களுக்கு பெருந்
தகைமையில்லை. இதுசரியா? இது நியாயமா? எங்கள்மீது குரூரமாக விருக்க
வேண்டாம். சுயநயம் பாராட்டாதேயுங்கள். எங்களுக்கு கொஞ்சம் உதவி
புரியும்படி பிரார்த்திக்கிறோம்" என்று அவர்கள் கேட்கிறார்கள்.

இந்தியமாதர்கள் எப்பொழுது இவ்விதமாக எண்ணத் தலைப்படுவார்
கள்?

# தமிழும் கல்விவகைச் சீர்திருத்தமும்.

கல்விபயிற்றுவிக்கும் பாடசாலை விசாரணை கர்த்தர்களும் தலைமை அதி
காரிகளும் சில நாளாக நமது நாட்டில் கல்விநிலையைப் புதுச்
சட்டங்களின்படி சீராக்க யோசனை செய்துவருகின்றார்கள்.
நம்மவர்களும் அதே விஷயமாகக் கூட்டங்கூடிப் பேசிவருகி
ன்றார்கள். நாம் இங்கே கணிதம், தேசசரித்திரம், பூகோளம்,
க்ஷேத்திரகணிதம், பீஜகணிதம், அரசர் பாஷை முதலிய பல
பிரிவுகளைப் பற்றிப் பேசவரவில்லை. தேசபாஷைகளுள் முக்
கியமாகிய தமிழ் ஒன்றைப்பற்றியே பேசவந்தோம். ஏனென்றால் நமது நாட்
டில் அது எவ்வகைப் படிப்பிற்கும் முன்னின்றுதவுகின்றது.

இத்தமிழ் ஆரியத்தோடு நேரே சுயசக்தியோடு விளங்கும் பாஷை.
வடமொழிக்குப் பாணினி முனிவர் இலக்கணம் செய்தார். கும்பமுனியாம்
அகத்தியரு மவ்வாறே தமிழ்மொழிக் கிலக்கணஞ் செய்தார். நம்மாழ்வார்
மாணிக்க வாசகர் இவர்கள் திருவாய்மொழி, திருவாசகமெனும் தமிழ் நூல்
களைப் பாடியுள்ளார். அவைகள் தமிழ்வேதமென்று தமிழ்நாட்டில் வழங்கு
கின்றன. நம்மாழ்வார் பாடியருளிய தமிழ்வேதத்தை வைணவ வேதியர்கள்
வடமொழி வேதத்தோடு ஆலயங்களிலும் வீடுகளிலும் வீதிகளிலும் திரு
விழாக்காலங்களிலும் மற்ற விசேஷ நாட்களிலும் பாராயணஞ்செய்கின்றார்
கள். சிவன்கோவில்களிலும் வேறிடங்களிலும் ஓதுவான் மார் மாணிக்கவா
சகர் பாடியருளிய தமிழ்வேதத்தைப் பாடி வருகின்றனர். தேசபாஷைகள்
பலவற்றுள்ளும் தமிழ் இவ்வாறு முதன்மை பெற்றோங்குகின்றது. உத்தர
வேதமாம் இணையில்லாத திருக்குறளும், நாலடியும் வேறு அளவிறந்த தேவா
ரம் திருப்புகழ்முதலிய பாடல்களும், கல்வியிற்பெரியவனும் கம்பன் பாடிய
ராமாயணமும், சேக்கிழார் பாடியருளிய பெரியபுராணமும், சிந்தாமணிமுத

லிய பஞ்சகாவியங்களும், பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், வேறு அளவில்லாத நூல்களும் தமிழில் மலிந்துள்ளன.

நமது நாட்டிலுள்ள பெண்களும் இத்தமிழிற் பழக்கம்செய்துவருவதால் நாகரிக நிலையில் முன்னினும் விருத்தியடைந்து வருகின்றார்கள். நமது நாட்டிலுள்ள ஆடவர்களுள் ராஜபாஷையில் உயர்தரப் பரீக்ஷையிற்றேர்ந்து தாய்ப்பாஷையாம் தமிழையும் விருத்தி செய்துள்ள சிற்சில நல்லோர்கள் நீங்கலனைய பெருந்தொகையார்கள் தமிழை எழுத்துப்பிழையின்றி எழுதத்தெரியாது இராசாங்கமுறையில் பேரதிகாரங்கள் வகித்திருக்கின்றார்கள். பாஷை, நடை கேவலமாக இருந்தாலும் எழுத்துப் பிழையில்லாமல் எழுதுவது வெகு முக்கியம். கச்சேரித் தமிழின் நடை ஜனங்கள் பேசிவரும் நடையாய் தாழ்ந்த நடையாயிருந்தாலும் அதில் எழுத்துப் பிழைகளோ அனேகமாய்க் கல்சோற்றில் மணல் ஆராய்வதுபோல் மிகுந்திருக்கின்றன. இப்பரிதாபமான நிலை நீங்காதிருக்குமளவும் தமிழை வடமொழியோடு உயர்தரப் பரீக்ஷைகட்கும் பாடமாக்கி இப்பொழுது நடைபெறுவதிலும் இன்னும் கொஞ்சம் சீராகப் பாடசாலைகளிற் கற்பிப்பது உசிதமாகும்,

நமது நாட்டுப்பெண்பிள்ளைகளும் சிறுபெண்களும் புறநாட்டுப் பாதிரிமார்களும் அதிகமாக எழுத்துப்பிழையில்லாமல் எழுதிவருகின்றார்கள். புருஷர்களோ மிகவும் பிழையோடு தாங்கள் எழுதும்போதெல்லாம் எழுதிவருகின்றார்கள். சிலபுருஷர்கள் தங்கள் பெண்களும் பெண்சாதிகளும் சுத்தமாய் எழுதப் படிக்கப் பேசச் சமர்த்தராவதைக்கண்டு தாங்களும் அப்படியாக ஆசை கொள்கிறார்கள். இவ்வகை ஆசை எல்லாப் புருஷர்மாரிடத்தும் ஏற்பட்டு ஆடவர் மகளிர் எனும் பேதமின்றி எல்லோரும் எழுத்துப்பிழையின்றித் தமிழ் எழுத வல்லவர்களாய் விட்டால் பிறகு தமிழ்ப்பாடல்களைக்கீழ்த்தரமான வகுப்புகளில் மட்டும் படிப்பிக்கலாமென்பது ஒருவாறு உசிதமாகும். இப்பொழுதிருக்கும் நிலையில் அப்படிச்செய்தால் அது நாட்டிற்கு யாதொரு விருத்தியையும் தரமாட்டாது. ஒரு நாடு செழிப்பதும் தலையெடுப்பதும் தேசபாஷையின் விருத்தியாலேயே யாம். இப்பொழுது நம்மையாள்பவர்களுடைய அபிவிர்த்திக்கு அவர்கள் தேசபாஷையின் விருத்தியும் பெண்களின் கல்வியுணர்ச்சியுமே காரணம். மற்றக்காரணங்களெல்லாம் பக்கபலமேயன்றி வேறன்று.

நமது நாட்டிலுள்ள பெண்பிள்ளைகளையும் பெண்களையும் அவர்களின் தகப்பன்மாரும் சகோதரர்களும் புருஷன்மாரும் தேசபாஷையை அவர்களுக்குப் போதிக்கும் திறமுள்ளவர்களானால் பிறகு தமிழ் மேலோங்கும்; தாழ்வடையாது. பெண்களின் விருத்தியைப் பார்த்துப் புருஷர்கள் தமிழில் விருத்தியாக முயல்வது தப்புவழியானாலும் நமது நாட்டில் பெண்கல்வி மேல் மேலோங்குமானால் அது ஆடவர்களையும் நாளா சுறுதியில் உயர்த்தி விடும் என்பது நிச்சயமானாலும் பாடசாலைகளில் படித்துப் பரீக்ஷையிற் றேற ஓர் நிலையளவுள்ள பயிற்சியிருத்தல் வேண்டுமென்று ஏற்பட்டுள்ள விதி கொஞ்சம் நழுவுமானால் ஆடவர்களின் தமிழ்க்கல்வி தலையெடுத் தோங்காது. இதன்றிப் பெண்களின் தமிழ் விருத்தியை யுண்டாக்கி ஆடவர்களைத் தமிழில் உயரும்படியாக விடுவதும் நேரானவழி யாகாது.

ஆகலால் தமிழ் நாட்டில் தமிழ் மணங்கொண்டோங்கும் பெண்டுகளும் தங்கள் புருஷன்மார்களோடு இல்லறத்தில் கூடிக்குலாவி வீட்டின்வாழ்வைச்



சுகபோகமாக்க ஆடவர் மகளிர் எனு மிருதிறத்தார்க்கும் தமிழ் முக்கியமாதலால் அதன்பரிபாலனம் பாடசாலைகளிற் சீராய் நிலைக்க எல்லோரும் சபைகூடிப் பாடுபட்டுப் பாடசாலைகளின் விசாரணைத் தலைமை அதிகாரி அவர்களுக்கும் அவர்களோடு சேர்ந்து ஆலோசனை புரியும் அங்கத்தினர்களுக்கும் 1906௵ மார்ச்சு௴ முடிவாகுமுன் அறிவித்துக் கொள்வது நலமாம். சமயசஞ்சீவிகளாய் இத்தருணத்தில் உழைக்கமுன் வருபவரே தேசபாஷாபிமானிகளாம். இப்பாஷாபிமானந்தான் தேசாபிவிருத்திக்குக் காரணமானதால் அவர்களைத தேசாபி மானிகளென்றும் நாம் கூறலாம்.

தி. வேங்கடராமஐயங்கார்,
தமிழ்ப்பண்டிதர்.

## பழமொழிகள்.

**1. எண்ணறக்கற்று எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி.**

**2. பெண்புத்தி பின்புத்தி.**

இவ்விரண்டு பழமொழிகளின் கருத்தும் பெண்டுகள் என்னதான் படித்தவர்களாயிருந்தாலும் புருஷர்களவ்வளவு முன்கோலிக்கொள்ளும் புத்தியில்லாதவர்கள், பின்புத்தியுள்ளவர்களா யிருப்பார்கள் என்றுசொல்லியபடி. ஏனெனில் இதற்கு ஒரு சிறு காரணம் முக்கியமா யுண்டு. எத்தேசத்திலும் பெண்கள் ஆபரணத்தில் அதிக ஆசையுள்ளவர்கள். இவைகளில் முதல் முதலில் பணத்தைச் செலவிட்டு பிறகு "ஐயோ அந்தப்பணம் இருந்தாலிப்போது உதவுமே" என்று சிற்சில நற்குண நற்செய்கையுள்ள பெண்கள் மனவருத்தமுறுவது வழக்கம், இதே பெண்புத்தி பின்புத்தியானதற்குக் காரணமா யிருக்கலாம். ஆண்புத்திமட்டில் முற்கோலிக்கொள்ளும் குணம்பெண்புத்தியைக் காட்டிலும் அதிகமாயுள்ளது. ஏனெனில் ஆணுக்கு ஆபரணத்தின் அபேக்ஷை கிடையாது.

பெண்களைப் புருஷர்கள் வெகு மரியாதையுடனும் அன்புடனும்நடத்த வேண்டும் என்பது ஹிந்துக்களுடைய குலதர்மம். இதையறியாமல் சிலர் நமது நாட்டார்கள் பெண்களை அடிமைகள்போல இம்சிக்கிறார்கள் என்று வீண் அவதூறு சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இது தப்பு என்பதை 3-வது பழமொழியில் காண்க.

**3. குடியிற் பெண்வயிறு எரிந்தால் கோடியிற் சேலை நின்றெரியும்.**

ஒரு வீட்டில் ஜனங்களுடைய இம்சை பொறுக்கமுடியாமல் ஒருபெண் வயிறு எரிந்து அழுது நின்றால் அந்த வீடு அவள் வயிற்றெரிச்சலாலேயே சூனியவீடாகி கொடியில் போட்டிருக்கும் சேலையும்எரிந்துபோகும்படியாய் விடும். இம்மாதிரி புடவை எரிவது கோரமான ஏவலின் பலன் என்பது இந்துக்களுடைய நம்பிக்கை.

அவ்வித ஏவலின் துக்கம் எவ்வளவு இருக்குமோ அவ்வளவு துக்கம் ஒரு நற்குண நற்செய்கையுள்ள பெண் வயிறெரிவதால் உண்டாகும் என்ற

படி. ஆகையால் நாம் பெண்களை வெகு அன்பாய் நடத்தவேண்டு மென்னும், இது நமது கொள்கை என்றும் திண்ணமாயிற்று.

### 4. பெண் என்றால் பேயுமிரங்கும்.

என்ன அழகான பழமொழி! நன்றாய் ஆராய்ந்து பார்த்து யோசித்துக் களியுங்கள். பெண் என்றால் அந்தப்பேச்சுக்கே நமது முன்னோர்கள் அவ்வளவு மரியாதை வைத்திருக்கிறார்கள். பெண் என்று கேட்டமாத்திரத்தில் அவளுக்கு அவஸ்தை நேரிட்டால் பேயுமிரங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றுக்கும் அஞ்சாது சகல உபத்திரவங்களும் செய்யும் பேயே பெண்ணென்ற பேச்சைக் கேட்டமாத்திரத்தில் இரங்கும் என்றால் ஐம்புலன்களோடுங்கூடி தயை தாக்ஷண்யம் இவைகளுக்குப் பாத்திரர்களான மானிடவர்க்கங்கள் ஏன் இரங்கார்கள்? மேலும் பெண்களுக்கே அபலை அதாவது பலமற்றவர்கள் என்று பெயர். ஆகையாலவள் விஷயத்தில் கிராதகன்கூட தயவாய் நடக்கவேண்டும் என்று சொன்னபடி யாயிற்று. இவ்வளவிருக்க நாம் பெண்களிடத்தில் அன்பற்றிருக்கிறோம் என்றாலும் அவர்களை அவமரியாதையாய் நடத்துகிறோம் என்றாலும் அது தர்மமாகுமா?

(இல்லறத்துக்கு இருதயமான இல்லாள்மேல் வந்திருக்கும் பழமொழிகள் அடுத்த பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.)

எஸ். எம். நடேசசாஸ்திரியார், பி. ஏ.

## ஸ்திரீரத்னம்.

### 10-வது அதிகாரம்.

உத்தமி என்பவள் கார்த்தவீரன் மாமியாரென்றும் அவள் கார்த்தவீரனிடம் அவன் மகனிறந்துபோனதாக சொன்னதும் இதைப்படிப்பவர்களுக்குத் தெரிந்தவிஷயம். அவள் சொன்னது பொய். இவள் அந்தப் பையனைத் தனிமையாய் வளர்த்தி, தகப்பன் தாய் இன்னாரென்று சொல்லாமலே இருந்துவிட்டாள். பையனுக்கும் இப்போது 12-வயதாகி விட்டது. உத்தமி தனக்கு வயதானதைக் கண்டு இந்தப்பையனை யாரிடம் ஒப்பிவிப்பதென்பது தெரியாமல் கவலைப்பட்டுக்கொண்டே இருந்தாள். ஒருநாள் அந்தப்பையன் தன்னைக் கலாவதி பார்த்து சந்தோஷப்பட்டதாயும் தான் அவளிடத்தில் வேலைக்காரனாயிருந்தால் தன்னை பள்ளிக்கூடத்துப் பையன்களெல்லாம் தாய் தகப்பன் தெரியாத பையனென்று கேலி பண்ணத் துணியமாட்டார்களென்றும் சொன்னான். உத்தமி இதைக்கேட்டு சந்தோஷித்து நல்லது உன்னை அவளிடத்திலேயே கொண்டுபோய் விடுகிறேனென்று சொல்லி அரண்மனைக்கு கூட்டிப்போனாள். அரண்மனையில் கலாவதியின் அறைக்குப்போக காவல்சேவகன் உத்திரவில்லை யென்றான். உத்தமி தான் கலாவதிக்கு வெகுமதி கொண்டு வந்திருப்பதாயும் அதைக்கொடுத்து விட்டு மட்டும் போகவேண்டுமென்றும் சொல்ல, வேலைக்காரன் இருவர்களையும் உள்ளே கொண்டுபோய் விட்டான். கலாவதி தன் ஸோபாவை விட்டெழுந்து வந்து இவளை வெகு மரியாதையுடன் உட்கார வைத்தாள்.



உத்தமி—அம்மா! இந்தக்குழந்தைக்கு தாயுமில்லை, தகப்பனுமில்லை; எனக்கும் வயதாகிவிட்டது. அந்தக் குழந்தைக்கும் உங்களிடத்திலிருக்கிறதற்குத்தான் பிரியமாயிருக்கிறது.

கலாவதி—அம்மா! நானப்படியே வைத்துக்கொள்கிறேன்; இவன்பெயரென்ன?

உத்தமி—அம்மா! இவனுக்கு பாட்டன் பெயர் வைக்கவில்லை, ஏனென்றால் நியாயமான கலியாணத்தில் பிறந்த குழந்தையல்ல; அதுதான் எனக்கு வருத்தத்தைக் கொடுக்கிறது.

கலாவதி—அதனாலென்ன பாதகம்? அது அவன் செய்த பிசகல்லவே. நீங்கள் இதற்காக யோஜிக்கவேண்டாமம்மா. நான் என் வீட்டுக்குழந்தையைப்போல் பார்த்துக்கொள்கிறேன்.

உத்தமி—பிறகு விடைபெற்றுச்சென்றாள். அவள் போனபிறகு கலா
வதி ஐயோ பாவம்! தாயும் தகப்பனுமில்லாத குழந்தையை ராஜா தானே
இரக்ஷிக்கவேண்டும். நாம் இவனை நேற்றுக்கண்ட வேளை நல்லவேளை, இவ
னைப்பார்க்கும்பொழுதே எனக்கு இரக்கம் வந்து விட்டதென்று சொல்லி
ஆள்களைக் கூப்பிட்டு அவனை செவ்வையாய் விஜாரித்துக்கொள்ளவேண்டு
மென்று உத்திரவு செய்தாள். அவன் பெயரை விஜாரித்து உக்ரவர்மனென்று
தெரிந்துகொண்டாள். உக்ரவர்மனிடம்பழகப்பழக அவன்தைரியமும் புத்தி
யும் கலாவதிக்கு இன்னும் அதிகபிரியத்தை உண்டாக்கியது. ஆனால் அன்றைய
தினம் அவனோடு அவளுக்கு அதிகமாகப்பேசமுடியவில்லை. பிரபுக்கள் பெண்
சாதிகள் ஒவ்வொருவராக இவளைக் காண வந்தார்கள். ஆனால் கலாவதி
பெண்பிள்ளை யென்பது இப்போதுதான் வெளிப்பட்டது. பிரபுக்கள் பெண்
சாதிகள் வலிவற்றுப் போனதைப்பற்றி ஜாடையாய் கேலி செய்ய வாரம்பித்
தாள். விசித்திரவன் பெண்சாதியைப்பார்த்து, அம்மா! உங்களரண்மனை இப்
போதுதான் பார்க்க நன்றாயிருக்கிறது. எப்போதும் சளசளவென்று ஆள்க
ளிறைச்சலாகவிருக்கும் என்றாள். நிர்க்குணன் பெண்சாதியைப்பார்த்து அம்
மா! உன் புருஷன் எப்படியோ என் யஜமானன் பிரியத்தை யடைந்துவிட்
டார். இனி உனக்கு என்ன குறைச்சலென்றாள். பதுமன் பெண்சாதியைப்
பார்த்து அம்மா! உங்கள் கண் இப்போது நன்றாய்த்தெரிகிறதா? முன் நாம்
விசித்ரவன் வீட்டு விருந்திற்கு வந்திருந்தபோது நான் தூண் பக்கத்திலிரு
க்க என்னைவிட்டு தூணைப்போய் நாவென்று நினைத்துக்கொண்டு கலாவதி!
சௌக்யமாவென்று கேட்டீர்களே! கண் இப்போது நன்றாய்த்தெரிகிறதா?
என்றாள். பதுமன் பெண்சாதி ரகசியமாய் விசித்ரவன் பெண்சாதியிடம், இந்
தப் போக்கிரித்தனத்தைப் பார்த்தாயாவென்று சொல்ல அவள் மெதுவாக
பேசாதே இன்னும் நமது காலம் வரவில்லை யென்றாள். இப்படியிருக்க தர்ம
சீலன் வெகுவேகமாய் சட்ட சபையிலிருந்து வந்தான். கூடவே குணசேகர
னும் விசித்திரவனும் தொடர்ந்து வந்தார்கள்.

தர்மசீலன்—அவர்களைப் பார்த்து, ஐயா! நீங்கள் இனி இந்த விஷயத்தைப்பற்றி சிபார்சு செய்யவேண்டாம்; ஏழைக்கு ஒன்றும் பணக்காரருக்கு ஒன்றுமாக சட்டம் ஏற்படவில்லை. எல்லோருக்கும் நான் ஏற்படுத்தியது ஒரே சட்டம் தான்.

குணசேகரன்—நியாயாதிபதி, நீ நன்றாய் யோஜித்துப்பார். அவன் நமது சக்ரவர்த்திக்கும் உறவு. ஏற்கனவே ஓர் தடவை நியாயாதிபதியாகவும் இருந்திருக்கிறான்.

தர்மசீலன்—அவன் தாங்கள் சொல்லுகிறபடியிருந்தால் கொஞ்சங்கூட மன்னிக்கக்கூடியதல்லவே. தெரிந்தவன் குற்றம் செய்தால் தண்டனை இன்னும் அதிகமல்லவா? குற்றம் சாதாரணமான குற்றமா? ஓர் கப்பல் நிறைய பணம் போட்டுப்போகிறது. அழகாபுரி தேசத்துக் கப்பல். அது உடைந்து போய் விடுகிறது. அந்த சமயத்தில் இந்த நிர்க்குணன் (நீங்கள் பிரபு என்று பட்டப்பெயர் வைத்திருக்கிறீர்களே) அவன் தான் அந்தக்கப்பலுக்கு சமீபத்திலிருந்தவனாதலால் ஒத்தாசை செய்யவேண்டியிருக்க சிப்பாய்களோடு சிப்பாயாய் இவனும் கப்பலை கொள்ளையடித்து பணத்தைக் கொண்டுபோகிறது. அதை நான் விஜாரிக்கிறது. குற்றம் ருஜுவானபிறகு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. சட்டமும் அப்படியே இருக்கிறது. இனி நானென்ன செய்யக்கூடும்?

விசித்ரவன்—இரக்கம் வைக்கவேண்டுமென்றான்.

தர்மசீலன்—கோபச்சிரிப்பு சிரித்துக்கொண்டு நமது விசித்திரவ பிரபு தமது குழந்தைகளுக்கு வைத்திருந்த ஆகாரத்தை ஓர் ஏழை பசியின் கொடுமையால் திருடிவிட்டால் அவனுக்கு மரணதண்டனை உடனே விதிக்கவேண்டுமென்பார். அதற்கு இவ்வளவு சிபார்சு பேசமாட்டார்.

விசித்திரவன்—நியாயாதிபதி! ஏழைக்கும் பணக்காரனுக்கும் வித்தியாசமுண்டு. நான் இருவருடைய உயிரையும் சமமாக சொல்லமாட்டேன். பணக்காரனுடைய உயிர் எப்போதும் சிலாக்கியமானதுதான்.

தர்மசீலன்—கோபத்தோடு ஓகோ எனக்கும் ஞாபகம்வருகிறது. இந்த எண்ணத்தால்தானே என் தம்பியை உமது மகன் குத்தினபோது ஏழைஉயிர்போனால்போகிறதென்று இருந்தீர்! விசித்ரவபிரபுவே! போதும்! போதும்! இதையெல்லாம் எனக்கு பழையபடி ஞாபகப்படுத்தவேண்டாம். அது என் மனதில் பதிந்துகிடக்கிறது. அதை வெளியில் வரும்படி செய்யாதேயும். உமக்கு இவ்வளவு வயதாகியும் செத்த பிறகு ஏழைதேகத்தையும் பணக்காரன் தேகத்தையும் புழு சமமாகத்தான் அரிக்கிறதென்பது தெரியவில்லையே! ஏழையாயிருந்தாலென்ன? பணக்காரனாயிருந்தாலென்ன? ஏழை பட்டினிகிடக்கிறான், கந்தலை உடுத்திக்கொள்ளுகிறான், பணக்காரன்பட்டினியில்லாமல் சாப்பிடுகிறான், நல்ல உடுப்புகள் போட்டுக்கொள்ளுகிறான்; இதுதான் எனக்குத்தோன்றிய வித்தியாசமேயல்லாது உயிர்விஷயத்தில எல்லாஉயிரும் எனக்கு சமம்தான். போதும் இனி இந்த விஷயத்தைப்பற்றிபேசவேண்ண்டாம் என்றான். விசித்ரவன்கோபத்தில் ஒன்றும் சொல்லவில்லை. குணசேகரன் மறுபடியும் தர்மசீலன் காதோடு ரகசியமாக நாம் சந்தர்ப்பத்தையும் பார்த்துக் கொள்ளவேண்டும். சக்ரவர்த்தியின் கோபம் சம்பவிக்கும். யோஜித்துப்பார்.

தர்மசீலன்— நீங்கள் அதற்காக யோஜிக்கவேண்டாம்; நான் சக்ரவர்த்திக்கு பதில் சொல்லிக்கொள்கிறேனென்றான். இப்படியிருக்க கோவில் மணி பலமாயடிக்கவாரம்பித்தது. விசித்ரவன் அந்த சப்தத்தைக் கேட்டதும் நடுங்கினான். மறுபடியும் மனங்கேளாமல் தர்மசீலனைப்பார்த்துநியாயாதிபதி! கொஞ்சம் தயவுபண்ணவேண்டும். உனக்கு இதுவரையில் நான் வணங்



கினதில்லை. இப்போது வணங்குகிறேன். விசித்ரவனுக்காக அவன் விரோதியின் உயிரை நியாயாதிபதி மன்னிக்கவேண்டுமென்றான்.

தர்மசீலன்—உமதுகேலி எனக்குத் தெரியும் ஐயா! சத்துருவாயிருந்தபோதிலும் வம்சம் பெரிதென்று எண்ணுகிறீர். அந்த எண்ணம் எனக்கெப்படி வரும்? நான் பிரபுவா? ஏழை வம்சம்தானே. எனக்கு அந்த எண்ணம் இனிமேல் வரமாட்டாது. அவன் அக்கிரமம் இது ஒன்றுமட்டுமானால் ஒருவேளை நீங்கள் கேட்பது நியாயம்தான். அவன் ஆயுள் முழுவதும் குற்றம் செய்தவன். கொஞ்சக்கொள்ளையா? எத்தனைஸ்திரீகளைக்கெடுத்திருக்கிறான்? இன்னும் எவ்வளவு அக்கிரமங்கள் செய்திருக்கிறான்? இப்படிப்பட்டவனைக் காப்பாற்றுவதற்கு சிபார்சுசெய்ய ஓர் பெரிய பிரபுவும் ராஜப்பிரதிநிதியும் வந்துவிட்டீர்களே! இருக்கட்டும். உங்களுக்காக இதற்குப்பிறகு ஏழைகளில் ஒருவனுக்கு இந்த தண்டனை கிடைத்தால் அவனை மன்னிக்கிறேன்.

குணசேகரன்—சிநேகிதரே! உமக்கு சமயம் தெரியவில்லையே! பிரபுக்கள் இதைத் தங்கள் வம்சத்துக்கே ஓர் குறைவாக நினைப்பார்களே! அவர்கள் விரோதியாகிய விசித்ரவனே இவ்வளவு சிபார்சு செய்யும்பொழுது அதற்கு சாக்ஷியும் வேண்டுமோ? நிர்க்குணன்மட்டும் இறந்தால் பிரபுக்களுக்கும் உமக்கும் ஜன்மப்பகைதான்.

தர்மசீலன்—ஐயா! அப்படியே இருக்கட்டும். நான் அக்கிரமம்செய்தால் பகவான் என்னை தண்டிக்கட்டும். மணியடிப்பது நின்றுவிட்டது. இனி நீங்கள் சிபார்சுசெய்தும் பிரயோஜனப்பட மாட்டாது என்று சொல்லி ஜன்னல் கதவைத்திறந்தான். உடனே தூக்குமேடையிலிருந்து உயிர்போய் நிர்க்குணனுடைய தேகம் தொங்கிக்கொண்டிருப்பது தெரிந்தது.

தர்மசீலன்—பாருங்கள், இதேகதிதான் எல்லாத் திருடர்களுக்கும் கிடைக்கும். ராஜதுரோகிகளுக்கு இதைக் காட்டிலும் விசேஷமாகக் கத்தியே இருக்கிறது.

குணசேகரன் ஒன்றும் சொல்லவில்லை. விசித்ரவன் அப்படி விடவில்லை. தர்மசீலன் பக்கத்தில்போய் அவனைத்தொட்டு, நியாயாதிபதி, ராஜதுரோகமேயில்லாத நியாயாதிபதி, பின்னால் நிர்க்குணனுக்கு கிடைத்த தண்டனையைப்போல்கூட நமக்கு கிடைக்கவில்லையே என்று வருத்தப்படப் போகிறான் என்றான்.

தர்மசீலன்—பிரபுவே! கிழவர்கள் வார்த்தையை லக்ஷ்யம் செய்யக்கூடாதென்று நினைத்து உம்மைமன்னித்தேன், இனி நீர் வீட்டிற்குப் போகலாமென்றான்.

விசித்ரவன்—நியாயாதிபதி! நான்போய் வருகிறேன்; ஆகிலும் எல்லோருக்கும் ஞாபகமிருக்கிற சங்கதியை நீ இவ்வளவு புத்திமானாயிருந்தும் மறந்துவிட்டாய்.

தர்மசீலன்—என்ன? தயவுசெய்து சொல்லுங்கள்.

விசித்ரவன்—நீ ஏழை யென்பதைத்தான்.

தர்மசீலன்—(கோபத்தோடு விசித்ரவனைப் பார்த்து) கிழவர் நான் சிறுவயதில் வைத்திருந்த கோமாளி வேலையை இப்போதுதானே வகித்துப் பார்க்கிறப்போலிருக்கிறது!

விசித்ரவன்—நல்லது, நான் உன்னிடம் கெஞ்சினேனென்பதை மறந்துவிடென்றுசொல்லி, குணசேகரனோடு சென்றான்.

அவர்கள்போனபிறகு தர்மசீலன் தனக்குள், அயோக்கியப்பயல்உத்தமசேனன் தாக்ஷண்யத்திற்காகப் பார்த்தேன்; இல்லாவிட்டால் இவனுக்கு இன்னேரம் தண்டனைகிடைத்திருக்கும் என்றுசொல்லி மறுபடியும் ஜன்னல் வழியாகப் பார்த்தான். ஜனங்க ளெல்லோரும் தங்களுக்கு வெகு நாளாக விரோதியாயிருந்த நிர்க்குணன் செத்தானென்று சந்தோஷப்பட்டுக்கொண்டு ,தர்மசீலன் வெகுநாள் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று கத்தினார்கள். தர்மசீலன் வேறுயோஜனையி லிருந்தபடியால் இது ஒன்றும் அவன்காதில் கேட்கவில்லை.

தர்மசீலன் பெருமூச்சு விட்டுக்கொண்டு கண்ணில் தாரை தாரையாக நீர்தளும்ப, என்தம்பி குணசீலா, என் அருமை சகோதரனே! இந்த மனிதனுடைய துஷ்ட நடத்தையைப்போல இம்மாதிரி துஷ்ட நடத்தையால்தானே (அதேமாதிரி துஷ்ட நடத்தை இப்போது நடந்ததற்காகத்தானே அவன் இறந்திருக்கிறான்) உன்பிராணன் போகும்படி நேரிட்டது. ஆகா! சாதுவான ஆட்டுக்குட்டி, என் ஆட்டுக்குட்டி இறந்துபோனதற்கு—அதிலும் அக்கிரமமாககொலையுண்டு இறந்துபோனதற்கு—கொஞ்சங்கூட இரக்கப்படாத கிராதகர்கள் இப்போது துஷ்ட ஒநாய் தான்செய்த குற்றத்துக்காக நியாயமாக இறந்துபோனதற்கு இரக்கப் படுகிறார்களே! அது போதாமல் என்னுடன் சண்டையும் போடுகிறார்களே! இப்படிப்பட்ட சிபார்சு உனக்கு அப்போது இருந்தால் உன் உயிர் போகுமா? ஐயோ! நீ இப்போது உயிருடனிருந்தால் அப்போது கர்வப்பட்டு உன்னை லக்ஷ்யம் செய்யாத மனிதர்களெல்லாம் இப்போது உன்காலில் விழுவார்களே. அப்போது நீ இறந்தும் உன்ஞாபகம் கூட அவர்களுக்கில்லையே! பகவான் உனக்கு சுவர்க்கத்தைக் கொடுப்பதுமல்லாமல், நாம் கடற்கறையில் அன்று சாயங்கால வேளையில் யோசித்த ஆசை இப்போது கிடைக்கச் செய்திருப்பதுபோல அந்த ஆசை என்றைக்கும் குறையாம லிருக்கும்படியும் அனுக்கிரகம் செய்யட்டுமென்றான். தர்மசீலன் பிறகு கதவை சாத்திவிட்டு கலாவதியின் அறையை நோக்கிச்சென்றான். கலாவதி இவன் வருகிற சப்தம் கேட்டவுடனே ஸோபாவை விட்டெழுந்துவந்து அவனை கட்டிக்கொண்டு, பிராணநாதா! வெகு நாழிகையாய் விட்டதே! ஏது இன்றைக்கு இவ்வளவுதாமதமென்றாள். கலாவதியின் குணம் மற்றவர்களிடத்தில் அலக்ஷ்யத்தைக் காட்டும்படியாயும் அதனால் அவர்கள் இவளை தூஷிக்கும்படி யிருந்தபோதிலும் தர்மசீலனிடம் மட்டும் வெகுமரியாதைவைத்து அவன்பேரில் வெகு பிரியமாயு மிருந்தாள்.

தர்மசீலன்—கலாவதி, நீ இன்றைக்கு எங்கேயும் வெளியில் போகவில்லையா?

கலாவதி—இன்றைக்கு வெய்யலதிகமா யிருந்ததால் நான் எங்கேயும் போகவில்லை. ஆனால் என்பொழுதைப் போக்குவதற்கு பிரபுக்கள் பெண்சாதிகளெல்லாம் வந்திருந்தார்கள்.

தர்மசீலன் அங்கே ஓர்பையனைப்பார்த்து அடே! நீயார்? இங்கேஎங்கு வந்தாயென்றான்.



கலாவதி—அவனை கடுமையாய் ஒன்றும் சொல்லாதேயுங்கள். பாவம்! அவனைப்பற்றி நான் பின்னால் சொல்லுகிறேன், உக்ரவர்மா பக்கத்துக்கு வா. உன்யஜமானரைப் பார்த்தாயா? உக்ரவர்மன் பக்கத்தில் வரவும் தர்மசீலன் குழந்தைகளைக் கண்டால் பிரியமாதலால் அவனை அணைத்துக்கொண்டு கலாவதியின் காதில் ரகசியமாக நமக்கு இப்படி ஓர் குழந்தை பிறக்க வேண்டுமென்றான். கலாவதி வெட்கப் பட்டுக்கொண்டு தலை குனிந்தாள். தர்மசீலன் பையா உன்பெய ரென்னவென்றான். அவன் உக்ரவர்மன் என்று சொல்லவும்.

தர்மசீலன்—நல்லபெயர்! உன் உறவினர் யார்?

உக்ரவர்மன்—என் உறவினர் என்று எனக்கு ஒருவருமில்லை. அதனால் தான் நான் உங்களிருவரையும் நேசிக்கிறேன். எல்லாப் பையன்களும் தங்களைக் கொண்டாடுவதைக்காட்டிலும் நான் அதிகமாகக் கொண்டாடுகிறேன்.

தர்மசீலன்—ஆனால் எல்லா பையன்களும் என்னைக் கொண்டாடுகிறார்களா? அதுவும் நல்லதுதான் என்று சொல்லி உக்கிரவர்மனை பக்கத்தில் உட்காரச் சொல்லி கலாவதியைப் பார்த்து ஏன்! நாம் தனியாக இருப்போமேயென்றான். கலாவதி உடனே தன் தோழிமார்களை வெளியே போகச்சொன்னாள். பிறகு கலாவதி தான் காலமே பையனுடைய பாட்டிக்கு காப்பாற்றுவதாக வாக்களித்ததையும், உக்ரவர்மன் புத்தியையும்பற்றிச்சொன்னாள்.

தர்மசீலன்: ஜடைசியாக உன் புத்திக்கு கேட்பானேன்! அது கிடக்கட்டும், எனக்கொரு அபாயம் வரப்போகிறதென்றான்.

கலாவதி திடுக்கிட்டு அபாயமா என்றாள். தர்மசீலன், கலாவதி! ஏது நீ கூட அபாயம் என்பதை கேட்க பயப்படுகிறாய்? நீநல்ல தைரியசாலியென்றல்லவா நானுன்னைக் கலியாணம் செய்துகொண்டேன். உன் அழகினால் என்னை மயக்கவும், விசனசமயத்தில் எனக்குத் தேறுதல்சொல்லவும், அபாய சமயத்தில் பக்கத்திலிருந்து ஒத்தாசை செய்யவுமல்லவா உன்னை நான் கலியாணம் செய்தது என்றான்.

கலாவதி—என் கண்ணே, எனக்கு தைரியமில்லாமற் போகுமா? நடுவில் கொஞ்சம் பெண்ணின் குணம் வந்தது. அதிகாரம் வரும்போது அபாயம் மட்டுமில்லாமலிருக்குமா? இரண்டும் இருக்கத்தான்வேண்டும். ஆனால் என்ன அபாயம் வந்தபோதிலும் நான் உங்களுக்கு ஒத்தாசையாய் உங்கள் பக்கத்திலிருந்து நானும் அந்த அபாயத்தை அனுபவிப்பேனே யல்லாது நான் தனிமையாயிருக்கமாட்டேன்.

தர்மசீலன்—கலாவதி! உன்குணம் எனக்குத் தெரியாதா? நான் கேலிக்குச் சொன்னேன். சங்கதியைச் சொல்லுகிறேன் கேள். ராஜ்யமாளுகிறதென்றால் நியாயமாய் ஆளவேண்டும். நியாயமா யாளுகிறதென்றால் அநேகர் விரோதமுண்டாகிறது. அதிலும் பிரபுக்கள் குற்றவாளிகளா யிருந்தால் இன்னும் கஷ்டமாயிருக்கிறது. பகலில் தைரியமாய் கொள்ளையடித்ததற் காக நிர்க்குணன் தேகம் அதோ தூக்குமேடையில் தொங்குகிறது பார்!

கலாவதி—ஐயோ! பயங்கரமான தண்டனை!

தர்மசீலன்—பயங்கரமான தண்டனைதான். ஆனால் அவனிறந்ததால் இப்போது எத்தனை ஏழைகளுக்குக்ஷேமம் தெரியுமா? அதனால்தான் நானவ

னிறந்ததைப்பற்றி வருத்தப்படவில்லை. பிரபுக்களெல்லாம் தங்கள் குலத்துக்கே நான் ஒரு கெடுதல் செய்ததுபோல நினைத்துக்கொள்ளுகிறார்கள். இதனால் ஒரு கலகம் வருமென்பது நிச்சயம்.

கலாவதி—ஆனால் அவர்கள் கலகம் செய்வதில்லையென்று சத்தியம் செய்து கொடுத்திருக்கிறார்களே.

தர்மசீலன்—கொள்ளையடிப்பது சகஜமாயிருப்பவர்களுக்கு கலகஞ்செய்வது ஓர் பெரிதா?

கலாவதி—ஆனால் ஜனங்கள் நமதுபக்ஷத்தி லிருக்கமாட்டார்களா?

தர்மசீலன்—இருப்பார்கள். இருந்தென்னசெய்வது? ஜனங்கள் அவர்கள் வியாபாரம் கைத்தொழில் இதுகளையெல்லாம் விட்டுவிட்டு சண்டைசெய்ய வருகிறதென்றால் சாமானியமா? பிரபுக்களுக்கோ சம்பளம் வாங்குகிற சிப்பாய்கள் சண்டைக்கு என்று காத்திருக்கிறார்கள்.

கலாவதியும் தான் பெண்ணாயிருந்தபோதிலும் மந்திரிகளைப்போல் யோசனையில் சிறந்தவளாயிருந்தாள். தர்மசீலனைப்பார்த்து பலமாக ராஜ்யத்திலிருக்க வேண்டுமேயானால், பலமிருக்கிறதுபோல் முன்னால் காண்பித்துக் கொள்ள வேண்டுமென்றாள்.

எஸ். இராமசுவாமி ஐயர், பி. ஏ.

# கெடுவான் கேடு நினைப்பான்.

ஒரு நாள் ஒரு கோழியானது குப்பை மேட்டின்மேல் உட்கார்ந்து கூவிக்கொண்டிருந்தது. அதைக்கேட்ட ஒரு நரியானது அருகிற்சென்று கோழியைப்பார்த்து "ஓ! கோழியே! உன்னுடைய முகம் எவ்வளவு அழகாக விருக்கின்றது, இவ்வளவழகுள்ள வேறொரு பக்ஷியை நான் பார்த்ததேயில்லை. உனது குரல்போல இனிமையான குரலை நான் எங்கும் கேட்டதேயில்லை. உன் தந்தையின் குரல்தான் இதற்குச் சமமென்று சொல்லத்தகும். ஆயினும் அது தன் கண்ணை மூடிக்கொண்டு கூவும்பொழுது மிகவும் இனிமையாக விருக்கும்" என்று சொல்லியது. இவ்வளவும் கேட்டுக் கொண்டிருந்த கோழியானது "நானுமப்படியேதான்" என்று சொல்லி இறகை யடித்துக் கொண்டும் கண்ணை மூடிக்கொண்டும் முன்கூவியதைவிட இனிமையாகக் கூவியது. உடனே நரியானது கோழியிருந்த இடத்திற்கு ஓசைப்படாமல் மெல்லச்சென்று அதைக் கவ்விக்கொண்டு காட்டுப் புறமாய் ஓடியது. அப்பொழுது சில வேடர்கள் அதைப் பார்த்தார்கள்; பார்த்தவுடனே அதைப் பிடிக்கும்படி சில வேட்டை நாய்களை யேவ, அவைகளும் நரியைத் தொடர்ந்தன. நரியானது தன்னுடைய அந்தியகாலம் அணுகியதென்பதை அறிந்து பயப்பட்டபோதிலும் கோழியைமாத்திரம் விடவில்லை. அப்பொழுது நரிவாயி லகப்பட்



டிருந்த கோழி தான் தப்பித்துக் கொள்வதற்கு ஒருபாயங் கண்டுபிடித்து, நரியை நோக்கி "ஓ நரியே உன்னைப் பிடிக்கவரும் வேட்டை நாய்களுக்கு கோழி என்னுடையது: நானதை விடமாட்டேன் என்றுசொல்" என்றது. நரியும் கோழியின் தந்திரத்தை யறியாமல் அவ்வாறே சொல்லத் தன்வாயைத் திறந்தது. உடனே கோழியானது அதன் வாயினின்றுந் தப்பித்துக் கொண்டு ஒரு க்ஷணநேரத்தில் பக்கத்திலிருந்த ஒரு மரத்தின்மேல் பறந்துபோய் உட்கார்ந்துகொண்டது. இதைப் பார்த்த நரியானது தான் மோசம்போனமைக்கு வருந்தி அங்குநின்று தன்வாயைத் திட்டிக்கொண்டிருந்தது. ஏனென்றால் அது பேசாமலிருந்தால் கோழி யதனுள்ளேதான் இருக்கும்; பேசியதாலன்றோ கோழி தப்பித்துக் கொண்டது. இவ்வாறு நிற்கும் நரியைப் பார்த்து, கோழி நானும் எதிரியைக் காத்துக்கொண் டிருக்கவேண்டியபொழுது தூங்கிக்கொண்டிருந்த எனது கண்களைத் திட்டவேண்டியதுதான் என்று சொல்லியது. இச்சமயத்தில் வேட்டை நாய்கள்வந்து நரியைப் பிடித்துச் சின்ன பின்னமாக்கிக் கொன்றன. இப்படி அறிவீனர்கள் மௌனமா யிருக்கவேண்டிய காலத்துப் பேசியும் பேசவேண்டிய காலத்து மௌனமாயிருந்தும் தமக்கே தீமை விளைவித்துக் கொள்வார்கள். இச்சிறுகதையால் நாம் தலைப்பில் எடுத்துக்கொண்ட பழமொழி இனிது விளங்குகின்றது. எப்படியென்றால் நரியானது கோழிக்கு முதலில் கேடு நினைத்தது. அந்தக் கேடானது அதை நினைத்த அந்த நரிக்கே சிறிது பொழுதிற் கெல்லாம் நேர்ந்துவிட்டது. இதனால் அறிய வேண்டுவ தென்னவென்றால் நாம் ஒருவருக்கும் கேடு நினைத்தலாகாது. நினைத்தால் அக்கேடு நமக்கே விளையும்.

"பிறர்க்கின்னா முற்பகல்செய்யில் தமக்கின்னா பிற்பகற்றாமேவரும்."

ம. வீ. மீனாக்ஷிசுந்தர முதலியார், பி. ஏ.

# * பகலும் இரவும்.

உங்கள் ஞாபகத்துக் கெட்டினவரையில் நினைத்துப் பாருங்கள். தினந்தினம் சூரியனுதித்து ஆகாயமார்க்கமாய்ப்போய் அஸ்தமிப்பதில் பிசகுண்டா? பிரதி ராத்திரியும் வானம் மப்புமந்தார மில்லாதிருந்தால் சந்திரனும் நக்ஷத்திரங்களும் நம்முடைய தலைக்கு மேல் திரிவது கண்ணுக்குத் தோன்றவில்லையா? வழக்கப்படிக்கு நாளைக்கும் சூரியன் உதயமாகு மென்பதிலும் இனிமேலும் கழிந்த மேரைப்படி வருஷந்தோறும் உதயாஸ்தமயமாகு மென்பதிலும் உங்களுக்குச் சிறிதேனும் நம்பிக்கைக் குறைவிருக்குமா? பூமியைச்சுற்றி நாலண்டையும் ஓயாமல் மிருதுவான சலனம் இருப்பதைக் காண்கிறீர்களே. இந்தச் சலனத்துக்கு ஏதுவென்ன? இதென்ன விந்தை? என்று நீங்கள் எப்போதாவது யோசித்திருப்பீர்களா?

* From Mr. D. Seshiengar's Physical Geography.

வெய்யில் காயும்போது வெப்பமாயிருக்கிறது. ஆகாயத்தை மேகம் மறைக்கும்போது காற்று குளிர்ந்திருக்கிறது. சூரியன் மறைந்து இரவு படும்பொழுது குளிரெடுக்கிறது. இன்னும் பகலில் ஆகாயமெங்கும் வெளிச்சம் நிறைந்திருக்கிறது. மேற்றிசையிற் சூரியன் அஸ்தமிக்கவே இருளுண்டாகிறது. வெளிச்சமும் வெப்பமும் சூரியனாலல்லவோ உண்டாகின்றன. ஆதலால் சூரியனுக்கும் பூமிக்குமுள்ள சம்பந்தங்களைப்பற்றி நாம் சிறிது தெரிந்துகொண்டாலொழிய பூமியில் நடக்கும் காரியங்களைப்பற்றி நமக்கொன்றும் நன்றாகத் தெரியாதென்பது திண்ணம்.

இதைப்பற்றி வெகு நாளைக்கு முன்னமே பூர்வகாலத்து ஜனங்களுக்கிருந்த அபிப்பிராயமே உங்களுக்கும் இருக்கிறதோவென்னவோ. அவர்கள் அகிலத்தின் மையமிலே பூமியென்றும், அதைச்சுற்றிச் சூரியனும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் ஓயாமல் ஓடுகின்றனவென்றும் எண்ணியிருந்தார்கள். இப்போதும் உதயாஸ்தமயமென்று பேசுவது பூமியைச்சுற்றி அவைகள் திரிவதாக எண்ணுகிற விவகாரப்படிதான்.

உள்ளபடி பார்த்தால் பூமிபல்ல அசையாதமையம். சூரியனைச் சுற்றி ஓயாமல் ஓடும் கிரகங்களில் அதுவுமொன்று. சூரியன் தான் நடுவில் நிற்கும் ஓர் அக்கினிபிண்டம். அதிலிருந்து பூமிக்கு வெப்பமும் வெளிச்சமும் உண்டாகின்றன. அதைச்சுற்றித் தான் பூமி இடைவிடாமல் சுழலுகின்றது.

பகலும் இரவும் மாறிமாறி வருவது சூரியனுடைய சலனத்தால் உண்டாவதுபோல் தோற்றுகிறது. தத்துவம் அதன்று. பூமிதானே உருளுவதால் இவ்விகற்பமுண்டாகிறது. ஒருபமானத்தால் இது எளிதில் விளங்கும். ஒரு காம்புப் பம்பரத்தை உங்கள் பலங்கொண்டவரையில் இழுத்துச் சுற்றிவிட்டால் ஒருக்ஷணம் அது அசைவற்று நிற்பதுபோலத்தோன்றும். இதைப்பார்த்துச் சிறுவர்கள் பம்பரம் தூங்குகிறதென்று சொல்வார்கள். இப்போதுதான் அது அதிவேகத்துடன் சுழலும். அதன் அடிமுனையிலிருந்து மேற்காம்பின் நுனிவரையில் ஒரு நேர்கோடு ஊடுருவிச் செல்வதாகப் பாவியுங்கள். பம்பரத்தின் ஒவ்வொரு பாகமும் இந்த நடு ரேகையைச் சுற்றிச் சுழலும். இக்கோட்டிற்குச் சுழலிருசு என்று பெயர். இதே ரீதியாய்ப் பூமியும் தன் இருசைச்சுற்றி வேகமாய்ச் சுழல்கின்றது.

பின்னும் பாடசாலைகளில் வழங்கும் பூகோள உண்டையைநிறுத்தி, அதுக்குச் சில அடிதூரத்தில் அதைச் சுற்றியிருக்கும் பித்தளை வளையத்துக்கு நேராக ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்திவையுங்கள். இப்போது கோளத்தை இருசின்பேரில்சுழற்றலாம். அதுசும்மாவிருந்தாலும்இருசாணியில் வேகமாய்ச் சுழன்றாலும் விளக்கெதிரிலிருக்கும் பாதிக்கு வெளிச்சமும் மறுபாதிக்கு இருட்டுமிருக்கும். சும்மா விருக்கையில் வெளிச்சமுள்ள புறத்தில் குழித்திருக்கும் இடங்களெல்லாம் வெளிச்சத்திலும், மற்றப்புறத்திலிருக்கும் இடங்களெல்லாம் இருட்டிலுமிருக்கும். அதைச் சுழற்றும்போது ஒவ்வொரு இடமும் வரிசையாக வெளிச்சத்தில் வந்து இருளில் மறையும். விளக்கிருக்கிறவரையில் கோளம் சுழல்வதினால் அதன் மேற்புறத்தின் ஒவ்வொரு பாகமும் மாறிமாறி வெளிச்சமும் இருட்டும் அடையும்.

(இன்னும்வரும்)



## லக்ஷ்மி.

(220–வது பக்கத் தொடர்ச்சி.)

லக்ஷ்மி தன் குற்றேவல்களை முடித்துக்கொண்டு யோசனைக்காகஇரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். இரவில் எல்லாம் நிசப்தமாயிருக்கையில் எண்ணங்கள் கடலலைகள்போல் மனதாகிய பாரையில் மோதிக்கொண்டிருந்தன. நினைக்கநினைக்க அவளுக்குண்டான அவமானத்திற்கும் தனக்கு எதிரியில்லாமலிருந்ததற்கும் அளவேயில்லை. பங்கஜத்தின்மேல் பழிகூறுவது பெரும்பிழையே. அவள் குணத்தின் சுபாவப்படியே எல்லாவற்றையும் மனதிலிருந்து கட்டொடொழித்து எப்பொழுதும்போல் ஹரிராவிடம் பக்திபூண்டிருந்தாள். தன்னையே நொந்துகொண்டாள். தான் அவருக்கு தகுந்த மனைவியோ? பூர்வஜென்மத்தில் நல்ல பூஜை முதலானதுகள் செய்திருந்தாலல்லவா நல்ல ஜன்மம் கிடைக்கும்? பாபம் செய்திருந்தால் தான் தானே அதை அனுபவித்துதீரவேண்டும். விதியைத் தடுப்பவரெவர்? அன்றெழுதினவன் அழித்தெழுதப் போகிறானா? தன் விதிப்பயனே கணவனை அப்படியிருக்கச் செய்கிறது. தான் இறந்தாலொழிந்திருந்தால் அவர் மனோபீஷ்டப்படி இருக்கலாமே? அவள் இருந்தென்ன இல்லாமலிருந்தென்ன? இறந்தொழிவதே நன்று. தான் ஒன்றும்செய்வதற்கில்லை. காலமும் நிசியாயிருக்கிறது. கதவுமுதலானதுகள் தாளிடப்பட்டிருக்கின்றன. நாளை எப்படியாவது எமலோகத்தைச் சேர்வதே சரி.

தன் காரியங்களை சரியாய் செய்துமுடித்தனள்.

எப்பொழுதுமிருப்பதைவிட வணக்கமாயும் வுருக்கமாயும் மாமியாரிடத்தி லிருந்தாள். தன்னிடத்தில் எவ்வளவோ பிரியமாயிருந்த கிழமாமியாரை எப்படி பிரிவது? மாலையில் எல்லாஸ்திரீகளும் ஜலம் எடுத்துக்கொண்டு திரும்பிய பிறகு சாவகசமாய் ஜலம் கொண்டு வருவதற்குப்போக கிணற்றுக்குப் புறப்பட்டாள்.

அவள் திரும்பும் காலம் ஆனபிறகு ஏதோ காரியநிமித்தமாக மாமியார் லக்ஷ்மிக்காகக் கூப்பிட்டாள். காணோம். கூப்பிட்டகுரலுக்குபதில்காணோம். கொஞ்சம் நேரம் பொருத்துப்பார்த்தாள். இன்னும் லக்ஷ்மியைக்காணோம். மனதில் திடீரென்று ஒரு சந்தேக முண்டாயிற்று. தன் பிள்ளையும் மாட்டுப்பெண்ணும் மனமொத்து சந்தோஷமாயிருக்கவில்லை என்பதும் அவளுக்குத் தெரியாதவிஷயமல்ல. அன்று அவள்முகத்தில் ஏதோ சங்கடக்குறிகள் விசேஷித்துப் புலப்பட்டன. ஒருவேளை தற்கொலைபுரிந்து கொண்டிருப்பாளோ என்று தோன்றிற்று. முதிர்ந்தவள்; சுபாவ அமைவுள்ள குணம் மாறிற்று. லக்ஷ்மியிடத்தில் விசேஷப் பிரீதியுள்ளவள். பல தடவைகளில் பிள்ளையிடத்தில் பரிந்தும் பேசியிருக்கிறாள். தன்மகன் வீட்டுக்கு வந்திருப்பதை அறிந்து அவசர அவசரமாய் அவன் அறையை நோக்கிச்சென்று கடூரமாய் வெடித்த குரலுடன் "லக்ஷ்மி எங்கே" என்றாள்.

"எனக்கென்ன தெரியும், அவள் கள்ளபுருஷனா நான்? என்னை ஏன் கேட்கிறாய்?

"உனக்குத் தெரியாவிட்டால் யாருக்குத் தெரியும்? ஏதாவது ஆபத்து நேரிட்டிருந்தால் அது உன்பழியே" "என்னம்மா இப்படிச் சொல்லுகிறாய்? லக்ஷ்மிக்கு நானென்ன செய்தேன்."

"என்னசெய்தாயா? உன்னால் அப்பாவிப்பெண்போய்விட்டது. நீ கருப் பெத்திருக்கலாம் சந்தோஷம் தானே.

"என்ன? அவளுக்கு என்ன நேர்ந்தது?

கிணற்றுக்குப்போனவளை இன்னும்காணோம். துஷ்டா! இந்தப் பாவத்திற்கு உத்தரவாதிநீயே! லக்ஷ்மி பாவம் பெண்ணை என்னடிசெய்தாய் தங்கமான பெண் பலமாயாவது தட்டியாவது ஒரு வார்த்தை பேசினதில்லை. அவளைக்காணோம். உலகத்தார் நம்மையன்றோ பழிப்பார்கள் என்று சொல்லிக்கொண்டே திடீரென்று நிலத்தில்விழுந்து வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டாள். தாய்மொழிந்த மொழிகள் அவன் மனதில் அம்பு போல் பட்டன. கண்களிலிருந்து ஜலம் மலையருவியென விழ்ந்தது. தான் எவ்வளவு கடூரமாய் பரிதாபம் பெண்ணை நடத்தினேனென்று நொந்துகொண்டான். அவள் உயிரை மாய்த்துக் கொண்டதற்கு அவன்தான் காரணம். அவள் எப்படியாவது ஒழிந்துபோக வேண்டுமென்றிருந்தான். இவள் நடத்தைகள் இவைகளை நன்கு வெளியிட்டன. அவளைப்பற்றி ஆத்தங்கமொன்றுமில்லை. அவளே அறிந்து தன்னுயிரை மாய்த்துக் கொண்டாள். தான் அவளிடம் வெறுத் திருப்பதை அறிந்தனன். கஷ்டத்தை சகிக்கமுடியாமல் போய்விட்டது. அவள் ஒழிந்ததைப் பற்றி அவன் குதூகலமடையவேண்டுமன்றோ? ஆனால் அவன் அவ்வாறிருந்தானா இல்லை. தான் பழிப்புக்கும் பாபத்திற்கு மாளாவதைவிட அவளை திரும்பி அடைவதே சிரேஷ்டமானது. தாய் தந்தைமார்கள் அவளிடத்தில் எவ்வளவோ இஷ்டமாயிருக்கிறார்கள். தன்னிடம் எவ்வளவோ பணிவும் பக்தியு முடையவளாயுமேயிருந்திருக்கிறாள். தன் கடூரமொழிகளொன்றுக்கும் எதிரிட்டு பேசியது கிடையாது. எல்லாம் தன் பிடிவாதகுணமே! எவ்வளவு முட்டாளாயிருந்துவிட்டான். அவள் நற்குணங்களை கண்மூடித்தனத்தால் இவனறியவில்லை. இப்பொழுது அவளொழிந்தாள். அவன் மனத்தை பயமும் துக்கமும் அமாவாசை இருள்போல் கவிந்துகொண்டது. அவன் சென்றவைகளெல்லாம் இல்லாமற்போய் மறுபடியும் புதிதாக நாட்கள் கழிக்கவேண்டுமென்று நினைத்தான்? என்ன தன்கையால் கொலைசெய்யாமற் போனபோதிலும், எண்ணத்தாலும் வார்த்தையாலும் கொலைசெய்துவிட்டான். அவன்மேல் நீங்காப் பழிசுமந்தது. காருண்ய கடவுளே! அவளை அன்புடன் கடாட்சிப்பீர்! அடுத்தாப்போல் வேறொரு நினைப்புமுண்டானது. லக்ஷ்மி இறந்தனளோ தாயாருக்கு உண்மையாய்த் தெரியாது, கிணற்றுக்குச்சென்றாள். ஏதாவது காரணத்தால் சற்று தாமதமுண்டா யிருக்கலாம். அவன் உடனேசென்று பார்ப்பான். தாயைபூமியி லிருந்தபடியே விட்டு அறையிலிருந்து தலைகால் தெரியாதபடி ஓடினான். சூரியன் அஸ்தமானமாயிற்று. மங்கலாயிருந்து இருளும் சூழ்ந்து கொண்டு வந்தது. வானம் ஒரு பக்கத்தில் சிவப்பாயும் மற்றொருபக்கத்தில் கருநீல நிறமாயுமிருந்தது. வானத்தின் நிறங்கள் பார்ப்பதற்கு மிகவும் நேர்த்தியாயிருந்தன. இடையிடை வெளிச்சமுமிருந்தது. நக்ஷத்திரங்கள் ஒவ்



வொன்றாய் புலப்படத் தொடங்கின. சுக்ரனும் ஜ்வலித்துக்கொண் டிருந்தது. சந்திரன் ஒருமூலையில் வெளிவந்துகொண்டிருந்தான். பல பட்சிகளின் சப்தங்கள் ஒலிந்துக்கொண்டிருந்தன. பிரகிருதியே ஓய்வுக்காக சித்தமாய்க் கொண்டிருந்ததாகத் தோற்றியது. கிணற்றை நோக்கி போகிறமார்க்கத்திலிருந்த நிசப்தத்துக்கும் அடைவுக்கும் எதிரிடையாக மனமானது ஏகக் குழப்பமும் கலவரமுமடைந்திருந்தது. தான் எவ்வளவு கல்மனதுடையவனா யிருந்தானென்று துக்கித்தான். கடவுளனுக்கிரகத்தால் லக்ஷ்மி உயிருடன்மாத்திர மிருக்கட்டும். இனிமேல் நல்லவனாயிருப்பான்.

ஊர் கடந்து சென்று கர்ப்பூரசோலையை நெருங்கி விட்டான். இதற்கப்பால் கிணறிருக்கிறது. மூலை திரும்பியதும் தனக்குமுன் யாரோ மெதுவாய் சென்றுகொண்டிருப்பதைக் கண்டான். அது பெண்ணாயிருக்கக்கண்டு திடுக்கிட்டான். லக்ஷ்மியோ? கடைசியாக அவள் உயிரைக் காப்பாற்ற கடவுள் கொணர்ந்துவிட்டாரோ? ஆத்திரத்துடன் அவளை நெருங்கி மரியாதையெல்லாம் விட்டு முகத்தை உற்றுப்பார்த்தான். மூடப்பட்டிருந்தது. ஆத்திரத்தாலும் ஆவலாலும் அன்னியஸ்திரீகளுடன் வழியில் பேசக்கூடாதென்பதை மறந்து "பங்கஜம்" என்று உரக்கச் சொன்னான்.

" நீயா! லக்ஷ்மி எங்கே?

அவனை உற்றுப்பார்த்து "என்னை ஏன் கேட்கிறாய்? லக்ஷ்மி எங்கே? "லக்ஷ்மி எங்கே? "கிணற்றுக்குப் போயிருக்கிறாள்" என, என் தாயார் சொன்னாள். "என்ன சொன்னாள்? "சீக்கிரம் சொல்"

"அவள் லக்ஷ்மி"

"லக்ஷ்மி என்ன"

"உயிரைமாய்த்துக் கொண்டிருக்கக் கூடும்"

"அப்படியா ? துஷ்டா! அது உண்மையாயிருக்குமாகில் என்ன செய்வாய்" என்று அவசரமாய் சென்றாள். ஹரிராவும் பின் சென்றான். கோபத்தாலும் பயத்தாலும் பங்கஜம் அன்னிய புருஷர்களுடன் சகஜமாய் பேசக்கூடாதென்பதையும், அவமானத்தையும், அடக்கத்தையும் ஒழித்து அப்பாவி லக்ஷ்மியிடத்தில் சரியாய் நடந்துகொள்ளாததற்காக நன்றாய்த் திட்டினாள். நீயோ அவளுக்கு தகுந்த புருஷன்! அவள் மகிமையும் சிறப்பையும் அறியாய். ஆதலால் சந்தோஷமாயிருக்கக்கொடுத்து வைக்காதவன். துற்பாக்கி. நீ அனுபவத்திருக்கக்கூடும் சந்தோஷத்தை மாத்திரம் நினைப்பாயாகில் —நானும் என் கணவனும் எவ்வளவோ இன்பமனுபித்தோம்—அதுயாருக்குத்தெரியும்? அவைகளை யெல்லாம் கேட்டானந்திக்க தகுதியுடையவனல்ல நீ! என்று பலவிதமாய் புகன்றனள்.

தோப்புக்கப்புற மிருந்த கிணற்றை அடைந்தார்கள். அங்கே ஒரு உருவத்தைக் கண்டார்கள். சமய சஞ்சீவியைப்போலிருந்தது இவள் வரவு. அவசரமாய் நெருங்கினார்கள்.

லக்ஷ்மி கிணற்றுக்கு வந்ததும் அனேக ஸ்திரீகள் அங்கு இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் ஏதோ சாக்கு போக்குசொல்லி அங்கேயே இருந்தாள். அவளைத்தவிர எல்லாரும் போய்விட்டார்கள். சமயம் வாய்த்தது; மனதை திடப்படுத்திக் கொண்டாள். என்ன இருந்தபோதிலும் இவ்வுலகத்தை

நீத்துச்செல்ல மனம் துணியவில்லை. எவ்வளவு அமைவும், சமாதானமும்
பொருந்தியிருக்கிறது. வளர்பிறை சந்திரன் வானத்தில் ஜாஜ்வலித்துக்கொ
ண்டிருந்தான். நக்ஷத்திரங்கள் இடையிடையே ஒலித்துக்கொண்டிருந்தன.
தென்னோலைகள் ஒளியில் பிரகாசித்துக்கொண்டிருந்தன. மரங்களிடையே
குடிசைகள்; சில மனிதர்களும் நடமாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள்
பேச்சொலியும் நிசப்தமான இடத்தில் ஸ்பஷ்டமாய் கேட்டுக்கொண்டிருந்
தது. எவ்வளவு வினோதமாயும், ரம்மியமாயுமிருக்கிறது! இவைகளை யெல்
லாம் விட்டுச்செல்வது எப்படி? பாச்சேரியிலுள்ளவர்கள் கூட தன்னைவிட
எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறார்களே! ஜாதி இதற்கெல்லாம் காரண
மல்ல. அவ்வோ கணவனால் விசுவாசிக்கப்பட்டவளல்லள். தான் இச்சிக்கத்
தகுந்தது உலகத்தில் என்ன இருக்கிறது? லக்ஷ்மி கிணற்றை சமீபித்துகுதி
ப்பதற்கு கையை விசிறுகையில் 'லக்ஷ்மி'' என்கிற சப்தம்காதில்விழ்ந்தது.
யாரோ ஒருவர் கையைப்பிடித்துக் கொண்டாயிற்று. திரும்பினாள். கண்ணை
நம்புவதோ இல்லையோ? ஹரிராவ், பங்கஜம் இருவரும் நிற்கிறார்கள். பங்க
ஜம் மோசக்காரி. தன் கணவனுடன் சேர்ந்து தனக்கு விரோதமாய் ஆற்
யோசனை செய்துகொண்டிருந்தாள் போலும், சரி மிகவும் சரி தான் மிக்க
அன்புவைத்திருவரும் இப்படியாயிற்று. அந்த வேளையில் கபடச்சிரிப்பு சிரி
த்தாள். "பங்கஜம் உனக்கு இடஞ்சலாயிருந்ததற்காக விசனிக்கிறேன்''
என்று நூதனமாயும் கடோரமாயும் கூறினாள். நீ இங்கே யிருப்பாயென்று கன
விலும் நான் கருதவில்லை. இத்தனைநாள் இருந்ததேபோதும். இன்னும் அரை
க்கணமும் இருக்கமாட்டேன்! என்று மறுபடியும் குதிக்க திமிரிக்கொண்டு
உடம்பை வளைத்தாள். "என்ன அர்த்தத்துடன் பேசுகிறாய், புத்தி சுவாதீன
த்திலிருக்கிறதா?'' என்று திடுக்கிட்டு கூச்சலிட்டு சுழன்றாள்.

"அர்த்தமா? என்ன இருக்கிறது? நான் மிக்க ஆப்தநேசி யென்றிருந்த
நீயே இப்படி திரும்பிவிட்டாய்! என்னைவிட துரதிர்ஷ்டக்காரியார்? நானேன்
பிறந்திருக்கவேண்டும்?

"அர்த்தமில்லாமல் பேசுகிறாயே? லக்ஷ்மி''.

"நீயும் அவரும் இங்கிருக்க நேரிட்டது எப்படி? அவரின்மேல் உனக்
கிச்சையிருந்தால் நானா தடுக்கப்போகிறேன்? இஷ்டப்படியே யாகட்டும்''.

"ஓ''? பங்கஜம் எதிர்க்கவும் முகம் கோபத்தால் விகாரமடைந்தது.
இதுவா உன் எண்ணம்? இப்படி உன் மனதிடம் எமன் ஆணையால் எண்ண
முண்டாயிற்றோ? இது எவரின் துற்போதனை அவன்—.

என் கணவன் நூறில் ஒரு பங்கு நல்லகுணமில்லாத இவனை நான் இச்
சித்திருப்பேனா!'' என்று துஷ்ட ஹரிராவை முகத்திலிடித்து தொப்ப கை
யை நீட்டி, "ஓ லக்ஷ்மி என்னைப்பற்றி இத்தகைய நீ நினைத்தது எனக்கே
வெட்கமாயிருக்கிறது. என்னை நன்றாய் அறிந்திருக்கிறா யென்றிருந்தேன்.
இதற்கப்புரம் நான்போவது நல்லது'' என்று சொல்லிக்கொண்டே தூக்காக்
கிரந்தளாய் நடந்தாள்.

லக்ஷ்மி மனதில் திடீரென எண்ணம் தோன்றிற்று, அவள் காலில்
விழ்ந்து கட்டிக்கொண்டாள். என் ஆப்த சகியே! பங்கஜம்! என் பிழை
யைப் பொறுப்பாய் என்னை நேசிப்பவள், நீ ஒருவளே உன்னைப்பற்றி இத
ற்கு முன்பு சந்தேகப்பட்டவளல்லவே, உன்னையும் அவரையுங்கூடக் கண்ட
தால் தான் பாவி அப்படி நினைத்தேன். என்னை மன்னிப்பாய். பங்கஜம் சில



நிமிஷங்கள் ஸ்தம்பித்து நின்றாள். நேசம் எல்லாவற்றையும் ஒன்றுமில்லா
மல் செய்துவிட லக்ஷ்மியை கைபிடித்துத்தூக்கவும் ஒருவரை ஒருவர் கட்
டிக்கொண்டு ஜலம் பெருகி விம்மி விம்மி அழுதார்கள்.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு ஹரிராவ் திக்பிரமை கொண்
டவன்போல் நின்றான். அங்கு நிற்க மிகவும் நாணிதோப்புக்குள் சென்றான்.
அவனுக்காக பங்கஜம் சுற்றிலும் பார்த்தாள். (வார்த்தையாலுண்டான
புண் ஆராமலிருந்தபோதிலும்) மனது இன்னும் புண்ணாயிருந்தபோதிலும்
லக்ஷ்மிக்கு நல்ல காலமாயிற்றென்ற எண்ணம் அதை மறக்கச்செய்தது.
மிக்க சந்தோஷத்துக்காரணமாயிற்று. ஹரி ஒன்றும் வாய்திறந்து வெளியிட
வில்லை யென்றாலும் லக்ஷ்மியிடம் அவன் முன்பிருந்தமாதிரி இரானென்று
தோன்றியது-"வா லக்ஷ்மி'' என்று கைகோர்த்துக்கொண்டு ஹரிராவ்
உனக்காக காத்துக்கொண்டிருக்கிறார். அவரிடத்தில் உன்னை சேர்ப்பிக்
கிறேன்'' எனவும், லக்ஷ்மி "வேண்டாம் வேண்டாம்'' என்று பின்னடைவ
தைக் கண்டு, பழைய ஹரிராவல்ல, உன்னை உள்ளபடி அறிந்துவிட்டார்.
நாங்கள் இங்கு வரும்போது அவர் எவ்வளவு விசாரமுடையவராயிருந்தா
ரென்பதை நீ கண்டிருக்கவேண்டும். என்னமோ உளரிக்கொண்டிருந்துவிட்
டேன். முக்கியமாய் நாங்களிருவர் ஒருமித்து இங்கு வர நேர்ந்ததைச் சொ
ல்லவில்லை. நீ சொல்லிய கெட்ட எண்ணத்திற்காக நான் மனம் வரு
ந்தவேண்டும்; பாதகமில்லை, உன்னை மன்னித்துவிடுகிறேன். ஹரிராவிடம்
போகலாம் வா'' என்று இருவரும் தோப்புக்குள் மறைந்தார்கள்.

ஹரிராவ் லக்ஷ்மியை உள்ளபடி அறிந்து அவளிடத்தில் அன்பு பூண்
டொழுகுவதாயும் நல்லவனாக மாறுதலடைந்ததாகவும் திருப்தியடைந்த
விஷயத்தை நிறுத்தலாம். அவன் தீர்மானத்தின்படி நடப்பதற்கும் அவர்க
ளிருவரும் ஒருமித்து வாழ்வதற்கும் ஈசன் ஆசீர்வதிப்பாராக.

(முற்றிற்று.)

T. S. ஸாம்பமூர்த்தி அய்யர்.

# தர்மம்.

ஒரு மகாரிஷியான மௌற்கல்யரென்பவர் சாஸ்திரங்களின் அளவை
யும் தவநெறியின் முடிவையும் தானங்களின் முறையும் சம்பூர்ணமாகத்
தெரிந்துகொண்டு தானங்களிற் சிறந்தது அன்னதானமென்றுணர்ந்து அந்
தத் தானஞ்செய்வதும் ஒருவரிடத்தில் யாசித்தாவது, உத்தியோக வியாபார
முதலியவைகள் செய்து சம்பாதித்தாவது ஒருவர் மனம் நோகத் தண்டனை
கண்டனை யியற்றியதினால் பொருளைச் சேர்த்தாவது, செய்வது மகாபாவங்க
ளென்றுன்னி மலைகளிலும் வளங்கொண்ட கழனிகளிலும் உதிர்ந்து கிடக்
கும் நெற்களைப்பொறுக்கிச் சேர்த்து, அமாவாசியை யன்று அதை அரிசி
யாக்கி அன்னஞ்செய்து காட்டிலிருக்கும் இலை கறிகளையும் பாகஞ்செய்து
கூட்டி, நாலுபாகமாய்ப் பிரித்து, ஒரு பாகம் ஒளபாசன அக்கினிக்கும், ஓர்
பங்கு பிதிர்தேவதைக்கும் ஒரு கூறு அதிதிகளுக்கும், ஒரு பிரிவு தனக்கு

மாகக்கொண்டு, மறுநாள் தொடங்கி உதிர்ந்த நெற்களைப்பொறுக்கிச் சேர்த்துப் பௌர்ணமியினன்றும் அதைத் தண்டுலமாகச் செய்து, நாலுபங்கிட்டு மேற்கூறிய வண்ணங் கொடுத்துத் தானும் புசித்து வராநின்றதைக் கண்டு தூர்வாஸ மகாரிஷி அவரிடம் சென்று, தான் பசித்துவந்தேனெனவுங் கேட்டுப் பௌர்ணமியின்று பங்கிட்டு வைத்த பாகத்தில் அதிதியின் கூறைப்பெற்றுக் கொடுக்கவும் வாங்கி புசித்துவிட்டு வயிறு நிரம்பவில்லையே யென்று சொல்லவும் தன்னுடைய பாகத்தையும் விசுவாசத்துடன் கொடுக்க வாங்கிப் புசித்துப்போயினர். மறுதரம் அமாவாசியையினன்றும் வந்து, அன்னம்வேண்டுமென்று கேட்க, உடனே பாதபூஜைசெய்து, அந்தப் பங்கில் அதிதிகளுக்கு வைத்திருந்ததை இவரையு மதிதியாகக் கருதி, அளிக்க, வாங்கிப்புசித்துவிட்டு, வயிற்றுக்குப் பற்றுதென்று சொல்லிய தூர்வாஸ மகாரிஷிக்குச் சரணஞ்செய்து, தன்னுடைய பங்கையுங்கொடுத்துவிட்டு, தான் தண்ணீர் புசித்திருந்தார். அப்படியிருக்க மறுதடவையும் தூர்வாஸர் வந்து கேட்க அவர் அப்படியே கொடுக்க நோக்கி, மூன்று பக்ஷமாக எனக்கு உம்முடைய பங்கையுங்கொடுத்து விட்டீரே. உமக்கு புசிப்பு எவ்விதமென்று வினவ, தேவரீர் பரிபூரணமாகக்கொண்டதே எனக்கு திர்ப்தி யென்று சொல்லிய தேவனுக்கொப்பானவனைத் தரிசித்துச் சிந்தை மகிழ்ந்து, தேவவிமானம் பெறக்கடவீரென்று செப்பிப்போனார் தூர்வாஸ மகாரிஷியானவர். மறுபடியும் மௌற்கல்ய மகாரிஷியானவர் தன் நியமப்படியிருந்து வருங்காலையில் தேவலோகத்திலிருந்து தேவவிமானம் வந்திறங்கினது. அதிலிருந்து சில தூதர்கள் வந்து ஐயா இவ்விமானத்தி லாரோகணித்துக் கொள்ளும். உம்மை அழைத்துவரும்படி தேவேந்திரன் அனுப்பிவைத்தாரென்று சொன்னதைக் கேட்டு, இவ்விடத்திற் கவ்விடமிருக்கு மியல்பைச் சொல்லுங்களென்றார். அவர்கள் சொல்லுகின்றார்கள்.

இவ்விடத்தில் தானதருமம், பரோபகாரம், ஜீவகாருண்ணியம், அன்னதான முதலிய தருமங்களைச் செய்தபேர்கள், எப்படி மகிழ்ந்து கார்யம் செய்தார்களோ அப்படியே அநேக நாள்கள் வரையிலும் அவ்விடத்தில் சௌக்கியமடைந் திருக்கலாம், அந்தப் புண்ணியவசம் நீங்கிப் போய்விட்டால் மறுபடியும் பூமியில்வந்து பிறந்து மேலாகிய சம்பத்தைப் பெற்று தானங்களைச் செய்து தேவதிவ்விய தேகத்தைப் பெறலாமென்றார்கள். அதைக்கேட்டு இந்த மகாரிஷியானவர் அப்பா உங்களுக்கும் உங்களை யனுப்பினவர்களுக்கும் ஒருகும்பிடு போடுகிறேன், நீங்கள்வந்தவழி பார்த்துக்கொண்டு போய்விடுங்கள் என்றார். ஆனால் அவர்கள் அடிக்கடி வந்தார்கள். நானிங்ஙனமே யிருக்கிறேனென்று அவர்களை யனுப்பிவிட்டு சிலநாள் வரையிலும் மேற்சொல்லிய வண்ணமே நடத்திவருங் காலையில் பக்த பராதீனன், பரவாசுதேவன், பரமபுருஷோத்தமன், பாஞ்சசன்யன், பஞ்சாயுதன், பரமதயாளு பக்தவத்ஸலன் பங்கஜலோசனன் பரந்தாமன் பாபவிமோசனகாரணன், பாண்டவர்கள் சகாயன் பரமபத நாதன் அந்த மௌற்கல்ய மகாரிஷியினிடத்திற்கு வந்துதோன்றினார். அந்த மகாரிஷியானவர்வணங்கி மலரயன் பொழிகலையுறுமல் வரமளித்தல் வேண்டும் மாதவனே என்றார். வணங்கிய மாதவத்தோனை விமானத்திலேற்றி வைகுந்த மமைத்து வாழ்வுறச்செய்தார்.

M. அய்யாஸாமி.



## பெண்கள் பக்கம்.

மனோரஞ்சினியை வாசிக்கும் எனது சகோதரிகளே! ஆகஸ்டுமாதப் பத்திரிகையில் பெண்ணின் விலை என்ற விஷயத்தை நீங்கள் யாவரும் படித்திருப்பீர்கள். நமது நாட்டில் எதிர் ஜமீன் என்றும் மாமிசக்கிரயமிருக்கும் வரையில் நமது தேசம் ஒருநாளும் முன்னுக்குவராது. தஞ்சை திருச்சி முதலிய விடங்களில் தோன்றி எங்கும் பரவிவருகின்ற தொற்றுவியாதி யாகிய பெண்ணின் விலையென்றும் வரதக்ஷிணை பாலக்காடு, கோயமுத்தூர் முதலிய விடங்களிலும் சில வருடங்களாய் பரவிவருகிறது. என்ன அநியாயம் பார்த்தீர்களா! எப், ஏ. என்ற பரிக்ஷைக்கு ஆயிரமும், பி, ஏ: என்ற இரண்டாவது பரீக்ஷைக்கு இரண்டாயிரமும் பெண்வீட்டாரிட மிருந்து பிள்ளைகளையுடையவர்கள் வாங்கும் காலமாய்விட்டது! பெண்ணைப்பெற்ற ஏழைக்குடும்பஸ்தன் என்னசெய்வான்?

பெண்ணின் படிப்பையாவது, சங்கீதம் வீட்டுவேலை, இவைகளில்கெட்டிக்காரி என்றாவது, புத்தியையாவது, பிள்ளைகளுடையோரும் கல்விகற்ற கலியாணம் செய்துகொள்பவரும் கவனிப்பதில்லை. பணமொன்றே பிரதானமாகிவிட்டது. உதாரணமாக நமது சமீப பந்துவின் பெண்குழந்தைக்கு ஒருவரை விசாரித்ததில் முதல்பாரத்தில் படிக்கும் பையனுக்கு ரூபா 500 வரதக்ஷிணை கொடுக்கவேண்டுமென்றார்கள். பிள்ளைகளைப்பெற்றோர்களுக்கு ஆசைக்களவில்லை போலும். பெண்களுக்கு உயர்ந்த கல்வியறிவில்லாமையால் வரும் கெடுதிகளில் இது ஒன்று. தாய்மார்கள் யாவர்களும் நன்றாக கல்வி கற்றவர்களாக விருந்தால் இந்தமாதிரிபிள்ளைகளை விற்று பெண் வீட்டுக்காரர்களுக்கு கஷ்டத்தையும் நஷ்டத்தையும் வைக்கமாட்டார்கள். தேசம் நன்மையடைய வேண்டுமானால் தாய்மார்களெல்லாம் படித்தவர்களாயிருக்க வேண்டுமென்று நெபோலியன் சொன்னது பிரத்தியக்ஷத்தில் விளங்குகின்றது. சகோதரிகளே! நீங்களும் உங்கள் அபிப்பிராயத்தை இப்பத்திரிகையில் தெரியப்படுத்துவீர்களென்று நம்புகிறேன்.

சர்வஜனமித்திரி.

## சமாசாரக் குறிப்பு.

இம்மாதத்தில் லேடி மின்டோ அளித்த விருந்தில் 500 ஸ்திரீகள் பிரசன்னமாயிருந்தார்கள்.

***

இந்தியாவின் வடமேற் கெல்லையிலுள்ள மலைகளிலிப்போதே பனிக்கட்டி விழ ஆரம்பித்து விட்டது.

***

ஆதரவற்ற இந்து கைம்பெண்களுக்கு ஒரு சாலை ஏற்படுத்த கல்கத்தாவிலுள்ள சில கற்றறிந்த மாதர்கள் யோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

***

நமது நிருப நேயர்கள் நிருபங்களை ஒவ்வொரு மாதத்தில் 10-ந்தேதிக்குள் தயவுசெய்து அனுப்புவார்களென்று நம்புகிறோம்.

...யில நடந்த மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்கு 81 பார்ஸி பெண்களும், 10 இந்துப் பெண்களும், 4 மகமதியப்பெண்களும் சென்றார்களாம்.

***

அமரோட்டியில் பிராமண ஸ்திரீகளும், மார்வாரி ஸ்திரீகளும் சேர்ந்து ஒரு கூட்டம்கூடி சுவதேச சாமான்களை யாவர்களும் வாங்கவேண்டுமென்று தீர்மானித்தார்களாம்.

***

கொரியாதேசத்துப் பெண்கள் எவ்வளவு இளமையில்கைம்மையானாலும் திரும்ப மறு விவாஹஞ் செய்யக்கூடாதாம். இவ்வித கட்டுப்பாடு மிகவும் நிர்ப்பந்தமே.

***

சர்வஜன மித்திரி என்ற மாது எழுதியனுப்பிய "வரதக்ஷிணை" யென்ற விஷயம் பெண்கள் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தைக் குறித்து மற்ற ஸ்திரீகளும் தங்கள் அபிப்பிராயத்தை எழுதி யனுப்பினால் பிரசுரிக்கப்படும்.

***

தேள்கொட்டிற்கு பூச்சியரிக்காத முற்றிய சூரியகாந்திச் செடியின் 4-இலையைப்பிடுங்கி 2 இலையை உள்ளுக்குக் கொடுத்து, 1 இலையைக்கசக்கி கடிவாயில் பூசி, மற்றொரு இலையைக்கசக்கி ஆக்ராணித்தால் உடனே விஷ மிறங்கிவிடுமென "சென்னை சுகாதாரபோதினி" யென்னும் பத்திரிகைகூறுகிறது.

***

ஐதராபாகத்து நைஸாம் அவர்கள் ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும் ஒரு ஆஸ்பத்திரி கட்ட 7லக்ஷம் ரூபா கொடுத்திருக்கிறார்கள். இக்கட்டடத்திற்கு அஸ்திபாரக்கல்லை நடத்தி இளவரசியாரவர்கள் வைப்பார்கள். அக்காலத்தில் லேடி கர்ஸன், லேடி ஆம்தில், மிஸ்ஸஸ் பெய்லி முதலிய மாதர்கள் திரவிய உதவியும் புரிவார்கள்.

***

பிராமணப்பெண்கள் வயதுவந்தபிறகு அதாவது ப்ரௌடையானபிறகு விவாகஞ் செய்துகொள்ளலாமா யென்பதைப்பற்றி யெழுதப்படும் உபன்னியாசங்களில் சிரேஷ்டமான உபன்னியாசம் எழுதுபவருக்கு ரூபா 100-வெகுமதி அளிப்பதாகவும், அவ்வித உபன்னியாசத்தில் சாஸ்திரங்களிலிருந்து சகல தகவல்களும் கொடுக்கப்பட வேண்டுமெனவும், அவ்வித உபன்னியாசங்களை புரொபஸர் எம். ரெங்காசாரியார் அவர்கள், மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யரவர்கள், மிஸ்டர் பி.எஸ்.சிவசாமி அய்யரவர்கள் இம்மூவரும்பரிசீலனை செய்வார்களெனவும் சென்னை ஹிந்து சங்கத்தார் தெரியச் செய்திருக்கின்றனர். உபன்னியாசம் மிஸ்டர் ஜி, ஏ. நடேசய்யருக்கு அனுப்பப்படவேண்டும்.

## முக்கிய குறிப்பு.

கூடிய சீக்கிரத்தில் டிசம்பர் ஜனவரிமீ பத்திரிகைகள் வெளிவந்து விடும் ஜனவரிமீ முதல் பத்திரிகையைக் கிரமமாகப் பிரசுரித்துவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அனேக சந்தாதாரர்கள் சரியானபடி சந்தாவை அனுப்பாமையாலேயே பத்திரிகை தாமதப்படுகிறது. ஆகையால் பாக்கியுள்ள சந்தாதாரர்கள் தயைகூர்ந்து சந்தாத் தொகையை அனுப்பி உதவிபுரிவார்களென்று நம்பப்படுகிறது.

C. S. இராமசுவாமி ஐயர்.



# விடுகதைகள்.



(1) காலேயிரண்டுண்டு நடக்கறியாள், இருகண்ணுமுண்டு பேலே சிமிட்டவகையறியாள்
அந்தமெல்லிநல்லாள் பால்குடிக்க வகையறியாள், சில பாக்குந்தின்பாள் அவளை யறிந்து சொன்னவர்க்கே செம்பொன் ஆயிரமே.

(2.) கூட்டிலே யிருக்குமது கிளியுமல்ல, கொழுந்தோடியிருக்குமது இரைதின்னாது, காட்டிலே விட்டுவிட்டால் பறந்தே போகும், சனத்தமன்னர் வாசலிலே காவலாகும் ஈட்டிகத்தி பிடித்தவர்க்கு எதிரே நிற்கும், பூலையற்கு காட்டினிவிக்கதையையுரைத்தாயானால் நாபவரை குருவென்று வணங்கலாமே.

(3) ஈரேழு பதினாலு லோகங்களதிலே இருபுறமுந்தச்சரமைத்திட்டது, மதிலே மாபெரு புளியமரவிதையு மதிலே வந்தாடும் பெண்களுக்கு பாலுண்ட மதிலே.

(4) பேச்சில்லை பெருமூச்சு விடுவான், உணவில்லை ஊரைச்சுமப்பான், உயிரில்லை ஓடித்திரிவான், சாதமில்லை தண்ணீர்குடிப்பான், கண்டதுண்டமாய் கரியைதின்பான், கண்களிலை காதவழிநடப்பான், குரலில்லைகூச்சலிடுவான், மழையில்நனைவான், வெயிலிற்காய்வான், நோயுமடையான், மருந்தும் புசியான், எப்படிச்சொன்னாலும் அப்படிக் கேட்பான்.

1905-ம் வருஷம் மேமாதம் வெளியான 9-வது இலக்கமுள்ள பத்திரிகையில் 216 ம் பக்கத்தில் சகோதரி வி. பாலாம்பாள் எழுதிய வினாவிற்கு விடை.—பழனி.

### விடுகதை வினா.

5. செங்கீரைத்தண்டைப்போல் வளர்ந்தாயே மகளே, செக்காட்டுத்தீயில் வெந்தாயே மகளே, மகாராஜன் வீட்டிலே புகுந்தாயேமகளே, மன்னனுக்கு நீ இரையானாயே மகளே.

6. குயவனோ கன்னனோ என்னை பெற்றான், பெண்களோ என் கழுத்திதகட்டிக்கொள்வர், ஆண்களோ தோளின்மேல் வைத்துக்கொள்வர், கால் கை இல்லா பாவிக்கு இரங்கார் உண்டோ.

நாகம்மாள்.

1905-ம் வருஷம் மே மாதம் வெளியான பத்திரிகையில் சகோதரி மரகதம்மாள் எழுதிய விடுகதைகளுக்கு விடை (1) குடை (2) விருந்து.

1905-ம் வருஷம் ஜுன் மாதம் வெளியான பத்திரிகையில் உலகசகோதரியால் எழுதிய விடுகதைக்கு விடை (2) நாமங்கள்.

அதேபத்திரிகையில் சகோதரி நாகம்மாளால் எழுதிய கதைக்கு விடை (1) மதுரை,

சகோதரி ஞானவடிவுடை அம்மாளால் வெளியிட்ட 2-வது கதைக்கு விடை "மாதர் மனோரஞ்சினி".
5-வது கதைக்கு விடை "மார்க்கண்டன்".

S. செல்லம்மாள், திரிகோணமலை.

---

1. பச்சைநிறம் பூண்டிருக்கும் உமையுமல்ல
   பல்வினையைப் போக்கடிக்குஞ் சிவனுமல்ல
   அச்சணமே பகைதீர்க்கும் மாலுமல்ல
   அகத்திதனை யுரவுகொள்ளும் ரிசியுமல்ல
   மிச்சமாய நீர்மூழ்கி முகமினுக்கி
   விலைகொடுப்பார் மடியேறும் வேசியல்ல
   உச்சித முண்டாக்கிகுவளமுதுக்காரி
   உகப்புடையா ளிவளையறிந்துரை செய்வீரோ.
2. சூதகத்தி லதிகதொரு சொரூபக்காரி
   சுரந்தகொங்கைப் பாலுடையாள் கலப்பாற்காரி
   பாதகியாள் கிளியைப்போர்ப் பெருவாள்பிள்ளை
   பாக்கவிட்டுப் பார்த்திருப்பாள் பால்தானூட்டாள்
   சாதனைக்கி இணக்கமில்லாத பேரைத்
   தானடிக்கத் தலப்படுவாள் சண்டை செய்யாள்
   மாதர்மனோ ரஞ்சினியின் னேயர்பாற்போய்
   மகிழ்ந்துரைத்து விடைபரித்து வருகுவாயே.

ஞானவடிவுடை அம்மாள்.



Printed at the Ripon Press & Published by the Proprietor
C. S. Ramasawmy Iyer, Madras.



அட்டவணை.

மாதர் மனோரஞ்சினி: 1905ஆ டிசம்பர்மீ

1. இளவசர் இளவரசியாருடைய நல்வரவைப்பற்றிய வாழ்த்துப்பாட்டு.
2. நமது பத்திரிகை,
3. இளவரசர் இளவரசியின் சுற்றுப்பிரயாணம்.
4. நமது எட்வர்ட் மகாராஜா இளவரசராயிருந்தபொழுது சென்னைக்கு 1875ஆ விஜயம் செய்தது.
5. சிறுவர்க்கான கதை.

## மாட்சிமை தங்கிய வெல்ஸ் இளவரசரின்
## வாழ்ப்பாக்கள்.

வாழி நீடூழி பல்லூழி—உவர்
ஆழிசூழும் புவிதாழ் யுவராஜர்—வாழி நீடூழி.
மன்னவர் மன்னற்கு மைந்தன்—நந்தம்
அன்னை விசயை யருள்குலக்கந்தன்— வாழி நீடூழி
பெற்றபிதா முன்நம்பால்—பரிந்
துற்றதுபோல வடைந்தன ரன்பால்— வாழி நீடூழி
இந்தியர் பால்நேசந் தாங்கி—பெற்ற
தந்தையை யீன்ற தலைவியினோங்கி— வாழி நீடூழி
இத்தேசம்போல் ராஜபக்திக்—கயல்
எத்தேசமும் இலை யென்றுணர்ந்துத்தி— வாழி நீடூழி
ஆன்ற குடிப்பிறப்பார்ந்த—இவர்
சான்றுணர்வால் உலகோர்க்கருளார்ந்து—வாழி நீடூழி
வாட்டமிலா துலகாண்ட—பெரு
மாட்டியாம் பாட்டியார்போல்புகழ்நீண்டு—வாழி நீடூழி
ஈடில் சுதேசிய மென்னும்—இந்த
நாடுசெழித்திடு நற்செயலுன்னி— வாழி நீடூழி
பாட்டியார் இந்தியர்க்காக—முன்னம்
நீட்டிய சாதனம் யாவுமுற்றுக— வாழி நீடூழி
நிகரில்விச் வாவஸு தன்னில்—மதி
மகரம்பனி ரண்டிலெய்தினர் சென்னை— வாழி நீடூழி
சீரியர் ஆசிகள்பாட—எழில்
மேரிவிக் டோரியா டெக்கொடும் கூட— வாழி நீடூழி.

நீடூழிபல்லூழி - உவர்
ஆழிசூழும் புவிதாழ் யுவராஜர்
வாழிநீடூழி பல்லூழி.

சுபம்.

அசலாம்பிகை யம்மை.

# மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"—ஔவையார்.

Vol-vii. Madras: December 1905. No-12.
புத்தகம்-எ. சென்னப்பட்டணம் டிஸம்பர்மீ 1905. இல-12.

## நமது பத்திரிகை.

நமது பத்திரிகைக்கு இத்துடன் ஏழாவது வருடம் பூர்த்தியாகிறது. இவ்வருடத்தில் நாம் பட்ட கஷ்டங்களோ பலவுளவாயினும் பத்திரிகையை விருத்திக்குக் கொண்டுவருவதில் தளர்ச்சியடைய வில்லை. பல நண்பர்கள் நமது பத்திரிகைக்கு உதவி புரிந்தார்கள். போஷகராகவிருந்து உதவிபுரியவும் சிலர் வாக்களித்திருக்கிறார்கள். நமது பத்திரிகையினால் பெண்களுக்குவிளையும் நன்மையைக்கண்டு சென்னை மாட்சிமைதங்கிய கவர்ன்மெண்டாரும் நமது பத்திரிகைக்கு நாளது 1906-வது வருஷமுதல் பொருள் உதவி செய்துவர உத்திரவளித்திருக்கிறார்கள். இவ்வித உதவி நமக்கு கிடைத்ததைப் பற்றி நமது சந்தாதார்கள் மிகச் சந்தோஷப்பட்டு இன்னும் நமது பத்திரிகையினபி விருத்தியைக்கோரி தங்களாலியன்ற உதவி புரிவார்களென்று நம்புகிறோம். நமது கையொப்ப நேயர்களும் தங்கள் பாக்கி சந்தாமுதலியவைகளையனுப்பி உதவிபுரிந்தார்கள். இன்னும் வெளி நாடுகளிலுள்ளவர்கள் நம்மேல் தயைகூர்ந்து பற்பல உதவியும் செய்து வந்தார்கள். நமது பத்திரிகைக்கு நேரிட்ட பால பீடைகளெல்லாம் ஒழிந்து பக்குவமான பருவத்தை ஈசன் அருளால் அடைய எதிர்பார்க்கிறது. மாதர்மனோரஞ்சினி இனி தனது எட்டாவது ஆண்டில்முழு அலங்காரத்துடன் காலம் தவறாமல் வெளிவந்து தனது சகோதரிகளுக்கு அறிவைப் புகட்டி நல்ல நிலைமையில் மனங் குளிர வைத்து, ஆநந்தமுண்டாக்கி தானும் சந்தோஷமாக வளர்ந்து வருவாள். இப்படி வளர்ந்துவர நமது கையொப்ப நேயர்களும், மற்ற நண்பர்களும் சென்ற வருடம் செய்த உதவியைவிட இருமடங்கு அதிகமாகச் செய்வார்களென்று நம்புகிறோம்.

நமக்கு இதுவரையிலும் பற்பல விதத்திலும் உதவிபுரிந்தவர்களுக்கும் உதவிபுரிந்து வருபவர்களுக்கும் பொருள் உதவி செய்துவருகிற சென்னைக் கவர்ன்மெண்டாருக்கும் நமது மனப்பூர்ண வந்தனத்தை யளிக்கின்றோம். அவர்களுக்கு ஈசன் பூர்ண ஆயுளையும் தேகபலத்தையும், செல்வத்தையும் அளிப்பாராக! நமக்கு ஈசன் நமது மனோரஞ்சினியை செவ்வனே நடத்திவர தேகபலத்தை யளிப்பாராக! சுபம்.

# மாட்சிமை தங்கிய உவேல்ஸ் நாட்டிளவரசரும் அவர்களுடைய பத்தினியாரும் செய்துவரும்

# சுற்றுப்பிரயாணம்.

நமது இளவரசரும் இளவரசியாரும் செய்துவரும் சுற்றுப்பிரயாணத்தைப்பற்றி சென்னையிலுள்ள தினசரிப்பத்திரிகைகளிலும் வாராந்தப்பத்திரிகைகளிலும் அப்போதைக்கப்போது எழுதப்பட்டு வருகின்றன. நமது ஊருக்கு வெகு தூரத்திலுள்ளவர்களுக்கும் நமது தேசத்தில் இளவரசரும் இளவரசியாரும் பிரயாணம் செய்து வருவது தெரியும். நமது சென்னைக்கு அவர்கள் வரும்பொழுது அவர்களுக்கு நல்வரவு கூறும்படியான பாக்கியம் நமக்கும் கிடைத்திருக்கிறது. ஆனால் நமது வீடுகளுக்கு எஜமானிகளாயுள்ள மாதர்களுடைய மனதைக் கவரும்படியான இப்பிரயாணத்தின் சில முக்கியமான விஷயங்களை எழுத விரும்புகிறோம்.

**இளவரசரும் இளவரசியாரும் என் சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள்?**

30-வருடங்களுக்கு முன் நமது சக்ரவர்த்தியாகிய இளவரசருடைய தகப்பனார் தமது அருமைவாய்ந்த தாயாராகிய காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரின் அனுமதிபெற்று இந்தியாவிற்கு வந்து சுற்றிலும் பிரயாணம் செய்தார். விக்டோரியா மகாராணியார் இந்தியா தேசத்தைப் பார்த்ததேயில்லை. மகாராணியாரவர்கள் மிக வயது முதிர்ந்தவராக யிருந்தமையால் நெடுந்தூரம் கப்பல் யாத்திரை செய்யக்கூடாமலிருந்தது. ஆயினும் இந்தியர்களிடத்தில் அவ்வன்னையாரவர்கள் வைத்திருந்த பிரியத்திற்கு அளவேயில்லை. தமது இதரதேசத்து பிரஜைகள் சந்தோஷமாக விருக்கும்படி செய்யவேண்டுமென்ற எண்ணம் மிகுதியாக விருந்தது. நம்மை ஏன் அவ்விதம் சந்துஷ்டியாக விருக்கும்படி செய்ய தமது முழு ஹிருதயத்தைச் செலுத்தினார் என்பதை நமது மாதர்கள் அறிந்து கொள்ளக்கூடாதா? காரணமிதுதான். தலைமுறை தலைமுறையாக நாம் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது மகாராணியாரவர்களுக்குத் தெரியும். ஒரு தேசத்தார் நம் தேசத்தைக் கொள்ளையடித்தபின் மற்றொருதேசத்தார் ஜயித்த சங்கதியும் தெரியும். கடைசியாக ஜனங்கள் நம்பிக்கையற்று மரணத்தையே நம்பியிருந்தார்கள். 1857-1858 ௵ நடந்த சிப்பாய்க்கலகத்தில் வெகு ஜனங்கள் சங்காரமானதைப்பற்றிக் கேட்டு மிக துயரமடைந்து தமது உதாரகுணத்தினாலும் விசுவாசத்தினாலும் இந்தியர்களுடைய பட்சத்தை அடையவேண்டுமென்று தீர்மானித்தார்; இதற்காகவே இந்தியா எப்பேர்ப்பட்ட தேசமென்பதை அறியவும், தமது பிரஜைகளுடன் சிநேகம் செய்துக்கொள்வதற்கும் தமது குமாரரை அனுப்பினார். அக்காலத்தில் யுவராஜாவாயிருந்த நமது எட்வர்ட் சக்ரவர்த்தி இந்தியாவிற்குவந்து பற்பல இடங்களுக்குச்சென்று இந்தியர்களுடைய மேலான குணங்களைக் கண்டு மிக மகிழ்ந்து அவர்களுடன் நட்புபாராட்டி தமது ஜன்ம பூமிக்கு மிகச் சந்தோஷத்துடன் சென்றார்.



சக்கிரவர்த்தியார் தாமே இந்தியாவைச் சுற்றிப் பிரயாணம் செய்வதின் பிரயோஜனங்களைத் தெரிந்துகொண்டமையால் தமது மூத்தகுமாரனாகிய இளவரசரையும் இந்தியாவிலுள்ள முக்கிய பாகங்களைப்பார்த்து அங்குள்ள இராஜாக்களுடனும் ஜனங்களுடனும் அறிமுகம் செய்துகொண்டு வரும்படி அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே மாட்சிமைதங்கிய இளவரசரும் தமது மனதுக்கினிய மனைவியாருடன் இப்பொழுது சுற்றுப்பிரயாணம் செய்துவருகிறார்.

30 வருஷத்திற்கு முன் நமது சக்கிரவர்த்தி இந்தியாவிற்கு வந்தபொழுது தமது மனைவியாராகிய அலக்ஸாண்ட்ரா ராணியார் வர முடியவில்லை. ஆனால் இப்பொழுதோ இனி மகாராணி பதவியை யடையும்படியான இளவரசியார் இந்தியாவிற்குவந்து இந்திய மாதர்களுடன் கலந்து பேசி அவர்களுள் அறிமுகம் செய்துவருவது மங்களகரமாக விருக்கிறது.

**பிரயாணத்தின் பிரயோஜனம்.**

இவர்கள் பிரயாணம் செய்தபின் தங்கள் சுயதேசத்திற்குத் திரும்பிச் செல்லுகையில் இந்தியா இவர்களுக்குப் புதிய தேசமாகத் தென்படாது. அவர்கள் இந்தப்பெரிய ஆரியவர்த்தம் புண்ணிய பூமியென்று அறிந்துகொள்வார்கள். இப்பூமியில் இந்தியாவைப்போன்ற அதி அற்புதமான தேசமொன்றுமில்லையென்பதையும் தெரிந்துகொள்வார்கள். மேலும் இந்தியர்கள் என்றால் தங்கள் அந்நிய நாடாகிய இந்தியாதேசத்துப் பிரஜைகளென்றும் அவர்கள் நாகரிகம் பொருந்திய ஜாதியாரென்றும், பிரிடிஷ் ஆளுகைக்குட்பட்டு மேன்மேலும் விருத்தியடையக் கூடியவர்களென்பதையும் அறிந்து கொள்வார்கள்.

**பிரயாணம் செய்த இடங்களும் தினசரிக்குறிப்பும்.**

1905-ம் வருஷம் நவம்பர்மாதம் 9-ந்தேதி வியாழக்கிழமைகாலை 10 45 மணிக்கு பம்பாய் துறைமுகம் வந்து அன்று சாயங்காலம் 4-மணிக்கு பட்டணத்திற்குள் பிரவேசித்தார்கள். இங்கு இவர்கள் ஐந்துதின மிருந்தார்கள். 14-ந்தேதி பம்பாயிலிருந்து சுதேச சமஸ்தானமாகிய இந்தூருக்கு 15-ந்தேதி வந்து 17-ந்தேதி வரையிலும் தங்கியிருந்தபின் 18-ந்தேதி புறப்பட்டு உதயபுரி என்கிற சுதேச சமஸ்தானத்திற்கு 19-ந்தேதி வந்து சேர்ந்தார்கள். இவ்விடம் நீங்கி 21-ந்தேதி ஜெயப்பூர் வந்து சேர்ந்தார்கள். இங்கு 23-ந்தேதி வரையிலுமிருந்து பின்பு நவம்பர் மாதம் 24-ந்தேதி ஒரு பெரிய வனாந்தரத்திற்கு மத்தியிலிருக்கும்படியான பிக்கனீர் வந்து சேர்ந்தார்கள். இங்குநாலு நாள் தங்கியிருந்து பின் 28-ந்தேதி பஞ்சாப் நாட்டுக்கு முக்கிய பட்டணமாகிய லாஹோர் வந்து சேர்ந்தார்கள். இந்த நாடு பிரிடிஷ் ஆதீனத்திலிருக்கிறது. இங்குள்ள பிரபுக்களும், சிற்றரசர்களும் இளவரசர் இளவரசியாரவர்களுக்கு மரியாதைசெய்ய கூட்டம் கூட்டமாய் வந்திருந்தார்கள். இங்கு நாலு நாளிருந்த பின் டிசம்பர் மாதம் 1-ந்தேதி புறப்பட்டு தமது பரிவாரத்தோடு 2-ந்தேதி காலை பேஷா வரைச் சேர்ந்தார்கள். எதிரிகள் இந்தியாவின் மேல்படை யெடுத்து வாராதபடிக்கு பேஷாவர் காவல் செய்கின்றமையால் இதற்கு படைக்காவலர் பட்டணம் என்று சொல்லப்படுகிறது. இளவரசரும் இளவரசியாரும் இங்குள்ள குன்றுகளையும், காடுகளையும் கண்டு களித்தார்கள். அநேக சிற்றரசர்களைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

இவர்கள் 4-ந்தேதி இங்குள்ள விசேஷங்களையும் கைபர்கணவாய் முத
லியவைகளையும் பார்த்தபின் 5-ந்தேதி பிரயாணமாகி ராவல்பிண்டி என்னும்
நகரத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இங்கு நாலாபக்கத்திலும் அமைந்துள்ள
இராணுவச் சேனைகளைக் கண்டு களித்தபின் 9௳ சுதேச சமஸ்தானமாகிய
ஜம்ரு என்கிற கோட்டையுள்ள பட்டணத்திற்குவந்து இங்கு இரண்டுதின
மிருந்தபின் 11௳ அமிர்தசாரம் என்னும் நகருக்குத் தமது பரிவாரங்களோடு
வந்திறங்கினார்கள். பின்பு 12௳ மாட்சிமை தங்கிய இளவரசு ரவர்களும்
இளவரசியா ரவர்களும் தங்கள் பரிவாரங்களுடன் டில்லிமா நகரை யடைந்
தார்கள். இங்கு 15௳ வரையிலுமிருந்து 16௳ இங்கிருந்து புறப்பட்டு ஆகிரா
பட்டணம் வந்துசேர்ந்தார்கள். 19௳ யன்று பெருமாளும் பெருமாட்டியும்
ஜெயத்துக்குக் காரணமான பட்டணம் என்று சொல்லப்பட்ட பாழ்பூர்
சிக்ரியைப் போய்ப்பார்த்து வந்தார்கள். பின்பு 20௳யன்று இளவரசரும்
இளவரசியும் ஆக்ராவைவிட்டு குவாலியருக்குப் போனார்கள். இங்கும் 25௳
வரையிலிருந்து 26௳ யன்று புறப்பட்டு லக்னோவுக்குப் போனார்கள். இங்கு
4 நாளிருந்த பின் 28௳ மத்தியானமே கல்கத்தாவுக்குப் புறப்பட்டு 29௳
யன்று கல்கத்தா வந்து சேர்ந்தார்கள். இங்கு ஒருவார மிருப்பார்கள். இத்து
டன் இவர்களுடைய சுற்றுப் பிரயாணத்தின் முதற்பகுதி முடிந்ததென்று
சொல்லலாம். இனி இவர்கள் பர்மாவிற்குப்போய் அங்குள்ள காட்சிகளைக்
கண்டு களித்தபின் ஜனவரிமீ 24௳ யன்று நமது சென்னைமா நகரத்திற்கு
வருவார்கள். அக்காலத்தில் இங்கு அவர்களுக்கு விசேஷமாக உபசாரணைகள்
செய்யப்படும். ஜனங்களும் பூர்ண இராஜ விசுவாசத்துடன் திரள் திரளாக
வந்து அவர்களுக்கு நல்வரவைக் கோருவார்க ளென்பதற்குத் தடையெ
ன்ன? அவர்களும் நமது உபசாரணைகளைக் கண்டு களித்து நமது சிநேகத்
தையும் பரிபூர்ண அன்பையும் அடைவார்க ளென்பதற்கும் தடையென்ன?

இப்பொழுது இவர்கள் பிரயாணம் செய்து வருவதினால் அவர்களுக்கு
முக்கியமாய் தோன்றிய விஷயங்களைப் பற்றி யோசிக்கமுடியுமா? பம்பாயில்
முதலில் அவர்கள் வந்திறங்கினார்கள். இதுவே இந்தியாவிற்கு வாசற்படி
யென்று சொல்லலாம். இதன் வழியாகத்தான் இந்தியாவிலுள்ளவர்கள் இங்
கிலாந்து முதலிய தேசங்களுக்குச் செல்லவேண்டும். இங்கிலாந்து முதலிய
தேசங்களிலிருந்து பம்பாய் மார்க்கமாகத்தான் இந்தியாவிற்கு வரவேண்டும்.
பிஷாவரோ ஒரு கத்தி நுனியைப்போல் இந்தியாவிற்கு வடமேற்கிலுள்
ளது. இங்கு உயர்ந்த பர்வதங்க ளடர்ந்திருக்கின்றன; காடுகளுமுண்டு. மலை
ப்பிரதேசிகள் காட்டுத் தன்மையும், கொடூர ஹிருதயமு முடையவர்கள்.
இங்கு கொள்ளைக்காரர்கள் வெகு அதிகம்; நமது இளவரசரும், இளவரசி
யாரும் பிரயாணம் செய்வதற்கு ஆரம்பித்த ஒரு வாரத்திற்குப்பின் இங்கு
ள்ள ஒரு சிறுபட்டணம் கொள்ளை யடிக்கப்பட்டது! கொள்ளைக்காரர்களால்
ஒரு சிபாய் கொல்லப்பட்டான்!

பம்பாய்க்கும் பிஷாவருக்குமுள்ள வித்தியாசத்தைப் பாருங்கள்! முன்
காலத்தில் சமையல் செய்துகொண்டிருக்கையில் கொள்ளைக்காரர்கள் வந்து
ஹிம்சைசெய்ய வருவதைக்கண்டு பயந்து வெந்ததும் வேகாததுமாயுள்ள
சமையல் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு அவர்களுக்குப் பயந்து தப்பித்
துக்கொள்ள ஓடினதாக நமக்கு நமது பாட்டிமார்கள் சொன்னகதை ஞாப
த்திற்கு வருகிறது. பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தில் நாம் யாதொரு தொந்திர
வில்லாமலும் சுகமாகவும், அடிமைபோ லிராமலும், சுயேச்சையாகவு மிரு



க்கிறோமல்லவா? இளவரசரும் இளவரசியாரும் இவ்வித வித்தியாசத்தையும்
தெரிந்துகொண்டிருப்பது உங்களுக்குத் தெரியாதா?

## சென்னை நகரில் 1875-வருஷம் டிசம்பர்மாதம்
## மஹாராணியார் குமாரரவர்கள்
# விஜயம்செய்த மஹோத்சவம்.

### முதல்நாள்.

[1875௵ நமது சக்ரவர்த்தினி குமாரர் இந்தியாவை விஜயஞ்செய்த
காலத்தில் நடந்த வைபவங்கள், நமது சகோதரிகளின் பிரயோஜனத்திற்
காக ஜனவிநோதினியிலிருந்து எடுத்து பிரசுரிக்கப்பட் டிருக்கின்றன.]

இளவரசரவர்கள் டிசம்பர்மாதம் 13ந்தேதி காலையில் இருப்புப்பா
தை வழியாய் வந்து ராயபுரம் ஸ்டேஷனில் இறங்கி அங்கிருந்து
தம்புசெட்டிவீதி வழியாய்த் துரைத்தனமண்டபத்தில்
சேர்வாரென்கிற சங்கதி முன்னமே தெரிந்திருந்தபடி
யால், அவர்களைத் தரிசிக்கும்படியாகப் பட்டணத்தில்
வந்து சேர்ந்திருந்த ராஜாக்களும், பாளையக்காரர்களும்,
நகரவாசிகளாகிய பிரபுக்களும், கவர்னர் முதலிய துரைத்
தன அதிகாரிகளும் அன்று சூரிய உதயத்துக்கு
முன்னே மேற்படி ஸ்டேஷன் சேர்ந்து அதிக சந்தோஷத்துடன் எதிர்கொ
ள்ள காத்திருந்தார்கள். இப்படி யிருக்கையில் காலை ஏழரையணிக்கு இள
வரசர் தம்முடைய பரிவாரத்துடனே விசேஷ வண்டிவரிசையில் வந்து
ஸ்டேஷனில் விஜயஞ் செய்தார்கள். அப்போது அவர்களுடைய கௌரவத்
திற்குத் தக்கபடி பீரங்கி விடுதல்முதலிய மரியாதைகள் நடத்தப்பட்டன.
வண்டியிலிருந்து இறங்கித் தம்முடைய நல்வரவை எதிர்பார்த்திருந்த மஹா
ராஜாக்கள் முதலானவர்களைத் தனித்தனியாய் மனதுவக்கும்படி கை கொ
டுத்து அவர்களோடு ஆதரவாய்ச் சம்பாஷித்து, ஒவ்வொருவரோடும், இந்து
தேசத்திற்கு உங்களைப்பார்க்கவே வந்தேனென்று சொல்லியதாகத் தோற்
றும்படியாக பிரதிமரியாதை நடத்தினர். இப்படியாக அவரவர்களுக்கு உசி
தப்பிரகாரம் மரியாதை நடத்தித் தம்முடைய பரிவாரங்களில் முக்கியமான
வர்கள் முன் வண்டிகளில் ஏறிச்செல்ல, தாம் நடுவில் தமக்கென்று நாலுகு
திரை பூட்டிச் சித்தஞ் செய்திருந்த இரதமேறி தம்முடைய பக்கத்தில் இந்த
சென்னை ராஜதானி கவர்னரவர்களாகிய பக்கிங்ஹம்ட்யூக் பிரபு வீற்றிருக்க
ராஜசின்னமாய் அலங்காரமான பொற்குடையின் நிழலில் பவனிகோலமா
ய்ப் புறப்பட்டார். அந்தரதத்தின் பின் இந்த ராஜதானியிலுள்ள மஹாரா
ஜாக்கள் முதலானவர்களின் ரதங்கள் மரியாதைக் கிரமப்படி நடந்தன.

இவ்விதமாய் அவர்களெல்லோரும் சிறப்பாகச் செல்லுகையில் சென்
னைப்பட்டணத்துள்ள அபாரஜனங்களும் வெளியிலிருந்துவந்த ஜனங்களில்
அநேகரும் தம்புசெட்டிவீதியில் இருபுறத்திலும் மெத்தைகளின் மீதும்
கீழும் தலைமிர்ந்து வெகுநேரம் ஆசைதீரக் கண்சிமிட்டாமல் பார்த்துக்
கொண் டிருந்தார்கள். இப்படி ஜனங்கள் நேத்திரோற்சவமாய்ப் பார்த்துக்
கொண்டிருக்க இளவரசருடைய ரதம் பெருநடையாய்ச் சென்று மாளிகை
களின் வரிசைகடந்து, கோட்டை வெளியில் இருபுறத்திலும் நின்றுகொண்
டிருந்த எண்ணிறந்த பிரஜைகள் மனங்களிக்கும்படி செய்து, அதன்பிறகு,
கோட்டையின் முகப்பில் ஏற்படுத்தப்பட்டிருந்த பீடங்களின்மீது உட்கார்ந்
திருந்த நகர விசாரணைச் சபைத்தலைவர்களுக்குக் காட்சியளித்து வாலாஜா
துவாரபாலத்தைக் கடந்து சென்றார். அந்தப்பாலத்தின் தென்முனை முதல்
மன்றோ பிரதிமைவரையில் சாலையி னிருபுறத்திலும் சித்தஞ் செய்திருந்த
மேடைவரிசை ஸ்தானங்களில் இப்பட்டணத்திலுள்ள கிர்மசிக்ஷா பாடசாலை
களின் சிறுவர்களும் சிறுமிகளும் உபாத்தியாயர்களும் நிறைந்திருந்தார்கள்,
அவர்கள் இளவரசர் ரதம் தங்களுக்குச் சமீபத்தில் வருகையில் முகமலர்ச்சி
யோடு எழுந்து நின்று கைகொட்டிப் புகழ்ந்துபாடித் தங்களுடைய ஆநந்
தத்தையும் ராஜபக்தியையும் வெளியிட்டார்கள். படிக்கட்டு மேடை வரிசை
களில் தென்புறத்து முதலில், தங்கள் கல்வித்திரட்டு அடையாளமா யிருக்
கிற விருது உடைகளோடு வந்திருந்த ஆங்கில வித்வான்களை இளவரசர்
கண்ணோக்கிப் பார்த்தபொழுது, அவரவர்களுடைய வித்தியாசின்னங்கள்
இவைகளென்று, இளவரசர் திவ்வியசித்தத்திற்கு விசிதமாய்த் தெரிந்திருக்
கலாமென்று, அவருடைய முகம் உல்லாசத்தால் புலப்பட்டன. அப்புறம்
ரதம் சென்றபோது பற்பலவிதப் படைவீரர்கள் அணிதிரந்து வெள்ளிக்
கொடிபிடித்து இருபுறத்திலும் நின்று கீதவாத்தியத்தோடு உபசரித்தனர்.
இவ்வாறாகப் பரிஜனங்களும் சிற்றரசர்களும் சூழ்ந்துவரச் சென்று துரைத்
தனமாளிகை சேர்ந்து அங்கு சகல உபசாரங்களையும் அங்கீகரித்து, பகல்
மேல் கனவான்களுக்கும் ராஜாக்களுக்கும் தர்சனம் கொடுத்தனர்.

மறுநாள் தம்முடைய பிதிருதினமாகையால் விநோதவியாபாரங்களில்
லாமல் அந்தத்தினத்தை ஏகாந்தமாயிருந்து கொண்டாடினார்.

## மூன்றுநாள்.

இந்தச் சென்னைபுரியின் ஸமுத்திரத் தீரத்தில் ஏற்படுத்த உத்தேசித்
திருக்கிற கப்பல் ரக்ஷணஸ்தானம் கட்ட ஆரம்பிக்க, இளவரசரும் சாயங்கா
லத்தில் புறப்பட்டுக் கடற்கரைக்கு வந்தார்கள். அந்தச் சமயத்தில் இத்தேச
த்து மஹாராஜாக்கள் முதலானவர்களும் அவ்விடம் வந்திருந்தார்கள். இவ்வி
டத்து விவகாரத் தலைமைத் துரைகளும் துரைசானிகளும் இந்து உத்தியோ
கத் தலைவர்களும் நெருங்கி அங்கு ஏற்படுத்தப் பட்டிருந்த மேடை வரிசை
களிலிருந்து இளவரசரைத் தரிசிக்க அநுகூலம் பெற்றிருந்தார்கள். பட்ட
ணத்து ஜனங்களும் வெளிப்பிரஜைகளும் எல்லாரும் சேர்ந்து ஆநந்தத்தோ
டு நமதுதேசத்தை ஆளுகிற ஆங்கில ராஜவம்சத்தில் ஜநித்த இளவரசு இவர்
தானென்று அவர் திருமுகத்தையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். உத்தே
சித்த சுபமுகூர்த்தத்தில் வேல்ஸ் பிரபு கப்பல் ஸம்ரக்ஷணை ஸ்தானத்துக்கு
அஸ்திவாரமாக ஒருகல்லைத் தமதுகரத்தால் கடலில் படியவைத்தார். அதை
பார்த்து அங்கிருந்தவர்கள் யாவரும் களித்து முகமலர்ச்சியோடு இளவர



சரை வாழ்த்தினார்கள். இன்னும் அங்கு அநேகம் உசிதமான வேடிக்கை
கள் நடந்தேறின பின்னும் அன்றிரவில் 10 மணிக்கு ராஜகுமாரரைச் சந்
தோஷிக்கும்படியாக உப்புக் கழிகளின் மத்தியில் விதம்விதமான பாணவே
டிக்கைகள் நடத்தின தருணத்தில் வந்துகூடின ஜனங்களை அளவிட்டுச்
சொல்ல யாராலாகும். அங்கே பிரவேசிக்க அநுமதி பெற்றுவந்த ஜனங்க
ளில் புருஷர்களுக்கு ஓரிடமும் ஸ்திரீகளுக்கு மற்றோரிடமும் ஏற்படுத்தப்
பட்டிருந்தன. அவ்வநுமதி பெறாதவர்கள் கோட்டை வெளியில் அவரவர்க
ளுக்கு அநுகூலமானபடி நின்றுகொண்டு பார்த்தார்கள். 11-மணிவேளையில்
அங்கு வந்திருந்த ஜனங்களெல்லாரும் எத்தன்மையான பாணவேடிக்கை
கள் நடக்கப்போகிறதோ வென்று பிரமித்து ஆகாசத்தை நோக்கிப்பார்க்
கையில் வெண்ணெய் முத்தையைப்போன்ற சிலபாணங்கள் எழும்ப ஆரம்
பித்தன. மற்றும்சில நேரத்தில் சிலது ஆகாசபாணங்களாகக் கிளம்பி வெண்
ணெய் முத்தைகளாகவும் பக்ஷி உருவமாயும் சிதறின, சிலபாணங்கள் வெண்
ணெய் முத்தைகளாய் எழும்பி ஆகாசத்தில் படீலென்று வெடித்துச் சில
நீலமாகவும், சில பச்சையாகவும், சில செகப்பாகவும், சில வெண்மையாக
வும் புஷ்பம்போல் விழ ஆரம்பித்தன. அவற்றுள் சில பாணங்கள் அங்கெ
ன்ன பார்க்கிறீர்கள்? அதிலும் விசித்திரமா யிருக்கின்றன, இவைகளைப் பா
ருங்களென்று சொல்லும்படியாகச் சுழன்றெழும்பிக் கொஞ்சதூரம் மேலே
போய்த் தலைகீழாய்த் திரும்பி ஒருமுனை தவளைத் தலைபோலப் பெருத்து
மற்றொருமுனை வால்போல நீண்டு கொஞ்சதூரம் கீழிறங்கி படபடவென்று
சப்தித்துக்கொண்டு ஒன்றையொன்று தாக்கின. நட்டப்பட்ட சில கம்பிக
ளின் உச்சியில் பாணங்கள் சக்கிராகாரமாய்ச் சுழன்று கொண்டு புஷ்பங்க
ளைச் சொரிந்தன. சிலது வெண்ணெய் முத்தைபோல் ஆகாசத்தில் கிளம்பி
அவ்விடத்தில் படீலென்று வெடித்து ஒரு வித்தினின்றும் உற்பத்தியாகிய
மரத்தில் அநேக வித்துகள் உதிர்வதுபோலும் அநேகஆயிரம் நக்ஷத்திரங்
கள்போலும் உதிர்ந்தன. இவ்வித பாணங்கள் நம்முடைய தேசத்துச் சிற்பி
கள் செய்யமாட்டுவார்களாவென்று ஒருவரையொருவர் வினவினார்கள். அவ
ர்களில் வேறு சிலர் இத்தேசத்துச் சிற்பிகள் ஆகாசபாணங்களையும் வெண்
ணெய் முத்தைபோல எழும்பும் பாணத்தையும் ஆகாசபாணமாய்ச் சென்று
அவ்விடத்தில் வெண்ணெய் முத்தைகளாகமாறுகிற பாணங்களையும் செய்
கிற வாடிக்கை இல்லையென்று சொன்னார்கள்: மற்றும் சிலர் இதின்வகை
நம்முடையவர்களுக்குத் தெரியுமானால் இன்னும் அதிக விசித்திரமான வே
டிக்கைகளை விர்த்திசெய்வார்களென்று சொன்னார்கள். இவ்விதமாய் பா
ணங்களைப் புகழ்ந்து முழுமையும் பார்த்து 12 மணிக்கு அவ்விடம் விட்டுத்
தங்கள் வாஸஸ்தானம் சேர்ந்தார்கள். இளவரசர் முதலானவர்கள் கவர்னர்
மாளிகையில் விருந்துண்டு அங்கிருந்தே பாணவேடிக்கை பார்த்தனர்.

## நான்காநாள்.

இளவரசர் சென்னைச் சுற்றுப்பக்கங்களில் காலையில் சவாரிசெய்து
பகல்மேல் யூனிவர்ஸிடி சபையார் இன்னும் இரண்டொரு சங்கத்தார் எழு
திக்கொண்டுவந்த அபிநந்தன பத்திரிகைகளைப் படிக்கக்கேட்டுச் சந்தோ
ஷித்து அவரவர்களுக்கு உசிதமான அங்கீகாரவாக்கியங்களை வாய்மலர்ந்து
வந்தவர்களைக் கௌரவப்படுத்தி யனுப்பினார். யூனிவர்ஸிடியாருடைய பத்தி
ரிகையில் வெகு சிறப்பான கருத்துகளடங்கி யிருந்தன. அன்றிரவில் க்ள

ப்பு ஹௌஸ் என்னும் ஐரோப்பிய துரைமார் கூடும் விலாச மண்டபத்தில்
விருந்தும் ஆட்டம் பாட்டமும் இளவரசருக்காக மிகச்சிறப்பாய் நடந்தன.

## ஐந்தா நாள்.

### வித்தியார்த்திகளின் விருந்திற்காக யுவராஜா ஜன விநோத உத்தியான வனத்திற்கு

## விஜயஞ்செய்தது.

ஐந்தாம்நாள் மாலை இரண்டுமணிக்கு மேல் இச்சென்னைநகரைச்சுற்றி
லுமுள்ள கிரமசிக்ஷா பாடசாலைகளின் வித்தியார்த்திகளான பெண்பிள்ளைக
ளும் ஆண்பிள்ளைகளும் மேற்படி உத்தியான வனத்திற்கு வந்து, இளவரச
ரும் மற்ற நாட்டிலுள்ளோரும் கூடி வேடிக்கை பார்க்கும்படி விருந்துண்டு
களிக்கப் பாடசாலைத் தலைவர் முதலிய சில பிரபுக்கள் ஏற்பாடு செய்திருந்த
னர். அதன்படியே திருவல்லிக்கேணி மைலாப்பூர் முதலிய விடங்களிலிரு
ந்து வந்த அநேகம் சிறு வித்தியார்த்திப் பெண்கள், கொடிகள் கட்டி அலங்
கரித்த டிராம்வே என்னும் வீதி இருப்புப்பாதை வண்டிகளில் ஏறித் தென்
னண்டைப் பாரிசத்திலுள்ள இரண்டு துவாரங்களாலும் அணி அணியாய்
மேற்படி தோட்டம் வந்து சேர்ந்தனர்.

வடவண்டைப் பக்கத்தில் ட்ராம்வே வண்டி இராவிடினும் இதென்ன
பலவருணப்பதுமைகள் தாமோவென்று பலரும் பார்த்து வியக்கும்படி,
அநேகம் பெண்கள் நானாவருணப்பாவாடை யுடுத்துப் பூஷணங்களணிந்து
பூ முடித்துச் சிங்காரித்துக்கொண்டு மேலேபாய் வளைத்துக்கட்டிய பாரத
நான்கு சக்கரச்சாமான் வண்டிகளில் வண்டிக்கு 30, 40 கணக்காய் வரிசை
தீர்ந்து உட்கார்ந்துவந்து வடக்கு வாயில் வழியாய்ச் சிங்காரத் தோட்டஞ்
சேர்ந்தனர். சமீபத்திலிருக்கிற அநேகம் பிள்ளைகள் அத்தோட்டத்துப்
பல வழிகளாலும் வந்து நெருங்கினார்கள். இப்படி இச்சென்னை மாணாக்கர்
அனைவரும் சிங்காரத் தோட்டத்திற்கு வந்து கோலாஹலத்துடன் அந்
தந்தப் பாடசாலைகளுக்கு உரிய கொடிகளுடன் வெவ்வேறு இடங்களில் வரி
சைவரிசையாய் வந்து கூடினார்கள்.

அங்கே பச்சையப்பமுதலியாருடைய உருவமெழுதிய மேற்படியார்
பாடசாலைக் கொடிச்சீலையைச் சிறப்பித்துப் பார்த்து வியந்து பேசாதவர்க
ளில்லை. கோவிந்த நாயகர் பாடசாலைக் கொடியில் வித்தியாமூர்த்தியாகிய
சரஸ்வதி தேவியின் வடிவம் எழுதியிருந்தது. கோமளேசுவரபுரம் ஸ்ரீனிவா
ஸப்பிள்ளை பெண்பாடசாலைக் கொடியில் மேற்படியார் உருவம் சித்திரித்து
அதன் கீழ் "வித்தியாசக்தி" என்னும் உறுதிமொழி எழுதியிருந்தது. இப்
படியே இதரபாடசாலைக் கொடிச்சீலைகளும் விதம் விதமாய் அலங்கரித்திரு
ந்தன. வாத்தியமேடையில் இங்கிலீஷ் வாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்
தன. அதைச் சுற்றிலும் கழைக்கூத்து,பயல்மான் ஆட்டம், மல்யுத்தம்,சிலம்
பவித்தை முதலிய சுதேசத்து வேடிக்கைகள் நடத்தப்பட்டன. ஒருபக்கத்
தில், மரயானை, மரக்குதிரை, முதலியவைகள் கட்டி அவைகளின்மீது ஆச
னங்கள் ஏற்படுத்திய சுழல்ராட்டினம் ஓர்வகை வாத்தியத்துடன் கரகரவெ
ன்று சுழன்றுகொண்டே யிருந்தது. சுதேச வித்தியார்த்திகள் பலர் மற்ற



வைகளைவிட அதை மேலாய் மெச்சி விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஈஸ்ட்
இந்தியா வித்தியார்த்திகள் பந்தடித்தல், கோணிப்பையி லிடுப்புவரையில்
காலிட்டுக்கொண்டு ஓடுதல், தண்ணீர்ப்பை தூக்கிக்கொண்டு ஓடுதல், பொய்
வேலி தாண்டுதல், நீரில் நீந்தி விளையாடுதல் முதலான பல பந்தயவிந்தை
கள் நடத்தினார்கள். அத்தோட்டத்தில் பற்பல விடங்களில் பிராமண ஜாதி
க்கு வெள்ளைக்கொடியும், வைசியஜாதிக்கு நீலக்கொடியும், சூத்திரர்களுக்கு
சிவப்புக்கொடியும், கிறிஸ்தவர்களுக்கு மஞ்சள்கொடியும் கட்டி விருந்தளி
க்க பந்தல்கள் போடப்பட்டிருந்தன. மற்றவர்களுக்குக்கூடாரங்கள் அடித்
திருந்தன. அவரவர்கள் ஜாதி ஆசாரங்களுக்கு லோபமில்லாமல் அவரவர்
களிடத்தில் கிரமமாய்ப்போய் சிறு தின்டி உண்டார்கள். சுதேச வித்தியார்
த்திகளுக்கு வாழை, கமலா, மணிலா முதலிய பழவகைகளும், மிட்டாய், கற்
கண்டு, சர்க்கரை, வாதுமைப்பருப்பு, முந்திரிகைப்பருப்பு முதலிய சிற்
றுண்டிகளும், ஈஸ்ட் இந்தியர்களுக்கு ரொட்டி, வெண்ணெய், தேத்தண்
ணீர் முதலியவைகளும் கொடுக்க யாவரும் திருப்தியாக உண்டுகளித்திருந்
தார்கள்.

இப்படியிருக்கையில் இளவரசர் கவர்னரவர்களோடு ரதமேறி, பரிவா
ரங்கள் சூழ்ந்துவர உத்தியானவனம் புகுந்து மேற்படிபாடசாலைகளிருந்த
விடங்களையும் அங்கங்கு நடந்த விநோதங்களையும் சுற்றிப் போய்ப்பார்த்து
ஆண்பிள்ளைகள் ஆரவாரத்தோடு "நமது இளவரசர் வாழிவாழி" பல்லூழி
காலம் வாழி வாழி !! என்றும், பெண்பிள்ளைகள் மங்களகீதம் பாடியும்
வாழ்த்தி செய்த வந்தனத்தையும் முகோல்லாசத்துடன் அங்கீகரித்து
தோட்டத்தைவிட்டு செல்லுகையில் வழியில் மன்றோ பிரதிமைக் கெதிரில்
இராணுவப் படைவீரர்கள் அணிவகுத்து நின்றதைக்கண்டு அவர்கள் நடை
உடை, பாவனைகளைச் சோதித்து மகிழ்ந்து அப்புறம் துரைத்தனமாளிகை
போய்ச் சேர்ந்தனர்.

அன்றையதினம் ராத்திரி இளவரசர் இராயபுரத்தில்கட்டியிருந்த சதிர்
பந்தலுக்குச் செல்லுவதற்காக வழியிலிருபுறத்திலும் விதம் விதமான தீபா
லங்காரங்கள் செய்யப்பட்டன. அவைகளுக்குள் பச்சையப்பமுதலியார்
பாடசாலையில் செய்திருந்த விநோதத்தைக் கண்டு மகிழாதவர்களில்லை
இருப்புப்பாதை ஸ்தானம் வெகு விஸ்தாரமாய் அலங்கரித்திருந்தது. கடற்
கரையோரத்திலுள்ள சாலைகளிற் செய்திருந்த தீபாலங்காரம் மிக சிறந்தது.
கடலில் கட்டுமரங்களின் தீபங்கள் ஏற்றியிருந்தது. கடலெங்கும் பற்பல
வர்ணமான விளக்குகள் ஏற்றியிருந்தனபோல் பிரகாசித்தது. கப்பல்களி
லும் கடற்கரை பாலத்திலும் பல விநோதக்காக்ஷியுள்ள பாணவேடிக்கை
கள் செய்யப்பட்டன. பிரின்ஸ் அவர்கள் இக்காட்சியைக் குளிர்ந்தகாற்றில்
நின்று கண்ணாரப்பார்த்துப் பிறகு சதிர்பந்தலுக்குள் விஜயஞ்செய்து அங்கு
நகரவாசிகள் செய்த உபசாரங்களைப் பெற்றுக்கொண்டு சுதேச நர்த்தனகீத
வாத்திய முதலான விநோதங்களைப் பார்த்து மிகக்களித்தார்.

## ஆறு நாள்.

மறுநாள் காலையில் சில துரைமாருடன் வேட்டையாடி பகலில் சில
இராஜாக்களுக்கு தாம் முன் பெற்றுக்கொண்ட காணிக்கைகளுக்குத் தக்க
தாய் வெகுமதிகள் கொடுத்தார். மாலைமூன்றேமுக்கால்மணிக்கு கடற்கரை

அமராவதியடியில் வந்திருந்த கனவான்களுக்கு அவரவர்களுக்கு தக்கபடி
மரியாதைசெய்து இராஜபக்தியோடு திரளாய்க் கூடியிருந்த ஜனங்கள் ஆகா
யமளவில்கேழ்க்கும்படி குரலெடுத்து வாழ்த்தின வாழ்த்துக்களைக்கேட்டுக்
களித்து வந்தனம் செய்துகொண்டே கவர்னருடன் படகேறி "சிரபிஸ்"
என்னும் நீராவிக்கப்பல் போய்ச்சேர்ந்து கல்கத்தாவுக்குப் பிரயாணப்
பட்டார்.

(முற்றிற்று)

(269-வது பக்கத்தொடர்ச்சி.)

பின்பு இளவரசரும் இளவரசியாரும் டெல்ஹி, ஆக்ரா, லக்னௌ முத
லிய சரித்திர சம்பந்தமான இடங்களையும் பார்த்தார்களென்பதும் உங்களுக்
குத் தெரியும். இவ்விடங்களில் முன்காலத்தில் வெகுகுழப்பங்களிருந்தன. தற்
காலம் ஒழுங்காயும் சமாதானத்தோடும் நன்றாக ஆளப்பட்டு வரும் பிரிடிஷ்
அரசாட்சியை ஒற்றுப்பார்த்த இளவரசருக்கும் இளவரசியாருக்கும் களிப்
பை உண்டாக்கி யிருக்கும். மேலும் பிரிடிஷ் ராஜியத்திலுள்ளவர்களுடைய
வழக்கங்களுக்கும், சுதேச சமஸ்தானங்களி லுள்ளவர்களுடைய வழக்கங்க
ளுக்குமுள்ள வித்தியாசத்தின் அருமையான விஷயங்களும் அவர்களுக்குநன்
றாகத் தெரிந்திருக்கும். பிரிடிஷ் இராஜியத்திலுள்ளவர்களைப் போல சுதேச
சமஸ்தானங்களி லுள்ளவர்கள் விருத்தியடைய வில்லை என்பது நிச்சயம்.
இதற்கு திருஷ்டாந்தமாக இவர்கள் சென்ற ஒரு சுதேச இராஜியத்திலும்
இவர்களுக்கு நமது சகோதரிகள் உபசாரணைசெய்ய முன்வரவில்லை; ஒரு
சுதேச சமஸ்தானங்களிலும் ராஜவம்சத்தைச் சேர்ந்த மாதர்களும் நமக்கு
சக்ரவர்த்தினியாக இனிவரும் இளவரசியாரை வரவழைத்து தக்க மரியா
தை செய்ய முன்வரவில்லை. இவைகளால் சுதேச சமஸ்தானங்களிலுள்ளவர்
கள் கல்வியிலும் இன்னும் இதர பொது விஷயங்களிலும் விருத்தியடைய
வில்லையென்று தெரிகிறது.

நவம்பர் டிசம்பர் மாதங்களில் இளவரசியாரும் இளவரசரும் சென்ற
முக்கியமான விடங்களில் அவர்களுக்கு நமது சகோதரிகள் செய்த உபசா
ரணைகளை மாத்திரம் எழுதுகிறோம்.

பம்பாயில் இராஜ தம்பதிகள் வந்தவுடன் ஜனங்கள் வெகு குதூகலத்
துடன் அவர்களை தக்க உபசாரணை மரியாதைகளுடன் நல்வரவு கூறி ஏற்றுக்
கொண்டார்கள். இவர்கள் இவ்விதம் செய்தது மிக விசேஷ சிறப்புடனிருந்
ததென்றே சொல்வோம். இவர்கள் நல்வரவு உபசாரணைக்குச் சமானமாக
எங்கும் செய்யப்படவில்லையாம். சென்னையிலு மிவ்விதமிருக்குமோ வென்ப
தும் சந்தேகம்தான். இளவரசியாரும் பம்பாய்க்கு வந்தவுடன் ஜனங்கள்
தங்கள் சக்ரவர்த்தினி தான் வந்திருக்கிறார்க ளென்பதாகவே எண்ணி
இராஜவிசுவாசத்துடனும் மிகக் களிப்புடனுமிருந்தார்கள். இளவரசியார் இங்
குள்ள சீமாட்டிகள் அளிக்கும் நல்வரவு பத்திரம் ஏற்றுக்கொள்வதற்காக
நகரசபாமண்டபஞ்சென்றார். இப்படி இளவரசியார்சென்றதுவிசேஷம்தான்.
ஏனெனில் பம்பாய் முன்காலத்தில் இங்கிலாந்து தேசத்து இராணியாருக்கு
சீதனமாகக் கொடுக்கப்பட்டது. ஆகையால் இளவரசியார் அழகு பொருந்
திய பம்பாய் நகரம் தமது சொந்தநகரமென்றே கருதக்கூடும். பம்பாய் முனி
சிபாலிடியார் தங்கள் உபசாரணைக் கடிதத்தைப் படிக்கவும், கோமகன் பின
வருமாறு பதிலுரைத்தார்.



"இளவரசியார் வரவைப்பற்றி விசேஷமாக நீங்கள் மகிழ்ந்ததாகச்
சொன்னது இளவரசியாருக்கும் எனக்கும் மிகுந்த களிப்பை யுண்டாக்கி
யது. இளவரசியாரும் தாம் இங்கு வந்ததைப்பற்றி மிகச் சந்தோஷப்படுகி
றார். 30 வருடங்களுக்கு முன் இந்தியாவிற்கு வந்து இதேயிடத்தில் எனது
அருமையான தந்தையார் உங்கள் நகர விசாரணை சபையார் அளித்த நல்வர
வை ஏற்றுக் கொண்டார். நாங்களும் அவ்விதமே செய்யவேண்டுமென்று
எண்ணியிருந்தோம். அவ்விதமே இப்பொழுது முடிந்திருக்கிறது. நாங்கள்
பலதேசங்களடங்கிய பெருங்கண்டம் போன்ற இந்தியாவின் ஒவ்வொரு பி
டத்தையும் சுற்றிப்பார்க்கையில் இந்நாட்டவரின் நல்லெண்ணமும் விசுவாச
மும் எங்களுக்குக் கிடைக்குமென்று நம்புகிறோம். நாங்கள் இங்கு நேராய்
வந்து போகும் சிலாக்கியத்திற்கும் செய்த பிரயாணத்திற்கும் எமக்கு வந்
தபலனாய் இருக்கும்" என்று பதிலுரைத்தார்.

10-ம்தேதி பகல் வெள்ளிக்கிழமையன்று இளவரசருக்குப் பற்பலகாரி
யங்கள் இருந்தன. முதலாவது, இராஜாங்க மாளிகையில், பம்பாய் இராஜ
தானியின் கோமக்கள் அந்நகரத்தில் பவனி சென்றதுதான். அச்சமயம்
"பிரின்செஸ் வீதி" என்னும் பெயருடன் விளங்கும் புதுவீதி" யொன்றைத்
திறந்தார்கள். இவ்வீதியானது பம்பாய்நகரவிருத்தி சங்கத்தார்கட்டியதாம.
பீபில்ஸ் சந்தையின் வேடிக்கைகளையும் பார்த்து சுதேசிகள் வாழும் நகரப்
பிரிவின் சில தெருக்கள் வழியேயும் சென்றனர். அவர்கள் ஊர்கோல வழி
முழுவதும் உற்சாகம் நிறைந்திருந்தது. ஊர் முழுவதும் ஒருங்குகூடி வந்தது
போல் தெருக்களில் எள்ளுப்போட விடமில்லை. எல்லாரும் அரசரின் மகனை
யும் அவர் மனைவியையும் காணவும் கோலத்தின் வேடிக்கைவிநோதங்களைப்
பார்க்கவும் சந்தோஷமும் சிரிப்பும் பெருகிப் பெருங்கூட்டமாய் நின்றுகொ
ண்டிருந்தார்கள்.

சாதாரண ஜனங்களின் சந்தோஷத்திற்காக சந்தைவேடிக்கையானது
மைதானத்தில் வைக்கப்பட்டது. அங்கே பலவித வேடிக்கைகளிருந்தன.

வந்த கோமக்களைச் சந்தை ஏற்படுத்திய கூட்டத்தார் நல்வரவு கூறி
அழைத்துச்செல்ல, சுதேச பாடசாலைப் பிள்ளைகள் இராஜமங்களத்தை குஜ
ராத்தி பாஷையில் பாடினார்கள். இராஜபரிவாரத்தார் தாம் கண்டதில் எல்
லாம் களிப்படைந்ததுபோல வந்து கூடிய ஏழைச்சனங்களும் எண்ணரிய
சந்தோஷங்கொண்டு ஆர்ப்பரித்தார்கள்."

அன்றிரவு வேல்ஸ் இளவரசர் சுதேச அரசர்களுக்கும் பிரபுக்களுக்கும்
கனவான்களுக்கும் பேட்டி தரும் சடங்கி லிருந்தார். அந்தச் சமயத்தில்
அவர் பெருமாட்டியும் கோஷா சீமாட்டிகளைக் கண்டுறவாடினர்.

11-ம்தேதி சனிக்கிழமை யன்று வேல்ஸ் இளவரசர் பல பொருட்கா
ட்சி சாலை (Prince of Wales Museum) என்னும் கட்டடத்தின் அஸ்திபா
ரக்கல்லை வைத்தார். இந்தக் கட்டடமானது பம்பாயில் இளவரசரின் வரு
கையைக் குறிக்கும். இக்கட்டடத்தைக் கட்டி பீரோ முதலிய சாமான்கள்
வைப்பதற்கு மாத்திரம் 10 இலட்சம் ரூபாய் பிடிக்குமென்று மதிப்பிடப்
பட்டிருக்கிறது. இந்தத் தொகை முழுவதும் கையொப்பங்களால் ஏற்கென
வே கிடைத்து விட்டதென்று சொல்லலாம். ஒரு மகமதிய கனவான் மாத்தி
ரம் 3-லட்சம் ரூபாய் அளித்திருக்கிறார். கட்டடம் கட்டி முடிந்தபின் சிறப்
பும் வனப்பும் மிகுந்ததா யிருக்கும் என்பதற்குக் கேட்க வேண்டியதில்லை.

இந்தியா மாதர்கள் நல்வரவை ஏற்றுக்கொள்வதற்காக நகரசபா மண்டபத்திற்கு இளவரசரும் இளவரசியாரும் வந்தார்கள். இவர்கள்வருவதற்கு முன்னே தெருக்களில் ஜனங்கள் திரளாய்க் கூடியிருந்தார்கள். மண்டபமிருக்கும்படியான தோட்டத்திலும் தாழ்வாரத்திலும் எவ்வளவோ நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடியிருந்தார்கள். இம்மண்டபத்தின் முற்புறம் விதம் விதமான வர்ணங்களுள்ள தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. இங்கு இருபக்கத்திலும் பார்ஸி, இந்து, மகமதிய மாதர்கள் திவ்யமான புடவைகளைக் கட்டிக்கொண்டு வரிசையாக நின்றுகொண்டிருந்தனர்கள். இந்த மண்டபத்தின் தீபாலங்காரமும் மாதர்களின் பற்பல வர்ணமுள்ள வஸ்திராலங்காரமும் யாவர் மனதையும் கவரும்படி செய்தன. படிக்கட்டுகளுக்கு கீழ் மாதர்கமிட்டியின் சபைத்தலைவராகிய ஜேம்சட்ஜி ஜீஜாபாய்மாதும், பத்ருத்தீன் தியாப்ஜியின் மனைவியாரும், ஹார்கிஸ்ஸன் தாஸ்நரோதம் தாஸின் மனைவியாரும், ஜன்பாய் ஜிபாங்கீரும், ஜம்கர்ஸட்ஜியின் குமாரத்தியும் இளவரசியாரை மரியாதையுடன் மண்டபத்திற்கு அழைத்துச்செல்ல காத்துக்கொண்டிருந்தார்கள்.

இந்திய மாதர்களின் சிறப்பான கூட்டமும் அவர்கள் செய்த பழைய காலத்துச் சடங்குகளும் நமது பெருமானுக்கும் பெருமாட்டிக்கும் மகிழ்ச்சியை உண்டுபண்ணியிருக்குமென்பதற்குச் சந்தேகமா? முதலில் படிக்கட்டுக்குச் சமீபத்தில் ஒரு சிறுவழியிருந்தது. இங்கு சிவப்பு வர்ணகுட்டைகள் பரப்பப்பட்டிருந்தது. மண்டபத்தண்டை பொன் வர்ணமுள்ளகுட்டை பரப்பப்பட்டிருந்தது. மண்டபத்திலுள்ள சுவர்களில் நாலாபக்கத்திலும் இந்தியர்களால் செய்யப்பட்ட விதம்விதமான சித்திரவேலை யமைந்த சால்வைகளும், பட்டு பீதாம்பரங்களும் தொங்கப்பட்டிருந்தன. ஸ்தம்பங்களும் பீதாம்பரங்களாலும் பற்பல வாசனையும் வர்ணமும் பொருந்திய புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மண்டபமுழுவதும் மெழுகுவர்த்தி தீபங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பார்க்க ரமணீயமா யிருந்ததாம். மண்டபத்தில் முன்காலத்தில் நூர்ஜஹானுடைய கீர்த்திபெற்றச் சிம்மாசனத்தைப்போன்ற ஒன்று 20 அடிஉயரம் உள்ளதாயும், பொன்முலாம் பூசப்பட்டதாயு மிருந்ததாம். இதன்மேல் கொடையைப்போல் பொன்வேலைசெய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. சிம்மாசனத்தின் ஸ்தம்பங்களும், கைப்பிடிகளும், ஆஸனமும் நவரத்தினங்களால் இழைக்கப்பட்டதுபோல் மிக பளபளப்பாயும் பார்க்க அதிசயமாயு மிருந்தன. ஒவ்வொரு கைப்பிடியிலும் ஒருமையில் வைக்கப்பட்டிருந்தது. இது உண்மையானமையில்போல்தோன்றிற்று. சிம்மாசனத்திற்கு ஏற இரண்டுபடிக்கட்டுகளமைக்கப்பட்டிருந்தன. இவைகளும் வெகு நேர்த்தியாக பொன்முலாம் பூசப்பட்டும் சால்வைகளால் அலங்கரிக்கப்பட்டுமிருந்தன. இவ்வித விநோதத்துடன் யாவரும் அதிசயிக்கும்படியாய்ச்செய்யப்பட்டிருந்தசிம்மாசனத்திற்கு இருபக்கத்திலும் இரண்டு மாதர்கள் அழகான விசிறியை வைத்துக்கொண்டிருந்தார்கள். மண்டபமுழுவதும் தரையில் சித்திரவேலைப் பாடுகளுள்ள கம்பளங்கள் பரப்பப்பட்டிருந்தன. சிம்மாசனமுள்ள மேடையில் பட்டுவஸ்திரங்கள் பரப்பப்பட்டிருந்தன. மாதர்களுடைய உடுப்புகளையும் நகைகளையும் பற்றி ஆதிசேஷன் கூட வர்ணிக்கமுடியாதென்றே சொல்லலாம்.



இளவரசியார் மண்டபத்திற்கு வந்தவுடன் மூன்று முக்கிய சடங்குகளும் ஆசாரங்களும் அநுசரிக்கப்பட்டன. முதலில் ஒருபார்ஸியாதால் "வீதா
விலேவா" என்ற சடங்கு அநுசரிக்கப்பட்டது. மிட்டாய்களை எடுத்துக்
கொண்டு நமது இளவரிசியாரின் சிரஸை மூன்றுதரம் சுற்றினாள். இப்படிச்
செய்ததின் கருத்து இளவரிசியர் எப்பொழுதும் சர்க்கரையைப்போல்
இனிப்புள்ளவராக விருக்கவேண்டுமென்பதேயாம். பின்பு ஸ்தோத்திரம்
செய்து ஒரு தேங்காயை இளவரசியார் பாதங்களின் கீழ் உடைத்தார்கள்.
இதனால் இளவரசியாருக்கு யாதொரு கஷ்டங்களும் உண்டாகாம லிருக்க
வேண்டுமென்பதே. இரண்டாவது இந்துமாதர்கள் ஆலத்தி எடுத்தார்கள்.
இது ஸ்ரீ சந்தவர்க்காரவர்களின் மனைவியாரால் செய்யப்பட்டது. சேவையி
டுதல் முதலிய வழக்கங்களும் திருஷ்டிசுற்றிக் கொட்டல் முதலியவைகளும்
நடந்தன. பின்பு முத்து ஆலத்தி, தங்க ஆலத்தி, தீப ஆலத்தி எடுத்தார்கள்.
பொன்மலரும் வெள்ளிமலரும் தூவினார்கள். பின்பு சிறுபெண்கள் சுபமங்க
ளமாக பாடல்களை செவிக்கினிமையான குரலில் பாடினார்கள். பின்பு மகம்
மதிய மாதர்கள் அமீன் என்ற சடங்கை நடத்தினார்கள். திவ்ய அலங்காரம்
பூண்ட மாதர்கள் பொன், வெள்ளி, நாணயங்கள் காணிக்கையாய் இளவரசி
யார் பாதத்தில் வைத்தார்கள். இதனால் ஏழைகள் எப்பொழுதும் இளவரசி
யார் ஆதரவின்கீழ் இருக்கிறார்களென்று தெரிகிறது. இவைகளை இளவரசி
யார் வாங்கித் திருப்பிக் கொடுக்கவும் ஏழைகளுக்கு அவைகளைப் பங்கிட்டுக்
கொடுத்தார்கள். இன்னும் சிலர் வாதுமை முதலிய பலவகைக் கொட்டை
களைச் சுற்றிலும் மிறைத்தார்கள். கொட்டையில் எண்ணெய் இருப்பது
போல் எண்ணெயிட்டு கொந்தளிக்கும் கடலை அமைதியாக்குவதுபோல்
வாழ்நாள் எல்லாம்சமாதானமும் அமைதியும் நிறைகவென்று வாழ்த்தி இள
வரசியாருக்கு புஷ்பமாலையைச் சூட்டினார்கள்.

இவ்விதச் சடங்குகள் நடந்தபின் இளவரசியார் மண்டபத்திற்குள் பிர
வேசிக்கையில் மாதர்கள் புஷ்பமாரி பொரிந்து கரகோஷம் செய்தார்கள்.
ஒருமாது முத்துக்களை வாரி இறைத்தாள். இளவரசியார் அங்குள்ள மாதர்
களுக்கெல்லாம் தலைகுனிந்து வந்தனம் செய்துகொண்டு மெதுவாக படி
களின்மீது நடந்து கடைசியாக சிம்மாசனத்தில் உட்கார்ந்தார். பின்பு எல்
லா மாதர்களுடைய பெயர்களைத் தெளிவாக ஜிபாங்கீர் மாது படித்தாள்.
அப்பொழுது ஒவ்வொரு மாதும் தங்கள் சாதி ஆசாரப்படி இளவரசியாரு
க்கு வந்தனோபசாரம் செய்தார்கள். பின்பு இந்தி, மகாராஷ்டிரம், முதலிய
பாஷைகளில் உபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது.

இளவரசியார் பின்வருமாறு மறுமொழி பகர்ந்தனர்.

"உங்களது இனிய உபசாரங்களின் பொருட்டு நான் உங்களுக்கு மனப்
பூர்வமாக நன்றிசெலுத்துகின்றேன். ஷை பத்திரிகைட்டிக்குமாறு உங்களைத்
தூண்டிய கருத்தின்னதென்பதை நானறிவேன். எனக்கு ஆரம்பத்திலேயே
இந்திய மாதர்களைப்பற்றி மிக மேலான எண்ணம் உண்டாகும்படி நீங்கள்
செய்துவிட்டீர்கள். எனது யாத்திரையின் முக்கிய கருத்துக்களிலே இந்திய
மாதர்களுடன் நல்லபழக்கம்செய்து கொள்ளவேண்டுமென்பதொன்று. உங்
களுடன் பழக்கமதிகப்பட அதிகப்பட உங்களது புகழ்மிக்கநற்குணங்களில்
என்மதிப்பு அதிகப்படுமென நம்புகிறேன். எனக்கு இப்போதேற்பட்டிருக்
கும்நல்லெண்ணம் இன்னும் இந்தியாமுழுதிலும் செய்யப்போகிற யாத்திரை

யிலே ஸ்திரப்பட்டு விடுமாயின் நான் எனது தேசம் சென்றபிறகும் உங்களைப்பற்றி என்றும் இனிய ஞாபகங்களிருக்கும். அதன்பேரில் நமக்குள்ளே யிருக்கும் பரஸ்பரமதிப்பும், நல்லெண்ணமும் மிகுதிப்படும்.”

பின்பு இளவரசியார் தமது இருப்பிடம் சென்றனர்.

தற்காலம் நமதரசியாக விருக்கும் அலெக்சாந்திரா ராணியவர்களின் பேர் விளங்கும்படி ‘அலெக்சாந்திரா டாக்’ அல்லது துறையென்று பெயரிட்டு அஸ்திபாரக்கல்லை கோமக்களிருவரும் வைத்தார்கள். அத்துறையானது வேலை முடிந்தபின் உலகத்துள்ள மிகப் பெரிய துறைகளில் ஒன்றாயும் மிகப் பெரிய கலங்களும் வந்து தங்க வசதியுள்ளதாயும் அடுத்த 30 வருஷகாலத்தில் கட்டிக் கடலில் விடக்கூடிய கலங்களையும் கொள்ளத்தக்க சௌகரியமுள்ளதாயும் இருக்கும் என்று எண்ணப்படுகிறது. இப்புதுத் துறையைக் கட்ட செலவு 347 இலட்சம் ரூபாயும் கட்டிமுடிக்க 5 வருஷகாலமும் பிடிக்கும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். இளவரசருக்கு வந்தனோபசாரப் பத்திரமொன்று படிக்கப்பட்டது. அது மிகவும் நேர்த்தியான வேலைப்பாடுள்ள ஒரு அழகிய சிறுபெட்டியில் அடங்கியிருந்தது.

பின்பு இண்டோர் சமஸ்தானத்திற்கு இராஜதம்பதிகள் தங்களது பரிவாரங்களுடன் சென்றார்கள்.

“16-ந்தேதி யன்று அவ்விடத்தில் ஒரு டர்பார் வைக்கப்பட்டது. அந்தக் கொலுவில் பலசிற்றரசர்களும்,கோமக்களுடையபேட்டியும்பரிச்சயமும் பெற்றார்கள். தங்கள் காணிக்கைகளைத் தந்து அவரைக் கண்டுகொண்டார்கள். இந்த டர்பாரின் அழகையும் சடங்கின்சிறப்பையும் வர்ணிப்பது கஷ்டமாம். போபால் நாட்டு பேகம் அல்லது அரசியும் இச்சடங்குக்கு வந்திருந்தனர். அவர் மாத்திரம் தான் காணிக்கையின்றிக் காணுஞ் சிலாக்கியம் பெற்றவராம். பின் இளவரசர் விடைகூறத்தொடங்கி, தாம் இண்டோருக்குவந்தது ஏதோஅவகாசமும் ஆடம்பரமும் இன்றிவந்தகாரியமென்றும், தாம் மற்ற சுதேச அரசர்களையும் நேரில் கலந்துபேச விரும்பியும் அவர்கள் மரியாதைக்குப்பதில் மரியாதையாய்ஒவ்வொருவரையும் பார்க்கத் தமக்கிஷ்டமிருந்தும், அவகாசமில்லை யாதலால் அப்படிச் செய்வதற்கில்லை யென்றார். இராஜபுதனத்தில் தற்காலம் பஞ்சம்வந்து அந்நாடு கஷ்டநிலைமையி லிருப்பதுபற்றித் தாம் முன்னேற்பாடு செய்தபடி அங்கு பிரயாணஞ்செய்ய அநுகூலமில்லை யென்றாலும் கடைசியில் இண்டோருக்காவது போய்த் திரும்பலாமென்று தீர்மானிக்கப்பட்டுத் தாம் வரவும், அவர்களனைவரையுங் கண்டுறவாடக் காரணமிருந்ததென்றுரைத்தார்.

அரசர்களின் வருகையும் ஆடம்பரக்கோலமும் இருக்கையில், ஏழைசனங்களை ஏங்கி நிற்கவைக்காமல் சம்பிரமமாய்ச் சாப்பாடுபோட ஏற்பாடுகள் செய்யப்பட்டது. கண்ணில்லாக் குருடரும் காலில்லாச் சப்பாணிகளும் கையற்ற நோயரும், குஷ்டமும் கஷ்டமும் பிடுங்கித் தின்னும் பிச்சைக்காரர் பலரும் வந்து அச்சமின்றி ஆகாரம் பெறலாம் என்று அந்நகரத் தெருக்களில் பறையறையப்பட்டது. தார்கோட்டி என்னுமிடத்தில் எளியவர் பலருக்கும் நெய்ப்பூரியும் மிட்டாயும் பழமும் தட்டாமல் தரப்பட்டது. அஸ்தமித்தபின் பகலில் உபவாச விரதத்திலிருந்த மகமதிய ஏழைகள் பலரும் பசியாற



வந்தார்கள். இண்டோர் முழுவதும் இராஜதம்பதிகளின் வருகையில் விருந்து வந்ததென்று எல்லாருஞ் சொல்லி ஏப்பமிட்டார்கள்.

கவுரதாப்பட்டமளிக்கும் கூட்டமொன்றுங் கூடியது. ஜி. ஸி. ஐ. இ. பட்டம் போபால்நாட்டுப் பேகத்துக்கும், கே. ஸி. ஐ. இ. பட்டம் சாளியாநாட்டு இராஜாவுக்கும் அளிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் சிறப்பில்குறைவற விளங்கியதுபேகமே. இந்தச் சடங்குநடக்கும் மண்டபத்திற்கு இளவரசரும்இளவரசியும் தம்பரிவாரப்பிரபுக்கள் டர்பார் உடுப்புடன் முன்செல்லச் சென்றார்கள். அங்கு மேடையில் சக்கிரவர்த்தியின் உருவப்படம் உயரத்தில் விளங்க, கீழே அழகிய ஆசனம் அமைத்திருந்தது. ஜி. ஸி. ஐ. இ. கவுரதா சின்னத்தை யொரு சின்ன அணையின்மீது தாங்கிச்சென்று, காப்டன் கிரீடன் பிரபு தலைவணங்கி அப்புறம் நின்றார். இதன்பின் சர் வால்டர் லாரன்ஸ் அவர்கள்பேகம் இராணியை மேடைவரைக்கும்அழைத்துச்சென்றார். அவர் வெண்ணிற நீலப்பட்டுவஸ்திரத்தினால் முக்காடிட்டுக்கொண்டு இந்திய இராஜ்ய கவுரதாப்பட்ட மேற்போர்வையைத் தரித்துக்கொண்டு தம் உருவம் சிறிதாயினும் பெருமை பெரிதும் விளங்கவும், தொங்கும் குஞ்சத்தைக் கொஞ்சும் சிறுவர் (அவர் மந்திரியின் மக்கள்) தாங்கிவரவும், மேஜர் டாலி பேகத்தின் பட்டப் பெயர்களைக் கெட்டியாய்ப் பாடினார். அப்போது கிரீடன் பிரபு கவுரதா சின்னத்தை இளவரசரிடம் தர, அதையவர் வாங்கி அப்பேகத்தின் கழுத்தில் அமரவிட்டார்.

இப்போது, இளவரசர் அப்பேகத்துடன் கைகோத்துறவாடினார். அப்பேகம் அவர் கரத்தைப் பற்றியபடியே நின்று உள்ளம் உருக, உணர்ச்சிபெருக வந்தனமளித்து பின் ஆங்கிலப்பயிற்சி யதிகமில்லாதிருந்தும் அப்பாஷையில்தானே பேசத் தொடங்கி, அரசர்க்கும் அவர் மகனும் இளவரசர்க்கும் தாம் எவ்வளவு நன்றியறிதலும் வந்தனமும் உள்ளவர் என்பதை உரைத்தார். பின் தம் இராஜ்யத்தில் கல்வி பரவச்செய்யும் காரியத்தில் கவனம் மிகச் செலுத்துபவராம் சாளியானாவின் இராஜாவுக்கு கே. ஸி. ஐ. இ. பட்டமளிக்கப்பட்டது. பின்பு, இராஜதம்பதிகளிருவரும் மேடையிறங்கி அங்குவந்து கூடிய பிரபுக்களில் பலருடன் பேசிக்கலந் துறவாடிக் கொலு கலைந்தனர்.

“இண்டோரிலிருந்து இளவரசரும் பரிவாரமும் உதயபுரத்திற்குப் பிரயாணமாயினர். அந்நகரமானது இத்தேச நகரங்களுள் அழகிற் சிறந்தவற்றுள் ஒன்றாம். அந்தவிடத்து மகாராஜாவாகிய ராணா என்பவர் சூரியவம்சத்திற் பிறந்தவர் என்று எண்ணுகிறார்கள். உதயபூர் ராஜகுடும்பத்தைஏற்படுத்தின கனசேனன் என்பவர் இராமருடைய சந்ததியில் வந்தவராம். அந்நகரில் கோமக்களுக்குச் செய்த மரியாதை விமரிசைகள் அந்நாட்டின் பெருமைக்கு ஏற்றனவேயாம். அந்நாட்டு ஜாகிர்தார்கள் ஜமீன்தார்கள் பிரபுக்கள் முதலியோர் அனைவரும் இந்தச் சமயத்தில் வந்திருந்தார்கள். பழைய காலத்துடுப்பும் மாதிரியும் மாறாமல் பலநூற்றாண்டுகளுக்கு முன் தங்கள் மூதாதைகள் வழங்கிய ஆடையும் ஆபரணமும் வழக்கமும் பழக்கமும்கொஞ்சமும் குறையாமல் காட்டினார்கள். பழைய ஜாகீர்தார்கள் பட்டும் சரிகையும், கொட்டும் மேளமும், கனைக்கும் குதிரையுமாய் வந்தார்கள்.

தமக்குச் சங்கிலிக் கவசமும், குதிரைக்குத் தோற்கவசமும், கெட்டிச் சட்டையும், கட்டிய ஈட்டியும், திருத்தித் தைத்த பருத்திச் சட்டையுமாய்

போர்வீரர் பலர் ஆர்வத்துடன் வந்தனர். இராஜ மரியாதைகளும் பேட்டிகளும் முறைகளுக்கிணங்க குறைவற நடந்தன. பின் தெருக்களெங்கும் தீபத்தோரணந்தான். வீடுகள் எங்கும் விளக்குகள்தான். ரிசிடென்சி மாளிகையிலிருந்து டர்பார் மண்டபம்வரைக்கும் படகுகளில் ஏறிப் பவனியாய்ச் சென்றது, பார்க்கப் பதினாயிரங்கண் வேண்டும் என்று சொல்லும்படி மிகவும் அழகாயிருந்தது.

இளவரசரும் இளவரசியாரும் இங்கு நடந்த பாணவேடிக்கைகளைப் பார்த்து களித்தபின் இராஜவிருந்திற்குச் சென்றார்கள். விருந்துண்ட பின் அந்நாட்டு மகாராணா அவர்கள் நமது இளவரசருக்கும் இளவரசியாருக்கும் உபசாரணையாய்ச் சிலமொழிகள் கூறினர். இவருக்கு ஆங்கிலம் தெரியாததால் இளவரசர் சொன்னது மொழிபெயர்த்துச் சொல்லப்பட்டது.

“பின்பு பிக்கானீர் நாட்டுக்கு மாட்சிமை தங்கிய வேல்ஸ்நாட்டு இளவரசரும் அவருடைய பத்தினியாரும் விஜயம்செய்தார்கள். அவ்விடத்திலும் அதை யடுத்த குஜ்நர் என்னும் இடத்திலும் இளவரசரவர்கள் புரிந்த பட்சி வேட்டையானது யாவரும் புகழத்தக்கதும் இளவரசருக்குத்தாமே திருப்தியைத் தரத்தக்கதுமாயிருந்தது. பிறகு பிக்கானீர் பட்டணத்து வீதிகளில் மாட்சிமை தங்கிய இளவரசர் தமது பரிவாரத்தோடு ஊர்வலம் சென்று உல்லாசத்தோடு திரும்பிவந்தபின் இளவரசரவர்கள், ஒட்டகசேனையைச்சேர்ந்த ஒன்பது உத்தியோகஸ்தர்களுக்கு, தாங்கள் சோமாலிலாண்டு என்னும் நாட்டுக் கலகத்தில் காட்டிய வீரதீரத்தைப் புகழ்ந்து பேசி, அவர்கள் வீரச்செய்கைக்கு நற்சாட்சியாகப் பதக்கங்கள் அளித்தனர்கள். இதன்பின், புராதன இராஜமாளிகையிலுள்ள விருந்து மண்டபத்தில்பிக்கானீர் மஹாராஜா அவர்கள் விருந்தொன்று அளித்தனர்கள். இந்தப் பெரிய விருந்துக்கு மாட்சிமை தங்கிய இளவரசர் அவர்களும் அவர்களுடைய பத்தினியாரும் போகக்கூடாமலிருந்ததே. ஆயினும், இளவரசருக்கு மிக மரியாதையுடனும் இராஜவிசுவாசத்துடனும் பிக்கனீர் மகாராஜா அவர்களால் உபசாரப்பத்திரம் படிக்கப்பட்டது. இதற்கு பதில் இளவரசருடைய பிரதிநிதியார் உத்தரமளித்தார். பின்பு மாட்சிமைதங்கிய இளவரசரும் இளவரசியாரும் லாஹோருக்கு வந்தார்கள். ஸ்டேஷனில் கூட்ட மதிகமாக விருந்தது. அங்குள்ளவர்கள் மிகக் களிப்புடன் நல்வரவு கோரினார்கள். தெருக்களி லிருபக்கத்திலிருக்கும் மச்சுவீட்டுமேல் மாடியிலிருந்து பஞ்சாப் நாட்டு மாதர்கள் இவர்கள் வரவைக்கண்டு மிக மகிழ்ந்து புஷ்பமாரி பொழிந்தார்கள். இளவரசரும் இளவரசியாரும் தங்கள் மாளிகைக்குச் சென்றபின்பு சிற்றரசர்கள் வந்து இவர்களைக் கண்டார்கள்.

மறுநாள் லாஹோர் தர்பார் மண்டபத்தில் மாட்சிமைதங்கிய இளவரசரவர்கள் தமது பரிவாரருடனாய் சிம்மாசனாதிபதியாய் வீற்றிருக்க, சுமார் 130 அரசர்களும சிற்றரசர்களும் தத்தம் அந்தஸ்துக்குரிய வரிசையின்படி இளவரசர்க்கு தங்கள் தங்கள் இராஜவிசுவாசத்திற்குரிய கடமையைச் செலுத்தினார்கள். இந்தக்காட்சி பார்ப்பவர் கண்களைக் கவரத்தக்கதாயிருந்ததோடுங்கூட. இளவரசர் அவர்கள் பூரண சுகமுள்ளவராக இருக்கிறார்கள் என்பதற்கு அவர்களுடைய முகவிலாசம் குளிர்ச்சி பொருந்திய பூரண சந்திரபிம்பம்போலப் பிரகாசித்தது. இந்த தர்பார் கூட்டத்திற்கு வட இந்தியாவிலும் அதன் சுற்றுப்புறங்களிலுமுள்ள மலை நாட்டரசர்கள் அநேகர்



வந்து இளவரசர் அவர்களுக்குத் தத்தம் ஆசாரக்கடன்களைச்செலுத்தி இதற்குமுன் ஒருபோதும் தாங்கள் அடைந்திராத அகக்களிப்பையும், அன்பின் பெருக்கத்தையும் ஒருவரையொருவர் காணப்பெற்றபாக்கியத்தினால் அடைந்து தங்களாலும் தங்களுடைய நானாவகையான படைகளாலும் லாஹோர் பட்டணத்தைச் சிறப்பித்து அதைத் தேவேந்திரன் பட்டணத்திற்குச் சகல விதத்திலும் ஒப்பாக்கினார்கள்”

பின்பு, இளவரசியாரவர்கள் பர்தாஸ்திரீகளுக்குப் பேட்டி கொடுத்தார்கள்.

மாட்சிமைதங்கிய இளவரசரவர்கள் தமது பத்தினியாரோடும் பரிவாரங்களோடும் டில்லிமா நகரை யடுத்த மாத்திரத்தில் அங்குள்ள ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களும் மற்றத் தலைவர்களும் அதிகமேரை மரியாதையோடு இளவரசரையும் இளவரசியையும் வண்டியைவிட்டிறக்கி, 31-வது காவல் பட்டாள வீரர்கள் புடைசூழ, உவேல்ஸ் பெருமானையும் பெருமாட்டியையும் ஸர்கியூட்மாளிகையென்று சொல்லப்படுகிற கவர்ன்மெண்ட் மாளிகைக்கு அழைத்துப்போனார்கள். இந்நகர் இந்தியாதேசத்தின் புராதன தலைநகராயிருப்பதாலும் பலவ[illegible]ரங்கட்கும் முக்கிய ஸ்தானமாயிருப்பதாலும் இதனை இளவரசரவர்கள் பார்த்து மிகவும் களிப்படைந்தனர்கள். மொகலாய சக்ரவர்த்திகளாண்ட காலத்தி லிங்கு கட்டப்பட்ட பிரமாண்டமான மாடமாளிகைகளையும் கூட கோபுரங்களையும், இந்தியா தேசத்தில் நடந்தேறிய பெரிய சிப்பாய் கலகத்தில்நடந்த சம்பவங்களைக் காட்டக்கூடிய சின்னங்களையும் பார்க்கப் பார்க்க இளவரசருக்கும் இளவரசிக்கும் இந்நகரின் பெருமையும் மேன்மையும் சொல்லாமலேவிளங்கின. இளவரசர் இங்கு தங்கியிருந்த காலத்தில் சேர்மூர் கால்சீயா நாட்டுச் சிற்றரசர்களும் பட்டாடி, லோகாரு, துஜாணு நாட்டு நபாபுக்களும் இளவரசருக்குத் தங்கள் தங்கள்
ஆசாரக்கடனைச் செலுத்தினார்கள். டில்லிமாநகரில் இளவரசரவர்களும் இள
வரசியாரவர்களும் கண்டகாட்சிகளில், மொகலாய சக்கிரவர்த்திகளிலொரு
வராகிய ஹுமாயூன் பிரேதக் கல்லறையும், குட்புடீன் கட்டிய குடப்மினார்
என்று சொல்லப்படும் 250 அடி உயரமுள்ள ஸ்தம்பமும், ஜாப்தார்ஜங் என்
பவருடைய சமாதியும், பசும்புல்லால் மூடப்பட்டுள்ள ஷாஜிஹான் என்பவ
ருடைய குமாரத்தியாகிய ஜகனாராபேகம் என்னும் மாது சிரோமணியின்
கல்லறையும், சிப்பாய் கலகத்தில் மாண்டுபோன மிக வீரதீரனாகிய ஜெனரல்
நிக்கல்சன் என்பவருடைய கல்லறையும் அதிக மாட்சிபெற்றவைகளாம்.
இவற்றுள் ஹுமாயூன் சக்கிரவர்த்தியின் சமாதி 600 வருஷத்திற்கு முன்
கட்டப்பட்டதாயினும், நேற்றுதான் கட்டி முடிந்தது போலும் பளபளப்
புள்ள மேனியுள்ளதாயுமிருக்கிறதாம். ஆகாயத்தை அளாவத்தக்க விதமாக
யிருக்கும் குட்புமினார் என்னும் ஸ்தம்பத்தின் மீது 3 குறைய 100-படி
இளவரசர் ஏறிப் பட்டணத்தின் காட்சியைப் பூரணமாய்ப் பார்த்து மகிழ்ந்
தனர். ஜகனாராபேகம் மாது சிரோமணி மரிக்கும்போது தான் “என் பிரே
தக்குழியை எப்போதும் பைம்புல் மூடிக்கொண்டிருக்கட்டும். சாந்தகுண
முள்ளவர்களின் கல்லறையைப் பசும்புல் மூடிக்கொண்டிருப்பதே உத்த
மம்” என்று சொல்லியவாறு அம்மாது சிரோமணியின் சமாதியை இந்
நாள்வரையில் மூடிக்கொண்டிருப்பது பசுமையான புல்லே தவிர வேறொ
ன்றுமில்லையாம். அக்காலத்து மகமதிய சிற்பிகளுடைய வேலைத்திறமை

யைப் பார்க்கவேண்டின் டில்லிமாநகரத்திற்குப் போனால் கண்கொண்டு பார்க்கக்கூடாத வேலைப்பாடுகளைப் பார்த்து மனமகிழ்ச்சியடையலாம். அமிர்ட்ஸார் நகரிலுள்ள ஸீக்கியர் பொன்னாலயத்தையும் டில்லியிலுள்ள மகமதியருடைய மாமசூதியாகிய ஜும்மாமஸ்ஜிட் என்னும் ஆலயத்தையும் இளவரசரவர்கள் பார்த்ததற்கு ஞாபகச் சின்னமாக முறையே மேற்படி ஆலயம் ஒவ்வொன்றுக்கும் 1,500 ரூபாய் நன்கொடை யளித்தனர்கள்."

"டிசம்பர் மாதம் 18-ந்தேதி காலை நமது இளவரசரும் இளவரசியாரும் ஆக்ராவில் மொகல் அரசாட்சியின் ஞாபகார்த்தமாக வைத்துவிட்டுப்போன சில அதி விசித்திரமான சிற்பவேலைகளைப் பரிசோதித்து ஆநந்த பூரிப்படைந்தார்கள். அன்றைய சாயங்காலந்தான் காலஞ்சென்ற விக்டோரியா பட்டமகிஷியின் பிரதிமையை இளவரசர் திறந்தார். இந்தப் பிரதிமையானது அந்த அம்மாளது நீடித்த பரிபாலனத்தை ஞாபகப்படுத்தும்பொருட்டு ஐக்கிய மாகாணத்தில் வைக்கப்பட்டிருக்கிற அநேக பிரதிமைகளில் ஒன்று. அந்த அம்மாள் நிற்கிறதுபோல அது செய்யப்பட்டிருக்கின்றது, அது வெண்கலத்தால் பண்ணப்பட்டு, மரத்தால் எழுதப்பட்ட பீடத்தின்மேல் செய்யப்பட்டிருக்கின்றது; அதற்கு பின்புறத்தில் ராஜாங்கத்தைப்பற்றி வெள்ளைத்தில் எழுதப்பட்ட நீண்ட பத்திரம் ஒன்று புதைக்கப்பட்டிருக்கிறது."

19-ந்தேதியன்று பெருமானும் பெருமாட்டியும் ஜெயத்துக்கு காரணமான பட்டணம் என்று சொல்லப்பட்ட பாடிபூர் ஸிக்ரியைப் போய் பார்த்து வந்தார்.

20-ந்தேதியன்று இளவரசரும் இளவரசியும் ஆக்ராவைவிட்டு குவாலியருக்குப் போனார்கள்; அங்கே அவர்களை அதிக ஆரவாரத்தோடு ஏற்றுக்கொண்டார்கள்; மற்ற இடங்களிலோ அவர்கள் இருவரும் நாலுசக்ரவண்டிகளில் ஊர் முழுவதும் பிரதக்ஷணம் வந்தார்கள். ஆனால் குவாலியரிலோ மிகவும் ஆடம்பரமாய் சிங்காரிக்கப்பட்ட யானைகளின்மேல் ஏறிக்கொண்டு ஊர்கோலம் செய்தார்கள்.

அன்றையதினம் தான் லாஷ்காரில் கட்டியிருந்த புது ஆனைத்தைத் திறந்தார்கள். லாஷ்கார் தான் குவாலியர் நாட்டிற்கு முக்கிய பட்டணம், அது கோட்டைக்குப் போகிற வழியிலிருக்கிறது. இதைக் கட்டுவிக்கும் பொருட்டும் 38,000 ரூபாய் செலவழித்தார்கள். இதுவும் காலஞ் சென்ற விக்டோரியா அம்மாளை ஞாபகார்த்தஞ் செய்யும்பொருட்டுதான் கட்டப்பட்டது. இந்த காரியத்திற்குப் பிறகு நமது இளவரசர் புதிய மின்சார விளக்குகளை பிரதிஷ்டை செய்தார். இதுவும் 3 லட்ச ரூபாய் பிடித்தது.

21 ந்தேதி யன்று இரண்டு இராஜ தம்பதிகளும் மகாராஜாவினுடைய துருப்புகளைப் போய் பார்க்கப்போனார்கள். ஏறக்குறைய 5,000பேர் அங்கிருந்தார்கள்.

வெள்ளிக்கிழமை சனிக்கிழமை திங்கள்கிழமை இம்மூன்று நாட்களையும் இளவரசர் புலிவேட்டையில் செலவழித்தார். இரண்டு மூன்று புலிகளையும் அதிக பராக்கிரமத்தோடே சுட்டார்.

டிசம்பர் 25-ந்தேதி வேல்ஸ் பெருமானும் பெருமாட்டியும் குவாலியருக்குச் சென்றார்கள். காலையில் இவர்கள் கோவில் ஆராதனைக்குச் சென்றார்கள். சாயங்காலம் இளவரசர் புலிவேட்டைக்காகப் போய்விட்டார். இளவரசியார் பாடசாலைப் பிள்ளைகளுக்கு கிறிஸ்தமஸ் வெகுமதியளித்தார்கள்.



"26-ந்தேதி யன்று தம்பதிகளிருவரும் தங்கள் பரிவாரங்களுடனே குவாலியரைவிட்டு, லக்னோவுக்குப் போனார்கள். லக்னோ வாசிகள் அதிக ஆடம்பரத்துடனே அவர்களை ஏற்றுக்கொண்டார்கள்; ரெயில்வே ஸ்டேஷனில் கொடிகளாலும் தோரணங்களாலும் சிங்காரிக்கப்படாம லிருந்தபோதிலும் அவர்கள் வருகைக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்த அறையோ விசித்திரமான புஷ்பவேலைகளாலும், ரெயில்வே என்ஜின் முதற்கொண்டு டிக்கட்டுகள் துளையிடு கருவிவரைக்கும் வரிசை வரிசையாக வைக்கப்பட்டு அதி விநோதமாக ஜோடித்து வைத்திருந்தது; அன்றைக்குத்தான் புதிய மெடிக்கெல் காலேஜின் அஸ்திபாரக்கல்லைப் போட்டார்கள். இது அங்கே நடந்தவோர் விசேஷித்த காரியம். இது கட்டும்படியாக யோசித்தபோது பாஹம்பூர் மஹாராஜாவாகிய பி. பிரசாத்சிங் என்பவர் உடனே 3 லட்ச ரூபாய் உபகார பணமாகக் கொடுத்தாராம். பிரகிருசமாக 10 லட்ச ரூபாய் அதைக் கட்டுவதற்கென்று வசூல் செய்திருக்கிறார்கள். காலக்கிரமத்தில் 5 லட்சரூபாய் அதிகப்படுமென்று எண்ணுகிறோம். இதில் ஆண்பிள்ளைகள் மாத்திரம் வைத்தியசா... கொள்ளாமல் பெண்பிள்ளைகளுக்குசும் ஓர் பிரிவுண்டாயிருக்குமாம். இது இந்தியாவிலிருக்கிற அநேக சாலைகளைப் பார்க்கிலும் மிகப் பிரமாண்டமானதா யிருக்கும். இவ்வளவு சிறியகாலத்தில் பெரிய தொகையான பணத்தை சேர்த்துவிட்டது மிகவும் ஆச்சரியமாய்த் தானிருக்கிறது. இதெல்லாம் அந்த ஊரிலிருக்கிற ஐக்கியத்தை பரிஷ்காரமாக தெரிவிக்கிறது. இது முடிந்த பின்பு ராஜகுமாரரும் ராஜ பெருமாட்டியும் 1856-ம் வருஷத்தில் நிகழ்ந்த கலகத்தோடு சேர்ந்த அநேக சரித்திரவிநோதங்களைப் போய் பார்த்தார்கள். கலகத்தோடு சம்பந்தப்பட்ட படைஞர்களைத் தங்கள் மனைவிகளோடும் குழந்தைகளோடும் பார்த்தார்கள்.

27-ந்தேதியன்று இளவரசரும் இளவரசியும் அநேகம்பேரைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தார்கள். அன்றைய சாயங்காலம் (Oudh) ஔடிலிருக்கிற தனிகர்களாகிய தாசில்தார்களெல்லாம் மேற்படி இரண்டு தம்பதிகளை அத்தியந்த பணிவுடன் வரவழைத்து சோபனப்பத்திரம் வாசித்தார்கள். அயோத்தியா மகாராஜாவாகிய ஸர் பிரதாப் நாராயணசிங் என்பவர் வாசித்த பத்திரத்தில் பின்வரும் விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இந்தியாவுக்கு தோட்டமென்று பெயர் வழங்கும்படியான அப்பேர்ப்பட்ட சிலாக்கியத்தையுடைய ஔட் ராஜாங்கமானது 50 வருஷகாலங்களுக்கு முன்னே இந்திய ராஜாக்களுடைய சுயாதீனத்திலிருந்தது. அப்பேர்ப்பட்ட ராஜகுமாரர்களுடைய சிம்மாசன அறையானது எப்படியிருந்ததோ அந்த ரூபத்தையே நமது தாழ்மையான பத்திரம் அடங்கியுள்ள பெட்டியிற் காட்டியிருக்கிறது; ஆனால் கடந்த 50 வருஷக்காலமாய் ஜனங்களெல்லாரும் இந்த பிரக்கியாதிபெற்ற பிரிடிஷ் அரசாட்சியின்கீழ் நல்ல சந்தோஷத்தை அனுபவித்ததுமன்றி, கல்வியிலும், சமஸ்தத்திலும் அபிவிர்த்தியாகிக்கொண்டே வருகிறார்கள். எல்லாவற்றிலும் வர்த்தகத்தின் விர்த்தியிலும், வித்தியாதொழிலிலும், எங்கள் சுதந்தரங்களை இவ்வளவாக மதித்து நீடிக்கச் செய்ததற்காகவும், எங்கள் நன்மைக்காக தகுந்த ஏற்பாடுகளையும், பிரமாணங்களையும் செய்ததற்காகவும், எங்களைக் இரண்டாவது ராஜாங்கமாகவே நிற்கிறது. தான

கிரீடாதிபதியோடும் அவருடைய குடும்ப சமேதரோடும் இணைந்த அந்த கட்டிற்காகவும் நாங்கள் மிகவும் நன்றியறிவுள்ளவர்களா யிருக்கிறோம் என்பதே. இந்த சிறிய பத்திரத்தோடு கூட்டம் முடிவுக்கு வந்தது.''

28-ந்தேதியன்று இருவரும் லக்னோ முழுவதும் பிரதக்ஷணம் வந்தார்கள். அன்றைய மத்தியானமே கல்கத்தாவுக்குப் புறப்பட்டுவிட்டார்கள்.

பிப்ரவரிமாதப் பத்திரிகையில் கல்கத்தா, பர்மா, சென்னை முதலிய இடங்களில் நடந்த முக்கிய வைபவங்கள் பிரசுரிக்கப்படும். [ப-ர்.]

## நமது எட்வர்ட் மகாராஜா அவர்கள் பிரின்ஸ் ஆப் வேல்சாயிருந்தபோது 1875-ம் ௵த்தில் சென்னை விஜய நல்வரவைப்பற்றிய கீர்த்தனை.

[Extracted from Janavinodini.]

இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

இன்றே சுதினம் அம்மா !—மங்கையர்களே
இன்றே சுதினம் அம்மா !

அநுபல்லவி.

நன்றே பெருகும் லண்டன் நகர் விக்டோரியாள் பெற்ற
நயகுண பிரின்ஸவ்வேல்லை நாமெல்லாம் காணவுற்ற—இன்றே

சரணங்கள்.

1. இந்துதேச ராஜரெலாம்—வந்துகூடி
இனிதாத் தந்தனரே சலாம்.
இந்த அரசைக்காண்ப தெந்தநாளென்று நொந்த
சிந்தாகுலந்தீரத் தரிசனம் இவர் தந்த— (இன்றே)

2. நித்திய தரித்திரத்தாலே—வருந்துவோர்க்கு
நிதி கிடைத்தாப்போலே
உத்தம ராணியவர் உகந்தருள் புத்திரதீபம்
உயர்சேவை தந்ததாலே ஒழிந்தோமே மனஸ்தாபம். (இன்)

3. மங்கையரே வாரீர்—ராஜவினோத
மகத்துவத்தைப் பாரீர்;
பங்கயமலர் தூவிப் பல்லாண்டு மிகப்பாடும்
பாக்கிய மிவரென்று பரிந்துநீர் கொண்டாடும்.— (இன்றே)